D
V211.32 N82
N83.18452
12 456

142

# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

SIXTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLXXXIV (Nos. 1 to 6)

15th to 20th February 1982.

©

GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600 009.*

## TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

SIXTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME No CLXXXIV (Nos. 1 to 6).

15th to 20th February 1982.

TABLE OF CONTENTS.

*Monday, 15th February 1982*

| | Pages |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i—v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... ... | viii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... ... | ix—xi |
| 1. Questions and Answers ... ... ... | 1—24 |
| 2. Announcement *re* presentation of the Budget for the year 1982-83 ... ... ... ... | 24 |
| 3. Call Attention Notice— | |
| Hardship caused to erstwhile Panchayat Union Teachers due to non-payment of arrears of pay and allowances and non-settlement of claims under the Family Benefit Scheme on becoming Government servants from 1st June 1981 ... ... ... ... | 24—25 |
| 4. Discussion on the Governor's Address ... | 25—71 |
| 5. Papers laid on the table of the House ... | 72 |

*Tuesday, 16th February 1982.*

| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 73—94 |
| 2. Call Attention Notices— | |
| (1) Hardship caused to the rural population due to scarcity of kerosene ... ... ... | 94—96 |

*Tuesday, 16th February 1982—cont.*

PAGES

(2) Death of 6 boys at Chellapatti village in Sankarankoil taluk, Tirunelveli district, due to accident in Explosives Factory in February 1982 ... ... ... ... ... 96—98

3. Discussion on the Governor's Address—*cont.* 98—142

4. Papers laid on the table of the House ... 145

*Wednesday, 17th February 1982.*

1. Questions and Answers ... ... ... 151—180

2. Announcement *re* decision of the Business Advisory Committee ... ... ... ... 180

3. Call Attention Notices—

(1) Hardship caused to Tamil Nadu due to the execution of Mekadatu HydroElectric Project across the River Cauvery ... ... ... 181—183

(2) Plight of students and teachers of Corporation Higher Secondary Schools due to non-availability of drinking water ... ... 183—184

*Thursday, 18th February 1982.*

1. Questions and Answers ... ... ... 233—254

2. Announcements—

(1) Message from the Governor ... ... 255

(2) Message from the Assembly ... ... 255

3. Call Attention Notices—

(1) Dilapidated condition of buildings of Vernavalkudi Government High School and Sandaipettai Girls High School, Pudukottai town and running classes in the building in spite of warning by Engineers. ... ... 256—257

(2) Failure of crops consequent on scarcity of water inthe southern parts of Tirunelveli district .. ... ... ... ... 257—259

PAGES

*Thursday, 18th February 1982—cont.*

4. Discussion on the Governor's Address—*cont* 260—328

5. Government Motion re discussion on Paul Commission Report ... ... ... ... 328—441

6. Papers laid on the table of the House ... 441—442

*Friday, 19th February 1982.*

1. Questions and Answers ... ... ... 447—467

2. Information *re*—

(1) Bomb found on the road during the Long March (Padayatra) of the Leader of the opposition in the Assembly ... ... ... 467—468

(2) Non-admission of a question ... ... 468

3. Announcements—

(1) Message from the Governor ... ... 468

(2) Message from the Assembly ... ... 469

4. Call Attention Notices—

(1) Attack by the Police on Annavi alias Muthurama Subramaniam, Archakar of Thiruchendur Murugan Temple ... ... 470—471

(2) Death of children due to Brain Fever in the various districts of Tamil Nadu ... ... 472—474

5. Government Bills—

(1) The Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1982 (L.A. Bill No. 63 of 1981) 475—493

(2) The Tamil Nadu Debt Relief (Amendment) Bill, 1982 (L.A.Bill No. 2 of 1982) ... 494—506

(3) The Madras University, Annamalai University and Perarignar Anna University of Technology (Amendment) Bill, 1982 (L.A. Bill No. 8 of 1982) ... ... ... 507—548

(4) The Tamil Nadu University Bill, 1982 (L.A. Bill No. 9 of 1982) ... ... ... ... 549—578

PAGES

*Friday, 19th February 1982—cont.*

5. Government Bills—*cont.*

(5) The Tamil Nadu Contingency Fund (Amendment) Bill, 1982 (L.A. Bill No. 1 of 1982) 579—581

(6) The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1982 (L.A. Bill No. 12 of 1982) 581—588

(7) The Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1982 (L.A. Bill No. 6 of 1982) ... 589—615

(8) The Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Amendment Bill, 1982 (L.A. Bill No. 4 of 1982) ... ... 615—616

(9) The Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1982 (L.A. Bill No. 5 of 1982) 617—618

(10) The Tamil Nadu Relief Undertakings (Special Provisions) Bill, 1982 (L.A. Bill No. 11 of 1982) ... ... ... ... 619—633

6. Government Motion *re*—
Change in the order of Business of the House 493, 506

7. Papers laid on the table of the House ... 581,618, 634

*Saturday, 20th February 1982*

1. Questions and answers ... ... ... 705—724

2. Information *re*—

(1) Attempt on the life of the Chief Minister 724—725

(2) Attack on the car of the Finance Minister 747—749

3. Privilege Issue *re*—

Information furnished by the Minister of Health with regard to admission of students to M.D (ortho) ... ... ... ... ... 749—756

4. Adjournment Motion *re*—
Planting of bombs in roads near Sattur during the Long March (Padayatra) made by the Leader of the Opposition in the Assembly ... 749—756

PAGES

*Saturday, 20th February 1982—cont.*

5. Statement under rule 82 of the Council Rules *re*—
correction of answer to a question, dated 4th February 1982 ... ... ... ... 756—758

6. Call Attention Notices—

(1) Missing of 7,000 bags of paddy belonging to Civil Supplies Corporation (Tamil Nadu) at Auttur, Salem district ... ... ... 759—760

(2) Declaration by Director of Collegiate Education of certain categories of non-teaching staff of aided Colleges, as on 31—3—1977 out of portection given in the Government Order 760—762

7. Government Motion *re*—
Transaction of Government Business on a Private Members Day ... ... ... ... 762—763

8. Budget for the Tamil Nadu Electricity Board for the year 198-182 ... ... ... ... 763—817

Index. ... ... ... ... ... ... 851—889

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

### Thiru SADIQ ALI.

*Members of the Council of Ministers.*

1. THE HONOURABLE THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Policl, Prevention of Corruption, Molasses and Archealogy Planning.

2. THE HONOURABLE DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance, in charge of Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. THI HONOURABLE THIRU S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control.

4. THE HONOURABLE THIRU K. A. KRISHNASWAMY, Minister for Rural Industries, in charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. THE HONOURABLE THIRU S. D. SOMASUNDARAM, Minister for Revenue, in charge of Revenue, Commercial Taxes, Excise and Census.

6. THE HONOURABLE THIRU R. M. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona and Grant of Liquor Permits.

7. THE HONOURABLE THIRU C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education including Technical Education, Official Language and Handlooms.

8. THE HONOURABLE DR. K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engireering.

9. The Honourable Thiru C. PONNAIYAN, Minister for Co-operation and Law, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. The Honourable Thiru P. KOLANDAIVELU, Minister for Local Administration, in charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. The Honourable Thiru S. RAGHAVANANDAM, Minister for Labour in charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. The Honourable Dr. H. V. HANDE, Minister for Health, in charge of Health.

13. The Honourable Thiru K. RAJA MOHAMMED, Minister for Irrigation, in charge of Agro-Service Co-operative Societies, Irrigation including Minor-Irrigation and Wakf.

14. The Honourable Thiru S. MUTHUSWAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. The Honourable Thiru S. THIRUNAVUKKARASU, Minister for Industries, in charge of Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. The Honourable Thiru S. N. RAJENDRAN, Minister for Public Works and Khadi, in charge of Khadi, Prohibition excluding grant of liquor permits, Passports, Public Works Department and Establishment matters relating to Public Works Department.

17. The Honourable Thiru M. VIJAYASARATHI, Minister for Adi Dravidar Welfare, in charge of Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. The Honourable Thirumathi GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## தமிழ்நாடு ஆளுநர்

திரு. சாதிக் அலி.

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு திட்டம் சர்க்கரைப் பாகுக் கழிவு, மற்றும் தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—

நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

மின்சாரம், மற்றும் இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

கிராம, குடிசை சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை, மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி ஆட்சிமொழி மற்றும் கைத்தறி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறி யியல் பிரிவு, மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டுநிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்—வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் —

மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கா. இராசாமுகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப் பார்—

வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.



14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

பெருந்தொழில்கள், சுரங்கமும்-கனிவளமும் மற்றும் நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் (கதர் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

கதர், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) பயண இசைவுச் சீட்டு, பொதுப்பணித்துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப் பார்—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள் வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்ட வர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

---

மாண்புமிகு மேலவைத் தலைவர்.

டாக்டர் ம.பொ. சிவஞானம்.

மேலவைத் துணைத் தலைவர்.

புலவர் புலமைப்பித்தன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.*

1. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்.
2. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி.
3. திரு. ஏ. ஜே. தாஸ்.
4. திரு. சி. இராமலிங்கம்.

மேலவைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்.

திரு. த. ப. டெல்லிதுரை, பி.எஸ்ஸி., பி.எல்.

விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எச்.

தலைமை நிருபர்.

திரு. ச. சுவாமிநாதன்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1 அருணாசலம், திரு. க. .. | நியமனம். |
| 2 ஆறுமுகம், திரு. சோ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 3 ஆற்காடு வீராசாமி, திரு. நா. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 ஆனந்தம், திரு. வி.வி.வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 6 இராசா முகமது, திரு. கா. (பாசனத்துறை அமைச்சர்.) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 இராமமூர்த்தி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 8 இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9 இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10 கண்ணப்பன், திரு. காடுவெட்டி | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11 சங்கரலிங்கம், திரு. ம. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 12 சண்முகம், திரு. ப. உ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 13 சந்தோஷம், திரு. த. | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 14 சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 15 சிவஞானம், டாக்டர் ம.பொ. (மாண்புமிகு தலைவர்). | நியமனம். |
| 16 சித்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 17 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 18 சுவாமிநாதன், திரு. ஜி. | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 19 தாமஸ், திரு. பா. ரா. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 20 தாமோதரன், திரு. ஏ. ஆர். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 21 தாரா செரியன், திருமதி. | நியமனம். |
| 22 தாஸ், திரு. ஏ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23 துரைசாமி, திரு. ஒ. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 24 நல்லசிவன், திரு. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 25 நீலநாராயணன், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 26 புலமைப்பித்தன், புலவர் (துணைத் தலைவர்.) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 27 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 28 மாணிக்கம். திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 29 மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 30 மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர் – திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி. |
| 31 முத்து, திரு. எஸ். .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 32 முத்துசாமி, திரு. செ. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர் நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி |
| 33 முத்தையா செட்டியார். டாக்டர், எம். ஏ. | நியமனம். |
| 34 முனுசாமி, திரு. பி. .. | நியமனம். |
| 35 லீலாவதி, செல்வி. ஆ. | சென்னை-செங்கல்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 36 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 37 வசந்த பை, திரு. ஜி. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 38 வள்ளி முத்து, திரு. ஈ. வெ. அ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 39 வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்.) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 40 வெங்கடேசன், திரு. ஈ. எஸ். | நியமனம். |
| 41 ஹண்டே, டாக்டர் எச். வி. (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.) | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 42 ஜேப்பியார், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 43 வெற்றிடம் .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44 ஷை | ஷை |
| 45 ஷை .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 ஷை .. | ஷை |
| 47 ஷை .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48 ஷை .. | ஷை |
| 49 ஷை .. | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 ஷை .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 ஷை .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52 ஷை .. | ஷை |
| 53 ஷை .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 ஷை .. | ஷை |
| 55 ஷை .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 ஷை .. | ஷை |
| 57 ஷை .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 ஷை .. | ஷை |
| 59 ஷை .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 ஷை .. | ஷை |
| 61 ஷை .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 ஷை .. | ஷை |
| 63 ஷை .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

இங்கட்கிழமை, 1982 பிப்ரவரி 15

மாசி 3, துன்மதி, திருவள்ளுவராண்டு-2013.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### வறுமையில் வாடும் திரைப்படக் கலைஞர்களுக்கு உதவி.

* 61 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் வறுமையில் வாடும் திரைப்படக் கலைஞர்களுக்கு உதவி செய்யும் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) ஆம்.

(இ) வெளியிடப்படும் ஒரு படத்திற்கு ரூ. 10,000 வீதம் படத் தயாரிப்பாளர்கள் அளித்தால் அதற்குச் சமமான தொகையை அரசு அளித்து ஒரு சேம நல நிதி உருவாக்கி அத்தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வறுமையில் வாடும் கலைஞர்களுக்கு உதவ அரசு உத்தேசித்துள்ளது. இது சம்பந்தமாக திரைப்படச் சங்கங்களுடன் அரசு தொடர்பு கொண்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே வறுமையிலே வாடுகின்ற கலைஞர்களுடைய எண்ணிக்கை பற்றிய விவரங்களை அரசு சேகரித்துள்ளதா ? இன்னும் எத்தனை கலைஞர்கள் அவ்வாறு வறுமையிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள் ? இவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, நிதியுதவி செய்கின்ற ஒரு திட்டம் வரவேற்கக்கூடியதாக இருந்தாலும், திரைப்படப் பயிற்சிக் கல்லூரி போன்ற அரசு சார்பான நிறுவனங்களிலே அவர்களுக்கு வேலை கொடுப்பது போன்ற யோசனையை அரசு பரிசீலனை செய்யலாம் அல்லவா ?

[1982 பிப்ரவரி 15

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கலைஞர்களிலே எவ்வளவு பேர்கள் வறுமையிலே வாடுகின்றார்கள் என்ற விபரம் அரசினிடம் இல்லை. அதைத் தயாரிப்பது என்பதும் கொஞ்சம் கடினமான காரியம். அப்படிப்பட்ட ஒரு திட்டம் தொடங்கப்பெற்று செயல் படுத்தும்போது, யார் யார் வறுமையிலே வாடுகிறார்கள் என்று அவர்கள் அனுப்புகின்ற விண்ணப்பத்திலேயிருந்து தெரிந்துகொள்ள அரசுக்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இப்போது அதைப்பற்றி இறுதியாகத் தெரிவிக்க இயலாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, அரசு நடத்துகின்ற திரைப்படப் பயிற்சிக் கல்லூரியில் இப்படி அனுபவம் பெற்ற சிலருக்கு ஏற்கெனவே வேலை வழங்கப்பட்டிருக்கிறது. ஏதோ ஒன்றிரண்டு பேர்களுக்கு, குறிப்பிட்ட நபர்களுக்கு அங்கே அப்படிப்பட்ட வேலைகளை வழங்க முடியுமே தவிர, கஷ்டப்படுகின்ற அனைவருக்குமே வேலை வழங்குவது என்பது இயலாது. அத்தகைய தகுதிகளை அவர்கள் பெற்றிருப்பது இயலாது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இவ்வாறு வறுமையில் வாடுகின்ற குறிப்பிட்ட கலைஞர்கள் தனிப்பட்ட முறையில் அரசுக்கு நிதி உதவி கோரி மனு அனுப்பியிருக்கிறார்களா ? அப்படி தனிப்பட்டவர்களுக்கு நிதி உதவி செய்யப்படுகிறதா ? அதன் விவரங்களை நான் அறியலாமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இதற்கான தனிக் கேள்வி உறுப்பினர் அவர்கள் போடுவார்களானால், அதற்கான விடைகளைத் தயாரித்துத் தர முடியும். இயல் இசை நாடக மன்றத்தின் மூலமாக இப்படி வறுமையிலே வாடுகின்ற வயது முதிர்ந்த கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் இப்படிப்பட்ட நிதி உதவி அளிக்கின்ற திட்டத்தை அரசு அமுல்படுத்தி வருகிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** வறுமையிலே வாடுகின்ற திரைப்படக் கலைஞர்களுக்கு இயல் இசை நாடகமன்றத்தின் மூலமாகவோ, அரசின் மூலமாகவோ நிதி உதவியை அவர்கள் பெறுவதற்கென்று வரையறுக்கப் பட்டுள்ள தகுதிகள் என்ன என்பதைப்பற்றி அறிந்துகொள்ளலாமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இப்போது இயல் இசை நாடக மன்றம் அமல்படுத்துகின்ற அந்தத் திட்டத்தின்படி நாடகத் துறையிலே, பல்வேறு கலைத் துறைகளிலே 59 வயது அடைந்துள்ள கலைஞர்கள் வறுமையிலே வாடுகின்ற நிலையிலே இருந்தால், அவர்கள் விண்ணப்பித்தால், ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு மாதம் ரூ. 150 ஓய்வூதியமாக அளிக்கும் திட்டத்தை அமுல் படுத்தி வருகிறது.



1982 பிப்ரவரி 15]

## வனத்துறை அடிப்படை ஊழியர்களுக்கு ஓய்வூதியம்.

* 62 வினா.—**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு ஆணை எண் 892 (வனத்துறை), நாள் 17—10—1978-படி திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் வனத்துறையைச் சார்ந்த ஓய்வு பெற்ற கடைநிலை ஊழியர்களில் எத்தனை பேருக்கு இதுவரை ஓய்வூதியம் வழங்கப்படவில்லை ?

(இ) அவர்களிடமிருந்து இதுபற்றி முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) ஓய்வூதியம் வழங்கப்படாத கடைநிலை ஊழியர்கள் எவரும் இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகள் எழவில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** திரு. கேசவ யோகீஸ்வரன் என்பவர் திருநெல்வேலி மண்டல வனப் பாதுகாப்பு அலுவலகத்தில் ஓர் அலுவலராகப் பணிபுரிந்து 1978-லே ஓய்வு பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவில்லை. அவர்கள் திருவிதாங்கூர்-கொச்சி சமஸ்தானத்தில் வனப் பாதுகாப்பு அலுவலராகப் பணியாற்றியவர். 1956-ல் தமிழகத்தோடு இணைகின்றபோது, அங்கிருந்து இங்கே மாற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள். 1956 ஆம் ஆண்டிலிருந்து 1978 ஆம் ஆண்டு வரை இந்த அரசிலே பணியாற்றி யிருக்கிறார்கள். அவர்களுக்கு ஓய்வூதியம் இன்னும் வழங்கப்படவில்லை, மறுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி 4—11—1981 அன்று அவர்கள் ஒரு மனுவை இலாகாவிற்கு அனுப்பியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அதன் நகலை எனக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பதிலில் 'இல்லை' என்று வந்திருக்கிறது. இது கவனிக்கப்படவில்லையா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** கடைநிலை ஊழியர்கள் என்று கருதப்படுகின்ற இந்த ஊழியர்களை 'ரெகுலரைஸ்' செய்து, இந்த அரசு ஓய்வூதியத் திட்டத்திற்குள்ளே சேர்த்தது. 1978 ஆம் ஆண்டிலேதான் முடிவுகள் எடுக்கப்பட்டன. ஆகவே 1978 ஆம் ஆண்டுக்கு முன்னாலே பணியாற்றியவர்கள் இந்தத் திட்டத்திலே வரமாட்டார்கள். 1978-க்குப் பிறகு 10 ஆண்டுகாலம் பணியாற்றுகின்றவர்களுக்குத்தான் இந்த ஓய்வூதியம்.

அவர்கள்தான் இந்தத் திட்டத்திலே வருகிறார்கள். ஆகவே விண்ணப்பித்திருக்கின்ற அந்த அலுவலர் 1978-க்கு முன்னாலேயே பணியாற்றியவராக இருந்தால், அந்த வாய்ப்பை இழந்திருப்பார்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** 1978-க்குப் பிறகு வேலைக்குச் சேர்ந்து 10 ஆண்டுகள் ஆன பிறகு என்பது எப்படி முடியும் ? 1978 வரை அவர்கள் பணியாற்றியிருக்கிறார்கள். அவர் 1956-ல் ரூ. 20 சம்பளத்தில் வந்து சேர்ந்து, அதற்குப் பிறகு 1978 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து பணியாற்றியிருக்கிறார். அவருக்கு ஓய்வூதியம் கொடுக்கவில்லை. அப்படி ஏதாவது விதி இருந்தால், அந்த விதியைத் தளர்த்தியாவது இத்தகைய நியாயமான கேஸ்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுமா ? அதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இது ஒரு தனிப்பட்ட ஊழியருடைய, அவர் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்றால், அரசு முடிவெடுக்க முடியும். 1978-க்குப் பிறகுதான் இந்தத் தகுதியிலே இருக்கின்ற அலுவலர்களுக்கு இத்தகைய ஓய்வூதியம் பெறுகின்ற வாய்ப்பு மாற்றப்பட்ட சட்டத்தின்படி, விதிகளின்படி வருகின்றது. அதற்கு முன்னால் கொடுப்பது என்று ஆரம்பித்தால், எந்த ஆண்டுவரை கொடுப்பது, எத்தனை பேர்களுக்குக் கொடுப்பது என்ற பிரச்சினை வருகிறது. ஆகவேதான் அரசுத் துறைகளிலே அதிகாரிகள் மிகுந்த கவனமாகப் பரிசீலித்து, 1978-க்கு முன்னாலே ஓய்வு பெற்றவர்களுக்கு இல்லை என்று வரையறுத்திருக்கிறார்கள். அப்படி 10 ஆண்டுகள் நிறைவு பெறாமல் இருந்தால், அவர்களுக்கு வேறு விதி முறைகளிலே கிடைக்கின்ற பலன்களை அவர்கள் பெறுகின்ற அளவுக்குச் செய்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** ஏற்கெனவே வனத் துறை ஊழியர்களைப்பற்றி பல கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு ஓய்வூதியம் என்று கொடுத்தால்கூட, அதிகமான பணச் செலவு வராது. அதிலே ரிடையர் ஆகிப் போனவர்களில் எத்தனை பேர்கள் உயிரோடு இருக்கின்றார்கள் என்று தெரியாது. பல பேர்கள் இறந்து போயிருக்கலாம். அப்படி உயிரோடு இருப்பவர்களுக்காவது கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இந்த அரசு ஏற்பட்ட பிறகுதான் இந்த அடிப்படை, கடைநிலை ஊழியர்களை நிரந்தரமாக ஆக்கி அவர்களுக்கு எல்லாச் சலுகைகளையும் கொடுக்க ஆணைகளைப் பிறப்பித்திருக்கிறார்கள். இதற்கு முன்னாலே இருந்தவர்கள் பற்றிய நிலைமைகள் தெரிய வேண்டும். இந்தத் திட்டத்திலே எவ்வளவு பேர்கள் வாங்குவார்கள் என்று தெரிய





வேண்டும். அதிலே கை வைக்க ஆரம்பித்தால், எவ்வளவு பெரிய பிரச்சினைகளிலே கொண்டுபோய்விடும் என்பதெல்லாம் தெரிந்தபிறகுதான், அதுபற்றி முடிவு எடுக்க இயலும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** நான் குறிப்பிட்ட அதிகாரி கேசவ யோகீஸ்வரன் என்பவர் 1978-லே ஓய்வு பெற்றிருந்தாலும், அவர் திருவிதாங்கூர்-கொச்சி சமஸ்தானத்தில் வேலை செய்துகொண்டிருந்துவிட்டு, தமிழகத்திற்கு மாற்றப் பட்டிருக்கின்றார். அவர் அங்கேயே பணியில் இருந்திருந்தால், ஓய்வூதியம் பெறலாம். மத்திய அரசுச் சட்டம் 37/56-ல், திருவிதாங்கூர்-கொச்சி சமஸ்தானத்திலிருந்து மாற்றப்பட்டவர்களுக்கு, அங்கிருந்து வந்து இந்த மாநிலத்திலே வேலை பார்ப்பவர்களுக்கு, அது எல்லாம் பொருந்தும், அதிலே அவர்களுக்குப் பாதகம் வரக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர் நீதிமன்றம் போனால் நிச்சயமாக ஓய்வூதியம் பெறுவார். அவர் கடைநிலை ஊழியர். நாகர்கோயிலிலிருந்து சென்னை வரமுடியாத நிலையிலே இருக்கிறார்கள். அவர் ஒரு ‘டிரான்ஸ்பர்ட் அலாட்டி’ என்ற முறையிலே அவருக்கு ஓய்வூதியம் கொடுக்க அரசு முன்வருமா ?

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் குறிப்பிடுகிற அந்த அலுவலர், ஒரு விசேடத் தன்மையிலே திருவிதாங்கூர் ராஜ்யத்திலேயிருந்து மாற்றப்பட்ட அதிகாரி என்பதால், அந்த மாவட்டம் மாற்றப்பட்டபோது சில விதிகளை ஏற்றுக்கொண்டு, சில நிபந்தனைகளுக்கு ஒப்புதல் அளித்திருக்கிறது. அதற்குட்பட்டு, இவருடைய வேண்டுகோள் வருகிறதா என்பதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அரசு மருத்துவமனைகளில் மருந்துகள்.

* 63 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக அரசு மருத்துவ மனைகளில் எல்லாவற்றிலுமே போதிய மருந்துகள் கைவசம் இல்லாததால், அரசு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கும் புற நோயாளிகளுக்கும் ஏற்படும் இன்னல்களை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

[1982 பிப்ரவரி 15

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) அரசு மருத்துவமனைகளில் மருந்துகள் இடைக்கவில்லை என்ற புகார் எதுவுமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மருத்துவ மனைகளில் மருந்துகள் இல்லாத காரணத்தாலே, டாக்டர்கள் மருந்துகளை வெளியே வாங்கிக்கொள்ள தனியாக எழுதிக் கொடுத்துவிடுகிறார்கள். அப்படி எழுதிக் கொடுப்பதிலேகூட ஒரு பிரச்சினை இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். தலைஞாயிறு மருத்துவ மனையில் நோயாளிகள் உள்ளே சென்று, நோய்களைச் சொல்லி, சீட்டு கேட்கும்போது, சீட்டு இல்லை, கடையிலே போய் நோட்டு வாங்கிவாருங்கள் என்று சொல்லி, அவர்களைத் திருப்பி யனுப்புகிறார்கள். அவர்கள் கடைக்குச் செல்லாமல், வீட்டுக்குச் சென்று விடுகிறார்கள். சீட்டுகள் தரும்போது, மருந்துகள் இல்லாமல், கடையிலே வாங்கிக் கொள்ளுங்கள் என்று எழுதிக் கொடுக்கும் நிலை தலைஞாயிறு, திருத்துறைப்பூண்டி, நாகை பகுதிகளில் இருக்கிறது. இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியைப் பற்றிச் சொல்லியிருப்பதால், நிச்சயமாக, உடனடியாக, இன்றைய தினமே என்ன என்று விசாரித்து, அங்குள்ள நிலைமையைத் தெரிவிக்கத் தயாராக இருக்கிறேன். மருந்துகளிலே சிலவற்றுக்கு 'பிரான்ட் நேம்ஸ்' இருக்கின்றன. 'காம்போஸ்' என்பது 'பிரான்ட் நேம்'. டைஜிபார்ம் என்பது கெமிகல் நேம். ஆனால் 'காம்போஸ்' தான் வேண்டுமென்று வருகிறவர்கள் கேட்பார்கள். வேறு கம்பெனி மருந்துகள் இருக்கும். அப்போது இந்த மருந்து வேண்டாம், அதுதான் வேண்டுமென்று கேட்கிறார்கள். மக்கள் விரும்பும் பிரான்டாக இருப்பதால், அதையே எழுதிக் கொடுக்கிறார்கள். சட்டமன்றப் பேரவையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பினார்கள். நான்கூட கோயம்புத்தூர் சென்று பார்த்தேன். 'பிரான்ட் நேம்' தான் பிரச்சினையாக இருக்கிறது. 'கெமிகல் நேம்' எழுதினால் பிரச்சினை இல்லை. எனினும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப் பயன்படுத்திக்கொண்டு,

I will utilise it as an extra channel of communication.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களுக்கு இந்த 'பிராண்டு'கள் தெரியாது. இந்த மருந்து கொடுத்தால், அந்த மருந்து கொடுங்கள் என்று கேட்பதில்லை. ஆனால்



1982 பிப்ரவரி 15]

வெளியிலே மருந்துகளை வாங்கிக்கொள்ளும் வகையிலேதான் அவர்கள் எழுதிக் கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட குறைகள் இல்லாமலிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் சீட்டு கொடுக்கும்போது, நோட்டு கேட்கிறார்கள். அதையும் கவனிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்த குறை வரக்கூடாது என்பதற்காகத்தான் சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். அதை அவருடைய கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன். என்று In 1976, Organisation and Methods Cell. -ல் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

It recommended among other things introduction of a common centralised purchase system.

எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து, 'பர்ச்சேஸ் சிஸ்டம்' என்று வைத்து எல்லோருக்கும் மருந்து கொடுக்க வேண்டும். ஆங்காங்கே 'இன்டென்ட்' போட்டு, மருந்து வாங்கினால், கால தாமதமாகும் என்பதால்தான், 'சென்ட்ரலைஸ்டு பர்ச்சேஸ்' என்று மாற்றியிருக்கிறோம்.

In G.O. No. 584, dated 4th April 1981, the Government accepted this recommendation and issued orders for the introdue-tion of a common certalised purchase system in respect of purchases of medicines for the institutions under the D.M.E. and D.M.S.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அரசு மருத்துவ மனைகளில் நோயாளிகளுக்குக் கொடுக்கப்படுகிற மாத்திரைகள் தரம் தாழ்ந்ததாக இருக்கின்றன என்ற புகார் இருக்கிறது. ஒரு மாத்திரை தரம் உயர்ந்ததாக, 2 ரூபாய், 3 ரூபாய் விலையில் இருக்கிறது. அதே பெயரில் ரூபாய்க்குப் பத்து மாத்திரை என்று தரம் தாழ்ந்ததாகவும் இருக்கின்றன. எனவே விலை உயர்ந்த மருந்துகளை டாக்டர்கள் எழுதிக் கொடுக்கும்போது, அப்படிப்பட்ட மருந்துகளை எழுதிக் கொடுக்கிறார்கள் என்று புகார் வருகிறது. இந்த நிலையை மாற்ற அரசு என்ன முயற்சி எடுக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இந்தக் கேள்வி எழுந்தது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. தவறான பிரச்சாரம் நடந்து கொண்டிருக்கிறது. எல்லா மாத்திரைகளும் வெள்ளையாக இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். ஆங்காங்கே உள்ள பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்குச் சென்று, நோயாளி களைப் பார்த்து, 15 நிமிடங்கள் விசாரித்தேன். தலைநோவிற்கும் இதுதான் கொடுக்கிறார்கள், காய்ச்சலுக்கும் இதுதான் கொடுக்கிறார்கள், எல்லா வற்றுக்கும் வெள்ளை மாத்திரைதான் கொடுக்கிறார்கள் என்று சொல்லு கிறார்கள். கலர் போடக்கூடாதென்று டபிள்யூ.எச்.ஓ. கைட்-லைன்ஸ்

இருக்கிறது. ஆன்டிசெப்டிக் மாத்திரைக்கு சிவப்பு நிறம் கொடுப்பார்கள். இப்போது அப்படிப் போடக்கூடாதென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். மேலும் எல்லா மாத்திரைகளிலும் 'த/அ' என்று முத்திரை போட்டிருக்கிறோம். அதன் காரணமாக காய்ச்சலுக்கும் இதுதான் கொடுக்கிறார்கள், எதற்கும் இதுதான் கொடுக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். வெள்ளையாக இருந்தாலும், வேறு வேறு மாத்திரைகள்தான், விலை உயர்ந்தவைதான். டிஸ்யூ பேப்பர், செலாபன் பேப்பர், ஃபாயில் பேப்பர் போன்றவற்றில் மாத்திரைகள் வந்தால், 'த/அ' முத்திரை போட முடியாது. அதனால் மாத்திரைகளை முத்திரை போட்டு, டின்களில் வாங்குகிறோம். எனவே மருந்துகளைப் பொறுத்தவரையில், எந்தவிதமான தரக் குறைவுமில்லை. வெளியில் உள்ள மருந்துகளின் தரத்தை, அரசு மருத்துவ மனைகளில் இருக்கும் மருந்துகள் பெற்றிருக்கின்றன என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : கடந்த மூன்று ஆண்டுக்காலமாக மருத்துவ மனைகளில் வழங்கப்படுகிற மருந்துகளின் அளவு கூட்டப்பட்டிருக்கிறதா? மேலும் நல்ல மருந்துகள் எல்லாம்— 'நல்ல மருந்தொன்று இருக்குதாம்' என்ற பாட்டின்படி, அப்படிப்பட்ட நல்ல மருந்துகள் எல்லாம் அரசு மருத்துவ மனைகளில் வழங்கப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அரசு மருத்துவ மனைகளிலே மிக நல்ல மருந்துகள் வழங்கப்படுகின்றன. அது எல்லோருக்கும் தெரிந்திருக்கக்கூடிய உண்மையாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். 1978-79-லே 12.87 கோடி ரூபாய் மருந்துகளுக்காகச் செலவழித்திருக்கிறார்கள். 1979-80-ல் 14.49 கோடியும், 1980-81-ல் 15.49 கோடியும், 1981-82-ல் 16.31 கோடி ரூபாயும் செலவழித்திருக்கிறார்கள். ஆண்டுதோறும் பார்க்கும்போது, 4 ஆண்டுகளுக்கு முன்பு 12.87 கோடியாக இருந்தது, இப்போது 16.31 கோடி அளவிற்கு உயர்ந்திருக்கிறது. இன்றைக்கு 'பெர் கேப்பிடா இன்வெஸ்ட்மென்ட் ஆஃப் மெடிசின்' என்று இருக்கிறது. தமிழ் நாட்டில் 4.8 கோடி ஜனத்தொகை இருக்கிறது. மருந்துக்காக எவ்வளவு செலவழிக்கிறோமென்று பார்க்கும்போது, தமிழகம்தான் எல்லா மாநிலங்களையும்விட முந்திக்கொண்டிருக்கிறது.

திரு. ஆ. நல்லசிவன் : ஆஸ்பத்திரிகளிலே எல்லாமே தரக்குறைவான மருந்துகள் என்று சொல்லவில்லை. ஒன்றை உதாரணத்திற்குச் சொல்கிறேன். டயாபிடீசுக்கு 'டையனீல்' என்று இருக்கிறது. அதற்கு அரசு மருத்துவ மனைகளில் கொடுக்கும் மருந்து பவர்புல்லாக இல்லை என்று ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவ மனையில் வாங்கிக்கொண்டவர்கள் சொல்லு



கிறார்கள். சுகர் கன்ட்ரோல் செய்யும் தன்மை குறைவாக இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட புகார்கள் வந்திருக்கின்றனவா? அதை ஆராய்ந்து, அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : டையனீல் என்பது ஒரு கம்பெனி மருந்து. அதற்கு கிளைமன் களிமைட் என்பது கெமிகல் பெயர். அதை எல்லா இடங்களிலும் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். நாம் கெமிகல் நேமைப் பயன்படுத்துகிறோம். வேலியம் என்று இருக்கிறது, காம்போஸ் என்று இருக்கிறது. டைசோபாம் என்பது அதன் கெமிகல் நேம். அதை நாம் பயன்படுத்துகிறோம். அதே போன்று டையாபிடசுக்கு எந்த மருந்து கொடுக்க வேண்டுமோ, அதைக் கொடுக்கிறோம்.

## *Honorary Surgeons*

* 64 Q. THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government for the abolition of the system of Honorary Surgeons and Physicians, working part time in Government Hospitals; and

(*b*) if so, the stage at which the matter now stands?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9-50)

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, பகுதிநேர மதிப்பியல் மருத்துவர்கள் என்ற பெயரில் நியமிக்கப்படுவதால், அவர்கள் முறைமையாக பணியைச் செய்வதில்லை. இந்தப் பெயரை வைத்திருப்பதால், அவர்களுடைய பணி அரசு மருத்துவமனைக்குப் பயன்படவில்லையென்ற ஒரு கருத்து இருக்கிறது. அதுபற்றி அரசு ஆராய்ந்ததா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இதைப்பற்றி அரசு ஆராய்ந்து திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. ஆனரரி மெடிக்கல் சிஸ்டம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்படி நடைமுறைப்படுத்தியிருப்பதற்குக் காரணம், அவர்களுடைய தொண்டு, திறமை நாட்டிற்குப் பயன்பட வேண்டுமென்பதற்காகத்தான். அந்த அடிப்படையில் மருத்துவத் துறை இயக்குநர்கள் மூலம் நோட்டிபிகேஷன் கொடுத்திருக்கிறோம். இன்னும் கொஞ்சம் நாளைக்குள் செலக்ஷன் செய்ய

இருக்கிறோம். ஆனால் நர்சிங் ஹோம் போல் மருத்துவமனைகள் பயன் படுத்தப்படக் கூடாது. அவ்வாறு நடைபெறாமலிருக்க கண்காணித்துக் கொண்டிருக்கிறோம். மருத்துவத் துறை இயக்குநர்கள் நன்றாகக் கண்காணித்துக் கொண்டிருந்தால், தவறுகள் நடைபெறாது. அப்படி கண்காணிப்பதன் மூலம் தவறுகள் செய்யாமல் இருப்பார்கள் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** பகுதிநேர மதிப்பியல் மருத்துவப் பணிக்கு முதியவர்களை மட்டுமல்லாமல், தகுதி வாய்ந்த இளைஞர்களையும் நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** நோட்டிபிக்கேஷனிலே இது பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்.

"*Honorary Assistant Medical Officers* : No person shall be eligible for appointment as an Honorary Assistant Medical Officer unless he belongs to, or is domiciled in the State and possesses a Medicial Degree of a University of the State or otherwise.

என்று சொல்லியிருக்கிறோம். அப்படிச் சொல்லிவிட்டு பிறகு

"Privided candidates should be in possession of Post-Graduate qualification..............or Graduates with not less than two years' experience will be considered."

என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே 2 ஆண்டுகள் எக்ஸ்பீரியன்ஸ் இருப்பவர்கூட மனு போடத் தகுதியுடையவர்கள்தான்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இந்த முறை அரசு மருத்துவமனைகளில் அனுபவம் உள்ளவர்கள் வரத் தயங்கிக்கொண்டிருந்த காலத்தில் கொண்டுவரப்பட்ட ஒன்று. இப்போது அரசு மருந்துவமனைகளில் ஆராய்ச்சிப் பட்டம் பெற்றவர்கள், முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் எல்லாம் பணியில் இருப்பதால்; 2 வருடம் என்று இருப்பதை 20 வருடம் என்று ஆக்கினால் கூடப் பரவாயில்லை. அதுவும் 2 வருடப் பணி அனுபவமுள்ளவர்கள், அதே சமயத்தில் தனியார் மருத்துவமனைகளில் பணிபுரிந்துகொண்டிருப்பவர்கள் அரசு மருத்துவமனைக்கு வர வேண்டிய தேவை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இதுகுறித்து டாக்டர் சனார்த்தனம் அவர்கள் கேட்டபோது கூட பதில் சொன்னேன். அதாவது 2 வருடம் என்பது மினிமம் தான். அதற்கு மேல் 10 வருடம் வரை சர்வீஸ் இருப்பவர்களுக்குத்தான் இது கிடைக்கும். ஆனால் அதே நேரத்தில் இளைஞர்களாக இருப்பதால், அவர்களுடைய பணியையும் நாம் இழக்கக் கூடாது. தவிரவும் இது ஆனரரி சர்ஜன் பதவிதான், திறமை





வாய்ந்தவர்களைக் கொண்டு வந்து அரசு மருத்துவமனைகளில் இத்தகைய வாய்ப்பினைக் கொடுப்பதன் மூலம் ஏற்கெனவே அரசு மருத்துவமனைகளில் பணியாற்றிக்கொண்டிருப்பவர்களுக்கு இருக்கின்ற வாய்ப்பு குறையுமா என்கிற கேள்வியையும் எழுப்பியிருக்கிறார்கள். அதுகுறித்து அதிகார பூர்வமாக, திட்டவட்டமாகச் சொல்கிறேன். சர்வீசில் இருப்பவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. கூடுதலாகத்தான் இத்தகையவர்களுடைய சேவையைப் பயன்படுத்திக்கொள்கிறோம்.

"not in lieu of the existing doctors but in addition to the work of the existing doctors"

என்கிற வகையில் நாம் உத்தரவு போட்டிருக்கிறோம். ஆகவே இப்போது சர்வீசில் இருக்கிற டாக்டர்களுக்கு 'புரமோஷன் ஆப்பர்சுனிட்டீஸ்' எந்த விதத்திலும் குறையாது.

**திரு. பா. ரா. தாமஸ் :** பகுதிநேர மதிப்பியல் மருத்துவ டாக்டர்களுக்கான வாய்ப்பு மருத்துவக் கல்லூரிகளோடு இணைக்கப்பட்டிருக்கிற அரசு மருத்துவமனைகளில் மட்டும்தான் இருக்கிறதா ? அல்லது பரவலாக எல்லா அரசு மருத்துவமனைகளிலும் இத்தகைய வாய்ப்பு இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** டி,எம்,எஸ்-ன் இலாகாவின்கீழ் இருக்கின்ற நார்த் ஆற்காடு, சவுத் ஆற்காடு, செங்கல்பட்டு, திருச்சி என்று எல்லா மாவட்டத் தலைநகர் மருத்துவமனைகளிலும் இத்தகைய வாய்ப்பு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், டைரக்டர் ஆப் மெடிக்கல் எஜுகேஷனின் கீழ் இயங்குகின்ற மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்த மருத்துவமனை களிலும் இந்த வாய்ப்பு இருக்கிறது.

## மருத்துவப் படி.

*** 65 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு ஊழியர்கட்கும், ஆசிரியர்கட்கும் மாதந்தோறும் மருத்துவப் படி வழங்கிட வகை செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எந்நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1982 பிப்ரவரி 15

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** பேரறிஞர் அண்ணா அவர்களுடைய இறுதிக் காலத்திலே அவர் நோய்வாய்ப்பட்டு வெளிநாடு சென்று திரும்பிய நேரத்திலே அரசு ஊழியர்களைச் சந்தித்து விட்டுப் பேசும்போது, " என்னைப் போன்ற உயர் அந்தஸ்தில் இருக்கக்கூடியவர்களுக்கே இப்படிப்பட்ட நோய்களைத் தீர்க்கக்கூடிய வாய்ப்பில்லாமல் இருக்கும்போது, அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் மிகவும் சிரமப்படுவார்கள் என்பதை நான் அறிகிறேன், எனவே அவசியம் உங்களுக்கு மாதந்தோறும் மருத்துவப் படி தர இந்த அரசு ஆவன செய்யும் " என்று செய்திருந்த குறிப்பினை நினைவுபடுத்தி, இதுவரை இந்த அரசிடம் அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லாமல் இருந்தாலும் கூட, இனிமேலாவது இந்த அரசு அதை அமுல்படுத்த முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு உறுப்பினருக்கே நன்றாகத் தெரியும். பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளை அமுல்படுத்திக் கொண்டு தான் இருக்கிறோம். எந்த ஆபத்து வந்தாலும், எந்த நோய் வந்தாலும், அதற்கான மருத்துவச் செலவை இந்த அரசு கொடுக்கிறது. உறுப்பினர் மாதந்தோறும் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட தொகையை ஊதியத்துடன் வழங்குவதுபற்றிச் சொல்கிறார். வியாதி இல்லாதவர்களும் மாதந்தோறும் மருத்துவப் படி பெறும்படி ஆவன செய்ய வேண்டுமென உறுப்பினர் கேட்கிறார். நாம் மாதந்தோறும் 100 ரூபாய் வழங்கினோம் என்றால், நோய் இல்லாதவர்களுக்கு அது பயன்படும். ஆனால் உண்மையிலேயே நோய் உள்ளவர்களுக்கு அது இழப்பாக இருக்கும். இப்போது உள்ள முறை உண்மையில் வியாதி உள்ளவர்களுக்கு ஒரு பாதுகாப்பான முறை. ஆகவேதான் இந்த அரசு பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையை முழுமையாக நடைமுறைப்படுத்திக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நோய் வந்தவர்கள் மருந்து சாப்பிட்ட பிறகு, அந்த மருந்துக்கான செலவைத் திருப்பித் தருகின்ற முறையில் 'ரீயிம்பர்ஸ்மென்ட் சிஸ்டம்' இப்போது அமுலில் இருக்கிறது. இப்போது இருக்கிற மொத்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் எவ்வளவு பேர், அதில் இந்தச் சலுகையை அனுபவிக்கின்றவர்கள் எத்தனை பேர், அவர்களுக்காக எவ்வளவு தொகை செலவு செய்யப்படுகிறது, சராசரி எத்தனை பேர் இந்தச் சலுகையை அனுபவிக்கிறார்கள், சராசரி எவ்வளவு தொகை இவர்களுக்காக ஆகிறது போன்ற புள்ளிவிவரங்களைத் தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். இன்றைக்கு பலர் அதைப் பெறுவதற்கான வாய்ப்பு இல்லை. பெறலாம் என்று சட்டம் இருக்கிறது. ஆனால் பெறுவது அவ்வளவு எளிதல்ல. சிலர் தான் இதனைப் பெற முடிகிறது. எளிதாக



1982 பிப்ரவரி 15]

இல்லாமல் இருப்பதால், பெருவாரியான ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், பாதிக்கப்பட்டவர்கள் இதனைப் பயன்படுத்த முடியவில்லை. ஆகவே, இந்நிலையைத் தவிர்க்க இந்த அரசு சீரான, எளிமையான ஒரு திட்டத்தை உடனடியாகக் கொண்டு வந்து அமுல்படுத்துமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு உறுப்பினர் எவ்வளவு பணம் இதற்காகச் செலவு செய்யப்படுகிறது என்று கேட்டிருக்கிறார். அரசு ஊழியர்களுக்கு அல்லது ஆசிரியர்களுக்கு நோய் வந்தால், அந்த நோயைக் குணப்படுத்த, தடுக்க ஆவன செய்யக்கூடிய வழிவகை இப்போது இருக்கிறது. ஆசிரியர்களுக்கு வியாதி வராமல் தடுப்பது தான் நம்முடைய நோக்கம். நோய் வராமலிருந்தால், அது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. அதுதான் முக்கிய நோக்கம். இங்கே மாண்புமிகு உறுப்பினர், அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் அதைப் பயன்படுத்திக்கொள்ளவில்லையென்று சொன்னால், அந்த அளவுக்கு அவர்களுக்கு வியாதி இல்லை என்றுதான் பொருள். அது மிகவும் மகிழ்ச்சிக் குரியது. (சிரிப்பு) அப்படி என்றால், அது நம்முடைய முன்னேற்றத்தைத் தான் காட்டுகிறது. அமெரிக்கா போன்ற நாடுகளை எடுத்துக்கொண்டால், எவ்வளவுக்கெவ்வளவு பணம் இதற்காகச் செலவு செய்வதைக் குறைத்துக் கொள்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அங்கே முன்னேற்றம் ஏற்பட்டிருக் கிறது என்பதற்கு இது அடையாளம். அந்த அடிப்படையில் இப்படிப்பட்ட செலவை அவர்களே குறைத்துக்கொள்வது என்றால், அவர்களுடைய உடல் நல்லமுறையில் தேறியிருக்கிறது என்று பொருள். ஆனால், உண்மையிலேயே வியாதி ஒருவருக்கு வநதால், அதற்குத் தேவைப்படும் அளவு மருந்துகள் கொடுக்கின்றனவா என்பதுதான் என்னுடைய கேள்வி. அதற்கான மருந்துகள் கொடுக்கப்படுவதோடு, வெளியிலிருந்து மருந்து வாங்கிச் சாப்பிட்டால், அதற்கான ரீயிம்பர்ஸ்மென்ட்-ம் கூட இப்போது தரப்படுகிறது. அரசு ஊழியர்களுக்கோ, ஆசிரியர்களுக்கோ உண்மையிலேயே நோய் வந்து, அவர்கள் அதற்குரிய மருந்தைச் சாப்பிட்டு, அதன் பிறகு அதற்குரிய ரீயிம்பர்ஸ் மென்ட்-ஐக் கேட்கும்போது, அது இல்லையென்று சொல்லக்கூடிய குற்றச்சாட்டு வந்தால், அதுகுறித்து உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. சி. சா லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மருத்துவ ஈட்டுச் செலவுக்காக ஒரு குறிப்பிட்ட தொகை ஆண்டுதோறும் ஒதுக்கப்படுகிறது. அது துறை வாரியாகப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. அந்தத் தொகை ஒதுக்கப்பட்ட ஒருசில நாட்களுக்குள்ளாகவே உண்மை யிலேயே நோய் இல்லாதவர்கள் கூட தவறான முறையில் பொய்யான ஆதாரத்தைக் கொடுத்து அதற்கான தொகையைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

[1982 பிப்ரவரி 15

இதிலே ஒழுங்கீனம் இருக்கிறது. விதி அப்படி இருக்கிறது. இதை நான் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இத்தகைய ஒழுங்கீனம் நீக்கப் படுமா ? அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் இந்தச் சலுகை தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா ? இதனைச் செயல் படுத்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் ஆசிரியர்கள் இந்த வசதியைப் பயன் படுத்திக்கொண்டு ஒழுங்கீனங்களைப் புரிய வாய்ப்பு இருக்கிறது என்கி றார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், ஆசிரியர்களை முழுமையாக நம்புகிறது. இதுதான் எங்கள் இருவருக்கும் உள்ள கருத்து வேறுபாடு. ஆசிரியர்கள் ஒழுங்கீனங்களைச் செய்ய மாட்டார்கள் என்பதில் அரசுக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. இந்த விஷயத்தைப் பொறுத்தவரை மூன்றாவது ஊதியக் குழு என்ன சொல்லியிருக்கிறது என்பதற்காக ஒரே ஒரு பாராவை மட்டும் நான் இங்கே படிக்க விரும்புகிறேன். அதிலேதான் அண்ணாவின் கொள்கை வருகிறது.

"The Third Pay Commission, in its observation, has opined that the payment of an allowance in lieu of medical reimbursement scheme will be incongrous to the basic principal underlined The scheme of medical reimbursement pre-supposes the actual expenses incurred by the Government servant."

எனவே இதற்கென்று குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்படவில்லை. ஆசிரியர் கள் உடல்நலம் பாதிக்கப்பட்டபோது அதற்காக ஏற்படுகிற செலவை அரசு கொடுக்கும்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் எழுந்தார்.)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, ஒரே ஒரு துணை வினாவை மட்டும் கேட்க விரும்புகிறேன். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே இரண்டு துணை வினாக்களைக் கேட்டாகிவிட்டது. இப்போதே ½ மணி நேரம் ஆகிவிட்டது. ஐந்தாவது கேள்வியில்தான் இன்னும் இருக்கிறோம். எனவே நான் இன்னும் துணை வினாக்களை அனுமதிக்கப் போவதில்லை மாண்புமிகு உறுப்பினர் உட்கார வேண்டும்.



1982 பிப்ரவரி 15]

## Sale of Diesel and Petrol.

* 66 Q—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) whether Police Officers of the Food Cell, have been authorised to verify and check Diesel and Petrol Outlets, under various control orders and other enactments;

(b) whether, in the event of any alleged irregularities, action is initiated under the Tamil Nadu Motor Spirit and High Speed Diesel Oil (Maintenance and Regulation of Supplies) order 1980, or under other enactments; and

(c) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) ஆம்.

தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி எரி எண்ணெய், உயர் வேக டீசல் எண்ணெய் (பராமரித்தல், வழங்குவதை முறைப்படுத்துதல்) ஆணையின்படி காவல்துறை இன்ஸ்பெக்டர் பதவித் தரத்திற்குக் குறையாத பதவித் தரத்திலுள்ள காவல்துறை அதிகாரிக்கு டீசல், பெட்ரோல், விற்பனை இடங்களைச் சரிபார்ப்பதற்கும், சோதனையிடுவதற்கும் அதிகாரம் அளிக்கப் பட்டுள்ளது.

(இ) & (ஈ) முறைகேடுகள் ஏற்பட்டுள்ளவிடத்து 1975 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டம், 1980 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் வழங்குவதைப் பராமரித்தல் கள்ள வணிகத்தைத் தடுத்தல் சட்டம், தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி எரி எண்ணெய் உயர் வேக டீசல் எண்ணெய் (பராமரித்தல், வழங்குவதை முறைப்படுத்துதல்) ஆணை ஆகியவற்றின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know from the Government whether any communication has been received from the Government of India in January 1982 requesting the Governments to remove all controls on the sale of High Speed Diesel and petrol, in view of the plentiful availability of these products?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** இவையனைத்தையும் நீக்கிவிட வேண்டும் என்று மத்திய அரசிடமிருந்து உத்தரவு ஏதும் வரவில்லை. ஆனால் இப்போது நமக்கு தாராளமாக எரி எண்ணெய் போன்றவை கிடைக் கின்றன என்பதை மட்டும் நான் இங்கே குறிப்பிட முடியும்,

THIRU A. R. DAMODARAN : Sir, may I invite the attention of the Hon. Minister to a communication dated the 30th December 1981 bearing Ref. No. Q|16023|1|81 addressed by the Ministry of Petroleum to the Cheif Secretaries of all States, stating that supply and distrubtion controls on diesel and petrol should be removed? If it has been received, why has this communication not been brought to the notice of the Hon. the Minister for Transport?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் குறிப்பில் இதுபற்றிக் குறிப்பிடப்படவில்லை. ஏன் அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரவில்லை என்பதைக் கேட்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : முறைகேடுகள் என்ற அடிப்படையில் தென்னாற்காடு மாவட்டத்தில் மட்டும் எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன? அவற்றில் எத்தனை வழக்குகள் நீதிமன்றத்தின் முன் இருக்கின்றன? இதில், அரசாங்கப் பணிகளுக்காகப் பெட்ரோல் பிடித்துக்கொண்டு போன கார்கள் அல்லது ஜீப்புகள் ஆகியவற்றின் ஓட்டுநர்கள் தந்த தகவல்கள் பேரில் வழக்குகள் போடப்பட்டிருப்பதாக அரசாங்கத்திற்குத் தகவல் உண்டா? பின்னால் பணம் வாங்கிக்கொண்டு வந்து தருகிறேன், இப்போது பெட்ரோல் போடுங்கள் என்று கேட்டு, கிடைக்காமல் போனதன் காரணமாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டதுண்டா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித் தனியாகப் புள்ளிவிவரம் என்னிடம் இல்லை. ஒட்டுமொத்தமாக 16 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அரசாங்கக் காரியத்திற்காகப் போட்டுக் கொண்டுபோன பெட்ரோல் என்ற காரணத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தகவல் இல்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : இந்த 16 வழக்குகளில், மத்திய அரசிடமிருந்து வந்த தகவலுக்குப் பின்னால் எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன என்று அறிவிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மத்திய அரசிடமிருந்து ஆணை வந்த பின் எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன என்ற விவரம் என்னிடம் இல்லை. ஒட்டுமொத்தமாக 16 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. போதிய அளவுக்கு டீசல் போன்ற அனைத்து வகை எண்ணெயும் நமக்கு வருகிற காரணத்தால், வழக்குகள் பதிவு செய்யப்பட வேண்டிய சூழ்நிலை இல்லாமல், நல்ல நிலைமை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.



ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்ட கருத்தின் அடிப்படையில் வேறு விதமான மாறுதலைக் கொண்டு வரலாமா என்று அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : தென்னாற்காடு மாவட்டம் குள்ளஞ்சாவடியின் "ஃப்புட் செல் விஜிலென்ஸ்" டிபார்ட்மெண்டைச் சார்ந்த ஒரு ஜீப் வந்து பெட்ரோல் அவசியம் தேவைப்படுகிறது, அதற்கான ரசீதைத் திரும்ப வரும் போது கொண்டுவந்து கொடுக்கிறேன் என்று சொல்லி வாங்கிக்கொண்டு போயிருக்கிறார்கள். அவர்கள்மீது பிறகு வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. இதுகுறித்து மேலதிகாரிகளுக்கு விவரங்களைத் தெரிவித்த பிறகும் பதிவு செய்யப்பட்ட வழக்கு திரும்பப்பெறப் படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அப்படிப்பட்ட தகவல் எதும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. எனினும் இதையே ஒரு புகாராகக் கொண்டு அரசாங்கம் இதன்மீது நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Diversion of Bus Route*

*67 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) whether any representation has been received from Gandhi Manram, Anandatandavapuram, during the first week of March 1981, requesting the Government to stop the diversion of Town Route No.7 from its present course; and

(b) if so, the action taken by the Government in the matter?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### மோட்டார்-சைக்கிள் டாக்சி.

*68 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோவாவில் உள்ளது போன்று, சென்னை நகரில், மோட்டார்-சைக்கிள் டாக்சி (Motor-Cycle Taxi) விட தமிழக அரசு திட்டமிட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) எழாது.

திரு. இ.ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, கோவாவில் மோட்டார் சைக்கிள் மூலமும், டெல்லியில் "பட்-பட்" என்ற டாக்ஸி மூலமும் குறைந்த கட்டணத்தில் நீண்ட தூரத்துக்குப் பயணம் செய்யக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். டெல்லியில் ஒரு ரூபாய் கொடுத்து பட்-பட் என்ற வாகனத்தில் ஏறினால், அதிகமான தூரத்திற்கும் பயணம் செய்ய முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே அறிந்திருப்பார்கள். அத்தகைய வசதிகளை இங்கே அரசாங்கம் செய்து கொடுக்குமானால், ஏழை எளிய மக்களுக்கும், குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும் வசதியாக அமையும் என்பதால், அரசாங்கத்திடம் அதுபற்றிய திட்டம் ஏதும் தற்போது இல்லை என்றாலும், இனியாவது பரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : எனக்குத் தெரிந்தவரையில், அங்கெல்லாம்கூட குறைந்த கட்டணத்தில் ஏற்றிச் செல்வதாகக் கருதவில்லை. அங்கே வசூலிக்கப்படும் தொகை ஏறக்குறைய இங்கே ஆட்டோவிற்கு வசூலிக்கப்படும் கட்டணத்தின் அளவுக்குத்தான் இருக்கிறது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இப்போதே இங்கு 6,000-க்கும் மேற்பட்ட ஆட்டோக்கள் சென்னை நகரில் ஓடிக்கொண்டிருக்கின்றன. 2,134 டாக்சிகள், மற்றும் 218 பாதல் என்ற புதிய வாகனங்களும் மற்றும் 7,000-க்கும் மேற்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதோடு 2,000 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இதற்குமேலும் வாகனங்களை விட வேண்டுமா என்பதும், விட்டால் கட்டுப்படியாகுமா என்பதும் அரசாங்கத்திற்குக் கவலையாக இருக்கிறது.

திரு. இ. ரா. லெட்சுமிகாந்தன் : டெல்லியில் "பட்-பட்" என்ற வாகனத்தில் சுமார் 10 பேர் வரை உட்கார்ந்து கொண்டு செல்லலாம். ஒரு ரூபாய் கட்டணம் கொடுத்தால், அதிகமான அளவு தூரம் பயணம் செய்யலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்க்கலாம். சத்தம்தான் தலைவலியாக இருக்கும். என்றாலும் அது ஏழை எளிய மக்களுக்கு உதவியாக இருக்கும் என்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு இங்கேயும் அதை அமைத்திட அரசு நடவடிக்கை எடுப்பாரா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : சத்தம்தான் தலைவலியாக இருக்கும் என்றார்கள். ஆனால் அதை இங்கே அமைத்திட்டால், கட்டணத்திற்குத் தலைவலி வந்துவிடும். எனவே இங்கே 5 பேருக்கு மேல் ஏற்றக்கூடாது





என்று நாம் வைத்திருக்கிறோம். டெல்லியில் 10 பேர் வரை பயணம் செய்வதாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் சட்டம் என்ன ஆகும் என்று சிந்திக்க வேண்டும். எனவே 5 பேரை மட்டும் அனுமதித்தால், அதன் கட்டணம் ஆட்டோ ரிக்ஷாவின் கட்டணத்திற்குச் சமமாக வந்துவிடும் என்றுதான் நான் நினைக்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு உறுப்பினர் "பட்-பட்" என்று கேட்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் "பட்-பட்" என்று பதிலளிக்கிறார். உறுப்பினர்களான எங்களுக்குப் "பட்-பட்" என்றால் என்னவென்று புரியவில்லையே!

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : அரசாங்கம் அதை இங்கே அனுமதிக்கப் போவதில்லை என்ற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இதைப் புரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்; சென்னை நகரில் போக்குவரத்து வசதிக்காக பட்-பட் வாகனத்தைக் கொண்டு வந்தாலும் சரி அல்லது மோட்டார் சைக்கிள் டாக்ஸி கொண்டு வந்தாலும் சரி, எதைக் கொண்டு வந்தாலும், மீட்டருக்கு மேல் பணம் கேட்கின்ற நிலைமைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அவர்களுக்குக் கட்டுப்படியாகிற ரேட்டைக்கூட நிர்ணயம் செய்யுங்கள். மறுக்கவில்லை. ஆனால் பேச்சு வார்த்தை மூலம் ஒருமுறை நிர்ணயம் செய்துவிட்ட பிறகு, மீட்டருக்கு மேல் பணம் கேட்டு வற்புறுத்தி வருகின்ற நிலையைப் அரசு தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : இதில் பெரிய சங்கடங்கள் இருப்பதால்தான், இரண்டு மூன்று முறைகளுக்கு மேலும் அனைத்துத் தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்துப் பேசி, கட்டணத்தை நிர்ணயம் செய்தோம். அதை மீறி யாரும் வசூலிக்கக் கூடாது என்ற காரணத்தால், அத்தகையோர் மீது நடவடிக்கை எடுப்பதற்காக என்றே 12 ஆய்வாளர்களையும் நாம் நியமித்தோம். இருந்தாலும் சில இடங்களில் தவறுகள் நடைபெறுகின்றன. அவைகளை நீக்குவதற்கு பொது மக்களிடமிருந்தும் மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்களிடமிருந்தும் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. இங்கே இருப்பவர்கள் அனைவரும் ஏதோ ஓர் அரசியல் கட்சியோடு தொடர்பு கொண்டிருப்பவர்களாக இருக்கிறார்கள். எனவே அவர்களைச் சரியான முறையில் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே அனைவரும் ஒத்துழைப்பு நல்கினால் இதில் ஓரளவுக்கு நல்ல நிலைமையை உருவாக்க முடியும் என்று கருதுகிறேன்.

(முற்பகல் 10-10)

திரு. க. இராமமூர்த்தி : சென்னை நகரில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, ரோடு கெப்பாசிட்டி (Road Capacity) பற்றி அரசு பரிசீலனை செய்ததா? புதிய பேருந்துகளை, டாக்சிகளை, ஆட்டோ ரிக்ஷாக்களை எந்தெந்தப் பகுதியிலே விட முடியும், எந்தப் பகுதியிலே அதிகமாக விடமுடியாது என்பதைப் பற்றி பரிசீலனை செய்து அதற்கேற்ற வகையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : இனிமேல் புதிதாகப் பேருந்துகள், வாகனங்கள் விடுவதென்றால், நகரத்திற்கு வெளியேதான் விட முடியுமே தவிர நகரத்திற்குள்ளே விட முடியாது. நகரத்திற்குள்ளே உள்ள அத்தனை இடங்களிலும் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆகவே நெரிசல் அதிகமாக இருக்கின்றது. பாதைகளை மாற்ற ஏதாவது வசதிகள் இருக்கின்றனவா என்பதைத் தீவிரமாக ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. நீல்நாராயணன் : சென்னை நகரில் ஓடுகின்ற டாக்சிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள் மீட்டர் கட்டணத்தைவிட அதிகமாகக் கேட்பதைத் தடுக்க அரசியல் கட்சிகள் ஒத்துழைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். எந்த அரசியல் கட்சியும் மீட்டர் கட்டணத்திற்கு மேல் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று பரிந்துரை செய்தது கிடையாது. அதற்காகப் போராட்டம் நடத்தியது கிடையாது. சென்னை நகரிலே மீட்டரின் மூலமாக அதிகமான கட்டணங்கள் வசூலிக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் ஒரு கிலோ மீட்டருக்கு 90 பைசாக்கள் விதம் கொடுக்க வேண்டும், அதற்காக நாங்கள் ஆர். டி. ஓ.விடம் பெர்மிஷன் பெற்றிருக்கிறோம் என்று சொல்லி ஒரு [illegible] எழுதி வைத்துக் கொண்டு, அதிகமான கட்டணம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனாலே பிரயாணிகளுக்கும் அவர்களுக்கும் இடையே தகராறுகள் ஏற்படுகின்றன. இது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? இதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மீட்டர் கட்டணத்திற்கு மேலே கொடுக்க வேண்டுமென்று சட்டமன்றப் பேரவையிலோ, மேலவையிலோ யாரும் சொல்லவில்லை. ஆனால் இதே அரசியல் கட்சியைச் சேர்ந்த தொழிற் சங்கங்கள் இந்தக் கோரிக்கையை வைக்கிறார்கள் என்பதை மறந்து விடக் கூடாது. இங்கே இருப்பவர்களுக்குக் கட்டுப்பாடு, அங்கே இருப்பவர்களுக்கு அந்தக் கட்டுப்பாடு இல்லையென்று சொன்னால் நிச்சயமாக அதை [illegible] முடியாது. அந்த அடிப்படையிலே அரசாங்கம் சட்டத்தை



போட்டு சில நடவடிக்கைகளை எடுக்கிறபோது, அரசியல் கட்சிகள் அவர்களுக்கு அப்படிச் செய்யக்கூடாது என்று அறிவுரை சொல்ல முன்வருவார்களேயானால், இத்தகைய நிகழ்ச்சிகள் நிச்சயமாக நடக்காது. மீட்டர் கட்டணத்திற்கு மேலே கேட்கிறார்கள் என்பதை அரசாங்கம் உணர்ந்திருப்பதால்தான், கடுமையான நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறோம். சென்னை நகரத்திற்காக மட்டும் 12 ஆய்வாளர்களை நியமித்திருக்கிறோம். வாரம் ஒருமுறை அவர்களை அழைத்து என்னென்ன காரியங்களைச் செய்திருக்கிறார்கள், எத்தனை பேர் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். அந்த அளவிலே ஒத்துழைப்பு கேட்டேன். அப்படிப் பரிந்துரை செய்தார்கள் என்று நான் சொல்லவில்லை.

இருக்கைகள் இல்லாமல் நகரப் பேருந்துகள்.

* 69 வினா—திரு. செ. ரா. வெட்கமிகாந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை நகரில், பல்லவன் பெருநகர் போக்குவரத்துக் கழகத்தில், நின்றுகொண்டு மட்டுமே பயணம் செய்யும் வகையில், பேருந்துகள் விடப்படுமா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. செ. ரா. வெட்கமிகாந்தன் : தலைவர் அவர்களே, குறுகிய தூரம் செல்லக்கூடிய பேருந்துகளில் மட்டும் உட்கார வேண்டிய இருக்கைகளை நீக்கிவிட்டு அனைவருமே நின்றுகொண்டு செல்லக்கூடிய வாய்ப்பை அளித்தால், அதிகமான பயணிகள் அதில் பயணம் செய்ய முடியும். அந்த மாதிரியான பேருந்துகளுக்கு செலவும் குறையும். அயல் நாடுகளில் இப்படிப்பட்ட பேருந்துகள் இருக்கின்றன. மேலும் சென்னை நகரத்தில் நெரிசல் அதிகமாக இருப்பதால், குறுகிய தூரத்திற்குச் செல்லக்கூடிய பேருந்துகளில் இப்படிப்பட்ட வசதிகளைச் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது பரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : ஏற்கெனவே 1970 முதல் 1975 வரை இது நடைமுறையில் இருந்திருக்கிறது. 1977-ல் இதை அறவே எடுத்து விட்டார்கள். அதற்கு முன்பு 81 வண்டிகள் ஓடிக்கொண்டிருந்தன. அதற்குள்

பின்னாலே நிற்க வேண்டியிருக்கிறது என்று பொதுமக்கள் எடுத்துச் சொன்னதற்குப் பின்னாலே எடுத்து விட்டார்கள். குறுகிய தூரத்திற்காக மட்டும் என்று பேருந்துகளை விட முடிவதில்லை. அப்படி விட்டாலும் நெரிசல் அதிகமாக இருக்கும் நேரங்களில் மட்டும் அதைப் பயன்படுத்திக்கொண்டு, நெரிசல் அதிகமாக இல்லாத நேரங்களில் அந்தப் பேருந்தை விட்டுவிட்டு உட்காரக்கூடிய வசதியுள்ள பேருந்துகளில் செல்ல நினைப்பதால் நூசல் விளைகிறது. ஆகவே இது எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்குள்ள சூழ்நிலையில் அப்படிப்பட்ட பேருந்துகளை விடுவது பயனுடையதாக இருக்குமா என்பதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. பா. ரா. தாமஸ்: மதுரை நகரில் ஓடக்கூடிய பேருந்துகளில் உட்காருவதற்காக இடம் இருந்தால் மட்டும் பயணிகளை ஏற்றிவிட்டு மற்றவர்களை விட்டுவிட்டு வண்டியைக் கிளப்பி விடுகிறார்கள். அதைப் போலவே சென்னை நகரிலும் உட்கார்ந்துதான் செல்ல வேண்டும், நிற்கக் கூடாது என்ற நிலையை உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : சென்னை நகரில் ஓடக்கூடிய பேருந்துகளில் நிற்காமல் உட்கார்ந்து மட்டும் செல்ல வேண்டும் என்ற சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்றால், மேலும் மூவாயிரம் பேருந்துகளை விட வேண்டும். அப்போது பேருந்துகள் ஓடாது, நின்று கொண்டிருக்கும்.

THIRU A. R. DAMODARAN: Sir, in places like Rome, where tourists go to such centres as the St. Peter's Cathedral, over distances of 8 to 10 km. these standee-buses are always used. May I know whether the Government will consider having such buses to reach popular pilgrim centres like the Gandhi Mantap and other places at Guindy? At present, at least 80 per cent of the passengers in our buses are standees. It is unfair to discriminate and give seats to 20 per cent of the passengers while the remaining 80 per cent of the passengers have to stand, for the same fare.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : இப்போதிருக்கின்ற சூழ்நிலைக்கேற்ப பரிசீலித்து நடவடிக்கை எடுக்கலாம் என்று நான் ஏற்கெனவே சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இடங்களில் அப்படிப்பட்ட பேருந்துகளை விடுவது பயனுடையதாக இருக்குமா என்பதைப் பரிசீலித்துப் பார்க்கலாம். 20 சதவீதம் பேர் அமர்ந்து கொண்டு போவதும் 80 சதவீதம் பேர் நின்று கொண்டு போவதுமாக உள்ள நிலை சரியல்ல என்று அவர் குறிப்பிட்டதைப் போல, சில வண்டிகளில் இருக்கையும், சில வண்டிகளில் இருக்கை இல்லாத நிலையும் ஏற்பட்டால், இதே முறையில்தான் கேள்விகள் [illegible]





அச்சம் இருக்கிறது. கட்டணத்தைக் குறைப்பது என்பது சுலபமானதல்ல. அதற்காக நீதிமன்றத்திற்குக்கூட போவார்கள் என்பதை மறந்து விடக் கூடாது.

### Assistant Executive Engineers

*70 Q.—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Khadi & Public Works be pleased to state:

(a) the ratio that is being followed in regularising the services of the Diploma Holders as Assistant Executive Engineers in the Public Works Department, as against those from Graduate Engineers; and

(b) the number of Assistant Engineers recruited every year from 1977 and the number of Diploma Holders, who were promoted as Assistant Executive Engineers every year, from 1977?

மாண்புமிகு திரு. செ. தீ. இராசேந்திரன் : (அ) 1 : 3 என்ற விகிதம்.

(இ) நியமிக்கப்பட்ட உதவிப் பொறியாளர்களின் எண்ணிக்கை :

| வருடம் | எண்ணிக்கை |
|---|---|
| 1977-ல் | 9 பேர் |
| 1978-ல் | 153 பேர் |
| 1979-ல் | 131 பேர் |
| 1980-ல் | 183 பேர் |
| 1981-ல் (29—7—1981 வரை) | 352 பேர் |

உதவிச் செயற்பொறியாளர்களாகப் பதவி உயர்வு பெற்ற பட்டயப் பொறியாளர்களின் எண்ணிக்கை.

| வருடம் | எண்ணிக்கை |
|---|---|
| 1977-ல் | 6 பேரும் |
| 1978-ல் | 10 பேரும் |
| 1979-ல் | 21 பேரும் |
| 1980-ல் | 27 பேரும் |
| 1981-ல் (29—7—1981 வரை) | 30 பேரும் |

நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, பணி வரன்முறைப்படுத்தும் இத்திட்டம் பற்றி அரசுக்கு ஏதாவது புகார் வந்ததா? அந்தப் புகாரின் அடிப்படையில் அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்ததா?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : இதுவரை எந்தப் புகாரும் அரசுக்கு வந்ததாகத் தெரியவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை அளிப்பது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அரசியலமைப்பின் 202 (1)-வது பிரிவின்படியும், மேலவை விதி 151 (1)-ன் படியும் 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை 26—2—1982 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சட்டமன்ற மேலவைக்கு அளிக்க வேண்டும் என்று ஆளுநர் அவர்கள் குறித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு.

### 1—6—1981-க்கு முன்னால் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் நிலுவை ஊதியங்கள், மற்றும் படிகள், இறந்தவர்களுக்கு ரூ. 10,000 அளித்தல் ஆகிய நிலுவைகள் எதும் அரசு ஊழியரான பின்னால் வழங்கப்படாதது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்களின் தீர்மானம் நாளை எடுத்துக் கொள்ளப்படும். அடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம், திரு. செ. முத்துசாமி, மற்றும் திரு. க. மீனாட்சிசுந்தரம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

" 1—6—1981-க்கு முன்னால் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் நிலுவை ஊதியங்கள் மற்றும் படிகள், இறந்தவர்களுக்கு ரூ. 10,000 அளித்தல் ஆகிய நிலுவைகள் எதுவும் அரசு ஊழியரான பின்னால் வழங்கப்படாததால் பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து."

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை@ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

---

@ [illegible] பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, 1—6—1981க்குப் பின்னாலே ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகை, ஊதியம், திருமணக் கடன், சைக்கிள் கடன், நலநிதிக் கடன் போன்ற பல பிரச்சினைகள் எல்லாம் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. பள்ளிக் கல்வி இயக்குநர் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் வழங்க வேண்டுமென்றும், ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்கள் கல்வித் துறை வழங்க வேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். இது தொடர்பாக ஆணை விரைவிலே பிறப்பிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், 1—6—1981 முதல் 11—2—1982 வரை ஏறக்குறைய 7 மாதங்கள் ஆகியும், இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருப்பதால், ஆசிரியர்கள் அல்லலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இது குறித்து அரசு விரைவிலே நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இது குறித்து அரசு விரைவிலே நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(நண்பகல் 10-20)

## 4. ஆளுநர் உரையின்மீது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையின் மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற விவாதத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே எனது கருத்துக்களை எடுத்து வைக்க விழைகிறேன்.

ஆளுநர் உரை ஒவ்வொரு ஆண்டு தொடக்கத்திலே தரப்பட்டு ஆளுகின்ற அரசினுடைய கொள்கை விளக்கப்பட்டு அந்தக் கொள்கையினுடைய விளக்கம் அளித்து, அதன்பேரில் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்கள் சொல்லி, ஓர் உரு பெற்று அதற்கேற்ப ஆண்டு நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, நாட்டின் வளர்ச்சித் திட்டங்களையும், மக்கள் நலன் கருதி மேற்கொள்கின்ற திட்டங்களையும் அமல்படுத்தி நிறைவேற்ற அரசு தயாராக இருக்கிறது என்ற நிலையிலேதான் ஆளுநர் அவர்கள் உரையின் வாயிலாக அரசினுடைய கொள்கைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி அறிவிக்கப்பட்ட கொள்கையிலே என் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்கிறபோது, நான் நிதிநிலை தயாரா

[திரு. ம. சங்கரலிங்கம்] [1982 பிப்ரவரி 15

ஆளுகின்ற அரசு ஒரு கட்சியைச் சார்ந்தது என்ற உணர்வு இல்லாமல் இந்த நாட்டினுடைய நன்மை கருதி, நாட்டிற்கு நன்மைகளைக் கொண்டு சேர்க்கின்ற பொறுப்பில் உள்ள அரசு, மக்களுடைய ஆணையால் அமைக்கப்பட்ட அரசு எடுத்துக்கொள்கின்ற முயற்சிக்கு எல்லாக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் உறுதுணையாக இருந்து அரசுக்கு நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லவேண்டுமென்ற உணர்வோடு சொல்ல விழைகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் பக்கம் 8-ல் மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படுகின்ற பொருள்களின் விலைவாசிகள் உயர்வது பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையில் இந்த நாட்டில் முதன்முதலிலே கவனிக்கப்பட வேண்டியது, உணவும், அதற்குப் பிறகு உடையும், பின் இருப்பிடமும் வருகிறது. உணவுப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளும்போது அதனுடைய விலைவாசிகள் ஏற்றமுற்றிருக்கின்றன. ஓரளவுக்கு அரிசியினுடைய விலையை நம்மால் கட்டுப்படுத்த முடிந்திருந்தாலும், அந்த அரிசியை உணவாக்குகின்றதற்குத் தேவைப்படுகின்ற மற்ற பொருள்களுடைய விலைகள் எல்லாம் இன்று சாதாரண மக்களுடைய சக்திக்கு மிஞ்சிப் போகின்றன. அது உயர்கின்ற வேகத்தினை நம்மால் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதை உணர்கிறோம். அதைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்குரியது. மக்களுக்கும் அரசுக்கு அவர்கள் போடுகின்ற திட்டங்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்கும் நிலை இருக்கிறது. எல்லோரும் ஒருமித்து அதைச் செய்ய வேண்டும். அந்த முறையில் ஆளுநர் அவர்கள் உரையில் உணவுபற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். "இந்த அரசு மிகுந்த கவலை கொண்டுள்ளது, இந்தப் பொறுப்பிலே மத்திய அரசும் சேர்ந்திருக்கிறது" என்று சொன்னார்கள். அரசு மிகுந்த கவலை கொண்டிருப்பதுபற்றி நானும் அவர்களோடு கவலைப்படுகிறேன். மத்திய அரசுக்கும் பொறுப்பிருக்கிறது என்பதிலே மாறுபட்ட கருத்து இல்லை. அப்படியிருந்தாலும், மாநில சர்க்கார் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கிறதா என்பதை நான் ஆராயக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநில அரசு தங்களுக்குரிய பங்கினை ஏற்பதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்று விலைவாசி ஏற்றத்தினுடைய காரணம் என்னவென்றால், அதை இந்தியாவில், துணைக் கண்டத்தில் இருக்கின்ற பொருளாதார அமைப்பிலே இருக்கக்கூடிய ஒரு கோளாறு என்றுதான் சொல்லித்தான் ஆகவேண்டும். நமது பொருளியல் வல்லுநர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் "உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டு தன்னிறைவு ஏற்படும். தன்னிறைவுக்கு ஏற்ற அளவுக்காவது உற்பத்தியின் நிலை உயர்த்தப்பட்டால், அரசுக்கு நெருக்கடி ஏற்படுவதில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். உணவு உற்பத்தியிலே கடந்த 3, 4 ஆண்டுகளில் இறக்குமதி செய்கின்ற நிலை மாறி, உணவு உற்பத்திப் பெருக்கத்தினால் தன்னிறைவு பெற்றிருக்கின்ற



1982 பிப்ரவரி 15] [திரு. ம. சங்கரலிங்கம்]

நிலைமை இருக்கிறது. மாநில அரசாலும் மத்திய அரசாலும் உணவுப் பொருள்களுடைய விலைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. மனிதனுடைய இன்றியமையாத தேவையான பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதற்குக் காரணம் என்னவென்றால், கறுப்புப் பணத்தினுடைய புழக்கம்தான் என்பதில் இரண்டுவிதமான கருத்துக்கள் இருக்க முடியாது. வாங்குகின்ற சக்தி எல்லோருக்கும் சமமாக இருக்க வேண்டும். ஒரு சிலரிடத்திலே வாங்குகின்ற சக்தி மிகுந்து அவர்கள் எந்த விலையைக் கொடுத்தும் வாங்குகிறார்கள். லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் பணம் வைத்திருப்பவர்கள் அதிகமாகப் பணம் கொடுத்து வாங்கி விடுகிறார்கள். அதனால் பக்கத்திலேகூட மற்றவர்கள் போக முடியாது. அதற்கு ஆங்கிலத்திலே பொருளியல் வல்லுநர்கள், 'பர்சேஸிங் கெபாசிட்டி' என்று சொல்வார்கள். கறுப்புப் பணம் உருவாகக் காரணம் என்ன? தனியார் துறையிலே இருக்கக்கூடிய முதலாளிகள், தொழில் அதிபர்கள் அரசிடம் முதலிலே ஒழுங்காக இருந்துவிட்டு, அந்தத் தொழில் நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டு நன்கு செயல்படுத்தப்பட்ட பின்பு தடையாக இருக்கிறார்கள். அவர்கள் கோர்ட்டுக்குச் சென்று 'ஸ்டே' கூட வாங்குகிறார்கள். அவர்கள் கறுப்புப் பணத்தை உருவாக்குகிறார்கள். நமது மத்திய அரசினுடைய பட்ஜெட்டிலே எவ்வளவு கோடி ரூபாய் போடுகிறார்களோ அதிலே பாதி அளவு தனியார் முதலாளிகள் கறுப்புப் பணத்தை வெளியாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு மத்திய அரசு பட்ஜெட் போடுகின்ற பணம் அளவுக்கு அவர்கள் கறுப்புப் பணம் அமைந்து விடுமோ என்று அஞ்சுகின்ற நிலைமைகள் இருக்கின்றன.

பேரறிஞர் அண்ணா அவர்கள், பொருளாதாரம் நன்கு புரிந்தவர்கள், சாதாரண மக்களிடையே வாழ்ந்து மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றித் தெரிந்தவர்கள். ஏழைஎளியவர்கள் மத்தியிலே, கிராம மக்கள் மத்தியிலே இருந்தவர்கள். அவர்களைப்பற்றித் தெரிந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். இந்த நாட்டினுடைய எதிர்காலம், பொதுத் துறையில் தொழில்களைச் செய்வதிலேதான் இருக்கிறது என்றார்கள். தனியார் துறையிலே தொழில்களை வளரவிடக்கூடாது என்றார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கையாக அண்ணா அவர்கள் தெளிவாக அதை எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள். சமதர்மம், சமத்துவம் என்று முழுத் தெளிவாகச் சொன்னார்கள். அண்ணாவினுடைய தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் நாடு சம்பந்தப்பட்ட மட்டிலாவது இந்தக் கொள்கையிலே பெருமை பெற்றிருந்தது என்பதை மறந்துவிட முடியாது. ஒரு சொல்லை அவர்கள் அந்தச் சித்தாந்தத்தைச் சொல்லிக் கொண்டிருக்கலாம். இந்தச் சித்தாந்தத்தை இன்று மக்களிடம் சொல்லிக்கொண்டிருக்கின்றவர்கள் இதைச் செய்ய வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அண்ணா அவர்கள்

அந்தக் கொள்கையைத் தான் சொல்லிச் சென்றார்கள். நமக்கெல்லாம் அண்ணாவினுடைய கொள்கை முக்கியம். அதை நிறைவேற்ற வேண்டும். இரண்டு பேர்களும் போட்டி போட்டுக்கொண்டு அதை நிறைவேற்றினால், நாட்டிற்கு நல்லதுதான். அந்தக் கொள்கையை நிறைவேற்ற முயலுகின்றவர்கள் இடையிலே போட்டி என்று வரவேண்டியதுதான்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நாட்டிலே இப்போதுள்ள பொருளாதாரப் பிரச்சினைகள் என்ன? அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றபோது, இரண்டு கட்சியினர்களும் திருச்செந்தூர் பாத யாத்திரை சென்றுகொண்டிருக்கிறார்கள். இப்போது பொருளாதாரப் பிரச்சினை பற்றி போட்டி நடக்கிறதா அல்லது வேறு பிரச்சினைபற்றி நடக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ம. சங்காலிங்கம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் விரும்புகின்ற நிலையிலே போட்டி நடக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் எப்போதும் ஏமாறுவார்கள் என்று எண்ண வேண்டாம். அண்ணா அவர்கள் வழியிலேதான் நாங்கள் செல்வோம். எங்களை உறுப்பினர் அவர்கள் தவறான பாதையில் திருப்ப வேண்டாம். எங்களைத் திருப்பிவிட்டு, அந்தப் பாதையிலே நிரந்தரமாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. நான் அந்தப் பிரச்சினைக்கு இப்போது வரவில்லை. இந்த நிலைமைகளைப்பற்றி அண்ணா அவர்கள் மிகத் தெளிவாகவே சொன்னார்கள். இந்த நாட்டினுடைய பொதுத் துறை சிறக்க வேண்டும். ஆனால் கவர்னர் அவர்கள் உரையிலே 9 ஆம் பக்கத்திலே போட்டிருப்பதைப் பார்த்துவிட்டு, பிறகு 14 ஆம் பக்கத்திலே வரும்போது, அதிலே எனக்கு ஓர் ஐயம் ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி இங்கே பல உறுப்பினர்கள் எடுத்துப் பேசியிருக்கிறார்கள். என்னுடைய கட்சியில் திரு. நீலநாராயணன் அவர்கள் பேசுகின்றபோது சொல்லியிருக்கிறார்கள். பக்கம் 14-லிலே தொழில் துறையிலே ' தனியார் துறையிலே மின் உற்பத்தி செய்வதற்கு அரசு அனுமதிக்க முடிவு செய்துள்ளது ' என்று சொல்லியிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-30)

(மாற்றுத் தலைவர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் தலைமை)

இந்த அரசுதான் இது குறித்து முடிவு செய்ததென்று சொல்லவில்லை. எல்லா தொழில்களுக்கும் மின்சாரம் கொடுக்கிறோம். ஆனால் சில நேரங்களில் அவர்களுக்குத் தேவைப்படும் அளவிற்குக் கொடுக்க முடியவில்லை என்றால், அவர்களே உற்பத்தி செய்து கொள்ளலாம் என்பதால், தனி ஜெனரேட்டர்கள் வைத்துக்கொள்கிறார்கள். ஆனால் அரசாங்கம் கொடுக்கிற மின்சார





என்ன கட்டணமோ, அதைப்போல இரண்டு மடங்கு செலவு இதற்கு ஆகிறது. பிறகு வேண்டிய அளவிற்கு நாம் மின்சாரம் கொடுக்கும்போது, ஜெனரேட்டர்களை நிறுத்திவிடுகிறார்கள்.

ஆளுநர் அவர்கள் உரையின் அடுத்த பக்கத்தில், தனியார் இலாபகரமாக மின் உற்பத்தி செய்ய முன்வருவார்களானால், அரசு அதைப் பரிசீலித்துப் பார்க்கவும் விரும்புகிறது " என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அண்ணாவின் கொள்கையிலிருந்து, அவருடைய பொருளாதாரச் சிந்தனையிலிருந்து ஆளும் கட்சியினர் தெரிந்தோ, தெரியாமலோ மாறிச் செல்லுகிறார்களோ என்ற அச்சம் ஏற்படுவதால்தான், அதைச் சுட்டிக்காட்டி, தெளிவாக விளக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்குப் பதில் சொல்வதற்குப் பதிலாக, குறை காண முயல்கிறார்கள் என்று சொன்னார்கள். . .

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் பேசும்போது, மின்சார வாரியத்தைத் தனியாரிடம் தரப் போகிறார்கள் என்ற கருத்தோடு பேசியது, முரசொலியில் வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** எதிர்க் கட்சித் தலைவாவர்களுடைய பேச்சுக்கு நான் பதில் கூற இருப்பதால், அரசு சார்பிலே உள்ள நண்பர்கள் தயவு செய்து குறுக்கிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. நீலநாராயணன் :** என்னுடைய பேச்சிலே, மின்சார வாரியத்தை த்னி நபர்களிடம் கொடுத்துவிடப் போவதாகச் சுட்டிக் காட்டியது போன்று தொனிக்கிறதென்று சொன்னார்கள். என்னுடைய பேச்சில் அப்படிப்பட்ட வார்த்தைகள் இல்லை. நான் தெளிவாகச் சுட்டிக்காட்டினேன். தனியார் துறைக்கு வலுவூட்டும் வகையிலே வாசகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன, இது அண்ணாவின் கொள்கைக்கு முரண்பட்டதாக இருக்கிறதென்பதைத் தான் சுட்டிக் காட்டினேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** எதிர்க் கட்சித் தலைவாவர்கள் அப்படிப்பட்ட எண்ண்த்தை, மின்சார வாரியத்தைத் தனியாருக்கு விடுவதென்ற எண்ணத்தை அடிப்படையாக வைத்து, நாங்கள் சொன்னோமென்று கருதிப் பேசினாலும், அதற்குப் பதில் கூறத் தயாராக இருக்கிறேன்.

**திரு. ம. சங்காலிங்கம் :** நானும் அந்தக் கருத்துப்படி பேசவில்லை, எங்கள் கட்சி உறுப்பினர்களும் பேசவில்லை. ஆனால் ஆளுநர் அவர்களுடைய உரையிலே இருக்கக்கூடிய சொல்லுக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று அரசு நினைக்கக் கூடாது. ஆளுநர் உரை என்பது கொள்கைகளை அறிவிக்கும் ஒன்று.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1982 பிப்ரவரி 15

அதற்குச் செயல்வடிவம் வருவது பின்னால். எனவே கொள்கையில் சந்தேகம் ஏற்பட்டால், அதைச் சுட்டிக்காட்டி, மீண்டும் அரசினர் அதைப் பற்றிச் சிந்தித்து, தெளிவு பெற உதவுகிற வகையில்தான் சொல்லுகிறோம். அதற்குப் பிறகு தொடர்ந்து விளக்கங்களாக, தனியார் துறையில் நிர்வாகத் திறன் இருக்கிறது, இன்றைக்கு மின்சாரத் தேவை மிகுதியாக இருக்கிறது, நிலக்கரி கொண்டுவர முடியவில்லை, இன்ஸ்டால்ட் கெபாசிட்டி எவ்வளவு இருக்கிறதோ அதில் பாதிதான் உற்பத்தி செய்யப்படுகிறது, தனியாரிடம் கொடுத்தால் மின்சாரப் பற்றாக்குறையைத் தீர்த்துக்கொள்ள முடியுமா என்று ஆராயலாமென்று ஆளுங் கட்சித் தரப்பிலிருந்து சொல்லப்பட்டது. அதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன். 'தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் எல்லாம் முதலில் நம்மோடு ஒத்துழைத்து, நாம் சொல்லும் முறையில் டேரிஃப் போட்டு போட்டு, வலிமை பெறும்வரை இருப்பார்கள். அவர்கள் நிலை பெற்ற பிறகு, இந்த நாட்டின் பொருளாதாரத்தை அழிக்கின்ற, கறுப்புப் பணத்தை உருவாக்கி, அதன் மூலம் ஒரு மாற்று சர்க்காரையே உருவாக்கக்கூடும். நாட்டிலே பொருளாதாரச் சீர்கேட்டைக் கொண்டு வருவதால், பொருளாதாரப் புரட்சியே வருமென்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

வெள்ளைக்காரன்கூட ஒன்றைச் சொன்னான். "உங்களுக்கு ஆளத் தெரியாது" என்று சொன்னான். அதையெல்லாம் ஒத்துக்கொண்டால், அவனைத்தான் வைத்துக்கொண்டிருக்க வேண்டும். ஆயிரம் உண்டிங்கு சாதி, எனில் அன்னியர் வந்து புகல் என்ன நீதி என்று சொன்னதுபோல, ஆயிரம் திறமைகள் இருக்கட்டும், அவர்கள் பொருளாதாரத் துறையில் ஏற்படுத்தும் கோளாறுகள், அதன் காரணமாக சமுதாயத்திற்கு ஏற்படும் கேடு, கறுப்புப் பணத்தை உருவாக்கி மக்களின் வாங்கும் சக்தியைக் குறைக்கும் சமுதாயக் கேட்டைச் சிந்தித்து, அது பொதுத் துறையில் வளர வேண்டும் என்ற பெரிய பொருளாதார நிபுணர்களின் சிந்தனையே அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்களை வழிகாட்டியாகக் கொண்டுள்ள ஆளும் கட்சிக்கு இப்போது தயக்கம் வந்திருக்கிறது.

THIRUMATHI TARA CHERIAN: Hon. Chairman; I am sorry to interrupt, in spite of the Hon. Chief Minister's suggestion. It was never to be given to the private sector. There is an idea expressed whether the joint sector or the private sector could be encouraged, if it is profitable. For example, in Maharashtra State, there are three units of production and the energy is supplied through the main grid. The energy produced by TTA is supplied through the main grid. They do not get any say in the distribution and they are functioning succesfully, not in competition with, or in rivalry to, the Government but in helping the Government and the supply is made through the main grid.



1982 பிப்ரவரி 15]

திரு. ம. சங்கரலிங்கம்: உறுப்பினர்கள் எல்லோருக்கும் பணிவான வேண்டுகோள். நேரம் குறைவாக இருக்கிறது. நான் 'யீல்ட்' பண்ணாமல் இருக்கலாம். அப்படிச் செய்வது பண்புக்குரியதாக இராதென்பதால், சொல்லுகிறேன். தயவு செய்து குறுக்கிட வேண்டாம். நான் பேசி முடித்த பிறகு சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லக்கூடிய கருத்து எவ்வளவு சிறப்புடையதாக இருந்தாலும், டாடாவின் நிலை என்ன என்பது தனிப் பிரச்சினை, பிர்லாவின் நிலை என்ன என்பது தனிப் பிரச்சினை. அதற்குள் போனால், இங்கே மற்ற பிரச்சினைகளைப்பற்றிப் பேச முடியாதென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, ஆளுநர் அவர்கள் உரையிலே தன்னிறைவுத் திட்டமெல்லாம் சிறப்பாக நடைபெறுகின்றதென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தன்னிறைவுத் திட்டத்தை இந்த அரசு உருவாக்கியதற்காக நான் பாராட்டுகிறேன். அந்தத் திட்டம் சிறப்பாக நடைபெற்றால் மேலும் பாராட்டுவேன். சிறப்பாக நடைபெறாததால், சுட்டிக் காட்டுகிறோம். குறை சொல்ல வேண்டுமென்பதில்லை. ஒரு நாட்டில், ஒரு பகுதி தன்னிறைவு பெற வேண்டுமென்றால், அதில் கருத்து வேறுபாடா என்றால், இல்லை. திட்டத்தை அமல்படுத்துவதைத் தடுக்கிறோமா என்றால், இல்லை. இந்தத் திட்டத்தை 1980-81-ல் 69 ஊராட்சி ஒன்றியங்களில் அறிவித்தார்கள். 1981-82-ல் 105 ஊராட்சி ஒன்றியங்களில் இந்தத் திட்டத்தை அறிவித்தார்கள். இரண்டாண்டு முடிந்துவிட்டன. 69 ஊராட்சி ஒன்றியங்களில் இதனால் ஏற்பட்ட விளைவு என்ன என்பதை ஆய்ந்து, ஏதாவது அறிவிப்பு கொடுத்தார்களா? உதாரணத்திற்கு ஒன்றை எடுத்துக்கொண்டு, தன்னிறைவுத் திட்டம் எப்படி நடந்திருக்கிறதென்பதைச் சுட்டிக்காட்ட முடியுமா? 1980-81-லே ஸ்ரீவைகுண்டம் ஊராட்சி ஒன்றியத்திலே தன்னிறைவுத் திட்டத்தை அமல்படுத்தினார்கள். திருநெல்வேலியிலிருந்து 12 மைல் தொலைவில் உள்ளது இது. அங்கே தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதிலே ஒன்று, குடி தண்ணீர் கொடுப்பது. அங்கே தன்னிறைவுத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு முன்னால், குடிநீர் வழங்கும் திட்டம் இருந்தது. தாமிரபரணியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து, மேல்நிலைத் தொட்டியில் ஏற்றி, தண்ணீர் கொடுக்கிறார்கள். அதன்மூலம் தண்ணீர் சிறப்பாகக் கிடைக்கவில்லை என்பதால், தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 96,000 ரூபாய் இதற்காக ஒதுக்கீடு செய்தார்கள். ஏற்கெனவே இருக்கிற [illegible]ருந்து இருக்கிற மேல்நிலைத் தொட்டிக்கு தண்ணீரைச் சிறப்பான முறையில் கொண்டு வருவதற்கு நல்ல பிளாஸ்டிக் பைப்புகள் போட்டு, தண்ணீரை லிப்ட் பண்ண பம்ப் வைத்து, 1½ பர்லாங் தூரம் கொண்டுவரும் திட்டத்தை 1980-81-ல் நிறைவேற்றினார்கள். இப்போது

[திரு ம. சங்கரலிங்கம்] [1982 பிப்ரவரி 15

அந்தத் திட்டம் எப்படி இருக்கிறது? அங்கே தண்ணீர் கிடைக்கிறதா என்பது பிரச்சினை. 96,000 ரூபாய் செலவு செய்யப்பட்டது. அங்கே தண்ணீர் இல்லை. 96,000 ரூபாய் செலவு செய்யுங்கள் அல்லது 2 லட்சம் ரூபாய் செலவு செய்யுங்கள். தண்ணீர் கிடைக்கிறதா? தண்ணீர் கிடைக்கவில்லை. 7—6—1981-ல் பொது மக்கள் இதனைக் கண்டித்து மறியல் செய்திருக்கிறார்கள். தண்ணீர் கிடைக்கவில்லை என்று. 56 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 16—9—1981 அன்று கலெக்டர் விசாரணை செய்திருக்கிறார். அதன் பலனாக 4 நாட்கள் தண்ணீர் வந்தது. 17—10—1981 மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நேரடியாக வந்து

(முற்பகல் 10-40)

பார்த்தார். 20 நாள் தண்ணீர் கிடைத்தது. 10—11—1981-ல் மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் ஆளும் கட்சி உட்பட அனைவரும் இந்தக் குறையை எடுத்துச் சொன்னார்கள். முன்பும் அங்கு தண்ணீர் இருந்தது. ஆனால் இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை முறையாகச் செலவு செய்யப்படவில்லை. முறையாக அது கண்காணிக்கப்படவில்லை என்பதை நான் இங்கு எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பெருமளவான பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது. "நீங்கள் செய்தீர்கள்" என்று நான் சொல்லவில்லை. தரமான குழாய் கொண்டுவரப்படவில்லை. குறைந்த விலையை உள்ள மோட்டார்களை வைத்திருந்தார்கள். இப்படிப்பட்ட தன்னிறைவுத் திட்டத்திற்குத் தான் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலில் ஒரு தொகையை அறிவித்து விட்டு, பிறகு அதிகமான இன்னொரு தொகையை அறிவித்தார்கள். ஏதோ ஒரு சில இடங்களில் தவறு நடைபெற்றிருப்பதாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். பல இடங்களில் நல்லது நடைபெற்றதாகச் சொன்னார்கள். அப்படி இருந்தால் நான் பாராட்டுகிறேன். நோயாளியைப் பார்த்து டாக்டர் கை நன்றாக இருக்கிறது, கால் நன்றாக இருக்கிறது என்று சொல்வதை விட, இதயம் நன்றாக இருக்கிறது என்று சொல்வதுதான் முறையானது. என்னுடைய வீடு அகஸ்தீஸ்வரம் பகுதியும், தோவாளை பகுதியும் எல்லையில் இருக்கிறது. அகஸ்தீஸ்வரம் வட்டப் பகுதியில் தன்னிறைவுத் திட்டம் நடைபெற்றது. தோவாளைப் பகுதியில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இப்போது வரை பணம் செலவு செய்யப்படவில்லை. அங்கேயும் முறை அக்கிரமமாக எங்கும் இருக்கிறது. தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட ஓர் இடத்தைப்பற்றி இங்கே சொல்கிறேன். இறச்சகுளத்தில், தோவாளை பஞ்சாயத்தைச் சேர்ந்த பகுதியில் கடந்த 60, 70 வருடங்களாய் மக்கள் குடியிருக்கிறார்கள். திருவாங்கூர் சமஸ்தானத்தில் அப்பகுதி இருந்த



1982 பிப்ரவரி 15] [திரு ம. சங்கரலிங்கம்]

போதே பஸ் விட்டார்கள். இப்போது பஸ் ஓடவில்லை. அதுபோல் விஜயநாராயணபுரம் லிங்க் பாதையில் பஸ் ஓடவில்லை. வண்டி கூட வர முடியவில்லை. இவைகள் எல்லாம் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற உரைக்கு உதாரணமாகும். இவைகளையெல்லாம் நான் குறைபட வேண்டுமென்ற நோக்கத்தில் சொல்லவில்லை. ஆனால் கண்காணிப்பு அதிகமாகத் தேவை என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையில் அரிசன மக்களுக்காக என்னென்ன நன்மைகள் செய்கிறோம் என்று 20 ஆம் பக்கத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஆதி திராவிட மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆதி திராவிட மக்களின் சமூக நிலையினை மேம்படுத்த நடப்பு ஆண்டிலே சென்ற ஆண்டைவிட அதிகமாக ரூபாய் 83 கோடியும், இப்போது ரூபாய் 114 கோடியும் நாங்கள் செலவு செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி நிதி ஒதுக்கியிருப்பதற்காக அரசைப் பாராட்டுகிறேன். ஆனால் அது முறையாகச் செலவு செய்யப்படுகிறதா என்பதை நான் சொன்னால், ஒருவேளை எதிர்க் கட்சியில் இருப்பவர் வேண்டுமென்றே சொல்லியிருக்கிறார் என்று சொல்லக்கூடும். ஆகவே இந்த அரசு மேற்கொண்டுள்ள பணிகள் குறித்து பரிசீலனை செய்து நிலையில் இருக்கிற ஆடிட்டர்-ஜெனரல் இந்த அரசுக்குச் சமர்ப்பித்த அறிக்கையிலிருந்து சொல்கிறேன். 1974 பிப்ரவரியில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வாரியம் ஏற்படுத்தப்பட்டது. அரசு திட்டம் தீட்டி அதனிடம் பொறுப்பை ஒப்படைத்தது. 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை புள்ளிவிவரக் கணக்கெடுத்து அரிசனங்களின் தேவையைப் பூர்த்தி செய்ய 14 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்தோம். முதலில் 7 லட்சம் வீடுகள் கட்டத் திட்டமிட்டு, வருடத்திற்கு 15 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு, அந்தப் பணியை மேற்கொள்ள அரிசன வீட்டு வசதி வாரியத்திற்குக் கொடுத்தோம். 1974-ல் ரூபாய் 1 கோடி ஒதுக்கினோம். 1975-ல் ரூபாய் 2 கோடி ஒதுக்கினோம். ஆக மொத்தத்தில் 3 கோடி ரூபாய் ஒதுக்கி அரிசன மக்களுக்காக வீடு கட்டிக் கொடுக்கும் இப்படிப்பட்ட திட்டத்தை ஆக்கபூர்வமாகச் செயல்படுத்த முனைந்தோம். 1974-75 முதல் வருடத்திற்கு 15 ஆயிரம் வீடுகள் தொடர்ந்து கட்டிக் கொடுக்க வேண்டுமென்பது திட்டம். 1974-75-ல் 15 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டன. 1975-76-ல் 15 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டன. ஆகவே நாங்கள் திட்டமிட்டபடி 30 ஆயிரம் வீடுகளைக் கட்டி முடித்தோம். அதற்குப் பிறகு இப்போது இருக்கின்ற அரசு ஆட்சிக்கு வந்து அந்தப் பணியைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறது. நாங்கள் அன்றைக்கு எப்படி நடத்தினோம், இப்போதைய ஆட்சி எப்படி நடத்திக்கொண்டு வருகிறது என்பதை கணக்காய்வு செய்கிற கம்ப்ட்ரோலர்-அண்ட்-ஆடிட்டர் ஜெனரல்

ஆப் இந்தியா அவர்கள் ஓர் அறிக்கையை இந்த அரசுக்குத் தந்து இந்த அரசு அதை அவையிலே வைத்திருக்கிறது. 1979-80 ஆம் ஆண்டு அறிக்கையை இங்கே தந்திருக்கிறார்கள். அவர் சொல்லியிருப்பதை இங்கே சொல்கிறேன். 1974-75, 1975-76 ஆம் ஆண்டுகளில் அரசு திட்டமிட்டு அறிவித்தபடி 30 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறது. இதற்குச் செலவான தொகை 1,300 லட்சம் ரூபாய். 1976-77-ல் 5 ஆயிரம் வீடுகள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் 3 ஆயிரம் வீடுகள்தான் கட்டப்பட்டன. 1977-78-ல் 5 ஆயிரம் வீடுகள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், 1,850 வீடுகள்தான் கட்டப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டு 5 ஆயிரம் வீடுகள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், 987 வீடுகள்தான் கட்டப்பட்டன. 1980-81-ல் 5 ஆயிரம் வீடுகள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், 1,629 வீடுகள்தான் கட்டப்பட்டன. ஆனால், நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். செலவு இப்படித்தான் நடந்துகொண்டிருக்கிறது. இப்படியெல்லாம் சொல்லி விட்டு இதோ அவர் ஒரு நோட் கொடுத்திருக்கிறார். இந்த அரசு எப்படி செலவு செய்கிறது என்பதை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஆங்கிலத்தில் இருப்பதை அப்படியே படிக்கிறேன். பிறகு தமிழில் சொல்கிறேன்.

"Construction of 10,000 houses sanctioned during the years 1979-80 and 1980-81 has not been taken up so far (March 1981)" (Page 17). Government had fixed a target of 30,000 houses to be completed by 31st December 1975. The target was achieved with the help of the Highways and Rural Works Department which constructed 8,312 houses and the remaining by the THHADCO. In the subsequent years, on targets were fixed.

பத்து ஆயிரம் என்று இருப்பதையும் 1980 மார்ச் வரை கட்டவில்லையென்று சொல்லியிருக்கிறார். 11-வது பக்கத்திலே 1974-75, 1975-76-ல் 30 ஆயிரம் வீடுகள் கட்ட வேண்டுமென்று திட்டமிட்டு 30 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டன என்று குறிப்பிட்டிருக்கிறார். 'டார்கெட் அச்சீவ் பண்ணப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், 'சப்ஸிக்வென்ட் இயர்ஸ்'-ல் அதாவது இந்த ஆட்சிக் காலத்திலே சரியான டார்கெட் நிர்ணயிக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். டார்கெட் வைக்காமல், வேலையும் நடக்கவில்லையென்று சொல்லி காரணங்களையும் விரிவாகச் சொல்லியிருக்கிறார். நாட்டின் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிற மக்களில் மிகப் பெரிய எண்ணிக்கை கொண்ட அரிசன மக்களுடைய [illegible] தாழ்த்தப்பட்டவர்கள் மூலம் பட்டியல் [illegible]





செய்ய முடியும். அதைத்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பாராட்டத் தக்க முறையில், மற்றவர்கள் பாராட்டுகிற வகையில் திட்டமிட்டுச் செயல்படுத்தியது. அத்தகையதோர் ஆட்சியை அகற்றிவிட்டு, இங்கே ஆட்சி பீடத்தில் இருக்கிறவர்கள் அதைச் செய்யவில்லை. ஆண்டுக்காண்டு நிதியையும் ஒதுக்குகிறார்கள், திட்டங்களையும் அறிவிக்கிறார்கள். 19 ஆம் பக்கத்திலே இன்னொன்று இருக்கிறது. அதுதான் வேடிக்கை. மத்திய அரசு மாநில அரசின் மூலம் அரிசன மக்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கென்று 1 கோடி ரூபாயை ஒதுக்குகிறது. அதை இந்த அரசு பெற்றிருக்கிறது. ஆனால் அந்தத் தொகையைக் கொண்டு வீடுகளைக் கட்டிக் கொடுக்கவில்லை என்பதைத்தான் இந்த அறிக்கை நமக்குத் தெளிவாகத் தெரிவிக்கிறது. 21 ஆம் பக்கத்தில் இருப்பதை அப்படியே ஆங்கிலத்தில் படிக்கிறேன்.

"Construction of 50 centrally sponsored hostels outside the above scheme for which a sum of Rs. 100 lakhs was received during March 1980, had also not been taken up so far" (March 1981).

அரிசன மாணவர்கள் தங்குவதற்குரிய வீட்டு வசதிகளை ஏற்படுத்த மத்திய அரசின் ஸ்கீம் என்கிற வகைக்கு 1 கோடி ரூபாய் 1980-ல் இந்த அரசு பெற்றிருக்கிறது. ஆனால் 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை அந்த வேலை எடுத்துக் கொள்ளப்படவில்லை. பாதிக அரசு நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாகவும், இன்னின்ன திட்டங்கள் செயல்படுத்தப்பட இருக்கின்றன என்றும் பத்திரிகை களில் செய்தியைப் பார்க்கிறோம். ஆனால், மார்ச் 1980-ல் அரிசன மாணவர்களுக்குத் தங்கும் வசதியை ஏற்படுத்துவதற்கென மத்திய அரசு கொடுத்த 1 கோடி ரூபாய்க்கு மார்ச் 1981 வரை கட்டவில்லையென்று இந்த அரசு வைத்த அறிக்கையிலேயே அப்படிச் சொன்னால், அதுவும் இந்த அரசு வைத்த அறிக்கையிலேயே அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அது ஏன் என்று நான் கேட்க விரும்புகிறேன். இந்த அரசு அண்ணாவின் கொள்கையைப் பின்பற்றுவதாகச்

(முற்பகல் 10-50)

சொல்லிக் கொண்டிருக்கிறது. அரிஜன மக்களுக்கும் பின்தங்கியோருக்கும் நல்ல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆனால் நடைமுறையில் அது உண்மையா இல்லையா என்பதைக் [illegible] விரும்புகிறேன். 1977 ஆம் ஆண்டில் நான் நான் வருந்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன். 1977 ஆம் ஆண்டில் நர்சரியில் 150 பேர் தங்கிய மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான ஒரு [illegible] மூன்று மாடிக் கட்டடம் அனுமதி அளிக்கப்பட்டு அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது. ரூபாய் 6 லட்சத்திற்கு மேல் இதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டிடமும் கட்ட ஆரம்பித்தார்கள். அது [illegible] இன்னும் [illegible] நிற்கிறது. இதற்காக மொத்தம் ரூபாய் 3.3 லட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் 1977 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட

அந்தக் கட்டிடம் 1981 ஆம் ஆண்டு வரை அதே நிலையில் நிற்கிறது. மற்ற மாடிகள் கட்டப்படவில்லை. அங்கே ஒரு ஹாஸ்டல் இருக்கிறது. அங்கே அரிஜன மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்றால், அங்கே உள்ள பொறுப்பாளர் என்ன சொல்லுகிறார் என்றால், இந்த இடத்திற்கு 150 மாண வர்களாவது இருக்க வேண்டும். இப்போது ஏற்கெனவே ஓரிடத்தில் இருக் கிறது. எனவே இரண்டு இடங்களில் ஹாஸ்டல் வைத்து மேனேஜ் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார். இப்போது அந்தக் கட்டிடம் அதே நிலையில் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது என்று இதையும் காம்ப்ட் ரோலர்-அன்ட்-ஆடிட்டர்-ஜெனரல் தம் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்.

"The expenditure incurred on the work up to March 1980 was Rs. 2.39 lakhs. The building is still lying unused" (March 1961). (page 21).

இந்த அளவுக்கு தர்மபுரியில் பிற்படுத்தப்பட்ட அரிஜன மாணவர்களுக்கு இந்த அரசாங்கம் நன்மை செய்திருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்பு கிறேன். அடுத்து, அரக்கோணத்தில் ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளி ஒன்றைக் கட்டுவதற்கு 1978 ஆம் ஆண்டில் இந்த அரசு ரூபாய் 4.4 லட்சம் ஒதுக்கீடு செய்தது. கட்டிடமும் கட்ட ஆரம்பித்துவிட்டார்கள். 1978 ஆம் ஆண்டு அதற்காக ரூபாய் 33,000 செலவு செய்தார்கள். ஆனால் 1978 முதல் இன்றுவரை அந்தக் கட்டிடம் அப்படியே இருக்கிறது. ஏனென்றால் அதற்குப் பிறகுதான் அந்தக் கட்டிடம் கட்டப்படும் இடம் கப்பல் படைக்குச் சொந்தமானது என்று கண்டுபிடிக்கப்பட்டதாம். இத்தகைய நிர்வாகத் திறமையை எப்படிப் பாராட்டுவது என்றுதான் எனக்குப் புரியவில்லை. கப்பல் படைக்குச் சொந்தமான இடத்தில் இந்த அரசாங்கம் ரூபாய் 33,000 செலவு செய்து கட்டிடத்தைக் கட்டி இன்றைக்கு அது அப்படியே இருக்கிறது. இவைகளெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிந்துதான் நடக்கின்றன என்று நான் சொல்லத் தயாராக இல்லை. ஆனால் இவை களைப்பற்றியெல்லாம் அவருக்கு அறிவிக்க வேண்டியவர்கள் அதைச் செய்யாமல் இருக்கிறார்களே என்ற குற்றச்சாட்டைத்தான் நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். "முகநக நட்பது நட்பன்று" என்ற வகையில் மிகுதிக்கண் மேற்சென்று இடிக்கப்படும் என்று எடுத்துச் சொல்லத் தான் அவருக்கு அருகில் இருப்பவர்கள் தேவைப்படுகிறார்கள்.

இதைப்பற்றி அதே 21 ஆம் பக்கத்தில் கீழ்க்கண்டவாறு அந்த ரிப்போர்ட் டில் சொல்லப்பட்டிருக்கிறது.

"While the construction was in progress, the Naval authorities informed Government (9th January 1979) that the school was built on the land earmarked for an air field and allied facilities and required the Government to stop the construction work. Instructions





to stop the work were, however, issued by the Adi Dravidar and Tribal Welfare Department on 7th March 1979. The value of work done by the contractor and paid for up to that date was Rs. 0.33 lakhs. இப்படிப் பல இடங்களில் அரசாங்கத்தின் பணம் முறையாகச் செலவிடப்படாமல் அதன் மூலம் எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்காமல் இருக்கும் நிலையை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர் களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரிஜனங்களுக்கு வீடு கட்டும் திட்டத்தில் ஆண்டுக்காண்டு எண்ணிக்கை இந்த ஆட்சியில் குறைந்திருக்கிறது என்று எடுத்துச் சொன்னேன். நாங்கள் ஆட்சியில் இருந்தபோது ஆண்டுக்கு 30,000 வீடுகள் கட்டத் திட்டமிட்டு இரண்டாண்டுகள் அதைச் செயல்படுத்தினோம். ஆனால் நாட்டு மக்கள் என்ன நினைத்தார்கள் என்றால், 'இவர்கள் அண்ணாவின் பெயரைச் சொல் கிறார்கள். எனவே கலைஞர் 30,000 வீடுகளைக் கட்டித் தந்தால் அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு மற்றும் பல ஆயிரம் வீடுகளைக் கட்டித் தருவார்கள்' என்று நினைத்தார்கள். அந்த அளவுக்கு அண்ணா தி.மு.க. வினர் வேகமாகப் பேசினார்கள். அப்படி நம்பி அண்ணா தி.மு.க' வுக்கு வாக்களித்தார்கள். ஆனால் அதன் பலன் என்னவாயிற்று என்றால், ஆண்டுக் காண்டு அரிசனங்களுக்காகக் கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கை குறைந்தது என்பது மட்டுமல்ல, அதற்காக நியமிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை மட்டும் உயர்ந்துவிட்டது. இதையும் அந்த ரிப்போர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். அதாவது ஆண்டுக்காண்டு அரிஜன மக்களுக்காகக் கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கை குறைந்தது என்பதோடு, அந்தப் பணி களுக்காக நியமிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை மட்டும் அதிகரித் துள்ளது. இதை நான் தமிழில் சொல்கிறேன். ஆங்கிலத்தில் உள்ளதை தான் அப்படியே இங்கே படித்துக்காட்ட விரும்புகிறேன். Page 31

"Though there had been progressive reduction in the houses sanctioned for construction and the value of work done came down from Rs. 335.54 lakhs during 1976-77 to Rs. 214.38 lakhs during 1979-80, the staff strength had increased from 379 to 401 during this period; the company has neither reviewed the staff position nor fixed any norm.

அதாவது 1976-77-ல் 333.54 லட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டாலும், இது 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 214.34 லட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வீட்டு வசதி வாரியத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை மட்டும் 379 லிருந்து 401 ஆக உயர்ந்திருக்கிறது. இப்படி ஊழியர்களின் எண்ணிக்கை உயர்ந்ததற்கும் காரணம் அவரே சொல்லுகிறார். வேலைக்கேற்ப ஊழியர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படவில்லை என்பது மட்டுமல்ல, தேவைக்கேற்பவும் நிர்ணயம் செய்யவில்லை என்று அவரே குறிப்பிட்டிருக்கிறார்.

இப்படிப் பலவற்றை அவர் தம் அறிக்கையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார். நான் அவற்றில் சிலவற்றை மட்டும்தான் இங்கே குறிப்பிடுகிறேன். பல திட்டங்களில் உள்ள பல்வேறு குறைபாடுகளையும் அவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் சரியாகச் செலவழிக்கப்படவில்லை என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதுமட்டுமல்ல, இப்படிப் பல குறைபாடுகளை இந்த அரசுக்கு எடுத்துச் சொல்லியும்கூட, இதுவரையிலும் இந்த அரசாங்கத்திடமிருந்து இந்தக் குறைபாடுகளைக் குறித்து எந்த விதமான பதிலும் பெறப்படவில்லை என்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

The above points were referred to Government in September 1980; their reply was awaited (June 1981).

இதுதான் அண்ணாவின் பார்வையா என்று நான் கேட்க விரும்புகிறேன். நான் முதலமைச்சர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது இருக்கும் இந்த அமைப்பையே நீங்கள் நம்பிக் கொண்டிருப்பீர்களானால், உங்களை எங்கே கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு துறையைப்பற்றியும் அதில் குறிப்பிட்டிருக்கிறார். இதையெல்லாம் அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையில் உணவுக் கொள்கையைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உணவுக் கொள்கையைப் பொறுத்தவரையில், அரசு கடைப்பிடிக்கும் முறை சரியானதுதானா என்பதைப் பார்க்க வேண்டும். அரசாங்கம் மக்களுக்குக் குறைந்த விலையில், கட்டுப்படியாகிற விலையில் உணவுப் பொருள்களைக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு லெவி முறையைக் கொண்டு வந்திருப்பதாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு உற்பத்தியாளர்களையும், துய்ப்பவர்களையும் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டுமென்று நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நாம் ஒன்றை மறந்துவிடக் கூடாது. உற்பத்தியாளர்கள் இருந்தால்தான், துய்ப்பவர்கள் இருக்க முடியும். துய்ப்பவர்கள் இல்லை என்றால், உற்பத்தியாளர்களும் இருக்க மாட்டார்கள். உண்மைதான். ஆனால் இன்றையதினம் நாட்டில் என்ன நிலைமை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகள் ஆண்டுக்காண்டு தங்கள் நிலத்தை விட்டே ஓடுகிற நிலை இருக்கிறது. காரணம் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருளுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. மத்திய அரசு நெல்லுக்குக் கட்டுப்படியாகிற விலையைக் கொடுக்கவில்லை, நாங்கள் அவ்வாறு கொடுப்பதற்கு மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அரசு அதிகமாக [illegible] வலியுறுத்துவதற்காக அதை நான் பாராட்டுகிறேன். மத்திய அரசு அவர்களுக்குக் கட்டுப்படியாகிற விலையைக் கொடுக்காமல்





இருப்பதையும் நான் கண்டிருக்கிறேன். ஆனால் அண்டையில் இருக்கிற கருநாடக மாநிலத்தில் மத்திய அரசு நிர்ணயித்த விலைக்கு மேல் குவிண்டாலுக்கு ரூ. 10 அதிகரித்துக் கொடுத்திருக்கிறார்கள். எனவே இந்த அரசு குறைந்தது 20 ரூபாயாவது அதிகரித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்

(முற்பகல் 11-00)

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு நிர்ணயித்த விலையை விட, எந்தக் காரணத்தைக் கொண்டும், அதிகமாகக் கொடுக்கக் கூடாது என்று மத்திய அரசும், ரிசர்வ் வங்கியும் சொல்லியிருக்கின்றன. கர்நாடக அரசு அதிகமாகக் கொடுத்தது என்பதற்காக அவர்களுக்கு 'கிரடிட்' கொடுக்கவில்லை. நம்முடைய மாநிலத்தில் ரிசர்வ் வங்கியிடமிருந்து கன்செஷன் ரேட் ஆஃப் இண்டரஸ்டில் தொகையை வாங்கிக் கொண்டுதான் கொள்முதல் செய்கிறோம். ஏற்கெனவே பத்து ரூபாய், பதினைந்து ரூபாய் அதிகமாகக் கொடுத்தபோது அந்தத் தொகை போக மீதமுள்ள தொகையைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் சென்ற ஆண்டிலிருந்து புதிய முறையைக் கையாண்டதன் காரணமாக நாம் மேற்கொண்டு கூடுதலாக வழங்க முடியாமல் இருக்கிறோம். வழங்க முடிந்திருந்தால், கூடுதலான தொகையை வழங்குவதற்கான முயற்சிகளை அரசு எடுத்திருக்கும்.

திரு. ம. சங்கரலிங்கம் : கர்நாடக அரசு துணிவாக இந்த நாட்டு விவசாயிகளுடைய நலனைக் கருதி எடுத்த அந்த முயற்சியை இந்த அரசும் எடுத்து அவர்களுக்குத் துணை நின்று மத்திய அரசிடமும், ரிசர்வ் வங்கியிடமும் போராடியிருக்க வேண்டாமா? மத்திய அரசு தாக்கீது அனுப்பினால், அவர்கள் போக்கிலேதான் போக வேண்டுமா? ஆகவே இன்னும் ஒரு வாரத்திற்குள் அதிகமான தொகை கொடுத்து அவர்களுடைய கையைப் பலப்படுத்த வேண்டும். எல்லா மாநிலங்களும் இதைச் சொல்லிக்கொண்டிருக்கின்றன. ஆகவே இந்த அரசு அதைச் செய்து முன்னாலேயே அந்தப் பெருமைக்குரியவர்களாக வந்திருக்கலாம். கர்நாடக அரசுக்கு விட்டு விட்டீர்களே!

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எதிர்காலத்திலே என்ன நிலை ஏற்படப் போகிறது என்பதைப் பார்க்க வேண்டும். இப்போதே ரூபாய் 140, 150, 160 என்று போய் நிற்கிறது. 130 ரூபாய் கொடுத்தாலும், நஷ்டம் என்று சொல்லப்படுகிறது. ஏனென்றால் அதற்கு மேலே விலை

போய்விட்டது. மேலும் நாம் இன்டாஸ்ட் குறைவாக ரிசர்வ் வங்கியிடமிருந்து பணத்தை வாங்கித்தான் கொள்முதல் செய்ய வேண்டியிருக்கிறது. நாம் தொகையை அதிகமாக வழங்கினால், ரிசர்வ் வங்கி தொகையை வழங்காது. இதனால் மாநில அரசுக்கு அதிகமான செலவாகும். ஆகவே நிதி ஆதாரங்களை வைத்து முடிவெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**திரு. ம. சங்காலிங்கம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தையே மீண்டும் சொல்லுவதைவிட நான் சொன்ன வகையிலே பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனென்றால் பசி வந்திடப் பத்தும் பறந்து போகும். விளக்கிக் கொண்டிருப்பதிலேயே நிற்க மாட்டோம். இது உணவுப் பிரச்சினை. உணவை உற்பத்தி செய்கிறவன் பட்டினி கிடக்கிறான். நெல்லை உற்பத்தி செய்துவிட்டு மாட்டுக்கு விலை, பருத்திக் கொட்டைக்கு விலை, புண்ணாக்கு விலை, தான் அணியும் துணிக்கு விலை, வீட்டுக்கு வெள்ளையடிக்க, ரிப்பேர் செய்ய சிமெண்டுக்கு விலை ஆகிய இவைகளையெல்லாம் கொடுக்க முடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். அதனால் விவசாயிகள் இப்போது 50 சதவித லெவி போட்டிருக்கிறார்கள் இப்போது என்ன நடைபெறுகிறது என்பதை மாத்திரம் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

“நான் வாங்கினால் 50 சதவீதம் லெவி அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டும். ஆகவே எனக்கு நஷ்டம் வரும். ஆனால் நீயே யாரும் காணாமல் கொண்டுவந்து போட்டுவிடு. நான் வைத்திருக்கும் இருப்பைப்பற்றிக் கவலையில்லை. டிஸ்டரிக்ட் சப்ளை ஆபீசரை நான் சமாளித்துவிடுகிறேன். அதற்குரிய ஏற்பாடு இருக்கிறது. வழியிலே வந்தால் ஆபத்து, நீயே வந்து போட்டுவிடு” என்று பெரிய வியாபாரிகள் விவசாயிகளிடம் சொல்லுகிறார்கள். ஆகவே 50 சதவீதம் லெவி வைத்தால் கொள்முதல் செய்ய முடியாது. அறுவடைக் காலங்களில் 20, 25 சதவீதம் லெவி வைத்தால், கொள்முதல் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாதாரண விவசாயி 8 கோட்டை நெல், 10 கோட்டை நெல் கொண்டு சென்றால், அதை விற்க முடியவில்லை. ஒழுங்கு விற்பனைக் கூடத்திற்குக் கொண்டுபோனால், மொத்த வியாபாரிகள் ஏமாற்றுகிறார்கள். ஆகவேதான் மொத்த வியாபாரிகள், ஆலை அதிபர்கள், தொழில் அதிபர்கள் ஆகியவர்களை நம்பாதீர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். பெரிய வியாபாரிகளை ஊக்குவித்தால், அது பெரிய ஆபத்து. ஆகவே லெவியின் அளவைக் குறைத்து விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டிய வழிவகைகளை ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





தொழில் துறையிலே நமது மாநிலத்தில் நிலைமை திருப்தியாக இருப்ப தாக ஆளுநர் உரையிலே தெரிவித்திருக்கிறார்கள். தொழில் எல்லாவற்றிலும் திருப்தியாக இருக்கிறதா என்பதை ஆராய்வதற்காக 1979-80 ஆம் ஆண்டு ஆடிட் அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அரசு நடத்துகிற தொழில்கள் 48. அதிலே ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்தான் நிர்வாகிகளாக இருக்கிறார்கள். ஆனால் 48 தொழில்களில் 20 தொழில்கள் நஷ்டம் அடைந்து மூடுகிற நிலையிலே இருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனுடைய மொத்த மூலதனம் ரூபாய் 70.60 கோடி. அதில் இந்த 20 தொழில்களின் மூலதனம் 37.12 கோடி ரூபாய். ஏறக்குறைய பாதிக்கு மேலாக நஷ்டம் வந்திருக்கிறது. அதன் எட்டு கம்பெனிகளின் மொத்த மூலதனம் ரூபாய் 728.32 இலட்சம். அது மொத்த நஷ்டம் 1,228.59 இலட்சம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், ராணிப்பேட்டையில் உள்ள தொழிற் பேட்டையில் இருக்கக்கூடிய 13 பெரிய தொழில் நிறுவனங்கள் அரசிடமிருந்து பெற்ற உதவித் தொகையைத் திருப்பிக் கொடுக்காமல் இருக்கின்றன அவர்களுக்குக் கொடுத்த கடனைத் திருப்பிப் பெற முடியவில்லையென்று சொல்கிறார்கள். இப்படி நஷ்டத்தைக் காட்டக்கூடிய பல கம்பெனிகள் இருக்கின்றன. தொழில் துறையில் இந்த நிலை இருப்பதால், “நீங்களே சொல்லுகிறீர்கள் இந்தத் துறையில் இவ்வளவு நஷ்டம் என்று. ஆகவே இந்தத் துறையை மூடிவிட்டு தனியார் துறைக்கு இதைக் கொடுங்கள்” என்று தனியார் துறையினர் கேட்க இடமிருக்கிறது. ஆகவே ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்களுக்கு தெளிந்த சிந்தனை இருக்க வேண்டும். இந்தியாவைப் பொறுத்த வரையில், தொழில் துறையில் தனியாரை ஊக்குவித்தால், அது எங்கே போய்ச் சேரும் என்பதைப் பார்க்க வேண்டும். பொதுத் துறையிலே எவ்வளவு கேடுகள் இருந்தாலும், நம்மால் அதைப்பற்றி எடுத்துப் பேச முடிகிறது. அதைப் பற்றி ஆடிட் ரிப்போர்ட் வருகிறது. அரசாங்கம் நினைத்தால் கேடுகளைப் போக்க முடியும். ஆகவே அரசாங்கம் தொழில் துறையில் உள்ள கேடுகளைப் போக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பாண்டிச்சேரி மாநிலத்தில் சில பகுதிகளைப் பின்தங்கிய பகுதி என்று அறிவித்து, பல சலுகைகளைக் கொடுக்கிறார்கள். நாமும் பின்தங்கிய பகுதி என்று அறிவித்து, 50 இலட்சம் ரூபாய் வரை வட்டியில்லாக் கடன் ஐந்தாண்டுகளுக்குக் கொடுத்திருக்கிறோம் என்றாலும், இது போதுமானதல்ல. பிற மாநிலங்களில் பின்தங்கிய பகுதிகளில் தொழிலை ஆரம்பித்து பொருளை உற்பத்தி செய்கிறவர்களுக்கு விற்பனை வரியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது. அதாவது பாண்டிச்சேரியில் ஒருவர் ஸ்டீல் சேர் செய்வதற்கு 100 ரூபாய் ஆகிறதென்றால், அதே அதே ஸ்டீல் சேரை நூறு ரூபாய்க்கு விற்க முடியும். ஆனால் கடலூரில் அதே ஸ்டீல் சேரை

நூறு ரூபாய்க்கு ஒருவர் செய்தால் அதை 110 ரூபாய்க்கு விற்க வேண்டியிருக்கிறது. அப்படியென்றால், அவர்கள் எப்படி போட்டியிட்டு வெற்றி பெற முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டில் சிமெண்ட் விநியோகம் இப்போது எவ்வளவு சீர்கேடுகளையும், சிக்கல்களையும் உருவாக்கியிருக்கிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஒருவேளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "நமக்கு 4 இலட்சத்திற்கு மேற்பட்ட டன்கள் ஒதுக்கீடு செய்ததை இப்போது மூன்று இலட்சத்திற்குக் கீழே ஒதுக்கீடு செய்து குறைத்திருக்கிறார்கள். ஆகவே பற்றாக்குறை இருக்கிறது" என்று சொல்லலாம். இதை நான் ஒத்துக்கொள்கிறேன். உண்மையாகப் பற்றாக்குறை இருக்குமானால், எத்தனை ரூபாய் கொடுத்தாலும், சிமெண்ட் கிடைக்கக் கூடாது. அதுதான் பற்றாக்குறை. அப்படியில்லாமல் இப்போது 70 ரூபாய், 80 ரூபாய் கொடுத்தால், கன்னியாகுமரியிலும், நாகர்கோயிலிலும் கிடைக்கிறது. சென்னையில் 100 ரூபாய் கொடுத்தால் கிடைக்கிறது. எத்தனை லாரி வேண்டுமானாலும் இறக்கிக் கொள்ளலாம். இதிலிருந்து ஓர் உண்மை புலப்படுகிறது. சிமெண்ட் இருக்கிறது, ஆனால் இருக்க வேண்டியவர்களிடத்திலே இல்லை. தேவையானவர்களிடத்திலே இல்லை. வீடு கட்டுவதற்கு, வீட்டைச் செப்பனிடுபவர்களுக்கு சிமெண்ட் கிடைப்பதில்லை. ஆனால் அதிகமான விலைக்கு விற்கக்கூடியவர்களுக்குக் கிடைக்கிறது. இது விநியோகத்தில் உள்ள ஊழல் இல்லாமல் வேறு என்ன? இப்படி அதிகாரிகள் செய்கிறார்கள் என்று மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் சொல்லலாம். அவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பு இவர்களுக்குத்தான் இருக்கிறது. சென்ற மாதம் ஒரு நாள் நாகர்கோவிலில் வானொலி மூலமாக ஒரு செய்தியைக் கேட்டேன். அச்செய்தி சென்னையிலிருந்து ஒலிபரப்பப்படும் மாநிலச் செய்தி. அச்செய்தியில் "நாகர்கோவிலில் பதுக்கி வைக்கப்பட்ட ஆயிரம் மூட்டை சிமெண்ட் கண்டுபிடிக்கப்பட்டது" என்று சொல்லப்பட்டது. மறுநாள் 'தினத்தந்தி' பத்திரிகையிலும் செய்தி வந்தது. எங்களுக்கெல்லாம் நிரம்ப சந்தோஷம், அந்த சிமெண்டை எடுத்து எங்களைப் போன்று ஏற்கெனவே காத்திருப்பவர்களுக்குக் கொடுப்பார்கள் என்று. மறுநாள் மாலை சென்று யார் பதுக்கினார்கள் என்று பார்த்தால், அப்படி ஒன்றுமே இல்லை என்று சொல்லி விட்டார்கள். பிடித்தது உண்மை. அது செய்தியாக வானொலியில் வந்ததும் உண்மை. பத்திரிகையில் செய்தி வந்ததும் உண்மை. ஆனால் பிடிபட்ட ஆள் பெரிய ஆள். எல்லா மட்டத்திலும் தடுத்துவிட்டார்கள். போட்ட எஃப்.ஐ.ஆர். ரைக்

(முற்பகல் 11-10)

கிழித்துப் போட்டுவிட்டார்கள். போன மாதம் மாநில செய்தித் துறையிலே அந்தச் செய்தி வந்திருக்கிறது. நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் செய்தி வந்த பிறகு, அவர்கள் பதுக்கியவர்களை எப்படி விட்டு விட்டார்கள் என்று பார்க்க வேண்டும். அவர் எவ்வளவு சக்தி வாய்ந்தவராக இருந்தாலும், எவ்வளவு பெரியவராக இருந்தாலும், யாருக்கு வேண்டியவராக இருந்தாலும், அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறையிலே இத்தகைய தவறுகள் நடப்பதால், சாதாரண மக்கள், ஏழை மக்கள் எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.





ஆளுநர் அவர்கள் உரையிலே மதுவிலக்கெல்லாம் ஒரு மாதிரி முறையாக இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மதுவிலக்குக் கொள்கையினை இந்த அரசு எப்படி ஏற்றுக்கொள்கிறது, அதை எப்படி நடத்துகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். அரசினுடைய கொள்கை என்ன? பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் சென்னையிலே அண்ணா சிலைக்கு முன்னாலே நின்றுகொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே அங்கிருந்து அண்ணா தி.மு.க. நண்பர்களெல்லாம் நடந்து சென்று, அண்ணா சமாதியிலே போய், மதுவின் தீமையைப் பற்றி விளக்கி, சமுதாயத்தைக் காக்க அயராது உழைப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லிக்கொண்டதற்காக நான் பாராட்டுகிறேன். நான் பாராட்டுகிறேன் என்று மட்டும் நினைக்கக்கூடாது. ஆனால் அதை அமல் நடத்தாதற்காக நான் வருத்தப்படுகிறேன். மதுவிலக்குக் கொள்கையிலே இந்த அரசுக்குத் தள்ளாட்டம்தான். மது என்றாலே தள்ளாட்டம்தான். அரசு அந்தக் கொள்கையை அமுல்படுத்துகிறபோது, இதற்கு முன்னாலே இருந்த அரசு எப்படி நடத்தியிருந்ததோ அந்த அளவுக்குச் செய்யலாம். அப்படிச் செய்திருந்தால், ஓரளவுக்காவது முறை இருக்கும். அதற்குப் பிறகு மிகக் கடினமாக ஆக்கினார்கள், அதே சமயம் தளர்த்தினார்கள். அதற்குப் பிறகு மதுவிலக்கைத் தளர்த்தியிருக்கிறோமே தவிர, ரத்து செய்யவில்லை, மதுவிலக்கை அப்படியே தான் வைத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அதில் கூட நாட்டு மக்களை ஏமாற்றுவதாக நான்கூட சொல்லவில்லை. உச்ச நீதிமன்றம் சொல்கிறது. என்ன சொல்கிறது? நீதிபதி சந்திரசூட் அவர்கள், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சொல்லியிருக்கிறார்கள்.

"Some State Governments were hoodwinking the people."

மக்களை ஏமாற்றுகிறார்கள். "சில மாநில அரசுகள்" என்ற அளவிலேயே சொல்லியிருக்கிறார்கள். மது, சாராயம், விஸ்கி, பிராந்தி டிஸ்ட்ரிபியூஷன் முறையிலே குறைகளைச் சொல்கிறார்கள். நம் அரசு போட்டிருக்கிற நிர்வாக முறைகளைப்பற்றி நீதிமன்றம் சொல்லி, அவைகளை ரத்து செய்திருக்கிறார்கள். அந்த முறைகளை எல்லாம் நீதிமன்றம் ரத்து செய்கின்றது.

அதற்கு அவர்கள் என்ன காரணம் சொல்கிறார்கள் ? "நம்முடைய மாநில அரசுகள் எல்லாம் மதுவிலக்கு என்று சொல்லிவிட்டு, அதை நடத்துகிறோம் என்று சொல்லிவிட்டு, 21 வயதுள்ள ஆண்களையும் பெண்களையும் குடிக்க வைத்துவிட்டார்கள் ; மக்களை ஏமாற்றுகிறார்கள்" என்று சொல்கின்றார்கள்.

"Some State Governments were hoodwinking the people by declaining prohibition but granting liquor licences to all boys and girls above 21. He said it was shameful for the Government."

இது அரசாங்கங்கள் வெட்கப்படவேண்டியது என்று சொன்னார்கள். அவர்கள் தப்பாகச் சொன்னார்கள் என்று கருதினால், நாம் விட்டுவிட்டு சந்தோஷப்படலாம். அதற்காகக் கவலைப்பட வேண்டியதில்லை. இதையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அதிகாரிகள் தெரியப்படுத்திக்கொண்டிருக்கின்றார்களோ இல்லையோ, நான் அவைகளை இந்தச் சபையிலே அவருக்கு நினைவுபடுத்திக்கொண்டிருக்கிறேன். இப்படிப் பல நிகழ்ச்சிகள் இருக்கின்றன இன்று மதுவிலக்கு இல்லாததால், பல மதுக் கடைகள் வந்திருக்கின்றன. பஸ் ஸ்டாண்டுகள் பக்கத்திலே, ஆலயங்கள் பக்கத்திலே, பள்ளிக்கூடங்கள் பக்கத்திலே எல்லாம், எங்கெங்கெல்லாமோ மதுக்கடைகள் வந்திருக்கின்றன. அங்கெல்லாம் மதுக்கடை வைக்கக்கூடாது என்று அரசாங்க ஜி.ஓ. இருந்தது. அதைத் தளர்த்திவிட்டதால், இப்போது அங்கெல்லாம் பிராந்திக் கடைகள் வந்துவிட்டன. ஜி.ஓ. வில் தளர்த்தியது குறித்து 'அமெண்ட்மென்ட்' வந்தது. போன தடவை மதுவிலக்கு தளர்த்தும் சட்டத்தில் பேசுகிறபோது, அந்த ஜி.ஓ.-வை வெளியிட்டிருந்தார்கள். அதன் மூலமாக காயிதே மில்லத் அவர்கள் வாழ்ந்த குரோம்பேட்டையிலே, 3,000 ஆண்களும் பெண்களும் படிக்கின்ற பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்திலேயே அந்தச் சாராயக் கடையைத் திறந்திருக்கிறார்கள். நாகர்கோயிலிலே மீனாட்சிபுரத்தில் 20 அடி அகலம்கூட இல்லாத ஜனச் சந்தடியிருக்கின்ற நெருக்கடியான இடத்திலே இஸ்லாமியர்கள் பள்ளி வாசல் உள்ள இடத்திற்குப் பக்கத்திலே, டாக்டர்கள், ஓட்டல்கள் உள்ள நெருக்கடியான இடத்திலே நெ. 26 சாராயக் கடையைத் திறந்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லியிருந்தேன். மாண்புமிகு அமைச்சர், வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அதை விட்டு பதில் சொல்லாமல் போகிறபோது, அந்த இரண்டு இடங்களைப்பற்றி என்ன சொல்கிறார்கள் என்று கேட்டேன். அவர்கள் கவனிக்கிறோம் என்று சொன்னார்கள். அவர் கவனித்ததாகத் தெரியவில்லை. இதைப்பற்றி அங்கே இருக்கின்ற அதிகாரிகள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் கடைக்காரர்களிடம் சென்று ஸிளப்பி விடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அந்த அதிகாரிகளுக்குக் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து சரிக்கட்டியிருப்பார்கள். அவர்கள் கொடுக்கிறதைக் கொடுத்து நிறைவேற்றிவிட்டார்கள். நான் சொல்வது தவறு



என்றால் மன்னியுங்கள். மீனாட்சிபுரத்திலே உள்ள சாராயக் கடைக்காரன் என்னிடமே வந்துவிட்டான். என்னைப் பார்க்க வந்தான். அவன் அந்தப் பகுதியிலே இருப்பவர்களிடம் நான் எங்கே வசிக்கிறேன் என்று கேட்டிருக்கிறான். என்னைப் பார்த்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டிருக்கிறான். அதற்கு மற்றவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'அவர் சொல்வதையெல்லாம் கேட்கமாட்டார். அவர் குடிக்கமாட்டார். இத்தகைய செயலுக்கு ஒப்புதல் சொல்லமாட்டார்' என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகும் என்னிடம் வந்திருக்கிறான். 'ஐயா, எனக்குத் தெரியாமல் அந்த இடத்தில் கடை எடுத்துவிட்டேன். இன்னும் கொஞ்ச நாட்கள் வைத்துவிட்டு எடுத்து விடுகிறேன்' என்று சொன்னான். உடனே "அரசாங்கம் நானில்லை. நான் உயிருடன் இருக்கும் வரை எதிர்த்துக்கொண்டுதான் இருப்பேன். நீ எங்கே பேசி முடித்துக்கொள்ள வேண்டுமோ அங்கே போய் சொல்லிக் காரியத்தை நிறைவேற்றிக்கொள்" என்றேன். அதன் பிறகு அவன் சொன்னான், "அதிகாரிகள் எல்லாம் வந்து கடையை எடுக்கச் சொல்கிறார்கள். நான் யார் யாருக்கோ பணம் கொடுத்தேன்" என்று சொன்னான். அதையெல்லாம் இங்கே சொல்வது முறையல்ல. இன்னும் இந்த அரசில் பல இடங்களில், பஸ் ஸ்டாண்டுகளில், கோயம்பத்தூர் போகிற வழியிலே ஒட்டன் சத்திரத்திலே பஸ் ஸ்டாண்டுக்கு அருகிலேயே சாராயக்கடை வைத்திருக்கிறார்கள். அதைப் பரிசிலனை செய்து தடுக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், உலகத்திலே வேறு எங்குமே இல்லாத அளவுக்கு 7 விதமான கலர்களில் விளம்பரம் செய்கிறார்கள். அங்கே போகின்ற ஆட்கள் கண்களில் அது படாமல் போகாது. அப்படி விளம்பரம் செய்கிறார்கள். தமிழகத்திலே எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவுக்கு சாராயக் கடைகள், பிராந்தி கடைகள், விஸ்கி கடைகள் எங்கு பார்த்தாலும் வந்திருக்கின்றன. இப்படிச் செய்துவிட்ட பிறகு அங்கே போய் சபதம் பண்ணியிருக்கிறார்கள். அது எனக்குப் புரியவில்லை. சபதம் ஏன் பண்ண வேண்டும். நான் ஏதாவது சொன்னால், அது உள்நோக்கமாக ஆகிவிடக்கூடாது என்பதற்காக நான் சொல்லவில்லை. இப்போது இருக்கக்கூடிய முறையை மாற்றுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று நான் சொல்கிறேன்.

இந்த சாராயக் கடைகளை எப்படி மொத்த மது வியாபாரிகளுக்குக் கொடுப்பது என்பதைப்பற்றி நீதி மன்றம் எல்லாம் சிரிக்கின்றது, இந்த அரசைப் பார்த்துச் சிரிக்கிறது. பெரியார் மாவட்டத்தில் உள்ள நிலைமை பற்றி எங்கள் கட்சியினுடைய உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சென்னை அண்ணா சாலையில் இருக்கும் கடைக்கு லைசென்ஸ் பெற முயன்று, உயர்நீதி மன்றம் வரை சென்றார்கள். அவர்கள் தடை பெற்றார்கள்

என்றெல்லாம் சொன்னார்கள். அதற்குப் பிறகு வந்த தீர்ப்பும் ஒன்று இருக்கிறது. பெரியார் மாவட்டத்தில் ஒருவர் மனு போட்டிருக்கிறார். அவருக்கு இந்த அரசு சொல்லியிருக்கும் பதில் என்ன? அந்த மனு போட்டவருக்கு எல்லா யோக்கியதைகளும் இருக்கின்றன, ஆனால் அவர் 'மணி வெண்டர்', அதனால் கிடையாது என்று சொன்னார்கள். இன்னொருவருக்கு வயது 71 ஆகிவிட்டது என்று சொன்னார்கள். இன்னொரு ஆளுக்கு "நிறைய 'பிளைன்' இருக்கின்றது. ஆகையால் உங்களுக்குக் கிடையாது" என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி காரணம் சொல்வதில், அதிகாரிகள் ஒழுங்காகச் சொல்ல வேண்டும். அவர்களிடம் அமைச்சர் அவர்கள், சரியான காரணத்தைச் சொல்லப்பா, அதை வைத்து நாங்கள் சரியும், ஆற்றுகிறோம்' என்றாவது சொல்லியிருக்க வேண்டும். நீதிமன்றத்தில் இப்படிச் சொல்கிறார்கள். அதற்கு அப்பால் அரசில் அப்பீல் செய்கின்றார்கள். இப்படி சிங்கிள் பெஞ்சிலே உத்தரவு வாங்கி விடுகிறார்கள். அதற்குப் பிறகு அப்பீலுக்கு வருகிறது. இதற்காக எவ்வளவு ரூபாய் செலவு? இதைப்பற்றி ஆடிட்டிலே வரும். அப்போது இந்த அரசு இருக்கிறதோ அல்லது நாங்கள் இருக்கிறோமோ இல்லையோ, அதைப்பற்றிய பிரச்சினை இல்லை, ஆனால் அதுபற்றி ஆடிட்டில் வரும். அரசு லைசென்ஸ் வழங்குவதில் உள்ள தவறுகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நான் அதைச் சொல்லவில்லை. உயர் நீதிபதிகள், திரு. கோகுலகிருஷ்ணன் அவர்களும் திரு. ரத்னம் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். 'அரசு லைசென்ஸ் வழங்க மறுத்தது பொருத்தமற்றது, நியாயமற்றது, காரணம் இல்லாதது, ஏதேச்சாதிகாரத் தன்மை வாய்ந்தது' என்று சொல்லியிருக்கிறார்கள். அது 'இர்ரெலவெண்ட், அன்ரீசனபிள், ஆர்பிட்டரி' என்றெல்லாம் சொல்கின்ற அளவுக்கு அந்தச் சட்டங்களை அமுல்படுத்திக் கொண்டிருக்கின்றதைப்பற்றி உச்சநீதிமன்றம் குறை சொல்கிறது. நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய இந்த நீதிமன்றமே இப்படிச் சொல்கிறது என்பதை உங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய நாட்டில் பத்திரிகைச் சுதந்திரம் எப்படி இருக்கிறது என்று தங்களுடைய கட்சி உறுப்பினர்கள் சொல்லும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சாவடேடி கண்ணப்பன் அவர்களும், திரு. ஜேப்பியார் அவர்களும், பெரியவர் திரு. முத்து அவர்களும் சொன்னார்கள். அவர்கள் இங்கே அழகாகச் சொன்னார்கள். "உங்களுடைய ஆட்சியிலே இப்படியிப்படி எல்லாம் நடைபெறவில்லையா?" என்று கேட்டிருக்கிறார்கள். நான் இங்கே ஒன்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் சொன்னதிலேயிருந்து அவர்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள்





எப்படிச் சொல்லியிருக்க வேண்டும்? "இப்படியிப்படி எல்லாம் குற்றம் என்று சொன்னீர்களே, அது எல்லாம் உண்மைக்குப் புறம்பானது" என்று சொல்லியிருக்க வேண்டும். அதற்கு மாறாக, "உங்கள் ஆட்சியிலே செய்யவில்லையா?" என்று கேட்டிருக்கிறார்கள். நாங்கள் தப்பு செய்திருந்தாலும், இந்த அரசு தப்பு செய்ய வேண்டும் என்று நினைத்தார்களா? அன்று பெரியவர் திரு. முத்து அவர்கள் இங்கே இருந்து கொண்டு ஆலோசனை சொன்னார்கள். இன்று அங்கே இருந்து கொண்டு ஆலோசனை சொல்வார்கள். அந்த ஆலோசனைகளை எடுத்துக் கொள்கிறார்களோ இல்லையோ, அது எனக்குத் தெரியாது. பத்திரிகைச் சுதந்திரம் என்பது இந்த நாட்டிலே மிக முக்கியமானது. ஒரு ஜனநாயக நாட்டிலே மிக முக்கியமானது நிர்வாகம், சட்டமன்றம், நீதிமன்றம். இந்த மூன்றும் தான் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்தது. ஒன்றுக்கொன்று ஆதிக்கம் செலுத்தாத சுதந்திரமாக இருக்க வேண்டும். இது முன்னர் இருந்த நிலை. அதற்குப் பிறகு 4-வது எஸ்டேட் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய

(மூற்பகல் 11.20)

நடைமுறையைப் பார்த்தால், ஃபோர்த் எஸ்டேட்தான் மற்ற 3 எஸ்டேட்டுகளையும் காப்பாற்றுகிறது. நிர்வாகம் இருக்கிறது. சட்டமன்றம் இருக்கிறது. சட்டமன்றத்திற்குச் சம்பந்தமில்லாமல் நீதிமன்றம் இருக்கிறது. ஆனால் எல்லாவற்றுக்கும் பாதுகாப்பு பத்திரிகைகள்தான். பத்திரிகைச் சுதந்திரம் எப்போது பறிபோனதோ அப்போதே மற்ற மூன்றும் போய்விட்டன. நிர்வாக ஆதிக்கம் மட்டும் இருக்கும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டமன்றத்திற்கும், தலைவர்களே, தாங்கள்தான் பாதுகாப்பு அதற்கு உறுதுணையாகப் பத்திரிகைகள் இருக்கின்றன...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்கு, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லாம், அவைதான் பாதுகாப்பு.

திரு. ம. சங்கரலிங்கம்: பத்திரிகைச் சுதந்திரத்தில் கை வைப்பது சுலபம். நாங்கள் செய்தாலும் தப்புதான், நீங்கள் செய்தாலும் தப்பு தான். நாங்கள் செய்தோமா என்பது வேறு. அதற்குள் வரவில்லை. அதை மட்டும் நீங்கள் பேசுகிறீர்கள். இப்போது சட்டம் இருக்கிறது. பத்திரிகை ஆசிரியர் தவறாகச் செய்தி போட்டால், ஆசிரியர், பப்ளிஷர், பிரிண்டர் இவர்கள் மூன்று பேர் மீதும் வழக்கு போடலாம். நீதிமன்றத்திற்கும் போகலாம். நீதிமன்றத்தில் வழக்கு ஏற்படும். அவர்களைக் கைது செய்ய, பெரிய கெடுபிடி நடவடிக்கை எடுக்க எந்தச் சட்டத்தில் இடம் கொடுக்கப்

பட்டிருக்கிறது? சட்டத்தின் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. இந்த அவையில் விவாதம் நடந்தபோது, ஒரு தடவை மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னதாக நினைக்கிறேன். ஒரு சட்டத்தைக் குறிப்பிட்டுப் பேசும்போது, காமராஜ் சட்டம், கருணாநிதி சட்டம் என்று அவர்கள் சொன்னார்கள். தனி நபர் சட்டமல்ல. இந்த நாட்டின் சட்டம் அது. சட்டத்தின் ஆட்சி என்று சொன்னேன். எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால், நாம் இன்றைக்கு சட்டத்தின் ஆட்சியில் இருக்கிறோம். கைது செய்ய வேண்டுமென்றால், எந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்தார்கள்? பத்திரிகை ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்கலாம். பப்ளிஷர் மீது நடவடிக்கை எடுக்கலாம். பிரின்டர் மீது நடவடிக்கை எடுக்கலாம். பத்திரிகைச் செய்திக்கும், மேனேஜிங் டைரக்டருக்கும் எந்தவிதச் சம்பந்தமும் கிடையாது. லோன் வாங்கி, திருப்பிக் கட்டாவிட்டால், அவரைப் பிடிக்கலாம். 6—1—1982 அன்று இந்த அவையின் உறுப்பினரான திரு. ஆற்காடு வீராசாமி அவர்களை, பத்திரிகையின் மேனேஜிங் டைரக்டர் என்ற நிலையில் இருப்பவரைக் கைது செய்தார்கள். எந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்தார்கள் என்பதை எங்கள் கட்சி உறுப்பினர்கள் கேட்டார்கள். அவருடைய தம்பி வெளியூரிலே இருந்தார். ராதாகிருஷ்ணன் என்பவர் வழக்கறிஞர். அவர் இயக்குநர். அவர்களைக் கைது செய்தார்கள். எங்கள் கட்சி உறுப்பினர்கள், இது தவறு என்று சொன்னார்கள். அப்போது மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஆத்திரப்பட்டதோடு, அதைச் சுட்டிக்காட்டுகிற நிலையில், "நீங்கள் செய்யவில்லையா?" என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்கள் ஒரு கட்டுரையே படித்தார். இப்படிப்பட்ட கருணாநிதியா கேட்பதென்று அழுத்தம் திருத்தமான குரலில் கேட்டார். பெரிய நீசெஸ் மாதிரி இருக்கிறதே என்று அதைத் தேடி எடுத்துப் பார்த்தபோது, மக்கள் குரலில் 8—1—1982-ல் வந்திருப்பது தெரிந்தது. 'சில செய்திகள், சில சிந்தனைகள்' என்ற கட்டுரை மக்கள் குரலில் வந்திருக்கிறது. பத்திரிகையை அப்படியே படிப்பது மரபாக இருக்கக்கூடாதென்பதற்காக, அதை எழுதிப் படித்ததற்காக மாண்புமிகு உறுப்பினரவர்களைப் பாராட்டுகிறேன். அதிலே முற்பகுதியைப் படித்தார், பிற்பகுதியையும் படித்திருந்தால், நன்றாக இருந்திருக்கும். அவர் படிக்கவில்லை. அந்தப் பிற்பகுதியை நான் படிக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** பத்திரிகையில் வந்திருப்பதைப் படிக்கக்கூடாது என்று சொல்லிவிட்டு, அதையே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் செய்தால் எப்படி?





**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவரவர்களே, தங்களிடம் 10 ஆம் தேதியே அனுமதி வாங்கியிருக்கிறேன். வேறு எதையும் நான் கொண்டுவரவில்லை.

இப்படிப்பட்ட கருணாநிதியா கேட்பது என்று அதிலே இருக்கிறது. இவையெல்லாம் பத்திரிகைச் சுதந்திரமா என்பதை முடிவு செய்யும் பொறுப்பை 'பிரஸ் கவுன்சில் ஆப் இந்தியா' எனப்படும் தேசிய பத்திரிகைக் குழுவிடமே விட்டுவிடுவதுதான் நல்லது. இந்த 'பிரஸ் கவுன்சில்' ஒரு நிரந்தர அமைப்பு. அதில் பத்திரிகையாளர்களின் பிரதிநிதிகள், பத்திரிகை ஆசிரியர்கள், முதலாளிகள், பார்லிமெண்ட் உறுப்பினர்கள், பொது மனிதர்கள் எல்லாருமே உறுப்பினர்களாக இருக்கின்றனர். நீதிபதி குரோவர் இதன் தலைவராக இருக்கிறார். இந்த அமைப்புக்கான செலவுகளை பத்திரிகைத் துறையிடமிருந்தே வசூலிக்கிறார்கள். இத்தகைய நடுநிலையான அமைப்புகளுக்கு ஜனநாயக நாடுகளில் மதிப்பு மிகவும் உண்டு. பிரிட்டிஷ் பிரஸ் கவுன்சிலின் முன்மாதிரியை ஒட்டியே நமது பிரஸ் கவுன்சிலும் அமைக்கப்பட்டுள்ளது. இதனிடம் யார் வேண்டுமானாலும் முறைப்படி புகார் தரலாம். பல மாநில அரசுகள்கூட புகார்களைத் தந்திருக்கின்றன. அவதூறு, ஆபாசம் என ஆட்சி கருதும் விஷயங்கள்பற்றி பிரஸ் கவுன்சிலிடம் புகார் செய்து, அதன் தீர்ப்பைப் பெறுவதுதான் ஜனநாயக, பத்திரிகைத் துறை சம்பிரதாயங்களை வளர்க்க உதவும். கைது, வழக்கு என்று விஷயம் போவது அவற்றைக் கையாளும் ஆட்சிக்கே நல்லதல்ல. அலட்சியத்திற்குரிய அவதூறுப் பேர்வழிகள்மீது அரசே வழக்கைப் போடுவது அவர்களை ஏதோ பெரிய தியாகிகளைப்போல பிரச்சாரம் என்ற அளவிலாவது, காட்டவே செய்யும். தி.மு.க. ஆதரவு ஏடு ஒன்றில் வெளியான அவதூறுக்காக தமிழக அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை தவறானதாகும். இது கைவிடப்படுவதுதான் ஆட்சியின் அறிவார்ந்த தன்னலத்துக்கு ஏற்றதாகும். முதலில் உள்ளதை மாத்திரம் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். இது மாத்திரம் அரசுக்குத் தெரிந்தால் போதுமென்று எண்ணி, மற்றவற்றைக் கடிவாளம் போட்டு தடுத்துவிட்டாரோ என்னவோ தெரியவில்லை.

இன்னும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவைகளைப் பற்றியெல்லாம் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினையில் அரசு எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் வெற்றி பெற வேண்டுமென்று தெரிவிக்க விரும்புகிறேன். ஆளும் கட்சி கூட்டும் எல்லாக் கூட்டங்களுக்கும் போகாவிட்டாலும், போகிற கூட்டங்களில் எங்களுடைய நிலையைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். 1924 ஒப்பந்தப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். நாம் எந்தெந்த

நிலங்களுக்குத் தண்ணீர் பெறுகிறோமோ, [illegible] [illegible], அந்த நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். மேலும் சில கட்டிக் கட்டடங்களைக் கட்டி, [illegible], வேகமாக, துரிதமாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆளுநர் அவர்கள் உரையிலே, மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைக் கிழக்கு நோக்கித் திருப்புவது என்று சொல்லியிருப்பது நடக்காது. எதற்காகச் சொல்கிறேன் என்றால், கேரள அரசு மந்திரிகள்—கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும், காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும்—ஒரு சொட்டுத் தண்ணீர் கூடக் கொடுக்க மாட்டோம் என்று சொன்ன பிறகு, [illegible] 'ரிவர் போர்டு' என்று வந்தால், இந்தப் பிரச்சினையை [illegible]. இதிலே அரசு தன் கவனத்தை அதிகமாகச் செலுத்த வேண்டுமென்று பாதுகாப்பிற்காகச் சொல்கிறேன். மத்திய அரசைக் கேட்போமென்று சொல்லியிருக்கிறார்கள். காவிரிப் பிரச்சினையில் வெற்றி காண்பதுதான் தமிழகத்தின் எதிர்காலத்திற்கு மிக முக்கியமானது.

ஆளுநர் அவர்கள் உரையிலே, தமிழக அரசு எவ்வாறு தமிழர் பண்பாடு, தமிழர் நாகரிகம், தமிழ் மொழி இவைகளைப் பாதுகாக்கிறதென்பதைச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். அண்மையிலே குடியரசு தின விழாவிலே கலந்துகொள்ள இங்கேயிருந்து ஒரு கலை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது நம்முடைய நாகரிகத்திற்குப் பாதகமாக அமைந்திருந்தது என்பதைப் பார்க்க வேண்டும். மாரியம்மன் ஆட்டத்தைக் காட்டினார்கள். சாமானியர்களைப் புண்படுத்தும் அளவிற்கு அது இருந்தது. இங்கே லட்சக்கணக்கான மக்கள் மாரியம்மனைக் கும்பிடுகிறார்கள். அவர்கள் உள்ளத்தைப் புண்படுத்தினாலும் பரவாயில்லை, நல்ல காசைத் தருகிறதென்று சொன்னால், அது நம்முடைய நாகரிகத்தின் விழாவா? 1993-ல் பார்லிமெண்ட் ஆஃப் ரிலிஜன்ஸ் என்று இப்போது [illegible]. [illegible] இந்தியாவிலிருந்து சுவாமி விவேகானந்தர் கலந்து கொண்டார். சிகாகோ நகரில் நடந்தது. அமெரிக்கப் பிரதிநிதிகள் எல்லாம் சேர்ந்து என்ன செய்தார்கள் என்றால், [illegible] ஆட்டம் போல ஒரு கலை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தது. இதுதான் இந்து மதம் என்று காட்டினார்கள். அப்போது சுவாமி விவேகானந்தர் அந்த மேடையிலே பல பிரசங்கங்கள் செய்தார். அவர் சொன்ன கருத்து, [illegible] செல்லும் நூல் போல, ஒவ்வொரு மதத்திலே இருக்கின்றவன் என்று மதத் தேவையில் சொன்ன தெய்வத் தன்மையை எடுத்துச் சொல்லி, ஒரு காட்டுமிராண்டி நிகழ்ச்சியை, இந்தியாவில் இல்லாத ஒன்றைக் காட்டுகிறார்கள். இந்தியர்களுடைய சமயம் எதுவென்றால் இந்து





மதங்களில் ஊடுருவிச் செல்லும் நூல் போல ஒவ்வொரு மதத்திலும் இருக்கின்றவன் கடவுள், எல்லா மதங்களையும் ஏற்றுக்கொள்கிற தத்துவம் எங்களுக்கு உண்டு, தெய்வத் தன்மை வாய்ந்தவர்களும், பூரணத்துவத்தை அடைந்தவர்களும், [illegible] அடைந்தவர்களுமான சான்றோர்கள் எல்லா சமயங்களிலும் காட்டி அளிக்கிறார்கள். அதனால், அவர்கள் அனைவரும் ஒரே பேரின்ப நிலை நோக்கித் தம்மை நடத்திச் செல்கிறார்கள் என்று பேசிய பேச்சுதான் இந்திய நாட்டில் இருக்கக்கூடிய பல்வேறு சமயங்களின் தத்துவத்தை உணரச் செய்தது. [illegible] கூட்டப்பட்ட மக்களும், அதனைக் கேட்டு, ஆச்சரியப்பட்டுப் போனார்கள்.

(முற்பகல் 11-30)

* மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய உரையின்போது குறுக்கிட வேண்டியவனாக இருந்தேன். இருந்தாலும் வேண்டாமென்று, உறுப்பினர் பேசுவதையே எதிர்க் கட்சித் தலைவரால் இதுபற்றி [illegible] விளக்கம் அளிக்கிறேன். குடியரசு தினத்தன்று ஆண்டுதோறும் புதுடில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் பல்வேறு பகுதிகளிலிருந்து கலை நிகழ்ச்சிகள் அனுப்பப்படுகின்றன. இந்த ஆண்டு கிராமப்புற கலை நிகழ்ச்சியாக இருக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். நம்முடைய பகுதியிலிருந்து கரகம், காவடி, மயிலாட்டம் போன்ற கிராமப்புற நிகழ்ச்சிகளையெல்லாம் பல்வேறு சிறு சிறு நிலைகளையும் எடுத்து அனுப்பினோம். இவை கிராமப்புற கலை நிகழ்ச்சி பற்றியவை. நிகழ்ச்சியின் பெயர் மாரியம்மன் நடனமே தவிர, அது ஒரு கலை நிகழ்ச்சிதான். வேறு நிகழ்ச்சி அல்ல. அங்கே இவற்றைத் தேர்ந்தெடுக்க ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழுவினர்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்கள் கிராமப்புறக் கலை நிகழ்ச்சி எல்லாவற்றையும் பார்வையிட்டு, இதைத்தான் வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அதன்படிதான் இந்தக் கலை நிகழ்ச்சி அங்கு நடைபெற்றது. இதைப் பார்த்த பிறகும், ஜனாதிபதி போன்றோர் எல்லாம் பார்த்து ரசித்திருக்கிறார்கள். வண்டிகளை அனுப்புவது போல, பாரதியாருடைய நூற்றாண்டு விழாவையொட்டி, நாட்டின் ஒருமைப்பாட்டை விளக்கும் அலங்கார வண்டி அனுப்ப விரும்பினோம். ஆனால் மத்திய அரசு அங்கீகரிக்கவில்லை. இந்த ஆண்டு தமிழக அரசின் சார்பில் அலங்கார வண்டி இடம் பெறவில்லை.

திரு. ட. சங்கரலிங்கம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் சொன்னார்கள். பாரதி நூற்றாண்டு விழாவையொட்டி பாரதியார் கலை நிகழ்ச்சியை [illegible] செய்வார்கள்? எப்படிப்பட்ட நம்முடைய துறை

[திரு. இராம. வீரப்பன்] [1982 பிப்ரவரி 15

செய்திருக்க வேண்டும். அந்த உணர்வு அவர்களுக்கு உருவாக வேண்டும். அத்தகைய உணர்வு அவர்களுக்கு உருவாகியிருக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

அடுத்து, சட்டம் ஒழுங்கு எப்படி இருக்கிறது என்பதை ஆளுநர் அவர்களே அழகாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். நன்றாக இருக்கிறது என்று சொல்வது வேறு. ஆனால், ஆளுநர் அவர்கள் "பெரிதும் பரவாயில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். ஒருவரை மற்றொருவர் பார்த்து சுகமா என்று கேட்டால் "பெரிதும் பரவாயில்லை" என்று சொல்வார். அதுபோல் இங்கேயும் உண்மையை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கு குறைய பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. இந்தியாவில் அது குறைந்திருக்கிறது. நான் [illegible] இங்கே எடுத்துச் சொல்லலாம். அதுபோல் முன்பு எப்படி இருந்தது, இப்போது எப்படி இருக்கிறது என்பதையும் எடுத்துச் சொல்ல முடியும். காவல் துறை முறையாகச் செயல்பட அதற்கேற்ற சூழ்நிலை இருக்க வேண்டும். தமிழ்நாட்டோடு செயல்படுகிற ஒரு சூழ்நிலை இருக்க வேண்டும். அவர்கள் மீது பிற ஆதிக்கம் செலுத்த முடியாதபடி ஒரு சூழ்நிலை இருக்க வேண்டும். ஆனால் இன்றைக்கு அப்படிப்பட்ட நிலை இல்லாமல் இருப்பது தான் இதற்கெல்லாம் காரணம். எந்தக் கட்சி சம்பவத்தையொட்டி 2 பேரைப் பிடித்து விட்டார்கள். [illegible] கொடுத்து விட்டார்கள். ஆகவே நிரூபிக்க தம்முடைய காவல் துறை சிறப்பாகச் செயல்பட இந்த அரசு விட்டுவைக்கவில்லை என்கிற சூழ்நிலை தான் இன்றைக்கு இருக்கிறது. சில நாட்களுக்கு முன்பு இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் வாயிலாக ஒரு ஆசிரியை எப்படி எவ்வளவு துன்புறுத்தப்பட்டார் என்பதைக் குறிப்பிட்டார். இப்போது அதற்குக் காரணமானவர் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டிருக்கிறார். திருநெல்வேலியில் ஒரு புரோகிதர் எப்படியெல்லாம் கஷ்டப்படுத்தப்பட்டார்? அதற்குக் காரணமானவர் மீது இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் இவ்வளவு நடவடிக்கையும் ஒரு போராட்டத்துக்குப் பின்பு எடுக்கப்பட்டதா என்று நான் கேட்கிறேன். சொல்ல வேண்டியவர்களிடம் சொல்லி, வாதாடி, சில கட்சியினரும் ஒன்று சேர்ந்து பிரச்சினைக்கு ஒத்துழைப்பும் கொடுத்து, அவர்கள் [illegible] இருக்க வேண்டுமென்று நிர்ப்பந்தம் ஏற்பட்டு, அதற்கெல்லாம் பிறகுதான் நடவடிக்கை என்று சொன்னால், இதற்குத்தான் ஆட்சி இயந்திரம் என்று பெயரா? [illegible] நடைபெற்றிருந்தாலும், [illegible] மூலம் அது உடனடியாக சென்னைக்குத் தெரிந்து நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமா? நாங்கள் கூட்டம் போட்ட பிறகல்ல. அப்படி இருந்தால்தான் அது ஆட்சி. இவ்வளவு பேர் எல்லாம் பேசி, இவ்வளவு



1982 பிப்ரவரி 15] [திரு. ப. உ. சண்முகம்]

பேர் எல்லாம் [illegible], அதற்குப் பிறகு நடவடிக்கை எடுப்பது என்றால், அதை யார் விரும்புவார்கள்? இப்படிச் சொல்லும் அவ்வளவு பாராட்டுதலுக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் பேசும்போது, 10, 15 நிமிஷங்களை இங்கு குறிப்பிட்டார் [illegible] பிறகு சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டார். சென்னை [illegible] போலீஸ்காரர்கள் ஒருவர் [illegible]. அவருடைய [illegible]. [illegible] 4½ மணிக்கு [illegible] [illegible] சென்று கொண்டிருக்கிறார்கள். [illegible] [illegible] பக்கத்தில் [illegible] சென்று கொண்டிருக்கிறது. அப்போது [illegible] அணிந்த இரண்டு [illegible] 10 பவுன் [illegible] போலீஸ்காரர்கள் [illegible] நகையை அறுத்துக்கொண்டு போய்விட்டார்கள். [illegible] ஆனாலும் அவர்கள் [illegible] [illegible]. இவ்வளவு துணிகரமாக [illegible] இருக்கின்றன. [illegible] [illegible] செயல் நடைபெற்றிருக்கிறது. [illegible] [illegible] நடமாட்டம் இருக்கும்போது, [illegible] [illegible] கொண்டிருக்கும் சென்னை நகரில், [illegible] நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, இப்படி [illegible] செயல் நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால், [illegible] [illegible] என்ன பயன்? [illegible] [illegible] [illegible]. ஆனால் நம்முடைய [illegible] [illegible] [illegible] [illegible] பெற்று, [illegible] [illegible] [illegible] [illegible] பெற்றிருக்கிறார்கள். இதை நான் அரசுக்கு [illegible] இதனை [illegible] சொல்கிறேன்.

மருத்துவக் கல்லூரிக் [illegible] பற்றி அவையில் [illegible] பட்டதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. [illegible] [illegible] தெளிவாகவும் [illegible] சொல்லியிருக்கிறார். அதற்கு அவையிலேயே [illegible] [illegible] அவர்கள் பதில் சொல்லி [illegible] [illegible] [illegible] இருக்கிறது. அதைப் பற்றி இருமுறை [illegible]. [illegible] மருத்துவக் கல்லூரியிலே முதலாண்டு [illegible] சொல்கிறேன். [illegible] [illegible] [illegible] [illegible] (சிரிப்பு). [illegible] [illegible] என்பது விதி. இந்த அவையிலே [illegible]

சொல்லும்போது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் "முதலில் நாங்கள்தான் கொண்டுவந்தோம்." என்று சொன்னார்கள். அதைப் பாராட்டுகிறேன். ஆனால், அதற்கு முன்பு கேரளாவில் 1978 ஆம் ஆண்டிலேயே கொண்டு வந்துவிட்டார்கள். ஆகவே இரண்டாவது பாராட்டுதான் இந்த அரசுக்கு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதை இந்த அரசு முறையாக அமுல்படுத்தியதா என்று கேட்கிறேன். அதுதான் என்னுடைய கோரிக்கை. அரசு ஒன்றை அறிவிக்கிறது என்றால், அதை அமுல்படுத்த வேண்டுமா வேண்டாமா? அறிவித்தபடி அரசு நடக்க வேண்டும். அதற்கு மாறாக அரசு நடந்தால் சமுதாயத்தில் அதை சட்டமன்றத்தின் வாயிலாக 'புரொஜெக்ட்' செய்வதற்கு உரிமை இருக்கிறது. ஆர்த்தோபெடிக்ஸைப் பொறுத்தவரை, Dipolma in Ortho is to be admitted, என்று சொன்னார்கள். அதாவது இந்தத் தகுதி இருந்தால் போதும் என்று இங்கே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் மாண்புமிகு தலைவர்களை ஒன்றைக் கேட்கிறேன். தமிழகத்திலுள்ள இந்த ஆட்சி வருவதற்கு முன்பு வரை முதுகலைப் பட்டப் படிப்பு ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டிருந்தது. ஆனால் அதை டிசம்பர் மாதத்துக்குக் கொண்டு போனதற்கான பெருமை இந்த ஆட்சிக்குத்தான் உண்டு. அதை வேண்டுமானால் பாராட்டக்கூடிய ஒன்றாக அரசு சொன்னாலே தவிர வேறு ஒன்றையும் பாராட்டக்கூடியதாகக் கருத முடியாது. தமிழகத்தில் பட்டப் படிப்பானாலும் சரி, முதுகலைப் பட்டப் படிப்பானாலும் சரி, இதுவரை ஜூலை 1 ஆம் தேதியிலிருந்து வகுப்புகளை

(நண்பகல் 11.40)

தொடங்கப்பட்டு வந்தன. ஆனால், அதில் மிகப் பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்த பெருமை இந்த அரசுக்குத்தான் சேரும். கல்வித் துறையைச் சார்ந்த எஞ்சினியரிங் கல்லூரியானாலும் சரி, சட்டக் கல்லூரியானாலும் சரி, மருத்துவக் கல்லூரியானாலும் சரி, இப்படிப்பட்ட பட்டப்படிப்புகளும், முதுகலைப்பட்டப் படிப்புகளும் கடந்த மூன்று ஆண்டுகளாக ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில்தான் தொடங்கப்படுகின்றன. வேளாண்மைக் கல்லூரி அட்மிஷன் என்பது அக்டோபர்-நவம்பர் மாதங்களில்தான் நடைபெறும் என்பது இப்போது மிக மிகச் சாதாரணமாகி விட்டது. இந்தப் பெருமைகளெல்லாம் ஆட்சியில் உள்ளவர்களைப் பாராட்டத் தான் வேண்டும். எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் பாராட்டவில்லையே என்று சொல்லும்போது, நாங்கள் பாராட்ட வேண்டும் என்றால், இப்படிப்பட்ட விஷயங்களில்தான் உங்களுக்குப் பாராட்டு தெரிவிக்கும் நிலை இருக்கிறது. ஆண்டவரின் பாதையில் செல்கிறீர்கள், ஆண்டவரின் பெயரைச் சொல்லி ஆட்சி நடத்துகிறீர்கள் இப்படிப்பட்ட தவறான காரியங்களைச் செய்யும்



போது, பாராட்டு தெரிவிப்பது சரியில்லை என்பதால், இந்த வேதனையோடு நான் இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அதிலும் கல்வித் துறையோடு தொடர்புடையவன் என்ற அடிப்படையில் நான் இதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தமிழகத்தின் கல்வித் தரம், இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் பாராட்டப்பட்டது. இதன் சிறப்பும் பெருமையும் [illegible] முதலியார் அவர்கள் காலத்தில் ஆங்கிலப் பாடப்பயிற்சி அறிமுகம் செய்து கொள்ளப்பட்டது. ஆறு மாத காலத்தில் தேர்வுகளின் முடிவுகள் வருமென்பதும், பட்டப்படிப்புக்கான அட்மிஷன்கள் என்பதும் முறையாக உரிய காலத்தில் செய்யப்பட்டுவந்தன. இப்போது அதில் ஏன் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டுவிட்டது என்பதை அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும். இதற்கெல்லாம் என்ன காரணம் என்பதையும் அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தக் குறைபாடுகளையெல்லாம் அரசாங்கம் கண்டறிந்து விரைவிலேயே களைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எம். எஸ். (ஆர்த்தோ) பற்றி இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். அறிவிக்கப்பட்டதா இல்லையா என்பதை நாம் அறிவோம். இந்தப் பட்டப்படிப்புக்கு விண்ணப்பம் போட வேண்டிய கடைசி நாள் 28—2—1981. இந்த வகுப்பு தொடங்க வேண்டிய நாள் ஏப்ரல் மாதம் 28 ஆம் தேதி. ஆனால் அதற்குத் தேர்வு நடைபெறும் நாள்— இன்டர்வியூ நாள் 26—5—1981, அப்படி இருக்கின்ற மாதங்கள் ஏப்ரலில் தொடங்க வேண்டிய இந்தக் கோர்ஸுக்கு இன்டர்வியூ நடக்கும் நாள் மே மாதத்தில். இதற்கு முன்பெல்லாம் மார்ச் மாதம் கடைசியில் இன்டர்வியூ நடக்கும், ஏப்ரல் மாதத்தில் வகுப்பு தொடங்கும். ஆனால் இந்த ஆட்சியில் ஏப்ரல் மாதத்தில் நடக்க வேண்டிய வகுப்பிற்கு, இன்டர்வியூ நடக்கும் நாள் மே மாதத்தில் வருகிறது. அப்படி 26—5—1981-ல் நடைபெற்ற இன்டர்வியூவுக்கு ரிசல்ட் போடப்படும் நாள் 11—7—1981, பொதுவாக இந்த மாதிரியானதைப் பொறுத்தவரையில், இன்டர்வியூ நடந்த மூன்றாவது நாளில் ரிசல்ட் போடுவார்கள். இன்டர்வியூ முடிந்ததும், மூன்று பேரும் கையெழுத்துப் போட்டு டி.எம்.எஸ்.க்கு அனுப்பி அவரும் அன்றைக்கே கையெழுத்துப் போட்டு அது மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சருக்கும் வந்து, அவர் பார்த்து மாண்புமிகு முதலமைச்சருக்கும் வந்து மூன்று நாட்களில் ரிசல்ட் போடப்பட்டுவிடும். ஆனால் 26—5—1981 அன்று நடைபெற்ற இன்டர்வியூக்கு 11—7—1981 அன்று ரிசல்ட் வருகிறது. இதிலே ஒருவர் பாதிக்கப்படுகிறார். அவர் பெயர்தான் டாக்டர் பாக்யநாதன்.

பாதிக்கப்பட்ட அந்த டாக்டர் பாக்யநாதன் நீதி கேட்டு உயர்நீதி மன்றத்திற்கும் போகிறார். இதெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்திருக்காது என்ற காரணத்தால், விளக்கமாகச் சொல்லுவது நல்லதென்று நினைக்கிறேன். அவர் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து,

[illegible] எம்.எஸ். (ஆர்த்தோ) பிரிவில் அட்மிஷன் கேட்டு விண்ணப்பம் செய்திருக்கும் போது எனக்கு மட்டும்தான் முழுத் தகுதி இருந்தது. விண்ணப்பித்த போது, எனக்கு மட்டும்தான் டிப்ளமோ சர்டிபிகேட் இருந்தது. அதாவது மற்றவர்களுக்கு அந்தக் டிப்ளமோ கிடையாது. ஆனால் அவர்களெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார்கள். என்னை மட்டும் தேர்ந்தெடுக்கவில்லை. எனவே எனக்கு நீதி வழங்க வேண்டும்" என்று முறையிட்டார். [illegible] மருத்துவக் கல்லூரி முதல்வர் முதல் பிரதிவாதியாகவும் மற்ற ஒன்பது பேர் இதர பிரதிவாதிகளாகவும் சேர்க்கப்பட்டார்கள். நீதிமன்றத்திலிருந்து இவர்களுக்கெல்லாம் வழக்கின் விவரம் போகிறது. அவர்களின் பதிலைக் கேட்டு விட்டு வழக்கும் நடத்தப்படுகிறது. இறுதியில் வாதங்களையும் கேட்டுவிட்டு, அந்த நீதிபதி தமது தீர்ப்பில் என்ன சொல்லுகிறார் என்றால், "டாக்டர் பார்த்தசாரதியைத் தேர்ந்தெடுக்காமல் விட்டது தவறு. அவர் மட்டும் முழுத் தகுதி பெற்றிருக்கிறார். ஆனால் இவருக்கு பூஜ்யம் மார்க் மட்டுமே போடப்பட்டிருக்கிறது." இப்படி அவர் தீர்ப்பளித்த பிறகு, அரசாங்கம் அந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீட்டுக்குப் போனது. மேல் முறையீட்டை விசாரித்த டிவிஷன் பெஞ்ச் அந்த மேல்முறையீட்டையும் தள்ளுபடி செய்து விட்டது. உடனே அவருக்கு அந்த வருடமே அட்மிஷன் தர வேண்டும் என்றும் கட்டளையிடப்பட்டது. ஆனால் இந்த அரசாங்கத்தில் அந்த டாக்டருக்கு அந்த வருடம் அட்மிஷன் கொடுக்கப்படவில்லை. நீதிமன்றத் தீர்ப்பை ஒட்டி அட்மிஷன் கொடுக்காததால், டாக்டர் பார்த்தசாரதி "கண்டெம்ப்ட் ஆப் கோர்ட்" என்று இன்னொரு வழக்கு தொடர்ந்தார். நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்தவில்லை என்று அவர் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்த உடனே இந்த அரசாங்கம் என்ன சொல்லுகிறது என்றால், "நாங்கள் உச்ச நீதிமன்றத்திற்கும் மேல்முறையீடு செய்யப் போகிறோம்" என்று சொன்னது. அப்படியே உச்ச நீதிமன்றத்திற்கும் மேல்முறையீடு செய்தார்கள். ஆனால் அங்கேயும் இந்த மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்தார்கள். அதுமட்டுமல்ல, நீதிமன்றத்தின் உத்தரவை அமுல்படுத்தச் சொன்னார்கள். ஆனால் அப்போதும் கூட இந்த அரசு அந்த டாக்டருக்கு அட்மிஷன் கொடுக்காமல் நாங்கள் "ரிவ்யூ பெட்டிஷன் போட்டிருக்கிறோம்" என்றார்கள். ஆனால் அந்த பெட்டிஷனும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. இப்படி 11—7—1981-ல் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் 21—1—1982 அன்று முடிவுக்கு வந்தது. அதில் டாக்டர் பார்த்தசாரதி வெற்றி பெற்றார்.

(மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் அவர்கள் எழுந்தார்.)

தயவுசெய்து நான் முழுவதையும் சொல்லிவிடுகிறேன். அமைச்சர் அவர்கள் [illegible] கேட்டுவிட்டு அதற்குப் பிறகு பதில் அளித்தால், நன்றாக [illegible]. [illegible]



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நான் இந்த அவையில் ஏற்கனவே நிலைமையைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இது ஒரு சட்டப் பிரச்சினை. மனு செய்கிறபோது அவருக்கு டிப்ளமோ இருக்க வேண்டுமா அல்லது அட்மிஷன்போது இருக்க வேண்டுமா என்பதுதான் பிரச்சினை. நான் இதில் உள்ள நிலைமையை அப்படியே படித்துக் காட்ட விரும்புகிறேன். "Wherever there is a Diploma Course preceding Degree Course with corresponding subjects, candidates with Diploma alone are eligible to be admitted into the Degree Course."

தற்போது இந்த விஷயத்தில் டிகிரி கோர்ஸுக்கு அப்ளிகேஷன் போடுகிற நேரத்தில் டிப்ளமோ இருக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு தந்திருக்கிறது. அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இதைப் பொறுத்தவரையில், [illegible] நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். [illegible] அட்மிஷன் நேரத்தில் ஒருவருக்கு டிப்ளமோ இருந்தாலும் என்ற அடிப்படையில் வாய்ப்பு கொடுக்கப்பட்டது. அப்ளிகேஷன் போடும்போது டிப்ளமோ இருக்க வேண்டும் என்று சொல்லப்படும் [illegible]. [illegible]

A point of law was involved whether they should have the diploma at the time of application or at the time of admission. It was the question. We wanted it to be decided by the Supreme Court. The Supreme Court has decided and we will abide by it. We bow down to the judgment of the Supreme Court. But I will tell you that we will definitely be the losers.

[illegible]

எம்.என். என்று வாங்கிவிடுகிறார்கள். இதன் காரணமாக நாம் பாதிக்கப்படுகிறோம். இப்போது சுப்ரீம் கோர்ட்டு ஒரு தீர்ப்பு அளித்திருக்கிறது. அதற்கு நாங்கள் தலை வணங்குகிறோம். இதில் கொள்கையை நிர்ணயம் செய்ய வேண்டியது சுப்ரீம் கோர்ட்டுதான் என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** அமைச்சர் அவர்கள் இங்கே பதில் அளித்திருக்கிறார்கள். தமிழகம் இதன் காரணமாகப் பாதிக்கப்படுகிறதா இல்லையா என்பதல்ல பிரச்சினை. நடந்த அட்மிஷனில் டாக்டர் பார்த்தசாரதிக்குப் பாதகம் செய்யப்பட்டதா இல்லையா என்பதுதான். அவர் நீதிமன்றத்திற்குப் போய் டிப்ளோமா ஹோல்டரான எனக்கு மார்க்கு போடவில்லை, மற்றவர்களுக்கு மார்க் போட்டார்கள் என்று வாதிட்டார்.

(மாண்புமிகு அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே எழுந்தார்.)

தயவுசெய்து என்னை முழுமையாகப் பேசுவதற்கு அனுமதியுங்கள். நான் தொகுப்பாகச் சொன்னால்தான் சரியாக இருக்கும். பிறகு அமைச்சர் அவர்கள் தேவையான விளக்கத்தைத் தரலாம். டாக்டர் பார்த்தசாரதி ஒரு டிப்ளோமா ஹோல்டர். அவருக்குக் கிடைக்கவில்லை. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பிராஸ்பெக்டஸில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை தயவுசெய்து பார்க்க வேண்டும். குவாலிபிகேஷன் பற்றி அதிலே சொல்லப்பட்டிருக்கிறது.

down to the judgment of the Supreme Court. But I will tell you Degree Course."

அப்ளிகேஷன் போடுகிறபோது, டிப்ளோமா வேண்டாம், அட்மிஷன் ஆகிறபோது டிப்ளோமா இருந்தாற்போதும் என்ற நோக்கத்தோடு இந்த அரசு செயல்பட்டிருக்கிறது. ஆனால் டாக்டர் பார்த்தசாரதி ஒருவருக்கு மட்டும்தான் அப்ளிகேஷன் போடும்போதே டிப்ளோமா தகுதி இருந்திருக்கிறது. அப்படியிருந்தும் அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதுதான் வழக்கின் அடிப்படை. இதைத்தான் இந்த அரசு நாட்டுக்கும் இந்த அவைக்கும் தெளிவுபடுத்த வேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன்:** டிப்ளோமா இல்லாதவர்கள் அப்ளிகேஷன் போடுவதற்கே எலிஜிபிளிட்டி இல்லாதவர்கள் என்று சொன்னாலே போதுமே.

**திரு. ம. சங்கரலிங்கம்:** அதில்தான் கருத்து வேறுபாடே இருக்கிறது. டிப்ளோமா இல்லாதவர்களுக்கு அப்ளிகேஷன் போட உரிமை உண்டா இல்லையா என்பதைத்தான் இவர்கள் ஆங்கிலத்தில் சில சொற்களை வைத்துக் கொண்டு விளையாடுகிறார்கள்.





(முற்பகல் 11-50)

"Diploma holders are eligible to apply" என்று இருக்க வேண்டும். "Eligible to be admitted" என்று போட்டுவிட்டு அடுத்த பாராவில் மார்க் ஷீட் கேட்கும் இடத்தில் "statement of marks in the diploma examination, if any" இருந்தால் கொடுக்க வேண்டும் என்று போட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** எம்.டி.க்கு டிப்ளோமா தேவையில்லை என்று மிகத் தெளிவாகப் போட்டிருக்கிறோம். எம்.எஸ். (ஆர்த்தோ)வுக்குத்தான் டிப்ளோமா தேவை. டிப்ளோமா இல்லாதவர்களுக்கும் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் போட்டோஸ்டாட் நகல் வைத்திருக்கிறேன். அந்த 6 பேரும் இன்டர்வியூவிற்கு முன்பே டிப்ளோமா பெற்றிருக்கிறார்கள் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. இந்தப் பிரச்சினை வரும் என்பதற்காகத்தான் நான் துறையைக் கேட்டு இதை வாங்கி வைத்திருக்கிறேன். அத்தனை பேருக்கும் இன்டர்வியூவிற்கு முன்பே டிப்ளோமா இருந்திருக்கிறது. அது மட்டுமல்ல, டிப்ளோமா வைத்திருக்கக்கூடியவர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். பார்த்தசாரதிக்கு ஏன் கிடைக்கவில்லையென்றால், ஒரு பட்டியலை [illegible] 'நாமினேஷன்' [illegible] என்று வாங்கியிருக்கிறார். [illegible] தெரியாது என்று சொல்லியிருக்கிறார். கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தெரியாது, தெரியாது என்றே சொல்லியிருக்கிறார்கள் [illegible] கிடைக்காத காரணத்தால், என்று சொல்கிறார்கள். அந்த மார்க் அவருக்கு செலக்‌ஷன் கிடைக்கவில்லை.

This has been assessed taking into consideration. . .

**திரு. ஆ. நல்லசிவன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். அப்ளிகேஷன் . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்களே, இதை முழுமையான நேரத்தை எடுத்து முடிவுக்குக் கொண்டுவர [illegible] கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** [illegible] கேட்க விரும்புவது, அப்ளிகேஷன் போடும்போது தகுதியுடையவராக டிப்ளோமா இருக்க வேண்டுமா இல்லையா என்பதுதான். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அட்மிஷன் நேரத்தில் டிப்ளோமா குவாலிபிகேஷனைப் பொறுத்த வரையில், அப்ளிகேஷன் போடும் நேரத்தில் டிப்ளோமா இருக்க வேண்டுமா, இல்லையா என்பதுதான் பிரச்சினை. அப்ளிகேஷன் போடும் நேரத்தில் டிப்ளோமா பெற்றிருந்தவர் பார்த்தசாரதி ஒருவர்தான். மற்றவர்களுக்கு அப்ளிகேஷன் போடும் நேரத்தில் டிப்ளோமா இல்லை. . .

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பல பேர் இருக்கிறார்கள். பார்த்தசாரதியைப் போல பல பேர் வெயிட்டிங் லிஸ்டிலே இருக்கிறார்கள்.

திரு. ம. சங்கரலிங்கம் : நான் அதை ஒத்துக்கொள்கிறேன். அப்படி நிறைய பேரை வெயிட்டிங் லிஸ்டிலே வைத்திருக்கிறார்கள். நல்ல தகுதியுள்ளவர்களை வெயிட்டிங் லிஸ்டிலே வைத்திருக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். அதிலே கருத்து வேறுபாடு இல்லை. தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு, அப்ளிகேஷன் போட்ட நாளில் டிப்ளமா இல்லை. காரணம், அதற்குப் பிறகுதான் அவர்கள் தேர்வு எழுதியாக வேண்டும், அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி எம்.டி. படிப்புக்குத் தேவையில்லை. எதிலே டிப்ளமா கோர்ஸ் இருக்கிறதோ அதற்கு அப்ளை பண்ணுபவர்கள் மட்டும் டிப்ளமா பெற்றிருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அவர் கோர்ட்டிற்குப் போனார். கோர்ட்டிலே டிப்ளமா பிரச்சினை விவாதிக்கப்பட்டது. கேரள உயர்நீதி மன்றத்தினுடைய தீர்ப்பையும், சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பையும் அவர்கள் விவாதித்திருக்கிறார்கள். தமிழ் நாடு ஹைகோர்ட்டிலும் இதே பிரச்சினையை விவாதித்து விண்ணப்பம் கொடுக்கிற நேரத்தில் டிப்ளமா இருக்க வேண்டுமா, இல்லையா என்பதைப்பற்றித் தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பிலே கேரளாவினுடைய தீர்ப்பைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி திருவனந்தபுரம் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் இயக்குநர் ஒரு சுற்றறிக்கையை அனுப்பினார் எம்.எஸ். அட்மிஷனுக்காக. இந்த டிப்ளமாவுக்கு 10 மார்க் வைக்கப்பட்டிருக்கிறது. விண்ணப்பம் கொடுக்கும் தேதிக்குள் காலிகட் யூனிவர்சிட்டியிலிருந்து டிப்ளமா ரிசல்ட் வரும். திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்திலிருந்து ரிசல்ட் வராது. ரிசல்ட் வாராதவர்களுடைய விண்ணப்பத்தையும் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர் ப்ராஸ்பெக்டஸுக்கு ஒரு திருத்தம் வெளியிட்டிருக்கிறார். உடனே காலிகட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள், அது தப்பு என்று சொல்லி, அப்ளிகேஷன் போடும் தேதியில் டிப்ளமா தகுதி பெற்றவராக இருக்க வேண்டும், தேர்வு எழுதியவராக இருக்கக் கூடாது என்று சொல்லி உயர் நீதிமன்றத்திலே வழக்கு போட்டிருக்கிறார்கள். நீதிமன்றத்திலே நீதிபதி கோபால் நம்பியார் அவர்கள் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். "மாணவர்கள் சொல்வது சரி, விண்ணப்பத் தேதியில் டிப்ளமா பெற்றிருக்க வேண்டும். அரசாங்கத்திற்கு ப்ராஸ்பெக்டஸைத் திருத்தும் அதிகாரம் கிடையாது. மேலும் டிப்ளமா தகுதி பெற்றவர்கள், தகுதி பெறாதவர்களைவிட உயர்ந்தவர்கள். அவர்கள் முன்னுரிமை பெற நியாயம் உடையவர்கள்" என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பை எதிர்த்து அரசாங்கம் உச்ச நீதிமன்றத்திற்கும் போனது.



அங்கே ஜட்ஜ் கிருஷ்ணய்யர் தீர்ப்பை வழங்கினார். ஏ.ஐ.ஆர். 1980 சுப்ரீம் கோர்ட் 1230 வழக்கில் தீர்ப்பு கொடுத்தது. அதை ஒத்துக் கொள்கிறோம் என்று சொல்லிவிட்டு கடைசியில் "விண்ணப்பம் கொடுக்கிற போதே, தேர்வு எழுதியிருக்க வேண்டும், தேர்வு எழுதியிருந்து வெற்றியும் பெற்றிருக்க வேண்டும்" என்று குறிப்பிட்டு யூனிவர்சிட்டியிலிருந்து மார்க் லிஸ்ட் வர டைம் ஆகுமானால் செலக்ஷனுக்கு முன்னால் மார்க் லிஸ்ட் 'ப்ரட்யூஸ்' பண்ணலாம் என்று சொல்லியிருக்கிறார்கள் அங்கே. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை இதே வழக்கில் ஜஸ்டிஸ் பத்மநாபன் அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டு "I am clear. . . ."

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இதிலே மிகத் தெளிவாக திரு. சங்கரலிங்கம் அவர்கள் கேரள ஹைகோர்ட் தீர்ப்பைச் சொல்லி யிருக்கிறார்கள். "At least at the time of interview" சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இங்கேயும் டிப்ளமா தேவை என்று இன்டர்வியூ நேரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை 'பேஸ்' பண்ணி தான் மார்க் போட்டிருக்கிறார்கள். பார்த்தசாரதி வழக்கைப் பொறுத்த வரையில், அவர் ஒரு சர்வீஸ் கேண்டிடேட். அங்கே 6 இடங்கள் இல்லை. சர்வீஸ் கேண்டிடேட்டிற்கு இரண்டே இடங்கள் இரண்டே இடங்கள்தான். அந்த உண்மையை யாரும் மறுக்கவே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்களை முழுவதுமாகப் பேசவிட்டுவிட்டு, பிறகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னால், மிகவும் உதவியாக இருக்கும். எதிரொலி மாதிரி வந்தால், வாதம் நீண்டு கொண்டே போகும்.

திரு. ம. சங்கரலிங்கம் : அவரவர் சார்பிலே அவரவர் என்ன இஷ்டத்திற்கேற்ப சொல்லிக்கொண்டே போகலாம். அதற்கு ஒரு முடிவு வர வேண்டும். சரியோ, தவறோ, நீதி மன்றத்தின் தீர்ப்பை ஏற்றுக்கொள்கிற மனப்பான்மையை உருவாக்கினால்தான் நாம் ஒரு ஜனநாயகத்திலே செயல்பட முடியும். இதே பிரச்சினையை நீதிமன்றத்திலே விவாதித்தபோது நீதிபதி "I am clearly of the opinion that an applicant to M.S. (Ortho) should have either passed the Diploma Examination on the date of the application or at least appeared for the Examination and awaiting the result on the date of the application" என்று சொல்கிறார். அப்ளிகேஷன் போடும் நாளில் இருக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதால், அதை ஏற்றுக்கொண்டாலும், இன்டர்வியூ நடக்கும்போது ரிசல்ட் வரவில்லை, சொல்லுவதைப்போல, அமைச்சர் அவர்கள் போட்டோஸ்டாட் காப்பியை அவைக்குக் காட்டுகிறார்கள். அவர்கள் எந்த எந்தத் தேதியென்று சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** 6 ஜூன் 1980—ஒருவர் ; 19 மே 1980—இன்னொருவர். 20 மே 1981—மற்றொருவர் ; 25 சனவரி 1980—மற்றொருவர். 23 மே 1979—இன்னொருவர் ; 19 மே 1981—இன்னொருவர்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இன்டர்வியூ நடந்தது 26—5—1981. அதற்குப் பிறகு இதைத் தெளிவாகவே ஆராய்ந்துவிட்டு நீதிமன்றத்திலே கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதற்கடுத்த பக்கத்திலே நீதிபதிகள் இந்த அரசுக்கு சில வழிகாட்டி முறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கச் சார்பிலே வாதாடியவர்கள், கழிந்த சில வருடங்களாகவே கோர்ஸ் ஆரம்பித்த பின்னாலே அட்மிஷன் செய்வது வழக்கம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது குறித்து கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(நண்பகல் 12-00)

இந்த நாட்டினுடைய கல்வியின் பெயராலே, அவர்களுடைய தகுதியின் காரணமாக in the interest of education; for the welfare of the students', இந்த நாட்டிலே படிக்கின்ற மாணவர்கள் நலனைக் கருதி சொல்லியிருக்கிறார்கள். It is needless to point out that the interest of education and the welfare of the students require that selection and admission of candidates either to the professional courses colleges or to the other colleges and educational institutions should be made long before the date of commencement of the academic year"

'அகாடெமிக் இயர்' என்று சொல்கின்றபோது, ஜூன் ஜூலையிலேயே எல்லா இடங்களுக்கும் தேர்ந்தெடுக்க வேண்டும். இதுவே அரசுக்கு வழிகாட்டியாக இருக்கும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

"The fact that during the recent past years there has been lapse on this account"

கழிந்த சில ஆண்டுகளாக கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள் திறப்பதில் இருக்கக் கூடிய சிக்கல்களை எல்லாம் காரணம் காட்டி, அந்த நிலைமைகளைச் சாதகமாகச் சொல்லி எடுத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள்.

'Eligibility for admission has to be judged as on the date of application and not as on the date of interview.'

அவனுக்கு அட்மிஷன் கொடுத்தாகிவிட்டது. ஆகவே பாஸ் ஆக்கவேண்டுமென்ற நிலை இருக்கக்கூடாது.





'Eligibility for admission has to be judged as on the date of application and not as on the date of interview."

அந்த மாதிரி நிலைமைகள் இல்லாத தன்மையிலே, அபத்தமான தன்மையிலே கொண்டு போயிருக்கிறது. நீதிபதிகள் அரசு நடத்துகின்ற முறையைப்பற்றி இந்த நாட்டிலேயே சொல்கிறார்கள். உயர் நீதிமன்றத்திலேயிருந்து இந்தத் தீர்ப்பு வந்திருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனார்கள். அங்கேயும் சொன்னார்கள். உச்ச நீதி மன்றத்திற்கு அரசு சார்பில் இரண்டு தடவைகள் சென்றிருக்கிறார்கள். ஒரு தடவை இல்லை, இரண்டு தடவைகள் சென்றிருக்கிறார்கள். இந்த நாட்டு மக்களுடைய வரிப் பணத்தைச் செலவு செய்திருக்கிறார்கள். 61 சதவிகிதத்திற்கு மேலே வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற பொதுமக்கள், ஏழையெளிய மக்கள் கொடுக்கின்ற வரிப்பணத்தை இப்படிச் செலவழித்திருக்கிறார்கள். இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள். மற்றவர்களை நம்பி அல்ல, உங்களையெல்லாம் நம்பி அல்ல மக்கள் இருப்பது. அவரை நம்பித்தான் மக்கள் வோட்டுப் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். உச்ச நீதி மன்றத்திற்குச் செல்வதற்குச் செலவு செய்கிறார்கள். நான் முதலமைச்சர் சார்பில் மற்ற அமைச்சர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

Argument of the respondent's counsel would not only lead to uncertainty but to absurdity.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** டிவைட் அண்டு ரூல்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** உச்ச நீதிமன்றம் சொல்கின்றார்கள். "We are in agreement with the interpretation and reasoning given by the learned Judges of the Lower Court."

இதையெல்லாம் சொல்லிவிட்டு கடைசியிலே

'We are, therefore, satisfied with the learned Judges . . . . "

என்று முடித்துவிட்டார்கள்.

கடைசியாக, இந்த உயர்நீதிமன்ற நீதிபதி சொல்கிறார். அவர் ஒரே ஒரு கேள்வியைக் கேட்கிறார். அதற்கு மட்டும் பதில் சொல்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்த அவையிலேயே சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திரும்பவும் சொன்னார்கள். இந்த அவைக்குத் தரக்கூடிய தவறான செய்தியாக அது இருக்கிறது என்பதை மாத்திரம் நான் இந்தச் சபையிலே சொல்லிக்கொள்கிறேன். 'ஹாங்காங் ஆபரேஷன்' பற்றிச் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னதிலிருந்து, அந்த ஆபரேஷன் பற்றியெல்லாம் படிக்க ஆரம்பித்தாகிவிட்டது. 'ஹாங்காங் ஆப்பரேஷன்' என்றால் வேறு ஒன்றுமில்லை. ட.பி. பற்றியது. எலும்பு, அதிலுள்ள 'பஸ்' இதைப்

பற்றியது. அந்த 'பஸ்'-ஐ எடுப்பது பற்றியது. அதைப்பற்றி நான் அமைச்சர் அவர்கள் சொன்னதிலிருந்து படித்தேன். இல்லையென்றால் அதைப்பற்றி யெல்லாம் நான் படித்திருக்க மாட்டேன்.

ஆக இன்டர்வியூ எப்படி நடந்தது என்பதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த இன்டர்வியூவில் அவர்களிடத்தில் ஒரே ஒரு கேள்வி போட்டார் என்று சொன்னார்கள். அதற்கு இன்டர்வியூ நடத்தி னவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். இதில் டாக்டர் பார்த்தசாரதி அவர்கள் கொடுத்த அபிடாவிட்டிலிருந்து படிக்கிறேன்.

Affidavit:

"Parthasarathy, do you have any evidence for the rank in Diploma Ortho in the University?"

After this, Prof. Sambandam turning to Prof. Basheer Ahmed said:

'I will work out the marks in Proforma. You please ask questions to Parthasarathy'

On that Prof. Basheer Ahmed started to ask questions.

Q: Describe step by step the procedure of Hong Kong operation?

A: Sir, I know only the principles of that surgery and not the steps. I have not assisted such an operation or seen the same. Unfortunately, at both centres where I have worked, that surgery is not done till now.

Q.—It is an important surgery; you must know it step by step.

A.—Sir, it is only an experimental surgery and is not an accepted procedure. It is not included in the standard text-books of operative orthopaedic surgery.

Q.—No, No, you should know the surgery.

A.—Sir, this surgery is not done either in Kilpauk or Royapettah and no one did this.

Q.—Probably I am an incompetent surgeon. I don't have facilities to do that surgery. Klipauk must have known that?

A.—Sir, I know only the principles.

Q.—All right, tell me the principles.

A.—In Hong Kong operation, the affected vertebrae, one above and one below is removed as *en bloc*. The gap is filed by grafts taken from iliac crust and the ribs. This is a radical procedure involving removal of quite a large amount of bones from affected site.

Q.—What is the surgery you do here in KMC very often for caries spine?





A.—The most common surgery we do at KMC caries spine is Anterolateral decompression.

Q.—Can you describe the steps of that surgery?

A.—The patient on full prone position, by a curved incision centering on the affected vertebrae, the muscles were retracted laterally, the affected vertebrae, spinions process, will be identified and the costo vertebral function to be disected. Part of the Neufal Arch with the costo vertebral junction and proximal 2 inches of rib will be excised. The same is done for the Vertebrae above or below if necessary. By this the Tuberculous pus and the debris are drained out. The compression over the spinal cord get relieved.

Q.—How will you confirm the compression has been completely relieved?

A.—The dural sheath will expand with inspiration. Basheer: Yes. Yes.

Q.—What is the spinal fusion?

A.—Here we fuse the two Vertebrae. By that there is no movement at the affected site and stability is achieved.

(பிற்பகல் 12-10)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினரவர்கள் முடிக்க எவ்வளவு நேரமாகும்?

**திரு. ம. சங்கரலிங்கம்** : இன்னும் 15 நிமிடங்களாகும்.

**திரு. பா. ரா. தாமஸ்** : தலைவரவர்களே, நாம் மருத்துவம் குறித்த பாடத்தைப் படித்துக்கொண்டிருக்கிறோமா என்று ஐயப்பாடு எழுகிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அறுவை சிகிச்சைபற்றிச் சொல்லு கிறார்கள். நேரத்தோடு முடிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்** : காச நோய் பற்றி எனக்குப் பதினெட்டு ஆண்டு அனுபவம் உண்டு.

**திரு. ம. சங்கரலிங்கம்** : ஆகவே நான் சொல்லுவதை முதலமைச்சரவர்கள் புரிந்து, பின்பற்றி, இவ்வளவு நடந்திருக்கிறதே, ஒரு கேள்விதான் கேட்டார்களென்று சொன்ன அதிகாரிகள் யார் என்று பார்த்து, தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

"*Q.*—What is the difference between Hong kong operation and Antero-lateral decompression and Anterior fusion?

*A.*—In Hong Kong operation it is an extensive radical procedure involving removal of affected vertebrae and the healthy vertebrae one above and one below; the gap is filled by the bone graft. In Antero-lateral decompression procedure where we relieve tension on spinal cord by draining all the Tuberculous pus and debria. In Anterior fusion we fuse the adjacent vettebra so that spine gets stabilised at the affected site.

*Basheer Ahmed: Thank you."*

இது அபிடவிட்டில் கொடுத்தது. கேண்டிடேட் இவ்வளவு கேள்விகள் கேட்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார். அதற்கு எதிர் பக்கம் என்ன என்று பார்க்கலாம். கவுன்டர் கொடுத்தவர் என்ன சொன்னார்? என்ன கேள்வி கேட்டேன் என்று நினைவில்லை, '0' போட்டேன், அது நினைவில் இருக்கிறது—மறக்க முடியாது. அதற்குப் பிறகு நீதிபதி, இதையே எடுத்துச் சொல்லி, இப்படிப் போட்டது தப்பு, '0' போட்டது தப்பு என்று தீர்ப்பு சொல்லி, உச்ச நீதி மன்றத்திற்குப் போய், அங்கே கேட்டிருக்கிறார்கள். அங்கே மார்க் விஷயம் பற்றிச் சொன்னார்கள். அமைச்சரவர்கள் நமக்குச் சொன்னது மாதிரி, உச்ச நீதிமன்றத்திற்கு இரண்டாவது முறையாக அனுமதிக்கப்பட்டபோது, சொலிசிட்டர் ஜெனரல் சொன்னார். அதற்கு நீதிபதி அவர்கள் சொன்ன பதிலே, நான் அமைச்சரவர்களுக்குச் சொன்ன பதிலாக அமையட்டும்.

"I totally disagree with the Solicitor General; He says he has got zero. Perhaps, he would have got 5 out of 5 marks if he is the son-in-law of the Health Minister. He has got zero though he has obtained medals in the University Examination." The Supreme Court observed sarcastically thus:

"Put in a clause in future in the prospectus for the admission to P. G. Course that people who do not fulfil the qualifications too before the last date for receipt of applications may apply for admission to P. G. Course so that no one can challenge in the Court of Law about selection so that you can select your interested candidates."

ஒரு குவாலிபிகேஷனும் இல்லாதவர்கள்கூட அப்ளை பண்ணலாமென்று திருத்தம் போடுங்கள், அப்படிச் செய்யுங்கள் என்று கிண்டலாகச் சொல்லியிருப்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள், எதிர்க் கட்சியில் இருந்தபோது இப்படிச் சொல்லி வந்திருக்கலாமே தவிர, ஆட்சிக்கு வந்த பிறகு அப்படி பதில் சொல்லுவதற்கல்ல. இப்போது நீதியை நடத்தும் பொறுப்பில் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்துகொண்டு, பதில் சொல்லும்போது, அங்கேதான் இருக்கிறது தகுதி என்று அடக்கத்தோடு சொன்னால் தப்பில்லை.





**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** எதிர்க் கட்சித் தலைவரவர்கள்; அப்படியெல்லாம் கோர்ட்டிலே அபிடவிட்டிலே இருக்கிறதென்று எடுத்துச் சொன்னார்கள். அது அவர்களுடைய வாதம். இப்படியெல்லாம் கேள்விகள் கேட்கப்பட்டன என்பது கேண்டிடேட்டினுடைய வாதம். அதற்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். நான், ஒரேயொரு கேள்வி கேட்டார்களென்று சொல்லவில்லை. ஒரு சிம்பிள் கொஸ்டினுக்கு பதில் சொல்லவில்லை என்று தான் சொன்னேன். அதைத் தீர்ப்பிலேயே எழுதியிருக்கிறார்கள். ஹாங்காங் ஆபரேஷன் என்பது சிம்பிள் கொஸ்டியனா அல்லது காம்ப்ளிகேட்டட் கொஸ்டியனா என்பதை 'டிசைட்' பண்ண வேண்டியது 'எக்ஸ்பர்ட்ஸ்'. ஆனால் சாதாரண ஜெனரல் சர்ஜரி புத்தகத்தில்கூட அது தெளிவாக் இருக்கிறது. ஆர்டினரி எம்.பி.பி.எஸ், சர்ஜரி புத்தகத்தில் தெளிவாக எழுதி யிருக்கிறார்கள். ஆகவே யாரையும் காப்பாற்ற அல்லது வக்காலத்து வாங்க நான் சொல்லவில்லை. இதிலே இரண்டு கொஸ்டியன், ஒன்று கேட்கப்பட்ட கேள்வி. அது அபிடவிட்டில் உள்ள வாதம். அது உண்மையா, இல்லையா என்பதற்கு நாம் என்ன செய்திருக்கிறோம்? எம்.பி.பி.எஸ். தேர்வுக்கு டேப் ரிகார்ட் செய்திருக்கிறோம். போஸ்ட்-கிராஜுவேட் தேர்வுக்கு டேப்-ரிகார்ட் செய்யவில்லை. இப்போது எல்லாவற்றையும் டேப்-ரிகார்ட் செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். அதைக்கூட கிண்டல் செய்திருக்கிறார்கள். கேலி செய்திருக்கிறார்கள். அதைப்பற்றிக் கவலையில்லை. எல்லாவற்றையும் டேப்-ரிகார்ட் செய்யுங்கள், பிரச்சினை இருக்காது என்று உத்தரவு போட்டிருக் கிறோம். இன்னொன்று, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பிற்கு தலை வணங்குகிறோம். நிச்சயமாக ஏற்றுக்கொள்கிறோம். இங்கேகூட நையாண்டியாகப் பேசினார்கள். மற்ற மாநிலங்களில் டி.ஆர்தோ. தேவையில்லை என்று சொன்னார்கள். இருந்தாலும் நாம்தான் அதை திட்டவட்டமாகக் கொண்டு வந்திருக்கிறோம். தமிழகத்தில் இருக்கக்கூடியவர்கள் எம்.எஸ். (ஆர்தோ) வர முடியாமல், அங்கே எம்.பி.பி.எஸ். பாஸ் ஆன உடனே எம்,எஸ், (ஆர்தோ) வந்தால், அகில இந்திய ரீதியில் எப்படிப்பட்ட நிலை ஏற்படுமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். டாக்டர் பார்த்தசாரதியைப் பொறுத்தவரையில், அவருக்கு மேலே மூன்று பேர்கள் இருந்தார்கள். திறமையாகப் பதில் கொடுத்தவர்கள். அப்படி கமிட்டியின் ரிப்போர்ட் இருக்கிறது. கமிட்டி என்னென்ன கேள்விகள் கேட்டிருக்கிறது, அது நியாயமா என்றால், கமிட்டி எதற்காக? சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறேன். அவர்கள் என்னென்ன கேள்விகள் கேட்டிருக்கிறார்கள் என்று இந்த மன்றத்தில் வாதாடினால், கமிட்டி எதற்காக? சுப்ரீம் கோர்ட் சொன்னதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஒரு முக்கியமான கேள்விக்குப் பதில் சொல்லாமல், மற்ற சின்னச் சின்ன கேள்வி களுக்குப் பதில் சொல்லியிருக்கலாம் என்பது அபிடவிட்டில் இருந்தே தெரிகிறது.

It is a techanical question. Are we going to decide the technicality in this House? This has to be decided by the Hon. Chairman.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எதிர்க் கட்சித் தலைவரவர்கள், அடுத்த விஷயத்தைப் பற்றிப் பேசலாம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் டெக்னிகல் கொஸ்டியன் என்று சொன்னார்கள். உண்மைதான். ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டி போட்ட பிறகு, அதைப்பற்றி ஆராய்ச்சி செய்யலாமா என்று கேட்டார்கள். அந்தக் கமிட்டி தப்பு செய்தால், அதை விட்டுவிடவா நாமெல்லாம் இருக்கிறோம்? ஜட்ஜ்மென்டில் இன்னொரு ஆஸ்பெக்ட் இருக்கிறது. அதற்குள் வரவில்லை. எக்ஸ்பர்ட் கமிட்டியில் இருப்பவரின் சொந்தக்காரர் ஒருவர் இன்டர்வியூவிற்கு வரும்போது, அதை டிஸ்குளோஸ் பண்ணாமல், வேண்டியவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறதென்று தீர்ப்பு இருக்கிறது. அதற்குள் வரவில்லை. புதுப் புது பிரச்சினைகளுக்கு என்னை இழுத்து வருகிறார். மூன்று தடவைகள் ஜட்ஜ்மென்ட்டை, ரிலவன்ட் புக்ஸ்-ஓடு படித்ததால், சொல்லுகிறேன். கமிட்டியைப் பற்றி கேள்வி கேட்கலாமா என்று கேட்கிறார்கள். நாம் நியமித்த கமிட்டி தவறு செய்கிறதென்று சொல்லும்போது, அதன்மேல் நடவடிக்கை எடுக்க உரிமை இருக்கிறது. அதிலே உள்ள ஓர் உறுப்பினர், தனது உறவினர் இன்டர்வியூவிற்கு வரும்போது, அதை டிஸ்குளோஸ் பண்ணாமல், தவறாக இருந்துகொண்டு, வேண்டுமென்றே ஏமாற்றியிருக்கிறார் என்று ஜட்ஜ்மென்டில் இருக்கிறது. அது சிம்பிள் கொஸ்டியன், எல்லோருக்கும் தெரியுமென்று சொன்னார்கள். அதனால் பாதுகாப்போடு வந்திருக்கிறேன். ஹாங்காங் ஆபரேஷன்பற்றி இரண்டு பெரிய புத்தகங்களிலே இருக்கிறது . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மெடிகல் கவுன்சில் ஆக்க வேண்டாம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** லவ் & பெய்லி புத்தகத்தில் இருக்கிறது. அந்தக் கொண்டு வந்திருக்கிறேன். கேம்பல் புத்தகத்தில் இருக்கிறது. அதில் ஹாங்காங் ஆபரேஷன் பற்றி ஸ்டெப் பை ஸ்டெப்பாகச் சொல்லவில்லை. எக்ஸ்பிரிமென்ட் ஸ்டேஜ் முடிந்த பிறகுதான், ஸ்டெப் பை ஸ்டெப் முறை என்று சொல்லு வார்கள். பிரின்சிபிள் தவிர வேறு ஒன்றுமில்லை. ரெஸ்பான்டன்ட் பற்றி அங்கே

(பிற்பகல் 12-20)

சொன்னார்கள். அவைகளை மட்டும் சொல்வது சரியில்லை. நீதிபதி சொன்ன தெளிவான விளக்கத்தைச் சொல்வது தான் சரி.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** ஒன்றைத் தெளிவாக்கச் சொல்கிறேன். 'கம்பிளீட் டீடெயில்ஸ்' எல்லாம் கொண்டு வரச் சொல்லி யிருக்கிறேன். கமிட்டி சொல்லிவிடுவதாலேயே நாங்கள் ஆராயாமல் இருப்பதில்லை. எந்தக் கமிட்டியாக இருந்தாலும், மீண்டும் ஆராய்ந்து





பார்த்துத்தான் நடவடிக்கை எடுக்கிறோம். டிப்ளமோ தேவை என்று சட்டத்தைக் கொண்டு வந்தோம். கவர்னர் ஆட்சிக் காலத்தில் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் எந்தவித தகுதியும் இல்லாமல் இடம் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னதால்தான், இதைக் கொண்டு வந்திருக்கிறோம். நான் இதைச் சொல்ல வேண்டாமென்றுதான் இருந்தேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** ஏதோ ஒரு நோக்கத்திற்காக இதைக் கொண்டு வந்தோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் பாராட்டு கிறேன். எந்த நோக்கத்திற்காகக் கொண்டுவரப்பட்டது என்பதற்கு 'ரீப்' இல்லை. ஆனால் நீதிமன்றமே சொல்லிவிட்ட பிறகு, இப்படிச் சொல்வது சரியில்லை. புத்தகத்தில் இருக்கிறது, டேப்பில் இருக்கிறது என்று சொன்னார்கள். உண்மையில் அது வரவேற்கத்தக்கது. இதில் ஒரே ஒரு கேள்விதான் கேட்கப்பட்டதா? எப்படி 'ஸீரோ' போட்டார்கள்? நீதிபதியின் தீர்ப்புக்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "ஒரு கேள்வி தான் கேட்கப்பட்டது" என்று சொல்வதால், இது உரிமைப் பிரச்சினை ஆகிறது.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** நான் எந்த நோத்திலும் "ஒரு கேள்விதான் கேட்கப்பட்டது" என்று சொல்லவே இல்லை. "கேள்வி கேட்கப்பட்டது" என்றுதான் சொன்னேன். ஜட்ஜ்மென்டை நான் படித்திருக் கிறேன். படிக்காமல் சட்டமன்றத்திற்கு வருபவனல்ல நான். 'அபிடாவிட்' எல்லாம் இருக்கிறது. படிக்க முடியாத அளவில் நான் இல்லை. முக்கியமாக ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அதற்குத் தெரியாது என்று சொன்னார்கள். பல கேள்விகளை இன்னும் கேட்டார்கள். அதற்கும் தெரியாது என்று சொன்னார்கள். "ஒரு கேள்விதான் கேட்கப்பட்டது" என்று நான் சொல்லவே இல்லை. அப்படி யாராவது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லியிருந்தால் அது தவறு.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சரையும் எதிர்க் கட்சித் தலைவரையும் ஒன்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினையை இத்துடன் முடித்துவிட்டு மேலே போகும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மேலவை விதி 157-ன்படி விவாதம் நடந்து கொண்டிருக்கும்போது உரிமைப் பிரச்சினை கொண்டு வரலாமென்று இருக்கிறது. அந்த முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதும், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசியதும் அவைக் குறிப்பில் இருக்கின்றன. ஒரு கேள்வி கேட்டார்கள். ஸீரோ போட்டார்கள் என்று சொன்னார்கள். நீதிமன்றத்தில் இப்படி நடந்திருக்கிறது என்று நான்

சொல்லிய பிறகும், "ஒரு கேள்விதான் கேட்கப்பட்டது" என்று சொல்கிறார்கள். அதன்படி நான் உரிமைப் பிரச்சினை கொடுக்கிறேன். டேப் வரவழைத்து அவர்கள் பேசியதை எல்லாம் கேட்டு அதுபோல் தாங்கள் பேசியதையும் வைத்து, மாண்புமிகு தலைவர் அவர்களே, தாங்கள் தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அடுத்து, புத்தகத்தில் தெளிவாக இருக்கிறது என்று சொன்னார்கள். இரண்டு புத்தகங்களையும் சொன்னார்கள். கேம்பெல் அன்ட் லவ் அன்ட் பெயிலி என்கிற இரண்டு புத்தகங்கள் இருக்கின்றன. நான் பேசுகின்ற இவை யாவும் அவைக் குறிப்பில் இருக்க வேண்டும்.

ஆளுநர் உரையில் எடுத்துச்சொல்லப்பட்டிருக்கும் காரியங்களுக்காக நாங்கள் மகிழ்ச்சி அடையவில்லை. ஒரு பார்த்தசாரதிக்கே இந்த கதி என்றால், சாதாரண சாரதிகள் என்ன பாடுபடுவார்கள்? உயர்நீதிமன்றத் திற்கும் உச்சநீதிமன்றத்திற்கும் போக வேண்டுமானால், எவ்வளவு கொடுக்க வேண்டி வரும்? பார்த்தசாரதி ஆன படியால் கொடுத்திருக்கிறார்கள். சாதாரண சாரதிக்கு எப்படி கொடுக்க முடியும்?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்னும் அந்தப் பிரச்சினையை முடிக்கவில்லையா? (சிரிப்பு)

**திரு. ம. சங்கரலிங்கம் :** இப்போது நான் சாதாரண பாதசாரியைப்பற்றிப் பேசுகிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில், கொள்கையளவில் அமைதி இருந்தாலும், அமுல்படுத்துகிறபோது பல்வேறு இடங்களில் தவறியிருக் கிறார்கள். அதை நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். அவற்றையெல்லாம் எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையிலும், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பொறுப்பு வாய்ந்த கட்சியைச் சார்ந்தவன் என்ற முறையிலும் எடுத்துச் சொல்லி தயவுசெய்து அவற்றையெல்லாம் களைந்து, நல்லாட்சி அமையுங்கள் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்னும் ஐந்து நிமிடம்தான் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை நாளை தொடரலாம் என்று நினைக்கிறேன். ஆளுநர் விவாதத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை நாளை காலை வைத்துக்கொள்ளப்படும். மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தன. அவை மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-25)



### 5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders*

Nil

### *B. Reports, Notifications and Other Papers.*

24. Speech of Hon. Thiru S. Ramachandran, Minister for Electricity indicating the discussions the Annual Financial Statement for 1981-82 and the Supplementary Financial Statement for 1980-81 of the Tamil Nadu Electricity Board. (Tamil and English).

25. Statement of action taken on the suggestions made by the Members of the Tamil Nadu Legislature during the discussions on the Annual Financial Statement of the Tamil Nadu Electricity Board for the year 1980-81. (Tamil and English).

**இணைப்பு**

(24 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் அனைவரும் 1—6—1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டு கல்வித் துறையின் நிர்வாகத்தின்கீழ் வந்து உள்ளனர். இந்நிர்வாக மாறுதலைக் கருத்தில் கொண்டு அவ்வாசிரியர்களுக்கு 31—5—1981 வரையிலான காலத்திற்கு அளிக்கப்பட வேண்டிய ஊதியம், மற்றும் படி நிலுவைகள் அனைத்தையும் 29—5—1981-க்கு முன்பாகவே அவர்களுக்கு வழங்கிவிட வேண்டும் என ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கு, ...ர்க வளர்ச்சித் துறை இயக்குநர் மூலமாக அறிவுரைகள் கொடுக்கப் ...டிருந்தன. இருப்பினும் பல்வேறு காரணங்களை முன்னிட்டு, இவ்வாசிரியர் ...ளுக்கு 1—6—1981-க்கு முன்பு ஊராட்சி ஒன்றியங்களால் அளிக்கப்பட ...வண்டிய ஊதியம் மற்றும் படி நிலுவைகள் இன்னும் அளிக்கப்படாமல் இருக்கின்றன. இவ்வாறு அளிக்கப்படாமல் இருக்கும் ஊதிய நிலுவைகள் ஊராட்சி ஒன்றியம் அளிப்பதா அல்லது கல்வித்துறை அளிப்பதா என்ற பிரச்சினை எழுந்துள்ளது. 1—6—1981-ல் இருந்துதான் இவ்வாசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டு இருப்பதால், அதற்கு முன்பான காலத்திற்கு உரிய ஊதிய நிலுவைகளை ஊராட்சி ஒன்றிய ஆணையர்களே அளிக்க வேண்டும் என்று பள்ளிக் கல்வி இயக்குநர் கருத்து தெரிவித்து உள்ளார். ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் பற்றிய அனைத்துக் கோப்புகளும் ஊராட்சி ஒன்றிய கல்விப் பிரிவில் பணிபுரிந்து வந்த அலுவலர்களுடன் உதவிக் கல்வி அலுவலகத்திற்கு 1—6—1981-ல் இருந்து மாற்றப்பட்டுவிட்டதால் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் நிலுவைகளை ஊராட்சி ஒன்றியங்கள் அளிக்க இயலாது எனவும், சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்களிடமிருந்து ஊதியம் வழங்கப்படவில்லை எனச் சான்று இதழ் (Non-Drawal Certificate

பற்று இவ்வூதிய நிலுவைகள் உதவிக் கல்வி அலுவலர்களே அளிக்கலாம் என ஊரக வளர்ச்சி இயக்குநர் கருத்து தெரிவித்து உள்ளார். ஊரக வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ள கருத்தினை ஏற்று 'ஆணை வழங்குவது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதுபற்றி கூடிய விரைவில் ஆணை வெளியிடப்படும்.

2. அரசு ஊழியர்களுக்கு குடும்ப நல ஓய்வு ஊதியத் திட்டத்தின்கீழ் அவர்கள் பணிபுரியும் காலத்தில் இறந்தால் ரூ. 10,000 அளிக்கப்படுகிறது. இதேபோல் 1—6—1981-க்கு முன்பு ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிந்து வந்த ஆசிரியர்கள் பணிபுரியும் காலத்தில் இறந்தால் அவர்கள் குடும்பத்திற்கு தொகுப்பு ஈட்டுறுதித் (Group Insurance Scheme) திட்டத்தின்கீழ் ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தில் (Life Insurance Corporation) இருந்து ரூ. 10,000 பெற்று வழங்கப்பட்டு வந்தது. 1—6—1981 முதல் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் அனைவரும் அரசு ஊழியர்களாக மாற்றப்பட்டு விட்டதால், அவர்களையும் மற்ற அரசு ஊழியர்களைப் போலவே குடும்ப நல ஓய்வு ஊதியத் திட்டத்தின்கீழ் கொண்டு வருவதா அல்லது அவர்களைத் தொடர்ந்து ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் இருக்க வைத்து இருப்பதா என்ற பிரச்சினை எழுந்து உள்ளது. இதுபற்றி கருவூலம் மற்றும் கணக்குத் துறை இயக்குநருடன் (Director of Treasuries and Accounts) பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதற்கிடையிலே, இறந்த ஆசிரியர்கள் குடும்பங்கள் அவதியுறக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு, மாவட்டக் கல்வி அலுவலர்களே (District Educational Officer) பணியில் இருக்கும் போது இறந்த ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் குடும்பத்துக்கு தொகுப்பு ஈட்டுறுதித் திட்டத்தின் (Group Insurance Scheme) கீழ் ரூ. 10,000 வழங்கவும், இதுபற்றி நிலுவையிலுள்ள எல்லாக் கோப்புகளின் Pending cases மீதும் உடனடியாக ஒப்பளிப்பு வழங்கவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வறிவுரைகளைப் பின்பற்றி 1—6—1981-க்கு முன்பும் பின்பும் பணியிலிருக்கும்பொழுது இறந்துவிட்ட ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு ரூ. 10,000 மாவட்டக் கல்வி அலுவலர்களால் வழங்கப்பட்டுவருகின்றது.

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

செவ்வாய்க்கிழமை, 1982 பிப்ரவரி 16.

மாசி 3, துன்மதி, திருவள்ளுவராண்டு-2013.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### கடலூரில் " ஜவான் பவனம் ".

* 71 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் கடலூரில் முன்னாள் இராணுவத்தினரின் நலனுக்காக " ஜவான் பவனம் " ஒன்று கட்ட அரசு திட்டமிட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கடலூரில் " ஜவான் பவனம் " அமைப்பதற்காக 8,022 சதுர அடி நிலம் நெடுஞ்சாலைத் துறையினரிடமிருந்து ரூ. 40,110-க்கு வாங்கப்பட்டுள்ளது. இதில் கட்டிடம் கட்ட ரூபாய் 12 இலட்சம் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கட்டிடத்தின் தரைத் தளத்தில் முன்னாள் போர்ப்படை வீரர்கள் சொந்தமாக வியாபாரம் செய்து கொள்ள 26 கடைகளும், முதல் மாடியில் வங்கி அல்லது அலுவலகம் அமைக்கத் தேவையான பெரியதொரு இட வசதியும், 15 சிறு அலுவலக அறைகளும் கட்டப்பட உள்ளன. கடைகள், வங்கி அல்லது அலுவலகங்கள் முதலானவற்றிலிருந்து வரும் வாடகைப் பணத்தை முன்னாள் இராணுவத்தினரின் குடும்பங்களின் மறுவாழ்விற்குப் பயன்படுத்தப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, இப்போது திட்டமிடப்பட்டுள்ள ' ஜவான் பவனம் ' எத்தனை மாதத்திற்குள் கட்டி முடிக்கப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது ? இப்போது கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டனவா ? அந்த விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 'ஜவான் பவனம்' என்னும் போர்ப்படை வீரர்களுடைய மாளிகை ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலேயும் கட்டிமுடிக்கப்பட வேண்டும் என்று திட்டமிட்டு, சேலம், திருச்சி, கோவை, தஞ்சை, வேலூர் ஆகிய இடங்களில் கட்டி முடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. கடலூரில் இந்தப் பவனம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதற்கு வேண்டிய இடம் கிடைப்பதில்தான் சிறிது காலத்தாழ்வு ஏற்பட்டது. கிரயம் இல்லாமல், அடிப்படையில் அரசாங்கத்திற்குச் சொந்தமான இடம் கிடைக்குமா என்று முயற்சி செய்தோம். ஆனால் அதற்கேற்ற இடம் கிடைக்காததால், இப்போது இந்த இடம் வாங்கப்பட்டு, அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. விரைவிலே இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தமிழகத்தின் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலேயும் 'ஜவான் பவனம்' அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எல்லா மாவட்டங்களிலேயும், அந்தந்த மாவட்டங்களின் தலைநகரங்களிலே இப்படிப்பட்ட பவனம் அமைக்கும் நோக்கம் இருக்கிறது. இந்தக் கட்டிடத்திற்குத் தேவைப்படும் இடவசதியைப் பார்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார்கள். கூடுமானவரையில் இடத்திற்குக் கிரயம் இல்லாமல், அரசாங்க இடமாக இருந்தால், செலவினத்தைக் குறைக்கலாம் என்ற அடிப்படையில் தான், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இவ்வாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார்கள். இடம் கிடைத்ததற்குப் பிறகு எல்லா மாவட்டங்களிலும் இத்தகைய 'ஜவான் பவனம்' அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு. ம. சங்கரலிங்கம் : 12 லட்சம் ரூபாய் செலவில் கடலூரில் கட்டப்படவிருக்கும் இந்த ஜவான் பவனத்திற்கு மத்திய அரசு ஏதாவது நிதியுதவி செய்கிறதா ? 'ஜவான் பவனம்' என்பதை 'இராணுவ வீரர்கள் இல்லம்' என்று மாற்றும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்கு மத்திய அரசின் பங்கு எதுவும் இல்லை. 'ஜவான் பவனம்' என்று அகில இந்திய அளவிலே அவர்கள் பெயர் வைத்து அனுப்பியிருக்கிறார்கள். தமிழிலே இந்தப் பெயரை மாற்ற இயலுமா என்று நான் கேட்டிருக்கிறேன். 'முன்னாள் போர்ப்படை வீரர்கள் மாளிகை' அல்லது 'முன்னாள் இராணுவத்தினர் இல்லம்' என்ற வகையிலே சாதாரண மக்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையிலே, இந்த



மாளிகைகள் கட்டி வாடகைக்கு விடப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வருவாய் அந்தச் சங்கத்திற்குப் பயன்படும் வகையிலே அந்தப் பெயர் தமிழிலே இருந்தால் ஏழை, சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் அளவிலே இருக்கும் என்ற யோசனையைச் சொல்லியிருக்கிறோம். அவர்களின் அடுத்த கூட்டத்திலே இதுபற்றி ஆராய கேட்டுக்கொள்ளலாம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தென்னாற்காடு மாவட்டத்திலே கடலூரிலே 'ஜவான் பவனம்' அமைப்பதற்கு வேண்டிய நிலம் ஆர்ஜிதம் செய்யப் பட்டிருப்பதாகவும், கட்டிடம் கட்ட மேற்கொண்டு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எல்லாப் பகுதிகள் என்று இல்லாவிட்டாலும் சேலம், திருச்சி, கோவை, தஞ்சை போன்ற பகுதிகளிலே அமைக்கவிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பகுதிகளிலே இப்படிப்பட்ட பவனங்கள் அமைப்பதற்கு வேண்டிய நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறதா ? தேவையான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? அந்த வேலைகள் தொடங்கப்பட்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலே குறிப்பிட்ட சேலம், திருச்சி, கோவை, தஞ்சை, வேலூர் ஆகிய இடங்களிலே இந்த இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. இப்போது அவைகள் பயன்படுத்தப் பட்டு வருகின்றன. தஞ்சாவூரிலும் சென்ற திங்களிலே திறப்பு விழா நடைபெற்று அந்த இல்லம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மற்ற மாவட்டங்களிலே தான் இதற்கான முயற்சிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. கடலூரிலே அமைக்கவிருக்கும் இந்த இல்லத்திற்குக் கூட அங்கே இருக்கும் அரிமா சங்கத்தினர் 1 லட்சம் ரூபாய் நன்கொடை வழங்க முன்வந்து அதில் 85 ஆயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறார்கள்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : 'ஜவான் பவனம்' என்பது அவ்வப்போது ஆட்கள் வந்து தங்கிப் போகிற இடமா ? அல்லது அவர்கள் நிரந்தரமாகத் தங்கும் இடமா ? ஊட்டி போன்ற இடங்களிலே அவர்களுக்கு இடம் ஒதுக்கப் பட்டும் பல்லாண்டுகாலமாகப் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. நிரந்தரமாகத் தங்கும் இடமா அல்லது வந்து தங்கிவிட்டுப் போகிற இடமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தமாதிரி திட்டமல்ல இது. முன்னாள் இராணுவத்தினரின் சங்கத்திற்கு நிதி வசதியைப் பெருக்கி, அவர்களுடைய சமூக வாழ்வை மேம்படுத்தும் திட்டம் இது. அந்த வகையிலே இது அவர்களுக்கு நிதி வசதியைத் தேடித்தரும் என்பதால் அங்கே இருக்கும் ரிசர்வ் ஃபண்ட் என்ற சேமிப்பு நிதியிலிருந்துதான் கட்டப்பட்டு வருகிறது.

இதிலிருந்து வருவாய் அதிகம் வருகிறது. அதன்மூலமாக பல்வேறு திட்டங்கள் ஈட்டி முன்னாள் இராணுவ வீரர்களை இழந்து வாடிக்கொண்டிருக்கிற விதவைகள், தாய் தந்தையரை இழந்து தவிக்கும் பிள்ளைகள் இவர்களுக்கு உதவி செய்வதற்குத் தான் இந்தத் திட்டம். இந்தச் சங்கத்திற்கு ஆண்டு தோறும் நிதி ஒதுக்கப்படுகிறது. டிசம்பர் 7 ஆம் தேதி கொடிநாள் என்று வைத்து பொதுமக்களிடத்திலிருந்தும் நிதியுதவி பெறுகிறோம். இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்திலேதான் அதிக அளவிலே 12 இலட்சம், 13 இலட்சம் ரூபாய் என்ற அளவிலே நிதி திரட்டப்படுகிறது. அப்படித் திரட்டப்படும் அந்த நிதியும் இதிலே சேர்க்கப்படுகிறது. பரிசுச் சீட்டு குலுக்கல்களிலே கூட, ஒரு குலுக்கல் மூலமாகக் கிடைக்கும் வருவாயை முன்னாள் இராணுவத்தினர்கள் நலனுக்காகத் தருகிறோம். மேலும் மத்திய அரசிடமும் ஒரு பங்கு பெற்று, மாநில அரசு மற்றொரு பங்கும் கொடுத்து, இந்த நிதியை மேலும் கூடுதலாக்கலாமா என்றும் யோசிக்கிறோம். ஆகவே, இந்தத் திட்டம் அந்தச் சங்கத்திற்கு நிதிபெருக்கும் திட்டமே தவிர வேறல்ல.

திரு. பா. ரா. தாமஸ் : 'ஜவான் பவனம்' கட்டும்போது, மாவட்டங்களிலே உள்ள இராணுவத்தினர்களுடைய எண்ணிக்கை அடிப்படையிலே கட்டப்படுகிறதா ? அல்லது பொதுவாகவே எல்லா மாவட்டங்களிலுமே கட்டுகிறோமா ? மத்திய அரசு மற்ற பல நலப் பணிகளுக்கு மானியம் வழங்குவது போல அந்தச் சங்கத்தின் இந்தப் பணிக்கும் மானியம் வழங்க வேண்டும் என்று கேட்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எல்லா மாவட்டங்களிலும் இராணுவ வீரர்கள் இருக்கிறார்கள். குறிப்பிட்ட சில மாவட்டங்களிலே அதிகமான அளவிலே இருக்கிறார்கள். அப்படிப் பார்க்கும்போது, வட ஆற்காடு மாவட்டத்திலேதான் அதிகமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். ஆனால் எல்லா மாவட்டங்களிலும் இராணுவ வீரர்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு ஜவான் பவனம் அமைக்கப்படுவதன் மூலம் அதிலிருந்து வரும் வருவாய் அவர்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் இது செய்யப்படுகிறது. மத்திய அரசின் மானியம் இப்போது இதற்குக் கிடைக்கவில்லை. அதைக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. இதற்கு முன்னர் இரண்டு தடவை முயன்றும் அவர்கள் தரவில்லை. இப்போது மத்திய பாதுகாப்பு அமைச்சராக திரு. வெங்கட்ராமன் அவர்கள் வந்திருப்பதால், அவர்களிடத்திலே முயன்று பார்க்கலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம்.



திரு. க. அருணாசலம் : இதே அடிப்படையிலே 'தியாகிகள் பவனம்' கட்டுவதற்கும் அரசு முன்வருமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவர்களும் வீரர்கள் தானே ! (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசாங்கம் அவர்களுக்கு மாதாமாதம் பணம் தருகிறதே தவிர, அவர்களுக்கென்று சங்கத்தில் எந்தப் பணமும் இல்லை. தியாகிகளின் வாழ்க்கை சீர்பெற அவர்களுக்கு ஓய்வூதியம் தரும் நிலைமையிலேதான் நாம் இப்போது இருக்கிறோம்.

(முற்பகல் 9-40)

திரு. ம. சங்கரலிங்கம் : ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும் இத்தகைய முன்னாள் இராணுவ வீரர்களின் இல்லங்கள் அமைக்கப்படுவதாகச் சொல்லப்பட்டது. அவ்வாறு அமைக்கும்போது, அந்தந்த மாவட்டங்களில் உள்ள சிறப்புப் பணியாற்றிய முன்னாள் வீரர்களின் பெருமையையும் பணியையும் பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு அவர்களின் படங்களையும் வரலாற்றையும் அங்கே மக்கள் பார்க்கும் வகையில் அமைப்பதற்கு அரசு முன்வருமா ? முன்னாள் படைவீரர்களுக்குக் கடைகள் போன்றவைகள் அங்கே அமைக்கப்பட்டாலும், இதனையும் அங்கே வைப்பதற்கு அரசு முன்வருமா ? கடலூரில் அமைய இருக்கும் இந்த இல்லம் எத்தனை சதுர அடிப் பரப்பில் அமைய இருக்கிறது ? அங்கே கட்டப்படும் கடைகளை வாடகைக்கு விடும்போது முன்னாள் இராணுவ வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்படிப்பட்ட இல்லங்கள் கட்டப்படும்போது, அங்கே முன்னாள் படைவீரர்களுக்குத்தான் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. அவர்கள் எடுத்துக்கொண்டது போக, எஞ்சி இருப்பவற்றைத்தான் பொது ஏலத்தில் விடுகிறோம். சில மாவட்டங்களில் கட்டப்படும் இல்லங்களில் ஒன்றிரண்டு அறைகளை "கெஸ்ட் ஹவுஸ் அல்லது ரெஸ்ட் ஹவுஸ்" என்ற அடிப்படையில் ஹோட்டல்கள் போன்றவற்றில் வாங்கும் வாடகையைவிடக் குறைவான கட்டணத்தில் அவர்களுக்குத் தங்குவதற்கு அளிக்கிறோம். மாவட்டங்களில் இருந்து படையில் சேர்ந்து அங்கே சிறப்புப் பணியாற்றியவர்களின் படங்களையும் வரலாற்றையும் அங்கே பொது மக்களுக்குத் தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து வரவேற்கத்தக்க ஒன்று. போர்க்களத்தில் தங்கள் உயிரை ஈந்து, சிறப்பாகப் போர்புரிந்து நாட்டுக்குச் சேவை செய்தவர்களின் படங்களையும், வரலாற்றையும் அங்கே வைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்பதையும் அரசு ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

[1982 பிப்ரவரி 16

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : முன்னாள் இராணுவத்தினர்களின் நலனுக்காக மாநில மற்றும் மாவட்ட அளவில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சரியான பிரதிநிதித்துவம் தற்போது இல்லை. இக்குறைபாட்டை நீக்க அரசு முன்வருமா ? சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இக்குழுக்களில் ஒதுக்கப்பட்ட இடங்களில்கூட அவர்கள் நியமிக்கப்படாமல் அந்த இடங்கள் காலியாக இருக்கின்றன என்பது உண்மையா ? இத்தகைய நிலைமையை அரசு மாற்றி சட்டமன்ற உறுப்பினர்களை அந்த இடங்களில் உடனடியாக நியமிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய முழுக் குறிப்பும் என்னிடம் இல்லை. இராணுவத்தில் பணியாற்றுகிறவர்கள், இராணுவத்தில் முன்னாளில் பணியாற்றி ஓய்வுபெற்றவர்கள் ஆகியோர் அக்குழுக்களில் இடம் பெற்றிருக்கிறார்கள். உத்தியோகச் சார்பற்றவர்களும் அதில் இடம் பெற்றிருக்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கோ, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ அத்தகைய குழுக்களில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக எனக்கு நினைவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமானால், அரசு அதுபற்றிக் கவனிக்கும்.

திரு. பா. ரா. தாமஸ் : நமது நாட்டின் விடுதலைக்காக சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் தலைமையில் அமைந்த இந்திய தேசிய இராணுவப்படையின் வீரர்களாகப் பிற நாடுகளிலும் சென்று பணியாற்றிய நமது வீரர்களுக்கும் இத்தகைய ஜவான் பவனங்களில் வாய்ப்புகள் வழங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரக் குறிப்பு தற்போது என்னிடம் இல்லை. உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி எழுப்பினால், விவரம் அறிந்து சொல்ல முடியும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : அண்மைக் காலங்களில் கூட நமது இராணுவ வீரர்கள் பல்வேறு வகையான வீரச் செயல்களைச் செய்திருக்கிறார்கள். எனவே அவர்களைப்பற்றிய விவரங்களைப் பாட நூல்களில் சேர்க்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ? அதன் மூலம் மாணவர்களுக்கு வீரத்தை ஊட்டும் நிலையை அரசு உருவாக்குமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் என்ன தொடர்பிருக்கிறது ? இரண்டிலும் இராணுவம் என்றிருப்பதைத் தவிர, வேறு தொடர்பு எதையும் காணோமே !



1982 பிப்ரவரி 16]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பாடப் புத்தகங்களில் பொதுவாக இராணுவத்தைப்பற்றியும் இராணுவ வீரர்களின் சேவையைப்பற்றியும் மட்டும் குறிப்பிடப்படுமே தவிர, தனித்தனியாக அனைவரின் பெயரையும் பட்டியல்போட்டு அவர்களின் வீரச் செயல்களையும் பட்டியல் போட்டுச் சொல்வது என்பது முடியாத காரியம். உலகின் மிகப் பெரிய வீரர்கள் என்ற வரிசையில் அலெக்சாண்டர், அசோகர், இராஜராஜ சோழன் போன்றவர்களின் பெயர்களை மட்டும் சொல்லலாமே தவிர, எல்லோருடைய பெயரையும் பட்டியல் போட்டுக் கொண்டிருக்க முடியாது. அப்படிச் செய்தாலும் மாணவர்கள் படிப்பார்களா என்பதும், அவற்றில் வினாக்கள் கேட்கப்படுமா என்பதும், அப்படியே கேட்டாலும் அவர்கள் விடையளிப்பார்களா என்பதும் ஐயத்திற்குரிய ஒன்றுதான். ஆனாலும் பொதுவாக இந்திய இராணுவ வீரர்களின் பெருமையையும் சிறப்பையும் எடுத்துச் சொல்லும் பகுதிகள் பாடப் புத்தகங்களில் இருக்கின்றன.

“ வலம்புரி ” சங்கு

* 72. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980 டிசம்பரில் தூத்துக்குடி அருகே கடலிலிருந்து வலம்புரி சங்கு ஒன்று கிடைத்தது உண்மையா ?

(இ) அச்சங்கு விற்பனை செய்யப்பட்டு விட்டதா ? அல்லது பாதுகாக்கப்பட்டு வருகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) சங்கு இன்னும் விற்பனை செய்யப்படவில்லை. சென்னை மீன் துறை இயக்குநர் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இச்சங்கின் மதிப்பு எவ்வளவு என்று வல்லுநர்களால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா ? இதை விற்பனை செய்வதென்று அரசு முடிவேதும் எடுத்துள்ளதா ? அல்லது இதன் அருமை பெருமைகளை மக்கள் அறியும்பொருட்டு பொருட்காட்சிச் சாலையில் வைக்கக் கருதியுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தற்போது இச்சங்கு மீனத் துறையின் இயக்குநரகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது. இதனை விற்பனை செய்வதென்று அரசு முடிவு செய்து, அதன் தன்மைகளை

எல்லாம் விளக்கமாகச் சொல்லி, டெண்டர்கள் கோரப்பட்டிருக்கின்றன. யார் அதிகமான தொகைக்கு ஏலத்தில் எடுக்கிறார்களோ அவர்களுக்கு வழங்கப்படும் முறைதான் கடைப்பிடிக்கப்படுகிறது. அந்த முறையில் தற்போது டெண்டர்கள் கோரப்பட்டு 22—2—1981 அன்று அந்த டெண்டர்கள் பிரித்துப் பார்க்கப்பட்டு பரிசீலனையில் இருந்து வருகின்றன. இதில் விரைவில் முடிவெடுத்து அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று துறைக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 1970 ஆம் ஆண்டில் இப்படிப்பட்ட சங்கொன்று கிடைத்தபோது, அந்த வலம்புரிச்சங்கு ரூ. 4,601-க்கு ஏலத்தில் போயிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இலக்கியத்தில் நல்ல பாண்டித்தியம் பெற்ற மாண்புமிகு நாவலர் அவர்கள் இந்த வலம்புரிச் சங்கின் பெருமையைப் பற்றி இங்கே விளக்குவார்களா? கண்ணே மணியே முத்தே, கண்ணின் மணியே, வலம்புரி சங்கே என்றெல்லாம் இலக்கியத்தில் வர்ணிக்கிறார்களே, அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆசிரியாக இருப்பதன் காரணமாகக் கேள்விகளைக் கேட்கிறார் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாணவரல்லவே.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பொதுவாக அனைத்துச் சங்கிலும் இடதுபக்கச் சுழிதான் இருக்கும். ஆனால் அதிசயமாக ஒன்றிரண்டில் மட்டும் வலதுபுறத்தில் சுழி அமைவதும் உண்டு. வலதுபுறமாகச் சுழி அமைந்த சங்குகளையே வலம்புரிச் சங்கு என்று சொல்கிறோம். இது அரிதாகக் கிடைப்பதால், இதன் அருமை பெருமைகளைக் கருதியே இலக்கியத்திலும் மற்றவற்றிலும் வலம்புரிச் சங்கிற்கு இடமளிக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** வலம்புரிச் சங்கென்பது பொதுவாக 10 ஆண்டுகளுக்கு ஒன்றிரண்டு வருவதாகும். அரிதாகக் கிடைக்கும் இத்தகைய வலம்புரிச் சங்குகளை ரூ. 4,000 அல்லது ரூ. 5,000க்கு விற்பனை செய்வதைவிட தற்போது மாவட்டத் தலைநகர்கள்தோறும் அரசு பொருட்காட்சிச் சாலைகளை அமைக்க இருப்பதால், அத்தகைய மாவட்ட பொருட்காட்சியிலேயே இவைகளைப் பொதுமக்கள் பார்வைக்கு வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? எப்போதோ கிடைக்கிற இத்தகைய வலம்புரிச் சங்குகளின் சிறப்பினைக் கருதி அரசு இதனைச் செயல்படுத்த முன்வருமா?



அடுத்து, தூத்துக்குடியில் தான் முத்துக்கள் கிடைக்கின்றன. அத்தகைய முத்துப் பிறக்கும் கடலில் நல்ல முத்துக்களும் சங்குகளும் உற்பத்தியாகும் வகையில் தேவையான தட்ப வெப்ப நிலைமைகளை கடலுக்கடியில் மீன் அளக் கல்லூரி மூலம் உருவாக்குவவற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்ட கருத்து நல்ல கருத்தென்பதால் அரசு அதைப் பரிசீலிக்கும். இத்தகைய வலம்புரிச் சங்குகளை விற்பனை செய்வதன் மூலம் ரூ. 4,000 அல்லது ரூ. 5,000 தான் வருகிறது. எனவே இவற்றை விற்பனை செய்வதைவிட பொருட்காட்சிச் சாலைகளில் வைக்கலாம் என்பது நல்ல யோசனையாகும். அரசு அதைப் பரிசீலிக்கும். தூத்துக்குடியில் அமைந்துள்ள மீன் கல்லூரி பல்வேறு ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறது. பக்கத்தில் உள்ள தூத்துக்குடி துறைமுகத்தினை ஒட்டியுள்ள பகுதியில் இருக்கிற மீன்களின் வகைகள், அவற்றின் தன்மை ஆகியவற்றைப்பற்றி ஆராய்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போன்ற ஆராய்ச்சியை அவர்கள் அங்கே மேற்கொண்டிருக்கிறார்களா என்பதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமானால், இத்தகைய முத்துக்களை வளர்க்கவும் சங்குகளை வளர்க்கவும் எப்படிப்பட்ட சூழ்நிலை அமைந்தால் நல்லது என்று ஆராய்வும் ஜப்பான் போன்ற இடங்களிலும் பாரசீக வளைகுடாப் பகுதிகள் போன்றவற்றிலும் எப்படிப்பட்ட நிலைமைகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று கண்டறிந்து அவற்றை நாமும் மேற்கொள்வதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

## எட்டாம் வகுப்புத் தேர்வை பொதுத் தேர்வாக நடத்துதல்.

*73. **வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) எட்டாம் வகுப்புத் தேர்வை பொதுத் தேர்வாக நடத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) எட்டாம் வகுப்புத் தேர்வைப் பொதுத் தேர்வாக நடத்தலாமா என்ற கருத்தரு பரிசீலிக்கப்பட்டு, தற்போதைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

[1982 பிப்ரவரி 16

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது, 8 ஆம் வகுப்பென்பது தொடக்கக் கல்விக்கும் இடைநிலைக் கல்விக்குமிடையேயான ஒரு Weakest Link அதாவது மிகவும் பலகீனமான இணைப்பாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே 8 ஆம் வகுப்பு மாணவர்களின் தரத்தை உயர்த்த இதுபோன்ற பொதுத் தேர்வு பயனுடையதாக இருக்கும் என்பதே ஆசிரியர்களின் கருத்தாகும். எனவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதனை மறு பரிசீலனை செய்து 8 ஆம் வகுப்புக்குப் பொதுத் தேர்வு வைப்பதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளுவாரா ?

(முற்பகல் 9.50)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆரம்பப் பள்ளிப் படிப்பை இடையிலே நிறுத்தியவர்களுக்கும், பணியில் உள்ளவர்களுக்கும் 8-வது வகுப்புக் கல்வித் தேர்வைப் பெறுவதற்கு அரிய வாய்ப்பாக இருக்கும் என்ற கருத்து இருப்பதால், எட்டாவது வகுப்பு பொதுத் தேர்வை பிரைவேட்டாக எழுத மாணவர்களை சில நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதிக்கிறோம். இப்போது இங்கே கேட்கப்பட்டிருக்கிற கேள்வி, நடுநிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கும் மாநிலம் முழுவதும் பொதுத் தேர்வு வைக்க முடியுமா என்பது. நாம் ஏற்கெனவே எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வை நடத்திக் கொண்டிருக்கிறோம். 12-வது வகுப்பு முடித்தவர்களுக்கு ஹையர் செகண்டரி பொதுத் தேர்வை நடத்திக் கொண்டிருக்கிறோம். எட்டாவது வகுப்பு பொதுத் தேர்வை நடத்த வேண்டுமென்ற நிலையைப் பரிசீலிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். பொதுத் தேர்வு நடத்துவது என்பது ஒரு சிரமமான காரியம் என்பதை நாம் இங்கே முதலிலே உணர்ந்து கொள்ள வேண்டும்.

நேற்று கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள், கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதுபற்றிச் சொல்லும்போது, ஜூலை, செப்டம்பர் ஆகிய மாதங்களிலும் சேர்க்கிறார்கள், அடுத்த ஆண்டு சனவரியில் கூட சேர்க்கிறார்கள் என்று கூறினார்கள். அதற்கெல்லாம் என்ன காரணம் என்பதை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். ஆசிரியர்கள் போராட்டம் நடத்துகிறார்கள், மாணவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். போராட்டம் நடத்துகிற காலத்தில், அவர்கள் போய் தேர்வைத் தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்கின்றபோது, ஓரிரு கல்லூரிகளில் போராட்டம் நடைபெறுவதாக இருந்தாலும், பொதுத் தேர்வாக இருப்பதால், தேர்வைத் தள்ளி வைக்கின்ற



1982 பிப்ரவரி 16]

நிலைக்கு சுயாட்சி பெற்ற கல்லூரிகள் பணிந்து செல்ல வேண்டியவர்களாக இருக்கின்றன. எங்கள் கட்டுப்பாட்டிற்கு, அதிகாரத்திற்கு அப்பாற்பட்டு நடக்கக் கூடிய பல்வேறு காரியங்களால் பொதுத் தேர்வை நடத்துவது என்பது மாணவர்களுக்கும், மற்றவர்களுக்கும் முழுமையான பலனைத் தரக் கூடிய அளவிலே இல்லை. ஆகவே இவற்றையெல்லாம் நாம் யோசித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்காக எட்டாம் வகுப்பு மாணவர்கள் போராட்டம் நடத்துபவர்கள் என்று நான் சொல்லவில்லை. யார் எந்தத் தவறு செய்து தேர்வு தள்ளி வைக்கப்பட்டாலும், அதனுடைய விளைவாக பதில் சொல்ல வேண்டிய இக்கட்டான நிலை அரசுக்குத்தான் ஏற்படுகிறது. இதையும் யோசித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். பொதுத் தேர்வை மாநில அளவிலே வைக்கலாமா அல்லது மாவட்ட அளவிலே வைக்கலாமா என்ற கருத்தும் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஏழாவது வகுப்பு வரை நடுநிலைப் பள்ளியில் இருப்பதுதான் நல்லது என்ற கருத்தும் வலுப்பெற்று வருகிறது. எட்டாவது வகுப்பு மாணவர்களுக்கு பி.டி. படித்த ஆசிரியர்கள் சொல்லித்தர வேண்டுமென்ற கருத்தும் வலுப்பெற்று வருகிறது. இந்த நிலைமையில் எட்டாவது வகுப்பை உயர்நிலைப் பள்ளியில் வைக்கலாமா அல்லது நடுநிலைப் பள்ளியில் வைக்கலாமா என்பது முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. இந்தப் பிரச்சினைகளின் அடிப்படையிலே, பொதுத் தேர்வைப்பற்றி நாம் பரிசீலனை செய்வது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்டத்திலுள்ள அதிகாரிகள் மூலமாக ஒரு Common Examination நடத்துகிறார்கள். இது ஒரு வகையிலே பொதுத் [illegible] இந்த பொதுத் தேர்வு விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய [illegible] மதிப்பீடு செய்யும் முறையை ஏற்படுத்தினால் எந்தவொரு தொல்லையும் இல்லை. அது குறித்தாவது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது பொது வினாத்தாள் மாவட்ட அளவிலே கொடுக்கப்படுகிறது, பரிட்சை நடைபெறுகிறது. அந்த விடைத் தாள்களை பொதுவான அமைப்பின் மூலமாகத் திருத்துவது, முடிவுகளை வெளியிடுவது என்ற நிலைமை வருகிறபோது, [illegible] பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஒவ்வொரு பள்ளியிலும் நடைபெறுகிற [illegible] அளவு, ஆசிரியர்களின் நிலைமை ஆகியவற்றையும் பார்க்க வேண்டி இருக்கின்றது. இருப்பினும் அதைப்பற்றிப் பரிசீலனை செய்வோம்.

[1982 பிப்ரவரி 16

திரு. க. மீனாட்சிசுந்தரம் : சில கடை நிலைப் பணிகளுக்கு குறைந்த பட்ச கல்வித் தகுதி எட்டாவது வகுப்பு இருந்தாலே போதும் என்று நிர்ணயித்திருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஆகவே எட்டாவது வகுப்போடு படிப்பை நிறுத்துகின்றவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல முறையிலே தரமான கல்வி அமைய பொதுத் தேர்வை நிச்சயமாக ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் இப்போது பரிசீலிக்காவிட்டாலும், மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

எழாவது வகுப்பு வரை நடுநிலைப் பள்ளியில் இருப்பது நல்லது என்ற கருத்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட முடிவு எடுக்கும்போது, அதற்குரிய அனைத்து ஆசிரியர்கள் இயக்கங்களையும் அழைத்து வைத்துப் பேசி அதற்குப் பின்னாலே முடிவு எடுக்க முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதை நான் கடந்த ஓரிரு ஆண்டுகளாகவே சொல்லிக்கொண்டு வருகிறேன். காரணம், இதுகுறித்து மற்றவர்களும் கருத்து தெரிவிக்க வேண்டும் என்பதற்காகத்தான். அரசு தன்னிச்சையாக முடிவு எடுக்கிறது என்ற நிலைமைக்கு மாறாக இந்தக் கருத்தை நான் இந்த மன்றத்திலே பல தடவை சொல்லியிருக்கிறேன். அது பற்றி மற்றவர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வெளிப்படையாகப் பேசும்போதுதான் அதனுடைய உண்மை நிலைமை வெளிவரும். இந்தப் பிரச்சினையைப் பரிசீலிக்கும்போது, ஆசிரியர்களுடைய நன்மையை மட்டும் கருத்திற்கொண்டு பரிசீலித்தால் தவறான முடிவுக்கு வருவோம். மாணவர்களுடைய நன்மையையும், சமுதாயத்தினுடைய நன்மையையும் அடிப்படையாக வைத்து இந்தப் பிரச்சினையைப் பரிசீலிக்க வேண்டும். அப்படிப் பரிசீலித்து முடிவு எடுக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களுடைய கருத்துக்களையும் தெரிந்துதான் முடிவு எடுக்கப்படும்.

திரு. பா. ரா. தாமஸ் : தற்போது பத்தாம் வகுப்பிலும், 12 ஆம் வகுப்பிலும் பொதுத் தேர்வுகளை நடத்துகிறோம். அந்த நிலையை மாற்றி ஏழாம் வகுப்பிலும், 12 ஆம் வகுப்பிலும் பொதுத் தேர்வை நடத்தும் நிலையை உருவாக்கினால், கல்வியின் தரம் உயரும். அந்த அடிப்படையிலே மாற்றியமைக்க கல்வியமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1982 பிப்ரவரி 16]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பரிசீலிக்கும்போது, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ம. சங்கரலிங்கம் : காலந் தாழ்த்தி கல்வியாண்டு தொடங்குவதற்கு ஒரு காரணம் மாணவர்களும், ஆசிரியர்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது தான் என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் சொல்லியிருக்கிறார்கள். யார் போராட்டத்தில் ஈடுபட்டாலும், குறித்த காலத்தில் தேர்வு நடைபெற்று, குறித்த காலத்தில் கல்லூரிகள் தொடங்கப் படும் என்ற உறுதியான முடிவை பல்கலைக் கழகமும், அரசாங்கமும் எடுக்குமானால், மாணவர்களும் மற்றவர்களும் தாங்கள் எழுப்புகின்ற கோரிக்கையின் முறையைத் திருத்திக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். இதை அரசு எடுக்குமா ?

மேலும் எட்டாவது பொதுத் தேர்வைப் பொறுத்த வரையில் மாநில அளவிலே நடத்தாவிட்டாலும், மாவட்ட அளவிலே இல்லாவிட்டாலும்கூட, கல்வி மாவட்ட மட்டத்திலாவது நடத்த அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது மாவட்ட அளவிலே பொது வினாத்தாள் தயாரித்து தேர்வை நடத்துகிறோம். அந்தந்தப் பள்ளியிலேயே திருத்தப்பட்டு முடிவு போடப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும் திரு. ம. சங்கரலிங்கம் அவர்களும், மாவட்ட அளவிலாவது அல்லது கல்வி மாவட்ட அளவிலாவது தேர்வை நடத்தி விடைத் தாள்களை பொது அமைப்பின் மூலமாகத் திருத்தி முடிவை வெளியிட முயற்சி மேற்கொள்ளப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். இந்தக் கருத்தைப் பரிசீலிக்கலாம்.

கல்லூரிகளைப் பொறுத்த வரையில், குறித்த காலத்திலே மாணவர்களைச் சேர்க்க முடியாத காரணத்தால், 18 இடங்கள் காலியாக இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், இது அரசின் தீவிரமான பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பல்கலைக் கழகம் சம்பந்தப்பட்டவர்களிடத்திலே பேசிக் கொண்டிருக்கிறோம். அடுத்த ஆண்டு முதல் மாணவர்களைச் சேர்ப்பது, என்ஜினியரிங் கல்லூரியாக இருந்தாலும் சரி, மெடிக்கல் கல்லூரியாக இருந்தாலும் சரி, கலைக் கல்லூரியாக இருந்தாலும் சரி, குறிப்பிட்ட காலத்திற்குள் நடைபெற்றாக வேண்டும்; குறிப்பாக ஜூலை மாதத்திற்குள் நடைபெற்றாக வேண்டும். அப்படிச் சேர்க்க முடிய

வில்லையென்றால், முதல் செமஸ்டரை சனவரியிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். சனவரியிலிருந்துதான் நடத்த வேண்டுமென்ற நிலைமைக்கு மற்றவர்கள் வந்து சேர வேண்டும். "எந்தக் காரணத்தைக் கொண்டும் தேர்வுகளைத் தள்ளி வைக்க மாட்டோம்" என்ற முடிவைப் பல்கலைக் கழகம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்களும் அதுதான் சரியான முறை என்று சொல்லியிருக்கிறார்கள். தேர்வைத் தள்ளி வைப்பதால் விடைத் தாள்களைத் திருத்துவது, முடிவை வெளியிடுவது ஆகியவற்றில் தாமதம் ஏற்படுவதால், மாணவர்களுக்கு பாதகமாக இருக்கிறது என்ற நிலைமையில், குறித்த காலத்தில் யார் வந்தாலும் வராவிட்டாலும், தேர்வு நடைபெறும் என்ற கட்டுப்பாட்டைக் கொண்டு வரவிருக்கிறார்கள். ஆகவே பல்கலைக் கழகம், அரசு, கல்வித் துறை ஆகிய எல்லோரும் சேர்ந்து அடுத்த ஆண்டிலிருந்து குறிப்பிட்ட காலத்தில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வார்கள். குறிப்பிட்ட கால வரம்பிற்குள் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள முடியாவிட்டால், அந்த இடங்கள் காலியாகவே இருக்கும். அதற்குப் பிறகு சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என்ற கட்டுப்பாட்டைக் கொண்டு வந்தால்தான், ஓரிரு ஆண்டுகளிலாவது இந்தப் பிரச்சினைகள் தீரும்.

### எம். பி. எட். பெற்ற உடற்பயிற்சி ஆசிரியர்கள்.

* 74.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உடற்பயிற்சி ஆசிரியர்கள் எம்.பி. எட். (M.P.Ed.) கல்வித் தகுதி பெற்றிருந்தால், ஊக்க ஊதிய உயர்வு அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) உயர்நிலைப் பள்ளிகளில் ரூபாய் 350-10-420-15-600 சம்பள விகிதத்தில் பணியாற்றும் உடற் பயிற்சி ஆசிரியர்களுக்கு பி.பி.எட். தேறினால் இரு ஊக்க ஊதியங்களும், எம்.பி.எட். தேறினால் மேலும் இரண்டு ஊக்க ஊதியங்களும், மற்றும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் ரூபாய் 450-20-590-25-740-30-800 சம்பள விகிதத்தில் பணியாற்றும் உடற்பயிற்சி இயக்குநர்களுக்கு எம்.பி.எட். தேறினால் இரண்டு ஊக்க ஊதியங்களும் அளிக்கலாம் என ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.



(முற்பகல் 10-00)

திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, உடற்பயிற்சியில் முதுகலைப் பட்டம் பெற்ற உடற்பயிற்சி இயக்குநர்கள் மேல்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றும்போது, அவர்களுக்கு ஆரம்ப ஊதியம் ரூபாய் 600 தான் கொடுக்கப்படுகிறது. ஆனால் மற்ற பாடங்களில் முதுகலைப் பட்டம் பெற்ற முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஊதிய விகிதம் ரூபாய் 675-ல் ஆரம்பிக்கப்படுகிறது. இவர்களுக்கு அந்த நிலையில் கொடுக்கப்படவில்லை. மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு அதிக ஊதியம் கொடுக்கப்படும் அதே அடிப்படையில் இவர்கள் ஊதியத்தையும் ரூபாய் 600-லிருந்து ரூபாய் 675-க்கு உயர்த்த வேண்டுமென்று முதுகலைப் பட்டம் பெற்ற உடற்பயிற்சி ஆசிரியர்கள் கோருவதால் பிரச்சினை வருகிறது. அதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. செ அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நாம் எல்லாம் ஆராய்ந்துதான் அதிலே ஒரு முடிவிற்கு வந்திருக்கிறோம். எம்பி.எட், எம்.ஏ.எம்எட் என்பது இரண்டும் முதுகலைப் பட்டம்தான். அப்படிப் பேசுகின்றபோது, இரண்டும் சமம் போலத் தெரியலாமே தவிர, எம்.பி.எட். ஒரு ஆண்டு காலம் படிக்கின்ற முதுகலைப் பட்டம். எம்.ஏ.எம்.எட்., எம்.எஸ்ஸி. எம்.எட். என்பது இரண்டு ஆண்டுக் காலம் படிக்கின்ற முதுகலைப் பட்டம். அந்த ஒரு ஆண்டுக் காலம் அதிகமாகப் படிக்கின்ற வித்தியாசம் இருக்கிறது. அதையெல்லாம் நாம் பார்க்கிறோம். அது மட்டுமல்ல, ஊக்க ஊதியம் பற்றிப் பேசுகிறபோது புதிய திட்டம் அளிப்பதற்கான ஒரு கருத்து பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப்பட்டு வருகிறது. அது வருகிறபோது கவனிக்கலாம்.

திரு. க மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்த எம்.பி.எட்.. க்கு இரண்டு ஊக்க ஊதிய உயர்வும், பி.பி.எட். க்கு இரண்டு ஊக்க ஊதிய உயர்வும் தரப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய பள்ளிக் கல்வி இயக்குநருடைய ஆணை எண் 186474/பி.டி.1/67 நாள் 23—1—1969 படி, இடைநிலை ஆசிரியர்கள் பி.ஏ. படித்து அதற்குப் பின்னாலே பி.பி.எட். படித்திருக்கின்றபோது, இன்றைக்கு அவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு இல்லை என்று ஆணையிடப்பட்டிருக்கிறது. பி.ஏ. படித்து அதற்குப் பின்னாலே பி.எட். படித்தால், அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. பி.ஏ. படித்துவிட்டு அதற்குப் பின்னாலே பி.பி.எட். படித்தவர்களுக்கு அது அளிக்கப்படவில்லை. அது பள்ளி இயக்குநர் அலுவலகத்திலே மறுக்கப்படுகிறது என்பதை அரசு அறியுமா? அந்த ஆணையை ரத்து செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்த ஊக்க ஊதியம் என்பது அவர்கள் செய்கின்ற தொழில் தொடர்பான தகுதியை உயர்த்திக்கொள்கின்ற போது தரப்படுகின்ற ஒன்றாகும். பி.எட். என்பது செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் தங்களுடைய ஆசிரியப் பயிற்சித் தகுதியை உயர்த்திக்கொள்கின்ற ஒரு பட்டமாகும். பி.பி.எட். என்பது உடற்பயிற்சி ஆசிரியர்களுடைய தகுதி. ஆக இவர்கள் செய்கின்ற தொழிலுக்கு நேரடியாக அவர்கள் படிக்கின்ற பட்டப் பயிற்சி பயன்படாது என்ற நிலையிலேதான் இப்படி ஊக்க ஊதிய உயர்வு தரப்படுவதில்லை. ஆனால் அந்தப் பிரச்சினை பற்றி வேறு ஒரு திட்டத்திலே பரிசீலனை செய்து கொண்டிருக்கின்ற காரணத்தினால், இப்போது அதைப்பற்றி நாம் முடிவு எடுக்க முடியாது.

### குடும்பநல நிதியை வருங்கால வைப்புநிதியில் வரவு வைத்தல்

* 75 **வினா.—திரு. ம. சங்கரலிங்கம் & திரு. பா' ரா. தாமஸ் : மாண்புமிகு** கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) திருநெல்வேலி, தென் கல்வி மாவட்டத்தில் நாங்குனேரி கல்விச் சரகத்தில் குடும்ப நலத் திட்டத்திற்கு ஆசிரியர்களிடம் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை, அவர்களுடைய வருங்கால வைப்பு நிதியில் சேர்க்கப் பட வேண்டுமென்று ஆணை பிறப்பித்து இருந்தும் 15—6—1980 வரை சேர்க் கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், கால தாமதத்திற்குக் காரணம் யாது ?

(உ) இதனால் பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) அரசு மற்றும் தனியார் பள்ளிகளைப் பொறுத்த வரையில் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் ஆசிரியர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகைகள் கால தாமதம் இன்றி அவர்களின் வருங்கால வைப்பு நிதியில் சேர்க்கப்பட்டுவிட்டன. ஊராட்சி ஒன்றிய பள்ளிகளைப் பொறுத்த மட்டில் இப்பணி 14—7—1980'ல் தான் முடிக்கப் பெற்றது. ஏனெனில் ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர் களைப் பொறுத்த மட்டில் குடும்பநலத் திட்டத்தின் கீழ் 1—4—1974 முதல் 30—9—1974 வரை மட்டுமே அவர்களது ஊதியத்திலிருந்து ஊராட்சி நிர்வாகங்களால் பிடித்தம் செய்யப்பட்டது. 1—10—1974 முதல் 31—1—1975 வரையில் உள்ள காலத்திற்கு இச்சந்தாவை அரசே ஏற்றுக் கொண்டிருந்த தால், அரசு ஏற்றுக் கொண்ட காலத்திற்கு ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும்





உள்ள பணத்தை ஊராட்சி ஒன்றியங்கள் திரும்பப் பெற்று கஜானாவின் மூலம் அவர்களின் வருங்கால சேமிப்பில் சேர்ப்பதற்கு நிர்வாகக் காரணங் களால் தாமதம் ஏற்பட்டுள்ளது.

(உ) 212 பேர்.

**திரு. பா. ரா. தாமஸ்:** இந்த அரசு ஆணை எண் 516, தேதி 3—5—1978ல் வழங்கப்பட்டிருந்தும் கூட, இந்தத் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு இது வழங்கப்படவில்லை. இந்த வைப்பு நிதியில் 13 மாதங்கள் செலுத்தியிருக்கி றார்கள். அதில் ரூபாய் 13 குறைத்துவிட்டு ரூபாய் 117 வைப்பில் வைத்து, அதற்கு 5 ரூபாய் வட்டி சேர்த்திருக்க வேண்டும். அப்படிச் சேர்க்கப்பட்டு, அந்தத் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** திருநெல்வேலி, நாங்குனேரி கல்விச் சரகத்தில் அரசுப் பள்ளிகள், தனியார் பள்ளிகள் இவைகளிலெல்லாம் இதில் காலதாமதம் இல்லாமல், நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் கூறியுள்ளார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** திருநெல்வேலி கல்வி மாவட்டத்தில் 212 பேர் கள் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணியாற்றுகின்றவர்கள் பாதிக்கப்பட் டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர் களுடைய பிரச்சினை தீர்ந்துவிட்டதா ? இன்னும் எத்தனை பேர்களுக்குப் பாக்கி இருக்கிறது ? சம்பந்தப்பட்ட ஆணையாளர்கள் அவர்களுடைய பணியைச் சரியாகச் செய்யாததால் அங்கே காலதாமதம் ஏற்பட்டிருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. அது சம்பந்தப்பட்ட ஆணையாளர்கள் யார் யார் என்று அறிந்து, மாவட்டக் கோட்ட ஆட்சியாளர் மூலம் தக்க நட வடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கால தாமதத்திற்கு அதிகாரிகள் காரணமாக இருப்பார்களானால், அதைப்பற்றி விசாரித்து சம்பந்தப்பட்ட துறைகள் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளை அரசே எடுத்துக்கொண்ட காரணத்தினால், அவர்கள் சம்பந்தப் பட்ட ரிக்கார்ட்களை நாம் எடுத்துக் கொண்டிருப்பதாலும், இந்த நிர்வாக மாற்றங்கள் காரணமாகவும் அது ஒரு இடையூறாக இருக்கிறது. இன்னும் ஓராண்டு காலத்தில், இந்தப் பிரச்சினை மட்டுமல்ல, வேறு சில பிரச்சினை களிலும் தீர்வு காணவேண்டியிருப்பதால், நாம் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி, போராவூரணி

* 76 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பட்டுக்கோட்டை கல்வி மாவட்டம், பேராவூரணி அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் வயல் மட்டத்திற்கும் கீழே இருப்பதால் கட்டிடத்திற்குள் அநேகமாக எல்லாக் காலங்களிலும் தண்ணீர் தேங்கி நிற்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) அறியும்.

(இ) இப்பள்ளியின் தென்புறமும் கீழ்ப்புறமும் உள்ள குட்டையை நிரப்பி விளையாடும் இடமாக அமைத்தால் பள்ளிக் கட்டிடத்தில் தண்ணீர் தேங்க வாய்ப்பில்லை எனக் கருதி ரூபாய் 89,000 செலவில் குட்டையை நிரப்ப மதிப்பீடுகள் பெறப்பட்டன. இப்பள்ளியின் இந்தத் தேவையை வருமாண்டின் (1982-83) நிதியொதுக்கத்திற்கெதிராகக் கருதுமாறு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இது ஒரு குறிப்பிட்ட பள்ளியைப்பற்றிக் கேட்கப்பட்டிருக்கின்ற கேள்வியாகும். ஆனால் ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்வேறு பள்ளிகளில் இந்த நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே அரசு கல்வித் துறை அதிகாரிகள் மூலமாக ஓரளவுக்கு நடவடிக்கை எடுத்து, எந்தெந்தப் பள்ளி இப்படி பாதிக்கப்பட்டிருக்கின்றது என்ற புள்ளிவிவரத்தைச் சேகரித்து அதற்கான நிதியை ஆண்டுதோறும் ஒதுக்கி குறிப்பிட்ட பள்ளி களையாவது, அவசரத் தேவைகள் உள்ள பள்ளிகளையாவது அவ்வப்போது சீர்படுத்தும் முறையை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் முன்பே கூறியதுபோல, பள்ளிகளுக்கு பெருமளவுக்குக் கட்டிடம் இல்லாத குறை பல்வேறு மாவட்டங்களிலே இருந்துகொண்டு வருகிறது. கடந்த 30 ஆண்டுக்காலத்தில் பள்ளிகள் ஆரம்பிப்பதில் காட்டிய ஆர்வத்திற்குச் சமமாக இந்தப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதில் நாம் ஆர்வம் காட்டவில்லை. ஆகவே அந்த 30 ஆண்டுக்கால குறைபாட்டை நாம் இப்போது தீர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த ஆட்சியிலே, மாண்புமிகு புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் காலத்திலே தொடக்கப்



பள்ளி சீரமைப்புத் திட்டம் ஒன்று வைத்திருக்கிறோம். இன்றைக்கு நூற்றாண்டு நிறைவுத் திட்டத்தின் மூலம் அந்தத் தொடக்கப் பள்ளிகளுக்கு உள்ள குறைபாட்டை அறவே நீக்க வேண்டுமென்ற அளவில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். அதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களும் அறிவார்கள். அது போலவே உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் சம்பந்தமாக ஒரு சிறப்புத் திட்டம் வேண்டும் என்பதற்கு ஆய்வு இருக்கிறது. அதுபற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. இது குறித்து டெல்லியிலே நடைபெற்ற மாநில அமைச்சர்கள் மாநாட்டில், அங்கே இருக்கின்ற மத்திய கல்வி அமைச்சரும் மற்றவர்களும் இதற்காக நிதி நிறுவனங்களோடு பேசி ஏதாவது ஒரு சிறப்பான உதவி செய்ய முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். அது பற்றிப் பேசியிருக்கிறார்கள். எல்.ஐ.சி., ரிசர்வ் வங்கி இவர்களிடம் இதைப் பற்றிப் பேச வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். மத்திய மந்திரி சபை இதில் ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டும். இதுபோன்ற கட்டிடங்களுக்குப் பணம் தருவது ஒரு சிறப்பான முதலீடு என்று மத்திய மந்திரி சபை முடிவு எடுக்குமானால், இந்த அரசுக்கு உதவி செய்வதாக இருக்கும். அந்த முயற்சியை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு அங்கத்தினர் அவர்களும் அதை உணருவார்கள் என்று கருதுகிறேன். அந்த அடிப்படையிலேதான் கருத்துக்கள் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பள்ளியைப் பொறுத்தவரையிலும், இப்போது ரூபாய் 89 ஆயிரம் செலவு மதிப்பீடு போடப்பட்டுள்ளது. அந்தப் பணியை தொடங்குவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. இதற்கு ஒரு காலவரையறை நிர்ணயித்து அதற்குள் முடிக்க அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 1982-83 நிதி ஒதுக்கத்திற்குள்ளாக நடவடிக்கை எடுக்குமாறு நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அந்தக் கால அளவிற்குள் அவர்கள் செய்து முடிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : இந்தப் பட்டுக்கோட்டை கல்வி மாவட்டம், குட்டைகளை நிரப்ப திட்டமிருப்பதாகச் சொல்கிறார்கள். இப்போது பேராவூரணி அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் வயல் மட்டத்திற்கும் கீழே இருப்பதால், கட்டிடத்திற்குள் அநேகமாக எல்லாக் காலங்களிலும் தண்ணீர் தேங்கியிருப்பதால், இப்பள்ளியின் தென்புறமும் கீழ்ப்புறமும் உள்ள

குட்டைகளை நிரப்ப திட்டமிருப்பதாகச் சொல்கிறார்கள். இப்போது பள்ளியை ஒட்டியிருக்கின்ற வயலிலே நஞ்சை பயிரிடாமல் புஞ்சை பயிர் செய்து பயிரிடுவதற்கு ஏற்ப வடிகால் முறையைத் தக்கபடி மாற்றலாம். அந்த முறையில் பி.டபிள்யூ.டி. துறையை அணுகி தக்க ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் யோசனையை பரிசீலனையில் எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## Wakf Board

* 77. *Q*. THIRU J. M. MIAKHAN : Will the Hon. the Minister for Irrigation be pleased to state :

(*a*) whether it is a fact that the majority of the Members of Tamil Nadu Wakf Board, have expressed want of confidence in the Chairman ; and

(*b*) if so, whether the Chairman has resigned his post and whether the Government reconstituted the Board?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** (அ) ஆம்.

(இ) போர்டு தலைவர் ராஜிநாமா செய்யவில்லை. ஆனால் நிர்வாக காரணங்களுக்காக 18—9—1981 முதல் 18—10—1981 வரை வக்ஃப் போர்டு கலைக்கப்பட்டது. பிறகு திரும்பவும் அது அமைக்கப்பட்டு விட்டது.

THIRU J. M. MIAKHAN : May I know the reason why the Chairman was reained and why the assurance given on the floor of the House that it will be re-constituted and regional Wakf Boards will be constituted and separate Courts will be formed for dealing with such cases has not been implemented? Will the Government give an explanation, Sir?

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவரவர்களே, திரும்பவும் வக்ஃப் போர்ட் அமைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே 'ரீகான்ஸ்டிடியூட்' செய்யப்பட்டுவிட்டது. அதனால், முன்னால் இருந்தவர்கள் அதில் இடம்



பெறக்கூடாதென்று அர்த்தம் வராது. 'ரீகான்ஸ்டிடியூட்' செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் ரீஜினல் கமிட்டி பற்றி சொன்ன போது, அரசுத் தரப்பிலே அது ஒரு நல்ல யோசனை, அதைப் பரிசீலிக்கலா மென்று சொல்லி, அதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறதென்று சொல்லியிருக்கிறோம். அது குறித்து வக்ஃப் போர்ட் தலைவரிடம் கேட்டிருக்கிறோம். ஆங்காங்கே வழக்குகள் அதிகமாக வருவதால், ஒவ்வொரு பகுதியிலும் வட்டாரக் குழுக்கள் அமைத்து, அவர்கள் அதைப் பரிசீலித்து, மத்திய குழுவிற்கு பரிந்துரைகளோடு அனுப்பினால், வழக்குகளை விரைவாகப் பரிசீலிக்க வாய்ப்பிருக்கும் என்பதால், அரசு அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

THIRU J. M. MIAKHAN : Sir, the Hon. Minister has not answered my question . While re-constituting the Wakf Board, the Government have retained the former Chairman. Is there any special reason for retaining the Chairman, in spite of protest from his own community?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** வக்ஃப் போர்ட் தலைவர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொடுத்தவர்களிலே ஒருவர் இப்போது திரும்பவும் அதிலே இடம் பெற்றிருக்கிறார். அதனால் தலைவரை மட்டும் திரும்பவும் போட்டிருக்கிறோமென்பது சரியான தகவல் அல்ல. முன்னாலே உறுப்பினர்களாக இருந்தவர்கள் 3 பேர்கள் இப்போது அதிலே இடம் பெற்றிருக்கிறார்கள். முன்னால் இருந்த உறுப்பினர்கள் தலைவர் மீது நம்பிக்கை இல்லை என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இருக்கிற விதிகளிலே, அப்படி நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவர இடமில்லை. அவர்களிடையே கருத்து வேறுபாடு இருந்தால், அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து, குற்றச்சாட்டுகளை எழுதிக் கொடுத்து, நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். அப்படி இல்லாமல் தனியாக, போட்டிக் குழு இயங்குவதுபோல் நடந்ததால், வேறு வழியில்லாமல் நிர்வாக நலனை முன்னிட்டு அதைக் கலைக்க வேண்டி வந்தது.

[1982 பிப்ரவரி 16

### பொன்னணி நீர்த்தேக்கம்.

* 78 வினா.—திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், பொன்னணி நீர்த்தேக்கத்தை விரிவுபடுத்தி, கூடுதல் நீர் வரத்துக்கு குடகனாறு அணையின் உபரி நீரைக் கொண்டுவரும் திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் (Investigation) உள்ளதா?

(இ) இல்லையெனில், இத்திட்டத்தை அரசு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : (அ) பொன்னணியாறு நீர்த் தேக்கத்தை விரிவுபடுத்தி, கூடுதல் நீர்வரத்துக்கு குடகனாறு அணையின் உபரிநீரைக் கொண்டுவரும் திட்டம் எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

(இ) தற்போது தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ள திட்டங் களின் அறிக்கை தயாரிக்கப்பட்ட பின்பு, இத்திட்டம் தலைமைப் பொறி யாளரால் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 79-ம், 80-ம் ஒத்தி வைக்கப்படுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. கவன ஈர்ப்பு

### (1) கிராம மக்கள் மண்ணெண்ணெய் போதிய அளவு கிடைக்காமல் அல்லல்படும் நிலை குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்—

“ மின் தட்டுப்பாடு நகரப் பகுதிகளைவிட கிராமப் பகுதிகளிலே அதிக மாக ஏற்பட்டு விளக்கெரிக்க மண்ணெண்ணெய் கிராம மக்களுக்கு அதிக மாகத் தேவைப்படும் நிலையில் அரசு ஒரு குடும்பக் கார்டுக்கு முதல்நிலை



[illegible] பிப்ரவரி [illegible] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

நகராட்சிப் பகுதியில் மாதம் ஒன்றுக்கு 10 லிட்டர்களும், ஏனைய நகராட்சி களில் 6 லிட்டர்களும், நகரப் பஞ்சாயத்துக்களில் 5 லிட்டர்களும், கிராமப் பஞ்சாயத்துக்களில் 3 லிட்டர்களும் மட்டுமே வழங்குவதாலும் கிராம மக்கள் மண்ணெண்ணெய் போதிய அளவு கிடைக்காமல் அல்லல்படும் நிலை குறித்து ”

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, கிராமப் பகுதிகளிலே மின் தட்டுப்பாடு மிக அதிகம். நகரப் பகுதிகளிலேதான் மின் துறை நன்றாகக் கவனித்துக்கொண்டிருக்கிறது. கிராமப்பகுதிகளிலே திட்டமிடப் படாமலே, அறிவிப்பு தராமலே அவ்வப்போது பல மணி நேரம் மின் தட்டுப் பாடு ஏற்படுகிறது. என்னுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே, கிராமங் களிலே இருக்கிறவர்களுக்கு மண்ணெண்ணெய் அதிகமாக வழங்க வேண்டும், நகரப் பகுதிகளிலே வழங்குவது போலவாவது வழங்க வேண்டுமென்று கேட் டிருக்கிறேன். அறிக்கையிலே அது குறித்து தெளிவான விடையில்லை. எனவே கிராம மக்களுக்கு மண்ணெண்ணெய் அதிகப்படுத்தி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கிராமப் பகுதிகளிலும், நகரப் பகுதிகளிலும் ஏற்கெனவே மண்ணெண்ணெய் எவ்வளவு செலவாகிறது என்ற கணக்கை வைத்துத்தான், பகிர்ந்து கொடுக்கிறோம். அந்த அளவிலே சென்னை நகரம் மற்றும் மாவட்டத் தலைமை நகராட்சி களிலே 10 லிட்டர்கள் என்றும், மற்ற நகராட்சிப் பகுதிகளிலே 6 லிட்டர்கள் என்றும், நகரப் பஞ்சாயத்துக்களிலே 5 லிட்டர்கள் என்றும், கிராமப் பகுதி களிலே 3 லிட்டர்கள் என்றும் வழங்குகிறோம். நகரப் பகுதிகளிலே மின் சாரத்தைப் பயன்படுத்தினாலும்கூட, அங்கேயும் ஸ்டவ் போன்றவற்றுக்கு மண்ணெண்ணெய் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுவதால், அவர் களுக்கும் தேவைப்படுகிறது. எனவே எந்தப் பகுதியில் எவ்வளவு வாங்கு கிறார்கள் என்ற கணக்கை வைத்துத்தான் கொடுக்கிறோம். ஒரு குறிப் பிட்ட அளவே மத்திய அரசு, மாநில அரசுக்கு ஒதுக்குகின்ற காரணத்தால், அதைப் பகிர்ந்து கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் அந்த அளவை அதிகரித்தால், கிராம மக்களுக்கும் அதிகமாகக் கொடுக்கலாம். கொடுப்பதை [illegible] எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்கிறோம்.

---

@ [illegible] இணைப்பு I-இல் அச்சிடப்பட்டுள்ளது.

[1982 பிப்ரவரி 16

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இப்போது கிராமப் பகுதிகளில் மண்ணெண்ணெய் அடுப்புகளும், மற்ற அடுப்புகளும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் நகரப் பகுதிகளிலே கேஸ் அடுப்பைப் பயன்படுத்துகிறார்கள். இது கிராமங்களிலே கிடையாது. எனவே கிராமப் பகுதிகளில் இருக்கிற மக்களுக்கு மண்ணெண்ணெய் அதிகமாகத் தேவைப்படுகிறது. எனவே இதைச் சமமாக அல்லது சீராக வழங்க ஒரு ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டிருப்பதாக இருக்கிறது. அந்த ஆலோசனைக் குழு இதைப் பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது நாம் வகுத்திருக்கிற திட்டத்தின் அடிப்படையில் ஒரு மாதத் தேவை 56,124 கிலோ லிட்டர்களாகும். அதைவிடக் குறைந்த அளவிற்கே நமக்குக் கிடைக்கிறது. நவம்பர் 1981 முதல் பிப்ரவரி 1982 வரை மாதம் ஒன்றுக்கு 44,975 கிலோ லிட்டர்களைப் பகிர்ந்து கொடுக்க வேண்டி வந்தது. மார்ச் 1982 முதல் ஜூன் 1982 வரை மாதம் ஒன்றுக்கு 41,248 கிலோ லிட்டர்களைத் தர இருக்கிறது. இதன் காரணமாக அதிகமாகக் கொடுக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது போன்று, இப்படிப்பட்ட பிரச்சினைகளை ஆராய தனிக் குழு போடப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்தை வேண்டுமானால் மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, எந்த அளவிற்குக் கொடுக்கலாமென்று ஆராய்ந்து, சில முடிவுகளை எடுக்கலாம்.

(2) 1982 பிப்ரவரி மாதம் திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் தாலூகா செல்லப்பட்டி கிராமத்திலுள்ள வெடி மருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் 6 சிறுவர்கள் இறந்தது குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :

“1982 பிப்ரவரி மாதம் திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் தாலூகா செல்லப்பட்டி கிராமத்தில் ஏற்பட்ட வெடி மருந்து தொழிற்சாலை விபத்தில் ஆறு சிறுவர்கள் இறந்துள்ளனர். இதனால் அவ்வட்டாரத்தில் பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து”

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

@148-149 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1982 பிப்ரவரி 16]

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவரவர்களே, விவர அறிக்கையின் மூலம் தொழிற்சாலை, தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படவில்லை என்று தெரிகிறது. அதற்குக் காரணம் மின் இணைப்பு கிடைக்கவில்லை, அதனால் பதிவு செய்யவில்லை என்று சொல்லப்படுகிறது. இப்படி வெடி மருந்துகளிலிருந்து பல பொருள்களைச் செய்யும் அமைப்புகள் பதிவு செய்யப்படாமல் ஆங்காங்கே இருப்பதை சட்ட விரோதமாக்குவதற்கு ஏதாவது சட்டம் இயற்றப்பட இருக்கிறதா ? அங்கே 15 வயதிற்குட்பட்டவர்கள் 6 பேர்கள் இறந்திருக்கிறார்கள். அவர்களை வேலையில் அமர்த்திக் கொள்ள என்ன விதி இருக்கிறது ? அவர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது ? அவர்களுக்கு உதவி செய்ய முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அவர்களுக்கு என்ன உதவி செய்யப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மின்சாரம் கொடுக்கப்படாததால் என்பதல்ல. 10 பேர்கள் வேலை செய்து, மின்சாரம் உபயோகப்படுத்தினால், அது பேக்டரி ஆக்டின்கீழ் வரும். 20 பேர்கள் வேலை செய்து, மின் இணைப்பு இல்லையென்றாலும் பேக்டரி ஆக்டின்கீழ் வரும். அங்கே 15 பேர்கள்தான் வேலை செய்கிறார்கள். மின் இணைப்பு இல்லை. அதனால் பேக்டரி சட்டத்தின்கீழ் வரவில்லை. இளைஞர்கள் வேலை செய்வதுபற்றி அடிக்கடி பரிசோதனை செய்யப்படுகிறது. பிராசிக்கியூஷனும் செய்யப்படுகிறது. இந்த வழக்கைப் பொறுத்தவரையில், ஜயந்தி பையர் ஒர்க்ஸ் மேலாளர் திரு. மகாலிங்கம் கைது செய்யப்பட்டு, ஜாமீனில் உள்ளார். திருவேங்கடம் காவல் நிலைய குற்ற எண் 15/82 இ. பி. கோ. 286, 338, 364-ஏ இதனுடன் இந்திய வெடிமருந்துச் சட்டம் 5 (3) (பி) ஆகியவற்றின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. புலன் விசாரணை நடந்து வருகிறது.

திரு. ஆ. நல்லசிவன் : இந்தத் தொழிற்சாலை சட்டப்படி பதிவு செய்யப்படவில்லை. ஆனால் அறிக்கையிலே மூன்றாவது பாராவிலே கூறியுள்ளபடி, தொழிற்சாலை நிர்வாகிகள் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யவில்லை என்பது தெரிகிறது. ஆகவே வெடி மருந்துகளை உபயோகிக்கும் தொழிற்சாலைகளில் 20 பேர்கள் இல்லாவிட்டாலும், பாதுகாப்பு செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் தொழிற்சாலை சட்டப்படி ரெஜிஸ்டர் செய்யத் தகுந்த திருத்தம் கொண்டுவர அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** சட்ட நிலைமைகள் காரணமாகத்தான் பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னேன். இதை மனதிலே வைத்துத்தான் சட்டங்களிலே என்னென்ன திருத்தங்கள் கொண்டுவர வேண்டுமென்று பரிசீலனை செய்து, இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன் ஒரு கூட்டுக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதனிடமிருந்து பரிந்துரை வந்தால், அதை அரசு பரிசீலனை செய்யும். ஆந்திர மாநிலத்தில் இது போன்ற குழுவை போன வாரத்தில் அமைத்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்

(முற்பகல் 10—20)

கொள்கிறேன். அந்தக் குழுவிடமிருந்து பரிந்துரை வருமானால், இந்த அரசு இதைப்பற்றிப் பரிசிலனை செய்யும். இப்போது ஆந்திராவில் கூட இது போன்ற ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஆளுநருடைய அறிக்கைக்கு நன்றி கூறுகின்ற தீர்மானத்தின் மீது ஏறத்தாழ 29 மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். 29 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள் என்றால், அவற்றை அவர்களுடைய சொந்தக் கருத்தாக மட்டும் எடுத்துக்கொள்ள முடியாது என்பதையும் பல்லாயிரக்கணக்கான மக்களுடைய கருத்தின் எடுத்துக்காட்டாக அவை அமைகின்றன என்பதையும் உணர்ந்து, இந்த அரசு அவற்றை கவனத்தோடு பரிசீலித்துப் புரிந்து கொள்ளவும், புரிந்து கொண்டதை நிறைவேற்றவும் அல்லது கருத்துக்கள் உண்மையிலே உண்மைக்கு மாறுபட்டு யாராலாவது சொல்லப்பட்டு, இங்கே வெளிப்பட்டு இருக்குமானால், அதற்குத் தகுந்த விளக்கம் அளிப்பதன் மூலம் அவர்களும் தெளிவு பெற்று, எங்கள் தெளிவான நிலைமையை அவர்களைப் பின்பற்றுபவர்களுக்கு அல்லது நம்புகின்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல இது வாய்ப்பாக இருக்கும் என்ற கருத்தில் நான் என்னுடைய கருத்துக்களைக் கூற முற்படுகிறேன் என்று கூற விழைகின்றேன். இந்த மேலவையில் நேற்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும் போது, டாக்டர் லட்சுமணசுவாமி முதலியார் அவர்களை நினைவு கூர்ந்தார்



கள். அதை ஏதோ அவசியம் என்றே நான் கூறுகின்றேன். அந்த நேரத்தில் இதே மேலவையில் எதிர்க்கட்சி வரிசையில் நானும் மறைந்த நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ஆர். அவர்களும் உட்கார்ந்து எங்கள் கருத்துக்களைச் சொல்ல தி.மு.க. வாய்ப்பு தந்து, அமரர் அண்ணா அவர்களுடைய ஆசியால் அதை நல்ல முறையில் செயல்படுத்த எங்களால் முடிந்தது என்பதை எண்ணி இப்போது நான் பெருமைப்படுகிறேன். அன்று நான் பேசியதை ஒருமுறை நினைவுக்குக் கொண்டுவருவது — என் முதல் பேச்சு — கன்னிப் பேச்சு— இன்று நான் பேச இருக்கின்ற கருத்துக்களுக்குத் துணை புரியும், என்னை ஊக்குவிக்கும் என்று நம்புகிறேன். அன்றைய தினம் ஆட்சிக் கட்டிலில், ஆளும் வரிசையில் அமர்ந்திருந்த மறைந்த தேனி தியாகராஜன் அவர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்து வைக்கின்ற நேரத்தில் இந்த அவையிலே இல்லாமல் இருந்த அமரர் அண்ணா அவர்களைப்பற்றி அவர் சில கருத்துக்களை வெளிப் படுத்தியதின் வாயிலாக, நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ஆர். அவர்கள் எழுந்து பதில் சொல்லியதையும், அதற்கு அவர் பதில் சொல்லியதையும், பிறகு மறைந்த அமரர் டாக்டர் செரியன் அவர்கள் மேலவையில் தலைவராக இருந்த அந்த நேரத்தில், பதில் சொல்லி, அமைதிப்படுத்தியதையும் நான் கண்டேன். என்னுடைய அரசியல் வாழ்வில் முதன் முதலாக நான் மேலவைக்குத் தேர்ந் தெடுக்கப்பட்டு வந்து, கண்ட அனுபவம் ஆகும் அது. அன்று சொன்ன ஒன்றை இன்றைய தினம் மனதிலே நான் மீண்டும் நினைவுப்படுத்திக் கொண்டு நாட்டு மக்கள் மேலவையிலே இருக்கின்ற உறுப்பினர்களிடமிருந்து எப்படிக் கருத்துக்களை எதிர்பார்க்கிறார்கள் என்பதையும், நான் எந்தப் பொருளில் அதைக் குறிப்பிட்டேன் என்பதையும் சொல்ல விழைகின்றேன். மக்களுடைய பிரச்சினைகளை இங்கே பேசும்போது மக்களுக்கு என்னென்ன தேவையோ, அவர்களுடைய விருப்பம் எதுவோ அவற்றைப் பற்றி மட்டும் இங்கே விவாதிப் பார்கள், அதைப்பற்றி மட்டும் பரிசீலிப்பார்கள் என்கிற நிலையில் எந்தத் தனிப்பட்ட நபரைப் பற்றியும் கவலைப்படாமல் கொள்கையில், லட்சியத்தில் அல்லது மக்களுக்குத் தேவையான, அவசர அவசியமான முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு தேவைகளை எடுத்துச் சொல்லி இங்கே கருத்துக்களை வெளியிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள் என்றும், ஆனால் நான் முதன் முதல் அனுபவத்தில் கண்ட நிகழ்ச்சிகள் எனக்கு வருத்தத்தைத் தருகின்றன என்பதைச் சுட்டிக்காட்டி அதே சமயத்தில் இன்னொன்றையும் சொன்னேன். எவ்வளவு வேகமாக பந்தை சுவற்றை நோக்கி வீசுகிறோமோ அவ்வளவு வேகத்தில் திரும்ப அந்தப் பந்து வரும், அதுபோல்தான் கேள்வியும் பதிலும், ஆளும் கட்சிக் கருத்துக்களும், எதிர்த்தரப்பு கருத்துக்களும் அமையும் என்பதையும் சொன்னேன். டாக்டர் லட்சுமணசுவாமி முதலியார், திரு. பாலசுப்பிரமணிய ஐயர் போன்ற பெரியவர்கள் எல்லாம் மேலவையில் இருந்து

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 16

நகைச் சுவையோடும், அதேசமயத்தில் ஆழ்ந்த கருத்துக்களோடு கூடிய கருத்துக்களைப் பேசினார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நேற்றைய தினம் பேசும்போது, அதே மரபுக்கு ஏற்ப கொஞ்சம் கூட விட்டுக் கொடுக்கவில்லை என்று சொல்லத்தக்க அளவுக்கு சொன்ன கருத்துக்களுக்கும் மற்ற மாமன்ற உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களுக்கும் நான் நன்றியையும், வணக்கத்தையும் கூற கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்த மேலவையில் அமைச்சர்களுக்கும் எதிர் வரிசையில் இருப்பவர்களுக்கும் இடையே, வாய்ச்சண்டை என்றுகூட சொல்ல முடியாத அளவுக்கு அல்லது அதை விட மேலான விதத்தில் பத்திரிகைகளில் செய்திகள் வரக்கூடிய அளவுக்கு நிகழ்ச்சி நடந்தால், நானும் மற்றவர்களும் வெட்கப்பட வேண்டியிருக்கும் என்பதையும் நான் சொல்லித்தான் ஆக வேண்டியிருக்கிறது. இப்படி எல்லாம் நாம் எண்ணிப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், நேற்றைய தினம் அல்லது அண்மையில் எந்த நிலையில் எனக்கு வருத்தத்தைத் தரக்கூடிய நிகழ்ச்சி நடந்திருக்கிறது என்பதையும் நான் சொல்லித்தான் ஆக வேண்டும். மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே தங்கள் மூலமாக நான் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். இந்த மன்றத்தின் மரபு காப்பாற்றப் பட எப்படி எதிர்க் கட்சிக்காரர்களும் மற்றவர்களும் உங்களுக்குத் துணை நிற்கிறார்களோ அதுபோல் எங்கள் வரிசையில் இருப்பவர்களும் இந்த மன்றத்தின் மரபு காப்பாற்றப்பட துணை நிற்பார்கள் என்பதை விரும்பி வேண்டி தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அளவில் சொல்லி என் பேச்சைத் தொடங்கிக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டம் என்பது பரவலாக எங்குமே பேசப்படுகின்ற ஒரு முக்கியமான செய்தியாக இன்றைய தினம் ஆகி இருக்கிறது என்பதை யாரும் மறக்க மாட்டார்கள். அதே சமயத்தில் மக்கள் அதை ஆட்சேபித்துப் பேச இடம் தரவில்லையென்று நான் நம்புகின்றேன். எந்த மாநிலமும் இந்தியத் துணைக் கண்டத்தில் இப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தைத் தொடங்காத நிலையில், எவ்வளவு தொகை இதற்காகத் தேவை என்பதை எண்ணிப் பார்த்து, ஏன் இதை எடுத்துச் செய்து வீணாகக் கெட்ட பெயருக்கு ஆளாக வேண்டியிருக்குமே என்று எண்ணி ஒதுங்கிவிடாமல், இருக்கின்ற பணத்தை எப்படி எப்படி நல்ல முறையில் பயன்படுத்த வேண்டுமோ அதற்கேற்ப திட்டங்களை வகுத்து, எங்கள் கட்சியின் சார்பாக நான் சொல்லியிருக்கின்ற கொள்கையின் அடிப்படையில், அமரர் அண்ணா விரும்பிய, என் போன்றவர்களுக்குச் சொல்லித் தந்திருக்கின்ற அந்தக் கொள்கையின் அடிப்படையில், லட்சியத்தைச் சிறிதும் விட்டுக் கொடுக்காத முறையில் அதைப் பரிந்துரை செய்து நடைமுறைப்படுத்தியிருக்கிறோம். இந்த அவையில் மன்றத்தின் மரபு



1982 பிப்ரவரி 16] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

காப்பாற்றப்படுவதால் தான் "மேலவை" என்று பெயர் வைத்தார்களோ என்னவோ. (சிரிப்பு) ஆகவே இதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லும் போது, ஒன்றைச் சொல்லித்தான் ஆகவேண்டும். இதைத் தொடங்கும்போது எங்களுடைய அமைச்சரவைக்கும், எங்கள் கட்சியில் இருக்கிற உறுப்பினர்களுக்கும் கட்சிக்கும் மிக நன்றாகத் தெரியும் இது மிகப் பெரிய பிரச்சினை என்பது. இது ஒரு மிகப் பெரிய பிரச்சினை என்பதை நானும் மறுக்காமல் ஒத்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10—30)

தன்னிறைவுத் திட்டத்தை நான் ஏன் அறிமுகப்படுத்த விரும்பினேன் என்று சொன்னால், ஒவ்வொரு மனிதனுக்கும் அது தேவையாக இருப்பதுதான். எத்தனையோ முறைகளிலே, எத்தனையோ வகைகளிலே தேவைகள் இருக்கின்றன. ஆனால் அவைகளிலே தவிர்க்க முடியாத தேவை அல்லது ஒரு மனிதன் வாழ்வதற்கு இந்தத் தேவையாவது இருந்தாக வேண்டும் என்ற அந்தக் குறைந்த அளவு அடிப்படையில் நாம் எண்ணிப் பார்த்தால்—நான் மனம் விட்டுப் பேச விரும்புகிறேன். ஒரு முதலமைச்சர் பதவியிலே நின்றிருந்தால் கூட, ஒரு சாதாரண மனிதனாக, பசியால், பட்டினியால் வாடிக் கொண்டிருக்கின்ற ஒருவருடைய நிலையில் என்னை வைத்து நான் பேச விரும்புகிறேன்—இப்போது மக்கள் ஏமாந்து இருக்கிறார்கள், அவர்களுடைய உள்ளம் குமுறிக் கொண்டிருக்கிறது, அவர்கள் எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக்கூட நம்மால் சொல்லி விளக்கம் தர முடியாத அளவிற்கு வறுமை, பசி, வேலையில்லாத் திண்டாட்டம், அவர்களுக்குக் கிடைக்கின்ற ஊதியம் வேறு இருந்தால்கூட—இவைகள் எல்லாம் இந்தக் கஷ்டங்களைப் போக்கக்கூடியதாக இல்லை என்பதை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். இதற்கு எந்த அரசு காரணம், எந்த அரசால் இந்த நிலைமை ஏற்பட்டது என்று கணக்குப் போட்டு, ஏதோ தேர்தல் நேரங்களிலே சில சமயம் கட்சிகளுடைய லாபத்திற்காகப் பேசுவதுபோல், கொள்கைக்காக என்று வைத்துக் கொண்டால் கூட, தேர்தல் நேரத்திலே சொல்வதைப் பேசத் தயாராக இல்லை. உண்மையிலேயே யார் செய்தாலும், செய்யாவிட்டாலும் இன்றைய தினம் நாட்டின் நிலைமை இது. ஆகையால் தான் நாங்களே சிந்தித்து முடிவெடுத்து இந்தத் தன்னிறைவுத் திட்டத்தை எப்படியாவது தமிழகத்தில் ஐந்தாண்டு காலத்திற்குள் நிறைவேற்றியாக வேண்டும் என்ற 'சிராத' நி[illegible] இதைவிட நல்ல வார்த்தை இருக்குமானால் குறிப்பிட்டுச் [illegible] வேண்டுமானால், அதைத் தவிர வேறு எதையும் சிந்திக்க முடியாத நிலையிலே இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தினேன். இந்தத் தன்னிறைவுத் திட்ட[illegible]

12205

தில் முதன்முதலாக குடிதண்ணீர் வசதி எல்லாக் கிராமங்களுக்கும், தமிழகக் கிராமங்களில் மக்கள் வசிக்கும் அத்தனை இடங்களுக்கும் கொடுத்தாக வேண்டும் என்பது முக்கியமான ஒன்று என்ற வகையில் அதற்கு முதன்மை கொடுக்கப்பட்டது. 69 இடங்களுக்காவது கிடைக்க வேண்டும் என்று முதலில் செய்தோம். ஆனால், அந்த இடங்களுக்குக் கொடுக்கப்பட்டதா என்று கேட்டால், 4 மாதங்கள் கிடைத்தது. பின்னர் அதிகாரிகள் வந்து போய்விட்டால் அது நின்று விடுகிறது என்று குறைகள் ஆங்காங்கே சொல்லப்படுவதுபோல, இங்கே நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். அவர்கள் உண்மையிலேயே குறைகளை எடுத்துக் காட்டியதற்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருப்பவன் என்று சொல்வதோடு, இப்படிப்பட்டவர்கள் இந்தப் பணிகளைச் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.

நான் அருப்புக்கோட்டைத் தொகுதியில் தேர்தலுக்கு நின்றபோது, காங்கிரஸ் கட்சியிலிருந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே சேர்ந்து தொகுதியில் என்னுடைய வெற்றிக்காக வேலை செய்த ஒருவர் அங்கே சொன்ன ஒரு செய்தியை நான் பல்வேறு இடங்களிலே தேர்தல் நேரத்திலே வெளியிட்டேன். அது மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரியும். கவர்னர் அவர்கள் ஒரு நாள் வந்தார். 'அந்த அதிகாரி வந்தவுடனே குழாய்கள் வந்தன. தண்ணீர் கிடைத்தது. கவர்னர் போய்விட்டார், குழாய்களும் போய்விட்டன' என்று சொன்னார்கள். இதை நான் அங்கே சொன்னேன். அங்கே ஒரு நதி, அந்த நதிக்கு எங்கே எந்த இடத்திலிருந்து தண்ணீர் கிடைக்க வேண்டுமோ அது கிடைக்கவில்லை. ஆகவே, அதைச் சீர்படுத்தி அந்த மக்களுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். எப்படியோ நான் வெற்றி பெற்றேன். நான் அப்படிப்பட்டவைகளை நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணிய போதுதான் எனக்கு இந்த ஆசை பிறந்தது. நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசிய பேச்சைக் கேட்டபோது, அதிகாரிகள் இத்தனை ஆண்டுகளான பிறகும் இன்னும் மாறவில்லை என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி, மக்கள் என்னை நம்புகிறார்களா, எங்கள் கட்சியை நம்புகிறார்களா, அல்லது என்னைவிட அனுபவம் மிக்கவர்களை நம்புகிறார்களா, எது காரணமாக இருந்தாலும், அவர்களுக்குள்ள தேவை எது எது இருக்கிறதோ அதை நிறைவேற்ற நாங்கள் துணிவோம் என்ற நம்பிக்கையில் தான் எங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் அதிகாரிகள் இன்னும் மாற





வில்லை என்றோ, மக்களுடைய துன்பத்தை தங்களுடைய துன்பமாக எடுத்துக்கொண்டு செயல்பட அவர்கள் முன்வரவில்லை என்றோ, கூறப்படும் காரணம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால், அப்படிப்பட்டவர்களைப் பணியில் வைத்துக் கொள்வதை விட, அவர்களை அந்த இடங்களிலேயிருந்து மாற்றிவிட்டு, வீட்டுக்கு அவர்களை அனுப்பிவிட்டு, ஓய்வு கால ஊதியத்தை வேண்டுமானால் கூட பெற்றுக் கொள்ளுங்கள், எத்தனை ஆண்டுகள் பணியில் இருந்தால் எவ்வளவு சம்பளம் கிடைக்குமோ அவ்வளவு சம்பளத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லி, அவர்களை வெளியே அனுப்பிவிட்டு, தொண்டுள்ளத்தோடு வேலை செய்யும் உள்ளம் படைத்தவர்களை, இளைஞர்களை அல்லது வேறு பணியிலே இருப்பவர்களைக் கொண்டு வந்து அவர்களிடத்திலே இந்தப் பொறுப்பை ஒப்படைப்பது நல்லது என்ற எண்ணத்தைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் அவர்களுடைய பேச்சால் என்னுடைய உள்ளத்திலே பதிய வைத்தார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். இதைச் சொல்வதற்கு முக்கியமான காரணம், நாங்கள் ஆட்சி செய்கிறோம் என்று சொன்னால், நான் சட்டப் பேரவையிலே சொல்வதுபோல, எங்கள் கட்சி மட்டும் ஆட்சிக்குப் பொறுப்பு என்றல்ல, இந்த மாமன்றம் முழுவதும் பொறுப்பு என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். இந்த வகையில் நிறைவேற்றப்படுவது, ஏற்றுக் கொள்ளப்படுவது அல்லது திருத்தம் செய்வது, தள்ளி வைப்பது இப்படியாக எது இருந்தாலும், இந்த மன்றத்திலே இருக்கும் அத்தனை பேரும் நாங்கள் செய்கின்ற, திட்டமிடுகின்ற, நிதியை ஒதுக்கி வைத்துச் செய்கிறோமே, அதிலே உங்களுக்கும் பொறுப்பு இருக்கிறது, ஆட்சி நடத்துவதிலே உங்களுக்கும் பொறுப்பு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த வகையிலே, குறைகளை எடுத்துச் சொல்ல நீங்களும், அதை ஒழுங்குபடுத்திச் செய்ய நாங்களும் இருக்கிறோம். நல்லது செய்தால் பாராட்டு, நல்லது செய்யவில்லை என்று சொன்னால் கண்டனம், அல்லது கண்டிப்பாக விமர்சனம் தேவை. அதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் 69 இடங்களுக்கு அதை அறிமுகப்படுத்தி, மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்களும் பாராட்டியிருக்கிறார்கள் என்ற கருத்தை நான் பேரவையிலே எடுத்துச் சொல்லிய பிறகு, எல்லா இடங்களிலுமே அப்படி இருக்க முடியாது, ஒருசில இடங்களானாலும் அப்படியிருக்க அனுமதிக்கக் கூடாது, என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களிலே இருந்து அத்தனை பேரும் எடுத்துச் சொன்னதற்குப் பிறகு, நாங்கள் கவனிக்காமல் இருந்தால், ஆட்சியிலே இருப்பதற்கு நாங்கள் லாயக்கற்றவர்கள் என்று தமிழகம் முடிவு செய்யும். அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்பது மட்டுமல்ல, நாங்களே

தவறு செய்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். நாங்கள் செய்கின்ற தவறு திட்டமிட்டுச் சொன்னோமே அது. யார் யாரால், எதையெதைச் செய்ய முடியும் என்று தெரியாமல் அந்தப் பணிகளை ஒப்படைத்தோமே அது. அப்படிச் செய்தவர்களைப்பற்றி நாங்கள் தெரிந்து கொள்ளாமல், புரிந்து கொள்ளாமல், பேசாமல் இருந்து விட்டோமே என்று சொன்னால், அது. 'என்று சொன்னால்' என்றால், அந்த 'என்றால்' என்பதை ஏன் சேர்த்திருக்கிறேன் என்று சொன்னால் எப்படியெப்படி விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமோ அந்த அளவுக்குத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று குழுக்களை அமைத்து அதிலே ஆர். டி. ஓ. போன்றவர்கள் பங்கு கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டு அனைத்துக் கட்சியிலே இருப்பவர்கள் யார் யார் அங்கே ஒத்துழைக்கிறார்களோ அவர்களைக் கொண்ட குழுவாக அது அமைக்கப்பட்டு, அதற்குப் பிறகு மாதத்திற்கு ஒரு முறை கண்டிப்பாக தமிழக அரசுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய அறிக்கையை அனுப்ப வேண்டும் என்று நாங்கள் உத்தரவிட்டிருக்கிறோம்.

(முற்பகல் 10—40)

ஆகவே, திட்டமிடுவதோடு நின்றுவிடவில்லை. அவைகளைக் கவனிப்பதற்கு அதிகாரிகளையும் நியமித்திருக்கிறோம். அவர்கள் அதிகாரிகளுக்குத் துணையாக இருந்து குற்றங்களை எடுத்துச் சொல்லாமல் மறைக்கவோ, சாதகமான நிலைமைகளை உருவாக்கவோ இடமளிக்காமல் அனைத்துக் கட்சியைச் சார்ந்த நண்பர்களையும் கலந்து அந்தக் காரியத்தைச் செய்யவும், குற்றங் குறைகள் இருப்பின் அவற்றை எடுத்துச் சொல்லவும் வாய்ப்புத் தந்திருக்கிறோம். அதிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாதத்திற்கு ஒருமுறை இத்தகைய நடவடிக்கைகளைக் குறித்து, கண்டிப்பாக எங்களுக்கு அறிக்கை தர வேண்டும் என்று சொல்லியிருப்பதன் அடிப்படையில் எங்களுக்குச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அப்படி வருவதால்தான் எங்கே மேல் நிலைத் தொட்டி உடைகிறது என்பதையும், எங்கே குழாய்கள் பழுதுபடுகின்றன என்பதையும், பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட தண்ணீர் சப்ளை எங்கே நின்றுவிட்டது என்பதையும் தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்பு இப்போது கிடைத்திருக்கிறது. இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களை அழைத்து, இரண்டு நாட்கள் கூட்டங்களை நடத்தினோம். அவர்களிடத்தில் இதுபற்றிக் கண்டிப்பாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே அந்த வகையில் திட்டமிடுவது, பணத்தை ஒதுக்கீடு செய்வது என்பதோடு நின்றுவிடாமல், ஒதுக்கப்பட்ட பணத்தைக்கொண்டு பணிகளை எப்படிச் செய்கிறார்கள் என்றுகூட



தெரிந்து கொள்ள நாங்கள் ஒரு முறையான அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறோம். அதாவது பொது மக்களுக்கும் தொடர்பு ஏற்படுத்தி, பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் ஆங்காங்கே உள்ளக் குழுக்களில் இடம் பெற்றுப் பணியாற்றவும் நாங்கள் வாய்ப்பளித்திருக்கிறோம். அது இனியும் தொடரும் என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அப்படியும் தவறு நடக்கிறது என்பதை நான் அறிவேன். என்னுடைய அனுபவத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அண்மையில் நான் நெய்வேலிக்குச் சென்றிருந்தேன். அப்போது என்னோடு என்னுடைய அரசிதழ் பதிவு பெற்ற உதவியாளர் திரு. விஜயகுமார் அவர்களையும் அழைத்துச் சென்றிருந்தேன், யாருக்கும் எதையும் சொல்லாமல், ஒரு அதிகாரியை கூட அழைத்துக் கொண்டு சுமார் 35, 40 மைல் தூரத்தில் உள்ள ஒரு இடத்தில் என்ன நடக்கிறது என்பதையெல்லாம் நேரில் சென்று கண்டு வரும்படி அவரிடம் சொல்லியனுப்பினேன். பாவம் அன்றையதினம் அவர் பட்டினியாக இருக்க வேண்டியிருந்தது. ஆனால் எத்தனையோ பொது மக்கள் தொல்லைப்படும்போது, அதைப்பற்றிக் கவலைப்படாமல் அவர் தம் கடமையைச் செய்தார் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அவர் கொண்டு வந்த செய்தி அதிர்ச்சி தரத்தக்கதாக இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களும் மற்றவர்களும் இங்கே குறிப்பிட்டதைப்போல், "எங்கோ நடக்கிறது என்றாலும் அவைகளை நாம் நேரடியாகச் சென்று தெரிந்து கொள்வதைப் போல், குழுக்களை அமைத்தாம்கூட தெரிந்துகொள்ள முடியவில்லையே" என்பதை உணர்ந்தேன். அவர் கொண்டு வந்த செய்தி இதுதான். ஒரு ஊரில் ஒரு வேலைக்கு டெண்டர் போட்டு அந்த வேலையை ஒருவரிடம் ஒப்படைத்தார்கள்; அதற்கான பணத்தையும் அவருக்கு முழுவதுமாகக் கொடுத்துவிட்டார்கள். ஆனால் முழுப் பணத்தையும் பெற்ற அந்த நபர் வேலையைத் தொடங்கவே இல்லை. அல்லது தொடங்கியிருந்தாலும், அந்த வேலை தொடங்கிய நிலையிலே நின்றுவிட்டிருக்கிறது. அதோடு அவர் மேலும் இரண்டு மூன்று இடங்களைப் பார்வையிட்டுவிட்டு வந்து என்னிடம் விவரத்தைச் சொன்னார். மற்ற இடங்களிலெல்லாம் அந்தப் பணிகள் சரிவரச் செய்யப்பட்டிருக்கின்றன என்ற புள்ளிவிவரங்களையும் அவர் கொடுத்தார். ஆனால் இத்தகைய தவறுகளுக்கெல்லாம் யார் காரணமோ அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும்போதுதான், பிரச்சினை வருகிறது. இங்கே இந்த மாமன்றத்தில் உள்ள அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களுக்கிடையேயும் ஒரு கடுகளவுகூட கருத்து வேறுபாடில்லை. அதாவது மக்கள் பணத்தை விரயமாக்குவோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்வதில்

நம்மில் யாருக்கும் கருத்து வேறுபாடில்லை. ஆனால் இங்கே இப்படிச் சொல்கிறவர்களும் வெளியே இருப்பவர்களும், அத்தகைய நடவடிக்கையை அரசு மேற்கொள்கிற நோக்கில், இந்த அரசை ஏதோ அராஜகத் தன்மை புரிகிற அரசாகவோ அல்லது எங்களுக்கு லாபகரமாகச் செய்யாத அதிகாரிகள் மீது அல்லது எங்கள் ஆட்களுக்கு வேலை கொடுக்க முன்வராத அதிகாரிகள் மீதோ பழிவாங்குகிறோம் என்றோ வெளியில் அரசியலாக்கப்படுகிறது என்பதை நான் மிகுந்த வேதனையோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்ற நிலை ஏற்படும்போது, அத்தகைய நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரத்தையும் எங்களுக்குத் தந்து விட்டு, நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேள்வி கேட்கிற உரிமையையும் வைத்துக்கொண்டு, பதில் சொல்லுகிற பொறுப்பையும் எங்களுக்கு ஏற்படுத்தித் தந்துவிட்டு வெளியே மக்கள் மத்தியிலே பேசும்போதும் சரி, பத்திரிக்கைகளில் எழுதும்போதும் சரி, இந்த அரசு அதிகாரிகளை வேலை செய்வதற்கு அனுமதிக்கவில்லையென்றும் அதிகாரிகளுடைய பணிகளில் இந்த அரசு குறுக்கிடுகிறது என்றும், தங்களுக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற நிலையில் செயல்படுகிறது என்றும், வேண்டாதவர்களை எப்படியாவது பணியிலிருந்து விலக்கப் பார்க்கிறது என்றும் குற்றஞ்சாட்டி, எங்கள்மீது, புகார் சொல்லப்படும்போது தான் பிரச்சினைகள் வேறுவிதமான வடிவத்தை எடுக்கின்றன என்பதையும் நான் இங்கே வேதனையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

யார் எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்பது தெரியாமல்தான் நாங்கள் அதிகாரிகளோடு பழகுகிறோம். அப்படித்தான் அதிகாரிகளைப் பார்க்கிறோம். பத்தாண்டுக்காலம் ஆட்சியிலே இருந்தவர்களேகூட தமிழகத்தில் இருக்கிற அனைத்துப் பகுதிகளிலும் இருக்கிற அதிகாரிகள் மற்றும் பல்வேறு பொறுப்புகளில் இருப்பவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்று தெரிந்துகொள்ள முடியவில்லை என்றால், 2½ ஆண்டுக்காலம் மட்டுமே பதவியில் இருந்து, இடையிலே வெளியே அனுப்பப்பட்டு, மாற்றங்கள் பலவாகி, மீண்டும் திரும்ப ஆட்சிக்கு வந்து, மறுபடியும் "அ", "ஆ" என்று ஆரம்பிக்கிற நிலையில் இந்த ஆட்சி இருக்கும்போது, நாங்கள் யாரைத் தெரிந்து கொள்ளப் போகிறோம், யாரை மாற்றப் போகிறோம். என்பதையெல்லாம் தயவுசெய்து இந்த மாமன்றத்தில் இருப்பவர்கள் மட்டுமின்றி, இதற்கு வெளியே இருப்பவர்களும் தயவுசெய்து சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



எதையும் அரசியலாக்குவது என்பது எளிது. அது எல்லோராலும் முடியும். அதுவும் இந்தக் காலத்தில் எந்தப் பிரச்சினையையும் அரசியலாக்கி விட முடியும். ஆனால் ஒரு நல்ல திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று விரும்புகிறபோது, அதை அமுல்படுத்த ஒத்துழைக்கவில்லை என்றால், அதற்கு ஒருவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்போது, அதையும் நாம், அரசியலாக்குவோமானால், இந்த மன்றத்திலே நாமெல்லாம் பேசித்தான் என்ன பயன்? கருத்துக்களை எடுத்துச் சொல்லித் தெரிந்துகொண்டுதான் என்ன பயன்? விவாதத்தை நடத்தி, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எடுத்துச் சொல்வதைப்போல், எங்களுக்கெல்லாம் எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் எடுத்துச் சொல்லி, இப்படி இப்படிச் செய்யுங்கள் என்று சொல்லித்தான் என்ன பயன்? எனவேதான் மிகவும் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன், கொடுத்த வாக்குறுதிகளை நாங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று நீங்கள் விரும்புவீர்களானால், தயவுசெய்து எங்களோடு ஒத்துழைக்க முன்வாருங்கள். நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசும்போது, "நான் முதலமைச்சர் அவர்களுக்காகச் சொல்கிறேன்" என்று பேசினார்கள். நான் உண்மையிலேயே அதை நம்புகிறேன். நீங்கள் எந்தக் குறைகளைச் சொன்னாலும், எனக்காகத்தான் பேசுகிறீர்கள் என்பதை நான் அறிவேன். எனக்கு அதிலே லாபம் இருக்கிறது. நான் தவறு செய்யாமல் இருப்பதற்கும், நான் தவறான பாதையில் செல்லாமல் இருப்பதற்கும் உங்களுடைய பேச்சுக்களும் கருத்துக்களும் துணை நிற்கின்றன என்பதை நான் உளமாற ஒப்புக்கொள்கிறேன். ஆகவேதான் சொல்கிறேன், நீங்கள் எனக்காகத்தான் பேசுகிறீர்கள். எங்களுடைய ஆட்சி நல்லாட்சியாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் எதையும் சொல்லுகிறீர்கள் என்பதை நான் உளமாற நம்பித்தான் கேட்கிறேன்.

என்னை நல்லவனாக்க, அல்லது எனக்கிருக்கும் பெயரைக் கெடுத்துக் கொள்ளாமல் காப்பாற்றிக்கொள்ள அல்லது கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற, நல்ல திட்டங்கள் இருந்தால், அவற்றை நடைமுறைப்படுத்த இவ்வளவு கோடி ரூபாய் என்று ஒதுக்கிவிட்டு, அதைச் செயல்படுத்த முன்வரும்போது, அதற்குக் குறுக்கே நிற்கும் அதிகாரிகள் மீது அல்லது பொறுப்புள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முன்வந்தால், அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதைப்போல் வெளியே இருப்பவர்கள் முயலுவார்களானால், நான் மிகுந்த வேதனையோடு சொல்லுகிறேன், எங்கள் வாயைக் கட்டிப் போட்டுவிட்டு எங்கள் முன்னால் சாப்பாட்டைக் கொண்டு வந்து வைத்துவிட்டு சாப்பிடு என்று சொல்வதைப்போல்தான் இருக்கிறது.

அரசுக்கு இத்தகைய அதிகாரமும், உரிமையும் இருந்தால்கூட, அதைச் செயல்படுத்தும்போது, கொஞ்சம் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டு கொள்கிறேன். இதை நான் அதிகாரிகளை மட்டும் வைத்துக் கொண்டு பேசவில்லை. அமைச்சர்களானாலும் சரி, எங்கள் கட்சியைச் சார்ந்த எம். எல். ஏக்கள், எம். பிக்கள், எம். எல். சிக்கள் ஆகிய யாரானாலும் சரி, அல்லது வேறு கட்சியைச் சார்ந்தவர்களானாலும் சரி எல்லோரையும் வைத்துக் கொண்டுதான் சொல்கிறேன். நியாயத்தோடு, கிடைத்த ஆதாரத்தின் அடிப் படையில் நடவடிக்கை எடுக்கும்போது, கட்சி வேறுபாடின்றி இந்த மன்றத் திற்குள்ளே இருப்பவர்களானாலும் சரி, வெளியே இருப்பவர்களானாலும் சரி, அதற்கு ஒத்துழைப்பு தர வேண்டுமே தவிர, அதை அரசியலாக்க உதவுவது கூடாது. உண்மையை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களையெல்லாம் திருத்த வேண்டும் அல்லது அவர்களைப் புரிந்து கொள்ளுமாறு செய்ய வேண்டும். கொஞ்ச நாளைக்காவது அமைதியாக இருக்கும்படி அனைவரையும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

இது தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றியது. நான் முழு விளக்கத்திற்கும் போகவில்லை. இருப்பினும் ஒன்றை மட்டும் நான் குறிப்பிடுகிறேன்.

கருங்குளம் குடிநீர்த் திட்டம் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுக்கப் பட்டு நிறைவேற்றப்பட்டது. நீர் ஊற்றுக் கிணற்றுத் திட்டத்தின் நீரை ஆதாரமாகக் கொண்டு தாமிரபரணி ஆற்றில் கட்டப்பட்டது. ஏற்கெனவே அந்தக் கிராமத்தில் இருக்கும் நீர்த் தேக்கத் தொட்டி தற்போது கிராம மக்களின் தேவைக்குக் குறைவாக இருப்பதால் அத்தொட்டி இத்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது பி. வி. சி. பைப்புகள் பிரதான நீர் ஏற்றுக் குழாய்களாக குறிப்பிட்டுள்ள அளவுகளின்படி பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கட்டுமான வேலைகள், துறையின் நிலையான குறிப்புகள் மற்றும் நிபந்தனைகள் மூலமாகவே முடிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே இதற்காக நிறுவப்பட்ட நீர்மூழ்கி இறைப்பான் பழுதுபட்டதன் காரணமாக திட்டத்தைச் செயல்படுத்தவில்லை. எனவே, திட்டத் துவக்கம் செயல்படுவதில் தாமதமாகி யுள்ளது. இப்போது நீர்மூழ்கி இறைப்பான் நிறுவப்பட்டுவிட்டதால், திட்டம் நல்ல முறையில் செயல்படுகிறது. மேலும் இத்திட்டம் ஊராட்சி ஒன்றியத்திடம் பராமரிக்க ஒப்படைக்கப்பட்டு விட்டது.



கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தில் தமிழகம் இந்தியாவிலேயே முதல் நிலையில் இருப்பதுபற்றி " பைனான்ஸ் எக்ஸ்பிரஸ் " என்ற பத்திரிகை யில் வெளியாகியுள்ள செய்தியின் தமிழாக்கத்தை நான் இங்கே படிக்கலாம் என்று கருதுகிறேன். ஏனெனில் அனைத்து அதிகாரிகளும் இப்படித் தவறு களைச் செய்வதில்லை. ஓரிருவர் செய்கின்ற தவறுகள் தமிழகத்திற்கே பெருமை தேடித்தருகிற அதிகாரிகள் அத்தனை பேருக்கும் களங்கத்தை ஏற்படுத்துகின்றன. பத்திரிகையிலே வந்திருக்கிற இந்தச் செய்தியை நான் இந்த மன்றத்திலே சொல்லாவிட்டால், தமிழகத்திலே திறமையோடும், ஆர்வத்தோடும், தகுதியோடும் பணியாற்றுகிறவர்களுக்குத் துரோகம் செயல்படுவேன் என்ற காரணத்தாலே இந்தக் குறிப்பை நான் இங்கே படிக்கிறேன்.

" தமிழ் நாடு மட்டுமே கணக்குகளை ஒப்படைத்துள்ளது. மத்திய அரசு மாநில அரசுகளுக்கான இரண்டாவது தவணை நிதியை நிறுத்தி வைத்துள்ளது. தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பல்வேறு மாநிலங்களுக்கு ஒதுக்க வேண்டிய ரூபாய் 90 கோடி இரண்டாவது கட்ட நிதியை மத்திய அரசு நிறுத்தி வைக்க முடிவு செய்துள்ளது என்று நம்பப்படுவதாக தகவல் வந்திருக்கிறது. இந்த நிதியாண்டு துவக்கத்தில் பல்வேறு மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட முதல் தவணை தொகை எவ்வாறு செலவிடப்பட்டுள்ளது என்கிற விவரங்களை மாநில அரசுகள் தரத் தவறியது தான் மத்திய அரசு இவ்வாறு முடிவு எடுத்துள்ளதற்குக் காரணமாகும். எனினும் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நாளது தேதி வரை வரப்பெற்ற எல்லா நிதி உதவிக்கும் சரியான கணக்குகளைக் கொடுத்த ஒரே மாநிலமான தமிழகத்திற்கு இரண்டாவது தவணையான தொகையை வழங்குவது என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது " என்ற தகவலை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இதிலிருந்து ஒன்றை நாம் புரிந்து கொள்ள முடியும். பணியாற்றுபவர்களிடமிருந்து, பொறுப்புக்களை நிறை வேற்றுபவர்கள், பணியாற்றியவர்கள் எப்படிச் செய்தார்கள் என்பதை அறிந்து, கணக்குகளைப் பெற்று, எந்தெந்த காலத்தில் எப்படியெப்படி செல வழிக்கப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் அங்கே அனுப்பியிருக்கிறார்கள். மற்ற மாநிலத்தவர்கள் அந்த அளவிற்குக் கூட செய்யவில்லை. ஆகவே அதை நிறுத்திவிட்டார்கள். ஆனால் தமிழகத்திற்கு மட்டும் இரண்டாவது தவணை கொடுக்கப்படுகிறது என்பதை எண்ணிப் பார்த்தால், உண்மையிலேயே தமிழ் நாட்டு அதிகாரிகள் தங்கள் பணியை எவ்வளவு சரியாகச் செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 16

இந்தத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதி உபயோகப்படுத்துவது பற்றிய முழு விவரங்களையும் மாநில அரசிடமிருந்து விரைவில் பெறுவதற்காக மத்திய கிராமப் புற வளர்ச்சித் துறை மாநிலத்திலுள்ள உயர் மட்ட அதிகாரிகளை டில்லிக்கு அவசரமாக அழைத்துள்ளது. அதிகாரிகளின் விளக்கக் கூட்டம் மண்டலம் மண்டலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேற்கு மண்டலக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்த மாத இறுதிக்குள் கிழக்கு, தெற்கு, மத்திய மண்டலத்திலுள்ள மாநிலங்களோடு விவாதம் நடந்து முடிந்து சொல்வதற்குக் காரணம், கிராமப் புறங்களில் நாம் என்னென்ன
சொல்வதற்குக் காரணம், கிராமப் புறங்களில் நாம் என்னென்ன
செய்ய வேண்டுமென்று விரும்புகிறோமோ அதைச் செய்ய வேண்டுமென்ற ஆர்வத்தில்—நாம் திட்டம் தீட்டி வெளியிட முனையும்போது, இப்படிப்பட்ட சில தவறுகள் ஆங்காங்கே நடந்தாலும்கூட—பல்வேறு அதிகாரிகள், மேல் தட்டில் இருப்பவர்கள், அதைப் போலவே மாவட்டங்களில் இருக்கின்றவர்கள் ஆகிய அனைவருமே மிகுந்த அக்கறையோடு செயலாற்றுகிறார்கள் என்று குறிப்பிடுவதற்காகத்தான்.

நேற்றைய தினம் இங்கே இன்னுமொன்றைக் குறிப்பிட்டார்கள். " ஓர் இடத்திலே ஒரு கட்டிடத்தைக் காட்டி, அது கடற்படைக்குச் சொந்தம் என்று தெரிந்த பிறகு நிறுத்தி வைக்கப்பட்டது " என்று சொன்னார்கள். உண்மை நிலை என்னவென்றால், அந்த இடம் அவர்களுக்குச் சொந்தமல்ல. " அந்த இடத்தை எங்களுக்குத் தந்து விடுங்கள், எங்களுக்குப் பணி இருக்கிறது. எங்களுக்கு வேண்டும் என்கிறார்கள் ". ஆகவேதான் நிறுத்தப் பட்டிருக்கிறது. "தெரியாமல் ஓரிடத்தில் கடடி விட்டோம்" என்ற செய்தி உண்மைக்கு மாறாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். சில நேரங்களில் உண்மையும் வருகிறது, அதைப் போல உண்மைக்கு மாறாகவும் செய்திகள் வருகின்றன. பத்திரிகைகளில் வெளியிடும்போது சில பத்திரிகைகள் எங்கள் மீது கொண்டுள்ள அதிகமான அன்பால் நாங்கள் தவறு செய்யாததன் மூலம் மக்களிடம் எங்களுக்கு அக்கறை அதிகமாகட்டும் என்ற அளவில் விளக்கமாக வெளியிட்டு விடுகிறார்கள். மற்றவற்றை மறைத்து விடுகிறார்கள், அல்லது பத்திரிகைகளில் இடம் இல்லாமல் போகிறது அவர்களுக்கு. அந்த நிலையிலே ஒரு சிறிய பிரச்சினைகூட பூதாகாரமாக, பெரிதாக, மக்கள் முன் வைக்கப்படுகிறது. உடனே கேள்விகள் எவ்வளவு? குற்றச்சாட்டுக்கள் எவ்வளவு? " எந்தெந்த அமைச்சருக்கு என்னென்ன பங்கு? இது யாருக்குச் சொந்தமான இடம்? இந்த இடத்தை விலைக்கு வாங்கிய போது எவ்வளவு கொடுத்தார்கள்? "—இப்படியெல்லாம்கூட கதைகள் கட்டப் படும். ஆனால் பதில் சொல்ல வாய்ப்பு கிடைத்துவிட்டதால், இனிமேல் அப்படி இருக்காது என்று நினைக்கிறேன். முதலமைச்சரும், அனைத்து



அமைச்சர்களும் எல்லா இடங்களையும் சென்று பார்க்க முடியாது. அதிகாரிகள் சொல்லுவதை நம்பித்தான் பதில் சொல்ல வேண்டும், நடவடிக்கைகளில் நாங்கள் இறங்க வேண்டும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லும் போது, நாங்கள் அதை நம்பாமல் இருக்க முடியாது என்பதைத் திட்டவட்டமாகச் சொல்கிறேன். அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே நாங்கள் நடவடிக்கை எடுக்கும்போது, வெளியே இருப்பவர்கள் அந்த நடவடிக்கைக்குக் குந்தகமாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் முதலிலேயே பூர்வ பீடிகையோடு சொன்னேன்.

இதைப் போல பல திட்டங்களை நான் இங்கே சொல்ல முடியும். தாழ்த்தப் பட்டவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதை நாங்கள் அலட்சியப்படுத்துகிறோம் என்ற எண்ணம் இருக்கிறது. மத்திய அரசிடமிருந்து இங்கே ஓர் அதிகாரி வந்தார். " இப்போது கட்டிக் கொண்டிருக்கின்ற வீடுகள், ஒரு சின்ன குடும்பமாக இருந்தால்கூட வாழ்வதற்குப் போதாது. குறைந்தது இரண்டு அறைகளாவது இருந்தாக வேண்டும் " என்று சொன்னார்.

(முற்பகல் 11-00)

அதே நேரத்திலே முன்பு 5 ஆயிரம் ரூபாய் அளவில் கட்டிய ஒரு வீட்டை இப்போது 16 ஆயிரம் ரூபாய் அளவில் கட்ட வேண்டிய அளவில் இருக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு கணக்கையும் படிப்பதற்கு நான் முயன்றால், அது இராமாயணம் போல் போய்க்கொண்டிருக்கும். ஆகையால் அதனுடைய கருத்தை மட்டும் சொல்ல விழைகிறேன். ஆண்டுக்கு 20 ஆயிரம் வீடுகள் என்ற கணக்கில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு, வேறு வீடு இல்லாதவர்களுக்குக் கட்டுவது என்று வைத்துக்கொள்வோம். அப்படிக் கட்டிக் கொடுப்பதாக இருந்தால், ஏறத்தாழ 7 லட்சம் பேர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண்டும். ஒரு ஆண்டுக்கு 20 ஆயிரம் வீடுகள் என்று கட்டிக் கொடுத்தால்கூட, எத்தனை ஆண்டுகள் ஆகும்? 35 ஆண்டுகள் அளவுக்காவது குறைந்தது ஆகும். அதற்குள் மேலும் எத்தனை குழந்தைகள் பிறக்கப் போகின்றன, எண்ணிக்கை எப்படியாகும், என்னென்ன பிரச்சினைகள் வரும், விலைவாசிகள் எப்படி உயரும் என்பதெல்லாம் நமக்குத் தெரியாது. இன்று 16 ஆயிரம் ரூபாய் ஆகிறது. அன்றைக்கு ரூபாய் 35 ஆயிரம் அளவுக்கு ஆகுமோ என்று தெரியாது. அந்த 7 லட்சம் பேர்களுக்கு ஆண்டுக்கு 20 ஆயிரம் வீடுகள் வீதம் கட்டுவதாக இருந்தாலும் 35 ஆண்டுகள் ஆகும். நாம் 40 ஆயிரம் வீடுகள் ஆண்டுக்குக் கட்டித் தருவதாக இருந்தாலும், இன்னும் 15 ஆண்டுகளில் முடியலாம். அதைவிட லட்சக்கணக்கான வீடுகள் என்ற வகையில், நாம் கட்டிக்கொடுக்க முனைந்தால்தான், விரைவில் ஒரு 5 அல்லது 6 ஆண்டு காலத்திற்குள் கூடுமான அளவில் வீடு இல்லாத தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட

மக்களுக்குக் கட்டிக்கொடுக்க முடியும். அந்த அளவுக்குக் கோடிக்கணக்கான பணம் அரசிடம் இல்லை. அதனால்தான் அவர்களே உழைத்து கட்டிக் கொள்ளலாம்; அரசு கடன் கொடுத்து, மானியம் கொடுத்து அவர்களே சிறு சிறு வீடுகளை அங்கே கட்டிக் கொள்ளலாம் என்ற திட்டத்தை அமலாக்க முனைந்தோம். அந்த வகையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக என்னென்ன செய்திருக்கிறோம் என்று சொல்லி விடுகிறேன்.

பள்ளிகள் என்று எடுத்துக் கொள்வோம். தொடக்கப் பள்ளிகள் 840. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு செய்திருப்பது. அவைகளில் 65,523 ஆண்கள், 63,314 பேர்கள் பெண்கள் படிக்கிறார்கள். நடுநிலைப் பள்ளிகள் 79. அவைகளில் ஆண்கள் 14,384 பேர்களும், பெண்கள் 11,308 பேர்களும் படிக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளிகள் 19. அவைகளில் 3,455 ஆண்கள், 2,037 பெண்கள் படிக்கிறார்கள். மேல்நிலைப் பள்ளிகள் 4. அவைகளில் 3,414 ஆண்களும், 2,541 பெண்களும் படிக்கிறார்கள். ஆக பள்ளிகளின் எண்ணிக்கை ஒட்டுமொத்தமாக 942. படிக்கின்ற ஆண்கள் 86,226, பெண்கள் 78,900 ஆகும்.

1977-78-க்கு முன்பு கல்வி உதவித் தொகை பணமாக வழங்கப்பட்டது. இது மாணவ மாணவிகளுக்குப் போதுமானதாக இல்லை என்பதாலும் உரிய காலத்தில் கொடுக்கப்படாமல் இருந்ததாலும், 1977-78 முதல் புத்தகமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு கடந்த 4 ஆண்டுகளில் இதற்கான செலவுத் தொகை 425.51 லட்சம் ஆகும். 1967-68 முதல் 1975-76 வரை 9 ஆண்டுகளில் வழங்கப்பட்ட மொத்த உதவித் தொகை 62.63 லட்சம்தான். இதை தயவுசெய்து நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். 4 ஆண்டுகளில் ரூபாய் 425 லட்சம். 1968-லிருந்து 1976 வரையில் முடிய 9 ஆண்டுகளில் அது ரூபாய் 62? லட்சம்தான்

கல்லூரிப் படிப்புக்கு 1967-68 முதல், உதவித் தொகை கொடுக்கப்பட்டது. 1975-76 வரையில் ரூபாய் 867.95 லட்சம். 1977-78 முதல் 1980-81 முடிய ரூபாய் 903.58 லட்சம். ஆகவே ஆதி திராவிட மக்களுக்காக நாங்கள் என்னென்ன செய்திருக்கிறோம் என்பதைச் சொல்வதற்காகத்தான் இவ்வளவு கோடிட்டுக் காட்டியிருக்கிறோம். இவ்வளவையும் இப்போது படிக்க நேரம் இருக்காது. ஆகவே வேறு பிரச்சினைகளைப் பற்றியும் பேச வேண்டியதாக இருப்பதால் இதை நான் குறைத்துக் கொள்கிறேன்.

மாணவர்கள் இல்லங்கள் கட்டுவதற்கு 1967-68 முதல் 1975-76 முடிய ரூபாய் 109.08 லட்சம். 1977-78 முதல் 1980-81 முடிய ரூபாய் 560.93 லட்சம். இதிலே நாங்கள் அக்கறை காட்டவில்லை என்று சொல்வார்களா



னால், அவர்களுக்கு உண்மையின்மீது அக்கறை இல்லை என்றுதான் நான் சொல்ல வேண்டும். 1977-78 முதல் 1980-81 வரையில், கட்டி முடிக்கப்பட்ட விடுதிகள் 51, கட்டப்பட்டு வரும் விடுதிகள் 85. கட்டப்பட இருக்கும் மாணவர்கள் விடுதிகள் 81. 1980-81 ஆம் ஆண்டுக்கான மாணவர்கள் இல்லங்கள் கட்ட அனுமதிக்கப்பட்ட தொகை, தற்போதுள்ள கணக்குப்படி பார்த்தால் ரூபாய் 204.20 லட்சம் என்றும், 646 விடுதிகள் என்றும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்கு 1961-62ல் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கடன் மற்றும் மானியங்கள் என்று வழங்கப்பட்டு வந்ததற்குப் பதிலாக 1977-78 முதல் அரசு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. 1967-68 முதல் 1975-76 முடிய 9 ஆண்டுகளில் இவ்வாறு கடனாக, மானியமாக வழங்கப்பட்ட தொகை ரூபாய் 44.71 லட்சம். ஆனால் கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் அரசு மானியமாகவே ரூபாய் 38.23 லட்சம் வழங்கப்பட்டுள்ளது என்பதை நான் இங்கே என் மன அளவில் மன நிறைவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இலவச வீட்டு மனைகள் 1967-68 முதல் 1975-76 முடிய கையகப்படுத்தப்பட்ட மனைகளின் விலை மற்றும் செலவுகள் ரூபாய் 834.68 லட்சம். வீட்டு மனைகள் பெற்றவர்களின் எண்ணிக்கை 91,658. 1977-78 முதல் 1980-81 வரை, 4 ஆண்டுகளுக்குக் கையகப்படுத்தப்பட்ட மனைகளின் விலை மற்றும் செலவு ரூபாய் 399.60 லட்சம் ஆகும். வீட்டு மனைகள் பெற்றவர்கள் எண்ணிக்கை 1,10,471. 9 ஆண்டுகளில் 91 ஆயிரம் பேர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அதாவது 91,658 பேர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இப்போது இந்த ஆட்சியில் 4 ஆண்டுகளில் 1,10,471 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் ஆதி திராவிட மக்கள் மீது அக்கறை செலுத்தவில்லை என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? இந்தக் கருத்துள்ள அகராதி வேறு இருக்கிறதா என்றுதான் பார்க்க வேண்டும்.

அடுத்து, கலப்புத் திருமணங்கள். திருமணத் தம்பதியரில் ஒருவர் ஆதி திராவிடராக இருக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் கொண்டுவரப்பட்ட திட்டம், 1976-ல் கிறித்தவராக ஆகிய ஆதி திராவிடருக்கும் என்று ஆக்கப்பட்டது. ஆரம்ப கட்டத்தில் கலப்புத் திருமணத்திற்குப் பாராட்டுப் பத்திரம், தங்கப் பதக்கம், ரூபாய் 200 என்று வழங்கப்பட்டு வந்தது. 1979-80 முதல் வருமானம் 6 ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் இருந்தால், திருமணச் செலவுக்காக ரூபாய் 300-ம் அவர்கள் பெயரில் கூட்டாக வைக்கப்பட்ட தொகை ரூபாய் 4 ஆயிரம் என்று முதலீடு செய்யவும் இந்த அரசு வகை செய்திருக்

கிறது. கலப்புத் திருமணத்திற்காக 1968-69 முதல் 1975-76 வரை 8 ஆண்டுகளில் மொத்தம் செலவிடப்பட்ட தொகை 1.76 லட்சம் ரூபாய்தான். ஆனால் 1977-78 முதல் 1980-81 முடிய நான்கு ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகை ரூபாய் 8.87 லட்சம். ரூபாய் 4 ஆயிரம் வீதம் உதவித் தொகை பெற்ற தம்பதியர்கள் எண்ணிக்கை 152 பேர்கள்.

இங்கே இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் நாட்டிலுள்ள 326 வட்டாரங்களில் ஒவ்வொரு வட்டாரத்திலும் 300 குடும்பங்களுக்கு என்று திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆண்டுக்கு 1.8 லட்சம் குடும்பங்களுக்கு வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேலே கொண்டு வரும் நோக்கத்தோடு, ஒரு சிறப்புக் கூட்டமைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

இதற்கு மத்திய அரசின் சிறப்பு உதவியாக 1980-81ஆம் ஆண்டில் 9.56 கோடி ரூபாய் பெறப்பட்டு, மாவட்டங்களில் உள்ள திட்ட அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டது. முதலிலே குறிப்பிட்டபடி, 1.8 லட்சம் குடும்பங்கள் பல தொழில்கள் துவக்கியும், வேறு துறைகளில் பொருளாதார வளர்ச்சி பெறவும் தேவையான மூலதனத்தில் 33 விழுக்காடு மானியமாகவும், தமிழ் நாடு வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் குறைந்த வட்டியில் மூலதனக் கடனாக 25 விழுக்காடும், கூட்டுறவு மற்றும் வாணிப வங்கிகள் மூலமாக மீதி தேவையான தொகையைப் பெற்று அவர்கள் தொழில்களைத் துவங்கி, மேம்பட வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1980-81 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 81,35,840 ரூபாய் ஒதுக்கப்பட்டது. மேற்கண்ட திட்டத்தில் குறைந்த வட்டியில் மூலதனக் கடனாகக் கொடுக்க தமிழ் நாடு ஆதி திராவிட வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திற்கு 1980-81-ல் ரூபாய் 2 கோடியும், 1981-82-ல் 1 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசு இந்தக் காரியங்களைச் செய்வதற்கு, எவ்வளவு சரிவர ஒரு மாநில அரசு செயல்பட முடியுமோ அதற்கேற்றவாறு உதவி செய்ய முன் வருகிறதென்ற செய்தியை இந்த மன்றத்திலே சொல்லுவது இந்த அரசின் கடமையென்று கருதுகிறேன். மத்திய அரசிலிருந்து பல்வேறு வழிகளில் ஒரு மாநிலத்திற்கு உதவித் தொகைகள் கிடைக்கின்றன. அதைச் சரிவர செயல்படுத்தாமல் இருந்தால், விரயம் செய்தால், வீண் அடித்தால்தான் தடங்கல்கள் ஏற்படும். நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு, நாங்கள் கேட்ட தொகை முழு அளவிற்கு இல்லை



யென்றாலும், அவர்கள் நம்புகிற அளவிற்கு, தேவை எவ்வளவு என்று நினைக்கிறார்களோ அந்த அளவிற்கு உதவிகள் தொடர்ந்து கிடைக்கின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். வீடுகள் பற்றிச் சொன்னதை இவ்வளவு தூரம் பொறுத்துக்கொண்ட எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இதையும் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டு, இந்தப் புள்ளி விவரங்களையும் படித்து முடித்து விடுகிறேன். ஆதி திராவிடர்களுக்கு 17,352 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 60,399 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. மேலும் 27,774 வீடுகள் நடப்பு ஆண்டில் கட்டப்பட இருக்கின்றன. அதாவது 5 ஆண்டுத் திட்ட காலத்திற்குள் ஆண்டு ஒன்றுக்கு 40,000 வீடுகள் வீதம் 2 லட்சம் வீடுகள் கட்ட முடிவெடுத்து, ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் 67,334 வீட்டு மனைப் பட்டாக்கள் ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

*** திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அரிசன மக்களுக்கு இந்த அரசு என்ன செய்திருக்கிறதென்ற புள்ளி விவரங்களைத் தந்தார்கள். நான் நேற்று மத்திய அரசினுடைய கம்ட்ரோலர் மற்றும் ஆடிட்டர் ஜெனரல் தந்ததாகிய ரிப்போர்ட்டில் குறிப்பிட்டதைத்தான் சொன்னேன். அந்த ரிப்போர்ட் இந்த அவையில் எப்போது வைக்கப்பட்டதோ, அப்போதே அது பொது டாக்குமென்டாகிறது. அதுபோல, அதற்கான பதிலும் பொது டாக்குமென்டாகத்தான் இருக்க வேண்டும். 1981 மார்ச் 31 ஆம் தேதிவரை பதில் அனுப்பப்படவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அந்தத் தேதிக்குப் பிறகு அனுப்பியிருப்பார்கள் என்று நம்புகிறேன். இப்போது 1982 மார்ச்சை எட்டவிருக்கிறோம். ஆகவே ஓராண்டுக்குள் அனுப்பியிருக்கலாமென்று நம்புகிறேன். அந்த பதிலை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த அவைக்கு அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** அதை மீண்டும் தமிழாக்கத்தோடு படிக்க நான் முயன்று கொண்டிருக்கிறேன். இன்னொன்றையும் நான் குறிப்பிட்டாக வேண்டும். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பிற் பகுதியை இங்கே படித்துக் காட்டவில்லை. அதில் பாராட்டியிருக்கிறார்கள் என்று சொல்லியிருந்தால், மிகவும் உதவியாக இருந்திருக்கும். (சிரிப்பு). ஆகவே உங்கள் அளவிற்கு எனக்கு ஆங்கிலம் தெரியாவிட்டாலும் ஏதோ ஒன்றிரண்டு வார்த்தைகளைப் புரிந்து கொள்ளுமளவிற்குப் பார்த்தால், குறையும் இருக்கிறது, நிறையும் இருக்கிறது, தவறுகளும் இருக்கின்றன என்பது தெரிகிறது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். நாங்கள் தன்னிறைவுத் திட்டத்தை அமலாக்க வேண்டுமென்று முடிவு செய்து, அதை சட்ட

சபைக்குக் கொண்டுவர வேண்டுமென்று எண்ணிய நேரத்தில், நாங்கள்
'டிஸ்மிஸ்' செய்யப்பட்டோம். திரும்ப நாங்கள் வந்து, ஜூன் மாதம் பதவி
ஏற்றபோது நிலை என்னவென்றால், அந்தத் திட்டம் எந்தவித நடவடிக்கை
யும் இல்லாமல் நிறுத்தி வைக்கப்பட்டது. ஒன்று, தொடர்ந்து இருக்க
வேண்டும்; இல்லையென்றால் 'இல்லை' என்று ஆக்கியிருக்க வேண்டும்.
இரண்டும் இல்லாமல் போகும்போது, மீண்டும் நாங்கள் வந்து, அதைத்
தொடங்க வேண்டியிருக்கிறது. இதுபோன்ற பிரச்சினைகள் வரும்போது,
சில நேரங்களில் பதில் அளிக்கத் தாமதம் ஆகுமென்ற காரணம் சொன்னால்,
அது தப்பித்துக்கொள்ள என்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் நினைக்க
மாட்டார்களென்று கருதுகிறேன். உண்மையை ஒத்துக்கொள்ள என்ன
தடங்கல் இருக்கிறது? ஒன்றுமே இல்லை. பேரவையிலே ஒரு குற்றம்
பற்றி உறுப்பினர்கள் சொன்னதற்கு, நானே அதை ஒத்துக்கொண்டு
சொன்னவன், சொல்கிறவன். அது மட்டுமல்ல. நாங்கள் ஆட்சிக்கு வந்த
வுடனே அதிகாரிகள் கொடுத்த அறிக்கையை அப்படியே அவையில்
வைத்தோம். எங்களை டிஸ்மிஸ் செய்த பிறகு, எங்களையும் கம்யூனிஸ்ட்
கட்சித் தோழர்களையும், எங்களோடு வந்த நண்பர்களையும், எம்.பி. க்களாக
இருந்தவர்களையும், எம். எல். சி. க்களாக இருப்பவர்களையும் அடித்து,
துன்புறுத்தி எப்படி எல்லாம் போலீசார் என்ற பெயரிலும், சில போலீசார்
களும் தாக்கினார்கள், என்பதை சட்டப் பேரவையிலே சொல்லியிருக்கிறேன்.
ஆனால் அதிகாரிகள் கொடுத்த அறிக்கையை அப்படியே நாங்கள் சட்ட மன்றத்
திலே வைத்தோம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு
அறிக்கையை அதிகாரிகள் தரும்போது, அதைப் பரிசீலித்துப் பார்க்க வேண்
டியது அவசியம்தான் என்றாலும், அவர்கள் என்ன குறிப்புகள் வைத்திருக்
கிறார்களோ, எஃப். ஐ. ஆர்.-ல் என்ன எழுதியிருக்கிறார்களோ அவையெல்லாம்
இருக்கும்போது, அது தவறு, அதை மாற்றுங்கள், நாங்கள் ஆட்சியில்
இல்லாதபோது நடந்தது, நாங்கள் சொல்வதுதான் சரி என்று சொல்லுவது
நாகரிகமாகாது என்று நினைத்த அமைச்சரவைதான் இங்கே இருக்கிறது.
ஆகவே எதையும் மறுப்பதற்கு நாங்கள் தயாராக இல்லை. தெரிந்ததை
ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். அந்த வகையில் இதை இன்னும்
தீவிரமாகப் படித்து, நிதிநிலை அறிக்கைக் கூட்டத் தொடரில் வாய்ப்பு
கிடைக்கும்போது சொல்லுகிறேன். அதற்குள் எதிர்க் கட்சித் தலைவரவர்கள்,
3 புத்தகங்கள் இருக்கின்றன—பிற்பகுதிகளையும் படித்து, [illegible]
வெளியிட்டால், எங்களுக்கும் அது சாதகமாக இருக்குமென்று [illegible]
கொள்கிறேன்.



**திரு. ஆ. நல்லசிவன்:** அரிசன மக்களுக்கு தி. மு. க. ஆட்சிக் காலத்தில் செய்திருக்கிறோம்; அ. தி. மு. க. ஆட்சியிலே என்ன செய்திருக்கிறீர்கள் என்று எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னதற்கு முதலமைச்சரவர்கள் ஒரு பதில் சொன்னார்கள். அவர்கள் ஆட்சியிலே அரிசனங்களுக்குப் பல நன்மைகள் செய்திருக்கிறார்களென்பதை ஒத்துக்கொள்கிறேன். தமிழ் நாட்டில் அரிசனங்களில் பெரும்பான்மையோர் விவசாயக் கூலிகளாகவும், ஏழை விவசாயிகளாகவும் இருக்கிறார்கள். அவர்களுடைய சாகுபடி நிலங்களை உத்தரவாதப்படுத்தவும் விவசாயக் கூலியை நிர்ணயித்து, அதை மாநிலம் முழுவதும் அமுல்படுத்தவும் அரசு எடுத்த நடவடிக்கை மூலம் எந்த அளவிற்கு அவர்கள் பலன் பெற்றிருக்கிறார்கள் என்பதைச் சொன்னால், நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** நான் அந்தப் பிரச்சினையை விட்டு விடுவதாக இல்லை. கண்டிப்பாக அந்த இடத்திற்கு வருவேன். அதைப் பற்றிப் பேசுவேன். அது மிகப் பெரிய பிரச்சினை, அதற்கு முன்னால் விலைவாசியைப் பற்றிப் பேசிவிடுவோம். அதற்கு புள்ளி விவரங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவரவர்களும், மற்றவர்களும் பேசியிருக்கிறார்கள். நேற்றைய தினம் பேசிய எதிர்க் கட்சித் தலைவரவர்கள், தேவைக்கேற்ப உற்பத்தி இருக்கிறது. ஆனால், கிடைக்கவில்லை, ஏன் கிடைக்காமல் போகிறது, வெளியே அனுப்பும் அளவிற்கு நம்மிடம் அரிசி இருந்ததல்லவா, இப்போது கிடைக்கவில்லையே, ஏன் அப்படி என்று கேள்வி கேட்டார்கள். இந்தப் பிரச்சினையை எழுப்பித்

(முற்பகல் 11-20)

தான், 1971-ல் வாக்குகள் பெற்றோம். 1971 ஆம் ஆண்டு அரிசி எங்கே, அரிசி எங்கே என்று கேட்டு எதிர்க் கட்சிக்காரர்கள் பானைகளைத் தொங்க விட்டார்கள். நின்றுகொண்டு போனால், மண்டையில் இடிக்கும். அதை வைத்துக்கொண்டு தான் சொன்னேன். இன்னொரு கட்சி ஆட்சியில் இருந்தபோது, எப்படிப்பட்ட நிலை இருந்தது என்பதையும் அரிசி அவுன்ஸ் கணக்கில் கொடுக்கப்பட்டது என்பதையும் சொன்னேன். இந்த ஆட்சியில், பானையை அடுப்பு உலையில் வைத்துவிட்டு, கடைக்குச் சென்று அரிசி வாங்கக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கும் என்று சொன்னேன். அந்த நிலைமை தான் நாங்கள் ஆட்சியை விட்டு 'டிஸ்மிஸ்' செய்யப்படும்வரை இருந்தது. அதற்கு முன்பு எப்படி விலை உயர்ந்திருந்தது, நாகர்கோவிலில் எப்படி விலை இருந்தது என்பதையெல்லாம் இங்கே பேசி யாருடைய மனதையும் நான் புண்படுத்த விரும்பவில்லை. இது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று தான். ஆனால் நாங்கள் ஆட்சியை விட்டு வெளியேற்றப்படும் வரை அரிசி

விலை ஏராக இருந்தது என்பதை இங்குள்ள எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள். அதற்குப் பிறகு நிலைமை என்ன ஆயிற்று? இரண்டு மூன்று மாத காலத்தில் அவ்வளவு கட்டுக்கோப்பும் அழிந்தது. சீர்குலைக்கப்பட்டது. யாரும் கேள்வி கேட்கவில்லை. அதிகாரம் இல்லாதவர்களும் அதிகாரம் செலுத்தினர்கள் என்று குறை சொல்லும் அளவுக்கு அன்றைக்கு நிலைமை நாட்டிலே இருந்தது. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, மீண்டும் ஒழுங்குபடுத்த முயன்று கொண்டிருந்த நேரத்தில் வறட்சி வந்தது. ஆனால் வறட்சி வந்தாலும் நியாய விலைக் கடைகள் மூலமாக எந்த அளவுக்கு அரிசி கிடைக்கச் செய்தோம்? ஏன் வெளியேயிருந்து அதிக விலைக்கு வாங்கினீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். அது நியாயம்தான். ஆனால் நியாய விலைக் கடைகள் மூலமாக நாட்டு மக்களுக்கு அரிசியைக் குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டுமென்ற நிலையில், வெளியே அரிசியின் விலை ஏறிக்கொண்டிருக்கும் நிலையில் அரிசியே கிடைக்காமல் போய் விடுமோ என்று அச்சப்படும் நிலை இருக்கும்போது, அரசு கணக்கைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? அதனால்தான் அரசு ஒரு உத்தரவு போட்டது. அந்த உத்தரவில்கூட வெளியிலிருந்து அரிசியை வாங்கும்போது, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகத்தான் வாங்க வேண்டுமென்று உத்தரவு போட்டோம். தனிப்பட்டவர்கள் வாங்கக் கூடாது என்று அதில் சொல்லியிருந்தோம். மத்திய அரசும் உதவி செய்தது; தரவும் செய்தார்கள். ஆனால் வாகன் இல்லை. அப்படியும் ஆந்திரா, ஒரிசா போன்ற மாநிலங்களைக் கேட்டோம். பஞ்சாபிலிருந்தும் வாங்கி வைத்தோம். இப்படியெல்லாம் செய்து வறட்சி என்பதை நாட்டு மக்கள் உணராமல், வெளியே தெரியாமல் செய்தோம். 53 கோடி ரூபாய்க்கு மேல் செலவிட்டு என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்தோம். 43 கோடி ரூபாய் மத்திய அரசு கொடுத்தது. பிரச்சினையை நல்ல முறையில் ஒழுங்குபடுத்தினோம். இன்று வரை வறட்சி எப்போது வந்தது, எப்போது நீங்கியது என்று அரிசியைப் பொறுத்தவரையில், வெளியே தெரியாத அளவுக்கு தேவையான அரிசி நாட்டு மக்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலமாகக் கொடுத்தோம்.

அண்ணா அவர்களுடைய கொள்கையைப்பற்றி இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள்.; "அண்ணா பெயரில் கட்சியை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். நாங்களும் அண்ணா வழியில் கொள்கையை நிறைவேற்றிக் கொண்டிருப்பவர்கள். நீங்கள் அண்ணா கொள்கையை விட்டுப் போய்விடக் கூடாது" என்று இங்கே சொன்னார்கள். மின்சார வாரியத்தை நடத்துகின்ற உரிமையை தனியார்களுக்குக் கொடுத்து விடும் அளவுக்கு ஆளுநர் உரையிலே வார்த்தை தொனிக்கிறது என்று குறிப்பிட்டார்கள். சமுதாயத்தில்



சமதர்மத்தை யார் சொல்லிக் கொண்டிருந்தாலும், தமிழகத்திலே உண்மையிலேயே தி.மு.க. தான் சமதர்மக் கட்சி, பொதுவுடைமைக் கட்சி என்று அமரர் அண்ணா அவர்கள் சொன்னார்கள் என்பதை, இங்கே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதை ஒத்துக்கொள்கிறேன். அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் கொள்கை அடிப்படையில், அமரர் அண்ணா அவர்களுடைய விளக்கம் பல்வேறு கருத்துக்களை உள்ளடக்கியது. கொள்கை என்பது மனிதனுக்காகவா இல்லை கொள்கைக்காக மனிதனா? இப்படி ஒரு கேள்வி உண்டு. ஒரு மனிதனுடைய வாழ்க்கைக்கு எது தேவை என்று வருகிறதோ அது கொள்கையாகிறது. இன்றைக்கு கொள்கையை நிறைவேற்ற நடைமுறை வாழ்க்கைக்கேற்ப அவன் கொள்கையை அமைத்துக் கொள்கிறான். இதுதான் மேலெழுந்தவாரியான, ஒட்டுமொத்தமான பொருள். அப்படித்தான் சொல்ல முடியும். அப்படிப் பார்த்தால், பொதுவுடைமைக் கொள்கையை சோஷலிச குடியரசு என்று சொல்லப்படுகின்ற சோவியத் ரஷ்யாவில் கூட இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை. அண்ணா அவர்கள் சொன்னதற்குக் காரணம் இருக்கிறது. கம்யூனிஸ்டுகள் பொதுவுடைமை வாதிகள் என்று சொன்னதற்கு அப்படி அமரர் அண்ணா பதில் சொன்னசர் உண்மையிலே சொல்லப் போனால், பேதமற்ற சமூக பொருளாதார நிலை என்று தான் அதற்கு அர்த்தம். இப்படி நான் சொல்வதால் கம்யூனிஸ்டுகளைக் குறை கூறுவதாகக் கருதக்கூடாது. பொருளாதார சமத்துவம் மற்றும் மக்களுடைய சமத்துவம் இரண்டும்தான் அமரர் அண்ணா அவர்களுடைய கொள்கை. அதிக நாள் நான் காங்கிரசில் இருந்தவன். கொஞ்சம் நாள் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்திருக்கிறேன். அந்தக் கட்சியில் பற்று வைத்தவன் என்ற முறையில் சொல்கிறேன். தவறு இருந்தால், அதைச் சுட்டிக்காட்டினால் திருத்திக் கொள்கிறேன். பொதுவுடைமைக் கொள்கை இருக்கிறதே இது உலக ஆயுதமாகப் போய் நிற்குமே தவிர, அதற்கு ஒரு முடிவு கிடையாது என்று எனக்கு அதனைச் சார்ந்தவர்கள் அப்போது சொல்லித் தந்திருக்கிறார்கள். இயற்கையாக இந்த நாட்டிலே உற்பத்தியாகின்ற, உருவாக்குகின்ற அனைத்தையும், அனைவருக்கும் பங்கிட்டுச் சொந்தமாக்கும் அளவிற்கு அமைந்தால், அதுதான் பொதுவுடைமைக் கொள்கை. கல்தோன்றி மண்தோன்றா கற்காலத்தில் கூட அப்படி நடந்ததாகத் தெரியவில்லை. நமக்கு என்று பண்பு வைத்திருக்கிறோம். தமிழர்கள் கல் தோன்றி மண்தோன்றாக் காலத்திலிருந்து காப்பாற்றி வைத்திருக்கிற பண்பை விட்டுக்கொடுக்காமல், ஜனநாயக முறையில், குடியரசு என்று சொல்லுகின்ற, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, தேர்தல் வந்து அதன்மூலம் ஆட்சிக்கு வந்து அறிவித்த கொள்கைகளை நாட்டு மக்களுக்காக நிறைவேற்ற வேண்டும் என்பதைப்பற்றி அமரர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்; இதை இந்த

அவையிலுள்ள அனைவரும் ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். நாங்களும் அப்படித் தான் ஒத்துக்கொண்டு ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறோம் இந்த நிலையில் நின்று பார்த்தால், அண்ணாவின் கொள்கை நாட்டிலுள்ள ஏழையெளிய மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒன்று. நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன்: "மக்களுக்காகத் தான் கொள்கையே தவிர, கொள்கைக்காக மக்கள் அல்ல". இது தான் எனக்குத் தெரிந்தவரையில், நான் அறிந்து கொண்ட பாடம். அப்படிப் பார்க்கப் போனால், சமுதாயத்தில் மக்கள் வாழ்வு தற்காக ஏற்றத் தாழ்வற்ற சமதர்ம சமுதாயத்தை அமைக்க வேண்டும். சமுதாயத்திலே பொருளாதாரத்தையும், சமுதாய அமைப்பையும் சமத்துவ நிலைக்குக் கொண்டுவர வேண்டும், சம நிலைக்குக் கொண்டு வர வேண்டும். அப்படி நாம் விரும்புகின்றபோது, நாட்டிலுள்ள பணமுள்ளவர்களையும், முதலாளிகளையும் அழித்துவிட்டு இன்னொரு பற்றாக்குறை என்று சொல்லுகின்ற அளவுக்கு அவர்களையும் வறுமைக் கோட்டுக்குக் கீழே கொண்டு வரவேண்டுமா? நாட்டிலே இன்றைக்கு எத்தனை பேர் வறுமைக்கோட்டுக்குக் கீழ் இருக்கிறார்கள்? இப்படிச் செய்வதன் மூலம் மட்டுமே நாட்டிலே வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களையெல்லாம், ஏழைகளாக இருப்பவர்களை யெல்லாம் முதலாளிகளாக ஆக்க முடியுமா? அந்த அளவுக்கு ஒன்றும் அமரர் அண்ணா அவர்கள் சொல்லவில்லை. "லெவலிங் அப் அன்ட் லெவலிங் டவுன்" என்று அவாகள் சொல்லி மிக உயர்ந்த நிலையில் இருப்பவர்களை மத்திய நிலைக்குக் கொண்டு வாருங்கள், அதேசமயத்தில் மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களை மத்திய நிலைக்குக் கொண்டு வாருங்கள் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அந்த நிலை அமைய வேண்டும் என்று எண்ணிய அமரர் அண்ணா அவர்களின் கொள்கை வழி நின்று, அவர்களின் கொள் கையைப் புரிந்துகொண்டு வழி நடைப் பயணம் செய்துகொண்டிருக்கின்றோம்.

திரு. க. இராமமூர்த்தி: "வழி நடைப் பயணம்" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். (சிரிப்பு)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: "வழிநடைப் பயணம்" என்பதற்கு மாண்புமிகு முதலமைச்சரிடமிருந்து விளக்கம் கேட்கிறார் போலும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அதற்குப் பொருள் அண்ணா வழியில் நடந்து பயணம் செய்கிறோம் என்பது. அண்ணா வழியில் நடக்க வில்லையென்று சொன்னதால், தி. மு. க. விலிருந்து என்னை வெளியேற வேண்டுமென்று சொன்னார்கள். வழி காட்டி என்பது நிரந்தரம். ஆனால் தலைவர்கள் என்பவர்கள் தற்காலிகமானவர்கள். அமரர் அண்ணா அவர்களின் கூட்டத்திற்கு நான் தலைமை வகித்திருக்கிறேன். நான் நிரந்தரத் தலைவனா?





இல்லை. அண்ணா அவர்கள் எங்களுக்கெல்லாம் வழி காட்டியாக இருந்தார் கள். இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்லிச் சென்ற கொள்கைகளை இன்றும் நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 11-30)

அந்தக் கொள்கைகள் இன்னும் நமக்கு வழிகாட்டுகின்றன. உங்களுக்கு என்று சொல்வதைவிட எங்களுக்கு வழிகாட்டுகின்றன என்று வைத்துக் கொள்ளலாம். அந்த வகையில் பார்த்தால், சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு என்பது பணத்தில் மட்டுமல்ல, சமூகத்திலும் மாற்றப்பட்டாக வேண்டும். அந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு இடையூறாக இருப்பவர்கள் யார்? இங்கே தான் இடைத்தரகர்கள் என்று சொல்கிறார்கள். அவர்களை ஒழிக்கா விட்டால், நாம் நிச்சயமாக ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தைக் காண முடியாது. அவர்களை ஒழித்துவிட்டால், காணலாம். அந்தக் கொள்கையை நிறைவேற்ற அரசு அத்தனையையும் வாங்கி ஆரம்பிக்க அரசிடம் பணம் இல்லை. அதற்குத் திட்டங்கள் இருக்கின்றனவா என்றால், எங்களிடத் திலே இல்லை. யாரால் அத்தனை ஆயிரம் கோடி ரூபாய கொடுக்க முடியும்? அது மக்கள் சொத்து தானே, அத்தனை ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு ஏன் திருப்பிக் கொடுக்க வேண்டும், அப்படித் திருப்பிக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால், அந்த நிலையை எய்துவதற்கு மக்கள் தயாரா என்று கேட்டால், இல்லை. இன்னும் கிராமங்களில் சில இடங்களிலே தனிப்பட்டவர்களுக்குக் கிடைக்கும் செல்வாக்கு அவர்களிடத்திலே மக்களுக்கு இருக்கும் பணிவு மாற்றப்படவில்லை. இந்த நிலைமைகள் இன்னும் இருக்கின்றன. அதை ஒத்துக்கொள்ள வேண்டும். அது மாற வேண்டும் என்று சொன்னால், மக்கள் எல்லோரும் கல்வி கற்றாக வேண்டும். எல்லா மக்களுக்கும் கல்வி கிடைத்தால்தான், அந்தச் சமுதாய நிலைமைக்கு அவர்கள் வர முடியும். அந்த நிலையிலே சமுதாய நிலையைப் பற்றி எண்ணினால், இந்தத் தலைவர்களை ஒழித்துவிட்டால், அது ஏற்படும் என்று சொன்னால், அது தமிழகத்தில் மட்டும் செய்யக்கூடிய ஒரு காரியம் அல்ல. இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் அப்படியொரு கொள்கை வகுத்தாலன்றி, ஒரு மாநிலத்தில் மட்டும் அதை நிறைவேற்ற முடியாது. அப்படியானால் வங்காளத்தில் செய்து காட்டியிருக்க முடியும். ஏதோ கோளாறு என்று சொன்னால், மத்திய அரசு பற்றிக் கவலைப்படாமல் அங்கே கொள்கையைச் சொல்கிறார்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன், மதிக் கிறேன். அவர்களுடைய கட்டுப்பாட்டுக்குத் தலை வணங்குகிறேன் ஆனாலும் இதை தங்கள் மாநிலத்தில் ஏன் செய்ய முடியவில்லை? ஒட்டுமொத்தமாக, இந்தியத் துணைக்கண்டம் என்பது ஒரே நாடு. பல மொழிகள் பேசினாலும்

இது ‘ஒரு நாடு’ என்று ஏற்றுக்கொண்டிருக்கிறோம். எல்லைக்கோடு என்ற வகையில் வைத்துக்கொண்டால் கூட நம்முடைய எல்லைக்கோடு இமயம் வரையிலே இருக்கிறது என்று நிலைமை இருக்கும்போது, நாம் ஒன்றுபட்டுச் செய்ய வேண்டிய காரியத்தை தனி மாநிலத்திலே மட்டும் செய்யுங்கள், செய்வோம் என்று சொல்வது என்பது எங்களால் முடியாது. அப்படிச் சொன்னால் அது நிச்சயமாக மக்களை ஏமாற்றுவதாகும். இன்னொன்றை யும் நான் கேட்கிறேன், தனிப்பட்டவர்கள் ஒரு தொழிற்சாலையை நடத்து கிறார்கள் என்று சொன்னால், எல்லாத் தொழிற்சாலைகளும் எப்படி நடை பெறுகின்றன என்று பார்க்க வேண்டும். இங்கே எல்லாத் தொழிற்சாலைகளும் நட்டத்தில் நடைபெறுகின்றன என்றால், அது வேறு விஷயம். ஆனால் ஒட்டு மொத்தமாக இந்த விகிதாச்சாரக் கணக்கு போடாமல், பொதுக் கொள்கையாகச் சொன்னால், ஏறத்தாழ 80 சதவீதத்திற்கு மேல் லாபம் வருகிறது. அரசு ஏற்றுக்கொண்டவைகளிலே நஷ்டம் வருகிறது. இதை நான் சொல்லும்போது சிலருக்குக் கோபம் ஏற்பட்டால் கூட, மன்னிக்க வேண்டும், என்னுடைய பொறுப்பு அப்படி. உண்மை சொல்ல வேண்டும். என்ன காரணம்? ‘தனியாரிடம் காட்டும் அக்கறை’ என்று சொல்ல மாட்டேன். அங்கே நடந்து கொள்ளும் முறை அரசுடைமையாக்கப்பட்ட இடங்களிலே இல்லை. அதை பகிரங்கமாக ஒப்புக்கொள்ள வேண்டும். 100 கோடி ரூபாய்க்கு மேல் ஆண்டுக்காண்டு மின்சார வாரியத்தில் நஷ்டம் ஏற்படுகிறது என்று சொன்னால், எத்தனை ஆண்டு காலத்திற்கு மக்க ளிடத்திலே வரி போட்டுப் போட்டு வைத்துக்கொண்டிருப்பது?. அங்கே இருக் கும் நிர்வாகத்தை லாபத்தில் நடத்த முடியவில்லை என்று சொன்னால், தனிப் பட்டவர்கள் நடத்தினால் அதிலே லாபம் வருகிறது என்று சொன்னால், ஏன் அவர்களிடத்திலே கொடுக்கக்கூடாது? இந்த நாட்டுக்கு 100 கோடி ரூபாய் நஷ்டம் தேவையா? அல்லது லாபம் தேவையா? நாம் போடும் திட்டங்களை நிறைவேற்ற அது வேண்டுமா, வேண்டாமா? நமக்குப் பசியிருக்கிறது என்றால் அந்தப் பசியைப் போக்க வெளியேயிருந்து 150 கோடி ரூபாய் ஆனாலும் அதைக் கொடுத்து பொருட்களை வாங்க வேண்டும் என்று சொன்னால், வாங்கித்தான் ஆக வேண்டும். பசியைப் பற்றிக் கவலைப்படவில்லை, ரூபாயைப் பற்றி மட்டும் கவலை வைத்துக்கொள்ளலாமா என்று கேட்கக்கூடாது. தேவை இருக்கிறது; கொடுக்கத் தயார். பின்னியிலே இன்றையதினம் என்ன நடக்கிறது? இப்போது ஒருவாறு ஒத்துக்கொண்டார்கள். எத்தனை மாதங்கள் வேலையில்லாமல் இருந்தார்கள்? அத்தனை மாதங்களும் அவர்களுடைய மாத வருமானம் இழக்கப்பட்டது, இல்லாமல் போனது. பிறகு சிலரை விட்டுவிட்டு நடத்தலாம் என்று ஒத்துக்கொண்டார்கள். ஆனால் இன்றைக்கு அவர்களையும் சேர்த்துக்



கொள்ள வேண்டும் என்று போராட்டம். இது நியாயமா? இது மாநில அரசோடு மட்டும் நின்றிருந்தால், எங்களை என்ன செய்திருப்பார்களோ, என்ன சொல்லியிருப்பார்களோ தெரியாது. நான் வருத்தத்தோடு சொல் கிறேன். அரசியல் கட்சி நடத்துகிறவர்கள் வெளியே மக்களிடம் பணம் வாங்கித் தான் நடத்த வேண்டியிருக்கிறது. ஒருவர் 100 ரூபாய் தருகிறார். இன்னும் வசதி படைத்தவர் என்றால் 1,000 ரூபாய் தருகிறார், இன்னொருவர் வசதி இல்லாதவர்கள் என்றால் 1 அணா, 2 அணா என்றும், மற்றொருவர் 1 ரூபாய் என்றும் கொடுக்கலாம். சங்கங்கள் நடத்துபவர்களானாலும், அந்தந்த யூனியன்களைப் பொறுத்தவரையில் பணம் வாங்கித்தான் ஆக வேண்டும். ஆனால், ஏழைகள், ஆயிரக்கணக்கில் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்த அந்த ஏழைத் தொழிலாளர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்லி, முதலமைச்சர் அவர்கள் நிதியிலிருந்து உதவி செய்ய வேண்டும் என்று கேட்கப்பட்டது. அப்படிக் கேட்டபோது ஆளுக்கு 200 ரூபாய்தான் கொடுக்க முடிந்தது. அப்படி மொத்தமாக 26 லட்சம் ரூபாய் கொடுத்தோம். அங்கே ஒரு குறிப்பிட்ட சங்கம், நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை, அந்தச் சங்கத்தைச் சார்ந்த ஒருவர் என்ன செய்திருக்கிறார் என்று சொன்னால், அந்தப் பணத்திலிருந்து ஆளுக்கு 10 ரூபாய் என்று வாங்கியிருக்கிறார். ஆயிரக்கணக்கில் சம்பாதித்த தொழிலாளர்கள் 4, 5 மாதங்களாக சம்பளம் இல்லாமல் இருக்கிறார்கள் என்று 200 ரூபாய் கொடுத்தால், அதிலே 10 ரூபாய் சங்கத்திற்குப் போகிறது. அவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று அவர்களுக்கு 200 ரூபாய் கொடுக்கும் போது, அதிலே 10 ரூபாய் சங்கத்திற்கு வாங்குவது எப்படி நியாயம் என்று கேட்டால் ‘சங்கம் நடத்த வேண்டாமா?’ என்று கேட்கிறார்கள். மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்லி, அவர்களுக்கு இந்த உதவியைச் செய்திருக்கிறோம். குரோம்பேட்டையிலே கொடுக்கவில்லையா . . . .

திரு. ஆர். டி. சீத்தாபதி: தலைவர் அவர்களே, எந்தச் சங்கம் என்று அறிவித்தால், நாட்டுக்கு நன்மை பயக்கும், எங்களுக்கும் நலமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். டி. சீத்தாபதி அவர்களுக்கு மிகவும் நெருங்கிய நண்பர். அவர்கள் இருவரும் திட்டமிட்டு திரு. குப்புசாமி என்பவரோடு சேர்ந்துதான் இது நிறை வேற்றப்பட்டிருக்கிறது. இவைகளைச் சொல்லி வீண் வம்புக்கு வரவேண்டாம். சொல்லுவது பெரிதல்ல. சொல்லுவதன் பயனாக உங்களுக்கு நன்மை இல்லை யூனியன் வைத்திருப்பவர்கள் அப்படித்தான் செய்வார்கள்; போனஸ் வாங்கினால் தொழிலாளர்களிடத்திலே பங்கு பெறுகிறார்கள், இல்லையென்று. .

***திரு. ஆ. நல்லசிவன் :** தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களிடம் நன்கொடை வாங்குவதே தவறு என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்களா? தொழிற்சங்கம் நடத்த முதலாளிகளிடமிருந்து பணம் வாங்க முடியாது. போனஸ் வாங்கும்போது பணம் வாங்குவது தவறா?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** சங்கம் நடத்துபவர்கள் எந்தத் தொழிலாளர்களுக்காகப் போராடுகிறார்களோ அவர்களுக்காக எப்போது வேண்டுமானாலும் அவர்களிடமிருந்து பணம் பெற்றுக்கொள்ள உரிமை இருக்கிறது. ஆனால், அவர்களிடம் சாப்பாட்டுக்குப் பணம் இல்லை, ஆயிரக்கணக்கில் சம்பளம் வாங்கியவர்கள், நான்கைந்து மாதங்களாக வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று சொல்லி, முதலமைச்சர் நிதியிலிருந்து உதவி கொடுங்கள் என்று சொல்லி கொடுக்கும்போது, அதிலேயும் 10 ரூபாய் கமிஷன் என்பது நியாயம் இல்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** நான் அந்தக் குறிப்பிட்ட சங்கத்திற்கு வக்காலத்து வாங்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 200 ரூபாய் தருகிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் தங்களின் தேவையைப் பூர்த்தி செய்கிறார்கள். ஆனால், பாக்டரி இன்னும் திறக்கப்படவில்லை, அப்படி இருக்கும்போது அதைத் திறக்க வைக்க சங்கம் தொடர்ந்து போராட வேண்டியிருக்கிறது; அதற்கு நிதி வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வாங்கலாம் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்களே!

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** எந்தச் சங்கம் நடத்த வேண்டும் என்று சொன்னாலும், முதலாளியை நம்பி நடத்த முடியாது. தொழிலாளர்களை நம்பித்தான் நடத்த வேண்டும், அல்லது மக்களை நம்பி நடத்த வேண்டும். போனஸ் வாங்கினால் இவ்வளவு கொடு என்றில்லாமல், எப்பொழுது வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்ற நிலைமை வேண்டும். அப்படி இல்லாத நிலைமை வரும்போதுதான் பிரச்சினை உருவாகிறது.

(முற்பகல் 11.40)

நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், சிலர் உண்மையிலேயே தொழிலாளர்களுக்காகச் சங்கம் வைத்து நடத்துகிறார்கள் . . . .

**திரு. ஜே. எம். மியாகான் :** சில தொழிற் சங்கங்களுக்கு முதலாளிகளும் பணம் கொடுக்கிறார்கள் என்ற உண்மையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அறிவார்கள் என்று நம்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனுபவத்தின் அடிப்படையில் இதைச் சொல்லுகிறார் என்று நம்புகிறேன். என்றாலும் அவர் சார்ந்திருக்கிற கட்சிக்குத் தொழிற் சங்கம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர்கள் அதிகமாகக் குறுக்கிடாமலிருப்பது நல்லது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் தொழிற் சங்கத்தோடு தொடர்புடையவர் என்பதால், குறுக்கிட்டார். எல்லோரும் குறுக்கிடுவது எப்படி நியாயமாகும்?

***திரு. நீலநாராயணன் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, வேலையில்லாது இருக்கும் தொழிலாளர்களுக்காக முதலமைச்சர் நிதியிலிருந்து ரூபாய் 26 லட்சம் கொடுக்கப்பட்டதாகவும் அதிலிருந்து ஒவ்வொரு தொழிலாளியிடமிருந்தும் ரூ. 10 தொழிற் சங்கம் பெற்றுக் கொண்டதாகவும் குறிப்பிட்டார்கள். அந்தத் தொழிலாளர்கள் பி & சி மில்லைச் சேர்ந்தவர்கள் என்று நான் கருதுகிறேன். அவர்களுக்குத்தான் கொடுத்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட நிலையில் பி அண்டு சி மில்லோடு நண்பர் திரு. குப்புசாமி அவர்களின் பெயரைத் தொடர்புபடுத்தி, அவருடைய தொழிற் சங்கத்திற்கும் அதில் உண்டு என்ற முறையில் சுட்டிக் காட்டுவது சரியல்ல. பி அண்டு சி மில்லில் தி.மு.க தொழிற்சங்கம் கிடையாது. எனவே குப்புசாமிக்கோ, தி.மு. கழகத்திற்கோ இந்த நிதி வசூலில் சம்பந்தமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** எனது நெருங்கிய நண்பர் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் சொன்னதைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். டி. சீத்தாபதி தொழிற் சங்கத்தின் பெயரைக் கேட்டார். அப்படிச் சொல்வதென்றால், அது உங்களுடைய நெருங்கிய நண்பர் ஒருவரின் சங்கம்தான் என்று சொன்னேனே தவிர, அவர்தான் அந்தச் சங்கத்தின் தலைவர் என்று சொல்லவில்லை. எங்கள் கட்சியில் தொழிலாளர் தலைவராக இருந்தவர் இன்றைக்கு அமைச்சராக இருக்கிறார். இப்போது திரு. கை. பெருமாள் தொழிற் சங்கத் தலைவராக இருக்கிறார். இப்படிப் பலருக்கும் பல தொடர்பிருக்கிறது என்பதைத்தான் சொன்னேன்.

**திரு. ஆர். டி. சித்தாபதி :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மின்சார வாரியத்தைப்பற்றிச் சொன்னாரா அல்லது பஞ்சாலைத் தொழிற் சங்கத்தைப் பற்றிச் சொன்னாரா? இந்த இரண்டில் எது என்று சொல்லிவிட்டால், நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பஞ்சாலையைப்பற்றித்தான் சொன்னார். சம்பந்தமில்லாமல் எல்லோரும் கேட்டுக்கொண்டே போனால் எப்படி?

**திரு. ஆர். டி. சித்தாபதி :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே ஒப்புக்கொள்கிறார். நீங்கள் ஏன் ஒத்துக்கொள்ளமாட்டேன் என்கிறீர்கள்?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதற்காக அவைத் தலைவரைப் பார்த்து, "நீ யார்?" என்று கேட்பது முறையல்ல. உறுப்பினர் உட்கார வேண்டும்.

**திரு. ஆர். டி. சித்தாபதி :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே ஒப்புக் கொள்ளும்போது, தலைவர் அதை மறுப்பது சரியல்லவே என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதற்காகத் தலைவரைப் பார்த்து "நீ யார்?" என்று கேட்பதா? இதெல்லாம் சரியல்ல. உறுப்பினர் அமர்ந்து உட்கார வேண்டும்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** இது பின்னி மில்லைப் பொறுத்ததுதான். மின் வாரியம் சம்பந்தப்பட்டதல்ல.

மின் வாரியத்தைப் பொறுத்தவரையில், நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மின் வாரியத்தின் மூலம் தொடர்ந்து மேலும் மேலும் நட்டப் பட்டுக் கொண்டே போவதும், அதன் காரணமாக மின் கட்டணத்தை உயர்த்திக் கொண்டே போவது என்பதும் சரியல்ல. எங்கெங்கே பணத்தைப் பெற முடியுமோ அங்கிருந்தெல்லாம் பணத்தைப் பெற்று நட்டத்தை ஈடுகட்ட வேண்டும் என்று மத்திய அரசு வற்புறுத்தி, "நாங்கள் கோடிக் கணக்கில் பணம் தந்து தமிழகத்தின் மின் உற்பத்திக்கு வாய்ப்பு செய்து தருகிறோம், மேலும் வெளியே இருந்தெல்லாம் கடன் வாங்கித் தருகிறோம், ஆனால் தமிழ் நாட்டில் உள்ள நீங்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தொடர்ந்து நட்டத்தை ஏற்படுத்திக் கொண்டிருப்பது எப்படி நியாயமாகும்?" என்று அவர்கள் கேட்பது உண்மையிலேயே நியாயமானதுதான். இதன்



காரணமாக நாம் கட்டணத்தை உயர்த்த வேண்டிய அவசியம் வருகிறது.
அப்படி உயர்த்தினால், இங்கே இருக்கிற அனைவரும்--என்னையும் சேர்த்தே
சொல்கிறேன்—கட்டணத்தை உயர்த்தக் கூடாது என்று சொல்லுகிறோம்.
எங்கே உயர்த்தக்கூடாது என்கிறோம்? விவசாயிகளுக்கு உயர்த்தக்கூடாது
என்கிறோம். பெரிய விவசாயிகளானாலும் சரி, சிறிய விவசாயியானாலும்
சரி, எல்லோருக்கும் மின் கட்டணம் சமமாக இருக்க வேண்டும் என்று சொல்லு
கிறோம். சரி, வீடுகளுக்கு மின் கட்டணத்தை உயர்த்துவோம் என்றால், அது
எப்படி நியாயமாகும் என்ற கேள்வி உண்டாகிறது. இப்படிப் பல்வேறு
பிரச்சினைகள் உருவாகின்றன. இவைகளையெல்லாம் ஒழுங்குபடுத்த
எண்ணிப் பார்க்கிறபோதுதான் யாராவது முன்வந்து இந்தப் பொறுப்பை
ஏற்றுக்கொண்டு "நாங்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்து தருகிறோம்,
நீங்கள் நட்டத்தை அடையத் தேவையில்லை, உங்களுக்கு ஆண்டுக்கு இவ்வளவு
என்று தருகிறோம்" என்று சொல்வார்களானால், ஏன் நாம் அதை ஒப்புக்
கொள்ளக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். நமக்குப் பணம் வேண்டும்.
பணம் வேண்டும் என்பது மட்டுமல்ல, அதிகமாக வேண்டும். நான் கணக்குப்
போட்டுப் பார்த்தேன். ஒயர் கெட்டுப் போனது, அல்லது திருடு போனது
என்று எல்லாக் கணக்கையும் பார்த்தால், ஆண்டுதோறும் நமக்கு விரய
மாகும் பணம் சாதாரணமாக 17 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கிறது.
இதைக் கண்டுபிடிக்க வேண்டியவர்கள் கண்டுபிடிப்பதில்லை. இதற்காகத்தான்
ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தோம். 'ஸ்பாட் பில்லிங்' முறையில் கார்டு
கொடுக்க வேண்டும் என்று தொழிலாளர்களுக்குச் சொன்னால், உடனே
அவர்கள் கோர்ட்டுக்குப் போய் தடை உத்தரவைப் பெற்று வருகிறார்கள்.
எதற்கும் தடை உத்தரவு பெற்றுவிடுகிறார்கள். நேற்றையதினம் மாண்புமிகு
உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் இங்கே குறிப்பிட்டார். எதையும்
நடத்த முடியவில்லையே என்று குறைபட்டுக் கொண்டார்கள். இதன்
காரணமாக நாட்டில் கறுப்புப் பண முதலைகள் வளருவார்களானால், அப்படிப்
பட்ட தனிப்பட்ட கறுப்புப் பண முதலைகளிடம் பணம் போய்ச் சேருமானால்,
கண்டிப்பாக நாட்டில் மாற்று அரசு ஒன்று நடப்பதைப் போன்ற நிலைமை
தான் வரும். கறுப்புப் பணத்தை வைத்துக் கொண்டிருப்பவர்கள் ஒரு மாற்று
அரசை நடத்துவார்கள் என்று சொன்னார்கள். ஏறக்குறைய இப்போதே சில
இடங்களில் அப்படிப்பட்ட நிலைமைதான் இருக்கிறது என்பதை நாம்
உணர்ந்திருக்கிறோம்.

நம்முடைய நாணயத்திற்கு என்ன மதிப்போ அதைக் கெடுப்பதே அந்தக்
கறுப்புப் பணத்தால்தான் என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறோம்.
மறைந்த நண்பர் திரு. சிட்டிபாபு அவர்கள் உயிரோடு இருக்கும்போது

செங்கற்பட்டில் முதன்முறையாக அவரோடு ஒரு கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது அவர் டெல்லியில் அதற்கு முன்னாள் பேசியதை ஒட்டி இந்தப் பிரச்சினையை வேறு விதத்தில் அணுக வேண்டும் என்று சொன்னார்கள். அப்போது "100 ரூபாய் நோட்டுகளையும், 1,000 ரூபாய் நோட்டுகளையும், 50 ரூபாய் நோட்டுகளையும் செல்லாது என்று அரசாங்கம் உடனடியாக அறிவிக்க வேண்டும். அப்போதுதான் இதைத் தடுக்க முடியும்" என்று சொன்னேன். எனக்குத் தெரிந்த பொருளாதார அனுபவத்தில் அதைச் சொன்னேன். இன்றைக்கு முதலமைச்சராக இருந்து கொண்டும் சொல்கிறேன். நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் என்ன சொன்னேனோ அதையே இங்கே சொல்கிறேன். 100 ரூபாய் நோட்டுகள் போன்றவைகளைச் செல்லாது என்று அறிவித்து, புதிதாகக் கொண்டு வந்தால்தான், ஓரளவுக்குச் சரிக்கட்ட முடியும். இல்லாவிட்டால் இந்த நிலைமையைத் தடுக்க முடியும் என்று என்னால் சொல்ல முடியாது.

அதற்காக நாம் சும்மா இருக்க முடியாது. நம்முடைய கடமை ஒன்று இருக்கிறது. மக்களுக்காக மின்சாரம் வழங்கியாக வேண்டும். புதிய தொழிற்சாலைகள் உண்டாக வேண்டும். புதிய தொழிற்சாலைகள் வந்தால்தான், பலருக்கு வேலை கிடைக்கும், பொருளாதாரம் உயரும். மக்களுக்கு வேலை கிடைத்து அவர்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும். மக்கள் எளிமையில் இருக்கும் வரை நாம் நிம்மதியாக இருக்க முடியாது. அந்த வகையில் நாம் அந்த காரியத்தைச் செய்ய முனையும்போது, அதற்கு இடையூறாக இருப்பது, நமது கொள்கைக்கு இடையூறாக இருப்பது எதுவானாலும் அதைப்பற்றிக் கவலைப்பட முடியாது.

எது மக்களை வாழ வைக்கும் என்ற முறையில்தான் நாம் அதைப் பார்க்க வேண்டும். அரிசிதான் பொதுவாக நமது உணவு. ஆனால் மூன்று மாதங்களுக்கு அரிசி வராது என்றால், கோதுமையாவது கிடைத்தால் உண்போம் என்கிற வகையில் நிலைமை ஏற்பட்டால், அதைத் தனியார் ஏற்றுக்கொண்டு லாபத்தோடு நடத்திக்காட்ட முடியும் என்று யாராவது முன்வருவார்களானால், ஏன் அதை ஒப்புக்கொள்ளக்கூடாது? அதைத்தான் கேட்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் தன் பேச்சில் அப்படியே போயிருந்தால், இதைத்தான் கேட்டிருப்பார். ஆனால் அவர் அதற்கு மேல் போகாமல் வேறு வகையில் போய்விட்டார். அவர் சொல்ல முடியாதவர் அல்ல. இருந்தாலும் சொல்ல வேண்டாம் என்று அப்படியே விட்டுவிட்டார். ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.



சிமிண்ட் பற்றாக்குறை என்கிறோம். பல கட்டிடங்கள் கட்டப்பட முடியாமல் இருக்கின்றன. பல கட்டிடங்கள் பாதியில் நிற்கின்றன. சிமிண்டுக்கு அவ்வளவு கஷ்டம் இருக்கிறது. இந்த அரசைப் பொறுத்த வரையில், அப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்க்க முடியாத நிலையில் அந்த ஆலைகளை எல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால், இந்த அரசு எடுத்துக்கொள்ளத் தயங்காது என்று சொல்லிக்கொள்கிறேன்.

ஆகவே, கொள்கை என்பது மக்களை வாழ வைக்க ஒரு சாதனமே தவிர வேறல்ல. தேசியமயமாக்குவதானாலும் சரி, தனியாரிடம் கொடுப்பதானாலும் சரி, அதன் காரணமாக மக்களுக்குப் பயன் ஏற்படும் என்றால், அதைச் செய்வதற்கு நாம் தயங்கக்கூடாது. இதைப் பயன்படுத்திக் கொண்டு தனிப்பட்டவர்கள் தங்கள் வாழ்க்கையை உயர்த்திக்கொள்ள முனைவார்களானால், அந்தப் போக்கைத் தடுத்திட நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.50)

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே மின் துறையைப் பொறுத்த வரையில், தேசியமயமாக்கப்பட்ட கொள்கையை மாற்றுகின்ற முறையிலே மீண்டும் தனியார் துறையில் மின்சாரத்தை உற்பத்தி செய்ய விரும்புகிறார்களா அல்லது தனிப்பட்ட தொழிற்சாலைகள் தங்களுக்கு தேவையான மின்சாரத்தை தாங்களே உற்பத்தி செய்து கொள்ளலாம் என்ற வகையிலே அரசு நடவடிக்கை அமையுமா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் தெளிவுபடுத்திவிடுவது நலம். மின்சாரத் துறையைப் பொறுத்த வரையில், இது முக்கியமான எசென்ஷியல் சர்வீஸ் என்பதால், நஷ்டம் இருந்தாலும் தேசியமயமாக்கப்படுவதுதான் நல்லது. அப்போதுதான் சமுதாயத்திலும், பல்வேறு துறைகளிலும் ஏற்படுகின்ற பொருளாதார ஆதிக்கத்தைத் தடுக்க முடியும் என்ற அடிப்படையிலே மின்துறை தேசியமயமாக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் என்னை இக்கட்டான நிலையில் நிறுத்தி விட்டார்கள். இங்கே மத்திய அமைச்சர் திரு. ராவ் பிரேந்திர சிங் அவர்களும் மற்ற அமைச்சர்களும் இங்கே வந்தபோது, இந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : அது "கேப்டிவ் ஜெனரேட்டர்"

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இப்படி நஷ்டத்திலே ஓடுவதைவிட தனியார் நடத்தி அதனால் அரசுக்கு இலாபம் வருமானால், தனியாரிடத்திலேயே விடுவதில் தடையில்லை என்ற கொள்கை மைய அரசுக்கு இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அதை தெளிவாகத் தெரிந்துகொண்டு மறுப்புச் சொல்லட்டும், பிறகு பதில் சொல்கிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல மத்திய அமைச்சரிடம் தெரிந்து கொண்டு மீண்டும் வந்து சொல்கிறேன். ஆனால் ஏற்கெனவே இந்தத் துறை அதிகமான அளவிலே வளர்ந்திருப்பதால், இந்தத் துறையில் நஷ்டம் இருந்தாலும்கூட, மாநிலத்தின் தனி நலனைக் கருதி தனியாரிடம் ஒப்படைக்காமல் இருப்பது நல்லது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல, பல பேர் பணம் கட்டாததால், அந்த மின்துறையில் சிக்கன நடவடிக்கை எடுக்காததால் இதனைச் செயல்படுத்த முடியாமல் இருக்கலாம். அதைத் தவிர்த்து நம்முடைய மாநிலத்திற்கேற்ற வகையிலே அணுகுமுறையை மாற்றியமைக்க முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "தனி தொழிலதிபர்கள் இலாபகரமாக மின் சாரத்தைத் தயாரித்துக் கொடுத்தால், அரசு அதைப் பெற்றுக்கொள்ளலாம் என்று மத்திய அரசு சிந்திக்கிறது" என்று திரு. ராவ் பிரேந்திர சிங் அவர்களை உதாரணம் காட்டி திரு. இராமமூர்த்திக்கு வேண்டுமானால் பதில் சொல்லலாம். பொருளாதாரக் கொள்கையை உருவாக்குகிற நேரத்தில், "கமாண்டிங் ஹைட்ஸ் ஆஃப் இக்கானமி" ( Commanding heights of the economy ) என்ற நிலையில் உள்ள இதுபோன்ற துறைகளை தேசியமயமாக்க வேண்டுமென்று பண்டித நேரு அவர்களே கூறியிருக்கிறார்கள். என்ன வந்தாலும் அடிப்படைத் தொழில்களைத் தனியாரிடத்திலே விடக் கூடாது என்ற கொள்கையை எடுத்து 1956 ஆம் ஆண்டு தொழில் கொள்கை என்று அறிவித்திருக்கிறார்கள். அதை பகிரங்கமாக மத்திய அரசே இன்னும் மாற்றவில்லை. பாராளுமன்றத்தில் அதற்கான அறிவிப்பு எதுவும் வரவில்லை. அப்படி இருக்கும்போது வெளியே "புரோப்" பண்ண பார்க்கிறார்கள். யார் யார் என்ன சொல்லுகிறார்கள் என்று பார்ப்பதற்காக அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். தமிழக முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய கொள்கை இப்படி என்று கூறி தனியாரிடம் கொடுக்க ஏன் முன்வர வேண்டும் என்று அறிய விரும்புகிறேன்.



திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது முக்கியமான பிரச்சினையை விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே நேரமானாலும் தவறில்லை என்று கருதுகிறேன். சென்ற ஆண்டு ஆளுநர் உரையிலே, "மதுவிலக்குக் கொள்கையைப்பற்றி எல்லோரும் தங்கள் கருத்துக் களை தாராளமாகச் சொல்லுங்கள்" என்று ஒரு வரி போட்டிருந்தார்கள். நாங்கள் தாராளமாக எங்கள் கருத்துக்களைச் சொல்லாமல் விட்டுவிட்டு அவர்களுடைய கொள்கை எப்படி வருகிறது என்று பார்த்தோம். கடைசியில் அது மதுவிலக்கு ரத்தில் கொண்டுபோய் விட்டது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மதுவிலக்கு ரத்து அல்ல. தளர்த்தியிருக்கிறோம்.

திரு. ம. சங்கரலிங்கம் : முதலமைச்சர் 'தளர்த்தியிருக்கிறோம்' என்று சொல்கிறார்கள். நாங்கள் 'ரத்து செய்திருக்கிறீர்கள்' என்று சொல்லு கிறோம். நாட்டு மக்கள்தான் தீர்ப்பைச் சொல்ல வேண்டும். மதுவிலக்கு மாதிரி இந்த ஆண்டு ஆளுநர் உரையிலே மின்சாரத் துறையைப்பற்றி ஒரு வரி சேர்த்திருக்கிறார்கள். இதுகுறித்து எங்களுக்கு ஐயப்பாடு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, "மனம் திறந்து இதுபற்றி உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்" என்று கேட்கிறபோது, நான் உண்மையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்தைத் தெளிவு படுத்த விரும்புகிறேன். இதுபோன்ற பெரிய, இன்றியமையாத தேசத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாத துறைகளை நாம் தனியார் துறையில் விடுவது பெரும் கேடு. அதில் எவ்வளவு இலாபம் வருவதாக இருந்தாலும், தேவை யில்லை. "இப்போது மின்சாரம் இல்லையென்றால், தொழில் வளர்ச்சி இல்லை, தொழில் வளர்ச்சி இல்லையென்றால் வேலை வாய்ப்பு இல்லை; வேலை வாய்ப்பு இல்லையென்றால் வறுமையில் வாடுகின்றவர்களுக்காக திட்டம் தீட்ட முடியாது. மக்களுக்காக வாழ்கிறோமா அல்லது கொள்கைக்காக வாழ்கிறோமா?" என்று மிகத் தெளிவாகச் சொன்னார். நல்ல முறையிலே மிகத் தெளிவாக விளக்கிச் சொன்னார்கள். உலகம் முழுவதும் பரிசீலனை செய்து பார்த்ததில் தனிப் பெரும் முதலாளித்துவம் என்று வருகிறபோது, அவன் சுயநலத்தில்தான் இருக்கிறான். நாட்டு நலன், சமூக நலன், பொது நலன் ஆகியவற்றை அவன் உள்ளத்திலே யாராலும் புகுத்த முடியவில்லை. இவற்றை ஒதுக்க பணச் சக்தி, ஆற்றல் காரணமாக அமைகிறது. ஆகவே தனி தொழிலதிபர் திறமையால் பல நன்மைகள் வருவதாக இருந்தாலும் கூட, பொதுத் துறையில் உற்பத்தி செய்வதை விட குறைவான விலையில் உற்பத்தி செய்தாலும்கூட, பொதுத் துறையிலிருந்து நழுவாமல் இருந்து, அதில்

[திரு. ம. சங்கரலிங்கம்]        [1982 பிப்ரவரி 16

சிக்கனத்தைக் கடைப்பிடித்து பொதுத் துறையிலேயே நடத்த வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, "இப்படிப்பட்ட எண்ணம் வராத நிலையில் கடினமாக உழைத்து, வேலை நிறுத்தங்கள் செய்யாமல் நல்ல முறையிலே உழைத்து, சிக்கனமாகச் செலவு செய்து பொதுத் துறையினை இலாபகரமானதாக மாற்றுங்கள்; இல்லா விட்டால் விளைவு இப்படிப் போகும்" என்று பொதுத் துறையிலே இருக்கக் கூடிய நிறுவனங்களுக்கும், தொழிலாளர்களுக்கும் எச்சரிக்கை விடுவதற்கு வேண்டுமானால் இதைப் பயன்படுத்துங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் உறுதியாக, பொதுத் துறையிலே இருக்கின்ற பெரிய ஆலைகளையும், உற்பத்தி நிறுவனங்களையும் தனியார் துறைக்கு விடுகிற கொள்கையைப் பின்பற்றக்கூடாது என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அழுத்தமான கருத்து என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** அண்ணாவின் கருத்து என்று சொல்லலாம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து என்றால் அண்ணாவின் கருத்துதான். அண்ணாவினுடைய கருத்தைத்தான் நான் வலியுறுத்திச் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** நான் பின்னால் என்ன சொல்ல வேண்டுமென்று கருதினேனோ அதைத்தான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனக்காக அவர் பேசியதற்காக நான் நன்றி கூறுகிறேன்.

முதலிலே திரு. ஆர். டி. சீத்தாபதி அவர்களுடைய சந்தேகத்திற்குப் பதில் சொல்கிறேன். திரு. குப்புசாமியின் பெயரைப் பயன்படுத்தியதால் அவர் ஏதோ பத்து ரூபாய் வாங்கிவிட்டாரோ என்று ஐயப்படுகிறார். சங்கத்திற்குச் சங்கம் உறவுகள் எப்படி இருக்கின்றன என்பதற்காகத்தான் சொன்னேன். இதிலே அவருக்குச் சம்பந்தம் இல்லை என்று சொல்வதன் மூலமாக திருப்தி அடைவார் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். "வேலை நிறுத்தம், ஒத்துழையாமை, போராட்டங்கள், இவைகள் எல்லாம் இல்லாமல் கடுமையாக உழைத்து இலாபத்தைப் பெறக்கூடிய நிலைமையிலே இதைக் கொண்டு வரவேண்டும், அதற்கு எல்லோரும் ஒத்துழைப்போம்" என்று சொன்னார்கள். அப்படியொரு நிலை இருக்குமானால், ஏன் இந்தச் சங்கடம்?



1982 பிப்ரவரி 16]   [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

நான் அங்கேதான் வருகிறேன். அண்ணா தி.மு.க.வும் அங்கேதான் வருகிறது. சிமெண்ட் தொழிற்சாலையை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்கிற நான் மின்சார உற்பத்தியை தனியாருக்கு விட்டுவிடலாம் என்று எண்ணக் கூடிய அளவிற்கு நான் ஏன் கட்டாயத்திற்கு ஆளாகிறேன்? ஏழைகளுக்காகச் செலவழிக்க வேண்டிய 100 கோடி ரூபாய் ஆண்டுக்காண்டு விரயம் ஆகிக் கொண்டிருக்கிறது. மற்றவர்களும் ஒத்துழைத்தால், 100 கோடி ரூபாய் இலாபத்தைப் பெற்று மொத்தம் ஆண்டுக்கு 200 கோடி ரூபாய் வரும். இதை வைத்துக் கொண்டு எவ்வளவு திட்டங்கள் தீட்டலாம். அதற்காகத்தான் சொல்கிறேனே தவிர வேறு ஒன்றுமில்லை. அண்ணாவினுடைய கொள்கையில் எந்த மாறுபாடும் இந்த அரசுக்கு இல்லை என்பதை எல்லோரும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளலாம், நம்பலாம். ஆனால் தற்கொலை செய்துகொள்ள நான் தயாராக இல்லை. சில காலத்திற்கு உயிரோடு இருந்து செய்ய வேண்டியதைச் செய்து பிறகு மக்களிடமிருந்து விடை பெற்று ஓய்வு எடுப்பேன். இது தற்கொலை முயற்சிதான். 100 குழந்தைகள் பட்டினி கிடக்காமல் இருக்க ஒரு திட்டம் போடலாம். இன்றைக்கு எத்தனை குழந்தைகள் பசியால் வாடிக் கொண்டிருக்கிறார்கள்? அவர்களுக்கு நாம் என்ன செய்கிறோம்? அவர்களுக்காக என்ன திட்டத்தைக் காண்பித்திருக்கிறோம்? எத்தனை பேர் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள் கிராமங்களில், நகரங்களில்? அவர்களுக்கு என்ன சொல்லவிருக்கிறோம்?

(நண்பகல் 12.00)

ஏதாவது ஒரு நம்பிக்கையை உருவாக்கித் தந்திருக்கிறோமா? அதைத்தான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். அதைத் தீர்க்க வேண்டுமென்றால், அதற்கு இடையூறாக இது குறுக்கே நின்று அரசுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தும் என்றால், இந்தக் கொள்கையைத் தளர்த்தி வைத்து, அதை நிறைவேற்றித்தான் ஆக வேண்டும். அதுபோலவே 40 சதம் தனியாருக்கு, 60 சதம் அரசுக்கு என்று அவர்கள் இஷ்டம்போல், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் சொல்வது போல் தனியார் வளருவதற்கு வழி வகுத்துக்கொடுத்துவிட்டு, ஒத்துழைப்பு இல்லாமல் இருக்கக் கூடிய நிலைமையில் கலப்படம், கள்ளத்தனம், சுய உரிமை இப்படிப்பட்ட நிலைமைகளில், இங்கே 60 சதம், அங்கே 40 சதம் என்று ஆக்கி, ஒருவருக்கும் நன்மை செய்யாமல் இருப்பதைவிட, அரசே எடுத்துக்கொள்வது என்றால் ஏன் எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதைப் பார்க்க வேண்டும். இந்தக் கொள்கையிலே நமக்கு வேறுபட்ட கருத்தில்லை. தேவையை அனுசரித்து நடவடிக்கையில் இறங்குவதில் தான் நாம் வழி முறைகளை உருவாக்கிக் கொள்கிறோமே

தவிர, கொள்கை அளவிலே என்று சொல்லிக்கொண்டு தற்கொலை செய்து கொள்ள யாருமே தயாராகக்கூடாது என்பதுதான் என் கருத்து. என் வேண்டுகோள்.

இங்கே மதுவிலக்குக் கொள்கை பற்றியெல்லாம்கூட சொன்னார்கள் அவர்கள் அச்சப்படுவதாகச் சொன்னார்கள். அவர்கள் மொழியிலே ரத்து செய்துவிட்டதாகச் சொல்கின்றார்கள். எங்களுடைய மொழியிலே அது தளர்த்தப்பட்டிருக்கிறது என்று சொல்கிறேன். இப்படித்தான் நிலைமைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். தயவுசெய்து அங்கத்தினர்கள் நம்பலாம். அண்ணா அவர்கள் வழியிலிருந்து நாங்கள் மாறமாட்டோம். இன்னொன்று சொல்கிறேன், போக்குவரத்துப் பேருந்துகள் இருக்கின்றன. இன்றையதினம் அவைகளின் நிலைமை எப்படி இருக்கிறது? நல்ல லாபம் வந்து கொண்டிருந்தது. இப்போது அத்தனை அமைப்புகளிலும் நஷ்டம் வந்திருக்கிறது. எத்தனையோ பேருந்துகள் தாக்கப் படுகின்றன. ஏன் அது மக்கள் சொத்து இல்லையா? அதற்கு ஊறு செய்யும்போது தடுக்க முனைந்தோமா? எங்கேயும் நம்முடைய கருத்துகளிலே மாறுபாடு கிடையாது. ஆனால் வெளியிலே இல்லையா? நான் வேடிக்கையாகச் சொல்கிறேன். அது வேடிக்கையாகவே இருக்கட்டும். நான் வேலூருக்குச் சென்றிருந்தேன். அங்கே பெண்கள் பணியாற்றுகின்ற ஒரு கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரியில் மோதல். அவர்கள் ஸ்ட்ரைக் செய்கிறார்கள். நான் அவர்களை அழைத்து வைத்துப் பேசினேன். அவர்களும் அங்கே வந்திருந்தார்கள் என்னைப் பார்ப்பதற்கு. அப்போது டி. ஐ.ஜி. பக்கத்திலிருக்கிறார். எஸ். பி. அவர்கள் பக்கத்திலே இருக்கிறார். அவர்களைப் பக்கத்திலே வைத்துக்கொண்டு இவர்களுக்கு எப்படி உதவி செய்யலாம் என்று கேட்டேன். பெண்கள் ஆயிற்றே என்பதற்குக் கேட்டேன் அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோது 'நீங்களும் இப்படி ஆகிவிட்டீர்களே அது நியாயம் தானா? என்று கேட்டேன். அவர்கள் 'நாங்கள் இன்னமும் ஒரு பேருந்து மேலேயும் கல் அடிக்கவில்லையே' என்றார்கள். இதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். ஆசிரியர்கள், அதாவது பெண் ஆசிரியர்கள் அப்படி பதில் சொல்லுகிறார்கள். 'இன்னமும் நாங்கள் ஒரு பேருந்தின் மீதுகூட கல் வீசவில்லை" என்று சொல்கிறார்கள். அதாவது ஸ்ட்ரைக் என்றால், வேலைநிறுத்தம் என்றால் பேருந்துகளின் மீது கல் வீசுவதுதான் முதல் வேலை, அதுதான் கடமை என்று ஆகிவிட்டது. அப்படி ஆகிவிட்டால், அது நமது சொத்து என்று எப்படி இருக்க முடியும்? நமது சொத்து, அரசுடைமையாக்கப்பட்ட சொத்து என்று சொல்கிறோம்? இன்று இராமச்சந்திரன் இருக்



கிறார் என்றால், பிறகு வேறு யாராவது வரலாம். இன்று ஒருவர் போய் இன்னொருவர் வருகிறார் என்றால், அப்போதும் அது அரசுடைமையாகத்தான், மக்களுடைய சொத்தாகத்தான் இருக்கும். பதவிக்கு வருவார்கள், போவார்கள். ஆட்சி என்பது இருந்து கொண்டேதானிருக்கும். மக்களுக்குச் சொந்தமான சொத்தும் இருந்துகொண்டுதானிருக்கும். அதை நினைக்க முடியாமல் இருக்கிறார்கள். அப்படி நினைக்க முடியாமல் இருப்பவர்கள் வெளியிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். ஸ்ட்ரைக் என்றால் பேருந்து ஓடக்கூடாது என்று கருதினால், இது எப்படிப் பொதுச் சொத்தாக முடியும்? இந்த எண்ணத்தை உருவாக்குவதற்கு முன்பு அவர்களிடம் இது உங்களுடைய சொத்து என்று சொல்ல வேண்டும். இன்றைக்கு இருக்கின்ற நிலைமை இதுதான். இப்போதிருக்கின்ற நிலைமைகளைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த வகையில்தான் என்னுடைய வேதனையைச் சொல்லிக்கொள்கிறேன். அது ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, மாணவர்களாக இருந்தாலும் சரி, தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் இன்றுள்ள பிரச்சினை என்ன? போராட்டம் நடத்துவதற்கு அவர்களுக்கும் உரிமை இருக்கிறது. அதைத் தடுக்க சட்டத்திலே இடம் வைத்திருக்கிறோம். அதுபோல பல்வேறு பிரச்சினைகளை உள்ளடக்கிப் பார்த்தால், வேலை நிறுத்தம், போராட்டம் என்றால் பேருந்துகளை உடைப்பது, தாக்குவது, தீ வைப்பது என்று இருக்கிறார்கள். அதே நேரத்தில் யாராவது கட்டுப்பாட்டை மீறி ஒத்துழைக்கச் சொன்னார் என்றால், அவர் உயிருக்கு ஆபத்தை உண்டாக்குவது என்று இருக்கிறார்கள். அதிலே உயிர்கூட போய்விடுகிறது. இங்கு 'அந்தக் கொள்கையை விட்டுவிட்டார்கள்' என்று சொல்கின்றார்கள். எந்தக் கொள்கையை? நம் அரசுடைமையாக்கப்பட்ட சொத்துக்களை, அரசுக்குச் சொந்தமான சொத்துக்களை, மக்கள் சொத்துக்களை நாசமாக்குவதுதான் நல்ல உணர்வா? அது தான் தேசிய உணர்வா? நாட்டுப் பற்றா? இதை நான் ஏன் சொல்கிறேன்? மக்களை இதை உணரச் செய்ய வேண்டாமா? அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டாமா? மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆறுமுகம் அவர்கள் வன்முறைகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். யார் பேச வேண்டுமோ அவரே பேசினார். ஆகவே அதற்கு நான் நிறைய பதில் சொல்கிறேன். அப்படிப்பட்டவர் பேசுவதுதான் நமக்கும் நல்லது. அவருக்குத் தெரியும். வன்முறைகளை எப்படி எப்படிச் செய்வார்கள், வன்முறைகள் என்பது எப்படி எப்படி வருகிறது, இதையெல்லாம் தெரிந்தவர். ஆகவே அவர் நிச்சயமாக வெளியிலே சொன்னால் இதுபோன்ற வன்முறைகளைத் தவிர்க்கலாம். அந்த நம்பிக்கை எனக்கு உண்டு. எல்லோரும் சேர்ந்து செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

A.M. 11

**திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், என்னைப்போல இருப்பவர்கள் என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்வதிலேதான் நான் கருத்து வேறுபடுகிறேன். (சிரிப்பு) இப்படி வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளுங்கள். நம்மைப் போன்று என்று வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளலாம். முதலமைச்சர் அவர்கள் ஏதோ என்னைப் போன்ற என்று சொல்வதினாலே, வன்முறையைத் தவிர்க்கலாம் என்று சொல்வது தவறு. அந்த அடிப்படையிலே அவர்கள் சொல்வது ஒரு உள்நோக்கம் கற்பிப்பதாக அமைந்துவிடும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தயவு செய்து திரு. ஆறுமுகம் அவர்கள் அப்படிக் கருதவேண்டாம். உள்நோக்கம் வைத்து அப்படிப் பேசுகிறவன் நான் அல்ல. நான் நேரடியாகப் பேசுகின்றவன்தான். நிலைமைகளை விளக்கும்போது சொல்கிறேன். ஏனெனில் பொதுவாக யார் யார் எப்படி எப்படி எங்கெங்கே கட்டுப்படுத்துகிறார்கள், எங்கெங்கே செல்வாக்கு இருக்கிறது, என்ன நினைத்தால் என்ன நடக்கும் என்பது போன்றவற்றை எண்ணும்போதுதான், அதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. நீலநாராயணன் அவர்களைப் பார்த்தா சொல்வேன்? பாவம். அவரும் நெருங்கிய நண்பர் தான். இப்போதும் அவர் நண்பர்தான். அவருடைய தம்பி திரு. ராஜப்பா . . .

**திரு. நீலநாராயணன் :** அவர் என் அண்ணன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** 'டச்' விட்டுப்போயிருக்கும்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** அவருடைய அண்ணன் தான். ரொம்ப நாளாக 'டச்' விட்டுப்போயிற்று. இதை எதற்காகச் சொல்கிறேன்? இலங்கைத் தமிழர் போராட்டம் நடந்தது. அப்போது மதிப்பிற்குரிய மாண்புமிகு அங்கத்தினர் திரு. நீலநாராயணன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நான் இப்போது குறிப்பிட்டுச் சொல்வது குறிப்பில் வரவேண்டாம் என்று மாண்புமிகு தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவர் மீது ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அங்கே இருந்துகொண்டு என்ன என்ன சொன்னார்கள். இப்போது ரெக்கார்டிலே இருக்கிறது. எல்லாம் இருக்கிறது வேனி சொன்னது. அதுபற்றிய படம் எல்லாம் இருக்கிறது நான் இப்போது பேசுவது இங்கே குறிப்பிலே வராது. இப்போது நான் சொல்ல



விரும்புகிறேன். சிலர் சொல்ல முடியும். சிலருக்குச் சொல்ல முடியும். சிலருக்குச் சிந்திக்க முடியும். சிலருக்கு மற்றவர்களை ஈர்த்துத் தடுக்க முடியும். அப்படிப்பட்டவர்கள் எங்கேயும் இருக்கிறார்கள் . . . இருக்கிறோம் அதைத்தான் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்த எண்ணத்தை முதலிலே அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் மாற்றியாக வேண்டும். தமிழகத்திலே ஒரு நல்ல நிலைமையை உருவாக்க வேண்டும். கல் எறிதல், பேருந்துகளைத் தாக்குதல், பேருந்துகளுக்குத் தீ வைத்தல் இவைகளையெல்லாம் ஏதோ சாதாரண விளையாட்டாக நாம் கருதுகிறோம். மாணவர்களுக்கு எங்கே தகராறு வந்தாலும், அந்தப் பேருந்துகள்தான் அவர்கள் கண்களுக்குத் தெரிகிறது. ஆசிரியர்கள் பற்றி வெளியிலே தெரியவில்லை.

**திரு. செ. முத்துசாமி :** முதல்வர் அவர்கள் ஆசிரியர்கள் என்று சொல்லி விட்டார்கள். அதனால் சொல்கிறேன். ஆசிரியர்கள் (நாங்கள்) கல் போட மாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** ரொம்ப நன்றி. அதை ஆசிரியர்கள் மாணவர்களுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டும். அதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, இதுவரையிலும் ஆசிரியர்கள் போராட்டங்கள் ஏராளமாக நடைபெற்றிருக்கின்றன. ஆனால் ஒரு போராட்டத்திலாவது ஆசிரியர்கள் போராட்டத்திலே கல் எறிந்ததாக வரலாறே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாணவர்களை விட ஆசிரியர்கள், நல்லவர்கள் என்று சொல்கின்றார் அங்கத்தினர் அவர்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாணவர்களும் ஆசிரியர்களைப் பார்த்து மட்டுமே எதையும் செய்வதில்லை.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தலைவர் அவர்கள் மூலமாக ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். மாணவர்கள் செய்கைகளுக்கு ஆசிரியர்கள் மட்டுமே பொறுப்பல்ல. இதை நான் முதல்வர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சமுதாயத்தில் உள்ள கேடுபாடுகள் அத்தனையும் மாணவர்களை பாதிப்பதாக இருக்கின்றன. ஆசிரியர்கள் அவர்களுக்கு போதிப்பது 5 மணி நேரம் தான். மீதி நேரத்தில் தான் சமுதாயத்திலே இருக்கக்கூடிய கேடுகளைக் கற்றுக்கொள்கின்றார்கள். அந்த சமுதாயத்திலே வாழ்கின்றார்கள். அதைக் கற்றுக்கொள்கிறார்கள். ஆசிரியர்களால் அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அடுத்த விஷயத்தை ஆரம்பிப்பதற்கு வழி வகுத்துக் கொடுத்திருக்கின்றார்கள். திரு. முத்துசாமி அவர்களுக்கு அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 5 மணி நேரம் வேலை செய்வது அவர்களுக்குப் போதாது. அவர்கள் இன்னும் அதிகமான வேலை செய்தாக வேண்டும். ஏனென்றால் நன்றாகப் படிக்கின்ற ஒரு குழந்தைக்கு சில மணி நேரம் சொல்லிக் கொடுத்தால் போதும். சில குழந்தைகள் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதைக் கேட்டுக்கொண்டிருந்தாலும் கற்றுக்கொள்ளும். சில

(பிற்பகல் 12.10)

குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்தாலும் வராது, கற்பித்தாலும் வராது. அப்படிப்பட்டவர்களுக்கு பெரியவர்கள் பக்கத்தில் துணை நின்று சொல்லிக் கொடுக்க வேண்டும். தவறிப் போகும் மாணவர்கள் எங்கிருந்தாலும், ஆசிரியர்கள் அங்கு சென்று, சமுதாயத்தைப் பற்றியும், எப்படிப்பட்டவர்களோடு பழகுவது, எப்படிப் பழகுவது, எப்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்வது என்பது பற்றியும் பாடங்கள் நடத்த முன்வந்தால், அது நாட்டுக்குச் செய்கின்ற தியாகமென்று சொல்லி, பாராட்டு கூற முடியும். அதைச் செய்தாக வேண்டும். அதைச் செய்ய வேண்டிய மாபெரும் பொறுப்பு ஆசிரியர்களுக்கு இருக்கிறது. அதுமட்டுமல்ல. கல்வியிலே ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தியாக வேண்டும். வெறும் பட்டப் படிப்பு மட்டுமென்ற நிலையிலிருந்து மாறி, தொழிற் கல்வியோடுதான் அது வளர வேண்டுமென்ற நிலைக்கு முழுமையாகக் கொண்டு வரும்வரை நாட்டிலே நல்ல நிலைமைகளைக் காண முடியாது. ஒரு இயந்திரத்தைப் பழுது பார்த்து, சீர் செய்ய வேண்டுமென்றால் எவ்வளவு உழைக்க வேண்டுமென்று தொழிலாளிக்குத் தெரியும். அதை அவர் அழித்துவிட மாட்டார். அதுபோல, மாணவர்கள் இந்த நாட்டிலுள்ள சொத்துக்களை, மற்றவைகளைத் தெரிந்துகொள்ளும்படி செய்ய வேண்டும். ஆகவே ஒவ்வொரு குழந்தைக்கும் குறிப்பிட்ட வயதிலிருந்து தொழிற் கல்வியை அளிக்கும் அளவிற்கு கற்பிக்கும் பணியை மேற்கொண்டால்தான், நன்மை அளிக்கும். இந்த நாட்டின் எதிர்காலத்தை இளைஞர்கள் கையில் ஒப்படைக்கப் போகிறோமென்று சொல்லும்போது, எப்படிப்பட்ட இளைஞர்கள் கையில் ஒப்படைக்க இருக்கிறோமென்பதை நம்பிக்கையோடு சொல்ல முடியும். இந்த நேரத்தில் அண்ணா அவர்கள் சொன்னதை நினைவுபடுத்த விரும்புகிறேன். மாணவர்கள் கோட்டைக்கு முன்னால் ஒருமுறை போராட்டம் நடத்த இருந்தபோது, ஒரு மாணவர் பச்சையப்பன் கல்லூரியிலிருந்து வந்து, அண்ணா அவர்களைச் சந்தித்தார். நான் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளப்



போகிறேன் என்று அவர் சொன்னார். அண்ணா அவர்கள், 'கலந்துகொள்ளக் கூடாது' என்று சொன்னார்கள். 'கலந்துகொள்ளத்தான் போகிறேன், உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன்' என்று மாணவர் சொன்னார். 'நீ அப்படிச் செய்வாயானால், என்னை இனி பார்க்கக்கூடாது; என் பெயரைப் பயன்படுத்தக்கூடாது' என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். 'உண்மையிலேயே என் முதல் விரோதி நீதான்' என்றும் சொன்னார். அந்த மாணவர் அழுதேவிட்டார். அப்போது திராவிட நாடு கேட்டுக்கொண்டிருந்த காலம். "திராவிட நாடு வேண்டுமென்று கேட்கிறோம், திராவிட நாடு இப்போது கிடைக்கவில்லை என்று வைத்துக்கொள், 15 ஆண்டுகள் கழித்து கிடைக்கிறது அல்லது 20 ஆண்டுகள் கழித்து கிடைத்துவிட்டது, அப்படிக் கிடைக்கும் நேரத்தில் இந்த நாட்டிற்குத் தேவையான பணிகளை ஆற்றப்போவது யார்? பொறியாளர்கள் வேண்டும், நல்ல வழக்கறிஞர்கள் வேண்டும், நல்ல மருத்துவர்கள் வேண்டுமென்றால், உங்களைப் போன்றவர்கள் கற்று, தேர்வு பெறாவிட்டால் வெளிநாட்டிலிருந்துதான் கொண்டு வர வேண்டும், அந்த நிலையில் விடுதலை பெற்றால் என்ன, பெறாவிட்டால் என்ன, எல்லாம் ஒன்றுதான்" என்று சொன்னார்கள். பிரிவினையா, இல்லையா என்பதல்ல பிரச்சினை. மாணவர்களுக்கு நல்ல கல்வி கொடுக்க வேண்டுமென்றால், அதற்கு முழுப் பொறுப்பையும் இப்போது இருக்கின்ற நாம் ஏற்றுக்கொண்டால், அது நம்முடைய கடமை உணர்வாக இருக்கும். அதை விட்டுவிட்டு, கட்சியை வளர்க்க சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, சிலரைத் தூண்டிவிட்டு, காரியங்களைச் செய்தால், அது உண்மையிலேயே நாட்டுக்குச் செய்யும் துரோகம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே ஒன்றைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். எந்தப் பிரச்சினையானாலும், முதலில் ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்வதில்லை என்ற உறுதிக்கு வந்தாக வேண்டும். உங்கள் பிரச்சினையைப் பேசித் தீர்த்துக்கொள்ளுங்கள். உண்மையிலேயே, சொல்லப் போனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள், கல்வி அமைச்சர் திரு. அரங்கநாயகத்திற்கு நெருங்கிய நண்பர். எதுவும் போட் பேசலாம், சொல்லலாம். திரு. முத்துசாமி அவர்களும் அப்படித்தான். அம்மையார் அவர்களும் அப்படித்தான், மற்றவர்களும் அப்படித்தான். நேரிலே வந்து பேசட்டும். பேசி முடிவு செய்யட்டும். போராட்டம் எதற்கு? இவர்கள் போராடினால், அதைப் பார்க்கின்ற மாணவர்கள் என்ன செய்வார்கள் வீட்டிலே இருக்கின்ற பெரியவர்கள் எதைப் பழக்கமாக வைத்துக்கொள்கிறார்களோ அதில் கொஞ்சமாவது அந்தக் குழந்தைகளின் குணமாக இருக்கும் மென்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் 5 மணி நேரந்தானே என்று குறைபட்டுக்கொள்ளாமல், '5 மணி நேரம்' சொல்லிக் கொடுக்கிறோ

வேலை செய்கிறோம், 19 மணி நேரம் அவர்கள் வெளியே இருந்தாலும்கூட, 5 மணி நேரத்தில் மாணவர்களை, மாணவிகளை நாம் நல்ல குடிமக்களாக—அந்தக் குடி மகன் இல்லை—ஜனநாயகத்திற்குத் தேவையான மக்களாக உருவாக்கித் தந்தோம் என்று எண்ணி, அதை நீங்கள் செய்தால், இந்த அரசு நன்றி உடையதாக இருக்குமென்பதோடு மட்டுமல்லாமல், எதிர்கால தமிழக வரலாறு உங்களைப் போற்றுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வரவர்களின் வேண்டுகோளை ஏற்று, ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். வேலை நிறுத்தம் கூடாதென்று ஆலோசனை சொன்னார்கள். அதையும் நான் ஏற்கிறேன். ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு இல்லாததால் தான் வேலை நிறுத்தம் என்பதால், எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்வு காண வேண்டும்; அவர்கள் பட்டினி கிடக்கக்கூடாது என்ற அளவில் சட்ட விதி முறைகளை உருவாக்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் முதல்வரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** யாராவது பட்டினி இருக்க வேண்டும், அதற்குப் பிறகுதான் கவனிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த அரசு இல்லை. நான் பட்டினி கிடந்து பழகியவன், அதைப்பற்றி எனக்குத் தெரியும். போராட்டம் நடத்துவது யார் என்பதற்கு நாம் ஒரு அளவுகோலை வைத்துக்கொள்ள வேண்டும். நீதிபதிகளுக்குப் பிரச்சினை இல்லையா? மருத்துவர்களுக்குப் பிரச்சினை இல்லையா? கார் ஓட்டுநர்களுக்குப் பிரச்சினை இல்லையா? இந்தப் பிரச்சினைகளையெல்லாம் வேலை நிறுத்தத்தின் மூலம்தான் தீர்ப்பதென்றால், பொது மக்களைக் காப்பாற்றுவது யார்? கணக்கு எடுத்துப் பாருங்கள் . . .

**திரு. ஆ. நல்லசிவன் :** எல்லோருமே பொது மக்களிலே ஒரு பிரிவினராக இருக்கும்போது, பொதுமக்கள் யார்?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** இப்படித்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் அவசரப்பட்டு, தவறு செய்வார்கள். அரசிடமிருந்து, தனியார் துறையிடமிருந்து சம்பளம் வாங்குபவர்கள் ஒரு பக்கம். வேலையில்லாதவர்கள், வண்டி இழுப்பவர்கள், மூட்டை சுமப்பவர்கள், வீடு கட்டும் தொழிலாளி இவர்களெல்லாம் ஒரு பக்கம். இவர்களின் எண்ணிக்கையை ஒப்பிடும்போது, 100க்கு 25க்கு மேல் நான் சொல்லும் முதல் பிரிவு இராது. ஆக 75 சதவிகிதம் பொது மக்கள் என்பதை மனதிலே வைத்துக்





கொள்ள வேண்டும். அவர்களைப் பிரித்துப் பேசக்கூடாதென்ற எண்ணம் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு இருக்கலாம். ஆனால் உண்மை நிலை என்ன? என்.ஜி.ஓ. வினர் போராடுகிறார்கள், அகவிலைப் படிக்காக. ஒத்துக்கொள்கிறேன். அவர்களுக்குக் கொடுக்கிறோம். பாக்கியிருக்கும் 4 கோடி மக்களுக்கு அகவிலைப் படி கேட்கிறார்கள். அவர்களுக்குக் கொடுத்தாக வேண்டும். கேட்பது? அவர்களுக்குத் தஞ்சம் எங்கே? அவர்களுக்குத் தலைவன் எங்கே? நாம்தான். நம்மைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். நாம்தான் அவர்கள் தலைவர்கள். நாம்தான் சொல்ல வேண்டும். நாம்தான் அவர்களுக்காகப் பேசியாக வேண்டும். நாம்தான் செய்தாக வேண்டும். ஆனால் இவர்களைப்பற்றிச் சிந்திப்பதில்லை. எல்லோரும் ஒன்று என்று சொல்லுகிறார்கள். பேருந்தில் ஒருவன் கல்லை எறியும்போது, அதில் போகிறவன் அடிபடுகிறான். அவன் மக்களில் ஒருவனில்லையா? . . . .

**திரு. ஆ. நல்லசிவன் :** பிரச்சினைகளுக்காகப் போராடுகிறவர்கள் மக்களல்ல என்று சொன்னால், எப்படி? 25 சதவிகிதத்தினரும் மக்களில் ஒரு பகுதியினர்தான். சனவரி மாதம் 19 ஆம் தேதி நடந்த போராட்டத்தில் தஞ்சையில் 7 லட்சம் பேர்கள் கோரிக்கையை ஆதரித்து வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். விவசாயக் கூலியை அமல் நடத்த வேண்டுமென்று அனைத்து விவசாயத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்தால், அவர்கள் கல் எறிபவர்களுடன் சேருவார்களா அல்லது பொது மக்களாக இருப்பார்களா?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குப் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரும்பத் திரும்ப ஒரு கொள்கையைச் சொல்லியாக வேண்டும். அரசிடம் உரிமையோடு போராடி, அகவிலைப்படி, உணவிற்குப் படி, யார் கொடுக்கிறார்கள்? அவர்கள் யாரிடம் விலைவாசி ஏறும்போது, அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அகவிலைப் படி அவர்களுக்குக் கொடுக்க வேண்டு

(பிற்பகல் 12.20)

மென்றால், கொடுக்கத்தான் வேண்டும். ஆனால் கேட்க முடியாமல் இருக்கின்ற கோடிக்கணக்கானவர்களுக்கு யார் பொறுப்பு? அவர்களுக்கு யார் தருவார்கள்? என்னுடைய கட்சியில்—இங்கு அப்படிப் பேச வேண்டியிருக்கிறது—அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் 23 லட்சம் பேர்களுக்கு மேல் உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்ற கணக்கு இருக்கிறது. இவர்களுக்கு மட்டும் தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள் என்ற உரிமை தரப்பட்டிருக்கிறது. இன்னொரு கட்சியில்

40 லட்சம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள், எனக்கு ஆட்சேபணையில்லை. மீதியிருக்கிற கட்சிகளில் கூட இதுபோல் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆனால் மூட்டை சுமப்பவர்கள் இருக்கிறார்களே, குழந்தையை இடுப்பிலே வைத்துக்கொண்டு வேலையில்லாமல் நம்மைப் பார்த்து 'வாழ்க, வாழ்க' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே அவர்களுக்கு உணவும், மாதந்தோறும் வருமானமும் கொடுப்பது யார் என்ற கேள்வியைக் கேட்டு சில திட்டங்களையும் அவர்களுக்காக அறிவிக்கிறேனே, அடுத்து தேர்தலுக்கு வாக்குகளைப் பெறுவதற்காக அப்படிச் செய்யவில்லை. இப்படி அறிவிக்கின்ற திட்டங்களைப் பற்றி யார் தவறாகச் சொன்னாலும் பரவாயில்லை. வாக்கு அளித்தவர்களுக்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டுமே தவிர, இனிமேல் தேர்தல் வந்தால், ஓட்டு கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் எந்தக் காரியத்தையும் நாங்கள் செய்யத் தயாராக இல்லை. எங்களைத் தேர்ந்தெடுத்தவர்களுக்காகச் செய்கிறோம். சிமெண்ட் பற்றிச் சொன்னார்கள். நாட்டு மக்களின் நன்மையைக் கருதி எப்படிப்பட்ட நடவடிக்கை தேவையோ அதை எடுப்போம். நாட்டு மக்களுக்கு எது தேவையோ அதை எங்கள் கொள்கை வழி செய்வோம். இந்த நாட்டிலே வாழ்கின்ற கோடிக்கணக்கான மக்களுக்கு இந்த ஆட்சியும், இங்கே அமர்ந்திருக்கக் கூடிய உறுப்பினர்களும் பதில் சொல்ல வேண்டியவர்கள் என்பதை தயவுசெய்து யாரும் மறந்துவிடக் கூடாது. போராட்டம் பற்றிப் பேசினார்கள். யாரை எதிர்த்துப் போராட்டம்? அரசுடைமையாக்கப்பட்ட ஒன்றை எதிர்த்துப் போராட்டம். அரசுடைமையாக்கப்பட்ட பொருள்கள் வீணாக்கப்படுமானால், அழிக்கப்படுமானால், அது யாருடைய வாழ்வுக்காக வைக்கப்பட்டிருக்கிற பொருள் என்று நான் கேட்கிற கேள்வி குறிப்பேட்டில் வரவேண்டும் என்பதற்காகக் கேட்கிறேன். சில விலைகளை நிர்ணயிப்பது மத்திய அரசு. ஆனால் அதே நோத்தில் சில பொருட்களை உற்பத்தி செய்கின்றவர்கள் விலையை நிர்ணயிப்பது எப்படி நியாயம்? விலையை இதற்குள் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொல்லிவிட்டு, அதேசமயத்தில் தேவையான இடுபொருட்களின் விலையை அதிகப்படுத்தினால் அது எப்படி நியாயம்? இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு நாம் முடிவு, தீர்வு கண்டாக வேண்டாமா? ஒருவரை எதிர்ப்பது மட்டும் கொள்கையல்ல. நல்லதைப் பாராட்ட எங்களோடு எப்படித் துணையாக இருக்க வேண்டுமென்று நான் சொல்வேனோ அதேமாதிரி நாங்கள் குற்றம் செய்தால், அதைத் திருத்த வேண்டுமென்று எங்களுக்குச் சொல்லி எங்களுக்குத் துணையாக இருக்க வேண்டுமென்று எப்படிச் சொல்வேனோ அதேபோல இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கும் நீங்கள் தீர்வு காண எங்களுக்குத் துணையாக இருக்க வேண்டும். தமிழகத்திற்கு என்று பேசும்போது, தமிழகத்தில்...





ஏழை எளிய மக்களிடையே பட்டினி என்கிற ஒரு சூழ்நிலை ஏற்படுமானால் இந்த நிலை இந்தியா பூராவும் பரவி விடலாம் அல்லவா. இதையும் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்னொரு கடிதத்தை நான் படிக்கப் போகிறேன். அதைப் பார்த்து நாம் அனைவரும் வெட்கப்பட்டுத்தான் ஆக வேண்டும். 4-2-1982 அன்று மாலை 5.45 மணி அளவில் கிருஷ்ணமூர்த்தி என்பவர் தனது மனைவி விஜயலட்சுமியுடன் வட ஆற்காடு மாவட்டம், மோனம் கிராமத்தில் செய்யாறு—ஆற்காடு சாலையில் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும்போது 4 பேர் 2 மோட்டார் சைக்கிள்களில் வந்து வழி மறித்து கிருஷ்ணமூர்த்தியின் கை கடிகாரத்தையும், அவருடைய மனைவியின் தாலி, டாலர் சங்கிலியையும் கத்தி முனையில் பறித்துக் கொண்டு ஓடிவிட்டார்கள். இவ்வாறு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களும் மற்றவர்களும் பேசியிருக்கிறார்கள். முன்முறை, சட்டம் ஒழுங்கு பற்றிப் பேசியது இது. இன்று வந்த செய்தியை நான் படிக்கிறேன். வட ஆற்காடு மாவட்டக் காவல் துறை முழுவதும் உஷார் படுத்தப்பட்டு குற்றவாளிகள் தாமரைப்பாக்கம் கிராமம் அருகில் ஒரு மோட்டார் சைக்கிளை விட்டு விட்டு ஓடிவிட்டார்கள். செய்யாறு டி.எஸ்.பி. தலைமையில் புலன் ஆய்வுக்கு தனிப் பிரிவு அமைக்கப்பட்டது. செய்யாறு காவல் துறை ஆய்வாளர், ஆரணி காவல் துறை துணை ஆய்வாளர் ஆகியோர் நம்பர் பிளேட் இல்லாத ஒரு மோட்டார் சைக்கிளில் விஜயகுமார், சத்தியமூர்த்தி என்பவர்களைத் துரத்திப் பிடித்து விசாரித்தபோது, குற்றத்தை அவர்கள் ஒப்புக்கொண்டனர். அவர்களிடமிருந்து தங்கத் தாலி கைப்பற்றப்பட்டது. டாலரும் கைக்கடிகாரமும் மற்ற இரு குற்றவாளிகளிடமும் இருப்பதாகச் சொல்லப்பட்டது. அவர்களையும் பிடிப்பதற்கு புலனாய்வு தனிப் பிரிவு முயற்சி எடுத்து வருகிறது. சம்பந்தப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள்களில் ஒன்று சென்னையைச் சேர்ந்த இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை நிருபருக்குச் சொந்தமானது என்று தெரிய வருகிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இன்னும் 5 நிமிடம் இருக்கிறது. முடிக்க எவ்வளவு நேரம் ஆகும்?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** இன்னும் ஒரு மணி நேரம் தேவை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சொல்லிக்கொண்டிருப்பதை வேண்டுமானால் சொல்லி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** சொல்ல வந்தது அவ்வளவு தான்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உரை நாளை தொடரும்.

மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் நாளை காலை 9.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 12.25)



### 4. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

#### *A. Statutory Rules and Orders.*

93. Notification issued with G.O. Ms. No. 932, Food and Co-operation, dated the 10th December 1981 regarding an amendment to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. (Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961)).

#### B. *Reports, Notifications and Other Papers.*

Nil.

## இணைப்பு

(95 ஆம் பக்கத்தில் இனம் 2 (1)க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

மாநிலங்களுக்குத் தேவையான மண்ணெண்ணெய் மத்திய அரசால் மாதா மாதம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மண்ணெண்ணெய் இருப்புக் குறைந்ததைத் தொடர்ந்து 1979 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் தமிழ்நாட்டிற்கு மண்ணெண்ணெய் ஒதுக்கீடு குறைந்தது. அதனால் ஏற்பட்ட மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டைப் பயன்படுத்தி மண்ணெண்ணெயை வியாபாரிகள் கள்ளச் சந்தையில் அதிக விலையில் விற்க முனைந்தனர். மண்ணெண்ணெயை மக்களுக்கு சீராகவும் சமமாகவும் நியாய விலையில் விநியோகிக்கும் நோக்குடன் மண்ணெண்ணெயை செப்டம்பர், 1979 முதல் பொது விநியோக முறையில் நியாய விலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைகளுக்கு வழங்கும் முறையை அரசு அமுல்படுத்தியது.

குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் கீழ்க்கண்ட அளவுகளில் வழங்கப்படுகிறது :—

| | |
|---|---|
| சென்னை நகரம் மற்றும் மாவட்டத் தலைமை நகராட்சிகள் | 10 லிட்டர்கள் |
| மற்ற நகராட்சிப் பகுதிகள் | 6 லிட்டர்கள் |
| நகரப் பஞ்சாயத்துக்கள் | 5 லிட்டர்கள் |
| கிராமப் பகுதிகள் | 3 லிட்டர்கள் |

இந்த அடிப்படையில் குடும்ப கார்டுதாரர்கள் மற்றும் மொத்த நுகர்வோர் ஆகியவர்களின் ஒரு மாதத்திற்கான மண்ணெண்ணெய் தேவை 56,124 கிலோ லிட்டர்கள் ஆகும். ஆனால் மத்திய அரசு நடப்பு ஆண்டில் குளிர்கால மாதங்களுக்கு (நவம்பர், 1981 முதல் பிப்ரவரி, 1982 வரை) மாதம் ஒன்றுக்கு 44,975 கிலோ லிட்டர்களும், வரும் கோடைகால மாதங்களுக்கு (மார்ச், 1982 முதல் ஜூன், 1982 வரை) மாதம் ஒன்றுக்கு 41,248 கிலோ லிட்டர்களும் மட்டுமே



ஒதுக்கீடு செய்துள்ளது. பருவ கால மாதங்களான (ஜூலை, முதல் அக்டோபர் 1982 வரை) ஒதுக்கீடு இதுவரை மத்திய அரசிடமிருந்து பெறப்படவில்லை. பொதுமக்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் போன்ற மொத்த நுகர்வோரின் முழு அளவு மண்ணெண்ணெய்த் தேவையையும் சமாளிக்க இந்த ஒதுக்கீடு போதாது. எனினும், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள எண்ணெய்யை பொது விநியோக முறை மூலம் பொது மக்கள் திருப்திப்படும் வகையில் விநியோகம் செய்வதன் மூலம் அரசு நிலைமையை சமாளித்து வருகிறது. இவ்வரசு பல சந்தர்ப்பங்களில் மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டை அதிகரிக்கும்படி மத்திய அரசுக்கு எழுதியது. அதற்கு மத்திய அரசு, மண்ணெண்ணெய் கிடைக்கும் அளவைப் பொறுத்தே மாநிலங்களுக்கு எண்ணெய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று அறிவித்துள்ளது.

கிராமப் பகுதிகளைப் பொறுத்தவரை, சாலை வசதிகள் இல்லாத உட்பகுதி கிராமங்கள் மற்றும் மலைப்பகுதிகளில் கூட நியாய விலைக் கடைகள் மூலம் மண்ணெண்ணெய் வழங்குமாறு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர் ஆகியோருக்கு அரசு ஆணையிட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் மூலம் மாநிலத்தின் எல்லாப் பகுதி மக்களுக்கும் மண்ணெண்ணெய் தட்டுப்பாடின்றி கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் அளவைப் பொறுத்த வரை எப்பொழுது மத்திய அரசு அதிக ஒதுக்கீடு செய்கிறதோ அப்போது கார்டுகளுக்கு வழங்கப்படும் அளவும் அதிகரிப்பது குறித்து அரசு பரிசீலிக்கும். மண்ணெண்ணெய்யை சீராகவும், சமமாகவும் விநியோகம் செய்வது குறித்து ஆராய்ந்து அரசுக்கு அறிவுரை வழங்க அரசு அலுவலர்கள் மற்றும் அலுவலரல்லாதவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட 'ஆலோசனைக் குழு' ஒன்றையும் அரசு அமைத்துள்ளது.

## இணைப்பு II.

(96 ஆம் பக்கத்தில் இனம் 2 (2)க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவில் தாலுக்காவில் உள்ள செல்லப்பட்டி என்ற கிராமத்தில் ஜயந்தி பயர் ஒர்க்கஸ் என்ற வெடித் தொழிற் சாலை உள்ளது. இதில் உள்ள 6 தொழிற் கொட்டகைகளில் தற்போது ஒரே ஒரு வகை வெடி மட்டும் தயாரிப்பதால் 4 கொட்டகைகளே உபயோகத் திலுள்ளன. இங்கு 15 தொழிலாளர்களும் ஒரு கண்காணிப்பாளரும் வேலை செய்கின்றனர். இங்கு மின்சக்தி உபயோகப்படுத்தப்படாததால், தொழிற் சாலைகள் சட்டம் பிரிவு 2 எம் (ii) இன் கீழ் பதிவு செய்ய போதிய நிரூபணம் இல்லை. எனவே, இந்த பயர் ஒர்க்ஸ், தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படவில்லை.

(2) 1-2-1982 அன்று சிறிய அளவிலான அணுகுண்டு என்ற வெடி தயாரிக்க, தாள் பைகளில் இரசாயனப் பொருட்களை அடைக்கும் வேலை நடந்து கொண்டிருந்தது. தொழிற் கொட்டகைகளின் ஓட்டுக் கூரைகள் மழை பெய்தால் ஒழுகக் கூடியதாய் இருந்ததால் மாலை சுமார் 4.15 மணிக்கு அது வரை நிரப்பப்பட்ட தாள் பைகளை இரசாயனப் பொருள் சேமிப்பு அறைக்கு எடுத்துச் செல்லும்படி தொழிலாளர்களுக்கு கூறப்பட்டது. சேமிப்பு அறையின் ஒரு மூலையில் அலுமினியத் தாளும், சால்ட் பீட்டரும் வைக்கப் பட்டிருந்தன. தொழிலாளர்கள், தாங்கள் நிரப்பிய தாள் பைகளை மூங்கில் கூடைகளில் போட்டு சேமிப்பு அறையில் இருந்த 1½' X 1¼' அளவுள்ள ஆணி பொருத்தப்பட்ட பலகையின் மீது தனித்தனியாக வைக்கும் வேலையில் ஈடுபட்டனர். இந்தப் பலகையை அங்கும் இங்கும் இழுத்து நகர்த்தி வைக்கும் போது ஆணி சிமெண்ட் தரையில் உராய்ந்து அதிலிருந்து ஏற்பட்ட தீப் பொறிகளால் இரசாயனப் பொருட்கள் வெடித்து, மாலை 4.30 மணியவில் ஒரு விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் 15 வயதுச் சிறுவர் இருவர் தொழிற்சாலையிலேயே உயிரிழந்தனர். 13 வயதுச் சிறுமியர் நால்வர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு இறந்தனர்.

(3) இறந்த தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு இழப்பு ஈட்டுத் தொகை வழங்கத் தக்க நடவடிக்கை எடுக்குமாறு திருநெல்வேலி கோட்டத் துணை ஆணையாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இரும்பு ஆணி களைக் கொண்ட பலகைகள் உபயோகப்படுத்தக் கூடாது, மழை நாட்களிலும் ஒழுகாத அளவுக்குக் கூரை பொருத்தப்பட வேண்டும், போதிய அளவு

முதலுதவி மருந்துகள் தொழிற்சாலையில் இருக்க வேண்டும் போன்ற தடுப்பு முறைகள் உரிமையாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை மறுபடியும் ஆய்வு செய்யப்பட்டு வேலை நிருபணமிருந்தால், பதிவு செய்யப் படும்.

(4) ஒவ்வொரு தொழிற்சாலையும் ஆண்டிற்கு இருமுறை ஒழுங்காய்வு செய்யப்படுகிறது. தொழிற்சாலைகளில் இரவு ஆய்வும், வேலை நேரம் மீறுகை உள்ளதா என கண்டுபிடிக்க ஆய்வும் செய்யப்படுகின்றன. மேலும் பாதுகாப்பு முறைகள் கடைப்பிடிக்காததற்கும், சிறுவர்களை வேலைக்கமர்த்தினாலும் நிர்வாகத்தின் மீது வழக்குகள் தொடரப்படுகின்றன.

ஆரம்பிக்கப்பட்டுள்ள பாதுகாப்புப் பிரிவு.—

(5) புதிதாக மதுரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பாதுகாப்புப் பிரிவு, உபயோகப்படுத்தப்படும் தொழிற்சாலைகளில் விபத்து உண்டாக்கும் பகுதிகள், இரசாயனப் பொருட்கள் மற்றும் விபத்து தடுப்பு நடவடிக்கைகள் பற்றி அறிந்து தொழிலாளர்களுக்கு உதவும் வகையில் ஒரு கையேடு தயார் செய்ய பணிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

புதன்கிழமை, 1982 பிப்ரவரி 17.

---

மாசி, 5, துன்மதி, திருவள்ளுவராண்டு 2013.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில், முற்பகல் 9.30 மணியளவில், மேலவைத் துணைத் தலைவர் (புலவர் புலமைப்பித்தன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

ஏழு அம்சக் கோரிக்கைகள்.

*81. வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் நுட்ப அலுவலர் கூட்டமைப்பின் சார்பாக ஏழு அம்சக் கோரிக்கைகள் அடங்கிய முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(இ) கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கைகள் என்னென்ன ? அவற்றில் எவையெவை சாதகமான போக்கிலே பரிசீலனை செய்யப்படுகின்றன ? எந்தெந்தக் கோரிக்கைகள் நிறைவேற்ற 'முடியாது' என்று அரசால் தெரிவிக்கப்படவிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மொத்தக் கோரிக்கைகள் 7. அதிலே முதல் கோரிக்கை, அவர்கள் ஒரு போராட்டத்தை நடத்தி அதில் 912 பேர்கள் கைது செய்யப்பட்டிருந்தார்கள், அந்த வழக்குகளை வாபஸ் வாங்கி

[1982 பிப்ரவரி 17

மீண்டும் பணியில் அவர்கள் சேர ஆணை பிறப்பித்தல் சம்பந்தமானது. அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு, வழக்குகள் வாபஸ் வாங்கப்பட்டுள்ளன. மற்ற கோரிக்கைகளான 2-வது, 3-வது, 4-வது, 6வது கோரிக்கைகள் ஏற்க இயலாத கோரிக்கைகள். மேற்சொன்ன இந்த 2, 3, 4, 6 ஆகிய கோரிக்கைகள் ஒரு நபர் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, நிதி தொடர்பான பிரச்சினையாக இருப்பதன் காரணத்தால், ஒரு நபர் குழு ஏற்க இயலவில்லை என்று தெரிவித்தது. 5-வது கோரிக்கை பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. 7-வது கோரிக்கை ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை வேளாண்மை புதிய துறை களுக்கும், மாவட்ட அளவில் நிர்வாகத்தை நீதியோடு நடத்துவதற்கும் நியமிக்க வேண்டும் என்பது. அதை ஏற்க முடியாது.

திரு. ம. சங்கரலிங்கம் : நிதி சம்பந்தமான காரணத்தால், சில கோரிக்கை களை ஏற்க முடியாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் ' நீதி ' சம்பந்தப்பட்ட முறையில் ஏற்கக் கூடிய நிலையில் அவைகள் இருக்கின்றன என்று கருதுகிறார்களா ? அந்தக் கோரிக்கைகள் என்னென்ன ? என்ன குறிப்பிட்ட காரணத்தால், அவைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மூன்றாவது கோரிக்கை, சமமான பொறுப்புடன் பணியாற்றி வரும் துணை வேளாண்மை அலுவலர்களுக்கும், வேளாண்மை அலுவலர்களுக்கும் ஏற்கெனவே இருந்த இணையான ஊதியத் தையும், ஒரே மாதிரியான பதவிப் பெயரையும் திரும்ப அளிக்க வேண்டும் என்பது. நான்காவது கோரிக்கை—வயல் விளக்க அலுவலர்களுக்கு தொழில் கல்வி கற்றதற்கும், தொழில் நுட்பப் பணிச் சிறப்பிற்கும் உரிய அடிப்படை ஊதியம் ரூ. 310 என்ற விகிதத்தில் நிர்ணயிக்க வேண்டும் என்பது, ஆறாவது கோரிக்கை உதவி வேளாண்மை அலுவலர்கட்கு தேர்வுநிலைப் பதவிகள் ரூ. 450 என்ற விகிதத்தில் வழங்க வேண்டும் என்பது. இந்தக் கோரிக்கைகள் ஒரு நபர் குழுவால் பரிசீலிக்கப்பட்டு மறுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்த வேளாண்மைத் தொழில் நுட்ப அலுவலர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதற்குப் பிறகு, அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு, அதற்குப் பிறகு அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் பணியில் இப்போது சேர்க்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட அந்தக் காலத்திற்குரிய ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று வேண்டுகோள்விடுக்கப் பட்டதா அப்படி விடுக்கப்பட்டிருப்பில், அந்தக் காலத்திற்கான ஊதியம் அவர்களுக்குத் தரப்பட்டதா ?



1982 பிப்ரவரி 17]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : அதுபற்றிய தகவல் இப்போது இல்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : அவர்களுடைய 7-வது கோரிக்கை, மாவட்டத் திலே இருக்கக்கூடிய விவசாயத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கை என்றும், அந்தக் கோரிக்கையை ஏற்க இயலாது என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஸ்டேட் கேடரிலேயிருந்து ஐ.ஏ.எஸ். கன்ஃபர் செய்யலாம் என்று சிபார்சு செய்யப்படும் அதிகாரிகளில் ஒரு பெரும் பகுதியினர் வேளாண்மைப் பட்டம் பெற்றவர்களாக இருப்பதால், அவர்களை இப்படி மாவட்ட அளவில் நிர்வாகத்தை நடத்துவதற்குப் போட வேண்டும் என்பது தான் இந்தக் கோரிக்கையின் நோக்கம் என்று நான் கருதுகிறேன். ஐ.ஏ.எஸ். கன்ஃபர்மன்டுக்குச் சிபார்சு பண்ணும்போது, நம்முடைய அரசுப் பணியில் இருப்பவர்களிலே வேளாண்மைத் துறையில் பணி புரியும் பட்டதாரிகளுக்குச் சிறப்பிடம் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இந்தத் துறை மட்டும் முடிவு செய்யக்கூடிய விஷயமல்ல இது.

DR. M. A. MUTHIAH CHETTIAR: Sir, we are not aware of the details of the charter of Demands. Will the Hon. Minister please tell as what are the server demands in the charter of Demands ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல, அவர்களின் முதல் கோரிக்கை—912 தோழர்கள் மீதுள்ள வழக்குகளை வாபஸ் வாங்கி மீண்டும் அவர்களைப் பணியில் சேர ஆணை பிறப்பித்தல்; இரண்டாவது கோரிக்கை—அரசு ரத்து செய்த 486 அரசாணையை மீண்டும் வழங்க வேண்டுவதுடன் மொத்த வேளாண்மை அலுவலர் பதவிகளில் 25 சத விகிதம் கணக்கிட்டு பதவி உயர்வு வழங்கவும் மொத்த உதவி வேளாண்மை அலுவலர் பதவிகளில் 50 சதவிகிதம் கணக்கிட்டு பதவி உயர்வு வழங்கவும் வேண்டும் என்பது ; மூன்றாவது கோரிக்கை சமமான பொறுப்புடன் பணி யாற்றி வரும் துணை வேளாண்மை அலுவலர்களுக்கும், வேளாண்மை அலுவலர்களுக்கும் ஏற்கெனவே இருந்த இணையான ஊதியத்தையும், ஒரே மாதிரியான பதவிப் பெயரையும் திரும்ப அளிக்க வேண்டும் என்பது ;

நான்காவது கோரிக்கை—வயல் விளக்க அலுவலர்களுக்கு தொழில் கல்வி கற்றதற்கும், தொழில் நுட்பப் பணிச் சிறப்பிற்கும் உரிய அடிப்படை ஊதியம் ரூ. 310 என்ற விகிதத்தில் நிர்ணயிக்க வேண்டும் என்பது; ஐந்தாவது கோரிக்கை-தகுதிமிகு வயல் விளக்க அலுவலர்களை உதவி வேளாண்மை அலுவலராக உயர்த்த வேண்டுவது மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்டபடி அனைத்து கலவை உர ஆய்வாளர் பதவிகளையும் வேளாண்மை அலுவலர் களாக உயர்த்த வேண்டுவது; ஆறாவது கோரிக்கை-உதவி வேளாண்மை அலுவலர்கட்குத் தேர்வு நிலைப் பதவிகள் ரூ. 450 என்ற விகிதத்தில் வழங்க வேண்டும் என்பது; மற்றும் வயல் விளக்க அலுவலர்கட்குத் தேர்வு நிலைப் பதவிகள் ரூ. 350 என்ற அடிப்படை விகிதத்தில் வழங்க வேண்டும் என்பது; ஏழாவது கோரிக்கை-வேளாண்மை புதிய துறைகளுக்கும், மாவட்ட அளவில் நிர்வாகத்தை நீதியோடு நடத்துவதற்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்பது.

DR. M. A. MUTHIAH CHETTIAR: May I suggest to the Hon. Chairman and to the Hon. Minister that on occasions like this, the details may be placed on the table of the House, without giving trouble to the Hon. Ministers concerned? That will very much help us also.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: அப்படி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவையிலே வைப்பதில் சிரமம் இல்லை.

### கொட்டையடி ஆற்றின் மீது பாலம்.

* 82. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்:

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தலைஞாயிறு ஒன்றியத்திலுள்ள நாலு வேதபதி ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கும் கொட்டையடி ஆற்றின் மீது 55 தோணித்துறை என்ற இடத்தில் பாலம் கட்ட வேண்டும் என்ற திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.





திரு. க. மீனாட்சிசுந்தரம்: தஞ்சை மாவட்டத்திலே, தலைஞாயிறு ஒன்றியத்திலே நாலுவேதபதி ஊராட்சி இருக்கிறது. அந்த ஊராட்சியின் இடையிலே கடலிலேயிருந்து வருகின்ற உப்பங்கழி என்ற ஆறு பாம்பு போல ஓடுகிறது. அதற்கிடையிலே நிறைய தண்ணீர் கடலிலேயிருந்து வருகிறது. ஒரே பஞ்சாயத்திலே இந்தக் கரையிலிருந்து அந்தக் கரைக்குப் போக முடியாத நிலை இப்போது இருக்கிறது. ஆகவே, அதற்கு இடையிலே ஒரு பாலம் கட்ட வேண்டும் என்று நீண்டகாலமாக வேண்டுகோள் விடுக்கப்பட்டது. நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கூட வேண்டு கோள் விடுக்கப்பட்டது. அவர்களும் கூட பரிசீலிக்கலாம் என்று சொன் னார்கள். அதுபற்றிய செயற்குறிப்பு இப்போது இல்லாவிட்டாலும் கூட, வருங்காலத்திலேயாவது அதற்கு ஒரு திட்டத்தை வகுத்து நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இது ஒரு வகைப்படுத்தப்படாத சாலை—'அன்கிளாசிஃபைட் ரோட்'. அதுமட்டுமல்லாது, இப்போது நம்மிடம் இருக்கும் நிதியாதாரம் போதுமானதாக இல்லை. அதன் காரண மாகத்தான் இதுபோன்ற சாலைகளை உடனடியாக எடுக்க முடியவில்லை. வருமாண்டுகளில் இதுபற்றிப் பரிசீலித்து இந்தத் திட்டங்களை எடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### பயணிகள் விடுதிகள்.

* 83. வினா—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழகத்தில் நகரங்கள் தவிர, மற்ற இடங்களில் நெடுஞ்சாலை- கிராமப்புற வேலைகள் துறையின் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் பயணிகள் விடுதிகள் மாவட்ட வாரியாக எத்தனை?

(இ) அவற்றில் பயன்படுத்த முடியாத நிலையில் பழுதுபட்டு இருப்பவை மாவட்ட வாரியாக, எத்தனை?

(உ) அவைகளைப் பழுதுபார்த்து பயணிகள் தங்கும் நிலைமையினை உருவாக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஏ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

[1982 பிப்ரவரி 17

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ), (இ), (உ) மற்றும் (ஏ) ஒரு விரிவான அறிக்கை @ சட்டமன்ற மேலவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இங்கே தரப்பட்டுள்ள அறிக்கையில் எல்லா மாவட்டங்களிலேயும் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் இருக்கும் பயணிகள் விடுதிகளின் பட்டியல் இருக்கின்றது. கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒன்றும் இல்லை என்று இருக்கிறது. அவ்வாறு இல்லாமலிருப்பதற்கு என்ன காரணம் ? அங்கு பயணிகள் வருகின்றபோது, அவர்கள் தங்கும் வசதியை ஏன் செய்யவில்லை ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தனிப்பட்ட எந்தவிதமான காரணங்களும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் அங்கே இது போன்ற பயணிகள் விடுதி வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில்தான் இந்தக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் கேட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** கன்னியாகுமரி மாவட்டத்தின் நுழைவாயிலாக இருக்கும் ஆரல்வாய்மொழியில் போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிர்புறத்தில் சாலையோரத்தில் ஒரு டி.பி. இருக்கிறது. தோவாளைத் தாலுக்காவில் பூதப்பாண்டியில், சீதப்பால் என்ற இடத்தில் இன்னொரு மாளிகை இருக்கிறது. முன்பு இந்த இரண்டு பங்களாக்களும் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமானவை என்று சொல்லப்பட்டது. பின்னர் அவர்கள் தங்களின் பொறுப்பில் இல்லை என்றார்கள். இப்போது யாரும் பொறுப்பு எடுத்துக் கொள்ளாமல், அவைகள் பழுதடைந்து, திரிசங்கு சொர்க்கத்திலே இருப்பதுபோல இருக்கிறது. ஆகவே இந்த மாளிகைகள் பி. டபிள்யூ. டிபார்ட்மெண்டின் வசம் இருந்தால் அவற்றை நெடுஞ்சாலைத் துறையே ஏற்று எடுத்துச் செப்பனிட்டு, பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** அப்படிப்பட்ட நிலையிலே பயணிகள் விடுதிகள் இருந்தால், அதை நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக ஏற்றுக்கொண்டு புதுப்பித்து நல்ல விடுதியாக ஆக்கக் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.



1982 பிப்ரவரி, 17]

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** நெடுஞ்சாலைத் துறைக்கு அதிக அளவில் பயணிகள் விடுதி இல்லாமல் இருக்கிறது. புதிய பயணிகள் விடுதிகள் கட்டி மக்களுக்கு வசதி செய்யும் நோக்கம் அரசுக்கு இருக்கிறதா ? இந்த விடுதிகளில் யார் யார் எல்லாம் தங்குவது என்ற பட்டியல் சுதந்திரம் பெறுவதற்கு முன்னாலேயே போடப்பட்டதுதான் இப்போதும் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதி அதில் பின்தங்கியிருக்கிறது. ஆகவே அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா ?

(முற்பகல் 9—40)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலத்துறையின் மூலமாக, தேசிய நெடுஞ்சாலைகள் போகும் வழியில் "மோட்டல்" கட்டும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. இத்தகைய மோட்டல்கள் நவீன வசதிகளோடு, பயணிகளைக் கவரும் வகையில் கட்டப்படும். இரவு நெடுஞ்சாலைகளில் செல்லுகிறார்கள் அத்தகைய மோட்டல்களில் தங்கிச் செல்வதற்கு வசதியாக அவைகள் கட்டப்பட விருக்கின்றன. பயணிகள் விடுதிகள் பொதுவாக நெடுந்தூரத்திற்குப் பயணம் செல்பவர்கள் பயன்படுத்துவதற்குத்தான் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகளில் தங்குவதற்கு எந்த அடிப்படையில் பட்டியல் தயாரிக்கப்பட்டது என்பது பற்றிய குறிப்பு இப்போது என்னிடம் இல்லை. ஆனாலும் சட்டமன்ற, சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள், போன்றவர்கள் தங்குவதற்கான வசதிகள் அவைகளில் செய்து கொடுக்கப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள 147 பயணியர் விடுதிகளிலும் தொலைபேசி இணைப்புகள் செய்து தரப்பட்டுள்ளனவா ? தொலைபேசி இணைப்பு இல்லாத பயணியர் விடுதிகளில் தொலைபேசி இணைப்பை ஏற்படுத்தித் தருவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** எல்லா பயணியர் விடுதிகளிலும் தொலைபேசி வசதி இல்லை. சில குறிப்பிட்ட பயணியர் விடுதிகளில் மட்டுமே தொலைபேசி வசதி இருக்கின்றது. எனினும் அனைத்து பயணியர் விடுதிகளிலும் தொலைபேசி இணைப்பு வசதி செய்து கொடுக்க முடியுமா என்பதை அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. சு. எஸ். வெங்கடேசன் :** இத்தகைய பயணியர் விடுதிகளில் தங்குவதற்கு எவ்வளவு வாடகை வசூலிக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** விவரம் இல்லை.

DR. M. A. MUTHIAH CHETTIAR: Sir, many of these Tourist Bungalows are very much in disrepair and they do not also have enough accommodation. In reply to a point raised by the hon. Member Dr. Janarthanam, the Hon. Minister stated that some motels were to be constructed. But, there are not many people who go and use these motels. Therefore, may I suggest to the Hon. Minister to increase the number of rooms in the existing Tourist Bungalows and also to see that proper care is taken of the people who go and stay there? Now, unless a Deputy Tahsildar or somebody else is there in charge of the supervision of arrangements, I do not think the Highways Department man is available in the Tourist Bungalow to look after the people who go and stay there.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஒவ்வொரு பயணியர் விடுதியிலும், "கேர் டேக்கர்" என்ற முறையில் ஒரு காவலாளிதான் இருக்கிறார். இப்போது அரசு பரிசீலித்து வருகிற நவீன வசதிகளுடன் கூடிய மோட்டல்களில் "கேர் டேக்கர்", "சமையல்காரர்" போன்றவர்களையும் நியமித்து தங்குவோருக்கு நல்ல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்றுதான் அரசு நினைக்கிறது.

திரு. சி. இராமலிங்கம்: நெடுஞ்சாலைத் துறையின் மூலம் நெடுஞ்சாலைகளில் பயணியர் விடுதிகளை மட்டும்தான் நாம் அமைத்திருக்கிறோம். ஏழை எளிய மக்கள் கிராமங்களிலிருந்து பேருந்துகளிலும், வண்டிகளிலும் நெடும்பயணம் செய்கிறார்கள். அவர்களெல்லாம் குளத்தில் தண்ணீர் குடித்துவிட்டு மரத்தடியில் தங்க வேண்டியிருக்கிறது. எனவே, மன்னர்கள் காலத்தில் குளங்களையும், மண்டபங்களையும் கட்டிக்கொடுத்தார்கள். இப்போது ஏழை எளிய மக்களுக்கு வசதி செய்து கொடுக்கும் வகையில் ஆங்காங்கே குளங்களையும் சுமைதாங்கிகளையும், தங்குவதற்கு ஓய்வு இல்லங்களையும் கட்டிக் கொடுக்கும் யோசனை அரசுக்கு இருக்கிறதா? இருந்தால் அதை எப்படி எப்போது நடைமுறைப்படுத்தும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அது இராஜாக்கள் காலம். இப்போது எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாகிவிட்டதால், யார் வேண்டுமானாலும் எங்கே வேண்டுமானாலும் தங்கலாம்.

THIRU G. VASANTHA PAI: Sir, will the Hon. Minister consider the fact that the maintenance of these Tourist Bungalows is more important? Even though a number of buildings may be constructed,



maintenance is more important. Every time I go to Bangalore, I stop at the motel in Ranipet and every time I find that the maintenance has been deteriorating. For example, the sheets are not changed. Even in the Tamil Nadu House at Delhi, there has been a steady deterioration and the sheets are not even changed regularly and there are many holes, etc. in the sheets. Except in Rooms Nos. 102, 206 and 306 which the Hon. Ministers occupy, in every other room even the sheets are not changed. May I request the Hon. Minister to put somebody there who will be in charge of the washing and laundering and who will see that the sheets are changed because, otherwise, these may result in diseases being spread from one person to another?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இராணிப்பேட்டையில் இருக்கும் மோட்டல் சுற்றுலாக் கழகத்தின் மூலமாக நிருவகிக்கப்பட்டு வருகிறது. அது நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமானது அல்ல.

திரு. சி. இராமலிங்கம்: நான் கேட்டது இதுதான். திருவள்ளுவர் கழகப் பேருந்துகள் போன்றவற்றில் பயணம் செய்யும்போது, அவற்றை "ஓட்டல்கள்" இருக்குமிடத்தில் நிறுத்துகிறார்கள். அங்கெல்லாம் சரியான கழிப்பிட வசதிகள் இருப்பதில்லை. எனவே நெடுஞ்சாலையில் பயணம் செய்யும்போது, இதற்கென்று ஒரு இடம் ஏற்படுத்தி, அங்கே சென்று பயணிகள் குளிக்கவும், கழிப்பிடங்களை உபயோகிக்கவும், சிறிது நேரம் விச்ராந்தியாகத் தங்கி இளைப்பாறி வருவதற்கும் வழிவகை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: நெடுஞ்சாலைத் துறை பயணியர் விடுதிகளைப் பொறுத்தவரை, அங்கே பேருந்துகளில் பயணம் செய்யும் யாரும் வந்து தங்குவதில்லை என்றுதான் நான் நினைக்கிறேன். எனினும் அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால், அதை அரசு பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## சென்னை மாநகராட்சிப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள்

* 84. வினா—செல்வி ஆ. லீலாவதி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சென்னை மாநகராட்சியில், மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில், அடிப்படை வசதிகளுக்கென ('basic amenities') 1976 ஆம் ஆண்டிலிருந்து 1—3—1981 வரை, செலவழிக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

[1982 பிப்ரவரி 17

(இ) அவ்வாறு செலவு செய்தும், அத்தகைய வசதிகள் பெறாத பள்ளிகள் எவையேனும் உள்ளனவா ?

(உ) ஆம் எனில், அதற்குரிய காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) சென்னை மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் அடிப்படை செலவினங்கள் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | ரூபாய் |
|---|---|
| 1975—76 | 84,496 |
| 1976—77 | 85,299 |
| 1977—78 | 81,919 |
| 1978—79 | 4,57,564 |
| 1979—80 | 4,79,283 |
| 1980—81 | 13,34,100 |

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

செல்வி ஆ. லீலாவதி : தலைவர் அவர்களே, 1981—82 ஆம் ஆண்டில் ரூ. 13 லட்சம் செலவிடப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், 34 மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இவ்வளவு பணம் செலவழித்தும்கூட, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் தண்ணீர் கிடைக்காத நிலைமைதான் இருக்கிறது. எனவே அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலனை செய்து குறையைப் போக்க நடவடிக்கை மேற்கொள்ளுவாரா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே ஒரு "கவன ஈர்ப்புத் தீர்மானம்" பற்றி நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். இது தனியான கேள்வி. இதில் ஏதேனும் துணைக் கேள்வி இருந்தால், பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கேட்கப்படும் விளக்கத்திற்கும் பதில் அளிக்கத் தயாராக இருக்கிறேன்.



1982 பிப்ரவரி 17]

திரு. பா. ரா. தாமஸ் : மாநகராட்சிகள் எங்கிருந்தாலும் சரி, அது சென்னையானாலும் சரி, மதுரையானாலும் சரி, உயர்நிலைப் பள்ளி மாணவர்களிடம் ரூ. 5ம், மேல்நிலைப் பள்ளி மாணவர்களிடம் ரூ. 10ம் ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் வசதிக் கட்டணம் என்ற அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது. எனவே இந்த இரண்டு மாநகராட்சிகளிலும ஏராளமான தொகை இந்த அடிப்படையில் வசூலிக்கப்பட்டு அது செலவழிக்கப்படாமல் அப்படியே இருப்பில் வைக்கப்பட்டிருக்கிறது. எனவே அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து இதில் கவனம் செலுத்தி அத்தகைய மாநகராட்சிகளில் உள்ள கல்விக் கூடங்களுக்கு நல்ல வசதியைச் செய்து கொடுக்கவும், அந்தத் தொகையை இந்த ஆண்டே அந்தக் காரியத்திற்காகப் பயன்படுத்தவும் ஆணை பிறப்பிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சென்னை மாநகராட்சியில் கல்விக்காக மட்டும் 406 பள்ளிகள் செயல்படுகின்றன. மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், மற்றும் தொடக்கப் பள்ளிகள் ஆகிய அனைத்துமாக மொத்தம் 406 பள்ளிகள் செயல்படுகின்றன. இந்த வகையில் ஓராண்டுக்கு கல்விக்காக மட்டும் மாநகராட்சி செலவழிக்கும் தொகை ரூ. 8 கோடி ஆகும். 1980-81 ஆம் ஆண்டில்தான் பள்ளிகள் வசதிக்காக என்று ரூ. 13,34,000 செலவழிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்காகச் செலவிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் கூட இதற்கு இன்னும் அதிகமான தொகை ஏறக்குறைய 20 லட்சம் ரூபாய் செலவிடப்பட இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு பள்ளிக்கும் தனியான கட்டிடங்கள் இருக்க வேண்டும் என்ற முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. கட்டிடங்களைப் பொறுத்த வரை மிகுமாவது, தன்னிறைவை ஏற்படுத்த வேண்டும் என்று நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். மொத்தம் 42 பள்ளிகளுக்குச் சொந்தமான கட்டிடங்கள் இல்லாமல் இருப்பதால், இந்த ஆண்டு மட்டும் 21 பள்ளிகளுக்குச் சொந்தக் கட்டிடங்கள் கட்டிக்கொடுக்கும் நிலையை உருவாக்கியிருக்கிறோம். அடுத்த ஆண்டில் மீதியுள்ள 21 பள்ளிகளுக்கும் சொந்தக் கட்டிடங்களைக் கட்டித் தருகிற பணியை மேற்கொண்டு, இந்தத் திட்டத்தை இரண்டே ஆண்டுகளில் செய்து முடிக்கக் கருதியிருக்கிறோம். எனவே எந்தத் தவறு இருந்தாலும், அவைகளைத் திருத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRUMATHI TARA CHERIAN: Sir, I know that several lakhs of rupees are being spent on providing amenities in the schools. But, I have seen certain schools which do not even have enough

[1982 பிப்ரவரி 17

water for the students to drink. Therefore, will the Hon. Minister consider having small committees of voluntary organisations, not to criticise, but to visit these schools and give suggestions? Will the Government agree to appoint such committees or voluntary organisations, irrespective of political parties, so that those committees may be able to inspect the schools and give suggestions?

(முற்பகல் 9.50)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : Voluntary organisations irresepective of political parties வருவதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. அதைப் போன்ற சமூக சேவைகளைச் செய்து கொண்டிருக்கக் கூடிய நிறுவனங்கள் முன்னுக்கு வந்தால், ஏற்றுக்கொள்ள நாங்கள் எப்போதும் தயாராக இருக்கிறோம்.

திரு. ப. மாணிக்கம் : அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் வந்தால் ஆட்சேபணை உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அரசியல் கட்சிகளும் நல்ல நோக்கத்தோடு வந்தால், ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சென்னை நகரிலே பல பகுதிகளுக்குச் சென்று திடீரென்று சோதனை நடத்துவதாகத் தெரிகிறது. அதே முறையில் திடீரென்று பள்ளிகளுக்குச் சென்று அங்குள்ள கழிப்பிட வசதிகள், சுற்றுச் சுவர் வசதிகள், பெண் ஆசிரியர் வசதிகள் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிய சோதனை நடத்த முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஒரு வார காலமாக மக்கள் குறைகளைக் கேட்பதற்காக ஒவ்வொரு நாளும், சட்டமன்ற நடக்கும் காலத்தில் மாலை 5 மணி முதல் ஏழரை மணி வரையில் ஒவ்வொரு வட்டத்திற்கும் செல்லுகிறேன். அப்போது அவர்கள் கூறும் குறைகள் கல்வியைப் பொறுத்திருந்தாலும், சாக்கடை வசதியைப் பொறுத்திருந்தாலும், கழிப்பிட வசதியைப் பொறுத்திருந்தாலும், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவர்களுடைய குறைகளைச் [illegible] நாட்களில் [illegible] என்பதை அதிகாரிகள் மக்களின் முன்னாலேயே சொல்லியாக வேண்டும். ஒரு



1982 பிப்ரவரி 17]

வாரம் என்று சொன்னால், அந்த ஒரு வாரத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவசியமானவைகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென்ப தற்காகத்தான் குறைகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். பள்ளிகளாக இருந்தாலும், குறைகளைச் சொன்னால் அவைகளையும் தீர்க்க நடவடிக்கை எடுப்பேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கழிந்த சில நாட்களாக சென்னை மாநகரத்திலே ஒவ்வொரு வட்டமாகச் சென்றபோது, உத்தேசமாக எத்தனை மேல்நிலைப் பள்ளிகளில், உயர்நிலைப் பள்ளிகளில் கழிப்பிட வசதிகள், சுற்றுச் சுவர், விளையாட்டு மைதானம் ஆகியவைகள் இல்லையென்று சொல்லப்பட்டன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நேற்று வரை நான் ஆறு வட்டங்களுக்குச் சென்றிருக்கிறேன். அந்த ஆறு வட்டங்களிலும் பள்ளிகளைப் பற்றிய குறைகள் வரவில்லை. ஒரு சில இடங்களில் மட்டும் சுற்றுச் சுவர் இல்லையென்றும், சமூக விரோத சக்திகள் பள்ளிகளை உபயோகப் படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்றும் குறைகள் சொல்லப்பட்டன. ஆகவே எல்லாப் பள்ளிகளுக்கும் சுற்றுச் சுவர் அல்லது வேலி போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இதை நிறைவேற்றுவோம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்விக்கு, சமூக சேவை செய்கின்ற குழுக்கள் அல்லது சங்கத்தினர் அரசியல் கட்சிக்கு அப்பாற்பட்டவர்கள் அல்லது அரசியல் சம்பந்தப்படாதவர்கள் பள்ளிகளுக்கு வருவதைப்பற்றி ஆட்சேபணை இல்லை என்று சொன்னார்கள். இது பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக் கூடும். சமூக சேவை என்று சொல்லிக்கொண்டு, பல்வேறு சங்கத்தினர் பள்ளிகளில் நுழைந்து தணிக்கை செய்வது என்று ஏற்பட்டால், பள்ளிகளின் நடைமுறைக்குக் குந்தகம் ஏற்படும். ஆகவே வரையறுக்கப்பட்ட சில விதி முறைகளையாவது அரசு வகுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதற்காகத்தான் நான் சொன்னேன், அரசியல் கலப்பு இல்லாத சங்கங்கள் என்று. சுயநல நோக்கு இல்லாமல், பொதுச் சேவை என்ற மனப்பான்மையோடு வருவார்களேயானால், அவர்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். இதற்கென்ற விதி

முறையை நாம் தான் வகுத்துக்கொள்ள வேண்டும். எந்த விதிமுறையை வகுக்கலாம் என்று வேண்டுமானால் நாம் எல்லோரும் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** நெடுஞ்சாலைத் துறைக்கு அதிக அளவில் பணியாற்றுவதற்காக ஆயிரம் மாணவர்கள் இருக்கின்ற பள்ளிகளில் கூட, ஓரிரு ஸ்கேவன்ஜர்கள் இருப்பது போதாது என்று கருதுகிறார்கள். மேலும் அவர்களுக்குச் சம்பளமும் குறைவாக இருக்கிறது. அடிப்படைப் பணியைச் செய்யும் ஸ்கேவன்ஜர்களுக்குக் கூடுதல் சம்பளம் வழங்கவும், மேலும் ஓரிருவரை நியமிக்கவும் அரசு ஆலோசனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இப்போது இருக்கக்கூடிய பள்ளிகளில் கழிப்பிட வசதிகள் சரியில்லை, சாக்கடை நீர் சரியாக எடுக்கப்படாமல் இருக்கின்றது, அதனால் வியாதிகள் பரவும் நிலை ஏற்படுகிறது என்பதையெல்லாம் கருதித்தான் இப்போது பகுதி நேர ஸ்கேவன்ஜர்களை நியமித்திருக்கிறோம். அவர்கள் மூலமாக இந்தக் குறைகள் போக்கப்படும். அப்படி முடியாவிட்டால், முழு நேரப் பணியாளர்களைப் போடத் தயாராக இருக்கிறோம்.

## தஞ்சாவூரில் தனித்தனி பேருந்து நிலையங்கள்.

*35. **வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் ?

(அ) தஞ்சாவூர் மத்தியப் பேருந்து நிலையத்தில், வெளியூர் நகரப் பேருந்துகளின் எண்ணிக்கை மிகுதியால் ஏற்பட்டுள்ள இட நெருக்கடியைப் போக்க வெளியூர் நகரப் பேருந்துகளுக்கென தனித்தனியாக பேருந்து நிலையங்கள் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம். திட்டம் நகராட்சி பரிசீலனையில் உள்ளது.

(இ) 1981-82 ஆம் ஆண்டிற்குள் நிறைவேற்றப்படும்.





இந்தக் கேள்வி 30—3—1981 அன்று கேட்கப்பட்டுள்ளது. ஆனால் இப்போது அந்தப் பணி முடிந்திருக்குமென்று நினைக்கிறேன். என்னிடம் சரியான குறிப்புகள் இல்லை. பணி முடிந்துவிட்டதா என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிந்திருந்தால், துணைக் கேள்வியைக் கேட்கலாம். அதற்குத் தகுந்த பதிலைச் சொல்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இப்போது முடிந்திருந்தால், அது வரவேற்கத்தக்கதுதான். ஏதோ பணிகள் நடந்திருப்பதாகக் கேள்வியுற்றேன். இதற்காக எந்த அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது? நிதி ஒதுக்கீடு இல்லாததால், பணி விரைவுபடுத்தப்படவில்லை என்று அறிகிறேன். இனிமேல் அப்படிப்பட்ட சங்கடம் இல்லாமல் விரைவாகப் பணியை நடத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இந்தப் பேருந்து நிலையத்தைக் கட்டுவதற்காக ஏற்கெனவே திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் வேலை எவ்வளவு தூரம் நடைபெற்றிருக்கிறது என்பதை உடனடியாகக் கவனித்து ஆவன செய்யப்படும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** வேலை தொடங்கிய நிலையிலேயே இருப்பதாக இப்போது அறிய வருகிறேன். வேலை எதுவும் நடக்கவில்லை. அதற்குரிய இடம் ஒதுக்கியிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே உரிய நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சோ. ஆறுமுகம் : இந்தக் கேள்வியை எழுப்பிய திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும் முழு விவரம் தெரியவில்லையென்று சொல்லுகிறார்கள். இந்தத் துறையை நிர்வகிக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களும் முழு விவரம் தெரியவில்லை என்று சொல்லுகிறார்கள். அமைச்சரும் ஓர் உறுப்பினரும் இப்படிச் சொல்லிக்கொண்டு, இங்கே கேள்வியை எழுப்பலாமா என்பதை அறிய விரும்புகிறேன்

திரு. க. மீனாட்சிசுந்தரம் : கேள்வி கேட்கப்பட்ட சில நாட்களுக்குள் பதில் வருவதில்லை. நீண்ட காலம் கழித்து பதில் வருவதால் எங்களிடம் உள்ள குறிப்புகள் கூடத் தவறிவிடுகின்றன. ஆகவேதான் சில நேரங்களில் சரியாகச் சொல்ல முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரே விறகு தெரிந்து கொண்டு கேள்வியும் கேட்டு விடையையும் பெற்றுவிட்டார்.

## Electric Motor Vehicle

*86 Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) whether there is any proposal to introduce an electric motor vehicle, not requiring petrol or diesel; and

(b) if so, the stage at which the matter now stands?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) சென்னை போக்குவரத்து ஆணையாளர் மற்றும் போலீஸ் கமிஷனர் ஆகியோரைக் கலந்து இதுபற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. பா. ரா. தாமஸ் : நான் "பெட்ரோல் அல்லது டீசல் தேவையின்றி மின்விசையால் இயங்கும் மோட்டார் வூர்தியைப் பயன்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?" என்ற கேள்வியைக் கேட்டேன். ஆனால் சென்னை போலீஸ் கமிஷனரைக் கலந்தாலோசித்து வருவதாக அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். ஒருவேளை அடுத்த கேள்விக்குரிய பதிலைக் கொடுத்திருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. முத்துசாமி : நான் சரியான பதில்தான் சொல்லியிருக்கிறேன். துணைக் கேள்வியைக் கேட்கலாம்.

திரு பா. ரா. தாமஸ் : வட மாநிலத்தில் உள்ள போபாலில் உள்ள பெல் நிறுவனத்தில் 'வெகிக்கிள் ரிசர்ச் டெவலப்மென்ட் அண்டு எஸ்டாபிளிஷ்மென்ட்' என்ற துறையில் மின்விசையைக் கொண்டு இயங்கக் கூடிய வூர்திகளை 'டெவலப்' செய்யும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலும் ஏராளமான பேருந்துகளை நடத்துகிறோம். ஆகவே, நம்முடைய இயந்திரப் பிரிவில் இத்தகைய ஆராய்ச்சி நிலையங்களை உண்டாக்கி மின் சக்தியால் ஓடக்கூடிய வூர்திகளை உருவாக்கி, நாமும் ஓட்டினால், டீசல், பெட்ரோல் தேவையில்லாமல் போகும். அத்தகைய செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா?





மாண்புமிகு திரு. க. முத்துசாமி : அதைத்தான் நான் சொன்னேன். இதற்காக மத்திய அரசின் ஆலோசனையின் பேரில் மத்திய அரசு அதிகாரிகளும், மாநில அரசு அதிகாரிகளும் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. 1979 ஆம் ஆண்டிலே அவர்கள் ஓர் அறிக்கையைக் கொடுத்தார்கள். இங்கேயிருக்கின்ற நெரிசலில் அதைப் பயன்படுத்த முடியுமா என்று கருத்து தெரிவிக்குமாறு சென்னை நகர போலீஸ் கமிஷனரையும் போக்குவரத்து ஆணையாளரையும் கேட்டோம். அவர்கள் சென்னையிலே அப்படிப்பட்ட சாத்தியக்கூறு இல்லையென்று சொல்லிவிட்டார்கள். ஏறத்தாழ மூன்று மாதங்களுக்கு முன்பு அந்தக் கோப்பு என்னிடம் வந்தது. வேறு ஏதாவது இடத்தைத் தேர்ந்தெடுத்து பரிசீலனை செய்து இதை நடைமுறைப்படுத்த முடியுமா என்பதைப் பார்த்து அனுப்புங்கள் என்று திருப்பியனுப்பியிருக்கிறேன். அவர்கள் மீண்டும் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. பா. ரா. தாமஸ் : சட்டமன்ற விடுதியிலிருந்து உறுப்பினர்களாகிய நாங்கள் இங்கே வந்து கொண்டிருக்கிறோம். இந்தப் பகுதியிலாவது அதைப் பயன்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : இதை அமல் செய்ய நிறைய செலவு ஆகும். அதற்கான 'லைன்' போட வேண்டும், மின்சாரக் கம்பிகள் போட வேண்டும். மின்சாரச் செலவு அதிகமாகும். இப்படிச் செய்யும் போது நிறைய மக்கள் பயணம் செய்யக் கூடிய வகையிலே அமைய வேண்டும். நாம் மட்டும் அதைப் பயன்படுத்தினால், மக்களிடத்திலே தவறான எண்ணத்தை ஏற்படுத்தும். கூவம் நதிக் கரையிலே உள்ள சாலையைத் தனியாக நியமித்து அங்கே பயன்படுத்தலாமா என்று ஆய்ந்து கொண்டிருக்கிறோம். அந்த சாலையை நல்ல முறையிலே பயன்படுத்த முடியுமா என்பதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். இந்தத் துறைக்கு அந்தச் சாலை ஒப்படைக்கப்படுமானால், நிச்சயமாக அதை நடைமுறைப்படுத்த முடியும்.

(முற்பகல் 10-00)

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மின்விசையால் மோட்டார் வூர்தியை ஓட்டுவது என்பது ஏறக்குறைய 'டிராம்'-ஐத் திருப்பிக் கொண்டுவருவது மாதிரி ஆகிவிடுகிறது. இப்போதே மின் சக்தி பற்றாக்குறை இருக்கிறது. 1939 ஆம் ஆண்டில், இரண்டாவது உலக யுத்த நேரத்திலே பெட்ரோலும், டீசலும் ரொம்பத் தட்டுப்பாடாக இருந்த போது, மோட்டார் வாகனங்களை ஓட்டுவதற்கு 'கேஸ் பிளாண்ட்' என்று

ஒரு முறையில், அதாவது பின்பகுதியில், நிலக்கரி, மற்றும் விறகின் கரிகளை போட்டு கேஸ் உற்பத்தி பண்ணி, ஒரு 'குருக்கட்' முறையில் மோட்டார்களை ஓட்டினார்கள். அதனால் அதிகமான புகைகூட கிளம்பிக்கொண்டிருக்கும். அந்த மாதிரியாவது இந்த பெட்ரோல், டீசல் மற்றும் மின் சக்தியை உபயோகிக்காமல், வேறு முறைக்கு மாற்ற ஆராய்ச்சி செய்யலாம். அந்த முறையில் இந்த அமைப்புக்களைச் செய்ய ஓர் ஆராய்ச்சியைப் போக்குவரத்துத் துறை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, டீசல், பெட்ரோலைவிட மின்சாரம் எவ்விதமும் பாதிப்பில்லை. இன்னும் 30 ஆண்டுகளில் இந்த பெட்ரோல், டீசல் இருக்காது என்ற நிலை இருக்கிறது. மின்சாரத்தை எப்படியாவது உற்பத்தி செய்யக் கூடிய வாய்ப்பு இருப்பதாகக் கருதுகிறேன். சோழன் போக்குவரத்துத் துறையில் தனியாக ஒரு வண்டியை இயக்கி வைத்திருக்கிறோம். இப்போது ஆராய்ச்சி நடந்து வருகிறது. இந்த அரசாங்கம் பழைய முறையில் செய்தால், இந்த அரசாங்கம் 30 ஆண்டுகள் பின்னோக்கிப் போகிறது என்று சொல்வார்கள். எதுவும் பயன்படக்கூடியதாக இருந்தால், அதை இந்த அரசாங்கம் நடத்தத் தயாராக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மோட்டார் வாகனங்களுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்துவது என்பது ஓர் ஆராய்ச்சிக் கட்டத்தில் இருக்கிறது. வெளிநாடுகளிலேயும், ஜப்பான் போன்ற நாடுகளிலும் கேஸ் சிலிண்டர்கள் மூலம் ஓட்டுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. இதைப்பற்றி அறிந்து கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளிநாடுகளுக்குப் போய்வருவது நல்லதாக இருக்கும். அப்போது உறுப்பினர்களையும் அழைத்துச்செல்கின்ற ஒரு நிலைமை வந்தால், எங்களுக்கும் மகிழ்ச்சியாக இருக்கும்.

---

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு என்மீது என்ன கோபம் என்று தெரியவில்லை. நான் இங்கே இருப்பது அவருக்குப் பிடிக்கவில்லைபோல் இருக்கிறது. நிச்சயமாக வெளிநாடுகளுக்குப் போகின்ற வாய்ப்பு வந்தால், போகத் தயாராக இருக்கிறேன். இப்போது தமிழ்நாட்டிலேதான் மற்ற மாநிலங்களைவிட போக்குவரத்துத் துறை சிறப்பாக நடப்பதாகச் சொல்கிறார்கள். வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் கூட இந்தத் தமிழ்நாட்டில் எப்படி ஒரு குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட



பேருந்து வருகிறது என்றுதான் கேட்கிறார்கள். வெளிநாடுகளிலிருந்து
வருபவர்கள் இங்கே வந்து நம்மைப் பார்க்கின்ற நிலைமைகள்தான் இருக்
கின்றன. நாம் இங்கேயிருந்து வெளிநாடுகளுக்குப் போய்ப் பார்த்துவிட்டு
வந்து செய்யவேண்டிய சூழ்நிலையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI: Sir, will the Hon. Minister note that if these electrically-driven motor vehicles are to take the place of trams, it is a very costly venture ? The Chinese have built a replica of it in Kathmandu and it has cost them quite a lot. So, this will be a venture fraught with great financial difficulties.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அந்தக் காரணத்தினால்தான் இவ்வளவு நாட்களாக ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. இதனால குறைந்த செலவுதான் அரசாங்கத்துக்கு என்றால், எப்போதோ செய்திருக்கலாம். மின்சாரம் உபயோகிப்பதால் பேருந்துகளுக்கு லாபம் இருக்குமா என்பதைப் பற்றித்தான் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. இராமலிங்கம் : போக்குவரத்தில் அதிக நெரிசல் இருக்கின்ற காரணத்தால், பங்கிங்காம் கால்வாயிலே படகுப் போக்குவரத்து நடத்த அறிவிப்பு இருந்தது. இன்னமும் அது பரிசீலனையில் இருக்கிறதா ? பங்கிங்காம் கால்வாயிலே படகுப் போக்குவரத்து நடத்த அரசு ஆய்வு செய்கிறதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அது பற்றிய குறிப்புகள் இப்போது என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடங்கியிருக்கிறார்கள். அதன் முடிவு என்ன, அதனுடைய சூழ்நிலைகள் என்ன என்பதை அரசு பார்க்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அப்படிப்பட்ட ஆசை ஏதாவது இருக்குமானால், இப்போது அவர் காகிதத்தில் படகு செய்து அதில் ஓட்டி வேடிக்கை பார்க்கலாம் என்று கருதுகிறேன்.

[1982 பிப்ரவரி 17

## சென்னை நகரில் சாலை விபத்துக்கள்.

* 87 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980-ல் சென்னை நகரில் ஏற்பட்ட சாலை விபத்துக்கள் எத்தனை ?

(இ) அந்த விபத்துக்களில் மரணம் அடைந்தவர்கள் எத்தனை பேர் ?

(உ) சாலை விபத்துக்களைக் குறைப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 1980-ல் சென்னை நகரில் ஏற்பட்ட சாலை விபத்துக்களின் எண்ணிக்கை—5,163

(இ) விபத்துக்களால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை—310

(உ) விபத்துக்களைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வருமாறு :

ஆங்காங்கே சாலை வேகக் குறைப்புகள் எழுப்பியும் மற்றும் பேருந்துகளில் வேகத்தை மீறும் போது எச்சரிக்கும் கருவியினைப் பொருத்தியும் மற்றும் பள்ளிச் சிறுவர்களுக்கு சாலை விதிமுறைகளைக் கற்பித்தும் சாலை விதிமுறைகளை மீறும் ஊர்தி ஓட்டுநர்களின்மீது தக்க நடவடிக்கை எடுப்பதன் மூலமும் சாலை விபத்துக்களைக் குறைப்பதற்கு காவல் துறை அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் இந்த அளவுக்குக் காவல் துறையினர் கண்காணிப்பு இருந்தும் விபத்துக்கள், உயிரிழப்புகள் இவ்வளவு அதிகமாக இருக்கின்றன. அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்கள். அந்த நடவடிக்கைகளில் லாரிகள், பேருந்துகள் போவதற்கு என்று தனியே சாலையை ஒதுக்குவது, வேகத்தடை முட்டுக்கள் அமைத்தல் ஆகியவற்றை சென்னை நகரம் முழுவதும் செய்தால் விபத்துக்கள் குறையலாம்.



1982 பிப்ரவரி 17]

டிராபிக் சென்ஸ் என்பதைப் பரப்ப பள்ளிக்கூடத்திலே படிக்கின்ற மாணவர்களுக்கு ஒரு கட்டாயப் பாடமாக, பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும். அதை ஒரு முக்கிய அம்சமாகச் சேர்க்க வேண்டும் என்பதைக் குறித்து கல்வித் துறையில் கலந்து ஆலோசித்து முடிவு எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்லியிருக்கின்ற ஆய்வுகள் இப்போது இருந்துகொண்டிருக்கின்றன. பேருந்துகளை அதிகமாக்க வேண்டுமென்ற கோரிக்கைகளும் வந்துகொண்டிருக்கின்றன. அதிகமான பேருந்துகள் ஓராயிரம் பேருந்துகள் என்று இருந்தது, இப்போது 2 ஆயிரம் பேருந்துகள் என்று ஆகியிருக்கிறது. மற்ற வாகனங்களும் அதிகமாகியிருக்கின்றன. அதனால் விபத்துக்கள் வளர்ந்திருக்கின்றன. போக்குவரத்து அதிகமாகியிருப்பதால், விபத்துக்கள் இன்னும் அதிகமாக இருக்க வேண்டும். அப்படி இருந்தாலும்கூட விபத்துக்களைக் குறைப்பதற்கு தக்க நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். போக்குவரத்து வளர்ந்திருக்கின்ற அளவுக்கு இருக்கக்கூடியதைவிட விபத்துக்கள் குறைவாகத் தான் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், பள்ளிகளில் பிள்ளைகளுக்கு 'டிராபிக்' பற்றிச் சொல்லிக்கொடுப்பது பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் சொல்லி, ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதைப்பற்றி ஆராய்வோம்.

THIRU G. VASANTHA PAI: Sir, will the Hon. Minister consider the suggestion that, in peak hours, there should be a bus-lane for buses, as in Singapore? Now, most of the Hon. Ministers have gone to Singapore. In Singapore, there is a bus-lane during the peak hours and the slow-moving traffic is regulated only through different channels rather than the main roads. Similarly, here also, the cycles, auto-rickshaws and animals should be diverted through one channel and the buses, cars and other fast-moving traffic should be diverted by another road, during the peak hours. If this could be done, the traffic would not result in so much of accidents. This is my suggestion.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, நமக்கு இருக்கின்ற ரோடுகளினுடைய அகலத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், தனித்தனியாகப் பிரித்து வைப்பது என்ற சாத்தியக்கூறு இல்லை. அந்த முறை சில இடங்களிலே முடியும். இருந்தாலும் கூட என்னிடத்திலே தனியார் பஸ் ஓட்டுகின்ற ஓட்டுநர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அந்த

[1982 பிப்ரவரி 17

பீக் அவர்சில் கார்களை வரவிட வேண்டாம் என்ற கருத்தை வைத்தார்கள். 'பீக் அவர்ஸ்' என்பது காலை 9½ மணி முதல் 11½ மணி வரை. தனியார் கார்கள் 9½ மணிக்கு முன்னர் அல்லது 11½ மணிக்குப் பின்னர் வரவிடலாம் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதையும் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அது எல்லோருக்கும் இடையூறாக இருக்கும் என்று கருதினால், இதை மாற்றுவதற்கு வேண்டிய வழிமுறைகளைக் கண்டறிவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

DR. M. A. MUTHIAH CHETTIAR: Sir, will the Hon. Minister consider the advisability of regulating the speed of motor vehicles in view of the fact that the buses of the State Transport Corporations are driven at a speed of 55 miles or 60 miles per hour? I have seen such fast driving while going from Tiruchirappalli to Chettinad and Karaikudi or from Madras to Madurai and Karaikudi, [illegible] in Madras City near Santhome where the Beach Road is narrow, the buses are driven very fast. There are mechanicial devices by which petrol will not be allowed to flow to engine when the speed exceeds a certain limit. The late Thiru G. D. Naidu invented those devices 35 years ago but he was not given the necessary encouragement. Such mechanical devices may be installed in the buses to stop the highspeed driving by the drivers.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விரைவுப் பேருந்துகள் தவிர மற்றவற்றைப் பற்றிச் சிந்திக்கலாம்.

திரு. ம. சங்கரலிங்கம் : 1980 வது ஆண்டில் சென்னைப் பெருநகரில் 5163 விபத்துக்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்த விபத்துக்களில் சாலை விதிகளை மீறியதால் ஏற்பட்ட விபத்துக்கள் எத்தனை, லாரி ஓட்டுநர்கள் தவறுகளால் எத்தனை விபத்துக்கள் என்பதைப்பற்றி அந்தத் துறை ஆராய்ந்ததா? அப்படி ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? சாலை விதிமுறைகளை சைக்கிளிலே போகின்றவர்கள், வாகனங்களில் போகின்றவர்கள் ஏற்றுக்கொள்கின்ற முறையில் இருக்கிறதா? அந்த முறைகளை அவர்கள் ஏற்றுக்கொண்டு போகச் செய்ய, தக்க விதிமுறைகளைப் போட்டு அவர்களை ஏற்றுக்கொள்ளச் செய்வது என்ற அளவுக்கு அரசு செய்யுமா? சாலை விதிமுறைகளை மீறியவர்கள் எத்தனை பேர்கள்? எத்தனை பேர்கள் மீது வழக்கு போடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது? இதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யுமா?



1982 பிப்ரவரி 17]

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டப் பிரச்சினையிலே இது பங்கு பெற்ற கேள்வியாகத் தரப்பட்டிருக்கிறது. நடைபாதையிலே தான் போக வேண்டும் என்று கட்டளையிட்டுத்தான் அவர்கள் போக வேண்டிய அவசியம் இல்லை. அதைத் தெரிந்து செயல்படக்கூடியவர்கள் தான் தமிழகத்திலே இருக்கிறார்கள் என்ற அளவுக்குப் பெயர் பெற்றவர்கள் தான் தமிழக மக்கள். சில இடங்களில் பின்பற்றப்படவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். புள்ளிவிவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, சொல்வார்கள். இப்போது கொள்கையைப்பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். முன்பு இருந்த நடமாடும் நீதிமுறை போல மீண்டும் அமல்படுத்தலாமா என்று இந்த அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. அதை அமல்படுத்துவதன் மூலம் இப்படிப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு உரிய அபராதத் தொகை அல்லது தண்டனை கொடுக்க ஏற்பாடு செய்ய நாங்கள் முனைவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : சாலையைக் குறுக்கே கடந்து சென்ற [illegible] காரணங்களாலும் 3,250 விபத்துக்கள் ஏற்பட்டன என்றும் [illegible] விபத்துக்கள் ஓட்டுநர்களால் ஏற்பட்டன என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. ஓராண்டுக்கு மட்டும் கொடுத்திருக்கிறார்கள். அதை மீண்டும் சரி பார்த்துக் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி : சென்னை காவல் துறை அதிகாரி ஒரு குறிப்பு தந்திருக்கிறார்கள். 30 ஆண்டுகள் வாகனங்கள் சாலைகளில் போவதால்தான், அதிக ஆக்சிடன்டுகள் ஏற்படுகின்றன என்று சொல்லுகிறார்கள். ஆகவே 20 ஆண்டுக்காலம் என்று அதை மாற்றி, அதற்குமேல் அந்த வண்டிகள் தேவை இல்லை என்பதை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினரவர்கள் முழுமை யான ஒத்துழைப்பு தந்தால், அதைச் செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது.

திரு. இ. ரா. லெட்சுமிகாந்தன் : சில நகரங்களில் வேகத் தடைக்கட்டைகளை அமைப்பதன் மூலமாகக் கணிசமான அளவிற்கு விபத்துக்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி சென்னை நகரத்திலும் வேகத் தடைக் கட்டைகளை அமைப்பதில் எந்தவிதத் தடையும் இல்லை. [illegible]

[1982 பிப்ரவரி 17

அமைக்க அமைச்சரவர்கள் விரைவில் நடவடிக்கை எடுப்பார்களா ? அதன் மூலம் விபத்துக்களைக் கணிசமாகக் குறைக்க அமைச்சரவர்கள் முன்வரு வார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இதற்காக முயற்சி எடுத்து, ஆங்காங்கே செயல்படுத்த முனைகிறோமென்றாலும், சில நேரங்களில் தேவை யின் காரணமாக நோயாளிகளை அவசரமாகக் கொண்டு செல்ல வேண்டிய தாலும், வழக்கு மன்றத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுவ தாலும், எல்லா இடங்களிலும் அதை வைக்க முடியாது. நெரிசலான இடத் தில் என்பதைவிட, தேவையான இடத்தில், எங்கே அதிகமாக விபத்துக்கள் ஏற்படுகின்றனவோ அங்கே அந்தத் தடைக் கட்டைகளை ஏற்படுத்துவதில் இந்த அரசுக்கு ஆட்சேபணை இல்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : விபத்துக்களைக் குறைக்க, வேகக் கட்டுப் பாட்டுக் கருவிகளை வாகனங்களில் பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ? சிங்கப்பூரில் வேகமாக வாகனங்களை ஓட்டுபவர்களை எலக்ட்ரானிக் கருவி மூலம் கண்டுபிடிக்கிறார்கள். அந்த முறை சென்னையிலும் புகுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : ஏற்னெவே நடவடிக்கை எடுக்கப்பட்டு, வேகக் கட்டுப்பாட்டுக் கருவியைப் பொருத்தி வருகிறோம். அது முழுமை யாகப் பொருத்தப்படவில்லை. அது முழுமையாக எல்லா வண்டிகளுக்கும் பொருத்தப்படும்போது விபத்துக்கள் குறையும். உறுப்பினரவர்கள் எலக்ட் ரானிக் முறை பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி அறிந்து, பயன்படுத்தலாம்.

திரு. பா. ரா. தாமஸ் : மழைக் காலங்களில் இப்படி விபத்துக்கள் அதிக மாக ஏற்படுகிறதென்ற கருத்து இருக்கிறது. மழைக் காலங்களில் கண்ணாடி யில் நீராவி படிந்து, பார்வையை மறைக்காத அளவிற்கு இருக்க வண்டிகளில் ஹீட்டர்கள் மேலை நாடுகளில் பொருத்தப்படுகின்றன. அத்தகைய முறையை இங்கே உட்படுத்தினால், மழைக் காலங்களில் விபத்துக்கள் ஏற்படாமல் தடுக்கலாம் அல்லவா ? அதை அமைச்சரவர்கள் ஆராய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : சில நாடுகளிலே அப்படி இருக்கிறதென் றால், அங்கே மிகவும் குளிர், அதனால் அப்படி வைத்திருக்கிறார்கள். நம் முடைய நாட்டில் மழை பெய்யும்போது அப்படிப்பட்ட ஹீட்டர்களை வைத் தால், ஓட்டுநர் அமர முடியாது. மேலும் இங்கே அப்படி நீராவி படிவதாகத் தெரியவில்லை. எனவே இது தேவையில்லை.



1982 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, நான் அடிக்கடி குறுக்கிட விரும்பவில்லை என்றாலும், yellow light-ஐப் பயன்படுத்தினால், இது கொஞ்சம் குறைய வழி இருக்கிறதென்று நம்பு கிறேன்.

திரு. ப. மாணிக்கம் : சென்னை நகரில் நடந்த பெரிய விபத்துக்கள் 'மெக்கானிகல் பெயில்யூர்' காரணமாகத்தான் என்று சொல்லுகிறார்கள். மெக்கானிகல் பெயில்யூர், மெயின்ட்னன்ஸ் சரியாக இல்லாததால் ஏற்படுகிற தென்ற கருத்து விவரமறிந்தவர்கள் மத்தியில் இருக்கிறது. அதுபற்றி இந்தத் துறை ஆராய்ந்துள்ளதா ? அதை நிவர்த்திக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : சில நேரங்களில் இப்படிப்பட்ட விபத் துக்களும் ஏற்படுவதுண்டு. உறுப்பினரவர்கள் சொல்லுவது போல், அதிக மான அளவிற்கு விபத்துக்கள் இதன் காரணமாக ஏற்படுவதில்லை. ஒன்றி ரண்டுதான் இதன் காரணமாக ஏற்படுகிறது. அவை பெரிதாக விளம்பரப் படுத்தப்படுகின்றன. அவைகள்கூட, பராமரிப்பு சரியாக இல்லாததால் நடந் ததாகத் தெரியவில்லை. சில உறுப்புகள் உடைந்ததால் அப்படி விபத்துக்கள் நடந்ததாகச் சொல்லப்பட்டது. அது குறித்து தனிக் கவனம் செலுத்தி, அரசு நடவடிக்கை எடுக்கிறது.

விருதுநகரிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து.

* 88. வினா—திரு வி. வி. கி. ஆனந்தம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) விருதுநகரிலிருந்து சென்னைக்கு, விருதுநகரைத் தொடங்கும் இடமாகக் கொண்டு விரைவுப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு வி. வி. வி. ஆனந்தம் : விருதுநகர் மிக முக்கியமான வணிக ஸ்தலம். அங்கேயிருந்து சென்னைக்கு வர விரைவுப் பேருந்துகளில் இடம் கிடைப்ப தில்லை நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு வரும் பேருந்து நிறைந்து விடுவ தால் விருதுநகர் பயணிகளுக்கு இடவசதி கிடைப்பதில்லை. எனவே அங்கே யிருந்து ஒரு பேருந்து விடும் அவசியத்தை அரசு உணர்ந்து, அதற்கான ஒரு செயற்குறிப்பைத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன். அந்த திட்டம் அமுல் படுத்தும் வரையில் நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு வரும் பேருந்தில் விருதுநகர் பயணிகளுக்குச் சில இருக்கைகளை ஒதுக்குவார்களா? விருதுநகர் பேருந்து நிலையத்தில் திருவள்ளுவர் டிக்கட் கவுண்ட்டர் ஒன்றை ஏற்படுத்து வார்களா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : இப்போது கோவில்பட்டியிலிருந்து சென்னைக்கு 2 பேருந்துகளும், அதே போன்று சிவகாசியிலிருந்து சென்னைக்கு 2 பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. ஒவ்வொரு பேருந்தி லும், 10, 10 இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. எனவே விருதுநகரி லிருந்து ஒரு பேருந்து விடுவதுபோலத்தான் சூழ்நிலைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன அடிப்படையில் மீண்டும் பரிசீலித்து, தேவை என்றால் நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள் 89, 90 ஆகிய இரண்டும் ஒரே பொருள் பற்றியதாக இருப்பதால் ஒன்றாக எடுத்துக்கொள்ள லாம்.

## Balasevikas

*89. Q.—THIRU K. MEENAKSHISUNDARAM (on behalf of THIRU A. R. DAMODARAN): Will the Hon. the Minister for Social Welfare be pleased to state :

(a) whether the Balasevikas employed in Balwadies, are entitled to leave and other benefits, enjoyed by Government Employees ;

(b) if not, the reason therefor; and

(c) the action proposed to be taken by the Government thereon?





மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) கால ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறும் குழந்தை நல அமைப்பாளர்கள் கால ஊதிய விகிதம் பெறும் மற்ற அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படும் விடுப்பு மற்றும் ஏனைய சலுகைகள் பெறவும் தகுதியுடையவர்கள். ஒட்டு மொத்த ஊதியம் பெறும் குழந்தை நல அமைப்பாளர்கள் விடுப்பு மட்டும் பெறும் தகுதியுடையவர்கள். குழந்தை நல அமைப்பாளர் பணிக்கான விதிகள் இல்லாததால் கௌரவ ஊதியம் பெறும் குழந்தை நல அமைப்பாளர்களுக்கு தற்செயல் விடுப்பைத் தவிர எந்த விடுப்பும் பெற தகுதியில்லை.

(இ) ஒட்டு மொத்த ஊதியம்/கௌரவ ஊதியம் பெறும் குழந்தை நல அமைப்பாளர்கள் பகுதி நேர அரசு ஊழியர்களாக இருப்பதால் கால ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறும் முழுநேர அரசு ஊழியர் பெறும் மற்ற சலுகை களைப் பெற தகுதியற்றவர் ஆகின்றனர்.

(உ) வினாவிற்கு இடமில்லை.

*90. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) குழந்தைகள் காப்பகங்களில் பணியாற்றும் பாலசேவிகாக்களுக்கு குடும்பநலத் திட்டம், விடுப்பு சலுகைகள் ஆகியவற்றை விரிவுபடுத்தும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அவை எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) சமூக நலத் துறையில் உள்ள 4,444 குழந்தை நல அமைப்பாளர்களில் 79 பேர் முழு நேர அரசு ஊழியர்களாதலால் அவர்களுக்கு முழுநேர அரசு ஊழியர்களுக்கான குடும்ப நல திட்டம், விடுப்பு முதலிய சலுகைகளைப் பெறுகின்றனர். பணி அமைப்பு விதிகளுக்கு உட்படாத மீதமுள்ள குழந்தை நல அமைப்பாளர்கள் பகுதி நேர ஊழியர்கள். ஆகவே, இவர்களுக்கு குடும்ப நலத் திட்டம், விடுப்பு சலுகைகளை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

மன்ற... [1982 பிப்ரவரி 17

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அமைச்சரவர்கள், பாலசேவிகாக்களை மூன்று வகையாகப் பிரித்துச் சொன்னார்கள். அதிலே ஒரு வகை, நிரந்தரமாக்கப் படாமல், தாற்காலிகமாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கிறவர்கள்கூட காலை 9 மணிக்கு வருபவர்கள் மாலை 4, 4-½ மணி வரை பணியாற்றிவிட்டுச் செல்லவேண்டியிருக்கிறது. குழந்தைகளைக் காக்கின்ற பொறுப்பு அவர்களுக்கு அதிகமாக இருக்கிறது. இப்போது பணி யாற்றிக்கொண்டிருக்கிறவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களாகவும், அதற்கு மேல் ஓராண்டுக்காலம் பயிற்சி பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுடைய பணியை இப்போது நிரந்தரம் செய்யாவிட்டாலும், வருங்காலத் தில், 175 ரூபாய் ஊதியம் பெறுபவர்களை, நிரந்தரம் செய்ய உரிய நடவடிக் கைகளை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பாலசேவிகாக்கள் 90 ரூபாய், 115 ரூபாய், 165 ரூபாய் பெற்றவர்களுக்கு, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் 175 ரூபாய் என்று மாற்றப்பட்டி ருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, கிராமங் களில் உள்ள குழந்தைகள் நலக் காப்பகங்களிலே உள்ள பாலசேவிகாக்கள் முழுநேரம் வேலை செய்வதால், பிற்காலத்தில் அந்தக் குழந்தைகள் நலக் காப் பகங்கள் அனைத்தும் நர்சரிப் பள்ளிகளாக மாறும்போது, அவர்களுக்கு முழு ஊதியம் கொடுக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பாலசேவிகாக்களாக கிராமப்புறங்களில் பணியாற்றுபவர்களுக்கு ரூ. 90 என்று இருந்ததை படிப்படியாக உயர்த்தி, இப்போது ரூ. 175 அளவுக்குக் கொண்டுவந்திருப்பதற்காக நான் ஏற்கெனவே இந்த அவையில் நன்றி தெரிவித்திருக்கிறேன். அவர்கள் கிராமப்புறங்களில் பணியாற்றிக்கொண்டு, ரூ. 175 ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு, நாகரிகமாக வெளி உலகத்திற்கும் வர வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதுமட்டு மல்லாமல், ' கேர் ' மூலம் வழங்கப்படுகின்ற உணவை குழந்தைகளுக்கு ஊட்ட வேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு இருக்கிறது. இந்த 175 ரூபாயை வாங்கிக்கொண்டு அவர்கள் வாழ்க்கை நடத்த முடியுமா ? இப்படி குறைந்த ஊதியம் வழங்குவது அவர்கள் தவறு செய்யக் காரணமாக அமையாதா ? அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற அத்தனை சலுகைகளும் இவர் களுக்கும் வழங்கப்படுமா ? நர்சரிப் பள்ளிகளாக அவைகளை ஆக்கும்போது



1982 பிப்ரவரி 17]

அவ்வாறு செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக் கிறார்கள். இருந்தாலும் இப்போதிலிருந்தே அரசு ஊழியர்களுக்குள்ள விடுப்பு போன்ற அத்தியாவசியமான சலுகைகள் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தமிழகத்தில் மொத்தம் 4,444 பாலசேவிகாக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் அரசு ஊழியர் களுக்குரிய ஊதிய உயர்வைக் கொடுக்க வேண்டுமென்றால், நமக்கு இருக்கின்ற நிதி நிலைமை போதாது. குழந்தைகள் காப்பகங்களை நர்சரிப் பள்ளி களாக ஆக்குகின்ற கொள்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அது நிறைவேற்றப்படும்போது, நிச்சயம் அவர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அப்படி நர்சரிப் பள்ளிகளாக ஆக்கும்போது, அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற ஆசிரியர்களுக்கு பணி இழப்பு இல் லாமல் மீண்டும் தேவையான பயிற்சியை அவர்களுக்கு அளித்து பணிப் பாது காப்பு அளிப்பது குறித்து உத்தரவாதம் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : அவர்களுக்கே ஆசிரியர்களுக் கான பயிற்சி அளித்து ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள்.

திரு. பா. ரா. தாமஸ் : பாலசேவிகாக்களில் பலர் ஏற்கெனவே இடை நிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள். வேறு வேலை வாய்ப்பு இல்லாத காரணத்தால், அங்கே அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது ஊராட்சிப் பள்ளிகளை அரசே எடுத்து நடத்துகின்ற நிலையில் அங்கு பணியாற்றிக் கொண்டிருந்தவர்களை கல்வித் துறை அதிகாரிகளே நேரடியாக எடுத்து வேலைக்கு அமர்த்துகிறார்கள். இந்த நிலைமையில் தகுதி பெற்றவர்களாக இருந்தால், ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களாக இருந்தால், அப்படிப்பட்டவர் களை கல்வித் துறைக்குப் பரிந்துரை செய்து, வேலை வாய்ப்பகத்தின் மூலம் ஆசிரியர்களை எடுக்கும்போது இவர்களுக்கு முன்னுரிமை அளித்து கல்வித் துறையில் வேலைவாய்ப்பு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பாலசேவிகாக்களாக இப் போது தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் எஸ். எஸ். எல். சி. தேர்ச்சி பெற்ற வர்கள். 1962 ஆம் ஆண்டு 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு படிப்படியாக முன்னேறி இப்போது

எஸ். எஸ். எல். சி. தேர்ச்சி பெற்றவர்களைத் தான் பாலசேவிகாக்களாக எடுக்கிறார்கள். ஆனால், ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் இதில் வேலை செய்வதாக எனக்குத் தகவல் ஒன்றும் இல்லை.

திரு. பு. கா. தாமஸ் : அவ்வாறு தகுதி பெற்றவர்கள், ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் பாலசேவிகாக்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தால், அப்படிப் பட்டவர்களை கல்வித் துறைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்ய நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : அதுமாதிரி ஒன்றும் இல்லை. ஆனால் அப்படி இருந்தால், கண்டிப்பாகப் பரிந்துரை செய்யப்படும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில், கீழ்க்கண்டவாறு அலுவல் விபரம் முடிவு செய்யப் பட்டது :—

| | | |
|---|---|---|
| 18—2—1982 வியாழன் | காலை | நீதிபதி திரு. பால் கமிஷன் அறிக்கையின் மீது விவாதம். |
| | மாலை | அரசின் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தல். |
| 19—2—1982 வெள்ளி | காலை & மாலை | அரசின் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தல். |
| 20—2—1982 சனி | காலை & மாலை | தமிழ்நாடு மின் வாரிய நிதி நிலை அறிக்கையின் மீது விவாதம். |

மேலவை காலை 9-30 மணிக்கும், மாலை 4 மணிக்கும் கூடும்.



## 3. கவன ஈர்ப்பு.

### (1) காவிரி நதியில் மேகதாது மின் நிலையம் கர்நாடக அரசால் அமைக்கப் படுவதால் தமிழகத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் சி.ரா. லெட்சுமிகாந்தன், ஆ. நல்லசிவன் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"தமிழகத்தின் எல்லையை ஒட்டிய பகுதியில் காவிரி நதியில் மேகதாது மின் நிலையம் அமைப்பதற்கான வேலைகளைத் துவக்கக் கர்நாடக அரசு முடிவு செய்திருப்பதனால் தமிழகத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து".

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : துணைத் தலைவரவர்களே, மேகதாது மின் திட்டத்தை நிறைவேற்றும்போது, தமிழகத்தினுடைய பாசன வசதி பாதிக்கப்படக்கூடும் என்றும், மேட்டூர் நீர்த் தேக்கங்களுக்கு வரும் நீர் வாராது போய் முற்றிலும் பாதிக்கப்படும் என்றும் தமிழக அரசு மத்திய அரசுக்கு 18—6—1981-ல் தெரிவித்திருப்பதாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அதேசமயத்தில் கர்நாடக அரசு ஒரு குழுவை நியமித்து இந்தக் குழு மேகதாது மின் திட்டத்தைப்பற்றிப் பரிசீலிக்க ஏற்பாடுகளைச் செய்தது. இது குறித்து தமிழக அரசு அச்சப்படத் தேவையில்லை என்ற ஒரு கருத்தை மத்திய அரசு தெரிவித்ததாகவும் இந்த அறிக்கையிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. இது மிகவும் மு்க்கியமானது. இதன் சாத்தியக் கூறுகளை ஆராய ஒரு குழுவை அமைப்பதுபற்றி தெரிவித்ததாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் சார்பில் இவ்வளவு உறுதிமொழிகள் தரப்பட்ட பிறகும், கர்நாடக அரசு உண்மையில் இந்தத் திட்டத்தை 1982-ல் மேற்கொண்டு நிறைவேற்ற வேண்டும் என்று அறிவித்திருக்கிறது. அப்படி யானால் தமிழகத்தின் தேவைகளைப்பற்றிக் கவலைப்படாமல், தமிழகத்தின் பாதிப்புகளைப்பற்றிக் கவலைப்படாமல் மத்திய அரசின் ஒப்புதலையோ,

@ 229-231 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலையோ பெறாமல் ஒரு தலைப்பட்சமாக கர்நாடக அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்றுதான் பொருள். இத்தகைய பாதிப்புகளிலிருந்து தமிழகம் விடுபட இந்த அரசு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து விவரமாக அறியலாமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். மத்திய அரசின் நீர்ப் பாசனத்துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து ஒரு கடிதம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பியுள்ளார்கள்.

"I have had the position checked up from the Ministry of Energy, since this is a hydro-electric project. I find that the Project Report from the Karnataka Government has not yet been received in that Ministry for processing and approval. No action has so far been initiated for posing the project for World Bank assistance. The Ministry of Energy have also been requested not to clear this project or take any action for arranging World Bank assistance unilaterally.

It may, however, be stated that in order to resolve the outstanding issue relating to the waters of the Cauvery basin, which are under dispute, I shall be convening a meeting of the Chief Ministers of the Cauvery basin shortly."

என்று நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. கேதார் பாண்டே அவர்கள் அண்மையில் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். கர்நாடக அரசிடமிருந்து கடிதம் மேகதாது மின் திட்டத்திற்கு மத்திய அரசின் மின் அமைப்பிற்கு வரவில்லை என்றும், உலக வங்கியின் உதவி வழங்கப்படவில்லையென்றும், ஆகவே தன்னிச்சையாக எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாமென்று மின் அமைச்சகம் கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆகவே முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதத்திற்கு மத்திய நீர்ப்பாசன அமைச்சர் பதில் அனுப்பியுள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தமிழக அரசின் சார்பில் இதுகுறித்து நடவடிக்கை எடுத்திருப்பது குறித்து மகிழ்ச்சி. ஆனால் கர்நாடக அரசு ஏற்கெனவே இதுகுறித்து சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. மத்திய அரசின் ஒப்புதல், நிதி உதவி போன்றவை வராவிட்டாலும் கூட, கர்நாடக





அரசே பணம் ஒதுக்கி சில திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதை நம்முடைய அரசும் அறிந்திருக்கும். மேகதாது திட்டத்தைப் பொறுத்த வரையில், கர்நாடக அரசு மத்திய அரசின் குறிப்புகளையும் மீறி நடவடிக்கை எடுக்கலாம் என்றால், நம்முடைய அரசும் ஏன் மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமலே ஒக்கனேக்கல் திட்டத்தைத் தொடர்ந்து நடத்தி அதன் மூலம் நம்முடைய மாநிலம் பயன்பட வழிவகை செய்ய முன்வரக் கூடாது ? அப்படிப்பட்ட நடவடிக்கையை நம்முடைய அரசு ஏன் எடுக்கக்கூடாது ?

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஒரு தவறுக்கு இன்னொரு தவறு பரிகாரமாகாது. மேகதாது திட்டத்தைப் பொறுத்தவரையில், இன்னும் மத்திய அரசுக்கு அது சம்பந்தமாக எந்தத் திட்டத்தையும் அவர்கள் அனுப்பவில்லை. அப்படி இருக்கும்போது தன்னிச்சையாக அவர்கள் செயல்படுவார்கள் என்ற ஐயம் தேவையில்லை, அச்சமும் தேவையில்லை.

## (2) மாநகராட்சி உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் குடிதண்ணீருக்காக மாணவர்களும் ஆசிரியர்களும் அடையும் அவதி குறித்து.

**செல்வி ஆ. லீலாவதி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"மாநகராட்சி உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் குடிதண்ணீருக்காக பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்தும், பல பள்ளிகளில் குடிதண்ணீர் இல்லாமல் மாணவர்கள், ஆசிரியர்கள் அடையும் அவதியைக் குறித்து"

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**செல்வி ஆ. லீலாவதி :** துணைத் தலைவரவர்களே, குடிநீர்வசதிக்காக தரைமட்டத் தொட்டி, மேல்நீர்த் தொட்டி, பம்பு மூலம் தண்ணீர் கிடைக்கும் நிலைமைகள் இவைகள் எல்லாம் செய்தும் எழுகிணறு பகுதியில் இருக்கும் பள்ளியில் தண்ணீர் தாராளமாகக் கிடைக்கவில்லை. தண்ணீர்த் தொட்டிகளில்

@ 231-232 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தண்ணீர் நிரப்பப்படுகிறது என்று விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. 1,500-க்கும் மேற்பட்ட மாணவிகள் படிக்கும் பள்ளிகளில் குறிப்பாக சைதாப்பேட்டை பெண்கள் உயர் நிலைப் பள்ளி, ஆண்கள் உயர் நிலைப் பள்ளி, மேல் நிலைப் பள்ளி, நுங்கம்பாக்கம் பெண்கள் உயர் நிலைப் பள்ளி, மேல் நிலைப் பள்ளி, பந்தர் கார்டன், மாதவரம் ஹைரோட் ஆகிய பகுதிகளில் இருக்கும் பள்ளிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் படிக்கிறார்கள். அங்கெல்லாம் 'சம்ப்' மற்றும் 'ஓவர்-ஹெட் டாங்க்' எல்லாம் கட்டியிருக்கிறார்கள். ஆனால் தண்ணீர் இல்லை. மேலும் அவைகளைச் சரியாகப் பராமரிக்காமல் அவைகள் பழுதடைந்து இருக்கின்றன. அவைகள் கட்டப்பட்டு 1½ ஆண்டுகளுக்கு மேலாகிறது ....

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சுருக்கமாகச் சொல்லலாம்.

செல்வி ஆ. லீலாவதி : அறிக்கையில் இந்த நிலைமைகள் உண்மைக்குப் புறம்பாக இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரு குழு அமைத்து உண்மையா இல்லையா என்று நிரூபிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இதற்கென்று ஒரு குழு அமைக்க வேண்டிய தேவையில்லை. குடிநீர் வசதிக்காக குழு அமைப்பது தேவையற்ற காரியம். என்னைப் பொறுத்தவரையில், இது ஒரு அடிப்படைத் தேவை. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொறுப்பிலே மாநகராட்சி இருக்கிறது. ஆகவே, இதைக் கண்டிப்பாகச் செய்வோம். இந்த நிதியாண்டிலே ரூபாய் மூன்று லட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. குடிநீர் வசதி இல்லாமல் பள்ளிகளை நடத்துவது சரியல்ல என்ற அடிப்படையில்தான் காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்ட அந்தப் பள்ளியில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. குடிநீருக்காக எந்த மாணவனும் மாணவியும் தவிக்கும் நிலை இல்லை.

4. ஆளுநர் உரை மீதான விவாதம்—தொடர்ச்சி.

திரு. ம. சங்கரலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுவதற்கு முன்னால் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு செய்தியைக் கொண்டுவர விரும்புகிறேன். நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, வேலூரிலே நடைபெற்ற ஒரு [illegible] சொல்லி, ஒரு கொள்ளையைச் சொல்லி, சஸ்பென்ஸிலே





விட்டிருக்கிறார்கள். நாட்டையே சஸ்பென்ஸிலே விடும் நிலையிலே அந்தச் செய்தி இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியது எல்லா மாலை நாளிதழ்களிலேயும், இன்று காலை நாளிதழ்களிலேயும் வந்து, நாடு முழுவதும் 'சஸ்பென்ஸ்' ஏற்படுத்தியிருக்கிறது. 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை திருப்பருடைய மோட்டார் சைக்கிள் என்று தொடர்பு ஏற்படுத்தும் நிலையில் வந்திருக்கிறது. அந்த மோட்டார் சைக்கிள் இரண்டு நாட்களுக்கு முன்னால் களவுபோய் புகார் செய்யப்பட்டிருப்பதாகப் பத்திரிகையிலே பார்த்தேன். ஆகவே, நாட்டிலே ஏற்பட்டிருக்கிற சஸ்பென்சை முதலிலே நீக்கி, தன்னுடைய பேச்சைத் தொடர வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் இன்றையதினம் தொடர்ந்து பேசுவதற்கு இங்கே தலைவர் அவர்கள் அனுமதித்து, அதற்கு ஒத்துழைப்பு தரும் வகையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரவு அளிப்பதை எண்ணி நான் நன்றி கூறுகிறேன். நேற்றையதினம் நான் அதை அப்படியே நிறுத்தியதற்குக் காரணம், தகவல் வாராததால் அல்ல; பத்திரிகைகளில் எப்படிச் செய்தி வெளிவருகிறது என்று பார்ப்பதற்காகத்தான், அப்படி நிறுத்தினேன். இல்லாத செய்திகளையெல்லாம் சில பத்திரிகைகள் வெளியிடும்போது, ஒரு முதலமைச்சர் இப்படிச் சொல்லியிருக்கிறார்களே என்பதற்காக அதையாவது வெளியிடுகிறார்களா என்று பார்த்தால், உண்மையிலேயே பெருமையோடு சொல்கிறேன், அவர்களுடைய ஒற்றுமையுள்ளம் அதை வெளியிடவில்லை. இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை மட்டும்தான் அதை வெளியிட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். அந்த ஒற்றுமை கூடாது என்று நான் சொல்லவில்லை. அந்த உணர்வு கண்டிப்பாகத் தேவை பத்திரிகைகள் பற்றிய தவறான செய்திகள், அல்லது தரக்குறைவான செய்திகள், அல்லது அந்த ஆசிரியருக்குக் கெட்ட பெயர் உண்டாக்கக்கூடிய செய்திகள் இவைகள் எல்லாம் வெளியே வரக்கூடாது என்ற உணர்வை நான் உளமாரப் பாராட்டுகிறேன். இந்த உணர்வு நமக்கெல்லாம் வரக்கூடாதா ? அதுதான் என்னுடைய ஆவல். நாம் ஒருவரையொருவர் அரசியல் கட்சி என்றோ, வேறு வகையிலோ குற்றம் சாட்டுவதற்கு எப்போது இடம் கிடைக்கும் என்று தேடிக்கொண்டிருக்கிறோமே தவிர, அரசியல்வாதிகள் நடத்தும் பத்திரிகைகளில் ஒருவரையொருவர் குறைகூறுதல், தவறான செய்திகளைப் போடுதல் போன்றவற்றில் அக்கறை காட்டுகிறோமே தவிர, இந்த உணர்வு ஏன் இல்லை என்பதை எண்ணிப்பார்க்க ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது என்பதையும், சொல்லுவதற்கு வாய்ப்பு கிடைத்தது என்பதையும் இங்கே எடுத்துச் சொல்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அதனால்தான் அந்தச் செய்தியை

அப்படியே விட்டுவிட்டு இந்தப் பேச்சை நாளை தொடர்கிறேன் என்று சொன்னேன். எனக்கும் தகவல் வந்திருக்கிறது. காவல் நிலையத்தில் இரண்டு மோட்டார்-சைக்கிள்கள் காணாமல் போய்விட்டன என்ற தகவல் வந்திருக்கிறது. இவைகளை அங்கே பதிவு செய்திருக்கிறார்கள். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், நேற்றையதினம் நான் மோட்டார்-சைக்கிளைப் பற்றிச் சொல்லும்போது, சட்டம் ஒழுங்கை இந்தப் பிரச்சினையோடு ஒட்டிப் பேசினேன். அதோடு இப்போது பத்திரிகைகளையும் சேர்த்துப் பேசுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் ஒரு நல்ல தூண்டுகோலாக இருந்தார்கள் என்பதை எண்ணும்போது, நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அவருக்கு என்னுடைய நன்றியை எப்படிச் சொல்ல வேண்டும் என்பதற்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை. சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பது என்றால், வெறும் ஏட்டிலே மட்டும் சட்டத்தை எழுதிவிட்டால் போதாது. சட்டமன்றப் பேரவையிலோ அல்லது இங்கோ சட்ட முன்வடிவை நிறைவேற்றி விட்டால் மட்டும் போதாது. அது மக்களிடத்திலே எந்தக் காரணத்தின் அடிப்படையிலே, எதற்காகச் சட்டங்களை இங்கே நிறைவேற்றி ஒப்படைக்கிறோமோ அந்த நோக்கம் நிறைவேற வேண்டும், சரியாகச் செயல்பட வேண்டும். அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தும்போது மிகப்பெரிய அளவில் ஒத்துழைப்பு தரவேண்டியவர்கள் பத்திரிகையாளர்கள் என்பதையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். பத்திரிகைகளைப் பொறுத்தவரையில், உண்மைக்கு மாறான செய்திகளை வெளியிடுவதன் மூலமாக வதந்திகள் பரவி எவ்வளவு மோசமான நிகழ்ச்சிகள் உருவாக்கப்படுகின்றன என்பதை நான் சொல்லித்தான் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற நிலை இல்லை. ஆனாலும் உதாரணத்திற்காகச் சொல்கிறேன், அண்மையிலே இராமநாதபுரம் மாவட்டத்திற்கு அருகில் ஒரு இடத்தில் காவல் துறையினர் ஒருவரைக் கைதுசெய்துகொண்டு போயிருக்கிறார்கள். பிறகு அவர்மீது நடவடிக்கை எடுப்பதற்காக, எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படி, முறைப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இடையிலே, அழைத்துச் செல்லப்பட்ட அந்த நபரைக் கொன்றுவிட்டார்கள், அவர் செத்துவிட்டார் என்ற செய்தியைப் பரப்பி, அந்தக் காவல் நிலையத்தின் மீது மக்கள் போய் படையெடுக்கும் நிலை வந்து பயங்கரமான நிலை ஏற்படுத்தப்பட்டு, துப்பாக்கியைப் பயன்படுத்தும் நிலைமை ஏற்படுத்தப்படுகிறது என்று சொன்னால், அதற்கு வதந்திதான் காரணம். அந்த ஓர் ஊரிலே மட்டும் சொன்னதனால் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது என்று சொன்னால், நாடு முழுவதும் பல்வேறு பத்திரிகைகளிலே செய்திகளைப் படிக்கும் மக்களுக்குத் தவறான செய்திகள் போனால், நிலைமை என்னவாகும்? அந்த நிலைமையைத்தான் நான் வேண்டுமென்றே குறிப்பிடுகிறேன். அதை இங்கே குறிப்பிடுகிறேன்.





(முற்பகல் 10-40)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

சட்டம் ஒழுங்கு என்பது மனித மனத்தினுடைய கட்டுக்கோப்பில்தான் அமைகிறது என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு மனிதனுடைய செயலுக்குப் பிறகுதான் அவன் தீமை செய்கிறானா அல்லது நன்மை செய்கிறானா என்று புரிந்துகொள்ள முடியுமே தவிர, அவன் மனதில் என்ன எண்ணுகிறான் என்று கண்டுபிடிக்கக்கூடிய கருவிகள் இதுவரை இருந்ததாகவோ கிடைத்ததாகவோ எனக்குத் தெரியவில்லை. அப்படியானால், சட்டம் ஒழுங்கு என்பது ஒரு தனி நபருடைய மனத்தில் இருக்கிற உணர்வுகள், ஒழுக்க நிலைமைகள், ஒழுக்கத்திற்கு மதிப்பு தருகிற நல்ல பழக்கவழக்கங்கள், இவைகளையொட்டித்தான் இருக்குமே தவிர, வெறும் சட்டத்தைப் போட்டுவிட்டால் மட்டும் பயன்படாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குழந்தைகளை அடித்துப் பாடம் சொல்லிக் கொடுக்கக்கூடாது என்று நாம் ஆசிரியர்களுக்குச் சொன்னாலும், ஆசிரியர்கள் சில மாணவர்களுக்காகப் பிரம்பு வாங்கி வைத்துக்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகிறது. சில ஆசிரியர்கள் சில மாணவர்களிடம் கொஞ்சம் கண்டிப்பாக இருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

இதை நான் சொல்லும்போது "லட்டியால்" அடிப்பதையோ அல்லது துப்பாக்கியால் சுடுவதையோ ஆதரித்துப் பேசுவதாக தயவுசெய்து யாரும் எண்ண வேண்டாம். உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன் என்பதை இங்கே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்வது மிகவும் எளிது. ஆனால் உண்மையிலேயே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டதா என்றால், என்னைப் பொறுத்தவரையில், நான் அண்ணாவோடு இருந்த காலத்திலிருந்து அதற்குப் பின்னால் 1930-ல் கள்ளுக்கடை மறியலின் போது நடந்த செயல்களையெல்லாம் நேரில் கண்டதிலிருந்து எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்தால், நான் மனம் விட்டுச் சொல்வேன், அந்தக் காலங்களில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டிருந்த நிலைமைபோல் இன்றில்லை என்று திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன். ஆனால் அன்றையதினம் இவ்வளவு பத்திரிகைகள் இல்லை. படித்தவர்கள் இவ்வளவு பேர் இல்லை. மக்கள் தொகையும் இந்த அளவுக்கு இல்லை. இப்போது எதையெடுத்தாலும், ஜாதிப் பிரச்சினையாக

ஆக்க முடிகிறது, மதப் பிரச்சினையாக ஆக்க முடிகிறது, அரசியல் பிரச்
னையாக ஆக்க முடிகிறது. தனி நபரைப்பற்றிப் பேசத் தொடங்கி, அரசியல்
கட்சி வரை போய், அங்கே ஜாதி உணர்வு மேலோங்கி, மதத் தலைவர்கள்
அதற்குப் பரிகாரம் தேட வேண்டும் என்று கேட்கிற அளவுக்கு நாடு போய்க்
கொண்டிருக்கிறது என்பதை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் சட்டம் ஒழுங்கைப் பற்றிக் குறிப்
பிடும்போது, இதைத்தான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஒன்றை
மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். இன்றையதினம் காவல்
துறையினர் அதிகமான அளவுக்குத் தாக்கப்படுகிற நிலைமைகள் ஏற்படு
கின்றன என்றால், காவல் துறையினர் எடுத்த எடுப்பிலேயே பலவந்தமாக
காரியங்களில் ஈடுபடாததுதான் காரணம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். இப்போதெல்லாம் "பக் ஷாட்" என்று கேள்விப்படுகிறோமே இந்தப்
"பக் ஷாட்" பற்றி 40 ஆண்டுகளுக்கு முன்னாலே கேள்விப்பட்டதுண்டா?
அவை அப்போது இருந்ததா என்பதில் எனக்கு ஐயம் உண்டு. ஆனால் அப்
பொழுதெல்லாம் எடுத்த எடுப்பிலேயே காவல் துறையினர் சுடுவார்கள்
தோட்டக்காளைத்தான் அப்போது பயன்படுத்துவார்கள். ரப்பரால் செய்யப்
பட்ட இந்தப் 'பக் ஷாட்டுக்கள்' அப்போதெல்லாம் பயன்படுத்தப்பட்டதா
என்பது எனக்குத் தெரியாது . . .

திரு. ப. மாணிக்கம் : அப்போதும் 'பக் ஷாட்' உண்டு.

திரு. ப. மாணிக்கம் : அப்போதும் 'பக் ஷாட்' உண்டு.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அந்த
அனுபவம் எனக்கில்லை என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களுக்கு அந்த அனுபவம் உண்டு
என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : எனவே எத்தனை முறை
எந்தெந்த ஊர்களில் பக் ஷாட்கள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதை
நாம் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். சுடப்பட்டார்கள் என்பது
தான் நமக்குத் தெரியும். ஜாலியன்வாலாபாக் பற்றி கேள்விப்பட்டிருக்கி
றோம். அங்கே என்னென்ன நடைபெற்றது என்பதையெல்லாம் நாம்
கேள்விப்பட்டிருக்கிறோம். அன்றையதினம் ஒரு மாவட்ட ஆட்சித் தலை
வரைப் பதவியிலிருந்து வெளியேற்ற, தோட்டாதான் தேவைப்பட்டது என்ற
வரலாறு நம் கையில் இருக்கிறது. இன்று அப்படிப்பட்ட நிலைமை இல்லை.



இந்த மாமன்றத்தில் ஒருவர் எழுந்து பேசி, ஆதாரங்களைத் தெரிவித்தாலே அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் வீட்டுக்குப் போக வேண்டிய நிலை ஏற்படும் என்ற நிலைமையை நாம் எண்ணிப் பார்க்கிறபோது, அன்றைக்கும் இன்றைக்கும் உள்ள வித்தியாசம் தெரியும்.

வன்முறை என்பது எங்கெங்கே எந்தெந்த அளவில், ரூபத்தில் வெளிப்படுகிறதோ அதற்கேற்பத்தான் காவல் நிலையத்தில் பணியாற்றுகிற, நம் மக்களிலேயே ஒரு பிரிவினர், இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறார்களே தவிர, எல்லோரையும் கைது செய்ய வேண்டும் என்றோ, எல்லோரையும் உள்ளே பிடித்துவைக்க வேண்டும் என்றோ செயல்படுவதில்லை. எல்லோரையும் பிடித்தால் இடம் போதாது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1938 அல்லது 1939 ஆம் ஆண்டில் என்று நினைக்கிறேன். அநேகமாய் 1939 ஆம் ஆண்டாக இருக்கலாம். ஆண்டு மாறியிருக்கலாம். நினைவு சரியாக இல்லை. இப்போது மிட்லண்டு தியேட்டர் பக்கத்தில் உள்ள மைதானத்தில்தான் பொதுக் கூட்டங்கள் நடக்கும். அப்போது திரு. எம். என். ராய் இங்கே வந்து பேசியதை நான் நேரில் கேட்டேன். ஆங்கிலேயர்களுக்கு மிகவும் நெருக்கடியாக இருந்த நேரத்தில் அந்தக் கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 1939 ஆம் ஆண்டில்தான்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : டங்கர்க் வந்தபோது . .

திரு. க. இராமமூர்த்தி : 1945 ஆம் ஆண்டில் என்று நினைக்கிறேன் . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அப்போது மகாத்மா காந்தி அவர்கள் தனி நபர் சத்தியாகிரகத்தைத் தொடங்கியிருந்தார். அப்போது எம். என். ராய் அவர்கள் பொதுக் கூட்டத்தில் ஒரு கருத்தைத் தெரிவித்தார். "இந்தியாவில் ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், எத்தனை காவல் துறையினர் இருப்பார்கள்? அதைப்போலவே எத்தனை இராணுவத்தினர் இருப்பார்கள்? இவர்களிடம் இருக்கும் மொத்தத் தோட்டாக்கள் எவ்வளவு? இவர்களிடம் இருக்கும் துப்பாக்கிகள் எவ்வளவு? இவைகளையெல்லாம் கணக்கிட்டால், இவற்றோடு நம் நாட்டிலுள்ள கிராமங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டால், 5 அல்லது 10 கிராமங்களுக்குக்கூட ஒரு காவலர் சென்று எதையும் செய்ய முடியாத நிலைதான் இருக்கும். ஆகவே நாம் வேறு வழியில் முயன்றால், விரைவில் இந்தியாவை விடுதலை செய்ய முடியும்" என்று பேசியதை

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 17

நானே கேட்டேன். இன்று நாம் அமைதியாகப் பேச முடியுமா? பேசத் தயாரா? சட்டம் தடுக்கிறது என்பது மட்டுமல்ல, மக்கள் உணர்கிறார்கள். இன்று அந்தத் தேவையும் இல்லை. வன்முறை வேண்டாம். நமக்குத் தேவையானதை மக்களிடம் சொல்வோம். வன்முறையின் மூலம் எதையும் பெறாமல், மக்களுடைய ஆதரவோடு, வாக்குச் சீட்டின் துணை கொண்டு எதையும் மாற்றுவோம் என்ற நம்பிக்கையில் நாம் அரசியலை அமைத்துக் கொண்டு அதன் வழியில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

ஒரு சிலர் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், சட்டம் நிறைவேற்றப் பட்டு, அமுல்படுத்தப்படும்போது, யார் இதற்கெல்லாம் உண்மையிலேயே பொறுப்பானவர்களோ, இப்படிப்பட்ட சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று விரும்புகிறார்களோ, அல்லது விரும்ப வேண்டியவர்களோ, அல்லது அந்தப் பொறுப்புக்குச் சொந்தக்காரர்களோ, அப்படிப்பட்டவர்கள் அந்தச் சட்டத்திற்கு ஆதரவு கொடுத்து தங்களைப் பின்பற்றுகிறவர்களை, தங்களை நம்புகிறவர்களைப் பார்த்து செல்வாக்குள்ள தன்னுடைய நிலைமையை அவர்களுக்குச் சொல்லி நாம் இந்தச் சட்டத்தை மதித்தாக வேண்டும், ஏற்றுக்கொள்ள வேண்டும், நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொல்லுகிற பொறுப்பை ஏற்றுக்கொண்டால்தான் எந்த சட்டமும் செயல்படும் தவிர, அதைச் செய்யாவிட்டால், சட்டம் நிச்சயமாகச் செயல்பட முடியாது என்பதை நாம் மிக நன்றாக உணர்ந்திருக்கிறோம்.

அன்றையதினம் நானே பார்த்தேன். அப்போது பிராட்வே என்றழைக்கப் பட்ட பகுதி இப்போது சுபாஷ் சந்திர போஸ் ரோடு என்று சொல்லப்படு கிறது. அங்கே நான் குடியிருந்த நேரத்தில் டீ வாங்கிக் கொண்டு குறுக்கே ஓடிவந்த 13 வயது பையன் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டின் காரணமாகச் சுடப்பட்டு இறந்தான். நானே அதைப் பார்த்தேன். அவ்வளவு பெரிய கலவரம் ஏதும் அப்போது நடக்கவில்லை. மக்கள் பயந்து ஓடிக் கொண்டிருந்தார்கள். காரணம் அந்த வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கிற சந்தின் கடைசியில் ஒரு சாராயக் கடையும் கள்ளுக் கடையும் இருந்தன.

(முற்பகல் 10-50)

அங்கேதான் மறியல் நடந்தது. அங்கே மறியல் நடத்ததற்காக பிராட்வேயில் சுட்டார்கள். அந்த அராஜக ஆட்சி, சர்வதிகார ஆட்சி, அந்த ஆங்கிலேயர் களின் ஆட்சி போன்ற நிலைமை இன்றைய தினம் தமிழகத்திலே இல்லை என்பதை நான் கொஞ்சம் அறுதியிட்டுக் கூற விரும்புகிறேன். ஆனால்



1982 பிப்ரவரி 17]

திரு. ப. மாணிக்கம்: தலைவரவர்களே, ஒரு விளக்கம். 1930, 1932 ஆம் ஆண்டுகளில் சட்ட மறுப்பு இயக்கம் நடந்த காலத்தில் காவல் துறையினர் அவர்களை அடித்ததுண்டு, மண்டையைப் பிளந்ததுண்டு என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். சென்னையிலே நடந்த அந்த நிகழ்ச்சியைப் பார்த்த பழைய முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் இருக்கிறார். உங்களுக்கே கூட தெரியும் என்று நினைக்கிறேன். ஒரு விவாதத் திற்காக மட்டுமே தலையிட்டுச் சொன்னேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: என் கண்ணால் பார்த்ததை இல்லையென்று சொல்ல வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் விரும்பினால், அவர் நல்ல கட்சியின் தலைவர் என்பதற்காக வேண்டுமானால் விட்டுக்கொடுத்து ஒத்துக்கொள்கிறேன். ஆனால் பிராட்வே யில் அது நடந்தது என்பதையும், இராணுவ வீரர்கள் வெளியே வருகிறார்கள் என்றால், பெண்கள் உள்ளே ஓடிச் சென்று கதவைச் சாத்திக் கொண்ட காலமும் இருந்தது என்பதை என் அனுபவத்தின் அடிப்படையிலே கூற விரும்புகிறேன். அதற்காக ஓர் ஏற்பாடு கூட நடத்தப்பட்டது. ஆண்களில் கொஞ்சம் வலிமை மிக்கவர்கள் ஒன்று கூடி குழுவை அமைத்துக் கொண்டு பெண்களைப் பாதுகாப்பதற்காக, இராணுவ வீரர்கள் போகின்ற வரையில் பாதையில் காத்துக்கொண்டிருப்பது என்ற நிலை இருந்தது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிப்பட்ட ஆட்சி இப்போது இல்லை. அப்படிப்பட்ட ஆட்சி இருக்கவும் முடியாது, இருக்கவும் கூடாது, அதை யாரும் அனுமதிக்கவும் முடியாது. ஆனால் சில சமயம் துப்பாக்கி எடுக்க வேண்டிய அவசியம் காவலர்களுக்கு வருகிறதென்றால், அதற்குரிய காரணம் என்ன என்பதை நான் சொல்லுவதற்குமுன் இங்கே மாண்புமிகு உறுப்பினர் கள் சுட்டிக்காட்டியதைச் சொல்ல விரும்புகிறேன். "தாலி போயிற்று, சங்கிலி நகைகள் பறி போயின; ஸ்கூட்டரில் கணவனும் மனைவியும் போகிற போதும், தாயும் மகனும் போகிறபோதும் இரண்டு பேர் மோட்டார் பைக்கில் வந்து அவர்களைத் தொடர்ந்து சென்று அறுத்துக்கொண்டு ஓடிவிடுகிறார்கள்" என்று சொன்னார்கள். நான் இங்கே ஒன்றைக் குறிப்பிடும்போது, எந்தக் கட்சியையும் குறை கூறுவதற்காகச் சொல்லவில்லை. மீண்டும், நடந்ததைத் தான் சொல்லுகிறேன் கமிஷனருடைய அறிக்கையை வைத்துதான் சொல் கிறேன். இலங்கைத் தமிழர்களுக்காக ஒரு வாரம் மறியல் போராட்டம் நடந் ததைப்பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். சமூக விரோதிகள் என்று சொல்லப்படுகிறவர்கள் பட்டியலில் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும்

இருக்கிறார்கள். ஆகவே நான் சொல்லுவது அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களைக் குறிப்பிடுகிறேன் என்று கருதாமல், அரசியல் கட்சியைச் சேராதவர்களைக் குறிப்பிடுகிறேன் என்று எடுத்துக்கொள்ள வேண்டும். சமூக விரோதிகள் என்று சந்தேகிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கிறவர்களை முன்னெச்சரிக்கையாகக் கைது செய்திருக்கிறார்கள். அந்த ஒரு வாரத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் மிக மிகக் குறைவு. நூற்றுக்கு 15 நிகழ்ச்சிகள் கூட நடைபெறவில்லை என்பதை, சென்னை அனுபவத்தை வைத்து இங்கே நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். என்ன காரணம்? 35 இலட்சம் மக்கள் வாழ்கின்ற சென்னை நகரில் 300, 400 சமூக விரோதிகளைக் கைது செய்து உள்ளே வைத்துவிட்டால், அந்த ஒரு வார காலத்தில் நகையறுப்பு கிடையாது, வழிப்பறி கிடையாது, கத்தி காட்டி மிரட்டல் கிடையாது. இவைகள் எல்லாம் மிகவும் குறைந்து போகின்றன என்றால், இதற்கு யார் காரணம்? சமூக அமைப்பு என்று சொல்லுங்கள், ஒத்துக்கொள்வோம். பொருளாதாரத்தில் கீழ் நிலையில் இருக்கின்றவர்கள் வேறு வேலையின்றி அப்படிச் செய்யத் துணிந்துவிட்டார்கள் என்று சொல்லுங்கள். நாம் அதைப்பற்றி விவாதிப்போம். 35 இலட்சம் மக்களைக் காப்பாற்றுவதற்காக 400 பேரைக் கைது செய்தால் போதும், அதனால் குற்றங்கள் குறையும் என்றால், இப்படிப்பட்டவர்களைப் பற்றி நாம் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று யோசிப்பதற்காக அனைவரும் உட்கார்ந்து முடிவெடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசையாகும். ஆனால் யார் பூனைக்கு மணி கட்டுவது என்ற பிரச்சினை ஏற்படுகிறது. அங்கேதான் பிரச்சினை கொஞ்சம் சிக்கலாக ஆகிறது. பூனைக்கு மணி கட்டுவது என்பது எளிதான செயல் அல்ல. சில சமயம் எப்போது எதிர்க் கட்சிகள், அரசியல் கட்சிகள், அல்லது மற்றவர்கள் போராட்டம் தொடங்குவார்கள் என்றே அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களையெல்லாம் ஒதுக்கித் தள்ளி, சமூகத்தில் அவர்களுக்கு இடம் இல்லையென்ற சூழ்நிலையை இந்த நாட்டில் என்றைக்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டுக் கொண்டுவருகிறோமோ அதுவரையில் இது போன்றவைகள் வளரும். அதிகமாகும், நாட்டுக்குத் தொல்லையை ஏற்படுத்தத்தான் செய்யும். ஆனால் அதற்காக நாம் சும்மா கையைக் கட்டிக் கொண்டிருக்க முடியாது. ஆகவேதான் நாங்கள் சட்டங்களைக் கொண்டு வருகிறோம். சட்டங்களைக் கொண்டு வந்து பயன்படுத்தும்போது, எங்கள் மீது முதலிலே சந்தேகப்பட்டுவிடுகிறார்கள் என்ற வேதனையைச் சொல்லுகிறேன். எதிர்க் கட்சியை ஒட்டுமொத்தமாக ஒதுக்குவதாகச் சொல்லுகிறார்கள். எதிர்க்கட்சியினரை வேண்டுமென்றே உள்ளே





தள்ளிவிட்டார்கள், வழக்குப் போடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். பிறகு ஆறு, எட்டு மாதங்கள் கழித்த பிறகு இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தவில்லை, ஆகவே இந்த அரசு நிர்வாகத்திற்கு லாயக்கற்ற அரசு, சரியாகச் சட்டங்களை நிறைவேற்றத் தெரியாத அரசு என்று சொல்லி எங்களைப் பழிக்குள்ளாக்குகிறார்கள். சட்டம் கொண்டு வந்தால், எதிர்க்கட்சிகளை ஒடுக்கக் கொண்டு வந்ததாகவும், கொண்டுவராவிட்டால், நிர்வாகத் திறமையற்ற சிந்திக்கத் திறமையில்லாத அரசு என்றும், கொண்டு வந்து தோல்வி அடைந்துவிட்டால், முழுப்பலனைத் தர முடியாவிட்டால், ஆட்சிக்கு இலாயக்கற்றவர்கள் என்றும் சொல்கிறார்கள். இப்படி எந்த ஆட்சி வந்தாலும், எந்த எதிர்க் கட்சியாலும் சொல்ல முடியும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதை விடுத்து, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் கூறியது போல, ஒன்றை மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். எந்தச் சட்டம் கொண்டு வருவதாக இருந்தாலும், எந்த ஒழுங்கை நிலைநாட்ட வேண்டுமென்று விரும்பினாலும், ஒட்டுமொத்தமாக "நாட்டு மக்களுடைய நன்மையை முன்னிட்டு" என்ற எண்ணத்தை மனதிலே கொண்டு அரசோடு ஒத்துழைத்து அல்லது அரசுக்கு யோசனை கூறி நிறைவேற்ற முன்வந்தால், பிரச்சினைகள் மிக மிகக் குறையும் என்று நான் கருதுகிறேன்.

இன்னொன்று அண்மைக்காலத்திலே "சைக்கிள் திருடர்கள்"—பைசிக்கிள் தீஃப் என்ற இத்தாலியத் திரைப்படம் வந்தது. அதைப் போல மோட்டார் பைக் திருடர்கள் இப்போது அதிகமாக இருக்கிறார்கள். மோட்டார் பைக் விற்பதைக் கூடத் தகுதி பார்த்து விற்கலாம் என்று நான் சொல்லியிருக்கிறேன். என்னை யாரும் தப்பாகக் கருத வேண்டாம். மோட்டார் பைக் வாங்குபவர்கள் எல்லாம் அப்படித்தான் செய்வார்களா என்றால் அப்படியல்ல. மூன்றாண்டுகளுக்கு முன்னால் விவசாயிகள் போராட்டம் நடந்தபோது, ஒரு பெரிய மரத்தை வெட்டி, கொஞ்சம் பாக்கி விட்டுவிட்டு முக்கால்வாசிக்குமேல் சம்பத்தால் அறுத்து அதில் வெடி மருந்து வைத்து விட்டு மோட்டார் பைக்கில் தப்பிப் போய்விட்டார்கள். அகப்பட்டுக் கொண்டவர்கள் விவசாயிகள்தான். இதிலே 2, 3 ஆட்கள் கலந்து கொண்டிருக்கலாம். யாருக்கு இந்த மோட்டார் பைக் போன்றவைகள் தேவையோ அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற நிலை போய், வியாபாரம் பெருக வேண்டும் என்ற முறையில், தொழிற்சாலைகளில் இத்தனை உற்பத்தி தருகிறோம், இவ்வளவு விலைக்குக் கொடுக்கிறோம், உறுதியானதைத் தருகிறோம் என்ற நிலையில் விற்பதால், பாதகமான செயல்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன என்பதால், இதைத் தடுத்தேயாக

வேண்டும். அதற்கு வழியைக் கண்டுபிடித்தாக வேண்டும் என்பதில் எங்களுக்கு அதிக அக்கறை இருக்கிறது. உங்களுக்கு அக்கறை குறைவு என்று சொல்கிறேன் என்பதல்ல. நாங்கள் அதிகப் பொறுப்பை ஏற்றிருப்பதால் அந்த வகையில் எங்களுக்கு அதிக அக்கறை இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

சட்டம், ஒழுங்கைப்பற்றிச் சொல்லும்போது, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். டி. சித்தாபதி அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு நீலநாராயணன் அவர்களும் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். "பத்திரிக்கைச் சுதந்திரம் பறி போயிருக்கிறது" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-00)

அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டது. 'எதிரொலி' பத்திரிக்கை உரிமையாளர், டைரக்டர் இவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். "இலங்கைப் பிரச்சினையில் மற்றக் கட்சிக்காரர்கள் மீது நடவடிக்கை இல்லை. ஆனால் எங்கள் தி.மு.க. வின் மீது மட்டும் நடவடிக்கை எடுத்து கைது செய்தனர்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தமிழிலே தீவிரமாக எழுதியதற்காக, தீவிரவாதி என்று சொல்லி ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று எழுதியிருக்கிறார்கள். அதிலே 'கொட்டேஷன்' போட்டு எழுதியிருக்கிறார்கள்.

"நீ சொல்கின்ற கருத்துக்களை ஏன் ஆங்கிலத்தில் எழுதக் கூடாது ஏன் தமிழில் எழுதியிருக்கிறாய்? என்று சொல்லி அடித்திருக்கிறார்கள்.' இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். இதை எந்த ஆதாரத்தை வைத்துச் சொன்னார்கள் என்பது எனக்குத் தெரியாது. யார் இந்த ஆதாரத்தை அவர்களுக்குக் கொடுத்தது? அப்படி ஏதாவது அதிகார பூர்வமாகக் கிடைத்திருக்கிறதா என்று எனக்குத் தெரியாது. நான் அதற்குத் தெளிவாக விளக்கம் சொல்லியாக வேண்டும்.

அதே நேரத்திலே, சட்டம் ஒழுங்கைப்பற்றி மதிப்பிற்குரிய திரு. ராமன் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது ஆசிரியையை அன்புறுத்திவிட்டார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார். அதுவும் சட்டம் ஒழுங்கு என்பதில்தான் வருகிறது.





திரு. ஆர்.டி. சித்தாபதி அவர்கள் விலைவாசி சம்பந்தமாக நடந்ததைப் பற்றிச் சொன்னார்கள். "இந்தியத் துணைக் கண்டம் பூராவும் கதவடைப்பு ஏற்பட்டது. அதில் மத்திய அரசு தற்காலிக வேலை நீக்கம் செய்தது. வேலை நிறுத்தம் செய்தவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்திக் கொண்டுள்ளது. தமிழக அரசு 400 பேர்களை வேலையிலிருந்து நீக்கியது. ஆனால் இன்னமும் அவர்களை வேலையில் அமர்த்திக்கொள்ளவில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் 'ஜனவரி 19 அன்று வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்ட உழைக்கும் மக்கள் மீது அரசு அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்தது' என்று சொன்னார்கள். மேலும் பழி வாங்கும் எண்ணத்துடன் தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். டி. சித்தாபதி அவர்கள் இன்னொன்றும் சொல்லியிருக்கிறார்கள். நான் முன்பே சொன்னேன். மாங்கல்யம் பறி கொடுத்திருக்கிறார்கள். பொருள் பறிகொடுத்த மங்கையர் எத்தனை பேர்கள், பழியுற்ற பெண்கள் எத்தனை பேர்கள்? சுமார் 12 லட்சம் மதிப்புள்ள நகைகள் கடந்த மாதங்களில் களவாடப் பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், களவாடப்பட்டது ரூபாய் 12 லட்சம் ஆனாலும் சரி, அது 12 ரூபாயாக இருந்தாலும் சரி, களவு, களவுதான். ஆகவே அந்த வகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசின் மாபெரும் கடமைதான். அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதுதான்.

அத்துடன் திரு. சித்தாபதி அவர்கள் இன்னொன்றைச் சொல்லியிருக்கிறார்கள். "பால் கமிஷன் அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். ஆனால் திரு. சண்முகநாதனைக் கைது செய்திருக்கிறார்கள். அவரை மீண்டும் இந்தத் துறையில் சேர்த்துக்கொள்ள வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்கள். "யார் யார் எல்லாமோ கார்ப்பரேஷன் கட்டிடத்திற்கு முன்பு உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். எங்களுக்கு மட்டும் அனுமதி மறுக்கப்பட்டது" என்று ஒரு குறைபாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றிய விவரங்களை இங்கே பேசுவதும் பயனுள்ளதுதான் என்றாலும் 'எதிரொலி'யின் மீது நடவடிக்கை எடுப்பதுபற்றி நான் முதலில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முழுவதையும் நான் இங்கே கொண்டுவரவில்லை. அது முழுவதையும் கேட்டாலும், உங்களுக்குச் சுவையாக இருக்காது. நான் சுருக்கமாகச் சொல்கிறேன்.

(திரு. எம். ஜி. இராமச்சந்திரன்) [1982 பிப்ரவரி 17

'எம்.ஜி.ஆர். மனைவி வீட்டிற்கு பெயிண்ட் அடிக்க அரசு தொகை' இது தலைப்பு.

"ஆற்காடு முதலி தெருவில் உள்ள எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ்க்குச் சொந்தமான வீட்டைத் தானே தன் மனைவிக்கு விற்று, வருமான வரி பாக்கியைக் கட்டியதாக திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்தார் அல்லவா? இந்த நாடகத்தின் விவரங்களை எதிரொலி அம்பலப்படுத்தியது". "எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ்க்குச் சொந்தமான வீட்டை, தன் மனைவியார் திருமதி வி. என். ஜானகிக்குத் தான் விற்றதாக திரு. எம்.ஜி.ஆர். கூறினார்". நான் சரியாகத்தான் படிக்கிறேன் என்று நினைக்கிறேன். எல்லோருக்கும் புரிகின்ற அளவிற்குச் சொல்லுகிறேன் என்று நினைக்கிறேன். "அதுவும் தொகை ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்தைந்து ஆயிரம். எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ்க்குச் சொந்தமாக இருந்து, இப்போது வி.. என். ஜானகிக்குச் சொந்தமான அந்த வீட்டுக்குப் பராமரிப்பு வேலைகள், வெள்ளை அடித்தல் முதலிய வேலைகள் நடந்திருக்கின்றன. திருமதி வி. என். ஜானகிதான் தன் சொந்தச் செலவில் அவைகளைச் செய்வதுதான் முறையாகும். ஆனால், அது அரசு செலவில் நடந்திருக்கிறது. பொதுப் பணித் துறையிலிருந்து 40 ஆயிரம் ரூபாய் அளவுக்குத் செலவு செய்யப்பட்டு, பெயிண்ட் மற்றும் வெள்ளை அடிப்பது நடந்துள்ளது". இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். தப்பித்துக்கொள்வதற்கு 'சொன்னார்களாம், சொல்லுகிறார்களாம்' என்று சொல்வார்கள். இப்படிச் சொல்வதால் எதுவும் கேட்க முடியாது என்று சொல்வார்கள். சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம், அது உண்மைக்கு மாறாக இருந்தால் 'பொதுமக்கள் வரிப் பணத்தில் வி. என். ஜானகி வீட்டுக்கு வெள்ளை அடிக்கவேண்டுமா? இது தான் அண்ணா வழி நடப்பதாக பெருமை அடித்துக்கொள்ளும் உத்தமர் எம்.ஜி.ஆர். அவர்கள் லட்சணமா? பொதுமக்கள் கேட்கும் கேள்வி இதுதான்' இதில் ஓர் உண்மையை நான் சொல்லியாக வேண்டும்.

மாம்பலத்தில் உள்ள அந்த அலுவலகக் கட்டிடத்திற்கு அரசின் மூலமாக எந்தவிதமான செலவும், பழுது பார்க்கவோ, வெள்ளை அடிக்கவோ, வர்ணம் பூசவோ செய்யப்படவில்லை என்பதற்கு தலைமைப் பொறியாளரின் கடிதம் இங்கே என்னிடம் இருக்கிறது.

"With reference to the above, I have to report that no work has been done by the P.W.D. in the residence of Hon. Chief Minister. This is for favour of information."

என்று எழுதப்பட்டிருக்கிறது. இதையும் நான் இங்கே கொடுக்கிறேன். இப்படி பதில் கொடுக்கப்பட்டிருப்பதால், அந்தச் செய்தி உண்மைக்குப் புறம்பானது என்று தெரிகிறது.



1982 பிப்ரவரி 17]

திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு வினாவிற்குப் பதிலாகச் சொன்னதுதான் எதிரொலியில் செய்தியாக வந்திருக்கிறது. அப்போது நாங்கள்கூட ஊட்டியிலே ஒரு கமிட்டி போட்டிருந்தோம். அப்போது ஒரு பொதுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருமான வரியைப்பற்றிச் சொல்லும்போது, நான் லாயிட்ஸ் ரோடில் இருக்கக் கூடிய வீட்டை விற்றுத்தான் வருமான வரியைக் கட்டியிருக்கிறேன் என்று பேசியதாகச் செய்தி வந்தது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நான் சொல்லிவிடுகிறேன். உறுப்பினர் அவர்கள் சொன்னது சரியல்ல. நான் சொன்னது இதுதான். முதலில் இந்த இரண்டேமுக்கால் லட்சம் ரூபாய் இன்கம்-டாக்ஸ் கட்டுவதற்குப் பணம் ஏது என்று கேட்டார்கள். எதிர்க் கட்சிக்காரர்கள்தான் கேட்டார்கள். உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் கேட்டார்கள். நான் அதற்குப் பதில் சொல்லும்போது சொன்னேன். "அந்த வீட்டை என் வாழ்க்கைத் துணைவிக்கு விற்றேன். அந்தப் பணத்தை வைத்துத்தான் இன்கம்-டாக்ஸ் கட்டினேன்" என்று சொன்னேன். நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இருந்தும் சொன்னேன். அதற்குப் பிறகும் சொன்னார்கள். அவர்களுக்கு ஏது பணம் என்று கேட்டார்கள். இன்றைக்கும்கூட கேட்கிறார்கள். அவர்களுக்கு ஏது பணம் என்று இன்னமும் கேட்கிறார்கள். லாயிட்ஸ் ரோடில் ஆறு கிரௌண்ட்ஸ் வீடும் உள்ள அந்த இடத்தை ஒருவருக்கு அடமானம் வைத்துப் பணத்தைப் பெற்று, அதைக் கட்டியிருக்கிறார்கள். அதில் எந்தவிதமான வாடகையின்றி நான் இன்று அங்கே அலுவலகம் வைத்துக்கொண்டிருக்கிறேன். இந்த உண்மையைச் சொல்ல வைத்ததற்கு நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இன்கம்டாக்ஸ் டிபார்ட்மெண்ட்காரர்கள் சில நேரங்களில் அப்பனையும் மகனையும்கூடப் பிரித்துவிடுகிறார்கள்.

திரு. சோ. ஆறுமுகம்: புருஷனையும் மனைவியையும்கூட கணக்குப் பார்ப்பவர்கள் பிரித்துவிடுகிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நான் இன்னும் மனைவியை ரத்து செய்யவில்லை. மனைவியோடுதான் இருக்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம்: வருமான வரித் துறை அதிகாரிகள் பிரித்து வைப்பதுபோல, கணக்கு கொடுக்கின்றவர்களே சில நேரங்களில் பிரித்து வைப்பார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

[1982 பிப்ரவரி 17

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இந்த அனுபவத்தை, நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களிடமிருந்துதான் தெரிந்து கொண்டேன். இனி நான் எச்சரிக்கையாகவே இருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இரண்டு பேர்களும் சொல்லிக் கொண்டது எனக்கு விளங்கவே இல்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அவருடைய அனுபவத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அவர் சொன்னதை நான் தெரிந்துகொண்டேன் என்றுதான் சொல்கிறேன்.

அடுத்து, எரி சாராயம் சம்பந்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகையில் போட்டிருக்கிறார்கள். 'போட்டோ எடுத்து எம்.ஜி.ஆர். வீட்டில் சி.பி.ஐ. சோதனை'—இது தலைப்பு. "முதலமைச்சர் அவர்கள், எம்.ஜி.ஆர் அவர்கள் வீட்டில் சி.பி.ஐ. அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தினார்கள்." எல்லாம் 'எதிரொலி'யில்தான் வந்திருக்கிறது. நான் வேறு எந்தப் பத்திரிகையையும் எடுத்துச் சொல்லவில்லை. "எம்.ஜி.ஆர். படுக்கை அறை உட்பட, அத்தனை அறைகளையும் போட்டோ படம் எடுத்தார்கள். எரி சாராய ஊழல்பற்றி எம்.ஜி.ஆர். மீது மத்திய அரசு விசாரணைக் கமிஷன் நியமித்திருந்தது தெரிந்ததே. இந்த விசாரணைக் கமிஷன் அறிவிப்பு வருவதற்கு முன்னாலேயே, எம்.ஜி.ஆர். வீடு, அலுவலகம் ஆகியவற்றில் சி.பி.ஐ. அதிகாரிகள் சோதனை நடத்தினார்கள்."

(முற்பகல் 11-10)

'நடந்ததாக' செய்தியல்ல. அது தெரிந்ததே. 'நிச்சயப்படுத்திவிட்டு', "சோதனை நடத்தினார்கள், பல லட்சங்கள் கைப்பற்றப்பட்டன. அரசு அலுவலகம், ஐ.ஜி. அலுவலகம் சோதனை இடப்பட்டது—சட்டம் ஒழுங்கு எப்படி இருக்கிறதென்று பார்த்துக் கொள்ளுங்கள். ஐ.ஜி. அலுவலகம் சோதனை இடப்பட்டது, எரிசாராய ஊழலில் சம்பந்தப்பட்ட பெரும் புள்ளிகளின் வீடுகளும் சோதனை இடப்பட்டன. சம்பந்தப்பட்டவர்களை சி.பி.ஐ. அதிகாரிகள் ரகசியமாகக் கண்காணித்து வருகிறார்கள். ரே கமிஷன் விசாரணை 31 ஆம் தேதி காலையில் டெல்லியில் துவங்குகிறது. டெல்லியில் உள்ள லோக் பவனில் . . . . நீதிபதி ரே கம்பம் நடராசனுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்கள் . . இந்தப் பரபரப்பான சூழ்நிலையில் எம்.ஜி.ஆர். வீட்டிலும் திடீரென சி.பி.ஐ. அதிகாரிகள் சோதனை நடத்தியிருக்கிறார்கள்.



1982 பிப்ரவரி 17] (திரு. எம். ஜி. இராமச்சந்திரன்)

இராமாவரம் வீட்டில் இந்தத் திடீர் சோதனை நடந்தது. படுக்கை அறை, பெரிய புள்ளிகளை சந்திக்கும் இடம் உட்பட வீட்டிலுள்ள இடங்களைத் தனித் தனியாகப் போட்டோ எடுத்தார்கள் சி. பி. ஐ. அதிகாரிகள். மாம்பலத்தில் உள்ள முதலமைச்சர் வீடு சோதனையிடப்பட்டு, போட்டோ எடுக்கப் பட்டது. இரண்டு இடங்களிலும் பணி புரிவோர் பற்றிய முழு விவரப் பட்டியல் தயாரித்து, அதுவும் போட்டோக்களும் டெல்லிக்கு அனுப்பப் பட்டிருக்கின்றன". என்னமோ அரசு, என்னமோ இலாக்காக்கள் வைத்திருக் கிறது. அவர்களுக்குத் தெரியாத ஒன்று, எதிரொலிக்கு மட்டும்தான் தெரிந்திருக்கிறது. உங்களுக்கே தெரியும், ரே கமிஷன் நியமிக்கப்பட்டது, ராமமூர்த்தி கமிஷன் நியமிக்கப்பட்டது எல்லாம் தெரியும். இதுவரையில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்ததாக, எந்த அதிகாரியாவது சொல்லியிருக்கிறார்களா? யாராவது என்ன. 15 பேர்கள் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன், அவர்கள் கேள்வி கேட்டு, அப்படி நடந்தது அல்லது இல்லை என்று பதில் பெற்றார்களா? அப்படிப் பெற்ற பிறகு போட்டார்களா? அப்படியே நிச்சயிக்கப்பட்ட மாதிரிதான் இருக்கிறது. இதற்கு எந்தவிதத் திருத்தமும் இல்லை. இது சட்டத்திற்கும், ஒழுங்குக்கும் கட்டுப்பட்டு நடக்கின்ற நிலைமை என்று நம்புவோமா? இதைத் தமிழ் நாடு முழுவதும் படித்தால் என்ன என்னுவார்கள்? ஒரு முதல் அமைச்சர் வீட்டில் சி.பி.ஐ. அதிகாரிகள் சோதனை போடுவது எப்படி, யாருடைய உத்தரவு இருந்தால் அப்படி நடக்க முடியும், யாருடைய உத்தரவு இன்கம்டாக்ஸ் அதிகாரிகள் நுழைய வேண்டுமென்றால், யாருடைய உத்தரவோடு அப்படிச் செய்ய முடியும், இதையெல்லாம் தெரிந்து கொண்டிருக்கக் கூடியவர்கள் மக்கள் என்று நினைக்கக் கூடாது. அவர்களுக்கு இதெல்லாம் தெரியாது. அப்படியிருந்தும், ஒரு முதலமைச்சர் வீட்டில் இப்படி சோதனை நடந்தது என்று உண்மைக்குப் புறம்பாகச் செய்தி வந்திருக்கிறது. அதிலிருந்து என்ன தெரிகிறது? ஏதோ தவறு செய்துவிட்டதாகவும், மத்திய அரசு சந்தேகப்பட்டு வீட்டைச் சோதனை போட்டதாகவும், இப்படி ஒரு தலை குனிவு ஏற்பட, என்மீது நல்ல நம்பிக்கை வைத்துள்ள மக்களுக்கு என்மீது வெறுப்பும் அருவருப்பும் ஏற்பட, இவ்வளவு ஏமாற்றுக்காரனா, இவ்வளவு சந்தேகப் படக்கூடியவனா முதலமைச்சர் என்ற எண்ணம் ஏற்படக்கூடிய நிலைக்கு இவை கொண்டு போய் விடுகிறதா, இல்லையா என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். அதற்கு நீங்கள்தான் பதில் சொல்ல வேண்டும். உறுப்பினர்கள் பேசும்போது, "பத்திரிகையின்மீது நடவடிக்கை, பத்திரிகைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை, பத்திரிகைகளை நடமாட விடமாட்டேன் என்கிறார்கள்" என்று சொன்னார்கள். இதற்கெல்லாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோமோ என்றால் இல்லை.

(திரு. எம். ஜி. இராமச்சந்திரன்) [1982 பிப்ரவரி 17

அடுத்ததையும் படித்து விடுகிறேன். அண்ணா அவர்களின் கொள்கையான 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற கொள்கையை நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். ஆகவே நம்மை மீறிய சக்தி இருக்கிறதென்ற நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அது மூகாம்பிகையா, பழனியா, பராசக்தியா, ஐயப்பனா என்பது தெரியாது. ஏதோ நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதை நான் மறுக்கவே மாட்டேன். ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் நானே கையைப் பார்த்து, ஜோசியம் சொல்வேன். ஓரளவிற்குத் தெரியும். சிலருக்குச் சொல்லியிருக்கிறேன். அது நடந்திருக்கிறது. ஒரு நடிகை, கதாநாயகியாக நடித்தவர் என்னிடம் வந்து கேட்டார். 'எனக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருக்கிறது, நடக்குமா என்று சொல்லுங்கள்' என்று கேட்டார். கை ரேகையைப் பார்த்துவிட்டு, 'சொல்ல மாட்டேன்' என்று சொன்னேன். கண்டிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். இந்தக் கல்யாணம் நடக்காதென்று சொன்னேன்.

திரு. சோ. ஆறுமுகம் : முதலமைச்சரவர்கள் நல்ல ஜோசியக்காரராக இருப்பதற்கு பாராட்டுக்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஜோசியம் என்பது வேறு, கை ரேகை பார்ப்பது என்பது வேறு. கை ரேகைகளைப் பார்த்து, ஒன்றிரண்டு கோடுகளை வைத்துச் சொல்வதுண்டு.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நான் எவ்வளவு நாட்கள் இருப்பேன் என்பதை முதல்வரவர்கள் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இன்னும் கையைப் பார்க்கவில்லை. அதைச் சொல்ல வேண்டுமென்றால், கையைப் பார்க்க வேண்டும். மாண்புமிகு தலைவரவர்கள் 100 ஆண்டுகள் வாழ வேண்டும். பதவியில் இருக்க வேண்டுமென்று சொல்லுவேன். அதற்குமேல் இருந்தால், அது நம்முடைய அதிருஷ்டம். என் கையைப் பார்த்து, நானே சொல்லக்கூடிய அளவிற்கு என்னைப்பற்றித் தெரிந்து, அதை பகிரங்கமாகச் சொல்லியிருக்கிறேன். நான் 'மர்மயோகி' படத்தில் நடித்துக்கொண்டிருந்தபோது, எந்தவித வசதியமும் எதிர்பாராமல் நடித்தேன். அப்போது ஒருநாள் அண்ணன் எஸ். வி. சகஸ்ரநாமம் அவர்கள் ஒருவரை அழைத்து வந்தார். நான் குளித்துவிட்டு, ஷூட்டிங்கிற்குப் போகத் தயாராக இருந்த நிலையில் அவர் வந்தார். அவர் இன்னின்ன நடக்குமென்று சொன்னார். அதைக் கேலி செய்துவிட்டுப் போய்விட்டேன், நம்பிக்கையில்லாத காரணத்தால். பிறகு அவர்கள் எழுதித்



1982 பிப்ரவரி 19] (திரு. எம். ஜி. இராமச்சந்திரன்)

தந்தார்கள். "42 வயதில் உன்னால் நடக்க முடியாத நிலை ஏற்படும், அதி
லிருந்து மீளுவது கஷ்டம், மீண்டால் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று
சொல்லியிருந்தார். கால் முறிவு ஏற்பட்டது. சுடப்பட்டேன். அதையும்
குறிப்பிட்டிருந்தார்கள். உயிருக்கு ஆபத்து ஏற்படும், பிழைத்தால் நல்ல
காலம் என்று சொல்லியிருந்தார். பிழைத்தேன். இன்னும் எழுதிக் கொடுத்
தார்கள். அதெல்லாம் இருக்கிறது. எனக்குத் தெரிந்தது. "ஏரிசாராய
ஊழல் பற்றி ரே கமிஷன் விசாரணை என்னவாகும், அதில் சிக்கிக்கொள்ளு
வோமா, தமிழக அரசுமீது மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுக்கும்,
அ.தி.மு.க. அரசு டிஸ்மிஸ் ஆகுமா அல்லது தானாகவே கவிழ்ந்து
விடுமா—விமானத்தில் பறந்து வந்த மலையாள ஜோசியருடன் எம்.ஜி.ஆர்.
அவசர ஆலோசனை." நிதானமாகக்கூட கேட்கவில்லை. அவசரமாக—அவ்
வளவு பயம், அவ்வளவு சந்தேகம். நாம் தப்பு பண்ணிவிட்டோம், ஒரு
வரிடம் கொடுத்து வைத்திருக்கிறோம், சிங்கப்பூரிலே வைத்திருக்கிறோம்,
மலேசியாவில் வைத்திருக்கிறோம், தொழிற்சாலை கட்டியிருக்கிறோமே,
கட்டிய தொழிற்சாலை போய்விடுமே, சீனிவாசன், இராமசாமி போன்றவர்
களிடம் கொடுத்து வைத்திருக்கிறோமே, அந்தப் பணமெல்லாம் போய்
விட்டதே, அதற்குக் கணக்கு வேண்டுமென்றால், இன்னொரு சான்ஸ் வாங்கிக்
கொடு, பணத்தை வாங்கித் தருகிறேன் என்று சொல்லுகின்ற சூழ்நிலையில்
நான் இருக்கிறேனா, இல்லை. ஜோசியம் பார்த்த பிறகா என்னை 'டிஸ்மிஸ்'
செய்தார்கள்? இந்திரா காந்தி அம்மையார் ஜோசியரை வரவழைத்து,
டிஸ்மிஸ் செய்யலாமா என்று கேட்டா செய்தார்? இதிலிருந்து என்ன தெரி
கிறது? எந்த நேரத்திலும் நாங்கள் அச்சத்தோடு இருக்கிறோம், ஏனென்
றால் நாங்கள் குற்றவாளிகள், குற்றம் செய்திருக்கிறோம், ஆகையால் பதவி
போய்விடுமே, விசாரணை வந்துவிடுமே—இப்படியெல்லாம் பயந்து கொண்
டிருந்தால் மக்கள் எங்கள்மீது வைத்திருக்கும் நம்பிக்கையை இழந்துவிடு
வார்கள், அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற எண்ணம் இதிலே
தெரிகிறது. இதன்மூலம் நான் நல்லவன் இல்லை, ஏதாவது சொத்து
அண்ணாவாலே, தாயாராலே எனக்குக் கிடைத்திருந்தால், அது 'நல்லவன்'
என்பதனால்தான், அந்தப் பெயரைக் கெடுக்க வேண்டுமென்ற நோக்கம்தான்
இதில் இருக்கிறது என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை என்பதைப் பணி
வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(மூ.ப.கள் 11-30)

அந்தோடு விட்டார்களா என்றால், இல்லை. 'மதுவிலக்கு மூலம் கோடி கோடியாக எம்.ஜி.ஆர். வாங்கிய லஞ்சம்' என்று போட்டார்கள். நான் இங்கே பத்திரிகைகளில் வந்ததைச் சொன்னதும், அதற்குப் பதிலளித்து நான் சொன்

னதும் எல்லாப் பத்திரிகைகளிலும் வர வேண்டும். அது ரெக்கார்டில் இருக்க வேண்டும். " எம்.பி.க்களும், எம்.எல்.ஏ.க்களும் பிரதமரிடம் மனு கொடுத்தார்கள் ". இதற்காக வழக்குக் கூட போட்டிருக்கிறோம். ஆதலால் அதைப்பற்றி அதிகமாக நான் குறிப்பிட விரும்பவில்லை. இதிலும் பத்திரிகைமீது நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. யார் அதைக் கொடுத்திருக்கிறார்களோ அவர்கள்மீது மட்டும்தான் நடவடிக்கை எடுத்திருக்கிறேன். பத்திரிகை மீது கை வைக்கவில்லை. யார் சொன்னார்களோ அவர்கள் நிரூபிக்கட்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம். கோடி என்று சொல்கிறார்களே, அதற்கு என்ன பொருள் வைத்திருக்கிறார்களோ ? " பிராந்தி, விஸ்கியில் ஒரு கோடி வசூல், எம்.ஜி.ஆர். திட்டம் " என்று போட்டிருக்கிறார்கள். அவர்களிடம் கேட்டுத் தான் கொடுத்தார்களோ என்னவோ. இப்படி எல்லாம் என்னுடைய நாணயத்தைக் குறை கூறும் அளவுக்கு எழுதப்பட்டிருக்கிறது. இதை மாண்புமிகு மன்ற உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகக் கூறுகிறேன். வெளி நாட்டிலுள்ள லஞ்சப் பணத்தைப் பாதுகாக்க எம்.ஜி.ஆர். தீவிர நடவடிக்கை என்று போட்டிருக்கிறார்கள். அதைக் காப்பாற்ற நான் முயற்சி பண்ணிக் கொண்டிருக்கிறேனாம். அப்படிப்பட்ட எண்ணத்தில் தான் சொல்லியிருக்கிறார்கள். " ஊழலில் சம்பாதித்து, வெளி நாட்டில் வைக்கப்பட்டுள்ள பணம் பாதுகாப்பாக உள்ளதா என்று நேரில் சென்று அறிந்து வர எம்.ஜி.ஆர். மேற்கொண்டுள்ள முயற்சி தோல்வி அடைந்துள்ளது " என்று சொல்லியிருக்கிறார்கள். நான் வேறு ஒரு பெரிய மக்களுடைய பிரச்சினைக்காக வெளி நாடு செல்ல இருந்ததை ரத்து செய்துவிட்டு, தமிழகத்திலுள்ள இராமநாதபுரம் ஜாதிக் கலவரம்பற்றி அறிய நேரில் போனேன். அன்று இராமநாதபுரத்துக்குப் போக வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் தான், பயணத்தை ரத்து செய்தேன். நான் பாதுகாக்க முனைந்து கொண்டிருந்த கோடிக்கணக்கான பணத்தைப் பாதுகாக்க முடியாமல் போய்விட்டதால், நான் அச்சப்பட்டுக் கொண்டிருக்கிறேன் என்று எழுதியிருக்கிறார்கள். அதுமட்டுமா ? எம்.ஜி.ஆர். லஞ்சப் பணத்தில் சிங்கப்பூரில் ஹோட்டல் கட்ட இருக்கிறார் என்று எழுதியிருக்கிறார்கள். ஏன் சத்தியா ஸ்டுடியோவில் கட்டக் கூடாதா ? அதற்காக ஏன் சிங்கப்பூருக்குப் போக வேண்டும்? ஒருவேளை அவர்களைக் கேட்டுத்தான் நான் எல்லாவற்றையும் செய்கிறேன் போல் தெரிகிறது. அதனால் தான் " எம்.ஜி.ஆர். அப்படிச் செய்கிறார்," என்று எழுதிவிட்டார்களோ என்னவோ. இப்படியெல்லாம் எழுதியும், இவ்வளவு பெரிய குற்றச்சாட்டுகளைச் சொல்லியும் கூட நான்





அடுத்து, ' ஊனமுற்றோர் ஆண்டில் எம்.ஜி.ஆர். அரசின் மகத்தான உதவி ' என்று போட்டுவிட்டு, ஊனமுற்றோருக்கான பள்ளி நிலத்தை சினிமா அரங்கு கட்ட எம்.ஜி.ஆர். கேட்கிறார் " என்று சொல்லியிருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். கேட்கிறாரா அல்லது எம்.ஜி.ஆர் அரசு கேட்கிறதா ? தமிழகத்தின் முதலமைச்சர் கேட்கிறாரா அல்லது எம்.ஜி. இராமச்சந்திரன் கேட்கிறாரா? ஆனால் உண்மை நிலை என்ன என்பதைச் சொல்கிறேன். 1972 ஆம் ஆண்டு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான சுமார் 81 கிரவுண்டு நிலம் கிரவுண்டு ஒன்றுக்கு ரூபாய் 6,700 என்ற விலையில் ரூபாய் 5,44,004-க்கு குத்தகை முறையில் லீஸ்-கம்-சேல் முறையில் விற்பனை செய்யப்பட்டது. மித்திரா நிறுவனம் ஒப்பந்தப் பத்திரம் செய்த பின், நிலம் அவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தப்படி மித்திரா நிறுவனம் முதல் தவணையாக ரூபாய் 25,000 செலுத்தவும், மீதத்தை அரை ஆண்டுத் தவணைகளில் தவணைக்கு ரூபாய் 31,065 வீதம் 1978 லிருந்து 8½ பெர்சென்ட் வட்டி வீதம் உட்பட கட்டவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த நிறுவனம் முதல் தவணையாக ரூபாய் 25 ஆயிரம் கொடுத்தது. அப்புறம் 20 ஆயிரம் ரூபாய் செலுத்தியது. மீதத்தை அரை ஆண்டுத் தவணைகளில் செலுத்த அனுமதி அளிக்கப்பட்டது. வேறுபாடு தொகை ரூபாய் 1,21,700ஐ 4,869 ரூபாய் வீதம் 25 அரை ஆண்டுத் தவணைகளில் கட்ட அனுமதிக்கப்பட்டது. ஒப்பந்தபடி தவணைகளைக் கட்டாமல் இருந்ததால், 1—10—1978ல் இந்த நிறுவனம் வீட்டு வசதி வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூபாய் 3,92,136 ஆக இருந்தது. இந்நிலையில் வீட்டு வசதி வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய தவணைகளைக் கட்டும்படி அனுப்பிய கடிதங்களுக்குப் பதிலாக காலம் தாழ்த்தி பாக்கியைக் கட்ட அனுமதி கோரியிருந்தனர். எனவே வீட்டு வசதி வாரியம் 6—1—1979 அன்று மித்ரா நிறுவனத்திற்குச் செய்த நில ஒதுக்கீட்டை ரத்து செய்தது. இதன் பின்னர் தான் மித்திரா நிறுவனம், அரசு வீட்டு வசதி வாரியத்திற்கு மானியமளித்து உதவ வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரைக் கேட்டது. மேலும் இந்நிறுவனத்திற்கு ஒதுக்கிய நிலம் முழுவதையும் பல ஆண்டுக் காலமாகப் பயன்படுத்தவும் இல்லை. ஒதுக்கப்பட்ட நிலத்தில் ஒரு சிறு பகுதியைத்தான் இந்நிறுவனம் பயன்படுத்தி வந்தது. எனவே இது ஒரு தொண்டு நிறுவனம் என்பதைக் கருத்தில் கொண்டு அதன் அடிப்படையில் 10 கிரவுண்ட் நிலத்தை மட்டும் இந்நிறுவனத்திற்கு ஒதுக்கிவிட்டு அதற்கான கிரயத்தைப் பெற்றுக் கொண்டு எஞ்சிய பகுதியை வீட்டு வசதி வாரியம் எடுத்துக்கொள்ளலாமென்று அரசு தக்க பரிசீலனைக்குப்பின் ஆணை வெளியிட்டது. இந்த ஆணையை எதிர்த்து மித்திரா நிறுவனம் உயர் நீதிமன்றத்

(திரு. எம். ஜி. இராமச்சந்திரன்) [1982 பிப்ரவரி 17

திற்குப் போய் வழக்கு தொடுத்துள்ளது. வழக்கு நிலுவையில் உள்ளது. திரை அரங்கு கட்டத்தான் நிலம் எடுக்கப்படுகிறது என்பது உண்மைக்குப் புறம்பானது. இது சாதாரண மக்களுக்குத் தெரியுமா? இதைப்பற்றி நான் ஏதாவது வழக்குத் தொடர்ந்தேனா? ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா? ஆனால் இன்னொன்றையும் நான் இங்கே சொல்லித்தான் ஆக வேண்டும். அதுதான் என்னை உண்மையிலேயே வேதனைப்படுத்தியது. ஆனால் அதைக்கூட நான் விட்டுவிட்டேன். ஒரு கட்சித் தலைவர் அல்லது ஒரு கட்சியிலே முக்கியப் பொறுப்பிலே இருப்பவர். அவரிடம் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பற்றும் பாசமும் வைத்திருப்பார்கள் என்பதை உணர்ந்துகொள்ளத் தகுதியுடையவர்கள் இங்கே இருக்கிறோம். அப்படிப் பட்ட ஒருவருக்கு ஒரு ஆபத்தை ஏற்படுத்த முனைந்தால், நிலைமை என்ன ஆகும் என்பதைக் கொஞ்சம் கற்பனை செய்து பார்க்க வேண்டும். என் கால் முன்பு ஒருமுறை முறிந்தது. குண்டுமணி என்பவர் என்மேல் விழுந்து என் கால் முறிந்தது என்று சொன்னார்கள். ஆனால் அவர் எந்தவிதத்திலும் காரணமானவர் அல்ல. நாடகம் நடக்கும்போது குண்டுமணியை நான் தூக்கினேன். ஆனால் நான் தவறி விட்டுவிட்டேன். அவர் என் காலில் விழுந்து விட்டதால் என் கால் முறிந்துவிட்டது. அண்மையில் அவர் கால மாகிவிட்டார். ஒரு நாள் என்னிடம் அவர் வந்தார். "ஒரு லாரி டிரைவர் என்னிடம் வந்து எங்கள் எம்.ஜி.ஆர். ஐ சண்டைக் காட்சியில் இப்படிச் செய்த உன்னை இன்னும் ஒரு வாரத்திற்குள் கொல்லப் போகிறேன், உன்னைக் கொலை செய்த பிறகு தான் வேறு வேலை" என்று மிரட்டியதாக என்னிடம் வந்து முறையிட்டார். ஆனால் உண்மையில் இது என்னால் ஏற்பட்ட தவறே தவிர, குண்டுமணி எந்தவிதத்திலும் இதற்குப் பொறுப்பல்ல. ஒரு சாதாரண நடிகருக்கு—என்னை இன்னும் ஒரு சாதாரண நடிகராகவே நான் கருது கிறேன்—ஏற்பட்ட விபத்திற்கு வேறு யாரையோ ஒருவரைக் கொல்ல ஒருவர் முற்பட்டிருக்கிறார் என்றால், இதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா? "கலைஞரைக் கொல்ல எம்.ஜி.ஆர். பயங்கர சதித் திட்டம்" என்று எழுதி யிருக்கிறார்கள். நீங்கள் இங்கே உணர்ச்சிப் பெருக்கோடு இருக்கிறீர்கள் என் பது எனக்குப் புரிகிறது. "திட்டம்" என்ற வார்த்தைக்குப் பின்னால் ஒரு கேள்விக் குறியைப் போட்டிருக்கலாம். அது கூட போடவில்லை. அப்படியே எழுதியிருக்கிறார்கள். அதிலே தி.மு.க. தலைவர் கருணாநிதியை

THIRUMATHI TARA CHERIAN: Hon. Chairman, may I just ask one question, without interrupting? I do not want to interrupt. By and large our press has a good name.



1982 பிப்ரவரி 17] [திருமதி தாரா செரியன்]

(முற்பகல் 11-30)

எந்தக் காரணத்திற்காக எந்தமாதிரி பேப்பரிலே இது வந்தது? நாங்கள் இதையெல்லாம் வாசிப்பதில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அந்தப் பேப்பரை உறுப்பி னர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அப்படித் தெரிந்துகொள்வதால் எந்தவிதமான நன்மையும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் ஆங்கிலம் தெரிந்தவர்கள். ஆங்கிலப் பத்திரிகைகளைப் பார்த்து விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம் (சிரிப்பு) இப்படி, "திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களைத் தீர்த்துக்கட்ட எம்.ஜி.ஆர். தீட்டிய சதித் திட்டத்தின் விளை வாக நேற்று காரில் சென்றுகொண்டிருந்த கருணாநிதி மீது பயங்கர ஆயுதம் வீசப்பட்டது. கார் கண்ணாடி உடைந்து கருணாநிதி மயிரிழையில் உயிர் தப்பினார்" என்றெல்லாம் வருகிறது. எந்த நிகழ்ச்சிக்கு, எதைச் சேர்த்து, யாரைக் குற்றவாளியாக்குகிறார்கள் என்று பாருங்கள், எங்கோ, யாரோ, எதையோ செய்தால், எம்.ஜி.ஆர். திட்டம் போட்டு ஏற்பாடு செய்தார், அவர் மயிரிழையில் உயிர் தப்பினார் என்று சொன்னால், என்னுடைய உயிருக்கு யார் பாதுகாப்பு? நான் மிகவும் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன், எனக் குப் போலீஸ் பாதுகாப்பு இருக்கலாம்; நண்பர்கள் போல இருந்து ஊமை செய்ய முடியாதா என்ன? எம். ஆர் ராதா செய்ததைப்போலக் கூட செய்ய லாமே, இப்படியெல்லாம் போட்டால், அதைப் படிப்பவர்கள் ஆத்திரம் அடைந்து, அந்த ஆத்திரத்தில் எம்.ஜி.ஆரை ஏதாவது செய்யட்டுமே என்ற ஆவேசத்தில் தான் இப்படிச் செய்கிறார்களா? இதற்கு நான் ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா? இதைப்பற்றி மேடையிலே ஏதாவது பேசினேனா? உண்மையிலேயே நான் சொல்கிறேன், என்னைக் கொலை செய்ய, திட்டம் தீட்டி அதற்காக பணமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த விஷயங்கள் எல்லாம் விரைவிலே வெளிவரும். அப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான் நான் இருக்கிறேன். என்னுடைய உயிரைப்பற்றி நான் கவலைப்படவில்லை. நான் வாழ்வதற்குத் தாயாக இருந்து தமிழக மக்கள் வழிவகுத்து விட்டார்கள். இதைவிட எனக்கு என்ன வேண்டும்? வாழ்வதற்கே கஷ்டப்பட்டு வந்த நான் இன்று முதலமைச்சர் பதவிக்கு வந்திருக்கிறேன் என்று சொன்னால், இதை விட எனக்கு என்ன வேண்டும்? நான் கோடிக்கணக்கான பணத்தைப் பார்க்கவில்லையா? இன்றைக்கு அரசுக்கு இருக்கும் நிதியை நிதியமைச்சர் அவர்கள் தான் பார்த்துக்கொள்கிறார்கள். நான் கோப்பிலேதான் கையெழுத் துப் போடுகிறேன். இப்படிப்பட்ட செய்திகளையெல்லாம் பத்திரிகைகளிலே

போடுகிறார்கள் என்று சொன்னால், நான் நடவடிக்கை எடுத்தேனா? எனக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறது. இப்படி யார் என்ன சொன்னாலும், எவ்வளவு தான் இட்டுக்கட்டினாலும், தமிழக மக்கள் என்னைத் தவறாக எண்ண மாட்டார்கள். அந்த ஒரே நம்பிக்கையில் தான் நான் இருக்கிறேன். அந்த நம்பிக்கையில்தான் நான் இவைகளையெல்லாம் விட்டு வைத்திருக்கிறேன். ஆனால் டாக்டர் ஹண்டே அவர்கள் ‘கார் வாங்கினார், லஞ்சம் வாங்கினார்’ என்று சொன்னால், அவரும் பொறுத்துக்கொள்வார், விட்டுவைப்பார் என்று எப்படி எதிர்பார்ப்பது? ஆகையால்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டதே தவிர வேறல்ல. இன்னும் சொல்வதற்கு நிறைய விஷயங்கள் இருக்கின்றன. ஆனால் ‘டைம்’ இல்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன், இவ்வளவு ஆதாரங்களைக் காட்டி சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு யாரும் தடையாக நிற்கவில்லை. ஒரு பத்திரிகையில் இப்படித் தவறான செய்திகள் வந்தால், அந்தப் பத்திரிகையின் ஆசிரியர், பிரிண்டர், பப்ளிஷர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க சட்டம் இருக்கிறது. ஆனால், அந்த நிர்வாகத்தினுடைய மேனேஜிங் டைரக்டரைக் கைது செய்ய எந்தச் சட்டம் வழி வகுக்கிறது? மேனேஜிங் டைரக்டரைக் கைது செய்ய எந்த விதிமுறையிலே வகை செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தான் திரு. நீலநாராயணன் அவர்களும், மற்றவர்களும் சுட்டிக்காட்டிப் பேசியிருக்கிறார்களே தவிர, அரசு நடவடிக்கை எடுப்பதிலும், நாட்டை ஒழுங்குபடுத்துவதிலும் யாரும் குறுக்கிடவில்லை. இதைவிட மட்டமான முறையில் செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கும் ‘நீரோட்டம்’ போன்ற பத்திரிகைகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** எத்தனை முறை அவர்களுக்குப் போலீஸ் அதிகாரிகள் எச்சரிக்கைக் கடிதம் எழுதினார்கள் என்ற பட்டியல் இருக்கிறது. அவற்றை நான் இப்போது குறிப்பிட விரும்பவில்லை. ஆனால் அமைச்சர் அவர்களுடைய புகாரின் பேரில், சென்னை நகர போலீசார் குற்ற எண் 549/81-ல், இந்திய தண்டனைச் சட்டம் 292 (ஏ) மற்றும் (டி) பிரிவுகளின் கீழ் ‘எதிரொலி’ பத்திரிகையின் பப்ளிஷர் மீது ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. விசாரணையின்போது, திரு. ஆற்காடு வீராசாமி மேனேஜிங் டைரக்டர், டைரக்டர் திரு. இராதாகிருஷ்ணன், திரு. ஸ்ரீனிவாசன், ஆசிரியர் சிங்கமுத்து என்ற கில்ஜி ஆகியோர் 6—1—1982 ஆம் நாளன்று கைது செய்யப்பட்டு ஜாமீனில் சென்றார்கள். சென்னை நகர



போலீஸ் கமிஷனர் ‘எதிரொலி’ பத்திரிகை மீது, மேனேஜிங் டைரக்டர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் மீது நடவடிக்கை எடுத்ததைத் தொடர்ந்து திரு. வீராசாமி அவர்கள் மனு தாக்கல் செய்தார். அந்த மனு மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமில்லை என்று 4—1—1982 ஆம் நாளன்று உயர்நீதிமன்றம் அதைத் தள்ளுபடி செய்தது. அதற்குப் பிறகும் தொடர்ந்து அவதூறான செய்திகளை அந்தப் பத்திரிகையில் பிரசுரம் செய்தார்கள். ‘போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. முத்துசாமி அவர்கள் ஊழல், லஞ்சம்’ என்றெல்லாம் குற்றச்சாட்டுகளையும் அவதூறான செய்திகளையும் அந்தப் பத்திரிகை வெளியிட்டது. பின்னர் அமைச்சர் திரு. முத்துசாமி அவர்கள் கொடுத்த புகாரின் பேரில், சென்னை நகர குற்றப்பிரிவு போலீசார் 12—2—1982-ல் இந்திய தண்டனைச் சட்டம் 292 (ஏ) மற்றும் (டி) ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவுசெய்து அது விசாரணையில் உள்ளது. சட்டத்தின் 500-வது பிரிவின்படி நடவடிக்கை மேற்கொள்ளாமல் 292-வது பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது. 500-வது பிரிவின் படியான குற்றமானது போலீசாரால் பிடிக்க முடியாத குற்றம். போலீசார் ஜாமீனில் விடலாம். செஷன்ஸ் நீதிமன்றத்தில் தான் விசாரணை நடக்கும். ஆனால் இந்த 292-பிரிவின் கீழ் வாரண்ட் இல்லாமல் போலீசார் பிடிக்கலாம். போலீசார் ஜாமீனில் விட முடியாது. மேஜிஸ்ட்டிரேட் கோர்ட்டிலேதான் விசாரணை நடத்த வழியுண்டு. முதலிலே நான் குறிப்பிட்ட 500-வது பிரிவின்படி கைது செய்தால், முதல் தண்டனைக்குப் பிறகும் அவதூறான செய்திகளைத் தொடர்ந்து பிரசுரித்தால் அதிக தண்டனை கொடுக்க முடியாது. 292-பிரிவின் கீழ் கைது செய்து நடவடிக்கை எடுத்தால், முதல் தண்டனைக்குப் பிறகும் அவதூறான செய்திகளைத் தொடர்ந்து பிரசுரித்தால் அதிகமான தண்டனை வழங்கலாம். ஆகவே தான், அந்தப் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களே தவிர வேறல்ல. இவ்வளவு தூரம் பொறுத்துக்கொண்டிருந்தும், பலமுறை எச்சரிக்கை செய்தும், கேட்காமல் திரும்பத்திரும்ப இந்த நிலைமைகள் தொடர்ந்ததால்தான், இந்த முடிவிற்கு நாங்கள் வர வேண்டிய ஒரு சங்கடம் ஏற்பட்டது என்று கூட சொல்லலாம். நான் மீண்டும் சொல்கிறேன், என்னைப்பற்றித் தவறாகச் சொன்னால் மக்கள் நம்ப மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. என்னை எது சொன்னாலும் நான் தாங்கிக் கொள்ளத் தயார். ஆனால் மற்றவர்கள் தாங்கிக் கொள்வார்களா? அண்ணா அவர்கள் மீது பழி சொன்னார்கள், பெருந்தலைவர் காமராசர் அவர்கள் மீது பழி சொன்னார்கள், அவற்றை யாராவது நம்பினார்களா? அமைச்சர் யார் பெயரிலேயாவது வந்தால் அவர்கள் தாங்கிக் கொள்வார்களா? ஏன், திரு. திரவியம் அவர்கள் முன்பு சீப்-செக்கரட்டரியாக

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 17

இல்லாதபோது, அவர் மீது செய்திகள் வெளியிடவில்லையா? நடவடிக்கை
எடுக்க வேண்டாம் என்று அவர் சொன்னதால் விட்டுவிட்டோம். இதையெல்
லாம் சொல்வதற்குக் காரணம் அவர்கள் விரும்புகிறார்கள். பிறகு அவ
ருடைய வாழ்க்கைத் துணைவியரைச் சேர்த்து எழுதினார்கள். பொதுவாக
ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பது போன்ற நிலை
மைகள் இருந்தன. இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் சட்டம் ஒழுங்கைக் காப்
பாற்றுவதாகுமா? பத்திரிகை ஆசிரியர்களுக்கு இருக்கும் பொறுப்பு
சாதாரண பொறுப்பு அல்ல. நிருபர்கள் செய்தியைக் கொடுத்தால் கூட,
அந்தச் செய்தியைப் பார்த்து, படித்து, அதை சட்டபூர்வமாகப் பரிசீலித்து
அதற்குப் பிறகு தான் வெளியிட வேண்டும் என்ற நியதி இருக்கிறது. உதார

(முற்பகல் 11-40)

ணத்திற்கு நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒருமுறை நான்
ஒரு அறிக்கை வெளியிட விரும்பினேன். அப்போது நான் நாடகம் நடத்
தப் போய்க்கொண்டிருந்தேன். சென்னையிலிருந்து அல்ல, கோவையி
லிருந்து நான் பொள்ளாச்சிக்குப் போய்க் கொண்டிருந்ததாக நினைவு. காரில்
போய்க்கொண்டிருந்தேன். அன்றையதினம், தற்போது சட்டப் பேரவையில்
எதிர்க் கட்சித் தலைவராக இருக்கும் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள்
'மலைக்கள்ளன்' என்ற படத்திற்கான உரையாடலை எழுதுவதற்காக அங்கே
வந்திருந்தார். அவரையும் நான் அழைத்துக்கொண்டு, திருச்சியில் விட்டு
விட்டுப் போனேன். அப்போது அவர் எழுதிய "மனோகரா" நாடகத்தின்
வசனங்களை ஒருவர் திருடி பயன்படுத்தியதை எதிர்த்து நடவடிக்கை எடுப்
பதற்காக அவர் மதுரைக்குப் போய்க்கொண்டிருந்தார். நான் அவரை 9 மணி
அளவில் திருச்சியில் விட்டுவிட்டு, நான் இரவு நாடகத்திற்குப் பொள்ளாச்சிக்
குச் சென்றேன். என்னுடைய நாடகக் குழுவினர் காலையிலேயே ரயில் மூலம்
அங்கே போய்ச் சேர்ந்தார்கள். இரவு நாடகம் நடத்திவிட்டு அடுத்தநாள் ஊ
ருக்குத் திரும்புகிறபோது, பத்திரிகையில் ஒரு செய்தி போட்டிருந்தார்கள்.
அதாவது "எம்.ஜி.ஆர்.—சகுந்தலா பார்ட்டியிடம் சோதனை" என்று
பத்திரிகையில் வெளியிட்டிருந்தார்கள். அதாவது எம்.ஜி.ஆர். மன்றத்தின
ரிடம் சோதனை நடத்தியதாகச் செய்தி வெளியிட்டிருந்தார்கள். அப்போது
ஜோதி அம்மையார் அவர்கள் இருந்தார்கள். எனவே, நான் அவரிடம்
உண்மை நிலையை எடுத்துச் சொன்னதன் அடிப்படையில் அவர்கள் நட
வடிக்கை எடுத்தார்கள், அந்நிலையில் நான் ஒரு அறிக்கை வெளியிட விரும்
பினேன். அதற்காக நான் பத்திரிகை அலுவலகத்திற்குச்
சென்று திரு. அவர்களை சந்தித்து அறிக்கை



1982 பிப்ரவரி 17] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

வெளியிட வேண்டும் என்று கேட்டேன். அதைப் பார்த்த அவர், அந்த
அறிக்கையை அப்படியே போட்டால் நடவடிக்கை எடுப்பார்கள் என்று சொல்லி,
அதைத் திருத்திப் போட்டால்தான் சரியாக இருக்கும் என்று எனக்கு
எடுத்துச் சொன்னார்கள். நான் இதை எதற்குச் சொல்கிறேன் என்றால
நாம் நமது உணர்வுகளை அப்படியே சொல்ல வேண்டும் என்று விரும்பி
னாலும் கூட, பத்திரிக்கையின் ஆசிரியர் பொறுப்பில் இருக்கிறவர்கள்
அதைச் சரியாகத் திருத்தி, தன்னுடைய பத்திரிகைக்கோ, பத்திரிக்கையின்
சொந்தக்காரருக்கோ எந்தவிதமான அவதூறோ அல்லது ஆபத்தோ வராமல்,
தொல்லை எதும் வராமல் திருத்தி வெளியிடவேண்டும். ஆனால இங்கே என்ன
நடக்கிறது? இதையெல்லாம் தாங்கிக் கொள்ள என்னால் முடிகிறது. அவர்
களால் முடியவில்லை. வழக்குப் போடுகிறார்கள். வழக்குப் போட்டால்,
குற்றம் என்கிறோம். போடாவிட்டால் கையாலாகாதவன் என்று சொல்லு
கிறோம். ஒரு சட்டம் போதாது என்று வேறு சட்டம் கொண்டு வந்தால்,
சர்வாதிகாரம் என்கிறோம். பத்திரிக்கைகளை அடக்குகிறார்கள். ஒடுக்கு
கிறார்கள் என்கிறோம். நான் தடைச் சட்டத்தையும் சேர்த்தே சொல்
கிறேன், அவசியப் பணிகள் குறித்த சட்டத்தையும் நான் சேர்த்தே சொல்
கிறேன். நாங்கள் ஒரு அவசரச் சட்டம் கொண்டுவந்தோம். அது மாண்புமிகு
உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்களுக்குத் தெரியும். அந்த அவசரச்
சட்டத்தை நாங்கள் பயன்படுத்தவே இல்லை. தொழிற் சங்கத்தைப்பற்றிச்
சொன்னால், திரு. மாணிக்கம் அவர்கள் உடனே எழுந்து பதில் சொல்வார்
என்ற கருத்தில் நான் இங்கே இதைக் குறிப்பிடுகிறேன். அவர் தொழிற்
சங்கத்தோடு தொடர்புள்ளவர், அனுபவப்பட்டவர் என்ற காரணத்திற்காகச்
சொல்கிறேன்.

நாம் ஒரு சட்டம் கொண்டு வருகிறோம் என்றால் அதன் காரணமாக
சில தவறுகளைத் தடுப்பதற்காகவும் அவர்கள் அச்சத்தோடு இருக்க வேண்டும்
என்பதற்காகவும் கொண்டு வருகிறோமே தவிர, உடனே அவர்கள் தண்ட
னையை அடைய வேண்டும் என்ற கருத்தில் அல்ல. கள்ளச் சாராயம்
பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அது எங்கே எப்படி எப்படியெல்லாம்
நடக்கிறது என்பதைச் சொன்னார்கள். எந்தெந்த வகையில் விநியோகிக்கப்
படுகிறது என்பதையெல்லாம் கூடச் சொன்னார்கள். அந்தக் குற்றம்
சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்கிறோம். தேசியத் தடுப்புக் காவல்
சட்டத்தின் கீழ் எங்கள் கட்சிக்காரர்களையும் கைது செய்கிறோம். வேறு
கட்சிக்காரர்களையும் கைது செய்கிறோம். கட்சியிலேயே சம்பந்தப்படாத
வர்களையும் கைது செய்கிறோம். கள்ளச் சாராயத்திற்குப் பின்னால்
இருந்து கொண்டு பணத்தைக் கொடுத்து மற்றவர்களைச் செய்யச் சொல்லி

தாங்கள் மட்டும் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பித்துக் கொள்ளுகிறவர்கள் இனித் தப்பித்துக் கொள்ள முடியாதபடி நடவடிக்கை எடுக்கிறோம். இது தான் முக்கியமே தவிர, சாதாரண ஏழை எளிய மக்கள், வாழ்வதற்கு வேறு வழியில்லாதவர்கள், சோற்றுக்கே திண்டாடுகிறவர்கள் பணம் சம்பாதிக்க இந்த நிலைமையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறவர்களைப் பழி வாங்கு வதற்காக அல்ல. ஏற்கெனவே அதிகமான அளவில் இந்தக் குற்றத்தில் ஈடு பட்ட ஆண்கள் அதிகமான அளவுக்குச் சிறைக்குப் போனதால், தாய்மார்கள் பெருமளவு கண்ணீர் விட்டார்கள் என்ற காரணத்திற்காகத்தான் சட்டத் திலேயே மாற்றம் கொண்டுவர விரும்பினோம். எனவே இத்தகையோர்கள் மீதுதான் சட்டம் நடவடிக்கை எடுக்கிறது என்பதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே பால் கமிஷன்பற்றிப் பேசியிருக்கிறார்கள். அதைப்பற்றிய விவாதம் தனியாக வருகிறது என்றாலும், பால் கமிஷன் அறிக்கையை வெளியிடுவதில் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றெல்லாம் சொன்னார்கள். அதுமட்டுமல்ல, இந்த ஆட்சியில் எதுவும் தாமதமாகத்தான் நடைபெறுகிறது; எதுவும் சரிவரச் செய்யப்படுவதில்லை என்று சொல்லுகிறார்களே, அதற்குப் பதில் சொல்ல விரும்புகிறேன்.

பால் கமிஷன் அறிக்கையைப் பொறுத்த வரையில், அது கிடைத்த 6 மாதத்திற்குள் அவையில் வைக்கப்பட வேண்டும். சட்டமன்றத்தில் 6 மாதத்திற்குள் வைக்க வேண்டும் என்பதுதான் விதி. பால் கமிஷன் அறிக்கை கிடைத்த பிறகு அதனை நாங்கள் தமிழில் மொழி பெயர்த்து, சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் வைப்பதற்கு முயன்றோம். அதைப்போலவே இப்போது வைத்திருக்கிறோம். ஆனால் இதற்கிடையில் நாங்கள் தாமதித்து விட்டோம் என்றும், மக்களை ஏமாற்றிவிட்டோம் என்றும், அந்த அறிக்கையையே மறைத்து விட்டோம் என்றும் எங்கள்மீது பழி சுமத்தினார்கள். அது எப்படி நியாயம் என்றுதான் கேட்க விரும்புகிறேன். இதைக் கால தாமதம் என்று சொல்வோமானால், இங்கே நடந்த சிலவற்றை உறுப்பினர் களின் நினைவுக்குக் கொண்டுவருவது என்னுடைய கடமை என்று கருது கிறேன். பல்வேறு விசாரணைக் கமிஷன்களின் அறிக்கைகள் எந்த அளவுக்குத் தாமதப்படுத்தப்பட்டு பின்பு சட்டமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை விளக்க விரும்புகிறேன். நாங்கள் எப்படிச் செயல்பட்டிருக் கிறோம் என்பதையும் இதற்கு முன்னால் இருந்தவர்கள் எப்படிச் செயல் பட்டிருக்கிறார்கள் என்பதையும் உணர்ந்து கொள்ள இது ஒரு வாய்ப்பாக அமையும் என்று கருதுகிறேன்.



பி. இராமகிருஷ்ணன் ஐ.சி.எஸ்., ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி கமிஷன் — மின்கட்டணத்தை உயர்த்தியதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மறியல் போராட்டம் நடத்திய விவசாயத் தொழிலாளர்கள் மீது, கோவை மாவட்டம் பெருமாநல்லூரில் 19—6—1970 அன்று காவல் துறை யினர் நடத்தியத் துப்பாக்கிப் பிரயோகம் குறித்து விசாரணைக் கமிஷன். அந்தக் கமிஷனின் அறிக்கை அரசுக்குக் கிடைத்த தேதி 7—9—1970. ஆனால் அது எப்போது அவை முன் வைக்கப்பட்டது என்றால், 6—12—1971. அதாவது 15 மாதங்கள் கழித்து. நாங்கள் அப்படியா செய்திருக்கிறோம்? மறைத்து விட்டோம் என்று எப்படிச் சொல்ல முடிகிறது? சட்டமன்றம் நடந்த 6 மாதத்திற்குள் அறிக்கையை சட்டமன்றத் தில் வைக்காமல் இருந்திருந்தால், அதற்குப் பிறகு வேண்டுமானால் வெளியே போய் சொல்லலாம். பாருங்கள், அறிக்கையை மறைத்து விட்டார்கள் என்று சொல்லலாம். ஆனால் அதை மன்றத்தில் வைப்பதற்கு ஏற்பாடு செய்த போதுதான் அது எங்கேயோ போயிற்று. அதைப்பற்றி விவாதத்தின்போது பேசத் தயார்.

அடுத்து, திரு. எஸ். அனந்தபத்மநாபன், ஐ.ஏ.எஸ். கமிஷன். மதுரை மாவட்டம் சில்வார்பட்டியில் மயானத்திற்குச் செல்லும் நடைபாதை குறித்து இருவகுப்பினரிடையே ஏற்பட்ட கலவரத்தினையொட்டி 12—7—1970-ல் காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியது குறித்து அரசுக்கு விசாரணைக் கமிஷன் அறிக்கை கிடைத்த தேதி 17—10—1970. ஆனால் அது சட்டமன்றத்தில் வைக்கப்பட்ட தேதி 6—12—1971. ஏறத்தாழ 12 மாதங்கள் கழித்து வைக்கப்பட்டது.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை திருத்தப்பட்ட சொத்துவரி வசூலிப்பதை ஒத்திப் போட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, திருநெல்வேலி மாவட்டம் தென் காசி நெசவாளர் சங்கம் 26—9—1970 அன்று அனுசரித்த பொதுக் கடை யடைப்புப் போராட்டத்தின் போது காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகம் குறித்து விசாரணைக் கமிஷனின் அறிக்கை அரசுக்குக் கிடைத்த தேதி 11—12—1970, அது அவையில் வைக்கப்பட்ட தேதி 22—10—1971—அதாவது 11 மாதங்கள் கழித்து.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களுக்கு அண்ணா மலைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் அளித்தபோது, 23—7—1971 அன்று காவல் துறையினர் நடத்திய தடியடிப் பிரயோகம் குறித்து

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. என். எஸ். இராமசாமி விசாரணைக் கமிஷன் அறிக்கை அரசுக்குக் கிடைத்த தேதி 27—12—1971, ஆனால் அது அவையில் வைக்கப்பட்ட தேதி 18—8—1972, ஏறத்தாழ 8 மாதங்கள் காலதாமதப்படுத்தப்பட்டு அவையில் வைக்கப்பட்டது.

அடுத்து, மதுராந்தகம் வட்டத்தில் அமைந்துள்ள பெரியகுப்பம் கிராமத்தில் 7—12—1973-ல் நடந்த விரும்பத் தகாத சம்பவங்கள் குறித்து நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷனின் அறிக்கை அரசுக்குக் கிடைத்த தேதி 19—4—1975, ஆனால் அது 16 மாதத் தாமதத்திற்குப் பிறகுதான் சட்டமன்ற அவைகளிலே வைக்கப்பட்டது. அப்போது யாராவது இதைப் பற்றிச் சொன்னார்களா? யாராவது கேட்டார்களா? நாங்கள் 6 மாதத்திற்குள் வைத்து விட்டோம். அதன்மீது பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது, இப்படிப்பட்ட நிலைமையில் இவர்கள் மறைத்து விட்டார்கள் என்பதும் காலம் தாழ்த்திவிட்டார்கள் என்பதும் எப்படிச் சரியாகும் என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

3—4—1975 அன்றுதான் அது அச்சு ஆகிக்கொண்டிருக்கிறது என்று அவையில் கூறப்பட்டது. 23—5—1974 அன்று அறிக்கை வேண்டும் என்று அவையில் பேசப்பட்டது. நான் இப்போது அதற்குள் விரிவாகப் போக விரும்பவில்லை. நிறைய இருக்கிறது . . . .

பெரியகுப்பம்பற்றி திருமதி அனந்தநாயகி அம்மையார் அப்போது என்னென்ன கேட்டார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சட்டமன்றப் பேரவையில் அவர்கள் கேட்டார்கள். எத்தனை முறை மறுத்து மறுத்துச் சொல்லியிருக்கிறார். அவருக்குச் சொன்ன பதிலை நான் இப்போது வெளியிட விரும்பவில்லை. அந்தப் பிரச்சினை வரும்போது நான் அதைப் பற்றிப் பேசுகிறேன் . . .

(முற்பகல் 11-50.)

அதைப் போல திரு. கே. டி. கே. தங்கமணி போன்றவர்கள் பேசியதெல்லாம் இருக்கிறது. நேரம் இல்லையென்பதற்காக குறைத்துக் கொண்டிருக்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷன்களின் அறிக்கைகள் சமர்ப்பித்த நாட்களையும், அவை அவையில் வைக்கப்பட்ட நாட்களையும் குறிப்பிட்டு ஒவ்





வொன்றும் சுமார் பத்து மாதங்கள், 12 மாதங்கள், 18 மாதங்கள் காலந்தாழ்த்தி வைக்கப்பட்டிருக்கின்றன என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். பல இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது, தடியடிப் பிரயோகம் நடந்தது என்பதால் அன்றைக்கு சட்டம், ஒழுங்கை நிறைவேற்ற வேண்டிய நிர்வாகம் அப்படி துப்பாக்கிப் பிரயோகம் செய்தது சரியா அல்லது அவர்கள் கையாண்ட அணுகுமுறை சரியா, தவறா என்பதை கொள்கை அளவில் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷன்கள் கொடுத்த அறிக்கைகள் அவைகள். போலீசார் கையாண்ட முறை சரிதானா, இல்லையா என்பதைக் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷன்களின் அறிக்கைகள் அவைகள். அவை குறித்து அவையில் ஒத்தி வைப்புத் தீர்மானம் கூட கொண்டுவந்திருக்கிறோம். இப்போது நடந்திருக்கக் கூடிய விசாரணைக் கமிஷன் அப்படியல்ல. ஒரு அதிகாரி தன்னுடைய கடமையைச் செய்யப் போன இடத்திலே அங்கிருந்த உண்டியைத் திருடுபவர்களால் கொல்லப்பட்டார். அவர் தற்கொலை செய்து கொண்டாரா அல்லது கொல்லப்பட்டாரா என்று ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. அரசு இதில் நடவடிக்கை எடுத்தமுறை—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதாலே சொல்லுகிறேன்—அரசாங்கம் அதை மூடி வைத்துவிட்டது என்று சொல்லுகிற சூழ்நிலையை உருவாக்குகிறது. முந்தைய கமிஷன்கள் அமைக்கப்பட்ட முறைக்கும் இந்தக் கமிஷன் அமைக்கப்பட்ட நோக்கத்திற்கும் வேறுபாடு இருக்கிறது என்பதை இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன் தினம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். "நான் முதலமைச்சருக்கு உதவியாக இருக்கிறேன்" என்றார்கள். அந்த உதவியைத் தொடர்ந்து செய்து கொண்டிருப்பதற்காக நன்றி கூறிக்கொள்கிறேன்.

பால் கமிஷன் அறிக்கைக்குள்ளே போகக் கூடாது என்று நான் இருந்தேன் என்பது அனைவருக்கும் தெரியும். அதை விட்டு வைத்தேன். கொலை நடந்தது உண்மையா இல்லையா என்பதை இன்னும் யாரும் சொல்லவில்லை. அது சந்தேகத்தில் இருக்கிறது என்பதை தயவு செய்து யாரும் மறந்துவிடக் கூடாது. கொலையா? தற்கொலையா? கொலையாக இருந்தால், அதைச் செய்தவர்கள் யார்? இது இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை. அப்படித்தான் விசாரணைக் கமிஷன் அறிக்கை நமக்குக் கிடைத்திருக்கிறது. இதிலே மறைப்பதற்கு என்ன இருக்கிறது? இன்னார்தான் கொலை செய்தார் என்று சொல்லியிருந்தால், அந்த அறிக்கையை நாங்கள்

வெளியிடாமலிருந்தால் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் சொன்னது
போல மறைத்தார்கள் என்று சொல்ல நியாயம் இருக்கிறது. அதிலே மறைப்
பதற்கே அவசியமில்லை. யார் கொலைகாரர்கள் என்று சுட்டிக்காட்ட
வில்லை. கொலை நடந்தது உண்மையா, இல்லையா என்பதைச் சொல்ல
வில்லை. இது தற்கொலையா, கொலையா என்று விசாரியுங்கள் என்று
சொல்லியிருக்கிறார். இப்படித்தான் இருக்கிறது அறிக்கை. அதுதான்
எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இதை நாங்கள் மறைக்க வேண்டிய
அவசியமில்லை. இதை மறைப்பதால் எங்களுக்கு என்ன இலாபம்? வெளி
யிடுவதால் என்ன நஷ்டம் எங்களுக்கு வரப்போகிறது? இப்போது வெளியே
சொன்னதால் என்ன ஆபத்து வந்துவிட்டது? மறைத்தோம் என்பதற்கு
எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல், "மறைத்தார்கள், மறைத்தார்கள்"
என்று ஒன்றும் இல்லாத ஒன்றை பூதகாரமாகச் சொல்லிக் கொண்டிருக்
கிறார்கள் என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். அவையில்
வைக்க வேண்டிய கட்டத்தில் வைக்காமல் மறைத்து வைத்துவிட்டு, நாங்கள்
வேறு வகையிலே காரியமாற்றத் தொடங்கியிருந்தால் சரிதான். இதைப்
பற்றிப் பேசப் போகிறார்கள் என்றாலும், நான் சொல்ல வேண்டிய பதிலைச்
சொல்ல வேண்டிய அவசியத்திற்குள்ளாக்கியதால் சொல்லுகிறேன். இது
கொலையா, தற்கொலையா; கொலையாக இருந்தால், யார் செய்தது என்
பதை விசாரிக்க எந்தப் பிரிவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று எழுதியிருக்
கிறார்களோ அவர்களிடம் அதை முன்பே உத்தரவு போட்டு கொடுத்திருக்
கிறோம். இதைவிட என்ன செய்ய வேண்டும்? இது எப்படி மறைப்ப
தாகும்? குற்றம் இல்லாமல் எங்கள் மீது பழி சொல்லுகிறபோது, நாங்கள்
பதில் சொல்லாமல் எப்படி இருப்பது? தாமதமா என்றால் இல்லை. ஆறு
மாதங்களுக்குள்ளாக வைத்துவிட்டோம். அதுவும் மொழிபெயர்த்து வைத்
திருக்கிறோம். இடையிலே என்ன நடந்தது என்பதைப்பற்றி நீங்கள்
விவாதித்துக் கொள்ளுங்கள். எதிர்க் கட்சித் தலைவர் சொன்னதற்காக நான்
பதில் சொல்லுகிறேன். அத்தோடு நிறுத்திக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. காமல் அவர்களுக்கு ஒரு பதில்
சொல்லியாக வேண்டியிருக்கிறது. மதுரை மாவட்டக் காவல் துறை துணை
ஆய்வாளர் திரு. வைரவ சிங்குக்குச் சொந்தமான நிலக்கோட்டை வட்டம்,
வாடிப்பட்டி கிராமத்தில் உள்ள வீட்டில் நல்லகாமுத் தேவர் குடியிருந்து
வருகிறார். அவருடைய மனைவி சீனி அம்மாள் அவ்வூர் தொடக்கப் பள்ளி
ஆசிரியராக வேலை பார்த்து வருகிறார். மேற்கண்ட வீட்டைக் காலி செய்யு
மாறு உரிமையாளர் கோரிக்கை விட்டதைத் தொடர்ந்து நல்லகாமுத் தேவ
ரும், திருமதி சீனி அம்மாளும் காவல் நிலையத்திற்கு அழைக்கப்பட்டதாகத்





தெரிய வருகிறது. அப்போது ஏற்பட்ட வாய்த் தகராறு முற்றி அடிதடி
நடந்ததாகக் கூறப்படுகிறது. இதில் துணை ஆய்வாளருக்கும் நல்லகாமுத்
தேவரின் மகனுக்கும் காயம் ஏற்பட்டுள்ளது. நல்லகாமுத் தேவர், மகன்,
மனைவி ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்க உத்தரவிடப்
பட்டுள்ளார்கள். திருமதி சீனி அம்மாள் ஜாமினில் சென்றுள்ளார். நல்ல
காமுத் தேவருக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இது சம்பந்தமாக வரு
வாய்த் துறை அதிகாரிக்கு பி. எஸ். ஓ. 145-படி விசாரணைக்கு அனுப்பப்
பட்டுள்ளது. ஆகவே சட்டம், ஒழுங்கு என்றால், சிலர் இருக்கின்ற
பொறுப்பை நிறைவேற்றுவார்களேயானால், எந்தப் பிரச்சினையும் பெரிதாக
இருக்காது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் இன்னுமொன்றைச்
சொல்லியிருக்கிறார்கள். இலங்கைத் தமிழர்களுக்காக போராட்டம் நடத்த
போது எப்படி எப்படி நடத்தினார்கள் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.
நான் அதைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், நடந்ததைத்தான் மீண்டும்
சொல்ல வேண்டும், சொன்னதைத்தான் திரும்பச் சொல்ல வேண்டும்.
இது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. ஒரு தலைவர் உத்தரவிடுகிறார்.
அந்தத் தலைவரின் உத்தரவை தொண்டர்கள் அல்லது அடுத்தபடியாக உள்ள
தலைவர்கள் பின்பற்றுகிறார்கள். "தலைவர் கட்டளையிட்டார், நாங்கள்
செய்தோம். நாங்கள் தவறு செய்தோம் என்பதல்ல. அவர் குற்றம் செய்
தார் என்று கருதினால், அதையே நாங்கள் செய்தோம்" என்று அவரே
ஒத்துக்கொண்டார். ஜாமீனில் வரவேண்டாம் என்று தலைவர் சொன்னார்.
அதை ஒத்துக்கொண்டு அங்கேயே இருந்தார்கள். ஒரு சிலர் மட்டும், ஒன்
றிரண்டு பேர் மட்டும்—அப்படி எந்தக் கட்சியிலும் இருப்பது இயற்கை—
கையெழுத்துப் போட்டுவிட்டு வெளியே வந்துவிட்டார்கள். அதைக் குற்ற
மாக நான் சொல்லவில்லை. பல தொழில்களில் இருப்பவர்கள், சிறைச்
சாலையில் இருந்தால் வேலை போகும், ஆகவே வெளியே வந்தார்கள்.
இதிலே குற்றம் இல்லை. ஆனால் வெளியே வராதே என்று தொண்டர்
களுக்குச் சொல்லிவிட்டு, உத்தரவிட்டுவிட்டு, "வெளியே அனுப்புகிறாயா,
மறியல் செய்யட்டுமா?" என்று கேட்டால், சட்டம் ஒழுங்கை எப்படி காக்க
முடியும்? இது நியாயம்தானா என்று அனைவரையும் வேண்டிக் கேட்டுக்
கொள்கிறேன்.

திரு ஆர். டி. சித்தாபதி: என்னுடைய கட்சித் தலைவர் சொன்னது,
அதற்கு முன்னாள் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நபர்கள் ஒரு
நாள் இதே போன்று மறியலில் ஈடுபட்டபோது, அவர்களை அன்று மாலையே

விடுதலை செய்தார்களே அதே போன்ற முறையை இந்தச் சர்க்கார் பின்பற்ற வேண்டும் என்பதுதான். ஆகவே, "16 நாள் டைம் தருகிறேன், இல்லையென்றால் நான் வருகிற சூழ்நிலையை இந்தச் சர்க்கார் உருவாக்கும்" என்று தெரிவித்தார்கள் என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** எனக்கு நினைவு தப்பும் சூழ்நிலை ஏற்படவில்லை. நல்ல நினைவோடுதான் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மறியல் என்பது வேறு, ஆர்ப்பாட்டம் என்பது வேறு. இது அவருக்கு நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன். எனக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்களுக்கும் கருத்து வேறுபாடு வராது என்று நினைக்கிறேன். மறியல் என்றால், வேலைக்குப் போகிறவர்களைத் தடுப்பது, மறுத்து நிறுத்துவது மறியல். மறுப்பது, இடையிலே தடை செய்வது—இது மறியல். இதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஆர்ப்பாட்டம் என்பது தங்கள் எண்ணங்களை வெளியே சொல்லி, "இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும், செய்தே தீர வேண்டும்" என்று ஒலித்துவிட்டு அமைதியாகச் செல்வது. இதைத்தான் இந்திரா காங்கிரஸ் இளைஞர்கள் செய்தார்கள். பிறகு திரு. குமரி அனந்தன் அவர்கள் உண்ணாநோன்பு இருந்தார்கள். இதிலே யாருக்கும் சங்கடமில்லை. கலைஞர் எவ்வளவோ நடந்து போகிறார்கள். எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பது தெரிகிறது, வேதனைதான். தேவையில்லாத ஒன்று. அவருக்குக் கட்டளையிட நான் யார் என்பது வேறு. கருத்தைச் சொல்கிறேன். ஆனால் இது யாருக்கும் தொல்லை இல்லாத செயல். இதற்குத் தடை இல்லை. ஐந்தாயிரம் ஆட்கள் போகிறார்கள், 10,000 பேர்கள் போகிறார்கள், இலட்சம் பேர்கள் போகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இதனால் யாருக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. காவல் துறையினர் உடன் செல்கிறார்கள். எந்தவிதமான போராட்டத்திற்கும் இடமில்லை. யாருக்கும் ஆபத்தில்லை. எந்தப் பொருளுக்கும், பொது மக்களுக்கும் சேதம், துன்பம் வரப்போவதில்லை. ஆனால் மறியல் என்றால், இங்கே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திற்கு முன்பு மறியல் செய்யப் போனார்களே அவர்களை என்ன செய்தோம்? கைது செய்து வெளியே விட்டுவிட்டோம். அது மறியல் அல்ல, ஆர்ப்பாட்டம். உண்ணாவிரதம் இருந்தபோது கூட்டம் சேர்ந்தது. அழைத்துக் கொண்டு போனார்கள், பிறகு விட்டுவிட்டார்கள். இது அப்படி இல்லை. வெளிநாட்டு தூதுவரகத்திற்கு முன்பு சென்று மறியல் செய்வது இது. நமக்கு போராட்டங்களைப் பற்றி ஓரளவிற்கு நன்கு தெரியும். போராட்டத்திலே ஈடுபடப் போகிறவர்கள் ஆயிரம் பேர் என்றால், இறுதியில் அந்தப் [illegible] கொள்பவர்கள் பத்தாயிரம் பேர் ஆவார்கள். அதில்





ஒன்பதாயிரம் பேர் கட்சிக்காரர்கள் அல்ல. பார்த்துக் கொண்டு நிற்கின்றவர்களில் உணர்ச்சி வயப்பட்டு எந்தக் காரியத்தையும் செய்வார்கள். இதுதான் என்னுடைய அனுபவம்.

மாக்சிம் கார்க்கி "அன்னை" என்ற நூலில் இதைத்தான் சொல்லியிருக்கிறார். எந்த நிகழ்ச்சிக்குப் போகாதே என்று தன் மகனுக்குச் சொன்னாளோ அதே தாய் அந்தச் சூழ்நிலையைக் கண்ட பிறகு, தானே கொடியை எடுத்துக்கொண்டு அந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நடந்து சென்றாள். இதே உணர்ச்சியைத்தான் சாதாரண மக்களும் அடைவார்கள். கலைஞரைக் கைது செய்தால் மற்றவர்களுக்கு என்னவாகும்? கலைஞரைக் கைது செய்தால் பார்த்துக் கொண்டா இருப்பார்கள்? அது நல்ல சாட்சி என்பார்களா? பிறகு கல் வருமா அல்லது கத்தி வருமா, என்ன வரும் என்பது யாருக்குத் தெரியும். வெளிநாட்டு தூதுவரகத்திற்கு முன்பு உள்ளவர்களைக் காப்பாற்ற வேண்டியது எங்களுடைய கடமை. மறியல் செய்கிறவர்கள் அமைதியாக உட்கார்ந்து கொண்டு எதுவுமே சொல்லாமல் இருந்தோம் என்று ஒருவேளை சொல்லலாம்.

(நண்பகல் 12-00)

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நான் தலைவர் அவர்கள் மூலமாகச் சொல்லிக்கொள்கிறேன். இந்தியத் திருநாட்டின் டெல்லிப்பட்டணத்திலேகூட இந்த மாதிரி மிகப் பயங்கரமான முறையில் போராட்டம் நடைபெற்றபோது, அங்கே டெல்லி சர்க்கார் நடவடிக்கை எடுக்கவில்லை. இதை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நினைவுபடுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** அங்கத்தினர் சொல்வது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** டெல்லியிலே இதுமாதிரி நடந்திருக்கிறது. மத்திய சர்க்கார் எடுத்த மாதிரி இங்கே நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** இது எனக்குப் புரியவில்லை. எனக்கு இது புதிதாக இருக்கிறது. எனக்கு அனுபவம் இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அந்த மாதிரி நடவடிக்கை இல்லை என்றுதான் சொன்னார்கள். மறியல் என்று சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஆர்ப்பாட்டம் என்பது வேறு. மறியல் என்பது வேறு. நான் மீண்டும் தலைவர் அவர்கள் மூலமாகச் சொல்லிக் கொள்கிறேன். மறியல் என்பதற்கு ஒரு இலக்கணம் வகுத்திருந்தால்கூட பரவாயில்லை. குமரி அனந்தன் அவர்கள் சொன்னதுபோல், 'எங்கள் கட்சியின் சார்பாக நான் அறிக்கை கொடுக்கப்போகிறேன். 3, 4 பேர்கள் போங்கள். மற்றவர்கள் நின்றுவிடுங்கள்' என்று சொல்லி அனுப்பி வைத்திருக்கிறார்கள். இவர்களும் உண்ணாவிரதம் இருந்தார்கள். முன்னாலேயே போய் உட்கார வைத்து விட்டு உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களை முன்னதாகவே கைது செய்து பிறகு அவர்களை வெளியிலே அனுப்பிவிட்டார்கள். ஆனால் மறியல் செய்வதற்கு அலுவலகம் முன்புதான போவோம் என்றார்கள். தடுத்தோம். போவதற்கு முன்பாகவே கைது செய்துவிட்டார்கள் என்றார்கள். ஆனால் மறுநாள அனுமதித்தார்கள். மறியல் பண்ணியவர்கள் அதுவரையிலும் போவோம் என்று சொன்னார்கள். ஆனால் பாதுகாப்புத் தரவேண்டியது எங்களுடைய கடமை அல்லவா? அதற்கு நடவடிக்கை எடுத்தோம். வழக்கு மன்றத்திலே கொண்டு போய் நிறுத்தினோம். வழக்கு மன்றத்திலே தீர்ப்பு சொன்னார்கள். அதைத் தான் அவர்கள் ஏற்றுக்கொண்டார்களே தவிர, அது அரசினுடைய தீர்ப்பு அல்ல. வழக்கு மன்றத்திலே இருக்கின்ற நீதிபதி அளித்த தீர்ப்பின்படி, திரு. ஆர். டி. சித்தாபதி அவர்கள் உள்ளே இருந்தார்கள். ஒரு வாரம் இருந்திருப்பார்கள். மற்றவர்கள் உள்ளே வந்து இருந்தாலும், அன்றைய தினமே அடைந்த தண்டனை போதும் என்று நீதிபதி சொன்னதால், அன்றைக்கே விட்டுவிட்டார்கள். அது நீதிபதியின் முடிவே தவிர, ஆட்சியினருடைய முடிவு அல்ல. ஆட்சியினுடைய பணி விதிப்படி நடவடிக்கை எடுப்பது, வழக்கு மன்றத்திலே அவர்களைக் கொண்டுபோய் நிறுத்துவது. அதைத்தான் செய்திருக்கிறோம். அவர்களை வெளியிலே விட்டுவிட்டார்கள். சிலரை ஒரு நாளில் விட்டுவிட்டார்கள். சிலரை ஒரு வாரம் கைது செய்து வைத்திருந்தார்கள். அவர்களும் போனார்கள். பிறகு வந்துவிட்டார்கள். வெளியிலே வந்த உடனே மறுபடியும் மறியல் செய்யப்போகிறோம் என்று சொன்னவுடன் மீண்டும் கைது செய்யவில்லை. அவர்கள் மீண்டும் மீண்டும் போவோம் என்று சொன்னபிறகுதான் மறுநாள் கைது செய்திருப்பார்களே தவிர வேறல்ல.

(திரு. ஆர். டி. சித்தாபதி எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முதல்வர் அவர்கள் இன்னொரு நாளைக்கும் வைத்துக்கொள்ளலாமா என்று கேட்கிறார். தலையிடுவதற்கும் ஒரு முடிவு உண்டல்லவா? உங்கள் கருத்து வேறுபாடுகள் இப்படி பேசுவதாலேயே தீர்ந்துவிடப்போவதில்லை.



திரு. ஆர். டி. சித்தாபதி : எங்களுக்குக் கருத்து வேறுபாடு என்று இல்லை. மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் அப்படிப் பிரித்துவிட வேண்டாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவர்களைப் பிரித்துவிடுகிறேன் என்று கருதுகிறார்களா? அந்த வேலைக்கா நான் இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறேன்? அப்படி இல்லை.

திரு. ஆர். டி. சித்தாபதி : நான் சொல்ல விரும்புவது, முதல்வர் அவர்கள் 'மீண்டும் கைது செய்யப்பட்டார்களா?' என்று கேட்டார்கள். எந்தக் குற்றமும் செய்யாமல் இருந்தபோது, சட்டமன்ற அலுவல் காலத்தில், அதிகாரிகள் கைது செய்தார்கள். விடுதலை செய்து இரண்டு நாள் கழித்து மறுபடியும் கைது செய்யப்பட்டிருக்கிறேன் என்பதைத் தான் முதலமைச்சர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : எந்தக் காரணத்தின் அடிப் படையில் கைது செய்யப்பட்டார் என்பது அவருக்கும் தெரியும். பாதுகாப் பிற்காக அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்களே தவிர, வேறு அல்ல. பெரிய தலைவர் உள்ளே போவேன் என்று சொன்னார். ஆகவே முன் கூட்டியே அவரைக் கைது செய்திருக்கிறார்கள். நான் திரு ஆர். டி. சித்தா பதி அவர்கள் ஏன் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதற்குத் தெரி வித்துக்கொள்கிறேன். அவர்கள் நினைத்தால் எதையும் செய்யலாம். சென்னையிலே எதையாவது நிறுத்த வேண்டும் என்றால், அது அவர்களாலே முடியும். அந்த சக்தி அவர்களுக்கு இருக்கிறது என்பதாலேதான், அந்தச் சட்டம் அங்கே வருகிறது. அந்த சக்தி அவரிடம் இல்லை என்றால், அவரிடம் நெருங்கவே மாட்டார்கள். ஆகவே அந்த நிலைமையில்தான் அப்படி நடந்தது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் வேண்டுமென்றே சிறைச்சாலையிலிருந்து வெளியே வருகின்றவர்களை வேண்டாம் என்று சொல்கின்றார்கள். இதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொன்றும் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். அன்றையதினம் காலையில்கூட நான் வேண்டுகோள் விடுத்தேன். டாக்டர் கலைஞர் அவர்கள் உள்ளே சென்றவர்களை 'வெளியிலே வராதே' என்று சொல்கிறார். 'குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்' என்று சொல்கின்றார். ஜாமீனில் வெளியிலே வராதே என்று சொல்கிறார். ஜாமீனில் போகலாம் என்று நீதிபதி சொல்கிறார். அரசுத் துறையிலே காவல் துறையிலே சொல்கிறது. சட்டப்படி அவர்கள் ஜாமீனில் போகலாம் என்று சொல்கிறது. அப்படியும் போகமாட்டேன் என்று இருக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்களை நீதி மன்றத்திற்குக் கொண்டு செல்கின்றார்கள். அதற்குப் பிறகு

நீதிபதியும் அவர்களை விட்டுவிடுங்கள் என்று சொல்கின்றார்கள். அவர்கள் விடப்பட்டார்கள். இதுதான் நடந்தது. உண்மை அதுதான். உள்ளே இருக்கின்றவர்களை வெளியிலே வரவேண்டாம் என்று சொல்லிவிட்டு, அவர்களை வெளியிலே விடுகிறீர்களா அல்லது நான் உள்ளே போகட்டுமா என்று கேட்டால், இது எந்தச் சட்டம் ஒழுங்கைக் கட்டுப்படுத்துவதாகப் பொருள் என்பது எனக்குப் புரியவில்லை. நான் இன்னமும் யோசித்துக் கொண்டிருக்கிறேன். அண்ணா அவர்கள் என்றைக்காவது அப்படிச் சொன்னார்களா? எந்தப் போராட்டத்திலாவது அப்படிச் சொல்லியிருக்கிறார்களா? நீங்கள் குற்றவாளி என்று ஒப்புக்கொள்ளுங்கள் என்று சொன்னால், அவர்களும் அதை ஒப்புக்கொள்வார்கள். அதற்கு தண்டனையை ஏற்றுக்கொள்வார்கள். உள்ளே செல்வார்கள். இப்போது என்ன சொல்கின்றார்கள்? "அவர்களை வெளியிலே விடுகிறீர்களா, நான் உள்ளே வரட்டுமா?" என்று அண்ணா கேட்டதாக எனக்கு ஞாபகம் இல்லை. அப்படியிருந்தால் எனக்கு நினைவு படுத்துங்கள். நான் என் தவறைத் திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அது அல்ல அண்ணாவின் வழி.

உள்ளே போனவர்களை வெளியே வராதே என்று சொல்லி, ஜாமீனில் வெளியிலே விடுகிறீர்களா அல்லது நான் உள்ளே வரட்டுமா என்றால், சட்டத்திற்கு என்ன மதிப்பு? அதே நேரத்திலே திரு. கருணாநிதி அவர்கள்

(பிற்பகல் 12-10)

முதலமைச்சராக இருந்து இந்தக் கேள்வியை நான் கேட்டிருந்தால், என்ன வாகியிருக்கும்? நான் என்ன ஆகியிருப்பேன் என்பது எனக்கே தெரியாது. அவர் எப்படிப்பட்டவர் என்பது எனக்குத் தெரியும். எப்படியெல்லாம் ஆகியிருக்கிறார்கள் என்பது தெரியும். நான் இதை ஒற்றுமையைப் பிரிப்பதற்காகச் சொல்லவில்லை. திரு. ஜெயப் பிரகாஷ் நாராயணன் அவர்கள் வந்த போது ரெயில்வே ஸ்டேஷனில், சென்ட்ரல் ஸ்டேஷனில் என்ன நடந்தது? கறுப்புக்கொடி காட்டினார்கள். திரும்பிப் போங்கள் என்று சொன்னார்கள். அப்போது காங்கிரஸ்காரர்கள் என்ன பாடுபட்டார்கள்? தாய்மார்கள் எவ்வளவு கேவலப்படுத்தப்பட்டார்கள்? அது எல்லாம் நடந்திருக்கிறதல்லவா? அதற்குத்தான் நான் சொன்னேன். திரு. கருணாநிதி முதலமைச்சராக இருந்திருந்தால், நான் கறுப்புக்கொடி காட்டுவேன் என்று நானாகவே பொறுப்பேற்றுக்கொண்டு சொன்னேன். திரு. எஸ். எம். துரைராஜ் அவர்கள் சாகின்ற நிலைமையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்தார்கள். இருதய ஆபத்துக்கு காரணம் அதைப் போன்று பழி வாங்கும் நிலை இல்லை. இந்த அரசு யாரையும் பழி வாங்காது. பழி





வாங்க வேண்டிய அவசியமில்லை. அதற்காக மக்களின் வாக்குகளைப் பெற்று, ஆட்சியில் இருக்க வேண்டுமென்ற ஆசையும் கிடையாது. ஆனால் பொறுப்பு ஏற்ற பிறகு அமைதி வேண்டுமா, வேண்டாமா? நாட்டிலே ஒழுங்கு முறை நடைபெற வேண்டுமா, வேண்டாமா? சட்டம், ஒழுங்கு என்று பேசி விட்டால் மட்டும் போதுமா? அதை நடைமுறைப்படுத்த வேண்டியவர்கள் நடத்திக் காட்ட வேண்டாமா? அதைத்தான் இப்போதும் கேட்கிறேன். நான் மிக மிகப் பணிவோடு கேட்கிறேன். சட்டத்தை மீறுவது உங்கள் எண்ணமானால், மீறுங்கள். பொது மக்களுக்குத் தொல்லையில்லாமல் பொதுச் சொத்துக்கு சேதம் வாராமல் பார்த்துக் சட்டத்தை மீறுங்கள். தீ வைத்தது, கல் எறிந்தது யாரோ என்று சொல்லுவது, கொள்ளுங்கள். தீ வைத்தது, கல் எறிந்தது யாரோ என்று சொல்லுவது, இந்த நாட்டுக்குத் தொண்டு செய்வதாகாது. என் கட்சி சார்பில் அப்படிச் சொன்னால்கூட, என்னை ஏமாற்றிக்கொள்வதோடு மட்டுமல்ல, நான் யாரைத் தலைவராக ஏற்றுக்கொண்டுள்ளேனோ அவருக்குச் செய்யும் மாபெரும் துரோகம் என்று சொல்லுவேன். யார் இதைச் செய்தாலும், அவர்களுக்கும் இது பொருந்துமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகள் பிரச்சினை. விவசாயிகளுக்காக நாங்கள் என்னென்ன செய்திருக்கிறோம் என்பதைச் சொல்லிக் காட்ட வேண்டாமா? மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள், விவசாயிகளுக்கு வசதிகள் செய்து தரப்படவில்லை என்று பேசியிருக்கிறார்கள். அவருடைய குற்றச்சாட்டை நான் மறுபடியும் படிக்க விரும்பவில்லை. இங்குள்ள அத்தனை பேருக்கும் தெரியும். கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட புயல் மற்றும் வறட்சி நிலை காரணங்களால், அரசுக்குச் சேர வேண்டிய நிலவரி மற்றும் பலவித கடன்களை உரிய காலத்தில் விவசாயிகளால் செலுத்த முடியாததால் அவைகளை வசூலிக்கும் பொருட்டு அதிகாரிகளால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், மேலும் பல சலுகைகள் கோரியும், பல கோரிக்கைகள் அரசுக்கு வரப்பெற்றன. அக்கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்த இந்த அரசு சிறு விவசாயிகளிடமிருந்து திருப்பிப் பெற வேண்டிய பலவித கடன்களை வஜா செய்துள்ளது. மேலும் 1388 பசலியில் நிலவரி மற்றும் கடன் பாக்கிகளை விவசாய வருமான வரி, வணிக வரி அல்லது வருமான வரி கட்டுபவர்களிடம் ஜப்தி நடவடிக்கை எடுத்தாவது அரசுக்குச் சேர வேண்டிய தொகைகளை வசூல் செய்யலாமென்றும், மற்ற ஏழை எளிய விவசாயிகளிடமிருந்து சாதாரண முறையில் எவ்வளவு தொகை வசூல் செய்ய முடியுமோ அதை வசூல் செய்யலாமென்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. இக்கொள்கையே 1389-1391 பசலி ஆண்டுகளிலும் பின்பற்றப்பட்டு வருகிறது. மேலும் நிலவரி மற்றும் அரசு கடன் பாக்கிகளை வசூல்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 17

செய்யும்போது, ஏழை சிறு விவசாயிகளிடம் ஜப்தி நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பது அரசின் பொதுவான கொள்கையாகும். அதன்படி வருவாய்த் துறை அதிகாரிகளுக்கும் தகுந்த அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளன. அதுபோலவே புயல் மற்றும் வறட்சியினால் பாதிக்கப்பட்ட இடங்களிலும் ஜப்தி நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. 1980 ஆம் ஆண்டு நவம்பர்-டிசம்பர் திங்கள்களிலும் மற்றும் 1981 ஆம் ஆண்டு சனவரி திங்களிலும் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளுடன் அரசு நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் விவசாயிகள் போராட்டம் காரணமாக ஏற்பட்டுள்ள மின் கட்டண நிலுவைகளை 1 மாத நிலுவை, 1 மாத மின் கட்டணம் என்ற அடிப்படையில்தான் வசூலிக்கப் படுகிறது

அடுத்து, கூட்டுறவுக் கடன்கள். தமிழ் நாட்டில் விவசாயிகள் கூட்டுறவுக் கடன் சங்கங்களிலிருந்து பெற்ற கடன்களை நீண்ட காலமாகச் செலுத்தாமல் இருந்த சூழ்நிலையில் கூட்டுறவு வங்கிகள் ரிசர்வ் வங்கியிடமும் இதர கடன் வழங்கும் நிறுவனங்களிடமும் வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்த முடியாத கடுமையான நிதி நெருக்கடி ஏற்பட்டது. தமிழ் நாட்டில் வேளாண்மைத் தொழிலுக்கும், விவசாயிகளுக்கும் பேருதவி புரிந்துவந்த கூட்டுறவுச் சங்கங்களே முடக்கப்படும் அபாய நிலை ஏற்படுவதைத் தடுத்து திருத்துவதற்காக கடனை வசூல் செய்ய சில நடவடிக்கைகளைத் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் அரசு எடுத்து நிலவரி வசூல் சட்டத்தின்கீழ் கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்ய 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அனுமதி அளித்தது. மிகுந்த நிதிநிலை நெருக்கடியையும் பொருட்படுத்தாது தமிழக அரசு விவசாயிகளின் கஷ்டங்களையும், நெருக்கடிகளையும் கருத்தில் கொண்டு, கடந்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 200 கோடி ரூபாய்க்கு மேல் கூட்டுறவுக் கடன் மற்றும் தக்காவிக் கடனில் சலுகை வழங்கியது. 30—6—1981 க்குள் கடன்களைச் செலுத்தும் சிறு விவசாயிகளுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்யும் சலுகை அளித்தது.

திரு. [illegible] : என்னுடைய உரையிலே குறிப்பிட்டது, விவசாயிகளுக்குப் பல சலுகைகளைச் செய்திருப்பதாகச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள், [illegible] காட்டினார்கள், ஜப்தி போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாதென்று கட்டளை இடப்பட்டிருப்பதை; ஆனால் கடந்த வாரத்தில் தென் ஆர்க்காடு மாவட்டத்திலே [illegible] என்பதாகும்.



1982 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அரசினுடைய உத்தரவைப் புரிந்துகொள்ளாமல் தவறு செய்தாலும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப் படுகிறது. ஆனால் ஒட்டுமொத்தமாகக் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டாமென்று சொன்னால்—நான் தி. மு. க. பற்றிக் குறிப்பிடவில்லை, நாயுடு சங்கத்தைச் சேர்ந்தவர்களைப் பற்றிச் சொல்கிறேன்—அது எப்படி நீதியாகும்? பணக்காரர்களிடம் வாங்காதே என்றால் சரி. பணக்காரர் களிடம் வசூலிக்கக்கூடாதென்று எல்லாம் சொன்னார்கள். விவசாயிகள் ஒவ்வொருவரிடமும் 10 ரூபாய், 50 ரூபாய் என்று வசூலித்த பணத்திற்கு கணக்கு தெரியவில்லை. தகராறு நடக்கிறது. கணக்கு காட்டப்படவில்லை என்பதால் சங்கம் உடைகிறது. எல்லாம் கணக்கால் வரும் தகராறு. சங்கத்தில் பிளவு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த நிலைமைக்கு யார் காரணம்? விவசாயிகள்தான் என்று சொல்ல முடியுமா? விவசாயிகள்பற்றி நாம் தவறாகக் கணக்குப் போடுகிறோம். தவறாகக் கணக்குப் போடுவதால், குழப்பங்கள் ஏற்படுகின்றன. அவர்கள் கட்ட வேண்டுமென்று விரும்பினால், கட்டிவிடுவார்கள். அப்படிக் கட்டுகிறார்கள். 66 சதவிகிதம் கட்டிவிட்டார்கள் என்று மத்திய அரசு தெரிந்து, உதவி செய்ய முன் வந்திருக்கிறார்கள் என்றால், தமிழ் நாட்டை பினாக் லிஸ்டில் சேர்க்காமல் விட்டு வைக்கிறார்கள் என்றால், என்ன பொருள்? அவர்களுக்குத் துணிச்சல் இருக்கிறது, கட்ட மாட்டோம் என்று சொல்கிறார்கள், அந்தத் துணிச்சல் இருந்தால், நீங்களும் செய்யுங்கள் என்று கேட்கப்பட்டது. அந்தத் துணிச்சல், . . . நான் வேறொரு கட்சியைச் சேர்ந்தவன். அங்கே மத்திய அரசு சொல்லிற்றே குண்டுராவ் நடவடிக்கை எடுக்க ஆரம்பிக்கவில்லை என்று. குண்டுராவ் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துவிட்டார்.

மின்துறை அமைச்சரிடம் கேட்டேன் வேடிக்கையாக. ஒகேனக்கல்லில் அணை கட்டினால் என்ன என்று கேட்கிறார்கள், தண்ணீர் விடமாட்டேன் என்று சொல்லும்போது, அணை கட்டி என்ன செய்வது? அவர்கள் தண்ணீர் விட மாட்டேன் என்று சொல்லுகிறார்கள். இங்கே எப்படி தண்ணீர் வரும்? ஆனால் நம்முடைய தேவைக்கேற்ப அணையைக் கட்டித்தான் தீர வேண்டு மென்றால், அதை மத்திய அரசுக்குச் சொல்லித்தான் தீர வேண்டும். அதற்குத் தான் சொன்னோம், மத்திய அரசு, இரண்டு மாநில அரசுகள் ஆக மூன்றும் சேர்ந்து அந்த ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று. இதை மத்திய அரசு ஒத்துக்கொள்ளுமென்று எதிர்பார்க்கிறேன். அவர்கள் கண் காணிப்போடு அதைக் கவனித்தால், தகராறுகளைத் தீர்த்து வைத்தால், நல்ல நிலைமைகள் ஏற்படும். மின்சாரம் கிடைக்கும், கொஞ்சம் தண்ணீரும் கிடைக்கும். இருவருக்கும் தேவை மின்சாரம், நமக்குத் தண்ணீர் தேவை, அதற்கு அந்தத் திட்டம் தேவை.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 17

விவசாயிகள் திரும்ப கடனைக் கொடுக்க வேண்டாமென்றால், வாங்கிய கடனைத் திரும்பக் கட்டாதே என்றால், எங்கேயிருந்து மீண்டும் கடனை வாங்கிக் கொடுப்பது? செப்டம்பர் திங்களில் ஜப்தி செய்யப்பட்ட எல்லாப்

(பிற்பகல் 12-20)

பொருள்களையும் விவசாயிகளிடம் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம். விவசாயிகளுக்கு நாங்கள் என்ன செய்திருக்கிறோம் என்று கேட்கிறவர்களுக்கு இது தான் பதில். இன்னும் பல கேள்விகளை இங்கே கேட்டிருப்பதால், இன்னும் பதில் சொல்ல வேண்டியது அவசியமாகிறது. இங்கே இருக்கின்ற மாண்புமிகு மன்ற உறுப்பினர்கள் மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி போன்றவர்களின் கேள்விக்கு நான் இன்னும் பதில் சொல்லவில்லை. மேற்கொண்டும் நான் சொல்வதற்கு அனுமதி கொடுப்பீர்களா என்பதை தலைவரவர்கள் தான் சொல்ல வேண்டும். (சிரிப்பு) கேள்வி கேட்டிருப்பவர்கள் 28 பேர். பதில் சொல்வது நான் ஒருவன் மட்டும். அவர்கள் 28 பேரும் எத்தனை மணி நேரம் கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள் என்பதைக் கணக்கெடுத்து அதில் 3-ல் அல்லது 4-ல் ஒரு பங்கு நேரமாவது எனக்கு ஒதுக்க வேண்டும். ஏனெனில் வெளியே என் பேரில் குற்றம் சொல்கிறார்கள். நேரம் இல்லாததால் சொல்ல வில்லை என்பதை உணர்ந்தவர்கள் கூட எம். ஜி. ஆர். பதில் அளிக்கவில்லை, ஓடிவிட்டார் என்று சொல்கிறார்கள். அதற்காகத் தான் நேரம் வேண்டுமென்று கேட்கிறேன்.

விவசாயிகளின் சங்கடங்களைத் தெரிந்த உறுப்பினர்களைக் கொண்ட உயர் மட்டக் குழுவை இவ்வரசு அமைத்திருக்கிறது. தேர்தலின்போது இதைச் சொல்லவில்லை. ஆனால் இந்தக் காரியத்தை நாங்கள் செய்திருக்கிறோம். தேர்தலின்போது சொன்ன எல்லாவற்றையும் நிறைவேற்றியிருக்கிறீர்களா என்று இங்கே கேட்டிருக்கிறார்கள். இதற்கு பின்னால் வருகிறேன். இதற்கிடையில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான கால வரையறையை விவசாய சங்கத்தவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, 31—12—1981 வரை நீடித்து அரசு உத்தரவு பிறப்பித்தது. உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டதுமே அவர்களோடு மற்றவர்கள் எப்படி ஒத்துழைத்தார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். எந்த அளவுக்கு அதில் தி. மு. க. அங்கம் வகித்தது? எந்த அளவுக்கு அவர்கள் ஒத்துழைத்தார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தக் குழுவோடு தி. மு. க. ஒத்துழைக்கக் கூடாதா என்று நான் கேட்கிறேன். குழு அமைக்கப்பட வேண்டும் [illegible]ளார்கள். கம்யூனிஸ்ட் கட்சியை அல்லது மார்க்சிஸ்ட் கட்சியை நான்



1982 பிப்ரவரி 17] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

வேண்டுமென்று முகஸ்துதிக்காகப் பாராட்டவில்லை. அவர்கள் ஏற்றுக் கொள்ளப் போகிறார்களா இல்லையா என்பதல்ல பிரச்சினை. விவாதித்தார்களா, பேசினார்களா என்பது தான் பிரச்சினை. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், பார்வர்ட் ப்ளாக் கட்சியைச் சேர்ந்தவர்கள், குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் விவாதித்திருக்கிறார்கள். கமிட்டி ஏற்றுக்கொள்கிறதா இல்லையா என்பதல்ல. ஆனால் கமிட்டியில் போட்டவர்கள் எல்லாம் வருகிறார்களா பேசுகிறார்களா என்பதுதான் பிரச்சினை. ஆனால் சில பேர் வருவதே இல்லை. அதுபோல் காரியங்களைச் செய்ய முற்படுவதற்கு முன் இன்னின்ன காரியங்களைச் செய்ய இருக்கிறோம் என்று சொல்லுவதற்காக அழைத்தால் கூட வருவதே இல்லை. இதற்கு நாங்கள் என்ன செய்வது? "நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்டால்" பிரதிநிதிகளைப் பார்த்து, நீங்கள் என்ன கேட்டீர்கள் என்று கேட்பது தான் நியாயம். ஆனால் இதை அரசியலாக ஆக்கி பயனடைய நினைக்கும்போதுதான் நமக்குத் தொல்லைகள் ஏற்படுகின்றன.

கிராமப் பொருளாதாரம்பற்றி ஒரு கருத்தைச் சொன்னேன். உற்பத்திப் பொருளுக்கு நியாயமான விலை, கடன் தள்ளுபடி, விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம், பயிர் பாதுகாப்புத் திட்டம், உயர் மட்டக் குழு இப்படி பல்வேறு திட்டங்கள் உள்ளன. உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. கடன் தள்ளுபடியும் பெருமளவுக்குச் செய்யப்பட்டிருக்கிறது. மேற்கொண்டும் செய்வதற்கு வாய்ப்பும் வசதியும் இருந்தால், மத்திய அரசு அனுமதி தந்தால், நாங்கள் செய்யத் தயாராக இருக்கிறோம். ஒன்றைச் சொல்கிறார்கள். மத்திய அரசு கொடுக்க மறுத்தாலும் "நாங்கள் கொடுப்போம்" என்று நீங்கள் தேர்தலின் போது சொல்லவில்லையா என்று கேட்கிறார்கள். இதுகுறித்து நான் ஒன்றைச் சொல்ல வேண்டும். மத்திய அரசு தராவிட்டால், நாங்களே அந்தப் பொறுப்பை ஏற்று கடனைத் தீர்ப்போம் என்று சொன்னோம். ஆனால் நிலைமை என்ன? அவர்கள் தான் கொடுக்கிறார்களே, வாங்குகிறது தானே என்றும் சொல்கிறார்கள். இப்போது இதுபற்றி கோயம்புத்தூரில் கூட சொல்லியிருக்கிறார்கள். ஒரு மாநிலத்திற்கு ஏதாவது ஒன்றைச் செய்தால் இந்தியா பூராவும் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய அரசு செய்தாக வேண்டும். கடன் என்று சொன்னால், ஆயிரக்கணக்கான ரூபாய்களை வசூல் செய்தாக வேண்டும். வரி வேறு ஏறுகிறது என்று சொல்கிறார்கள். ரயில்வே கட்டணம் அதிகம் ஆகிறது என்ற உடனே அதிகம் ஆக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். அதேசமயத்தில் சம்பள உயர்வு வேண்டுமென்றும் கேட்கிறார்கள். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் இதுவரை வரி உயர்வு என்று கொண்டுவரவில்லை. அதற்குப் பதிலாக இருக்கின்ற

வரியைக் குறைத்து விடு, குறைத்து விடு என்று சொல்கிறார்கள். நாங்களே உயர்த்திவிட்டால், "இந்த அளவுக்குக் குறைத்து விடு" என்று சொல்லி, அத்துடன் நிறுத்திவிடுவார்களோ என்னவோ? ஆனால் அந்தத் திறமை எங்களுக்கு இல்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பேச்சிலிருந்து வரி போடுவதென்று இந்த அரசு முடிவு செய்து விட்டதாகத் தெரிகிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** வரியைப்பற்றிப் பேசுகிறேன் என்பதற்காக பட்ஜெட்டில் வரி போடப்படுமா இல்லையா என்பதைப் பற்றி இங்கே சொல்ல வேண்டாம். புதுப்புதுத் திட்டங்களைத் தீட்ட வேண்டியிருக்கிறது. அதுபோல் புதுப்புதுக் கடன்களைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. புதிய புதிய தொழிற்சாலைகளை உருவாக்க வங்கியிலிருந்து பணத்தைப் பெற்று வட்டியுடன் திருப்பிக்கொடுக்க வேண்டியிருக்கிறது. ரூ. 50 கோடி கடன் வாங்குகிறோம் என்றால், அதனை இத்தனை ஆண்டுகளில் திரும்பக்கொடுக்க வேண்டியிருக்கிறது. அரசு என்று வரும்போது, இத்தகைய சுமைகளைச் சுமக்கத் தயாராக இல்லை. கடனை வாங்கிய பிறகு வட்டியைக் கட்டுவது யார்? வட்டியைக் கட்டிக்கொண்டே போய், கடன் தொகையைக் கட்டாமலிருந்தால் நிலைமை என்ன ஆகும்? மத்திய அரசு கடன் வாங்குவதுபற்றி ஏன் எதுவும் சொல்லாமல் இருக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். அதைப்பற்றிப் பின்னால்கூட பேசலாம். தேவைக்குக் கடன் வாங்கலாம். ஆனால் கொள்கையை விட்டுக் கொடுக்கக் கூடாது. அதுதான் மத்திய அரசின் கொள்கை என்று நினைக்கிறேன். அதுபோல் இந்த மாநில அரசும் எந்தவிதத்திலும் தன்னுடைய கொள்கைகளை விட்டுக்கொடுக்காது. எங்களுக்கு என்று இருக்கிற கொள்கை வழி நடப்போம். நாங்கள் நிறைவேற்றியிருக்கிற ஒன்றிரண்டு உதாரணங்களையும் இங்கே குறிப்பிடுகிறேன். மத்திய அரசு 1980-ல் ஒரு குவிண்டால் நெல்லுக்கு 95 ரூபாய் என்று நிர்ணயித்தது. ஆனால், இந்த மாநில அரசு 105 ரூபாய் என்று நிர்ணயித்து அதிகமான தொகையைக் கொடுத்தது, அப்படிக் கொடுக்கக் கூடாது என்று மத்திய அரசு தடைபோட்டது. அதுபோல் நெல் விலையை 147 ரூபாயாக நிர்ணயிக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதிய கடிதம் குறித்தும் தீர்வு காணப்படவில்லை. அவ்வாறு விலையைக் கூடுதலாகக் கொடுத்தால் ரிசர்வ் வங்கி பண உதவி செய்வதை "நிறுத்தச் செய்வோம்" என்று கடிதம் எழுதியுள்ளார்கள். அதுபோல் கரும்பு கொள்முதல் விலையையும் டன்னுக்கு [illegible] ரூபாய் என்று இருந்ததை வேறு வகையில் வாய்ப்பு இருந்ததால், இந்த





அரசு 175 ரூபாய் என்று நிர்ணயித்தது. இதை நான் சொல்லக் காரணம், ஆலையிலிருந்து நமக்குக் கொடுக்கிற அந்தப் பணத்தை எங்களுக்குக் கொடுக்க வேண்டாம்; அந்த 10 ரூபாயையும் சேர்த்து கரும்பு பயிரிடுபவர்களுக்கே கொடுத்து விடுங்கள் என்று சொல்லிவிட்டோம்.

அடுத்து, குறைந்த விலையில் நமக்கு இடுபொருள்கள் தேவை. தேசியமயமாக்கினால் மட்டும் குறைந்த விலையில் கிடைத்து விடுமா? அதற்கும் வழி இல்லையே. மத்திய அரசு இடுபொருள்களைப் பெற்றுக்கொள்கிறது; அதுதான் ஒதுக்கவும் செய்கிறது. அது ஒதுக்குவதற்கு ஏற்ப நியாய விலையில் விநியோகிக்க முடிகிறது. அந்த விலையை நிர்ணயிக்கக் கூட யாருக்கும் அதிகாரம் இல்லை. முதல்நாள் நான் கேட்ட கேள்விபற்றி இங்கே குறிப்பிடுகிறேன். சில துணிகளை உற்பத்தி செய்கிறவர்கள் அவர்களாகவே அதன் விலையையும் நிர்ணயித்துக்கொள்கிறார்கள். இந்த விவசாயிகள் மட்டும் தாங்கள் உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு விலையை நிர்ணயிக்க முடியவில்லை. இந்த உரிமை தரப்பட்டால், விலைவாசி உயரும், அரிசி விலை உயரும், சாதாரண மக்கள், ஏழையெளிய மக்கள் அரிசி வாங்க முடியாது. அவர்கள் வாங்கிச் சாப்பிடக் கூடிய அளவுக்கு, அவர்கள் வாங்கக் கூடிய சக்திக்கு ஏற்ப அரிசியின் விலை இருக்கவேண்டும். அரிசியின் விலையை உயர்த்துவது என்றால், ஏழையெளியவர்களுக்கு நியாய விலையில் தேவையான அரிசியை அரசு வழங்கவேண்டும். நியாய விலையில் கிடைக்காவிட்டால்கூட பரவாயில்லை என்று சொன்னால், அரிசி விலையை உயர்த்தலாம். ஆனால் அப்படிக்கூட விலை உயர்வைத் தடுக்க, இடைத் தரகர்களை ஒழிக்க, இந்த அரசு முயற்சி எடுத்து வருகிறது. காய்கறி முதற் கொண்டு அரிசி வரை அரசே உற்பத்தி செய்கின்றவர்களுக்கு வாய்ப்பு கொடுத்து . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசி முடியும்வரை அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** என்னுடைய ஆசை என்னவென்றால் இங்கே யார் யார் என்னென்ன சொல்லியிருக்கிறார்களோ அவற்றிற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டும் என்பதுதான். இன்று அவையை ஒத்திவைப்பதென்றால் கூட ஒத்திவைக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 12.30)

## இணைப்பு I.

(56 ஆம் பக்கத்தில் வினா எண் 83-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

(அ) தமிழகத்தில் நகரங்கள் தவிர மற்ற இடங்களில் நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித்துறை நிர்வாகத்தின்கீழ் இருக்கும் 'பயணிகள் விடுதிகள்' மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| செங்கல்பட்டு | 8 |
| வட ஆற்காடு | 7 |
| தென் ஆற்காடு | 11 |
| சேலம் | 15 |
| தர்மபுரி | 12 |
| கோயம்புத்தூர் | 5 |
| பெரியார் | 9 |
| நீலகிரி | 4 |
| திருச்சி | 14 |
| புதுக்கோட்டை | 3 |
| தஞ்சாவூர் | 14 |
| மதுரை | 16 |
| இராமநாதபுரம் | 14 |
| திருநெல்வேலி | 15 |
| கன்னியாகுமரி | — |
| | 147 |

(இ) ஒன்றும் இல்லை.

(உ) இல்லை.

(ஊ) இவ்வினாவிற்கு இடமில்லை.



## இணைப்பு II.

(181 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

1976 ஆம் ஆண்டு கர்நாடக அரசால் தயாரிக்கப்பட்ட மூலத்திட்டத்தில் (Master plan) கர்நாடக எல்லைக்குள் காவிரியின்மீது மூத்தாதியில் (Muttati) 309.2 டி.எம்.சி. கொள்ளளவுள்ள ஒரு நீர்த்தேக்கம் அமைத்து 400 மெகாவாட் மின் உற்பத்தி செய்யவும், மற்றும் மூத்தாதிக்கு 6.5 கிலோ மீட்டருக்குக் கீழே மேகதாடு (Megahadattu) என்னும் இடத்தில் 3 டி.எம்.சி. கொள்ளளவுள்ள நீர்த்தேக்கம் அமைத்து, 115 மெகாவாட் மின் உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டது. இந்த இரண்டு நீர்த்தேக்கங்களின் மொத்த கொள்ளளவு 312.2 டி.எம்.சி. கர்நாடக அரசின் திட்டப்படி இவை இரண்டும் தமிழகத்தில் காவிரியின்மீது அமைந்துள்ள மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு மேல்பகுதியில் அமையும். இவை, முழுதும் மின் உற்பத்திக் காகவே அமைக்கப்படும் நீர்த்தேக்கங்களாகும்.

2. கர்நாடக அரசு, காவிரி ஆற்றின் குறுக்கே கர்நாடக மாநில எல்லைக்குள் அமையவிருக்கும் 'மேகதாடு திட்டத்தின்' (Meghadattu Project) சாத்தியக்கூறுகளை ஆராய அவ்வரசின் அலுவலர்கள் கொண்டகுழு ஒன்றை அமைத்துள்ளதாக, 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் செய்திகள் வெளியாயின. 312 டி.எம்.சி. (அதாவது மேட்டூரின் கொள்ளளவு போல் 3.3 மடங்கு அதிகம் கொள்ளளவு கொண்ட) 'மேகதாடு திட்டம்' மேட்டூர் அணைக்கு மேல் பகுதியில் அமைக்கப்பட்டால் மேட்டூர் அணைக்கு வரும் நீர் வரத்து பாதிக்கப்படுவதோடு, தமிழகத்தின் பாசன வசதிக்காக மேட்டூரில் தேக்கி வைக்கப்படும் நீர் மற்றும் உபயோகப்படுத்தும் நீர் இவற்றின் நிலைமைகள் வெகுவாக மாறிவிடும் என்று தமிழக அரசு கருதியது. பொதுவாக, மேகதாடு போன்ற மின் உற்பத்தி நீர்த்தேக்கங்களில் தடுத்து வைக்கப்படும் மற்றும் வெளியேற்றப்படும் நீர் இவற்றின் அளவானது அந்தந்த மாநிலம் நிர்ணயிக்கும் மின்சார உற்பத்தித் திறனைப் பொறுத்தது. ஏற்கெனவே, கர்நாடக அரசு 1924 ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையே காவிரி நீர்பற்றி ஏற்பட்ட ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது எனக்கூறி, ஒப்பந்தத்துக்கு மாறாக 1974-லிருந்து செயல்பட்டு வருகிறது. ஆகவே, மேகதாடு மின் திட்டத்தை நிறைவேற்றும்போது, கீழ்ப்பகுதிகளின் பாசனத்திற்காக விடவேண்டிய நீரின் அளவும் முறையும் சரியாக நிர்ணயிக்கப் படாவிடில் மேட்டூர் நீர்த்தேக்கத்துக்குள் வரும் நீர்வரத்துமுறை முற்றிலும் மாறி, அதன் விளைவாக தமிழகத்தின் பாசனம் வெகுவாக பாதிக்கப்படும் என்று அரசு கருதியது. இதனால் கர்நாடக மாநிலத்தில் கட்டப்படவிருக்கும்

[1982 பிப்ரவரி 17

மேகதாடு நீர்மின் திட்டம்பற்றி தமிழ்நாடு தனது அச்சத்தை 18—6—1981-ல் இந்திய அரசுக்கு தெரிவித்தது. இந்திய அரசு தனது பதிலில் கர்நாடக அரசு அமைத்துள்ள குழு இத்திட்டத்தை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும்பொழுது மேலும் இரண்டு மாற்று நீர்மின் திட்டங்களின் (அவற்றில் ஒன்று ஹோகனேகல், தமிழ்நாட்டில் உள்ளது) தகுதிகளையும் கருத்தில் கொள்ளும் என்றும்; இக்குழுவின் அறிக்கை மாநிலங்களுக்கிடையே ஏற்பட விருக்கும் காவிரி நீர்ப் பங்கீட்டை எவ்விதத்திலும் பாதிக்காது என்றும் தெரிவித்தது. மேலும், இக்குழு, திட்டத்தின் சாத்தியக்கூறுகளை ஆராயவே அமைக்கப்பட்டதால் தமிழ்நாடு இதை ஆட்சேபிக்கவேண்டாம் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

3. தமிழக எல்லையில் காவிரியாற்றில் தர்மபுரி மாவட்டத்தில் ஹோகனெகல் அருகாமையில் ஆண்டு ஒன்றுக்கு 800 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான நீர்மின் திட்டம் ஒன்று அமைப்பது பற்றிய செயற் குறிப்பு பல ஆண்டுகளாக பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் பற்றி கர்நாடகம் மற்றும் தமிழகம் ஆகிய மாநிலங்களுக்கிடையே ஏற்கனவே பலதடவை பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இத்திட்டம், இரு மாநிலங் களும் சம்பந்தப்பட்டதாக இருப்பதாலும், காவிரி நீர்ப் பங்கீட்டுடன் தொடர்புகொண்டதாக இருப்பதாலும், மத்திய அரசின்கீழ் இத்திட்டத்தை அமைப்பது சிறந்த ஏற்பாடாக இருக்கும் என்றும், இதன் செலவுகளையும பயன்களையும் இரு மாநிலங்களும் நியாயமான அடிப்படையில் பகிர்ந்து கொள்ளலாம் என்றும் மத்திய அரசால் ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. கொள்கையளவில் இக்கருத்தை கர்நாடகம் ஏற்றுக்கொண்டது. ஆயினும், அரசியல் மட்டத்தில், முதலமைச்சர்களிடையே இதுபற்றிய பேச்சு வார்த்தைகள் நடத்தி விவரங்களை முடிவு செய்யலாம் என்று விரும்பியது. இப்பேச்சு வார்த்தைகள் இன்னும் நடைபெறவில்லை. ஆகவே, ஹோகனெகல் திட்டம் நிறைவேற்றப்படாமல் உள்ளது.

4. இந்நிலையில், கர்நாடக அரசு அமைத்த குழு, கர்நாடகத்தின் 'மேகதாடு' திட்டத்துடன் தமிழ்நாட்டின் ஹோகனெகல் திட்டத்தை ஒப்பிட்டுப்பார்த்து மேகதாடு திட்டத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று பரிந்துரை செய்திருப்பதாகவும், இக்குழுவின் பரிந்துரையை கர்நாடக அமைச்சரவை ஏற்றுள்ளதாகவும், இத்திட்டத்திற்கு உலக வங்கியின் உதவியை நாடுவதுடன், இதனை 1982 ஆம் ஆண்டே மேற்கொள்ளவிருப்ப தாகவும் கர்நாடக முதலமைச்சர் நிருபர்களிடம் கூறியதாக நாளேடுகளில் செய்திகள் வந்தன. (1—1—1982).



1982 பிப்ரவரி 17]

5. மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு மேல் காவிரியின் குறுக்கே அமையும் எந்த நீர்மின் திட்டமும், தமிழ்நாட்டின் நீர்ப்பாசன நலன்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். மற்றும் மேட்டூர் நீர்த்தேக்கத்திற்குள் வரும், உத்திரவாதம் அளிக்கப்பட்ட நீர் வரத்து தமிழ்நாட்டிற்கு கிடைப்பதை உறுதி செய்யவேண்டும். தமிழகத்தில் காவிரிப் பாசனத்திற்குத் தேவையான நீரின் அளவுகளை தெளிவாக வரையறுத்து ஒப்பந்தம் ஏற்படாத நிலையில் கர்நாடகம் "மேகதாடு" திட்டத்தை மேற்கொள்ளுவது தமிழ்நாட்டின் காவிரிப்படுகையில் உள்ள பாசன உரிமைகளையும் மற்றும் தற்போது உள்ள மின் நிலையங்களின் மின் உற்பத்தியையும் மிகவும் பாதிக்கும். இதுபோன்ற ஒரு பெரிய திட்டத்தை நிறைவேற்ற கர்நாடகம் தமிழ்நாட்டைக் கலந்து கொள்ளாமலும் அல்லது தமிழ்நாட்டிற்குத் தெரிவிக்காமலும் மற்றும் மத்திய அரசு அல்லது திட்டக்குழுவின் ஒப்புதல் இல்லாமலும் தன்னிச்சையாக நிறை வேற்ற முடிவு செய்துள்ளது. இச்செயல் சட்டத்திற்குப் புறம்பானதும் நியாய மற்றதுமாகும். ஆகவே, மேகதாடு திட்டத்தை நிறைவேற்றுவதை இத்திட்டம் குறித்து சம்பந்தப்பட்ட எல்லா மாநிலங்களின் நலனையும் பாதுகாக்கும் வகையில் மாநிலங்களிடையே ஒரு உடன்பாடு ஏற்படும் வரை தள்ளி வைக்கும்படி கர்நாடக அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பதில் எதிர்பார்க்கப்படுகிறது. மேகதாடு திட்டத்தை தள்ளிவைக்கும்படி கர்நாடக அரசிற்கு அறிவுரைகள் வழங்குமாறு மத்திய அரசும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. மத்திய அரசின் பதிலும் எதிர்பார்க்கப்படுகிறது.

## இணைப்பு III.

(33 ஆம் பக்கத்தில் வினா எண் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

சென்னை மாநகராட்சி 24 உயர்நிலைப் பள்ளிகளையும், 10 மேல் நிலைப் பள்ளிகளையும் நிர்வகித்து வருகின்றது. இப்பள்ளிகளில் அடிப்படை வசதிகளான குடி தண்ணீர் வசதியும், கழிவறை வசதிகளும் செய்து தரப் பட்டுள்ளன. இவற்றில் ஏற்படும் குறைபாடுகள் சம்மந்தமாக தலைமை ஆசிரியர்களிடமிருந்து அவ்வப்போது வரும் தகவல்களுக்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு குறைகள் நிவர்த்திக்கப்படுகின்றன. குடிநீர் வசதிக்காக தரைமட்ட தொட்டி (Sump), மேல் நீர் தேக்க தொட்டி (over-head tank), மின் பம்பு முதலிய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. இருப்பினும் ஏழுகிணறு தெருவில் உள்ள பள்ளியில் அப்பகுதியில் குடிநீர் குழாய்களில் வேண்டிய அழுத்தம் (pressure) இல்லாத காரணத்தால் தண்ணீர் சரளமாக கிடைக்கவில்லை. ஆகவே தண்ணீர் தொட்டிகளில் தண்ணீர் நிரப்பப்பட்டு வருகிறது.

அடிப்படை வசதிகள் செவ்வனே எல்லா பள்ளிகளுக்கும் செய்து தர, நடப்பு நிதியாண்டில், சென்னை மாநகராட்சி வரவு-செலவு திட்டத்தில் கல்வித் துறை துணை தலைப்பில் ரூபாய் மூன்று இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

குடிநீர் வசதியில்லாமல், மாணவர்கள், ஆசிரியர்கள், அவதிப்படுகிறார்கள் என்பது உண்மைக்கு புறம்பான செய்தியும் மிகைப்படுத்தியும் கூறப் படுவதாகும்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

வியாழக்கிழமை, 1982 பிப்ரவரி 18.

(மாசி 6, துன்மதி, திருவள்ளுவராண்டு—2013)

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில், முற்பகல் 9-30 மணியளவில், மேலவைத் துணைத் தலைவர் (புலவர் புலமைப் பித்தன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Restoration of Commuted Portion of Pension.*

* 91. Q.—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that the Associations for Pensioners have made a representation to the Government, to restore the full commuted portion of the pension, to those pensioners, who have completed ten years from the date of their retirement; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

( ) அரசுப் பணியாளர்கள் ஓய்வுபெற்று 1981 ஏப்ரல் 1 ஆம் நாளன்று 15 ஆண்டுகள் முடிவு பெற்று ஓய்வூதியம் பெறும் அனைவருக்கும், அவர்கள் கம்யூட் செய்த தேதி என்னவாக இருந்தாலும், அவர்களுடைய ஓய்வூதியத் தில் இருந்து எவ்வளவு பகுதியைக் குறைத்து மொத்தத் தொகை வழங்கப் பட்டதோ அந்தப் பகுதி முழுவதையும் திரும்பவும் ஓய்வூதியத்தில் சேர்க்கப் பட வேண்டும் என்றும் மற்றவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஓய்வு பெறும் நாளிலிருந்து 15 ஆண்டுகள் என்றைக்கு முடிக்கிறார்களோ அன்று முதல் அந்தப் பகுதியைத் திரும்பவும் ஓய்வூதியத்தில் சேர்க்கலாம் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. பா. ரா. தாமஸ் : ஓய்வு பெற்ற ஊழியர்களுடைய சங்கத்திலிருந்து, அவர்கள் மொத்தமாகப் பெற்ற பணத்தை 10 ஆண்டுக் காலத்திலே திரும்பச் செலுத்திவிட்டால், திரும்பச் செலுத்திவிட்ட அந்த நாளிலிருந்தே மீண்டும் முறையான ஓய்வூதியம் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்கள் அவ்வாறு கொடுத்து முடித்து

விட்ட பிறகு, இந்தத் தொகை கொடுப்பது சம்பந்தமாக 15 ஆண்டுகள் என்று இருக்கும் நிலவரத்தை மாற்றிவிட்டு, மீண்டும் அந்தத் தொகையை அவர்களுக்குக் கொடுத்துவிட்டால் நன்மை பயக்குமாகையால், மீண்டும் அந்த ஆண்டில் திருத்த வழங்க ஆணையிடுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** உரிமையின் அடிப்படையில் அல்ல இந்த முடிவுக்கு அரசு வந்தது. கருணையின் அடிப்படையில் இந்தச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. இந்தச் சலுகை மத்திய அரசு ஊழியர்களுக்கும் இல்லை. பக்கத்தில் இருக்கும் கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களைப் பார்த்தாலும் கூட, தமிழகத்தில் நாம் செய்திருக்கும் இந்த ஏற்பாடுதான் ஊழியர்களுக்கு மிகவும் சாதகமாக இருக்கிறது. இந்தப் பணத்தை மொத்தமாக வாங்குபவர்கள் திரும்பக் கட்டிமுடித்துவிட்டவுடனே, மீண்டும் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், ஒருவரும் வாங்காமல் இருக்கமாட்டார்கள். இந்தமாதிரி சலுகை கொடுத்தால், எல்லோரும் வாங்குவார்கள். இடையிலே இறந்துவிட்டால், அந்தத் தொகை முழுவதும் அவர்களுக்குச் சொந்தம். 15 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு கூட கொடுக்க வேண்டும் என்ற எந்தவிதமான நியதியும் இல்லை. கருணையின் அடிப்படையில் தான் இப்படிச் செய்திருக்கிறோம். மூன்றாவது ஊதியக் குழு 1/3-பங்குதான் கொடுக்கலாம் என்று வைத்திருக்கிறார்கள். கருணையின் அடிப்படையில்தான் 15 ஆண்டுக் காலம் கழித்து மொத்தத் தொகையையும் கொடுக்கலாம் என்று முடிவு எடுத்திருக்கிறோம். அதுவும், பலதடவை ஆராய்ந்து பார்த்துத் தான் இந்த முடிவு எடுத்திருக்கிறோம்.

**திரு. பா. ரா. தாமஸ் :** நம்முடைய அரசு பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகச் செய்திருக்கிற இந்தத் திட்டத்தை நான் மிகவும் பாராட்டுகிறேன். மேலும், நிதி நிலைமையை அனுசரித்து, 10 ஆண்டுகளிலேயே இந்தத் தொகையை திரும்பக் கொடுக்கும் வகையில் ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், மொத்தமாகப் பெறக்கூடிய கம்யூட்டேஷன் தொகையை ஓய்வுபெற்ற ஓராண்டு காலத்திற்குள்ளாக மருத்துவ சர்ட்டிபிகேட் இல்லாமலேயே அரசு ஊழியர்கள் பெறலாம் என்ற நிலைமை இருக்கும்போது, தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இந்த வசதி இல்லை. ஆகவே, இவர்களுக்கும் ஓய்வு பெற்ற ஓராண்டு காலத்திற்குள்ளாக மருத்துவ சான்றிதழ் இல்லாமலேயே இந்தத் தொகையைக் கொடுக்கும் நிலைமையை ஏற்படுத்துவார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இதுபற்றி தனியாக என்னிடத்திலே கேள்வி கேட்டால், அதுபற்றி ஆராய்ந்து இருக்கும் விதிமுறைகளுக்கு மாறுபடாமல் நியாயம் வழங்கலாம்.



**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஓய்வூதியம் வழங்குவதைப் பொறுத்தவரையில், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஓய்வு பெற்று பல ஆண்டுகாலமாகியும் கூட, இந்த ஓய்வூதியம் கிடைப்பதிலே மிகவும் தாமதம் ஏற்படுகிறது. இந்த ஊழியர்கள் ஓய்வு பெறவிருப்பது அந்த இலாக்காவுக்கு முன்கூட்டியே தெரியும். ஆகவே, அவர்கள் ஓய்வுபெறுவதற்கு முன்னாலேயே, அவர்களின் கணக்குகளை யெல்லாம் சரிபார்த்து, தயார் செய்து ஓய்வு பெற்ற நாள் முதலே கணக்கிட்டு அந்த மாதம் முதலே அவர்கள் ஓய்வூதியம் பெறும் வகையில் வழிவகைகளைச் செய்து ஆணை பிறப்பிக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஓய்வூதியத்தைப் பொறுத்தவரையில், ஊழியர்கள் ஓய்வு பெறும் அந்த மாதம் முதலே கூடுமானவரையில் ஓய்வூதியம் கிடைக்கத் தக்க வகையிலே தான் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கூறியிருக்கிறோம். பெரும்பாலோருக்கு இவ்வாறு கிடைக்கிறது. சிலர் சம்பந்தமாக தேவையான குறிப்புகள் கிடைப்பதிலே சற்று காலதாமதம் ஏற்படுகிறது. சிலருக்கு அவர்கள் லீவு எடுத்த தேதி, விடுப்பில் சென்ற பின் வந்து சேர்ந்த தேதி இதுபோன்ற பல விஷயங்களின் நிமித்தம் ஏற்படும் கடிதப் போக்குவரத்துக்களின் காரணமாக, காலதாமதம் ஏற்பட்டு விடுகிறது. அப்படிப்பட்ட குறைகள் ஏற்படாத வகையிலே முன்கூட்டியே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். மாதாமாதம் சம்பளம் வாங்கிக்கொண்டே வந்து திடீரென்று ஓய்வுபெறும்போது அவர்களுக்கு பாதிச் சம்பளம் வரும்போது, அதுவும் உரிய நேரத்தில் கிடைக்காமல் இருந்தால், அவர்கள் பாடு கஷ்டமாக இருக்கும் என்பதால், 6 மாத காலத்திற்கு முன்னாலேயே திட்டமிட்டு, இந்தக் குறிப்பிட்ட தேதியில் ஓய்வு பெற்றால், அந்த மாதம் முதலே கொடுக்க வேண்டும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். இதுபற்றி மேலும் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று சொன்னால், அதுபற்றி யோசிக்கலாம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** விலைவாசி நிலையையொட்டி கருணையின் அடிப்படையில் ஓய்வூதியத்தை அதிகப்படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** விலைவாசி உயர்வை மட்டுமல்ல, எல்லா நிலைமைகளையும் பார்க்க வேண்டும். குறிப்பாக வரி வருவாய் நிலைமைகளையும் பார்க்க வேண்டும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** நம்முடைய மாநிலத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியில் இல்லாவிட்டாலும், அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குகிறோம்.

அவர்களும் தங்களுக்கு கம்யூட்டேஷன் வேண்டும் என்று விரும்பினால், அந்தக் கோரிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கருணையோடு பரிசீலித்து ஆணை வழங்குவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சட்டமன்ற உறுப்பினர்கள் அப்படிக் கேட்பது நல்லதல்ல. இந்த ஓய்வூதியம் தரும் முறையையே சிலபல ஆண்டுகளாகத்தான் வைத்திருக்கிறோம். 1947 லிருந்து 1952 வரை புதிய அரசியல் அமைப்புச் சட்டம் வருவதற்கு முன்னாலே கூட இந்த நிலைமை இல்லை. அப்போது கொடுக்கப்படவில்லை. அந்தப் பதவிக் காலத்திற்கும் கூட கொடுக்க வேண்டும் என்று சட்டமுன்வடிவு கொண்டுவந்திருக்கிறோம். ஆனால், 'கம்யூட்டேஷன்' என்ற நிலைமைக்கு வர முடியாது.

திரு. ம. சங்கரலிங்கம் : அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும்போது, உடனடியாக ஓய்வூதியம் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு 6 மாதத்திற்கு முன்னாலேயே ஓய்வு பெறுகிறபோது ஓய்வூதியம் எவ்வளவு என்று நிர்ணயம் செய்து நடவடிக்கை எடுக்கும் முறைபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிச் செய்யும்போது, சில நேரங்களிலே சில குறிப்புகள் சில இலாக்காக்களிடமிருந்து வருவதற்கு தாமதம் ஏற்படுகிறது என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி காலதாமதம் ஏற்படுமானால், அதற்கு யார் பொறுப்பு என்று கண்டுபிடித்து தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி கவனிக்கும் போது இரண்டு பக்கங்களிலேயும் தவறு இருக்கக்கூடும். ஓய்வூதியம் கொடுப்பது பற்றிய நடவடிக்கை எடுக்கும்போது, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நிமித்தம் அல்லது அலுவலகம் நிமித்தம் காலதாமதம் ஏற்பட்டால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் சில நேரங்களில் ஓய்வூதியம் பெறுபவர்களிடம் சில விளக்கங்கள் கேட்கப்படும்போது, அந்த விளக்கங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுக்காமல் அது நிமித்தமும் காலதாமதம் ஏற்படுகிறது. இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க அரசு முயலும்.

## புனித ஜார்ஜ் கோட்டையின் முன் "உண்ணாவிரதம்"

* 92 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் எழுத்தர் சங்கத்தைச் சேர்ந்த 700 பேர், 13—8—1981 அன்று தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கோட்டை முன்பு உண்ணாவிரதப் போராட்டம் செய்ய முயன்றபோது கைது செய்யப்பட்டனர் என்பது உண்மையா ?





(இ) அவர்கள் கோரிக்கையின் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) பயிற்சி பட்டியல் எழுத்தர்கள் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டி கோட்டை முன்பு மறியல் செய்ய முற்பட்ட பொழுது அவர்களில் சுமார் 800 பேர் கைது செய்யப்பட்டு பின்னர் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டனர்.

(இ) அவர்களது கோரிக்கைகளில் முக்கியமானதான ஊதிய உயர்வு குறித்து உரிய ஆணைகள், அரசு ஆணை 655 உணவு மற்றும் கூட்டுறவுத் துறை நாள் 12—8—1981-ல் பிறப்பிக்கப்பட்டன. இதர கோரிக்கைகளை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பரிசீலித்து வருகின்றது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் எழுத்தர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நடத்தியுள்ள போராட்டத்தின் விளைவாக கைதுசெய்யப்பட்டவர்கள் 806 பேர்கள் ஜாமீனில் வந்தார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கைதுசெய்யப்பட்டவர்கள் மீது வழக்கு ஏதேனும் பதிவு செய்யப்பட்டுள்ளதா ? பதிவு செய்யப்பட்டிருப்பின், அந்த வழக்கு இப்போது நடந்துகொண்டிருக்கிறதா? அல்லது முடிவு பெற்றுவிட்டதா? அவர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் இருந்த காலத்திற்குரிய ஊதியம் வழங்கப்பட்டிருக்கிறதா? அல்லது மறுக்கப்பட்டிருக்கிறதா ?

(முற்பகல் 9-40)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்கள் கைது செய்யப்பட்ட பின், அவர்கள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த நாட்களுக்கு ஊதியம் வழங்கும் நிலை இல்லை என்று கருதுகிறேன். எனினும் தனிப்பட்ட கேள்வி போட்டால், முழு விவரத்தையும் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு பல காரியங்களைச் செய்திருப்பதாக இங்கே குறிப்பிட்டார்கள். கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொண்ட நிலையில் கைது செய்யப்பட்டவர்களின் மீது வழக்குத் தொடரப்பட்டிருப்பதையும் கருணை உள்ளத்தோடு பரிசீலித்து அவைகளை வாபஸ் வாங்கவும், அந்தக் காலத்திற்கான ஊதியத்தை வழங்கவும் அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தப் பிரச்சினையைக் குறித்து அந்தத் தொழிலாளர்களோடு நான் பேசும்போதே, இதற்காக எந்தவிதமான மறியலும் வேண்டாம், நான் இந்தப் பிரச்சினையைக்

[1982 பிப்ரவரி 1.

கவனித்துக் கொண்டிருக்கிறேன், விரைவில் நல்ல முடிவைச் சொல்வேன் என்று சொன்னேன். அப்படியிருந்தும், அவர்களை வழிநடத்திச் செல்லும் தலைவர்கள் ஏதோ தாங்கள்தான் இதை வாங்கிக் கொடுத்தோம் என்ற "கித்தாப்பை"ப் பெறுவதற்காக இப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்குகிறார்கள். இதன் காரணமாகத்தான் வாங்கினோம் என்று சொல்லிப் பெருமைப்படுவதற்காக அவர்கள் ஊழியர்களை ஊக்கப்படுத்தி, அந்த அப்பாவிகளும் இதில் ஈடுபட்டு, இப்போது தவித்துக்கொண்டிருக்கிறார்கள் நான் முன்னாலேயே அவர்களிடத்தில் தெளிவாகச் சொன்னேன். தற்போது ரூபாய் 100 என்றிருப்பதை ரூபாய் 150 என்று உயர்த்துவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறேன். இது விரைவில் செய்யப்படும் என்று நான் அவர்களிடம் சொன்ன பிறகும், இதைச் செய்கிறார்கள் என்றால், அதன் விளைவுகளை அவர்கள் அனுபவிக்க வேண்டித்தான் இருக்கும். நிலைமை எப்படி இருக்கும் என்று என்னால் சொல்ல இயலாது. எனினும் அதைக் குறித்து ஆராய்ந்து என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அதை இந்த அரசு செய்யும் என்பதைமட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : சங்கம் வைத்து நடத்துபவர்கள், கோரிக்கைகளை வைத்து வாதிட்டு, அதற்குப் பிறகு போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகிறபோது, அதைப் பார்த்து தலைவர்கள் "கித்தாப்புக்காக" இதை நடத்துகிறார்கள் என்பதும், அதில் ஈடுபடுகிறவர்கள் அப்பாவிகள் என்றும், அதனால்தான் ஏமாறுகிறார்கள் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ள இயலாது. அப்படிச் சொல்வது சங்கம் வைத்து நடத்துகிறவர்களை அவமதிப்பதாகும். சங்கம் வைத்து நடத்துபவர்கள் கோரிக்கையை வைத்து, வாதிட்டு, பிறகு போராட்ட நடவடிக்கையை மேற்கொண்ட பிறகுதான், சங்கத்தின் வற்புறுத்தலின் அடிப்படையில்—அந்த நெருக்கடியில்தான்—அரசும் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்கிறது. எனவே நடத்திய போராட்டம் நியாயமானது என்று அரசே ஒப்புக்கொள்கிறது. இதன் அடிப்படையில் அவர்களின்மீது கருணை காட்டி, வழக்குகளை வாபஸ் வாங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் குறிப்பிட்ட ஒன்றைப்பற்றி மட்டும்தான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் நடத்தும் போராட்டம் எப்படிப்பட்டது என்று விமர்சிக்கவில்லை. அப்படிப்பட்ட நிலைமை வரும்போது, அவற்றின் தன்மைகளையும் அறிந்து அவ்வப்போது நான் விமர்சிப்பேன். நான் இங்கே குறிப்பிட்ட இந்தப் பிரச்சினையைக் குறித்து மட்டுமே சொன்னேன். இப்படிப்பட்ட முறையில் போராட்டம் நடத்தும்போது, போராட்டத்தில் ஈடுபடுபவர்கள்



[illegible] பிப்ரவரி [illegible]]

[illegible] தொழிற் சங்கங்களினுடைய அதன் விளைவுகளையும் சமாளிக்கிற முன்னிருந்து [illegible] ஈடுபட வேண்டும். போராட்டத்தில் ஈடுபட்டு, பிறகு விளைவுகளிலிருந்து விலக்குவது, சலுகை காட்ட வேண்டும் என்று கோருவது என்பது சரியல்ல. தவறு செய்தாலே [illegible], [illegible] தண்டனைகள் என்று [illegible] தெரிந்துதான் அதில் ஈடுபடுகிறார்கள் என்றால், தியாகம் செய்ய விரும்புகிறார்கள் என்றுதான் அதற்குப் பொருள்படும். இருந்தாலும் இந்தப் பிரச்சினையை எந்த வகையில் தீர்க்க முடியும் என்பதைப் பற்றி இந்த அரசு நல்ல முறையில் ஆராயும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால், அதன் காரணமாக உற்பத்தி பாதிக்கப்படுகிறது, விநியோகம் பாதிக்கப்படுகிறது என்றெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் உண்ணாவிரதம் மேற்கொண்டாலும், அதற்குக் காரணமாக இருக்கும் தலைவர்கள் "கித்தாப்பு" தேடிக்கொள்வதற்காக மேற்கொள்ளச் சொல்கிறார்கள் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியென்றால் இந்த அரசின் கவனத்தை தொழிற் சங்கங்கள் எப்படித்தான் ஈர்க்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்? போராட்டமே வேண்டாம் என்று சொல்லுகிறார்களா? போராட்டத்தில் ஈடுபட்டால், அதன் விளைவுகளை அனுபவித்துதான் தீர வேண்டும் என்று வெள்ளைக்காரன்தான் சொன்னான். அதையே இப்போது பதவியில் இருப்பவர்களும் சொன்னால் எப்படி? உண்ணாவிரதத்தைக்கூட அனுமதிக்கமாட்டோம் என்றால், என்ன அர்த்தம்? உண்ணாவிரதம் இருப்பவர்களையாவது அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : உண்ணாவிரதத்தைச் சிலர் கடைப்பிடிக்கிறார்கள், சிலர் கடைப்பிடிப்பதில்லை. உண்ணாவிரதத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று இந்த அரசு சொல்லவுமில்லை. ஆனால் அதன் விளைவுகளைக் கவனித்துத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது என்பதைத்தான் நான் குறிப்பிட்டேன். சிலர் உண்ணாவிரதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அண்ணா அவர்கள் உண்ணாவிரதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. காந்தியடிகள் உண்ணாவிரதத்தை ஏற்றுக்கொண்டார் என்றால், அதன் மூலம் தன்னை வருத்திக் கொண்டு, அதன் காரணமாக மற்றவர்களின் அனுதாபத்தையும் பெற்று, காரியத்தை அதன் மூலம் நடத்திக்கொள்ள முடியும் என்று நம்பினார்கள். ஆனால் இப்போது நடைபெறும் எதற்கெடுத்தாலும் உண்ணாவிரதம் இருப்பது என்றாகிவிட்ட நிலையில், உண்ணாவிரதத்திற்கே மதிப்பில்லாத தன்மை ஏற்பட்டுவிட்டது. பிரச்சினைகளைக் கேட்பவர்களும் மனிதர்கள்தான், அதனை நிறைவேற்ற இருப்பவர்

களும் மனிதர்கள்தான். எனவே கூடுமான வரையில் பேச்சுவார்த்தைகளின் மூலமே பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற முறையில் இருவரும் அணுக வேண்டும். இரண்டு சாராரும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமர்ந்து பேசுகிற முறையில் (talks across the table) என்ற முறையில் பேச்சு வார்த்தையில் ஈடுபட வேண்டும் என்றுதான் நாம் விரும்புகிறோம். அந்த முயற்சி தோல்வியுற்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற நிலைமை ஏற்படுவது சரி. ஆனால் சில சமயங்களில் அப்படிப்பட்ட கட்டங்களைத் தாண்டாமலேயே போராட்டத்தில் ஈடுபடுவதால், விபரீத விளைவுகள் ஏற்படுகின்றன. எனவே இரு சாரார்களும் இதைத் தடுக்க முயற்சி செய்தால், நல்லதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### மேல் நிலைப் பள்ளிகளில் முதுநிலைப்பட்டம் பெறாத ஆசிரியர்கட்கு வாய்ப்பு.

* 93. வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் & செல்வி ஆ. லீலாவதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) மேல் நிலைப் பள்ளிகளில் தற்பொழுது நியமிக்கப்பட்டுள்ள எம்.எஸ்ஸி., பட்டத்தகுதி இல்லாத, கணித, அறிவியல் ஆசிரியர்கள், தங்களை தகுதிப்படுத்திக்கொள்ள வாய்ப்புக்களை அளிக்க, அரசு ஏதேனும் திட்டங்களை உருவாக்கி உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) மேல் நிலைப் பள்ளி வகுப்புகளை நடத்த பணியில் உட்படுத்தப்பட்ட முதுகலைப் பட்டம் பெறாத, கணிதம் மற்றும் அறிவியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் தங்களை முழுத் தகுதி பெற்றவர்களாகத் தயார் செய்து கொள்ளும்பொருட்டு அரசின் வேண்டுகோளின்படி, மாலை நேர வகுப்புகளைத் தொடங்க மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது. மேலும், இரண்டு விடுமுறை காலங்களில் நேர்முக வகுப்புகளை நடத்துவதோடு, இவ்விரண்டுக்கும் இடைப் பட்ட காலத்தில் அஞ்சல்வழிக் கல்வி வகுப்புகளை பல்கலைக் கழகங்கள் மூலம் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : முதுகலைப் பட்டம் பெறாத ஆசிரியர்களுக்காக, ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாலை நேர வகுப்புகள் அல்லது கோடை விடுமுறைக்கான தொடர் வகுப்புகள் இவற்றிற்குப் பதிலாக, [illegible] ஆண்டு குறுகிய காலத்தில் இந்தப் பயிற்சியைப்





பெறுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று பட்டதாரி ஆசிரியர்கள் கழகம் அரசுக்கு ஒரு கோரிக்கை அனுப்பியிருக்கிறது. அதுமட்டுமல்ல. இதனை எவ்வாறு நடத்தலாம் என்று விரிவான பாடத் திட்டங்களுக்கான குறிப்புகளையும், கல்லூரிப் பேராசிரியர்களைக் கலந்து தயாரித்து, ஒவ்வொரு பாடத்திற்கும் திட்டம் தயாரித்துக் கொடுத்திருக்கிறது. இதைக் குறித்து அரசு என்ன பரிசீலனையை மேற்கொண்டது ? அதன்மேல் எடுக்கப் பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த வினா 11-வது, 12-வது வகுப்புக்களுக்குப் பாடம் நடத்தும் ஆசிரியர்களைப் பொறுத்தது. 12-வது வகுப்பில் தேர்வு பெறுகிற மாணவன் அடுத்து போய்ச் சேருகிற இடம் கல்லூரி. அப்படி 12-வது வகுப்பில் தேர்ச்சி பெறும் மாணவனுக்கு நாம் தருகிற நற்சான்றிதழைப் பல்கலைக் கழகம் ஏற்றுக்கொள்ள வேண்டும். 11-வது 12-வது படிக்கிற மாணவர்களுக்குச் சொல்லித் தருகிற ஆசிரியர்களின் தகுதிகளை நாம் குறைக்க வேண்டுமென்றால், அதற்குப் பல்கலைக் கழகத்தின் அனுமதியைப் பெற வேண்டும். நாம் பல்கலைக் கழகம் சொல்லுகிற முறையில்தான் தகுதியை நிர்ணயிக்க வேண்டும். இந்த அடிப்படையில்தான் நாம் ஏற்கெனவே மேல் நிலைப் பள்ளிகளில் இந்த வகுப்புகளைக் கொண்டு வந்தோம். அப்போதே, இவ்வகுப்புகளில் முதுகலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்களை வைத்துத்தான் கல்வி அளிப்போம் என்று சொன்னோம். ஆனால் இடைக்காலத்தில் ஏற்பட்ட சிரமங்கள் காரணமாக, அனுபவம் பெற்ற பி.எஸ்சி. பி.டி. மற்றும் பி.ஏ., பி.டி. போன்ற ஆசிரியர்களையும் உட்படுத்தப் பட்ட ஆசிரியர்களாகப் பயன்படுத்துகிறோம்; ஆனால் அவர்கள் அனைவரும் அங்கேயே தொடர்ந்து பணியாற்றிட விரும்பினால், அவர்கள் முதுகலைப் பட்டம் பெற வேண்டும் என்று சொல்லுகிறோம். இப்போது முதுகலைப் பட்டம் பெறுவதற்குப் பதிலாக பி.ஏ., பி.எஸ்சி படிப்பதற்கு மேல் ஓராண்டுக் கால கல்விப் பயிற்சி தர வேண்டுமென்று சொல்லி அதற்கான திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்றுதான் ஆசிரியர்கள் சார்பில் அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்போது நமக்கிருக்கிற பிரச்சினை, மாணவர்களுக்குச் சொல்லித் தரும் ஆசிரியர்களின் கல்வித் தகுதியைப் பொறுத்தவரையில், பல்கலைக் கழகம் எதிர்பார்க்கிற அளவுக்கு வைப்பதா, அல்லது அதை விடக் குறைந்த தகுதியை அவர்களுக்கு நிர்ணயிப்பதா என்பதுதான். நம்மைப் பொறுத்தவரையில், தற்போது எம்.ஏ., எம்.எஸ்சி.ல் இரண்டு விதமான நிலைமை மேற்கொண்டிருக்கிறோம். இரண்டாண்டுகளுக்கு முன்னால் இருந்தது ஒன்று. இரண்டாண்டுகளுக்கு முன்னால் இருந்ததைவிட இப்போது எம்.ஏ., எம்.எஸ்சி படிப்பிற்கு ஓராண்டு குறைவாக இருக்கிறது. அதைத்தான் படிக்கச் சொல்கிறோம்.

அதிலும் ஓராண்டைக் குறைப்பது என்றால், கல்வியறிவைப் பொறுத்த வரையில், முழுமையும் சரியான அணுகுமுறையைக் கையாளாத குற்றத்திற்கு நாம் ஆளாக வேண்டிவரும். எனவேதான் நாம் ஆசிரியர்கள் முதுகலைப் பட்டத்தில் முழுத் தகுதி பெற வேண்டும் என்று வற்புறுத்துகிறோம். உட்படுத்தப்பட்ட ஆசிரியர்கட்கு என்று இந்தச் சலுகையைத் தருகிறபோது, இப்போது அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கும் மற்ற உட்படுத்தப்படாத ஆசிரியர்களுக்கும் இந்தத் தன்மையை அளிக்க வேண்டிய நிலைமை உருவாகும் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களின் கல்வி போதனை இப்போது சரியாகவும், சிறப்பாகவும் இருக்கிறது என்று பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார். அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்கள் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். இரண்டாவது, 10 ஆண்டுகளுக்கு முன்பு 10 மாத கால பயிற்சி—கல்விப் பயிற்சி—ஆசிரியர் பயிற்சி அல்ல—சென்னைப் பல்கலைக் கழகத்தால் கொடுக்கப்பட்டது. அந்தப் பத்து மாதக் கல்விச் சான்றிதழை எம்.ஏ., எம்.எஸ்ஸிக்கு இணையாக நமது அரசு அங்கீகரித்துள்ளது. மேல் நிலைப் பள்ளிகளுக்கான பணி விதிகளில் அது அங்கீகாரம் செய்யப்பட்டிருக்கிறது. அது ஆசிரியர் பயிற்சி அல்ல, கல்வித் தகுதிக்கான பயிற்சி என்பதை மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆனால் உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், காலத்தைக் குறைக்க வேண்டும் என்றுதான் கேட்கிறார்கள். இரண்டாண்டு காலப் பாடத் திட்டத்தை ஓராண்டிலேயே கற்றுக்கொள்ள முன்வருகிறார்கள். தகுதியையும், தரத்தையும் குறைக்க வேண்டும் என்பது அவர்களின் எண்ணம் அல்ல. அப்படி அவர்கள் நினைக்கவும் இல்லை. இரண்டாண்டுக் கால கல்வியை ஒரே ஆண்டில் பயின்று விடுகிறோம் என்று சொல்கிறார்கள். எனவே அவர்களின் வயது, கடந்த கால ஆசிரியப் பணி அனுபவம் இதன் அடிப்படையில் இந்தக் கல்வியைக் குறுகிய காலத்தில் கொடுக்கலாம். அவர்களும் அதைக் குறுகிய காலத்தில் கற்றுக்கொள்ள முடியும் என்று நம்புகிறார்கள். [illegible] அமைச்சர் அவர்கள் பல்கலைக் கழகத்தோடு [illegible] அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.





(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இது மற்ற பல்கலைக் கழகங்களையும் பொறுத்திருக்கிறது. இங்கே இருக்கின்ற மாணவர்கள் வேறு பல்கலைக் கழகங்களில் போய்ச் சேர்ந்தால், அவர்கள் அந்த சர்டிபிகேட்டை ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த அடிப்படையிலே பல்கலைக் கழகத்தோடு அரசு பேச்சுவார்த்தை நடத்தும்.

செல்வி ஆ. லீலாவதி: மாலை நேரக் கல்லூரிகள் இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. மாலை நேரக் கல்லூரிகளில் ஆசிரியர்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? மீண்டும் ஆசிரியர்களுக்கு மாலை நேரக் கல்லூரிகளில் வாய்ப்புகளைத் தரும் செய்றகுறிப்பு அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆசிரியர்கள் வந்து, அரசு மாலை நேரக் கல்லூரிகளை நடத்தவில்லை என்பது போன்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். அப்படிப்பட்ட நிலைமை இருந்தால், அதை குறித்து அரசு விசாரிக்கும்.

திரு. பா. ரா. தாமஸ்: 1980, 1981 ஆகிய இரண்டு ஆண்டுகளில் நம் முடைய கல்விக் கூடங்களில் மேல் நிலையில் படித்த மாணவர்கள் வேளாண்மைத் துறைத் தேர்வுகள், மருத்துவத் துறைத் தேர்வுகள், பொறியியல் துறைத் தேர்வுகள் ஆகியவற்றில் வெற்றி பெற்று இப்போது பல்கலைக் கழகங்களிலும் படித்து வருகிறார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். 1983 ஆம் ஆண்டுக்குள்ளாக தகுதி பெறாவிட்டால், அவர்களை இறக்கிவிடுவோம், தள்ளிவிடுவோம் என்பது நல்ல முறையல்ல. அதை மாற்றி அவர்கள் பயிற்சியை முடித்துக்கொண்டு தொடர்ந்து பணியாற்றும் வாய்ப்பை உருவாக்க அவர்களுக்கு முதுகலைப் பட்டம் வழங்கும் சலுகை வழங்க அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவர்கள் வேலையில் இருக்கும் போது, முதுகலைப் பட்டம் பெறுகிறார்கள். இப்போது புதிதாக வந்தவர்கள், புதிதாக அனுபவம் பெற்றவர்கள் சிறந்த முறையிலே பணியாற்றுகிறார்கள். இப்போதிருக்கின்ற கல்வித் திட்டத்தின்படி படித்தவர்களாகையால், புதிதாக வந்தவர்கள் சிறந்த முறையிலே பணியாற்றுகிறார்கள். இப்படி இரண்டு சாராருக்குமிடையே அரசு முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. எனவே மூன்றாண்டுக் காலம் தந்தோம். அவர்களும் அரசினுடைய முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தந்தால், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

[1982 பிப்ரவரி 18

திரு. க. இராமமூர்த்தி : மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் கணிதத்திலே பி.ஏ. பட்டம் பெற்றிருந்து, பிறகு தனியாக எம்.ஏ. (எக்கனாமிக்ஸ்) (சரித்திரம்) படித்து வெற்றி பெற்றாலும், அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கும்போதும், பாடம் சொல்லிக்கொடுக்கும் போதும், அவர்களுடைய எம்.ஏ. தகுதியைக் கருத்தில் கொள்ளாமல் பி.ஏ. படிப்பில் என்ன பாடத்தில் தகுதி பெற்றிருக்கிறார்களோ அதைத்தான் கருத்திலே கொள்ளப்படுகிறது என்பது உண்மையா? அப்படிச் செய்வதன் மூலமாக குறிப்பிட்ட பாடத்தில் எம்.ஏ. தகுதி பெற்ற பிறகும் அவர்களின் தகுதியைக் குறைவாக மதிப்பிடுகின்ற நிலை ஏற்படாதா? அதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்டவர்களுக்கு முன்னுரிமை தந்திருக்கிறோம். இதிலே இன்னுமொரு அடிப்படை இருக்கிறது. பி.ஏ.-வில் என்ன பாடம் எடுத்தார்களோ அந்தப் பாடத்தின் அடிப்படையிலேதான் பி.டி. வாங்கியிருப்பார்கள். பி.ஏ. வில் சரித்திரப் பாடம் எடுத்திருந்தால், அதே பாடத்தில்தான் ஆசிரியர் பயிற்சியும் பெற்றிருப்பார்கள். முதுகலைப் பட்டம் பெறும்போது, அவர்கள் அந்தப் பாடத்திலே ஆசிரியர் பயிற்சியைப் பெற்றிருக்க மாட்டார்கள். பி.ஏ. விலே ஒரு பாடம், எம்.ஏ. விலே ஒரு பாடம் என்றால், எந்தப் பாடத்தைச் சொல்லித் தரப் போகிறார்களோ அந்தப் பாடத்திலே ஆசிரியர் பயிற்சி பெற்றிருக்க முடியாது. இதையும் கவனித்து அவர்களுக்கு ஒரு முன்னுரிமையைத் தருகிறோம்.

திரு. க. இராமமூர்த்தி : அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற முறை, எம்.ஏ. படித்தவர்கள் மீண்டும் (பி.எ.) பி.ஏ. வில் படித்து தேர்ச்சி பெற வேண்டுமென்ற நிலையை உண்டாக்குகிறது. அப்படி ஏற்படுத்துவதைவிட எம்.ஏ. படித்தவர்களுக்கு, பி.டி. பயிற்சி மீண்டும் பெற 3 மாத காலம், 6 மாத காலம் விடுப்பு கொடுத்து அந்தப் பயிற்சியைக் கொடுக்க அமைச்சர் அவர்கள் வழி செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்தக் கருத்தை அரசு பல்கலைக் கழகத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய யோசனை சொல்லும்.

பள்ளி வசதிக் கட்டண நிதி.

* 93 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் & (செல்வி ஆ. லீலாவதி):—மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) உயர்நிலைப்பள்ளிகள் வசதிக் கட்டண நிதியை (Amenity fee Fund) வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனவா?



1982 பிப்ரவரி 18]

(இ) இந்நிதி மேலதிகாரிகளின் அனுமதி பெற்றுத்தான் பயன்படுத்தப்படவேண்டும் என்ற விதி முறை இருப்பது உண்மையா?

(உ) ஆம் எனில், பல பள்ளிகளில் இந்த நிதி தேங்கிக் கிடப்பதால், இந்த நிதியினை எளிதில் பயன்படுத்தும் வகையில் ஆணை பிறப்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) மற்றும் (உ) அரசு மற்றும் நகராட்சி, மகநகராட்சிகளின் கீழ் இயங்கும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள வசதிக் கட்டண நிதியிலிருந்து பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட செலவுகளை மேற்கொள்வதற்கு முறையே மாவட்டக் கல்வி அலுவலர் மகளிர் பள்ளி ஆய்வாளர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் ஆகியவர்களுக்கு அதிக அதிகாரம் வழங்கி 20—12—1980 நாளிட்ட கல்வித் துறை அரசாணை நிலை எண் 2717-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. குறிப்பிட்ட அளவுக்கு மேல் வசதிக் கட்டண நிதியிலிருந்து செலவுகள் மேற்கொள்ளுவதற்கு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்த வசதிக் கட்டண நிதி மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. ஆனால் ஏற்கெனவே பல பள்ளிகளில் அடிப்படை வசதிகள் கூட இல்லை என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. ஒரு புறம் வசதிக் கட்டண நிதி அதிகமாகச் சேர்ந்திருக்கிறது, மறுபுறம் வசதிகள் இல்லாத நிலை இருக்கிறது. வசதிக் கட்டண நிதியிலிருந்து அந்தத் தொகையை எடுத்து வசதிகளை ஏற்படுத்தித் தர ஒவ்வொரு முறையும் பள்ளிக் கல்வி இயக்குநரை அணுக வேண்டியிருப்பதால், காரியங்கள் செய்வதில் தாமதம் ஏற்படுகின்றது. ஆகவே வசதிகளை விரைவாகச் செய்வதற்காக தலைமையாசிரியர்களுக்கு அதிக அதிகாரம் கொடுத்து, வசதிக் கட்டண நிதியிலிருந்து அவ்வப்போது தொகையை எடுத்து வசதிகளை நிறைவேற்றித் தர அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பணத்தைக் கையாளும் அதிகாரத்தை தலைமையாசிரியர்களிடத்தில் தந்தால், பல்வேறு வகையான புகார்களுக்கு இடமளிக்கும். அதற்குப் பாதுகாப்பு இருக்க வேண்டுமென்ற காரணத்தால்தான், அனுமதி பெற்று காரியங்களைச் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறோம். இதிலே சிரமங்கள் இருந்தாலும், புகார்களைத் தடுக்க இது ஒரு பாதுகாப்பாக இருக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைமை ஆசிரியர்கள் ஒழுங்கான முறையில் செய்ய வேண்டும் என்பது நல்ல கருத்து. ஒவ்வொரு ஊரிலும் பெற்றோர்-ஆசிரியர் சங்கங்கள் இருக்கின்றன, அதைப் போலவே பள்ளிக்

[illegible]க்குழு என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது. பெற்றோர்-ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகள் பள்ளிக் கட்டிடக் குழுப் பிரதிநிதிகள் (தலைமையாசிரியர்கள்) அதிகாரிகள், மற்றும் பிரதிநிதிகள் ஆகியவர்கள் சேர்ந்த ஒரு சிறு குழுவை ஆங்காங்கே அமைத்து அந்தக் குழுவின் ஒப்புதல் பெற்ற பின் அந்தத் தொகையைப் பயன்படுத்தலாம் என்ற விதிமுறையை அரசு ஏற்படுத்தினால், காரியங்களை விரைவாகச் செய்வதற்கும், தவறு இல்லாமல் செய்வதற்கும் வாய்ப்பாக இருக்கும். அது குறித்து அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வீர்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பெற்றோர்-ஆசிரியர் கழகம் என்பது பள்ளியின் மேம்பாட்டிற்காகப் பாடுபடுகின்ற அமைப்பாகும். அதிலே பெற்றோர், ஆசிரியர் ஆகிய இரண்டு சாராரும் இருக்கிறார்கள். அவர்களுக்கு பள்ளியை நடத்துகிற அதிகாரத்தை இப்போதுள்ள சூழ்நிலையில் தருவதற்கில்லை. வேண்டுமானால் அவர்கள் பரிந்துரை அளிக்கலாம், அதை அதிகாரிகள் செய்துவிட்டுப் போகலாம். அதிலே தாமதம் ஏற்பட்டால், அரசின் கவனத்திற்குக் கொண்டுவரும்போது, அதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மேற்படிப்பிற்காக அனுப்பப்படுகின்ற அரசு உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுறுதிப் படி**

* 95 வினா.—**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்படிப்பிற்காக அனுப்பப்படுகின்ற அரசு உதவி பெறும் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு, மேற்படிப்பிற்காக அனுப்பப்படுகின்ற அந்த அந்த இடத்திற்கு உரிய வீட்டு வாடகைப் படியும், நகர ஈட்டுறுதிப் படியும் மறுக்கப்படுகின்றன என்பது உண்மையா?

(இ) மேற்சொன்ன திட்டத்தின் கீழ் அத்தகைய மேற்படிப்பிற்கு அனுப்பப்படுகின்ற அரசுக் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர்கள், மேற்படிப்பிற்காக அனுப்பப்படுகின்ற அந்த அந்த இடத்திற்குரிய வீட்டு வாடகைப் படியையும், நகர ஈட்டுறுதிப்படியையும் பெற அனுமதிக்கப்படுகின்றனர் என்பதும் உண்மையா?

(உ) ஆம் எனில், இவ்வேறுபாட்டிற்கு காரணம் யாது?

(எ) இது குறித்து அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(ஐ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) அரசு தனது அரசாணை 766, கல்வி நாள் 25—4—1980-ல் ஆணை பிறப்பிப்பதற்கு முன் மறுக்கப் பட்டது.

(இ) அரசுக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு குறிப்பாணை எண் 11995 எப்/72, நாள் 8—11—1978-ன்படி, வீட்டு வாடகைப்படியும் மற்றும் நகர ஈட்டுப்படி அனுமதிக்கப்பட்டுள்ளன.

(உ) 25—4—1980-க்குப் பிறகு வேற்றுமை கிடையாது.

(எ) அரசு உதவிபெறும் கல்லூரி செயலாளர்களிடமிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும் அரசு தனது அரசாணை 766, கல்வி நாள் 25—4—1980-ல் ஆணை பிறப்பிப்பதற்கு முன் முறையீடுகள் கிடைக்கப் பெற்றன.

(ஐ) முறையீடுகளைப் பரிசீலித்துவிட்டு வாடகைப்படியும், நகர ஈட்டுப் படியும் கொடுக்க அரசுக்கு கல்லூரி கல்வி இயக்குநர் பரிந்துரை செய்ததன் பேரில் அவைகளைக் கொடுக்கலாம் என்று அரசு தனது அரசு ஆணை 766, கல்வி, நாள் 25—4—1980-ல் உத்திரவிட்டிருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கொடுத்ததைப் போலவே நகர ஈட்டுப்படி, வாடகைப் படியை தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் வழங்க காலம் தாழ்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால் 'ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்' கொடுத்து வழங்கவில்லை. ஆகவே இதற்கு முந்தைய காலத்திற்கும் சேர்த்து வழங்க வகை செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதை அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதை அரசு பரிசீலிக்கும்.

*Employment Opportunities for dependants of Teachers, who died in harness.*

* 96 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the number of Government School Teachers, who died in harness during the academic year 1979-80, districtwise;

(b) the number of applications made by their wives and children requesting employment in Government service; and

(c) the number of persons among them, who were given employment?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ), (இ) மற்றும் (உ) விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 443 ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** விவர அறிக்கையில் 1979-80 ஆம் கல்வியாண்டில் பணியில் இருக்கும்போதே இறந்து போன ஆசிரியர்களுடைய எண்ணிக்கை மொத்தம் 106 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் 27 பேர்களுடைய குடும்பத்தினருக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள், 79 பேருடைய குடும்பத்தினருக்கு வேலை கொடுக்கவில்லை. அதற்குரிய காரணம் என்ன ? அவ்வாறு வேலை கேட்டு விண்ணப்பம் செய்தவர்களின் விண்ணப்பங்கள் முறையாகக் கவனிக்கப்படாமல் இருக்கின்றன என்ற புகார் இருக்கிறது.

குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவிலில் இரண்டு பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது, மற்றவர்களுக்குக் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். தாளகுடி அரசு உயர் நிலைப் பள்ளியில் இறந்த தமிழாசிரியர் பெயர் இராமசாமி என்பது. அவருடைய மனைவி எஸ்.எஸ்.எல்.சி. வரையில் படித்திருக்கிறார். அவர் தன்னுடைய விண்ணப்பத்தைக் கொடுத்திருக்கிறார். நான் கூட கல்வி அதிகாரியிடம் சொல்லியிருக்கிறேன். ஆனால் இதுவரையிலும் அவருக்கு வேலை கொடுக்கப் படவில்லை. ஆகவே பணியில் இருக்கும்போது ஆசிரியர்கள் இறந்துபோனால், அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு அவர்களுடைய கல்வித் தகுதிக்கேற்ப உடனடியாக வேலை கொடுக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1979-80 ஆம் கல்வியாண்டில் பணியிலிருக்கும்போது இறந்து போன அரசுப் பள்ளி ஆசிரியர்கள் மொத்த எண்ணிக்கை 106. அதிலே அவர்களுடைய வாரிசுதாரர்களாக இருந்து வேலை வேண்டுமென்று கோரி விண்ணப்பம் செய்தவர்களின் எண்ணிக்கை 27. மீதம் உள்ளவர்களில் விண்ணப்பம் செய்தவர்களில் 8 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது. இதிலே மீதம் உள்ள பேர்களில் 3 நபர்களுக்கு அதிக வயதாகிவிட்டதால், அவர்களுக்கு வயது தவிர்ப்பு கோரி அரசுக்குப் பரிசீலனைக்கு அனுப்பியிருக்கிறார்கள். இவர்களில், ஒருவர் வேறு துறையில் பணிபுரிகின்றவர். கல்வித் துறையிலே அல்ல. பணி வாய்ப்புப் பெறக் கூடிய வாரிசுதாரர்கள் விண்ணப்பம் போட்டவர்கள் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. நிலைமைகள் அப்படித்தான் இருக்கின்றன. மற்ற இருவர் ஒரு நபருக்கானவர்கள். மீதம் உள்ள 11 பேர்கள் சம்பந்தமாக முழுமையான விபரங்கள் வேண்டுமென்று பள்ளிக் கல்வி இயக்குநர் கடிதத் தொடர்பு கொண்டுள்ளார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, 1—6—1981 முதல் இந்த ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களிலே பணியாற்றிக்





கொண்டிருக்கும்போது இறந்துவிட்டால், அவர்களுடைய குழந்தைகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே ஏதேனும் வேலை வாய்ப்பு தந்து வந்தார்கள். இப்போது அவர்கள் எங்களிடம் நிர்வாகம் இல்லை என்று சொல்கிறார்கள். பள்ளிக் கல்வி அலுவலகத்தில் அதற்கு ஆணையில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே இறந்துவிட்ட அந்த ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு வேலை வாய்ப்பளிக்க அரசு தெளிவான ஆணை பிறப்பிக்குமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அங்கத்தினர் அவர்கள் கருத்து பரிசீலிக்கப்படும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் விண்ணப்பம் செய்த 27 பேர்களில் 8 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். மற்றவர்களுடைய நிலைமைகளையும் விளக்கிச் சொன்னார்கள். நான் சொன்ன கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோயில் கல்வி மாவட்டம் தாளவாடி அரசு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர், தமிழாசிரியர் இறந்துவிட்டார். திரு. இராமசாமி என்பவர். அவருடைய மனைவி எஸ்.எஸ்.எல்.சி. சர்டிபிகேட்டுடன் விண்ணப்பித்திருக்கிறார்கள். அவருக்கு வேலை கிடைக்கவில்லை. அதைப்பற்றித் தனியாகப் பரிசீலிக்க வேண்டும். இதில் காலந்தாழ்த்தியவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப் படுமா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** இதுபோன்ற பிரச்சினைகள் பல்வேறு இலாக்காக்களில் பணியாற்றுகின்றவர்களிடமிருந்து வருகின்றன. ஒருவருடைய மகன் அல்லது மகள் சம்பாதித்தாலும், அந்தக் குடும்பம் காப்பாற்றப்படும் என்ற நிலையில் இருந்தால், அது மனைவியாக இருந்தாலும், வயது கூட இருந்தாலும், விதிவிலக்குக் கொடுத்துத் தரப்படுகிறது. அப்படிப் பட்ட நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதை நாங்கள் அரசினுடைய கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். எனவே நிச்சயமாகப் பரிசீலித்து ஆவன செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## *District Munsiff's Court at Panruti.*

* 97. Q.—THIRU K. RAMAMOORTHI (on behalf of THIRU A. R. DAMODARAN): Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state—

(a) whether there is any proposal with the Government, to set up a District Munsiff's Court at Panruti, South Arcot

District with its jurisdiction over Nellikuppam, Marungur, Panruti and Kadampuliyur firkas ;

(b) if so, whether any representation has been received from the Bar Association, Cuddalore, regarding the retention of jurisdiction of Nellikuppam Firka in Cuddalore Munisfi's Court; and

(c) if so, the decision taken thereon by the Government ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) பண்ருட்டியில் மாவட்ட முன்சிப் நீதிமன்றம் அமைத்தால் நெல்லிக்குப்பம் பிர்க்காவை கடலூர் மாவட்ட முன்சிப் நீதிமன்றத்தில் தக்கவைக்க இயலாது.

## தஞ்சாவூர் கழிவு நீர்த்திட்டம்.

* 98 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தஞ்சாவூர் நகரில் சீரான கழிவு நீர்த்திட்டம் இல்லாததால், சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டு மக்கள் அல்லல்படுவதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அந்நகரில் கழிவு நீர்த்திட்டம் நிறைவேற்றப்பட, அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) & (இ) தஞ்சாவூர் நகராட்சி கழிவு நீரை அகற்ற தற்பொழுது செய்து வரும் ஏற்பாடுகளினால், தஞ்சாவூர் நகரில் சுகாதாரச் சீர்கேடு இருப்பதாகத் தெரியவில்லை. குறைந்த செலவு துப்புரவு சுகாதாரத் திட்டம் விரைவில் அமுல் படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : குறைந்த செலவு துப்புரவு சுகாதாரத் திட்டம் தற்காலிகமாகக் கொண்டுவரப்படப்போவதாக அமைச்சர் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் முதலீடு எவ்வளவு ? அது எப்போது தொடங்கப்படும் ? அது எப்போது முடிவுறும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : உலக வங்கியின் கடனுதவித் திட்டத்தின்கீழ் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் 15 நகரங்களில் இந்தத் துப்புரவுத் திட்டத்தைச் செயல்படுத்தப்போகிறது. இதில் தஞ்சாவூர்



சேர்க்கப்பட்டிருக்கிறது. இதுமாதிரி, ஐக்கிய நாடுகள் அமைப்பில் யூ.என்.டீ.பி.-யில் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் குறைந்த செலவு சுகாதாரத் திட்டத்திற்கு அரசின் ஒப்புதல் பெற்ற வுடன் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்படும்.

## குடியிருப்புகளில் முன்னுரிமை.

* 99 வினா.—செல்வி ஆ. லீலாவதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சொந்தமாக மனைகள் (Plots) வைத்திருப்போரிடமிருந்து வீட்டுவசதி வாரியத்தினர் மனைகளை ஆர்ஜிதம் செய்யும்பொழுது, அங்கு கட்டப்படுகின்ற குடியிருப்புகளில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் செயற் குறிப்பு ஏதும் உள்ளதா ?

(இ) இல்லை எனில், அதனை அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் . (அ) & (இ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டம், 1961, பிரிவு 43-ன்படி, வீடு கட்டும் திட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, வீட்டுவசதி வாரியம் மறுவாழ்க்கை வசதித் திட்டங்களை வழங்குகிறது.

செல்வி ஆ. லீலாவதி : வீட்டு மனைகள் வைத்திருப்பவர்களிடம் ஆர்ஜிதம் செய்திருந்தால், எட்டு மனைகள் அவர்களுக்குச் சொந்தமாக இருந்தால், அவைகள் முழுவதையும் ஆர்ஜிதம் செய்துகொள்கிறார்கள். அப்படி இல்லாமல், அவர்கள் கேட்கின்ற அளவுக்குக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் கேட்கும் அளவுக்குக் கொடுப்பதில்லை. அவர்கள் வீட்டு வசதி வாரியத்திற்கு விண்ணப்பித்தால், மாற்றாக மேற்படுத்தப்பட்ட வீடு, அல்லது வேறு இடம் இருந்தால், பல அடுக்கு மாடிகளில் இருந்தாலும் அவர் களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. அவர்கள் தங்களுடைய தேவை என்ன, எவ்வளவு வேண்டும் என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். எக்ஸ்-ஓனர்ஸ் என்ற கேட்டகரியில் அவர்களுக்குக் கொடுக்கலாம். ஆனால் அவர்கள் விண்ணப்பத்தில் 10 ஏக்கர் எடுத்துக்கொண்டிருந்தால் அதில் 5 ஏக்கர் எங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டால், அது நியாயமாக இருக்காது. எனவே நியாயத்தின் அடிப்படையில் கொடுக்கப்படும்.

[1982 பிப்ரவரி 18

**திரு. பா. ரா. தாமஸ் :** பொதுவாகவே வீட்டு வசதி வாரியத்தினர் மனைகளை ஆர்ஜிதம் செய்கிறார்கள். இப்போது குறிப்பிட்ட இடத்தில் வீட்டு வசதி வாரியத்தினர், ஹவுசிங் போர்டார் அதிகமான இடங்களை எடுத்திருக் கிறார்கள். அங்கே 17 குடும்பங்கள் வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவைகள் ஓரமாகவே இருக்கின்றன. ஏற்கெனவே இன்ஸ்பெக்டர், டவுன் பிளானிங் அனுமதி கொடுத்து, திண்டுக்கல் முனிசிபல் சபையும் அனுமதி கொடுத்து, ஏராளமான முதலீட்டைப் போட்டு கட்டிவிட்டார்கள். அவர்கள் விதிவிலக்குக் கேட்கிறார்கள். அவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு விதிவிலக்குக் கொடுத்து, அந்தப் பகுதியை ஒதுக்கி, அவர்கள் தொடர்ந்து அந்தப் பகுதியிலே வாழ ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. இருந்தாலும் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தகவல் கேட்டிருக்கின்றார்கள். அதிலே மூன்று கண்டிஷன்கள் போட்டிருக்கிறார்கள். அதற்கு ஜீ.ஓ. வந்திருக்கிறது. அதில் ஒன்று வீடு ஓரத்தில் இருக்கவேண்டும். இரண்டாவது 4 (1)-ல் நோட்டிபிகேஷன் தருவதற்கு முன் பிளானிங் பர்மிஷன் வாங்கியிருக்க வேண்டும். இந்த இரண்டு கண்டிஷன்கள் இருந்தாலும், விதிவிலக்கு கொடுப்பதைப்பற்றிப் பரிசீலனை செய்யலாம். இந்த இரண்டு கண்டிஷன்கள் இருக்கின்ற காரணத்தினாலேயே விதிவிலக்கு கேட்டு விடுகிறார்கள். இதில் எனக்கு ஏற்படுகின்ற தொல்லையைக் கேட்டால், பரிதாபப்படுவார்கள். ஒரு நாளைக்கு 20, 30 பேர்கள் வந்து 'எக்ஸ்குலூஷன்' வேண்டும் என்று கேட்கிறார்கள். இன்றைக்கு ஒரு 10 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்கிறோம் என்றால், பிற்காலத்தில் அதனுடைய விலையும் "அப்ரிஷியேட்" ஆகிவிடுகிறது. ஒரு கிரவுண்டு விலை சென்னையில் அண்ணா சாலையில் ரூ. 7 லட்சம். அண்ணா நகரில் ரூ. 1 லட்சம், ரூ. 1½ லட்சம், திருவான்மியூர் பகுதியில் ரூ. 80 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபாய் வரையில் விற்கிறது. இதிலே அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் "நாங்கள் வாரியத்தின் 4 (1) நோடிபிகேஷன் வருவதற்கு முன்னாலேயே பிளானிங் பர்மிஷன் வாங்கி விட்டோம், எனவே விதிவிலக்கு கொடுக்க வேண்டும்" என்று கேட்கிறார்கள். அவர்கள் என்ன நோக்கத்திற்காக விலக்குக் கேட்கிறார்கள் ? வியாபார நோக்கத்தில் கேட்கின்றார்கள். அதன் மூலம் லட்சம் லட்சமாகச் சம்பாதிக் கிறார்கள். கூடுமானவரையில் 99 சத விகிதம் நாங்கள் 'எக்ஸ்குலூஷன்' கொடுப்பதில்லை என்பதை மிகத் தெளிவாக இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன். Because there is a big trade in this ; ரியல் எஸ்டேட் ஓனர்கள் இப்படிப்பட்ட வியாபாரத்தில் இறங்கியிருப்பதால் கொடுப்பதில்லை. திண்டுக்கல்லைப் பொறுத்த வரையிலே, மிகுந்த தொல்லை இருக்கிறது. என் வீட்டுப் பக்கத்திலே 'டிக்கானா', கேம்ப் போட்டுக்கொண்டு



1982 பிப்ரவரி 18]

தொல்லை கொடுக்கிறார்கள். நான் முடியாது என்று சொல்லிவிட்டேன் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு அங்கே இவ்வளவு பிரச்சினை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** வீடே இல்லாதவர்களிடமிருந்து மனைகளை நம்முடைய அரசு ஆர்ஜிதம் செய்திருக்கிறதா ? அப்படிப்பட்டவரிடம் வீட்டு வசதி வாரியம் ஆர்ஜிதம் செய்திருந்தால், வீடு கொடுப்பதில் அவர்கள் கேட்கும்போது அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு அங்கத்தினர் செல்வி லீமாரோஸ் அவர்கள் கூட கேட்டார்கள். நான் பதிலில் சொல்லி யிருக்கிறேன். எக்ஸ்-ஓனர்ஸ் என்ற அளவில் அவர்களுக்கு நிலம் ஒதுக்கப்படும், வீடு கேட்டாலும் ஒதுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பக்கத்திலே இருக்கின்ற முன்னாள் வீட்டு வசதி வாரியத் தலைவர் அவர்களையும் கேட்கலாம். அவரும் தலையாட்டுகின்றார்கள்.

### ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி.

* 100 **வினா.—திரு. சி. ரா. லெட்சுமிசாந்தன் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆதிதிராவிடர் நலத் துறை மேல் நிலைப் பள்ளிகளிலிருந்து, 1978-79 முதல் 1980-81 ஆண்டு வரையில், மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்கள் யாரும் பணியிடைப் பயிற்சி (In-service Training) வகுப்புகளுக்கு அனுப்பப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) மற்றும் (இ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் அதிகாரத்திற்குட்பட்டு ஏழு மேல் நிலைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. பணியிடைப் பயிற்சி வகுப்பு களுக்கு ஐந்து மேல் நிலைப் பள்ளிகளில் இருந்து ஆசிரியர்களும் மற்றும் தலைமை ஆசிரியரும் அனுப்பப்பட்டுள்ளனர். மற்ற இரு மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்கள் பெயர்கள் முதன்மைக் கல்வி அலுவலருக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்படும் ஆசிரியர் பயிற்சிக்கு அனுப்பப் படுவார்.

[1982 பிப்ரவரி 18

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** ஆதி திராவிட நலத் துறையிலே பணியாற்றும் ஆசிரியர்களுடைய தொல்லைகள் குறித்து நான் விரிவாக அமைச்சரவர்களிடம் சொன்னேன். அந்தத் தொல்லைகளில் ஒன்றுதான் இது. கல்வித் துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் வாய்ப்புகள் அனைத்தும் ஆதி திராவிட நலத் துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டும். ஆனால் அது வழங்கப்படாமல் பல்வேறு காரணங்களால் தவிர்க்கப்பட்டுள்ளது. இனிமேலாவது கல்வித் துறையிலே ஆசிரியர்களுக்கு என்னென்ன வாய்ப்புகள் வழங்கப்படுகின்றனவோ, அந்த வாய்ப்புகள் எந்தவிதத் தடையும் இல்லாமல் ஆதி திராவிட நலத் துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்க அமைச்சரவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் என்னிடத்திலே நேரடியாகச் சொல்லியிருப்பதன் அடிப்படையில் தற்போது அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவது மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு நன்றாகத் தெரியுமென்று கருதுகிறேன். அரசைப் பொறுத்தவரையில், அதை மிகத் தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அண்மையிலே ஆதி திராவிட நலப் பள்ளிகளை மேற்பார்வை செய்வதற்கு ஒரு சோதனைத் திட்டமாக தென் ஆற்காடு மாவட்டத்திற்கு என்று மூன்று பள்ளித் துணை ஆய்வாளர்களின் பதவிகள் ஒதுக்கப்பட்டன. அதை ஆதி திராவிட நலத் துறைப் பள்ளிகளில் பணியாற்றும் தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு நிரப்ப வேண்டுமென்ற கோரிக்கை விடுத்தோம். அதைக் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டாலும், செயல்படுத்தாமல், வேறு துறைக்கு அது ஒதுக்கப்பட்டிருக்கிறதென்பதைத் தெரிவித்து, அது குறித்து அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. அறிவிப்புகள்.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஆளுநர் அவர்கள் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள் :—

1. தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு.
2. 1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு.

### (2) பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :—

1. தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1981).
2. தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1982).

சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :—

1. 1982 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1982).
2. 1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1982).
3. தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1982).

## 8. கவன ஈர்ப்பு.

**(1) புதுக்கோட்டை மாவட்டம், வெண்ணாவல்குடி அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை நகர், சந்தைப்பேட்டை மகளிர் பள்ளிக் கட்டிடங்கள் இடிந்து விழுந்துவிடக்கூடும் என பொறியாளர் எச்சரிக்கைக் குறிப்பு தந்தும், அந்தக் கட்டிடங்களிலேயே பள்ளிகள் நடைபெறுவது குறித்து.**

* **திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்—

"புதுக்கோட்டை மாவட்டம், வெண்ணாவல்குடி அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் புதுக்கோட்டை நகர், சந்தைப்பேட்டை மகளிர் பள்ளி கட்டிடங்கள் இடிந்து விழுந்து விடக்கூடும் என பொறியாளர் எச்சரிக்கைக் குறிப்பு தந்தும், அக்கட்டிடங்களிலேயே பள்ளிகள் நடைபெறுவதால் பெற்றோர், ஆசிரியர், மாணவர்களிடையே தோன்றியுள்ள அச்ச உணர்வு குறித்து."

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஒரு விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், வெண்ணாவல்குடி அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்தில் வகுப்புகளை நடத்தக்கூடாதென்று பொறியாளர்கள் அறிவித்திருக்கிறார்கள். பழுதுபட்ட அந்தக் கட்டிடத்திலே வகுப்புகள் நடத்தப்படவில்லை என்றும், அந்தப் பகுதியைப் பதிவேடுகள் வைக்கப் பயன்படுத்துகிறார்கள் என்றும் விவர அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. நான் நேரடியாக அந்தப் பள்ளிக்குச் சென்றிருந்தேன். இடப்பற்றாக்குறை காரணமாக அங்கே வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையை மாற்றுகின்ற வகையிலே வரும் கல்வி ஆண்டிலாவது அந்தப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்ட முன்னுரிமை தந்து, அங்கே கட்டிடத்தைக் கட்டித் தர அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவரவர்களே, இப்போது நான்கு ஏக்கர் நிலம் சொந்தமாக்கப்பட்டிருக்கிறது. இடம் கிடைத்திருக்கிறது. அந்த இடத்திலே கட்டிடம் கட்ட நிதி, நபார்டு நிதி யாதாரத்தைப் பொறுத்து ஒதுக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நிதியை ஒதுக்குகின்றபோது, மற்ற பள்ளிகளையும் சேர்த்து வைத்து, அந்த அடிப்படையிலே செய்ய வேண்டியிருக்கிறது. கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே

@ 114 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய அச்ச உணர்வு தகுதியில்லாதது, சீர்கேடு அடைந்த கட்டிடத்திலே வகுப்பு நடத்துகிறார்கள் என்பதுதான். இந்தப் பள்ளி மாத்திரமல்ல, வேறு எந்தப் பள்ளியாக இருந்தாலும் பொதுப் பணித் துறை ஒரு கட்டிடத்தில் வகுப்புகள் நடத்தக்கூடாதென்று சொன்னால் எந்தக் காரணத்திற்காகவும் அந்தக் கட்டிடத்திலே வகுப்புகள் நடத்தக்கூடாதென்ற உத்தரவை அரசு பிறப்பிக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அமைச்சரவர்கள், பொறியாளர்கள் வகுப்பறைகளை நடத்தக்கூடாதென்று அறிவித்திருந்தால், அங்கே நடத்த அனுமதிக்க மாட்டோமென்று சொன்னதற்கு நன்றி. புதுக்கோட்டை சந்தைப்பேட்டை அரசு மகளிர் உயர் நிலைப் பள்ளிக் கட்டிடத்தின் பின்பகுதி சீர்கேடு அடைந்திருக்கிறது. மாணவிகளுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியதாக இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு பொதுப் பணித் துறை வேறு நிலத்தில் இருந்த ஒரு கட்டிடத்தில் வகுப்புகள் நடத்த அனுமதி அளித்திருந்தது. அப்படி வகுப்புகள் நடத்திக்கொண்டிருக்கும்போது, மீண்டும் அதைக் காலி செய்து, பழைய இடத்திற்கே அனுப்பிவிட்டார்கள். இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எடுத்துச் சொல்லியும், பழைய இடத்திற்கே அனுப்பிவிட்டார்கள். இடிபாடு உள்ள இடத்திற்கு மாணவர்கள் செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்படும். எனவே புது கட்டிடத்தில் வகுப்புகள் நடத்த அரசு முன்வருமா ? இது குறித்து வழக்கு நிரும்மாரை பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. எனவே இதில் அரசு அவசர நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இதிலே ஒரு வழக்கு சம்பந்தப் பட்டிருக்கிறது. நாம் எடுக்கும் நடவடிக்கை, வழக்கிலே தீர்ப்பு கூறுவதற்கு முன்னால், சிலருக்கு நன்மைகள் தரக்கூடிய நிலைமைகளை ஏற்படுத்தக் கூடாதென்பதையும் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையிலே குழந்தைகள் பாதுகாப்பு குறித்து தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும்.

**(2) திருநெல்வேலி மாவட்டம் தென்பகுதியில் தண்ணீர்த் தட்டுப்பாட்டால் பயிர்கள் நாசமாவது குறித்து.**

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :

[1982 பிப்ரவரி 18

"திருநெல்வேலி மாவட்டம் தென் பகுதியில் தண்ணீர்த் தட்டுப்பாட்டினால் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் பயிர்கள் நாசமாவது சம்பந்தமாக அவ்வட்டாரத்தில் வாழும் மக்கள் மத்தியில் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து"

* **மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின்முன் வைக்கப் பட்டிருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் தென்பகுதியில் பருவ மழை பொய்த்து விட்டது. அதன் காரணமாக 357 ஏரிகளுக்குத் தண்ணீர் கொடுக்கிற வசதி இல்லாது, 165 ஏரிகளுக்குத் தண்ணீர் வழங்கப்படுகிறது என்பது தெரிகிறது. 165 ஏரிகள் போக எஞ்சிய ஏரிகளின் பாசனத்தில் உள்ள பயிர்கள் அழிந்து விடும் நிலையில் இருக்கின்றன. ஆகவே அந்தப் பயிர்களைக் காப்பாற்ற

(முற்பகல் 10-20)

இயலாத சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையில் அரசு அந்த வேறு வகையில் பரிசீலனை செய்து அவர்களுக்கு உதவ ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா? இப்பொழுது இருக்கிற தண்ணீரைக் கொண்டு எத்தனை ஏக்கர் பயிர் செய்ய முடியும்? 22 ஆயிரம் ஏக்கர்களுக்கு மேல் பயிர் ஆக, அதற்கு வேண்டிய தண்ணீர் தேவை. ஆனால் 12 ஆயிரம் ஏக்கருக்கான் தண்ணீர் பாதுகாப்பு தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள் அப்படியானால், மற்ற 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கர்களுடைய நிலை என்ன? அது குறித்து அரசு என்ன திட்டம் போட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** விவர அறிக்கையிலேயே அது குறித்து தெளிவாக விவரம் இருக்கிறது. மணிமுத்தாறு பகுதியில் பருவமழை இந்த வருடம் பொய்த்ததால் 125 ஏரிகளுக்குத்தான் தண்ணீர் விட முடியும் என்ற நிலை ஏற்பட்டது. சென்ற முறை நான் அங்கு சென்றிருந்தபோது, இதிலுள்ள குறைகளைச் சொன்னார்கள். மணிமுத்தாறிலிருந்து முதலில் வருகின்ற கண்மாய் நிறைந்தவுடன் அடுத்த கண்மாய்க்குத் தண்ணீர் வரும். இப்படி திறந்து விட்டால், முதலில் விடுகின்ற கண்மாய் வழியாக 10 அல்லது 15 கண்மாய்களுக்குத் தண்ணீர் வரும். முதலில் உள்ள கண்மாய் நிரம்பினால் தான், அடுத்த கண்மாய்க்குத் தண்ணீர் போக முடியும். முன்னால் இருக்கின்ற கண்மாயை உபயோகிப்பவர்களுடன் பேசி அந்த

---

@ 41-ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1982 பிப்ரவரி 18] [திரு. கா. இராசா முகமது]

அடிப்படையில் அவர்கள் விட்டுக் கொடுத்தால்தான் அடுத்த கண்மாய்களுக்குத் தண்ணீர் வரும் என்ற அடிப்படையில் பேசி, அரைக் குளம் நிரம்பினால் போதும் என்று சொல்லி அதையெல்லாம் கவனத்தில் கொண்டு இப்போது தண்ணீர் விட ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆனாலும் முழுமையாக யாரையும் திருப்திப் படுத்த முடியாது. இந்த ஆண்டு மணிமுத்தாறு பகுதியில் மட்டும் மழை பொய்த்து விட்டது. ஆகவேதான் அங்குள்ளவர்கள் கொஞ்சம் கஷ்டத்தை எதிர்நோக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்

**திரு. ம. சங்கரலிங்கம் :** மணிமுத்தாறு அணையை நவம்பர் 1-ல் திறக்க வேண்டும். அல்லது 90 அடி நிரம்பியிருந்தால், திறக்க வேண்டும். இதில் எது முந்தியதோ அதைச் செய்ய வேண்டும். இந்த வருடம் வடகிழக்குப் பருவ மழை பொய்த்து விட்டது. ஆகவே மழையில்லாமல் தண்ணீர் சரிவர இல்லாத காரணத்தால், டிசம்பரில் திறந்து விட்டிருக்கிறார்கள். ஆனால் அணையைத் திறப்பதற்கு முன்னாலேயே சிலர் பயிர் ஏற்றியிருக்கிறார்கள். இந்தத் தண்ணீரில் விளைகின்ற பயிர்களுக்கு முன்னுரிமை இருப்பதாக நான் அறிகிறேன். மழை பெய்யாத நிலையில் நெல் பயிர் செய்யாமல் மற்ற பயிர்களை செய்வதற்கான முன் ஏற்பாடுகளை விவசாய இலாகாவினரும் மற்றவர்களும், டிசம்பரில் தண்ணீரைத் திறந்து விடுவதற்கு முன்னாலேயே செய்திருக்க வேண்டும். ஆனால் இங்கு அவ்வாறு முன்னெச்சரிக்கை செய்யப் படவில்லை. இனிமேலாவது இம்மாதிரி நிலைமை ஏற்பட்டால், அரசு முன்கூட்டியே முன்னெச்சரிக்கை கொடுத்து பாதுகாப்பு கொடுக்க ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மணிமுத்தாறு பகுதியில் பொதுவாக மழை அவ்வளவாகப் பெய்வதில்லை. அதனால் கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்துக்கு இந்நிலை எதிர்பாராத விதத்தில் வந்து விட்டது. மற்ற பகுதிகளில் பெய்யும் மழையின் அடிப்படையில், அங்குள்ள நீரின் அடிப்படையில் இங்கும் எண்ணி நடவடிக்கை எடுத்து விட்டார்கள். பிறகு அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக மழை பெய்யவில்லை. நாம் இப்போது அங்குள்ள விவசாயிகளை எல்லாம் இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படும்போது நெல் பயிரிடாமல் புஞ்சை பயிரிட வேண்டுமென்றும் சிரமங்கள் ஏற்படாமல் எப்படியாவது வேறு பயிர்களைப் பயிரிடச் சொல்ல வேண்டுமென்றும் முன் ஆலோசனையாகச் சொல்வது நல்லது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். அதன் அடிப்படையில் அரசு இனிமேல் முன்னெச்சரிக்கையாக இருந்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1982 பிப்ரவரி 18

## 4. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, விலைவாசி பற்றியும், அது எந்த அளவுக்கு மக்களைப் பாதிக்கிறது என்பதைப்பற்றியும் நான் நேற்றையதினம் பேசிக் கொண்டிருக்கும்போது, என் பேச்சை நிறுத்திக் கொண்டேன் என்பதை நினைவுபடுத்துகிறேன். விலைவாசி உயர்வால் அதிகமாகத் துன்பத்திற்கு உள்ளாகிறவர்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் இருப்பவர்கள் தான். என்றாலும் கூட தாய்மார்கள் தான் மிகவும் அதிகமாகக் கஷ்டப்படுகிறார்கள் என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆண்கள் பட்டினி கிடக்க முடியும். ஆனால் தாய்மார்கள் பட்டினிகிடக்க முடியாது என்று கருதலல்ல. என்ன இருப்பினும் வேலை செய்து விட்டு அல்லது வேலை தேடி அலைந்து விட்டு, ஏதோ குறைந்த ஊதியம் கிடைத்தால் கூட, அதைக் கொண்டு வந்து வீட்டில் கொடுத்தால், அது கணவனாக இருந்தாலும் சரி அல்லது தம்பியாக இருந்தாலும் சரி, அதைக் கொண்டு தாய்மார்கள் ஏதாவது உணவை ஆக்கிக் கொடுத்தால் தான் நிம்மதி வரும். அதைக் கொண்டு குடும்பத்தில் அவர்கள் கொஞ்சம் அமைதியாக இருக்கலாம் என்பதை நாம் உணர்கின்றோம். அந்தப் பொறுப்பை தாய்மார்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே தான் தாய்மார்களுடைய நலத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்ற அடிப் படையில் அதற்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயல்படுகிறோம். அப்படிச் செய்வது ஆண்களுக்கும் நாம் தொடர்ந்து நன்மை பயப்பதாக ஆகும். எந்த வகையிலாவது தாய்மார்களுக்கும் வேலை கொடுக்க வேண்டும். அவர்கள் வேலை செய்வதற்கான வாய்ப்பையும் வசதியும் ஏற்படுத்திக் கொடுப்பது நல்லது என்பதை அனைவரும் ஒட்டுமொத்தமான கருத்தாக ஒத்துக்கொள் வார்கள். அதன் அடிப்படையில் நாம் செயல்பட முனைய வேண்டும். படிக்க வசதியும் வாய்ப்பும் இல்லாமல் போன அல்லது சூழ்நிலையின் காரணமாகப் படிக்காமல் போனவர்கள் அல்லது பெற்றோர்களாலேயே 'உங்களுக்கு இனி படிப்பு வேண்டாம், படித்தது போதும்' என்று படிப்பு நிறுத்தப்பட்ட நிலை யில் பலர் இருக்கிறார்கள். கிராமப்புறங்களில் வாழ்கிற அத்தகையவர்களுக்கு எத்தகைய வேலைவாய்ப்பு கொடுப்பது என்பது பிரச்சினை. அந்த வகையில் இந்த அரசு மகளிருக்காக என்னென்ன செய்ய வேண்டும் என்பது குறித்து எங்கள் தேர்தல் அறிக்கையிலே என்னென்ன செய்வோம் என்பதைச் சொல்லியிருக்கிறோம். அதை எப்படிச் செயல்படுத்த இருக்கிறோம் என்பதை இங்கு குறிப்பிடுகிறேன். ஆளுநர் உரையிலே இவைகள்பற்றி எல்லாம் இல்லாமல் கொஞ்சம் ஏமாற்றமடைந்த நிலையில் இருக்கிறோம் என்று இங்கே உறுப்பினர்கள் சொன்னார்கள். ஏன் அதைக் குறிப்பிடவில்லை என்றும் கேட்டார்கள். அதற்கான உரிமை உள்ளவர்களாக இருந்தாலும், அவற்றை



நாங்கள் செயல்படுத்த முனைந்திருந்தாலும், மக்களுக்கு நாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை மறக்காமல் பணிகளைத் தொடர்கிறோம் என்பதை எடுத்துக் காட்ட சிலசில் குறிப்புகளை வெளியிடுகிறேன். அப்படித் தான் என்னுடைய பேச்சைத் தொடர்கிறேன்.

மகளிருடைய பாதுகாப்பு கருதி மாவட்டம்தோறும் பாதுகாப்பற்ற ஏழை மகளிர்க்குக் கைத்தொழில் கற்றுத் தருகிறோம். அவர்கள் வாழ்க்கையை அமைக்க மகளிர் இல்லம் அமைத்துத் தருவோம் என்று தேர்தலின்போது சொன்னோம். தரம் பிரித்துப் பார்த்தால், கணவனோடு இருக்கின்ற மகளிருக்கு ஒரு வகையில் பாதுகாப்பு இருக்கும். ஆனால் விதவைத் தாய்மார்கள் எவ்வளவு துன்பத்தில் வாழ்க்கையை நடத்த வேண்டியிருக்கிறது என்பதை தயவுசெய்து ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும். முதலில் விதவைத் தாய்மார்களிடம்தான் அக்கறை காட்ட வேண்டும். அவர்களுக்கு ஆதரவு தந்து காரியங்களைச் செய்ய வேண்டும். அவர்களுக்கு அந்தப் பலன் கிடைக்கச் செய்ய வேண்டும். இதை அவையிலே உள்ள யாரும் மறுக்க மாட்டார்கள். அதிலே நாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளிலே ஒன்று விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் புத்தகங்களையும் நோட்டுப் புத்தகங்களையும் வழங்குவதாகும். அவை இப்போது வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் நான்கு ஆயிரம் மாணவ மாணவிகள் பயன் அடைகிறார்கள் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, ஆதரவற்ற மகளிர் மற்றும் வறிய நிலையில் உள்ள விதவை மகளிர் நலனுக்காக தாம்பரம், கடலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் மகளிர் நல இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, விதவைத் தாய்மார்களின் மகளிர்க்கு திருமணத்திற்கு உதவும் வகையில் சென்ற ஆண்டு முதல் வருடம் ஒன்றுக்கு ஆயிரம் மணமகளிர்க்கு திருமாங்கல்யம் செய்து தர ரூபாய் ஆயிரம் என்ற வகையில் நிதி உதவி அளிக்கப்படுகிறது. இதையொட்டி இன்னொரு இடத்திலே தேர்தலின்போது சொன்னோம். தாலிக்குத் தங்கம் என்றால் தாலிக்குத் தங்கம் கொடுக்க முடியாவிட்டாலும் கூட, அந்தத் தாலிக்குத் தேவையானவைகளை ஏற்பாடு செய்து அவைகளைக் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை எல்லாக் கட்சியினரும் வெளியிட்டது போல் நாங்களும் அந்தக் கருத்தை வெளியிட் டிருந்தோம். அதைச் செயல்படுத்துவதில் எந்த அளவுக்கு நாங்கள் முன்னேறி யிருக்கிறோம் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 18

(முற்பகல் 10-30)

ஆதரவற்ற மகளிர்க்கு சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் 3,000 குடிமக்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டிருக்கிறது. ஆதரவற்ற விதவைகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அரசு மருத்துவ மனையில் ஆயா என்றழைக்கப்படும் பணியாளர்கள், பெருக்குபவர்கள், துப்புரவுப் பணியினர், சமையல்காரர், தண்ணீர் எடுப்பவர், செவிலியர் போன்ற பணியாட்கள் தேவைப்படும் பணியிடங்களை விதவைகளுக்கே ஒதுக்கிவைத்து ஆணையிடப்பட்டிருக்கிறது. வழிதவறிவிடும் மகளிருக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் சென்னை, தஞ்சை, கோவை ஆகிய நகரங்களில் உள்ள இரயில்வே நிலையங்களில் பெண் காவலர்களைக் கொண்ட வழிகாட்டு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அண்மையில் இரண்டு பெண்கள் வீட்டில் கோபித்துக்கொண்டு வந்தவர்கள், சென்னையிலே தனிமையில் இருந்ததைப் பார்த்து, சென்னையில் உள்ள போலீசார் அவர்களுடைய உறவினர்களுடைய வீட்டுக்கு அனுப்பி வைத்தார்களே அதுபோல உதவி செய்ததும், வேறுவழிகளிலே ஏமாற்றப்பட்டு அழைத்து வரப்பட்டவர்களைத் திரும்பவும் ஊருக்கே பாதுகாப்போடு அனுப்பிவைத்து உதவி செய்ததும் ஆன இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் தெரியும். அந்த வகையில் அந்தப் பணிகளைச் செய்துகொண்டிருக்கிறோம். கிராமப்புறப் பெண்களுக்கு அவசர உதவி அடிப்படையில் மருத்துவ உதவியும் 1,000 பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டமும் என்ற திட்டத்தை 10 அம்ச சிறப்புத் திட்டம் என்ற வகையில் தேர்தல் அறிக்கையில் வெளியிட்டோம். தமிழ் நாட்டிலே கிராமப்புறங்களிலே வாழும் ஏழைத் தாய்மார்களுக்கும், சகோதரிகளுக்கும் அடிப்படை மருத்துவ வசதி கிடைக்கும் வகையில் அவர்களுக்கு அவசர அடிப்படையில் மருத்துவ உதவி கிடைக்க சுமார் 10 ஆயிரம் மருத்துவப் பயிற்சி பெற்ற மருத்துவப் பெண் உதவியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று குறிப்பிட்டிருந்தோம். அதற்கேற்ப தற்போது கிராமப்புறங்களில் 10 கிராமங்களுக்கு மூன்று வீதம் மருந்து ஆலோசனை நிலையங்கள், 'மெடிக்கல் சப்-சென்டர்'களை ஏற்படுத்தி, பிரசவத்தின் போதோ அல்லது கிராமப்புறங்களிலே உள்ளவர்களை பாம்பு போன்ற விஷ ஜந்துக்கள் கடித்து விட்டாலோ அவர்கள் மருத்துவத் தேவையைப் பூர்த்தி செய்ய கிராமப்புறங்களிலே மருத்துவ வசதி இல்லை என்பதற்காக ஒவ்வொரு கிராமத்திற்கும் பட்டம் பெற்ற மருத்துவர்களை நியமிக்கவும் இன்றைய சூழ்நிலையில் முடியாது. ஆனால் கிராமப்புறங்களில் பரம்பரையாகப் பிரசவம் பார்க்கும் பெண்கள், சித்த மருத்துவர்கள் இருக்கிறார்கள். அவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பயிற்சி அளித்து மருத்துவ உதவியாளர்களாக நியமித்து, அதற்கென்று அவர்களுக்கு ஒரு தொகையை அளிக்கவும் அரசு விரும்புகிறது. ஜனதா ஆட்சிக் காலத்தில் மருத்துவத் துறையிலே—பொது



1982 பிப்ரவரி 18] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

சுகாதாரத் துறையிலே அமைச்சராகப் பணியாற்றிய திரு. ராஜ்நாராயண் அவர்கள் இப்படிப்பட்ட திட்டத்தை வேறு வகையில் கொண்டு வந்தார்கள். மூன்று அல்லது நான்கு மாத காலம் பெண்களுக்குப் பயிற்சி அளித்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று சொன்னார்கள். அதை நடைமுறைப்படுத்துவதைப் பொறுத்தவரையில், சாதாரணமாக நடைமுறையில் சரிவர நடைமுறைப்படுத்த முடியாத நிலைமை இருந்ததை உணர்ந்து அதை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதாகச் சொல்லியிருந்தோம். ஆனால் இந்த முறை அதுவல்ல. நாம் இங்கே பயன்படுத்த இருக்கிற மருத்துவ முறை; சித்த மருத்துவ முறை. இந்த முறையில் நல்ல அனுபவம் உள்ள தாய்மார்கள் இருப்பார்களானால், அவர்களைப் பயன்படுத்துகிறோம். இதைச் செய்யும்போது மத்திய அரசினுடைய அனுமதியும் பெற வேண்டியுள்ளது என்பதால் அதற்கேற்ப நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைக் கூறி இதை எப்படியும் நிறைவேற்றும் வகையிலே கடமையைச் செய்துகொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

200 ஊராட்சி ஒன்றியங்களில் சித்த மருத்துவம் தெரிந்தவர்கள் மருத்துவர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். கிராமப்புறங்களில் மருத்துவ உதவியாளர்களை நியமிப்பது சம்பந்தமாக எல்லா விவரங்களையும் குடும்ப நலத் துறையிடம் கேட்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் சீனாவில் நிலவிவரும் 'பேர்—ஃபூட் டாக்டர்' திட்டம் போன்றதாக இருந்தாலும், நாம் நம்முடைய நாட்டுக்கேற்ப அவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லும் போது, ஏதோ தேர்தல் நேரத்திலே மட்டும் சிலவற்றைச் சொல்லுகிறோம் என்றில்லாமல், அவற்றை நிறைவேற்றுவதற்கு நாங்கள் எப்படி முனைகிறோம் என்று சொல்வது இந்த அரசின் கடமை. காரணம் இதை எதிர்ப்பவர்கள் கூட சொல்லியிருப்பார்கள் அல்லது எண்ணுவார்கள் என்பதால் நான் இன்றைச் சொல்கிறேன். இவர்கள் தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதியை மறந்து மக்களை ஏமாற்றிவிட்டார்கள், வாக்குகளைப் பெற ஒன்றைச் சொல்லிவிட்டு, இப்போது அதைக் கவனிக்கவில்லை என்று குற்றம் சுமத்தும்போது, இந்த உண்மை நிலைமையின் வாயிலாக தேர்தல் நேரத்தில் மக்களை ஏமாற்றுவதற்காக நாங்கள் இந்தத் திட்டத்தைச் சொல்லவில்லை என்பதையும், மக்களுக்குத் தேவையானது என்று எண்ணி இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஆசைப்பட்டோம், பதவியில் வந்ததற்குப் பிறகு அந்தத் திட்டத்தை செயல்படுத்த முனைகிறோம் என்பதையும் எடுத்துக்காட்டத் தான் இவைகளையெல்லாம் நான் சொல்கிறேன்.

அடுத்தபடியாக, தொழில் முனைவர்களுக்கு அளிக்கப்படும் புதிய ஊக்க விப்புகள்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசு தொழில் துறையில் என்ன செய்திருக்கிறது என்று கேட்கிறார்கள். இந்த அரசில் இருப்பவர்

கள் என்ன செய்ய முனைந்தார்கள் என்று கேட்கிறார்கள். 'தொழில் வளர்ச்சியில் 10-வது, 15-வது இடத்திற்குப் போய்விட்டோம்' என்று அந்த எண்ணிக்கையை எவ்வளவு பெரியதாகச் சொல்ல முடியுமோ அந்த அளவுக்குப் பெரியதாகச் சொன்னார்கள். ஒரு நிகழ்ச்சியை நான் சொல்கிறேன். ஒரு தாயாரிடம் 3-வது வகுப்பு படிக்கும் மகன் சொன்னானாம், 'அம்மா, நான் மூன்றாவது வகுப்பில் தேர்வுபெற்றுவிட்டேன்' என்று சொன்னானாம். அதைக் கேட்ட அந்த அம்மா அடுத்த முறை நீ மூன்றாவது வகுப்பில் தேர்வு பெற வேண்டும் என்று சொன்னார்களாம். அதுபோல நாங்கள் எதையும் சொல்லத் தயாராக இல்லை. பிற்பட்ட பகுதிகளில் தொழில் தொடங்க மத்திய அரசு தமிழ் நாட்டில் 33 தாலூக்காக்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. தமிழக அரசு மேலும் 24 தாலூக்காக்களில் தொழில் துவங்க முதலீட்டு மானியம் அறிவித்துள்ளது. இதன்படி தொழில் துவங்க முதலீட்டில் 15 சதவீதம் அல்லது 15 இலட்சம் இவற்றில் எது குறைவாக இருக்கிறதோ அந்தத் தொகையை மானியமாக அரசு அளிக்கும். தொழிலைத் துவங்குவதற்கு இந்த அரசுக்கு அக்கறையில்லை என்று சொல்லப்படும் குறை நீக்கப்படும், இனியாவது அப்படி குறை சொல்லமாட்டார்கள் என்று நம்புகிறேன். இதை பத்திரிகைகள் மூலம் படித்தோ, இங்கே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களிடத்திலே கேட்டோ, அந்தக் கருத்தை மாற்றிக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். மேலும் எந்தெந்தச் சலுகைகளை அறிவித்திருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வட்டியில்லா விற்பனை வரிக் கடன் அளிக்கிறோம். இதன்படி விரிவாக்கத்திற்காக 50 இலட்சம் ரூபாய் அளிக்கப்படுகிறது. புதிய தொழில்களைத் துவங்குவதற்காக அளிக்கப்படும் தொகை 48 இலட்சத்திலிருந்து 10 கோடிக்கு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு உயர்த்தப்பட்டுள்ளது. இதையெல்லாம் இந்த அவையில் இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். இந்தத் திட்டங்களில் நாங்கள் எவ்வளவு அக்கறை காட்டுகிறோம் தொழில் வளர்ச்சியடைய வேண்டும் என்பதில் எவ்வளவு அக்கறையோடு நடவடிக்கை எடுக்கிறோம் என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். தேர்தல் நேரத்தில் வாக்குறுதி கொடுத்ததை மனதில் வைத்திருப்பதைப்போல, நாங்கள் செய்து வரும் இந்த நல்ல காரியங்களையும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். முதலீட்டு மானியத் திட்டம் அமுலில் இல்லாத இடங்களில் எலக்ட்ரானிக்ஸ், மருந்துவக் கருவிகள், பேருந்துகளுக்குத் தேவைப்படும் உபரிப் பாகங்கள் போன்ற பொருட்களைச் செய்யும் தொழில்களுக்கு அவர்கள் போட்டிருக்கும் முதலீட்டில் 10 சதவிதம் அல்லது வேலைக்கு அமர்த்தப்படும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 20 ஆயிரம், இவற்றில் எது குறைவோ அதை அளித்து அந்தத் தொழில்களை ஊக்குவிக்க இருக்கிறோம். தூத்துக்குடி, புதுக்கோட்டை, கும்மிடிப்பூண்டி, கடலூர்





ஆகிய இடங்களிலே புதிய தொழிற்பேட்டைகளில் ஆரம்பிக்கப்படும் தொழில்களுக்கு 5 ஆண்டுகளுக்கு மின்வெட்டு இருக்காது என்றும், முதலீட்டு மானியத்திற்கும் அவர்கள் அருகதையுள்ளவர்கள் என்றும் அரசு அறிவித்திருக்கிறது.

(முற்பகல் 10.40)

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே அதற்குப் பதில் சொல்ல இருக்கிறார்கள். அந்தப் பிரச்சினை விவாதத்தில் வர இருக்கிறது என்பதால் நான் இன்னும் நீட்டிக்கொண்டு போக விரும்பவில்லை.

அதேபோல், தமிழ் நாட்டில் மைய அரசின் திட்டங்களுக்கான முதலீட்டைப்பற்றி இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே சிலர் கேட்கக்கூடும். நீங்கள் என்ன மாநில அரசைப்பற்றிப் பேசுகிறீர்களா அல்லது மைய அரசைப்பற்றிப் பேசுகிறீர்களா என்றுகூட கேட்கக்கூடும். அதில் நமக்கு எப்படி தொடர்பு இருக்கிறது என்பதற்காக சிலவற்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், மைய அரசின் முதலீடு குறைவு என்பதை நான் குறிப்பிட வேண்டும். 1979 ஆம் ஆண்டு இறுதியில் நாடு முழுவதும் மைய அரசுத் துறைகளில் முதலீடு செய்யப்பட்ட தொகை ரூபாய் 15,668 கோடியாகும். இதில் தமிழ் நாட்டில் மட்டும் செய்யப்பட்ட முதலீடு ரூபாய் 616 கோடி தான். இது மொத்தத் தொகையில் 4 சதவீதமாகும்.

கடந்த 10 ஆண்டுகளில் தமிழ் நாட்டில் மைய அரசுத் துறைகளில் முதலீடு செய்யப்பட்ட தொகையின் அளவு 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைந்துள்ளது. அதிகமான பொதுத் துறைத் திட்டங்களை நமது மாநிலத்தில் ஏற்படுத்த மாநில அரசு மைய அரசோடு தீவிரமாகத் தொடர்பு கொண்டுள்ளது. அதன் விளைவாக, பி.எச்.இ.எல். நிறுவனத்தின் புதிய பிரிவு ஒன்று இராணிப்பேட்டையில் தொடங்குவதற்காக மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது. அதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தத் திட்டத்திற்கான முதலீடு சுமார் 22 கோடி ரூபாயாகும். இதன் காரணமாகக் கிட்டத்தட்ட 1,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இது 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து உற்பத்தியைத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதைச் சொல்லும்போது, நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களைப் பார்த்துச் சொல்கிறேன்—கன்னியாகுமரி மாவட்டத்தில்—மத்திய அரசு விண்வெளித் துறையில் ஆராய்ச்சித் திட்டம் ஒன்று செயல்பட ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான தொடக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதுமட்டுமல்ல, கீழ்க்காணும் திட்டங்களுக்கு மத்திய அரசின் அனுமதியைக் கோரி பலமுறை நாங்கள் கடிதங்கள் எழுதியிருக்கிறோம் :—

இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனத்தின் மூலம் எலக்ட்ரானிக் தட்டச்சுப் பொறி மற்றும் ஏனைய எலெக்ட்ரானிக் பொருள்களை உற்பத்தி செய்தல்.

இந்துஸ்தான் நிழற்பட சுருள் ஆலை மூலம் ஊடுகதிர் சுருள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான புதிய பிரிவைத் துவங்குதல்.

இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தின் மூலம் புதிய விமானத் தொழிற்சாலை ஒன்றை இங்கே தொடங்க வேண்டும் என்றும் நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

பாரத் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் மூலம் சென்னை அருகில் ஒரு பிரிவைத் தொடங்குவது.

இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் நிறுவனத்தின் மூலம் ரிஸ்ட் வாட்சுகளுக்கு—கைக் கடிகாரங்களுக்குத் தேவையான உபபொருள்களைத் தயாரிக்கும் பிரிவைத் தொடங்குவது.

இதுபோல இன்னும் பலவற்றை நாங்கள் கேட்டிருக்கிறோம், கேட்டுக்கொண்டேயிருக்கிறோம். அதற்கு (எதிர் வரிசையில் இருப்பவர்களைக் கைகாட்டி) உங்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் கொஞ்சம் அதிகமாக—சொல்லப்போனால் மிகைப்படுத்துகிற அளவில் இருந்தால்கூட பரவாயில்லை—இருந்தால், இத்திட்டங்களுக்கு மைய அரசு நிச்சயமாக உதவிசெய்யும், அனுமதி தரும் என்றுதான் நான் கருதுகிறேன்.

சிட்கோ நிறுவனத்தைப் பொறுத்தவரையில், அது செயல்படுத்தி வரும் கூட்டுத் துறை நிறுவனங்களின் எண்ணிக்கை 14. இந்த ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களில் தொழில்கள் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. . . .

திரு. க. இராமமூர்த்தி : மத்திய அரசின் முதலீட்டைப் பொறுத்தவரையில் மிக முக்கியமானது நெய்வேலியில் இரண்டாவது "மைன் கட்" என்று சொல்லப்படும் சுரங்கத்திற்கான அனுமதி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படித்த பட்டியலில் அது இடம் பெறாமல் விடுபட்டுப் போனது. எனவே அதையும் பட்டியலில் கொண்டுவருவது என்பது அவைக்கும் நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கக்கூடியது. மத்திய அரசின் முதலீட்டைப்பற்றி தமிழ் மக்கள் முழுமையாகப் புரிந்துகொள்ள இது பயன்படும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் 1979 [illegible] இருந்த நிலைமையைத்தான் சொல்கிறேன் என்று ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டேன்.





(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சிட்கோ மூலம் தொடங்கிய தொழில்களைப் பொறுத்தவரையில், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதில் தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல் ஒன்று. சில ஆண்டுகளுக்கு முன் என்று நினைக்கிறேன். நான் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தபோது ஜப்பானுக்கும் சென்றிருந்தேன். அப்போது நான் அங்கே ஏதோ வாங்கிக் கொண்டு, ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டதாகச் சொல்லப்பட்டது. அதன் உண்மை என்னவென்றால் அதை மைய அரசு செய்யச் சொன்னது—நான் இதை இங்கே வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்—நாங்கள் யாரை ஏற்பாடு செய்து இது குறித்துப் பேசச் சொன்னோமோ அந்த வகையில் நமது அதிகாரிகள் போய், பேசி முடித்துவிட்டு வந்தார்கள். ஆனால் அதை மைய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்றுக்கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல, அவர்களேகூட பேச்சு நடத்தினார்கள். அவர்கள் பேச்சு நடத்தி, மத்திய அரசின் தூதுவர் முன்—அவரும் கலந்து கொண்டு—கையெழுத்துப் போடப்பட்டது. அந்த நிலையில்தான் நான் ஜப்பானுக்குப் போனபோது அதில் கலந்துகொள்ளும் நிலை ஏற்பட்டது. நான் அங்கே பணத்தைப் பெற்று வங்கியில் போட்டுவிட்டதாக அப்போது பத்திரிகைகளில் எழுதப்பட்டது. ஏன் அதை இப்போது நினைவுபடுத்துகிறேன் என்றால், மறுபடியும் மறுபடியும் சிலர் பழைய விஷயங்களைத் துவக்குகிறார்கள். பதில் சொல்லி முடிந்து இது ஒன்றுமில்லை என்று முடிந்துவிட்ட பிரச்சினையில்கூட "பழைய குருடி கதவைத் திறடி" என்கிற முறையில் தொடங்கும்போது நானும் மறுபடியும் ஆரம்பத்திலிருந்து பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இனியும் அதுபோன்ற நிலைமைகள் இருக்கக்கூடாது என்றுதான் நான் இதைக் குறிப்பிடுகிறேன்.

கூட்டுத் துறையில் இந்த ஆண்டு மேலும் பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவைகளில் சில :

அகாமது கேஸ்டிங்ஸ் திட்டம்.

கெமிகல் எக்விப்மெண்ட் திட்டம்.

டிஸ்குஸ் திட்டம்.

பொதுத் துறையில் டிட்கோ நிறுவனத்தின் கீழ், கீழ்க்காணும் தொழில்கள் புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன:—

ஆலங்குளம் சிமிண்ட் தொழிற்சாலை.

அரியலூர் சிமிண்ட் தொழிற்சாலை.

அரக்கோணம் இரும்புத் தொழிற்சாலை—ரீரோலிங் மில்ஸ்.

நடப்பு ஆண்டில் கீழ்க்கண்ட நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்கி யுள்ளன :—

ஆலங்குளம் சிமிண்ட் தொழிற்சாலை.

அஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலை.

அரக்கோணம் இரும்புருக்குத் தொழிற்சாலை, இந்த ஆண்டு புதிய பிரிவை ஏற்படுத்த மத்திய அரசு அனுமதி தந்துள்ளது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ஆகும் செலவு ரூபாய் 7 கோடியாகும். இதற்கு மாநில அரசும் அனுமதி வழங்கியுள்ளது. இவைகளையெல்லாம் நான் ஏன் சொல்லுகிறேன் என்றால், "நீங்கள் என்ன செய்தீர்கள்" என்று கேட்கிற அந்தப் பெரியவர்கள் இவைகளையெல்லாம் தெரிந்திருந்தும் ஏன் வெளியே சொல்ல மாட்டேன் என்கிறார்கள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

குறை சொல்லுங்கள்; நாங்கள் தவறு செய்தால் எடுத்துச் சொல்லுங்கள்; வழி மாறிப் போனால் இது சரியல்ல என்று எடுத்துச் சொல்லி, இப்படி நடக்க வேண்டும் என்று உங்கள் அனுபவத்தைச் சொல்லுங்கள். நாங்கள் முயன்று கொண்டிருக்கிறோம். அப்படி முயன்று கொண்டிருப்பவர்களைப் பார்த்து 4-வது இடத்திலிருந்து 10-வது இடத்திற்குப் போய்விட்டீர்கள் என்று சொன்னால், அது எப்படி நியாயமாகும்? இதன் காரணமாகத்தான் நான் 3-வது நாளாக இங்கே பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. சில சமயம் புள்ளிவிவரங்களைப் படிக்கும்போது, போர் அடிக்கும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** அப்படியெல்லாம் ஒன்றுமில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதுவரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி எதுவும் போர் அடிக்கவில்லை.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேசுவது என்பதைவிட படித்துச் சொல்வது என்பதுதான் எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. வேறொன்றுமில்லை. அந்த முறையில்தான் நான் அதைக் குறிப்பிட்டேன். 1—1—1977 முதல் 31—12—1981 வரை நடுத்தர, மற்றும் பெரிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்ட விவரங்கள் :—

தனியார் துறையில்—271

பொதுத் துறையில்—9

கூட்டுத் துறை—12.

கூட்டுறவுத் துறை—7.

மொத்தம்—299.



டிட்கோ நிறுவனம் பொதுத் துறையிலும், கூட்டுத் துறையிலும் செயல்படுத்தும் நிறுவனங்கள் மூலம் வேலை வாய்ப்பு கிடைக்கும் மக்களின் எண்ணிக்கை 8,321. திட்டங்கள் முடிவுற்று வேலை முழுவதுமாகத் துவங்கும் போது 10,276 பேருக்கு வேலை கிடைக்கும் என்ற குறிப்பு எனக்குத் தரப்பட்டிருக்கிறது.

'ஒருவருக்காவது வேலை கொடுத்தீர்களா?' என்று என்னைப் பார்த்து நேராக அல்ல, பொது மேடைகளில் கேட்கிறார்கள். இங்கேயும் சிலர் அந்தச் சந்தேகத்தைக் கிளப்பியிருக்கலாம். இந்தப் புள்ளிவிவரங்கள் அனைத்தும் அறிக்கைகளிலே சொல்லப்பட்டிருக்கின்றன. என்றாலும் அவைகளை மறந்து விட்டுக் கேட்கிறார்களே என்றுதான் வருத்தப்படுகிறேன். என்னை மறந்து விட்டாலும்கூட பரவாயில்லை. இந்த நாட்டில் நாங்கள் செய்துள்ள நன்மையை மறந்துவிடாதீர்கள். 10,000 பேருக்கு வேலை கொடுக்கிறோம் என்றால், ஒரு குடும்பத்திற்கு 5 பேர் என்றாலும், 50,000 பேர்களுக்கு ஒரு வேளை சாப்பாட்டிற்கு உறுதி செய்யப்பட்டிருக்கிறது என்ற உண்மையை அறிந்து இனியாவது திட்டுவதைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே இருக்கிற உறுப்பினர்களைச் சொல்லவில்லை. வெளியே யாராவது இருந்தால் அவர்களுக்குச் சொல்லுங்கள் என்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

கூட்டுறவு நூற்பாலைகள். மூன்று புதிய கூட்டுறவு நூற்பாலைகள் ஒவ்வொன்றும் புதுக்கோட்டை, தர்மபுரி மற்றும் தேனி ஆகிய இடங்களில் நிறுவப்பட இருக்கின்றன. ஒரு கதிர் திறன் 25,000. ஒவ்வொரு நூற்பாலைக்கும் தேவைப்படும் மூலதனம் ரூபாய் 706 இலட்சம். மேலும் 12,000 கதிர் திறனுடன் ரூபாய் 497 இலட்சம் முதலீட்டில் எட்டையபுரத்தில் சிறிய நூற்பாலைகள் நிறுவப்படும். சேலம், மற்றும் வேலூர் நூற்பாலைகளில் ஒவ்வொன்றிலும் அதிகப்படியாக 13,200 கதிர்கள் நிறுவப்படும். இதற்காக ஓர் ஆலைக்குத் தேவைப்படும் மூலதனம் ரூபாய் 350 இலட்சமாகும். ஆறு நூற்பாலைகளை மேற்குறித்தவாறு அமைக்க, மேம்படுத்த ரூபாய் 3 315 இலட்சம் செலவாகும். இவைகளினால் சுமார் 3,160 பேர்களுக்கு புதியதாக வேலை வாய்ப்பு கிடைக்கும். எங்கள் கொள்கையை ஏற்கெனவே இந்த அவையிலும் சொல்லியிருக்கின்றேன் என்று நினைக்கிறேன். ஒரு இலட்சம் ரூபாய் செலவு செய்துவிட்டு ஒரு ஆளுக்கு வேலை கிடைப்பதை விட ஒரு இலட்சம் செலவு செய்து விட்டு 500 பேர், 600 பேர், ஆயிரம் பேர்களுக்கு வேலை கிடைத்தால் நல்லது என்பது தான் நாங்கள் சொல்லியிருக்கின்ற கொள்கை. அது மட்டுமல்லாமல், இப்படிப்பட்ட தொழில் கருவும் தேவையென்ற காரணத்தால், நாம் வெளி மாநிலங்களை எதிர்பார்த்து இருக்கக் கூடாது என்று

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 18

நிலைமையிலே இதையும் செய்துகொண்டிருக்கிறோம். [illegible] பெறும் நிலைமையில் ஆரம்பித்துவிட்டோம் என்று சொல்லும்போது, இந்த அரசு தொழில் துறையில் தயக்கம் காட்டவில்லை என்பதையும், நாங்கள் தொழில் துறையில் முனைப்போடு அக்கறை செலுத்துகிறோம் என்பதையும் இந்த அவை தெரிந்துகொள்ளும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அரசு சர்க்கரை ஆலை, உளுந்தூர்பேட்டையில் ரூபாய் 755 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்ட சர்க்கரை ஆலையின் மூலம் 750 பேர்களுக்கு புதிதாக வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

தொழில் முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியவை வழங்கிய கடன் விவரங்கள். வட்டியில்லாத விற்பனைக் கடன், 1—4—1977 முதல் 31—12—1981 முடிய ரூபாய் 889.99 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டது. வழங்கப்பட்ட தொகை இதுவரை 811.50 இலட்சம் ரூபாய். தவணைக் கடன் 4,523.86 இலட்சம் ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டது. வழங்கப்பட்ட தொகை 2,367.56 இலட்சம்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் உதவி கொடுத்த தொழில்களின் எண்ணிக்கை 2,265. வழங்கப்பட்ட தொகை ரூபாய் 2,377.91 இலட்சம். நான் இங்கே இதைச் சொல்லும்போது, கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு தொழிற்சாலைக்கு ஐந்து பேர் என்று வைத்துக் கொண்டாலும் 2,265 சிறு தொழில்களின் மூலம் பத்தாயிரம் பேருக்கு மேல் வேலை கிடைக்கிறது. அதைத் தொடர்ந்து ஏற்படும் சின்னஞ்சிறு தொழில்களின் மூலம் பல பேருக்கு வேலை கிடைக்கும் என்பதை இங்கே குறிப்பிடுவது என் கடமையாகக் கருதுகிறேன்.

1—1—1977 முதல் 31—12—1981 வரை உருவாக்கப்பட்ட புதிய வேலை வாய்ப்புகள், எத்தனை பேருக்கு வேலை கொடுக்கப்பட்டது என்பதற்காக அந்தக் கணக்கைக் கொண்டு வந்திருக்கிறேன். பட்டு வளர்ப்புத் தொழிலில் 1,72,271 பேருக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள், எத்தனை பேருக்கு வேலை கொடுத்தீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். அப்படிக் கேட்டிருந்தால் பரவாயில்லை. கேட்க வேண்டியதுதான். அப்படிக் கேட்பதால் உண்மை வெளி வருகிறதல்லவா? அதைப் போலவே மாவட்டத் தொழில் மையங்கள் மூலம், சிறு தொழில்கள் மூலம் வேலை வாய்ப்பு 2,99,482 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் 23,034 பேர்களுக்கும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 2,306 பேர்களுக்கும், தொழில் துறை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 14,200 பேர்களுக்கும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் 28,340 பேர்களுக்கும் ஆக மொத்தம் 5,40,[illegible] பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது.



1982 பிப்ரவரி 18] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

தொழில்களைப்பற்றி இன்னுமொன்றைச் சேர்த்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் காகித ஆலைபற்றி இங்கே புகார் கூறியிருக்கிறார்கள். அதைப்பற்றி அவருக்குக் கிடைத்த தவறான செய்தியை வைத்துக்கொண்டு, உறுப்பினர் என்ற முறையில் அவர் எதற்காக இங்கே வருகிறாரோ அந்தக் கடமையைச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் அந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அவர் இருந்திருந்தால் வேறுவிதமாகப் பேசியிருப்பேன். அவர் இல்லாததால்தான் இப்படிப் பேசுகிறேன் என்பதையும் சொல்லிவிடுகிறேன். காகித ஆலைத் திட்டத்திற்கு ரூபாய் 100 கோடி என்று முதலில் சொல்லப்பட்டது, இப்போது 200 கோடியாக உயர்ந்துள்ளது. அவர் பேசியதை நான் சொல்லிவிட வேண்டுமென்று கருதுகிறேன். "1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது சொன்னார்கள், எங்கள் ஆட்சியில் காகித ஆலை ஏற்படுத்தப் போகிறோம் என்று. முதலில் ரூபாய் 100 கோடியில் ஆரம்பிப்பதாகச் சொன்னார்கள். பிறகு 120 கோடியாக மாறி அதற்குப் பிறகு 160 கோடி என்று சொல்லப்பட்டு இப்போது ரூபாய் 200 கோடி என்று சொல்லப்படுகிறது. 100 கோடி ரூபாய் எப்படி 200 கோடி ரூபாயாக ஆகியது என்பதைப்பற்றி விவரம் தெரிவித்தால் நலமாக இருக்கும்" என்று கூறியிருக்கிறார்கள். ஆரம்பக் கட்டத்தில் கரும்புச் சக்கையை பயன்படுத்தி நாள் ஒன்றுக்கு 250 டன் செய்தித்தாள் உற்பத்தி செய்ய செலவு 100 கோடி ரூபாய் என மதிப்பீடு செய்யப்பட்டது. பிறகு மைய அரசோடு விவாதித்து "வெறும் பத்திரிக்கைக்குத் தேவையான காகிதங்களை மாத்திரம் உற்பத்தி செய்தால், இலாபம் வர முடியாது. ஒருவேளை நஷ்டம் வந்தாலும் வரும், காகிதம் தேவைதான், அதற்காக பத்திரிகைக் காகிதம் மட்டும் உற்பத்தி செய்தால் போதாது, ஆகவே வேறு வகைத் தேவைகளுக்கும் காகிதம் உற்பத்தி செய்ய வேண்டும்" என்று நிபுணர்கள் எல்லாம் சொல்லி, அவர்களும் விவாதித்து அவர்களும் இதிலே ஈடுபட்டு இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ற முடிவினை முதலிலே சொல்லிவிட்டு பிறகு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நாள் ஒன்றுக்கு 250 டன் செய்தித்தாள் மற்றும் 50 டன் எழுதும் மற்றும் அச்சிடும் தாள் உற்பத்தி செய்ய திட்டச் செலவு 139 கோடி ரூபாய் ஆகுமென்று முடிவு செய்யப்பட்டது. பின்னர் திருத்தியமைக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் திட்டத்திற்குச் செலவு 153 கோடி ரூபாயாக இருக்குமென்று தொழில் நுட்ப ஆலோசகர்களால் மதிப்பிடப்பட்டது. ஆரம்பத்தில் செய்தித் தாள்கள் மட்டும் தயாரிப்பதாக இருந்தோம். செய்தித்தாள்கள் மட்டும் தயாரிக்கின்ற திட்டமாக இருந்தால் லாபகரமாக இருக்காது என்று குறிப்பிட்டதன் காரணமாக, ஆண்டு ஒன்றுக்கு

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 18

80 ஆயிரம் டன் செய்தித் தாள் மற்றும் 40 ஆயிரம் டன் எழுதும் தாள் உற்பத்தி செய்யக்கூடிய ஒருங்கிணைந்த திட்டமாகத் திருத்தியமைக்கப்பட்டது. இந்த ஒருங்கிணைந்த திட்டத்திற்கு உலக வங்கி மற்றும் இந்திய நிதி நிறுவனங்கள் மற்றும் மைய அரசு, மாநில அரசு கொடுக்க இருக்கும் சலுகைகளை கருத்திற்கொண்டு இந்தத் திட்டத்திற்கு செலவு ரூபாய் 190 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்கொண்டு உற்பத்திச் செலவின் அடிப்படையில் இத்திட்டத்திற்காக இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்களுக்காக வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்படும் காகிதத்திற்கு, கடன் காலம் முடியும் வரை, மைய அரசு ஆயத் தீர்வையிலிருந்து விலக்கு அளிக்கும். இந்தத் திட்டத்தின் தற்போதைய நிலைமை—செய்தித் தாள் மற்றும் அச்சிடும் தாள் நிறுவனம் திருச்சி மாவட்டத்தில் புகளூரில் நிறுவபடும் என்ற விவரம் உறுப்பினர்களுக்குத் தெரியும். அதற்காக 568.73 ஏக்கர் நிலத்தையும், அதற்கு அருகில் உள்ள 31.01 ஏக்கர் புறம்போக்கு நிலங்களையும் கையகப்படுத்த அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது என்பதையும் இங்கே சேர்த்துச் சொல்ல விரும்புகிறேன். சர்க்கரை ஆலையில் இருக்கும் கரும்புச் சக்கைக்கும், தமிழ்நாடு காகித ஆலையிலிருந்து உற்பத்தியாகும் காகிதத்திற்கும் விற்பனை வரியிலிருந்து அரசு விலக்களித்துள்ளது. அரசு தலைமை மின் ஆய்வாளரின் ஒப்புதலுக்குட்பட்டு 17.5 மெகா வாட் திறன் கொண்டு சுழல் மின் உற்பத்தி இயந்திரத்தை நிறுவ தமிழ்நாடு செய்த்தாள் காகித நிறுவனத்திற்கு தமிழ்நாடு மின் வாரியம் அனுமதித்துள்ளது. இந்த நிறுவனம் தானே தயாரிக்கும் மின் சக்தி உற்பத்திக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு வனக் கழகத்திடமுள்ள இருப்பிலிருந்து 70 ஆயிரம் டன் கலப்பு இன நீலகிரி மரத்தை மின்துறை இனத்திற்கு ஒதுக்கியுள்ளது.

**என்ன** என்ன இதில் செய்திருக்கிறார்கள், எப்படி இந்த ஆலைகள் நடைபெற இருக்கின்றன என்பதற்காகத்தான் நான் இதை வெளியிடுகிறேன். அடுத்து ஒரு முக்கியமான குறிப்பு.

மரக்கூழ் தயாரிப்பு இயந்திரங்கள் வழங்கவும், அடிப்படை பொறியியல் பணி ஏனைய பணிகளுக்கு இந்த நிறுவனம் உடனடியாகவும், படிப்படியாகவும் சுமார் ரூ. 18.48 கோடிக்கு வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு இதுவரை அரசு ரூபாய் 25.20 கோடியை பங்கு மூலதனத் தொகையாக அளித்துள்ளது. ரூ. 5.50 கோடி விரைவில் வழங்கப்படவிருக்கிறது. இத்திட்டத்திற்கு ரூ. 190 கோடி அளவுக்குக் கிடைக்கும்.

தமிழ்நாடு அரசு ரூபாய் 31.5 கோடி, சர்க்கரை ஆலைகளுக்கும் அரசுக்கும் சொந்தமான நிலங்கள் 25 கோடி ரூபாய், நிதி உதவி நிறுவனங்கள் மூலமாகக் கிடைக்கும் தொகை ரூபாய் 32.5 கோடி, கடன் ரூபாய் 113.5 கோடி, நடை-



1982 பிப்ரவரி 18] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

முறை மூலதனம் ரூபாய் 10 கோடி. ஆக ரூபாய் 111 கோடி அளவுக்குக் கிடைக்கும். இந்த உலக வங்கித் திட்டத்திற்கு இந்தியப் பேரரசு, இந்திய தொழில் வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் மூலமாக ரூபாய் 80 கோடிக்கு சமமாக, 100 மில்லியன் அமெரிக்கன் டாலர்கள் கடனுதவி அளிக்கும் என்று சொல்லியுள்ளது. ஆகவே இங்கே கேட்கும்போது, ரூ. 100 கோடி என்பது ரூபாய் 200 கோடி என்று எப்படி ஆயிற்று என்று கேட்பது நியாயம் தான்.

(முற்பகல் 11-00)

வெளியிலே சிலர் இதைப்பற்றி என்ன பேசுகிறார்கள் என்றால், ஏதோ தாங்கள் மேற்கொண்டு சொல்கின்ற ரூ. 100 கோடியிலே எங்களுக்கு என்று ஏதோ இருப்பதுபோலவும், அதனாலேதான் உயர்த்தியிருப்பது போலவும் மக்கள் தவறாக எண்ணுகின்ற அளவுக்குப் பேசப்படுகிறது. பல்வேறு உண்மைகள் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். இதைப் பற்றி முடிவு செய்வது இந்தியப் பேரரசு. அவர்களுடைய அனுமதியின்றி, உலக வங்கியோடு நாம் நேரடியாகப் பேச முடியாது. அவர்கள் வாங்கித்தான் நமக்குக் கொடுத்தாக வேண்டும். அது போக, இந்திய நிதி நிறுவனங்களுடன் நாம் கையெழுத்திட்டு ஏற்பாடு செய்கிறோம் என்றால், அதற்கு இந்தியப் பேரரசினுடைய அனுமதி வேண்டும் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட நிலையில், இந்தத் தொழில்களை நாம் பார்க்கும்போது, அது 1978 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன். அந்தப் பணி ஐந்தாண்டுகளில் முடிந்திருக்கும். அப்படி இல்லை என்று இருக்கும்போது, மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு வருபவர்கள் அதைத் தொடர்ந்து செய்ய வேண்டும். நாம் இடுகின்ற திட்டம் நாம் இருக்கும்போதே முடிந்துவிட வேண்டும் என்பது மட்டுமல்ல, அது எதிர்காலத்திலேயும் உதவியாக இருக்க வேண்டும் என்ற அளவுக்கு மக்களுக்குச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. நம் பதவிக் காலத்திலேயே முடிக்கும் அளவுக்கு சில திட்டங்கள் இருக்கின்றன. நாம் நெடுங்காலத் திட்டம் என்று செய்கின்றபோது, நாட்டுக்காகத்தான் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு செய்கின்றோமே தவிர, புகழுக்காகவோ, வேறு எந்த லாபத்திற்காகவோ அல்ல என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். தெரிந்தவர்கள் புரிந்துகொள்வார்கள். தெரிந்தவர்கள் புரிந்துகொள்ள மறுத்தால், இனிமேல் மறுக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

1978-79 முதல் 1980-81 வரையிலான காலத்தில் சுமார் 12,800 நிலச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. தொழில்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 6,008 சிறு தொழில்களுக்கு 13.99 கோடி ரூபாய் நிதியுதவியாக தொழில்

மையங்களுக்கு என்று வங்கியிடமிருந்து பெற்றுத் தரப்பட்டுள்ளது. இதை நான் இங்கே கூறும்போது, இந்தப் பதிவு பெற்ற சிறு தொழில்கள் மூலம் மட்டும் தோற்றுவிக்கப்பட்ட வேலைவாய்ப்பு 1.74 லட்சம் ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் வளர்ச்சி, வேலை வாய்ப்பு இவைகள் எல்லாம் இல்லை என்று சொல்கின்றார்களே, இந்த அளவுக்கு தொழில் மையங்கள் அமைத்திருக்கிறோமா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். நாங்கள் எப்படி வேலை செய்கின்றோம் என்பதை மக்கள் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, பாராட்டப்படக்கூடிய நிலையில்தான் தமிழகம் இருக்கிறது, இந்த அவைக்கு நிச்சயமாக அதிலே பெருமை உண்டு என்பதைக் கூறிக்கொள்ள விழைகிறேன்.

அபிவிருத்தி ஆணையாளர், சிறு தொழில்கள், மேற்கொண்ட ஒரு கணிப்பின்படி, 1979-80 ஆம் ஆண்டு நாட்டிலுள்ள 382 மாவட்டத் தொழில் மையங்கள், 6.65 லட்சம் பேர்களுக்குக் கூடுதலாக வேலைவாய்ப்பு அளிக்கின்ற புதிய தொழில்கள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் மையம் என்ற அளவில் சராசரியாக 306 புதிய தொழில்கள் அமைக்கப்பட்டு, 1,741 பேர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு தோற்றுவிக்கப் பட்டுள்ளது. ஏதோ பணத்தை மட்டும் கொடுக்கிறோம். அவர்கள் தொழில்கள் ஆரம்பிக்கிறார்கள் என்பது மட்டுமல்ல. ஒரு தொழில் மையம் ஆரம்பிக்கின்றபோது, அந்தத் தொழில் முறைகள் தெரியாதவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கவும் வழிசெய்கிறோம். அந்தப் பணியில் படித்தவர்கள் எல்லாம் பங்குகொள்ள வேண்டும் என்ற வகையிலும் இந்த அரசு பணி செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவிப்பதற்காக இதைச் சொல்கிறேன்.

இங்கே நான் இந்தப் பிரச்சினைக்குச் சம்பந்தமில்லாத ஒன்றைச் சொல்கின்றேனே என்று கருத வேண்டாம். செட்டி நாட்டரசர், மாண்புமிகு அங்கத்தினர் அவர்களைப் பற்றிச் சொல்கிறேன். அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொல்லும்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். "கிருஷ்ணா நதித் தண்ணீர் கொண்டு வர அரசிடம் பணம் இல்லை என்றால், அதை புரோக்கர்களிடமிருந்து வாங்கித் தர முடியும், தருகிறேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். அரசால் முடியாது என்ற நிதியை, செட்டி நாட்டரசரே வாங்கித் தருகிறேன் என்று சொல்கின்றார்கள். அவர்கள் அப்படிச் சொல்கின்றார்கள் என்றால், நான் அதற்கு உண்மையிலே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நேரத்திலே அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய 'பணத்தோட்டம்' என்ற புத்தகம் எனக்கு நினைவுக்கு வருகிறது. அதிலே அவர்கள் சொன்னார்கள். பணம் படைத்த பெரும் பணக்காரர்கள் எல்லாம் பம்பாயிலே, கல்கத்தாவிலே சென்று போய் பணம் போட்டிருக்கிறார்கள். இங்கே நிதி வந்தபோது, அவைகளெல்லாம் தேவையில்லை என்று திருப்பிவிட்டார்கள். அப்போது திரு. ஆர். கே. சண்முகம் அவர்கள், நிதி அமைச்சராக இருந்தபோது, திவானாக இருந்தபோது, அதை அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே பண வசதி இருப்பவர்கள், வெளி மாநிலங்களிலே உள்ள வங்கிகளில் போடுவதைவிட, இங்கேயே புதிய வங்கிகளைத் தொடங்கி இங்கேயே போடுவது நல்லது என்ற அளவில் ஒரு பொருளாதாரத் திட்டத்திலே சொல்லும்போது, அவர் அப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் நமது மாண்புமிகு அங்கத்தினர் செட்டி நாட்டரசருக்குச் சொல்லிக் கொள்கிறேன். அவர்களுடைய பணம் எங்கேயாவது வெளிநாட்டிலே இருந்தால், தயவு செய்து அதையெல்லாம் இங்கே கொண்டு வந்து, தமிழகத்திலே அரசுக்குப் பயன்படத்தக்க அளவுக்குச் செய்ய வேண்டும். அதே நேரத்தில் பல தொழில்கள், புதிய தொழில்கள் தோன்றுவதற்கு அதைப் பயன்படுத்தச் செய்ய வேண்டும். அவருக்குத் தெரிந்தவர்கள், அவர் சொன்னால் கேட்பவர்கள், நண்பர்கள் அது யாராக இருந்தாலும், பண வசதி உள்ளவர்கள் யாராக இருந்தாலும், அத்தனை பேர்களிடமும் அவருடைய அனுபவத்தை, திறமையை, வைத்துச் செய்ய வேண்டும். அது அரசுக்குத் துணையாக இருக்கும் என்று மட்டும் கருதாமல், அது மக்களுக்கும் உதவியாக இருக்கும், ஒரு தியாகமாக இருக்கும் என்று செய்வார்களானால், இந்த அரசு மட்டுமல்ல, எதிர்கால அரசும் நன்றியுள்ளதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.





போன மேலவைக் கூட்டத்திலேகூட அங்கத்தினர்கள் வீராணம் திட்டம் பற்றிச் சொன்னார்கள். இன்றைக்கு கிருஷ்ணா நதித் திட்டத்திற்கு பணம் வாங்கித் தருவதாகச் சொல்கின்றார்கள். எப்படியாவது நம் நாட்டுக்குத் தண்ணீர் வரச்செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இருக்கிறது. அந்த வகையிலே அவர்கள் இந்த முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் தமிழ் மொழிக்காகவும், தமிழ் நாட்டுத் தொழில் வளர்ச்சிக்காகவும், தமிழ் இசை வளர்ச்சிக்காகவும் எவ்வளவோ செய்திருக்கின்றார்கள். அதுபோல இதற்கும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களிடமுள்ள பணத்தை தமிழ் நாட்டிலேயுள்ள வங்கிகளிலே போடலாம் என்று சொன்னார்கள். மேற்கு வங்க அரசு மேற்கு வங்கத்திலேயுள்ள பொதுத் துறையிலே உள்ள பெரிய நிறுவனங்களுடைய பணத்தைக் கூட அந்த அடிப்படையிலே போட்டுக்கொள்ளலாம் என்றும், அப்படிச் செய்தால் வெஸ்ட் பெங்கால் கவர்ன்மென்ட்டினுடைய தேவைக்கு அதைப் பயன்படுத்தப்படலாம் என்றும் அங்கே சொல்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலும் அப்படிச் செய்வதற்கு முதல்வர் அவர்கள் என். டி. சி. யில் ஆதரித்துச் சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1982 பிப்ரவரி 18

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** சொல்லுவதற்கு ஒன்றும் குறைச்சல் இல்லை. செய்ய வேண்டும். நாம் எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லலாம். செய்ய வேண்டுமல்லவா ?

**திரு. ஆ. நல்லசிவன் :** சொன்னால்தான் ஏதாவது கிடைக்கும்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** சொல்லாமல் செய்வர் பெரியர், சொல்லியும் செய்யார் சிறியர்.

தமிழ்நாட்டில் 783 தொழிற் கூடங்கள் அடங்கிய 33 தொழிற் பேட்டைகளை சிட்கோ தமிழக அரசு சார்பில் தொடர்ந்து நிர்வகித்து வருவதன் மூலமாக 45,500 பேர்களுக்கு தொழில் வாய்ப்பைத் தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பம்பாயில் உள்ள இந்தியப் பொருளாதார எடுத்துக்காட்டு மையம் பொருளாதார அடிப்படையில் புள்ளிவிவரங்களை தனது 1980 ஆம் ஆண்டு நவம்பர் வெளியீட்டில் வெளியிட்டுள்ளது. தமிழ் நாட்டின் தொழில் முன்னேற்றத்தைப் புள்ளிவிவரங்களோடு எடுத்துக் காட்டியுள்ளது. அதனுடைய விவரம் பின்வருமாறு :—

'உற்பத்தியும் வேலைவாய்ப்பும்'—1978 ஆம் ஆண்டு நிலவரப்படி தொழிற்சாலைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் தமிழகம் நான்காம் இடத்தைப் பெறுகிறது. பத்தாவது இடத்திற்குப் போயிருக்கிறதென்று சொன்னார்களே அவர்களுக்காகச் சொல்லுகிறேன். இங்கே உள்ளவர்களுக்காக அல்ல. அவர்களுக்குச் செய்தி போய்ச் சேர வேண்டும். தமிழகம் நான்காம் இடத்தில் இருக்கிறது. தொழிற்சாலைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் மகாராட்டிரம், குஜராத், ஆந்திரம் ஆகிய மாநிலங்கள் தமிழ் நாட்டைவிட முன்னேறி இருக்கின்றன. 1978 ஆம் ஆண்டில் வேலை வாய்ப்புகளைப் பொறுத்தமட்டில் தமிழகம் மூன்றாம் இடத்தைப் பெறுகிறது என்பதை அது குறிப்பிட்டிருக்கிறது. அதற்காக உண்மையிலேயே மகிழ்ச்சி யடைகிறேன். பத்தாம் இடத்தில் இல்லை, மூன்றாம் இடத்தில் வேலை வாய்ப்பு கொடுப்பதில்—இருக்கிறது. தொழிற்சாலைகளில் நான்காம் இடம், வேலை வாய்ப்பு கொடுப்பதில் மூன்றாம் இடம்—இதைத் தெரிந்து கொள்ள வேண்டும். நம்முடைய தேவை என்ன, எத்தனை தொழிற் சாலைகள் என்பதைவிட எத்தனை பேர்களுக்கு வேலை என்பதுதான் முக்கியம். அந்த வகையில் மூன்றாம் இடத்தில் இருக்கிறோமென்று குறிப்பு சொல்கிறது. 1978 ஆம் ஆண்டில் மகாராட்டிரம், உத்திரப் பிரதேசம் வேலை வாய்ப்பில் முதலிடத்தைப் பெற்றன. தொழில் உற்பத்தியில்



1970 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, 1977 ஆம் ஆண்டில் 137.60 ஆக இருந்தது 1978-ல் 164.10 ஆக உயர்ந்துள்ளது. 1979 ஆம் ஆண்டு மேலும் 5 சதவிகிதம் அதிகரித்து, 172.30 ஆக உயர்ந் துள்ளது. இதே ஆண்டில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண் ணிக்கை 8,508-லிருந்து 9,139 ஆக உயர்ந்துள்ளது. உற்பத்தியின் மதிப்பைக் கொண்டு பார்க்கும்போது, 1960-61-ல் நான்காம் இடத்திலிருந்து 1965-66-ல் மூன்றாம் இடத்திற்கு வந்தது. ஆனால் 1977-78-ல் மீண்டும் நான்காம் இடத் திற்குப் போயிற்று. உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பைக் கொண்டு பார்க்கும்போது, 1960-61-ல் நான்காம் இடத்திலிருந்து 1965-66-ல் களுடன் தமிழகம் ஒன்றாக விளங்குகிறது என்று சொல்லுவதில் பெருமை அடைகிறேன் என்று சொல்லவில்லை. அந்த அளவிற்கு அக்கறை காட்டுகிறோ மென்று மனநிறைவு அடைகிறேன்.

பட்டுத் தொழில் பற்றிச் சொல்லியாக வேண்டும். மார்ச் 31 வரையில் 4,10,000 ஏக்கர் முசுக்கொட்டை செடி பயிர் செய்து, பட்டு உற்பத்தி செய்தார்கள். மேலும் 35,000 ஏக்கர் அளவிற்கு விரிவுபடுத்தப்பட்டு, 22 கோடி ரூபாய் முதலீடு செய்த பிறகு, ஓரளவிற்கு தன்னிறைவுத் திட்டமென்ற அளவிலே, தன்னிறைவு எய்தும். அப்படிச் செய்தால், நமக்குத் தேவைப்படும் 1,300 டன் பட்டினை நாமே உற்பத்தி செய்யலாம்.

மேலும் 1980-81 ஆம் ஆண்டில் தமிழகத்தில் 1,49,000 கிலோ கச்சாப் பட்டும், 50,000 கிலோ கழிவுப் பட்டும் 18,39,716 கிலோ பட்டு நூல்களும் உற்பத்தி செய்யப்பட்டன. 64 இலட்சம் பட்டு முட்டைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. 1981-82 ஆம் ஆண்டில் மட்டும் 45,000 கிராம மக்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. திரும்பத் திரும்பச் சொல்கிறேன். கிராமப்புறங்களிலே மக்களை ஏமாற்றிவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். செய்யாததை எல்லாம் சொல்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஒன்றும் அறியாத மக்கள். கவர்ச்சியில் ஈடுபட்டு, என்னை ஆதரித்து அனுப்பிவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் தயவுசெய்து இதைப் பார்க்க வேண்டும். மேலும் 5,770 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. தமிழ் நாடு மாநில பட்டு உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு இணையம் ரூ. 2.53 கோடி மதிப்புள்ள 95,960 கிலோ கச்சாப் பட்டு விற்பனை செய்துள்ளது. 1981-82 லே எம். 5 முசுக்கொட்டை செடி எல்லா மாவட்டங்களிலும் பயிரிட உதவித் தொகை அளிக்கும் திட்டமும், விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டமும் நீட்டிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளாலே நடத்தப்படும் 25 கிராமப்புற இளம் பட்டுப் புழு வளர்ப்புச் சங்கங்களை 1981-82-ல் நிறுவ அரசு ஆணை வழங்கியுள்ளது.

தீப்பெட்டித் தொழிற்சாலைபற்றிச் சொல்லியாக வேண்டும். முன்பே இருந்த தொழில்தான். என்ன செய்துவிட்டார்கள் என்று கேட்கலாம். என்ன முன்னேறியிருக்கிறதென்று கேட்கலாம். அதற்கு எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. இருப்பதை அப்படியே வைத்துக் காப்பாற்றி, இருப்பதைக் கொடுக்காமல் இருந்தோமே என்று திருப்திப்படலாம். இருப்பதைவிட அதிகமாகச் செய்துவிட்டால் பெருமையாகக்கூட இருக்கலாம், தற்பெருமையாக இருக்கக்கூடாதென்று அடக்கத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். 1976-77 ஆம் ஆண்டில் தீப்பெட்டி சேவா சங்கங்கள் 11. தற்போதைய நிலைமை, 31—12—1981-ல் 100. ஒன்றுமே செய்யவில்லை. எங்களுடைய ஆட்சியில் என்று சொல்லுகிறார்கள். எங்களுக்குத் துணையாக உள்ள அதிகாரிகள் 11-லிருந்து 100 தான் ஆக்கியிருக்கிறார்கள். குறைந்திருக்க வேண்டும். பெரிய குற்றம் சுமத்துகிறார்கள். 11-லிருந்து தொழிற் சங்கங்கள் முன்பு 25, இப்போது 405. இந்த அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 1976-77-ல் 847. இப்போது 6,953. 1976-77-ல் பங்கு மூலதனம் மூலம் அரசின் உதவி ரூ. 2.75 லட்சம். ஆனால் இன்றைய நிலவரப்படி, 31—12—1981-ல் ரூ. 11.25 லட்சம். பங்கு மூலதனக் கடன்கள் பழைய விவரம் சரியாகக் கிடைக்கவில்லை— இன்று 70.31 இலட்சம் வேலை வாய்ப்பு பெற்றவர்கள் அன்று 16,000 இன்று 1,10,000. அப்படி கணக்குப் போட்டாலும், 3 பேர்கள் 5 பேர்கள் ஒரு குடும்பத்தில் இருந்தாலும், அந்தக் குடும்பத்திற்கு ஏதோ வருமானம் வருகிறதா இல்லையா என்பதுதான் என்னுடைய பணிவான கேள்வி. இந்த அரசு என்ன செய்தது என்று கேட்கிறார்களே : இந்த அரசுக்கு என்ன செய்யத் தெரியுமென்று கேட்கிறார்களே ; நீங்கள் எதற்காகப் பதவியில் இருக்கிறீர்களென்று கேட்கிறார்களே ! 16,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு என்று இருந்ததை 1,10,000 பேர் என்று பெருக்கியதற்காக மீண்டும் ஆட்சிக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதைச் செய்திருக்கிறோமென்பதிலே உண்மையிலேயே மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன்.

அடுத்து, செங்கல் உற்பத்தி. இது ஒரு உற்பத்தியா என்று கேட்கலாம். சிலருக்கு அடிக்கடி செங்கல் தேவைப்படுகிறது. வீடு கட்டினாலும் சரி, ஒரு வீடு செங்கல்லை உடைத்தாலும் சரி—செங்கல் என்று பார்த்தால். . .

(முற்பகல் 11-20)

1977 ஆம் ஆண்டுக்கு முன்பு குறிப்பிடத்தக்க அளவுக்கு ஒன்றும் உருவாகவில்லை. அத்தகைய சங்கங்கள் 7 இருக்கின்றன. 1,300 பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். 460 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். தனியார் முதலீடு அதில் எவ்வளவு என்ற விவரத்தைத் தேடி கண்டுபிடிக்கவில்லை. அரசுக்கு ஒரு பெரிய பொறுப்பு இதிலே இருக்கிறது.





இங்கு இருக்கின்ற அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் பொறுப்பு இதிலே இருக்கிறது. மேலும் ஒரு வேண்டுகோளையும் இங்கு விடுக்கிறேன். அந்தப் பொறுப்பையும் சொல்கிறேன். அதை இங்கு நினைவுபடுத்துகிறேன்

கிராமங்களுக்குப் போனால் பெரிய பெரிய பள்ளங்களை நாம் பார்க்கிறோம். ரோடுகள் கொஞ்சம் கொஞ்சமாக அகலம் குறைந்து கொண்டே வருகின்றன. மக்களுடைய போக்குவரத்துபற்றி ஒரு சாராருக்கு கவலையேயில்லை. பள்ளம் தோண்டி மண் எடுக்கிறார்கள். லாரியிலே வந்து மண் எடுத்துவிட்டுப் போய்விடுகிறார்கள். முந்தைய ஆட்சிக் காலத்தில் என்னுடைய சத்தியா தோட்டத்தில் ஒரு எல்லையில் ஒவ்வொரு மரமாகச் சாய்ந்துகொண்டே வந்தது. எடுத்து நிறுத்த முடியாது. என்னவென்று பார்த்தால், பெரிய பெரிய மரங்கள் அவை. அடியிலேயிருந்து மண்ணைத் தோண்டியெடுத்து லாரியிலே கொண்டு சென்று விடுவார்கள். ஆனால் மண் எடுப்பது வெளியே தெரியாது. அதனால் பள்ளமாகிவிட்டது. அது தனிப்பட்ட தோட்டம், பரவாயில்லை. ஆனால் மக்கள் தொகையின் காரணமாக போக்குவரத்தைப் பெருக்க வேண்டிய நிலையில் இருக்கின்றபோது, போக்குவரத்து வசதி போதாது என்ற நிலையில் போக்குவரத்து வசதியைப் பெருக்க சாலையை அகலப்படுத்த வேண்டிய நிலையில் நாம் இருக்கும்போது, ஆங்காங்கு இப்படி மண் எடுத்து பள்ளம் தோண்டுவது என்பது மன்னிக்க முடியாத குற்றம். அதற்கு சில நடவடிக்கைகளை அரசு கையாளவேண்டியிருக்கிறது. வீடு கட்ட கற்கள் வேண்டியிருக்கிறது

அடுத்து, ஏன் சுண்ணாம்பை வீடு கட்ட பயன்படுத்தக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் செய்யலாம். அதனால் வீடு கட்டுவது நிரந்தரமாக இருக்காது என்பதல்ல. உறுதியாக இருக்காது என்பதல்ல. சிமெண்டு மட்டுமல்ல சுண்ணாம்பையும் பயன்படுத்த இந்த அரசு முயல்கிறது.

அடுத்து, கதர் கைத்தறி வாரியத்தின் மூலம் செங்கல் உற்பத்தி பற்றி குறிப்பிடுகிறேன். மண் பாண்டம் செய்யும் அலகுக்கு ரூபாய் 3 ஆயிரம் வீதமும், செங்கல் சூளைக்கு ரூபாய் 5 ஆயிரம் வீதமும் உதவி அளிக்கப்பட்டு வருகிறது. 1978-79-ல் 557 பேர்களுக்கும், 1979-80-ல் 620 பேர்களுக்கும், 1980-81-ல் 2,013 பேர்களுக்கும், 1981-82-ல் 2,918 பேர்களுக்கும் வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. திட்டமிட்டபடி செய்யப்பட்டிருக்கிறது. 1978-79-ல் 11 லட்சமும், 1979-80-ல் ரூ. 13 லட்சத்து 5 ஆயிரமும், 1980-81-ல் ரூ. 40 லட்சத்து 50 ஆயிரமும்,

1981-82-ல் ரூ. 54 லட்சத்து 40 ஆயிரமும் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. தொழில் நிறுவனங்களில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்றெல்லாம் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் உண்மையில் தமிழ் நாடு தொழில் முன்னேற்ற நிறுவனமும் மற்றும் அரசு தொழில் நிறுவனங்களும் லாபம் அடைந்துள்ளன. 1974-75-ல் ரூபாய் ஒரு லட்சத்து 69 ஆயிரம் நஷ்டம். 1975-76-ல் ரூ. 2 லட்சத்து 77 ஆயிரம் நஷ்டம். 1979-80-ல் ரூ. 32 லட்சத்து 15 ஆயிரம் லாபம். தமிழ் நாடு துணிக் கழகம் ரூ. 2.97 லட்சம் லாபத்தில் இருந்தது. அதை ரூ. 6.52 லட்சம் லாபமாக ஆக்கியிருக்கிறோம். தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ரூ. 2.15 லட்சம் லாபம் அடைந்துள்ளது. அதற்கு அடுத்து தொழில் முன்னேற்றக் கழகம் 1974-75-ல் ரூ. 36 லட்சம் 76 ஆயிரம் லாபம் அடைந்துள்ளது. 1975-76-ல் ரூ. 89.19 லட்சம் லாபம் அடைந்துள்ளது. 1979-80-ல் ரூ. 115.16 லட்சம் லாபம் அடைந்துள்ளது. நஷ்டம் அடைந்துள்ள நிறுவனங்களையும் அதே சமயத்தில் அவை எவ்வாறு லாபம் அடைந்துள்ளன என்பதையும் குறிப்பிடுகிறேன். நாம் இந்த ஆண்டு தொடங்குகின்ற, முதன் முதலாக முதலீடு செய்கின்ற நிறுவனங்களின் மூலம் லாபம் வருகிறதா, இல்லை நஷ்டம் வருகிறதா என்பதல்ல பிரச்சினை. ஆனால் தொடர்ந்து எப்படி நடந்து வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மன்ற உறுப்பினர்களும் நன்றாக உணர்வார்கள் என்பதில் ஐயமில்லை. ஒரு நிறுவனம் 1974-75-ல் ரூ. 1.04 லட்சம் லாபத்தில் இருந்தது. 1975-76-ல் ரூ. 45.28 லட்சம் நஷ்டம். 1979-80-ல் ரூ. 17.53 லட்சம் லாபம். 1974-75-ல் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் ரூ. 20.06 லட்சம் நஷ்டம் காட்டியது. 1975-76-ல் அது ரூ. 12.33 லட்சம் நஷ்டம் என்ற அளவில் குறைக்கப்பட்டது. 1979-80-ல் ரூ. 22.70 லட்சம் லாபம்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு புள்ளிவிவரத்தை இங்கே தந்திருக்கிறார்கள். அது எந்த வெளியீட்டில் இருக்கிறது என்பதைச் சொன்னால், எங்களுக்குப் பயனுடையதாக இருக்கும். இந்த அவைக்கும் பயனுடையதாக இருக்கும். 1979-80-ல் காம்ட்ரோலர் அண்ட் ஆடிட்டர்-ஜெனரல் ஆப் இந்தியா அவர்களுடைய ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருந்த விவரத்தை நான் அன்றைக்குக் குறிப்பிட்டேன். அது இப்போதும் என் கையில் இருக்கிறது. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற புள்ளிவிவரம் அதில் இருக்கிறதா என்று நான் பார்த்தேன். இல்லை. எதில் இருக்கிறது என்று சொன்னால், நான் சொன்னது தவறு என்றால், திருத்திக்கொள்கிறேன்.





என்னிடம் இருக்கிற ரிப்போர்ட்டில் இந்த அரசை 1980 மார்ச்சில் ரிமார்க் செய்திருக்கிறது. அதில் பதில் அனுப்பவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நஷ்டம் அடைந்துள்ள பல நிறுவனங்கள் இன்றைக்கு லாபம் அடைந்துள்ளன என்கிற விவரத்தையும் அதே ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருப்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் முன்பு 1974-75-ல் ரூ. 8.86 லட்சம் லாபம் சம்பாதித்தது. ஆனால் 1975-76-ல் ரூ. 61.54 லட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. 1979-80-ல் ரூ. 1.90 லட்சம் லாபம் சம்பாதித்துள்ளது. பல்லவன் போக்குவரத்துக் கழகம் 1975-76-ல் ரூ. 89.89 லட்சம் நஷ்டம் அடைந்துள்ளது. 1979-80-ல் ரூ. 3 ஆயிரம் லாபம் அடைந்துள்ளது. சோழன் போக்குவரத்துக் கழகம் 1974-75-ல் ரூ. 28.81 லட்சம் நஷ்டம் அடைந்துள்ளது. 1975-76-ல் ரூ. 102.81 லட்சம் நஷ்டம் அடைந்துள்ளது. 1979-80-ல் ரூ. 18.31 லட்சம் லாபம் அடைந்துள்ளது. அண்ணா போக்குவரத்துக் கழகம் 1974-75-ல் ரூ. 3.08 லட்சம் லாபம் ஈட்டியுள்ளது. 1975-76-ல் அதற்கு ரூ. 25.81 லட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. 1979-80-ல் ரூ. 2.13 லட்சம் லாபம் அடைந்துள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதே ரிப்போர்ட்டில் இருப்பதாகச் சொன்னார்கள். இன்டக்சை எடுத்துக் கொண்டால் கூட கட்டபொம்மன் மற்றும் பல்லவன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்ஸ் பற்றி மட்டும் சொல்லியிருக்கிறார்கள். மற்றவைகளைச் சொல்லவில்லை. 194 ஆம் பக்கத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகம்

(முற்பகல் 11-30)

பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிற புள்ளிவிவரம் அதிலே இல்லை. ஒருவேளை வேறு ஏதாவது இலாக்காவிலேயிருந்து புள்ளிவிவரம் கொடுத்திருப்பார்கள். அப்படியானால் அதை எங்களுக்கும் தந்தால் பயனுள்ளதாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : எல்லோருக்கும் பயன்பட வேண்டும் என்பதற்காகத்தான் இவற்றையெல்லாம் படிக்கிறேன். அதற்குரிய ஆதாரங்களையும் இந்த அவையிலே தர ஏற்பாடு செய்கிறேன். புதிதாக வேலை வாய்ப்பளிக்கும் திட்டங்களைப் போடும்போது, லாப நஷ்டக்

கணக்குப் போடுகிறோமே, அப்படி கணக்குப் போடும்போது, ஒரேயாண்டில் லாபம் வருவதில்லை. ஆனால் தொடர்ந்து லாபம் வருகிறது. எந்தெந்த வகையில் நஷ்டம் வருகிறது என்று பார்க்கும்போது, தொழிலாளர்கள் நலத்திற்காக நாம் எதைச் செய்தாலும், பல்வேறு நிகழ்ச்சிகள் மூலமாக நாம் எடுக்கும் முயற்சிகள் தடைபடும்போது அரசுக்கும், தொழிலாளர் களுக்கும், நாட்டுக்கும் எவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்படுகிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1979-லே வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் 331, 1980-லே 293. 1979-லே வீணான மனித உழைப்பு நாட்கள் 83 லட்சம். 1980-லே வீணான மனித உழைப்பு நாட்கள் 35 லட்சம். போக்குவரத்துக் கழகங்களிலே பேச்சுவார்த்தைகள் மூலம் ஏற்பட்ட சம்பள உயர்வு ரூ. 70-லிருந்து ரூ. 120 வரை. ஏன் இதையும் அதையும் சேர்த்துச் சொல்கிறேன் என்று சொன்னால், லாபம் வருகிறது என்று சொன்னால் ரூ. 70-லிருந்து ரூ. 120-க்கு ஊதிய உயர்வு கொடுக்க முடிகிறது. நஷ்டம் வரும்போது, அப்படிக் கொடுக்க முடியவில்லை. ஆகவே, இந்த நிலையைப்பற்றி இரண்டு குறிப்புகளையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று சொல்கிறேன். இன்றையதினம் கொஞ்சம் குறிப்புகளைத்தான் கொண்டு வந்திருக்கிறேன். நேற்றையதினம் தலைவர் அவர்கள் கேட்டார்கள், ஆகவே, முடித்துவிடலாம் என்று. . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நான் ஒன்றும் சொல்லவில்லையே !

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : போனஸ் சட்டப்படி கொடுக்க வேண்டியதற்கும் அதிகமாக, ஊக்க ஊதியம் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 100-லிருந்து, ரூ. 120 வரை பயன்படும் வகையில் அளிக்கப்பட்டுள்ளது. இதனால் பயன்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 60 ஆயிரம். தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், அவர்களுடைய பிரச்சினைகளைப் பற்றிப் பேசி, அவர்கள் மாதம் ஒன்றுக்கு 145 ரூபாய் கூடுதலாகப் பெற்றிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடும்போது, நான் பெருமைப்படுகிறேன். இவற்றையெல்லாம் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லி யிருப்பார்கள் என்று நம்புகிறேன். அப்படியானால், இவற்றையெல்லாம் படித்து நேரத்தை வீணாக்க நான் விரும்பவில்லை.

திரு. ப. மாணிக்கம் : நான் நேரடியாக அனுபவத்தின் மூலமாகச் சொல் கிறேன், தென் மாவட்டங்களிலே கட்ட பொம்மன் போக்குவரத்துக் கழகத் துக்கும் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்துக்கும் மேல்மையான போட்டி இருக்கிறது. சில நேரங்களிலே பேருந்துகள் புறப்படவேயில்லை கூட நிலைமை ஏற்படுகிறது. கட்ட பொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்கு வரவேண்டிய





லாபம் பாதிக்கப்படுகிறது என்றெல்லாம் கூட புகார்கள் இருக்கின்றன. இந்த நிலைமைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்களும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : எதிலும் போட்டி வேண்டும், பொறாமை தான் இருக்கக்கூடாது. இப்படித்தான் பெரியவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். அரசினுடைய பிரிவாக இருந்தால் கூட, உங்களுடைய இலாக்காவை விட இந்த இலாக்கா நிறைய வேலை செய்திருக்கிறது; அல்லது பலனை அதிகமாகக் காட்டியிருக்கிறது என்று சொல்வதில்தான் பெருமை இருக்கிறது. போட்டியால் நஷ்டம் வந்தது என்று சொன்னால், அது எப்படி நியாயம் என்பது எனக்குத் தெரியாது.

திரு. ப. மாணிக்கம் : போட்டி வேண்டாம் என்று சொல்லவில்லை. இந்த ஆண்டு, ஜனவரி 1 ஆம் தேதி நான் திருச்செந்தூரிலிருந்து புறப்படும்போது, நான் ஏறவேண்டிய கட்ட பொம்மன் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த பஸ் பத்து நிமிட நேரம் தாமதமாக வந்ததால், பாண்டியன் போக்குவரத்துக் கழக பஸ்ஸிலே ஏறினேன். பின்னர் கட்ட பொம்மன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பஸ்ஸை டிரைவர் ரோட்டின் நடுவே நிறுத்தி, அங்கே 1½ மணி நேரம் தகராறு ஏற்பட்டு, காலதாமதம் ஏற்பட்டது. மதுரையிலே கூட இந்த மாதிரி பிரச்சினைகள் உருவாகி மோதல் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமைகளைப் பரிசீலித்து பரிகாரம் காண்பதன் மூலமாக பெரிய கஷ்டங் களைத் தவிர்க்கலாம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : 'தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்' என்று சொல்லும் நம்மால் இந்த இரண்டு போக்குவரத்துக் கழகங்களையும் சேர்ந்த தொழிலாளர்களை ஒன்றுபடுத்த முடியவில்லை என்று சொன்னால், அது வேதனைக்குரிய விஷயம். (நிர்வாகம் தான் அதற்குக் காரணம் என்று யாரோ ஒரு உறுப்பினர் உட்கார்ந்துகொண்டு சொன்னார்.) நிர்வாகம் செய்பவர்கள் காரை ஓட்டுவதில்லை. ஓட்டுநர்கள் தான் காரை ஓட்டுகிறார்கள். எங்கேயாவது வேண்டுமென்றே இப்படிப்பட்ட தவறுகள் நடந்தால், அவற்றைச் சுட்டிக்காட்டினால், மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

அடுத்து, தோட்டத் தொழிலாளர்கள் பயனடைந்ததையும் நான் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே தெரிவித்த 45 தொழில்களில், இந்தத் தொழி லில் மட்டும் பயனடைந்தவர்கள் 75 ஆயிரம் பேர்கள் என்பதை தயவு செய்து தெரிந்துகொள்ள வேண்டும். இந்த அரசு தொழிலாளர்கள் நலனுக்கு எதி ராக உள்ள அரசு என்று குற்றம் சாட்டப்படுகிறது. தொழிலாளர்கள்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 18

விரோத அரசு என்று குற்றம் சாட்டப்படுகிறது. தொழிலாளர்களை அழிக்க சட்டங்களை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது என்றும் முன்பு சொல்லப் பட்டது. முதலாளிகளுக்குச் சாதகமாக இருந்து தொழிலாளர்களை அழிப்பது என்பதும், தொழிற்சங்கங்களை அழிப்பது என்பதும் தான் இந்த அரசின் கொள்கை என்றெல்லாம் எங்கள் மீது வீண் பழி சுமத்தப்படுகிறது. இந்த 'பழி' என்ற வார்த்தையை என் சொல்கிறேன் என்று சொன்னால், இல்லாததைச் சொல்லும் போது அது 'பழி' என்று வருகிறது. உண்மை யில்லை என்று தெரிந்தும் இல்லாததைச் சொல்லும்போது, அது பழிசுமத்து வதாகிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தினசரி 50 பைசாவிலிருந்து 1.75 ரூபாய் வரையில் கூடுதலாக இப்போது பெறுகிறார்கள். அவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால், 7,500 பேர்கள். இவ்வளவு தொழிலாளர்களின் குடும்பத்திற்கும் நாங்கள் உதவி செய்திருக்கிறோம். அவர் களை அழிக்கப் பார்க்கிறோம் என்று சொல்பவர்களைக் கேட்கிறேன், 50 பைசாவிலிருந்து 1.75 ரூபாய்வரை அவர்கள் கூடுதலாகப் பெறுவதற்கு உதவி செய்தோமே, அது அவர்களை அழிப்பதற்காகவா ?

அடுத்தபடியாக, நெய்வேலி செராமிக்ஸ் மற்றும் ரிஃப்ராக்டர்ஸ் தொழிற் சாலைத் தொழிலாளர்கள் பிரச்சினையிலே ஏற்பட்ட உடன்பாட்டின் பயனாக திரும்பவும் போனஸ் 20 சதவிதம் என்ற வகையில் நபர் ஒன்றுக்கு ரூ. 250 என்ற அளவிலே பெற்றிருக்கிறார்கள். இதனால் பயன்பட்ட தொழிலாளர் களின் எண்ணிக்கை 550 பேர்கள்.

அதுபோல, திருப்பூரில் உள்ள 1,300 பனியன் தொழிற்சாலைகளில், வேலை நிறுத்தம் ஏற்பட்டபோது, அங்கு ஏற்பட்ட பேச்சுவார்த்தைகளின் பயனாக பயன்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 20 ஆயிரம். முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படிக்கின்ற பட்டியல் பூராவும் தொழிலாளர் நல இலாக்காவிடமிருந்து அவர்களுக்குக் கிடைத்ததா ? இந்தப் பிரச்சினைகளில் தொழிலாளர்கள் சங்கம் [illegible] செய்யாமல் தொழிலாளர் இலாக்கா மட்டும் பேசி முடித்ததா ? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால், சர்க்கார் மட்டும் போதும், தொழிற் சங்கங்கள் வேண்டாம் என்ற அளவிலே இருக்கிறது. தொழிற் சங்கங்கள் போராடிப் பெறுகின்றன. எங்களுடைய பங்கும் அதிலே [illegible] இதில் எங்களுடைய பங்கும் இருக்கிறது. [illegible] அங்கீகரிக்க வேண்டும்.



1982 பிப்ரவரி 18]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : 'நீங்கள்' ஏதோ செய் கிறீர்கள் என்ற அளவிலே இந்த அரசும் ஏதோ செய்கிறது என்று ஒத்துக் கொண்டதற்காக நன்றி. போராடினார்கள், பெறுகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்ல விரும்புகிறார்கள், சங்கம் பங்கெடுத்திருக்கிறது என்றும் சொல்கிறார்கள். சங்கம் எதற்கு என்ற வகையில் பேசுகிறார்கள். நான்கூட அது தான் கேட்கிறேன். பிரச்சினைகளைப் பேசி முடிக்கலாம் என்று சொன்னால், சங்கம் எதற்கு ? போராட வேண்டும் என்று சொன்னால் தான் சங்கம் வேண்டும். பேசி முடிக்கலாம் என்று சொன்னால், அதே சங்கம் போராட்டச் சங்கமாக இல்லாமல், ஒரு 'அசோசியேஷன்' என்ற அளவிலே கூட

(முற்பகல் 11-40)

இருக்கலாம். சங்கம் இல்லை என்றால் உங்களுக்கு 'ரோல்' இல்லை. நீங்கள் இல்லை என்றால் தொழிற் சங்கம் ஏது ? பிரச்சினைதான் ஏது ? (சிரிப்பு).

திரு. ப. மாணிக்கம் : சங்கம் சமணர்கள் காலத்திலிருந்து தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. தமிழ்ச் சங்கமும் சங்கம்தான். சங்கங்கள் போராடித் தான் தத்துவங்களையும், கருத்துக்களையும், இலக்கியத்தையும், சமயத்தையும் வளர்த்திருக்கின்றன.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சங்கம் என்று சொல்லிவிடுவ தாலேயே எல்லாச் சங்கங்களும் ஒன்றாகிவிடுமா ? இராமச்சந்திரன் என்ற பெயர் வைத்துக் கொண்டிருப்பவர்கள் எல்லோரும் ஒன்றாகிவிட முடியுமா? கதையில் வருகிற இராமச்சந்திரனை ஏகபத்தினி விரதன் என்று சொல்கிறோம். என்னையும் அப்படிச் சொன்னால், சரியாக இருக்குமா ? அப்படி, சங்கம் என்றால் எல்லோரும் ஒன்றாகிவிட முடியாது. நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், நான் மூன்று கல்யாணம் செய்து கொண்டவன். அதனால் சொல் கிறேன். எனவே சங்கம் என்ற உடனே எல்லாச் சங்கங்களும் ஒன்று என்று எப்படி சொல்ல முடியும் ? என்றாலும் நான் ஒன்றை அறுதியிட்டு, உறுதி யாகச் சொல்ல விரும்புகிறேன். சங்கங்கள் வேண்டும். எதற்கு தொழி லாளர்களை ஒன்றுபடுத்துவதற்கு. சங்கங்கள் வேண்டும். எதற்கு ? தொழிலாளர்களின் கடமையை உணர்த்துவதற்கு ? சங்கங்கள் வேண்டும்; எதற்கு? தொழிலாளர்களின் எண்ணங்களை மற்றவர்கள் புரிந்து கொள் வதற்கு.

ஏன் அவசரச் சட்டம் கொண்டுவந்தோம் ? பேச்சு வார்த்தை மூலம். சிம்சன் கம்பெனியில் போராட்டம் இல்லாமல் நடக்கவில்லையா ? நான் பணி வன்போடு கேட்க விரும்புகிறேன், பின்னி கம்பெனியின் பேசினார்களே அத னால் என்னவாயிற்று ? 4, 5 விதங்களில் தோழர்கள் கஷ்டப்பட்டார்கள், அது

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 18

தான் மிச்சமே தவிர, முதலில் என்ன கேட்டார்களோ அதைப் பெற்றார்களா? பெற முடிந்ததா? எத்தனை பேர் வேலையை விட்டுப் போனால்தான் அந்த பின்னி மில் நடக்கும் என்று சொன்னார்களோ, அதைத் தானே ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது? இதற்கு எதற்கு 5 மாதங்கள் பட்டினியாக இருக்க வேண்டும்? இதை ஒப்புக்கொண்டு அதற்குப் பிறகு பேசிப் பேசி, கொஞ்சம் கொஞ்சமாக வேலையை ஆரம்பித்து, 5, 6 மாதங்களில் அவர்களுக்குக் கிடைக்கிற பணத்தையும் அதற்குச் சமமாக அரசும் மூலதனத்தைப் போட்டு தொழிற்சாலையில் உற்பத்தியைத் துவக்கியிருக்க முடியாதா? பொருளும் உற்பத்தியாகவில்லை. அவர்களுக்குப் பணமும் வந்து சேரவில்லை. கடைசியில் இப்போது மறுபடியும் போராட்டம். எதற்கு? வெளியே போனவர்களை எடுத்துக்கொள்ளுங்கள் என்று கேட்கிறார்கள். இது எங்கே போய் நிற்கும்? நான் சங்கங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. சங்கங்கள் ஒற்றுமைப்படுத்துகிற உணர்வுகளுக்குச் சொந்தமாக இருக்க வேண்டும். அதைத்தான் நான் ஏற்கெனவே ஒரு யோசனையாகச் சொன்னேன். இப்போதும் நான் சொல்லுகிறேன். அதைத்தான் அடிக்கடி மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

வேலை நிறுத்தம் ஒரு தொழிற்சாலையில் வேண்டுமென்றால், அங்கே எத்தனை தொழிற் சங்கங்கள் இருக்கின்றனவோ அத்தனை தொழிற் சங்கங்களைச் சார்ந்த அனைத்துத் தொழிலாளர்களும் ஒன்றாக இருந்து, அதில் 75 சதவிகிதத்தினர் வேலை நிறுத்தம் தேவை என்று ஒப்புக் கொண்டால், வேலை நிறுத்தம் செய்யப்பட வேண்டும். அதைப்போலவே ஏதாவது ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வது என்றாலும்கூட, அத்தனை தொழிற் சங்கங்களுடைய உறுப்பினர்களையும் கொண்ட கூட்டத்தில் 75 சதவிகிதத்தினர் ஒப்புக்கொண்டால்தான் கையெழுத்துப் போட வேண்டும். இதில் என்ன தவறு? தொழிலாளர்கள் மீது எங்களுக்கென்ன விரோதமா? 75 சதவிகிதத் தொழிலாளர்கள் வரமாட்டார்களே என்று சொல்ல முடியுமா? நல்லதைச் சொன்னால், அவர்கள் கேட்க மாட்டார்களா? அவர்களுக்கு அதிகமான பணம் வரும் என்றால், ஒப்புக்கொண்டு ஒத்துழைக்க மாட்டார்களா? ஆனால் அதைச் செய்யச் சொல்வதற்கு நாம் முன்வருவதில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனது கட்சியின் சார்பில் உள்ள தொழிற் சங்கத்தையும் இணைத்தே நான் இதைச் சொல்லுகிறேன். எந்தச் சங்கமானாலும் சரி, எந்த யூனியனானாலும் சரி, அண்ணா தொழிற் சங்கம் யூனியனாக இருந்தாலும் சரி, மற்றவர்கள் யூனியனாக இருந்தாலும் சரி, அவர்களுடைய கட்சியின் கொள்கை, அதோடு ஒட்டி வந்து கட்சியையும் வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் இருக்குமானால் தொழிலாளர்களை நாம் ஒன்றுபடுத்தவே



1982 பிப்ரவரி 18] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

முடியாது. கட்சியைத் தூக்கி வெளியே வைத்துவிட்டு, தொழிலாளர்களை ஒன்றுபடுத்தி தொழிலாளர்களுக்கு நன்மை செய்வதுதான் தொழிற்சங்கத்தின் வேலை என்று முடிவு செய்தோமானால்தான், உறுப்பினர் சொல்கிற தொழிலாளர் அரசு வரும். இதைச் செய்யாத வரையில், தொழிலாளர் அரசு வரும் என்று நாம் கற்பனை செய்து கொண்டிருக்கலாமே தவிர, வெளியே பேசலாமே தவிர, உண்மையில் தொழிலாளர் அரசு வர முடியாது. இந்த ஒற்றுமையைத்தான் நாம் இன்றையதினம் வளர்த்தாக வேண்டும்.

உழைக்கும் மக்களிடையே நாம் ஒற்றுமையை வளர்த்தாக வேண்டும். நான் இந்த மன்றத்தில் இருப்பவர்களைப்பற்றிக் குறிப்பிடவில்லை. தவறுதலாகச் செய்தி போட்டுவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். உழைக்கிற மக்கள் ஒன்று சேர்ந்து ஒரு குரலாக வர வேண்டும். அது எந்தத் தொழிலாக இருந்தாலும் சரி. அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் கொள்கை, அமரர் அண்ணாவின் கொள்கை என்பதைப் பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொழிலாளர் கொள்கை சம்பந்தமாகப் பேசும்போது, "பழி" போடுவதாகச் சொன்னார்கள் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையைக் கிளப்பிப் பேசியவர்களில் நான் ஒருவன். பழி போடுவது அரசியலாகாது. அதை நான் சார்ந்த கட்சி செய்யவும் செய்யாது. நாங்கள் எந்தக் கட்சியின்மீதும் பழி போடுவதும் இல்லை. தொழிலாளர் பிரச்சினைகளில் அணுகுமுறையில் தவறு இருக்கிறது என்று கடுமையான முறையில் விமர்சனம் செய்தவன் நான் என்பது உண்மை. நேற்றும் விமர்சனம் செய்தோம். இன்றும் விமர்சனம் செய்கிறோம். எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில், ஆட்சியில் உள்ள சில குறிப்பிட்ட நிலைமைகளைக் குறித்து எப்போதும் விமர்சனம் செய்கிறோம். ஆனால் எப்போதும் பழி போடுகிற நிலைமையில் விமர்சனம் செய்யவில்லை. கிட்டவட்டமாக 1,500 பால் வளத் துறையில் பணியாற்றிய ஊழியர்கள் வேலை இழந்து வெளியே நிற்கிறார்கள். அவர்களைப் பணியில் திரும்ப எடுப்பதற்கு இந்த அரசு தொழிலாளர் நலத் துறையின் மூலமாக என்ன நடவடிக்கை எடுத்தது? என்ன முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்று நான் கேட்டேன், இப்படி ஸ்தூலமான நிலையைச் சொல்லித்தான் கேட்டேனே ஒழிய, பழி போடுவதற்காக எதையும் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** ஒரு நல்ல பிரச்சினைபற்றி விளக்கம் சொல்வதற்கு வாய்ப்பு தந்தமைக்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 18

1,500 தொழிலாளர்கள் பால்வளத் துறையில் பணியாற்றியவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள் என்றார்கள். அவர்கள் வேலை நிறுத்தம் செய்ததாலா வெளியே அனுப்பப்பட்டார்கள் ? அதற்கு அல்ல. வேறு குற்றத்திற்காக அனுப்பப்பட்டார்கள். பால் உற்பத்தி செய்யப்படுவது இங்கே உள்ள அமைச்சரவர்கள் குடிப்பதற்கு மட்டுமல்ல. சாதாரண ஏழை எளிய மக்கள் குடிப்பதற்கு, பால் உற்பத்தி செய்து விநியோகிக்கிறோம். அதில் கலப்படத்தைக் கொண்டு வருகிறார்கள், கலப்படம் செய்கிறார்கள் என்று கண்டுபிடித்தால், அதற்காக வேலை நிறுத்தம் செய்வது என்றால் என்ன பொருள் ? , தவறு செய்தவர்களை வேலை நீக்கம் செய்தால், அவர்களையும் திரும்ப வேலைக்கு வைத்துக் கொண்டால்தான், நாங்கள் பணிக்கு வருவோம் என்றால் என்ன பொருள் ? வேலை நீக்கம் செய்தவர்களை வேலைக்கு எடுக்காவிட்டால், வேலை நிறுத்தம் செய்வோம் என்றால் என்ன நியாயம் ? மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நல்ல பாலில் தண்ணீர் கலக்கக்கூடாது என்றுதான் நாம் விரும்புகிறோம். ஆனால் இதற்கு உத்தரவாதம் இல்லை என்றால், என்ன பொருள் ? பால் குறைகிறது என்று வந்தால், அதற்கு யார் காரணமோ அவர் பொறுப்பேற்க வேண்டும் என்றும், அப்படிப்பட்ட தவறு செய்தால், அவரை வேலையை விட்டு நீக்குவோம் அல்லது முறைப்படி அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்போம் என்றால், அப்படிச் செய்யக் கூடாது, அவர்களையும் உடனே வேலைக்கு வைக்க வேண்டும் என்று சொல்லி, ஒன்றரை வருஷம் அல்லது 1 வருஷம் வேலைக்கு வராமலிருந்தால், இப்போது வேறு நபர்களை வைத்து வேலை நடக்கும் போது, அவர்களை யெல்லாம் வெளியே அனுப்பிவிட்டு நாங்கள் உள்ளே வர வேண்டும் என்று போராட்டத்தில் இறங்குவார்களானால், இது நியாயமா? இதுதான் சட்டம், ஒழுங்குக் கட்டுப்படும் நிலையா ? அடிக்கடி நீங்கள் தானே சொல்கிறீர்கள் "யார் தவறு செய்தாலும் நடவடிக்கை எடுங்கள், மக்களுக்கு யார் துரோகம் செய்தாலும் சரி, அவர்கள் யாராக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எந்தத் தொழிலில் இருந்தாலும் சரி, எந்தப் பதவியில் இருந்தாலும் சரி, நடவடிக்கை எடுங்கள், நாங்கள் உங்களுக்குப் பக்கபலமாக இருக்கிறோம்" என்று சொல்லுகிறீர்களே. இதுதான் நியாயமா என்று கேட்க விரும்புகிறேன். ஒன்றைச் சொன்னதற்காக நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பாராட்டுகிறேன். நேற்றும் விமர்சித்தோம், இன்றும் விமர்சிக்கிறோம் என்று சொன்னார்கள். நல்ல வேளை நாளைக்கும் சொல்வோம் என்று சொல்லவில்லை.



1982 பிப்ரவரி 18] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

**திரு. ப. மாணிக்கம்:** நாளையும் சொல்வோம்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** எதிர்காலத்தைப் பற்றி ...ங்கள் நிர்ணயிக்கவில்லை என்றால், அந்த வகையில் நன்றிகூறக் கடமைப் ...ட்டிருக்கிறேன். உங்களுடைய நல்லெண்ணத்தைப் பெறும் வகையில் ...சட்டப்படி, மனச்சாட்சிப்படி, இந்த அரசு செயல்படும் என்பதை மாண்புமிகு ...றுப்பினர் அவர்கள் நம்ப வேண்டும். 1,500 பேர் இன்றைக்கு வேலையில்லா ...மல் இருப்பதால், எனக்கென்ன மகிழ்ச்சியாகவா இருக்கிறது? இத்தனை ...பேருக்கு வேலை கொடுத்தோம் என்று சொல்கிற பட்டியலைப் படிக்க ...ஆசைப்படுகிற நாள் 1,500 பேருக்கு வேலை இல்லாமல் செய்து விட்டோம் என்று சொல்லுவதிலா பெருமைப்படுவேன் ? அதுவா எனக்கு மனநிறைவைத் ...தரப்போகிறது ? அந்தக் குடும்பங்கள் கஷ்டப்படுகிற நிலைமை எனக்குத் ...தெரியாதா ? அதே நேரத்தில் இங்குள்ள பாலுக்குக் காத்துக் கொண்டிருக் ...கும் 30 லட்சம், 25 லட்சம் இல்லை என்றாலும்—10 லட்சம் மக்களைப்பற்றி நாம் எண்ணிப்பார்க்க வேண்டாமா ? அவர்களுக்குத் துரோகம் செய்கிற ...வர்களை வேலையிலிருந்து எடுத்தால், அவர்களை மீண்டும் வேலைக்குச் ...சேர்த்தால்தான், நாங்களும் வேலைக்கு வருவோம் என்று பிடிவாதம் செய் ...தால், நாம் அதை ஏற்றுக் கொள்வதா ?

(முற்பகல் 11-50)

பால் எடுத்துச் செல்லும் வேன்கள் மீது கல் எறிவது, பால் வண்டி ஓட்டு ...நர்கள், பால் விநியோகித்தலில் ஈடுபட்டிருப்பவர்கள் ஆகியவர்களின் வீட்டுக் ...குச் சென்று மிரட்டுவது போன்ற செயல்களில் ஈடுபட்டு அவர்களுடைய உயிருக்குப் பாதுகாப்பில்லை என்ற நிலை ஏற்பட்டால், எப்படி ஒழுங்காக ...சமுதாயம் வளர முடியும் ? நல்ல பால் வேண்டும் என்று இங்கே சொல்லியிருக் ...கிறார்கள். பேரவையிலும் சொல்லியிருக்கிறார்கள், வெளியே சொல்லிக் ...கொண்டிருக்கிறார்கள் கூழாய்த் தண்ணீருக்கும் பாலுக்கும் வித்தியாசம் ...இல்லையென்றும், நல்ல பால் இல்லையென்றும் சொல்கிறார்கள். அப்படி ...வந்து சேர்வதற்கு யார் காரணம் ? அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால், வேலை நிறுத்தமா ? உண்மையிலேயே, அரசு நிறுவனமாக இருந்தாலும் சரி, யாரானாலும் சரி, தவறாக நடவடிக்கை எடுத்தால், நியாயத்தை ஒத்துக் ...கொள்ள மறுத்தால், அப்போது வேலை நிறுத்தம் செய்ய எல்லோருக்கும் உரிமையுண்டு. இதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இந்த அரசைப் ...ஆனால் ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஓராண்டுக் காலத்திற்கு ...பொறுத்தவரையில், பால்வள நிறுவனத்தில் இந்த ஓராண்டுக் காலத்திற்கு ...மேல்கப் பணியாற்றி பால்வள நிறுவனம் சென்னையில் ஒழுங்காகப் பணிபுரிய ...உதவினார்களே அவர்களை மறுபடியும் வெளியே வேலை இல்லாமல் தள்ள ...மனச்சாட்சி இல்லை இந்த அரசாங்கத்திற்கு. இந்த அரசாங்கத்தின்

எண்ணம் அதுவல்ல என்பதை மட்டும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் எப்படி சட்டபூர்வமாகப் பெற வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். அதிலும் போராட்டம்தான் என்றால், அதற்கு மக்கள் தான் பதில் சொல்ல வேண்டுமே தவிர, வேறு பதில் இருக்காது. இல்லாவிட்டால் தானியங்கி இயந்திரத்தை எதற்காக வைக்கிறோம்? அவர்களையே உறுப்பினர்களாக ஆக்கி அவர்களிடமே விநியோகத்தை ஒப்பபடைத்துவிடலாம் என்ற அந்த நிலைக்கு ஏன் வருகிறோம்?

மின்சாரத் துறையைப்பற்றிப் பேசும்போது சிலருக்குச் சந்தேகம் வந்தது. "கோடிட்டுக் காண்பிக்கப்பட்டது" என்றும் "மதுவிலக்கு எப்படி" ஆயிற்றோ அதைப் போல ஆகுமோ என்றெல்லாம் சொன்னார்கள். அதைப் போல இதுவும் என்று நினைத்துவிடாதீர்கள். நியாயத்தை ஏற்படுத்துவதற்கு வசதியாக திட்டம் போட்டுக் கொடுத்தால் ஒத்துக்கொள்ள மாட்டோம், வழக்கு மன்றத்திற்குப் போவோம் என்றால், இந்த அரசு என்ன செய்ய முடியும்? மக்களுக்குப் பதில் சொல்ல வந்திருக்கிறோம். மின்சாரம் அதிகமாகத் தேவை என்றால், தொழிற்சாலை எங்கே என்று கேட்கிறார்கள். புள்ளிவிவரம் கொடுக்கிறோம். மைய அரசிடம் உத்தரவு கேட்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். மின்சாரம் இருந்தால் தீர்க்க முடியும் என்றால், "உத்தரவு வாங்கி வைத்துக்கொண்டு இந்த மாநில அரசு என்ன செய்தது? கையால் ஆகாத அரசு,—மேலும் வரிசையாகச் சொல்லுவார்கள்—வக்கில்லை, வகையில்லை, துணிவில்லை" என்ற வார்த்தைகளையெல்லாம் சொல்லுவார்கள். இந்த மாதிரியான வார்த்தைகளை எவ்வளவுதான் கேட்டுப் பழகியிருந்தாலும், எனக்கு மறந்து போய்விடுகிறது. எல்லோரும் அப்படி மறந்துவிட மாட்டார்கள். மற்றவைகளை எண்ணிப் பார்க்கும்போது, பெரும்பான்மையோருக்கு சிறுபான்மையோருடைய ஆதிக்கத்தால் பாதகம் வரக்கூடாது என்பதுதான் எங்களுடைய எண்ணம். ஜனநாயகம் எல்லோருக்கும் இருக்க வேண்டும். அதே சமயத்தில் ஜனநாயகம் என்ற பெயரால் சர்வாதிகாரம் வந்துவிடக் கூடாது என்பதிலே எங்களுக்குக் கொஞ்சம் கூட மாறுபட்ட கருத்தில்லை. இது அப்படியில்லை.

திரு. ப. மாணிக்கம்: தலைவர் அவர்களே, திரும்பவும் தெளிவுபடுத்த வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. நேற்றும் இல்லை, இன்றும் இல்லை, நாளையும் இருக்காது. பால் பண்ணையைப் பொறுத்த வரையில் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். வேலை நிறுத்தமா அல்லது வெளியேற்றமா என்று கேட்டார்கள். வெளியேற்றப்படுவதற்குக் கூட சில நெறிமுறைகள் இருக்கின்றன. அவர்கள் வெளியேற்றப்பட்டாலும்கூட, அந்த நெறிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





இப்போதும் வேண்டிக்கொள்கிறேன், முதல்வர் அவர்களும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் இந்தப் பிரச்சினையை ஸ்தூலமாகப் பரிசீலித்து நிவாரணம் காண வேண்டுமென்று. பாலில் தண்ணீர் கலந்தாலும், சமுதாயத்திற்கு விரோதமாகக் காரியம் செய்தாலும், அப்படிப்பட்ட தவறுகள் செய்கிறவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுப்பதில் எங்களுக்கு ஆட்சேபணையில்லை. எனக்கும் அந்தச் சங்கத்திற்கும் தொடர்பில்லை. பொதுப் பிரச்சினை என்பதால், சொல்லுகிறேன். நான் சார்ந்துள்ள தொழிற்சங்கங்கள் சமூக விரோதச் செயல்கள் கூடாது, ஆனால் சமுதாயக் கடமையுண்டு என்று உணர்கிற இயக்கங்கள் பல்வேறு கொள்கைகளைப் பற்றி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுவதால், நானும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆனால் பால் பண்ணை விஷயத்தில் ஸ்தூலமான விவரங்கள் உண்டு. அதை அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பரிசீலிப்பது என்பதோடு மட்டும் இருந்துவிடாது. அது நியாயமல்ல. ஓராண்டுக்கு மேலாக அவர்கள் என்ன செய்தார்கள் என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். என்னென்ன வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிந்திருக்கும். ஒருவருக்கு வேலைக்குப் போக விருப்பம் இல்லையென்றால், அது அவருடைய உரிமை. வேலைக்குப் போகிறவர்களைப் போகாதே என்று சொல்லுவது நியாயமல்ல. அதுதான் என்னுடைய வேண்டுகோள். இந்த நாட்டிற்கு ஏதாவது நன்மை செய்வோம் என்று சொல்லி பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும்போது, அதை நடத்திக் காட்ட எங்களுக்குச் சக்தியிருந்தாலும், உறுப்பினர் அவர்களும் யோசனை சொல்ல பக்கத்திலே இருந்தாலும், அதை நாங்கள் நடத்தவில்லையென்றால், நாங்கள் பதவியில் இருந்து என்ன பயன்? எதற்காக நாங்கள் இருக்க வேண்டும்?

பேருந்து விடுங்கள் என்று கேட்கிறார்கள். விடுகிறோம். பாதுகாப்பை நாங்கள் கொடுக்க வேண்டாமா? எத்தனை பேருந்துகள் விடப்பட்டன என்பதைக் குறிப்பிடுகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1976—77 | ஆம் | ஆண்டில் | 4,953 | பேருந்துகள் |
| 1977—78 | ஆம் | ஆண்டில் | 5,068 | பேருந்துகள் |
| 1978—79 | ஆம் | ஆண்டில் | 5,601 | பேருந்துகள் |
| 1979—80 | ஆம் | ஆண்டில் | 6,407 | பேருந்துகள் |
| 1980—81 | ஆம் | ஆண்டில் | 7,103 | பேருந்துகள் |
| 1981—82 | ஆம் | ஆண்டில் | 7,735 | பேருந்துகள் |

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 18

கடந்த நான்கு ஆண்டுகளில் நாங்கள் மூவாயிரம் பேருந்துகள் அதிகமாக விட்டிருக்கிறோம் என்றால், அது சாதனை என்று நான் சொல்லவில்லை. நாங்கள் மக்களுக்குச் சொன்னோமே, "கிராமங்களிலிருந்து நகரத்திற்குச் சென்று வர உங்களுக்குப் பாதை வசதி, போக்குவரத்து வசதி செய்து கொடுப்போம்" என்றோமே அதை நாங்கள் நான்கு ஆண்டுக் காலத்திலே செய்ய முயற்சிக்கவில்லையா ?

அதைப் போலவே நாள் ஒன்றுக்கு பேருந்துகள் ஓடிய தூரம் 12.30 இலட்சம் கிலோமீட்டர் 1976—77 ஆம் ஆண்டில்.

1977—78-ல் 12.70 இலட்சம் கிலோ மீட்டர்கள்
1978—79-ல் 14.20 இலட்சம் கிலோ மீட்டர்கள்
1979—80-ல் 16.60 இலட்சம் கிலோ மீட்டர்கள்
1980—81-ல் 19.20 இலட்சம் கிலோ மீட்டர்கள்
1981—82-ல் 21.66 இலட்சம் கிலோ மீட்டர்கள்

இதன் பொருள் என்ன ? எத்தனை மக்களுக்குப் பயன்படுகிறது என்பதை கணக்குப் போட்டுப் பார்க்க வேண்டாமா ? பாதை வசதியில்லை, பேருந்து வசதிகள் இல்லை, என்ன செய்கிறார்கள் என்று கேட்கிறார்கள். எந்த அரசாக இருந்தாலும், ஓரே ஆண்டில் தமிழ் நாட்டில் உள்ள 17 ஆயிரம் கிராமங் களுக்கும் பேருந்துகளை விட நிதி வசதி உண்டா என்று கேட்கிறேன். நான் இங்கே இன்னுமொன்றைக் குறிப்பிட்டாக வேண்டும்.

நாள் ஒன்றுக்கு பயணம் செய்தவர்களின் எண்ணிக்கையை நாம் பார்ப் போம். 1976—77-ல் 37.50 இலட்சம் பேர்கள். ஆனால் இன்றைய தினம், அதாவது 1981—82-ல் 65.62 இலட்சம் பேர்கள். ஒன்றுக்கொன்று நூற்றுக்கு நூறு அதிகமாக ஆக்கப்பட்டிருக்கிறது. மக்கள் போக்குவரத்து வசதிக்காக எதுவுமே செய்யவில்லை என்று சொல்லும் போது, இதையெல்லாம் சாதனை என்று ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை. யாருமே செய்ய முடியாததை நாங்கள் செய்தால்தான் சாதனை. அண்ணாவின் கொள்கையை நிறை வேற்றினால்தான், நிறைவேற்றப்பட்டது என்ற நிலைமை வந்தால்தான், சாதனை. ஆகவே அந்தச் சாதனையை ஏற்படுத்தத் தொடர்கிறோம், தொடர்ந்து முயற்சிக்கிறோம் என்று சொல்வோமே தவிர, எல்லாவற்றையும் முடித்துவிட்டோம் என்று சொல்லத் தயாராக இல்லை. ஆனாலும் நான்கு

(நண்பகல் 12-00)

ஆண்டுகளில் இப்படிச் செய்திருக்கிறோம். அதுபோலவே வழித்தடங்களின் எண்ணிக்கையைப் பார்க்க வேண்டும், 1976-77-ல் 2,046 வழித்தடங்கள். இன்று 3,874 வழித்தடங்கள். இந்த வழித்தடங்களில் எல்லாம் பேருந்துகள்



1982 பிப்ரவரி 18] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

போய் வருவது என்றால், அந்தப் பாதைகளைச் செப்பனிடாமல் பேருந்துகள் போக முடியுமா ? அந்தப் பாதைகள் செப்பனிடாமலே போக முடிந்தது என் றால், இதற்கு முன்பும் அப்படிச் செய்திருக்கமாட்டார்களா ? இதை நான் திரும்பத் திரும்ப இங்கே குறிப்பிட காரணம், இந்த வார்த்தையை நான் திரும்பப் சொல்கிறேன் என்பதற்குக் காரணம், சிலர் வெளியிலே இருந்துகொண்டு எது வும் செய்யவில்லை, எதுவுமே செய்யவில்லை என்று சொல்வது. அவர்கள் மீது எனக்கு வருத்தம் தான். கோபம் இல்லை. ஏன் தெரிந்தவர்கள்கூட இப்படிச் சொல்கின்றார்கள் என்பதற்காகத் தான் சொல்கிறேன். வெளியிலே போய் 'பொய்' சொல்கின்றார்கள். இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் தான் 'பொய்' என்ற வார்த்தையை உபயோகிக்கக்கூடாது. உண்மைக்குப் புறம்பான என்று சொல்ல வேண்டும். நான் சொல்வது வெளியிலே இருப் பவர்கள் 'பொய்' சொல்கிறார்கள் என்றுதான் சொல்கிறேன். வெளியிலே பொய் பேசுகிறார்கள் என்று சொல்கிறேன். இங்கே இருப்பவர்கள் பொய் சொன்னார்கள் என்று சொன்னால், குறுக்கிடலாம்.

1976—77-ல் இருந்த புதிய வழித்தடங்கள் 60. இப்போது 397. நாங்கள் எதுவுமே செய்யவில்லையா ? 60 வழித்தடங்கள் என்று இருந்தது இப்போது 397 வழித்தடங்கள் என்று சொல்கிறேன். இந்த அமைச்சரவை எதுவுமே செய்யவில்லை என்று சொல்கின்றார்கள். இந்த இலாக்கா எதுவுமே செய்யவில்லை என்று ஒட்டுமொத்தமாகச் சொல்கின்றார்கள். இப்படி இந்த அமைச்சரவை எதுவுமே செய்யவில்லை என்று சொன்னால், அது எப்படி நியாயமாகும் ? இதனால் பயனடைந்த கிராமங்களின் எண்ணிக்கையைக் கணக்குப் பார்க்க வேண்டும். அன்று 152 இருந்தன என்றால், இன்றைக்கு 880 என்று ஆகியிருக்கிறது. இப்படி ஒவ்வொன்றிலும் மிகப் பெரிய விந்தி பாசத்தை அதிகமாக நாங்கள் செய்து காட்டிக்கொண்டிருக்கிறோம் என் பதைச் சொல்லிக்கொள்கிறேன். நாங்கள் திருடி அல்ல, கொள்ளையடித்து அல்ல, பணம் சேர்த்து வைத்து அல்ல, மக்கள் பணத்தை ஒழுங்காகச் செல வழித்தோம் என்ற அளவில்தான் நாங்கள் இவைகளையெல்லாம் செய்ய முடிந்தது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். தலைவர் அவர்கள் இந்த வார்த்தையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இதனால் பயன் அடைந்த மக்கள் தொகை லட்சத் தில் சொல்ல நினைக்கிறேன். இப்போது அதைப் படிக்கவேண்டிய அவசிய மில்லை என்று கருதுகிறேன், நேரம் இல்லாத காரணத்தால்.

இதிலே பேருந்துகளில் பணியாற்றியவர்கள்பற்றிச் சொல்கிறேன். புதிதாக எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்தது, எத்தனை பிரச்சினை கள் இந்த வேலை வாய்ப்புக்கள் கொடுப்பதிலே வந்திருக்கின்றன, இந்தத்

துறையிலே பலருக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கின்றதா இல்லையா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உருவாக்கப்பட்ட புதிய வேலை வாய்ப்புகள் 21,424 என்று சொல்லியிருக்கிறார்கள். ஓட்டுநர்கள் 7,135, நடத்துநர்கள் 7,147 ஆகும். தொழில் நுட்பப் பணியாளர்கள் 3,568, மேற்பார்வை அலுவலகப் பணியாளர்கள் 3,574. நாங்கள் வேலை வாய்ப்புக்கு ஒன்றுமே செய்ய வில்லையா? யாருக்கும் வேலைவாய்ப்பு உண்டாக்கித் தரவில்லையா? தரவில்லை என்றெல்லாம் சொல்கின்றார்களே, அவர்களுக்குச் சொல்கிறேன். இனியாவது தயவுசெய்து இதை ஏற்றுக்கொண்டு, வெளியே சொல்ல விருப்பம் இல்லாவிட்டாலும், 'நாங்கள் என்ன பிரச்சாரகர்களா' என்று கேட்காமல், இதை மறைத்துப் பேசவேண்டாம் என்றுதான் கேட்டுக் கொள்கிறேன். அதைத்தான் இங்கே அவையிலேயே இருப்பவர்கள் செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்குத் தெரிந்தவரையில், என்னிடம் உள்ள குறிப்புக்கள்படி சொல்கிறேன். வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் எண்ணிக்கை 1979-ல் 331 ஆக இருந்தது. 1980 ஆம் ஆண்டில் 293 ஆகக் குறைந்தது. இப்போது இன்றைய நிலவரப்படி எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல்படி 14. நாங்கள் தொழிலாளர்களை வேலையின்றி வெளியேற்ற வேண்டும், அவர்கள் அதனால் கஷ்டப்படவேண்டும் என்ற எண்ணத்துடனா பணியாற்றுகிறோம்? 1979-ம் ஆண்டு 331 ஆக இருந்தது, இன்று 14 என்ற அளவில் குறைக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்குக் குறைந்திருக்கின்றபோது, நாம் இதைப்பற்றி இங்கே புகழ்ந்து பேச வேண்டாமா?

கைத்தறி நெசவாளர்களைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். இங்கே குறிப்புக்களிலேயே சொல்லியிருப்பார்கள். என்னென்ன செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கக்கூடும். கைத்தறி நெசவாளர்களுக்காக மாநில அரசு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செலவிட்ட தொகை ரூபாய் 27.82 கோடி. ஆனால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 84.58 கோடி என்ற அளவில் செலவிட இந்த அரசு திட்டமிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாங்கள் 1977 ஆம் ஆண்டு பொறுப்பேற்றபோது மாநிலத்தில் இருந்த 5.50 லட்சம் கைத்தறிகளில் 1.82 லட்சம் கைத்தறிகள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தன. மொத்தத்தில் 32.73 சதவிகிதம் கொண்டுவரப்பட்டது. 1979 ஆம் ஆண்டு இறுதியில் 2.81 லட்சம் கைத்தறிகள் அதாவது 52 சதவிகிதம் கூட்டுறவுத் துறையின் அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. 6-வது திட்ட இறுதிக்குள் அதை 67 சதவிகிதமாக உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது. இங்கே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்





சொல்லும்போது, அறிஞர் அண்ணா அவர்கள் கொள்கையைப் பின்பற்றுவது பற்றிச் சொல்கின்றார்கள். இதை அரசுடமையாக ஆக்க வேண்டும் என்ற கொள்கையிலிருந்து நீங்கள் மாறிவிடாதீர்கள் என்று இங்கே சொன்னார்கள். [illegible] நாங்கள் கூட்டுறவு அமைப்பிற்கும் இயக்கத்திற்கும் உழைப்பவர்களும் பங்கு பெறவேண்டும் என்று ஒரு கருத்துக்கும் எவ்வளவு மதிப்பு கொடுக்கிறோம், அக்கறை காட்டுகிறோம் என்பதற்கு உதாரணமாக இருக்கும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் நிறைய இருக்கிறது. முன்பும் சொன்னேன். மாண்புமிகு திரு. நல்லசிவன் அவர்கள் கைத்தறி நெசவாளர்களுக்கு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் விதிகள் இயற்றப்படவில்லை என்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் மகிழ்ச்சியுறும் அளவுக்கு விரைவிலே அது வரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு என்னென்ன பாதுகாப்பு வேண்டுமோ, அவைகளை கண்டிப்பாக சட்டத்தின் மூலமும் நிறைவேற்றுவதற்கு இந்த அரசு துணையாக இருக்கும், அது முடியும் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் ரொம்ப வேகமாகப் பேசுகிறேன் என்று நினைக்கிறேன்.

அடுத்து, மீனவர் நலம்பற்றிச் சொல்லும்போது, அதைப்பற்றி அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. முன்பெல்லாம், 1972 முதல் மீனவர்களுக்கு கீழ்க்கண்டவாறு நிவாரணம் அளிக்கப்பட்டது. அதுவும் நடந்துவருகிறது. அதிலே சில மாற்றங்கள் இருக்கின்றன. படகுகள், வலைகள் சேதம் அடைந்தால், குறைந்த பட்ச நிவாரணம் 500 ரூபாய். படகுகள் பழுது பார்க்க, வலைகள் மற்ற வகைகளுக்கு நிவாரணம் ரூ. 1000 என்று, இரண்டும் சேர்த்துக் கொடுக்க மொத்தத்தில் ரூ. 25 ஆயிரம் போடப்பட்டிருக்கிறது. இந்த நிவாரணம் 50 சதவிகிதம் கடனாகவும், 50 சதவிகிதம் மான்யமாகவும் அளிக்கப்படுகிறது. இந்த நிவாரணம் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக நைலான் வலையாகவோ, மற்ற பொருள்கள் வகையிலோ வழங்கப்படுகிறது. முன்பு 2 ஆண்டுகளில் 20 தவணைகளில் திரும்பத் தரவேண்டும் என்று இருந்தது. அதை நாங்கள் 3 ஆண்டுகளில் என்று மாற்றியிருக்கிறோம். அந்த சதவிகிதத்தை மேலும் இப்போது 75 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறோம் என்பதை இங்கே சொல்வதன் மூலம், இதுபோன்ற பல்வேறு திட்டங்களை நாங்கள் மீனவர்களுக்காகச் செய்துகொண்டிருக்கிறோம் என்பதைக் கூற விரும்புகிறேன். இதற்கு இடையில் தர்மபுரியில் பின் தங்கிய மாணவர்கள் விடுதிக் கட்டடம் கட்டவில்லை என்று நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். தர்மபுரியைப் பொறுத்த வரையில், ரூ. 14.85 லட்சம் செலவில் பின்தங்கிய மற்றும் [illegible]

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 18

திராவிட கல்லூரி மாணவர்கள் சேர்ந்து தங்கி பயில்வதற்கு வசதியாக 3 மாடிக் கட்டிடம் கட்டுவதற்கு 24—3—1977-ல் அனுமதி வழங்கப்பட்டு, 1978-ல் அந்தக் கட்டடம் கட்டப்பட்டு முடிக்கப்பட்டு, ஆதிதிராவிடர் நலத் துறையில் ஒப்படைக்கப்பட்டு, இப்போது இயங்கி வருகிறது. இதிலே மாணவர்கள் தங்கிப் பயில்கின்ற வசதி இருக்கிறது. தற்போது 324 பேர்கள் தங்கிப் பயின்று வருகிறார்கள்.

கிருஷ்ணகிரியில் 2.39 லட்சம் ரூபாய் செலவில் பிற்பட்டவர்கள் விடுதி 1980ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. என்றாலும், அதிலேயுள்ள கிணற்றுக்குள் தண்ணீர் போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தினாலே, உடனடியாக மாணவர்களைத் தங்க வைக்க முடியவில்லை. அதை என்ன செய்யலாம் என்பதைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறோம். தற்போது 100 மாணவர்கள் அங்கே தங்கியிருக்கின்ற அளவுக்குச் செய்திருக்கிறோம். அவர்களுக்கு மாத்திரம் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கும் அந்த வசதி விரைவில் செய்துகொடுக்கப்படும்.

(பிற்பகல் 12-10)

தாமதமாக வேலை நடக்கிறது, நிர்வாகம் நடத்தத் தெரியவில்லை என்று சொன்னார்கள். ஒன்றைப் படிக்க விரும்புகிறேன். கொஞ்சம் சுவையாக இருக்கும் எனக்கு, மற்றவர்களுக்கு எப்படியோ. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வேலை துவங்கி, அதை பிறகு முடிக்க பல காரணங்கள் இருக்கின்றன. இம்மாதிரி பல பிரச்சினைகள். அனுமதிக்கப்பட்டு பல ஆண்டுகள் கழித்து, இந்த அரசால் முடிக்கப்பட்டிருக்கிறது. பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. அதைச் சொல்ல விரும்புகிறேன். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டு, நீண்ட நாள் தாமதப்படுத்தப்பட்டது என்பதற்குச் சொல்கிறேன். திட்டத்தின் பெயர் ஆணையாறு நீர்த் தேக்கத் திட்டம், செங்கற்பட்டு. வேலை அனுமதித்த வருடம் 1964. தி.மு.க. ஆட்சியில் இல்லை, அதற்கு முன்னாலே ரூபாய் 11.50 லட்சத்தில் திட்டமிட்டார்கள் 1964-ஆம் ஆண்டு. 1978லே முடித்தோம். செலவு ரூ. 22.50 இலட்சம். ஒன்றுக்கு இரண்டு பங்கு. சின்னாறு நீர்த் தேக்கத் திட்டம், தர்மபுரி. வேலை அனுமதித்த வருடம் 1970. ஆரம்பித்தபோது அதற்குத் திட்டமிட்ட தொகை எவ்வளவு என்றால், ரூ. 107.50 இலட்சம். முடியும்போது, 1977-ல் 203.70 இலட்சம். பாலாறு, பொருந்தலாறு திட்டம், மதுரை—வேலை அனுமதித்த வருடம் 1970. தொகை ரூபாய் 256 லட்சம். முடியும்போது 565 லட்சம், 1978ஆம் வருடம். ரொம்ப வேகமாக நடந்திருக்கிறது. அதைச் சொல்லித்தான் ஆக வேண்டும். கருப்பாறு நீர்த் தேக்கத் திட்டம், திருநெல்வேலி. வேலை அனுமதித்த வருடம் 1971—145 இலட்சம் ரூபாய். 1977-ல் முடிக்கும்போது ரூ. 237 இலட்சம். மருதாநதி நீர்த் தேக்கத் திட்டம், மதுரை. வேலை அனுமதித்த வருடம் 1972, திட்டத்



1982 பிப்ரவரி 18] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

தின் மதிப்பீடு ரூ. 99 லட்சம். 1979-ல் முடித்தோம். மொத்தம் ரூ. 320 இலட்சம். ஏறத்தாழ 7 வருடங்கள், அதிகமில்லை. மேலணையில் காவிரி ஆற்றின் குறுக்கே மதகு கட்டுதல், திருச்சி. அனுமதித்த வருடம் 1974. திட்ட மதிப்பீடு ரூபாய் 212 இலட்சம். 1978-ல் முடித்தோம். மொத்தம் ரூபாய் 425 லட்சம்.

சாத்தனூர் வலப்புறக் கால்வாய் வட ஆற்காடு, தென் ஆற்காடு. வேலை அனுமதித்த வருடம் 1974. முடிந்த வருடம் 1981. திட்ட மதிப்பீடு ரூ. 202 லட்சம், செலவழித்தது ரூ. 465 லட்சம். குண்டேரிப் பள்ள நீர்த் தேக்கத் திட்டம், பெரியார் மாவட்டம். திட்டம் அனுமதித்த வருடம் 1974. முடிந்தது 1978. திட்டத்தைப் போட்டது ரூ. 46 லட்சத்தில், முடித்தது ரூ. 153.65 லட்சத்தில். வடக்குப் பட்டினம் நீர்த் தேக்கத் திட்டம், பெரியார் மாவட்டம். திட்டமிட்டது 1974ஆம் வருடம். முடிந்தது 1978 ஆம் வருடம். முதலீடு ரூ. 60 லட்சம். முடிந்த போது ரூ. 180 லட்சம். பெரியாறு-வைகைப் பாசன மேம்பாட்டுத் திட்டம், மதுரை—முகவை. வேலை அனுமதித்த வருடம் 1974. இப்போது இன்னும் முடியவில்லை. இப்போது கணக்கு சொல்லிக் கொண்டிருப்பது ரூ. 4,450 லட்சம். முன்னாலே போட்டது ரூ. 730 லட்சம். தாமதப்படுத்துகிறோம், நிர்வாகம் தெரியவில்லை என்று சொன்னார்கள். பார்த்து, 2 ஆண்டுகள் ஆகிறது, 3 ஆண்டுகள் ஆகிறதென்று சொன்னார்கள். காரணம் இல்லாமல் என்ன என்பதைத் தயவு செய்து பார்க்க வேண்டும். மற்றவர்களுக்குச் சொல்கிற காரணம் இந்த அரசுக்கு என்பது இருக்கட்டும். நிர்வாகத் திறமையின்மை என்று சொல்லி, நிர்வாகத் திறமை இல்லாத அரசு இன்றைய தினம் பதவியில் இருப்பதால்தான் இவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறதென்று சொன்னால், நான் மேலே சொன்ன சில திட்டங்களால் இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதே, கணக்குப் பார்த்தால் ரூ. 2,000 கோடிக்கு மேலே மொத்தமாக நஷ்டம் வருகிறதே, அந்த அளவுக்குப் போய்க்கொண்டிருக்கிறது.

திரு. மெ. சங்கரலிங்கம் : மாண்புமிகு முதலமைச்சரவர்கள் காலம் தாழ்த்தி திட்டங்கள் நிறைவேற்றியதால், அதிகச் செலவானது பற்றிச் சொன்னார்கள். [illegible] அவர்கள் சொன்னது, 1964-ல் போட்ட ஒரு திட்டம் 1979-ல் முடிந்தது [illegible] ஒன்று, 2 திட்டங்கள் 1970-ல் போட்டது, அதற்குப் பின்னால் [illegible] இருக்கிறதென்று சொன்னார்கள். பட்டியல் போட்டுக் காட்டியதில், ஒரு [illegible] திட்டங்கள் 1974-ல் போடப்பட்டவை. திட்டமிட்ட [illegible] தெரியும் அதற் [illegible] 1976-ல் தி.மு.க. அரசு கலைக்கப்பட்டது [illegible] நிறைவேற்றாமல் அமல்படுத்தாமல் திட்டச் செலவு அதிகமானதற்குப் பொறுப்பேற்க வேண்டியது நீங்கள்தான். முதல்வரவர்கள் கொடுத்த [illegible] அவர்களுக்குச் சாதகமாக இல்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சாதகமா, பாதகமா என்பதற்கு விளக்கம் சொல்லத்தான் போகிறேன். போட்ட திட்டங்கள் எப்படி இருக்க வேண்டும் ? சரியாக, ஒழுங்காக இருக்க வேண்டும். இந்த இடத்தில் மண் இருக்கிறதா, பாறை இருக்கிறதா, இந்த இடத்தில் கட்டிடத்தைக் கட்டினால் சரியாக இருக்குமா என்பதைக்கூட—சரியாக விவரம் புரியாமல் செய்து விட்டார்கள் என்று அவர்களைச் சொல்லமாட்டேன்—கவனிக்காமல், விளம்பரத்திற்காக இந்தத் திட்டத்தைப் போட்டார்கள், இது சாதனை, அது சாதனை என்று சொல்லலாமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. திட்டத்தைச் செயல்படுத்தும்போது, பாறை வருகிறது. அதனால் ஆபத்து. இப்படிப் பல பிரச்சினைகள் வரும்போதுதான், புதிது புதிதாக மாறும். மறுபடியும் ஒரு திட்டம், அப்புறம் திருந்திய மதிப்பீடு. நிர்வாகம் என்றால் என்ன ? பல்வேறு பிரச்சினைகள் அதிலே ஏற்படுகின்றன. ஓரிடத்தில் ஒரு காண்ட்ராக்டர் பணம் பாதி வாங்கிக்கொண்டு, வேலை செய்யவில்லை. அவரை விலக்கிவிட்டு, இன்னொருவரை நியமிக்கிறோம். அவருக்குப் பணம் அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்போது பொறியாளர்கள் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். திட்டத்தை யோசனை செய்து, ஒழுங்காகப் போட்டிருந்தால், இந்த நிலைமை வந்திராது. நான் முன்னமேயே குறிப்பிட்டேன். நாம் செய்கிற காரியங்கள், வேறு கட்சி ஆட்சிக்கு வந்தால்கூட, அவர்களுக்குச் சுமையாக, தொல்லையாக இருக்கக்கூடாது. இதுதான் என்னுடைய கோரிக்கை. இதைத்தான் இன்னமும் சொல்லுவேன். அதற்காக உத்தரவு போட்டிருக்கிறேன். எந்தப் பொறியாளரும் திட்டங்கள் தரும்போது, முழுமையான திட்டங்களாகத் தந்தாக வேண்டும். 3 ஆண்டுகளில் முடியுமென்றால், 3 ஆண்டுகளுக்குப் பிறகு விலைவாசி உயர்ந்து, அந்தப் பொருள்களின் விலை மதிப்பு அதிகமானால் என்னவாகுமென்பதையும் உணர்ந்து, அதையும் இணைத்து, ஒழுங்குபடுத்தி திட்டங்களைத் தர வேண்டும். மேலெழுந்தவாரியாகக் கோடிட்டுக் காட்டி, பிறகு திட்டங்கள் ஆரம்பித்த பிறகு அது போதாது, இது வேண்டும், அங்கு அதைச் செய்ய வேண்டும், இந்த இன்ஜினியரைப் போட வேண்டும், அதை மாற்ற வேண்டும், இந்த இடத்திலே கட்டக்கூடாது என்று சொல்லுகிற நிலைமை நிர்வாகக் கோளாறு என்பது மட்டுமல்ல, நிர்வகிக்கத் தெரியாத கோளாறு என்றுதான் சொல்ல விரும்புகிறேன். எங்களுக்கு நிர்வாகம் தெரியாது. முன் அனுபவமில்லை. அனுபவம் உள்ளவர்கள். இதைச் செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அனுபவம் உள்ளவர்கள் செய்திருக்கிறார்கள். அனுபவம் இல்லாத நாங்கள் இந்த உத்தரவைப் போடுகிறோமென்றால், நிர்வாகம் தெரியவில்லை. நிர்வகிக்கத் தெரியவில்லை; நல்ல திறமையாளர்களைத் தமிழகம் பெற்றிருக்கிறது. இப்போதும் சொல்லுகிறேன், அவர்களிடம் வேலை வாங்கும்போது; அள்ளித் தெளிக்கின்ற அவசரக்கோலத்





தில் இல்லாமல் இருக்க வேண்டும். சிந்தித்துச் செய்யுங்கள். கட்டிடம் கட்டுவோம் என்று சொல்லிவிட்டு 3 மாதங்கள் கழித்து இப்படி மாற்றிச் செய்யுங்கள் என்றால், அந்த என்ஜினியர் என்ன செய்வார் ? தலைமைப் பொறியாளராக இருக்கட்டும், வேறு யாராகவாவது இருக்கட்டும். புதிய திட்டங்கள் போடத்தான் வேண்டும். அதற்குப் பணம் அதிகமாகும். இதனால்தான் 1970-ல் தொடங்கி 1980-ல் முடிந்திருக்கிறது என்று சொல்ல வேண்டியிருக்கிறது. 12 ஆண்டு காலத்தில் முடிக்காமல் இருந்ததை நாங்கள் தான் முடிக்கக் காரணமாக இருந்திருக்கிறோம். இவைகளையெல்லாம் செய்து தொடுத்து மக்களுக்குப் பயன்படச் செய்யாமல் தடை செய்தால், அதுதான் மக்களுக்கு நாங்கள் செய்யும் துரோகம் ஆகும். தவறு செய்து விட்டால் கூட, அந்தத் தவறுகளைக் கண்டுபிடித்து திட்டங்களை முடிக்கிறோம். இவ்வளவு நெருக்கடியிலும், இவ்வளவு போராட்டங்களை நடத்திய போதிலும், இவ்வளவு சங்கடங்களை உண்டு பண்ணிய போதிலும் கூட, அவைகளை யெல்லாம் சந்தித்துக் கொண்டு முடிக்கிறோம் என்றால், நிர்வாகத் திறமை இல்லையென்று நீங்கள் சொன்னாலும் கூட, நிர்வாகத் திறமை அற்றவர்கள் அல்ல என்பதை நான் சொல்லியாக வேண்டும். இப்படி பல பிரச்சினைகள் உண்டு.

(பிற்பகல் 12-20)

ஆசிரியர்களைப் பற்றியும் நான் சொல்லியாக வேண்டும். சொந்த நேரமாக ஆசிரியர்களைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே என்று இங்கு சொன்னார்கள். காலையில் கூட கேள்வி கேட்டு மாண்புமிகு கல்வி அமைச்சரிடமிருந்து சாதுர்யமாக பதிலைப் பெற்றுவிட்டார்கள். ஆசிரியர்களுக்காக ஒன்றுமே செய்யவில்லை, அவர்களைக் கைது செய்கிறோம், நடவடிக்கை எடுக்கிறோம் என்றெல்லாம் கூட சொன்னார்கள். அவர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் பெற வேண்டும் என்றும் சொன்னார்கள். எப்படிப்பட்ட போராட்டம் என்பதையும் அதற்கான காரணங்களையும் சொல்லியிருக்கிறேன். எந்த செக்ஷன் கீழ் வழக்கு போட்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் கவனத்தில் கொண்டு தான் செய்ய வேண்டும். தேர்தல் அறிக்கையில் ஒன்றைக் குறிப்பிட்டேன். பொதுவாக ஆசிரியர் நலனைப் பேணுவதோடு, குறிப்பாக ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்க கழகம் உறுதி அளிக்கிறது என்று தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தோம். இதைச் செய்தோமா இல்லையா ? நிறைவேற்றினோமோ இல்லையா? வந்த 8 ஆண்டுகள் ஆட்சி நடத்துவதற்குள் போனோம். திரும்ப வந்தோம். அந்த அறிக்கையின்படி இன்றையதினம் அத்தனை பேரையும் அரசு ஊழியர்களாக, அரசுக்குச் சொந்தமானவர்களாக ஆக்கி அரசு ஊழியர்களுக்குரிய

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 18

அத்தனை சலுகைகளையும் அவர்கள் பெறுகின்ற வகையில் ஆக்கியிருக்கிறோமா இல்லையா? அவர்களை அரசு ஊழியர்கள் என்று சொல்வது பொருத்தம் என்றால், அப்படி வைத்துக்கொள்ளுங்கள். அல்லது அரசு அதிகாரிகள் என்று சொல்வது மதிப்பு என்றால், அப்படி வைத்துக் கொள்ளுங்கள். அரசுடன் நேரடியாகத் தொடர்புடைய மற்ற ஊழியர்களைப் போல இவர்களும் ஆக்கப்பட்டு விட்டார்கள். இதனால் அரசுக்கு எவ்வளவு செலவு ஏற்படும் என்பதும் அனைவருக்கும் தெரிந்த ஒன்று. அதே நேரத்தில் ஒன்றைச் சொன்னேன். ஆசிரியர்களை மாவட்டம் விட்டு மாவட்டம் மாற்ற இதிலே உரிமையுண்டு என்று சொன்னதை எல்லோரும் ஒத்துக்கொண்டார்கள். அந்த ஒத்துழைப்போடு தான் இப்போது அப்பணியைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஒரு வகையில் அவர்களை நான் பாராட்டியிருக்கிறேன். பள்ளி மாணவர்களுடைய தேர்வு கெட்டுப்போகாமல், அதை நடத்தி முடித்து விட்டு போராட்டத்தை நடத்தினார்கள். அதை நான் அப்போதைக்கும் பாராட்டியிருக்கிறேன். இப்போது மீண்டும் பாராட்ட விரும்புகிறேன். இன்னொன்றையும் சொல்லி எப்படிப்பட்ட தொடர்பு எம்.ஜி. ஆருக்கும் ஆசிரியர்களுக்கும் இருந்தது என்பதையும் இங்கே நான் நினைவுபடுத்தியாக வேண்டும். நான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்த நேரம், அப்போது ஒரு போராட்டத்திற்காக ஆசிரியர்கள் சென்னைக்கு வந்தபோது, நான் நடிகனாக இருந்தாலும், நான் எந்த அளவிற்கு அவர்களுக்குத் தொண்டு செய்தேன் என்பதை அவர்கள் நன்றாக உணர்வார்கள், இங்கே இருப்பவர்களும் அதை மறந்திருக்க மாட்டார்கள். அந்த வகையில் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, தனி மனிதனாக இருந்துகொண்டு செய்த அந்தத் தொண்டை முதலமைச்சராக இருந்து செய்ய முடியாதா? அப்படிச் செய்யவில்லையென்று சொல்வார்கள் என்றால், அப்படிப்பட்டவர்களுடைய எண்ணத்திலுள்ள தவறு அது ஆகுமே தவிர, சூழ்நிலையால் ஏற்பட்டதல்ல. அந்த அளவில் ஆசிரியர்களுக்கு எவ்வளவு மதிப்பும் மரியாதையும் நான் தருகின்றேனோ அந்த அளவுக்கு அவர்களும் இந்த அரசுக்கு இன்னும் அதிகமாக ஒத்துழைப்பு தர வேண்டும். ஒத்துழைப்பு தர வேண்டுமென்று நான் கேட்டால், இப்போது ஒத்துழைப்பு தரவில்லையென்று அர்த்தமல்ல. இன்னும் மிகவும் அதிகமாக ஒத்துழைப்பு தர வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்கள் முயன்றால் மாணவர்களிடையே போராட்டமே இல்லாமல் செய்ய முடியும். மாணவர்கள் போராட்டத்திற்கு தேவையே இல்லாமல் பார்த்துக்கொள்ள முடியும் என்று நான் இந்த நேரத்தில் ஆசிரியர்களுக்கு வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன். [illegible] என்று [illegible] நினைக்கிறேன் [illegible]



1982 பிப்ரவரி 18] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அடுத்து, பட்டதாரி ஆசிரியர்களுக்கு நாங்கள் என்னென்ன செய்தோம் என்பதும் எல்லோருக்கும் தெரியும். நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதம் விரைவில் வர இருக்கிறது. அப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் இதுகுறித்துப் பேசுவார்கள். அதற்குத் தகுந்த பதிலைத் தரும்போது நானும் அவ்வப்போது கலந்துகொள்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர்களைப் பற்றி நான் சொல்வதை இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் மிகவும் அக்கறையோடு கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத் தமிழ் ஆசிரியர்கள் மாநாடு ஒன்று நடந்திருக்கிறது. அங்கே ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறார்கள். என் பெயரைச் சொல்லி, "தலைமையில் அமைந்த தமிழக அரசுக்கு தலையாய பாராட்டு" என்று சொல்லிவிட்டு "நாங்கள் ஏன் இந்த அரசை பாராட்டுகிறோம், பாராட்ட வேண்டும்" என்று அதற்கான காரணத்தையும் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் ஏதாவது சொன்னால், அதிகாரிகள் கொடுத்ததை வைத்துக்கொண்டு படிக்கிறார்கள், சொல்கிறார்கள் என்று நினைப்பார்கள். ஆனால் இது அப்படி அல்ல. ஆகவே அதில் சொல்லப்பட்டிருப்பதை நான் படிக்கிறேன். "உயர் தொடக்கப் பள்ளிகளில் முதல் நிலை பி. டி. ஆசிரியர்களுக்குரிய ஊதிய விகிதத்தில் தமிழ் ஆசிரியர்களை நியமனம் செய்தமைக்கு பாராட்டு" என்று சொல்லி பாராட்டியிருக்கிறார்கள் அப்படி என்றால் இதற்கு முன்னால் அப்படிச் செய்யவில்லை என்று தானே அர்த்தம்? அப்படித் தான் இருக்க முடியும். அதற்கான பதிலை இங்கே சொல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் இருக்கிறார். உட்கார்ந்து சொன்னால் கூட போதும். "உயர் தொடக்கப் பள்ளிகளில் இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று வற்புறுத்தியதற்கு இணங்க தமிழ் ஆசிரியர்களை நடுநிலைப் பள்ளிகளில் முதல் நிலை ஊதியத்தில் தலைமை ஆசிரியர்களாக நியமிக்க அரசு முடிவு எடுத்திருப்பதாக" குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி என்றால் இதுவரை தமிழ் ஆசிரியர்களுக்கு இந்த அரசு மதிப்பு தரவில்லை என்று சொல்வதில் பொருள் இருக்கிறதா? தமிழ் மீது அக்கறை இல்லாத, தமிழ் நாடு பற்றி புரியாத, தமிழன் அல்லாத இந்த இராமச்சந்திரன் தலைமையில் பொறுப்பேற்றிருக்கிற இந்த அரசு இந்தக் கடமையைச் செய்திருக்கிறது என்றால், இதையெல்லாம் நான் சொன்னால், அதை வேறு தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும். விதமாகச் சொல்வார்கள். ஆனால் தமிழ் ஆசிரியர்கள் சொல்லியிருக்கிறார்கள். என்னையும், இந்த அரசையும் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். "உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக ஆக தமிழ் ஆசிரியர்களுக்கு வாய்ப்பு தர வேண்டுமென்ற அடிப்படையில் முதல் படியாக உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணி மூப்பு அடிப்படையில்

"அவையைப் பற்றி நான் இந்த அரசு முன் வந்தமைக்கு பாராட்டுகிறேன்" என்று அறிந்து சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் செய்தோம், அன்று முதலமைச்சர் செய்தார் என்றால், இதற்கு முன்பு இருந்த யாரும் செய்யவில்லை என்று தானே பொருள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** எந்த அரசும் ஆட்சியில் இருக்கும்போது, கோரிக்கைகள் வைக்கப்படும்போது, அவ்வப்போது சூழ்நிலைக்கு ஏற்றவாறு நிறைவேற்றுவது என்பது காலத்தின் கட்டாயம். அந்த வகையில் இந்த கோரிக்கைகளை அரசும் பலவற்றை நிறைவேற்றியிருக்கிறது. அதற்காகவும் நான் பல தடவை இந்த அரசுக்கு நன்றி தெரிவித்திருக்கிறேன். சென்ற ஆட்சியும் இதுபோல் பல காரியங்களைச் செய்திருக்கிறது. அதற்காக நன்றி தெரிவித்திருக்கிறேன். ஆனால் ஒன்றே ஒன்றை இங்கு குறிப்பிடுகிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேலை நேரத்தில் ஆசிரியர்கள் போராடாமல் வேலையை முடித்துவிட்டுப் போராடினார்கள் என்றால் அவர்களைப் பாராட்டினார்கள். மீண்டும் பாராட்டுகிறேன் என்றும் இங்கே சொன்னார்கள். இதுகுறித்து கொள்கை ரீதியாக அரசு ஒரு அறிவிப்பை வெளியிட்டால், வேலை நேரத்தில் ஆசிரியர்கள் போராடவே மாட்டார்கள். வேலை நேரம் தவிர மற்ற நேரத்தில் அவர்கள் போராடுவார்கள். வேலை நேரத்தில் அல்லாமல் போராடியவர்களை இங்கே பாராட்டினார்களே அவர்களில் சிலர் போராட்ட காலத்திலே பணியாற்றிக்கொண்டிருந்த பள்ளி ஆசிரியர்களாவர் போராடிவிட்டு வந்திருக்கிறார்கள். வேலை நேரத்தில் அல்லாமல் மற்ற நேரத்தில் போராடியவர்களுக்குத் தவிர்ப்பு அளித்து எல்லாச் சலுகைகளையும் வழங்கியிருக்கிறார்கள். ஆனால் மற்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பாரபட்சம் தேவை தானா? இப்படிப்பட்ட நடவடிக்கை தேவைதானா என்பதைப் பற்றிப் பரிசீலித்து ஒரு நல்ல பதில் அளிக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவையின் நேரம் நீடித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து பேசி முடிக்கப் போகிறார்களா?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** தொடர்ந்து பேசி முடிக்கப் போகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை முடியும் வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.





(பிற்பகல் 12.30)

**திரு. க. இராமமூர்த்தி:** இன்னும் அதிக நேரமாகுமானால், மதிய விருந்துக்கு ஏற்பாடு செய்தால் நல்லது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** நான் பேச்சை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் விருந்து வைக்க வேண்டும் என்று சொல்கிறாரா?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** அப்படியென்றால் என்னுடைய பேச்சிலே சுவையில்லை என்றுதான் அர்த்தம். காதுக்கு ஒன்றுமில்லை என்று சொல்லும்போதுதான், வயிற்றுக்கு வேண்டும் என்ற பிரச்சினை எழும்.

**திரு. க. இராமமூர்த்தி:** ரொம்ப நேரமாகிவிட்டால் வயிறு கிள்ள ஆரம்பிக்கும். வயிற்றுக்கும் சேர்த்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கூறியதற்குப் பதில் சொல்கிறேன். பள்ளி போராட்டம் நடத்தும்போது, வேலையில் தடங்கல் ஏற்படாமல், மாணவர்களுடைய படிப்பு கெடாமல் அதை முடித்துக் கொடுத்துவிட்டுப் போராடினார்கள் என்பதைப் பாராட்டுகிறேன் என்று சொன்னால், இதைப் போல ஆண்டுக்காண்டு போராடுங்கள் என்றல்ல பொருள். போராட்டம் இல்லாமலேயே நீங்கள் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும். அந்த நிலை வரும் முன்னே அந்த வசதியை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய அரசின் கொள்கை. இன்னொன்றையும் சொல்லி காலத்தின் கட்டாயத்தையும் பற்றிச் சொன்னார்கள். ஆசிரியர்களிடம் மன்னிப்புக் கடிதம் வாங்கி வெளியே அனுப்புவதும் காலத்தின் கட்டாயம், அதைப்போல ஆசிரியர்கள் உள்ளே இருக்கக்கூடாது, வெளியே வரவேண்டும் என்று சொல்வதும் காலத்தின் கட்டாயம், முதலமைச்சராக இருந்து நான் பதில் சொல்கிறேனே அதுவும் காலத்தின் கட்டாயம், அந்த மன்னிப்புக் கடிதம் தேவையில்லை என்று சொன்னபோது எவ்வளவு உரிமையோடு போராடினார்கள் என்று எண்ணும்போது அதை காலத்தின் கட்டாயத்தால் அன்றைக்கு நீங்கள் எதிர்பார்க்கவில்லை, இன்றைக்கு எதிர்பார்க்கும் நிலையில் இருக்கிறீர்கள் என்று பார்க்கும்போது, இதுவும் உங்களுடைய காலத்தின் கட்டாயம்.

உயர்நிலைப் பள்ளி தணிக்கைக் குழுவில் தலைமையாசிரியர்களும் பட்டதாரி ஆசிரியர்களும் தான் இருக்க வேண்டும் என்பதை மாற்றியமைத்து இந்த அலுவலர்களுடன், தமிழ் ஆசிரியர்களும் இடம்பெறச் செய்து, தமிழாசி

யர்களின் மதிப்பை உயர்த்தினோம். அதற்காக இப்படிச் சொன்னால், இப்படி முன்னாலே இல்லை, இப்போதுதான் வந்திருக்கிறது என்று தானே பொருள். ஆசிரியர்கள் தமிழிலேதான் கையெழுத்திட வேண்டும் என்பதற்காக, எழுத்துச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்ததற்காக, தமிழகத்தில் இருக்கும் மக்களுக்கும், வெளிநாட்டவர்களுக்கும் தமிழின் சிறப்பை எடுத்துச் சொல்லி, தமிழுக்கு ஏற்றத்தைத் தந்ததற்காக, எழ்மையில் வாழும் தமிழ் முதியவர் களுக்கு ரூ. 150 உதவித் தொகை தந்ததற்காக, இருந்ததை உயர்த்தியதற் காக, அல்லது இதைப் புதியதாக தந்ததற்காக, தமிழ் சான்றோர்களைப் போற்றி உதவி தந்ததற்காக, பாவேந்தன் பாரதிதாசன் அவர்களின் நினை வால் ஒவ்வொரு ஆண்டு தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த தமிழ்ப் பாவலருக்கு ரூபாய் 10 ஆயிரம் வழங்க முன்வந்ததற்காக, இயல்-இசை-நாடகம் என்ற முத்தமிழ் வளரும் வகையிலே இயல்-இசை-நாடகக் கலைஞர்களைப் பாராட்டி பரிசு அளித்து ஊக்கப்படுத்தியதற்காக, நமது தொன்மையான தொழில் கலைகளான நாயனக் கலையையும், போர்க் கருவியாகிய முழல்க் கலையையும் வளர்க்கும் வகையில் அவற்றை முறையாகக் கற்றுத் தேறும் இளைஞர்களுக்கு திங்கள் தோறும் உதவித் தொகை ஊதியம் போல தருவதற்காக, சாந்திநி கேதன், ஜெய்ப்பூர் இன்னும் மற்ற பல்கலைக் கழகங்களிலே தமிழ் துறை தோன்ற பெருந்தொகையாகிய ரூபாய் 20,000, இந்தியாவிலே தமிழ் வளர்ச்சி யடைய வேண்டும் என்பதற்காக, கடல் கடந்த நாடுகளிலே தமிழகத்தின் பெருமையும், திருக்குறள் போன்ற தமிழ் இலக்கியத்தின் பெருமையும் வளர வேண்டும் என்று நடவடிக்கை எடுத்ததற்காக, மேல்நிலைப் பள்ளிகளில் 12 ஆண்டு கால படிப்பில் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு படிப்பவர் களுக்கு இலவசக் கல்விச் சலுகை அளித்ததற்காக, இடைநிலை ஆசிரியர்கள் புலவர் தகுதி பெற்றால் இரண்டு ஊக்க ஊதியம் தர ஒப்புக்கொண்ட மைக்காக—இவற்றுக்காகத்தான் இப்படி உறுப்பினர் சொன்னார் என்று கருதுகிறேன். இதற்கு மேலும் புள்ளிவிவரங்களை வைத்திருக்கிறேன், அவற்றைப் படிக்க விரும்பவில்லை. ஆசிரியர்களிடம் மாணவர் நல்ல பெயர் வாங்குவது என்பது அவ்வளவு சாதாரணமான காரியம் அல்ல. எப்படியோ உங்களுடைய உள்ளம் நெகிழ்ந்து உண்மையை வெளிக்காட்டியதற்காக என் னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காவல் துறையினருக்கு. . .

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** ஆசிரியர்களுக்கு பல்வேறு கால கட்டங் களில், பல்வேறு விதமான நன்மைகளை இந்த அரசு செய்திருக்கிறது, அதற் காக நான் பலமுறை பாராட்டியிருக்கிறேன், மீண்டும் பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடு நிலைமையோடு நின்று முதலமைச்சர் என்ற முறையிலே பல காரியங்களைச் செய்கிறார்கள், சில நேரங்களில் அவர்களுடைய நடவடிக்கையால் ஆசிரியர்கள்





பாதிக்கப்படுகிறார்கள். முதலமைச்சர் என்ற நிலையை விட்டு கட்சித் தலைவர் என்ற முறையிலே சில நடவடிக்கைகளை எடுக்கிறார்களோ என்ற ஐயப்பாடு சில நேரங்களிலே வருகிறது. அப்போதுதான் சங்கடம் வருகிறது. ஆகவே, முதலமைச்சராக இருந்து எல்லாவற்றையும் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** இப்போது கண்ணாடி அணி யாமல் பார்த்தால் நீங்கள் எல்லாம் வெள்ளையாகத் தெரிகிறீர்கள். கறுப்புக் கண்ணாடியை போட்டால் மங்கலாகத் தெரிகிறது. அதைப்போல அவரவர்கள் பார்க்கும் கோணம் இருக்கிறதே அதுபோலத்தான் தெரியும். அதுபோலத்தான் அரசியல்வாதிகளின் நிலைமையும், ஆசிரியர்களுடைய சங்கத்தின் தலைவர், 'ஒரு கட்சியினுடைய தலைவராக மாறுகிறேன்' என்று எந்த அடிப்படையில் சொல்கிறார் என்று எனக்குப் புரியவில்லை. என் மனச்சாட்சிக்கு விரோத மாக எந்தக் காரியத்தையும், ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், நான் செய்ய வில்லை. அப்படி தலையிடவே மாட்டேன் என்று நம்புங்கள். உறுப்பினர் அவர்கள் ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள் என்று நான் இதுவரையிலும் நினைக்கவில்லை. இனிமேல் வேண்டுமானால் நினைக்க . . . .

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** நினைக்க வேண்டாம்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** அப்படியென்றால் உறுப் பினர் அவர்கள் ஆசிரியர்களுடைய பிரதிநிதி, கட்சியில் இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இங்கே இருக்கும்போது நான் ஆசிரியர்களின் பிரதிநிதியாகத்தான் இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** வெளியே கட்சியில் இருப்பதே இல்லை அல்லவா?

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** வேறு பலர் இருக்கலாம், நான் ஆசிரியர் பிரதிநிதியாகத்தான் இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** அப்படியென்றால், ஆசிரியர் பிரதிநிதியாகத்தான் நான் உறுப்பினர் அவர்களை நினைக்கிறேன். ரொம்ப நன்றி. சந்தேகப்பட வேண்டாம். உறுப்பினர் அவர்களிடம் நான் முதலமைச்சராகத்தான் இருப்பேன். நம்முடைய நாட்டிலே இரண்டு பெரிய வர்கள் பதவியேற்றார்கள். ஒருவர் பேரறிஞர் அண்ணா அவர்கள், இன்னொருவர் பண்டித நேரு அவர்கள். பண்டித நேரு அவர்கள் பதவி யேற்றபோது சொன்னார்கள், நான் இந்த நாட்டின் கடைசித் தொண்டன், நம்பிக்கைக்குரியவன் என்றுதான் இந்தப் பொறுப்பை மக்கள் தந்திருக்

றார்கள் என்று சொன்னார்கள். அதைப்போல பேரறிஞர் அண்ணா அவர்கள் பதவியேற்றபோது, மக்களுடைய சேவகன் என்ற வகையிலே என்னை நம்பிக்கைக்குரியவனாக ஆக்கியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த அளவுக்குத் தகுதி எனக்கு இல்லாவிட்டாலும், அந்தக் கொள்கைகளை நான் உள்ளத்தில் பதிய வைத்திருக்கிறேன். ஆகவே, கட்சியைப் பயன் படுத்தி கட்சிக்காக இருக்கிறேன் என்று சொன்னால், நான் எந்த உத்தர வையும் போட முடியாது. இப்படிப்பட்ட ஒரு பாராட்டை என்னால் இந்த 4 ஆண்டு காலத்திற்குள் பெற்றிருக்க முடியாது. நான் தமிழகத்தின் விரோதி, நான் தமிழன் அல்ல, தமிழ் இனத் துரோகி என்றெல்லாம் என்னைப் பற்றி வெளியே பேசப்படும்போது, மாணவர்களை உருவாக்கி எதிர்காலத் தமிழகத்தை அவர்களின் கையில் ஒப்படைக்கப் போகிறீர்களே, அந்த மாண வர்களைத் தகுந்த குடிமக்களாக ஆக்கும் ஆசிரியர்கள், அதுவும் தமிழாசிரி யர்கள் சேர்ந்து என்னைப் பாராட்டியிருக்கிறார்கள் என்று சொன்னால், இந்த அமைச்சரவை தமிழர் அமைச்சரவை மட்டுமல்ல, தமிழின் அமைச் சரவை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். நான் நேற்றையதினம் எதிரொலி' பத்திரிகையிலிருந்து படிக்கும்போது விளக்கினேன். பழி வாங்குவது என்பதற்காகக் காரணங்களைத் தேடி அலைவது என்று சொன் னால், எத்தனையோ காரணங்கள் நமக்குக் கிடைக்கின்றன. அவற்றையெல் லாம் பயன்படுத்துகிறோமா என்றால் இல்லை.

உடல் ஊனமுற்றவர்களுடைய நலத்திற்காக இந்த அரசு எவ்வளவு பெரிய முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். கண் பார்வை இல்லாத ஏழைகளுக்கு இலவச பஸ் போக்குவரத்து வசதி செய்து கொடுத்திருக்கிறோம். 1980-81 ஆம் ஆண்டுக்கான செலவு 31.35 லட்சம் ரூபாய், 1981-82 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் 51.61 லட்சம் ரூபாய் ஒதுக்கி படிப்புக்கு உதவித் தொகை கொடுக்கிறோம். மேலும் உடல் ஊன முற்றோருக்குத் தொழில் பயிற்சியும் கொடுக்கிறோம். அவர்களுக்கு மூன்று சக்கர வண்டி வழங்கப்பட்ட புள்ளிவிவரத்தை மட்டும் இங்கே சொல்வது தேவை என்று நினைக்கிறேன். 1974-75-ல் 516. 1975-76-ல் 1,474. 1976-77-ல் 1,011. 1977-78-ல் 482. 1978-79-ல் 534. 1979-80-ல் 1,000 என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.40)

மாண்புமிகு உறுப்பினர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள் அதற்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட் டிருக்கிறேன். பெண் என்ற முறையில், பெண்களுக்காகத் தனி பல்கலைக் கழகம் அமைக்கப்பட்ட இருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன் என்றும்,



இதற்கு ஒரு பெண்ணையே துணை வேந்தராக நியமிக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார். வேலைவாய்ப்பு அளிப்பதில் 3 சதவீதம் உடல் ஊனமுற் றோருக்கு ஒதுக்குவது பற்றி மிகவும் மகிழ்ச்சி என்றும், குழந்தைகளுக்காக நடத்தப்படும் விடுதிகளில் ஒரு குழந்தைக்கு ரூ. 14 வீதம் அரசு மான்யம் அளிப்பதை, விலைவாசி உயர்வை அனுசரித்து ரூ. 45 ஆக உயர்த்த வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள். இது எத்தனை லட்சம் பேருக்கு என்பதை தயவுசெய்து அவர் கணக்குப் போட வேண்டும். ரூ. 14 என்றிருப்பதை ரூ. 45 என்று மாற்றும்போது, அது எத்தனை கோடியாக மாறும் என்பதை தயவு செய்து கணக்குப் போட்டுப் பார்க்க வேண்டும். என்றாலும், நிதிநிலை அறிக்கையில் குழந்தைகளைப்பற்றிக் கண்டிப்பாகச் செய்தி வரும். அதைப் படித்துப் பார்த்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமது கருத்தைச் சொல்ல வேண்டும். அதுவரை பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். துணை வேந்தர் பதவியை ஒரு பெண்ணுக்கே கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக் கிறார். இந்த அரசு நிச்சயமாக அதைத்தான் செய்யும் என்பதையும், அங்கே பணியாற்றுகிறவர்களில் 100-க்கு 99 கூட அல்ல 100 பேரும் பெண் களாகத்தான் இருப்பார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதை அவர்கள் மிகவும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நம்பு கிறேன்.

அடுத்து, எங்கள் தேர்தல் அறிக்கையில் 60 வயதான ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களுக்கு மாதா மாதம் ஓய்வூதியம் வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்திருந்தோம். அதை எப்படி நிறைவேற்றியிருக்கி றோம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே பேசிய பலரும் கேட் டார்கள். ஐந்து படி அரிசி வாங்கினால் ஒரு படி இலவச அரிசி எங்கே என்று கேட்டார்கள். அவர்களுக்கெல்லாம் பதில் சொல்லக் கடமைப்பட் டிருக்கிறேன்.

எத்தொழிலும் புரிய இயலாத, ஆதாவற்ற வேளாண் தொழிலாளர்கள் முதியோர் உதவித் தொகை அளிக்கும் திட்டத்தின் மூலம் பயன் பெறும் பொருட்டு இத்திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளோம். இத் திட்டத்தை 1981-ம் ஆண்டு முதல் அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் 60 வயதுக்கும், அதற்கு மேற்பட்ட, ஆதாவற்ற, எத்தொழிலும் செய்ய இயலாத நிலையில் உள்ள வேளாண் தொழிலாளர்கள் பயன்பெற உள்ளனர். இத்திட்டத்தின் முதற்கட்டமாக, மாநிலத்தில் உள்ள 30,000 ஆதரவற்ற வேளாண்மைத் தொழி-

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 18

ளர்களுக்கு உதவித் தொகை அளிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதைப்போலவே வேட்டி, சேலை கொடுப்பதைப்பற்றியும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதற்கு முன்னால் வயது முதிர்ந்த, பணி செய்ய இயலாத விவசாயிகள் மட்டுமின்றி மற்ற பிறருக்கும்கூட மாதம் 25 ரூபாய் என்று ஊதியத் தொகையை உயர்த்தியிருக்கிறோம் என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

பெருந்தலைவர் திரு. காமராஜர் அவர்கள் தொடங்கி வைத்த நலத் திட்டம். அப்போது 20 ரூபாய் கொடுக்கப்பட்டது. இப்போது எங்களால் மாதம் ரூ. 25 தான் கொடுக்க முடிகிறது. முடிந்தால் அதைப்பற்றியும் யோசிப்போம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

சேலை, வேட்டிகளுக்கு எவ்வளவு செலவாயின என்ற கணக்கு என்னிடம் இருக்கிறது. அதோடு வாரத்திற்கு ஒரு கிலோ இலவச அரிசி வழங்கப்படு கிறது என்ற தகவல் எனக்கு இருக்கிறது. எங்காவது அப்படிக் கொடுக்க வில்லை என்று தெரிவித்தால், அத்தகைய அதிகாரிகள் மீது நிச்சயமாக நாம் நடவடிக்கை எடுப்போம் என்று கூறிக்கொள்கிறேன். இந்தத் திட்டத் திற்காக அரசு ரூ. 98,40,000 செலவிட ஒப்புதல் அளித்துள்ளது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகள்பற்றி நிறைய குறிப்பிட விரும்பினேன். என்றாலும் நேர மில்லை என்பதால் அவற்றையெல்லாம் விட்டுவிடுகிறேன். . . . .

**திரு. செ. முத்துசாமி:** தலைவர் அவர்களே, கல்வித் துறையில் பல்வேறு விஷயங்களைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கெல்லாம் நான் பாராட்டைத் தெரிவித்து வரவேற்பையும் தெரிவித்துக் கொள்கிறேன். என்றாலும் கல்வித் துறையில் உள்ள குறிப்பிட்ட சில விஷயங் களைப் பற்றி மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற முறை, கல்வித் துறையில் செய்துள்ள சாதனைகளைக் குறித்து பட்டியல் வெளியிட்டபோது, ஆசிரியர் களுக்குத் தனியாக வீட்டு வசதி வாரியம் அமைக்கப்பட்டுள்ளதாகவும், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடியாகச் சம்பளம் வழங்கப்பட்டிருப்ப தாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இவை இரண்டும் இதுவரை அமுலாக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து இவைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனித்து, அவற்றை விரைவாக அமுல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1982 பிப்ரவரி 18] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** இது ஒரே நாளில் செய்யக் கூடிய திட்டம் அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே நன்கு அறிவார் என்று நம்புகிறேன்.

அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்பதை மட்டும் உறுதியாகக் குறிப்பிட விரும்புகிறேன். திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது, பணம்தான் ஒதுக்கப்பட வேண்டும். அதற்கு வேண்டியவைகளை எப்போது எந்த நேரத்தில் அறிவிக்க வேண்டுமோ அப்போது கண்டிப்பாக அறிவிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குச் சிறிது நாட்கள் பொறுத் திருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னையில் துரிதப் போக்குவரத்துத் திட்டம் அமுலாக்கப்பட வேண்டும், அதை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டார்கள். அதைப்பற்றி நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மைய அரசு முதலில் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. பம்பாயில் மட்டும்தான் அதைச் செய்வதாக இருந்தது. ஆனால் பிரதம அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்தபோது அதிகாரிகளை அழைத்து வேலைகள் எப்படி நடைபெறுகின்றன என்று தெரிந்த பிறகு, சூசகமாகச் சொன்னார். எங்களுக்குச் சொல்லியதிலிருந்து அது நடக்கும் என்று நம்பிக்கை வந்தது. இன்று அதைப்பற்றித் திட்டக் குழு பரிசீலித்து வேறு ஒரு இடத்திற்கு அதை அனுப்பி வைத்திருக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு மேல் புகாமல் விட்டுவிடுகிறேன். இதையே இந்த அவைக்குச் சரியான தகவல் கொடுத்த தாகக் கருதுவார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் பல்கலைக் கழக மானியக் குழுவின் அனுமதியின்றி பல்கலைக் கழகங்கள் துவக்கியதுபற்றிப் பேசியிருக்கிறார். அதைக் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தில் பதில் சொல்லிவிட்டார்கள் என்பதால், அதுவே போதும் என்று கருதுகிறேன். அதற்கு மேலும் நான் பதில் சொல்ல வேண்டும் என்று அவர் எதிர்பார்க்க மாட்டார் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் திண்டுக்கல் நிலச் சீர்திருத்த அலுவலர் அலுவலகத்தில் சில ஆவணங்கள் காணவில்லை என்று சொல்லியிருக்கிறார். திண்டுக்கல்லில் உள்ள அதிகாரம் பெற்ற அலுவலர் (நிலச் சீர்திருத்தம்) அலுவலகத்தில் எம்.ஆர்.ஐ./எல். 9/டி.ஜி.எல்/58-61 என்ற எண்ணுடைய கோப்பு எதுவும் இல்லை. ஆயினும், எம்.ஆர்.ஐ./எல் 9./ டி.ஜி.எல்./17/70 என்ற எண்ணுடைய கோப்பு ஒன்று இருந்தது. அந்தக் கோப்பு எம்.எஸ். லாரன்ஸ் என்பவரைப் பற்றிய கோப்பு. அது 30—7—1975

அன்று நிலையான முடிவாக முடிக்கப்பட்டு, அது அலுவலகத்தின் ஆவண அறையில் வைக்கப்பட்டுள்ளது. ஆகவே இது காணாமல் போகவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுதான் எனக்கு வந்திருக்கிற தகவல்.

**திரு. க. இராமமூர்த்தி :** காணாமல் போன இந்த ரெக்கார்டு குறித்து வழக்கு ஒன்று நீதிமன்றத்தில் இருக்கிறது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரும்பினால், அதுபற்றிய மற்ற தகவல்களைத் தனியாக அவரிடம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு க. இராமமூர்த்தி அவர்கள் அத்தகைய தகவலைக் கொடுத்தால், மேலும் விசாரிக்க இயலும். அப்படிப்பட்ட ஆவணம் இல்லை என்றும் மேலே சொல்லப்பட்ட ஆவணம் மட்டும் அலுவலகத்தில் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவேளை தவறான தகவல் எனக்குக் கொடுக்கப்பட்டிருந்தால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மட்டும் இப்போது தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பெண்ணாடம் சர்க்கரை ஆலையில் நடைபெற்ற முறைகேடுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள் பெண்ணாடம் அருணா ஷுகர்ஸ் லிமிடெட்—சர்க்கரை ஆலையில் சர்க்கரைக் கழிவுப் பாகு கள்ளச் சந்தையில் கள்ளத் தனமாக விற்பதற்கு வைத்திருந்தது 4—1—1982 அன்று விருத்தாசலம் கோட்டாட்சித் தலைவரால் கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டிருக்கிறது. புதுவையில் உள்ள மத்திய ஆயத் துறையினராலும் இது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 29—3—1981 மற்றும் 30—3—1981 ஆகிய நாட்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் சர்க்கரை ஆலையைப் பார்வையிட்டார். அப்போது 350 டன் கணக்கில் வராத சர்க்கரைக் கழிவுப் பாகு கான்கிரீட் தொட்டியில் வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இது கணக்கில் சரிவர வைக்கப்படவில்லை. எனவே 16—6—1980 அன்று விருத்தாசலம் கோட்டாட்சித் தலைவர் இந்தச் சர்க்கரை ஆலையைத் திடீர் சோதனை செய்து, 316,680 டன் சர்க்கரைக் கழிவுப் பாகு கணக்கில் வைக்காமல் அதிகப்படியாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதற்குச் சரியான சமாதானம் அளிக்கப்படவில்லை. இதற்காக அவருடைய வைப்பீட்டுத் தொகையில் ரூ 1,000 பறிமுதல் செய்யப்பட்டது. மேற்கண்ட முறைகேடுகளைத் தொடர்ந்து 1981-82 ஆம் ஆண்டுக்கான சர்க்கரை ஆலைக்கான எம்.எல். 2, எம்.எல். 6 உரிமங்களைப் புதுப்பிக்க மறுத்து 9—7—1981 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் ஆணையிட்டார். மாவட்ட



(பிற்பகல் 12-50)

ஆட்சித் தலைவர் உரிமையை ரத்து செய்து, வைப்புத் தொகையைப் பறிமுதல் செய்து வெளியிட்ட ஆணையை எதிர்த்து ரிட் மனு தாக்கல் செய்ததில் உயர் நீதிமன்றம் 17—8—1981 அன்று, "ரிட் மனுக்களின் மீது முடிவு கூறும் வரையில் மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணையின் மீது மேற்கொண்டு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கக் கூடாது" என்று தடை விதித்திருக்கிறது. ரிட் மனு இன்னும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவில்லை.

தமிழ் பண்பாட்டு மைய இயக்குநர் ரிக்கார்ட் ஒப்படைத்தது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி கேட்டிருக்கிறார். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து அவர் மீது வழக்குத் தொடர இருக்கிறது. அவர் வழக்குப் போட்டார், தோல்வியடைந்தார். இன்னொருவரை அந்தப் பதவிக்கு நியமித்திருக்கிறோம் என்பது தெரியும். ஆகவே அந்தப் பிரச்சினையில் சட்டப்படியும், நீதிப்படியும் நடவடிக்கை நடந்து கொண்டிருக்கிறது. யார் தவறு செய்தாலும் நடவடிக்கை எடுப்போம் நெருங்கிய நண்பராக இருந்தார், தவறாக நடந்து கொண்ட பிறகு நண்பாக இருக்க முடியாது என்ற நிலைமையில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் டாட்டா நிறுவனத்திடம் விசைப்படகு வாங்குவது குறித்துப் பேசியிருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் கடல்வாழ் உயிரியல் துறைக்கு டாட்டா நிறுவனத்திற்குச் சொந்தமான விசைப்படகை வாங்க முயற்சி செய்கிறார்கள் என்று கூறியது ஆதாரமற்றது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக டாட்டா நிறுவனத்தின் செலவிலேயே பல்கலைக் கழகத் துணைவேந்தர் விமானத்தில் சென்று பேச்சுவார்த்தை நடத்துகிறார் என்பது முற்றிலும் ஆதாரமற்றது என்ற தகவலைத் தந்திருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவர் கொஞ்சம் மன நிறைவு பெறுவார் என்று நினைக்கிறேன்.

திண்டுக்கல் மருத்துவ அதிகாரி டாக்டர் அப்சல் கான் பற்றி திரு. மியாகான் தன் எண்ணத்தை வெளியிட்டிருக்கிறார். அதை விசாரித்து அறிக்கை வைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். தமிழ்நாடு சட்டம் 5, 19-இன் கீழ் விசாரணை நடத்துவதற்கான அதிகாரம் 6—3—1979 அன்று ஆணை எண் 415-ல் வழங்கப்பட்டது. குழு விசாரித்து 23—6—1979 அன்று அரசுக்கு அறிக்கையை சமர்ப்பித்தது. அந்த அறிக்கையின் மீது பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையும், சுகாதாரம் மற்றும் குடும்பநலத்

துறையும் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆகவே அது கமிஷன் ஆஃப் என்குயரி ஆக்டின் கீழ் அமைக்கப்படவில்லை என்பதையும் நிர்வாகச் சட்டத்தின்கீழ்தான் அமைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே நடவடிக்கை என்ன என்பதைச் சொல்லும்போது மூழு விவரம் கிடைக்கும் என்பதை இந்த மன்றத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. நீலநாராயணன் இன்னுமொரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறார். பஞ்சாயத்துத் தேர்தல் நடைபெற வேண்டுமென்ற நோக்கத்திலே சட்டம் கொண்டுவரவில்லை என்று சொல்லியிருக்கிறார். நோக்கத்தைக் கற்பிப்பது என்பது வேறு, காரணங்களைக் கொண்டு நடவடிக்கை இப்படி இருந்தது என்பதை ஏற்றுக்கொள்வது என்பது வேறு. எங்களுடைய நோக்கம் என்ன வென்பதை செயல் மூலமாகத்தான் தெரிந்துகொள்ள வேண்டும். தேர்தலை நம்பி ஆசிரியர்கள் வேலையை ராஜினாமா செய்துவிட்டு வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எடுத்துச் சொன்னார்கள். எங்கள் கட்சியின் சார்பாக யார், யாரை ஒன்றியத் தலைவர் தேர்தலுக்கு நிறுத்த வேண்டுமோ அவர்கள் பெயரை நாங்கள் சொன்னதன் மூலம் இதை நடத்து வதற்காகத்தான் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. நீலநாராயணன் புரிந்துகொள்வார் என்று நினைக்கிறேன். அவர்களுக்கு வேலையில்லாமல் செய்வதற்காகவும் ஏமாற்று வதற்காகவும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவில்லை என்பதையும், இந்த அரசு அப்படி இல்லை என்பதையும், மேலும் வழக்கு மன்றத்திற்குச் சென்று விரைவிலே முடிக்க வாய்ப்பிருந்தால் முடிப்போம் என்றும், பஞ்சாயத்துத் தேர்தலை எவ்வளவு விரைவிலே நடத்தி முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவிலே முடிக்க வேண்டும் என்பதும்தான் எங்களுடைய நோக்கம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படியானால் நோக்கத்தைப் பற்றிச் சந்தேகிக்காதீர்கள். வேலை இழந்தவர்களுக்கு அனுதாபம் சொல்லுங் கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி தாரா செரியன் அவர்கள் பல கருத்துக்களைச் சொல்லியிருக் கிறார்கள். சாலையைப் பராமரிப்பது, பொதுப் பணித் துறை பற்றி எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். மூன்று, நான்கு பிரிவுகள் தனியாக இருப்பதால், அதை ஒருங்கிணைந்து செயல்படுத்த வேண்டுமென்றும், இப்போதுள்ள அமைப்பு முறையை, செயல் முறையை மாற்றி வேறு அமைப்பு முறையை உருவாக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். அதை ஒன்றிரண்டு மாதங்களில் நடைமுறைக்குக் கொண்டு வந்தால், ரோடுகள் தோண்டுவதைத் தடுக்கலாம் என்றும் சொல்லியிருக்கிறார். புதிய பாதை அமைக்கப்பட்ட பிறகு, குடிநீர் திட்டமாக இருந்தாலும் சரி, வடிகால் வாரியத்திற்கான காரியத்த



இருந்தாலும் சரி, வேறு எந்தக் காரணமாக இருந்தாலும் சரி, மீண்டும் தோண்டுவதற்கு அனுமதிக்காமல் பார்த்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னுமொன்றையும் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். சமூக அமைப்பின் அடிப்படையில் ஊனமுற்ற குழந்தைகளுக்கெல்லாம் அல்லது வேறு சில அனாதைக் குழந்தைகளுக்கெல்லாம் கல்வி கற்பிக்கின்ற உரிமை அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற சமூக நலத் துறையில் இருக்க வேண்டுமென்றும், கல்வித் துறைக்கு மாற்றப்பட்டிருப்பதைத் திரும்பக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள். பொறுப்புள்ளவர்கள் வரும் போது எங்களுக்கு இன்னும் கொஞ்சம் லாபம்தான். நஷ்டமில்லை. ஆகவே அந்த பொறுப்பை அந்த இலாக்காவிற்குத் திரும்பக் கொடுப்பதில் இந்த அமைச்சரவைக்கு எந்தவிதமான ஆட்சேபணையுமில்லை என்பதை பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநகராட்சிக்கு இன்னுமொரு ஸ்பெஷல் ஆபீசரைப் போடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். திரு. ஆர். டி. சீத்தாபதி அவர்கள் மாநகராட்சியின் நிர்வாகம் சீர்கெட்டு மோசமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மாநகராட்சிக்கு வருகின்ற வருமானம் இல்லையென்று சொல்லவில்லை. எவ்வளவு என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்களுக்கு நன்கு தெரியும் என்று நினைக்கிறேன்.

**திருமதி தாரா செரியன் :** மதிப்பிற்குரிய சேர்மென் அவர்களே, நமது 'சீப் மினிஸ்டர்' சொன்னது எனக்குச் சரியாக விளங்கவில்லை.

My idea was that education of the handicapped children should not be in the Social Welfare Department because the people are not qualified and, therefore, it should go back to the Education Department.

அதைத்தான் நான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** எனக்கு எழுதிக் கொடுத்தது வேறு. ஆகவே அவர்களிடமிருந்து மாற்றப்பட்டிருக்கிறது என்று கருதினேன். அந்தப் பொறுப்பை ஏன் மாற்ற வேண்டும் என்பதைப்பற்றிப் பரிசீலிக்கச் சொல்லுகிறேன். ஏனெனில் புதைபொருள் ஆராய்ச்சி கல்வித் தொடர்பாக இருந்தது இப்போது அதை நான் நேரிடையாக எடுத்துக் கொண்டிருக்கிறேன். [illegible] பல [illegible]களையொட்டி நான் அப்படிச் செய்திருக்கிறேன். [illegible] [illegible] அமைச்சர்களுக்கும் தொடர்புடைய ஒன்றாக இருப்பதால், யார் [illegible], [illegible] பாதுகாப்பது, யார் [illegible], [illegible] வெளியிலிருந்து [illegible]களுக்கு யார் செய்தி தருவது, பள்ளிகளுக்கும்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 18

கல்லூரிகளுக்கும் புதியதாகக் கண்டுபிடிப்பதை யார் கொடுப்பது என்ற
பிரச்சினைகள் இருப்பதால், அதை நானே எடுத்துக் கொண்டு தீர்த்துக்
கொடுக்கலாம், செய்தியைக் கொடுக்கலாம் என்று இருக்கிறேன். அதைப்
போலவே அங்கேதான் இருக்க வேண்டுமென்று கருதினால், கல்வியமைச்சரோடு
பேசிய பிறகு முடிவு சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1.00)

மாநகராட்சி நிர்வாகம்பற்றிச் சொன்னார்கள். ஏறத்தாழ 20 கோடி
அல்லது 22 கோடி ரூபாய் அளவுக்கு இதிலே வருமானம் வருகிறது என்றால்,
சம்பளச் செலவு அதுபோன்ற மற்ற செலவுகளுக்கு என்று ரூ. 20 கோடி
அளவுக்கு ஆகிவிடுகிறது. அதற்குப் பிறகு அதற்கு இருப்பது ஒரு கோடி
அல்லது இரண்டு கோடி ரூபாய்தான் அதிலேதான் இவ்வளவு காரியங்களைச்
செய்ய வேண்டியிருக்கிறது. இது மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆர். டி.
சீத்தாபதி அவர்களுக்கும் தெரியும். ஆகவே அவர்கள் குறை கூறுகிறார்கள்
என்றால், ஆளை மாற்றுவது மட்டும் போதாது. மாநகராட்சிக்கு வருமானம்
வந்தாக வேண்டும். மாநகராட்சிக்கு வருகின்ற வருமானத்தை உயர்த்தினால்
தான், அதிகமாக அவர்கள் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வசதியாக
இருக்கும். அவர்களுக்கு உரிய அளவுக்கு நிதி கிடைத்தால்தான், அவர்களிட
மிருந்து வேலை வாங்க முடியுமே தவிர வேறல்ல. மாண்புமிகு உறுப்பினர்
செட்டியார் அவர்கள் சொன்னதுபோல, அதை மாற்றி ஒரு ஸ்பெஷல் ஆபிசர்
அல்லது இன்னொரு ஸ்பெஷல் ஆபிசர் என்பதைவிட, 10 ஸ்பெஷல் ஆபிசர்கள்
என்று போட்டாலும் சம்பளம் தான் போகும், அதனாலே பலன் இருக்காது
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அவர்களை செட்டி நாட்டரசர்
என்று அழைப்பதுதான் வழக்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வயதில்
முதிர்ந்தவர்கள். அதனால்தான் செட்டி நாட்டரசர் என்று அழைக்கிறேன்
எனக்கு 'செட்டியார்' என்பதிலே நம்பிக்கை இல்லை. அதையும் இந்த
நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

ஆக நிதியைச் சேகரிக்க நாம் பெரிய காரியம் செய்தாக வேண்டும்
மாண்புமிகு அங்கத்தினர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் ஒரு பிரச்சினையைப்
பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். மிகப் பெரிய பிரச்சினை. தாய்மார்கள்
வழிப்பறி செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் அதற்கு
முன்பேகூட பதில் சொல்லியிருக்கிறேன். என்றாலும், அதைப்பற்றி நான்
அதிகமாக விவரிப்பதற்கு நேரம் இல்லை என்ற காரணத்தினாலே, அதிலே
ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். கொள்ளை, திருடு, வழிப்பறி
இவைகளை நிறுத்தவேண்டுமென்றால், சமூக விரோதிகளிடமிருந்து
மக்களைப் பிரித்தாக வேண்டும். அத்தனை லட்சம் மக்களைப் பிரிக்க முடிய
வில்லை என்றால், சமூக விரோதிகள் குறைவாக இருந்தால், அவர்களை இந்த



1982 பிப்ரவரி 18] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

சமூகத்திலிருந்து பிரிக்கக்கூடிய வகையில் வேறு பல நடவடிக்கைகளில் நாம்
ஈடுபடலாம். அப்படிச் செய்தால்தான், நிம்மதி ஏற்படும் என்பதை நான்
இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதற்கு என்ன செய்யலாம்
என்பதைப்பற்றி நாங்கள் சிந்தித்துக்கொண்டிருக்கிறோம், பரிசீலித்துக்
கொண்டிருக்கிறோம், விவாதிக்கிறோம். சட்டப்படியும் நியாயப்படியும்
அதற்கேற்ற நடவடிக்கைகளை இந்த அரசு கண்டிப்பாக எடுக்கும் என்பதை,
அதை நீங்கள் நம்புவீர்கள் என்ற வகையிலே உறுதி கூறிக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆயிரம் மூட்டை சிமெண்ட் பிடிக்கப்
பட்டது என்றாலும், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய விவரம்
குறிப்பிடப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்
கிறார்கள். 2—12—1981 அன்று சிமெண்ட் மூட்டைகள் லாரியில் கேரளா
விற்குச் சென்றபோது, நாகர்கோயில் வனத் துறை அதிகாரிகள் அந்த
சிமெண்ட் மூட்டைகளைக் கைப்பற்றினார்கள். இது குறித்து விசாரித்ததில்
இந்த சிமெண்ட் மூட்டைகள் கேரள அரசுக்குச் சொந்தமானவை என்றும்,
கேரளத்தில் உள்ள அணைக்கட்டு கட்டும் திட்டத்திற்காக தாழையூற்று
இந்தியன் சிமெண்ட் நிறுவனத்திடம் பெற்றுக்கொண்டிருந்த சிமெண்டின்
ஒரு பகுதியாகும் என்றும் தெரிய வருகிறது. அந்த ஏஜெண்டின் மூலமாக,
வாகனங்கள் சரியாகக் கிடைக்காததால், லாரி மூலமாக ஒரு தனியார் போக்கு
வரத்து நிறுவனத்தின் மூலம் கேரளத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.
அதற்கு அந்த நிறுவனம் கேரள அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.
அவர்களிடம் ஸ்டாக் சிமெண்ட் வைத்துக்கொள்வதற்கு லைசென்ஸ் ஏதும்
இல்லை. அந்த நிறுவனத்தாரிடமிருந்து பெரும் சிமெண்டை நாகர்கோயிலில்
சேமித்து வைத்துக்கொண்டு கேரளாவிற்கு அனுப்பி வருவதாகத் தெரிகிறது.
மாநிலங்களுக்கிடையே லாரி போக்குவரத்துக் கட்டுப்பாடு உள்ளதால்,
இம்மாதிரி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. மாவட்ட ஆட்சித்
தலைவர் அந்த இடத்தைப் பார்வையிட்டு அங்கு 562 டன் சிமெண்ட்
சேமிக்கப்பட்டு வைத்திருந்ததாகவும் தெரிகிறது. அந்த மூட்டைகள் சீல்
செய்யப்பட்டன. அந்த நிறுவனத்தினர் அவர்கள் சிமெண்ட் வியாபாரிகள்
அல்ல என்றும், அவர்களுக்கு அதைச் சேமிப்பதற்கான லைசென்ஸ் தேவை
யில்லை என்றும் சொன்னார்கள் என்றும் வந்திருக்கிறது. விசாரணையில்
இந்த சிமெண்ட் கேரளாவிற்கு அனுப்பப்படுகிறது என்றும், இதற்கான
இந்தியா சிமெண்டுக்கான பில்கள் அவர்களிடம் இருந்தன என்றும் தெரி
கிறது. விசாரணையின் அடிப்படையில் அவர்கள் வைத்திருந்த அந்த
சிமெண்ட் அன்று விடுவிக்கப்பட்டது இதுதான் விசாரணையில் இருக்
கிறது. அவர்கள் சிமெண்ட் வியாபாரம் செய்யவில்லை என்றாலும். பொது
வாக சேமிப்பு என்று வைத்திருப்பதால், அதற்கான உரிமத்தைப் பெறுமாறு

அறிவுரை வழங்கியதன் பேரில், அவர்கள் உரிமத்திற்காக விண்ணப்பம் செய்து கொண்டுள்ளனர். இதில் முறைகேடு எதுவும் நடைபெறவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். என்றாலும் இன்னும் கொஞ்சம் தீவிரமாகப் பரிசீலிக்குமாறு அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறோம் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. சங்கரலிங்கம்:** 26—12—1981-ல் மாலையில் வானொலி செய்தியில் நாகர்கோயிலில் உள்ள ஒரு கோடவுனில் ஆயிரம் மூட்டை சிமெண்ட் பறிமுதல் செய்யப்பட்டது என்றுதான் அறிவிப்பு வந்தது. மறுநாள் காலையில் தினத்தந்தியில் வந்தது அவர்கள் தக்கலையில் பிடிக்கப்பட்டதாக வந்தது. இப்படி பல கதைகள் சொல்லப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியதில், அதிகாரம் பெறாத ஒரு இடத்தில் சிமெண்ட் இருந்தது என்பதை அதில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவர்கள் லைசென்ஸ் பெற்றுக்கொண்டு வைத்துக்கொள்ளும்படியான அதிகாரிகள் அறிவுறுத்தியிருப்பதாகச் சொல்கிறார்கள் என்று தெரிவிக்கிறார்கள். உண்மையிலேயே தமிழ் நாட்டிற்கு ஒதுக்கியுள்ள சிமெண்டு தமிழ் நாட்டிலேயே ரூ. 80-க்கு பிளாக்கிலே விற்கப்படுகிறது. அதுவே கேரளாவிலே ரூ. 120-க்கு விற்கப்படுகிறது. அரபு நாடுகளிலிருந்து அங்கு பணம் வந்துகொண்டிருப்பதால், பிளாக் மார்க்கெட் மணி அங்கே அதிகமாக இருக்கிறது. தமிழ் நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட சிமெண்ட் பல்வேறு திசைகளில் கேரளாவிற்குப் போகின்ற ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அவர்கள் பிடிக்கப்பட்ட பிறகு அதிகாரிகளை சரிக்கட்டிக்கொண்டு விடுகிறார்கள். இதையெல்லாம் பிளாக் மார்க்கெட் வியாபாரிகள் செய்துகொண்டிருக்கிறார்கள். இதற்கு என்று தக்க ஆணை பிறப்பித்து அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கருத்தை நாங்கள் நிச்சயமாகப் பரிசீலிக்கிறோம். மீண்டும் உரிமம் தருவதற்கு முன், கேரள அரசைக் கலந்து அங்கே அப்படிப்பட்ட அமைப்பு இருக்கிறதா? அங்கே அப்படி கொண்டு செல்கின்றார்களா? அதற்கு கேரள அரசு அனுமதித்திருக்கிறதா என்று விசாரித்து, அதற்குப் பிறகு என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைச் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தல் அறிக்கையில், 10 அம்ச சிறப்புத் திட்டம் என்று சொல்லியிருக்கிறோம். அதை எவ்வளவு வேகமாக முடிக்க முடியுமோ, அந்த அளவு [illegible]கொள்கிறேன். வேலை வாய்ப்புத் திட்டம்; 18 வயது [illegible] பெண் அனைவருக்கும் வேலை வாய்ப்புத் திட்டத்தின் [illegible] [illegible]ப்புத் தொகை பெற்றவர்களுக்கு, சிறு உழவர்கள் மேம்பாட்டு





நிறுவனம், வளர்ச்சிப் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊர் வளர்ச்சித் திட்டங்கள் ஆகிய திட்டங்களின் கீழ் உதவி பெற்றவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் வேலை பெற விரும்பும் அனைவரும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம். வேலை வாய்ப்பு இல்லாமல், இத்திட்டத்தின் கீழ் சேர்ந்து உதவி பெறுகின்றவர்களுக்கு ஊர் நல அலுவலர்களும், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும் தக்க முயற்சி எடுப்பார்கள். ஊர் நல அலுவலர், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் வேலையற்று இருப்பவர்கள் குறித்து ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு பதிவேடு வைத்திருப்பார்கள். பதிவு செய்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்துகொண்டிருப்பவர்கள் கட்டாயமாக வேலை செய்ய வேண்டுமென்ற நிபந்தனை இல்லை. விருப்பம் இருப்பவர்கள் மட்டுமே இந்தத் திட்டத்தின்கீழ் வேலை செய்யலாம். அப்படி வேலை செய்யாமல் மறுப்பதற்கு அவர்களுக்கு எல்லா விதமான உரிமையும் உண்டு. அந்த வட்டாரத்திற்குள்ளேயே அவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும். அருகிலுள்ள கிராமங்களிலும் வேலை வாய்ப்பு அளிக்க முயற்சி எடுக்கப்படும். செய்கின்ற வேலைக்கு ஏற்ப அவர்களுக்கு ஊதியம் அளிக்கப்படும். அவ்வாறு 30 நாட்களுக்குள் எந்த நபருக்கும் வேலை கொடுக்க இயலாது என்ற நிலை ஏற்பட்டால், அந்த நபர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் இலவசமாக அளிக்கப்படும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. 1—9—1981 முதல் 31—12—1981 வரை 4,55,271 பேர்கள் இத்திட்டத்தின்கீழ் வேலை வேண்டி பதிவு செய்திருக்கிறார்கள். அதில் 3,31,770 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது. மீதம் உள்ள 1,23,497 பேர்கள் தாங்களாகவே பதிவு செய்துகொண்டதிலிருந்து விலகிக்கொண்டிருக்கிறார்கள். இத் திட்டத்தின் கீழ் பதிவு செய்துகொண்ட அனைவருக்கும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலை அளிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ. 7 கூலி [illegible] ஊதியம் கொடுக்கப்பட வேண்டும் அல்லது பொருளாகவோ அல்லது முழுவதும் பணமாகவோ வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, எல்லோருக்கும் மனைப் பட்டா வழங்குவது என்று தேர்தல் அறிக்கையிலே வெளியிட்டோம். இருப்பதற்கு இடம் இல்லாமல் தவிக்கும் ஏழைகளுக்கு மனைப் பட்டாக்கள் கொடுக்கிறோம் என்று சொன்னோம். 1977-78 ஆம் ஆண்டு முதல் 30—11—1981 வரை 2,00,829 வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. 66,720 பேர்கள் ஆதி திராவிடர்கள். 9,556 பேர்கள் பழங்குடியினர். கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 93,894 பேர்களுக்கு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

(பிற்பகல் 1.10)

இதில் 21,315 பேர்கள் ஆதிதிராவிடர்கள், 985 பேர்கள் பழங்குடியினர். இது தவிர தனியார் நிலங்களைக் கையகப்படுத்துவதன் மூலம் 1977-78 முதல் 1981-82 ஜூன் வரை 57,920 மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 29,064 மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

வேலை வாய்ப்புப்பற்றி தேர்தல் அறிக்கையிலே சொன்னது : வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள வேலையில்லாத இளைஞர்களுக்கு, ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளித்து வேலை கொடுக்கப்படும் ; ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொருவருக்காவது கட்டாயமாக வேலை தரப்படும், வேலையில்லாதவர்கள் 1 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள், ரூபாய் 50 விதம் உதவிப் பணம் கொடுத்தால், ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6 கோடி செலவாகும் என்று அண்ணா தி.மு.க. அறிவித்தது. இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி, செகண்டரி கிரேட் ஆசிரியர் பயிற்சி பெற்று, வேலையில்லாமல் இருக்கிறவர்களுக்கு உதவித் தொகை ரூபாய் 50 கொடுக்கப்படுமென்று சொன்னேன். படித்து பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு 50 ரூபாய் கொடுக்கும் திட்டமொன்றைத் தீட்டி, அரசு செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் 15—1—1982 நிலவரப்படி உதவித் தொகை வழங்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 11,815 ; இந்தத் திட்டத்தின்கீழ் செலவழிக்கப்பட்ட தொகை 1980-81-ல் 22,04,000 ரூபாய் ; 1981-82-ல் 43,60,000 ரூபாய். வேலையில்லாத பட்டதாரிகள் தாங்களே சுயமாக வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ள மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் குழு ஒன்று அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

மகப்பேறு கால ஊதியம்—பிரசவத்தின்போது தாய் சேய் உடல்நலப் பாதுகாப்பிற்காக ஏழைத் தாய்மார்களுக்கு மாதம் ரூபாய் 50 விதம் 3 மாதங்களுக்கு 150 ரூபாய் தரப்படுமென்று அறிவித்தோம். இம்மாதிரித் திட்டம்—சிறப்பு சத்துணவுத் திட்டம், உலக வங்கி சத்துணவுத் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் குறிப்பிட்ட வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது. இருப்பினும் மாநிலம் முழுவதுமுள்ள ஏழைத் தாய்மார்களுக்கு மாநில அரசே ரூபாய் 150 வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வந்திருக்கிறது. இதுபற்றி அறிவிப்பு உரிய நேரத்தில் உங்களுக்குக் கிடைக்கும். இதற்குமேல் சொல்லக்கூடாது.

தமிழ்நாட்டில் எக்காரணத்தைக் கொண்டும் பட்டினிச் சாவு நிகழக்கூடாது என்பது லட்சியம். அத்தகையவர்கள் அரசு அதிகாரிகளை அணுகித் தங்கள் நிலைமையைச் சொன்னால், 100 ரூபாய் உதவித் தொகை அளிப்பதுடன்,





தேவையான வேலை வாய்ப்பு தர வழி வகை செய்யப்படும்—இது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டது. தமிழகத்தில் எக்காரணத்தைக் கொண்டும் பட்டினிச் சாவு நிகழக்கூடாது. பட்டினிச் சாவு தடுப்புத் திட்டம் 1980 டிசம்பர் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 185 பேர்கள் நிதி உதவி பெற்றுள்ளனர். வழங்கியுள்ள தொகை 18,500 ரூபாய். தகுதியுள்ள ஒவ்வொருவரும் இத்திட்டத்தின்கீழ் 100 ரூபாய் பெறுகின்றனர். யார் யார் எங்கெங்கே அப்படி இருக்கிறார்களோ அவர்களைப்பற்றி உறுப்பினர்கள் தகவல் தந்தால், அந்த மாவட்டத்திலுள்ள அதிகாரிகள் அதைக் கவனிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் 5 கிலோ அரிசி வாங்கினால், ஒரு கிலோ இலவசமாக அளிக்க ஏற்பாடு செய்வோமென்று சொன்னோம். சொன்னதுபோல முதியோர் உதவித் தொகை, விதவைகள் உதவித் தொகை, உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர் உதவித் தொகை ஆகியவை பெறும் 2 லட்சம் பேர்களுக்கு வாரம் ஒரு கிலோ அரிசி வழங்கப்பட்டு வருகிறது. எங்காவது இது நடைபெறவில்லை என்ற சந்தேகம் இருந்தால், அதைப்பற்றிக் குறிப்பிடலாம். நடவடிக்கை எடுப்போம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, 5 திட்டங்கள் கொள்கைபற்றிச் சொல்லிவிட்டு என்னுடைய பேச்சை முடிக்க இருக்கிறேன்.

சட்டம், ஒழுங்கு சரியாக இருந்தால்தான், நாட்டிலே அமைதி இருந்தால்தான், திட்டங்களைத் தொடர்ந்து நடத்தவும், விரைவுபடுத்தவும் முடியுமென்பதை நாங்கள் சொல்லி, நீங்கள் ஒத்துக்கொள்ள வேண்டியதில்லை; நீங்களே சொல்லக்கூடிய ஒன்று ; உங்களுக்குத் தெரியாததல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதே சமயத்தில் திட்டங்கள் தீட்டுவது என்பது மக்களுக்காக. அதிலும் யார் முதலிலே பெற வேண்டுமோ, அந்த முன்னுரிமை பெற்றிருக்கிற வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்குப் போய்ச் சேரும் வகையில் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதுதான் அரசின் கொள்கை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அண்ணாவின் கொள்கை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசும்போது, அண்ணாவின் பெயரைச் சொல்லுகிறீர்கள், அண்ணாவின் பெயரை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள், அண்ணா சொன்னதை மறந்துவிடக் கூடாதென்று சொன்னார்கள். அவருக்கு நன்றி கூறிக்கொள்ளுகிறேன். இப்படி அவ்வப்போது நினைவுபடுத்துகிற அவர்கள் எங்களுக்கு நண்பர்களாக இருக்கிறார்களோ, இல்லையோ; எதிரிகளாக இருந்தாலும் பரவாயில்லை, எதிர்க்கட்சியில் இருந்தாலும் பரவாயில்லை; நல்லதையே சொல்லுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 18

ஊழலற்ற நிர்வாகம் இருந்தால்தான், நிச்சயமாக நன்மைகள் நடக்க முடியும். அதிலும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசும்போது, இங்கே செலவு செய்கிறார்களே, அந்தப் பணம் குறிப்பிட்டவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்று சொன்னார்கள். நீங்கள் ஒவ்வொருவரும், உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும், அல்லது உங்களைப் பின்பற்றுகிறவர்களும், நீங்கள் சொன்னால் கேட்கக்கூடியவர்களும் ஆங்காங்கே என்ன நடக்கிறது என்பதைச் சொல்ல வேண்டுமென்பதுதான் என்னுடைய பணிவான வேண்டு கோள். அதையும் நாங்கள் அலட்சியப்படுத்துவோமென்றால், எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லலாம். அதற்குப் பிறகு பதவியில் இருக்க விரும்ப மாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணாவின் கொள்கையை நிறைவேற்ற வேண்டுமென்பதுதான் இந்த அரசின் நோக்க மாகும். சட்டம், ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டும். சட்டம் ஒழுங்கைத் தனி மனிதன் தன் கையில் எடுத்துக்கொண்டால், அதற்குப் பிறகு நீதி இராது. இதைக் கொஞ்சம் அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். இப்போது சிலர் சட்டத்தைத் தங்கள் கையில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தாங்களாக எடுத்துக்கொள்கிறார்கள். சட்டம் என்று இருந்தால்கூட, நாங்கள் சொல்வது தான் சட்டம் என்று நினைக்கிறார்கள். நாங்கள் சொல்வதுதான் சரி என்று சொல்லுகிறார்கள். ஆதாரம் இருக்கிறதோ இல்லையோ, நாங்கள் சொல்லு வதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிலை இருக்கிறதென்பதைக் குறிப்பிடும் போது, கழுதையை தந்தையும் தனயனும் சுமந்துகொண்டு போனார்களே, அந்தக் கதை ஞாபகத்திற்கு வருகிறது. அதைச் சொல்லியாக வேண்டும்.

ஒரு தந்தையும், தனயனும் ஒரு கழுதையின் மேல் துணி மூட்டையை ஏற்றி, ஓட்டிக்கொண்டு போனார்கள். தந்தையும், தனயனும் கூட நடந்து போனார்கள். கொஞ்ச தூரம் போன பிறகு சிலர், "வயதானவர் நடந்து போகிறார், மூட்டையை சுமந்து செல்வதற்கு பதில், அவரை உட்காரவைத்துக் கொண்டு போகலாமே" என்றார்கள். உடனே மூட்டையைக் கீழே இறக்கி, அவரை உட்கார வைத்து, மூட்டையையும் சுமந்துகொண்டு போனான் தனயன். இன்னும் கொஞ்ச தூரம் போனவுடன், "வயதான மனிதன் கழுதையின் மேலே உட்கார்ந்து போகிறான், சாகப் போகிறவன், இவனுக்கு என்ன கேடு, வீட்டிலேதானே இருக்க வேண்டும், சின்னப் பையன் நடந்து போகிறான், இவன் போய் வேலை செய்ய வேண்டாமா, மூட்டையை சுமந்துகொண்டு போகிறான்", என்றார்கள், உடனே மூட்டையை அதன் மேலேயே வைப்போமென்று வைத்தார்கள். இன்னும் கொஞ்ச தூரம் போன பின்பு, "என்ன இது, மூட்டையைச் சுமந்து செல்லும் கழுதையின்மேல் இந்த கிழவன் உட்கார்ந்திருக்கிறானே, என்ன அநியாயம், இந்தப் பையனை உட்கார வைக்கக்கூடாதா?" என்றார்கள். அந்தப் பையனும் உட்கார்ந்தான்.



1982 பிப்ரவரி 18] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

கொஞ்ச தூரம் போன பின்பு, ஒருவன் 'பாவம், கழுதைக்கு வயதாயிற்று, மூட்டையையும் சுமந்து, தந்தையையும் சுமந்து, மகனையும் சுமக்கிறதே, இது அநியாயமாக இருக்கிறதே, அதனால் எப்படி நடக்க முடியும்" என்றான். அவன் சொல்லுவதைக் கேட்டு, இவர்கள் யோசித்தார்கள். நியாயம்தான் என்று நினைத்து, மூட்டையைக் கீழே போட்டுவிட்டு, கழுதையை ஒரு கம்பிலே கட்டி இரண்டு பேரும் தந்தையும், தனயனும் தூக்கிக்கொண்டு போனார்கள் என்று ஒரு கதை—சிறு வயதில் படித்தது. அதைப்போல விமர்சனங்களையெல்லாம் அப்படியே கேட்டுவிட்டால், 'வா சட்டத்தைப்பற்றி விமர்சனங்களையெல்லாம் அப்படியே கேட்டுவிட்டால், சட்டம், ஒழுங்கு எங்கே மினிஸ்டர்' பாடு மிகத் தொந்தரவாகிவிடும். சட்டம், ஒழுங்கு எங்கே போகுமென்பது தெரியாது. யாரை நம்புகிறேன் என்றால், என் மனச் சாட்சியை நம்பும்போது, மனச்சாட்சி தந்துள்ள கொள்கை இருக்கிறதே, அந்தக் கொள்கையைத் தந்த அமரர் அண்ணாவை நம்புகிறேன். அவர் சொன்னதைப் பின்பற்ற வேண்டுமென்பது என்னுடைய நோக்கம். அண்ணா அவர்கள் பல கோணங்களில் சொல்லியிருக்கிறார்கள். நாடோடி மன்னனில் ஒரு உரையாடல் வருகிறது. கதாநாயகன் சொல்கிறான், நாடோடி அமைச் சரவையைப் பார்த்து—இந்த அமைச்சரவையை நோக்கியல்ல—ராஜாவாகப் போகிறவன் சொல்லுகிறான், "நீங்கள் மாளிகையிலே இருந்துகொண்டு மக்க ளைப் பார்க்கிறீர்கள்; நான் மக்களோடு இருந்துகொண்டு மாடத்தைப் பார்க் கிறேன்" என்று சொல்லுகிறான். இதைத்தான் அமரர் அண்ணா அவர்கள் ஒரு நண்பரிடம் ஆங்கிலத்தில் எழுதிக் கொடுத்திருக்கிறார்.

"Dear brother,

Go to the people, live among them, learn from them, love them, serve them, plan with them, star with what they have build on what they have—to those who want to engage themselves in public service."

(பிற்பகல் 1-20)

என்று சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டியவர்கள் மக்களோடு இருந்து திட்டம் தீட்டியாக வேண்டும். மக்க ளோடு அன்போடு இருக்க வேண்டும். மக்களோடு சம வாழ்க்கையை வாழ இன்ற முறையை அமைத்துக்கொள்ள வேண்டும். அதைத்தான் நான் ஒன்றைச் செய்ய மாண்புமிகு தலைவரவர்கள் எனக்கு அனுமதி அளிக்க வேண்டும். இப்படி நான் செய்ய மரபு இருக்கிறதா என்று எனக்குத் தெரியாது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தன் கைப்பட எனக்கு எழுதித் தந்திருக்கிற இதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் அன்பளிப்பாகத் தருகிறேன். இப்படிக் கொடுக்க மரபு இருக்கிறதா?

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 18

இருந்தாலும் தர விரும்புகிறேன். அதிலே சரியாக எழுதியிருக்கிறார்கள். பக்கத்திலே அதை வைத்திருக்கிறேன். எனக்கு ஆங்கிலம் தெரியாவிட்டாலும் மற்றவர்கள் பேசுவதைப் புரிந்துகொண்டிருக்கிறேன். (திரு. சங்கரலிங்கம் அவர்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போட்டோ படம் ஒன்றைக் கொடுத்தார்கள்). எல்லா இடத்திலும் அண்ணா இருக்கிறார். அண்ணாவை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். கடவுளைத் தொழுபவர்கள் எல்லோரும் கடவுளுக்குச் சொந்தக்காரர்கள் என்பதல்ல. அதுபோல் ஜாதி இல்லையென்று சொல்லுபவர்கள் எல்லாம் ஜாதிக்குச் சொந்தக்காரர்கள் அல்ல.

இப்போது மதப் பிரச்சினையையும், ஜாதிப் பிரச்சினையையும் சிலர் கொண்டு வருகிறார்கள். கிராமங்களில் கூட சங்கடம் தோன்றும் அளவுக்கு நாடு சென்றுகொண்டிருக்கிறது. எந்தத் தவறு நடைபெற்றாலும், அந்தத் தவறுகளுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் நாம் சொந்தக்காரர்களாக ஆகக் கூடாது. பிறரைக் குற்றம் சொல்வதும் கூடாது. பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில்தான் நாங்கள் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துகிறோம் என்பதைச் சொல்லி, ஆளுநர் உரையின் மீது திருத்தங்களைக் கொண்டு வந்தவர்களுக்கு நன்றி கூறி, திருத்தங்களை வலியுறுத்தாமல் திரும்பப் பெற்று தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: நேரம் ஆகிவிட்டது என்பதை உணர்ந்திருக்கிறேன். இருந்தாலும் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: விவாதத்தின்போதும் குறுக்கீடுகளைத் தாராளமாக அனுமதித்திருக்கிறேன். எந்தவிதத்திலும் விவாதத்தில் இனிமேல் அனுமதி கிடையாது.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரைக்குப்பின் குறுக்கீடு செய்யக் கூடாது என்றுதான் இருந்தேன். ஆனால் அவர்கள் என் மீது அன்பு கொண்டு அண்ணாவின் பொன்மொழி அடங்கிய கண்ணாடிச் சட்டத்தை எனக்கு வழங்கியிருப்பதற்கு நன்றி கூறிக் கொள்கிறேன். மூன்று நாட்கள் தொடர்ச்சியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை அளித்துள்ளதால், இறுதியாக நான் சில வேண்டுகோள்களை வைக்கிறேன். நேற்றைக்கு அவர்கள் பேசுகிறபோது பத்திரிகையிலிருந்து எடுத்துக்காட்டிப் பேசினார்கள். அப்போது அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலின்போது குண்டுமணி அவர்களைத் தூக்கும்போது தவறி விழுந்ததன் காரணமாக அவருடைய கால் ஒடிந்ததாகவும், அன்று நாட்டு மக்கள் எல்லோரும்



1982 பிப்ரவரி 18] [திரு. ம. சங்கரலிங்கம்]

புரிந்துகொண்டார்கள் என்பதையும், அவர்களுக்கே அது எவ்வளவு பெரிய ஆபத்தாக இருந்தது என்பதையும் குறிப்பிட்டார்கள். அதனுடைய நோக்கத்தைச் சொல்லிய பிறகு, சில பத்திரிகைகளில் "கலைஞரைக் கொலை செய்ய சதி" என்று வந்த செய்தியையும் எடுத்துச் சொன்னார்கள். அப்படிப் பட்ட ஒரு நிலை வரக்கூடாது என்று சொல்லி, அவர்கள் சொன்ன உறுதியையும், செய்தியையும் நான் வரவேற்கிறேன். ஆனால் அதே சமயத்தில் நேற்றையதினம் பேசுகிறபோது "என்னைக் கொலை செய்ய சதி—ஒருவர் ரூபாய் கொடுத்திருக்கிறார்" என்ற செய்தியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிலே ஒரு மாதத்திற்கு முன்பு சொன்னாலும் கூட, மேலவையில் சொல்லப்பட்டு அது நேற்றையதினம் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன விளைவுகள் வரக்கூடாது என்று எதிர்பார்த்தார்களோ அல்லது நினைத்தார்களோ அந்தச் செய்திக்கு மாறாக, உணர்வுக்கு மாறாக, செய்தி வந்திருக்கிறது. அப்படி என்றால், நாட்டில் அவ்வாறு ஏதாவது ஏற்படும் என்ற உணர்வில் அப்படிக் கருதிக் கூறியிருக்கிறார்களா? நாட்டில் அப்படிப்பட்ட நிலை வராது என்றால், அது நல்லது. ஏனென்றால் நாட்டிலுள்ள சட்டம் ஒழுங்குப் பொறுப்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கையில் இருக்கிறது. இதை அண்ணா அவர்கள் வழி நின்று நான் உணர்த்துகிறேன். அண்ணாவின் பொன்மொழியை எனக்கு இன்றைக்குத் தந்திருக்கிற முதலமைச்சர் அவர்கள் அத்தகைய உணர்வால் தந்திருக்கிறார் என்று கருதி ஏற்றுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நேற்றைக்கு நான் இதைப் பற்றிச் சொல்லும்போது, யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை. அதே சமயத்தில் 'எதிரொலி' பத்திரிகையில் என் பெயரால், என் பெயரைக் குறிப்பிட்டு செய்தி வந்திருக்கிறது. இன்னும் யார் பணம் கொடுத்தவர் யார் என்பதைப்பற்றிச் சொல்லவில்லை. சட்டப்படி அந்தப் பெயர் தெரிகிறபோது பார்த்துக்கொள்வேன். நான் யாருக்காவது தொல்லை தரவேண்டுமென்ற எண்ணத்தோடு அந்தக் கருத்தைச் சொல்லவில்லை. என்னை எந்த நிலையில் வைத்துக்கொண்டிருக்கிறேன் என்பதைத்தான் சொன்னேன். அப்படித்தான் அன்பர்கள் இருக்கிறார்கள் என்பதைச் சொன்னேன். யார் மீதாவது பழி சுமத்த வேண்டுமென்ற நிலையிலோ, அல்லது உண்டு பண்ண வேண்டுமென்ற நிலையிலோ நான் இல்லை. பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அன்றையதினம் தமிழ்நாட்டுக்கு வந்து போனபோது நிகழ்ந்த நிகழ்ச்சிகள் யாவும் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். வழக்கு மன்றத்தில் அதுகுறித்து வழக்கு நடப்பதால், அதற்கு உள்ளே போக விரும்பவில்லை. ஆனால் அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, சில மாதங்களுக்குப் பிறகு கலைஞர் அவர்கள் மீண்டும் மதுரைக்குப் போக முடிவு எடுத்தபோது கல்லூரி

ரிடமும் அதிகாரிகளிடமும் தொலைபேசியில் சொன்னதைச் சொல்கிறேன். போலீசார் உதவியோடுதான் போக வேண்டுமென்று சொன்னேன். அங்கு நிதி சேர்க்கின்ற ஒரு சிறப்புக் கூட்டம் நடத்தினார்கள். இந்தக் கூட்டத்தைக் கூட்டுகின்ற இடத்தில் கூட போலீசார் துப்பாக்கியோடு நிற்க வேண்டும். கூற்றுக் கொட்டகை இருந்தால், எத்தனை 'பையர் என்ஜின்' வேண்டுமோ அத்தனையையும் சேர்த்து அங்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் சொன்னேன். அதுமட்டுமல்லாமல், டாக்டர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்ட ஒரு இடத்திற்குப் போக வேண்டுமென்றால், போலீஸ் வேனில்தான் போகவேண்டுமென்றும் சொன்னேன். போலீசாருடன் எஸ்.பி., டி.எஸ்.பி. போன்றவர்கள் போக வேண்டுமென்று உத்தரவு போட்டவன்தான் இந்த இராமச்சந்திரன். மற்றவர்களுக்கு குறிப்பாக எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கு எதுவும் வரக் கூடாது என்பதில் மிகுந்த அக்கறை எனக்கு உண்டு. ஆகவே நான் சொன்னதில் எந்த நோக்கமும் இல்லை. யாருக்கும் எந்த ஆபத்தும் வராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** எதிர்க்கட்சி என்றால், எந்த எதிர்க்கட்சி என்பதை தயவுசெய்து முதலமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** யார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இது நடைபெற்றிருக்கிறது. அப்படித் தகவல் வந்திருக்கிறது. இதுபற்றி விசாரித்துக்கொண்டிருக்கிறார்கள். விரைவில் வெளிவரும். எனக்குத் தெரிந்திருந்தால், பெயரையே சொல்லியிருப்பேன். விசாரணை முடிந்த பிறகுதான் யார் என்பது வெளியே தெரியவரும். விசாரித்து முடிவு வரட்டும், சொல்கிறேன். நான் சொன்னதில் எந்த நோக்கமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதை ஒப்புக் கொள்வார்கள், நம்புவார்கள் என்று கருதுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அண்ணா வழியில் நின்று நான் கொடுத்ததைப் படிக்க வேண்டுமென்று—படிக்க வேண்டியது கூட இல்லை—ஒரு தடவை பார்த்தாலே போதும்—கேட்டுக்கொள்கிறேன். அப்படிப் பார்க்கும் போது, இந்த எண்ணத்திற்கு உட்பட்ட ஒரு சகோதரன் இருக்கிறான் என்ற உணர்வு அவருக்கு எப்போதும் இருக்கும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் தன்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா திரும்பப் பெறுகிறாரா?

[illegible]





**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** ஒரே ஒரு வேண்டுகோள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஓட்டுக்கு விடுகிற நேரத்தில் கருத்துக்கள் ஒன்றும் சொல்லக்கூடாது. திருத்தத்தை வலியுறுத்துகிறார்களா திரும்பப் பெறுகிறார்களா என்பதை மட்டும் சொல்ல வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** நன்றிகூட சொல்லக்கூடாதா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஒவ்வொருவரும் நன்றி சொன்னால் என்ன ஆகும்? 76 வயதில் என்னை உட்கார வைத்து இப்படி உறுப்பினர் ஓட்டுக்கு விடுகிற நேரத்தில் அபிப்பிராயம் சொல்வது சரியா? ஓட்டுக்கு விடுகிற நேரத்தில் அபிப்பிராயம் சொல்லக்கூடாது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** நான் வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ளப் பிரச்சினை—

"கீழ்க்கண்டவற்றை தீர்மானத்தின் கடைசியில் சேர்த்துக் கொள்ளவும் :—

1. மத்திய அரசு வரும் ஏப்ரல் 1-ம் தேதி முதல் தனது ஊழியர்கட்கு வழங்க உள்ள அகவிலைப்படி உயர்வு 3 தவணைகளையும், மாநில அரசு ஊழியர், ஆசிரியர்கட்கும் அதே தேதியில் வழங்குவது ;

2. ஆசிரியர்களின், அரசு ஊழியர்களின் நீண்ட நாள் கோரிக்கை யாகிய ஓய்வுபெறும்போது ரூ. 10 ஆயிரம் வழங்கும் திட்டத்தை வெளியிட்டு அமுல்படுத்துவது ;

3. வீட்டுவசதி வாரிய ஊழியர்கட்கு வழங்கப்பட்டுள்ள போனஸ் திட்டத்தை அனைத்து அரசு ஊழியர், ஆசிரியர்கட்கும் விரிவுபடுத்துவது ;

4. அரசு சென்ற ஆண்டு சாதனைப் பட்டியலில் வெளியிட்டவாறு ஆசிரியர்கட்குத் தனியான வீட்டுவசதி வாரியம் ஏற்படுத்துவது, தனியார் பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் நேரடி ஊதியம் வழங்குவது;

5. ஈராண்டு பயிற்சியைக் கருத்தில் கொண்டு இளநிலை, இடைநிலை ஆசிரியர்கட்கு வழங்கப்பட்ட ஒரு கூடுதல் ஊதிய உயர்வை ஏனைய நிலை ஆசிரியர்கட்கும் விரிவுபடுத்துவது ;

ஆகியவைபற்றி மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் ஏதும் குறிப்பிடாதது குறித்து இந்த அவை தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவம் அவர்களுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா, திரும்பப் பெறுகிறாரா?

[1982 பிப்ரவரி 18

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு முதலமைச்சரிடம் ஒரே ஒரு வேண்டுகோள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்குச் சொன்ன பதில்தான் உறுப்பினர் அவர்களுக்கும். ஓட்டுக்கு விடுகிற நேரத்தில் ஒருவித அபிப்பிராயமும் கூறக் கூடாது, வேண்டுகோள் விடக் கூடாது. இது எல்லோருக்கும் தெரியும். திருத்தத்தை வலியுறுத்துகிறார்களா, திரும்பப் பெறுகிறார்களா?

திரு. ஆ. நல்லசிவன்: நான் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

" கீழ்க்கண்டவற்றை தீர்மானத்தின் கடைசியில் சேர்த்துக் கொள்ளவும் :—

1. 1982 ஜனவரி 19-ம் தேதி நடந்த பொது வேலை நிறுத்தத்தில் தமிழகத்தில் கலந்துகொண்ட உழைக்கும் மக்கள் மீது அரசு அடக்கு முறையை கட்டவிழ்த்துவிட்டு துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியது, மேலும் பழிவாங்கும் எண்ணத்துடன் தற்காலிக வேலை நீக்கம் செய்திருப்பதைப் பற்றி ;

2. கரும்பு விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் கரும்புக்கு கட்டுபடியாகும் விலை நிர்ணயம் செய்யாதது பற்றி ;

3. கைத்தறி நெசவாளர்கள் சட்டத்தின் கீழ் வகுக்கப்பட வேண்டிய விதிகள், பல மாதங்களாகியும் வகுக்கப்படாதது பற்றி ;

4. தமிழகத்தின் பல பகுதிகளில், குறிப்பாக, குமரி மாவட்டத்தில் நடந்த வகுப்பு வாத, மதக் கலவரங்களைப் பற்றி ;

5. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு வீட்டு மனைப் பட்டாவுக்கு நில ஆர்ஜிதம் செய்யும் சட்டத்தை சென்னை உயர்நீதி மன்றம் செல்லாது என்று அளித்த தீர்ப்பின் மேல் தகுந்த மேல் முறையீடு செய்யாதது பற்றி ;

ஆகியவைபற்றி மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் எதும் குறிப்பிடாததற்கு இந்த அவை தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி தம்முடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா, திரும்பப் பெறுகிறாரா ?

THIRU K. RAMAMOORARY : In view of the request of the Hon. the Chief Minister, I am withdrawing my amendment.



1982 பிப்ரவரி 18]

திரு. க. இராமமூர்த்தி அவர்களுடைய திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப்பெறப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமி காந்தன் தம்முடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா, திரும்பப் பெறுகிறாரா ?

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க என்னுடைய திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்களுடைய திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவையில் இல்லாததால், அவர் கொடுத்துள்ள திருத்தம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆனந்தம், தம்முடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா, திரும்பப் பெறுகிறாரா ?

திரு. வி. வி. வி. ஆனந்தம்: நான் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" கீழ்க்கண்டவற்றை தீர்மானத்தின் கடைசியில் சேர்த்துக் கொள்ளவும் :—

மத்திய அரசின் வேலை நிறுத்தத் தடைச் சட்டம், தேசிய பாதுகாப்புச் சட்டம், விலைவாசி உயர்வு ஆகியவற்றை எதிர்த்து 19—1—1982-ம் தேதி நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தை முறியடிக்க தமிழக அரசு மேற்கொண்ட அடக்கு முறையின் விளைவாக துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் மரணமடைந்துள்ளனர், பலர் படுகாயம் அடைந்தனர். ஆயிரக்கணக்கானவர்கள் சிறை பிடிக்கப்பட்டனர். இந்தத் துப்பாக்கிப் பிரயோகங்களைக் குறித்து உயர்மட்ட நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதுபற்றியும் இவ்வேலை நிறுத்தப் போராட்டத்தையொட்டி தொழிற் சங்க அரசியல் ஊழியர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டும் என்பது பற்றியும், கூட்டுறவுத் துறை, போக்குவரத்துத் துறை போன்றவற்றில் ஊழியர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பழிவாங்கும் நடவடிக்கைகள் அனைத்தையும் ரத்து செய்ய வேண்டும் என்பது பற்றியும்;

மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் ஏதும் குறிப்பிடாததற்கு இந்த அவை தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரை நிகழ்த்தியதற்காக, தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றனர்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இன்று மாலை நீதிபதி திரு. பால் கமிஷன் அறிக்கையின் மீது விவாதமும்; அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தலும் எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மேலவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று அவை மீண்டும் மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-30)

அவை மீண்டும் பிற்பகல் 4-00 மணிக்குக் கூடியது.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை).

## 5. அரசின் தீர்மானம்.

### பால் கமிஷன் அறிக்கை மீது விவாதம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இப்போது, அரசின் தீர்மானம், பால் கமிஷன் அறிக்கை மீது விவாதம், மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

***மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2—2—1982 ஆம் தேதியன்று அவை முன் வைக்கப்பட்ட, திருச்செந்தூரில் இந்து அறநிலையத்துறையைச் சேர்ந்த சரிபார்க்கும் அதிகாரி திரு. சி. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் 26—11—1980 அன்று இறந்த தற்கான காரணங்களைக் கண்டறிய நியமிக்கப்பெற்ற சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி திரு. சி. ஜே. ஆர். பால் அவர்களது தனி நபர் விசாரணைக் கமிஷன் அறிக்கையில் அடங்கிய பரிந்துரைகள் மீதும், 1—2—1982 ஆம் தேதியிட்ட, பொது (சட்டம், ஒழுங்கு-அ) துறையின் 161 ஆம் எண் அரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பெற்றவாறு அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"2—2—1982 ஆம் தேதியன்று அவை முன் வைக்கப்பட்ட, திருச்செந்தூரில் இந்து-அறநிலையத் துறையைச் சேர்ந்த சரிபார்க்கும் அதிகாரி திரு. சி. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் 26—11—1980 அன்று இறந்த தற்கான காரணங்களைக் கண்டறிய நியமிக்கப்பெற்ற சென்னை உயர்நீதி மன்ற ஓய்வு பெற்ற நீதிபதி திரு. சி. ஜே. ஆர். பால் அவர்களது தனி நபர் விசாரணைக் கமிஷன் அறிக்கையில் அடங்கிய பரிந்துரைகள் மீதும், 1—2—1982 ஆம் தேதியிட்ட, பொது (சட்டம், ஒழுங்கு-அ) துறையின் 161 ஆம் எண் அரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பெற்றவாறு அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

முன்கூட்டியே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். இது பால். முப்பால் மிகவும் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதனாலே இந்தப் பால் மீதும் தங்களுடைய கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வி. வி. ஆனந்தம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நமது அரசு நியமித்த மாண்புமிகு நீதிபதி திரு. பால் அவர்களுடைய விசாரணைக் கமிஷன் அறிக்கையின் மீது காந்திகாமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு அளித்த மைக்காக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்செந்தூர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான ஆழ்வார் வீதியில் இந்து அறநிலையத் துறையைச் சேர்ந்த சரிபார்க்கும் அதிகாரி திரு. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் 26—11—1980 ஆம் நாளன்று இறந்ததற்கான காரணங்களையும், சூழ்நிலைகளையும் கண்டறியவும், இந்தமாதிரி சம்பவம் இனிமேல் நடக்காமல் இருக்கவும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையைப் பற்றியும் ஆராய இந்தக் கமிஷன் நியமிக்கப்பட்டது. சரிபார்க்கும் அதிகாரியினுடைய மரணத்தில் சந்தேகம், ஐயப்பாடு எழுந்ததும் அதற்கு ஒரு ஒரு நபர் கமிஷனை நியமித்ததற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன். பால் கமிஷனின் விசாரணையில் இந்த மரணம் தற்கொலையல்ல, ஏதோ காரணத்திற்காக அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்ற முடிவிற்குத்தான் நீதிபதி அவர்கள் வந்திருக்கிறார்கள். சரிபார்க்கும் அதிகாரி வருவதற்கு முன்பே ஆதித்தனார் கோவிந்தம்மாள் திருமண மண்டபத்தில் பலரும் கூடி உண்டியல் பணத்தை எண்ணத் தொடங்கிவிட்டார்கள். அதிகாரி வந்தபின் தான் உண்டியலை எண்ண வேண்டும் என்ற விதி இருக்கிறது. பலரும் கூடி

யிருக்கின்ற அந்த மண்டபத்திலே இந்த சரிபார்க்கும் அதிகாரி வந்திருந்து அந்த உண்டியலிலுள்ள சில 100 ரூபாய், சில 1,000 ரூபாய் நோட்டுக்களை எடுத்துக்கொண்டு அவருடைய வேஷ்டியிலும், துண்டிலும் மறைத்துக்கொண்டு போய்விட்டார், அது விஷயமாக அவரை விசாரிக்கவேண்டும் என்று அறங்காவல் குழுவைச் சார்ந்தவர்களுக்குத் தகவல் கொடுத்தவுடன் அவர்கள் வருவதற்கு முன்பே இந்த சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் ஆய்வாளர் விடுதிக்குச் சென்று தூக்குப் போட்டுக்கொண்டார் என்று அவர்மீது குற்றம் சாட்டினார்கள். அவர்கள் உண்மையில் வரவில்லை என்று இந்த விசாரணை மூலம் நிரூபணமாகி இருக்கிறது. அறுபது பேர்கள் ஏறத்தாழ இருக்கும் திருமண மண்டபத்தில் எல்லோரும் சேர்ந்து கணக்கெடுத்து எண்ணிக்கொண்டிருக்கும் போது, ஒரு அதிகாரி சில ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை எல்லோருக்கும் தெரியாமல் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார் என்பது நம்புவதற்குகந்ததாக இல்லை. அதோடு அந்த அதிகாரி அந்த ஆய்வு அறையில் சென்று 7½ அடி உயரத்தில் உள்ள ஒரு குழாயில் தூக்குப் போட்டுக்கொண்டுவிட்டார் என்பதில் அவர் எப்படி அந்த வேஷ்டியை தன்னுடைய கழுத்திலும் அந்தக் குழாயிலும் மாட்டினார் என்பதற்குப் போதிய விவரங்கள் இல்லை. பொதுவாக உயர்ந்த ஸ்டூலிலோ அல்லது வேறு எதன் மீதோ ஏறிக்கொண்டு அதற்கு மேல் உள்ள குழாயிலோ அல்லது வளையத்திலோ, கயிறோ அல்லது வேஷ்டியோ கட்டி அதன் மீது ஏறிக்கொண்டு கீழே உள்ள ஸ்டூலைத் தட்டிவிட்டுத்தான் தூக்கில் இறந்ததாகப் பார்க்கிறோம். ஆனால் இந்த அதிகாரி தான் ஏதாவது ஒன்றின் மீது ஏறித்தான் குழாயில் இந்த வேஷ்டியைக் கட்டினார் என்பதற்கு ஆதாரங்கள் இல்லை. உள்ளே சென்று பார்த்தவர்கள் அங்கே ஏதாவது வாளி இருந்து அதன் மீது ஏறினாரா என்று பார்த்தால், அப்படிக்கூட இல்லை.

(பிற்பகல் 4-10)

இந்த அறிக்கை வந்தவுடனே அரசு அறங்காவலர் குழுவின் இராஜிநாமாவைக் கோரியிருக்கலாம். ஏனென்றால் அறங்காவலர் குழுவின் தலைவருடைய சாட்சியம் நேர்மையானது அல்ல, அவருடைய சாட்சியம் நேர்மையானது என்று சொல்வதற்கில்லை என்று நீதிபதி அவர்களே குறிப்பிட்டிருக்கிறார். நேர்மையற்ற ஒருவரைத் தொடர்ந்து அறங்காவலர் குழுவின் தலைவராக வைத்துக் கொண்டிருப்பது எந்தவிதத்திலும் நியாயமில்லை. எனவே அரசு உடனே அவர்களுடைய ராஜிநாமாவைக் கோரியிருக்க வேண்டும். இருந்தாலும் இப்போதாவது அவர்கள் அனைவரும் ராஜிநாமா செய்திருப்பதை நான் வரவேற்கிறேன்.





அவர்கள் மட்டுமின்றி, தேவஸ்தானத்தைச் சேர்ந்த சில நிர்வாகிகளும் இதேபோன்ற குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுடைய சாட்சியமும் நம்பும்படியாக இல்லை என்று நீதிபதி அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே ஒன்று அவர்களை 'சஸ்பெண்டு' செய்ய வேண்டும் அல்லது அவர்களை அங்கேயிருந்து மாற்ற வேண்டும். அப்போது தான் உண்மையான நிலையை அறிய முடியும். மறைந்த திரு. சுப்பிரமணியப் பிள்ளை தூக்குப் போட்டுக் கொண்டாரா அல்லது கொலை செய்யப் பட்டாரா என்பதற்கு நேரடி சாட்சியம் எதுமில்லை நேரடியாகச் சாட்சியம் சொல்ல யாரும் முன்வரவில்லை. அவர் தூக்குப் போட்டுக் கொண்டதை வெண்ட்டிலேட்டர் வழியாகப் பார்த்ததாகச் சொல்லப்படும் தோட்டி ஆறுமுகம் இப்போது உயிரோடு இல்லை. அவருடைய மரணமும் சந்தேகத்திற்கு இடமானதாக இருக்கிறது. ஆகவே இந்த மரணம் நிச்சயமாகத் தற்கொலையல்ல என்பதைத் திட்டவட்டமாக, நீதிபதி பால் அவர்கள் விளக்கியிருக்கிறார். எனவே அரசாங்கம் குற்றப் புலனாய்வுத் துறையை வைத்து, நீதிபதி பால் அவர்கள் சொல்லிய குற்றச்சாட்டுகள் உண்மையானவை தானா என்று ஆராய்ந்து உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து, சரியான தண்டனை அளிக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதையும் காலம் தாழ்த்தாமல் துரிதமாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காரணம், கமிஷன்கள்மீது மக்கள் நம்பிக்கை குறைகிற காலமாக இது இருக்கிறது. கடந்த காலத்தில் பல கமிஷன்கள் நியமிக்கப்பட்டனவே ஒழிய, அத்தகைய கமிஷன்களின் முடிவுகள் அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அமுல்படுத்தப்படவில்லை என்பதை நாம் அறிவோம். அவசர நிலை காலத்தில் அத்துமீறி செயல்பட்ட அதிகாரிகள் பற்றி விசாரணை செய்த ஜஸ்டிஸ் இஸ்மாயில் கமிஷன் தெரிவித்த கருத்துக்களும், சிபாரிசுகளும் அரசாங்கத்தால் அமுல்படுத்தப்படவில்லை. எந்த அதிகாரிமீது அவர் குற்றம் சாட்டினாரோ அந்த அதிகாரிக்கு இந்த அரசில் மேலும் பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே இப்படிப்பட்ட கமிஷன்களின் தீர்ப்பை அரசு துரிதமாகவும் நியாயமாகவும் செயல்படுத்தினால்தான், மக்களுக்கு நீதி மீது நம்பிக்கை ஏற்படும், இந்த அரசின்மீதும் நம்பிக்கை ஏற்படும் என்று கூறி, என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிபதி பால் கமிஷன் அறிக்கையின் மீது என்னுடைய கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இப்பிரச்சினையில் ஆரம்பம் முதலே, தமிழக அரசின் நிலை சரியாக இல்லை என்பதுதான் எங்கள்

கட்சியின் கருத்து. அரசு நடவடிக்கைகள் ஒருதலைப் பட்சமாகவே இருக்கின்றன என்ற கருத்து, தமிழ் நாட்டில் பொதுவாகப் பத்திரிகை படிப்பவர்கள் மற்றும் பொது விஷயங்களில் அக்கறை உள்ளவர்கள் ஆகிய எல்லோரிடத்திலும் இருக்கிறது என்பதை அரசு உணர வேண்டும் என்று வற்புறுத்த விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவாளர்கள் மத்தியில் மட்டும் தான் இப்படிப்பட்ட எண்ணம் இருக்கிறது என்று அரசு நினைத்தால், அது சரியில்லை. தமிழ் நாடு முழுவதுமுள்ள மக்களிடத்தில் இந்தப் பிரச்சினையில் அரசு ஒருதலைப்பட்சமாகவே நடந்திருக்கிறது என்றும் தங்கள் கட்சிக்காரர்கள் என்பதால், அறங்காவலர்களைப் பாதுகாக்க முயற்சித்திருக்கிறார்கள் என்றும், சந்தேகமான முறையில் காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன என்றும்தான், ஒரு அபிப்பிராயம் இருக்கிறது.

குறிப்பாக, இதில் சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய உரை, இந்த அவைக்கு உள்ளேயும் சரி, வெளியேயும் சரி, கிளர்ச்சிக்குப் பிறகும் சரி, மற்றும் நியாய விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்ட பிறகும் சரி, சரியில்லை. அதுமட்டுமல்ல. பாரபட்சமற்ற சூழ்நிலையில் விசாரணை நடைபெறுவதற்கு, அறங்காவலர் குழு இருப்பது ஒவ்வாதது என்று அரசு ஒப்புக்கொண்டு, அதனை விலக்காமல் இருப்பதற்கு முயற்சிகளைச் செய்ததும் சரியில்லை.

மேலும், நீதிபதி பால் கமிஷன் அறிக்கையை வெளியிட்ட எதிர்க் கட்சித் தலைவரைக் கைது செய்வதாகச் சொல்லி அவர்மீது நடவடிக்கை எடுத்ததும், சரியல்ல.

கடைசியாக, இந்த அறிக்கையை அரசு 1—2—1982 அன்று அவையில் சமர்ப்பித்திருக்கிறது. மேலே சொன்னவைகளையும், இந்த அறிக்கையின் தன்மையையும் ஆராய்ந்து பார்த்தால், இவை அனைத்தும் இந்தப் பிரச்சினையில் அரசாங்கத்தின் நடத்தை குறித்து, தமிழக மக்கள் மத்தியில் பெரிய சந்தேகத்தைத்தான் ஏற்படுத்தியிருக்கிறது என்பதையும் அரசு உணர வேண்டும். "டிபெண்டு" பண்ணிக் கொண்டிருப்பதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, உங்களோடு இருக்கிற நாங்கள் இந்தப் பிரச்சினையில் அரசு மேற்கொண்ட நிலை சரியில்லை என்று சொல்லுகிறோம். மற்றவர்கள் சொல்லுகிற காரணத்தைவிட நாங்கள் சொல்லுகிற காரணத்தை அரசாங்கம் நன்கு யோசிக்க வேண்டும். அதற்குப் பதிலும் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கடைசி நேரத்தில் அந்தக் கோயிலின் அறங்காவலர் குழு இராஜிநாமா செய்திருப்பதால், இந்தப் பிரச்சினையில் தமிழக மக்களிடையே ஏற்பட்ட கருத்து மாறுபட்டிருப்பதாகத் தெரியவில்லை. இதுவரை அரசு





கையாண்ட முறைகள் அனைத்தும் அரசை ஒரு சிக்கலான இடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்ட காரணத்தால் "ஃபேஸ் சேவிங்" என்ற முறையில் இப்போது அறங்காவலர் குழுவின் இராஜிநாமா பெறப்பட்டிருப்பதாகவே மக்களால் கருதப்படுகிறதே தவிர, வேறொன்றுமில்லை. இதே இராஜிநாமாவை அவர்கள் சில காலத்திற்கு முன்னால் செய்திருந்தால், என்ன விளைவு ஏற்பட்டிருக்குமோ அந்த விளைவு இப்போது கண்டிப்பாக ஏற்படவில்லை. எனவே, இராஜிநாமா செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை ஏற்பட்டதால்தான், இராஜிநாமா செய்திருக்கிறார்கள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

ஆகவேதான், நான் ஏற்கனவே குறிப்பிட்டமாதிரி இந்தப் பிரச்சினையில் அரசின் நிலை சரியில்லை என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அதற்கு முக்கியமான காரணம், சம்பந்தப்பட்ட அமைச்சர் சட்டசபைக்கு வெளியேயும் உள்ளேயும் பேசிய பேச்சுக்கள் தமிழ் நாட்டு மக்கள் மத்தியில் என்ன "இம்ப்ரஷனை" ஏற்படுத்தியது என்பதுதான். அதாவது இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையில் திரு. சுப்பிரமணியப் பிள்ளையின் மரணம், தற்கொலைதான் என்ற கருத்தை மக்கள் மத்தியில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்களின் பேச்சு முக்கிய காரணமாக அமைந்தது. இப்படிப்பட்ட எண்ணத்தை உண்டாக்க முயற்சித்ததால்தான், இது குறித்து கிளர்ச்சி ஏற்பட்டு, நீதி விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. அந்தக் கிளர்ச்சி ஒரு கட்டத்திற்குப் போனபோது, தமிழ் நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஸ்தலத்திற்கே சென்று என்ன விவரம் என்று நேரிலேயே ஆராய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதற்கு முக்கியமான காரணம் சுப்பிரமணியப் பிள்ளையின் மரணம் தற்கொலைதான் என்று அமைச்சருடைய பேச்சு இருந்ததுதான். எனவே இந்தப் பிரச்சினையில் உண்மையை மறைக்கப் பார்க்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டு, திருச்செந்தூரிலும் மற்ற இடங்களிலும் கிளர்ச்சி தொடர்ந்த பிறகு, முதலமைச்சர் அவர்களே அங்கே நேரில் சென்று பார்க்க வேண்டிய அவசியமே கூட ஏற்பட்டது.

இதைப்பற்றிப் பேரவையில் விவாதம் நடைபெற்றபோது, அமைச்சர் அவர்கள் தாம் வெளியிட்ட அறிக்கைகள் சம்பந்தமாகச் சில விளக்கங்களைச் சொல்லியதைப் பத்திரிகை மூலமாகப் பார்த்தேன். அவர் என்ன சொல்லியிருக்கிறார்? கலெக்டரும், எஸ்.பி.-யும் கொடுத்த அறிக்கையிலே இப்படி இருக்கிறது என்றுதான் நான் சொன்னேன் என்று அவர் சொல்லியிருக்கிறார். அவரை நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். இப்படி எல்லா விஷயத்திலும் கலெக்டரும், எஸ்.பி.-யும் கொடுக்கிற அறிக்கைகளையெல்லாம் சட்டசபையில் இப்படித்தான் வைக்கிறார்களா அல்லது பகிரங்கமாகப் பத்திரிகைகளில்

கொடுக்கிறார்களா? அப்படிக் கொடுப்பதற்கு ஏதேனும் கட்டாயம் இருக்கிறதா? இல்லை. அரசினுடைய கருத்துக்கு அது ஒத்து இருந்ததால் கொடுத்தார்கள். எனவே சட்டப்படியான கட்டாயம் எதுமில்லாத ஒன்றில் கலெக்டர் அறிக்கை கொடுத்தார், எஸ்.பி. அறிக்கை கொடுத்தார், அதைத்தான் நான் சொன்னேன் என்று விளக்கம் சொல்வது எந்த வகையிலும் சரியில்லை. அதுமட்டுமல்ல. இன்றைக்கு அரசு என்ன விளக்கம் கொடுத்தாலும், தமிழ் நாட்டு மக்களின் மத்தியில் ஏற்பட்ட கருத்தில் மாற்றம் ஏதும் ஏற்படவில்லை என்பதை உணர வேண்டும். ஆரம்பம் முதலே இது தற்கொலையல்ல என்ற கருத்து மக்களிடையில் ஏற்பட்ட காரணத்தால், அது தொடர்பான கிளர்ச்சி ஏற்பட்டபோது, முதலமைச்சர் அவர்களே ஸ்தலத்திற்குப் போக வேண்டிய அவசியம் வந்தது. எனவேதான் நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன், அமைச்சர் அவர்கள் ஆரம்பம் முதலே இது தற்கொலை தான் என்று நினைக்கிற அளவுக்குப் பேசியிருப்பது சரியில்லை.

ஒரு எப்.ஐ.ஆர். இது சம்பந்தமாகப் பதிவாகியிருக்கிறது. அந்தத் தகவலின்படி, காவல் துறையினர் இன்வெஸ்டிகேஷனைப் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நேரத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் இது தற்கொலைதான் என்று சொல்லுகிறார் என்றால், புலன் விசாரணை செய்யும் காவல் துறை அதிகாரிகள் மனதில் இது ஒரு "இன்புளுவென்சை" ஏற்படுத்தாதா? இந்த அரசின்கீழ் வேலை செய்யும் போலீஸ்காரர்கள்தான் 'இன்வெஸ்டிகேட்' செய்கிறார்கள். இந்த நிலையில் முக்கியமான அமைச்சர் ஒரு கருத்து தெரிவித்தால், அது "டியூ ப்ராசஸ் ஆப் லா" ஏற்படத் தடை செய்யுமா செய்யாதா? இப்படி விசாரணை நடக்கும்போது, கருத்து தெரிவித்தால், ஒரு குறிப்பிட்ட திசையில் அரசு செயல்பட நினைக்கிறது என்று தானே அந்த இன்வெஸ்டிகேட்டிங் அதிகாரிக்கு நினைக்கத் தோன்றும். இப்படி அமைச்சர் தன் பேச்சால் திசை திருப்பினால், கீழ்மட்டத்தில் இருக்கிற அரசு அதிகாரி அரசுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைத்துப் பார்க்கச்

(பிற்பகல் 4-20)

செய்யுமா செய்யாதா? ஆகவே இந்த மாதிரி ஒரு பிரச்சினையில் முன் கூட்டியே அரசு அறிவிப்பது சரியல்ல. இன்னுமொரு சந்தேகம் ஏற்படுகிறது. இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையிலே முக்கியமான தஸ்தாவேஜுகள் திருச்செந்தூர் கோவில் நிலைய போலீஸ் அவுட் போஸ்டிலும், திருச்செந்தூர் தாலுக்கா இன்ஸ்பெக்டர் போலீஸ் நிலையத்திலுள்ள ரிக்கார்டுகளும்தான். இந்த இரண்டு இடங்களிலும் ரிக்கார்டுகள் திருத்தி எழுதப்பட்டிருக்கின்றன. சிவப்பு மையால் அடித்து எழுதப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே எழுதப்பட்ட டயரியில் இந்த ஒரு விஷயம் சம்பந்தப்பட்ட இடத்தில் மட்டும் சிவப்பு





மையால் திருத்தி எழுதப்பட்டிருக்கிறது என்று நீதிபதியே குறிப்பிட்டிருக்கிறார். போலீஸ் அவுட் போஸ்டிலும் சரி, தாலுக்கா இன்ஸ்பெக்டர் போலீஸ் ஸ்டேஷனிலும் சரி ஆகிய இரண்டு போலீஸ் ஸ்டேஷன்களிலும் உள்ள ரிக்கார்டுகளில் இந்த மாதிரி மாற்றம் செய்யப் பட்டிருக்கிறது, திருத்தி எழுதப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை விசாரித்ததற்குப் பிறகு, தன்னுடைய ரிப்போர்ட்டில் சொல்லியிருக்கிறார். அமைச்சர் அவர்கள் பகிரங்கமாக தற்கொலைதான் என்று சொன்னால், அங்குள்ளவர்கள் ரிக்கார்டுகளைத் திருத்தி எழுதியிருக்கிறார்கள் என்ற சந்தேகம் ஏற்படுகிறதா இல்லையா? அமைச்சர் அவர்களே சொல்லி விட்டதால், நாம் ஏன் செய்யக் கூடாது என்ற எண்ணம் போலீசாருக்கு ஏன் ஏற்பட்டிருக்காது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தப் பிரச்சினையில் அமைச்சர் அவர்கள் ஏன் அவ்வளவு அவசரமாக அப்படிச் சொன்னார்கள் என்று தமிழகம் பூராவும் மக்கள் கேள்வியைக் கேட்கிறார்கள்.

ஒரு பக்கத்திலே தற்கொலை என்று செய்தி வருகிறது. மறுபக்கத்திலே 18 ஆம் தேதியன்று விசாரணைக் குழுவைப் போட்டிருக்கிறார்கள். இதற்கிடையிலே அமைச்சர் அவர்கள் இது தற்கொலை என்று சொன்னதால், அரசு 'தற்கொலை' என்று கருதுகிறது என்ற எண்ணத்தை விசாரணை செய்பவர்கள் மத்தியிலே உருவாக்காதா?

பிறகு இன்னுமொரு பிரச்சினை. அமைச்சர் அவர்கள் அப்படிப் பேசினார்கள். முதலமைச்சர் அவர்கள் அங்கே சென்று பார்த்து வந்த பிறகு விசாரணைக் கமிஷனை நியமித்தார்கள். அதற்கு அர்த்தம் என்ன? விசாரணைக் குழு ஏற்படுத்தக் கூடிய அளவிற்கு 'பிரைமா பேசி கேஸ்' இருக்கிறது என்று அரசு கருதுகிறது என்றுதானே அர்த்தம். குற்றச்சாட்டு இருக்கிறதா, இல்லையா என்பது வேறு. தற்கொலை என்று சொல்லும்போது, எஸ்.பி. அப்படிச் சொன்னார் என்று சொன்ன பிறகு, முதலமைச்சர் அவர்கள் போய்ப் பார்த்த பிறகு, விசாரணைக் குழுவைப் போட வேண்டிய அளவிற்கு அவசியம் ஏன் ஏற்பட்டது? கொலை என்று மக்கள் சொல்லுகிறார்கள். ஆகவே அந்தப் பிரச்சினையில் 'பிரைமா பேசி கேஸ்' இருக்கிறது. ஆகவே நீதி விசாரணை செய்ய வேண்டுமென்று அரசு முடிவு எடுத்திருக்கிறது என்று தானே அர்த்தம். அப்படி அரசு ஒரு முடிவுக்கு வந்தபோது, முக்கிய அமைச்சர் இது "தற்கொலை" என்று வெளியிட்டது எப்படி சரியாக இருக்க முடியும்? அது சரியா, தப்பா என்பதற்கு பாராளுமன்ற நடைமுறையில் முன்னுதாரணம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இது ஒரு 'மாரல் இஷ்யூ'. வேண்டுமானால் அரசு தனக்குள்ள பெரும்பான்மையை வைத்து அது சரிதான் என்று முடிவு செய்யலாம். சரிதான் என்று முடிவு செய்தாலும், இந்த

[திரு. ஆ. நல்லசிவன்] [1982 பிப்ரவரி 18

மாதிரி சம்பவம் ஏற்படும்போது, போலீஸ் இன்வெஸ்டிகேஷன் செய்து சார்ஜ் ஷீட் போட வேண்டும். பிறகு விசாரித்து ரெஃபர் பண்ண வேண்டும். அதுவரையில் அந்த "புராசெஸ் ஆஃப் லா"-வில் யார் தலையிட்டாலும் அரசாங்கம் தலையிட்டாலும் நிச்சயமாக interference in the adminis tration of justice என்றுதான் அர்த்தம். மெஜாரிட்டியை வைத்துக்கொண்டு இதை நியாயப்படுத்தினால், பிறகு வரக்கூடிய எந்த மந்திரிசபையும் போலீஸ் இன்வெஸ்டிகேஷனில் தலையிட முடியும், இதையே முன்னுதாரணமாகக் காட்ட முடியும். ஆகவே முக்கிய அமைச்சர் தலையிட்டுப் பேசியது சரியல்ல. முதலமைச்சர் அவர்கள் விசாரணைக் கமிஷனைப் போட்டதே அமைச்சர் அவர்கள் கூறியது தப்பு என்று காட்டுகிறது. ஏனென்றால் விசாரணைக் கமிஷன் போட வேண்டுமென்று கிளர்ச்சி செய்ததற்குப் பிறகு, 'பிரைமா பேசி கேஸ்' இருக்கிறதென்று ஒத்துக்கொண்டதால், முதலமைச்சர் அவர்கள் விசாரணைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் அரசு அதை மறைக்கவே முயற்சித்தது. கிளர்ச்சி வலுப்பெற்ற பிறகு, சமாளிக்க முடியாமல், சர்க்கார் விசாரணைக் கமிஷனைப் போட்டிருக்கிறது என்ற எண்ணம்தானே மக்களுக்கு ஏற்படுகிறது. அமைச்சர் அவர்கள் ஒன்றும் சொல்லாமல் இருந்திருந்தால், பரவாயில்லை. அவர் அப்படிச் சொன்னதற்குப் பிறகு, மூன்று வாரம் கழித்து, ஒரு பக்கத்திலே போலீஸ் இன்வெஸ்டிகேஷன் நடந்து கொண்டிருக்கும்போது, முதலமைச்சர் அவர்களே நேரில் பார்த்துவிட்டு கமிஷன் போட்டிருக்கிறார்கள் என்றால், அதனுடைய அர்த்தம் என்ன? அமைச்சர் பேசியது சரியா, தப்பா? அமைச்சர் பேசியது சரியென்றால், முதலமைச்சர் ஏன் விசாரணைக் கமிஷனைப் போட வேண்டும்? முதலமைச்சர் அவர்கள் விசாரணைக் கமிஷனைப் போட ஒத்துக் கொண்டார்கள் என்றால், குறைந்தபட்சம் 'பிரைமா பேசி கேஸ்' இருக்கிறது என்றுதானே அர்த்தம். "தற்கொலை" என்று அமைச்சர் சொன்னது எப்படித் தவறாக இருக்க முடியும்? இந்த முரண்பாடுகளைத் தீர்க்க வேண்டும். இது 'இன்கன்வீனியன்ட்' கேள்விகள். ஆகவே இது சரியான முறையல்ல. இந்த மந்திரி சபையிலே உள்ளவர்கள் கூட நாளைக்கு இதை முன்னுதாரணமாகப் பின்பற்றுவார்கள். பின்னாலே வருபவர்களும் இதை முன்னுதாரணமாகப் பின்பற்றுவார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இன்றைக்கு free and fair enquiry இல்லையென்று சொல்லும்போது, டிரஸ்ட் போர்டை 'சஸ்பெண்ட்' செய்யாமல் எப்படி free and fair enquiry நடத்த முடியும்? அங்கே வேறு யாரும் இல்லை. ஆலயப் பகுதிக்குள் ஆலயத்தில் பணிபுரியும் ஆட்களைத் தவிர வேறு ஆட்கள் இல்லை. ஆகவே அந்த இடத்தில் கோவில் சிப்பந்திகள் தவிர வேறு



1982 பிப்ரவரி 18] [திரு. ஆ. நல்லசிவன்]

யாரும் இருந்திருக்க முடியாது என்று சாட்சியத்திலிருந்து நிரூபணம் ஆகியிருக்கிறது. அப்படியானால் வேறு யாரும் இல்லாதபோது, கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது பேச்சுவார்த்தை மத்தியிலே சூடான வார்த்தைகள் முற்றி கை நீட்டப் பட்டதன் பிறகு ஏற்பட்ட விளைவா இது? அல்லது கொலை செய்ய வேண்டுமென்று செய்தார்களா? ஆனால் கொலை நடந்தபோது, கோவில் சிப்பந்திகள் தவிர வேறு யாரும் இருந்திருக்க முடியாது என்று சொல்ல முடிகிறது.

இன்னுமொரு விஷயம் இருக்கிறது. சுப்பிரமணியப் பிள்ளை பணத்தைத் திருடிவிட்டார் என்று டிரஸ்ட் போர்ட் கூறி ஒரு கோவில் சிப்பந்தியையும் பொது மக்களில் யாரோ ஒருவரையும் சாட்சியாகக் கூறுகிறது. அந்த "யாரோ ஒருவர்" யார் என்று இதுவரையிலும் கண்டுபிடிக்க முடியவில்லை. கோவில் சிப்பந்தி ஒருவர் தவிர பொதுமக்கள் சாட்சியாக இருந்த, disinterested person-ஆக இருந்த அந்த வெளி ஆள் யார்? கோவில் நிர்வாகம், போலீஸ், அரசு இந்த மூன்றும் ஒரு நிலையிலே இருந்திருக்கிறது. இதற்கு எதிராக இருந்தவர்கள், அந்த நிகழ்ச்சியைக் கண்ணால் கண்டவர்கள் இரண்டு பேர்கள் என்று இந்த அறிக்கையிலே கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே ஒருவர் கோவில் சிப்பந்தி. மற்றொருவர் பொது மக்களுடைய பிரதிநிதி. கோவிலில் பணம் எண்ணக் கூடிய நேரத்தில் வரக்கூடிய அந்தப் பெரிய மனிதர், பார்வையாளர் யார்? அவரை போலீசால் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால், என்ன நிலைமை? கோவில் அறங்காவலர்களுக்கு எதிராக சாட்சி சொல்ல வேண்டுமென்ற நிலைமை வந்தால், அறங்காவலர்கள் டிரஸ்டில் தொடர்ந்திருந்தால், எப்படி நேர்மையான விசாரணை நடக்க முடியும் என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

வாடிப்பட்டியில் போலீஸ்காரரை மாற்றியிருக்கிறார்களே, ஏன்? அவர் அங்கே இருந்தால், அவருக்கு எதிராகச் சொல்லக் கூடிய விஷயத்தைச் சொல்லுவதற்கு பயப்படுவார்கள், ஆகவே அவர் அங்கே அதிகாரத்தில் இருக்கக் கூடாது என்று மாற்றினார்களா இல்லையா? அந்த முறையிலே இந்த அறங்காவலர்களையும் மாற்றியிருக்கலாம் அல்லவா? வலுவான குற்றச்சாட்டு வருகிறபோது, அங்குள்ள சிப்பந்தி உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், அந்த பிரபலஸ்தர் அங்கே இருக்கக் கூடாது என்றுதானே அர்த்தம். வாடிப்பட்டியில் பின்பற்றிய அதே முறையை திருச்செந்தூரில் அறங்காவலர்கள் விஷயத்தில் ஏன் பின்பற்றியிருக்கக் கூடாது?

இன்னொரு விஷயம். கோர்ட் முன்னே 'அஃபிடவிட்' போட்டவர்கள் 30 பேர். அந்த முப்பது பேரில் ஒரே ஒருவர்தான் பொது ஆள் என்று சொல்ல முடியும். மற்ற 29 பேரும் நான் முன்பே சொன்ன மாதிரி கோவில்

நிர்வாகம், போலீஸ், அரசு ஆகிய இந்த மூன்று தரப்பைச் சேர்ந்தவர்கள். ஓரே ஒரு நபர் எஸ். பாலசுப்பிரமணியம் என்பவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், "அங்குள்ள தாலுக்கா போலீஸ் இன்ஸ்பெக்டர் நிர்ப்பந்தப்படுத்தி "தற்கொலை" என்று எழுதி வாங்கிவிட்டார். ஆகவே அஃபிடவிட்டை நான் திரும்பப் பெற்றுவிடுகிறேன்" என்று திரும்ப வாங்கியிருக்கிறார். முப்பது

(பிற்பகல் 4-30)

பேரிலே ஒருவர் அபிடவிட்டைத் திரும்ப வாங்கியிருக்கிறார். அந்த 30 பேரிலே 29 பேர்கள் அரசாங்க சிப்பந்தி, கோயில் நிர்வாகத்தில் இருப்பவர்கள் என்று இருக்கிறார்கள். ஒரே ஒருவர் 'தினமலர்' பத்திரிகை ரிப்போர்ட்டர். அவர் பெயர் திரு. எஸ். பாலசுப்பிரமணியன். அவர் ஒரு அபிடவிட் போட்டிருக்கிறார். அவர் சாட்சியாகப் போகாமல் இருந்திருக்கிறார். அந்தத் தாலுக்கா போலீஸ் இன்ஸ்பெக்டர் நிர்பந்தத்தின் பேரில் அவர் அபிடவிட்டை கமிஷனிலேயிருந்து 'வித்ட்ரா' பண்ணியிருக்கிறார் என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் அங்கே ஏற்பட்டிருக்கின்றன. இதையெல்லாம்பற்றி சற்று யோசனை செய்து பாருங்கள். அங்கேயும்கூட சாட்சி சொல்லக்கூடிய கோயில் சிப்பந்திகள் இருக்கலாம். ஆனால் அந்தக் கோயிலிலே மேனேஜிங் டிரஸ்ட்டிகளை 'கன்டினியு' பண்ணியிருக்கிறார்கள். அந்த சிப்பந்திகள் உண்மையைச் சொன்னால், ஏதாவது தொல்லை வரலாம் என்று பயம் இருக்கலாம் அல்லவா? இதைப்பற்றியும் எண்ணிப்பாருங்கள். அந்த இடத்தில் 'ஃபிரி அண்டு பேர் ஜஸ்டிஸ்' இருக்க முடியுமா? சஸ்பெண்ட் பண்ண வேண்டும் என்ற ஒரு கோரிக்கையைப் பிரதானமாக எழுப்பியிருக்கிறார்கள். அதுபோலவே 'ஆசிட் டெஸ்ட்'. அந்தப் பிரச்சினையில் 'ஆசிட் டெஸ்ட் ரிப்போர்ட்', மற்ற சாட்சியங்கள் இவைகளைப் பார்த்தாலும், தெரியும். இதைப்பற்றியெல்லாம் என்ன சொல்லப்படுகிறது? சட்டப்படி 'சஸ்பெண்ட்' பண்ண முடியாது என்று சொல்கிறார்கள். சம்பவம் நடந்தபோது அங்கே திரு ராஜாராம் என்ற நிர்வாக அதிகாரி இருந்திருக்கிறார். அவர் என்ன பண்ணியிருக்கிறார்? கோயில் உண்டியலைத் திறப்பதாக இருந்தால் நிர்வாகியிடம் மேனேஜிங் டிரஸ்டி சாவியைக் கொடுத்துவிடுவார். ஆனால் இரண்டு பேரும் சேர்ந்து வந்துதான் உண்டியலைத் திறக்க வேண்டும். அதுதான் சர்க்கார் போட்டிருக்கின்ற ஒரு திட்டவட்டமான விதி. அதன்படி அறங்காவலர் நடக்கவில்லை. அவர் வரவில்லை என்று சொல்கின்றார். திரு. ராஜாராம் என்ற நிர்வாகி சொல்கிறார். ஜட்ஜ் அவர்கள் கேட்கின்றார்கள். இந்த முறை சட்டப்படி தப்புத்தானே என்று கேட்கிறார். அவர் தப்புதான் என்கிறார். ஏன் அப்படிச் செய்தீர்கள் என்று கேட்கிறார். அதற்கு அவர், என் மேலே உள்ள நம்பிக்கையில் அவர் சாவியைக் கொடுத்துவிடுவார் என்று





சொல்லியிருக்கிறார். இப்படியெல்லாம் நடந்திருக்கிறது. அந்த நிர்வாக அதிகாரி திரு. ராஜாராமை உண்மையிலேயே நீக்கியிருக்க வேண்டும். சட்டப் பிரச்சினை குறுக்கே நிற்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி என்றால் வேறு எந்த வழியையாவது கையாள வேண்டும். அந்த ரிப்போர்ட்டிலே என்ன சொல்லியிருக்கிறதோ அப்படியெல்லாம் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். ஏனென்றால் ஹைக்கோர்ட்டிலே சர்க்கார் சிப்பந்திபற்றிச் சொல்லிய ஒரு தீர்ப்பைக் கொண்டுவந்து கொடுக்கிறார்கள். அந்த அறங்காவலர்கள் ரூல்ஸ்-ஐ ஜட்ஜ் எடுத்துக் காட்டுகிறார்கள். அதன் பிறகும் ஏன் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. சர்க்கார் சிப்பந்திகள் சம்பந்தமாக இருப்பதை எடுத்துக்காட்டி, ஒருவர் மேல் குற்றம் சொன்ன பிறகு அந்தக் காரணத்தைச் சொல்லி, அந்தப் பிரச்சினையில் நியாயப்படுத்தியிருக்கிறார்கள். சட்டத்தை மட்டும் சொல்லிப் பிரயோசனம் இல்லை. ஒரு பழமொழி சொல்வார்கள். 'சீசர்ஸ் ஒய்ஃப் மஸ்ட் பி அபோவ் சஸ்பிஷன்' (Caesar's wife must be above suspicion) என்று சொல்வார்கள். அதாவது சீசர் என்பவருடைய மனைவியைப்பற்றி சொல்லும்போது, ஒரு உதாரணத்திற்குச் சொல்வார்கள், ஒருவனுடைய மனைவி கற்புடையவளா என்பதுபற்றி சந்தேகத்திற்கே இடம் கொடுக்கக் கூடாது என்று சொல்வார்கள். அதுபோல அறங்காவலர்களை நீக்க வேண்டுமென்று சொல்கின்றபோது, சட்டத்தைக் 'கோட்' பண்ணி காரணம் சொல்கிறார்கள். நான் தைரியமாகச் சொல்கிறேன். அவர்களை சட்டப்படி வெளியேற்ற முடியாது என்று சொல்கிறார்கள். அப்படிச் செய்ய முடியாது என்றால், 'மாரல்' அடிப்படையிலே ராஜிநாமா செய்திருக்க முடியும். ஐந்து பேர்களில் நான்கு பேர்கள் ஆளும் கட்சிக்காரர்கள். ஒருவர் காங்கிரஸ் (ஐ) கட்சியைச் சேர்ந்தவர். அப்படி இருக்கும்போது, ஆளும் கட்சிக்காரர்கள் நான்கு பேர்களை 'கன்டினியு' பண்ணாமல் இருந்திருந்தால், இதை அன்றைக்கே செய்திருந்தால், அரசாங்கத்திற்கு இதைவிட கவுரவமாக இருந்திருக்கும் அல்லவா? சட்டப்படி செய்யாவிட்டாலும்கூட, முதலமைச்சர் அவர்கள் 'மாரல்' ஆகவே ராஜிநாமா செய்யும்படி அன்றைக்கு அறிவுறுத்தியிருந்தால், கவர்ன்மெண்டுக்கு இவ்வளவு கெட்ட பெயர் வந்திருக்காது. சட்டப்படி முடியாவிட்டாலும், இந்த 'மாரல் ரெஸ்பான்சிபிலிட்டி' என்ற அளவில் அன்றைக்கே ராஜிநாமா செய்திருந்தால் எப்படி இருந்திருக்கும்? அந்த மாதிரி செய்திருக்கலாமே.

இன்னொரு பிரச்சினை. சந்தேகம் எப்படி வந்திருக்கிறது என்பதைப்பற்றி சொல்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ரிப்போர்ட்டை வெளியிட்டதற்காகக் கைது செய்திருப்பதைப்பற்றிச் சொல்கிறேன். நேற்றுகூட, முந்தைய நாளில்கூட மேலவை மரபைப் பாதுகாக்க வேண்டும் என்றார்கள்,

நான் இங்கே சும்மா தான் உட்கார்ந்திருந்தேன். இரண்டு பேர்களுமே தவறாக நடந்துகொள்ளக் கூடாது. அன்று எனக்கும் அமைச்சருக்கும் நடந்தமாதிரி நடக்கக்கூடாது. இவர்கள் அவர்கள் மேல் குற்றம் சுமத்துவது அவர்கள் இவர்கள் மேல் குற்றம் சொல்வது என்று இருக்கக்கூடாது. இந்த சபைக்கு ஒரு கவுரவம், அந்த சபைக்கு ஒரு கவுரவம் என்பதை நான் ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை.

இந்த அவையை வம்புக்கு இழுப்பதாகக்கூட சொல்கிறார்கள். நான் இழுக்க வில்லை. எந்த அவையையும் தாழ்த்திச் சொல்லக்கூடாது என்றுதான் சொல் கிறேன். இந்த இரண்டும் சேர்ந்ததுதான் சட்டமன்றம். 'பை கேமரல் செட் அப்' என்பார்கள். இரண்டு அவையும் ஒன்று என்றுதான் சொல் கிறேன். நான் என் இப்போது அந்த மரபைப்பற்றிப் பேசுகிறேன்? பார்லி மெண்டிலேயும் அந்த மரபுதான் இருக்கிறது. சட்டத்தை உபயோகிக்காது, அதையும் பொலிட்டிக்கல் ஆக்கி, அந்த மாதிரி இந்த மாதிரி என்று சொல்லிக் கொண்டு நடவடிக்கைகள் எடுக்காமல் இருக்கின்ற நிலைமைகள் இருக் கின்றன. இந்தமாதிரி அரசியல் என் ஏற்படுகிறது? ஒன்று எதிர்க் கட்சிக் காரர்களைப் பழிவாங்குகிறார்கள் என்று மக்கள் கற்பனை செய்கிறார்கள். அப்போது கருணாநிதி அவர்களைப் பழி வாங்கினார், இப்போது இவர்கள் பழி வாங்குகிறார்கள் என்று மக்கள் மத்தியிலே எண்ணம் வரும். ஜனநாயகத் தில் கட்சி மாறி மாறி வந்தால், பழி வாங்குவார்கள் போலிருக்கிறது. அவ ரவர்கள் கட்சி நலனுக்காக, பாதுகாப்பாக இதை அவர்கள் மறைக்கப் பார்க் கிறார்கள் என்ற எண்ணம் தமிழக மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அரசு அறிக்கை வந்திருக்கிறது. அது என்ன அறிக்கை? அந்தக் கமிஷ னுடைய பேசிக் ஃபைண்டிங்ஸ்-ஐ 'ரிஜெக்ட்' பண்ணுகிறார்கள். இந்த கவர்ன்மெண்ட் 'ரிஜெக்ட்' பண்ணுகிறது. அவர் என்ன சொல்கிறார்? "இது தற்கொலை என்று ஏற்றுக்கொள்ள முடியாது. கொலை என்பதற்கான, நினைப்பதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. எனவே ராஜிநாமா செய்யச் சொல்ல வேண்டும்" என்ற அவர்களுடைய வாதத்தை என்ன செய்திருக் கிறார்கள்? ரிப்போர்ட் அப்படி வந்திருக்கிறது. ரிப்போர்ட்டில் சர்க்கார் தரப்பில் என்ன சொல்லப்பட்டது, போலீஸ் தரப்பில் என்ன சொல்லப்பட்டது, நிர்வாகத்தில் என்ன சொல்லப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். சர்க் கார் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது அதை நிராகரிக்க வேண்டும். இந்தக் கமிஷனுடைய ஃபைண்டிங்ஸ்-ல் 'தற்கொலையல்ல, கொலை நடந்தது' என்று சொல்வதை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொல்லியிருக்க வேண்டும். விசாரணைக் கமிஷன் அறிக்கை தேவையில்லை என்று அப்படியாவது முடிவு பண்ணியிருக்க வேண்டும். போலீஸ் ரிப்போர்ட் வரும்போது, அதன் அடிப்





(பிற்பகல் 4-40)

படையிலே அதன் அறிக்கையின் பின்னணியில் என்ன என்று எடுத்துச் சொல்லி பின்னர் பேசியிருக்கலாம். கமிஷனுடைய ரிப்போர்ட்டை நிராகரிக்க அரசுக்கு உரிமையிருக்கிறது என்று சொல்லலாம். இது தற்கொலைதான், நீதிபதியின் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொல்லலாம். ரிப் போர்ட்டில் எழுதியிருக்கிறார்கள், என்ன 'இன்வெஸ்டிகேட்' பண்ணப் போகிறார்கள்? அதில் என்ன இருக்கிறது? இந்த ரிப்போர்ட்டைப் படித்தால், நீதிபதி சொன்ன அனைத்தையும் 'மீட்' பண்ணிவிட்டது தெரியும். நீதிபதி சொன்னதை மறுத்துச் சொல்லிவிட்டார்கள். மேற்கொண்டு என்ன 'இன் வெஸ்டிகேட்' பண்ணப் போகிறார்கள்? 'இன்வெஸ்டிகேட்' பண்ணுகிறவர்கள் என்ன செய்வது? தற்கொலைக்கு ஆதாரம் சொல்லுவதா, ஜட்ஜ் சொன்னதற்கு ஆதாரம் சொல்லுவதா? ஆதாரத்தை வைத்து இதுவா, அதுவா என்று கடைசி வரை போக வேண்டும். அரசு ரிப்போர்ட் வைத்த பிறகு, எந்த அதிகாரி அதற்குக் கவுன்ட்டராகப் போக முடியும்?

* திரு. க. இராமமூர்த்தி: On a point of order, மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, எனக்கும் அந்தச் சந்தேகம், மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் எழுப்பியதுபோல் ஏற்படுகிறது. அரசாங்கம் எங்களுக்குக் கொடுத்துள்ள, G.O. பற்றிய அரசின் அபிப்பிராயம் என்று நினைக்கிறேன். தலைமைச் செயலாளர் கையெழுத்து போட்டு, ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள்.

"The Report of the Paul Commission was received by Government on 18th September 1981. Government have examined the Report and taken action as indicated in the Memorandum of Action annexed to this Order.

This Order will be placed on the Table of both the Houses of the Tamil Nadu Legislature along with the Commission's Report."

என்று தலைமைச் செயலாளர் கையெழுத்து போட்டிருக்கிறார். இந்த (Annexure) 8 பக்கங்கள் இருக்கின்றன. இந்த 8 பக்கங் களுக்கு கீழே யாரும் கையெழுத்து போடவில்லை. இதை யார் தயார் பண்ணியது? எங்கே தயார் பண்ணினார்கள்? எந்த உத்தரவின் அடிப்படை யிலே தயார் பண்ணினார்கள்? இதற்கான விவரங்கள் இல்லை. சீஃப் செக்ரட் டரி கையெழுத்து போட்டதோடு, அந்த ஜி.ஓ. முடிந்துவிட்டது. பின்னால் இருப்பதற்கு, வெற்றுக் காகிதத்திற்கு இருக்கிற மரியாதைதான். இது சபை

யின் டேபிளுக்கு வந்திருக்கிறது. எப்படி இதன் அடிப்படையிலே பேசுவது? இதை யார் கொண்டு வந்தார்கள்? யாருடைய உத்தரவின் அடிப்படையில் வெளியிடப்பட்டது? யார் தயாரித்தார்கள் என்ற விவரங்கள் இருந்தால் தான் தெளிவாகக் கருத்து சொல்ல முடியும். இதிலே சூப்பர் ஜட்ஜ், (Super Judge) கமிஷன் ஆஃப் என்கொயரிக்கு மேலே ஜட்ஜ்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள். சாட்சியைப்பற்றி 'அப்சர்வ்' செய்து, சாட்சியின் எவிடன்சை 'டிஸ்கஸ்' பண்ணியிருக்கிறார்கள். கமிஷன் ஆஃப் என்கொயரி விசாரித்த சாட்சிகள் பற்றி மேற்கொண்டு 'ரெவ்யூ' நடத்திருக்கிறது. அதுவும் கையெழுத்து போடாமல் மொட்டையாக இருக்கிறது. எந்த அடிப்படையிலே இந்த அவையில் வந்திருக்கிறது. யார் கொடுத்தது என்ற விவரங்கள் தந்தால், பால் கமிஷன் ரிப்போர்ட் மீதான விவாதம் முழுமை பெற வாய்ப்பாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இந்த ஆணையிலே

"The Report of the Paul Commission was received by Government on 18th September 1981. Government have examined the Report and taken action as indicated in the Memorandum of Action annexed to this order."

என்று சொல்லித்தான் இணைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** நடவடிக்கை என்பது வேறு. இங்கே ஜட்ஜ்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள். A review has been made சாட்சியங்கள் பற்றிய மதிப்பீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதை யார் செய்தது? அரசாங்கம் சொல்லியது, போலீஸ் நடவடிக்கைக்காகக் கொடுத்திருக்கிறோம், அமைச்சர் சொன்னது போன்று நடவடிக்கைக்காகக் கொடுத்திருக்கிறோம் என்பதுதான். அதுகுறித்து சந்தேகம். அது Government's prerogative. But, a review of the evidence has been made, observations on the evidence have been given and the merits of the evidence have been discussed in detail. இதை 'டிஸ்கஸ்' பண்ணுவது யார்? போலீசா அல்லது சட்டத்துறையா? அல்லது அறநிலையத் துறையா? யார் செய்தது? எந்த அதிகாரத்தின் அடிப்படையில் அப்படிச் செய்தார்கள்?

On that, the order is blank. "The Government have examined the Report and taken action as indicated in the Memorandum of Action annexed to this order" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் "Memorandum of Action" என்பதும் இதிலே ஒன்றுமே இல்லை. What is the Memorandum of Action here? அதைச் சொல்லட்டும். It is no action at all.





சாட்சியங்களை விசாரணைக் கமிஷன் அழைத்துள்ளது. அரசாங்கம் அறிவித்த அறிவிப்பின் அடிப்படையிலே விசாரணைக் கமிஷன் முன் சாட்சி சொல்லியிருக்கிறார்கள், பிரமாணப் பத்திரங்களைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். அவர்களைப்பற்றிய விமர்சனம், நீதிமன்றத்திற்கு ஒப்பான கமிஷன் ஆஃப் என்கொயரி முன்னால் சாட்சி சொன்ன சாட்சிகள் பற்றிய விமர்சனம் நடந்திருக்கிறது. அதை யார் செய்தது? எந்த அடிப்படையிலே செய்தார்கள்? Government is not a super-Court. Nobody has that authority. நடவடிக்கை எடுக்கத்தான் அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. சாட்சி சொன்னதுபற்றி விமர்சனம் செய்ய, ஏன் சொல்லவில்லை, என்ன சொன்னார்கள் என்று விமர்சனம் செய்ய இன்னொரு நீதிபதியைத் தவிர வேறு யாருக்கு அதிகாரம் கிடையாது. It can be done only by the Court அரசாங்கத்திற்கு உள்ள அதிகாரத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கிறது. அதை ஒத்துக்கொள்கிறோம். அது முழுமையான அதிகாரம். But, how can they do it about a witness? சாட்சியங்கள் விசாரணைக் கமிஷன் முன்னால் சாட்சி சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி எப்படி விமர்சிக்க முடியும்? எந்த அடிப்படையிலே இது நடந்தது? To take action is the Government's prorogative. But there is something more. அது எப்படி இங்கே வந்தது? எந்த அடிப்படையிலே நாங்கள் பேசுவது? இதன்மீது பேசினால் சரியாக இருக்குமா என்பதைத் தலைவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** நாங்கள் பேசும்போது சொல்ல இருக்கிறோம். அரசு ஒரு முடிவெடுக்கிறதென்றால், வா டிப்பார்ட்மெண்ட், போலீஸ் டிப்பார்ட்மெண்ட், அறநிலையத் துறை ஆகிய எல்லாத் துறைகளும் சேர்ந்து முடிவெடுத்ததாகப் பொருள். அப்படித்தான் என்றால், எங்கள் பேச்சு அதன் அடிப்படையில் இருக்கும். அறநிலையத் துறை முடிவை எல்லாத் துறைகளுக்கும் அனுப்பி, சட்டத் துறை, உள்துறை ஒபீனியன் தந்து it is mooted by the Hindu Religious and Charitable Endowments Department பண்ணி என்று இருந்தாலும் entire Government accept யிருக்கிறதென்று அர்த்தம். அப்படித்தான் என்று சொன்னால், பேச உதவியாக இருக்கும். அறநிலையத் துறை மட்டும்தான் என்றால், எங்கள் அட்டாக், பாராட்டு எல்லாம் அந்தத் துறைக்குப் போகும்.

(மாண்புமிகு தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தமிழக அரசினுடைய தலைமைச் செயலாளர் தமிழக அரசின் நிர்வாகத்திற்குப் பொறுப்பு ஏற்றிருக்கிறார்கள் தான். பொதுத் துறையால்தான் பால் கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிற

கமிஷன் நியமிக்கப்படுகிற அந்த அடிப்படை, கமிஷனுடைய பிரேரணைச் சட்டம், அவர்களுடைய தீர்ப்புகள், பரிந்துரைகள், இவைகளைப்பற்றியெல்லாம் கமிஷன் அறிக்கையின் முகவுரையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அரசாங்கத்திற்குத் தெளிவான வழிகாட்டுதலை அறிவிக்கிறவர்கள். அவர்களுடையது சட்டத் தீர்ப்பல்ல. அரசாங்கத்திற்கு வழி காட்டுவதற்கு, அரசாங்கத்திற்கு எழுந்திருக்கும் சந்தேகத்தை நீக்குவதற்கு, அவர்களுடைய கருத்துக்கு ஏற்றவாறு ஒரு நீதிபதியைக் கமிஷனாக அமைத்திருக்கிறது. அவர் பரிந்துரை தந்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரைகளின் மீது அரசாங்கம் முடிவெடுத்து, குற்றப் புலனாய்வுத் துறைக்கு ஆணையிடுகிறது. அவர்களுடைய இரண்டாம் பரிந்துரையாக, அவர்களுடைய பரிந்துரையை வைத்து அறங்காவலர் மீது நடவடிக்கை எடுக்க முடியாதென்று சுட்டிக்காட்டி, அறநிலையத் துறைச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுங்கள் என்று சொல்லும் சூழ்நிலையில், இவற்றை அரசாங்கம் பரிசீலித்து ஆணையிடும்போது, அரசாங்கத்திற்கு மேலும் ஐயம் இருக்கிறது, அவற்றை எடுத்துக் காட்டி அந்த ஆணையில் பிறப்பித்திருக்கிற தகவல்களையெல்லாம் சேர்த்து மெமோராண்டம் என்ற வார்த்தையைச் சொல்லி, அதையொட்டி 'சீப் செக்ரட்டரி' அறிவிக்கிறார் என்பது பொருள்.

திரு. க. இராமமூர்த்தி : விசாரணைக் கமிஷன் என்பது நீதிமன்றமா, இல்லையா என்பது பற்றி பல்வேறு முடிவுகள் வந்திருக்கின்றன. அதை விவாதத்தின்போது வைத்துக்கொள்ளலாம். நான் கேட்பது, நீதி விசாரணை முடிந்த பிறகு, நீதிபதி அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் எப்படி வேண்டுமானாலும் நடவடிக்கை எடுக்கலாம். அது அவர்கள் பிரேரோகேடிவ் (Prorogative) அதிகாரங்களை ஒட்டியது அது. ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் அரசின் தெரிவிப்பதுபோல, இங்கே ஒரு மெமோராண்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதையும் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இந்த மெமோராண்டத்துக்கு 'சீப் செக்ரட்டரி' பொறுப்பேற்றுக் கொள்கிறாரா? அவருடைய

(பிற்பகல் 4-50)

கையெழுத்து கடைசியில் இல்லை. கடைசியில் கையெழுத்து இருந்தால் கூட பரவாயில்லை. இதற்கு அரசு பொறுப்பேற்றுக்கொள்கிறதா?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரிடமிருந்து அந்த மெமோராண்டத்துக்கு அரசு பொறுப்பேற்றுக்கொள்கிறதா என்று உறுப்பினர் அறிய விரும்புகிறார்.



மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : அரசின் சார்பிலே தான் அதை [illegible] தலைமைச் செயலாளர் வைத்திருக்கிறார்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அரசு பொறுப்பேற்றதாகச் சொன்ன பிறகும், உறுப்பினர் இப்படிச் சொல்வது முறையல்ல. கண்டனத்துக்கு வேண்டுமானால் அதை எடுத்துக்கொள்ளலாம். இனிமேல் இப்படி வரக் கூடாது என்று வேண்டுமானால் அபிப்பிராயம் சொல்லலாம். ஆனால் அதில் விசேஷமாகத் திருப்புக்கு இடம் இல்லையே.

திரு. க. இராமமூர்த்தி : நீதிபதியால் விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் பற்றி இதில் விமர்சிக்கப்பட்டிருக்கிறது. சில சாட்சிகள் சாட்சியம் சொல்ல வரவில்லை என்று இருக்கிறது. சில சாட்சிகள் பின்வாங்கி விட்டார்கள் என்று இதில் விமர்சனம் செய்யப்பட்டிருக்கிறது. ரெவியூ என்கிற முறையில் இதுவரையில் எந்த ரிப்போர்ட்டுகளிலும் இம்மாதிரிச் செய்தது இல்லை. நீதிபதியினுடைய தீர்ப்பை எதிர்த்து யார் வேண்டுமானாலும் விமர்சனம் செய்யலாம். ஆனால் நீதிபதியால் விசாரிக்கப்பட்ட சாட்சிகளைப்பற்றி விமர்சனம் செய்ய இன்னொரு நீதிபதியில்லாத ஒருவர் முற்பட்டிருப்பது சரியில்லை. 'சீஃப் செக்ரட்டரி' என்கிற முறையில் அப்படிச் செய்திருக்கிறாரா அல்லது அரசு சார்பில் அப்படிச் செய்திருக்கிறாரா?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அரசால் அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது. பொறுப்பேற்றுத்தான் அரசு அதை அவை முன் வைத்திருக்கிறது. தலைமைச் செயலாளருடைய கையெழுத்து கடைசியில் இல்லையென்றால், இது ஒரு முன்மாதிரியாக இருக்கிறது என்று உறுப்பினர் சொல்வதாகத் தெரிகிறது. அதற்கு உறுப்பினர் வேண்டுமானால் கண்டனம் தெரிவிக்கலாம் அல்லது தவறான முன்மாதிரியாக இருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் விசேஷமாக ஆட்சேபிக்க இதில் என்ன இருக்கிறது?

திரு. க. இராமமூர்த்தி : சில பேப்பர்கள் இதில் சரியில்லை. [illegible] மாண்புமிகு தலைவரவர்கள் தயவுசெய்து இதை 'வித்ட்ரா' பண்ணலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மொத்தத்திற்கும் பொறுப்பேற்றிருப்பதாகத் தான் தலைமைச் செயலாளர் அதில் கையெழுத்து போட்டிருக்கிறார்.

திரு. க. இராமமூர்த்தி : அந்த மாதிரி எழுதுவது தவறு. என் முதலில் கையெழுத்து போட வேண்டும்? பின்னால் எதையாவது சேர்த்தால் என்ன செய்வது?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இனிமேல் இப்படி நிகழக்கூடாது என்று வேண்டுமானால் வலியுறுத்தி அபிப்பிராயத்தைச் சொல்லலாம்.

[1982 பிப்ரவரி 18

திரு. க. இராமமூர்த்தி : ஜி.ஓ. போட்டதற்கு அப்புறம் இந்த 'அனெக்சரை' உண்டாக்கியிருக்கிறார்கள். அதுதான் என்னுடைய பிரச்சினை எல்லாம்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்ன பிரச்சினையை இப்போது தான் கவனித்தேன். அரசு தரப்பிலிருந்து மாண்புமிகு அமைச்சரால் பொறுப்பேற்கப்பட்டிருப்பது குறித்து மகிழ்ச்சி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் தான் உறுப்பினரை திசை திருப்பி விட்டிருக்கிறார். (சிரிப்பு)

திரு. ஆ. நல்லசிவன் : ஆரம்பத்தில் கையெழுத்து போட்டிருந்தாலும் கூட 'அனெக்சர்' உட்பட அனைத்துக்கும் அரசு பொறுப்பேற்றிருக்கிறது என்று கருதித்தான் நான் பேசுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமுன்வடிவுகளை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யப்பட்ட பணிகள் எங்கோ போய்க்கொண்டிருக்கின்றன.

திரு. ம. சங்கரலிங்கம் : 3 நாட்களுக்கு முன்பே நாங்கள் ஆளுநர் உரை மீது விவாதத்தை முடித்திருந்தோம். நாங்கள் முழு ஒத்துழைப்பு கொடுக்கத்தான் செய்கிறோம். இந்த விவாதத்திற்கு 2 நாட்களாவது கொடுக்க வேண்டும். அரசு குறிப்பிட்ட நேரத்தில் பணியை முடித்திருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : இப்படி குற்றச்சாட்டு கூறக் கூடாது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூட நேரம் அதிகமாகத் தேவை என்று சொல்லியிருக்கிறார். 2 மணி நேரத்திற்கு மேல் பேசியிருக்கிறார். ஆனால் எல்லோருடைய ஒத்துழைப்பும் இதற்குத் தேவை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூன்று நாட்கள் பேசியிருந்தாலும்கூட, ஒவ்வொருவருடைய கருத்துக்கும் அவர் பதில் சொல்வது என்பது வரவேற்கத்தக்கது.

திரு. ம. சங்கரலிங்கம் : அது வரவேற்கத்தக்கது தான். ஆனால் ஒவ்வொரு நாளும் 2 மணி நேரம் கூடுதலாக அலுவலை வைத்திருக்கலாம். ஆனால் ஒன்று சொல்லும்போது எங்களுடைய கருத்துக்களைச் சொல்ல 'பின்' வாய்ப்பு தர வேண்டும். நிச்சயம்



1982 பிப்ரவரி 18]

திரு. ஆ. நல்லசிவன் : நிறைய பாயின்ட்ஸ் பேச இருப்பதால் நேரம் கூடுதலாகக் கொடுக்க வேண்டும். ஒன்றில் அரசாங்கம் இந்த ரிப்போர்ட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி ஏற்றுக் கொள்வதாக இருந்தால், விமர்சனமே செய்யக் கூடாது. தற்கொலை தான் என்பதற்கான எல்லாவற்றையும் அரசாங்க சார்பில் கொடுத்து விட்டார்கள். போலீஸ், கோவில் துறை எல்லோரும் அவ்வாறு கொடுத்துவிட்டார்கள். இப்படி விமர்சனம் செய்வதில் என்ன நியாயம் இருக்கிறது? பைன்டிங்குக்குப் பிறகு கூட அது தற்கொலை தான் என்று சொல்வது சரிதானா? கமிஷன் பைன்டிங்கில் அது தற்கொலை அல்ல என்று கூறுகிறது. கொலை என்பதற்கான ஆதாரங்களைக் கண்டுபிடித்திருக்கிறது. 'எப்படிச் செய்தது? யார் செய்தது?' என்பது இன்வெஸ்டிகேஷனின் போது தான் தெரியும். கமிஷன் அப்படித் தான் 'பைன்டிங்' கொடுத்திருக்கிறது. ஆனால் சர்க்கார் அது தற்கொலை தான் என்று 'பைன்டிங்' கொடுத்திருக்கிறது. அப்படி என்றால், ஏற்கெனவே அரசு அது தற்கொலை என்று முடிவு செய்திருக்கிறது என்று தானே பொருள். அதற்கான ஆதாரங்களைத் திரட்டுங்கள் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிடுவதாகத்தானே பொருள். அப்படித்தானே சொல்லியிருக்கிறார்கள். அந்த விவரம் தானே இந்த மெமோராண்டத்திலும் இருக்கிறது. இந்த பைன்டிங்கை அப்படியே அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், உங்கள் மீது மக்களுக்குக் கோபம் வரும். மக்களைச் சந்திக்க உங்களுக்கு பயம் வரும். ஆகவேதான் பகிரங்கமாக கமிஷனின் பைன்டிங்கை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்ல மாட்டீர்கள். அப்படியென்றால் இப்படி ஒரு மெமோராண்டம் வந்திருக்கக்கூடாது. விமர்சனம் செய்திருக்கக் கூடாது. இப்படி 'அனலைஸ்' செய்திருக்கக் கூடாது. ஒரு நீதிபதியின் பைன்டிங்குக்கு மேலே இப்படி அரசின் சார்பில் ஒரு பைன்டிங் வருவது அவசியமற்றது. அரசுக்கு ஆதரவாக ஆதாரங்களைத் தேடுங்கள் என்று போலீசுக்கு மறைமுகமாக உத்தரவிடுவதாக ஆகாதா? தமிழகத்திலுள்ள அறிஞர்கள் எல்லாம் இதைப் படிக்கிறார்கள். இதெல்லாம் அவர்களுடைய புத்திக்கு, அறிவுக்கு எட்டாது என்று இந்த அரசு எண்ணிவிட்டதா? இப்படிச் செய்வதை விட கொலை என்பதை இந்த அரசு ஒப்புக்கொள்ளவில்லை, ஆகவே மேற்கொண்டு 'இன்வெஸ்டிகேஷன்' தேவையில்லை என்று பகிரங்கமாக அரசாங்கம் சொல்லிவிடலாமே? அப்படிச் சொன்னாலாவது யாராவது கோர்ட்டுக்குப் போய் பார்த்துக்கொள்வார்கள். அரசால் கொலை இல்லையென்று சொன்னால், மக்கள் முன்னால் உங்களுக்குப் போக பயம். போலீசாரை சரியாகச் செயல்பட விடவில்லை. இப்படிப்பட்ட நிலையில் இனிமேல் இன்வெஸ்டிகேஷன் பண்ணும்போது, எப்படி சரியாகப் பண்ணுவார்கள்? ஜெனரல் டைரியைப் பொறுத்தவரையில், இன்ஸ்பெக்டர் ஸ்ரீதரன் நாயர் வேறு ஒரு தாலுக்கா போலீஸ் ஸ்டேஷனிலிருந்த ஜெனரல்

டைரியிலிருந்து 2 சீட்டை வெட்டிக் கொண்டு வந்து இதில் ஒட்டியிருக்கிறார் என்று நீதிபதி சொல்லியிருக்கிறார். ஆனால் இதைப்பற்றி இன்வெஸ்டிகேஷன் செய்யும்போது யார் தெரியுமா? அவரும் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர்தான். அவர் எப்படி உண்மை நிலையைச் சொல்ல முடியும்? பொதுஜன சாட்சி என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பொதுஜன சாட்சி யார் என்று சொல்ல முடியுமா? முக்கியமான அந்த சாட்சி காணவில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த ஊரில் உள்ள ஒருவரைக் காணவில்லையென்று சொன்னால், எந்த போலீஸ்காரர் தான் அதை நிரூபிக்க முடியும்? இன்வெஸ்டிகேஷன் மூலம் ஒன்றை நிரூபிப்பது என்றால், அதற்கான உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்யாமல் நிராகரித்து விட்டார்கள் என்று சர்க்காரே ஒரு முடிவெடுத்துச் சொல்வதை நான் ஆட்சேபிக்கிறேன். இன்னும் பல காரணங்கள் இதிலே சொல்லப்பட்டிருக்கின்றன. எவ்வளவு கஷ்டப்பட்டு இதை வியாக்கியானம் பண்ணியிருக்கிறார்கள் என்பதை நான் அவையில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 5-00)

சுப்பிரமணியப் பிள்ளை அவர்களுக்குக் கழுத்திலே முன்பக்கத்தில் ஒரு காயம் இருக்கிறது என்று போஸ்ட்-மார்ட்டம் செய்த டாக்டர் சொல்லியிருக்கிறார். அதற்கு அரசு அறிக்கை தருகிறது, எப்படியென்றால், 'இவர் பார்த்தாரா, பார்க்காமலேயே போஸ்ட்-மார்ட்டம் செய்திருக்கிறார்' என்று சொல்லியிருக்கிறது. அவர் அந்தக் காயத்தைப் பார்க்காதவர் என்று சொன்னார்களே, இராமமூர்த்தி என்ற திருநெல்வேலியிலே உள்ள மெடிக்கல் காலேஜிலே இருக்கிற ப்ரொபசர் அவர்கள் இந்தக் காயத்தைப் பார்த்தாரா? செல்வி பிரான்சிஸ் எட்வர்ட் என்ற திருச்செந்தூரிலே உள்ள அந்த டாக்டர் அம்மா என்ன சொல்லியிருக்கிறார்? கழுத்தின் முன்பக்கத்திலே காயம் இருந்தது என்று சொல்லியிருக்கிறார். அதற்கு அரசு என்ன பதில் சொல்லியிருக்கிறது? அந்த அம்மா கழுத்திலே இருக்கும் காயம் எவ்வளவு ஆழம் இருந்தது என்று சொல்லவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இவருடைய விஷயத்திற்கு வரும்போது கழுத்தைப் பார்க்கவில்லை என்றும், இந்த அம்மாவின் விஷயத்திற்கு வரும்போது இன்னொரு மாதிரியும், ஏன் இப்படியெல்லாம் அந்தக் கருத்துக்களுக்கு மாறுபாகவும், ஆதாரமாகவும் நிலைமைகளை உருவாக்கியிருக்கிறார்கள்? அடுத்து, அந்த ஷெட்பாத்திலே இருக்கும் கம்பியிலே துண்டைக் கட்டி கழுத்திலே போட்டு இறக்க முடியுமா என்று யாரோ ரோட்டிலே போன ஒருவனைக் கேட்டு, அவர் பார்த்துவிட்டு, முடியாது என்று சொன்னாராம் என்று கோபால் அவர்கள் சாட்சி சொல்லியிருக்கிறார்கள். இவரைப் பொறுத்தவரையில், 'யாரோ ஒருவர் சொல்லியிருக்கிறார்', அதை ஏற்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். சுப்பிரமணியப் பிள்ளை பணத்தைத் திருடினார் என்று பொதுஜனம் ஒருவர் சாட்சி





சொல்லியிருக்கிறார் என்று சொல்லப்பட்டதே, அந்தப் பொதுஜனம் யார் என்று அரசு கண்டுபிடிக்கவில்லையே. அந்தப் பொதுஜனம் யார் என்று போலீசாரால் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும், அந்த சாட்சியத்தைப் பொறுத்தவரையில், அவர் பணத்தைத் திருடினார் என்பதற்காக 'சாட்சி இருக்கிறது' என்று சொல்லியிருக்கிறார்களே. இப்படி இரண்டு பக்கமும் டபுள் பாயின்ட் இருக்கும்போது, அரசு ஏன் இப்படிச் செய்திருக்கிறது? தலைவர் அவர்களே, இப்படியாக நிறைய விஷயங்கள் இருக்கின்றன. அரசாங்கம் செய்யக்கூடாத காரியங்களை வலிய வந்து எக்ஸ்பிளனேஷனாகக் கொடுத்திருக்கிறார்கள். வேண்டாத விஷயங்களை அரசாங்கம் வலிய வந்து சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படியெல்லாம் சொல்லி போலீஸ் இன்வெஸ்ட்டிகேஷனை எவ்வளவு தூரம் 'டேமேஜ்' பண்ண முடியுமோ அவ்வளவு தூரம் 'டேமேஜ்' பண்ணியாகிவிட்டது. இந்த வழக்கை சி.பி.ஐ.-க்கு விட வேண்டும் என்றெல்லாம் கோரிக்கை விடப்பட்டது. நான் அதை வாதத்திற்கு ஒத்துக்கொள்கிறேன். ஆனால் சி.பி.ஐ.-க்கு விசாரணைக்கு விட்டால், அவர்கள் 'இன்வெஸ்டிகேஷன்' செய்கிறோம் என்று சொல்லி இந்த அரசின் மீது வேறு வகையிலே நிர்ப்பந்தத்தைக்கொண்டு வருவார்கள். தமிழ் நாட்டிலே இருக்கும் போலீசிலேயும் 'டியூட்டி-கான்சியஸ்' ஆக பல போலீஸ் அதிகாரிகள் இருக்கிறார்கள், பல இன்வெஸ்டிகேஷன்கள் கூட முன்பெல்லாம் நடத்தியிருக்கிறார்கள், இதற்கு ஆதாரங்கள் பல சர்க்கார் அறிக்கைகளிலே இருக்கிறது. அப்படிப்பட்ட உயர்மட்ட போலீசார் அடங்கிய ஒரு குழுவை, ஒரு கமிட்டியை அமைத்து இதை விசாரணை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி விசாரணை செய்யும் போது, உண்மையைச் சொல்லுவதனால் அவர்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் அல்லது பாதிப்பும் ஏற்படாது என்று அரசு அவர்களுக்கு உத்தரவாதம் கொடுத்தால் இந்த அரசு முடிந்த அளவு இப்படியெல்லாம் டேமேஜ் செய்தாலுங்கூட, ஓரளவுக்கு நியாயம் கிடைக்கக்கூடிய அளவிலே அவர்கள் விசாரணை செய்வார்கள்.

இப்போது அந்த அறங்காவலர் குழுவைப் போகச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது திடீரென்று என்ன ஏற்பட்டது? அவர்களை வைத்துக்கொண்டு என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து முடிந்தாகி விட்டது. விசாரணை எல்லாம் முடிந்த பிறகு, அவர்கள் போனாலும் போகட்டும் என்று அல்லது வேறு வழியில்லாமல் இந்த அரசு சிக்கலில் மாட்டிக் கொண்ட பிறகு, இப்படிச் செய்திருக்கிறார்கள். இப்படிச் செய்வதன் மூலம் இந்த அரசு இந்த நேரத்திலேயும் நியாயத்தை உணர்ந்ததாக யாரும் கருத மாட்டார்கள். ஆகவே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோன்று, உயர் மட்டப் போலீசார் அடங்கிய ஒரு குழுவை அமைத்து இதை விசாரணை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[1982 பிப்ரவரி 18

**திரு. ப. மாணிக்கம்:** தலைவர் அவர்களே, பால் கமிஷன் அறிக்கை மீது
பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றி கூறிக்கொள்கிறேன்.
முதலாவதாக இந்தக் கமிஷன் 9 திங்களுக்குள் தனது அறிக்கையை அரசுக்குச்
சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டிருந்த நிலையில், சரியாக ஒன்பது
மாதத்தில் பால் கமிஷன் தனது அறிக்கையைச் சமர்ப்பித்திருப்பதற்காக
அந்தக் கமிஷனுக்கு நான் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்
கொள்கிறேன். இந்தக் கமிஷன் அறிக்கை, அதனுடைய விவரங்கள், அதன்
மீது அரசு தன்னுடைய சிபாரிசு என்ற முறையிலே ஒரு அறிக்கையை வைத்
திருக்கிறது. இது, இந்த அறிக்கையின் மீது உத்தரவு என்ற முறையிலே
வைக்கப்பட்டாலும், பொதுவாக உள்ள மரபின்படி, இப்படிப்பட்ட
அறிக்கைகள் மீது அரசின் சிபாரிசுகள் என்ற முறையிலே பார்க்கும்போது,
அரசு வைத்திருக்கும் இந்த அறிக்கை இந்த பால் கமிஷன் அறிக்கையைக்
கண்டனம் செய்வதாகத்தான் அமைந்திருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு
நடைமுறை இந்த பால் கமிஷன் அறிக்கை மீதுதான் ஏற்பட்டிருக்கிறது.
'Recommendations have become condemnations' என்ற வகையில்
இது இருக்கிறது. இதற்கு முன்னால் இம்மாதிரி சிபாரிசுகள் அரசிடமிருந்து
வருவது என்பது கேள்விப்படாத ஒன்று என்பது மட்டுமல்ல, நடைமுறையில்
அப்படி இல்லை. ஒருவேளை விதிகளின் பிரகாரம் இப்படிச் செய்வது
சாத்தியமாக இருந்திருக்கலாம். ஒரு பிரச்சினையின் தன்மையை அரசு
ஆராயும்போது, அரசு அந்த அறிக்கையில் உள்ள பல்வேறு அம்சங்களையும்
கண்டறிய வேண்டும். ஆனால், இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில்,
இது பொதுமக்கள் முன்னால் இருக்கும் மிகப் பெரிய பிரச்சினை. திருச்
செந்தூர் வட்டாரத்தில் என்று மட்டுமல்ல, இதுபற்றி தமிழ் நாடு முழுவதுமே
கொந்தளிப்பு ஏற்பட்டு, அதனால் முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர்
அவர்களும் அந்த இடத்திற்கு நேரில் சென்று நிலைமைகளைக் கண்டறிந்து
அளித்த முடிவின்படிதான் இப்படி ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்கப்
பட்டது. இந்தக் கமிஷனை அமைத்தபோது, அது மக்கள் மனத்திலே ஒரு
நம்பிக்கையை ஏற்படுத்தியது. அந்த சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள்
தற்கொலை செய்து கொண்டாரா அல்லது கொலை செய்யப்பட்டாரா
என்பதை ஆய்ந்தும் இருக்கிறது இந்த அறிக்கை. பொது மக்களிடத்திலே
ஏற்பட்ட கொந்தளிப்பு எதனால் ஏற்பட்டது என்பது நமக்குப் பொதுவாகத்
தெரியும். பொது வாழ்க்கையில் உள்ள அனைவருக்கும் அரசுக்கும் இந்த
மாதிரி பிரச்சினைகளிலே மக்களிடத்திலே கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது
என்று புரியும். வரலாற்று நியதி என்னவென்றால்
the people have always acted rightly. Generally
நியாயப்படி நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பது வரலாறு கூறும் பாடம்



1982 பிப்ரவரி 18] [திரு. ப. மாணிக்கம்]

பிரச்சினைகளிலே ஒன்று. அந்த அடிப்படையிலே அரசு பார்த்திருக்க முடியாது
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் நிலைமை
களை நேரில் கண்டறிந்துதான் விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்
அதிலே ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. கமிஷன் வரும்போது அதுபற்றிய
காரணங்களைக் கண்டறிய வேண்டும் என்று சொல்லும்போது, அத்தகைய
நிகழ்ச்சி மேற்கொண்டும் நடைபெறாமல் இருப்பதற்காக உரிய நடவடிக்கை
களை பரிந்துரைப்பதும் ஒன்று ஆனால், 'அத்தகைய நிகழ்ச்சி மீண்டும்
நடைபெறாமல் இருப்பதற்கான பரிந்துரை' என்ற முறையிலே பார்க்கும்
போது, இந்த அரசின் சிபார்சு அந்த அடிப்படையிலே அமைந்திருக்கிறதா,
அல்லது மீண்டும் இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருப்பதற்காக
அதற்குரிய நிலைமைகளை உருவாக்கும் முறையிலே இந்தச் சிபார்சு இருக்
கிறதா? அல்லது மீண்டும் நடந்தால் அதுபற்றி கவலை கொள்ள வேண்டாம்

(பிற்பகல் 5-10)

என்ற அளவிலே உள்ள சிபார்சா இது? ஆகவேதான் சொல்கிறேன், இது
வெறும் நெறிமுறைகளைப் பற்றியதல்ல. மொராலிட்டி பற்றியதல்ல. அரசு
என்பதற்குச் சில சட்டப் பொறுப்புகள் இருக்கின்றன. அரசு, கிளர்ச்சி
செய்யும்போது சில நேரங்களில் சுடுகிறது. அவ்வாறு சுடுவதில் தவறு நடந்
தால், அங்கே தவறு நடந்தது என்று கேட்கிறோம். அரசு எப்போதும்
சுடவே கூடாது என்று நாம் சொல்லவில்லை. காரணம், சமுதாயத்தின்
ஒட்டுமொத்தமான நலன்களை அரசுதான் பாதுகாக்க வேண்டியிருக்கிறது.
எனவே அந்த அடிப்படையில் அது சரியாகச் செயல்பட்டிருக்கிறதா என்று
தான் கேட்கிறோம்.

இந்த முறையில் பரிந்துரைகளை ஆராயும்போது, இந்த அரசு தான்
போட்ட உத்தரவுக்கே நேர் முரணாக தன் சிபாரிசை இங்கே தெரிவித்திருக்
கிறது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அதோடு, பால் கமிஷன்
என்ன கருத்துக்களைத் தெரிவித்ததோ அதற்கு நேர் எதிராக அரசு பல
இடங்களில் கண்டனம் தெரிவித்திருப்பது மூலம் இரண்டாவது தீங்கும்
ஏற்பட வாய்ப்பிருக்கிறது. அதாவது இனி இப்படிப்பட்ட கமிஷன்களைப்
போட்டால், கமிஷனாகப் பணியாற்றுவதற்கு நீதித் துறையைச் சார்ந்தவர்கள்
இனி வருவார்களா என்ற அச்சம்கூட ஏற்படுகிறது. இனி இவ்வாறு
கமிஷன்கள் நியமிக்கப்பட்டு சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்படும்போது, அத்தகைய
சிபாரிசுகள்மீது அரசின் கண்டனம் வருமானால், இனி நமக்கெதற்கு இந்த
வம்பு என்ற நினைப்புதான் கமிஷனில் பணியாற்றுகிறவர்களுக்கு ஏற்படும்.
பொதுவாகவே, தனி மனிதன் அரசின் வலிவுக்கு எதிராக நிற்பதற்கு நிறைய
மனத்துணிவு வேண்டும். எனவே இனி எதிர்காலத்தில் விசாரணைக்
கமிஷன் போட்டால், நாம் எதற்காகப் போய் நிற்க வேண்டும் என்ற

அச்சத்தை, எண்ணத்தைத்தான் இனி நீதித் துறையைச் சார்ந்தவர்
களிடத்தில் இது உருவாக்கும். எனவே இதையும் அரசு கவனிக்க வேண்டும்.
இதை நான் சொல்வதற்குக் காரணம், இத்தகைய முறைகள் அரசின் மீதும்,
நீதி விசாரணையின் மீதும் மக்களிடையே அச்சத்தையும் சந்தேகத்தையும்
தான் உருவாக்கும். அவ்வாறு ஒரு நிலை ஏற்பட்டால், அதன் விளைவுகள்
படிப்படியாக வேறு விதமாக வளரும். பொதுவாக மக்களின் 'சைக்காலஜி'
என்ன என்பது நமக்குத் தெரியும். அச்சம், சந்தேகம், அருவறுப்பு,
ஆத்திரம், கொந்தளிப்பு என்ற நிலைமைகள் படிப்படியாக உருவாகும். எந்தக்
காரணத்திற்காக விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டது?
கண்டுபிடிக்க வேண்டும் என்றுதானே நியமிக்கப்பட்டது? உண்மையைக்
கொலையா என்று கண்டுபிடிக்க வேண்டும் என்றுதானே கமிஷன் நியமிக்கப் இது தற்கொலையா,
பட்டது. அப்படி நியமித்த பிறகு, கமிஷன் ஒரு பரிந்துரை செய்த நிலையில்
கமிஷன் சொல்வது சரியல்ல, உண்மையல்ல என்று சொல்லுகிற வகையில்
அரசாங்கத்தின் உத்தரவும், சிபாரிசும் இருக்குமானால், இது ஆபத்தான
போக்கு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த கமிஷன் அறிக்கையில் பல்வேறு அம்சங்களைப்பற்றிச் சொல்லி
யிருந்தாலும், நான் அதிகமான நேரத்தை எடுத்துக்கொண்டு விவாதிக்க
விரும்பவில்லை. சாட்சியங்கள் நடந்துகொண்ட முறையைப்பற்றி அவர்
சுட்டிக்காட்டியிருக்கிறார். பல அரசியல் வாதிகள் இதைப்பற்றிச் சொன்ன
வர்கள் சாட்சியங்களாக வரவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்
அதைப்பற்றியெல்லாம் விரிவாகப் பேச விரும்பவில்லை. எனினும் ஒரு குறிப் நான்
பிட்ட இடத்தில் இந்த மரணத்தைப்பற்றிச் சொல்லிய நீதிபதி "இது வன்
முறையால் விளைந்த மரணம்தான்" என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்
கிறார். கமிஷன் தான் விசாரித்த அனைத்து சாட்சிகளைப்பற்றியும் பொது
வாக வகைப்படுத்திச் சொல்லிவிட்டு சிலவற்றைப்பற்றி விளக்கியிருக்கிறது.
கமிஷன் அந்த வகையில் தனக்குக் கொடுத்த கடமையை நிறைவேற்றுவதில்
மிகுந்த நிதானத்தோடு நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் நான் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன்.
இந்தச் சம்பவம் குறித்து பால் கமிஷன் நியமிக்கப்பட்டபோது, திருச்செந்தூர்
கோயில் இந்துக்களின் கோயில், அதிலும் மிகவும் புனிதமான கோயில், அதற்கு
ஒரு கிருத்துவரை நீதிபதியாகப் போடலாமா என்றும், அது சரியாக
இருக்குமா என்றும் சிலருக்கு அச்சம் ஏற்பட்டது உண்டு. ஆனாலும்கூட
இத்தகைய அச்சங்களையெல்லாம் போக்குகிற முறையில் மிகவும் நேர்மை
யான வகையில் பெருந் தன்மையோடு பால் கமிஷன் நடந்து கொண்டிருக்
கிறது என்பதையும் நாம் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.



பால் கமிஷன் இந்தப் பிரச்சினையை விரிவாக விசாரித்து என்ன உண்மை
யைச் சொல்லியிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அதற்கு முன்னால்
என்னுடைய அனுபவத்தையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.
சென்ற ஆண்டின் இறுதியிலும், இந்த ஆண்டின் தொடக்கத்திலும் நான் திருச்
செந்தூருக்கு என்னுடைய கட்சிப் பணிக்காகச் செல்ல வேண்டிய அவசியம்
ஏற்பட்டது. திரு. சுப்பிரமணியப் பிள்ளை மரணம் அடைந்த விடுதிக்கு
நேர் எதிரே உள்ள கட்டிடத்திற்கு அடுத்த விடுதியில் நான் தங்கியிருந்தேன்.
12 ஆம் நம்பருக்கு எதிரானது. கடற்கரை ஓரத்தில் வள்ளிக் குகை என்று
சொல்லுகிற இடத்திற்கு நேராக மேலே இருக்கிறது. அதனால் அந்த இடத்
தைப் பார்வையிட வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது. நீதிபதி
அவர்கள் விரிவான அளவுக்கு விசாரித்த பிறகு நான் அதற்கு மேல் போக
விரும்பவில்லை. எனவே அந்த இடத்தைப் போய்ப் பார்க்க வேண்டும் என்ற
அடிப்படையில் போய்ப் பார்த்தேன்.

அந்த இடத்தையும் பார்வையிட்டு, இங்கே தரப்பட்டிருக்கிற விவரங்
களையும் பார்த்து, அந்த வட்டாரத்தில் கேள்விப்பட்ட பல்வேறு விவரங்
களையும் ஒட்டுமொத்தமாக வைத்து யோசிக்கும்போது, பால் கமிஷன்
"சுப்பிரமணியப் பிள்ளை வன்முறையால்தான் மரணம் அடைந்தார்" என்று
சொல்லியிருப்பது முற்றிலும் உண்மையானது என்ற முடிவுக்குத்தான் வர
வேண்டியிருக்கிறது. கமிஷன் அறிக்கையிலேயே இது சொல்லப்பட்டிருக்
கிறது.

இதைச் சொல்லும்போது, கமிஷன் விசாரணையிலிருந்து ஒரே ஒரு
விஷயத்தைப்பற்றி மட்டும் நான் இந்த அவையில் எடுத்து வைக்க விரும்பு
கிறேன். அது பதிவேடுகளில் உள்ள திருத்தம் குறித்ததாகும். கமிஷன்
அறிக்கை பக்கம் 75-ல் பத்தி 2-ல் இதைப்பற்றி விவரமாகச் சொல்லப்பட்டிருக்
கிறது. அதில் பதிவேடுகள் எப்படித் திருத்தப்பட்டன என்ற விவரமும்,
காவல் துறையைச் சார்ந்தவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்ப
தையும், குறுக்கு விசாரணையில் அவர்கள் எப்படி திருத்தினார்கள் என்பதும்
சொல்லப்பட்டிருக்கிறது.

அனுப்புநர் விவரத்திற்குப் பிறகு, "சுப்பிரமணியப் பிள்ளை சரிபார்ப்பு
அதிகாரி . . :" விவரத்திற்குப் பிறகு சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்க
வேண்டும்.

" . . . . இப்பதிவின் 8, 9-வது வரிகளில் முதலில் நீள மைப்
பேனாவால் அல்லது நீல பால் பாயிண்டு பேனாவால் எழுதியவை அழிக்கப்
பட்டு, அந்த இடத்தில் 'திரு. சுப்பிரமணிய பிள்ளை' என்று சிவப்பு மை
பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது"
என்று சொல்லிவிட்டு மேலும் சொல்லுகிறார்.

[திரு. ப. மாணிக்கம்] [1982 பிப்ரவரி 18

" . . . இந்தப் பதிவேட்டை வைத்து வரும் வட்ட அலுவலக எழுத்தர் (சர்க்கிள் ஆபீஸ் ரைட்டர்) (கமிஷன் சாட்சி 8) தான் எழுதிய இப்பதிவில் சில வார்த்தைகள் அழிக்கப்பட்டு 'திரு. சுப்பிரமணியப் பிள்ளை' என்ற பெயர் எழுதப்பட்டது என்பதைத் தன்னுடைய சாட்சியத்தில் ஒப்புக்கொண்டார். அழிக்கப்பட்டதற்குக் காரணம் தெரிவிக்க முடியுமா என்று கமிஷன் அவரைக் கேட்டதற்கு அவர் சிறிது தயங்கினார். பிறகு முதலில் தான் தவறாக எழுதியதாகத் தெரிவித்தார். பின்னர் அதில் சுப்பிரமணியப் பிள்ளை என்று எழுதப்பட்டு இருப்பதற்கு நடுவே ஏதோ எழுதி அழிக்கப்பட்ட அறிகுறி இருக்கிறது. அதற்கு அடுத்த வரியில் புளு இங்கில் ஏதோ எழுதப்பட்டு அழிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டார். அவ்வாறு அழிக்கப்பட்டதற்கு அவரால் விளக்கம் எதையும் தர முடியவில்லை" என்று சொல்லியிருக்கிறார்.

இதை ஏன் குறிப்பாகப் படிக்கிறேன் என்றால், இந்த வகையில் இங்கே டேம்பரிங் ஆப் ரெக்கார்ட்ஸ் நடந்திருக்கிறது. இங்கே பல்வேறு துறையைச் சார்ந்தவர்களும், நிரம்ப அனுபவம் பெற்றவர்களும் இருக்கிறார்கள். ஒரு விசாரணைக் கமிஷன் இப்படிப்பட்ட சம்பவம் குறித்து விசாரிக்கும்போது, சாட்சியாக வருவதற்கு யாரும் முன்வரமாட்டார்கள். காவல் துறையினரும் அறங்காவல் துறையினரும் எப்படிப்பட்ட சாட்சியத்தைச் சொல்வார்கள் என்பதையும் நாம் எதிர்பார்க்க முடியும். அவர்களின் கீழ் செயல்படும் அதிகாரிகள் எப்படி தைரியமாகச் சாட்சி சொல்ல முடியும்? இருந்தாலும் நீதிபதி அவர்களைப் பார்த்து, "தைரியமாகச் சொல்லுங்கள், உண்மையைச் சொல்லுங்கள்" என்று சொல்லுவார். நானே அரசியல் காரணமாகப் பல நேரங்களில் குற்றவாளியாக்கப்பட்டு குற்றவாளிக் கூண்டில் நிற்கும் அனுபவத்தைப் பெற்றிருக்கிறேன். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் எப்படிப்பட்ட சாட்சிகளை அரசு தரப்பில் கொண்டு வருவார்கள் என்பதையும் பொது மக்களிலிருந்து காவல் துறையினரால் சாட்சியாகக் கொண்டு வரப்படுகிறவர்கள் எப்படியெல்லாம் நடந்துகொள்வார்கள் என்பதனையும் நன்றாகப் பார்த்துப் பழக்கப்பட்டவன். ஆகவே இந்தச் சம்பவத்திலும் காவல் துறையைச் சார்ந்தவர்களும் சரி, கோயில் துறையைச் சார்ந்தவர்களும் சரி, அவர்கள் எப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நீதிபதி பால் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார். "ஒரு டைப் ஆப் பிஹேவியர்" என்று கமிஷன் சொல்லியிருக்கிறது. எனவே அவர்கள் எல்லாம் நடந்துகொண்ட முறை, பதிவேடுகளில் செய்யப்பட்ட திருத்தங்கள்—டேம்ப்பரிங் ஆப் ரெக்கார்ட்ஸ்—இவைகளையெல்லாம் வைத்துப் பார்க்கிறபோது, இந்த விசாரணையே ஒரு இக்கட்டான சூழ்நிலையில்தான் நடந்திருக்கிறது என்பது புரியும்.



1982 பிப்ரவரி 18] [திரு. ப. மாணிக்கம்]

(பிற்பகல் 5-20)

பொதுமக்கள் மத்தியிலே ஆர்வம் இருந்தது என்பது உண்மை. சாட்சியங்களாக வரும்போது ஏற்படக்கூடிய சிக்கல்கள்பற்றிப் பார்க்க வேண்டும். இதிலேகூட சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக நேரிடையாகப் பார்த்த துப்புரவுத் தொழிலாளி ஆறுமுகத்தைப்பற்றி இப்போது தகவலே இல்லை. அவர் எங்கே இப்போது? அவர் இறந்துவிட்டார் என்று சொல்லுகிறார்கள். பொது வாழ்க்கையில் உள்ளவர்களுக்குத் தெரியும், ஒரு கொலையை மறைக்க இன்னுமொரு கொலை செய்வது வழக்கம். இப்போது அவர் என்ன ஆனார் என்று தெரியவில்லை. அவர் காணவில்லை. அதுவும் நடந்திருக்கிறது. ஆகவே சொல்லுகிறேன், இந்த விசாரணை பெருமையாகவும், பொறுப்போடும் நடந்திருக்கிறது. இதிலே உண்மை என்ன என்பதை முயற்சி செய்து கண்டுபிடித்திருக்கிறது. இதிலே உள்ள கோளாறு என்ன? அரசியல்வாதிகள் பல பேர் மனு கொடுத்திருக்கிறார்கள் என்றாலும், அவர்கள் எல்லாம் சம்மன் செய்தபோது வரவில்லை என்ற குறையை மட்டும் சொல்லியிருக்கிறார். இந்தப் பிரச்சினையிலே உண்மையைக் கண்டுபிடிப்பதற்காக நீதிபதி எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு, எல்லா அம்சங்களையும் பார்த்துச் சொல்லியிருக்கிறார். ஒட்டுமொத்தமாகப் பரிசீலித்து அவர் சொல்லியிருப்பது, வன்முறையால் கொலை நிகழ்ந்திருக்கிறது என்பது. இனி அப்படி நிகழாமல் இருப்பதற்கான ஆலோசனைகளையும் அவர் சொல்லியிருக்கிறார். அதை அரசு பரிசீலித்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கு மாறாக அவர் சிபார்சு செய்தது தவறு என்று அரசு கருதக்கூடாது. இந்த அறிக்கை வழக்கம்போல் தாமதமாக வந்திருக்கிறது. அதற்காக நான் குறைபட்டுக்கொள்ளவில்லை. பேரவையிலே கூட விவாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு இப்போது அறங்காவலர்கள் குழு ராஜினாமா செய்திருக்கிறது. இந்த நிலை முன்னாடியே ஏற்பட்டிருக்குமானால், இந்த அரசாங்கத்திற்கு மக்கள் மத்தியிலே நல்லெண்ணம் ஏற்பட்டிருக்கும். இந்த நிலை இப்போது வந்திருப்பதால், மக்கள் சந்தேகப்பட்டது ஊர்ஜிதமாகிறது. ராஜினாமா செய்தது சரி. "Better late than never" என்று ஒரு பழமொழியுண்டு. செய்யாமல் இருப்பதைவிட என்றைக்காவது ஒரு நாள் செய்வது நல்லது. இதை முன்பே செய்திருந்தால் அரசின் மீதுள்ள பழி நீங்கியிருக்கும்.

சாதாரணமாக எங்களைப் போன்றவர்கள், விவசாயக் கிளர்ச்சி, தொழிலாளர் கிளர்ச்சி செய்யப் போவோம். அப்படிப் போகும்போது, எதிரே சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் அல்லது எஸ்.பி. வந்தால் சத்தம் போட்டு ஆர்ப்பாட்டம் பண்ணும்போது, அதிகாரிகள் தங்களுடைய கடமையைச் செய்வதைத் தடுத்தோம் என்று சொல்லி கைது செய்து தண்டிப்பார்கள்.

இதுதான் நடந்துள்ள அனுபவம். அங்கே சரிபார்க்கிற அதிகாரி எந்தவித பாதுகாப்புமற்ற நிலையில் வன்முறையில் இறந்திருக்கிறார். அதிகாரிகள் மத்தியிலே இது ஒரு அச்சத்தை ஏற்படுத்தும். அதிகாரிகள் தங்களுடைய காரியங்களைச் செய்வதற்கு அஞ்சுவார்கள். குறிப்பாக வெரிஃபிகேஷன் ஆபிசர், இன்ஸ்பெக்ஷன் செய்கின்ற ஆபிசர்கள் போன்ற கடின பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியவர்கள், தங்களுடைய கடமையை நிறைவேற்றினால், யாருடைய பகைக்கு, தொல்லைக்கு ஆளாக நேருமோ என்று அஞ்சுகின்ற சூழ்நிலையை உருவாக்கும். ஒட்டுமொத்தத்தில் இது நிர்வாகத்தைப் பாதிக்கும். இது அப்படிப்பட்ட அச்ச நிலையை உண்டாக்கியிருக்கிறது. ஆகவே இந்தக் கமிஷனின் அறிக்கையை விரிவாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் காலம் கடந்துவிடவில்லை. அவர் அளித்துள்ள பல்வேறு சிபார்சுகளை நடைமுறைக்குக் கொண்டுவர முயல வேண்டும்.

ஒரு கொலையோடு மற்றொரு கொலையும், ஆறுமுகம் கொலையும் நடந்திருக்கிறது. காணாமல் போனார் என்றால், அரசாங்கத்தால் கண்டுபிடிக்க முடியாது என்று சொல்ல முடியாது. இதிலே பொது மக்களுடைய ஒத்துழைப்பையும் காவல் துறை பெற முடியும். ஆறுமுகம் உயிரோடு இருக்கிறாரா என்பதைக் கண்டுபிடிக்க முடியும். எனக்குக் கிடைத்த தகவல் எல்லாம் அவர் உயிரோடு இல்லை என்பதுதான். அது ஏன் ஏற்பட்டது ? ஆளைக் காணவில்லை என்று கமிஷன் கவலை தெரிவித்திருக்கிறது. எனவே ஒரு உண்மையை மறைக்க இத்தகைய தவறுகள் நடந்திருக்கின்றன என்பதை கமிஷன் நன்றாக எடுத்துக் கூறியிருக்கிறது. இத்தகைய குற்றங்களைச் செய்தவர் யார் என்று மாநில அரசு சரியான முறையிலே துப்புத் துலக்க வேண்டும். கமிஷனுடைய சிபார்சுகளை அரசாங்கம் ஏற்பதுதான் சரியானது. புலனாய்வு செய்து துப்புத் துலக்கக்கூடிய நம்முடைய மாநில அரசு திறமையானவர்களைக் கொண்டு நிச்சயமாக குற்றவாளிகளைக் கண்டு பிடித்து முறையாகத் தண்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்கத் தவறினால், எப்படியோ நாள் நடந்தோடும் என்றாலும், வரலாற்றிலும் அரசியலிலும் சொல்லுவதைப் போல ஒரு குற்றத்தை இன்றைக்கு மறைத்தாலும், மறந்துவிட்டாலும், குற்றம் என்பது குற்றம்தான். அது நின்றுகொண்டே இருக்கும். உண்மையை மூடி மறைத்தாலும், கொலை என்பது, வன்முறைக் கொலை என்பது துல்லியமாக வலுவாக நின்று கொண்டிருக்கும். ஆகவே கொலைக்குக் காரணமாக இருந்த குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் தயவு தாட்சண்யம் காட்டக்கூடாது. "டாம்பரிங் ஆஃப் ரிகார்ட்ஸ்" உட்பட நடந்திருக்கிறது. எனவே இது குறித்து தீவிரமாக விசாரிக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். நம்முடைய மாநிலத்திலே திறமையான அதிகாரிகள் பலர் இருக்கிறார்கள். இந்த அறிக்கையின்



சிபார்சு அதிகாரிகள் மத்தியிலே கூட குந்தகமாக அமைந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன். இருப்பினும் நிச்சயமாக விசாரிக்க வேண்டும். இரு அவைகளிலும் நடந்திருக்கக்கூடிய விவாதங்கள், பொதுமக்கள் இடத்திலே ஏற்பட்டிருக்கக் கூடிய கொந்தளிப்பு இவைகளையெல்லாம் கருத்திலே கொண்டு அரசு உறுதியாக நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளைக் கண்டுபிடித்தால், இந்த அரசுக்கு மக்களிடத்திலே உண்மையான பாராட்டு கிடைக்கும். இந்த அரசின் மீது மக்கள் நம்பிக்கையைச் செலுத்துவார்கள். அதற்கு மாறாக நம்முடைய அரசு ஏனோ, தானோ என்று நடந்தால், நிச்சயமாக அது அரசுக்கு எதிரான அவநம்பிக்கையை மக்களிடத்திலே வெகுவாக ஏற்படுத்தும் என்பதைக் கூறி, குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு தலைவர் அவர்களே, பால் கமிஷன் அறிக்கையின் மீதும், அதையொட்டி அரசு அளித்திருக்கின்ற மெமோரண்டத்தின் மீதும் இந்த அவை கருத்து தெரிவிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியிருக்கிறது.

பால் கமிஷனுடைய நீதிபதி அளித்திருக்கின்ற பல்வேறு விவரங்களுக்குள்ளே நான் போக விரும்பவில்லை. அதுபற்றி பேரவையில் உள்ள உறுப்பினர்களும் இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர்களும் மிகத் தெளிவாகப் பேசியிருக்கிறார்கள். ஆனால் இந்த விசாரணைக் கமிஷன் எந்த நோக்கத்தில், எந்தப் பின்னணியில் அமைக்கப்பட்டது ? சில தவறான நடைமுறைகளுக்கு, ஒருவேளை நடந்திருந்தால், இடம் கொடுத்துவிடக் கூடாது என்பதற்கும் நல்ல வேளையாக நடக்காமல் இருந்திருந்தால் அதைப்போல நடக்கவில்லை என்று தெளிவாக அரசு தரப்பிலே தெளிவுபடுத்துவதற்கும் வாய்ப்பாக, துணையாக இருக்கும் என்ற அளவிலே விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டது. எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. சுப்பிரமணியப் பிள்ளையின் மரணம் சாவா அல்லது தற்கொலையா அல்லது கொலையா என்ற விவரங்களுக்குள் நான் போக விரும்பவில்லை. ஆனால் தற்கொலை, சாவு, அல்லது கொலை என்று பல்வேறு கருத்துக்கள் மக்கள் மத்தியிலே இருந்த போது, அது வெறும் கொலை என்று மட்டும் மக்கள் ஆத்திரம் அடையவில்லை. மக்களுடைய பெரும் நம்பிக்கைக்குரிய ஆலயம் எப்படி நிர்வகிக்கப் படுகிறது என்பதைக் கண்டும், எவ்வளவு சாதாரணமாக நிர்வகிக்கிறார்கள் என்பதைக் கண்டும், அதை இந்தச் சாவோடு இணைத்து—அதை தற்கொலை என்பவரும் சரி, கொலை என்பவரும் சரி—இரண்டு சாராரும் கோயில் உண்டியலை உடைத்ததிலிருந்து இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்ற உணர்வு கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே இருக்கின்ற,

[திரு. க. இராமமூர்த்தி] [1982 பிப்ரவரி 18

(பிற்பகல் 5-30)

இன்னமும் சொல்லப்போனால், இந்தியாவினுடைய பல பகுதிகளிலே இருக்கின்ற இந்து மதத்திலே நம்பிக்கையுள்ளவர்கள், இந்து மத தெய்வங்கள் மீது நம்பிக்கையுள்ளவர்கள், பல ஆயிரக்கணக்கான மைல்கள் கடந்து வந்து திருச்செந்தூர் முருகனை தரிசித்து, மிகுந்த நம்பிக்கையினால் அவர்கள் உடலிலே அணிந்திருக்கின்ற ஆபரணங்களைக் காணிக்கையாகச் செலுத்துகிறார்கள். பணத்தைக் காணிக்கையாகச் செலுத்துகிறார்கள். அந்தக் காணிக்கைகளை அடைத்து வைத்திருக்கின்ற உண்டியலை உடைத்திருக்கிறார்கள். இதன் காரணமாக கொலை அல்லது தற்கொலை நடந்திருக்கிறது என்ற உணர்வை யாரும் மறந்துவிட முடியாது. அதுவே இந்தத் துறைக்கு நல்லதல்ல. உண்டியல் திறக்கப்படாமல் நடந்திருந்தால், அது வேறு மாதிரி இருக்கும். ஒன்று தெளிவாகத் தெரிகிறது. உண்டியல் உடைப்பதிலே இது நடந்திருக்கிறது. அது கொலையாக இருந்தாலும் சரி, தற்கொலையாக இருந்தாலும் சரி, அது உண்டியல் உடைப்பதில் நடந்திருக்கிறது. அந்த உண்டியலை உடைப்பதற்கு அதிகாரம் பெற்றவர் யாரோ அவர்கள் அதற்குத் துணை இருந்திருக்கிறார்கள். அந்த அரசாங்க அதிகாரி இறந்திருக்கிறார். அவர் இறந்திருப்பதன் காரணம் தற்கொலையாக இருக்கும் என்றால், இந்தத் துறை எப்படிப்பட்ட அதிகாரிகளை வைத்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அதுவும் கொலையாக முடிந்திருக்கின்றது என்றால், இந்தத் துறையில் எப்படிப்பட்டவர்களை அறங்காவலர்களாக வைத்து நடத்துகிறது என்பதை நாம் உணர வேண்டும். எதுவாக இருந்தபோதிலும் இந்தத் துறை எவ்வளவு சந்தேகத்திற்கு உரியதாக மாற்றப்பட்டுவிட்டது என்பதைப் பார்க்க வேண்டும். நான் இந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் மீதோ அல்லது அரசாங்கத்தின் மீதோ குற்றம் சாட்ட இப்போது வரவில்லை. எடுத்திருக்கின்ற நடவடிக்கைகள் எப்படிப்பட்ட சூழ்நிலையைத் தமிழகத்திலே உருவாக்கியிருக்கிறது என்றால், இங்கே இருக்கின்ற இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் தங்களுடைய ஆலயங்கள் பாதுகாக்கப்படவில்லையே என்று நினைக்கிறார்கள். லட்சோபலட்சம், கோடிக்கணக்கான இந்துக்கள் நம்பிக்கை வைத்திருக்கின்றவர்கள் தங்களுடைய ஆலயங்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை இருக்கிறதே என்று எண்ணுகிறார்கள். நாத்திக வாதம் என்பது வேறு. நான் அதை வரவேற்கிறேன். அவர்களுக்கு மதிப்பு அளிக்கிறேன். ஏனென்றால் வெளிப்படையாக அவர்களுடைய கருத்தை தெளிவாகச் சொல்கிறார்கள். சமுதாயத்தை எதிர்த்து, எதிர் நீச்சல் போட்டுச் சொல்கின்றார்கள். பழமையான நம்பிக்கையை உடைத்தெறிந்து சொல்கிறார்கள். ஆனால் ஆண்டவனிடம் இந்துக்கள் நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள். அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கின்ற



1982 பிப்ரவரி 18] [திரு. க. இராமமூர்த்தி]

அந்த ஆலயங்களில் அவர்கள் செலுத்துகின்ற காணிக்கைகள் ஆண்டவனின்
திருப்பணிக்குத்தான் போய்ச் சேர்கிறது என்று எண்ணுகிறார்கள்.
இப்போது அவர்கள் நினைப்பது, நம்முடைய நம்பிக்கைக்கு உரிய முறையில்
ஆலயச் சொத்தைக் காக்கமாட்டார்கள். அதற்குப் பதிலாக, அதைக்
கொள்ளையடிப்பதற்கு யாரையும் கொலை செய்வார்கள் என்ற நிலைமை உரு
வாகியிருக்கிறது என்று தெரிகிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் உருவாக
லாமா? இதற்கு ஒரு துறையா என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே
தான் திருச்செந்தூர் பகுதியிலே உள்ள மக்கள் மத்தியிலே கொதிப்பு எழுந்து
அதன் காரணமாக பல தகவல்கள் வந்து, நடவடிக்கை எடுக்கப்பட்டது.
அரசாங்கத்தில் இருப்பவர்கள் நேரடியாகச் செயல்பட முடியாது. அவர்கள்
அதிகாரிகளை நம்பித்தான் ஆக வேண்டும். அவர்களை நம்பித்தான் செயல்
பட முடியும். ஆகவே அமைச்சர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு
வந்திருக்கின்ற தகவலை வைத்துச் செயல்படுகிறார்கள். திருச்செந்தூரில்
இருப்பவர்கள் அது தற்கொலையா அல்லது கொலையா என்று கண்டுபிடிப்ப
தற்காக கலெக்டரிடம் வந்து தகவல் கொடுத்திருக்கிறார்கள். இந்த அரசின்
மீது வேண்டுமென்றே பழி, குற்றச்சாட்டு என்ற முறையிலே தெரிவித்திருக்கி
றார்கள் என்று அந்த நேரத்திலே சொல்லியிருந்தால், அதில் வேண்டுமானாலும்
கருத்து மாறுபாடு இருக்கலாம். ஒருவேளை அதிகாரிகள் சொன்னதை நம்பி
யிருந்தால், நான் அமைச்சர் மீது குற்றம் சொல்லமாட்டேன். அதை
அடுத்து என்ன நடைபெறுகிறது? அந்தப் பகுதியிலே உள்ள பெருமளவு
மக்கள், எல்லாக் கட்சியினரையும் சேர்ந்தவர்கள், அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத்தினர் உட்பட சொல்லியிருக்கிறார்கள். அத்தனை பேரும்
இந்துக்கள். அவர்கள் ஆலயத்தில் அப்படி நடந்திருக்கிறது. அதன் காரண
மாக அவர்கள் போராட்டம் செய்கிறார்கள். ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்.
கடை அடைப்பு செய்கிறார்கள். ஊர்வலமாகப் போகிறார்கள். அங்கே
சென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்க்கிறார். "நிச்சயமாக
நான் விசாரணைக் கமிஷன் வைக்கிறேன். அதைப்பற்றி விசாரித்து விவரங்
களை அறிந்து நடவடிக்கை எடுக்கிறேன்" என்று சொல்கின்றார்கள். அதற்கு
என்ன பொருள்? எந்த அடிப்படையிலே சொல்லியிருக்கிறார்கள்? என்னைப்
பொறுத்தவரையில், சொல்கிறேன். மிகத் தெளிவாகவே சொன்னதாக
எனக்கு நினைவு இருக்கிறது. அந்த நேரத்திலேகூட நான் சொன்னேன்.
கட்சியின் கருத்தாகச் சொல்லவில்லை, என் சொந்தக் கருத்தாகச் சொன்
னேன். இருந்தால் நீதிபதி விசாரிப்பது என்று வந்தால், அவர் பொறுப்பை
எடுத்துக்கொண்டால், [illegible] ஆலயத்திற்குள் பல பகுதிகளுக்குப் போக
முடியாது, அந்தப் ப[illegible]ழக்கங்களை முழுமையாகத் தெரிந்துகொள்ள
முடியாத நிலைமைகள் [illegible]கும், அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு
விசாரணைக் கமிஷனை [illegible]ப்பாது பூர்ணத்துவம் பெற முடியாது என்பதை

இந்த மன்றத்திலேயே சொன்னேன். எனக்கு நினைவு இருக்கிறது. அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அழுத்தந்திருத்தமாகவே இந்த அவையிலே சொன்னார்கள். "நம்பிக்கையோடு இருங்கள். நிச்சயமாக இந்த தீர்ப்பு முழுமையாக இருக்கும். நீதிபதி முழுமையாக விசாரிப்பதற்கு ஒரு உத்தரவாதத்தைத் தருகிறோம். எந்த விவரமும் விட்டுப் போகாது. முழுமையான தீர்ப்பாக அமையும்" என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இதே அவையிலேயே சொல்லியிருக்கிறார்கள். அவருடைய பதிலாகவே சொன்னார்கள். நான் கேட்கிறேன். இன்றைக்கு அந்த நீதிபதி எவ்வளவு வெட்கித் தலை குனிவார்? ஒரு அரசாங்கம் ஒரு பொறுப்பைக் கொடுத்து அந்தப் பொறுப்பின் அடிப்படையில் அவர் சில சிபாரிசுகளைச் செய்கின்றார்கள். விசாரணைக் கமிஷன் நீதிமன்றம் அல்ல என்று சொல்லலாம். நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். விசாரணை கமிஷன் பற்றிய கருத்து என்ன?

"Its findings are, however of great importance to the appropriate Government in order to enable it to make up its mind as to what legislative or administrative measure it should adopt to eradicate the evil found by the Commission."

விசாரணைக் கமிஷன் தன்னுடைய விசாரணையின் அடிப்படையிலே கண்டுபிடிக்கின்ற தவறுகளைக் களைவதற்கு அரசாங்கம் சட்டபூர்வமாகவும் தன்னுடைய நிர்வாக இயந்திரத்தின் மூலமாகவும் முறையாக நடவடிக்கை எடுக்கும் என்கின்ற அடிப்படையிலே இது மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்றுதான் இந்த விசாரணைக் கமிஷன் அறிக்கையைப்பற்றி, இந்த விசாரணைக் கமிஷனுக்கு இருக்கின்ற மரியாதையைப்பற்றித் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இப்படி இராமகிருஷ்ண டால்மியா கேசில் சுப்ரீம் கோர்ட்டில், இந்தியாவினுடைய உச்ச நீதி மன்றம் கருத்துத் தெரிவித்திருக்கிறது. இன்னொன்றையும் சொல்கிறேன். திரு. வி. வி. ஜகந்நாத ராவ் வெர்சஸ் ஸ்டேட் ஆஃப் ஒரிசா கேசில் நீதிபதி வெங்கட்டராமையர் சொல்கின்றார்கள் :

"The approach of most of the Commissions to the task cannot be better summed up than in the inimitable words of T. N. Venkatarama Iyer in the concluding paragraph of his report".

என்று அதைப் பற்றி கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அவர் சொல்கிறார்.

"It should clearly be remembered that this is a fact-finding tribunal and has nothing to do with politics."



எந்த விசாரணைக் கமிஷனும் அரசியலுக்கு அப்பாற்பட்டது. அது அரசியலுக்கு அப்பாற்பட்டது என்பது மட்டுமல்ல, அது இருக்கின்ற உண்மைகளை கண்டுபிடிப்பதற்காக, அறிவதற்காக, உள்ள ஒரு பேக்ட் ஃபைண்டிங் டிரிப்யூனல். அதை அவர் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

"It is merely to decide whether on the material placed before it, the charges have been established and it cannot affect its conclusions who the party is or what his political affiliations are."

இங்கே அரசாங்கம் ஒரு நோக்கத்தோடு தன் அறிக்கையை இணைத்துக் கொடுத்திருக்கிறது. ஒரு மெமோராண்டம் கொடுத்திருக்கிறது. விசாரணையில் விசாரித்துச் சொல்ல வேண்டும் என்று இங்கே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

விசாரணைக் கமிஷன் எந்த அடிப்படையிலே விசாரணை செய்யும்?

" . . . . to decide whether on the material placed before it . . . ."
political affiliations are.

என்பதுதான்.

அவர்களுக்கு முன்னாலே கேட்கப்படுகின்ற சாட்சியங்கள் வைக்கப்படுகின்றன. அந்த சாட்சியங்களின் அடிப்படையிலேதான் விசாரணைக் கமிஷன் விசாரணை நடத்த முடியும். நான் இப்போது கேட்கிறேன். இன்னொன்றை இதிலே நான் சொல்கிறேன்.

நீதிபதி திரு. வெங்கட்ராம ஐயர் இதை மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

"It cannot affect its conclusions who the party is or what his political affiliations are".

என்று குறிப்பிட்டு,

"That has been my approach to this enquiry and it is from this angle that I have recorded my findings in the fear of God or without fear of man".

என்று முடிக்கிறார்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 5-40)

ஆகவே ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்துவிட்டு, நீ ஏன் அவரை விசாரிக்கவில்லை, இவரை விசாரிக்கவில்லை என்று அரசாங்கம் அந்த நீதிபதிக்கு மேலே ஒரு சுப்ரீம் கோர்ட் போல உட்கார்ந்துகொண்டு, விமர்சனம் செய்வது கேலிக்கூத்து. காரணம் அரசாங்கத்திற்கு ஒரு

கடமை இருக்கிறது. எந்தெந்த சாட்சியங்களை விசாரிக்க வேண்டு மென்று அரசாங்கம் கருதுகிறதோ, அவர்களுக்குக் கட்டளை இட்டிருக்க வேண்டும். நீ போய் விவரங்களைச் சொல் என்று அவர்களிடம் சொல்லி யிருக்க வேண்டும். அரசாங்கத் தரப்பிலே சில சாட்சியங்களை ஏன் விசாரிக்க வில்லை என்று மெமோராண்டத்தில் இருக்கிறது. திருநெல்வேலி கலெக்டரை ஏன் விசாரிக்கவில்லை என்பதுபற்றி விமர்சனம் செய்திருக்கிறார்கள். அரசு கலெக்டரை ஏன் சாட்சியம் சொல்ல அனுமதிக்கவில்லை, கட்டளையிட வில்லை? "உங்களுடைய தகவல்களை வைத்துத்தான் இந்த அவைக்குச் சொன்னோம், இந்த நாட்டுக்குச் சொன்னோம், நீதானே சொன்னாய் தற் கொலை என்று. பால் கமிஷன் விசாரணையின்போது சாட்சி சொல்ல வேண்டும்" என்று கலெக்டருக்குச் சொல்லியிருக்க வேண்டாமா? அது தானே அரசின் கடமை. அதை விட்டுவிட்டு, நீதிபதியைப் பார்த்து, 'நீ ஏன் விசாரிக்கவில்லை?' என்று கேட்கிறார்கள். அது நீதிமன்றமில்லையே, சாட்சியங்களைக் கட்டாயப்படுத்தி அழைக்க முடியாது. சாட்சியம் சொல்ல யார் யார் வருகிறார்களோ அவர்களெல்லாம் வரலாமென்று ஒரு மாதம், இரண்டு மாதங்களுக்கு முன்பே விளம்பரம் செய்கிறார்கள். அந்த விளம்பரத்திற்குப் பிறகு யார் வேண்டுமானாலும் வரலாம். அதில் கட்டுப்பாடு இடையாது. அதற்குப் பிறகு அவர்கள் தரும் அஃபிடவிட்டைப் பார்த்து, நீதிபதி முடிவு செய்கிறார். கலெக்டர் அஃபிடவிட் போட்டு நீதிபதி விசாரிக்காமல் இருந் தால், என்னாலே அரசின் வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியும். கலெக்டர் போகாதது ஏன்? விசாரணைக் கமிஷன் முன்னாலே சென்று, அவருக்குத் தெரிந்ததைச் சொல்லியிருக்க வேண்டாமா? அவர்தான் முதன்முதலாக தற்கொலை என்று சொல்கிறார், அரசாங்கத்திற்குத் தந்த அந்தத் தகவலை கமிஷன் முன் கொடுக்காமல் இருந்தது ஏன்? அல்லது வேறொரு வார்த்தை யில் சொல்வதானால், அந்தத் தகவல்களை கமிஷனிடம் மறைத்தது ஏன்? அவர் தன்னை கிராஸ்-எக்சாமினேஷனுக்கு ஆட்படுத்திக்கொள்ளாதது ஏன்?' அந்த ஆவணம்கூட வரவில்லையே. அரசாங்கத்திற்கு தற்கொலை என்று தெரிவித்திருக்கிறார். அந்த ரெக்கார்ட் போக வேண்டாமா? அதை பால் அவர்களிடம் கொடுத்திருக்க வேண்டாமா? இந்தத் தகவல் வந்திருக்கிற தென்று சொல்லியிருக்க வேண்டாமா? மாவட்ட ஆட்சித் தலைவர் அப்படி தற்கொலையென்று தகவல் கொடுக்கவில்லை என்ற தகவல் எனக்கு வந்திருக் கிறது. அவர் இந்தத் தகவலைக் கொடுக்கவில்லை. அதன் காரணமாகத்தான் கலெக்டருக்கு ஒரு சங்கடம். தற்கொலை என்று அவர் கூறியதாகத் தகவல் வந்துவிட்டன. நீதிமன்றத்திற்குப் போனால், நான் தான் கடிதம் கொடுத்தேன் என்று சொல்ல வேண்டும்; நான் தான் 'தற்கொலை' என்று அரசாங்கத் திற்குக் கடிதம் எழுதினேன் என்று சொல்ல வேண்டும். அப்போது அந்தக்





கடிதம் விசாரணைக்கு ஆட்படுகிறது. ஆகவேதான் தன்னை அவர் விசார ணைக்கு ஆட்படுத்திக்கொள்ளவில்லை. கலெக்டராக ஆட்படுத்திக் கொள்ள வில்லை. எப்போது அவர் தன்னை ஆட்படுத்திக்கொள்ளவில்லையோ, அரசு அவருக்குக் கட்டளை இட்டிருக்க வேண்டும். அரசுத் தரப்பிலே சொல்லும் வேண்டிய சாட்சி. வழக்கு மன்றத்திலே அரசாங்க வக்கீல் ஆஜராகியிருக் கிறார். அரசாங்கத் தரப்பிலே அவர் வாதாடியிருக்கிறார். அரசாங்க வழக் கறிஞர் அரசாங்கத்திற்குத் தெரிவித்து, மாவட்ட ஆட்சித் தலைவரை அழைத்து வாருங்கள், விசாரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்க வேண்டாமா? ஏன் அவர் தடுக்கப்பட்டார்? மறைக்கப்பட்டார்? அல்லது நீதிபதி முன்னாலே கொண்டு போகப்படவில்லை? அவர் ஏன் தன்னை விசாரணைக்கு ஆட்படுத் திக்கொள்ளவில்லை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அஃதோடு, விசாரணைக் கமிஷன் அறிக்கையோடு, தலைமைச் செயலாளர் கொடுத்துள்ள மெமோராண்டத்தில் ஒன்றை மட்டும் படிக்க விரும்புகிறேன்.

பக்கம் 2-ல், "இறந்த சுப்பிரமணியப் பிள்ளையின் உடல் கீழே இறக்கிக் கொண்டு வரப்பட்டு சாப்பாட்டுக் கூடத்தில் வைக்கப்பட்டது என்றும், 'அ' தரப்பு கூறும் கூற்றானது உண்மையானதாகவே இருக்க முடியாது என்று கமிஷன் கருதுகிறது. அதற்கு மாறாக, சரி பார்ப்பு அலுவலர் கோவிலுக்கு வந்து சேருவதற்கு முன்பே உண்டியல்கள் திறக்கப்பட்டன. அதனால் சரி பார்ப்பு அலுவலர் எதிர்ப்பு தெரிவித்து, எண்ணுவதில் தான் பங்கெடுத்துக் கொள்ளப் போவதில்லை என்றும் அதிகாரிகளிடத்தில் இதுபற்றி அறிக்கை செய்யப் போவதாகவும் கூறி ஆய்வகத்திற்குச் சென்றுவிட்டார். . . . அவர் துவாலை குழாயில் தொங்கவிடப்பட்டார் என்று சந்தேகிப்பதற்குக் காரணங்கள் உள்ளன என்று கமிஷன் கருதுகிறது . . . அவர் சாகடிக்கப் பட்ட பிறகு, குழாயில் தொங்கவிடப்பட்டார் என்று நம்புவதற்குக் காரணங்கள் இருக்கின்றன. மரணம் விளைவிக்கக்கூடிய வன்முறையின் காரணமாக சரி பார்ப்பு அலுவலர் தன் மரணத்தைச் சந்தித்தார் என்று நம்பு வதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன" என்று கமிஷன் அறிக்கை தெரி விக்கிறது. பேக்ட் பைன்டிங் கமிஷன் ஒன்றைச் சொல்லுகிறது. யார் கொலை செய்தார்கள் என்பதல்ல. "அது கொலை என்று முழுமையாக என் முன்னால் வைக்கப்பட்ட சாட்சியங்களிலிருந்து நம்புகிறேன்." கமிஷன் தீர்ப்பு கொடுக்க முடியாது. சிபாரிசுதான் செய்ய முடியும். அதைச் செய்கிறார்.

(பிற்பகல் 5-50)

ஐந்தாம் பாராவில், மீண்டும் கமிஷன் பரிந்துரை செய்கிறது. "தேவஸ் தான அறங்காவலர் குழுவைத் தற்காலிகமாக விலக்கி வைத்ததற்குப் பிறகு, குற்றப அல்லது நீக்கியதற்குப் பிறகு, அல்லது கலைத்ததற்குப் பிறகு,

[திரு. க. இராமமூர்த்தி] [1982 பிப்ரவரி 18

புலனாய்வுத் துறையின் குற்றப் பிரிவு போன்றதொரு தனிப்பட்ட காவல் புலனாய்வு அமைப்பினால் முழு அளவில் தீரப் புலனாய்வு செய்யப்பட வேண்டு மென்றும் அத்தகைய புலனாய்வின் விளைவுக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்றும் நீதிபதி பால் மிகத் தெளிவாகச் சொல்கிறார். குற்றப் புலனாய்வுத் துறை இதுபற்றி விசாரணை செய்ய வேண்டும், முழு விவரங் களையும் அவர்களிடம் கொடுத்து, விசாரிக்க வேண்டும் என்று சொல்லு கிறார். இதிலே என்ன தவறு? அரசாங்கம் நியமித்த நீதிபதி சொல்கிறார். சாட்சியங்களிலேயிருந்து இது கொலையாக இருக்குமென்று சந்தேகிக்கிறேன், குற்றப் புலனாய்வுத் துறை இதுபற்றி விசாரிக்கட்டும் என்று சொல்கிறார். அரசாங்கத்திற்கு என்ன அவசரம்? நான் அதற்குத்தான் முன்னாலேயே கேட்டேன். எட்டு பக்கங்கள் ஏன்? காவல் துறை சம்பந்தப்படாமல் 8 பக்க அறிக்கை கொடுத்திருக்கிறார்களா? அரசாங்கக் காவல் துறை பொதுத் துறை ஆகியவை பரிசீலித்து இதனைக் கொடுத்திருந்தால், தலைவரவர்களே, உங்களைக் கேட்கிறேன், உங்கள் மூலமாக இந்த அவையைக் கேட்கிறேன். தலைமைச் செயலாளர் தீர்ப்பு கொடுத்த பிறகு, புலனாய்வுத் துறை அதற்கு மாறாக விசாரணை நடத்தி அவர்கள் அந்தப் பதவியில் இருப்பார்களா? அது குற்றப் புலனாய்வுத் துறை நடத்தப் போகிற விசாரணையா? மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மூன்று நாட்களாகத் திரும்பத் திரும்பச் சொன்னார்கள், சட்டம் ஒழுங்கு பற்றி. பல்வேறு சங்கடங்களைப்பற்றிச் சொன்னார்கள். நான் ஒப்புக்கொள்கிறேன். சில இடங்களில் தவறுகள் நடக்கின்றன. அப்படி நடக்கிறபோது, "நம்பிக்கையோடு இருங்கள், இந்த ஆட்சி உங்களைக் கொண்டது, நம்முடைய ஆட்சி. ஆகவே நீங்கள் சொல்லுங்கள், நான் நடவடிக்கை எடுக்கிறேன், நான் எடுக்கவில்லை என்றால், அதற்குப் பிறகு மற்றதைப் பாருங்கள்" என்றார். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இப்போது அவையில் இல்லை. இங்கே இருந்திருந்தால், கேட்டிருக்க முடியும். பால் கமிஷன் அறிக்கையின் பேரில் அரசாங்கம் இதற்குள்ளாகவே ஒரு தீர்ப்பு அளித்துவிட்டது. அதற்காகத்தான் திரும்பத் திரும்பக் கேட்டேன். தலைமைச் செயலாளர் திரு. திரவியம் அவர்கள் அறிக்கை அளித்திருக்கிறார் கள். அரசாங்கத் தரப்பிலே அவர் கொடுக்கிறார். இது ஒரு முடிவென்று சொல்லுகிறார்கள். அதிலே, அறங்காவலர் குழுவை விலக்குவது, நீக்குவது அல்லது கலைப்பது என்பது கமிஷனுக்குத் தரப்பட்ட விசாரணை வரம்பு களுக்குள் அடங்கவில்லை. என்றாலும், கமிஷனின் முடிவுகளின் அடிப்படை யில் இல்லாமல் வேறு தனித்த சான்றுகளைக் கொண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின்கீழ் சம்பந்தப்பட்ட துறை தனியாகப் பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இது தவிர, இதில் வேறு என்ன பைண்டிங் (finding) இருக்கிறது? இந்தக் கமிஷனில் கொடுக்கப்பட்ட



1982 பிப்ரவரி. 18] [திரு. க. இராமமூர்த்தி]

சாட்சியங்களைப்பற்றி அரசு விமர்சனம் செய்திருப்பது நியாயம்தானா? சாட்சியங்களை நாளையதினம் புலனாய்வுத் துறை விசாரணை செய்யும்போது, அரசு முடிவுக்கு மாறாக விசாரித்தால், அல்லது விசாரணை செய்தால், அல்லது முடிவைத் தெரிவித்தால், அவர்களுடைய வேலை பறி போகாமல் இருக்க முடியுமா? அவர்களுக்கு மேற்கொண்டு வேலை உயர்வு போன்றவை கிடைக் குமா? தீர்ப்பையும் சொல்லிவிட்டு, புலனாய்வுத் துறையின் விசாரணைக்கு என்று அனுப்புவதும் நியாயம்தானா? வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் கூட இப்படி இல்லையே. வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் நடந்த சில சம்பவங்களை இங்கே நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டி னார்கள். அதைப்போல் இப்போது நடக்கிறதா என்றும் கேட்டார்கள். நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்படிக் கேட்டுவிட்டு போனார். ஆனால் இன்றைக்கு தீர்ப்பையும் சொல்லிவிட்டு புலன் விசாரணைக்கு அனுப்பு கிறோம் என்று இந்த அரசு சொன்னால், இதற்குப் பெயர் தான் நீதியா, சட்டமா, ஆட்சியா என்று நான் கேட்க விரும்புகிறேன். எட்டாவது பக்கத் தில் இதைச் சொல்லியிருக்கிறார்கள். மூன்றாம் பக்கம் ஆறாவது பாராவில் இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். "தற்போது இருக்கின்ற நிலையின்படி பார்த்தால், அறங்காவலர்களைப் பதவியிலிருந்து நீக்குவது என்பது இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் 53-வது பிரிவின்படிதான் அதில் கூறப்பட்டுள்ள காரணங்களில் ஏதேனும் ஒன்றுக்காக மட்டுமே, செய்ய முடியும் என்றும் கமிஷனின் அறிக்கையே தெளிவாக்குகிறது" என்று அதில் சொல்லியிருக்கிறார்கள். இதில் எவ்வளவு தூரம் ஏமாந்திருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, ஊரில் இருப்பவர்கள் எவ்வளவு ஏமாளிகள் என்று ஆட்சி யிலிருப்பவர்கள் எடைபோட்டிருக்கிறார்கள் என்பதும் இதிலிருந்து தெரிகிறது. அறங்காவலர்களுடைய பணியில் ஏதேனும் குறை இருந்தால், அவர்களை நீக்க முடியும் என்று நீதிபதி தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். இவர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யவில்லையென்று நீதிபதி அளித்த தீர்ப்பு வெளியே வந்திருக்கிறதா இல்லையா? டாக்டர் பாலகிருஷ்ணன் அறங்காவலர் குழுவின் தலைவர். ஓமியோபதி டாக்டர் என்று சொல்லுகிறார்கள். அவருடைய பர்சனல் லைப்-க்குள் போக நான் விரும்பவில்லை. அவர் தன்னுடைய பணி யைச் சரிவரச் செய்திருக்கிறாரா என்றால், இல்லை. அதுமட்டுமல்ல. அவ ரிடம் ஒப்படைக்கப்பட்ட பணியைச் சரியாகச் செய்யவில்லையென்று நீதி மன்றத்திலேயே ஒப்புக்கொண்டிருக்கிறார். நிர்வாக அதிகாரி ஒப்புக்கொண் டிருக்கிறார். சாவியை நண்பர் மூலம் கொடுத்து அனுப்பியிருக்கிறார். அவர் ஒரு முறை கூட நேரில் வந்ததில்லை. உண்டியல் திறக்கப்படும்போது, அவர் வந்ததில்லை. கடமையைச் செய்யாத ஒருவரை அறங்காவலர் பதவியிலிருந்து நீக்க முடியாது என்று தீர்ப்பு எழுதுவது என்ன நியாயம்? 'சீஃப்

[திரு. க. இராமமூர்த்தி] [1982 பிப்ரவரி 18

செக்கரட்டரி 'யால் எழுதப்பட்டு அமைச்சர் பொறுப்பேற்று இங்கே ரிப்போர்ட்
வைக்கப்பட்டிருக்கிறதே. இதற்கு என்ன அர்த்தம் ? சட்டத்திலே அவரைப்
பதவியிலிருந்து நீக்க வழிமுறையே இல்லையா ? அல்லது அதற்கான சட்டம்
ஆட்சியில் இருக்கிறவர்களுக்குத் தெரியவில்லையா ? கமிஷனின் முழு அறிக்
கையைப் படித்தாலே தெரியுமே எந்த அளவுக்கு அதில் சொல்லப்பட்டிருக்கிறது
என்பது. கமிஷனின் அறிக்கைக்குப் பிறகு, எந்த அளவுக்கு அவர் தன்னுடைய
கடமையிலிருந்து தவறியிருக்கிறார் என்று தெரிந்த பிறகாவது, அவரைப்
பதவியிலிருந்து நீக்கி விட்டுக்குப் போகச் சொல்லியிருக்க வேண்டாமா ? ஒரு
வேளை கமிஷன் அமைக்கப்பட்ட பிறகு அவரை வீட்டுக்கு அனுப்புவது என்
பது விசாரணைக்குக் குந்தகம் விளைவிக்கலாம் என்று அரசு கருதியிருக்கலாம்.
அதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அறிக்கையைப் பார்த்த பிறகாவது,
அவர் தன்னுடைய கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்று நிரூபிக்கப்
பட்ட பிறகாவது அந்த டாக்டர் பாலகிருஷ்ணனைப் பதவியிலிருந்து நீக்கி
யிருக்க வேண்டாமா ? துறையின் மூலம் சரியான நடவடிக்கை உடனடியாக
எடுத்திருக்க வேண்டாமா ? உண்டியல் உடைக்கப்பட்டபோது, தலைவர் என்ற
முறையில் அவர் அங்கு இருந்திருந்தால்—அரசாங்கம் சொல்வது மாதிரி அவர்
உத்தமராக இருப்பதால்—நியாயவாதியாக இருப்பதால்—தர்மத்திற்கும்
நியாயத்திற்கும் கட்டுப்பட்டு நடப்பவராக இருப்பதால், ஒருவேளை இந்தத்
திருட்டு நடந்திருக்குமா ? திருட்டு என்று நான் குறிப்பிடுவது அரசு சொல்லு
கின்ற திருட்டு அல்லது அரசு சார்பாக சாட்சி சொன்னவர்களால் சொல்லப்
பட்ட திருட்டைத்தான். "சிவன் சொத்து குல நாசம்" என்று சொல்லு
வார்கள். இந்தக் கோயில் சொத்துக்களைக் கொள்ளையடிப்பவர்கள் யாராக
இருந்தாலும், அது பாலகிருஷ்ணனாக இருந்தாலும் சரி அல்லது வேறு யாராக
இருந்தாலும் சரி, அதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. கொள்ளையடிக்
காமல் இருக்க தகுந்த வழிவகை இருக்க வேண்டாமா ? உண்டியல் திறக்கும்
போது, தலைவர் என்ற முறையில் அவர் ஏன் அங்கு இல்லை ? இது சம்பந்த
மாக சம்பந்தப்பட்ட துறை இதுவரை அவருக்கு ஒரு நோட்டீஸ் கூட அனுப்ப
வில்லையே, அது ஏன் ? கடமையைச் செய்யாமல் தவறிய அவர்மீது
நடவடிக்கை இல்லையே, அது ஏன் ? இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
மடங்களையெல்லாம், அவற்றின் சொத்துக்களை எல்லாம் எடுக்கப் போகிறோம்,
ஆலயங்களின் நிர்வாகத்தை எடுக்கப் போகிறோம் என்றெல்லாம் பேசுகிறா
ர்களே. ஆனால் அறங்காவலர் குழுவினர் மூலம் நிர்வாகம் எவ்வளவு சீர்கேடு
அடைந்திருக்கிறது. எவ்வளவு பெரிய கொடுமை நடந்திருக்கிறது. எத்தனை
லட்சோப லட்சம் மக்களுடைய நம்பிக்கையின் அடையாளமாக உண்டியலில்
பணமாக, தாலியாக, தங்கமாக செல்வங்கள் குவிந்துகொண்டிருக்கின்றன.
உண்டியல் திறக்கப்படும்போது, அருகிலே இருக்க முடியாத ஒருவரை ஏன்



1982 பிப்ரவரி 18] [திரு. க. இராமமூர்த்தி]

தலைவராக போட்டிருக்கிறார்கள் ? என்ன தைரியத்தில் அவர் அப்படிச் செய்
தார் ? கடமையைச் செய்யத் தவறிய ஒருவரைத் தட்டிக் கேட்க தைரியமற்ற
ஒரு துறையையும் வைத்துக்கொண்டு நிர்வாகம் செய்கிறார்களே. இது அறங்
காவலர் துறை அல்ல, அறங் கொல்வோர்களுடைய துறையாக இன்றையதினம்
மாறிக்கொண்டிருக்கிறது. அந்தத் துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது
நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். கமிஷனர் மீதே நடவடிக்கை எடுத்
திருக்க வேண்டும். இந்நேரம் பாலகிருஷ்ணன்மீது சம்பந்தப்பட்ட துறை
நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். கமிஷன் என்ன சொல்லியிருக்கிறது
என்றால், போர்டு இருக்கும்போது, நாங்கள் சிபாரிசுதான் செய்ய முடியும்,
வேறு ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். சாட்சியங்
களின் அடிப்படையில் அவர் தீர்ப்பு அளித்திருக்கும் நிலைமையில் பாலகிருஷ்
ணன் மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமா ? நடவடிக்கை எடுக்க
வில்லையே ? அங்கேதான் என் போன்றவர்களுக்குச் சந்தேகம் வருகிறது.
"இவர் செல்வாக்கு உள்ளவர், எதையும் செய்வார், அதற்குப் பிறகும் பதவியில்
இருப்பார்" என்று சொல்லக்கூடிய நிலைமைதான் வந்திருக்கிறது. அதற்குப்
பிறகு 8-வது பாராவில் ஒன்று இருக்கிறது. "அவர்கள் சுப்பிரமணிய பிள்ளை
மரணம் விளைவிக்கக் கூடிய வன்முறையின் விளைவாக இறந்தார் என்கிற ஒரு
பொதுப்படையான சந்தேகத்தையே எடுத்துச் சொன்னார்கள். சாட்சியத்தின்
போதுங்கூட பல்வேறு அரசியல் கட்சிகளால் அமர்த்தப்பட்ட வழக்குரைஞர்
களும் மரணம் ஏற்பட்ட வகை அல்லது முறையைப் பற்றியோ அல்லது கொலை
யைச் செய்த நபர்களைப் பற்றியோ, எந்த திட்டவட்டமான விஷயத்தையும்
எடுத்துரைக்கவில்லை. கமிஷனே, 60-வது பக்கத்தில் மேற்சொன்ன அம்சத்
தைப்பற்றிக் குறிப்பிடுகின்றது. சமூகத் தொண்டர் என்று சொல்லிக்கொள்
கின்ற மேகநாதன் என்பவர் மட்டுமே திட்டவட்டமான ஒரு கருத்தை எடுத்துச்
சொல்லியிருக்கிறார்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இதிலே வீட்
இருக்கிறது. குற்றப்புலனாய்வுத் துறையின் மூலம் தங்களை ஆட்படுத்திக்
கொள்ளப் போகிறோம் என்று சொல்லிவிட்டு, அவர்கள் இப்படித்தான் போக
வேண்டுமென்ற ஒரு வழித் தடம் போட்டும் கொடுக்கிறார்கள். அப்படியானால்
இந்த நீதி விசாரணை எப்படி முழுமையாக அமைய முடியும் ?

அடுத்து, 11-வது பாராவில் "சென்னைத் தலைமை செயலகத்திலுள்ள
செயலாளர், சென்னையிலுள்ள கமிஷனர் இவர்களை விசாரித்த கமிஷனும்
முதன் முதலில் தற்கொலைதான் என்று அறிக்கைகள் அனுப்பிய மாவட்ட
ஆட்சித் தலைவர், காவல் துறை அதிகாரிகள் இவர்களை விசாரிக்கவில்லை"
என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. யார் யாரை கமிஷன் விசாரணை செய்ய
வில்லையென்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முதன் முதலில்

[திரு. க. இராமமூர்த்தி] [1982 பிப்ரவரி 18

தற்கொலைதான் என்று அறிக்கைகள் அனுப்பிய மாவட்ட ஆட்சித் தலைவரைக் கூட விசாரிக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவையும் செய்து விட்டு, அரசாங்கம் ஏன் இவர்களை மட்டும் விசாரணைக்கு ஆட்படுங்கள் என்று சொல்லாமல் விட்டு விட்டது? உங்களுக்குரிய சாட்சியங்களோடு வந்து விசாரணைக்கு ஆட்படுங்கள் என்று சொல்லுவதற்குரிய அதிகாரம் அரசுக்கு இல்லாமல் போயிற்றா? அப்போது அதற்குரிய நடவடிக்கையை எடுக்காமல், இப்போது நீதிபதி அதைப்பற்றிச் சுட்டிக்காட்டியிருப்பதைக் குறிப்பிட்டு நீதிபதி ஏன் சாட்சியை அழைத்துக் கேட்கவில்லை என்று விமர்சனம் செய்வதற்கு அரசுக்கு என்ன உரிமை இருக்கிறது?

(பிற்பகல் 6-00)

அரசு ஒரு ரிப்போர்ட்டை, அதுவும் இப்படிப்பட்ட ரிப்போர்ட்டை எப்படி கொடுக்கலாம்? இதிலே என்ன நியாயம் இருக்கிறது? அதோடு மட்டுமல்ல, இதற்குக் காரணம் என்ன? அரசு விசாரித்தது கொலையா அல்லது தற்கொலையா என்பது பற்றி. அதைப்பற்றி விசாரித்து இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், நீதிபதி பாலைப்பற்றி விசாரணை வைக்க காரணம் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இப்படியொரு நீதி விசாரணை செய்தால், இதற்குப் பிறகு இதுபோன்ற சம்பவம் நடைபெறக் கூடாது என்ற நோக்கத்திலேதான் சாதாரணமாக இருக்கும். ஆனால், இனி மேல் ஒரு கமிஷன் வைத்தால், அரசு மீது மக்களுக்கு நம்பிக்கை வருமா? அல்லது மக்கள்தான் இப்படிப்பட்ட ஒரு கமிஷனை நியமிக்க வேண்டும் என்று அரசைக் கேட்பார்களா? அப்படிக் கேட்பதற்குக்கூட துணிவு வருமா? விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படும் முன்பே தீர்ப்பு எழுதப்பட்டுவிடும் என்ற எண்ணம் தானே மக்களிடத்திலே வந்துவிடும். இது நல்லதல்ல.

பாரா 14-லே சொல்லியிருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்**: கொஞ்சம் விரைவிலேயே முடிக்க வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி**: இன்னும் கமிஷன் ரிப்போர்ட்டுக்கே நான் போக வில்லை. 8-வது பக்கத்திலே தான் இருக்கிறேன். திரு. பாலகிருஷ்ணன் சாட்சியைப்பற்றிச் சொல்கிறேன், திரு. பாலகிருஷ்ணன் ஏ-1 அவர்களைக் குறுக்கு விசாரணை செய்யும்போது, திரு. மேகநாதன் சொன்ன ஒரு ஊகத் துக்குப் பதிலளித்து திரு. பாலகிருஷ்ணன் பின்வருமாறு சொன்னார்:

"திரு. சுப்பிரமணிய பிள்ளை உண்டியல் திறப்பிற்கு வருவதற்கு முன்பே பல தடவைகள் உண்டியல்களை நாங்கள் திறந்தோம் என்று சொன்னாலும், அவரிருந்து பணத்தைக் கைப்பற்றி விட்டோம் என்று சொன்னாலும், "பல



1982 பிப்ரவரி 18] [திரு. க. இராமமூர்த்தி]

தடவைகள் அவர் இதை ஆட்சேபித்து பதிவேட்டில் கையெழுத்துப் போட மறுத்தார் என்று சொன்னாலும், நாங்கள் அவரைச் சமாதானப்படுத்தி கையெழுத்து வாங்கினோம் என்று சொன்னாலும் சரியல்ல என்று திரு. பால கிருஷ்ணன் சொன்னார். திரு. மேகநாதன சொல்லிய ஊகத்தை வாதத்திற்காக யாராவது ஒத்துக்கொண்டாலும் இவ்வளவு தடவைகள் தகராறு செய்யாது கையெழுத்துப் போட்டு ஒத்துழைத்த அதிகாரி இந்த முறை மட்டும் ஏன் தகராறு செய்தார் என்ற முக்கியமான கேள்விக்கு விடை காணப்படவில்லை". என்று சொல்லும் இந்த அரசை, தலைமைச் செயலாளர் அவர்களை வைத்து இதுதான் தீர்ப்பு என்ற அளவிலே அச்சடித்து, இந்த அவைக்கு, இந்த அவை உறுப்பினர்களுக்குத் தரும் இந்த அரசை நான் கேட்கிறேன், இந்த ஊகத்தி னுடைய மறுபக்கம் ஏன் வரவில்லை? திரு. சுப்பிரமணியப் பிள்ளை எல்லா வற்றிற்கும் உடந்தையாக இருந்தார் என்பதை வாதத்திற்காக ஒத்துக்கொண் டாலும், திரு. பாலகிருஷ்ணன் என்பவர் யோக்கியர் அல்ல என்ற மறுப்புக்கு உள்ளே ஏன் போகவில்லை? திரு. சுப்பிரமணியப் பிள்ளை மட்டும் ஏன் வேண்டாதவர் ஆகிவிட்டார்? எப்படி திரு. பாலகிருஷ்ணன் மட்டும் வேண்டிய வராகிவிட்டார்? எப்படி முடிவு எடுக்கிறீர்கள்? இந்த ரிப்போர்ட்டின் ஒரு பக்கத்திற்குப் போகிறார்களே தவிர, மறுபக்கத்திற்கு அரசு ஏன் போகவில்லை? அதை ஏன் மறைக்கிறார்கள்? இதற்கு மேல் பாரா 17-லே சொல்லப்பட்டிருக் கிறது;

"கொலையானது வெளிப்படையாகவே, அறங்காவலர்கள் குழுத் தலைவர், நிர்வாக அதிகாரி, இன்னும் மற்றவர்கள் ஆகியோரால் செய்யப் பட்டது, பொதுமக்கள் அந்த இடத்திற்கு விரைந்தனர்; காவல் அதிகாரிகள் கூட்டத்தின்மீது தடியடி பிரயோகித்து அவர்களைப் பயமுறுத்தி விரட்டி விட்டனர் என்றும் கூறி, அப்படி பகிரங்கமாகவே ஒரு கொலை நடந்திருக் கின்றது என்று பொதுமக்கள் யாவரும் முழுமையாகக் காண்கின்ற வகையில் பலபேர் அக்கொலையைப் பார்த்திருக்கின்றனர் என்றும் குற்றம் சாட்டப்படுவது உண்மையானால் மற்ற தரப்பினரில் ஒருவர் அல்லது சிலர் மிக எளிதாகச் சாட்சியம் அளித்திருக்கலாம். ஆனால் ஒருவரும் சாட்சியம் அளிக்கவில்லை" என்று சொல்லும்போது, அரசினர் யாருக்காக வழக்கறிஞராக மாறுகிறார்கள்? அரசாங்க வக்கீல் திருச்செந்தூருக்குச் சென்று நீதிபதி பால் அவர்களின் முன்பு இருந்து விசாரிப்பது என்பது வேறு. சில சாட்சியங்களுக்குத் துணையாக ஆனால் அரசாங்கம் சொல்கிறது. இப்போது சொல்வது உண்மை, என்ன வென்றால் மற்ற சிலர் மிகவும் எளிதாக சாட்சியம் அளித்திருக்கலாம், ஆனால் ஒருவரும் சாட்சியம் அளிக்கவில்லை என்று. எனக்கு இதற்கு முன்பு இரண்டு

அனுபவங்கள் இருக்கின்றன. மாணவர்கள்-பஸ் தொழிலாளர்கள் மோதல் சென்னையிலே ஏற்பட்டபோது, நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, சோமசுந்தரம் விசாரணைக் கமிஷன் முன்பு சாட்சியாக விசாரிக்கப்பட்டேன். இன்னொரு அனுபவம் என்னவென்றால், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே உதயகுமார் என்ற மாணவன் மரணமடைந்தபோது காங்கிரஸ் கட்சியின் சார்பிலே பெருந்தலைவர் காமராஜரின் ஆசியோடு வழக்கறிஞராக நான் பணியாற்றினேன். இந்த சாட்சிகளை ஏன் விசாரிக்கவில்லை என்று சொல்கிறார்களே அதற்காச் சொல்கிறேன். சாட்சிகளை ஏன் விசாரிக்கவில்லை என்பதல்ல. அரசாங்கம் வழக்கறிஞர்களை வைத்து விசாரணை செய்யும் நிலை வந்த பிறகு, யார் சாட்சி சொல்ல முடியும்? எந்தெந்த அதிகாரிகள் சாட்சி சொல்ல வந்த வர்களை அடித்து விரட்டினார்கள் என்பது எனக்குத் தெரியும். நீங்கள் எல்லாம் ஒன்றாக இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தில் எல்லோரும் ஒன்றாக இருந்தபோது நடந்த நிகழ்ச்சிகளை வைத்துத்தான் சொல்கிறேன். சாட்சிகளுடைய பட்டியலை நாங்கள் கொடுப்போம் நீதிபதியிடம். அடுத்த நாள் அந்த சாட்சிகளை விசாரிப்பதற்குள்ள ஏற்பாடுகளைச் செய்வோம். ஆனால், அடுத்த நாள் அந்த சாட்சி வரமாட்டார், ராத்திரியோடு ராத்திரியாக அவர் போய்விடுவார். அரசாங்கம் ஒரு காப்புக்காக தன்னுடைய வழக்கறி ஞரை ஏற்பாடு செய்தால், அதற்கு விரோதமாக சாட்சி சொல்ல யாருக்கும் தைரியம் வராது. "அரண்மனை கோழி முட்டை அம்மியை உடைக்கும்" என்பார்கள். அதற்கு அவ்வளவு வலிமையுண்டு. இங்கே அரசினுடைய தலைமைச் செயலாளர் "அவர் ஏன் சாட்சியம் சொல்லவில்லை" என்று சொல் கிறார். இது எப்படி நியாயம்? இப்படிக் கேட்டுவிட்டு மேலும் சொல்கிறார், "ஆகவே, நம்பமாட்டோம்" என்று. மேலும் 21-வது பாராவிலே சொல்லி யிருக்கிறார், "சட்ட இயல் மருத்துவத் துறை ஓய்வு பெற்ற பேராசிரியரான டாக்டர் கோபாலகிருஷ்ணாவின் சாட்சியத்தை கமிஷன் நம்புவதாகத் தெரிவித் துள்ளது. ஆனால், இந்த சாட்சியமளித்த டாக்டர் கோபாலகிருஷ்ணா அவர் களோ சடலத்தைப் பார்க்கவேயில்லை; பிணப் பரிசோதனைச் சான்றிதழைப் பார்த்ததன் மூலமே அவர் சாட்சியம் அளித்துள்ளார். இதுதான், அந்த சாட்சி யத்தின் மிகப் பெரிய பலவீனமாகும். பிணப் பரிசோதனையைச் செய்த டாக்டர் ராமமூர்த்தியும் அனுபவம் மிக்க ஒரு பேராசிரியரே" இது அரசாங்கம் கொடுத்திருக்கும் வாதம். நல்லவேளையாக மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார். அவர் நல்ல வழக்கறிஞர். மெடிக்கல் ஜூரிஸ்ப்ருடென்சிலே இதைச் சொல்ல முடியுமா? அதோடு மட்டுமல்ல, [illegible]த்தைப் பார்க்காமல் சொல்லியிருக்கிறார், ஒரு எக்ஸ்பர்ட் ஒப்பினியன் டாக்டராலே கொடுக்க முடியாதா? அப்படிக் கொடுத்து நீதிமன்றங்கள்





ஏற்கனவே இல்லையா? அப்படிக் கொடுக்கப்பட்ட எக்ஸ்பர்ட் ஒப்பினியன் உச்ச நீதிமன்றம் வரையில் சென்றிருக்கிறதே? ஆனால் இப்படி ஒரு டாக்டர் கொடுக்க முடியாது என்று சொல்லும்போது, அதையும் இன்னொரு எக்ஸ்பர்ட் டாக்டர் தானே சொல்லியிருக்க வேண்டும்? யார் அந்த டாக்டர்? அப்படி யார் சொன்னது? இந்த அரசாங்கம், இந்த அரசுக்கு என்று சொந்தமாக இருக்கும் எந்த டாக்டரைக் கலந்த பிறகு, இந்த முடிவிற்கு வந்தது என்று சொல்லியிருக்க வேண்டாமா? அல்லது இது வாதப்பிரதிவாதமா? ஒரு தீர்ப்பின் அடிப்படையிலே இன்னொரு தீர்ப்பை எழுத! ஒரு டாக்டருடைய கருத்தின் அடிப்படையிலே அபிப்பிராயம் சொல்லும்போது, பிணத்தைப் பார்க் காத டாக்டருடைய அறிக்கையை ஏற்க முடியாது என்று சொல்லும்போது, "அப்படிச் சொல்லக்கூடிய அந்தக் கருத்தை ஏற்கலாமா?" என்று இன்னொரு டாக்டர் தானே அரசுக்குச் சொல்லியிருக்க வேண்டும். யார் அந்த டாக்டர்? அதைப்பற்றி விசாரித்தார்களா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, இத்தகைய ஒரு முடிவை இந்த அரசோ, தலைமைச் செயலாளர் அவர்களோ தன்னிச்சை யாகச் செய்யவில்லை. உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றின் அடிப்படையிலேதான் அது குறிப்பிடப்பட்டிருக்கிறது. டாக்டர் இராதாகிருஷ்ணனுடைய சாட்சி யைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே சட்டமன்றத்திலே மாண்புமிகு அற நிலையத் துறை அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, டாக்டர் கோபாலகிருஷ்ணன் அவர்களுடைய சாட்சியத்தை நீதிபதி பால் அவர்கள் எந்த முறையில் அணுகினார் என்பது குற்றச்சாட்டல்ல. டாக்டர் கோபால கிருஷ்ணன் அவர்கள் சாட்சியம் எந்த அளவிற்கு ஒரு கிரிமினல் கேஸ் தாக்கல் செய்யப்பட்டு அது நடத்தப்படும்போது குற்றவாளிகள் தப்பித்துக்கொள்ளும் அளவிற்கு உதவிகரமாக இருக்கும் ஒரு சாட்சியாக அமைந்துவிடும் என்று கோடிட்டுக் காட்டினார்கள். அதற்கு நான் சிலவற்றை சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 6-10)

உதாரணமாக, டாக்டர் கோபாலகிருஷ்ணன் அவர்கள் தம்முடைய சாட்சியத்தில் ஒரு இடத்தில் சொல்லுகிறார். அதாவது

"On the dining hall, especially on the east side, I noticed fresh coating of cement, because I could feel the cement sticking on my hand compared to the other walls."

என்று சொல்லுகிறார். அதாவது கொலை நடந்ததாகச் சொல்லப்படும் அந்த இடத்தில் ஏற்கெனவே சிமிண்ட் இருந்து அது இப்போது வெள்ளை அடிக்கப் பட்டு தடயங்கள் மறைக்கப்பட்டுவிட்டன என்ற பொருள்படும் அளவுக்கு

டாக்டர் கோபாலகிருஷ்ணன் அவர்கள் சொல்லியிருக்கிறார். ஆனால் மாண்புமிகு நீதிபதி பால் அவர்கள் தன்னுடைய தீர்ப்பில் என்ன சொல்லுகிறார் என்று 87 ஆம் பக்கத்தில் பார்த்தால் தெரியும்.

"On the eastern wall of the dining room, I climbed on the table and tested the eastern wall to see whether any of the cement colouring would adhere to my fingers and I found that it did not."

முன்னுக்குப் பின் முரணான சாட்சியத்தை டாக்டர் கோபாலகிருஷ்ணன் சொல்லுகிறார். வெள்ளை அடிக்கப்பட்டு தடயங்கள் மறைக்கப்படக்கூடிய அளவுக்குப் புதிய சிமிண்ட் கையிலே படுகிறது என்று அவர் சொல்லுகிறார். ஆனால் நீதிபதி பால் அவர்களே அந்த இடத்தைப் பார்வையிட்டு, அதற்குப் பிறகு அதைப்பற்றி இது சரியல்ல என்று தனது தீர்ப்பில் எழுதுகிறார். இதைச் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், ஒரு சாட்சியத்தை நம்புகிறபோது— நான் விசாரணைக்காக மட்டும் சொல்லவில்லை, பின்னாலே அது நீதிமன்றத்திற்குப் போகிற நிலைமை ஏற்படும்போது, அங்கே "Credibility of the witness is the main important thing." மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே நன்கு தெரியும். காரணம் அவரே ஒரு வழக்கறிஞர்.

எனவே நீதிபதி பால் அவர்களின் முன் சாட்சியம் அளித்த டாக்டர் கோபாலகிருஷ்ணன் உண்மைக்குப் புறம்பான தகவலைத் தந்திருக்கிறார் என்று கோடிட்டுக்காட்டிய நீதிபதி பால் அவர்கள் இன்னொன்றையும் கவனத்தில் கொண்டிருக்க வேண்டும் என்பது எங்கள் யூகம். 1971 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றத்தில் டாக்டர் கோபாலகிருஷ்ணன் அவர்கள் சம்பந்தப்பட்ட வழக்கு ஒன்று நடந்தது. அதிலே அவர் சாட்சியமாக அழைக்கப்பட்டிருக்கிறார். அவரைப்பற்றி உச்ச நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு சொல்லுகிறது:—

He claims to have conducted as many as 314 post-mortem examinations. Hence *prima facie* his opinion is entitled to more weight. In his examination-in-chief, he gave as many as 7 reasons in support of his view that the injuries on the back of the deceased Sanjiva could not have been caused by revolver shot but in his cross-examination, he practically gave up all what he had deposed in the examination-in-chief.

அவர் உச்ச நீதிமன்றத்தில் ஒரு கூற்றைச் சொல்லிவிட்டு அதை "கிராஸ் எக்சாமினேஷனில்" மறுத்திருக்கிறார் என்று உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டிருக்கிறது. அதோடு இன்னொன்றையும் உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டிருக்கிறது



It may be remembered that DWI did not examine
அதாவது Sanjiva's dead body இறந்தவருடைய உடம்பை அவர் பரிசோதிக்க
வில்லை, வெறும் சர்ட்டிபிகேட்டை மட்டும் பார்த்துவிட்டு, டாக்டர் கோபால
கிருஷ்ணன் சொல்லுகிறார். சர்ட்டிபிகேட்டுகளையும் போட்டோக்களையும்
பார்த்துவிட்டு சாட்சியம் சொல்வது என்பது வேறு. உடம்பைப் பரிசோதித்த
டாக்டர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். டாக்டர் கோபாலகிருஷ்ணன்
அவர்கள் பாரன்சிக் லெபாரட்டரியின் சீஃப்பாக இருந்து ஓய்வுபெற்ற பிறகு,
டாக்டர் கணபதி இருந்திருக்கிறார். அரசுப் பணியில் வேறு பல எக்ஸ்பர்ட்டு
களும் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அழைத்திருக்கக்கூடும். ஆனாலும்
டாக்டர் கோபாலகிருஷ்ணனைத்தான் அழைத்தார்கள். வழக்கு செம்மையாக
நடந்து குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்று அழைத்
திருக்கலாம். நீதி விசாரணை என்பது என்ன என்பது நமக்குத் தெரியும்.
No doubt, it is only a fact-finding body. இறுதியில் இது வழக்காக
நீதிமன்றத்திற்குச் சென்றாக வேண்டும். அப்போது அந்தத் தடயங்கள்
எல்லாம் நீதிமன்றத்தின் "டெஸ்ட்டுக்கு" தகுதி உடையனவாக இருக்க
வேண்டும் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்
நான் இதனைச் சுட்டிக்காட்டுகிறேன்.
"D.W. 1, that is Dr. Gopalakrishnan, did not examine
Sanjeeva's dead body" என்பதால், அந்தப் பிரேதத்தின்மீது டாக்டர்
கோபாலகிருஷ்ணன் பரிசோதனை செய்யவில்லை என்ற காரணத்தால், அவரது
சாட்சியம் ஏற்றுக்கொள்ளப்படாமல் போனது என்று தீர்ப்பிலேயே சொல்லப்
பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. சில நேரங்களில், நீதிமன்றத்தின் முன்
னால் கிரிமினல் வழக்கு வருகிறபோது, slightest doubt இருந்தாலும்
கூட போதும்—மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்—
benefit of doubt will go always in favour of the accused. அந்த
இடம் தராமல் சாட்சியம் அளிப்பவர்கள் இருக்க வேண்டும் என்ற காரணத்
தால், இது ஒரு கவனக் குறைவு என்பதற்காகச் சொல்லப்பட்டிருக்கிறது.
இப்போதும் ஒன்றும் ஆகிவிடவில்லை. காவல் துறையின் மூலம் புலனாய்வு
செய்கிறபோது, மற்ற எக்ஸ்பர்ட்களைக் கொண்டு இதை ஆய்வு செய்யாமல்
இருக்க மாட்டார்கள். அதற்குத் தடையேதுமில்லை. அதுமட்டுமல்ல. கண்டிப்
பாகச் செய்யப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். டாக்டர் கோபால
கிருஷ்ணனைப் பொறுத்த வரையில், உச்ச நீதிமன்றம் என்ன குறிப்பிட்டிருக்
கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அவர் நம்பத் தகுந்த அளவுக்குச் சாட்
சியம் அளிக்கவில்லை. முன்னுக்குப் பின் முரணாக சாட்சியம் அளித்திருக்
கிறார் என்று தீர்ப்பிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. டாக்டர் கோபால
கிருஷ்ணன், சிமிண்ட் பூச்சு மறைக்கப்பட்டு அதன்மீது வெள்ளை அடிக்கப்

பட்டிருக்கிறது என்ற பொருள்படும் வகையில் சொன்னதை நம்பாமல் நேரடி
யாக நீதிபதி பால் அவர்களே அதைப் பார்த்துவிட்டு அவர் சொன்ன மாதிரி
அங்கே வெள்ளை அடிக்கப்படவில்லை, அது என் கையில் ஒட்டவும் இல்லை
என்று சொல்லியிருக்கிறார். அதாவது டாக்டர் கோபாலகிருஷ்ணனின் இந்தச்
சாட்சியம் நம்பத் தகுந்ததல்ல என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் தீர்ப்பு
எழுதும்போது, இந்தக் கருத்தை அவர் சொல்லவில்லை. டாக்டர் கோபால
கிருஷ்ணா அவர்கள் 1969 ஆம் ஆண்டு பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். ஆனால்
ஓய்வு பெற்ற பிறகும் பிரத்தியேகமாக அவருக்கு ஓராண்டுக்காலம், அதாவது
1969 லிருந்து 1970 வரை, பதவி நீட்டிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப்
பிறகும், மீண்டும் இரண்டாண்டுக் காலத்திற்கு அவருக்குப் பதவி நீட்டிப்பு
கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரே சொல்கிறார். இப்போது என்னுடைய
கைகள் நடுங்குகின்றன என்று. அவரைப்போன்ற நிபுணர்கள் பலர்
இருக்கிறார்கள். அவருக்கு பின்னாலே டாக்டர் சந்திரசேகரன் இருந்
திருக்கிறார், டாக்டர் கணபதி இருந்திருக்கிறார். அவர்கள் வேண்டாம் என்
றால், மற்ற மாநிலங்களிலிருந்தாவது ஒருவரை வரவழைத்திருக்கலாம். ஆனால்
பதவியிலிருந்து ஓய்வுபெற்ற டாக்டர் கோபாலகிருஷ்ணனைத்தான் அவர்கள்
அழைத்து சாட்சியம் பெற்றார்கள். அவரோ முன்னுக்குப்பின் முரணாகச்
சொல்லியிருக்கிறார் என்ற காரணத்தால், அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை
என்று நீதிபதி பால் அவர்களே சொல்லியிருக்கிறார். அதைத்தான் நாங்கள்
இங்கே வற்புறுத்தியிருக்கிறோம்.

**திரு. க. இராமமூர்த்தி :** I am not casting aspersions on the
Advocate. அரசாங்கத் தரப்பில் ஒரு வழக்கறிஞர் அரசாங்கத்தின் நலனைப்
பாதுகாக்க அங்கே இருந்திருக்கிறார். அதன் விவரங்களுக்குள் நான் போக
விரும்பவில்லை. அப்படி இருக்கும்போது, எப்போது டாக்டர் கோபால
கிருஷ்ணன் அவர்கள் விசாரணை செய்யப்பட்டாரோ அப்போதே அதை
வேண்டாம் என்றோ அல்லது அது மட்டும் போதாது, இதற்கு மேலும் மற்ற
எக்ஸ்பர்ட் ஒப்பினியன் வேண்டும் என்றோ வேறு எக்ஸ்பர்ட்டுகளை அழைத்து
விசாரிக்க வேண்டும் என்றோ சொல்லியிருக்க முடியும். ஆனாலும் அங்கே
அப்படிச் சொல்லவில்லை. அந்த நேரத்தில் அங்கே அப்படிச் சொல்லவில்லை
என்றால், அது யாருடைய பலவீனம் என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் இங்கே தெளிவாக, விவரங்களைச் சொன்னார். இது
எந்த அடிப்படையில் இருக்கிறது என்றால், சாட்சியங்களைப்பற்றி இன்னொரு
விசாரணை இப்போது நடக்கிறது. அதாவது நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட
சாட்சியங்களைப்பற்றி நாம் இப்போது விசாரிக்கிறோம். நாம் விசாரித்து





ஒரு முடிவு தெரிவித்த பிறகு, குற்றப் புலனாய்வுத் துறை எப்படி விசாரணை
செய்யும்? நாம வேறு, குற்றப் புலனாய்வுத் துறை வேறு என்பது சரியா?
தான் என்னுடைய சந்தேகம் வருகிறது. நான விவரங்களுக்குள் போக
விரும்பவில்லை என்றாலும், இனி இதை எப்படி மற்றவர்கள் விசாரிப்பார்கள்
என்றுதான் கேட்க விரும்புகிறேன். அப்படி ஒரு விசாரணை என்று வருகிற
போது, ஒரு தரப்பின் வாதங்களை மட்டும் நீங்கள் வாங்கிக் கொண்டதைப்
போல், இன்னொரு தரப்பிற்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டாமா என்றுதான்
கேட்க விரும்புகிறேன். ஆக, முடிவுகளை அறிவிப்பதற்கு முன்னால் அதைச்
செய்திருக்க வேண்டும் என்றுதான் நான் குறிப்பிடுகிறேன்.

(பிற்பகல் 6-20)

அடுத்ததாக, பக்கம் ஏழில் பத்தி 27-ல் அந்த அறங்காவலர்கள் குழு
தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட வேண்டும், விலக்கப்பட வேண்டும், கலைக்கப்
பட வேண்டும் என்ற கருத்தைப் பொறுத்தவரையில், கமிஷன் தான் நேரிடை
யாக நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது என்று குறிப்பிட்டிருக்கிறது.
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டாக்டர் கோபாலகிருஷ்ணனைப்பற்றி அழு
காகச் சொன்னார்கள். நீதிபதியே ஓரிடத்தில் அப்படிச் சொல்லுகிறார் என்
றார். நீதிபதி தங்களுக்குச் சாதகமாகச் சொன்னதை மட்டும் ஆங்காங்கே
புரொஜெக்ட் பண்ணியிருக்கிறார்களே அது எப்படி? பூரணமாக எல்லா
வற்றையும் எடுத்துக்கொண்டிருந்தால் பரவாயில்லை. ஆகவே நீங்கள் என்ன
எதிர்பார்க்கிறீர்களோ அதை மட்டும் ஏற்றுக்கொண்டீர்கள். இதற்குப் பதி
லாக நீங்களே நீதிபதியிடம் சொல்லியிருக்கலாம், "நாங்கள் நினைப்பதைப்
போல் எழுதுவதாக இருந்தால் எழுதுங்கள். இல்லையென்றால் நாங்கள்
ஏற்றுக்கொள்ளமாட்டோம்" என்று.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ஏதோ பால் கமிஷனுடைய
ரிப்போர்ட்டை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்ற பொருள் உண்டாகும்படி
மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார்கள். பால் கமிஷன் தன்னுடைய அறிக்
கையில் இரண்டு பரிந்துரைகளைச் சொல்லியிருக்கிறது. ஒரு பரிந்துரை, தட
யங்கள் கிடைக்கவில்லை, ஆகவே புலனாய்வுத் துறைக்கு அனுப்ப வேண்டும்
என்பது. தடயங்கள் கிடைக்கவில்லை என்பதை நீதிபதி பால் அவர்கள் தெளி
வாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒருவேளை புலனாய்வுத் துறை இதை மேற்
கொண்டால், குற்றவாளி யார் என்று கண்டுபிடிக்கலாம். ஆகவே புலனாய்வுத்
துறைக்கு அனுப்ப வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறார். இந்தப்
பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டு உத்தரவிட்டிருக்கிறது.

இரண்டாவது, அறங்காவலர் குழுவைக் கலைப்பதைப் பொறுத்தவரையில், தெளிவாகச் சொல்லிவிட்டார். அறங்காவலர் குழுவைக் கலைப்பதைப் பொறுத்தவரையில், தான் உத்தரவிட முடியாது என்றும், அதற்குக் காரணம் ஏற்கெனவே தீர்ப்புகள் இருப்பதுதான் என்றும் கூறியிருக்கிறார். 1953 ஆம் ஆண்டு அறநிலையச் சட்டத்தின் பிரிவுகளின்படி "on independent material" தனியாக நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அதன்படி நடவடிக்கை எடுக்கலாம் என்றும் சொல்லியிருக்கிறார். அறங்காவலர் குழுவைப் பொறுத்தவரையில், தனிப்பட்ட முறையில் based on independent material they have taken action. Even if they want to take action based on the findings of the Enquiry Commission, it is not legally feasible in view of the Judgment given by the High Court.

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய வாதத்தை நான் முழுவதுமாக ஏற்றுக்கொள்கிறேன். எனக்கு வந்த சந்தேகமே அதுதான். நீதிபதி பால் தனக்கு அதிகாரம் இல்லையென்று தெளிவுபடுத்தியிருக்கிறார். அரசாங்கத்தினுடைய இந்த மெமோராண்டம், நீதிபதிக்கு முன்னால் பல சாட்சியங்களைப்பற்றி தன்னுடைய கருத்தைத் தெரிவித்திருக்கின்ற இந்த மெமோராண்டம் அதைப்பற்றி எழுதவில்லையே. அந்த நீதிபதிக்கு முன்னாலே அறங்காவலர்கள் தங்களுடைய பணியைச் செய்யவில்லையென்று தானே அர்த்தம். சாட்சியங்களின் அடிப்படையிலே அறங்காவலர் குழுத் தலைவரின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஒரு வரி கூட எழுதவில்லையே, அது ஏன் என்று கேட்கிறேன். இதை நியாயமான முயற்சிகளுக்குக் காரணமாகச் சொல்ல முடியாது. விசாரணையை அரசாங்கமேகூட பண்ணியிருக்கலாம். இதுபற்றி தகவல் வரவில்லையே. எது தங்களுக்குச் சாதகமோ அது மட்டும் வருகிறது. இந்த சாட்சியங்களைப்பற்றிக் குறிப்பிட்டிருக்க வேண்டாமா? அதன்மீது தன்னுடைய கருத்தை அரசாங்கம் தெரிவித்திருக்க வேண்டாமா? அப்படித் தெரிவிக்கவில்லையே. அங்கேதான் நாங்கள் வேதனை அடைகிறோம். ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்று.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணி அடித்தார்)

அதற்குப் பிறகு இன்னுமொன்றைக் கூறி முடித்து விடுகிறேன். காவல் துறை அதிகாரியும் இன்னுமொருவரும் சேர்ந்துதான் சுப்பிரமணியப் பிள்ளையின் சடலத்தை பைப்பிலேயிருந்து இறக்கியிருக்கிறார்கள். அல்லது அவர்கள் இருவர்தான் இறக்கும்போது, அங்கே இருந்திருக்கிறார்கள். அவரும் இன்னொருஆபிசரும் தூக்கு மாட்டிக் கொண்டு இறந்ததாகச் சொல்வதை வாதத்திற்காக ஒத்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலையில் காவல் துறையினர்





இருந்தால், வேறு யாரையாவது அதன்மீது கை வைக்க விடுவார்களா? அப்படியே கை வைக்க விட்டாலும் கூட, தூக்கிலே இருக்கின்ற பிணத்தைக் கீழே இறக்குகின்றபோது சுவற்றிலோ அல்லது வேறு இடத்திலோ பட்டு அடிபடும் அளவுக்கு இறக்குவார்களா? அப்படி அடிபடும் அளவிற்கு இறக்கியிருக்கிறார்கள் என்றால், அவர்கள் காவல் துறை அதிகாரிகளா அல்லது ஏதாவது கடைக்காரர்களா? அல்லது அது எப்படி நடந்தது? அவ்வளவு ஜாக்கிரதை இல்லாமல், எச்சரிக்கை இல்லாமல் தங்கள் காரியங்களைச் செய்த அந்த அதிகாரிகள்மீது எடுத்த நடவடிக்கை என்ன? எப்படி அது நடக்கும்? ஊரிலே நாம் எல்லோரும் தற்கொலை நடந்ததைப் பார்த்ததில்லையா? நானே மணியக்காரராக வேலை பார்த்தவன். எனக்குத் தெரியும். தூக்குப் போட்டுக் கொண்டவர்களைப் பார்த்திருக்கிறேன். தூக்கு மாட்டிக் கொண்டவரைப் பற்றிய Inquest Report எங்கே போயிற்று? அது இல்லவே இல்லையே! இந்த எட்டுப் பக்கத்தில் அந்த ரிப்போர்ட்டைக் காணோமே. நடந்ததா இல்லையா? விசாரிக்கவில்லை என்றாவது எழுதியிருக்கலாமே. அப்படி எழுதியிருந்தால், குற்றப் புலனாய்வுத் துறையினர் விசாரணையின்போது இன்னும் சில விஷயங்கள் வெளியே வந்திருக்கும். இன்குவஸ்ட் செய்யாமல் பிணத்தை அப்புறப்படுத்திய காரணம் வெளியே வந்திருக்கும்.

அறங்காவலர்களை நியமிப்பதைப்பற்றி நான் பல முறை சொல்லியிருக்கிறேன். ஒரு முறை அமைச்சர் அவர்கள் கூட என் மீது கோபப்பட்டதுண்டு. பெரிய கோவில்களுக்கு அறங்காவலர்களைப் போடும்போது நன்றாக விசாரித்துப் போடுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். போட்டிருப்பவர்களில் சில பேர் நல்லவர்களாக அமைந்திருக்கிறார்கள். நான் இல்லையென்று சொல்லவில்லை. இந்த அறநிலையங்களுக்கு அறங்காவலர்களை நியமிக்கும்போது எச்சரிக்கையாக, பாதுகாப்போடு, இந்துக்களுடைய மன உணர்வுகள் பாதிக்கப்படாத அளவிற்கு நியமிக்க வேண்டும் என்று திரும்பத் திரும்பக் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட அந்த உணர்வை ஏற்றுக்கொண்டு அதிலே நாங்கள் எச்சரிக்கையாக இருக்கிறோம், அப்படித்தான் செய்கிறோம் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இந்த பாலகிருஷ்ணன் யாருடைய கணவர் தெரியுமா? எனக்குக் கிடைத்த தகவலை வைத்துச் சொல்லுகிறேன். திருமதி டி. கரோலின் மேரி என்பவருடைய கணவர்தான் வி. ஆர். பாலகிருஷ்ணன். ஒரு வேளை அவர் டாபர்ட் பாலகிருஷ்ணனோ என்னவோ தெரியவில்லை. அவர் இந்து ஆலயத்திலே திருமணம் செய்து கொண்டாரா, இந்துவா என்பது தெரியவில்லை. இந்து மதத்தின் அடிப்படையிலே திருமணம் செய்து கொண்டாரா அல்லது கிறித்தவ மதத்தின் அடிப்படையிலே கிறித்தவ ஆலயத்திலே திருமணம் செய்துகொண்டாரா என்பது

தெரியவில்லை. இந்து மதத்தின் அடிப்படையிலே திருமணம் செய்து கொண்டவராக இருந்தால், கரோலின் மேரி அவருக்கு மனைவியாக இருக்க முடியாது. கிறித்துவ ஆலயத்தில் திருமணம் செய்து கொண்டிருந்தால், அவரை எப்படி இவ்வளவு பெரிய இந்து ஆலயத்திற்கு அறங்காவலர் குழுத் தலைவராக நியமித்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த அரசைப் பார்த்துச் சொல்லுகிறேன், "இந்த நிலையிலேதான் உங்களுடைய துறை விசாரணை நடத்தி அறங்காவலர்களை நியமிக்கிறது" இது நல்லதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால், எங்கே நியாயம் கிடைக்கும்? கரோலின் மேரியினுடைய கணவன் பாலகிருஷ்ணன் இந்து சமயத் தன்மைகளை உணர்ந்து உண்டியல் திறக்கும் இடத்திலே இருப் பார் என்று எப்படி நாம் எதிர்பார்க்க முடியும்? அதிலேதான் விவகாரமே வருகிறது. ஆகவே யாரிடமோ சாவியைக் கொடுத்து அனுப்பியிருக்கிறார். அவருக்கு அது புனிதமாகத் தெரியவில்லை. அவர் மீது நான் குறை சொல்ல மாட்டேன். என் மதத்தின்மீது எனக்கு இருக்கும் மதிப்பு மற்றவர்களுக்கும் இருக்கும் என்று நான் எதிர்பார்க்க முடியாது. என்னுடைய பணத்தை நான் திருடமாட்டேன். இன்னொருவர் பணத்தை எடுத்துச் செல்வதில் என்ன சங்கடம் அவருக்கு? அந்த உணர்வு அவருக்கு இல்லாமல் இருந்திருக்கும் என்பதற்கு என்ன சாட்சி இருக்கிறது?

(பிற்பகல் 6-30)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி: இன்னும் ஒரு பத்து நிமிடங்களில் முடித்து விடுகிறேன். விசாரணை கமிஷன் முடிவுகளைப்பற்றி மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"The findings of the Commission of Inquiry are not contemplated by law to be liable, at any stage, to confirmation by any authority so as to assume the character of a final decision"

என்று குறிப்பிட்டுவிட்டு,

"The only power the Commission has is to enquire and make a report and embody therein its recommendation"

என்றும்

"A public enquiry body is not there to hear and decide. He is only there to hear and report." என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆக பால் அவர்கள் வந்து "நான் தான் நீதிபதி. என் தீர்ப்பே தான் முடிவானது" என்று சொல்லவில்லை. ஆனால் அரசாங்கம் என்ன



செய்திருக்க வேண்டும்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விசாரணைக் கமிஷன் நியமித்தார்கள். நீதிபதியை வைத்து விசாரணைக் கமிஷன் வேண்டுமென்று நமது முதலமைச்சர் அவர்கள் முடிவெடுத்துச் செய்தார்கள். அன்றைக்கு தானே விசாரிக்கிறேன் என்று சொல்லியிருக்கவில்லை. ஏன் அப்படிச் சொல்லவில்லை? அதில் அரசாங்கத் துறை சம்பந்தப்பட்டிருக்கிறது என்ற எண்ணம் நாட்டு மக்களிடையே உண்டாகியிருக்கிறது. இனிமேல் அரசாங்கம் அதைச் செய்யாமல் நீதிபதியை வைத்துத்தான் விசாரிக்க வேண்டும் என்று சொல்கிறபோது, அவர் மக்களுடைய உணர்வுகளை மதித்துச் செயல்படுகிறார், சொல்கிறார் என்பதை என்னாலே புரிந்துகொள்ள முடிந்தது. அவ்வளவு பாதுகாப்போடு அவ்வளவு எச்சரிக்கையோடு இருந்தவர்கள், அந்த நீதிபதி சிபாரிசு வந்த பிறகு அரசு ஏற்கவேண்டும் அல்லது மறுக்கலாம் என்ற நிலைமைகளும் இருக்கின்றன. நீதிபதி அரசாங்கத்திற்குத் தீர்ப்பு எழுதினார்கள். அரசாங்கம் தன்னுடைய முடிவான கருத்து பற்றி என்ன சொல்கிறது? இந்தக் கருத்தை, புரோபோசல்களை அரசு எப்படி ஏற்கிறது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன். இந்த விசாரணைக் கமிஷன் ஒரு கண் துடைப்பு என்று எண்ணுகின்ற ஒரு கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த விசாரணைக்குப் பிறகு ஏற்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக இவைகளெல்லாம் ஏற்பட்டிருக்கின்றன என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

இதில் நான் இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். விசாரணைக் கமிஷனில் இந்த பாலகிருஷ்ணன் அவர்களைப்பற்றி என்ன சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்? பாலகிருஷ்ணன் அறங்காவலராக இருந்திருக்கிறார்கள். அவர் எப்படிப்பட்டவர் என்று சொல்லியிருக்கிறார். கொலையை அவர் செய்தாரோ இல்லையோ, அது வேறு. அன்றையதினம் எல்லோரும் ஹாஸ்பிடலுக்குச் சென்றிருக்கிறார்கள். அந்த அறிக்கையின் 39 ஆம் பக்கத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

"அ.சா. 1 அடுத்த நாள் காலையில் சென்னையில் நடைபெறவுள்ள திருமணத்தில் கலந்துகொள்ள சென்னைக்குப் போக திட்டமிட்டிருந்ததாலும், அவர் சென்னைக்குப் போகும் ரயில் வண்டியைப் பிற்பகல் 2-30 மணிக்குப் பிடிக்க வேண்டியிருந்ததாலும் வழியில் அவர் அவருடைய வீட்டின் அருகே இறங்கிவிட்டார். எஞ்சியவர்கள் மருத்துவ மனைக்குச் சென்றனர்".

நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கட்சிகளுக்கு அப்பாற்பட்ட மனிதர். மனித உணர்வுகளை மதிப்பவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அவர்கள் பல நேரங்களிலே தன்னுடைய சொந்த வாழ்க்கையின் அடிப்படையிலே நான் கட்சியைக் கடந்து நினைக்க வேண்டியவனாக இருக்கிறேன் என்று சொல்லுவார்கள். நான் கேட்கிறேன். எவ்வளவு கொடும் மனம் படைத்தவராக

[திரு. க. இராமமூர்த்தி] [1982 பிப்ரவரி 18

அந்த பாலகிருஷ்ணன் இருந்து இருந்தால், செத்துப்போய்விட்டார் அல்லது செத்துக்கொண்டிருக்கிறார் என்ற நிலையில், அவர் சொல்கின்ற சாட்சியங் களை ஒத்துக்கொள்வதாக இருந்தாலும், தன்னாலே விசாரிக்கப்பட்ட பிறகு, அவன்தான் திருடினான் என்று சொன்னதற்குப் பிறகு, ஒரு குற்றச்சாட்டைச் சொன்ன பிறகு, அதன் விளைவாக ஒருவன் சாவிற்கு ஆளாகின்றான் என்ற நிலை ஏற்படுகிறபோது, அந்த உடலிலே உயிர் பிரிந்ததுபோன்ற நிலைமையிலே இருந்தபோது, அது எக்கேடு கெட்டாவது போகிறது என்று கருதிக்கொண்டு சென்னைக்கு ரெயிலில் போவார்? அப்படிப்பட்டவரை அறங்காவலர் குழு வினுடைய தலைவர் என்று கருத முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன். ஆக அதிகாரி தவறு செய்தார் என்பதை ஒத்துக்கொள்கிறேன். போலீசிடம் ஒப்படைத்து விடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள் தலைமை அதிகாரிகள். அதை நீங்கள் செய்யவில்லை. ஆக நீங்களாகவே விசாரணை செய்கிறீர்கள். நீங்களே அடித்து அவர் தன் செத்தார்களோ அல்லது அவராகவே தற்கொலை செய்துகொண்டாரோ தெரியாது. பிணமாகச் சென்றுகொண்டிருக்கிறார். அந்த நிலையிலே சென்னைக்குச் சென்றுகொண்டிருக்கின்றார் என்றால், அவர் எவ்வளவு இரக்கம் கொஞ்சம் கூட இல்லா அரக்க நெஞ்சம் படைத்தவராக இருந்திருந்தால், அந்தப் பிணத்தை அப்படியே விட்டுவிட்டு ரெயில் ஏறி அந்த அறங்காவலர் சென்னை வருவார்? இதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். என்ன ஆணவம், என்ன திமிர் அவருக்கு இருக்கிறது? அப்படிப்பட்டவர் அறங் காவலர் பதவிக்கு தகுதியில்லாதவர் என்பது எடுத்துக்காட்டாக இருக்கிறது. அவர்கள் எப்படி இந்து ஆலயத்தைக் காப்பாற்றுவார்கள்? உங்களுடைய அதிகாரிகள் அதிகாரிகளாக வேலை பார்க்கின்றார்களா அல்லது வேறு வேலை பார்க்கின்றார்களா? கொஞ்சமாவது பின்னணி தெரிய வேண்டாமா?

அதற்குப் பிறகு பக்கம் 45-க்கு வருகிறேன். அவர்கள் கூறிய சாட்சியங் களிலிருந்து அந்தச் சூழ்நிலை தெரிகிறது. அவர்கள் நடந்துகொண்ட முறை தெரிகிறது. பால் அவர்கள் சொல்கின்றார்கள். 'ஆ' தரப்பினரின் வழக் குரைஞர் கூறிய வாதத்திற்கு இவர்களின் விசித்திரமான போக்கு ஆதாரமா கிறது. இவர்கள் கூறியுள்ள சாட்சியங்களிலிருந்து, அந்தச் சூழ்நிலையில் இவர்கள் நடந்துகொண்ட முறை, இயல்பாக ஒருவர் நடந்துகொள்ளும் நடத் தைக்கும், முறைமைக்கும் முற்றிலும் எதிரானதாகும். மிகுந்த விசித்திரமான அவர்கள் நடத்தைக்கும் முறைமைக்கும் முற்றிலும் எதிரானதாகும். மிகுந்த விசித்திரமான அவர்களின் நடத்தை, தீய உள்நோக்கம்கொண்டது என்ற முடிவிற்கு வர வழி வகுக்காவிட்டாலும்கூட, அவர்கள் சாட்சியங்களின் மீது ஐயத்தையாவது எழுப்புகிறது. அவர் ஏற்கெனவே இறந்திருக்க வேண்டு மென்று மிகவும் உறுதியாக இருந்ததாலோ அல்லது அவர்களுக்குத் தீய உள்



1982 பிப்ரவரி 18] [திரு. க. இராமமூர்த்தி]

நோக்கம் இருந்ததன் காரணமாகவோ சரிபார்ப்பு அதிகாரிக்கு உடனடியாக மருத்துவ உதவி அளிக்க பெரிதும் தயக்கம் காட்டினர் என்றே தோன்றுகிறது". மற்றவற்றைப்பற்றிப் படிக்க எனக்கு நேரம் இல்லை.

அதற்கு அடுத்ததாக நான் சொல்ல விரும்புகிறேன். இவ்வளவு பைண்டிங்ஸ் findings கொடுத்திருக்கிறார்கள். அந்த நிர்வாக அதிகாரி, ஆர்.ஐ. எக்சிகியூடிவ் ஆபிசரை வீட்டிற்குப் போகச் சொன்னார்களா? இதுவரை யிலும் நடவடிக்கை எடுத்தார்களா? கோயில் உண்டியலைக் கொள்ளையடிக்க அவர் உடந்தையாக இருந்திருக்கிறாரா? இந்த சுப்பிரமணியப் பிள்ளை ரூபாய் 2,800 எடுத்துக்கொண்டு போனார் என்று சொல்கின்ற அரசாங்க வாதத்திற்கு ஏற்ப அந்த அதிகாரி, நிர்வாக அதிகாரி உடந்தையா? அவர் எடுத்துக்கொண்டு போகவில்லை. பாலகிருஷ்ணன் துணை போகவில்லை, கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்ற வாதத்தை ஏற்றுக்கொள்வது என்றதால் இந்தச் சூழ்நிலை உருவாவதற்கு இடமேற்பட்டது. இந்த அரசாங்கத்தி னுடைய 'சீஃப் செக்ரட்டரி' ரிப்போர்ட் தருகிறார்கள். இந்த பால் கமிஷன் ரிப்போர்ட்டின் அடிப்படையிலே ஒரு எட்டுப் பக்க அறிக்கை கொடுக்கிறார். இதுபற்றி ஒரு வார்த்தை இல்லையே? இந்த நிர்வாக அதிகாரி அந்தத் தவ றுக்கு உடந்தையாக இருந்தாரா இல்லையா என்ற விவரம் தெரியாது. அந்தப் பதவிக்கு அவர் லாயக்கற்றவர், தகுதியற்றவர் என்று சொல்லப்பட்டிருக்கிறதா? அதைப்பற்றி அந்த எட்டு பக்கத்தோடு இன்னொரு இரண்டு பக்கம் எழுதியிருந் தால், இந்த அரசாங்கம் எடுத்திருக்கின்ற நடவடிக்கையை நான் மதிக்க முடியும். இது எல்லாம் இல்லை என்று சொல்கின்றபோது, நான் உண்மை யிலேயே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணியடித்தார்கள்)

இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைக் கூறினார்கள். அறங்காவலராக ஒரு கிருத்துவராக அமர்த்திக் கொள்வதுபற்றிக் குறிப்பிட்டார்கள். திருமாலே துலுக்க நாச்சியாரைத் திரு மணம் செய்துகொண்டு, அதற்காக 10 நாட்கள் ஸ்ரீரங்கத்திலே விழா நடத்து கிறார்கள். கலப்புத் திருமணத்தை எல்லாம் வரவேற்கின்ற நாம் அதை ஒரு குறையாகக் கருதவேண்டாம் என்று சொல்கிறேன். அப்படி ஆண்டவனே வழி காட்டியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** ஸ்ரீரங்கத்திலே இருக்கின்ற துலுக்க நாச்சியாருக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் உண்டா என்பது என்னுடைய கேள்வி.

[1982 பிப்ரவரி 18

திரு. க. இராமமூர்த்தி : ஸ்ரீரங்கத்திலே துலுக்க நாச்சியார் வழிகாட்டிய தாகச் சொல்வது தவறு. முதலிலே இன்னொன்று சொல்கிறேன். இந்து மதத்திலே உள்ள முறைகள் வேறு. மற்ற மதங்களில் வேறு விதமாக இருக் கிறது. இந்து மதத்திலே ஒரு மனிதனைப் பார்க்கின்றபோது, அவனைத் தனி ஆளாகப் பார்க்க முடியாது. அவனுடைய மனைவியோடு சேர்த்துத்தான் பார்க்க வேண்டும். அப்போதுதான் அவன் முழுமையடைகிறான். இந்து மதத்தில் திருமணத்தின்போது சில மதக் கடமைகளை செய்கின்றபோது, அவன் தனியாகச் செய்ய முடியாது. அவன் அவனுடைய மனைவியுடன்தான் இருந் தாக வேண்டும். நான் ஒரு சுலபமான உதாரணம் சொல்ல விரும்புகிறேன். தன்னுடைய மகனுடைய அல்லது மகளுடைய திருமணம் நடைபெறுகின்ற போது திருமணம் செய்து கொடுக்கின்றபோது, கணவனும் மனைவியுமாகத் தான் இருந்து செய்வார்கள். அப்படித்தான் செய்ய முடியும். கணவனோ அல்லது மனைவியோ இல்லாமல் இருந்தால், அவர்கள் செய்ய முடியாது. அவர் களின் உறவினர்கள் கணவனும் மனைவியுமாக இருப்பவர்கள்தான் அந்தக் காரியத்தைச் செய்துவைப்பார்கள். அப்படித்தான் இந்து மதத்திலே சில சட்ட திட்டங்கள், கட்டுப்பாடுகள் இருக்கின்றன. இந்த ஆலயத்தில் அறங் காவலர் குழுவினுடைய தலைவராக பல இடங்களுக்குச் செல்கின்ற வாய்ப்பு திரு. பாலகிருஷ்ணன் அவர்களுக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட அந்த மனிதர் ஒரு முழுமையான இந்துவாக இல்லை என்று சொல்கிறேன். எனக்கு மற்ற மதத்தினர்மீது கோபம் கிடையாது. இந்து மதத்திற்கு என்று தனி உணர்வு இருக்கிறது. அதற்கு மதிப்பளிக்கின்ற வகையிலே அமையவில்லையே என்பது தான் என்னுடைய வாதம்.

(பிற்பகல் 5-40)

திருச்செந்தூர் முருகன் கோவில் உண்டியலில் கை வைத்த விதம் ஒன்றை உண்டாக்கியிருக்கிறது. மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் அந்தத் தகவலைக் கொடுக்கவில்லை என்றாலும், எனக்குத் தகவல்கள் கிடைத் திருக்கின்றன. இப்போது எப்படி உண்டியலை உடைக்க வேண்டுமென்று சர்குலர்கள் போகின்றன? எந்தெந்த அதிகாரிகள் இருக்க வேண்டும், எப்படிப் பட்ட சூழ்நிலையில் உண்டியலை உடைக்க வேண்டும் என்று உத்தரவுகள் போகின்றன ? இதெல்லாம் இல்லாத நிலையிலே பலவற்றை நடத்தியிருக்கி றார்களென்று எண்ணும்போது, நான் வேதனையடைகிறேன். நான் இந்த விவாதத்தில், ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். பால் விசார ணைக் கமிஷனின் அறிக்கையின் அடிப்படையிலே அரசாங்கம் தன்னுடைய 8 பக்க அறிக்கையை அளித்திருக்கிறது. இந்த அறிக்கையைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, விசாரணைக் கமிஷன் அறிக்கையின் அடிப்படையில்



1982 பிப்ரவரி 18] [திரு. க. இராமமூர்த்தி]

முழுமையான, நியாயமான, முறையான புலன் விசாரணை நடைபெற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியது கட்டாயம், அவசியம் என்று வலியுறுத்த விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சரவர்களும், அறநிலையத் துறை அமைச்சரவர்களும், இந்த ஆட்சியின்மீது நம்பிக்கை இல்லையா, நம்முடைய காவல் துறையின்மீது நம்பிக்கை இல்லையா, மத்திய விசாரணை வேண்டு மென்று கேட்கிறீர்களே, நியாயமா என்று கேட்டபோது, எனக்கு அந்த வாதத்திலே இருந்த நியாயத்தை உணர முடிந்தது. என்னுடைய கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான திரு. கோசல்ராம் அவர்கள், சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று வலியுறுத்தியபோது, அப்படிக் கேட்க முழுமை யான நியாயம் இருக்கிறதா என்ற சந்தேகம் எனக்கு இருந்தது. அது எப்படி நியாயமானது என்பது 8 பக்க அறிக்கையைப் படித்த பிறகு, தெளி வாகியிருக்கிறது, ஒன்று, அரசாங்கம் முழுமையாக, நியாயமாக, காவல் துறை மூலமாக நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும். இல்லையென்றால் எல்லோரும் நம்புகின்ற அளவிற்கு சி.பி.ஐ. விசாரணைக்கு அனுப்ப வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாக, இதில் நீதி கோரி, நல்ல முடிவு காண தி.மு.க. தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் நெடிய பயணம் மேற்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பயணத்தை மேற்கொள்ளப் போகிறேன் என்று அவர் சொன்னபோது, நான் கொஞ்சம் வேடிக்கையாகக்கூட நினைத்தேன். முருகன் எல்லோரையும் வரவழைத்து விட்டான் என்று. முதலமைச்சரவர்களும் சொன்னார், நானும் போகப் போகிறேன் என்று. இரண்டு பேரும் முருகனைச் சென்றடையக் கூடிய காலம் வந்திருக்கிறதென்று நினைத்தேன். . . . நான் சென்று கொண் டிருக்கிறேன். போகாதவர்கள் போகும்போதுதான் முக்கியத்துவம் வருகிறது. அவர்களை வரவழைக்கும் சக்தி ஆண்டவனுக்கு உண்டு.

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கடவுள்மீது எங்களுடைய தலைவ[illegible]பிக்கை ஏற்பட்டு, நீதி கேட்டுப் போவதாகச் சொல்லுகிறார் கள். [illegible] பகுத்தறிவாளர்கள். அரசாங்கம் இந்தப் பிரச்சினையில் நியாயமான முடிவை மேற்கொள்ள வேண்டுமென்றுதான் நெடிய பயணத்தை கலைஞர் அவர்கள் மேற்கொண்டிருக்கிறார். பக்தியாலோ, கடவுள்மீது நம் பிக்கையாலோ அல்ல. கடவுள்மீது நம்பிக்கை இல்லாதவர்கள் நாங்கள்.

திரு. க. இராமமூர்த்தி : உறுப்பினர் அவர்களுக்கு நம்பிக்கை இருக் கிறதோ இல்லையோ, அதுவல்ல பிரச்சினை. முருகன் வேண்டியவர்களை எப்படியாவது வரவழைப்பான். . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இரண்டு பேரையும் வராமல் பண்ணியிருக்கலாமே.

[1982 பிப்ரவரி 18

**திரு. க. இராமமூர்த்தி :** வராமல் பண்ணி, அக்கிரமம் அதிகமாகுமென்பதால், இரண்டு பேரையும் வரவழைத்திருக்கலாம். ஒரு நியாயம் கோரி, நீதி கோரி இந்த நெடிய பயணத்தை கலைஞர் அவர்கள் மேற்கொண்டிருக்கிறார் என்று தமிழகம் உணருகிறது. நெடிய பயணத்தைத் துவக்குகிறேன் என்று அவர் அறிவித்தபோது தி.மு.க. தலைவராக இருந்து அறிவித்தார். ஆனால் இன்றைக்கு அந்தப் பயணம் தமிழக மக்களுடைய உணர்வைத் தாங்கி நடத்துகிற பயணமாக அமைந்திருக்கிறது. அதில் எந்த அளவிற்குத் தன்னை வருத்திக்கொண்டிருக்கிறார் என்பதைப்பற்றி முதல் அமைச்சரவர்களே தகவல் கொடுத்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, ஒரு நல்ல முடிவு ஏற்பட்டு, இந்த அரசும், முதலமைச்சரவர்களும், அறநிலையத் துறை அமைச்சரவர்களும் ஒத்துழைத்து, இதிலே அவர்களுடைய பங்கு எதுவும் கிடையாது என்பதால், முழுமையான நீதி கிடைக்க துணை நின்று, தமிழகத்திலே அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில், நல்ல நம்பிக்கை ஏற்பட வாய்ப்பைச் செய்து தர வேண்டும். அது ஒன்றுதான் இந்த விவாதத்தின் முடிவாக, வெற்றியாக அமையுமென்று சொல்லி, முடிக்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த அவையில் விவாதத்திற்காக வைக்கப்பட்டிருக்கிற மாண்புமிகு நீதிபதி திரு. சி. ஜே. ஆர். பால் விசாரணைக் கமிஷன் அறிக்கை மீதும், அந்த அறிக்கைக்கு மறுப்பு அறிக்கையாக அரசு வைத்துள்ள அறிக்கை மீதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே எனது கருத்துக்களை எடுத்து வைக்கிறேன். விசாரணைக் கமிஷன் அமைப்பதென்பது, மத்திய அரசின் 'கமிஷன் ஆஃப் என்கொயரி ஆக்ட்'-ன்கீழ் வரும் நெறிமுறையாகும். ஜனநாயக நாட்டிலே ஒரு பகுதியிலே அநீதி நடந்தால், அது குறித்து 2 மாறுபட்ட கருத்து வருகிறபோது, இரண்டு சாரார் இரண்டு கருத்துக்களை எடுத்து வைக்கும்போது, அதிலே உண்மையைத் தெரிந்து, அரசுச் செயல்பட வைப்பதுதான் விசாரணைக் கமிஷனின் பணியாகும். [illegible] முறையிலே விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது. அந்த விசாரணைக் கமிஷனின் அறிக்கை தரப்பட்டது. அது மட்டுமல்ல. அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதற்கு ஒரு அறிக்கை தர வேண்டும் அல்லது நடவடிக்கை எடுக்கிறபோது, அதைப் பற்றி அறிவிக்கப்படுமானால் நடவடிக்கைக்குப் பாதகமாகுமென்று அறிக்கை தர வேண்டும். அப்போது எப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லுவார்கள். இதை விடுத்து, இங்கே ஓர் அறிக்கை, பால் கமிஷன் அறிக்கைக்கு மறுப்பு அறிக்கை வைத்திருப்பதில், என்ன தார்மீக நீதி இருக்கிறதென்று அறிய விரும்புகிறேன். ஒரு [illegible] ஒரு நிர்வாகம், ஒரு அரசு இருக்கிறது. நாட்டிலே ஒரு சம்பவம் நடக்கிறது. அதை விசாரணை செய்ய ஒரு ஓய்வு பெற்ற நீதிபதி, 35, 40



1982 பிப்ரவரி 18] [திரு. ம. சங்கரலிங்கம்]

ஆண்டுகள் பணியாற்றிய நீதிபதி; நீதிபதி என்ற நிலையிலே சிறந்த புகழ் பெற்றவர்; ஒரு வழக்கிலே நீதிபதியாக இருந்தபோது, தன்னுடைய உறவினர் அதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று இன்னொரு கோர்ட்டுக்கு மாற்றிக் கொண்டவர், நியமிக்கப்பட்டார். திருச்செந்தூரிலே அந்தச் சம்பவம் 26 ஆம் தேதி நடைபெற்றது.

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை.)

ஒரு சாராரால் தற்கொலை என்று சொல்லப்படுகிறது. ஒரு சாராரால் கொலை என்று சொல்லப்படுகிறது. அதை ஆராய்ந்து அறிக்கை தாருங்கள் என்பது ஒன்று. இரண்டு, அவர்கள் விசாரித்து, அரசோடு தொடர்பு கொண்டு, அரசு அதிகாரிகளின் உதவி பெற்று, மக்களை அழைத்து விசாரணை செய்து, எல்லா விதமான பிரச்சினைகளையும் அவரிடம் எடுத்துச் சொல்லி, அதற்குப் பிறகு ஓர் அறிக்கையை அவர் தந்து, அரசுக்கு ஒன்றைச் சொல்லியிருக்கிறார். 'இது கொலை என்று நான் கருதுகிறேன்' என்று. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்களும் சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகையில் படித்தோம், "கொலை என்றும் சொல்லவில்லை, தற்கொலை என்றும் சொல்லவில்லை, அதைக் கண்டுபிடிக்க சி.ஐ.டி. அனுப்புகிறோம்" என்று. இது உண்மைக்கு மாறானது. அப்படியல்ல. அவர் 'கொலை'தான் என்று சொல்லியிருக்கிறார். எப்படி என்று கேட்கலாம்? எங்கே சொல்லியிருக்கிறது, விளக்குங்கள் என்று சொல்லலாம். அந்த அறிக்கையைப்பற்றி நேற்றுகூட மாண்புமிகு முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். கமிஷன் நியமித்து 6 மாதங்கள் கழித்து அந்த அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது, இதற்கு முந்தைய அரசு பல கமிஷன்களை நியமித்தாலும், 10 மாதங்கள், 12 மாதங்கள், 13 மாதங்கள் கழித்துதான் அறிக்கை வைத்தார்கள் என்று பட்டியல் போட்டுச் சொன்னார்கள். அவைகளெல்லாம் அரசு செயல்படுகிற விதத்திலே, அரசு இயந்திரம் இயங்கும் விதத்திலே ஒரு பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் ஏற்பட்டதால், போலீசார் துப்பாக்கிப் பிரயோகம், லத்தி சார்ஜ், பலரைக் கைது செய்வது போன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபடும்போது, மக்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டால், போலீசார் அனாவசியமாகச் செய்தார்கள்; கண்ணீர் புகையில் தீர்ந்திருக்கும்; லத்தி சார்ஜில் தீர்ந்திருக்கும், முன் ஏற்பாடு செய்திருந்தால் பிரச்சினை தீர்ந்திருக்கும் என்ற பல கோரிக்கைகள் வைக்கப்படும்போது, அதற்காக கமிஷன்கள் நியமிக்கப்பட்டன. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கமிஷன்கள் நியமிக்கப்பட்ட உடனே சம்பந்தப்

(பிற்பகல் 6-50)

பட்ட அதிகாரிகளை 'சஸ்பெண்ட்' செய்திருக்கிறோம். போலீஸ் அதிகாரிகள் மீது பாளையங்கோட்டையில் ஓர் துநாதன் இறந்தபோது விசாரணைக்

கமிஷன் நியமிக்கப்பட்டது. அதுபோல் கோயம்புத்தூரில் விரும்பத்தகாத நிகழ்ச்சி நடந்தபோது, விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டது. அதுபோல அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற சம்பவத்திற்கும் விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டது. ஆனால், மக்கள் அதுகுறித்து குறையாகச் சொன்ன இடத்தில் எல்லாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உடனடியாக 'சஸ்பெண்ட்' செய்திருக்கிறோம் அல்லது 'டிரான்ஸ்பர்' செய்திருக்கிறோம். அறிக்கை வந்த உடனே சில வாரங்களுக்குள்ளாக நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதன் பிறகு விசாரணை நடத்தியிருக்கிறோம். கமிஷனின் அறிக்கை வர தாமதமானாலும் கூட, மக்கள் குறையாகக் கருதிய இடங்களில் எல்லாம் உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். பாளையங்கோட்டை சம்பவத்தைப் பொறுத்தவரையில் கூட, அதுசம்பந்தப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர், போலீஸ்காரர்கள் இன்னும் சம்பந்தப்பட்டவர்கள் எல்லாம் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டார்கள். அங்கு நடைபெற்ற கலாட்டாவில் ஓர்துநாதன் என்ற மாணவன் தாமிரபரணி ஆற்றில் மூழ்கி இறந்தான் என்று சொல்லப்பட்டது. சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகள் எல்லாம் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டு பிராசிகியூசன் செய்யப்பட்டு, கேஸ் நடத்தி அவர்களுக்கு தண்டனை வாங்கிக் கொடுத்துள்ளோம். அறிக்கை வைப்பது என்று சொன்னால், அதுகூட 1971-க்கு பிறகு தான் கொண்டுவரப்பட்டது. 1971 ஆம் ஆண்டு 79 வது அமெண்ட்மெண்ட் போடப்பட்டு அமுலுக்கு வந்தது. அது வந்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்தான். மத்திய அரசுதான் அதை முதலில் கொண்டு வந்தது. அதைத்தான் நாங்களும் கொண்டு வந்தோம். அதன் மீது நடவடிக்கை உடனடியாக எடுத்துக் கொண்டு வந்திருக்கிறோம். அதுபற்றி இங்கும் பேரவையிலும் விவாதித்துக்கூட இருக்கிறார்கள். இதுபோல் எந்த ஒரு குற்றச்சாட்டுக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளானது இல்லை. அதாவது கமிஷன் அறிக்கையை வைப்பது குறித்து இதுவரை எந்தவிதமான குற்றச்சாட்டும் வந்தது இல்லை. இங்கே அவை கூடுகிறபோது, அந்த அவையில் வைக்க வேண்டும். அதற்கு முன்பு என் பேரவை எதிர்க் கட்சித் தலைவர் வெளியிட்டார், அதனால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எவை எவை போன்ற விவரங்களும் இதில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த சம்பவம் 26 ஆம் தேதி நடைபெற்றது. அந்த ஊர் மக்கள் அனைவரும், அறங்காவலர் குழுத் தலைவர் தவிர மற்ற அனைவரும் ஒன்று கூடி, அது கொலை என்று சொல்லி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அன்றைக்கு அங்கு முழு கடையடைப்பு நடத்தினார்கள். ஒரு கடை கூட திறக்கவில்லை. தண்ணீர் குடிக்கலாம் என்றால் கூட, ஒரு காபி கடையும் கூட திறக்கவில்லை. அறங்காவலர் குழுவின் தலைவராக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தவர் இருப்பதால், அவருக்கு ஆதரவாக பாதி கடைகளாவது திறந்திருக்க வேண்டாமா? ஆனால்





ஒரு கடை கூட திறந்திருக்கவில்லை. திருச்செந்தூரிலுள்ள அத்தனை ஊர் மக்களும் அதை கொலை என்றே நம்பினார்கள். 26, 27, 28, 29 வரை எல்லாப் பகுதிகளிலும் கிளர்ச்சி நடந்தது. சென்னையிலே கூட அறங்காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகளும், ஊழியர்களும் ஊர்வலம் வந்து மனு கொடுத்தார்கள். மாநிலம் பூராவும் அதுகுறித்து போராட்டம் நடந்தது. அதற்குப் பிறகு தான் இந்த மாநிலத்தின் எதிர்க் கட்சித் தலைவர் அதாவது 3 ஆம் தேதி டாக்டர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சருக்கும், ஆளுநருக்கும் பிரதமருக்கும் ஒரு தந்தி அனுப்புகிறார். இதைக் கூட எதிர்க் கட்சி செய்யக் கூடாதா ? இந்த மாநிலத்தில் ஒரு பகுதியில் தன்னுடைய கடமையை ஆற்றப் போன ஒரு அதிகாரியை—சாதாரண கடமை அல்ல அது—சாதாரணமாக ஒரு கோர்ட்டுக்கு சாட்சி சொல்லப் போகிற ஒருவரைக் கூட அதிகாரி என்கிறோம்—அதுவும் லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள வைரம் இருக்கக் கூடிய அறுபடை வீட்டில்—முருகன் குடியிருக்கின்ற திருச்செந்தூர் ஆலயத்தில் பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான உண்டியல் திறக்கப்படும்போது, சரிபார்க்கும் அதிகாரியாகப் போன ஒருவரை அவருடைய பணியைச் செய்ய விடவில்லை என்றால், அது ஒரு சாதாரண நிகழ்ச்சியா ? இன்றைக்கு இந்த நாட்டிலே உங்களோடு இருக்கிற அதிகாரிகள் உங்களுக்கு பயந்துகொண்டு, எப்படி உண்மைகளைச் சொல்ல பயந்துகொண்டு பாதுகாப்பை உணர்ந்து இருக்கிறார்கள் என்பதை மட்டும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அறநிலையத் துறையிலுள்ள பெரிய பெரிய அதிகாரிகள் கூட, அமைச்சர்கள் கூட இது தற்கொலைதான் என்று சொல்ல வேண்டிய சூழ்நிலை ஏன் ஏற்பட்டது? இதுகுறித்து ஒன்றைச் சொன்னார்கள். "திராவிட முன்னேற்றக் கழகம் இதை கொலை என்று சொல்லிவிட்டதால், நாங்கள் இதை 'தற்கொலை' என்று சொல்ல வேண்டிய நிலைக்கு வந்திருக்கிறோம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கொலை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகி, கட்சிக்கு இழுக்கு வந்து விடக் கூடாது" என்கிற விதத்தில் சொல்வது மாதிரி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரவையில் சொல்லியிருப்பதாக நான் பத்திரிகையில் பார்த்தேன். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் 3 ஆம் தேதி தந்தி கொடுத்ததில் குறைபாடு ஒன்றும் இல்லை. ஆனால் அவர் பத்திரிகையில், "அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தவர் கொலை செய்து விட்டார்கள் என்று சொன்னதால், "நான் 4 ஆம் தேதி நேராக தலைமைச் செயலகம் வந்து, அவைக்கு வந்து, வந்த அறிக்கையின் அடிப்படையில், அமைச்சர் என்ற முறையில் இல்லாமல், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவன் என்ற முறையில், அவ்வாறு சொன்னேன்" என்று அவர் சொன்னதாகப் பார்த்தேன். அதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரைக் கொண்டு சொல்ல வைத்திருக்கலாமே. அத்தகைய உணர்ச்சி அல்லது ஆத்திரம் அமைச்சருக்கு

வந்தது என்றால், அவர் ராஜிநாமா செய்து விட்டு, அப்படிப்பட்ட அறிக்
கையை விட்டிருக்கலாமே. தன்னை மறந்து, தன் பொறுப்பை மறந்து,
அமைச்சர் என்ற பொறுப்பை மறந்து, குற்றவாளியைக் காப்பாற்றப் போய்
விட்டாரே அமைச்சர் என்று நாட்டிலே மக்கள் சொல்லுகிறார்கள். இப்படி
நான் சொல்கிற நேரத்தில், இதிலுள்ள நியாய உணர்வை ஒரு கணம் புரிந்து
கொள்ள வேண்டும் என்று சொல்வதில் ஒன்றும் தவறு இல்லை. எங்களுக்கு
பிணத்தை வைத்து அரசியல் பண்ண வேண்டிய அவல நிலை என்றைக்கும்
இல்லை. ஆட்சி பீடத்தில் இருப்பதுதான் எங்களுடைய பணி என்று நாங்கள்
என்றைக்கும் நினைக்கவில்லை. அப்படி நினைத்திருந்தால், எங்கள் தலைவர்
டாக்டர் கலைஞர் அவர்கள் ரத்தம் கொட்டக் கொட்ட, வியர்வையைத்
தாங்கிக் கொண்டு, பல்வேறு துன்பங்களைத் தாங்கிக்கொண்டு இன்றைக்கு
நடத்திக்கொண்டிருக்க மாட்டார்கள். இந்த நாட்டு மக்களுடைய உணர்வை,
உரிமையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எதிர்க் கட்சிக்காரர்கள்,
எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் எங்கள் தலையில்
மக்களால் சுமத்தப்பட்டிருக்கிறது. அத்தனை சீட்டுகளும் எங்களுக்குக்
கிடைக்காமல் போயிருந்தால், நாங்கள் சட்டமன்றத்திற்கு வராமல்
இருந்திருந்தால் கூட, அவ்வளவு பொறுப்பில்லை. ஆனால் இந்த
நாட்டு மக்கள் எங்கள் தலையிலே எதிர்க் கட்சி ஆளும்
கட்சிக்கு நேர் எதிரான கட்சி என்ற பொறுப்பினைக் கொடுத்து,
நாங்கள் எதிரில் உட்கார்ந்து ஆளும் கட்சி தவறுகள் செய்யும்போது, அந்தத்
தவறுகளைச் சுட்டிக்காட்டி அவற்றை நிவர்த்திக்க, அவற்றுக்குத் தீர்வு காண
சொல்லுவதற்கான பொறுப்பினை எங்களிடத்தில் தந்திருக்கிறார்கள்.
எங்களுக்கு மக்கள் தந்த கட்டளையை ஏற்றுத்தான், 3 ஆம் தேதி எங்கள்
தலைவர் தந்தி கொடுத்தார். அதுமட்டுமல்ல. நாட்டு மக்கள் அனைவரும்
நீதி விசாரணை வேண்டுமென்று கிளர்ச்சி செய்தார்கள். அதற்கு ஆதரவாக
எல்லா அரசியல் கட்சிகளும்—குறிப்பாக தார்மீகமாக உங்களுக்கு ஆலோசனை
சொல்லிக்கொண்டு இப்போது இருக்கின்ற கட்சிகள் உட்பட—அல்லது ஆதரவு
தந்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருந்த கட்சிகள் உட்பட
—எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து அந்தப் போராட்டத்தை ஆதரித்தார்
கள். அதற்குப் பிறகுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப்
பகுதிக்குப் போனார்கள். விசாரணைக் கமிஷன் போடப்பட்டது. அந்த
அளவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறோம். அப்படிப்
போட்ட பிறகு நாங்கள் அதைப்பற்றிப் பேசவில்லை. யாரும், எங்களைப்
பொறுத்தவரையில், பேசவில்லை. ஆனால் அரசு என்ன செய்திருக்க
வேண்டும்? அரசுத் தரப்பில் ஒரு நல்ல வழக்கறிஞரை அனுப்பி இரண்டு
[illegible] நடுநிலையோடு இருந்து, எந்தப் பகுதிக்கும் ஆதரவாகச் செய்யாமல்
[illegible] நடவடிக்கையில் அவர் ஈடுபட்டிருக்க வேண்டாமா? அறநிலை



யத் துறை சார்பாக, போலீஸ் துறை சார்பாக செட்டியார் ஒருவரை, பெரிய
வழக்கறிஞர் ஒருவரை அரசு அனுப்பியது. அவர் போலீஸ் துறைக்காக, அற
நிலையத் துறைக்காக வாதாடினார். இதுதான் நாட்டிலே நடந்த பெரிய
அநீதி. காவல் துறை நடுநிலையோடு இருந்திருந்தால், நீதியைக் கண்டிருக்க
முடியும். போலீஸ் அதிகாரியே முதலில் எழுதியதை மாற்றி விட்டு, பிறகு
இடையிலே வேறு இரண்டு பேப்பரை எழுதி ஒட்டியிருக்கிறார். அறநிலையத்
துறையில் உள்ள அதிகாரிகளும் மற்றும் 'அ' பகுதியினர் அனைவரும் ஒரு
'ஸ்டாண்ட்' எடுத்துவிட்டார்கள். அரசும் தன்னுடைய முழு சக்தியையும்,
முழு ஆற்றலையும், தார்மீக ஆதரவு அத்தனையையும் 'அ' பகுதியினருக்குக்
கொடுத்தது. 'அ' பகுதியினர் குறிப்பிடுவது தற்கொலை என்பது. அவர்கள்
30 பேர் 'அஃபிடவிட்' கொடுத்திருக்கிறார்கள். 11 பேர் தான் சாட்சி
கொடுத்திருக்கிறார்கள். 'அ' பகுதியினர் என்று சொல்லும்போது, அறநிலை
யத் துறையிலுள்ள அதிகாரிகள் முதல் ஊழியர்கள் வரை, போலீஸ் அதிகாரி
கள் முதல் காவலர்கள் வரை, முன்னால் போனவன் முதல் பின்னால் போன
வன் வரை எல்லோரும் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். குறுக்கீட்டு

(பிற்பகல் 7-00)

விசாரணைக்கு அனுமதித்திருக்கிறோம் என்று மனம்போலச் சொல்லி அனு
மதித்திருக்கிறார்கள். 'ஆ' தரப்பிலே உள்ளவர்கள் 'அஃபிடவிட்' கொடுத்திருக்
கிறார்கள். விசாரணை முடிந்து இப்போது ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. நடு
நிலைமை உள்ளத்தோடு சொல்வதாக இருந்தால், அந்தத் தீர்ப்பை வாங்கி,
"இப்படி தீர்ப்பு வந்திருக்கிறது, அதன் அடிப்படையிலே நீங்கள் நடவடிக்கை
எடுங்கள்" என்று போலீஸ் துறைக்கு அனுப்பியிருந்திருக்கலாம். ஒரு
'மெமோ' மாத்திரம், தலைமைச் செயலாளர் அவர்கள் 4 வரிகளிலே போட்டு
அனுப்பியிருக்கலாம். நீதியான, நேர்மையான, நடுநிலைமையோடு செயல்
படும் அரசு என்று சொன்னால், அப்படித்தான் அவர்கள் செய்திருப்பார்கள்.
அதற்குப் பிறகு அந்த அறிக்கையிலே என்னென்னவெல்லாம் அரசுக்குச்
சாதகமாகப் போட்டிருக்கிறதோ அவற்றையெல்லாம் எடுத்து—மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இப்போது பேசியபோது சில
பத்திரிகைகளை யெல்லாம் வைத்துக்கொண்டு அவற்றிலே வந்த செய்திகளை
யெல்லாம் சொன்னார்களே, 'இந்தப் பத்திரிகைகளில் முன்னாலே உள்ளதை
[illegible] பின்னாலே உள்ளதைப் போடுகிறார்களே' என்று
சொன்னார்களே, அதைவிட மிகவும் மோசமாக—மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் கடந்த மூன்று நாட்களாக இந்த அவையிலே ஒரு தார்மீக உணர்
வோடு செயல்பட வேண்டும் என்றெல்லாம் சொன்னார்களே, அதற்கு நேர்
மாறாக பத்திரிகைகளுக்கு அந்த உணர்வு வேண்டும் என்று சொன்னார்களே,
அந்த உணர்வுக்கு நேர்மாறாக,—நாட்டுமக்களுடைய [illegible]

தாழ 1,500 கோடி ரூபாய் பணத்தை கையிலே வைத்துக்கொண்டு மக்கள் நலனுக்காகச் செயல்படும் இந்த அரசு இப்படியொரு அறிக்கையை வைக்கலாமா? உலக வரலாற்றைப் பார்ப்போமானால், உலகத்திலேயே இரண்டு வரலாறு தான் உண்டு. ஜனநாயக அரசு ஒன்று, மற்றொன்று தொழிலாளர்களுடைய ஆட்சி. சர்வாதிகார ஆட்சி கூட அவ்வப்போது சில இடங்களிலே வரும். அங்கேயெல்லாம், சர்வாதிகார ஆட்சி நடக்கும் இடங்களிலேயெல்லாம் கமிஷன்கள் கிடையாது. அப்படி வைத்தாலும்கூட, 'இல்லை' என்று சொல்லி விடுவார்கள். அவர்களின் நிலைமை வேறு. அரசு இந்தக் கமிஷன் ரிப்போர்ட்டை ரத்து செய்கிறோம்' என்று சொல்லியிருந்தால்கூட, ரொம்பப் பொருத்தமாக இருந்திருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னும் தெளிவாக்க வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். "அந்த ஐயப்பாடுகளையெல்லாம் தெளிவாக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்" என்று சொன்னால் கூட ஒத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. கோபாலகிருஷ்ணன் சாட்சி சொன்னால், அவர் சொன்னது தவறு மாதிரி இருக்கிறது. இதிலே சில சரியாக இருக்கின்றன, சில தவறான முறையில் இருக்கின்றன, பாருங்கள் என்று கூட சொல்லியிருக்கலாம். இப்போது காவல்துறையிடம் கொடுத்து நடவடிக்கை எடுக்கச்சொல்லியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அறிக்கையைப் பொறுத்தவரையில், இரண்டு விஷயங்கள் தான் இருக்கின்றன. ஒன்று காவல் துறையினரிடம் 'தற்கொலை' என்று சொல்லச் சொல்லி வேண்டுவது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இதுசம்பந்தமாக புள்ளிவிவரங்களுக்குள்ளேயெல்லாம் போயிருக்கிறார்கள், ஆனால் நாங்கள் சொன்னால் குறையாக இருக்கும். அவர்கள் நடுநிலைமையோடு சொல்கிறார்கள். அவர்கள் ஆளும் கட்சியோடு இருக்கிறவர்கள், அவர்களுக்கு ஓட்டு போடுகிறார்கள். சி.பி.ஐ. வேண்டாம், மாநிலப் போலீஸ் போதும் என்று கேட்கிறார். இவ்வளவுக்கு நிலைமைகள் நடைபெற்ற பிறகும், ஆளும் கட்சியினர் மீது அவருக்கு நம்பிக்கை இருக்கிறது. அது 'பாலிசி'-யாகக்கூட இருக்கலாம். பாலிசிக்குக் கூட சொல்லியிருக்கலாம்.

திரு. ஆ. நல்லசிவன் : பாலிசிக்காக அல்ல. இந்த வழக்கை சி.பி.ஐ.-யிடம் கொடுத்தால், நகர்வாலா கேசிலே என்ன நிலைமை இருந்ததோ அதுபோன்ற நிலைமைகள் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் அப்படிச் சொன்னேன்.

திரு. ம. சங்காலிங்கம் : நான் சொல்லும் வாதத்திற்கு வலுவூட்டும் வகையிலே சொல்கிறேன், ஆளும் கட்சிக்கு ஆதரவாக இருக்கும், ஆதரவு தந்து கொண்டிருக்கும் அவர்களேகூட என்ன சொல்கிறார்கள்? அரசு இதை இப்படி போலீசுக்கு ஒரு வழிகாட்டியாகத்தான் கொடுத்திருக்கிறது என்று சொல்கிறார். இந்த அறிக்கையைப் பொறுத்தவரையில், 15-வது பாரா தான் மிகவும் முக்கியமான ஒன்று. பாக்கி இருக்கும் பாராக்கள் எல்லாம் அந்த 15-வது





பாராவிற்கு வலுவூட்டக்கூடிய பாராக்களாகத்தான் இருக்கின்றன. நடந்திருக்கும் இந்த சம்பவத்திற்கு இரண்டேயிரண்டு முகம். ஒன்று, தற்கொலை, அது இல்லை என்று சொன்னால், கொலை. அவர் தன்னுடைய வீட்டிலிருந்து காலையிலேயே புறப்பட்டுப் போயிருக்கிறார். 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை நிருபரின் மோட்டார் சைக்கிளிலே போய் களவு செய்யப்பட்டிருக்கிறது என்ற செய்தி வந்துகொண்டே இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு [illegible]கள் இப்போது நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. எவனுடைய மோட்டார் சைக்கிளையே தூக்கிக்கொண்டு போய், ரோட்டிலே போய்க்கொண்டிருக்கும் பெண்களின் கழுத்திலிருந்து 25 அல்லது 30 சவரன் நகையைப் பறித்துவிட்டு அந்த மோட்டார் சைக்கிளையும் எங்கேயாவது போட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். இந்தப் போலீஸ்காரர்கள் போய் அந்த மோட்டார் சைக்கிளை எடுத்துப் பார்த்து, இது 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ரிப்போர்ட்டரின் மோட்டார் சைக்கிள், அவர்தான் களவு செய்திருப்பார் என்ற அளவிலே ரிப்போர்ட்டுகள் வருகின்றன. எனக்கிருக்கும் கவலையெல்லாம் அவர் தற்கொலை செய்து கொள்ளக்கூடாது என்பதுதான். இப்போதும் இந்த நாட்டிலே மானம் உள்ளவர்கள் கொஞ்சம் பேர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். நான் ஒத்துக் கொள்கிறேன், அப்படி மானம் உள்ளவர்கள் இருப்பதும் தவறு தான். அவர்கள் அப்படி இருக்கக் கூடாது தான். அவர்கள் தற்கொலை பண்ணிக்கொள்ளக் கூடாது என்றுதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கும்போது, கேட்க நினைத்தேன். ஆனால் காரியம் வெற்றி பெறவில்லை. இந்தக் கொலையைப் பார்த்தால், அந்த மோட்டார் சைக்கிளிலே போய் நடைபெற்ற களவு போலத்தான் இதுவும் சொல்லப்பட்டிருக்கிறது. நடு ரோட்டிலே, பஸ்-ஸ்டாண்டிலே பொதுமக்கள் பலரும் பார்த்துக்கொண்டிருக்கும்போது, பட்டப் பகலிலே, மோட்டார் சைக்கிளிலே போய் இப்படிப் பண்ணுகிறான் என்று சொன்னால், அவன் எல்லாம் எங்கே போய் டிரெயினிங் எடுத்திருப்பான் என்று கண்டுபிடிக்க வேண்டும். அதுபோலத் தான் இந்த சுப்பிரமணியப் பிள்ளையும் பெரிய டிரெய்னிங் எடுத்திருக்கிறார் என்று நம்புகிறேன். இவ்வளவு பேர் பணத்தை எண்ணிக்கொண்டிருக்கிறார்கள், நூற்றுக் கணக்கான மக்கள் அங்கே இருக்கிறார்கள், அறங்காவல் குழுவைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள்; அங்கேயும் பொழுது பட்டப்பகல், இவர் என்ன செய்கிறார்? ஒரு நோட்டை எடுக்கிறார், சொருகுகிறார், இன்னொரு நோட்டை எடுக்கிறார், வேஷ்டியில் இந்தப் பக்கம் சொருகுகிறார், இன்னொன்றை அந்தப் பக்கம் சொருகுகிறார், எடுக்கிறார் பாத்-ரூம் போகிறார், திரும்பவும் வருகிறார், எடுக்கிறார், போகிறார் என்று சொன்னால், அவருக்கு எவ்வளவு துணிவு இருக்கும்; அப்படிப்பட்ட ஒருவர் தற்கொலை பண்ணிக்கொள்வாரா? சாதாரணமாக கிராமங்களிலே சொல்வார்கள், 'பாட்டிகூட, கணக்கு காட்டாமலேயே நம்புவார்கள்' என்று.

[திரு. ம. சங்காலிங்கம்] [1982 பிப்ரவரி 18

சட்டம் பேசலாம், வழக்கறிஞர்கள் இருப்பார்கள்; தார்மீகமாக இதற்கு ஆதரவு கிடைக்குமா? கொலையா? தற்கொலையா? களவு நடந்திருக்கிறதா? இல்லையா? களவு செய்திருக்கிறார் என்று 'ப்ரூப்' ஆகிவிட்டது என்று சொன்னால், அது தற்கொலை, இல்லையென்று சொன்னால் அது கொலை தான். அரசு வைத்திருக்கும் இந்த அறிக்கையின் 15-வது பாராவிலே மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் சொல்லி யிருக்கிறார், இந்த நாட்டுக்கும் சொல்லியிருக்கிறார் 'நாங்கள் ஒன்றும் மறுக்க வில்லை, இந்த பால் கமிஷன் அறிக்கையை நாங்கள் ரத்துசெய்யவில்லை, அதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம்; ஆனால் சில சந்தேகங்கள் எங்களுக்கு வந்தன, அந்தச் சந்தேகங்களின் அடிப்படையிலேதான் விசாரணை செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறோம்' என்று சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கோர்ட்டிலே போய் இந்தக் குற்ற வாளிகள் தப்பிக்கக்கூடாது என்று விசாரணை செய்யச் சொல்லியிருக்கிறோம் என்று சொல்கிறார். அவர்களுடைய நோக்கம் அப்படி இல்லை. பக்கம் 5-லே சொல்லியிருக்கிறார்கள், "எனவே உண்டியல்கள் அவர்கள் முன்னாலேயில்லா மல் எப்போதுமே திறக்கப்படவில்லை என்று தெளிவாகிறது" என்று. நான் கேட்கிறேன், "உங்களுக்கு என்ன மாரல் அத்தாரிட்டி இருக்கிறது? ஒரு கமிஷன் அறிக்கையின் மீது நாங்கள் ஆக்ஷன் எடுக்கமாட்டோம் என்று சொல் லுங்கள்; உங்களுக்கு தப்பு செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது; எங்களுக்கு மக்கள் ஆதரவு இருக்கிறது, நாங்கள் எதைச் சொன்னாலும், செய்தாலும் மக்கள் நம்புவார்கள் என்று சொல்லுங்கள். ஆனால் இந்த அவைக்கும், அந்த அவைக்கும், இந்த நாட்டு மக்களுக்கும் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமைச் செயலாளராக இருந்துகொண்டு கையெழுத்துப் போட்டு ஒரு அறிக்கை இப்படி வருகிறது என்று சொன்னால், நீங்கள் யார்?" இதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு சட்டப் பிரச்சினை யாகக் கூட கிளப்பினார்கள். ஒரு நீதிபதி, 35 வருஷம் சர்வீஸ் உள்ளவர், எல்லாத் தவறுகளையும் எடுத்துச்சொல்லி, சாட்சிகளின் வீக்னெஸையும் எடுத்துச்சொல்லி தீர்ப்பு தருகிறார்; இந்த சாட்சியை மறுக்கிறேன், இதை நம்புகிறேன், இது தற்கொலை என்று நான் நம்பவில்லை என்றெல்லாம் சொன்னதற்கு அரசினர் பிறகு ஏன் இப்படிச் செய்கிறார்கள்? 'உண்டியல் அவர் முன்னிலையில் அல்லாமல் எப்போதும் திறக்கப்பட்டதில்லை' என்று சொல்லும் நிலை இருக்கும்போது, அந்த 'ஆ'-வன்னா பிரிவைச் சார்ந்தவர்கள் சொல்வதுபோல ஏன் இவர் வருவதற்கு முன்பே உண்டியலைத் திறந்துவிட் டார்கள்



1982 பிப்ரவரி 18] [திரு. ம. சங்காலிங்கம்]

(பிற்பகல் 7-10)

"பலமான காயத்தால் அவர் மரணமடைந்திருக்கிறார் என்று நம்பு கிறேன்" என்று அவர் தெரிவித்த பிறகும், அதை ஏற்க மறுத்து இறந்த சுப்பிரமணியப் பிள்ளையின் முன்னால்தான் உண்டியல் திறக்கப்பட்டது என்றும், அவர் வருவதற்குமுன் எப்போதும் உண்டியல் திறக்கப்பட்டதுமில்லை என்றும் சொல்லுகிறார்கள் என்றால் எப்படி நம்புவது? 'இ' தாப்பின் கேஸ் என்ன? அவர் வருவதற்கு முன்னால் உண்டியல் திறக்கப்பட்டுவிட்டது என்பதுதான். அந்த ஊரில் உள்ளவர்களைக் கேட்டால், அவர் வருவதற்கு 6 நாட்களுக்கு முன்னாலேயே உண்டியல் திறந்தாகிவிட்டது என்கிறார்கள். நான் இதற்கு மேல் இப்போது போகாமல் அடுத்ததற்கு வருகிறேன்.

தற்கொலையைப் பார்த்ததாகச் சொல்லப்படும் தோட்டி ஆறுமுகம் எங்கே போனான்? அவனைக் கண்டுபிடிப்பது என்னவாயிற்று? அதுமட்டுமல்ல, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த குன்றிமலையான் என் பவர் அஃபிடவிட்டு கொடுத்த பின்னர் மறைந்துவிட்டார். அறங்காவலர் குழுத் தலைவருக்காகப் பயப்படுகிறேன் என்று சொல்லியிருக்கிறார். அவரை யாவது சி.ஐ.டி.க்களை அனுப்பி கண்டுபிடித்திருக்கலாமே, அதையாவது செய்தார்களா? அங்கே பொது ஜனங்களிலே ஒருவர் இது "தற்கொலை, தற் கொலை" என்று சொல்லிக்கொண்டே ஓடி வந்தானே, அவனையாவது கண்டு பிடிக்க வழி செய்திருந்தால், அரசைப் பாராட்டியிருக்க முடியும், அரசினர் நல்லெண்ணத்தில்தான் செயல்பட்டிருக்கிறார்கள் என்று எண்ண முடியும். அதைச் செய்யாதது மட்டுமல்ல, இது தெளிவாகத் தற்கொலை தான் என்று முடிவு சொல்லி, திரும்பத் திரும்ப அதை வலியுறுத்துகிறார்கள் என்றால், என்ன அர்த்தம்? இது எப்படி இருக்கிறது என்றால், "எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை" என்று சொல்லுவதைப்போல் இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் எந்த சந்தேகத்தை மேற்கொண்டார்களோ, அந்தச் சந்தேகம் உண்மையானதுதான், நாங்கள் அப்படித்தான் செய்திருக்கிறோம் என்ற வகையில் அரசினர் நடந்து கொண் டிருக்கிறார்கள். இந்த நாட்டு மக்கள் முன்னால் இன்றைக்கு இப்படி ஒரு அறிக்கையை வைத்திருக்கிறார்கள். அரசுக்கு எந்த அதிகாரிதான் இந்த யோசனையைச் சொல்லித் தந்தாரோ தெரியவில்லை, அந்த அதிகாரிக்குப் பாராட்டு விழா நடத்த வேண்டும். சட்டம் படித்த ஒரு அதிகாரி இப்படி ஒரு அறிக்கையை வைக்கலாம் என்று எப்படித்தான் சொல்லித்தந்தாரோ, எனக்குப் புரியவில்லை. அரசு தான் வைக்க வேண்டும் என்று விரும்பினாலும் சட்டம் படித்த அவர் சொல்லியிருக்க வேண்டாமா? 'வேண்டாம். இது தற் கொலைக்கு ஒப்பானது. நம்மை நாமே காட்டிக் கொடுத்தது போலாகிவிடும்' என்று சொல்லி தடுத்திருக்க வேண்டாமா?

[திரு. ம. சங்கரலிங்கம்] [1982 பிப்ரவரி 18

ஒன்றைச் சொல்வார்கள். ஆத்திரம் கண்ணை மறைக்கும் என்பார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களைக் கொலைகாரர்கள் என்று சொல்லிவிட்டார்களே என்று உங்களுக்கு ஆத்திரம் வந்துவிட்டது. அதனால்தானே அறிக்கையெல்லாம் விட்டீர்கள். ஆத்திரம் வருகிறபோது, நாம் நிதானம் இழக்கிறபோது, அறிவு போய்விடுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது அல்ல, பழைய காலத்திலிருந்தே சொல்லப்படுகிறது. அது உங்களுக்குத்தான் சொல்லப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். நீங்கள் தான் ஆத்திரத்தில் செய்தாலும், சொன்னாலும், இதை அந்த அதிகாரி செய்யலாமா? உங்களைப் பாதுகாப்பதற்குத்தானே இந்த அரசாங்கம் இருக்கிறது. நீங்கள் சொன்னாலும், அந்த அதிகாரி இதைச் செய்யக்கூடாது என்று சொல்லக்கூடாதா? நீங்கள் சொல்வதை அப்படியே ஏற்றுக் கையெழுத்துப் போடுவதற்காகவா ஒரு அதிகாரி, நமது நாட்டில் ' "Men may come and men may go but we go on for ever என்று அதிகாரிகளைப்பற்றிச் சொல்வார்கள். துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக இந்த நாட்டில் உள்ள உயர் அதிகாரிகளுக்கும், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கும் இந்த நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருக்கிற பிற அதிகாரிகளுக்கும் ஜனநாயகத்தின் பேரால் ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். இந்த நாட்டை ஆளுகிற கட்சியாக யார் இருந்தாலும் சரி—இன்று நீங்கள் இருக்கலாம், நாளை இன்னொருவர் வரலாம், அல்லது நாங்களே வரலாம் அல்லது நான்கு பேராகச் சேர்ந்து கொண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வரலாம்—இப்படி ஆட்சிப் பொறுப்புக்கு யார் வந்தாலும் இந்த நாட்டில் தர்மத்தைக் காக்க வேண்டியவர்கள் அதிகாரிகள்தான். இப்படிப்பட்ட பொறுப்பில் இருக்கிறவர்கள் அதிகாரத்திற்கு வருகிறவர்கள் எதைச் சொல்லிக் கையெழுத்துப் போடச் சொன்னாலும், போடுவது என்றால், "இந்த நாடு எங்கே போய் நிற்கும் என்று நினைத்துப் பார்க்க வேண்டும். இந்த நிலைமை நாட்டிற்கே நல்லதல்ல என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, அறங்காவலர் குழுவைக் கலைக்க முடியாது என்பதற்கு கொஞ்சநஞ்சமான வாதங்களையா எடுத்து வைத்திருக்கிறார்கள்? அது சட்டச் சிக்கல் வாய்ந்தது என்று நீதிபதி பால் அவர்கள் அப்போது குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் இந்த வகையில் அரசுக்கு இருக்கிற அக்கறையைப்போல் வேறு யாருக்கும் இருக்க முடியாது. ஏனென்றால் குற்றவாளிகள் தப்பக்கூடாது என்பதில் அரசை விட அக்கறை உள்ளவர்கள் வேறு யாரும் இல்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அறங்காவலர்களைக் கொலைகாரர்கள் என்று சொல்லி விட்டால், ஆத்திரப்படுகிற நீங்கள்தான் நீதிமன்றத்தில் வழக்குப் போட்டு [illegible] ஒரு [illegible] தப்பக்கூடாது என்று [illegible]



1982 பிப்ரவரி 18] [திரு. ம. சங்கரலிங்கம்]

றோம் என்கிறீர்கள். ஏதோ பில்லா, ரங்காவுக்கு அடித்ததுபோல் [illegible] றோம் என்கிறீர்கள். ஏதோ பில்லா, ரங்காவுக்கு அடித்ததுபோல் [illegible] வேண்டும் அவனுக்கு இந்த கேஸ் இருக்க வேண்டும் என்றுதான் நடவடிக்கை எடுக்கிறோம் என்றால், இது யாரை ஏமாற்றுவதற்காக? இந்த 20 ஆம் நூற்றாண்டில், 1982 ஆம் ஆண்டில், நாட்டிலுள்ள கல்லுடைக்கும் ஏழைத் தொழிலாளி முதற்கொண்டு சட்டத்தை அறிந்து, பத்திரிகைகளைப் படித்து, பிரச்சினைகளை அலசி ஆராய்கிற இந்த நூற்றாண்டில், இப்படிப் பேசலாமா என்பதை அருள்கூர்ந்து சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எல்லை கடந்து நான் சொல்லியிருந்தால், தயவுசெய்து மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆக, அறங்காவலர் குழுவைக் கலைக்க முடியாது என்பதற்குக் காரணம் சொல்லியிருக்கிறார்கள். நீதிபதி பால் அவர்களேகூட இதை ஒப்புக்கொண்டிருக்கிறார். வழக்கு ஆரம்பித்தபோது, நீதிபதி பால் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார். தொடக்கத்தில் ஒரு சாராரும், சுப்பிரமணியப் பிள்ளையின் மகனும் மற்றவர்களும் அஃபிடவிட்டு தாக்கல் செய்து, அறங்காவலர் குழுவைக் கலைத்தால்தான், உண்மையான நிலைமையைச் சாட்சிகள் பயமின்றி சொல்வார்கள் என்று கோரினார்கள். ஆனால் அப்போது நீதிபதி பால் அவர்கள் அதை நிராகரித்துவிட்டார். இதை அறிக்கையின் [illegible] பக்கத்திலே சொல்லியிருக்கிறார். அப்போது 'கலைக்க வேண்டாம், இது தேவையற்றது' என்றுதான் சொல்லியிருக்கிறார். ஆனால் அதற்குப் பிறகு 5 பேர்களுடைய சாட்சியங்களைக் கொண்டு வந்து, குன்றிமலையான் போன்ற 5 பேர்களுடைய அஃபிடவிட்டுகளைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, அவர்கள் "எங்களுக்கெல்லாம் உண்மை தெரியும், இருந்தாலும் சொல்வதற்குப் பயப்படுகிறோம்" என்று சொல்லியிருப்பதைப் பார்த்துவிட்டு, அதற்குப் பின்னாலே 'அ' பிரிவில் உள்ள 80 சாட்சியங்களில் 11 சாட்சியங்களின் சாட்சியத்தைப் பார்த்துவிட்டு, இதை முன்னுக்குப் பின் முரணாகவும் என்று தன் கருத்தைச் சொல்கிறார். [illegible] பக்கம் 44 முதல் 80 வரையில் சாட்சியங்களின் தன்மை [illegible] கடைசியாக இந்த அறங்காவலர் குழுவைக் கலைக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார். முதலில் வேண்டாம் என்று [illegible] இறுதியில் கலைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அவர் [illegible] என்று சொல்லவில்லை; முதலில் அறங்காவலர் குழுவைக் கலைக்காமல் இருந்தாலும் உண்மை வரும் என்றுதான் எதிர்பார்த்தார். ஆனால் . . .

திரு. க. இராமமூர்த்தி: நீதிபதி பால் சொல்லியிருப்பது "எனக்குக் கலைக்க அதிகாரம் இல்லை" என்பதுதான். ஆனால் அரசாங்கத்திற்குக் கலைக்க சிபாரிசு செய்கிறபோது, அவரே அறங்காவலர் குழுவைக் கலைக்கச் சிபாரிசு செய்திருக்கிறார்.

[1982 பிப்ரவரி 18

திரு. ம. சங்கரலிங்கம் : அவரே அதை அறிக்கையில் எழுதியிருக்கிறார். "மேற்படி அறங்காவலர் குழுவைக் கலைப்பதன் பேரில் அல்லது தற்காலிகமாகப் பணியிலிருந்து நீக்கி வைப்பதன் பேரில் ஈண்டுக் குறிப்பிட்டுள்ள இச்சம்பவம் குறித்துத் தங்களுக்குத் தெரிந்ததைத் துணிச்சலாக முன்வந்து சாட்சியமளிக்கக்கூடும் என்று நான் கருதியபோதிலும்" சட்டத்தில் அப்படி இருப்பதால் அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்கிறேன் என்று சொல்கிறார். அப்படி முதலில் சொன்னவர்தான் இறுதியில் அறங்காவலர் குழுவைக் கலைக்க வேண்டும் என்று அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்திருக்கிறார். நீதி விசாரணை தொடங்கியபோதே, அறங்காவலர் குழுவை இந்த அரசு நீக்கியிருக்க வேண்டும். காரணம் அறங்காவலர் குழுவின் தலைவர் பொறுப்போடு செயல்படவே இல்லை. உண்டியல் பெட்டியின் திறவுகோலை அவர் கொண்டு வரவில்லை. மாறாக, இசக்கி முத்து என்ற, அவருடைய நம்பிக்கைக்கு உரிய ஒருவரிடம் கொடுத்தனுப்புகிறார். மிகப் பழமையான, பெருமையான கோயிலின் சொத்தைப் பாதுகாக்க வேண்டிய அறங்காவல் குழுத் தலைவர், லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருள்களைக் கொண்டிருக்கிற உண்டியல் பெட்டியின் திறவு கோலை, யாரோ சம்பந்தமில்லாத ஒருவர் மூலம், ஆனால் அவருக்கு நம்பிக்கையுள்ள ஒருவர் மூலம்—ஒருவேளை அந்த நபர் எடுத்துக் கொடுப்பதை ஒழுங்காக கொண்டுவந்து கொடுத்துவிடுவார் போல் இருக்கிறது. வேறு ஆளிடம் கொடுத்தால், அவர் எடுத்துக் கொண்டு போய்விடுவார் போலிருக்கிறது. இவர் சரியாகக் கொடுத்துவிடுவதால் இவர் மூலம் உண்டியல் பெட்டியின் திறவுகோலை கொடுத்தனுப்புகிறார். ஆக இந்த ஒரு காரணத்திற்காகவே, யாரும் சொல்லாமலேயே அந்த அறங்காவலர் குழுவைக் கலைத்திருந்தால், இதில் அரசு ஒரு 'ஸ்டாண்டு' எடுக்காமல் இருந்திருந்தால், நீதிவிசாரணைக் கமிஷன் நியமிக்கப்படுவதற்கு முன்னாலேயே அரசு அவர்களோடு இந்த அளவுக்கு ஐக்கியப்படாமல் இருந்திருந்தால், ஒருவேளை இந்த நாடு உங்களைப் பற்றி சந்தேகப்பட்டிருக்காது. இனி எப்படித்தான் இந்தப் பழியை நீங்கள் நீக்கப் போகிறீர்களோ எனக்குத் தெரியவில்லை. நீக்குகிற வழியைப் பின்னாலே கடைசியில் சொல்லுகிறேன். அரசியல் ரீதியில் நான் இதைச் சொல்வதாக நினைக்கவேண்டாம். உங்களுக்காகத்தான் சொல்கிறேன். அரசியலில் இதுபோன்ற சம்பவங்களை மட்டும் வைத்து யாரும் வெற்றி பெற்றுவிட முடியாது என்பதை நாங்கள் அறிவோம்.

(பிற்பகல் 7-20)

இன்றைக்கு இதுபோன்ற சம்பவம் ஏற்படலாம். நாளைக்கே அது மறந்து போய்விடும். ஒரு நாட்டின் எதிர் காலத்தை இப்படிப்பட்ட சம்பவங்கள் உருவாக்குவதில்லை. கொள்கையும், ஒரு கட்சியின்மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை போன்றவைகளும்தான் ஒரு கட்சிக்கு ஆதரவைத் தந்து ஆட்சியை உருவாக்குகிறது. கட்சியும் வலுப்பெறுகிறது. ஒரு சம்பவத்தின்



1982 பிப்ரவரி 18] [திரு. ம. சங்கரலிங்கம்]

அடிப்படையில் ஒரு கட்சி மேலே வந்துவிடுமானால், இன்னொரு சம்பவத்தை ஒட்டி அது கீழே போக வேண்டிய நிலையும் உருவாகும். நாங்கள் அரசியலை அப்படி நினைக்கவில்லை. எனவேதான் நான் சொல்கிறேன், தயவுசெய்து நீதிபதி பால் அவர்கள் பக்கம் 78-ல் தெளிவாக எழுதியிருப்பதைப் பாருங்கள் :

"... சுருங்கச் சொன்னால், மரணம் விளைவிக்கக்கூடிய வன்முறை (ஹோமிசைடல் வைலவன்ஸ்)-யின் காரணமாக சரிபார்ப்பு அலுவலர் தன் மரணத்தைச் சந்தித்தார் என்று நம்புவதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன."

இதை வைத்துக்கொண்டு அரசினர் என்ன சொல்லுகிறார்கள். 'இப்படி எச்சரிக்கையாக நீதிபதி பால் அவர்கள் சொன்னதுதான் எங்களுக்குச் சங்கடமாகப் போய்விட்டது, ரொம்பத் தெளிவாகச் சொல்லியிருந்தால், இந்நேரம் அவர்களையெல்லாம் உள்ளே போட்டுவிட்டிருப்போம்" என்கிறார்கள். ஆனால் நீதிபதி பால் அவர்கள் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் சாயாமல் நின்று தெளிவாகச் சொல்கிறார். பலவற்றையும் அவர் சொல்லிய பிறகு அவர் குறிப்பிடுகிறார்.

'அ' தரப்பின் கூற்று உண்மையாக இருக்க முடியாது 11 சாட்சியங்களையும் அவர் தனித்தனியாக விவரிக்கிறார். இவர் பட்டதாரி, சட்டம் படித்தவர், அவர் கேள்வி கேட்கப்பட்டபோது முழித்துக் கொண்டிருந்தால், அது பரிதாபமாக இருந்தது முன்னுக்குப் பின் முரணாக இருந்தது என்றெல்லாம் சொல்லிவிட்டு அந்தச் சாட்சியங்களின் தன்மையையெல்லாம் எடுத்துச் சொல்லிவிட்டு 'அ' தரப்பின் கூற்று உண்மையாக இருக்க முடியாது" என்று தெரிவித்திருக்கிறார். ஆகவே 'அ' தரப்பு குற்றமானது உண்மையாகவே இருக்க முடியாது என்று 'ஏ' காரம் போட்டு தெளிவாகச் சொல்லிவிட்டு கடைசியாக இந்த அறங்காவலர் குழுவைத் தற்காலிகமாக விலக்கி வைத்ததற்குப் பிறகு அல்லது நீக்கியதற்குப் பிறகு அல்லது கலைத்ததற்குப் பிறகு, தனிப்பட்ட குற்றப் புலனாய்வுத் துறை ஆய்வுப் பிரிவு புலனாய்வு செய்ய வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார். இன்னும் புலனாய்வு செய்ய வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறார். அவர்களை நீக்கிய பிறகு, பிரிவு 307-ன் கீழ் கேஸ் போட்டால், அவர்கள் எல்லோரும் உள்ளேதான் போக வேண்டும். விசாரணை பண்ண வேண்டுமென்றால், அறங்காவலர்கள் மீது பிரிவு 307-ன் கீழ் எஃப்.ஐ.ஆர். போட்டுவிட்டுச் செய்தால், அவர்கள் கூட இருந்தவன் கூட தைரியமாக சாட்சி சொல்லுவான். வீட்டிலே இருந்தே எழுதிக் கொடுப்பான், உள்ளதைச் சொல்லுவான். தொடர்ந்து அறங்காவலர் குழுவின் தலைவராக இருந்ததால்தான், அவர்கள் உண்மையை மறைக்கும் நிலை ஏற்பட்டது. அது மட்டுமல்லாமல், தி.மு.க. வினர் இதைப்

பிரச்சினையாக ஆக்குகிறார்களே என்ற ஆத்திரத்தில் அரசு சார்பிலேயும், இடையிலே அ.தி.மு.க. வினர் சார்பிலேயும் விடுகிற அறிக்கைகள் உண்மையிலேயே பாதித்திருக்கிறதோ என்னவோ தெரியவில்லை, ஆனால் தவறு செய்கிறவர்களுக்கு ஊக்கம் தருகிற அளவிலே அமைந்துவிடுகிறது. கொலை செய்தவர் மீது விசாரணை செய்ய வேண்டுமென்றால், அவரிடமே போய் போலீஸ் இன்ஸ்பெக்டர் 'இன்னாரைக் கொலை செய்தாயா ?" என்று கேட்டால், இல்லையென்றுதான் சொல்லுவார். அப்படிச் செய்வதை விட, முதலிலேயே எப்.ஐ.ஆர். போட்டிருந்தால், அவர்களை அரெஸ்ட்' செய்து உள்ளே வைத்திருப்பார்கள். அதற்குப் பிறகு, வெளியே இருப்பவர்களிடம் கேட்டிருந்தால், எல்லா விஷயமும் வெளியே வரும். எத்தனை பேர்கள் அப்ரூவர்களாக மாறுவார்கள் என்பது அப்போது தெரியும். அந்தச் சூழ்நிலையை அரசினர் குலைத்துவிட்டார்கள். ஒன்றே முக்கால் மணிக்கு இருதயக் கோளாறு இருந்தது என்று வந்த செய்தி, சில மணி நேரத்திற்குப் பிறகு 'தற்கொலை' என்று சொல்லப்பட்டது என்றால், எஃப்.ஐ.ஆர். ஐத் திருத்திய அந்த அதிகாரிக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டும் ? அவர் வேலையில் இருக்க முடியாது. எப்.ஐ.ஆர். எழுதவில்லை என்பதற்காக சப்-இன்ஸ்பெக்டர், சர்க்கிள் இன்ஸ்பெக்டர், டி.எஸ்.பி. ஆகியவர்கள் மீது நீதிமன்றங்கள் 'ஸ்டிரிக்சர்' பாஸ் பண்ணியிருப்பதைக் கண்டிருக்கிறோம். அதன் அடிப்படையிலே இலாக்கா ரீதியாக நடவடிக்கை எடுத்து, சஸ்பெண்ட் செய்வது, டி கிரேடேஷன் செய்வது, 'ஸ்டாப்பேஜ் ஆஃப் இன்கிரிமென்ட்' போன்ற தண்டனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்த்திருக்கிறோம். அந்த மாதிரி நடவடிக்கை இந்த வழக்கில் ஏதாவது எடுக்கப்பட்டிருக்கிறதா ? பகிரங்கமாக, 'வேறு ஒரு டைரியில் இருந்து தான் எடுத்து ஒட்டி வைத்தார்" என்று சொல்லப்படும்போது, இலாக்கா ரீதியாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? அந்த அளவிற்கு காவல் துறையினர் ஏற்கெனவே உங்கள் கைப்பாவையாக ஆகிவிட்டார்கள். கொலைகாரர்களின் கைப்பாவையாக நீங்கள் ஆகிவிட்டீர்கள். அறங்காவலர்களின் அதிகாரத்திற்குப் பயந்து மூன்றுக்குப் பின் மூன்றாகச் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் சொல்லிக் கொண்டு போனால், நீண்டு கொண்டே போகும். ஆனால் நேரமில்லை. உங்களுக்கே தெரியும், விழித்துக் கொண்டிருக்கும் ஆளை எழுப்ப முடியாது; தூங்கும் ஆளைத் தான் எழுப்ப முடியும். நாட்டு மக்கள் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைத்தான் நாங்கள் தட்டி எழுப்புகிறோம். நாங்கள் பேசுவது உங்களுக்காக அல்ல. நாட்டு மக்களுக்கு இந்த விஷயம் தெரியாமலிருக்கிறது. நீங்கள் தூங்குவது போல காட்டுகிறீர்கள். உங்களுக்கு நன்கு தெரியுமென்று நினைக்கிறேன். இல்லையென்றால், கடைசியாக ஒரே ஒரு வரியை மட்டும் சொல்லி முடிக்கிறேன்.



சாட்சியங்களைப்பற்றி நீதிபதி சொல்லியிருக்கிறார். அவர் பதவியிலிருந்து ரிட்டையர் ஆன நீதிபதி. பதவியில் இருக்கிற நீதிபதியாக இருந்தால், பதவி உயர்வுக்காக, பதவி நீட்டிப்புக்காக அப்படிச் சொல்லியிருக்க முடியும். அவர் 35, 40 ஆண்டுகள் நீதித் துறையிலே இருந்தவர். தவறாகச் சொல்லியிருக்கமாட்டார். ஏனென்றால் எவ்வளவு தவறு செய்கிறவர்களாக இருந்தாலும் கூட, ஓய்வு பெற்று 60, 65 வயதாகிறபோது, தப்பு செய்ய நினைக்கமாட்டார்கள். கடவுள் இல்லையென்று சொல்கிறவர்கள் கூட, வயது வந்தால் கடவுள் உண்டு என்று சொல்லி, கோயிலுக்குப் போவார்கள். அது என்ன காரணமோ எனக்குத் தெரியாது. ஏனென்றால் எனக்கு அந்த வயது இன்னும் வரவில்லை. இப்போது என்னைப்பற்றிச் சொல்ல முடியாது. அப்படி வயதான ஓய்வு பெற்ற நீதிபதி தவறாகச் சொல்ல மாட்டார். அவர், "பற்றுள்ள சாட்சியங்கள் அளித்துள்ள சாட்சியங்கள் என்பதில் ஐயமில்லை" என்று சொல்லியிருக்கிறார். சாட்சியங்கள் ஒவ்வொருவரும் பற்றோடு சொல்லுகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை என்று சொல்லியிருக்கிறார். இன்னார்தான் கொலை செய்தார் என்பதை அவர் சொல்லவில்லை. "டேர்ம்ஸ் ஆஃப் ரெஃபரென்சில்" கொலை செய்தவரைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அந்தக் கொலைக்கான சூழ்நிலையைக் கண்டு பிடியுங்கள் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அவர் "மிகக் கவனமாக, எச்சரிக்கையோடு ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. நான் அவ்வாறே ஆய்வு செய்ய விழைகிறேன்" என்று சொல்லிவிட்டு ஆரம்பிக்கிறார். இத்தகைய எச்சரிக்கையோடு நியாய உணர்வோடு ஒவ்வொரு சாட்சியத்தைப்பற்றியும் அத்தனை சாட்சிகளும் தவறு உடையவர்கள் என்பதை பக்கங்கள் சொல்லி, 51, 46, 48, 69, 71 ஆகியவற்றில் சொல்லியிருக்கிறார். நேரம் மிகுதியாகி விட்டதால், அதையே நான் இரண்டாம் முறையாகத் தெளிவுபடுத்தவேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். இவ்வளவு தெளிவாகத் தெரிந்த இந்த விஷயத்தை அரசு மறைக்க முயலுகிறது என்று நான் சொல்லவில்லை. அரசு ஏனோ உண்மையை அறிய முனையவில்லை என்று சொன்னால், அது தவறு அல்ல.

அறங்காவலர்கள் தேர்வுபற்றி அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி நான் சொல்ல விரும்பவில்லை. எப்படிப்பட்டவரைத் தலைவராகப் போட்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றி பழி வேறு இருக்கிறது. இப்போது அவர்கள் ராஜினாமா செய்திருக்கிறார்கள். அதற்கு முதலமைச்சர் கூட நன்றி சொன்னார். எனக்கு அது வியப்பாக இருக்கிறது. உள்ளே இருக்க வேண்டியவர்களுக்கு நன்றி சொல்லக்கூடிய அளவிற்கு இருக்கிறது நிலைமை. அரசினருக்கு அவர்களைக் கண்டு ஏனோ நன்றி தெரிவித்திருக்கிறார்.

அச்சம் என் என்று தெரியவில்லை. நன்றி சொன்னதற்குப் பிறகாவது அவர்களோடு உள்ள தொடர்பு தீரட்டும். இனிமேலாவது நியாயத்தைச் செய்ய அரசு முனைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னுமொன்று. ஒரு கொலையோடு நின்று விடவில்லை. தோட்டி ஆறுமுகமும் உடன் இருந்து இறக்கினார் என்று சொல்கிறார்கள். தான் முதலில் பார்த்தவர் என்று சொல்லுகிறார்கள். அவர் [illegible] வேண்டும். போலீஸ் புலனாய்வில் இதையும் சேர்க்க வேண்டும். அதையும் விசாரிக்க [illegible] மலையானையும் கண்டுபிடிக்க வேண்டும். குன்றி

ஒரு வழக்கு. அது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுக்கும் நன்கு தெரிந்திருக்கும். சில வருடங்களுக்கு முன்பு நாகர்கோவில் [illegible] கல்லூரி மாணவனும் அவனுடைய தந்தை சிவதாணு என்பவரும் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். கன்னியாகுமரி தேவஸ்தானம் போர்டில் [illegible] குழுத் தலைவராக டாக்டர் பத்மநாபன் என்பவர் இருந்தார். [illegible] அந்த போர்ட் அட்டானமஸ் போர்ட். மூழு அதிகாரத்தோடு இருந்தது. அந்தக் குழுவின் தலைவராக இருந்தார். அவருடைய அண்ணன், [illegible] மகன் ஆகிய இருவரையும் ஒரே நாள் இரவில் சுட்டார்கள். [illegible] [illegible] என்பவருக்குத் தூக்குத் தண்டனை கொடுக்கப்பட்டது. [illegible] தண்டனை அளிப்பதற்கு eye witness [illegible] சாட்சியம் இல்லை. [illegible] வழக்கில் உள்ள 'சர்கம்ஸ்டேன்ஷியல் எவிடென்ஸ்' அதைக்கூடக் கூட அங்கே சாட்சியங்கள் இல்லை. சட்டத்தைக் கையிலே வைத்துக் கொண்டிருப்பவர்கள் பகிரங்கமாகக் கொலை செய்பவர்களை விட்டுவிட்டால் எப்படி? [illegible] [illegible] தடயங்கள் எடுக்கப்பட்டன. ஆனால் ஒரு [illegible] கூட [illegible] ஆகவில்லை. ஆளைப் பிடிக்கவில்லை. போலீஸ் [illegible] பிடிக்கவில்லை. கை அடையாளம் இருந்தும், அந்த அடையாளம் [illegible] [illegible] அடையாளத்தோடு ஒத்துவரவில்லை. [illegible] இருந்தாலும், கைது செய்யப்பட்டவர் அன்று மாலை நாலரை மணிக்கு எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் ஏறி திருச்சியில் தங்கிவிட்டு மறுநாள் ஆந்திர மகிலா [illegible] [illegible] தங்கியிருக்கிறார். அவர் அப்படி ஓடியதற்குக் காரணம் [illegible] இறந்தவருடைய மனைவி கூட அவரை மாதிரி இருந்தது என்று [illegible] அவர் மயக்கத்தில் இருந்தார். அப்படி இருந்தாலும், அந்த [illegible] ஓடிய ஒரு காரணத்தை மட்டுமே வைத்துக்கொண்டு [illegible] தூக்குத் தண்டனை விதித்தார். [illegible] ஐகோர்ட்டும் [illegible] சுப்ரீம் கோர்ட்டும் தூக்குத் தண்டனை [illegible] இப்போது வெள்ளி பெட்டியில் இருந்து கொண்டிருக்கிறார் என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன்.





(பிற்பகல் 7-30)

அப்படி இருக்கும்போது, அறங்காவலர் குழுத் தலைவருடைய பொறுப்பு அந்த ஆலயத்தினுடைய நிதியைப் பாதுகாக்க வேண்டியது. ஆனால் அங்கே பணம் திருடுவதைப் பொறுத்த வரையில், பெரிய களவு, "டெக்காயிட்டி", கொள்ளை நடந்திருக்கிறது.

'சார்ஜ் ஷீட்' போடவில்லை. இரண்டு மணிக்குப் புறப்பட்டு சென்னைக்கு வரவேண்டிய அவசியம் என்ன? அது ஒன்றே போதும் என்றுதான் கருதி [illegible] ஆர்கள். அவர்கள் மனித உரிமை இல்லையா என்று கூட கேட்டார்கள். ஆனால் தம்முடைய நீதி அவர்களுக்கு இவ்வளவு தெளிவாகச் சொல்லியிருந்தும்கூட, ஏற்பட்ட பலன் என்ன? 2 எப்.ஐ.ஆர். போட்டிருக்கி றார்கள். ஒன்றல்ல. இரண்டு போட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டு அரசாங்க அதிகாரிகள் மீது எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. அதிகாரிகள் எல்லாம் தவறு செய்பவர்கள் அல்ல, சிலரைத் தவிர. தமிழ் நாடு போலீஸ் உங்கள் கையிலே இருக்கிறது. போலீஸ் துறையில் இருப்பவர்கள் ஒரு 'சைட்' பண்ணியது. தலைமைச் செயலாளர் ஒரு 'சைட்' எடுத்தாகிவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது ஒரு துணிந்த கொலை என்று ஒரு 'ஸ்டாண்ட்' எடுக்க வேண்டும். நீதிபதியாக உட்கார்ந்து ஒரு முடிவைச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே அந்த ஒரு நியாய உணர்வோடு, உங்க ளோடு எந்தவிதத்திலும் தொடர்பு இல்லாத ஒரு நீதிமன்றத்திலே ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் அங்கத்தினர் அவர்கள் 'இன்வெஸ்டிகேஷன்' என்று சொல்லும்போது, போலீஸ் மூலமாக 'இன்வெஸ்டிகேஷன்' செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். உங்கள் பேரில் அவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறதுபோல எங்களுக்கு உங்கள் பேரில் நம்பிக்கை இல்லை. ஆகவேதான் சி.பி.ஐ. இடம் கொடுங்கள் என்று சொல்லு கிறோம். அவர்கள் இன்று வைத்துக்கொண்டு ஏதாவது 'பாலிடிக்ஸ்' பண்ணலாம் என்று சொல்வார்கள். அவர்கள் எங்களுக்குப் 'ஃபேவர்' பண்ணுவார்கள் அல்லது இவர்களுக்கு 'ஃபேவர்' பண்ணுவார்கள் என்று சொல்லமுடியாது. அவர்களிடமிருந்து ஒரு நியாயம் வரலாம், உண்மை வரலாம்.

திரு. து. நல்லசிவன்: அவர்களுக்கு நான் ஒன்று சொல்கின்றேன். சி.பி.ஐ.-யை அவர்கள் இயக்குகின்ற வகையைப்பற்றிச் சொன்னேன். அவர்கள் அவர்களுக்கு மேலே உள்ளவர்களுடைய கருத்துக்கேற்ப செய்கிறார்கள் என்ற அனுபவம் நமக்கு இருக்கிறது. ஆகவேதான் சி.பி.ஐ.-க்கு இன்வெஸ்டிகே ஷனுக்குப் போக வேண்டாமென்று சொல்கிறேன்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1982 பிப்ரவரி 18

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அது அவர்களுடைய கருத்து. இது என்னுடைய கருத்து. இது சி.பி.ஐ.-க்குப் போகவில்லை என்றால், இதில் உண்மை வராது. ஒருவேளை இதை வைத்துக் கொண்டு இரண்டு கட்சிகளுக்குள்ளே ஏதாவது பண்ணிக்கொண்டிருக்கலாம் என்பது உறுப்பினர் அவர்களுடைய கண்ணோட்டத்திலே இருக்கலாம். அந்த நாட்டிலே அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. அவர்கள் தங்களுடைய கடமையைச் செய்கின்றபோது, எந்தத் தொல்லை வந்தாலும், எடுத்துக் காட்டுகின்ற அளவுக்கு ஒரு சட்டமன்றம் இருக்கிறது. நாட்டில் எல்லாக் கட்சிக்காரர்களும் நியாயம் சொல்வார்கள் என்ற ஒரு நிலை உருவாகும். அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று பார்க்க வேண்டும். அதற்கு ஆந்திரா கோர்ட்டு, கேரளா கோர்ட்டுக்குப் போக வேண்டுமா? இதிலே ஒரு ஸ்டான்ட் எடுத்தாக வேண்டும். இதை அரசே சி.பி.ஐ.-க்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாட்டு மக்கள் கேட்டு, வரவேண்டுமென்று செய்வதைவிட இந்த அரசே அதைச் செய்யலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீது நான் களங்கம் கற்பிக்கிறேன் என்று எண்ண வேண்டாம். நான் எந்த விதத்திலும் கலங்கப்படுத்த விரும்புகின்றவன். அல்ல. இதை சி.பி.ஐ.க்கு சொல்லி விசாரணை செய்யச் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுதான் ஒரு நியாயமான பணியாகும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இந்தமாதிரி சம்பவம் முன்புகூட நடந்திருக்கிறது. அப்போது கமிஷன் போட்டார்கள். அப்போது காங்கிரஸ் ஆட்சி இருந்தது. அப்போது ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். அப்போது நடந்தது. எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் எடுத்துச் சொன்னார்கள். உடனடியாக யாரைச் சந்தேகப்பட்டார்களோ, அவர்மீது நடவடிக்கை எடுத்தார்கள். ஒரு எம்.எல்.ஏ. மீது நடவடிக்கை எடுத்தார்கள். அவர் பெயர் திரு. வெங்கடாசலம் பிள்ளைதான். அவரைக் கைது செய்து எப்.ஐ.ஆர். போட்டார்கள். நீதியை நிலைநாட்ட அவர்கள் அப்படிச் சொன்னார்கள். அதை இந்த அரசும் பின்பற்ற வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். அந்த மாதிரியே செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. இந்த சமுதாயத்திற்கு ஏற்ற முறையில் செய்யலாம். தனியாக அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவமாக இது இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். முன்பு நடந்த அந்த சம்பவத்திற்கும் இந்த சம்பவத்திற்கும் ஒப்பிட்டுப் பார்த்துச் சொல்லக்கூடாது என்று இந்த சந்தர்ப்பத்திலே அதையும் சொல்லிக்கொள்கிறேன்.



1982 பிப்ரவரி 18] [திரு. ம. சங்கரலிங்கம்]

காலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்மீதுள்ள பற்றும் அன்பும் காரணமாக நான் ஆளுநர் உரையின் மீது பேசி முடித்த பிறகு என்னைப் பார்த்து தனிப்பட்ட முறையிலே ஒரு அன்பளிப்பை எனக்குத் தந்தார்கள். அது இங்கே என்னிடத்திலே இருக்கிறது. அதை நான் வாங்கி வைத்துக்கொண்டேன். ஒரு நல்ல நேரத்திலே தக்க நேரத்திலே ஒன்று சொல்ல வேண்டுமென்று சொல்லித் தந்தார்கள். அது என்னுடைய வீட்டிலும் இருக்கிறது. என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் அறையிலும் இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் அன்போடு தருகிறார்கள் என்று வைத்துக்கொண்டேன். ஏதோ ரூபாய் என்று நினைத்துவிடாதீர்கள். இங்கே இருப்பவர்கள் நீங்கள் எல்லாம் பார்த்துக்கொண்டிருப்பீர்கள்.

அண்ணா அவர்கள் படம்போட்ட ஒன்றை, ஒரு கண்ணாடிக்குள் வைத்து எனக்குத் தந்தார்கள். அதை அவர்கள் சொன்ன உபதேசத்தை வைத்து அண்ணா அவர்களை பக்கத்திலே வைத்திருக்க வேண்டும் என்று சொன்னார்கள். நானும் ஏற்றுக்கொண்டேன். நான் சட்டமன்ற விடுதியிலே கூட வைத்திருக்கிறேன். என் வீட்டிலும் வைத்திருக்கிறேன். அதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள்?

'பொதுத் தொண்டில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள விரும்புகின்றவர்கள்' . . . விரும்பாதவர்களுக்கு அது அவசியம் இல்லை. அவர்கள் ஏதாவது பேசாமல் போங்கள். உங்கள் கான்ஸ்டிடியுஷனைப்பற்றிச் சிந்தித்துக்கொள்ளுங்கள். அவர்களைச் சந்தித்துக்கொள்ளுங்கள்' என்று [illegible] சொன்னார்கள்.

To those who want to engage in public service

'டு தோஸ் ஹு வாண்ட் டு என்கேஜ் இன் பப்ளிக் சர்விஸ்' என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லிவிட்டு 'மக்களிடையே போங்கள். அவர்களை விரும்புங்கள். அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ளுங்கள். அவர்களிடம் அன்பு கொள்ளுங்கள். அவர்களுக்குத் தொண்டு செய்யுங்கள். அவர்களோடு சேர்ந்து திட்டமிடுங்கள். அவர்களிடமிருந்து தெரிந்ததிலிருந்து உங்கள் பணியைத் தொடங்குங்கள்'. என்று சொன்னார்கள்.

நீங்கள் திருச்செந்தூர் மக்களைத் தெரிந்துகொள்ளுங்கள். நான் உங்களைக் கேட்கிறேன். எங்களை விட்டுவிடுங்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கக்கூடிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கிளைச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள் இவர்களையெல்லாம் கூப்பிட்டு ஒரு பெரிய ஹாலிலே கதவை அடைத்துக் கொண்டு உட்காரச் சொல்லுங்கள். ஒரு தாளைக் கொடுத்து அங்கு நடந்தது தற்கொலையா, கொலையா என்று எழுதி வாங்குங்கள். ஆளுக்கு ஒரு தாளைக்

கொடுத்து எழுதி வாங்குங்கள். உங்கள் கட்சிக்காரர்களிடம் போங்கள். அவர்கள் இருக்கின்ற பகுதிக்குப் போங்கள். அவர்களைப் போய்க் கேளுங்கள். அவர்களை விரும்புங்கள். மற்றவர்களை விரும்பாவிட்டாலும் உங்கள் கட்சிக்காரர்களிடமிருந்து தெரிந்துகொள்ளுங்கள். அவர்களிடம் அன்பு கொள்ளுங்கள். அவர்களுக்குத் தொண்டு செய்யுங்கள். அந்தப் பகுதியிலே, அப்போதுதான் உங்கள் கட்சியைக் காப்பாற்ற முடியும். அவர்களோடு சேர்ந்து திட்டமிடுங்கள். என்ன செய்ய வேண்டும் என்று அவர்களிடம் கேளுங்கள். அவர்கள் எல்லோரும் சி.பி.ஐ. தான் வேண்டுமென்று சொல்வார்கள். அவர்களைத் தெரிந்திருந்து, அவர்கள் என்ன தெரிந்து உங்களுக்குச் சொல்கின்றார்கள் என்று பாருங்கள். அதைச் செய்யுங்கள். அங்கே உண்மையில் குன்றிமலையான் வரவில்லை. இன்னும் அவரைக் கொண்டுவர முடியவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அவரிடமிருந்து உங்கள் பணியைத் தொடங்குங்கள் என்று இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொண்டு, முதலமைச்சர் அவர்கள் எனக்குக் காலையிலே கொடுத்த இந்தப் படத்தை மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கொடுக்கிறேன். காலையிலேதான் எனக்குச் சொந்தமாக்கினார். அதை நான் அவர்களுக்குத் தருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு கொடுத்திருக்கிறார்கள். அதைக் கொடுப்பதற்குப் பதிலாக தாங்கள் வேட்டியுள்ளதைக் கொண்டு வந்து கொடுக்கலாம். அதைக் கொண்டுவந்து கொடுத்தால், நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** இப்போதைக்குக் கொடுப்பதற்கு நான் இதைக் கொடுக்கிறேன். பிறகு மாற்றிக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 7-40)

மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் தமிழ் நாடு முழுவதும் பாரதி விழாவை, மாவட்டந்தோறும் கொண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் பாரதி சொன்னதை நினைவுபடுத்த விரும்புகிறேன். "பாதகம் செய்பவரைக் கண்டால் பயம் கொள்ளலாகாது பாப்பா"— எல்லோருக்கும் சொல்லியிருக்கிறார்—"மோதி மிதித்துவிடு பாப்பா, அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா" என்று பாடியிருக்கிறார். அதை நினைவுபடுத்த விரும்புகிறேன். இன்று அண்ணா அவர்கள் சொன்ன அறிவுரைப்படி, எங்களுடைய தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் மக்களைப் பார்க்கப் போய்க்கொண்டிருக்கிறார். அதைப் பலர் கேலி பண்ணினாலும்,



கிண்டல் பண்ணினாலும், 200 பேர்கள் போனார்கள் என்று பத்திரிகையில் போட்டாலும், பின்னாலேயே பாலத்தைக் கடக்க 15 நிமிடங்கள் ஆயிற்று என்று போட்டுவிட்டார்கள்—பரவாயில்லை. பாலத்தின் அடியில் ஐந்து குண்டுகள் இருந்தன. ஒரு பெண் ஒன்றைக் கண்டெடுத்தார் என்றும், நான்கு குண்டுகளை போலீசார் எடுத்து, வழக்கு போட்டிருக்கிறார்கள் என்றும் பத்திரிகையில் வருகிறது. சிவகாசியில் ஒரு லாட்ஜில் தங்கியபோது, ஒருவர் கம்பியை வைத்துக்கொண்டிருந்தார் என்று அவரைப் பிடித்துக்கொடுத்திருக்கிறார்கள் என்று தகவல் வருகிறது. அவர் பின்னால் லட்சம் பேர்கள் போனார்கள் என்று நாங்கள் சொன்னாலும், ஆயிரக் கணக்கானவர்கள் போகிறார்கள்; 15,000, 20,000, 30,000 பேர்கள் போகிறார்கள். மாலையில் ஒரு லட்சம் பேரோடு போகிறார்கள். இரண்டு லட்சம் பேர்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். மக்களிடம் ஏன் போகிறோமென்றால் உங்களிடம் நீதி இல்லை, ஆதலால்தான். அண்ணா சொன்ன பாதையில் நாங்கள் போய்க் கொண்டிருக்கிறோம். இதைச் சொல்லும் இந்த நிலையில், அரசாங்கம் தன்னைக் காத்துக்கொள்வதற்கு, தனக்கு ஏற்பட்ட இழுக்கை அகற்றுவதற்கு, நாட்டிலே நீதியை நிலைநாட்டுகிறோமென்ற பெருமை ஏற்பட, இந்த விசாரணையை எந்தவிதக் காலதாமதம் இன்றி சி.பி.ஐ. கையில் ஒப்படைக்க வேண்டும்; அல்லது மாநிலத்தில் உள்ள அதிகாரிகளை வைத்து விசாரிக்கிறோம் என்றால், அறநிலையத் துறை அமைச்சரவர்கள் அந்தப் பொறுப்பை விட்டு விலகி, வேறு துறையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, திருச்செந்தூர் ஆலயத்தில் அலுவலகத்தில் நடைபெற்ற அதிகாரியின் மரணம் பற்றி மாண்புமிகு முன்னாள் உயர்நீதி மன்ற நீதிபதி பால் அவர்கள், ஒரு நபர் கமிஷன் என்கிற வகையில் அளித்த அந்தப் பரிந்துரைகளை ஒட்டியும், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை ஒட்டியும் நம்முடைய சட்டமன்றத்திலும் [illegible]. முதல்முறையாக இந்த அவைக்கு ஒரு நீண்ட விவாதத்தை மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பை இந்த மன்றங்கள் பெற்று, ஒரு நீதிமன்றத்திலே நடைபெறுகிற வழக்கறிஞர்கள் வாதத்தைப் போன்று இங்கே கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். இதிலே நான் அரசின் சார்பில் இந்தக் கமிஷனின் அறிக்கைக்குள்ளே நுழைந்து, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிற கருத்துக்களுக்குப் பதில் சொல்வதற்குப் போக விரும்பவில்லை. அதற்குள் போனால், நாங்கள் சந்தேகத்திற்குள்ளாகிவிடுவோம். ஏனென்றால் இன்றைய தினம் நீதிமன்றத்திலே அந்தச் சந்தேகத்தையும், எந்தக் குற்றச்சாட்டையும், எந்தப் பழியையும் யார் மீதும் சுமத்தி சொல்வதற்கு, சட்டமன்றத்திலே சொல்லுவதற்கு, [illegible]

சொல்லுவதற்கு, எந்த வாய்ப்புகள் கிடைத்தாலும் அந்த வகையிலே எல்லாம் சொல்வதற்கு எதிர்க் கட்சிகளுக்கு உள்ள உரிமை ஆளுகிற கட்சிக்குக் கிடையாது அல்லது அரசுக்குக் கிடையாது. அதனாலே இதனுடைய துவக்கத்தைப்பற்றி நான் சட்டமன்றப் பேரவையிலே எடுத்துச் சொல்லியிருந்தாலும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இங்கே அதிலே சில மாறுபாடுகளோடு கருத்துக்களைத் தெரிவித்த காரணத்தாலே அந்த விளக்கிவிட்டு, அரசின் கருத்தை சுருக்கமாக, ஆனால் தெளிவாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சம்பவம் நடந்து, ஒரு வார காலம் அரசின் தரப்பிலே இருந்து எந்தக் கருத்தும் சொல்லப்படவில்லை. இதற்கிடையிலே பத்திரிகைகளில், எந்தப் பத்திரிகையிலே இன்றைக்கு இது கொலை என்று அடித்துச் சொல்லப்படுகிறதோ, அந்தப் பத்திரிகையிலேகூட 'தற்கொலை' என்று முதல் நாளிலே வந்த செய்தி, பின்பு கொஞ்சம் கொஞ்சமாக மாற்று வடிவம் எடுத்து, அவர்களுக்குத் தேவையானபடி பிரச்சாரங்கள் எல்லாம் செய்யப்பட்டு வந்த சூழ்நிலையிலேகூட, அரசு எந்தக் கருத்தையும் எடுத்து வைக்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், முன்னாள் முதல்வர், மாண்புமிகு டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள், 'இதிலே ஐயப்பாடு வந்துவிட்டது, அதனாலே சி.ஐ.டி. விசாரணை வேண்டும்' என்று இந்தியப் பிரதம அமைச்சருக்கும், ஆளுநர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வரவர்களுக்கும் தந்தி கொடுத்தார்கள். அவர்கள் அப்படித் தந்தி கொடுத்தது அவர்களுக்குள்ள உரிமை என்று நான் இந்த மன்றத்திலேயே சென்ற ஆண்டு, ஆளுநர் உரைமீதான விவாதத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் பேசுகிறபோது குறுக்கிட்டுக் கூறியிருக்கிறேன், ஒத்துக் கொண்டிருக்கிறேன். அதுதான் நான் அதிகாரபூர்வமாக அவையிலே தெரிவித்த கருத்து. அதற்கு முதல் முறையாக அரசின் சார்பிலே தெரிவித்த கருத்து 4 ஆம் தேதி. அதிலே நான் சட்டமன்றப் பேரவை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்த ஐயப்பாட்டை நான் மறுக்கவில்லை. அவர்கள் சி.ஐ.டி. விசாரணை கேட்டதை மறுக்கவில்லை. ஆனால் அந்த சந்தேகத்தையும் போட்டுவிட்டு அந்த சந்தேகத்திற்கு மூலமாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அடித்துக்கொன்றுவிட்டார்கள் என்று அந்தப் பத்திரிகையிலே வந்த தகவலைத்தான் நான் கண்டித்தேன். அரசாங்கத்திற்கு வந்த தகவல் என்ற வகையிலே, மிகுந்த எச்சரிக்கையோடு, உணர்ச்சிவசப்படாமல், ஆத்திரப்படாமல், அதிகாரிகளைக் கொண்டு படிக்கச் சொன்னேன். அந்தச் சூழ்நிலையிலே சட்டமன்றம் நடைபெற்றிருந்தால், ஒத்தி வைப்புப் பிரேரணை வந்திருக்கும். அதற்கான விளக்கத்தை அமைச்சர்கள் யாராவது பதிலாக அளித்திருப்பார்கள். அப்போதும் என்ன





நடந்திருக்கும்? மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்டக் காவல் துறைத் தலைவரும் அனுப்பிய அறிக்கையைத்தான் அரசாங்கம் அவையிலேயும் வைத்திருக்கும். நானும் அரசின் சார்பிலே, முதல்வரவர்களுடைய ஒப்புதலோடு, அந்த அறிக்கையைத் தெரிவிக்கலாமா என்று கேட்டு, தெரிவிக்கச் சொன்னேன், அதிகாரிகளிடத்தில். அது அரசாங்கத்திற்கு வந்த தகவல். இதற்கிடையிலே மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. இராமமூர்த்தி அவர்கள், அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கையே அனுப்பவில்லை, அதுவே சந்தேகம் என்கிறார்கள். இப்படி எடுத்ததற்கெல்லாம் சந்தேகப்பட்டுக்கொண்டிருந்தால் நாம் இந்த உலகத்திலே வாழ முடியாது.

திரு. க. இராமமூர்த்தி: மாவட்ட ஆட்சித் தலைவர் நீதி விசாரணையின் போது சாட்சி சொல்லியிருக்க வேண்டும். உதயகுமார் இறந்தது குறித்து நீதி விசாரணையின்போது, தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் சாட்சியளித்தார். இது தற்கொலை என்று அவர் கூறியதால், அவர் சாட்சி யளித்தார். அவர் போகவில்லை என்பது ஒன்று. அதற்குப் பிறகு விசாரிக்கிற போது பல தகவல்கள் சொல்கிறார்கள். அதில் இது ஒரு தகவலாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் போகவில்லை என்பதையும் தெரிவித்தார்கள். பேசிக்கொண்டு பின்னாலே வந்தபோது, அப்படி ஒரு அறிக்கை வரவில்லையென்று எனக்குக் கிடைத்த தகவல்களி லிருந்து தெரிகிறதென்றும் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பேட்டிலே இருக்கிறது. ஒரு அரசாங்கத்தை இந்த அளவிற்குப் பொறுப்புள்ள காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பல மாநிலங்களிலே ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்த, மத்தியில் ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்த எங்களுடைய பெருமதிப்பிற்குரிய திரு. இராமமூர்த்தி அவர்கள் இப்படி சந்தேகப்படும் வகையிலே எடுத்துச் சொல்வதைக் கண்டு உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். இதைத்தான் நாங்கள் எங்களுடைய ஐயப்பாட்டிலே கேட்டிருக்கிறோம். காரணம், இந்த மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கை கமிஷனுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. அது பக்கம் 125-லே இருக்கிறது. எடுத்துப் படித்துக் கொள்ளுங்கள். இதைத்தான் நாங்கள் கேட்டோம். 'அ' தரப்பினர் என்பவர்கள் இது தற்கொலை என்று சொல்லுகிறவர்கள். அப்படி தற்கொலை என்று சொல்கிறவர்களையே—அங்கே இருந்து, முதன்முறையாக தற்கொலை என்று ஒரு மாவட்ட காவல் துறைத் தலைவரும், ஆட்சித் தலைவரும் அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அதை அரசாங்கம் சொல்லியிருக்கிறது. அவர்கள் அங்கேயே இருக்கிறார்களே, அவர்களை அழைத்துக் கேட்க வில்லையே என்றுதான் இதிலே குறிப்பிட்டிருக்கிறோம். ஆகவே வந்த

மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கையை—இப்படி ஒரு சூழ்நிலையை முன்னாள் முதலமைச்சர் அவர்கள் எழுப்பிய காரணத்தினாலே—அவர்களே கூட இவரை அடித்துக் கொன்றிருக்கிறார்கள் என்று பொதுவாகச் சொல்லியிருந்தால், அரசாங்கம் இதிலே அந்தக் கருத்தைக் கூட சொல்லாமல் இருந்திருக்கும். நான் சட்டமன்றப் பேரவையிலேயே சொன்னேன். நான் அமைச்சர் என்கிற முறையில் அதிகாரிகளைப் படிக்கச் சொன்னது அரசாங்கத்தினுடைய குறிப்பு. அதற்கு வெளியிலே வந்து நான் ஒரு அரசியல் இயக்கத்திலே இருக்கிற தொண்டன் என்கிற உணர்வில்தான், நான் முன்னாள் முதலமைச்சர் அவர்களைப்பற்றி ஒரு குறிப்பு தெரிவித்தேன் என்றும் சொன்னேன். காரணம் முன்னாள் முதல்வர் அவர்கள் அந்த வார்த்தையை நான் சொல்லிவிட்டேன் என்று தான் இன்றைக்கும் அவர்கள் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அது அரசியலுக்காக அவர்கள் சொன்ன வார்த்தை என்றால், நான் அரசியலுக்காக சொன்ன பதிலாகத் தெரிவித்தேனே தவிர, அரசாங்கத்தின் சார்பில் ஆத்திரப்பட்டுத் தெரிவிக்கவில்லை என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கைகள் அனைத்தும் கமிஷனுக்கு அனுப்பப்பட்டுவிட்டன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** Collector's file No. C3|155876|80 regarding the suspected death of Thiru Subramaniam Pillai at Tiruchendur பற்றிதானே அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நான் சொன்னது அது அல்ல. நான் சொன்னது இந்த அரசுக்கு அவர் அனுப்பிய தகவலின் அடிப்படையில் அமைச்சரோ மற்றவர்களோ தகவல் கொடுத்ததாக உள்ளது பற்றி. அவர் அனுப்பிய அந்த அறிக்கையை, தகவலை நீதிபதியின் முன்னாலே வைக்கவில்லை.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தயவுசெய்து அந்த ஆவணங்களை வேண்டுமானால் பார்த்துக்கொள்ளலாம். நான் சொல்லிவிடுகிறேன். கலெக்டர் அரசாங்கத்துக்கு அனுப்பிய அந்தக் கோப்பை அப்படியே அனுப்பிவிட்டோம். அந்தக் கோப்பிலேதான் அறநிலையத் துறைச் செயலாளர் அவர்கள் தொலைபேசி செய்தியை வாங்கிய, நோட் பண்ணிய சின்ன சீட்டுகள் எல்லாம் கூட போயிருக்கின்றன. அதனால்தான் அங்கே சில சந்தேகங்களைக்கூட எழுப்பி நம்முடைய செயலாளரிடத்தில் விசாரித்திருக்கிறார்கள். ஆகவே நான் முதலிலே உங்கள் மூலம் இந்த மன்றத்திற்கும் நாட்டுக்கும் சட்டமன்றப் பேரவையிலே தெரிவித்ததையே மீண்டும் தெரிவிக்கிறேன். இந்த நிகழ்ச்சியில் அரசாங்கத்துக்கோ, முதலமைச்சர் அவர்களுக்கோ,





எனக்கோ யாருக்குமோ எந்தவிதமான சொந்த எண்ணமும் இடையாது. ஒரு குறிப்பிட்டவர்களை யாரையும் காப்பாற்ற வேண்டுமென்கிற நிலைமையும் இல்லை. யார் குற்றவாளிகள் என்று கண்டுபிடிக்கப்பட்டாலும், சான்றுகளோடு அவைகள் நிரூபிக்கப்பட்டாலும், அதற்கான அடிப்படைகள் கிடைக்கப் பெற்றாலும், அவர்கள் நிச்சயமாக நீதிமன்றத்தின் முன்னாலே நிறுத்தப் படுவார்கள் என்பதை அருள்கூர்ந்து இங்கே இருக்கிற மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், அவர்கள் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, "எப்படி உங்களை நம்புவது?" என்று கேட்டாலும், அவர்கள் பண்பட்டு இருக்கிற ஒரு ஜனநாயகவாதி என்ற முறையில், "நீங்களாவது நம்புங்கள்" என்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் குடலையே உருவிக் காட்டினாலும் இது வாழை நார் தான் என்று சொல்கிற அந்த உணர்வுக்கு நீங்கள் ஆட்பட்டுவிட்டால் அது குடலை உருவிக் காட்டுகிற வனுக்கும் பலன் இல்லை, அதற்கு நல்ல விமோசனமும் கிடையாது. ஆகவே நான் தெரிவித்துக்கொள்வது, அந்த நிகழ்ச்சிகள் தொடங்கிய நாளிலேயிருந்து ஒரு வாரம் நாங்கள் வாயைத் திறக்காமல் இருந்தோம். ஒரு வாரம் கழித்து முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சி.ஐ.டி. விசாரணை வேண்டுமென்று கேட்கிறார். கேட்கிற பொறுப்புள்ள முன்னாள் முதலமைச்சர் ஒரு கட்சிக் காரர்களைக் குறிப்பிட்டு, அடித்துக் கொன்று விட்டார்கள் என்று போட்டால், விசாரணை எதற்கு? நீங்களே குற்றம் சாட்டி விட்டீர்கள். ஆட்களையும் சொல்லிவிட்டீர்கள். அப்புறம் எதற்கு விசாரணை? இங்கே நாங்கள் வைத்திருக்கிற இந்த நீதிபதி பால் அவர்களுடைய பரிந்துரைகளின் மீது குறிப்புகளாக நாங்கள் தெரிவித்திருப்பதைப்பற்றிக் கேள்வி கேட்கிறீர்களே, "நீங்கள் சி.ஐ.டி. விசாரணை வேண்டுமென்று கேட்டு விட்டு உடனேயே அவன் கொன்று விட்டான், இவன் கொன்று விட்டான் என்று சொல்லி விட்டால், விசாரணை எதற்கு?" இதைத்தான் நாங்கள் கேட்கிறோம்.

(பிற்பகல் 7-50)

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புவது வெளியில் இருக்கிறவர் சொல்வதற்கும் அரசிலே இருக்கிற ஒருவர் சொல்வதற்கும் வித்தியாசம் உண்டு. விசாரணை செய்ய வேண்டிய அதிகாரிகளையெல்லாம் வைத்து ஆட்சி செய்கிறவர்கள் சொல்லுவதற்கும் வெளியே நடந்த சம்பவத்தை விசாரணை செய்வதற்கு வெளியில் இருக்கிறவர்களுக்கு என்னென்ன சந்தேகம் வருகிறதோ அதையெல்லாம் சொல்வதற்கும் வித்தியாசம் உண்டு என்பதை அமைச்சர் அவர்கள் உணர்வார்களா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வித்தியாசத்தைத் தெரிந்த காரணத்தினாலே தான், அரசாங்கம் இவ்வளவு ஜாக்கிரதையாக நடவடிக்கை எடுக்கிறது. கீழ்வெண்மணியில் 40 பேர்களுக்கு மேல் கொளுத்தினார்கள். யார் அந்தக் கொலையாளி என்று தெரியவில்லை. எங்களுடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே சேர்ந்து பணியாற்றினான் என்பதற்காக பூலாவாரியிலே சுகுமாரன் என்ற இளைஞன், அந்த அடலேறும் அவனைப் பெற்றெடுத்த ஒரே குற்றத்திற்காக அவனுடைய தந்தை பழனியப்பன் என்பவரும் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். வெட்டப்பட்டார்கள், மாறுகால், மாறுகை வாங்கப்பட்டார்கள். இதிலே யிருக்கிற சந்தேகம் கூட அதிலே கிடையாது. இன்று வரை அந்தக் குற்றவாளி யார் என்றே தெரியவில்லை. இன்றைக்கு நீதி கேட்டு பயணம் நடத்துகிறவர் களுடைய எங்களுடைய மரியாதைக்குரிய முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே மிகுந்த திறமையோடு நீதியை நிலைநாட்டிய அந்த ஆட்சியிலேதான், கண்டுபிடிக்கவே முடியவில்லையென்று கைவிடப் பட்டது வழக்கு. அதற்குப் பிறகு 1976-ல் அவசர நிலையில் ஆளுநர் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது மீண்டும் எடுக்கப்படுகிறது. சாட்சிகள் கண்டு பிடிக்கப்படுகிறார்கள். அதிலே யார் யாரோ வருகிறார்கள். மிக உயர்ந்த அதிகாரிகள் எல்லாம் அதிலே சாட்சி சொல்கிறார்கள். ஆனால் நீதி மன்றத்திலே அவர்கள் விடுவிக்கப்பட்டு விட்டார்கள். உயர் நீதிமன்றத்திலே அப்பீல் இருக்கிறது. அரசாங்கம் என்கிற காரணத்தாலேயேதான் குற்றவாளிகள் தப்பித்து விடக் கூடாதே, பூலாவாரி சுகுமாரனைக் கொன்ற குற்றவாளிகள் இன்னும் கிடைக்கவில்லையே, பாத்திமா பீபியைக் கொன்றது யார் என்று தெரியவில்லையே இங்கே ராணி ஆறுமுகம் கொலையா தற்கொலையா என்று தெரியாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறதே. இப்படி மறைக்கப்பட்ட கொலைகள், கண்டுபிடிக்கப்படாத குற்றங்கள், நம் கண் முன்னாலேயே காட்சியளித்த சான்றுகளாக நின்று கொண்டிருக்கிற காரணத்தாலேதான், இதில் அரசாங்கம் முதல் முறையாக இப்படிப்பட்ட ஒரு மரண சம்பவத்திற்கு—மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்—இப்படிப்பட்ட ஒரு சம்பவத்திற்கு முதல் முறையாக நீதி விசாரணை அமைத்திருக்கிறது. முன்னாள் முதல்வர் அவர்கள் சி.ஐ.டி. விசாரணை கேட்டார்கள். நம்முடைய நீதிபதி அவர்களும் இன்றைக்கு அந்த இடத்திலேதான் வந்து நிறுத்தியிருக்கிறார்கள். சி.ஐ.டி. விசாரணையை நடத்துங்கள் என்றுதான் சொல்லியிருக்கிறார். ஆகவே அன்றைக்கு அவர்கள் சி.ஐ.டி. விசாரணை கேட்டதிலே தவறில்லை. சந்தேகம் யார் மீதும் வரலாம். கொலை என்றும் இருக்கலாம். அது அவர் செய்தாரா, இவர் செய்தாரா என்றும் இருக்கலாம். ஆனால் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல, ஊரிலே இருப்பவனையெல்லாம் கூட்டி வைத்து அவன்



கொலை என்று சொன்னால், அவன் காட்டுகிற ஆளையெல்லாம் கைது செய்து தூக்கு மேடைக்கு அனுப்பினால், இந்த ஒரு கொலைக்கே எத்தனை பேரை அனுப்ப வேண்டியிருக்கும் என்று கருதுகிறீர்கள்! இது நாட்டிலே நீதி, சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற நியதியா ? நடைமுறையா ? அதனாலே தான் முதன் முறையாக இன்றைய தமிழகத்தின் முதல்வர் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டினார்களே அண்ணாவின் அறிவுரையை, "மக்களிடத்தில் போ, மக்களுடைய நம்பிக்கையைப் பெறு, மக்களுக்குத் தொண்டு செய், மக்களுக்காக உழைத்துக் கொண்டிரு" என்று, அந்த மக்களுக்காக உழைத்துக் கொண்டிருப்பதால் தான், ஒரு கருத்தை அதிகாரிகள் அரசாங்கத்துக்கு அனுப்பியதற்குப் பிறகும், ஒரு 15, 20 நாட்களில் சி.ஐ.டி. விசாரணை அல்ல, நீதி விசாரணையே வைக்கிறேன் என்று சொன்னார்கள். நான் அருள்கூர்ந்து தெரிவித்துக்கொள்கிறேன், என்றைக்கு விசாரணை வைக்கப்பட்டதோ அன்றைக்கே அரசினுடைய முதல் கருத்து அங்கேயிருந்து எடுக்கப்பட்டு விட்டது. அரசுக்கு வந்த அதிகாரிகளுடைய தகவல்கள் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று ஆகிவிட்டது என்பதைச் சொல்கிறேன். அதற்குப் பிறகு நாங்கள் எங்கேயாவது வாய் திறந்திருக்கிறோமா ? ஒரு இடத்திலே யாவது இதைப்பற்றிக் கருத்து தெரிவித்திருக்கிறோமா ? 1¼ ஆண்டுக் காலம் வாய் மூடி மவுனியாக, என்ன நடக்கிறது, உண்மை வரட்டும் என்று நாங்கள் கை கட்டி, காத்துக்கொண்டிருந்தோம். ஆனால் எதிர்க் கட்சித் தலைவரான முன்னாள் முதலமைச்சர் அவர்களும் அவர்களுடைய கட்சிக்காரர்களும் அவர்களுக்குத் துணையாக இருக்கிறவர்களுக்கும் 1¼ ஆண்டுக் காலம் ஒரு புறத்திலே நீதி விசாரணை, இன்னொரு புறத்திலே குற்றச்சாட்டு, பழி சுமத்தல் நடத்தினார்கள். இது எப்படி நீதிவிசாரணைக்கு நியாயமான

(பிற்பகல் 8-00)

ஆதரவு ? இது எப்படி உண்மையைக் கண்டுபிடிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தும் என்பதை இனிமேல் நீதிமன்றம் தான் சொல்ல வேண்டும். ஆகவேதான் அரசாங்கத்திற்கு இதிலே மிகுந்த ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்தி னார்கள் ; நாங்கள் வாய்மூடிக்கொண்டிருந்தோம். 1¼ ஆண்டுக் காலம் திட்டமிட்ட பிரச்சாரம் நடத்தப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நல்லசிவன் அவர்களும், திரு. மாணிக்கம் அவர்களும், திரு இராமமூர்த்தி அவர்களும் இப்படி அரசாங்கத்தின் மீது ஒரு ஐயப்பாடு வந்துவிட்டதே என்று சொன்னார்கள். அந்த ஐயப்பாடு வந்த காரணத்தினாலேதான், 'எங்களுக்கு ஏற்பட்டிருக்கிற ஐயத்தை நீக்குங்கள்' என்று இந்த அறிக்கையிலே சொல்கிறோம். இல்லையானால் ஏன் இதைச் சொல்கிறோம் ? மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொல்லியதுபோல,

இரண்டு வரிகளிலேயே போட்டிருப்போம். அதுதான் முன்னாலே நடந்திருக்கிறது. கமிஷனின் பரிந்துரையை ஏற்று மாநில குற்றப் புலனாய்வுத் துறைக்கு அனுப்பிவிட்டோம். அதற்குப் பிறகு அவர்கள் நேரடியாக நடவடிக்கை எடுக்க முடியாது என்று அறநிலையத் துறையினுடைய அறங் காவலர் குழுவைக் கலைக்கச் சொல்லியிருக்கிறார்கள்; அதற்கும் நாங்கள் நடவடிக்கை எடுக்கச் சொல்லிவிட்டோம் என்றும் இரண்டு வரிகளிலேயே சொல்லி வைத்திருக்கத் தெரியாது என்று கருதுகிறீர்களா? இப்படி விவாதம் வரட்டும்; கொஞ்சம் தண்ணீரைக் கலக்கி விட்டால்தான் தெளியும்; இப்படி நீங்கள் சொன்ன கருத்துக்களையெல்லாம் இந்த நாட்டிலே இருக்கின்ற புலனாய்வுத் துறை அதிகாரிகள் மறுத்துவிடுவார்கள் அல்லது மறந்து செயலாற்றுவார்கள் என்று நம்புகிறீர்களா? அது இந்த ஆட்சியிலே நிச்சயமாக இல்லை. டேம்பரிங் ஆஃப் ரெக்கார்ட்ஸ், ரெக்கார்ட்கள் மாற்றப் பட்டன, திருத்தப்பட்டன என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்களே; அந்த ரெக்கார்ட்களை அப்படியே கொடுத்திருக்கிறோம் கமிஷனிடத்திலே. அரசாங்கத்திற்கு இதிலே அக்கறை இருக்குமானால் திருத்தப்பட்ட ரெக்கார்ட்கள் போகுமா? அரசாங்கத்திற்கு இதிலே கவலையிருக்குமானால், இப்படிப்பட்ட சாட்சியங்கள் அங்கே போகுமா? அரசாங்கத்தின் தரப்பிலே வாதிடவே இல்லை. அதை இம் மன்றம் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு வழக்கறிஞர் வைக்கப்பட்டிருக்கிறார், அரசாங்கத்தின் சார்பிலே, அரசாங்கத் தரப்பிலே அல்ல; அவர் அந்தக் காவல் துறைக்காக அமைக்கப்பட்டிருக்கிறார். அதிலே சர்க்கார் நியமிக்கிற காரணத்தினாலே, சர்க்கார் வழக்கறிஞர் என்று குறிப்பிடுகிறார்கள். அதனாலே அரசாங்கத்தின் சார்பிலே வாதாடுவது கிடையாது. இது முன்னாலேயிருந்து நீண்டகாலமாக நடைபெற்று வருகிற பழக்கம். எல்லாக் கமிஷனிலேயும் கமிஷனுக்கு ஒரு வழக்கறிஞர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொல்லியதைப்போல, இதுவரை வந்த கமிஷன்களுக்கு எல்லாம் எதற்கு ஒரு வழக்கறிஞர்? காவல் துறையினர் சுட்டிருந்தால், சுட்டது சரியா என்று தெரிந்துகொள்வதற்கு. ஆகவே, அந்தக் காவல் துறையின் சார்பிலே வாதாடுவதற்கு ஒரு வழக்கறிஞரை அரசாங்கம் நியமிக்கும். நான் அதைத்தான் சொல்கிறேன், எனக்குத் தெரிகிறது. இங்கே 'அரசாங்க வழக்கறிஞர்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் அதற்குக் காரணம், அரசாங்க ஆணை போட்டிருக்கிறது என்ற காரணத்தினாலே, அது நடைமுறையிலே உபயோகப்படுத்தப்பட்டிருக்கிற சொல்லே தவிர, அரசாங்கத்தின் சார்பிலே வாதாடுவதற்காக அல்ல; அரசாங்கத்தின் சார்பிலே கருத்துக்களை எடுத்து வைக்க அல்ல. அந்த ஆணை பிறப்பிக்கப்படும் போது . .





**திரு. க. இராமமூர்த்தி:** 'கவர்மென்ட் பிளீடர்' என்று சொன்னால் இதுதான் அர்த்தமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** 'கவர்மென்ட் பிளீடர்' என்று இல்லை. தயவுசெய்து அதைப் பார்க்க வேண்டும்; 'ஆங்கில வார்த்தை'. அதைத்தான் நான் சட்டப்பேரவையிலே தெரிவித்திருக்கிறேன், தெரிந்து கொண்டுதான் சொல்கிறேன். இப்படியே நீண்டகாலமாக, இந்த ஆட்சியிலே மாத்திரம் அல்ல—அதிலே கவர்மென்ட் பிளீடர் என்று இல்லை—அது நீண்ட காலமாக இந்த ஆட்சியிலே மாத்திரம் அல்ல, இந்த விசாரணைக் கமிஷனுக்கு மாத்திரமல்ல, முன்னாலே பல விசாரணைக் கமிஷன்களுக்கும் அந்தத் துறைக்காக ஒரு வழக்கறிஞரை அரசாங்கம் நியமித்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், கிளைவ் ஹாஸ்டல் சம்பவத்திற்கோ, மற்றவற்றிற்கோ இந்த அரசு வழக்கறிஞராக பப்ளிக் பிராசிக்யூட்டரையே போட்டிருக்கிறார்கள். போலீஸ் துறை தான் தனியாக இந்த வழக்கறிஞரை காவல் துறைக்காக நியமித்தது. ஆணையிலே—கவர்மெண்ட் உத்தரவிடுகிற ஆணையிலே அரசாங்க வழக்கறிஞர் என்று குறிப்பிட்டிருக்கிறதே தவிர, அரசின் சார்பிலே வாதாடியதே இல்லை, வாதாடவும் இல்லை, அரசின் சார்பிலே வாதாடுவதற்காக அவர்கள் நியமிக்கப் படுவதும் இல்லை. ஆகவேதான் கேட்கிறேன் இங்கே அரசாங்கத்தைப்பற்றி நாங்கள் இதிலே அக்கறை காட்டியிருக்கிறோம், சாட்சியங்களை மாற்றி யிருக்கிறோம், அல்லது இந்த ஆவணங்களையெல்லாம் திருத்துவதற்கு உடன் பட்டிருக்கிறோம் என்றால், மாண்புமிகு நீதிபதி அவர்கள் எங்கேயாவது ஒரு இடத்திலேயாவது அப்படிக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்களா? மாறாகப் பாராட்டியிருக்கிறார்கள். அரசாங்கம் மிகுந்த ஒத்துழைப்பைத் தந்தது என்று பாராட்டியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அவர்கள் யார் யாரைக் கேட்டார்களோ அவர்களையெல்லாம் கொடுத்தோம். ஓய்வு பெற்ற போலீஸ் அதிகாரியைக் கேட்டார், கொடுத்தோம். ஓய்வு பெற்ற டாக்டர் கோபால கிருஷ்ணன் அவர்களைக் கேட்டார், கொடுத்தோம். இன்னும் அங்கே சாட்சிகள் சாட்சி சொல்வதற்கு அஞ்சுகிறார்கள், அதனாலே இரகசியப் போலீசைக் கொடுங்கள் என்று கேட்டார், கொடுத்தோம். அங்கே இருக்கிற லோக்கல் போலீசுக்குத் தெரியாமல், இரகசியப் போலீஸ் கமிஷனோடு இருந்தது. அவர்கள் ஓய்வு பெற்ற புலனாய்வு அதிகாரியைக் கேட்டார்கள், கொடுத்தோம். ஆனால், அங்கே சட்டப்படி 'ஆ' தரப்பினரே இதைத் தடுத்து நிறுத்தி விட்டார்கள். ஆகவே, அரசாங்கம் இதிலே தலையிடவே செய்யாது. அதற்குப் பிறகு வேறு யாரையாவது கேட்டுப் பெற்றுக்கூட, இந்தப் புலனாய்வை அவர்களே நடத்தியிருக்கலாம். எதற்கு இங்கேயிருந்து செயலாளர் அவர் களையும் ஆணையரையும் அழைத்தார்கள் என்று கருதுகிறீர்கள்? அங்கே இருக்கிற கலெக்டர் தான் செய்தி அனுப்பியவர், தற்கொலை என்று. அவரை

அழைக்காமல் இங்கே இருக்கிறவர்களை ஏன் அழைக்கிறார் என்றால், அரசாங்கம் இதற்குள்ளே நுழைந்திருக்கிறதா, ஏதாவது செல்வாக்கைச் செலுத்தியிருக்கிறதா, எந்த ஆவணங்களாவது கிடைக்குமா என்று பார்ப்பதற்குத்தான். எல்லா ஆவணங்களையும் கேட்டார்கள்; அனுப்பினோம். உயர் அதிகாரியையும் அழைத்தார்கள். சாட்சி சொல்லிவிட்டு வந்தார்கள். ஆகவே, அரசாங்கம் இந்தக் கமிஷனை நியமித்த தேதியிலிருந்து அதற்கு முன்னாலேயும் சரி, அந்த ஒரு வார காலத்திலேயும் சரி, எந்த அதிகாரியோடும் தவறாகத் தொடர்பு கொண்டதாக எங்கேயாவது ஒரு சிறு சான்றாவது அருள்கூர்ந்து எடுத்துக்காட்டுங்கள். உங்களுக்கு வேண்டிய அதிகாரிகள் எவ்வளவோ பேர் இருப்பார்கள். இங்கே அறங்காவலர் குழுத் தலைவரைப் பற்றிப் பேசினார்கள். அவர் ரௌடி லிஸ்ட்டிலே இருக்கிறார், அவரைப் போட்டுவிட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள், அவர் இந்து மதத்திலேயே நம்பிக்கையற்றவர் என்று சொன்னார். அதற்கு நான் பின்னாலே வருகிறேன். 3½ மாதங்கள் இந்த ஆட்சியைக் கலைத்துவிட்டு ஆளுநர் ஆட்சி நடந்ததே அப்போது இங்கே யாரெல்லாம் அமைச்சராக, அதிகாரப் பற்றற்ற அமைச்சராக ஆட்சி போட்டார்கள், அதிகாரம் நடத்தினார்கள் என்பதற்குச் சான்றுதான் இந்தத் திருச்செந்தூர் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. பாலகிருஷ்ணன் மீது ஓப்பன் செய்த ரௌடிலிஸ்ட். இந்த அரசு இல்லாத காலத்தில், ஒரு திராவிட முன்னேற்றக் கழகத்தின் மன்றத்தைத் தாக்கினார் அதற்குத் துணையாக இருந்தார் என்ற ஒரு வழக்கிலே அவரைச் சேர்த்து, அப்போது ஓப்பன் செய்யப்பட்டதுதான் 'ரௌடி லிஸ்ட்'. அவர் யாரையும் அடிக்கவில்லை, களவாடவில்லை, அதற்காக அவர் எங்கேயும் தண்டனை பெறவில்லை அவர் அப்படி தண்டனை பெற்றிருந்தால், அறங்காவலர் குழுத் தலைவராகவே வந்திருக்க முடியாது. அவரை அறங்காவலர் குழுத் தலைவராகப் போட்டபோது, 'ரௌடி லிஸ்ட்' ஓப்பன் பண்ணப்படவில்லை. 'ரௌடி லிஸ்ட்' ஓப்பன் பண்ணுகிறபோது யாருக்காக ஓப்பன் பண்ணுகிறார்களோ அவர்களுக்கேகூட அது தெரியாது. அரசியலிலே இருக்கிற—மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் தெரியும். 'ரௌடி லிஸ்ட்' ஓப்பன் பண்ணப்பட்ட, கேடி லிஸ்ட்டிலே இருந்தவர்கள் எல்லாம் நாட்டிலே மிகப் பெரிய தலைவர்களாக விளங்குகிறார்கள். அரசியல் காரணங்களுக்காக பழிவாங்கப்படுகிற நடவடிக்கைதான் 'ரௌடி லிஸ்ட்'. அதுவும் ஒரு 3½ மாத காலத்திற்குள்ளேயே . . .

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேகமாக பதில் சொல்லும்போது கே.டி. லிஸ்டிலே இருந்தவர்கள் எல்லாம் பெரிய அரசியல் தலைவர்களாக விளங்குகிறார்கள் என்று சொன்னார்கள். சாதாரணமாக





அரசியல் குற்றத்திற்கு சட்டமே கிடையாது. ரௌடி லிஸ்ட்டிலே உள்ளவர்கள் என்றால் வ.உ.சி. அவர்கள் மீது கூட ஜாமீன் வழக்கு போடப்பட்டது. சாதாரணமாக அரசியல் குற்றத்திற்கு சட்டமே கிடையாது. கிரிமினல் குற்றமாகத்தான் நடத்தப்படும். இது வேறு ஆனால் கேடி லிஸ்ட் எல்லாம் தயாரிப்பது எப்படி?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மன்னிக்க வேண்டும். அது எந்த [illegible] என்பதல்ல. ஆனால், அரசியலிலே ஈடுபட்டு, இயக்கத்திலே [illegible] மிகப் பெரிய தலைவர்கள் மீது அந்தக் காலத்திலே வெள்ளைக்கார அரசாங்கக் காலத்திலேயிருந்து எப்படி பழிவாங்குகிற நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகச் சொன்னேன். இந்த ஆட்சி கலைக்கப்பட்ட 3½ மாத காலத்திற்கு உள்ளே எப்படியெல்லாம் அங்கே ஆதிக்கம் செலுத்தியிருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். ஒரு அறங்காவல் குழுத் தலைவரை ஒரு வழக்கிலே சம்பந்தப்படுத்தி, அவர் ஒரு மன்றத்தை அழித்தார், அதற்கு இவர் துணையாக இருந்தார் என்று சம்பந்தப்படுத்தி, அதையொட்டி கே.டி. லிஸ்ட் திறக்கப்பட்டது. இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு, அதை மாற்றாமல் வைத்திருந்தோம். அருள்கூர்ந்து இதை இந்த மன்றமும், இந்த நாட்டு மக்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

(பிற்பகல் 8.10)

ஆனால், இதற்கு முன்னாலே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நல்லக்கண்ணு என்ற அறங்காவலர் குழுத் தலைவர் ஒருவர் இருந்தார். அவர் மீது, காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்தில் 1962-1963 ஆம் ஆண்டுகளில் 'ரௌடி லிஸ்ட்' ஓப்பன் செய்யப்பட்டது. அது 1970 ஆம் ஆண்டு நம்முடைய முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் காலத்திலே நீக்கப்பட்டது. ஆனால் எங்கள் கட்சி ஆட்சியில் இல்லாதபோது, ஒரு வழக்கை ஜோடித்து, அந்த வழக்கில் திரு. பாலகிருஷ்ணனைச் சம்பந்தப்படுத்தி, அவர்மீது ஒரு 'ரௌடி லிஸ்ட்' திறக்கப்படுகிறது. அது அவருக்கே தெரியாது. பால் கமிஷன் விசாரணையின்போது, கமிஷன் அவரைப் பார்த்துக் கேட்கிறது. "அது எனக்குத் தெரியாது. அப்படியில்லை" என்று அவர் சொல்லுகிறார். ஆனால் இந்த விஷயம் எப்படியோ எதிர்க் கட்சி வழக்கறிஞருக்கு மட்டும் தெரிந்திருக்கிறது. அங்கேதான் சூட்சுமம் இருக்கிறது. போலீஸ் இலாக்காவைக் கொண்டு ஒருவர் மீது ஓப்பன் செய்யப்படுகிற 'ரௌடி லிஸ்ட்' பற்றி அவருக்கே தெரியாது. ஆனால் எதிர்க் கட்சித் தரப்பில் வாதாடுகிற வழக்கறிஞருக்கு மட்டும் தெரிந்திருக்கிறது. கொண்டு வாருங்கள் அந்த ரௌடி லிஸ்ட்டை என்கிறார்கள் [illegible] கொண்டு வந்து தருகிறார்கள். [illegible] இந்த ஆட்சி இல்லாத காலத்தில் திறக்கப்பட்ட 'ரௌடி லிஸ்ட்' என்று

[திரு. இராம. வீரப்பன்] [1982 பிப்ரவரி 18

இங்கே பேசிய பலரும் 'அஃபிடவிட்டு' கொடுத்துவிட்டு வராதவர்களைப் பற்றிக் குறிப்பிட்டு, அவர்களெல்லாம் ஓடிவிட்டார்களா என்று கேட்டார்கள். அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்தவர் அஃபிடவிட்டு கொடுத்தாரே அவர் எங்கே போனார் என்று கேட்டார்கள். அவர் இன்றும் இருக்கிறார். ஆனால் மேகநாதனிடம் 'அஃபிடவிட்டு' கொடுத்துவிட்டவர்களைக் குறிப்பிட்டு நீதிபதி அவர்களை அழைத்து வாருங்கள் என்று கேட்டால், அவர்களைக் காணோம் என்று சொல்லுகிறார், மேகநாதன். மேகநாதனைப்பற்றி அவ்வளவு தெளிவாக நீதிபதி பால் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார். தானே வாக்குமூலத்தையும் கொடுத்துவிட்டு, தியாகி என்று பெயர் சொல்லிக்கொண்டு, சாட்சிக் கூண்டிற்கும் செல்லாமல் தன்னைக் குறுக்கு விசாரணைக்கு ஆட்படுத்திக் கொள்ளாமல், நான்கு சாட்சிகளிடம் நான்கு விதமான விசாரணை செய்துவிட்டு, இந்த விசாரணைக் கமிஷனிலேயே மிகப் பெரிய கதாநாயகனாக விளங்கிக் கொண்டிருக்கிறார் அந்த மேகநாதன். அதுமட்டுமல்ல, இங்கேயிருந்து போகிற உயர் அதிகாரியைப் பார்த்து, ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் பார்த்து, அனுபவம் பெற்ற அந்த அதிகாரியைப் பார்த்து, "எல்லா ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் விலகிக்கொண்டு போய்விட்டார்களே, நீங்கள் போகவில்லையா?" என்று கேட்கிற அளவுக்கு உரிமை பெற்றிருக்கிறார் அந்த மேகநாதன். அவரைப்பற்றி நீதிபதி அவர்களே தெரிவித்திருக்கிறார். ஆகவே இங்கே 'அஃபிடவிட்டு' கொடுத்தவர்களில் பலர் ரௌடி லிஸ்ட்டில் இருப்பவர்கள். அதிலே ஒருவர்—ஈஸ்வர ஐயர் என்று கருதுகிறேன்—அவர் ஒரு கொலை வழக்கிலே சிக்கியவர். இன்னும் பலர் கிரிமினல் குற்றங்களில் சிக்கியவர்கள். அதனால்தான் அஃபிடவிட்டு தானே எழுதிக் கொடுத்துவிடுவோம் என்று எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். கூப்பிட்டால் ஆளைக் காணோம் என்று சொல்லிவிடலாம் என்று நடந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த விசாரணையில் இருக்கிற அடிப்படை மாற்றத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களே எடுத்துச் சொன்னார்கள். போலீஸ்காரர்களின் நடவடிக்கை சரியா தப்பா என்பதல்ல இந்த விசாரணையின் நோக்கம். அவர்களெல்லாம் அரசாங்க அதிகாரிகள். ஆகவே அவர்களைப்பற்றி கமிஷன் முடிவைத் தெரிவிக்கிறபோது, உடனே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடிகிறது. ஒன்று சஸ்பெண்டு செய்கிறோம் அல்லது வேறு ஏதாவது செய்கிறோம். ஆனால் இந்தக் கமிஷன் அடிப்படையிலேயே [illegible] ஒரு மரணம் சம்பவித்துவிட்டது. அது கொலையா அல்லது [illegible] என்று கண்டுபிடிக்க வேண்டிய சிக்கலான பிரச்சினை எதிர்நோக்கியிருக்கிறது.



1982 பிப்ரவரி 18] [திரு. இராம. வீரப்பன்]

கமிஷன் எடுத்துக் கூறிய பரிந்துரையோடு மட்டுமே அது முடிந்துவிடவில்லை. அதனையொட்டி நாளைக்கு நீதிமன்றத்திற்குப் போக வேண்டிய வழக்கு. அதனால்தான் அரசாங்கம் இவ்வளவு அக்கறையோடு செயல்பட்டிருக்கிறது. எனவேதான் இப்போதும் கேட்கிறோம். அருள்கூர்ந்து தடயம் இருந்தால் சொல்லுங்கள். தயவுசெய்து எங்களை நம்புங்கள். எங்களுக்கு இதில் யாரையும் காப்பாற்ற வேண்டும் என்ற அக்கறை இல்லை. ஏனென்றால் எங்களுடைய கட்சி இளைஞர்களை எல்லாம் பலி கொடுத்துவிட்டு, காவு கொடுத்துவிட்டு அமைக்கப்பட்டிருக்கிற அரசு. ஆகவே கொலை என்பதை அவ்வளவு சாதாரணமாக நாங்கள் எடுத்துக் கொள்ளமாட்டோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட உள்ளம் படைத்தவர் அல்ல. நான் மிகச் சாதாரணமானவனாக இருக்கலாம். ஆனால் வாழ்க்கையில் இப்படிப்பட்ட பெயர் பெற்றவனல்ல. எனவேதான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். தயவுசெய்து நம்புங்கள். தடயங்கள் இருந்தால் தாருங்கள், சான்றுகள் இருந்தால், சாட்சியங்கள் இருந்தால், தயவுசெய்து கொண்டு வாருங்கள். [illegible]

இதுவரை எந்த அதிகாரியிடமாவது இந்த அரசாங்கம் தலையிட்டு, இப்படி நடவடிக்கை எடு என்று சொல்லியிருக்கிறது என்று யாராவது சான்று சொல்ல முடியுமா? நீங்களே சொல்கிறீர்கள். 'அஃபிடவிட்டு' கொடுத்தவர்களில் ஒருவர் 'தினமலர்' நிருபர். அவரே 'அஃபிடவிட்'-டை மாற்றிக் கொடுக்கிறார். அது உங்களால் முடிந்தது. அப்படிச் செய்கிறபோது எங்கே அரசாங்கம் தலையிட்டது என்று சொல்ல முடியும்? அறங்காவலர் குழுவைக் கலைத்துவிட்டு, விசாரணையை நடத்தியிருக்க வேண்டாமா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கிறீர்கள். உங்களின் அந்த வாதத்திலேயே தவறு காண்கிறீர்கள். அதை நான் வாதத்திற்கு ஒப்புக்கொள்கிறேன். இந்த அரசாங்கத்திற்கு அப்படி ஒரு அக்கறை இருந்திருந்தால், கண்துடைப்புக்காக அறங்காவலர் குழுவை நீக்கிவிட்டிருந்தால், அதற்குப் பிறகு அங்கே யார் இருந்திருப்பார்கள்? அரசு அதிகாரிதானே இருப்பார். எக்சிக்யூட்டிவ் ஆபீசர்தானே இருப்பார். அரசாங்கத்திற்குப் பயப்படுகிறவர்கள்தானே அங்கே இருப்பார்கள். அவர்கள் நாளைக்குப் போகப்போகிற அறங்காவலர் குழுவுக்கா பயப்படுவார்கள்? அறங்காவலர் குழு என்பது மூன்று வருஷத்திற்கு மட்டும் பதவியில் இருக்கப்போவது. இன்னும் இருந்தால், ஆறு, ஏழு மாதங்கள் இருக்கும். அரசாங்கம் அக்கறை காட்டுகிறது என்பதும், குற்றவாளிகளை மறைக்கிறார்கள் என்பதும் உண்மையாக இருக்குமானால், முடியாததா? எங்களை அந்த அளவுக்கு அரசியல் ஞானம் இல்லாதவர்கள் என்றா கருதுகிறீர்கள்? அந்த அளவுக்கு அரசியல் தந்திரம் தெரியாது என்றா கருதுகிறீர்கள்? அசகாய சூரர் என்று புகழப்படும் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களையே மக்கள் மன்றத்தின் முன்னாலே நிறுத்தி

[1982 பிப்ரவரி 18

வென்று காட்டிய மாண்புமிகு புரட்சித் தலைவருக்கு இந்த அளவுக்குக்கூட ஞானம் இல்லை என்றா கருதுகிறீர்கள்? இதை மாற்ற வேண்டும், மறைக்க வேண்டும், அல்லது மக்களை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணம் துளியாவது இருந்திருந்தால், உடனே இதைச் செய்திருக்க முடியாது என்று கருதுகிறீர்களா? அங்கே இருக்கிற அதிகாரிகள் அரசாங்கத்தின் பிடியில் இருப்பவர்கள் தானே.

பூவாவரி சுகுமாரன் கொலையில் அரசு தலையிட்டதாக வழக்கு மன்றத்திலே பெரிய அதிகாரிகள் எல்லாம் சாட்சி சொல்லியிருக்கிறார்கள். மறந்துவிட்டோமா? நாங்கள் பறி கொடுத்துவிட்டுத் தவிக்கிறோம். அதனால் தான் சொல்கிறோம். மரணமா, கொலையா என்று எண்ணுகிறபோது, கொலையாக இருந்தால் கொலைகாரர்கள் நிச்சயமாகக் கூண்டில் ஏற்றப்படுவார்கள். அருள்கூர்ந்து நம்புங்கள்.

ஆகவே, இதற்குள் நுழைந்து பல விவகாரத்தைச் சொல்ல ஆரம்பித்தால், அது நன்றாக இருக்காது. அதுதான் எங்களுக்கு இருக்கிற கஷ்டம். எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் எதை வேண்டுமானாலும் மேடையில் பேசலாம், பத்திரிகைகளில் எழுதலாம், சட்டமன்றத்திலே விவாதிக்கலாம். அதற்கெல்லாம் உள்நோக்கம் கிடையாது. அது விசாரணைக் கமிஷனைப் பாதிக்காது. ஆனால் அரசுத் தரப்பில் ஏதாவது சொல்லிவிட்டால், "அது விசாரணைக் கமிஷனைப் பாதிக்கும், நீதிபதியை அவமானப்படுத்துவதாகும், உள்நோக்கம் கற்பிக்கும், குற்றவாளியைக் காப்பாற்றும்."—இப்படியெல்லாம் சொல்கிறார்கள். குற்றவாளிகளே யார் என்று தெரியவில்லை. அதற்குப் பிறகல்லவா அவர்களைக் காப்பாற்றுகிற பிரச்சினையே எழும். பால் அவர்கள் யாரைக் குற்றவாளியாகச் சொல்லியிருக்கிறார்? யாரை அடையாளம் காட்டியிருக்கிறார் அவர்? அறங்காவலர்களை அடையாளம் காட்டியிருக்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். திரும்பத் திரும்ப அறங்காவலர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். நாங்களும் தேடித் தேடிப் பார்த்துத்தானே விட்டோம். அவர் அறங்காவலர் குழுவை நீக்க, அல்லது தற்காலிகமாகக் கலைக்க, அல்லது அவர்களை வெளியேற்ற என்று மூன்றைச் சொல்கிறார். "சஸ்பென்ஷன், ரிமூவல் அல்லது டிசொலுஷன்' என்பதில் ஒன்றையும் சொல்லவில்லை. அவர் என்ன சொன்னார்?

"அவ்வாறு அறங்காவலர்க் குழுவைத் தற்காலிகமாக விலக்கி வைத்ததற்குப் பிறகு அல்லது நீக்கியதற்குப் பிறகு அல்லது கலைத்ததற்குப் பிறகு, தேவஸ்தானத்தில் வேலையிலுள்ள நபர்களின் சாட்சியமும் மற்றவர்களின் சாட்சியமும், இப்பொருள்பற்றி இன்னும் அதிகமாக விளக்கமளிக்கும் வகையில் முன்வரலாமென எதிர்பார்க்கலாம்". சாட்சிகள் வருவார்கள் என்பதற்குத் [illegible]

[illegible]



1982 [illegible]வரி 18] [திரு. இராம. வீரப்பன்]

[illegible]காலிங்கம்: அதிலிருந்தே சாட்சியங்கள் ஒழுங்காக வரவில்லை என்று [illegible]ம்பினார் என்று தெரிகிறது அல்லவா? இவர்கள் பொறுப்பில் இருப்பதால் சாட்சியங்கள் சரியாக வரவில்லை. அவர்களை நீக்கிய பிறகு, தேவஸ்தானத்திலிருந்து சாட்சியங்கள் வரலாம்' என்று சொல்லியிருக்கிறார். எனவே அரசு அதை அப்படியே நீக்கியிருந்தால் இப்போது அவர்கள் மீது எந்தப் பழியும் சுமத்தப்பட்டிருக்காது என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: அதைத்தான் சொல்கிறேன். நீதிபதி அவர்களே அவ்வளவு எச்சரிக்கையாகச் சொல்லியிருக்கும்போது, நாங்கள் அந்த எச்சரிக்கையை மீறி எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்? இதையெல்லாம் போட்டு உடைத்துக் கெடுத்தது யார்? இது செப்டம்பர் மாதத்திலே கிடைத்த அறிக்கை. இதை அக்டோபர் மாதத்திலேயே மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாநிலப் புலனாய்வுத் துறைக்கு விட்டுவிட்டார். அதையும் வெளியே யாருக்கும் தெரியாமல் விட்டார். அறங்காவலர் குழுவுக்கே தெரியாமல் விடப்பட்டது. அதிகாரிகள் தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விடப்பட்டது. ஆனால் என்ன நடந்தது? செப்டம்பரில் அறிக்கை வருகிறது. ஆனால் இதற்குப் 15 நாட்களுக்குள்ளாகவே மேகநாதன் என்பவர் இதன் சுருக்கத்தையெல்லாம் "அக்ளக்" பத்திரிகையில் வெளியிடுகிறார். அதற்குப் பிறகு 10 நாள் கழித்து முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இதைப்பற்றிப் பேச ஆரம்பித்துவிட்டார். ஏன் வெளியிடவில்லை என்று கேட்க ஆரம்பித்துவிட்டார். வெளியிட்டால் ஆபத்து என்று வெளியிடவில்லை என்று குற்றஞ் சாட்டினார். என்ன நியாயம்? அதற்குப்

(பிற்பகல் 8-20)

பிறகு இதனுடைய நகலை வெளியிட்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினைக்குள்ளே நான் நுழையவில்லை. திருப்பத்தூர் தேர்தல் வருகிறது. அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஆனால் அதற்குள்ளே நீதிபதி பால் அவர்களுடைய அறிக்கையின் பேச ஆரம்பித்துவிட்டார்கள். சுருக்கம் அந்தத் தகவல் எப்படிக் கிடைத்தது? எப்படி இந்த மேகநாதன் என்பவருக்கு, நீதிபதி பால் அவர்களாலேயே குறிப்பிடப்படுகிற ஒரு பொறுப்பற்ற மனிதருக்கு அந்தத் தகவல் கிடைக்கிறது? தெரியாது. இந்நாட்டு மக்களிடத்திலே நீங்கள் முன்னாலே குற்றம் சாட்டினீர்கள். இதற்கு பால் கமிஷன் அறிக்கையை ஆதாரத்தோடு காட்டி குற்றம் சாட்டுகிறீர்கள். நாங்கள் எங்கே நடவடிக்கை எடுக்க முடியும்? இல்லையென்றால் நாங்கள் இரகசியமாக அந்த வேலையைச் செய்திருப்போம். நீங்கள் இவர்கள் மீது ஒரு பெரிய குற்றத்தைச் சாட்டிவிட்டு, 'நீதிபதி அவர்களே, இந்தக் குற்றத்தின் மீது நடவடிக்கை எடு' என்று

சொல்லியிருந்தால், எங்களுக்கு வேலை குறைந்திருக்கும். அறநிலையத் துறையினுடைய விதிகளின்படி நடவடிக்கை எடு என்று சொல்லும்போது தானே எங்களுக்குச் சிக்கலே வருகிறது. என்னென்ன திருப்பித் திருப்பிச் சொன்னார்கள்? அவர்கள் உண்டியல் எண்ணுவதற்கு வருவதே இல்லை. வராத சம்பவம் எத்தனை இருக்கிறது? இவர்கள் காலத்திலே அல்ல, இதற்கு முன்னாலேயே தொடர்ந்து அப்படி இருக்கிறது. தொடர்ந்து இருக்கிற காரணத்தாலேதான், 1975-வது ஆண்டிலேயே விதித் திருத்தம் செய்திருக்கிறார்கள். அதிலே கூட உண்டியைத் திறக்கிறபோது அறங்காவலர் குழுத் தலைவர் இருந்தாக வேண்டுமென்று இல்லை. நாங்கள் அந்தச் சட்ட விதிகளைக் கூடப் பயன்படுத்தவில்லை. முன்னாலே இருந்த அறங்காவலர் குழுத் தலைவர்கள் இதே ஆலயத்திலேகூட எத்தனையோ முறை போகாமல் இருந்திருக்கிறார்கள். இன்னும் பல ஆலயங்களிலே போகாமல் இருந்திருக்கிறார்கள். இராமநாதபுரத்தினுடைய மன்னர் இராமேஸ்வரம் ஆலயத்தினுடைய அறங்காவலர் குழுத் தலைவர். அவர் எங்கே போனார்? ஆகவே இந்தச் சாதாரண ஒரு குற்றச்சாட்டைக் காட்டி, அவர் போகவில்லை என்ற குற்றத்தைக் காட்டி, அவர் மீது கொலைக் குற்றம் சாட்டுங்கள் என்று சொல்கிறீர்களே, அது எப்படி நியாயம்? கொலைக் குற்றத்தைச் சுட்டிக் காட்டியிருந்தால், நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லையென்று சொல்லலாம். அதையும் சுட்டிக்காட்டாமல், அத்தனை அறங்காவலர் மீதும் அறநிலையத் துறையின் விதிகளின்படி நடவடிக்கை எடு என்றால், அந்த விதியைத் தேடிப் பார்க்கிறோம். அவையிலே அறிக்கையை வைத்ததற்குப் பிறகு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதை எடுத்தார்களா என்று சந்தேகப்பட்டார்கள். நாங்களே அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்தோம். திரு. செல்லப்பாண்டியன் அவர்களும், மற்றவர்களும் புகார் மனு கொடுத்தார்கள் துணை ஆணையரிடத்திலே, திருநெல்வேலியிலே. அங்கேயும் குற்றம் சாட்டவில்லை. அதையும் அவர்களுக்கு அனுப்பி, என்ன சொல்லுகிறார்கள் என்று கேட்டோம். வேறு ஒரு தந்தி வந்தது, ஏதோ ஐயாயிரம் ரூபாய் வாங்கிவிட்டார்கள் தவறாக என்று. அது குறித்து உங்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று கேட்டோம். பால் கமிஷன் அறிக்கையில் இப்படி வந்திருக்கிறதே, "நீ ஏன் போகவில்லை? உண்டியல் எண்ண ஏன் போகவில்லை?" என்று கேட்டோம். இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கும்போதுதான், அவர்கள் ராஜினாமா செய்திருக்கிறார்கள். இது எப்போது சட்ட வடிவம் பெற்றது? எப்போது சட்ட சம்மதம் பெறுகிறது? சட்டமன்றத்திலே வைத்ததற்குப் பிறகுதான். இதற்கிடையில் எதிர்க் கட்சித் தலைவரும், ஒரு கட்சியின் தலைவரும் ஆகிய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிற ஆளையெல்லாம் கூண்டிலே ஏற்று, தூக்கு மரத்திலே ஏற்று என்றால், அவர்





களையெல்லாம் அப்படி தூக்கிலே போட்டுவிட முடியுமா? பட்டப் பகலிலே நடந்த கொலையிலேயே குற்றவாளியைக் கண்டு பிடிக்க முடியாமல் இருந்த முன்னாள் முதலமைச்சர், கண்டுபிடிக்க முடியவில்லை என்று நீதிமன்றத்திலே வழக்கை கைவிட்டுவிட்டார்கள், அதற்கல்லவா சி.பி.ஐ. விசாரணை கேட்டிருக்க வேண்டும்? ஒரு பாவமும் செய்யவில்லை ஐயா, அந்த இளைஞனும் அவரைப் பெற்ற தந்தையும். அவர் காங்கிரஸ்காரர். இவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் அண்ணன் என்று கருதுகிறேன். அவர் துடிக்கவில்லை அண்ணன் இறந்து விட்டாரே என்று.

**திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பூலாவரியில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். உயர்நீதி மன்றத்திலே இன்னும் அந்த வழக்கு இருக்கிறது. உயர்நீதி மன்றத்திலே இருக்கக் கூடிய வழக்கைப் பற்றி அடிக்கடி இங்கே பல கருத்துக்களை அவர் சொல்லுவது முறைதானா? அதற்கெல்லாம் நான் பதில் சொல்ல வேண்டுமானால், நீதிமன்றத்தினுடைய வரம்பிற்குள்ளே நுழையக் கூடியதாக அமையும். ஏதோ பட்டப் பகலில் நடைபெற்றது என்றும் மாறு கால், மாறு கை வாங்கப்பட்டது என்றும் அவர் பேசினார். ஆனால் அந்த வழக்கு சம்பந்தமாக எஃப் ஐ. ஆரில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுவதைப் போல சம்பவங்கள் நடைபெற்றதாக அதிலே இல்லை. அந்த விஷயத்திற்குள்ளே நான் போக விரும்பவில்லை. இது வழக்கிலே இருக்கும்போது, என்னவோ மாண்புமிகு அமைச்சரும் அவருடைய கட்சியும் தியாகத்திலே வளர்ந்துவிட்டதைப் போலவும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பெரிய தவறுகள் நடைபெற்றது போலவும், அப்போது முன்னாள் முதலமைச்சர் அவர்கள் மூடி மறைத்தார்கள் என்பது போலவும் இங்கே அடுக்கிக் கொண்டே வருகிறார். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் புட்லூர் தண்டபாணி கொலை செய்யப்பட்டார். அதைப் போலவே திருச்செந்தூர் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. இவர்களுடைய ஆட்சியிலேதான் பல்வேறு கொலைகள் நடைபெற்றிருக்கின்றன. அவைகள் இன்று வெளியே வந்திருக்கின்றன. அதையெல்லாம் வழக்குப் போட்டு விசாரிக்கவில்லை, மூடி மறைத்திருக்கிறார்கள் என்று குற்றச்சாட்டு இருக்கிறது என்று பேசப்படுகிறது. ஆகவே இப்படியெல்லாம் இல்லாத ஒன்றை, தேவையில்லாமல். . .

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கொலை நடந்ததைக் கண்டு பிடிக்கவில்லை, கைவிட்டிருக்கிறார்கள் என்பதைத்தான் தெரிவித்தேன். வேறு எதையும் தெரிவிக்கவில்லை.

திரு. சோ. ஆறுமுகம் : தேவையில்லாமல் உள்நோக்கம் கற்பிக்கும் வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உட்கார வேண்டும். அவர் மூடி மறைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லவில்லை. குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவில்லை என்றுதான் சொன்னாரே தவிர, மூடி மறைக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடவில்லை.

* திரு. சோ. ஆறுமுகம்: துணைத் தலைவர் அவர்களே, இன்னுமொன்றை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இறந்து போனவர் என் னுடைய அண்ணன்தான். "அவருடைய அண்ணன் என்று நான் நினைக் கிறேன், அவர் பதறவில்லை என்று நினைக்கிறேன்" என்று சொல்லியிருக்கி றார். நான்தான் பதறினேன். நான்தான் சடங்குகளையெல்லாம் செய்தேன். பிணத்தை வைத்துக்கொண்டு தி.மு.க. மீது பழி சுமத்தக்கூடிய வர்கள், பிணத்திற்காகக் காத்திருக்கும் கழுகுகளாக, எங்கேயாவது பிணம் விழாதா என்று காத்துக்கொண்டு இன்றும், அன்றும் இருந்தவர்கள் அ.தி.மு.க. வினர் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திசை திருப்பிவிட வேண்டாம். நிதானம் இழக்காமல் அமைதியாகப் பேச லாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஏற்கெனவே முந்தைய ஆட்சியிலே கூட இப்படி நடந்ததில் இன்னும் யார் குற்றவாளி என்று கண்டுபிடிக்கவில்லை என்றுதானே சொன்னார். மூடி மறைத்திருப்பதாகச் சொல்லவில்லை. "அவருடைய உறவினர்" என்று சொன்னதை தவறான நோக்கத்திலே சொன்னார் என்று எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

திரு. ம. சங்கரலிங்கம்: இந்தச் சம்பவத்தைப்பற்றி முதலில் அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே சம்பவம் நடந்தது. அவர்கள் புலன் விசாரணை செய்து குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவில்லை என்று சொன்னார்கள். அதிலே எஃப்.ஐ.ஆர். போடப்பட்டது. வழக்குப் போடப்பட்டது. ஆனால் 15 நாள் வரையில் வழக்குப் போடவில்லை என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அப்போது ஒருவரும் குறுக்கிடவில்லை. சம்பவத்தை சுட்டிக்காட்டுகிறார் என்று இருந்தோம். அமைச்சர் அதோடு அமைதி பெறவில்லை. அதற்குப் பிறகு, மாண்புமிகு உறுப்பினரைக் குறிப்பிட்டு அவருடைய உறவினர் என்று சொன்னார். அப்போதும் உறுப்பினர் ஆத்திரப்படவில்லை. பிறகு "பதற வில்லை" என்று சொன்னார். அப்படியே போய்க் கொண்டிருந்தால், அவ்விடைய நோக்கம் என்ன?





மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: ஒரு நோக்கமும் இல்லை. ஒரு அமைச்சர் மீது, ஏதோ இந்த அமைச்சர் பதவிக்கு புரட்சித் தலைவர் என்னை ஆக்கிவிட்ட காரணத்தாலேயே, "கொலைகாரர்களை மறைக்கப் பார்க்கிறார், பாதுகாப்புத் தருகிறார்" என்று குற்றம் சாட்டுகிற ஒரு கட்சி இந்த ஆட்சியில் இருந்தபோது—இதாவது சந்தேகத்திற்குரியதாக இன்னமும் இருக்கிறது—ஒரு கொலை நடந்தது அதிலே 25—6—1974 அன்று சம்பவம் நடக்கிறது, 25—6—1974, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல எப்.ஐ.ஆர். எல்லாம் போடுகிறார்கள். ஆனால் 29—6—1975 அன்று கண்டுபிடிக்க முடியாத குற்றமாகக் கருதப்பட்டு கைவிடப்பட்டுவிட்டது. அதைத்தான் சொல்லுகிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: இது பால் கமிஷன் அறிக்கையின் மீது விவாதமா? அல்லது வேறு எதாவதா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: பால் கமிஷன் அறிக்கை மீதுதான் விவாதம். ஆனால் ஒருவர் மீது குற்றம் சாட்டி என்னை ராஜினாமா செய்ய வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கேட்கிறபோது—குற்றம் எல்லாம் சுமத்துவார்கள்—குற்றம் சுமத்தப்பட்டவர்கள் நியாயத்தை எடுத்து வைக்கக் கூடாதா? அதைத்தான் சொல்லுகிறேன். துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கொலையை மறைக்க வேண்டும் என்கிற எண்ணம் கொஞ்சமாவது இந்த அரசுக்கு இருந்திருந்தால், இங்கே விவாதிக்கப்படுகின்ற கருத்துக்கள் எல்லாம், ஆவணங்கள் எல்லாம் பால் கமிஷன் முன்னாலே போயிருக்காது. பால் கமிஷன் நீதிபதி பால் அவர்கள் அரசாங்கத்தைப்பற்றி எந்தக் குறிப்பையும் சொல்லவில்லை, தலையிட்டதாகச் சொல்லவில்லை. நான் கேட்ட எல்லா உதவிகளையும் தந்திருக்கிறார்கள் என்று பாராட்டியிருக்கிறார்கள். அதைப்போலவே அமைச்சர் தலையிட்டார் என்ற குறிப்பாவது எங்கேயாவது இருக்கிறதா என்று பார்த்தால், ஒரு வார்த்தை இல்லை. எங்கேயாவது இருந்தால், அந்த அறிக்கையாளர்கள் வெளியே போயிருப்பார்களோ இல்லையோ, நான் வெளியிலே போயிருப்பேன்.

(பிற்பகல் 4.30)

ஏனென்றால் நெருஞ்சலூர் நாயுடு கமிஷனில் இதுபோன்ற ஒரு சம்பவத்தை ஒரு நிர்வாக அதிகாரி புகார் செய்து, அதிலே முன்னாள் அறிக்கையைத் தாண்டி அமைச்சரைப்பற்றியெல்லாம் நிறைய எழுதியிருக்கிறார். ஆகவே நான் அப்படி ஒரு குற்றத்தைச் சுமத்தவனாக ஒரு நிமிடம்கூட இருக்க மாட்டேன். ஆனால் இந்த அறிக்கையைத் தொகுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு உணர்ச்சிபூர்வமான கருத்தைத் தெரிவித்தார்கள். நான் அதற்கு மதித்து விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்;

[திரு. இராம. வீரப்பன்] [1982 பிப்ரவரி 18

இந்த அறங்காவலர் குழுத் தலைவராகப் போடப்பட்டவர், அறங்காவலர்களாகப் போடப்பட்டவர்கள் எல்லாம் என்ன தகுதியில் போடப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். இப்படி, இவ்வளவு பேர் இருக்கிறபோது, திருட்டிலே இதற்கு முன்னாலே இரண்டு முறை அங்கே இருக்கிற ஆலய ஊழியர்களே திருடி, தண்டனை பெற்றிருக்கிறார்கள். இந்த நீதி விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிற காலத்திலேயே மதுரை மீனாட்சி அம்மன் கோவிலிலே பல பேர் முன்னிலையிலே ஒரு ஆலய ஊழியர் பணத்தை எடுத்து வைத்து இப்போது வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இப்படி பல பேர் முன்னிலையில் திருப்பதியில் உண்டியலை என்னுகிறபோது கண்டுபிடிக்கப்பட்ட வழக்கு பத்திரிகையிலே சமீபத்திலேதான் வந்தது. ஆகவே எல்லோரும் இருக்கிறபோது பணத்தை எடுக்க முடியுமா, எடுக்க முடியாதா என்பது பிரச்சினையல்ல. கள்ளன் பெரிதா, காப்பான் பெரிதா என்பது பழமொழி. ஆனால் அறங்காவலர் குழுவிலே உறுப்பினர்களாகப் போடுகிறவர்களை நாங்கள் தீர விசாரித்துத்தான் போடுகிறோம். இந்தத் திருச்செந்தூர் அறங்காவலர் குழு உறுப்பினர்களில் டாக்டர் பாலகிருஷ்ணன் என்பவர் ஒரு ஒழுங்கான, மருத்துவம் பார்த்து, நியாயமாக வீடு வைத்துக்கொண்டு, ஓரளவிற்கு மரியாதையோடு வாழ்கிறவர் இந்தக் கட்சியிலே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிறார் என்பது குற்றமானால், அந்தக் குற்றத்தை அவர் செய்திருக்கிறார். அதைத் தவிர அவர் வேறு குற்றம் செய்யவில்லை. ஆனால் அவர் இருதாரப் பெண்ணை மணந்து கொண்டிருக்கிறார் என்று சொன்னார்கள். இந்த அப்ஜெக்ஷன், இந்த ஆட்சேபணை அப்போதே வந்து, அது விசாரிக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, அவர் அதற்கான தெளிவான விளக்கம் தந்து, அவர் இந்துதான் என்பது நிரூபிக்கப்பட்ட பிறகுதான், அவர் அறங்காவலர் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இன்னொருவர் வழக்கறிஞர் இன்னொருவர் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். மிகப் பெரிய அந்தஸ்திலே உள்ளவர். சுப்பிரமணியம். இன்னொருவர், அன்றைக்கு நியமிக்கப்படுகிறபோது சாதாரண, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்தவர். அதற்குப் பிறகு அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களுடைய அன்பைப் பெற்ற ஒருவர். ஒருவர் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர். என்ன தவறு? அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறவன் வரவே கூடாதா? அவன் எல்லாம் யோக்கியனாகவே இருக்க முடியாதா? இந்தக் கட்சியில் இல்லாதவர்கள் எல்லாம் யோக்கியர்களா?. இந்தக் கட்சியிலே இருப்பதாலே அவர்கள் எல்லாம் அயோக்கியர்கள் என்று முடிவு கட்டிவிட முடியுமா? சரி, இவ்வளவு நான் இவர் மீது ஏதாவது



1982 பிப்ரவரி 18] [திரு. இராம. வீரப்பன்]

குற்றத்தை—இந்த சரி பார்க்கும் அதிகாரிதான் அங்கே 3 ஆண்டுகளாக வருகி றார்—ஏதாவது தெரிவித்தாரா? இந்த அறங்காவலர் குழுத் தலைவர் வருவதில்லை என்று இவர்தான் ரிப்போர்ட் செய்திருக்கவேண்டும். இது எப்படி அரசாங்கத்தின் கவனத்திற்கு வரும்? அவர் ஏன் தெரிவிக்கவில்லை? அவரைப் பற்றிய ஒரு குறிப்பு பற்றி முன்னாள் முதலமைச்சரவர்கள் சட்ட மன்றத்திலே சொன்னார்கள். அன்றைக்கு நேரமில்லாத காரணத்தாலே நான் தெரிவிக்கவில்லை. அதை இங்கே நான் சான்றோடு சொல்லுகிறேன். ஆகவே மூன்று ஆண்டுக் காலம் நகை சரி பார்க்கும் இந்த அதிகாரி, வெரிபிகேஷன் ஆபீசராக இருக்கும் ஒரு அசிஸ்டண்ட் கமிஷனர் எந்தக் குற்றச்சாட்டையும் இதுவரையில் அறங்காவலர் குழுவின்மீதோ, குழுத் தலைவரின்மீதோ தெரிவிக்க வில்லை. யாருமே தெரிவிக்கவில்லை. எப்படி நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று விரும்புகிறார்கள், கருதுகிறார்கள்? இங்கே சில சட்ட முன்வடிவுகள் வருகிறபோது, நாம் என்ன பேசுகிறோம்? எதிர்க் கட்சியினர் என்ன சொல்கி றார்கள்? இப்படி அரசாங்கத்திற்கு அதிகாரத்தைத் தந்துவிட்டால், அதிகாரி களுக்கு அதிக அதிகாரத்தைத் தந்துவிட்டால், இது தவறாகப் பயன்படுத்தப் படாதா என்ற வாதத்தை வைக்கிறோமே, இங்கே மாத்திரம் அந்த அதிகா ரத்தை வைத்துக்கொண்டு நீ அதைத் தவறாகப் பயன்படுத்து என்று வழி காட்டுவது என்ன நியாயம்? என்ன அறங்காவல் குழுவினராக வந்து விட்டதாலேயே, குற்றவாளியென்று கூற முடியுமா? நாளைக்கு நீதி மன்றத்திற்குப் போய் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்படட்டும், கவலையே இல்லை. யாராக இருந்தாலும் தண்டனையைப் பெறட்டும். அதற்கு முன்னாலே எவ்வளவு மரியாதை தருகிறார்கள்? ஆண்டிசிப்பேட்டரி பெயில் கொடுக்கிறார்களே, கொலைகாரனுக்கு! எவ்வளவு மரியாதையோடு நடத்துகிறார்கள்! ஆனால் இங்கே அறங்காவலர் குழுவிலே வந்துவிட்டதாலேயே, அவர்களைப் பழி வாங்க வேண்டும், குற்றம் சாட்ட வேண்டும் என்று எல்லோரும் சுட்டிக்காட்டினால், அதை உடனே அரசாங்கம் செய்ய வேண்டுமென்றால், எப்படிச் செய்வது? நடவடிக்கை எடுத்தால் நாளைக்கே சொல்லுவார்கள், "இந்தக் கையாலாகாத அரசாங்கம் கொண்டு போய் வழக்கு மன்றத்திலே நிறுத்தியது, தப்பி வந்துவிட்டார்கள்; வழக்கு மன்றம் இவர்கள் முகத்திலே கரியைப் பூசி விட்டது" என்று அப்போது அப்படியும் பேசலாம். ஆகவேதான் நாங்கள் பொறுத்திருந்தோம். அமைதி யாக இருந்தோம். ஒரு வார்த்தை வெளியிலே பேசவில்லை. இரண்டு முறை —4 ஆம் தேதி ஒருமுறை; அடுத்தது இந்த மன்றத்திலே போன வருடம் ஆளுநர் உரையிலே குறுக்கிட்டுச் சொன்னதைத் தவிர, ஒரு வார்த்தை, எங்கேயாவது சொல்லுங்கள்; பேசினேன் என்று. யார் பேசினார்கள்? இருந்த பலவீனமே அதுதானே. நாங்கள் பேசாமல் இருந்தோம். இன்னொரு பக்கத்தில் பேசிக்கொண்டே இருந்தார்கள்.

அறங்காவலர் நியமனம்பற்றி உறுப்பினர்கள் அருள்கூர்ந்து குறை காண வேண்டாம். எங்களுடைய சக்திக்கு ஏற்றவாறு அவர்களை எல்லாம் பரிசீலித்துத்தான் போட்டோம். அங்கே இந்து சமயத்தவர்களெல்லாம் பொங்கி எழுகிறார்கள் என்று சொன்னார்கள். இந்த அறங்காவலர் குழுவினர் பதவி ஏற்ற வருடம் 1979. இந்தத் தேதி—இந்தச் சம்பவம் நடந்த தேதியை ஒட்டி ஆண்டுவாரியாகச் சொல்கிறேன். 27—11—1979-லே உண்டியல் எண்ணியபோது—அந்த ஆண்டுதான் அவர்கள் பதவிக்கு வருகிறார்கள்—77,479 ரூபாய் 59 காசு; 36 கிராம் தங்கம், 571 கிராம் வெள்ளி—1979-லே. இந்தச் சம்பவம் நடந்த தேதி—26—11—1980—ஒரு லட்சத்து 82 ஆயிரத்து 428 ரூபாய் 16 காசு; 66 கிராம் தங்கம், 1,209 கிராம் வெள்ளி. என்ன சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்? அன்றைக்கு தங்கமே கிடையாது, வெள்ளியே கிடையாது, எல்லாவற்றையும் திருடிக்கொண்டு போய்விட்டார்கள். அதற்குப் பிறகு இந்து சமயத்தவர்கள் எல்லாம் கொதித்தெழுந்து, இப்படிப்பட்ட குற்றவாளிகள் எல்லாம் இருக்கிற அந்த ஆலயத்திற்குள் போக மாட்டோமென்று எண்ணுவதாக ஒரு மாயை கற்பிக்கப்பட்டதே. ஒரு வருஷம் கழித்து 25—11—1981 அன்று உண்டியலில் 2 லட்சத்து 26 ஆயிரத்து 439 ரூபாய் 16 காசு, 146 கிராம் தங்கம், 1,668 கிராம் வெள்ளி. நீங்கள் அருள்கூர்ந்து இதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே பக்தர்கள் அங்கே வருகிறார்கள், பக்தர்கள் உண்டியலில் பணம் போடுகிறார்கள், அது அப்படியே உயர்ந்துகொண்டு கணக்கிலே வந்து கொண்டிருக்கிறது என்பதற்காகச் சொல்லுகிறேன். நீங்கள், யாரையோ, எதற்கோ குறி வைக்கிறீர்கள் என்பது எங்களுக்குத் தெரிகிறது. இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, சமயத் துறையிலே இருப்பவர்கள், ஆன்மீக நெறியாளர்கள், ஆத்திகத்திலே நம்பிக்கை உள்ளவர்கள் உண்மையிலேயே பாராட்டுகிறார்கள், மகிழ்ச்சியடைகிறார்கள். அது என்னாலே என்று சொல்லமாட்டேன். புரட்சித் தலைவரவர்களிடத்திலே இருக்கிற நம்பிக்கை—அந்த நம்பிக்கையை உடைக்க வேண்டுமென்ற முயற்சிக்கு இதை எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். எதிர்க் கட்சி அரசியல் நடத்த வேண்டுமானால் அப்படித்தான நடக்கும். அதைத்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கனிவோடு, அன்போடு சொன்னார்கள். "இந்த ஆட்சிக்கு அவப் பெயர் வந்துவிடக் கூடாது, தயவு செய்து நாங்கள் சொல்வதைக் கேளுங்கள்; உங்களுக்குத் தெரியாமல் இருந்தால் அல்லவா நாங்கள் சொல்வதைக் கேட்கப் போகிறீர்கள்" என்று சொல்லிக்கொண்டே சொன்னார்கள். அது அவர் இருக்கிற இடம் அப்படி அப்படித்தான் அவர்கள் பேசுவார்கள். ஆகவே அறங்காவலர் குழுத் தலைவரைப் பற்றியோ, அறங்காவலர் குழு உறுப்பினர்களைப் பற்றியோ நாங்கள் எந்த





அளவிற்குப் பரிசீலனை செய்து, ஆராய்ச்சிகள் செய்து போட முடியுமோ,
போட்டிருக்கிறோம். எங்கேயாவது தவறுகள் செய்கிறவர்கள் இல்லையா
என்றால், இருப்பார்கள். அவன் தவறு செய்கிறவனாக நேற்றுவரை
இல்லாமல் இருந்து இன்றைக்குக்கூட தவறு செய்யலாம். குற்றத்தைச்
செய்யலாம். அப்படியிருந்தால் அருள்கூர்ந்து சான்றுகளை இங்கே தயவு
செய்து தாருங்கள். அதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள்.

அறிக்கை அரசாங்கத்தில் ரகசியமாகப் பரிசீலனையிலே இருந்தபோது,
கொஞ்சம் சும்மா இருந்திருந்தால், இன்னும் தெளிவாகக்கூட நாங்கள், வேக
மாகக்கூட சில காரியங்களை எடுத்திருப்போம். சில எதிர்க் கட்சிக்
காரர்கள் இதைப் போட்டு உடைத்ததற்குப் பிறகுதான், இது நீதியா, நீதி
விசாரணையா, என்ன என்பதே தெரியாமல் போய்விட்டது. அதனால்
நாங்கள் சட்டமன்றத்திலே வைக்கப்படும்வரை பொறுத்துக்கொண்டிருக்க
வேண்டிய அவசியம் வந்தது. கட்டாயம் வந்தது. அவர்கள் வழக்கு
மன்றத்திற்குப் போகட்டுமே, நீங்கள் நடவடிக்கை எடுங்கள் என்று
மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். இதையே முன்னாள்
முதலமைச்சரவர்களும் சொன்னார்கள். அது என்ன நியாயம்? நடவடிக்கை
எடுத்துவிட்டு, வழக்கு மன்றத்திற்குப் போக வேண்டுமா? போய் ஒரு
'ஸ்டே' வாங்கிக்கொண்டு வந்தால், பிறகு அதை வைத்துக்கொண்டு
விமர்சிக்கலாம். இது எந்தச் சட்டத்தின்பாற்பட்டது? எந்த நீதியின்பாற்
பட்டது? இந்த அறநிலையத் துறையிலே, இந்த அறங் காவலர்கள்
என்று சொல்லவில்லை. அதனால்தான் நீதிபதி அவர்களும் சொல்ல முடிய
நிர்வாகத்தில் தவறு செய்திருக்கிறார்களா என்று கண்டுபிடியுங்கள்
வில்லை. அதைச் சொல்லியிருந்தால், அது 'டேர்ம்ஸ் ஆஃப் ரெபரன்ஸ்'-
ஆக இருந்திருந்தால், எங்களுக்கும் சுலபமாக இருந்திருக்கும். ஆகவே
தான் அவர்கள் அதையும் சொல்ல முடியாமல், வேறு வழியிலே வருகிறார்கள்.
ஆகவே இப்போது அறங்காவலர்கள் அவர்களாகவே நீக்கிக்கொண்டிருக்கி
றார்கள், ராஜினாமா செய்து விட்டார்கள். அங்கேயும் காலம் கடந்துவிட
வில்லை, அவர்களே பல பேரை வந்து சாட்சியம் சொல்லுங்கள் என்று
கேட்டிருக்கிறார்கள். ஒருவரும் வரவில்லை. யார் அஃபிடவிட் கொடுத்த
வர்கள்?

(பிற்பகல் 8-40)

அந்த அஃபிடவிட்டைக் கொடுத்தவர் அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகத்தைச் சேர்ந்தவர்தான். அவர் மேலே வழக்கு எல்லாம் இருக்கிறது.
அது வேறு விஷயம். அவர் வந்திருக்கலாம். ஏன் வரவில்லை என்பது தெரிய
வில்லை. ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசாங்கத்திற்கு எந்தவிதமான
உள்ளுணர்வும் இல்லை. இன்றைக்கும் சொல்கிறோம், நேற்றும் சொன்னோம்,

[திரு. இராம. வீரப்பன்] [1982 பிப்ரவரி 18

நாளையும் சொல்வோம். குற்றவாளிகள் இதிலே கிடைப்பார்களானால், பிடிக்கப்படுவார்களானால், நிச்சயம் அவர்களை நீதி [illegible]த்தில் நிறுத்துவோம். ஒரு கருத்து இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லவில்லை. இந்த மரணம் அடைந்த அதிகாரியைப் பற்றி, "அவர் மிகுந்த நாணயமானவர், யோக்கியமானவர், சுத்தமானவர், அவர் திருடினார் என்று கேட்டவுடனேயே நான் அதிர்ச்சி அடைந்தேன்" என்று இன்றைக்கு இருக்கிற உதவி ஆணையர், திரு. அர்ச்சுனன் என்பவர் கமிஷனிடத்திலே சாட்சியம் அளித்திருக்கிறார். அதைக் கமிஷன் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏனென்றால் அதற்கு மிகுந்த முக்கியத்துவம் தந்திருக்கிறார்கள். கமிஷனே அழைத்துக் கேட்ட சாட்சி. ஒரு டெபுடி கமிஷனர், துணை ஆணையர் அந்தஸ்திலே இருப்பவர் சொல்கின்றபோது, அதற்கு மிகுந்த மரியாதை கொடுத்து, எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு அமைச்சரவர்கள் [illegible] எடுத்து இருப்பதாகவும், அது குறித்து அக்கறையோடு இருக்கிறேன் [illegible] சொல்லும்போது, அந்தக் கமிஷனிலே சாட்சி சொன்ன ஒரு அதிகாரி பற்றிச் சொல்லுகிறார்கள். கமிஷன் சொல்லியிருப்பதை, கமிஷனிடமே கேட்டிருக்க வேண்டும். அந்த ரிக்கார்டுகளை கமிஷனிடத்தில் காட்டிச் செய்யவில்லை என்றால், இப்போது அதைப்பற்றிச் சொல்லி, கமிஷன் விசாரணைக்கு ஊக்கம் விளைவிப்பதாக . . .

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: அருள்கூர்ந்து நீங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும். நான் அதற்குத்தான் வருகிறேன். ஏனென்றால், சட்ட மன்றப் பேரவையிலே முன்னாள் முதலமைச்சரவர்கள் குற்றச்சாட்டைச் சுமத்தினார். நாங்கள் சுருக்கமாக, "அந்தக் கமிஷனிடத்தில் அதைப் பற்றிய விவரங்கள் அரசாங்கத்திடம் இருக்கின்றன" என்று இரண்டு வரிகளில் சொன்னோம். அவர்கள் பேசுகிற போது, "இதை நீங்கள் பின்னாலே அந்த அதிகாரியை மிரட்டி வாங்கியிருப்பீர்கள், அப்படியிருந்தால் கமிஷனிடத்திலே நீங்கள் இதை ஏன் தெரிவிக்கவில்லை?" என்று அங்கே குறிப்பிட்டார்கள். அதற்குத்தான் பதில் அளிக்கிறேனே தவிர, வேறல்ல. இவர் ஏ.சி.-யாக 1968 ஆம் ஆண்டிலே நாகப்பட்டினத்திலே பணியாற்றியபோது, மரணம் அடைந்த அதிகாரி வேதாரண்யத்திலே ஈ.ஓ.-வாக இருந்தபோது, இப்போது உயர்நீதி மன்ற நீதிபதி மாண்புமிகு திரு. சிங்காரவேலு அவர்கள் அன்றைக்கு அறநிலையத் துறையினுடைய டி.சி.-யாக தஞ்சையிலே இருந்தபோது, இந்த வேதாரண்யம் ஈ.ஓ. பற்றி, அதாவது இப்போது மரணம் அடைந்த அதிகாரியைப்பற்றி, பொது மக்களிடமிருந்து மிகப் பெரிய புகார் வந்தபோது, நான் அந்த



1982 பிப்ரவரி 18] [திரு. இராம. வீரப்பன்]

பெயரைச் சொல்லவில்லை. அவர் மரணம் அடைந்திருக்கிறார்கள். மரணம் அடைந்திருக்கிற அவரைப்பற்றி விமர்சனம் செய்யக்கூடாது. ஆனால் மரணம் அடைந்துவிட்டாலே அவர்கள் எல்லாம் மகான்கள் என்றும் எண்ணிக் கொள்ளக்கூடாது. அவர்களும் மனிதர்கள்தான். ஆகவே அந்த அதிகாரியைப் பற்றி புகார் டெபுடி கமிஷனருக்குப் போய், டெபுடி கமிஷனர்—இன்றைக்கு டெபுடி கமிஷனராக இருக்கக்கூடிய அர்ச்சுனன் அன்றைக்கு நாகையில் ஏ.சி.-யாக இருந்தார்—அவரைப் போய் உடனே விசாரித்து, "எனக்கு அவசரமாக அறிக்கை தா" என்று சொல்கிறார். அவர் தான் போனால் போதாதென்று, இப்போது ஏ.சி.-யாக இருக்கிற நாகராசன், அன்றைக்கு திருவாரூர் ஈ.ஓ.-வாக இருக்கிறார், அவரையும் அழைத்துக்கொண்டு, இருவரும் போகிறார்கள். வேதாரண்யத்திலே சர்தார் வேதரத்தினம் அவர்களுடைய திருக்குமாரர் நடத்துகிற அந்தப் பள்ளி நிறுவனத்திற்குப் பக்கத்திலே, எதிரிலேதான் விசாரணை நடைபெறுகிறது. ஒரு 50, 60 பேர்கள் அவர் சொல்லி [illegible] குறிப்பின்படி கூட்டமாக வந்து நிற்கிறார்கள். குற்றச்சாட்டு [illegible]ர்கள்—ஒழுக்கக்கேடான குற்றச்சாட்டு. இவராலே சமாளிக்க முடியவில்லை. அந்த அதிகாரி, டி.சி.-யிடமிருந்து வந்திருக்கிற ஸ்டேட்மெண்ட் படி, போனவுடன் என்ன சொல்கிறாராம்—"இது என்னுடைய சொந்தப் பிரச்சினை, இதிலே நுழைந்து விசாரணை செய்யவேண்டிய அவசியமில்லை" என்று மறுத்திருக்கிறார். அங்கேயுள்ள பொதுமக்கள் கோபப் பட்டிருக்கிறார்கள். உடனே இவர் தொலைபேசியிலே டி.சி.-யிடம் கேட்கிறார். அவரை உடனே மாற்றி 'ரிலீவ்' செய்துவிடுங்கள் என்று சொல்லுகிறார். இவர் பொது மக்களிடத்தில் வாக்குறுதி அளிக்கிறார், "இந்த அதிகாரியை இப்பொழுதே மாற்றிவிடுகிறோம்" என்று. "உடனே மாற்றுங்கள்" என்கிறார்கள். அங்கே இருந்தால் அவருக்கு ஏதாவது அபாயம் வந்துவிடுமென்று திருத்துறைப்பூண்டிக்குக் கொண்டு வந்து வைத்து, கூடப்போன திருவாரூர் ஈ.ஓ., இன்றைக்குள்ள ஏ.சி. நாகராசனிடம் அந்த சார்ஜை ஒப்படைத்துவிட்டு, அங்கேயிருந்தே அவர் பேசுகிறார். லீவ் எடுத்துக் கொள்கிறார். இப்படி ஒரு சம்பவத்தை ரிக்கார்டில் உள்ள சம்பவத்தை, இதே டி.சி. நேரில் விசாரித்த சம்பவத்தை, 1968-லே நடைபெற்ற சம்பவத்தை இவர் மறந்துவிட்டு, சாவகாசமாக, வசதியாக கமிஷன் முன்னாலே போய் "இவர் மிகுந்த யோக்கியமான அதிகாரி" என்று சொல்லியிருக்கிறார். இதை நாங்கள் கமிஷனுக்கு அனுப்பிவிட்டோம். இந்தக் கோப்புகளோடு, தஞ்சை டி.சி. ஆபீஸ் 1968-ஆம் ஆண்டு கோப்புகளோடு இந்த இரண்டு அதிகாரிகளும் தந்த வாக்குமூலங்களோடு அறிக்கைகளோடு கமிஷனுக்கு அனுப்பிவிட்டோம். என்ன காரணத்தாலோ கமிஷன் அதைக் கவனிக்கவில்லை.

**திரு. ப. மாணிக்கம் :** கமிஷனின் வேண்டுகோளின்பேரில் அவை அனுப்பப் பட்டனவா அல்லது சாட்சியத்தின் வேண்டுகோளின்பேரிலா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அங்கே வந்த சாட்சியத்தின் பேரில், எங்களுக்குக் கிடைத்த தகவல்கள் எல்லாம் இருக்கின்றன. அதெல்லாம் இருக்கிறது. நான் சொல்ல விரும்பவில்லை. திருப்புகலூர் என்ற ஊரிலே இவர் ஈ.ஓ.-வாக இருக்கிறார். திடீரென்று பிப்ரவரி மாதம் 1981-ல் ஒரு கடிதம் வருகிறது எனக்கு. அது 1970 ஆம் ஆண்டு ஒரு பத்திரிகையினுடைய குறிப்புகளோடு, பேப்பர் கட்டிங்குகளோடு, ஒரு பக்கத்தோடு—அதை யெல்லாம் சொல்ல வேண்டாமென்று நான் விரும்புகிறேன் அதில் அவர் எழுதுகிறார். இதோ இருக்கிறது என்னிடத்திலேயே. இந்த அதிகாரிபற்றி, எந்தெந்த ஊரிலே வேலை செய்தார் என்பது அந்த பத்திரிகையிலே இருக்கிறது. என்னென்ன புகார்கள் என்று இருக்கிறது. [illegible]வரை ஏ.சி.-யாகப் 'ப்ரமோட்' செய்கிறார்களே, இது அடுக்குமா என் [illegible] கேட்டிருக்கிறார்கள். 1970 ஆம் ஆண்டிலே நடைபெற்ற விவகா[illegible]தை 1981 ஆம் ஆண்டிலே ஒருவர் அனுப்புகிறார். அதை அப்படியே வாங்கி வைத்துவிட்டேன். அதற்குப் பிறகு தான், இந்த அதிகாரி சொன்னதற்குப் பிறகு, பார்த்தால் இன்னொருவர் வருகிறார், வேதாரண்யத்திலிருந்து. எனக்குத் தகவல் தெரியுமென்று வருகிறார். அதற்குப் பிறகு தான் துறையினிடத்திலேயே கேட்டேன், "இந்த அதிகாரி பற்றி பைல்கள் இருக்கின்றனவா ?" என்று. அதுவரை வெளியில் வரவே இறக்கவில்லை. அதுவரை திறக்கவில்லை. அதற்குப் பிறகு கேட்டால்தான் இந்த டி.சி. அர்ச்சுனன் அவர்கள் சொல்கிறார்கள். ஆமாம் என்று. யாரும் மறைக்க முடியாது. கோப்பு இருக்கிறது. மாண்புமிகு நீதிபதியாக இருக்கிறார்கள். அவர் ஆணையிட்டிருக்கிறார். On public grounds, should be transferred. ஆக இவர் போய்ச் சொல்லிவிட்டு வருகிறார் சாவகாசமாக. ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாங்கள் எதையும் மறைக்கவில்லை. அதையும் கிடைத்தவுடனேயே கமிஷனுக்கு அனுப்பிவிட்டோம் என் கமிஷன் கேட்க வில்லை? நாங்கள் கேட்கப்போவதில்லை கேட்க விரும்பவில்லை.

இங்கேயும் டாக்டர் கோபாலகிருஷ்ணா சாட்சியத்தைப் பற்றி, கமிஷன் என்ன சொல்லுகிறது, "நம்பலாம், நம்ப மறுக்கலாம், நான் நம்புகிறேன்". எங்களுக்கு என்ன கடமையிருக்கிறது ? நீதிபதி பால் அவர்கள் நம்பி விட்டார்கள். நாளைக்கு நீதி மன்றத்திற்குப் போனால் நீதிபதி நம்ப வேண்டுமே, சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பை எடுத்துக் காட்டுவார்களே என்றுதான் நாங்கள் கொஞ்சம் விழிப்பை ஏற்படுத்துகிறோம். [illegible]



கொலையாக இருந்தால் கண்டுபிடிக்கிற அந்த அதிகாரிகளே, சாட்சிகளை, தடயங்களை ஒழுங்காகக் கண்டுபிடித்துக் கொண்டுவாருங்கள் என்பதுதான் அரசாங்கத்தினுடைய வாதம். இவ்வளவு பட்டவர்த்தனமாக, அங்கே மூன்று நாட்கள் என்று நான் கருதுகிறேன், இங்கே தெளிவான விவாதம் நடைபெற்ற பிறகும் . . .

**திரு. ம. சங்கரலிங்கம் :** டாக்டர் கோபாலகிருஷ்ணா அவர்கள் ஆந்திராவில் நடந்த வழக்கு ஒன்றில் அளித்த சாட்சியத்தை சுப்ரீம் கோர்ட் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று கூறியதை புலனாய்வுத் துறைக்குக் கொடுத்திருக்கிறீர்களே, அதே மாதிரி மாண்புமிகு முதல்வரவர்கள் 1967 என்று நினைக்கிறேன், அப்போது சுடப்பட்டபோது, இரண்டு துப்பாக்கிகளில் சுட்டார்கள், இவரும் சுட்டார், அவரும் சுட்டார் என்று இருவர் மீதும் [illegible]ற்றச்சாட்டு சொல்ல முயற்சி எடுத்தபோது, டாக்டர் கோபாலகிருஷ்ணா [illegible]கள் சாட்சி சொல்லி, ஒரே துப்பாக்கியில் உள்ள குண்டாலே[illegible] [illegible]டு பேருக்கும் காயம் ஏற்பட்டிருக்கிறதென்று சொல்லி, அதின் காரணமாக திரு. எம். ஆர். ராதாதான் சுட்டார் என்று முடிவெடுக்கப்பட்டது. ஆகவே இதையும் சேர்த்துச் சொல்லியிருக்கலாம் அல்லவா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே வந்திருக்கும் பிரச்சினையே உச்ச நீதி மன்றம் சுட்டிக் காட்டியிருப்பதே, அன்றைக்கு டாக்டர் கோபாலகிருஷ்ணா என்பவர் இங்கே பதவியிலிருந்தார், பொறுப்பிலே இருந்தார், நேரிலே பார்த்தவர், ஆய்ந்தவர், நேரிலே சாட்சியங்களைக் கண்டறிந்தவர். இன்றைக்கு ஆந்திர வழக்கிலே போய் நேரிலே பார்க்காமல், ஒரு ஆய்வு அறிக்கையை வைத்துக்கொண்டு தன் கருத்தைச் சொன்னார் அதை உச்ச நீதி மன்றம் தள்ளுகிறது. இங்கேயும் நேரிலே பார்க்காதவர், ஒரு ஆய்வு அறிக்கையை வைத்துக் கொண்டு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அதனாலேதான் நீதிபதி அவர்கள் சொல்கிறார்கள். "நம்பலாம், நம்ப மறுக்கலாம், நான் நம்புகிறேன்" என்று நீதிபதி நம்பலாம், நான் நம்பலாம், நீங்கள் நம்பலாம். யார் வேண்டுமானா லும் நம்பலாம். நாளைக்கு நீதிமன்றம் நம்ப வேண்டுமென்றால், அவர்கள் எதை எடுப்பார்கள் ? சுப்ரீம் கோர்ட்டினுடைய டிசிஷனைத்தான் எடுப் பார்கள். அதனாலேதான் சொல்லியிருக்கிறேன். அன்றைக்கு வந்த வழக் கிலே இங்கே இருந்தவர்தான். இந்த நாட்டிலே அதிகாரத்திலே, பதவியிலே, நிர்வாகத்திலே இருக்கிற அதிகாரிகள் எல்லாம் ஒன்றும் தெரியாதவர்கள், ஓய்வு பெற்றவர்கள்தான் கெட்டிக்காரர்கள் என்றால், ஒரு கோபாலகிருஷ் ணாவை எத்தனை ஆண்டுகளுக்கு வைத்துக்கொண்டிருப்போம் ?

(பிற்பகல் 3-50)

திரு. ம. சங்கரலிங்கம் : இந்த அறிக்கையிலே 56-வது பக்கத்திலே கோபாலகிருஷ்ணனை ஏன் அழைக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதற்கு முந்தி இருந்த அந்த டாக்டர் கிட்டே கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லவில்லை. ஆகவே விளக்கத்திற்காகக் கூப்பிடுகிறோம் என்று தான் சொல்கிறார். அதற்குப் பிறகும் சொல்லி, அவர் சொன்னதை எல்லாம் சொல்லி, அவரை நம்புகிறேன் என்று சொன்ன பிறகு அதற்குப் பிறகு இவ்வளவு விமர்சனம் பண்ணினால் அப்புறம் என்ன விசாரணை நடக்கும்?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : கோபாலகிருஷ்ணனை விமர்சனம் செய்வதினால் இந்த விசாரணை ஒன்றும் பாதிக்காது. கோபாலகிருஷ்ணனை நாளைக்குக் கொண்டு போய் நிறுத்தவும் முடியாது. இதை விட சாட்சிகள், பார்த்தவர்கள், அதையும் இதையும் உறுதிப் படுத்துகிற சாட்சிகள், அதனுடைய சுற்றுச் சூழ்நிலைகள், இவர்களை விட உயர்ந்த நிபுணர்கள் இவர்கள் எல்லாம் வரப் போகிறார்கள்.

திரு. ஆ. நல்லசிவன் : On a point of clarification சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னால் கூட பரவாயில்லை. அதாவது இப்படி ஒரு விசாரணைக் கமிஷன் ரிப்போர்ட் வந்திருக்கிறது. விசாரணைக் கமிஷன் ரிப்போர்ட்டையே அரசு விமர்சனம் செய்யலாமா? அதையும் சொல்கிறேன். ஏனெனில் கோபாலகிருஷ்ணனை விட்டு விடுங்கள். அவர் சடலத்தை நேரில் பார்க்கவில்லை. கோபாலகிருஷ்ணனின் சாட்சியங்கள் முரண்பட்டதாக இருந்தும் கூட, கமிஷன் அவருடைய சாட்சியத்தை நம்புவதாகத் தெரிவித்துள்ளது. கமிஷனின் ரிப்போர்ட்டை இப்படி விமர்சனம் செய்து விட்டு, அதே ரிப்போர்ட்டை போலீஸ் கையில் கொடுத்து இன்வெஸ்டிகேஷன் பண்ணச் சொன்னால், அவர்கள் "இன்வெஸ்டிகேஷன்" பண்ணுவார்களா? 'இன்வெஸ்டிகேஷன்' பண்ணப் போகும்போது, இதையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொள்ளலாம் அல்லவா? அரசுத் தரப்பில் செய்யப்பட்டுள்ள விமர்சனம் அல்லவா இது. சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன்.

"Have you come across any case-law where such a report of Enquiry Commission has been criticised or analysed by the Government themselves?"

அப்படி ஏதாவது இருக்கிறதா என்று தெளிவாக்கினால் பரவாயில்லை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு மேலவைத் அவைத் தலைவர் அவர்களே, கமிஷன் ஆப் என்கொயரியைப் பொறுத்தவரைக்கும்,

"That is only a fact finding Commission, fact finding authority"

அவர்களுடைய பரிந்துரையை ஏற்பதும் ஏற்காததும் கூட அரசினுடைய



முடிவு தான். பரிந்துரை வந்து, ஒருவாறு அந்தப் பரிந்துரையை நிராகரிக்கக் கூட அரசுக்கு உரிமையுண்டு. காரணம்

"The constitution of Commission of Enquiry is only to instruct the mind of the Government as to the gact therein".

அது தான் நிலைமை. ஆனால் சட்டத்திலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 'கமிஷன் ஆப் என்கொயரி' சட்டத்திலே 3 வது பிரிவிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையை, கமிஷனுடைய ரிப்போர்ட்டை அரசுக்கு வைக்கின்ற நேரத்தில்

"memorandum of action taken"

என்ற அந்தப் பிரிவும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

"along with the report of the Commission, a memorandum of action taken thereto shall be placed before the House within six months after the receipt of the report from the Commission . .

Memorandum of action includes the reasons for rejection and acceptance thereof"

அந்த அடிப்படையிலே தான் அது கூறப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. நல்லசிவன் : மெமோராண்டம் ஆப் ஆக்ஷனில் நிராகரிப்பதற்கான காரணங்கள், ஒப்புக்கொள்வதற்கான காரணங்கள் இவற்றைச் சொல்லி கமிஷனை என்கொயரி பண்ணச் சொல்லுங்கள். அதை நான் தெளிவு படுத்துகிறேன். ஆகவே கமிஷன் ஆப் என்கொயரி ரிப்போர்ட்டை 'அக்சப்டன்ஸ்' ஆக இருந்தால் அதற்கான காரணங்கள், ரிஜெக்ஷனுக்கான காரணங்கள் இருக்க வேண்டும். இங்கே அரசு ரிஜெக்ஷனுக்கான காரணங்களைச் சொல்லி என்கொயரிக்கு விடுகிறது. அதற்கு என்ன பொருள் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு மேலவைத் அவைத் தலைவர் அவர்களே, ரிஜெக்ட் பண்ணக் கூடிய அளவுக்கு என்று பொருளல்ல. தற்போது இந்தக் கமிஷனுடைய ரிப்போர்ட்டைப் பொறுத்தவரையில், "இந்த இந்தப் பிரச்சினைகள் விசாரணையின்போது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இவை எல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தால் நல்லது" என்றுதான் பொருளே தவிர, புலனாய்வைப் பொறுத்தவரையில், புலனாய்வு செய்யும்பொழுது, கிரிமினல் கேசைப் பொறுத்தவரையில், கிரிமினல் கேஸ் பதிவு செய்யப்பட வேண்டுமானால், அதற்கு முன்னால் ஆய்விலே சில தடயங்கள் கண்டிப்பாகக் கிட்டியாக வேண்டும். அந்தத் தடயங்களைத் தேடுவதற்கு

"Critical analysis of the report will not stand in the way of investigation to find out material evidence".

அதற்குத் தடையாக இருக்கவே முடியாது. அது புலனாய்வுத் துறையினுடைய திறமையில் இருக்கிறது. இதைப் பொறுத்தவரையில் கட்டங்கள், "Materials if available cannot be kept aloof from the investiga

திரு. ஆ. நல்லசிவன் : மெமோராண்டம் ஆப் ஆக்ஷனைப் பொறுத்தவரையில், அமைச்சர் அவர்களுடைய அனுபவத்தைப்பற்றி நான் கேட்கிறேன். மெமோராண்டம் ஆப் ஆக்ஷனில் என்கொயரி கமிஷன் ரிப்போர்ட்டை ரெவ்யூ பண்ணுவது, கிரிட்டிசைஸ் பண்ணுவது பற்றித் தான் நான் அறிய விரும்புகிறேன். "Has he come across any such thing in the past?" மெமோராண்டம் ஆப் ஆக்ஷனைப் பொறுத்தவரையில், கவர்ன்மென்டில் என்ன ஆக்ஷன் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அதற்கான காரணங்களையும் சொல்லலாம். அதுபோல் ரிஜெக்ட் பண்ணியிருப்பதற்கான காரணங்களையும் சொல்லலாம். ஆனால் ஒரு கமிஷன் ரிப்போர்ட்டையே விமர்சனம் செய்வதற்குரிய ஒரு காரியம் ஒரு வழி மெமோராண்டம் ஆப் ஆக்ஷனில் உண்டா? இந்த ஸ்பெஸிபிக் பாயின்டுக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : நான் சொல்கிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த டாக்டர் கோபாலகிருஷ்ணன் அவர்களுடைய சாட்சியத்தைப்பற்றி 63-வது பக்கத்திலே நீதிபதி பால் அவர்கள் தெரிவிக்கிறார்கள். "டாக்டர் கோபாலகிருஷ்ணனின் சாட்சியம் ஒரு மருத்துவ வல்லுநரின் கருத்தே; இதை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ செய்யலாம்" என்று சொல்லிவிட்டுத்தான் அவர்கள் கடைசியில் "நம்புகிறேன்" என்று சொல்லுகிறார்கள். இருக்கிற சங்கடமே இவர்கள் நீதிபதியாக நான் பணியாற்றவில்லை என்பதையும் முன்னாலே சொல்லிவிட்டார்கள். இங்கே அவர்கள் என்கொயரி கமிஷனிலே என்னென்ன வரையறைக்குள் சொல்கிறேன் என்பதையும் முன்னாலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஒரு நிபுணருடைய கருத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று அறிக்கை வருகிறது. இந்த நிபுணரைப்பற்றி சுப்ரீம் கோர்ட் என்ன சொல்லியிருக்கிறது என்று எடுத்துக் காட்டினால்தான், இனிமேல் புலனாய்வு செய்கிறவர்கள் இதை மாத்திரம் நம்பாமல் வேறு தக்க சாட்சியங்களைக் கொண்டு வந்து நிலை நிறுத்த முடியும் என்பதற்காகச் சொல்லியிருக்கிற கருத்தே தவிர, நீதிபதி பால் அவர்களுடைய முடிவு மீதோ, கருத்துக்கள் மீதோ எந்த உணர்வுகளையும் தெரிவிக்க வேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய கருத்து அல்ல என்பதைத் தான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.





திரு. ஆ. நல்லசிவன் : கமிஷன் அர்ச்சுனன் சாட்சியத்துக்கு சற்று முக்கியத்துவம் தந்திருக்கிறது. பாலாஜியில்லை. ஆனால் மரணமடைந்த அதிகாரிபற்றி வந்த புகார் குறித்து அவரிடமே விசாரித்த சம்பவங்கள் குறித்து ஆட்சேபம் உள்ளது. அரசிடம் அறிக்கை உள்ளது. அரசே அதற்கு மாறாக இருக்கிறது என்று விமர்சனம் செய்துள்ளது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். மெமோராண்டம் ஆப் ஆக்ஷனில் என்கொயரி கமிஷன் ரிப்போர்ட்டைப் பற்றி ஒரு கிரிட்டிசிஸம் இருக்க முடியுமா? இது கிரிட்டிசிஸம் அல்லவா? அவர்கள் அப்படிச் சொல்கிறார்கள்; ஆனால் நிலைமை மாறாக இருக்கிறது என்று சொல்வது கிரிட்டிசிஸம் இல்லையா? அரசு புதிதாக உண்டாக்கவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன். முதலில் ஒன்றை 'கிரியேட்' பண்ணியிருக்கிறார்கள். அதற்கு முன்னதாக இந்தமாதிரி ஒரு என்கொயரி கமிஷன் ரிப்போர்ட்டை [illegible] பண்ணுகிறோம். ஆனால் இப்போது என்கொயரிக்கு ஏற்பாடு பண்ணும்போது, அரசே விமர்சனம் செய்கிறார்களே; "Have you come across such instances in the case law?" தயவுசெய்து அதைப்பற்றி மட்டும் சொல்லுங்கள். ஒன்றில் அப்படிப் பார்த்திருக்கிறோம் என்று சொல்லட்டும். அல்லது அப்படிப் பார்க்கவில்லை என்று சொல்லட்டும். எதற்காக அரசு இப்படிச் செய்கிறது என்று எனக்குப் புரியவில்லை. அப்படி ஒன்றை இதுவரை அரசு பார்க்கவில்லையென்றால், தயவுசெய்து அதையாவது சொல்லட்டும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதைப் பொறுத்தவரையில் விமர்சனம் என்ற கருத்தில் மாண்புமிகு உறுப்பினர் எடுத்துக்கொள்ளக் கூடாது. கமிஷன் ஆப் என்கொயரியைப் பொறுத்தவரையில், இந்த ரிப்போர்ட்டிலே என்னென்ன விடப்பட்டிருக்கின்றன என்பது கமிஷன் ஆப் என்கொயரியைப் பொறுத்து மட்டுமல்ல, இன்னும் சிலதும் இருக்கின்றன.

"Some affidavits not covered by the Commission of Enquiry, also have been covered by the report and a critical analysis made by the Government."

ஆனால் விமர்சனம் அல்ல, விளக்கம் என்று தான் சொல்ல விரும்புகிறேன். காரணம் இதை மீண்டும் புலனாய்வு செய்யும்போது தடயங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுதான் அரசினுடைய நோக்கம், எண்ணம் என்பதை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அரசினுடைய எண்ணமும் அது தான்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கமிஷனிலே அந்த அதிகாரியினுடைய ஒரு சாட்சியத்தை முக்கியமாக எடுத்துச் சொல்லி, அதற்கு ஒரு அடிப்படையைக் கற்பித்திருக்கிற காரணத்தாலே அரசாங்கம் நாங்கள் அனுப்பிவிட்டோம் அறிக்கையை, அதைக் கமிஷன் சொல்லவில்லை என்று கமிஷன் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு வந்தது. அவ்வளவு தான். வேறு பிரச்சினை அல்ல. இன்னும் சொல்லப் போனால் 3 ஆண்டுகளில் 33 தடவை அல்லது 32 தடவை இந்த சரிபார்க்கும் அதிகாரி திருச்செந்தூர் ஆலயத்திற்கு வருகிறார். அவர் ஆலயத்தினுடைய ஆய்வகத்திலே தங்குகிறார் அல்லது அறையிலே தங்குகிறார். ஒரு முறை கூட அவர் தான் தங்கியதாகக் கையெழுத்து போட்டதும் இடையாது, கட்டணம் கட்டியதும் இடையாது. இன்னும் ஐந்து நிமிடத்தில் முடித்து விடுகிறேன். 33 முறை சரி பார்க்கும் அதிகாரி 3 வருடக் காலத்தில் திருச்செந்தூர் ஆலயத்திற்குப் போகிறார். அவர் தங்குகிறார். அவர் அந்த ஆலயத்தினுடைய ஆய்வகத்திலோ மற்ற அறைகளிலோ தங்குகிறார். அவருக்கு என்று ஒரு குறைந்த கட்டணம் விதிக்கப்பட்டிருக்கிறது. கட்டணத்தைச் செலுத்தியதே இல்லை. அதிலே தங்கியதாகக் கையெழுத்து போட்டதே இல்லை. ஏனென்றால் இங்கேயும் அவர் கையெழுத்து போடவில்லை என்ற ஒரு பிரச்சினை பெரிதாக இருக்கிறது. ஆனால் இதற்கு உள்ளே நுழைந்து சொன்னால் அரசாங்கமே—நீங்களே சொல்லி விடுகிறீர்கள் என்று வந்து விடும். அதனாலே தான் " நீங்கள் கண்டுபிடிக்கிறவர்கள் நன்றாக எல்லா சாட்சியங்களையும் கண்டுபிடித்துக் கொண்டு வந்து நிறுத்துங்கள், சான்றுகள் இருந்தால் சொல்லுங்கள் " என்று தான் நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அளவிற்கு இரண்டு அவையிலும் இப்படி முதல் முறையாக ஒரு அறிக்கையை வைத்து விவாதிக்கின்ற வாய்ப்பை . . .

(பிற்பகல் 9-00)

**திரு. க. இராமமூர்த்தி :** Thirumathi Padmini Jesudurai, Advocate, Palayamkottai, Counsel for Government before the Commission S. Kandaswami, Advocate, Palayamkottai, to assist the Council for the Government before the Commission. என்று ஆங்கிலத்திலும் தந்திருக்கிறார்கள், தமிழிலும் தந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அதைத் தான் நான் ஒத்துக் கொண்டே சொன்னேன். அரசாங்க ஆணை போடுகிறபோது . . .





**திரு. க. இராமமூர்த்தி :** நீங்கள் தப்பாக அறிக்கையிலே போட்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** பால் அவர்களே அப்படித் தான் வைத்திருக்கிறார்கள். இது வழக்கத்திலே இருந்துவரும் ஒன்று. ஆகவே, எங்கேயும் தவறு இல்லை. நெடுங்காலமாக தொடர்ந்து கமிஷன்களுக்கோ, காவல் துறைக்கோ, மற்றவர்களுக்கோ அரசாங்கம் ஒரு வழக்கறிஞரைத் தருகிறபோது, அவர் 'சர்க்கார் வழக்கறிஞர்' என்கிற முறையிலே ஆணை பிறப்பிக்கப்பட்டுக்கொண்டே வருகிறது. ஆகவே, அரசாங்கம் என்றால் அமைச்சரவையினுடைய முடிவை, அமைச்சருடைய கருத்தை, அரசாங்கத்தினுடைய கருத்தைத் தெரிவிப்பது அல்ல என்பதைத் தான் தெளிவு படுத்துகிறேன். ஆணை பிறப்பிக்கப்பட்டதனாலே . . .

**திரு. க. இராமமூர்த்தி :** அரசாங்க வழக்கறிஞர் இல்லை என்று சொல்வதற்கு இங்கே ரெக்கார்ட்ஸ் ஒன்றும் இல்லை. ஆனால், அரசாங்க வழக்கறிஞர் என்று சொல்வதற்கு இங்கே ரெக்கார்ட்ஸ் இருக்கின்றன. தமிழிலும், ஆங்கிலத்திலும் இருக்கிறது. வேண்டுமானால் இந்த அறிக்கைமீது விவாதம் வருவதற்கு முன்பாகவே இப்படியொரு தவறு நடந்திருக்கிறது என்று நீங்கள் சொல்லியிருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** நான், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் தவறாகச் சொன்னார்கள் என்று சொல்லவில்லை. இது ஒருவேளை தவறாக இருக்குமேயானால், இந்த நடைமுறை நீண்டகாலமாகப் பின்பற்றப்பட்டு வந்துகொண்டிருக்கிற நடைமுறையே தவிர, இது அரசாங்கத்தின் சார்பிலே அல்ல என்ற என்னுடைய கருத்தை இந்த மன்றத்திற்கு எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இரண்டு அவைகளிலேயும் விவாதித்திருக்கிறோம். இதிலே குற்றவாளிகளைப் பற்றி நிச்சயமாகத் தடயங்களோடு, சாட்சிகளோடு விவரங்கள் கிடைத்தால், அவர்கள் கண்டுபிடிக்கப்படுவார்கள். இந்த சம்பவத்தில் எந்தவிதமான உள்நோக்கமும் இல்லை. எந்த ஆவணங்களையும் அரசு மறைக்கவில்லை. கமிஷன் கேட்ட அத்தனை ஆவணங்களையும் அது திருத்தப்பட்ட ஆணையோ, மாற்றப்பட்ட ஆணையோ—அவைகள் எல்லாவற்றையுமே தந்திருக்கிறது. ஆலய நிர்வாக அதிகாரியையே மிகவும் பாராட்டியிருக்கிறது கமிஷன். ஆகவே, இது சம்பந்தமாக எல்லா நடவடிக்கைகளையும் அவர்கள் மேலும் பரிந்துரை செய்திருக்கிறார்கள். நிர்வாகத்தில் என்னென்ன சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும், அவைகளைப் பற்றியெல்லாம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று துறைக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் நான்

[திரு. இராம. வீரப்பன்] [1982 பிப்ரவரி 18

…யாகவோ ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். அமைச்சர் ராஜிநாமா செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள். ராஜிநாமா செய்ய வேண்டுமா, வேண்டாமா என்றால், இதற்கு முன்னாலே எத்தனை அமைச்சர்கள் ராஜிநாமா செய்திருக்க வேண்டும் என்பதெல்லாம் இருக்கிறது. அண்ணாமலை நகர், இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள்; உதயகுமார் என்கிற மாணவன் குளத்திலே விழுந்து சாகிறான். அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையிலே படத்தை யெல்லாம் வைத்துக்கொண்டு இவன் உதயகுமாரே அல்ல என்று வாதம் செய்தார்கள். கமிஷன் போடுகிறார்கள்; ஜஸ்டிஸ் இராமசாமி கமிஷன், அடித்து இறந்தது உதயகுமார்தான் என்று தீர்ப்பு வருகிறது. அன்றைக்கு முதலமைச்சராகத்தான் இருந்தார்கள் நம்முடைய டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள். கிளைவ் ஹாஸ்டலிலே மாணவர்கள்தான் அடித்தார்கள், தவறு செய்தார்கள் என்று அடித்துப் பேசினார்கள் சட்டமன்றத்திலே. எதிர் கட்சிக்காரர்களெல்லாம் இல்லை யென்றார்கள். மாணவர்களைப் பற்றியே விமர்சனம் செய்தார்கள், அன்றைய முதலமைச்சர் அவர்கள். கமிஷன் போடப்பட்டது. மாணவர்கள் மீது தவறில்லை, காவல் துறையின் மீதுதான் தவறு என்று தீர்ப்பு வந்தது. அன்றைக்கும் முதலமைச்சர் அவர்கள் ராஜிநாமா செய்யவில்லை. எதிர் கட்சியிலே இருப்பவர்கள் எல்லாம், 'ராஜிநாமா செய்ய வேண்டும்' என்று கேட்டார்கள். என்ன சொன்னார் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் என்றால், இப்படி வருகிற கருத்துக்களை, அரசாங்கத்திற்கு வருகின்ற, வருகிற கருத்துக்களை அரசாங்கத்தின் சார்பிலே எடுத்துச் சொல்லிவிட்டு, அதிகாரிகள் பின்னாலே அதிலே ஒரு ஐயப்பாடு வருகிறது, சந்தேகம் வருகிறது என்பதனாலே கமிஷன் போடுகிறோம். இதற்கு முன்னாலே கமிஷன் போடுவதில்லை, அதனாலே யாருக்குமே அந்தப் பிரச்சினையில்லை. இப்போது நாங்கள் எதற்கெடுத்தாலும் கமிஷன் போடுகிறோம். அதனாலேதான் சட்டமன்றத்திலே வையுங்கள், வையுங்கள் என்று கேட்கிறீர்கள் என்று. அது பெரியகுப்பத்திற்காகப் பேசுகிறபோது சொல்கிறார், இந்த கிளைவ் ஹாஸ்டல் விசாரணைக் கமிஷன் முடிவிலே சொல்கிறபோது, "ஆகவே இப்பொழுது தீர்ப்பு வந்திருக்கிறது, என்னை ஏன் ராஜிநாமா செய்யவில்லை, அல்லது அமைச்சரவை ஏன் ராஜிநாமா செய்யவில்லை" என்று கேட்கிறார்கள். 'இப்படி வருகிற கமிஷனுடைய முடிவிற்கெல்லாம் ராஜிநாமா செய்வது என்று ஆரம்பித்தால், நாலு போலீஸ் அதிகாரிகள் சேர்ந்துகொண்டு அமைச்சரவையை மாற்றிக்கொண்டே இருக்கலாம்' இது டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள், முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்திலே எடுத்துக்காட்டியிருக்கிற எங்களுக்கு 'வழிகாட்டி நெறி'. ஆகவே, குற்றவாளிகளே யார் என்று தெரிய முடியாத சூழ்நிலையில், குற்றவாளியை மறைத்தேன் என்ற குற்றச்சாட்டு இந்த அடியேனுக்கு, இந்த அப்பாவிக்கு, ஒன்றும் தெரியாத எளியேனுக்கு



1982 பிப்ரவரி 18] [திரு. இராம. வீரப்பன்]

எப்படி வருகிறதோ தெரியவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களாலேயும், பேரறிஞர் அண்ணா அவர்களாலேயும், இந்த அமைச்சர் பொறுப்பிலே அமர்த்தப்பட்டிருக்கிறேன். அண்ணா அவர்கள் தந்த அறிவாலே, ஆற்றலாலே, ஊனமின்றி அது இருக்கிறது என்றால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னை இங்கே அமைச்சராக உட்கார வைத்திருக்கிறார்கள். இந்த நாட்டு மக்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கை என்றைக்குத் தீருகிறதோ, குறைகிறதோ அன்றைக்கு நாங்களே போய்விடுவோம். அல்லது இந்தக் கமிஷன் ரிப்போர்ட்டிலே ஏதாவது, எங்கேயாவது எனக்கு எதிராக ஒரு வரி வந்திருந்தால், நான் வெளியிலே போயிருப்பேன். அல்லது மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிலே போக வேண்டும் என்று விரும்பினால், வெளியிலே போயிருப்பேன். ஆனால், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு யார் யாரோ போக வேண்டும் என்று விருப்பம்—மாண்புமிகு சட்டமன்றப் பேரவை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு—அவர்களை அடியொட்டி அவருடைய கட்சித் தலைவர் என்ற காரணத்தாலே இந்த அவையிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களுக்கும் விருப்பம் இருக்கிறது. ஆகவே, அந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தி ராஜிநாமா செய்யுங்கள், ராஜிநாமா செய்யுங்கள் என்று சொல்வது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது. நீதிபதியோ நேரிலே வரவழைத்து நான் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று கேட்டபோது கூட அவர்கள் தேவையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஒரு அமைச்சர் என்கிற முறையிலே ஒரு அரசாங்கத்திற்கு வந்த தகவலைச் சொன்னேன். அது யாரும் செய்கிற காரியம்தான். ஆனால், விமர்சித்தது என்பது நான் அமைச்சர் என்கிற முறையிலே அல்ல. அதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அதனால் முன்னாள் முதல் அமைச்சர் அவர்களுக்கு என்மீது கடுமையான கோபம் இருக்கிறது. ஆனால் என்ன செய்வது? நீங்கள் அப்படியெல்லாம் வர்ணித்தீர்கள்; எங்களை விமர்சித்தீர்கள். அதற்குப் பதிலாகச் சொன்னேன். அது குற்றம் என்று சொன்னால், நான் ஒரு அரசியல் தொண்டன் என்கிற வகையிலேதான் அந்தக் குற்றவாளி என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால், அரசாங்கத்திற்கு வந்த தகவலை வெளியிலே சொன்ன காரணத்திற்காக அது குற்றம் என்று சொன்னால், குற்றவாளிகளை மறைப்பது என்று சொன்னால், குற்றவாளிகளே யார் என்று தெரியாமல் இருக்கிறபோது நான் எங்கே குற்றவாளிகளை மறைப்பது? குற்றவாளிகளைக் காட்டுவதற்கு சாட்சியம் சொல்ல வருவார்கள் என்றுதான் பால் கமிஷனிலேயே சொல்லியிருக்கிறார்கள். அது குறித்துத்தான் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். விசாரணை கண்டிப்பாகத் தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது. இடையிலே அதற்குத் தடை ஏற்பட்டிருந்தால், வந்த சங்கடங்கள், நிகழ்ந்த சம்பவங்கள்தான் காரணமாக இருக்கும். இப்போதும் காலம் தாழ்ந்துவிடவில்லை. குற்றவாளிகளை தெரிந்தால் வந்து

அடையாளம் காட்டுங்கள், அரசாங்கமோ, அமைச்சரவர்களோ, அல்லது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ இதிலே துளியும் தலையிடமாட்டோம் என்று நான் உறுதி கூறுகிறேன். இந்த உணர்வை ஏற்று நெடிய பயணம் செய்யும் டாக்டர் கலைஞர் அவர்கள் அந்தப் பயணத்தை நிறுத்திக் கொண்டு இந்தக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முயற்சிக்குத் துணையாக நிற்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். என்மீது கோபம் இருந்தால், அரசியல் மேடையிலே விமர்சனம் செய்யுங்கள். நான் தாங்கிக் கொள்ள முடிந்தால், தாங்கிக்கொள்கிறேன். 'இல்லை, நான் நெடிய பயணம் நடத்து வேன்' என்று சொன்னால், 'பூலாவரி சுகுமாரன். கொலையிலேயிருந்து தொடர்ந்து மற்ற கொலைகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளையும் கண்டு பிடிப்பதற்கு இந்த நெடிய பயணம் துணை நிற்க வேண்டும்'. ஆனால், நெடிய பயணம் துணை நிற்காது சான்றுகளைத் தேடிக் கண்டுபிடிப்பதிலேதான் குற்றவாளிகள் பிடிபடுவார்கள் என்பதை பணிவன்போடு, வணக்கத்தோடு நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே அரசாங்கத்திற்கு எந்தவிதமான உள்நோக்கமும் இல்லை, இல்லை, இல்லை. அருள் கூர்ந்து நம்புங்கள் என்று சொல்லி, அமைகிறேன். வணக்கம்.

**திரு. ம. சங்காலிங்கம்** : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும் போது, 'டாக்டர் கலைஞர் அவர்களுக்கு அறநிலையத் துறை அமைச்சர் மீது கோபம் இருக்கலாம்' என்று சொன்னார்கள். உண்மையிலேயே எங்க ளுடைய கட்சிக்கோ, கட்சியின் தலைவருக்கோ அல்லது அந்தக் கட்சியி னுடைய கடைசித் தொண்டனுக்கோ, எந்தத் தனிப்பட்ட நபர் மீதும் எந்தக் கட்சி மீதும் என்றும், எப்போதும் கோபம் இல்லை. மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு கமிஷன்களைச் சுட்டிக்காட்டினார்கள். அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் உதயகுமார் விஷயத்தைச் சொல்லி, அப்போது இருந்த முதலமைச்சர் அவர்கள் போலீசார் சொன்னதையே நம்பிச் சொன்னார் கள் என்று சொன்னார்கள். கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிற போது, ஒரு படத்தைக் கொண்டு வந்து விவாதம் நடந்தபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல் துறையினரிடமிருந்து வந்த தகவல் அடிப் படையில் அந்தப் படம் உதயகுமாரின் படம் இல்லை என்று சொன்னார்கள். பிறகு அவரே விசாரணைக் கமிஷன் போட நடவடிக்கை எடுத்தார்கள். அது போல கிளைவ் ஹாஸ்டல் சம்பவத்தையொட்டியும் கமிஷன் போட்டார்கள். அந்தக் கமிஷன் ரிப்போர்ட்டையெல்லாம் கிரிட்டிசைஸ் செய்யும், அனலைஸ் செய்யும் அளவிலே ஒரு புதிய சகாப்தத்தையே அவர் உருவாக்கினார்.

அதை உருவாக்கியது மட்டுமல்ல. எதிர்க் கட்சியில் இருக்கும் நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அத்தகையதோர் உணர்வை ஆட்சியில் இருக்கிற நீங்கள் உண்டாக்கி விட்டீர்கள் என்று சொன்ன பிறகும், அதற்கு மேலும்.





கடுமையாக விமரிசனம் செய்து, இந்த நிலையில் நீதியான, நேர்மையான விசாரணை நடக்கப் போவதில்லை என்று மறைமுகமாக அறிவித்ததையும் நாங்கள் வன்மையாகக் கண்டித்து, எங்களுடைய எதிர்ப்பையும், கண்டனத்தையும் தெரிவிக்கின்ற வகையில் எங்கள் கட்சியைச் சார்ந்த நாங்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்பு செய்கிறோம் என்று தெரிவித்து அவையை விட்டு வெளியேறுகிறோம்,

(உறுப்பினர் திரு. சங்கரலிங்கமும் மற்ற தி.மு.க உறுப்பினர்களும் அவையி லிருந்து வெளியேறினார்கள்).

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : அவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும்

**பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.**

(பிற்பகல் 9-10)

**6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

*A. Statutory Rules and Orders.*

94. Second Annual Report of the Tamil Nadu Newsprint and Papers Limited for the year 1981. (Tamil and English). [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I, of 1956).]

95. Ninth Annual Report of the Tamil Nadu Theatre Corporation Limited for the year 1980—81. (Tamil) [Laid on the table on the table of the House under section 619 (A) of the Companies (Central Act I of 1956).]

96. Fourth Annual Report of the Tamil Nadu Goods Transport Corporation Limited for the year 1979 (English). [Laid on the table of the House uider section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

*B. Reports, Notifications and Other Papers.*

* 26. The Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1982 (L.A. Bill No. 63 of 1981), as passed by the Assembly.

* 27. The Tamil Nadu Contingency Fund (Amendment) Bill, 1982 (L.A. Bill No. 1 of 1982), as passed by the Assembly.

* 28. The Madras University, Annamalai University and Perarignar Anna University of Technology (Amendment) Bill, 1982 (L.A. Bill No. 8 of 1982), as passed by the Assembly.

£ 29. The Tamil University Bill, 1982 (L.A. Bill No. 9 of 1982), as passed by the Assembly.

£ 30. The Tamil Nadu Debt Relief (Amendment) Bill, 1982, (L.A. Bill No. 2 of 1982), as passed by the Assembly.

* Circulated to all M.L.Cs. on 16th February 1982.
£ Circulated to all M.L.Cs. on 17th February 1982.



## இணைப்பு I

(.... ஆம் பக்கத்தில் வினா எண் 96-க்கான அடிக்குறிப்பை காண்க.)

| வரிசை எண்ணும் கல்வி மாவட்டமும். (1) | | 1979-80 கல்வியாண்டில் பணியிலிருக்கும்போது இறந்துபோன அரசுப் பள்ளி ஆசிரியர்கள் மாவட்ட வாரியாக எத்தனை பேர்? (2) | அவர்களின் பிள்ளைகளில் அரசுப் பணியில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று விண்ணப்பம் செய்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? (3) | அவர்களில் எத்தனை பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது (4) |
|---|---|---|---|---|
| 1 சென்னை | .. | 1 | .. | |
| 2 காஞ்சீபுரம் | .. | 7 | 1 | இதுவரை 8 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது. |
| 3 கடலூர் | .. | 17 | 2 | |
| 4 தஞ்சாவூர் | .. | 13 | 5 | |
| 5 திருச்சி | .. | 2 | 2 | |
| 6 இராமநாதபுரம் | | 6 | 1 | |
| 7 திருநெல்வேலி | .. | 5 | 2 | |
| 8 நாகர்கோவில் | .. | 13 | 3 | |
| 9 மதுரை | .. | 4 | 2 | |
| 10 கோயம்புத்தூர் | | 5 | .. | |
| 11 ஈரோடு | .. | 2 | .. | |
| 12 சேலம் | .. | 1 | .. | |
| 13 தர்மபுரி | .. | 4 | .. | |
| 14 வேலூர் | .. | 26 | 9 | |
| மொத்தம் | .. | 106 | 27 | |

## இணைப்பு

[256-ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

பொது மக்களால் கட்டிக் கொடுக்கப்பட்ட ஒரு ஓட்டுக் கட்டிடத்திலும் கிராம சங்கத்திற்குச் சொந்தமான மற்றும் ஒரு உறுதிக் கட்டிடத்திலும் வெண்ணாவல்குடி அரசு உயர் நிலைப்பள்ளியின் அனைத்து வகுப்புகளும் நடந்துவருகின்றன. ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான மூன்றாவது கட்டிடம் மட்டும் சற்று பழுதடைந்துள்ளது. இக்கட்டிடத்தில், தலைமை ஆசிரியர் அறையும் அலுவலக அறையும் பழைய சாமான்கள் வைப்பதற்காக மட்டும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இக்கட்டிடம் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமாகையால் பொதுப்பணித் துறையினரால் இக்கட்டிடம் பழுது பார்க்க இயலவில்லை. பள்ளி வகுப்புகள் நடந்துவரும் இரு கட்டிடங்களும் நல்ல முறையில் உள்ளதால் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு அபாயம் ஏற்படும் சூழ்நிலை ஏதும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பள்ளிக்கென 4½ ஏக்கர் நிலம் அண்மையில் சொந்தமாக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிக்கென சொந்த நிலம் இல்லாத நிலையில் கூடுதல் கட்டிடங்கள் அல்லது புதிய சொந்தக் கட்டிடங்கள் இதுவரை இப்பள்ளிக்கெனக் கட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும் கட்டிடங்களுக்கென ஒதுக்கப்படும் நிதித் தொகைக்குள் இப்பள்ளியின் கட்டடத் தேவைகளும் கருத்திற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

2. சந்தைப்பேட்டை அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி, புதுக்கோட்டை ஸ்ரீபிருகதாம்பாள் வங்கிக்குச் சொந்தமான கட்டிடத்தில் நடைபெற்று வருகிறது. இக்கட்டிடத்தை ரூ 1.30 லட்சத்திற்கு தனியார் ஒருவருக்கு விற்பதற்கான கருத்துருக்கள், ஒப்பந்தப்புள்ளி முடிவு பெறாத காரணத்தால் வழக்கில் உள்ளன. இக்கட்டடத்தை பள்ளிக் கல்வித்துறைக்கே பெறுவது குறித்து பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது. இக்கட்டிடத்தின் மோசமாக உள்ள பின்பகுதியில் நடைபெற்று வந்த இப்பள்ளியின் சில வகுப்புகள் இக்கட்டிடத்தின் முன் தாழ்வாரத்தில் மாற்றி நடத்தப்பட்டு வருகின்றன என முதன்மைக் கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார். ஆகவே இப்பிரச்னை குறித்து ஏற்கெனவே கல்வித்துறை நடவடிக்கை எடுத்துள்ளது. புதுக்கோட்டை பொதுப்பணித் துறை, மாவட்ட ஆட்சியர் இவர்கட்கும் இதுபற்றி தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.



## இணைப்பு

[258-ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

மணிமுத்தாறு கால்வாய், நவம்பர் முதல் தேதியோ அல்லது எந்த தேதியில் மணிமுத்தாறு நீர்த்தேக்கத்தில் 90.00 அடி நீர் மட்டம் வருகிறதோ, இவ்விரண்டில் எது பின்னதாக வருகிறதோ அன்று வழக்கமாக பாசனத்திற்கு திறந்துவிடப்படும். இவ்வருடம் (அதாவது 1981-ல்) மணிமுத்தாறு நீர்த்தேக்கத்தில் நீரளவு குறைவாக இருந்ததால், வழக்கமான தேதியில் இக்கால்வாய் பாசனத்திற்காக திறக்கப்படவில்லை. 19—12—1981-லிருந்து மணிமுத்தாறு நீர்த்தேக்கத்துக்கு நீர்வரத்து நன்றாக இருந்ததால் மணிமுத்தாறு கால்வாய் பாசனத்திற்கு 25—12—1981-ல் திறந்துவிடப்பட்டது.

2. நீர்த்தேக்கத்தில் இருப்பில் உள்ள நீரைக்கொண்டு கால்வாயின் நான்கு பகுதிகளுக்கும் பாசன வசதி அளிக்க உத்தேசிக்கப்பட்டது. நீர் சுருக்கமாக உள்ளதால், ஏற்கனவே குளங்களின் கீழ் பயிர்செய்யப்பட்ட பகுதிகளுக்கு முன்னுரிமை தந்து, பாசன வசதி அளித்து, அப்பயிர்களை அறுவடைக்குக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

3. தவிர, நான்கு பகுதிகளிலும் எந்தெந்த குளங்களுக்கு நீர் விரயமாகாதபடி சுலபமாக பாசன வசதி அளிக்க முடியுமோ, அக்குளங்களுக்கு விவசாய வேலைகள் ஆரம்பிப்பதற்காகத் தண்ணீர் விடப்படும். ஆனால், இந்நிலங்களுக்குப் பயிர்கள் அறுவடையாகும் வரை தொடர்ந்து தண்ணீர்விட எந்தவிதமான உத்திரவாதமும் அளிக்க இயலாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி மணிமுத்தாறு கால்வாயில் முழு அளவு தண்ணீர் விடப்படுகிறது.

4. மணிமுத்தாறு பாசனத்தின் கீழ் மொத்தம் 387 ஏரிகளும், அதனால் 22,852 ஏக்கர்களும் பயனடைகின்றன. தற்பொழுது 165 ஏரிகளுக்குத் தண்ணீர் அளிக்கப்பட்டு அதனால் 10,214 ஏக்கர்கள் பயனடைகின்றன. இப்பகுதியில் 1981 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழை பொய்த்துவிட்டது. ஆகவே, தண்ணீர் கட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மணிமுத்தாறு கால்வாயில் முடிந்த அளவு அதிக நீரை அனுப்பவும் அதனை குறிப்பிட்ட ஏரிகளின் கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்களுக்கு வழங்கவும் எல்லாவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

வெள்ளிக் கிழமை, 1982 பிப்ரவரி 19.

---

மாசி 7, துன்மதி—திருவள்ளுவராண்டு 2013.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### கோயில்களுக்கு மின்சாரக் கட்டணம்.

* 101. வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயில்களுக்கெல்லாம் வியாபார நிலையங்களைப்போன்று மின்சாரக் கட்டணம் வசூல் செய்ய, தமிழ் நாடு மின்சார வாரியம் ஆணை பிறப்பித்துள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இதனால் வருமானம் குறைவாக உள்ள பல கோயில்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகும் என அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா?

(உ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (இ) ஆம்.

(உ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இது போன்ற சலுகைகள் அந்தக் காலத்திலே வழங்கப்பட்டன. காட்சிக்கு எளியனான கடவுளுக்கு அதிகமாக மின்சாரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் மின்சாரம் வீணாகிறது என்பதை அரசு உணர்கிறதா? அப்படியென்றால் அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : கோயில்களுக்குப் பயன்படுகின்ற மின்சாரத்திற்கு தனிக் கட்டணச் சலுகை 7—1—1976-ல் முந்தைய காலத்திலே வழங்கப்பட்டது. அது மீண்டும் ஆளுநர் ஆட்சிக் 9—2—1976-ல் மேலும் பல நிறுவனங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. ஆட்சிக் காலத்திலே 31—5—1979-ல் அது ரத்து செய்யப்பட்டது. இதுதான் நிலைமை.

திரு. க. இராமமூர்த்தி : அலங்காரத்திற்காக ஓரளவிற்கு பெரிய ஆலயங் களில் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் பெரும்பாலான ஆலயங்கள், அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, போதுமான வருமானம் இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றன. அப்படிப் பட்டவைகளுக்கு மின்சார கட்டணச் சலுகை கொடுப்பதுதான் முறையாக இருக்கும். ஆகவே மற்ற வகையிலே மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி ஆலயங்களுக்குச் சலுகையை அளிக்க அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய் வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர் களின் கருத்தின் அடிப்படையில் அறநிலையத் துறை அந்த வேண்டுகோளை மின்சாரத் துறைக்கு அனுப்பியுள்ளது.

பொதுவாக சமூகம் பண்பாடுகள் அடிப்படையில் கூடி காரியமாற்றுவது மிகவும் குறைவு. ஏனென்றால் ஒவ்வொருவரும் தனியாக சொர்க்கத்திற்குச் செல்வதற்குத்தான் வழி சொல்லப்படுகிறது. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்ற கருத்து எப்படியோ காலா காலத்திலே புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. பொது மக்கள் கூடுகின்ற பொது நிறுவனங்கள். கோயில்களானாலும் சரி, கல்வி நிலையங்களாக இருந்தாலும் சரி, பொது மருத்துவ மனையாக இருந்தாலும் சரி, பொது நோக்கோடு செயல்படுகிற பகுத்தறிவாளர் மன்றம் உள்பட, நிரந்தரமாகச் செயல்படுமானால், அவைகள் கூடி வாழ்கின்ற தன்மையை வளர்க்கின்றன என்பதால் அவற்றுக்குச் சலுகையை கொடுக்கலாமா என்று மின்சாரத் துறை கவனமாகப் பரிசிலித்து வருகிறது.

திரு பா. ரா. தாமஸ் : ஏற்கெனவே கொடுத்து வந்த சலுகையை மறுக்க எந்தக் காரணத்தால் ? அது நியாயம் ஆகுமா ? எனவே மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சலுகையை அளிக்க எப்போது முன்வருவார்கள், ஆணையிடுவார்கள் என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : சலுகை தேவையில்லை என்று கருதி, அதுவும் குறிப்பாக மத நிறுவனங்களுக்கு மட்டும் சலுகை அளிப்பது தவறு என்ற அடிப்படையிலே, ரத்து செய்யப்பட்டது. இப்போது பொது நோக்கோடு செயல்படுகிற அனைத்து நிறுவனங்களுக்கும் உற்சாகம் ஊட்டு கின்ற வகையிலே சலுகையை அளிக்கலாமா என்பது பரிசீலிக்கப்படுகிறது.

*Concessions given by the Electricity Board.*

* 102 *Q*.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Electricity be pleased to state:

(*a*) whether it is a fact that the concessions given to the spouses of teachers employed under aided managements, serving in Tamil Nadu Electricity Board have been suddenly stopped as per Board's Memo. No. 39269|BF|78-1, dated 21st August 1978; and

(*b*) if so, the reasons for the same and the action taken on the appeal by the teachers to revive these concessions ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) இந்தச் சலுகையை தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் கணவன்-மனைவியர் தவறாகப் பயன்படுத்தியதாலும், இத்தகைய பணியாளர்களது பணித் தன்மை நிரந்தரமானதா அல்லது தற்காலிகமானதா என்பதை அறிவது கடினமாக உள்ளதாலும், சலுகை தொடர்ந்து வழங்கப்படவில்லை. அரசு உதவி பெற்ற தனியார் பள்ளிகளின் ஆசிரியர்கள் கொடுத்த மேல் முறையீடு சாதகமாகக் கருதப்பட்டு அரசு உதவி பெறும் பள்ளிகளின் ஆசிரியர் (கணவன்-மனைவி) களுக்கு மட்டும் ஊர் மாற்றலில் வழங்கப்பட்டு வந்த சலுகையை வழங்க வாரியம் ஆணை பிறப்பித்துள்ளது.

திரு பா. ரா. தாமஸ் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்த ஆணைக்கு ஆசிரியர்கள் சார்பிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கு இந்தச் சலுகை கொடுக்காதது நியாயம்தான். எனக்குக் கொடுத்த மறுவில், அரசு ஆசிரியர் களுக்கே அவர்கள் கோரிக்கையின் படி மாறுதல் அளிக்கப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே மீண்டும் கணவன்-மனைவி ஆகியவர்களை இணைக்கக் கூடிய வகையிலே ஆணையிடுவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் :** ஆகஸ்ட் 1981-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. தனியார் நிறுவனங்கள் என்கின்றபோது போலி சான்றிதழ்களை வாங்கி வந்து கோருகிறார்கள் என்பதால், ரத்து செய்ய முனைந்தார்கள். அதனால்தான் இந்த நெருக்கடி.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஏற்கெனவே இருந்த இந்தச் சலுகை நிறுத்தப்பட்டபோது, ஷாக் அடித்தது போல இருந்தது தம்பதிகளுக்கு. திருமணமான தம்பதிகளுக்கு இந்தச் சலுகையை வழங்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் :** தொட்டால்தான் மின்சாரம் 'ஷாக்' அடிக்கும். பற்ற வைத்தால் ஒளி தரும். இப்போது ஒளி தந்து கொண்டிருக்கிறது.

**உதவிக் கோட்டப் பொறியாளர் மற்றும் கோட்டப் பொறியாளர் பதவிகள் ஏற்படுத்துதல்.**

* 103. வினா—திரு சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களில், நெடுஞ்சாலைத் துறையினரால் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகளை செம்மையாகவும், தீவிரமாகவும் கவனிக்கும் பொருட்டு, உதவிக்கோட்டப் பொறியாளர் (Assistant Divisional Engineer, Panchayat Union Works); கோட்டப் பொறியாளர் (Divisional Engineer, Panchayat Union ஆகிய பதவிகளை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(இ) தன்னிறைவுத் திட்ட வேலைகள் துரிதமாக முடிக்கப்பட வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு தன்னிறைவுத் திட்ட வட்டாரமும், ஒரு தனிக் கோட்டமாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சிறப்புக் கோட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒன்றிய அளவில் ஒரு உதவிக் கோட்டப் பொறியாளரும், மாவட்ட அளவில் ஒரு கோட்டப் பொறியாளரும் நியமிக்கப்பட்டுள்ளனர். தன்னிறைவுத் திட்டத்திற்கென நியமிக்கப்பட்டுள்ள மேற்பட்டுள்ளனர். தன்னிறைவுத் திட்டத்திற்கென நியமிக்கப்பட்டுள்ள மேற்படி 150 உதவிக் கோட்டப் பொறியாளர்கள் 13 சிறப்புக் கோட்டப் பொறியாளர்கள்





அவர்களின் துணை அலுவலர்கள் மற்றும் ஏற்கனவே வட்டாரங்களில் இருந்து வரும் ஒன்றியப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் போன்ற தொடர்புடைய எல்லா அலுவலர்களையும் ஒருங்கிணைத்து மாநில அளவில் ஒரு தலைமைப் பொறியாளர் மற்றும் சர்க்கிள் அளவில் இரண்டு மேற்பார்வையாளர் பதவிகளை புதிதாக ஏற்படுத்தி அனைத்துக் கிராமப் பணிகளையும் கவனிப்பதற்காக தனியாக ஊரக வளர்ச்சித் துறையில் ஒரு பொறியியல் பிரிவை ஏற்படுத்துவது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு சி. ரா. லெட்சுமிகாந்தன் :** ஊரக வளர்ச்சித் துறையில் ஒரு தலைமைப் பொறியாளர் பதவி ஏற்படுத்துவது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய கருத்தை நான் வரவேற்கிறேன். அமைச்சர் அவர்கள், தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் புதிய பொறியாளர் பதவி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஊராட்சிப் பணிகளுக்கும், Regular பணிகளுக்கும் சேர்த்து ஒரே உதவிக் கோட்டப் பொறியாளரை நியமித்திருக்கிறார்கள். இரண்டு பணிகளையும் ஒரே உதவிக் கோட்டப் பொறியாளர் செய்வது என்பது கடினமாக இருப்பதால், அதை இரண்டாகப் பிரித்து Regular division என்று ஒன்றும், ஊராட்சிப் பணிகளுக்கு என்று ஒன்றும் ஆக இரண்டு பதவிகளை ஏற்படுத்துவார்களா என்று கேட்டேன், அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அப்படிப்பட்ட பிரிவினை இப்போது தேவையில்லை. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எல்லா ஒன்றியங்களையும் எடுத்துக்கொள்வதால் இது தேவையில்லை. இரண்டு கட்ட பணிகளும் முடிவு அடையும் கட்டத்திலே இருக்கிறது. மீதமுள்ள 159 ஊராட்சி ஒன்றியங்களையும் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ள இருக்கிறோம். அந்தப் பணிகளை அவர்களே சீராகச் செய்ய முடியும் என்பதால், அப்படிப்பட்ட நிலை தேவையில்லை.

**திரு சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலில் பதில் சொல்லும்போது, அரசின் பரிசீலனையில் சில குறிப்புகள் இருப்பதாகத் தெரிவித்தார்கள். அது குறித்து அறிவிப்புகளை நிதிநிலை அறிக்கையில் எதிர்பார்க்கலாமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** அதுபற்றி இப்போதே சொல்லுவது சரியாக இருக்காது.

**திரு. க. இராமமூர்த்தி:** இந்தத் துறையிலே அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற ஏற்பாடுகள் வரவேற்கத்தக்கது. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மிக அதிகமான திட்டங்கள் செயல்பட்டுக் கொண்டிருப்பதால், ஏராளமான

பணிகள் நடந்து கொண்டிருப்பதால், இவற்றில் எல்லாம் தவறுகள் அதிகமாக இல்லாத வகையிலே பணியாற்றுவதற்கு அந்தந்தப் பகுதிக்கென்று நான்-அபிஷயல் (non-official) ஒருவரைத் தலைவராகக் கொண்ட கமிட்டியை அமைக்க அரசு முன்வருமா ? ஏனென்றால் பஞ்சாயத்து அளவிலும், வட்ட அளவிலும் உள்ள கமிட்டிகளில் அபிஷயல் சேர்மென் (Official Chairman) இருப்பதால், சில நேரங்களில் குறிப்பிட்டபடி கூட்டம் கூடுவதில்லை. அப்படியே கூடினாலும் முறையாக புரசிடிங்ஸ் (Proceedings) வருவதில்லை. அப்படியே வந்தாலும், அரசுக்கு அப்படியே அறிவிக்கப்படுவதில்லை. அப்படியே அறிவித்தாலும் முதலில் சொன்னவற்றை, பிறகு இல்லையென்று சொல்லும் நிலைமையைக் காண முடிகிறது. இது உறுப்பினர்களுக்குத் தெரிய பல நாட்கள் ஆகின்றன. இதைத் தடுக்க நான்-அஃபிஷயலை (non-official) -ஐ சேர்மெனாகக் கொண்டு ஒரு குழுவை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அலுவலக சார்பற்ற ஒருவரைப் போட்டு குழு அமைப்பது என்பது இப்போது முடியாத காரியம். காரணம் ஏற்கெனவே அலுவலகத்திலே ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளை உடனடியாகப் பார்த்து நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நாளைக்கு அலுவலக சார்பற்ற ஒருவரைப் போட்டு, அவரும் அதைப்போன்ற நிலைமையிலே வந்துவிட்டால், அதற்கு என்று தனியாக ஒரு குழு ஏற்படுத்த வேண்டி வரும். இப்போது மக்கள் குழுக்கள் என்று ஆங்காங்கே இருக்கின்றன. அந்த மக்கள் குழுவில் இருப்பவர்கள் சரியாகச் செயல்பட்டாலே, அது சரியாக வந்துவிடும் என்று நினைக்கிறேன்.

### பன்னிரண்டு ஊராட்சிகளுக்கு மின்விளக்கு வசதி.

*194 வினா.—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகராட்சியுடன் 1978-ல் இணைக்கப்பட்ட பன்னிரண்டு ஊராட்சிகளின் தெருக்களில், மின்விளக்கு வசதி செய்வதற்காக, சென்னை மாநகராட்சி ஏதேனும் திட்டம் வகுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?



**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(இ) சென்னை மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட 12 ஊராட்சிகளில், சென்னை மாநகராட்சி ரூ. 20 இலட்சம் செலவில் ஏறத்தாழ 700 புதிய தெரு மின்விளக்குகளை அமைக்கும் பணிகளை முதற் கட்டமாக இந்த நிதி ஆண்டு 1981-82-ல் செயல்படுத்த இருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த 12 ஊராட்சிப் பகுதிகளிலும் 20 லட்சம் ரூபாய் செலவில், புதிய மின் விளக்குகளை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அந்தப் பணி முடிந்துவிட்டதா அல்லது தொடங்கப்பட இருக்கிறதா? இன்றைக்கு எந்த அளவிலே இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இப்போது தொடங்கப் பெற்று நடைபெற்று வருகிறது. குறிப்பிட்ட அந்த 12 ஊராட்சி ஒன்றியங்களிலே 5 ஆயிரம் மின் விளக்குப் போட இருக்கிறோம். இதிலே முதலிலே 700 விளக்குகள் போட இருக்கிறோம். அப்படிப் போடுகின்ற நேரத்தில் குழல் விளக்குகளாக, மெர்குரி விளக்குகளாகப் போடப்பட்டு வருகிறது. மாநகராட்சிப் பகுதிகளிலே எல்லாப் பகுதிகளுக்கும் மெர்க்குரி ஆவி விளக்குகளைப் போடக்கூடிய ஒரு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**திரு. சி. இராமலிங்கம் :** சென்னை நகரைச் சுற்றியுள்ள பகுதியாக இருக்கின்ற செங்கற்பட்டு மாவட்டத்தினைச் சேர்ந்த சைதாப்பேட்டை தாலுக்காவில் உள்ள கிராமங்களையும் மாநகராட்சிக்குள் எடுத்திருக்கிறார்கள். மேலும் உள்ள சைதாப்பேட்டை தாலுக்காவையும் மாநகராட்சியில் சேர்த்துக்கொள்வதால், அவர்களுக்கு பல வசதிகள் கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அரசு அதைப் பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இப்போது மாநகராட்சியில் உள்ள ஜனத்தொகை 35 லட்சத்திற்கு அதிகமாக ஆகிக்கொண்டிருக்கிறது. இப்போதே இருக்கக்கூடிய அடிப்படை வசதிகளைச் செய்ய முடியாத நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது. மற்றப் பகுதிகளையும் சேர்த்துக் கொண்டே போனால், கண்டிப்பாக நிலைமைகள் சரியாக இருக்காது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அங்கத்தினர் அவர்கள் தானும் அதில் சேர்ந்து வந்துவிட வேண்டுமென்று எண்ணுகிறார்கள் போலிருக்கிறது

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஊராட்சி மின் விளக்குகள் இரவு முழுவதும் எரிந்துகொண்டிருக்கின்றன. அது தேவையில்லை. மேலை நாடுகளிலே வேண்டும்போது பொத்தானை அழுத்தி விளக்குப் போட்டுக் கொள்கின்ற முறைகள் இருக்கின்றன. அதை இங்கேயும் புகுத்துகின்ற முறையை ஆராய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். இப்போது போட்டிருக்கக்கூடிய விளக்குகளே சரியாக எரிவதில்லை. இனி பொத்தான் வேறு வைக்க வேண்டுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

## கல்வித் துறை துணை அலுவலர்கள்

* 105 வினா.—செல்வி ஆ. லீலாவதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 150 வட்டங்கள் கொண்ட சென்னை மாநகராட்சியில் மிகக் குறைந்த அளவிலேயே கல்வித் துறை துணை அலுவலர்கள் உள்ளனர் என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அதிக அலுவலர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(இ) அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உயர்மட்டக்குழுவின் பரிந்துரைகளின் மீது எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் கமிட்டியின் பரிசீலனையில் உள்ளன. கமிட்டியின் பரிசீலனைக்குப் பின் நிதிநிலைமையை கணக்கில் கொண்டு மாநகராட்சியில் உள்ள கல்வி இலாக்காவின் தேவையான பதவிகளைப் பூர்த்தி செய்ய அரசு படிப்படியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

**செல்வி ஆ. லீலாவதி :** இப்போது ஏ.ஓ.க்கள் மாநிலத்திலே எத்தனை பேர்கள் இருக்கிறார்கள், எத்தனை சூப்பர்வைசர்கள் இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வியாகப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னை மாநகராட்சி பற்றி பதில் கொடுத்திருந்தாலும், கல்வித் துறையிலே கல்வி அலுவலர்கள் பற்றிய கேள்வியாகவும் இருப்பதால், மதுரை மாநகராட்சியிலே உதவி கல்வித் துறை துணை அலுவலர் பதவிக்கு ஆணைக்காக அனுப்பப்பட் டிருக்கிறதா? அந்தப் பணியிடம் ஆண்டுக் கணக்கில் காலியாக இருக்கிறது. அமைச்சர் அவர்களுக்கு ஆணைக்காக வந்திருந்தால், அந்தக் காலியிடத்தை நிரப்ப மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ஆணைக்காக வந்தால் உடனடியாக ஆணையிடப்படும். ஆணைக்கு வரவில்லை என்று சொன்னால், பரிசீலிக்கப்படும்

**செல்வி ஆ. லீலாவதி :** மாநகராட்சிக்கான ஏ.ஓ., சூப்பர்வைசர் போடும் போது வெளியிலே இருக்கின்றவர்கள் போடப்படுவார்களா அல்லது இருக்கும் ஆசிரியர்களுக்கு புரமோஷன் கொடுக்கப்படுமா ? மாநகராட்சியிலே வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு புரமோஷன் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பதவிகள் போடுவதே பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை செய்தபின்தான் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, எல்லாத் துறைகளிலும் எந்தெந்தத் துறைகளிலே பணியாற்றுகின்றார்களோ, அவர்களுக்கு அங்கே பதவி உயர்வு கொடுக்கப்படுகிறது. அந்த முறைதான் இருக்கிறது. அந்த முறையிலே இந்தப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு அந்த வாய்ப்பைக் கொடுக்க அனுதாபத்துடன் ஆணைகள் உருவாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அதுதான் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். இந்தத் திட்டத்தை அமுல்படுத்துகின்ற நேரத்தில்தான் இவைகள் எல்லாம் கவனத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வேலைக்கு உணவுத் திட்டம்.

* 106 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தில் 1979-80 மற்றும் 1980-81 ஆம் ஆண்டுகளில் வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப் பட்ட பணிகள் எத்தனை?

(இ) அவைகட்கு ஒதுக்கப்பட்ட அரிசியின் அளவென்ன ?

(உ) அவைகளில் முடிக்கப்பட்ட பணிகள் எத்தனை?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தில் உழைப்புக்கு உணவுத் திட்டத்தின் கீழ் 1979-80 ஆம் ஆண்டில் 164 வேலைகளும், 1980-81 ஆம் ஆண்டில் 66 வேலைகளும் எடுத்துக் கொள்ளப்பட்டன.

(இ) 1979-80 ஆம் ஆண்டில் 149.248 மெட்ரிக் டன் அரிசியும், 1980-81 ஆம் ஆண்டில் 164 மெட்ரிக் டன் அரிசியும் ஒதுக்கப்பட்டது.

(உ) 1979-80-ல் 164 வேலைகளும், 1980-81 ஆம் ஆண்டில் 66 வேலை களும் முடிக்கப்பட்டன.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : 164 வேலைகள் 1979-80 லே முடிக்கப்பட்ட தாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதிலே [illegible] முடிக்கப்பட்ட வேலைகளுக்கு மெஷர்மெண்ட்டு, அளவீடு செய்யப்பட்டு அதற்கு பணம் முறைப்படி உரியவர்களுக்கு பட்டுவாடா செய்யப்பட்டு விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : என்னிடத்திலே கொடுக்கப்பட் டிருக்கின்ற குறிப்பின் அடிப்படையில், எல்லா வேலைகளும் முடிக்கப்பட்டன. அதற்குண்டான பணமும் அரிசியும் கொடுக்கப்பட்டதாகத்தான் குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 164 வேலைகளிலே 4 வேலை கள் குறித்து மட்டுமே மெஷர்மெண்ட் செய்யப்பட்டிருக்கிறது. அங்கே மற்ற வைகள் இன்னும் அளவீடு செய்யப்படவில்லை. அங்கேயுள்ள ஆணையாள ருக்கும் பொறியாளருக்கும் இடையே இது சம்பந்தமாகத் தகராறு வந்திருக் கிறது என்றும், அங்கே பணமும் அரிசியும் ஏறத்தாழ ஒரு லட்ச ரூபாய்



மதிப்பிற்கு கையாடல் செய்யப்பட்டிருப்பதாகவும் எனக்கு விவரங்கள் வந் திருக்கின்றன. அந்தத் தகவல் இப்போது அரசுக்கு வராவிட்டாலும், அப்படி தவறு நடந்திருந்தால், அதற்குரியவர்கள் மீது தக்க நடவடிக்கையை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அப்படிப்பட்ட நிலைமை இருந் தால், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ம. சங்கரலிங்கம் : வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் அளிக்கப் படுகின்ற உணவுப்பொருள்களைப் பெற்றுக்கொண்டு வேலை செய்ய வேலை யாட்கள் வருவதில்லை என்ற புகார் இருக்கிறது. ஏனென்றால் இப்போது இருக்கின்ற அன்றாடக் கூலி மிகக் குறைவாக இருப்பதால் அல்லது உணவுப் பொருள்கள் குறைவாக இருப்பதால், வேலைக்கு ஆட்கள் வரவில்லை என்றும், அப்போது அந்த காண்ட்ராக்டர்கள் அந்த அரிசியை வைத்துக் கொண்டு அவர்களே ஏதாவது ஒரு ஏற்பாட்டைச் செய்வதாகவும் அது நடை முறையில் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அது அரசினுடைய கவனத் திற்கு வந்ததா? இப்போது கொடுக்கும் உணவுப்பொருள்களின் அளவைக் கூட்ட அரசு திட்டம் வகுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : வேலைக்கு உணவுத் திட்டம் தற்போது 1980 அக்டோபர் மாதத்திலேயிருந்து தேசிய கிராம வேலை வாய்ப் புத் திட்டம் என்று பெயர் மாற்றப்பட்டு அதன் மூலம் செய்யப்படுகிறது. இந்தத் திட்டத்தின்படி மாநில அரசு 50 சதவிகிதமும் மத்திய அரசு 50 சத விகிதமும் ஒதுக்குவது என்ற முறையிலே இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் அரிசியோ, பணமோ ரூபாய் 7 மதிப்பு அள வுக்குக் கொடுக்க வேண்டும் என்ற நடைமுறை இருக்கிறது. ஒரு நாளைக்கு அது பெண்ணாக இருந்தாலும், ஆணாக இருந்தாலும் கொடுக்கப்படுகிறது. இப்போது அதிகபட்சமான கூலியாட்கள்தான் வருகிறார்கள் என்று குறிப்பு கள் இருக்கின்றன. எந்தப் பகுதிகளில் கூலியாட்கள் வருவதில்லை என்றும், இந்தத் திட்டம் எங்கு சீராக நடைபெறவில்லை என்றும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, மத்திய அரசு இந்த தேசிய வேலைவாய்ப்புத் திட்டம் எப்படி செயல்படுத்தப்படுகிறது என்பதைக் கண்காணிக்க ஒரு குழு அனுப்பிப் பார்த்திருக்கிறது. அவர்கள் தமிழ் மாநிலத்தில்தான் அதிகமான வேலைகள் செய்யப்பட்டிருக்கிறது என்று அறிவித்து, அதற்கான பாராட்டுக்களையும் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ்நாடு அரசுதான் சரியாகக் கணக்குக் கொடுத்திருக்கிறது என்றும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி

'பைனான்சியல் எக்ஸ்பிரஸ்' என்ற பத்திரிகையில்கூட போட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிக அளவுக்கு தமிழ் நாடுதான் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Special facilities at Tindivanam and Villupuram Government Hospitals.*

*107 Q.—THIRU K. RAMAMOORTHY (on behalf of THIRU A. R. DAMODARAN): Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to provide special facilities at the Tindivanam and Villupuram Government Hospitals in South Arcot district, to treat victims of road accidents on the National Highways; and

(*b*) if so, the stage at which the matter now stands?

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (அ) மற்றும் (இ) இது பரிசீலனையில் உள்ளது.

**திரு. க. இராமமூர்த்தி:** திண்டிவனம்-விழுப்புரம் பகுதியில், சாலைப் போக்குவரத்தில் ஏற்படும் விபத்துக்களில் பாதிக்கப்படுபவர்களுக்கு உடனடியாக முதலுதவி அல்லது மருத்துவ உதவி அளிக்க மொபைல் யூனிட் ஒன்று அமைப்பது குறித்து ஒரு குறிப்பு இருந்தது. அது பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஒரு செயற்குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் ஆகிய இந்த 3 இடங்களுக்கும் ஸ்பெஷல் பெசிலிடிஸ் இருக்கும்.

Special staff consisting of 3 Assistant Surgeons, 3 Staff Nurses, one Physiotherapist, Grade II Glass mould Technician, 3 Male Nursing Assistants

என்று இருக்கிறது. அதோடு மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன மாதிரி, ஆக்சிடன்ட் சர்வீஸ் வேன்கூட கொடுக்கப்படும். ஏற்கெனவே சில மாவட்டங்



களில் கொண்டு வந்திருக்கிறோம். தென் ஆற்காடு மாவட்டத்திற்குக் கொண்டு
வருவதுபற்றி பரிசீலனையில் இருக்கிறதென்று சொல்லியிருக்கிறேன். அதை
பட்ஜெட் கூட்டத் தொடரில்தான் சொல்ல முடியும். அதைப்பற்றித் தீவிர
மாக ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்

**திரு. க. இராமமூர்த்தி:** பெரும்பாலான சாலை விபத்துக்கள் திண்டி
வனத்திற்கு வடக்கேயும், தெற்கேயும்தான் நடக்கின்றன. திண்டிவனத்தை
மையமாக வைத்து நடக்கின்றன. இந்த நிலையில் மாண்புமிகு அமைச்சர
வர்கள் சொன்ன திட்டத்தின் அடிப்படையில் திண்டிவனம் மருத்துவ மனை
வரவில்லை. அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலிப்பார்களா? அங்கே
தண்ணீர் வசதி இல்லாததால் இன்னமும் பிளட் பேங்க் (Blood Bank)
சரியாக இயங்கவில்லை. சில ஆண்டுகளாக இந்த நிலை இருக்கிறது. அதை
நிவர்த்தி செய்ய அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** அனுப்பப்பட்டுள்ள செயற்
குறிப்பிலே திண்டிவனம் விடுபட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினரவர்கள்
இதுபற்றி நிச்சயமாகக் கேட்பார்களென்று நினைத்தேன். விழுப்புரம்,
கள்ளக்குறிச்சி, கடலூர் ஆகியவற்றைச் சேர்த்திருக்கிறார்கள். தண்ணீர்
இல்லாத காரணத்தால், அங்கே ஏற்கெனவே உள்ள பிரிவுகள் சரியாக இயங்க
வில்லை என்றும், அந்தப் பிரிவுகள் சரியாக இயங்க ஆரம்பித்த பிறகு, இதைப்
பற்றி அனுப்பலாமென்று இருக்கலாம். 3 மாதங்களுக்கு முன்பு போய் நான்
பார்த்தேன். தண்ணீர்ப் பிரச்சினை குறித்து பொறியியல் வல்லுனர்களை
அழைத்துப் பேசியிருக்கிறேன். தண்ணீர்ப் பிரச்சினை விரைவில் தீர்ந்து
விடுமென்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்களின் கருத்து
ஆராயப்படும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** பல விபத்துக்கள் திண்டிவனத்தை
மையமாக வைத்து நடப்பதால், நெடுஞ்சாலையிலிருந்து விபத்து நடந்த
வுடன் மருத்துவ மனைகளுடன் தொடர்புகொள்ள தொலைபேசி வசதியை
அரசு ஏற்படுத்துமா? மேலும் பிளட் பேங்கில் ரத்தம் கிடைக்காமல் இருக்
கிறது. அப்படியில்லாமல் இருக்க அரசு தக்க ஏற்பாடுகளைச் செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** This scheme was first introduced in the districts of Madurai, Tirunelveli, Ramanathapuram and Kanyakumari.

இரண்டாவது கட்டமாக நீலகிரி, கோயம்புத்தூர், பெரியார், திருச்சி ஆகிய
நான்கு மாவட்டங்களில் கொண்டுவரப்பட்டது. இந்த ஸ்கீம் அடிப்படை
யிலே, ஒயர்லஸ் செட்டுடன் வேன் வைத்துக்கொண்டு, எங்காவது விபத்து

நடந்தால், உடனடியாக நோயாளிகள் அல்லது விபத்திற்குள்ளானவர்களைக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நவீனமான ஸ்கீம், எந்த மாநிலத்திலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்கா சென்றபோது, அமெரிக்காவில் இப்படி நடக்கிறதென்று அறிந்து, டாக்டர் நடராசன், போன் ஸ்பெஷலிஸ்ட் அவர்களை அனுப்பி, ஒரு ஸ்கீம் தயாரியுங்கள் என்று சொல்லி, நடராசன் ஸ்கீம் வந்திருக்கிறது. அதில்தான் திண்டிவனம் விடுபட்டுப் போயிருக்கிறது. இதை முழுமையாக அமல்படுத்தினால் ரோட் ஆக்சிடென்டில் உள்ளானவர்களுக்கு நல்ல பரிகாரம் காண முடியுமென்று கருதுகிறேன்.

திரு ம. சங்கரலிங்கம் : விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு விசேட மருத்துவ சிகிச்சை செய்ய தனித் திட்டம் வகுத்து, கன்னியாகுமரி, திருநெல்வேலி பகுதிகளில் அமல்படுத்தி, இரண்டாவது பகுதியாக மற்ற மாவட்டங்களுக்கு அது விஸ்தரிக்கப்படுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டத்திலே நெடுஞ்சாலைகளிலே 50 மைலுக்கு ஒரு இடத்தில் பிளட் பேங்க் வசதியும், ஆக்சிஜன் அளிக்க வசதியும் இல்லை. அவை இந்தத் திட்டத்தில் ஒரு அம்சமாக இணைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : பிளட் பேங்கைப் பொறுத்த வரையில், எல்லா டிஸ்டிரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவ மனைகளிலும் இருக்கின்றன. ஆனால் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொல்வது போன்று நேஷனல் ஹைவேஸ்-ல் பிளட் பேங்க் ஏற்படுத்த வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறோம். நெடுஞ்சாலைகளில் திருச்சி வழியாகப் போனாலும், வடாற்காடு வழியாகப் போனாலும், ஸ்டேட் ஹைவேஸிலும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கும் எண்ணம் அரசுக்கு இருக்கிறது.

## இயற்கை மருத்துவமனைகள்.

* 108. வினா—திரு. க. அருணாசலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மாநிலத்தில் அரசுத்துறையிலும் தனியார் துறையிலும் எத்தனை இயற்கை மருத்துவ மனைகள் உள்ளன ?

(இ) தனியார் துறையில் உள்ளவைகளுக்கு, அரசு உதவி செய்து வருகின்றதா ?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?



(எ) இயற்கை மருத்துவத்தை விஸ்தரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஐ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) அரசுத்துறை ஏதும் இல்லை. தனியார் துறை—15.

(இ) இல்லை.

(உ) எழவில்லை.

(எ) ஆம்.

(ஐ) 1979-ம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் 4 மாணவர்கள் இயற்கை முறை, மருத்துவ பட்டயப் பயிற்சி பெற உதவிப் பணம் கொடுத்து, ஹைதராபாத்திலுள்ள காந்தி இயற்கை மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பப் படுகின்றனர்.

திரு. க. அருணாசலம் : இயற்கை மருத்துவத்தில் குறைந்த செலவில் நிறைய வசதிகளைச் செய்துகொள்ள முடியும். இந்த முறையில் இயற்கை வைத்தியம் மற்ற மாநிலங்களில் வளர்ந்து வருகிறது. நம்முடைய மாநிலத்திலும் அதை இந்திய மருத்துவம் என்று ஏற்றுக்கொண்டாலும், படித்து வந்தவர்களை ஏதாவது அரசு மருத்துவ மனையில் இணைத்து, வேலை கொடுக்க திட்டமிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இப்போது திட்டமில்லை என்றாலும்கூட, படித்து வரக்கூடியவர்கள் இங்கே வந்து வேலை செய்ய வேண்டும், ஐந்து ஆண்டுகள் வேலை செய்ய வேண்டுமென்ற காண்ட்ராக்டில்தான் அனுப்பியிருக்கிறோம். அண்மையிலே கமிட்டி போட்டிருக்கிறோம். டைரக்டர் ஆஃப் இந்தியன் மெடிசின், யோகா, நேச்சர் க்யூர் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றுள்ளவர்களைக் கூட்டி, ஒரு மையமாக வைத்து, இதற்காக ஏதாவது செய்யலாமா என்று ஆராய்ச்சிக்காக 'பைலட் ஸ்கீம்' ஆரம்பிக்க இருக்கிறோம்.

திரு. பா. ரா. தாமஸ் : இயற்கை மருத்துவ முறை என்பதன் பொருள் என்ன என்பது விளங்கவில்லை. குற்றாலம் நீர்வீழ்ச்சியில் குளிப்பதால், சில நோய்கள் இயற்கையாக குணமடைகிறதென்று சொல்லுகிறார்கள். அது உண்மையா ? அது இயற்கை மருத்துவமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இயற்கை மருத்துவம் என்று சொல்லும்போது, ஹைட்ரோ தெராபி, வாட்டர் தெராபி மூலம் 105 டிகிரி காய்ச்சலைக்கூட அரை நாளில் குறைத்துவிடலாம். மேலும் 'க்ளே' பூசிக்

கொள்வது எல்லாம் இருக்கிறது. குற்றாலம் வாட்டர் ஃபால்ஸ்—எல்லாமே இயற்கை முறைதான். எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து விஞ்ஞான ரீதியாகக் கொண்டு வந்தால், நன்றாக இருக்கும். திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் கோவையில் பெரிய மருத்துவ மனை ஆரம்பிக்க வேண்டுமென்று இருக்கிறார்கள். மாண்புமிகு சட்ட அமைச்சரவர்களும், நானும் போவதாக இருந்தோம். அதற்குள் சட்டமன்றம் கூடிவிட்டது. அங்கே பெரிய அளவுக்கு மருத்துவ மனை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். சின்ன மருத்துவ மனை இப்போது நடந்து கொண்டிருக்கிறது. விஞ்ஞான ரீதியாக எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து, திட்டத்தைக் கொண்டுவர வேண்டும். தவறான வகையிலே அதைப் பயன்படுத்தினால், வேறு வியாதிகள் வரும். ஆகவே சிந்தித்து இதைச் செய்ய வேண்டும்.

**திரு. க. அருணாசலம் :** தனியார் நடத்தும் இயற்கை மருத்துவ மனைகள் 13 என்று குறிப்பிட்டார்கள். இந்த மருத்துவ மனைகளிலே கியூ வரிசையில் ஆட்கள் நிற்கிறார்கள். அங்கே இடம் கிடைப்பதில்லை என்று சொல்லி, நம்முடைய மாநிலத்திலே உள்ள வசதி படைத்தவர்கள் பெங்களூருக்குச் சென்று, சிகிச்சை பெறுவதாகச் சொல்லுகிறார்கள். கோயம்பத்தூரில் 20, 30 கோடி ரூபாய் செலவில் பெரிய மருத்துவ மனை கட்டுவதாக திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். திரு. முத்துசாமி செட்டியார் அவர்கள்

(முற்பகல் 10-00)

இன்னொரு மருத்துவ மனை கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்களுடைய மருத்துவமனையில் சிகிச்சை பெற இடம் கிடைக்காமல் ஏழையெளியவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஏழை மக்களுக்கு இயற்கை மருத்துவ வசதி இல்லை. ஏழையெளியவர்களுக்கு இயற்கை மருத்துவ வசதிக்கான வாய்ப்பு இருந்தால், அவர்களில் பல பேர் குணம் அடைவார்கள். மருந்து சாப்பிடாமல், இங்கே மருத்துவ முறையில் குணம் அடைவார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கேள்வியை கேள்வியாகக் கேட்க வேண்டும்.

**திரு. க. அருணாசலம் :** கேள்வியை விளக்கமாகச் சொன்னால், ஒரே வார்த்தையில் அமைச்சர் பதில் சொல்ல முடியும். இதுகுறித்து அரசு பரிசீலித்து இந்த முறையில் ஏழையெளியவர்கள் குணம் அடைய சிகிச்சை அளிப்பதற்கான வாய்ப்பு கொடுக்கப்படுமா?



**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** ஒரே வார்த்தையில் பதில் சொல்ல முடியாது. இரண்டொரு வார்த்தைகளில் தான் பதில் சொல்ல முடியும். இயற்கை மருத்துவத்தைப் பொறுத்தவரையில், நான் ஒன்றை இங்கு சொல்லியாக வேண்டும். இயற்கை மருத்துவத்தை ஏழையெளியவர்கள் அதிகமாக விரும்புவது கிடையாது. வசதியுடையவர்கள் எல்லா சிகிச்சை முறைகளையும் கையாண்டு கடைசியாக இதற்குத் தான் வருகிறார்கள். மருத்துவ மனைகளில் போனால் நாம் இன்னொரு சங்கடத்தையும் பார்க்கிறோம். நோயாளிகளுக்கு ஊசி போட சில டாக்டர்கள் தயங்கினாலும் கூட, நோயாளிகளே பரவாயில்லை, போடுங்கள் என்று வற்புறுத்துவதைக் கூட நாம் பார்க்கிறோம். நோய்க்குத் தேவைப்படுகின்ற அளவுக்கு மருந்துகள் கொடுப்பது நல்லது தான். ஆனால் அதற்கு மேல் மருந்து கொடுப்பது என்பது அவ்வளவு பயனுடையதல்ல. பொதுவாக எவ்வளவுக்கெவ்வளவு மருந்து உபயோகப் படுத்துவதைக் குறைத்துக்கொள்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு உடலுக்குப் பயனுடையதாக இருக்கும். இங்கே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட சிகிச்சை முறை நிச்சயம் கவனிக்கப்படும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பக்கத்து வீட்டில் வசித்து வந்த டாக்டர் மு. வ. அவர்கள் இயற்கை மருத்துவ முறையைக் கடைப்பிடித்து வந்தார்கள். அந்த முறையின் மூலம் நாட்டுக்கும் அதிகமாகச் செலவு இல்லை. அதோடு அந்த முறை நாட்டு மக்களுக்கு நல்லது என்ற முறையில் அதற்குரிய ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இயற்கை மருத்துவம் பற்றி நிச்சயம் பரிசீலிக்கப்படும் என்று ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. அருணாசலம் அவர்களுக்குச் சொன்ன பதிலைத்தான் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்களுக்கும் சொல்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மறைந்த, முன்னாள் மதுரை பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் மு. வ. அவர்களுக்கு இருதய நோய் ஏற்பட்டது. அவர் இயற்கை மருத்துவ முறையை ஏற்றுக்கொண்டதால் தான், நமக்கு அவர் மறைந்த ஒரு பெரிய இழப்பு ஏற்பட்டதோ என்று எண்ணுகிற நினைப்பு கூட இருக்கிறது. ஆகவே இயற்கை மருத்துவத்திலுள்ள தொல்லைகளையும் விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து நல்லமுறையில் நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு உறுப்பினர் நான் ஏற்கெனவே சொன்ன பதிலைக் கவனமாகக் கேட்டிருந்தால், இந்த வினாவை எழுப்பியிருக்க மாட்டார். இயற்கை மருத்துவத்தை நடைமுறைப்படுத்தும்

போது, அதன் மூலம் தொல்லைகள் வராமல் பார்த்துக் கொள்கிறோம். உதாரணத்திற்கு, குற்றாலம் பால்ஸ் இருக்கக்கூடிய பகுதிக்கு 'பிளட் பிரஷர்' உள்ளவர் சென்றால், அவருக்கு 'பிளட் பிரஷர்' ஆகி பிளீடிங் ஏற்படும். எல்லா நோய்களையும் ஒரே ஏற்பாட்டின் மூலம் குணப்படுத்த முடியாது. ஆனால் வெவ்வேறு மருத்துவ முறைகளின் மூலம் நோய்களை குணப்படுத்த முடியும். எல்லாவற்றுக்கும் இயற்கை முறையில் மருத்துவம் செய்ய முடியும். ஹோமியோபதி மூலம் இயற்கை முறையில் நோய்களைக் குணப்படுத்தவும் முடியும். ஆனால் சில நோய்களை, சில முறைகளின் மூலம் தான் குணப்படுத்த முடியும். ஆனால் எந்தெந்த நோய்களை எந்தெந்த முறைகளின் கீழ் குணப்படுத்த முடியும் என்பதை விஞ்ஞான ரீதியில் கண்டுபிடித்து, அதற்கேற்றவாறு நோய்களுக்கான சிகிச்சையைச் செய்தால், நிச்சயம் இயற்கை முறையின் மூலம் நோய்களைத் தடுக்க முடியும்.

**திரு. ப. மாணிக்கம் :** ஹைட்ரோ தெராபி அம்சத்தைப் பற்றி இங்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதுவும் இயற்கை வைத்தியத்தில் ஒன்றுதான். ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக உடலில் அதிகமாகக் கொழுப்பு இருந்தால், அதைக் கரைப்பதன் மூலம் தசைகளில் ஏற்படக்கூடிய கோளாறுகளை நீக்கவும், நரம்புகளில் ஏற்படுகிற கோளாறுகளைக் களையவும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. நம்முடைய நாட்டிலும் தனியார் சிலர் இந்த சிகிச்சையைச் செய்கிறார்கள். பொது மருத்துவமனைகளில் கூட ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நோய்களாக இருக்கின்ற தசை நோய், நரம்பு நோய், குறிப்பிட்ட இடங்களில் அதிகமாக இருக்கிற கொழுப்பைக் கரைக்கிற சிகிச்சை முறை இப்படிப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட சிகிச்சை முறைகள் இருக்கின்றன. இந்த முறையை நாட்டிலுள்ள மற்ற எல்லா மருத்துவ மனைகளிலும் நடைமுறைக்குக் கொண்டு வரும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு டாக்டர் எச் வி. ஹண்டே :** இது ஒரு நல்ல யோசனை.

**திரு. சி. இராமலிங்கம் :** இளம்பிள்ளை வாதம் என்ற நோய் எங்கு பார்த்தாலும் வருகிறது. அதை இயற்கை வைத்தியத்தின் மூலம் குணப்படுத்த முடியுமா? அல்லது அதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** போலியோ ஊசி சரியாகப் போடப்படாததால் வரக்கூடியதன் விளைவு இது. பிசியோ தெரபி மூலம் தான் இந்த நோயைக் குணப்படுத்த முடியும். கே. கே. நகரில் மருந்து கொடுக்காமலே பிசியோ தெரபி மூலம், தேகப் பயிற்சி கொடுப்பதன் மூலம் நோயைக் குணப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



### *Transport Service in Andaman and Nicobar Islands*

* 109. *Q*.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(*a*) whether it is a fact that the State-owned Cheran Transport Corporation (C.T.C.) has been asked by the Union Transport Ministry, to organise the Transport Service in the Andaman and Nicobar Islands; and

(*b*) if so, the action proposed to be taken thereon?

**மாண்புமிகு திரு. க. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) அந்தமான், நிக்கோபார் தீவுகளின் போக்குவரத்துத் துறையின் பேருந்து வரவு-செலவு திட்டமிடுதல், பண்டக சாலைப் பொருள்கள் வாங்குதல், வழித்தடங்களுக்கான திட்டமிடுதல், பராமரித்தல், போக்குவரத்துப் பணிகள் கணக்குகள், பொதுவான பணிகள் போன்ற பணிகளைச் சீரமைத்தல், ஒருங்கிணைப்பு செய்யவும், தமிழ்நாடு, மாநிலத்திலுள்ள போக்குவரத்து (கழகங்கள்) நிறுவனங்களிலிருந்து தக்க அதிகாரிகளை மேற்கொள்ளவும் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**திரு. பா. ரா. தாமஸ் :** அந்தப் பொறுப்பானது சேரன் போக்குவரத்துக் கழகத்துக்கு மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி என்றால், மற்ற போக்குவரத்துக் கழகங்கள் யாவும் சரியாகச் செயல்படவில்லையென்று பொருளா? இம்மாதிரித் திட்டங்களைச் செயல்படுத்தும்போது, அனைத்து போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றுபவர்களுக்கும் வாய்ப்பு கொடுக்கப்படுமா? அங்கிருந்து பெறக்கூடிய வருமானம் நம்முடைய மாநிலத்திற்கு வர எவ்வித நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்?

**மாண்புமிகு திரு. க. முத்துசாமி :** எந்தப் போக்குவரத்துக் கழகத்துக்குக் கொடுத்திருந்தாலும், இதே கேள்வியைத்தான் மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருப்பார். ஒன்றுக்குத்தான் இதற்கான வாய்ப்பைக் கொடுக்க முடியும். ஓரே ஒரு அமைப்பு அங்கு சென்று இத்தகைய பணியைச் செய்தால்தான், நன்றாக இருக்கும். ஒவ்வொன்றிலிருந்தும் அதிகாரிகள் சென்று அங்கு பணியாற்றுவது சரியாக இருக்காது. இதைப் பொறுத்தவரையில், சேரன் போக்குவரத்துக் கழகத்தில் உள்ளவர்கள் செல்ல விரும்பினார்கள். அவர்களுக்கு வாய்ப்பு கொடுத்திருக்கிறோம். வருமானம் என்று பார்க்காமல், இன்னால் நமக்குப் பெருமை என்ற அடிப்படையில்தான் கொடுத்திருக்கிறோம்.

(மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் எழுந்தார்).

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒவ்வொரு வினாவிலும் துணைக் கேள்வி கேட்கக் கூடாது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** சேரன் போக்குவரத்துக் கழகம், பேருந்து களில் உபயோகப்படுத்தும் வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகளைத் தயாரிக்கிறது என்பது உண்மையா? அப்படியானால், அரசுக்குத் தேவையான கருவிகளை வெளி மாநிலங்களிலிருந்து வாங்காமல், சேரன் போக்குவரத்துக் கழகத்தி லிருந்து வாங்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** இப்போதுதான் உற்பத்தி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இம்முயற்சி வெற்றி பெற்றால், நம்முடைய தேவைக் கேற்ப அவர்கள் தயாரித்தால், அவற்றை நாம் வாங்கிப் பயன்படுத்திக்கொள்ள லாம்.

## *Dindigul-Kannapatty Town Bus*

*110. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(*a*) whether it is a fact that the villagers of Kannapatty have made an appeal to Government, to provide for town bus service between Dindigul and Kannapatty; and

(*b*) if so, the action to be taken thereon?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** கன்னாப்பட்டி என்ற ஊர் திண்டுக்கல்லுக்கு வெகு அருகிலுள்ளது. கிராமப்புறங்களையும் நகரங்களோடு இணைக்க வேண்டு மென்ற அடிப்படையில் இதை மறுபரிசிலனை செய்து, அங்கு இந்தப் பேருந்தை விட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து ஆணை பிறப்பிப்பார் களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** கன்னாப்பட்டி கிராம மக்கள், திண்டுக் கல்லுக்கும் கன்னாப்பட்டிக்கும் இடையில் நகரப் பேருந்து விட வேண்டும் என அரசுக்கு முறையீடு செய்திருக்கிறார்களா என்றுதான் கேள்வி கேட்டிருக் கிறார்கள். அவ்வாறு செய்யப்படவில்லை. திண்டுக்கல்லிலிருந்து கன்னாப



பட்டிக்கு 47 கிலோ மீட்டர் தொலைவு உள்ளது. நகரப் பேருந்துகளுக்கான தூரத்தை விட இதற்கு தூரம் அதிகமாக இருப்பதால், பேருந்து விட முடியாது என்று சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி ( * ) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (1) பேரவை எதிர்க் கட்சித் தலைவர் நெடும் பயணம் செல்லும் இடத்தில் வெடிகுண்டு கண்டெடுக்கப்பட்டது குறித்து.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, அரசிடமிருந்து ஒரு தகவலை உங்கள் அனுமதியுடன் பெற விழைகின்றேன். இன்றைய காலைப் பத்திரிகை களிலும், நேற்றைய மாலைப் பத்திரிகைகளிலும் எங்கள் கட்சியின் தலைவரும், பேரவை எதிர்க் கட்சித் தலைவருமான டாக்டர் கலைஞர் அவர்கள் நெடும் பயணம் சென்றுகொண்டிருக்கிற விருதுநகர் அருகே சாத்தூருக்குப் பக்கத்தில் சாலையில் 5 வெடி குண்டுகள் கண்டெடுக்கப்பட்டதாகவும், போலீசார் அவற்றை எடுத்துச் சென்றதாகவும் செய்தி வந்திருக்கிறது. அத்துடன் கலைஞர் அவர்கள் தங்கியிருந்த சிவகாசியிலுள்ள லாட்ஜில் 12 மணிக்கு மேல் கம்பியுடன் நின்றிருந்த ஒருவரை போலீசார் பிடித்துச் சென்றதாகவும் செய்தி வந்திருக்கிறது. சட்டம் ஒழுங்குக்கு ஊறு உருவாகிவிடாத அளவுக்கு இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அங்கு பயணம் சென்று கொண்டிருப்பவர்களுக்கு அரசு என்ன பாதுகாப்பு நடவடிக்கையை இதுவரை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒன்று சொல்கிறேன். இங்குள்ள விதி முறைகள் எல்லாம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் இப்போது ஒரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். எனக்கு முன்னாலிருந்தே இந்த அவையில் உறுப்பினராக அனுபவம் வாய்ந்த ஒரு உறுப்பினராக அமர்ந்து

(முற்பகல் 10-10)

கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும், இதுவல்ல அதற்கு வழி. வேறு இரண்டு வழிகள் இருக்கின்றன. அவற்றின் அடிப்படையிலே கொண்டு

வந்திருந்தால், அவர்கள் உணர்ச்சியை நான் புரிந்துகொண்டிருப்பேன். இப்படி எழுப்புவது ஒரு தவறான முன்மாதிரியாகிவிடும். ஆகவே, வேறு வழியில் இதை எழுப்பலாம்.

(2) ஒரு வினா நிராகரிக்கப்பட்டுள்ளது குறித்து.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : தலைவர் அவர்களே, ஒரு தகவல் கோர விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : என்ன தகவல்?

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : நான் தங்களின் அலுவலகத்திற்கு கடந்த டிசம்பர் மாதத்திலேயே ஒரு வினா அனுப்பியிருந்தேன், அது இப்போது நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதுபற்றிப் பேச தனியாக அறைக்கு வரலாம், அறையிலே கேட்கலாம், சொல்கிறேன்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : கடந்த 1½ வருஷமாக . . .

3. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆளுநர் அவர்கள் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்—

1. தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறாது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு.

2. தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு.



(2) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :—

1. தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1982).

2. தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு நகராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1982).

3. தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1982).

4. 1982 ஆம் ஆண்டு இந்தியத் தண்டனைச் சட்டக் கோவை, குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1982).

5. தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றஞ்செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறாது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1982).

6. தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1982).

7. தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1982).

## 4. கவன ஈர்ப்பு.

**(1) திருச்செந்தூர் முருகன் கோவிலில் அர்ச்சனை செய்து வந்த அண்ணாவி என்ற முத்துராம சுப்ரமணியம் காவல் துறையினரால் பயங்கரமாகத் தாக்கப்பட்டது குறித்து.**

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஆ. நல்லசிவன், ம. சங்கரலிங்கம், க. மீனாட்சிசுந்தரம், வி. வி. வி. ஆனந்தம் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் அமைச்சரின் கவனத்தை ஈர்ப்பார்கள்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

"கடந்த 26—1—1982 அன்று திருச்செந்தூர் முருகன் கோவிலில் அர்ச்சனை செய்து வந்த அண்ணாவி என்ற முத்துராம சுப்ரமணியம் என்பவர் காவல் துறையினரால் பயங்கரமாகத் தாக்கப்பட்டு பலத்த காயங்களுடன் புத்தி பேதலித்த நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதால், அந்தப் பகுதி மக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து"

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அவையின் முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே நெல்லை நகர காவல் நிலையக் காவலர் 2660 என்ற ஆசைத்தம்பி என்பவர் தன்னைத் தாக்கியதாக அண்ணாவி என்பவர் கூறினார் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. இன்ஸ்பெக்டர் குமாரபாண்டியன் நாகர்கோவிலுக்கும், எஸ். ஐ. கிருஷ்ணசாமி, பாளையங்கோட்டை கட்டுப்பாட்டு அறைக்கும், தலைமைக் காவலர் 1655 பனைவடலி சத்திரத்திற்கும் இடம் மாற்றப் பட்டுள்ளார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் மீது புகார் ஏதும் வரவில்லையா? புகார் வந்ததாக அறிக்கையில் குறிப்பிடவில்லையே, ஏன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, காவலர் 2660 ஆசைத்தம்பி அவர்கள் தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அவர்மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது, நகையைத் திருடிவிட்ட

@ 635-636 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



தாகக் குற்றச்சாட்டைச் சொன்னதற்குப் பிறகு அவர்மீதும் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அர்ச்சகரை காவல் நிலையத்தில் வைத்து அடித்தார் என்பதற்காக வழக்கு கு. எண். 66/1982-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு ஆசைத்தம்பி என்பவர் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். காவல் நிலை யத்தில் குற்றவாளிகளை அடிக்கக்கூடாது என்பதால், இதில் சம்பந்தப்பட்ட அந்த மூன்று அதிகாரிகளுக்கும் பொறுப்பு இருப்பதால், 'ரெஸ்பான்சிபிலிட்டி' இருப்பதால், இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர், தலைமைக் காவலர் ஆகிய மூன்று பேரையும் மாற்றம் செய்திருக்கிறோம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : திருச்செந்தூரில் அண்ணாவி என்ற முத்துராம சுப்பிரமணியம் என்பவர் காவல் நிலையத்தில் வைத்துத் தாக்கப்பட்டது மட்டுமல்லாமல், திருநெல்வேலிக்கும் அழைத்துச் செல்லப்பட்டு ஒரு வீட்டிலே அடைக்கப்பட்டு சாராயத்தை அவர் வாயிலே ஊற்றி அங்கே வைத்தும் அவர் தாக்கப்பட்டு, அதற்குப் பிறகு மருத்துவமனைக்கு வந்து, சர்வ கட்சி கூட்டம் நடைபெறும் அளவுக்கு நிலைமை உருவாகியிருக்கிறது. நீதி விசாரணை ஆர்.டி.ஓ. அளவிலே நடக்க ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டி ருக்கிறது. இங்கே நண்பர்கள் குறிப்பிட்டதைப்போல, வாடிப்பட்டியிலேயும், அதிராமப்பட்டினத்திலேயும், திருவாரூரிலேயும் காவல் துறையினருக்கு உறவினராக யாராவது இருந்து அவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் இருந்தால், காவல் துறையினர் அப்பாவிகளைத் தொந்தரவு செய்கிறார்கள். காவல் துறையினரிடமிருந்து அப்பாவிகளையும், குற்றவாளிகள் அல்லாத மற்றவர்களையும் காப்பாற்றும் வகையிலே, யாரை வேண்டுமானாலும் அடிக்கலாம் என்று இருக்கும் நிலைமையை மாற்ற ஒரு நிரந்தரமான வழி வகை காண இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இதற்கு நிரந்தரமான வழிமுறை மனமாற்றம் தான். இந்த மனமாற்றம் அவர்களுக்கு ஏற்பட வேண்டும். குற்றம் சொல்கிறவர்கள் உறவினர்கள் என்பதற்காக குற்றவாளிகளை அடித்து விடலாம் என்ற நிலை இருக்கக்கூடாது. மனமாற்றம் தான் இதற்கு வழி. மற்றபடி நாம் சட்டபூர்வமாகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கிறோம். குற்றம் செய்தவரைப் பணி நீக்கம் செய்கிறோம். அவரைக் கண்காணிக்கும் மேலதிகாரிகளைப் பணிமாற்றம் செய்திருக்கிறோம். இவற்றிலிருந்து, அரசு அக்கறையோடு செயல்படுகிறது என்றுதான் பொருள்.

**(2) தமிழ் நாட்டின் பல மாவட்டங்களில் மூளைக் காய்ச்சல் நோய் பரவி பல குழந்தைகள் இறந்துவிட்டது குறித்து.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் தென் ஆர்க்காடு, வடாற்க்காடு, தர்மபுரி, திருச்சி மாவட்டங்களிலும் பிற பகுதிகளிலும் மூளைக் காய்ச்சல் நோய் பரவி பல குழந்தைகள் இறந்துவிட்டது குறித்தும் மற்றும் பலர் மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்தும்"

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, @ விவர அறிக்கையொன்று அவையின் முன்வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, இதே பிரச்சினை குறித்து சென்ற ஆண்டு மேலவையிலே ஒரு விவாதம் நடந்தது. ஆனால் அந்த விவாதம் நடைபெற்ற பிறகுகூட, இந்த மூளைக் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறது. ஆகவே, தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படாததுதான் இதற்குக் காரணம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து சென்ற கூட்டத்திலேயே கூட உறுதிமொழி கொடுத்தார்கள். அந்த உறுதிமொழி மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்ட பிறகும்கூட, பாதிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்து கொண்டுதான் வருகிறது. இறந்தவர்களின் எண்ணிக்கையும் அதிகமாகிக் கொண்டே வருகிறது. இந்த எண்ணிக்கை வடாற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களிலேதான் மற்ற மாவட்டங்களையும் விட அதிகமாக இருக்கிறது. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, இது கவலைக்குரிய ஒரு நிலையாக இருந்து, கர்நாடகா, ஆந்திரா, புதுவை, தமிழகம் ஆகிய இந்த 4 மாநிலங்களும் சேர்ந்து மத்தியில் சுகாதார அமைச்சராக மாண்புமிகு திரு. சங்கரானந்த் அவர்கள் இருந்தபோது, அவர்களின் தலைமையில் 27—11—1981 ஆம் நாளன்று ஒரு 'ரிவ்யூ மீட்டிங்' நடத்தி, இந்த நோய் எங்கெங்கே எப்படியெப்படி பரவிக்கொண்டிருக்கிறது என்று கண்டறிய, 'வெக்டர் கன்ட்ரோல் யூனிட்' மற்றும் 'வைராலஜி யூனிட்'டைச் சார்ந்த

---

@ 637-640 ஆம் பக்கங்களில் இணைப்பு [ ஆக அச்சிடப்பட்டுள்ளது.



எக்ஸ்பர்ட்களையெல்லாம் வைத்து, ஒரு கருத்தரங்கு நடத்தினோம். அதிலே ஒருங்கிணைந்த திட்டம் தீட்டி செயல்பட வேண்டும் என்று எல்லா ஸ்டேட்களும் சேர்ந்து யோசனை சொல்லியது. அந்த யோசனையின் அடிப்படையிலே சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். அதில் முக்கியமான ஒன்று, Mosquitoes transmitting the disease from the vector என்பது இதிலே இன்னொரு அனிமல், 'pig' என்று சொல்லப்படும் பன்றி, அந்தந்த இடத்திற்குச் சென்று அதை மிகைப்படுத்தி, அதற்குப் பிறகு அவற்றிலிருந்து மனிதனுக்குப் போய்ச்சேரும் நிலைமை இருக்கிறது. இந்தத் தொடர்பை அறுத்துவிட வேண்டும் என்று திட்டம் தீட்டி, இந்த நோய் பரவுவதற்கு மூல காரணமாக இருக்கும் பறவைகள், பன்றிகள், 'கேட்டில் பிரீடிங்' போன்றவற்றில் எல்லாம் நாம் சரியான கவனம் செலுத்தி, சரியான முறையிலே இவைகளை வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இதற்கு மூல காரணம் indiscriminate piggering இந்த விஷயத்தில் மிகவும் கண்டிப்பாக இருந்து, நிச்சயமாக கட்டுப்படுத்த

(முற்பகல் 10-20)

நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதிலும் தாட்சண்யம் இல்லாமல் செய்ய வேண்டும் என்றும் உத்தரவு போட்டிருக்கிறோம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மழைக் காலங்களில்தான் இந்த நோய் அதிகமாகப் பரவுகிறது என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் பொதுவாக இந்த நோய்க்கு மூலகாரணமாக இருக்கிற கொசுக்களை ஒழிப்பதற்கும், நோய் பரவாமல் தடுப்பதற்குமான சில நடவடிக்கைகளைப்பற்றியும் குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மழைக்காலத்தில் மட்டுமே இந்த நோய் அதிகமாகப் பரவுகிற காரணத்தால், மழைக் காலங்களில் தண்ணீர் தேங்காமலிருக்க தேவையான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதற்கு அரசு முன்வருமா? மற்ற மாநிலங்களில் பெரிய பெரிய இயந்திரங்களை வைத்து மருந்துகளைத் தெளிக்கும் முறையைப் பின்பற்றுகிறார்கள். அப்படிப்பட்ட நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி மருந்துகளை அடித்துக் கொசுக்களை தீவிரமாக அழிக்கும் நடவடிக்கையை முன்னெச்சரிக்கையோடு அரசு எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இதைத்தான் நான் அறிக்கையிலேயே குறிப்பிட்டிருக்கிறேன்.

The disease appeared to have a distinct predilection for the drought prone areas faced with abnormal rainfall.

அதாவது மிகவும் வறட்சியான பகுதிகளில் sudden rainfall ஏற்பட்டால் இது வருகிறது. வழக்கமாக rainfall இருக்கிற இடங்களில் இது வருவதில்லை. எனவே எவ்வளவுதான் நாம் எச்சரிக்கையாக இருந்தாலும், வறட்சியாக இருந்து திடீரென்று மழை பெய்தால், இந்தத் தொல்லை ஏற்படுகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தவிர கருநாடக மாநிலத்தில் கோலார் கோல்டு பீல்டு, அனந்தபூர் மாவட்டம் ஆகிய இடங்களிலும் இது ஏற்பட்டிருக்கிறது. எந்த அளவுக்கு நாங்கள் எச்சரிக்கையோடு செயலாற்றியிருக்கிறோம் என்பதற்குப் புள்ளிவிவரத்தையே கொடுக்க விரும்புகிறேன். கருநாடகத்தில் இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 498. அதில் இறந்தவர்களின் எண்ணிக்கை 130. அந்த வகையில் பார்த்தால்—சதவீதத்தில் பார்த்தால்—அதாவது number of cases, number of deaths என்ற அடிப்படையில் பார்த்தால் கீழ்க்கண்டவாறு இருந்தது :—

கருநாடகம் 26.1 சதவீதம்.

தமிழ்நாடு 17.8 சதவீதம்.

ஆந்திரப்பிரதேசம் 35.4 சதவீதம்.

புதுவையில் 29.2 சதவீதம்.

இருந்தாலும், நாம் ஏதோ பெரிய சாதனை சாதித்துவிட்டோம் என்று இருந்துவிடாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று வறட்சியாக இருந்து திடீரென்று மழை பெய்கிற எல்லா இடத்திற்கும் தாக்கீது கொடுத்து எச்சரிக்கை செய்திருக்கிறோம். இதற்காக ஸ்பெஷல் ஏற்பாடுகளையே செய்திருக்கிறோம். இந்த வகையில் மத்திய அரசுகூட நமக்கு உதவி செய்கிறோம் என்று முன்வந்திருக்கிறது. அதையும் நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்.



## 5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

### (1) தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 63/1981).

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1982 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். "

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசு வெளியிட்டுள்ள நோட்டிபிகேஷன்களுக்குப் பதிலாக இந்த மசோதா அவைமுன் கொண்டுவரப்பட்டுள்ளது. மோட்டார் எஞ்சின் பொருத்தப்பட்ட சைக்கிள்கள், சைக்கிள் ரிக்ஷாக்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் இனி பூட்டப்பட இருக்கிற மோட்டார் எஞ்சின்கள் ஆகியவற்றிற்கு புதிதாக 15 சதவீதம் ஒருமுனை வரி போடுவதற்கு இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே சைக்கிள் ரிக்ஷாக்காரர்கள், மற்றும் ஆட்டோ ரிக்ஷாக்காரர்கள் அதிகமான வாடகைக் கட்டணம் கேட்கிறார்கள். இனி அவர்கள் உபயோகிக்கும் மோட்டார் எஞ்சின்களுக்குப் புதிதாக 15 சதவீதம் ஒருமுனை வரி விதிப்பதன் மூலம் அவர்கள் தொழில் நடத்துவதற்கும், தொழிலுக்கு முதலீடு செய்வதற்கும் கொஞ்சம் கஷ்டமான நிலையை உண்டாக்கியிருக்கிறது அரசு. அவர்கள் மீது 15 சதவீதம் வரி போட்டால், அவர்கள் உடனே அதைப் பயணிகள் மீதுதானே சுமத்தப் போகிறார்கள். ஏன் இதைச் செய்ய வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. எனவே இறுதியில் இது ஏழை எளிய நடுத்தர மக்களையே பாதிப்பதால், அரசு இந்த வரி விதிப்பைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

@ 641-642 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. ஆ. நல்லசிவன்] [1982 பிப்ரவரி 19

அடுத்து, மத்திய அரசின் சுற்றுலாத் துறை எந்தெந்த ஓட்டல்களை "கிளாசிபை" செய்து, 'அப்ரூவ்' செய்கிறதோ அத்தகைய ஓட்டல்களில் விற்கப்படும் ஆகார வகைகள் மற்றும் டிரிங்சுக்கு வரி விதிக்கும் முறையில் இப்போது திருத்தம் வந்திருக்கிறது. மத்திய அரசின் சுற்றுலாத் துறை 'அப்ரூவ்' செய்யும் ஓட்டல்கள் என்பவை சாதாரண மக்களும், நடுத்தர வர்க்கத்தினரும்கூட போய் சாப்பிடுவதற்குப் பயன்படுவதாக இருக்கின்ற நிலையில் அவர்களை இந்த வரி விதிப்பு பாதிக்குமா பாதிக்காதா? ஏற்கெனவே 3, 4 மற்றும் 5 நட்சத்திர ஓட்டல்களில் கொடுக்கப்படும் ஆகார வகைகள் மற்றும் பானங்களுக்கு வரி விதிக்கும் அதிகாரம் அரசாங்கத்திற்கு வழங்கப் பட்டிருக்கிறது. எனவே இப்போது இந்தப் புதிய சட்டத்தின் மூலம் வரி விதிப்பிற்குள் கொண்டுவரப்படும் ஓட்டல்கள் என்பவை 3, 4, 5 நட்சத்திர ஓட்டல்கள் நிலையில் இருக்குமா அல்லது 3 நட்சத்திர ஓட்டல்களின் நிலைக்கும் கீழே இருக்குமா? அப்படி கீழே தான் இருக்குமென்றால் அது சாதாரண மக்களைப் பாதிக்குமே. அந்த மாதிரி பாதிக்குமென்றால், சாதாரண மக்களின்மீது வரி போடுவதற்கு இப்போது என்ன அவசியம் வந்தது? ஏற்கெனவே 3, 4, 5 நட்சத்திர ஓட்டல்களாக உள்ளவற்றின் மேலேயே வரியைப் போடக்கூடாதா என்றுதான் அறிய விரும்புகிறேன்.

அடுத்து, மெழுகு வத்தி, பிளாஸ்டிக் பொருள்கள் மற்றும் ஸ்டேஷனரி பொருள்களின்மீது ஒருமுனை வரி இருக்கிறது. அதை மாற்றி பலமுனை வரியாக ஆக்க இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. வியாபாரிகளே இதைக் கேட்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். எப்போதும் பலமுனை வரியாக இருப்பதை மாற்றி ஒருமுனை வரியாகப் போட வேண்டும் என்றுதான் வியாபாரிகள் கேட்பதைப் பார்த்திருக்கிறோம். இதன் காரணமாக வரிச் சுமை அதிகமாகி சாதாரணமானவர்கள், நடுத்தர வர்க்கத்தினர் ஆகியோர் பாதிக்கப்படும் நிலைதான் உருவாகும். பிளாஸ்டிக், ஸ்டேஷனரி போன்ற பொருள்களை வாங்கும் மாணவர்கள், நடுத்தர வர்க்கத்தினர் இனி அதிகமான விலையைக் கொடுக்க வேண்டி ஏற்படும். வியாபாரிகள் கேட்கிறார்கள் என்று சொல்லுவதை விளக்க வேண்டும். ஏழு சதவிகித ஒரு முனை வரியாக இருந்ததை மாற்றி 1 அல்லது 2 சதவிகித பல முனை வரி என்று போடுவதன் காரணமாக இறுதியில் சாதாரண மக்களின் தலையில்தான் வரிச் சுமை அதிகமாகும். எனவே இதை அனுமதிக்கக்கூடாது என்று சொல்லிக்கொண்டு இதுகுறித்து அமைச்சர் அவர்களிடமிருந்து விளக்கத்தை எதிர்பார்த்து அமைகிறேன்.



**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே இருக்கிற வரிவிதிப்பில் பல்வேறு மாறுபாடுகளும், குறைபாடுகளும் இருக்கின்ற காரணத்தால், அவைகளை ஒழுங்குபடுத்துவதற்காக ஒரு முறை கையாளப்பட வேண்டும் என்று இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. சைக்கிளில் மோட்டார் எஞ்சின் பொருத்தினால், 6 சதவீதமும், ரிக்ஷாவில் பொருத்தினால் 4 சதவீதமும், மோட்டார் சைக்கிளில் பொருத்தினால் 15 சதவீதமும் வரி வசூலிக்கப்பட்ட நிலைமையை மாற்றி, மூன்று விதமான கட்டணங்கள் தேவையில்லை என்று பொதுமக்களுக்கு நன்மை செய்கிற வகையிலும், வியாபாரிகள் ஏமாற்றுகிற நிலை இருப்பதால் அவைகளைத் தடுக்கவும் எடுக்கிற முயற்சியைப் பாராட்டுகிறேன்.

மேலும் பிளாஸ்டிக் மற்றும் மெழுகுவர்த்தி போன்ற பொருள்களுக்கு வரியை ஒருநிலைப்படுத்துகிற முயற்சியையும் நான் வரவேற்கிறேன்.

வரி விதிப்பு ஒருபுறம் இருந்தாலும், வரி ஏய்ப்பதைத் தடுப்பது அரசின் கடமையாகும். பல்முனை வரிவிதிப்பை வைத்துக்கொண்டு, மாநிலத்திற்கு இவ்வளவு வருமானம் வருகிறது என்ற கணக்கையும் வைத்துக்கொண்டு, அந்த அளவுக்கு வருவாய் அரசுக்குக் கிடைக்கவில்லை என்றால், அர்த்தமே இல்லாமல் போய்விடும். அது ஒரு பக்கம் இருந்தாலும், இவ்வளவு வரி போடுகிறார்கள் என்ற கெட்ட பெயரும், அந்த அளவுக்கு வரி வராத நிலையும் இருக்கிறது. எனவே இவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்தும் முயற்சியில் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

3, 4, 5 நட்சத்திர ஹோட்டல்களுக்கு வரி விதிக்கப்பட்டது என்றாலும், மிகப் பெரிய ஓட்டல்களான "சோழா ஷெராட்டன்" போன்றவைகளும் தப்பித்துக்கொள்ளும் நிலை இருக்கிறது.

(முற்பகல் 10-30)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

ஓட்டல் சோழா ஷெராட்டனுக்கு வரி போட வேண்டாமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொல்லமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அவர்களும் வரி ஏய்த்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்து அதை எப்படித் தடுப்பது என்று யோசித்து விற்பனை வரியை அரசு கையாண்டிருக்கிறது என்று கருதுகிறேன். பெரிய ஓட்டல்களில் ஒரு சாப்பாடு 80 ரூபாய்,

60 ரூபாய்க்கு விற்கப்படுகிற நிலை இருக்கின்றது. அப்படி பெரிய இலாபம் கருதி நடத்துகிற பெரிய ஓட்டல்களுக்கு இந்த வரி போட்டது அவர்களைப் பாதிக்காது. வரி ஏய்க்காமல் இருக்க இது நல்ல வழி முறை என்று கருதுகிறேன்.

பெட்ரோல் மற்றும் இரசாயனப் பொருள்களுக்கு 8 சதவீதம் வரி என்பதை, இரப்பர் தொழில்களுக்குப் பயன்படுத்தப்படும்போது 4 சதவீதம் ஒருமுனை வரி என்று செய்திருப்பது பாராட்டுக்குரியது. அண்ணாவின் கொள்கையான வசதி படைத்தவர்களிடமிருந்து வாங்கி வசதி இல்லாதவர்களுக்கு வழங்குகிற நல்ல முறையைக் கையாள வேண்டுமென்ற முறையிலே, பெரிய தொழில்களுக்கு வரி போட்டால், சுமையாக இருக்காது என்று அவர்களுக்கு வரி விதித்து ஏழை வியாபாரிகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு உதாரணமாக, Surcharge, sales tax on petrol and diesel and kerosene அவற்றுக்கு வரி விலக்கு இந்த அரசு அளித்திருக்கிறது.

அதோடு, தொழில்கள் என்று சொல்லும்போது, பின்தங்கிய மாவட்டங்களில் தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்று அரசு சொல்லுகிறது. அப்படி ஆரம்பிக்கிற தொழில்களுக்கு ஊக்கம் தரவில்லையென்றால், தொழிலதிபர்கள் பின்தங்கிய மாவட்டங்களுக்குச் செல்லமாட்டார்கள். அப்படி பெரிய உற்சாகம் தரப்பட்டதன் பேரில், ஆணைக்கரைப்பட்டியில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்தார்கள். பிறகு போதுமான ஊக்கம் தராத நிலையில் அதற்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இப்போது மறுபடி இந்த அரசு ஊக்கம் தந்திருக்கிறது.

அப்பளம் போன்ற பொருள்களைத் தயாரிப்பவர்கள் இரண்டு இலட்சத்திற்கு உட்பட்டு தயாரித்தால், அவர்களுக்கு வரி விலக்கு அளித்திருக்கிறது. அரிக்கேன் விளக்கு, எண்ணெய் விளக்கு தயாரிக்க துணை புரிந்திருக்கிறது. ஓட்டல்களுக்கு எதிராக இந்த அரசு இல்லை. சிறிய ஓட்டல்களுக்கு இருந்த 4 சதவீத வரியை நீக்கியிருக்கிறது இந்த அரசு என்பது அவர்களுக்குச் செய்கின்ற உதவிகளாகும்.

அதே போல வரியைக் குறைத்திருக்கிறது. பத்திரிகையில் நியாயத்தை எழுதுகிறார்கள், ஆகவே அவர்களிடம் மதிப்போடு நடந்து கொள்ள வேண்டும் என்று பேசினார்கள். அந்த முறையில் 50 ஆயிரம் பிரதிகளுக்குக் குறைவாக வெளியிடுகின்ற பத்திரிகைகளுக்கு நாம் வரியைக் குறைத்திருக்கிறோம். எட்டு



சதவீதத்திலிருந்து அவர்களுக்கு 4 சதவீதமாக வரியைக் குறைத்திருப்பது சிறப்பான காரியமாகும். குறைந்த அளவிலே விற்கின்ற பத்திரிகைகள்தான் எதை வேண்டுமானாலும் எழுதிக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் பத்திரிகைத் துறை வளர வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு இந்த அரசு இதைச் செய்திருக்கிறது.

குறிப்பாக நீலகிரியிலே வரி குறைப்பு முறையைப் பற்றிச் சொல்லுகிறேன். நீலகிரியில் தேயிலை விற்பனை குறித்து பெரிய சங்கடம் நேரிட்டது. அப்போது தமிழகத்திலே. . .

* திரு. க. இராமமூர்த்தி : சேல்ஸ் டாக்ஸ் சட்ட முன்வடிவிலே பத்திரிகைகள் பற்றி எங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : பத்திரிகையிலே வரி வரியாக எழுதுவதால் அதை வரி என்று சொல்லிவிட்டார்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இந்தச் சட்டமுன்வடிவைப் பற்றி அரசினுடைய உள்நோக்கத்தைச் சொல்லுகிறேன். இந்த அரசு எப்படி வரி விலக்கு அளித்திருக்கிறது, வரியைக் குறைத்திருக்கிறது, எந்த முறையில் வரி விதித்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போதுதான், இந்த அரசின் அடிப்படை உணர்வுகள் தெரிகிறது என்பதற்காகத்தான் நான் இத்தனையையும் எடுத்துச் சொன்னேன். குறிப்பாக தேயிலையைப் பொறுத்த வரையில், பெரிய பாதிப்பு ஏற்பட்டது.

* திரு. க. இராமமூர்த்தி : தனியாக இந்த அரசினுடைய சட்ட முன்வடிவு இயற்றுகின்ற முறையைப் பற்றி விவாதித்தால், சட்டமுன்வடிவு கொண்டு வருவதற்கு முன் அரசின் கொள்கை எப்படி இருக்கிறது என்பதையெல்லாம்பற்றி நாங்களும் தயாரித்துக்கொண்டு வருவதற்கு சௌகரியமாக இருக்கும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு உறுப்பினருடைய நன்மைக்காக இன்றே சொல்லிவிட்டால் இன்னுமொரு நாள் வெளியிடுவதற்கு ஏற்புடையதாக இருக்கும். குறிப்பாக இந்த அரசுக்கு நான் பாராட்டுத் தெரிவிப்பது தேயிலைத் தொழிலைப் பொறுத்த வரையில், அந்தத் தொழில் மிகுந்த அளவில் பாதிக்கப்பட்டிருந்த நேரத்தில், 5 சதவீதம் என்று இருந்த வரியை இரண்டரை சதவீதமாகக் குறைத்திருப்பதற்காக இந்த அரசைப் பாராட்டி அமைகிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விற்பனை வரி பற்றிய சட்டமுன்வடிவின் மீது கருத்துக்களைத் தெரிவிக்கின்ற போது சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். ஆளும் கட்சித் தாப்பிலே யிருந்து ஏதாவது உதவி கிடைக்காதா என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். அதற்கு மாறாக போட்டிருக்கிற வரிகள் நியாயம்தான் என்ற அளவிலே கருத்து தெரிவித்த பிறகு வேறு வழியில்லை. இங்கே வராத வரிகளுக்குக் கூட, இனிமேல் எப்படி எப்படி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர், அரசு கொறடா, அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒருவேளை இந்த அவையின் தொடர் கூட்டம் முடியும் முன்பாகவே அமைச்சராகவோ, துணை அமைச்சராகவோ பொறுப்பு ஏற்க இருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. ஆகவே இப்போதே வரி விதிப்பைப்பற்றி. . .

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** நான் கொறடாவாக இருந்து உதவி செய்வது பிடிக்கவில்லையென்றால் போய்விடுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** துணை அமைச்சராக ஆக வேண்டும் என்று வாழ்த்துகிறார். வேறு ஒன்றுமில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** ஓர் அமைச்சருக்கு இலக்கணம், " வரி விதிப்பு என்பது சுலபமானது, எளிமையானது " என்று விவாதிப்பது. அதை நம்முடைய கொறடா அவர்கள் மிகத் திறமையாகச் செய்திருக்கிறார்கள்.

அரசாங்கத்தினுடைய கொள்கையை சென்ற முறையே அறிவித்தார்கள். மனிதனே இயக்குகின்ற சைக்கிள் ரிக்ஷாக்கள் மனித உழைப்பைக் கேவலப் படுத்துவதாக இருக்கிறது. ஆகவே அரசாங்கமே முன்வந்து அவர்கள் சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார்களைப் பொருத்திக்கொள்ளத் துணையாக இருக்கும் என்று அறிவித்தார்கள். அதோடு மட்டுமல்லாமல், வங்கிகளிலும் கூட நல்ல அணுகு முறையோடு சைக்கிள் ரிக்ஷா தொழிலாளிகள் கடன் கோரினால், துணை புரிகின்ற வகையிலே ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இது அவசியமான மாற்றம், தேவையான மாற்றம் என்று அரசாங்கம் கருதுகிறது என்று நாட்டிலே இருக்கிற மக்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாற்றம் தேவையென்று அத்தனை பேரும், எதிர்க் கட்சிகள் உட்பட கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக நாம் எல்லாம் துணை புரிந்து கொண்டிருக்கிறோம்: இந்தச் சூழ்நிலையில் சைக்கிள் ரிக்ஷாக்களில் பொருத்தப்படும் மோட்டார்களுக்கு வரி விதிப்பது நியாயம் இல்லை. அவற்றுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கலாம் என்று இந்த நேரத்திலே



அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்தப்படுவது அநேகமாக பெரிய நகரங்களில்தான் நடைபெறுகின்றது. மற்ற ஊர்களில் அப்படிச் செய்வதில் அவ்வளவு வேகம் காணப்படவில்லை. ஆகவே இதனால் அரசாங்கத்திற்கு வருகின்ற வருமானம் அதிகமாக இருந்துவிட முடியாது. கொள்கை அளவிலே இப்படிப்பட்டவர்களுக்கு வரி விதிப்பு இருக்கக் கூடாது என்ற நிலையில், இந்த " கன்சர்வேட்டிவ் திங்கிங் " (conservative thinking) எப்படித்தான் மாண்புமிகு அமைச்சருக்கு வந்ததோ தெரியவில்லை. அவரைப் பொறுத்தவரையில், அவர் புரட்சிகரமான எண்ணங்களுக்கு ஆதரவு அளிப்பவர். அவருடைய கவனத்தைத் தாண்டி இந்த வரி விதிப்பு எப்படி வந்தது என்பது தெரியவில்லை. அதிக நாட்களாக அமைச்சராக இருந்தால், (" கன்சர்வேட்டிவ் திங்கிங் ") பிற்போக்கு சிந்தனை தானே வந்துவிடும் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். எப்படி இருந்தபோதிலும் சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மோட்டார் பொருத்தப்படும்போது வரி விதிப்பது நியாயமற்ற ஒன்று. ஆகவே இவற்றுக்கு விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்பது அத்தியாவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சைக்கிள் ரிக்ஷாக்களைப் பொறுத்தவரையில், வருமானம் வருகிறது. ஆனால் சைக்கிளைப் பொறுத்தவரையில், மக்கள் வேறு வழியில்லாமல் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பஸ்களில் போக முடியாது. பஸ்ஸுக்காகக் கொடுக்கின்ற கட்டணம் அதிகம், அதற்காகக் காத்திருந்து போக முடியாது என்ற நிலைகளிலே உள்ள நடுத்தர வர்க்கத்தினர்தான் சைக்கிளைப் பயன்படுத்துகிறார்கள். பஸ் போகாத இடத்திலே உள்ளவர்களும் சைக்கிளை உபயோகப்படுத்துகிறார்கள். இப்போது சைக்கிளில் இரண்டு பேர் போகலாம் என்ற வாய்ப்பு வந்த பிறகு, பல இடங்களில் கணவனும், மனைவியும் காலையில் புறப்பட்டு, கணவன் மனைவியை அலுவலகத்திலோ அல்லது வேறு இடங்களிலோ விட்டுவிட்டு தன் அலுவலகத்திற்குப் போவதும், பிறகு மாலையில் இரண்டு பேரும் திரும்பவும் வீட்டுக்கு வந்து சேர்வதும் என்ற நிலையில் இருப்பவர்களுக்கு சைக்கிள் துணையாக இருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் தங்கள் சைக்கிளில் மோட்டார்களைப் பொருத்தியிருக்கிறார்கள் என்றால், அதற்கு வரி விதிப்பது என்பது தேவையற்ற ஒன்று. இதனால் கணிசமான வருவாய்கூட அரசுக்கு வராது. அதற்கு மாறாக இந்த வரியை வசூலிக்க எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு ஆகின்ற செலவுகளுக்கு ஈடாக வருமானம் வருமா என்றால், வராது. ஏழைகள் பயன்படுத்துகிற பொருள்கள் எங்கே என்று

தேடிப் பார்த்து, அதற்கு வரி விதிப்பது என்ற வேகம் அமைச்சர் அவர்களுக்கும், இந்தத் துறைக்கும் எப்படி வருகிறதோ எனக்குத் தெரியவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் மனிதாபிமான உணர்வோடு சைக்கிள்களுக்கும், சைக்கிள் ரிக்ஷாக்களுக்கும் பொருத்தப்படுகின்ற மோட்டார்களுக்கு விதிக்கின்ற வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும்

(மூற்பகல் 10-40)

என்று கேட்டுக்கொள்கிறேன். 'பிளாஸ்டிக் ஆர்டிகில்ஸ்' பிளாஸ்டிக் சாமான்களுக்கு பலமுனை வரி விதிப்பைக் கொண்டு வந்திருக்கிறார்கள் இன்றைக்கு பிளாஸ்டிக் சாமான்களை நடுத்தர மக்கள்தான் பயன்படுத்துகிறார்கள். எந்தப் பொருளாக இருந்தாலும் வீட்டிலே பயன்படுத்துகின்ற நிலைமை இருக்கின்றது. இன்னும் கொஞ்சம் சொல்லப் போனால், அவை சுலபமாகக் கிடைக்கக்கூடிய அளவிலே இருக்கின்றன. இந்த மல்டி-பாயிண்ட் (Multi-Point) வரி விதிப்பின் காரணமாக அதன் விலைகள் கூடுதல் ஆகிவிடுகின்றன. ஹோல்சேலரிடமிருந்து ரீடெய்லர்கள் வாங்குகிறார்கள். ரீடெய்லர்களிடமிருந்து மக்கள் வாங்குகிறார்கள். சென்னையிலே இருப்பவர்களிடமிருந்து பெரிய நகரங்களிலே இருப்பவர்கள் வாங்கிக்கொள்ள முடியும். சென்னையிலிருந்து இந்தப் பொருள்கள் கிராமங்களுக்குப் போகின்றன. இப்படிப் போகும்போது பலமுனை வரி என்ற அளவில், 8 சதவீதம் என்றால், ஏறத்தாழ 24 பர்சென்ட் விலை அதிகமாகிறது. அது ஏழைகள் தலைப்பளுவாக ஆகிவிடுகிறது. ஒருவேளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லலாம். அங்கேயெல்லாம் கணக்குக் காட்டுகிறார்களா என்று சொல்லலாம். அவர்கள் காட்டாமல் இருக்கலாம். அந்த வியாபாரிகளைப் பாதிக்கின்ற அளவுக்கு இந்தத் துறையினுடைய அதிகாரிகள் இதைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். கணக்குக் காட்டாமலேயே 'செட்டில்' பண்ணக்கூடிய வழிகளும் இருக்கின்றன. இப்போது போட்டிருப்பது அவர்களுக்கு வாய்ப்பளிப்பதாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். பிளாஸ்டிக் சாமான்களை ஏழைகள் பயன்படுத்துவதால், அந்த வரிவிதிப்பைத் தவிர்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, பெரிய ஓட்டல்களுக்கு வரி விதிப்பு இல்லாமல் இருந்திருந்தால் நல்லது. அதற்கான வரி விதிப்பை நியாயப்படுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் ஆளும் கட்சி அங்கத்தினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள்கூட அவருடைய கருத்தைத் தெரிவித்தார்கள். ஆசிரியர்கள்



வீட்டிலே கோபித்துக் கொண்டு பள்ளிக்கூடத்துக்கு வந்தால், முன்னதாக வீட்டில் மனைவியோடு சண்டை போட்டுக் கொண்டு வந்தால், வகுப்பிலே உள்ள பையன் ஒருவனுக்காவது அன்று அடி இருக்கும். பெரிய வகுப்பாக இருந்தால், கொஞ்சம் வசைச் சொற்கள் இருக்கும். அதுபோல இருக்கிறது. " ஓட்டல் சோழா " போன்றவற்றிற்கு, எவ்வளவு வரி வேண்டுமானாலும் போடுங்கள். அவர்கள் வரி கட்ட வேண்டுமென்பதற்காக வரி போடும்போது, மற்ற சிறிய ஓட்டல்காரர்களும் பாதிக்கப்படுகிறார்கள். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், அரசாங்கத்திற்குச் சொந்தமான " டூரிஸ்ட் ஓட்டல்களும், ஓம்ஸும் " அந்த முறையிலே பாதிக்கப்படுகின்றன. அங்கேயும் அந்த வரி விதிப்பு இருந்துகொண்டிருக்கிறது. அவை பெரிய ஓட்டல்கள் என்பதல்ல. இப்படி வரி விதிப்பதன் மூலம் அது எல்லோருக்கும் வந்துவிடுகிறது. பெரியவர்களை வரி விதிப்பிலே கொண்டு வர வேண்டுமென்பதற்காக திட்டம் கொண்டு வரும்போது, அது சிறியவர்களையும் பாதிக்கிறது. அரசாங்கம் வரி விதிப்பதிலே யாரும் குறுக்கே நிற்க முடியாது. அரசாங்கம் வருவாய் இல்லாமல் ஆட்சி நடத்த முடியாது. வருவாயை எங்கே தேடுவது என்ற திறமை மிக்கவர்தான் நமது அமைச்சர் அவர்கள். ஏழைகளுக்கும் கொஞ்சம் வரி விதித்துப் பார்ப்போம். எதிர்க் கட்சியில் கேட்கும்போது விட்டுக்கொடுப்போம் என்ற அளவில் கொண்டு வந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே இந்த வரி விதிப்பை மாற்றி ஏழை மக்களுக்கு நன்மை செய்கின்ற அளவுக்கு அவர் பொறுப்பினை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் 15—6—1981-ல் ஒரு அறிவிப்பின் மூலம் இந்த வரி விதிப்பை அமல்படுத்தி இந்த முறையில் இந்த நாட்டில் வரி விதிப்பை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு இப்போது இந்த அவையினுடைய ஒப்புதலுக்கு இதை வைத்திருக்கிறார்கள். உண்மையில் அரசாங்கம் நல்ல திட்டங்களை மேற்கொள்கின்றபோது, அவர்களுடைய நிதி ஆதாரம் உயர வேண்டுமென்ற கொள்கைக்கு மாறுபட்டவர்கள் அல்ல நாங்கள். ஆனால் நிதி ஆதாரத்தைத் திரட்டுகின்றபோது, நிதி உள்ள இடம் போய் நிதி எடுக்க வேண்டுமே தவிர, நிதி இல்லாத, அன்றாட வாழ்க்கைக்கே போராடிக் கொண்டிருக்கக் கூடிய நடுத்தர, கடைநிலையில் வாழ்கின்ற மக்கள் மத்தியில் வரி விதிப்பு போகுமானால், அது சமுதாய நீதிக்கு மாறுபட்டதாக இருக்கும் என்பதையும், அரசினுடைய வரி விதிப்பின் எதிர் விளைவுகள் எப்படியிருக்கும் என்பதையும் தொடர்ந்து சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1982 பிப்ரவரி 19

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற காரண நோக்க விளக்கத்திலே, முதல் பாராவிலே சொல்லியிருக்கிறார்கள். ஒருமுனை வரி விதிப்பின் மூலம் வரி ஏய்ப்பைத் தடுக்கலாம் என்றும், 4-வது பாராவிலே பலமுறை வரி விதிப்பின் மூலம் வருவாய் இழப்பைத் தவிர்க்கலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஒரு மாதத்திற்குப் பின்னால் சொன்னாலும் பரவாயில்லை. மற்றவர்கள் மறந்துவிடுவார்கள் என்று சொல்லலாம். நான்காவது பாராவிலே சொல்லியிருக்கிறார்கள். 'எழுதுபொருள்கள், மெழுகுவர்த்திகள், பிளாஸ்டிக் பொருட்கள் முதலியவற்றை முதல் விவர அட்டவணையிலிருந்து நீக்குதல், அவற்றை வர்த்தகர்கள் செய்து கொண்ட முறையீட்டிற்கு மதிப்பளிக்கும் வண்ணமும், வருவாய் இழப்பைத் தவிர்க்கும் பொருட்டும் 1—7—1981 ஆம் நாளிலிருந்து 'பலமுனை விற்பனை வரி விதிப்பின்கீழ்க் கொண்டு வருதல்' என்று இருக்கிறது.

இந்த இரண்டிலும் வரி ஏய்ப்பு நடக்கிறது. அரசாலே அதைத் தடுக்க முடியவில்லை. பாரா 1-ல் சொல்லப்பட்டிருக்கிறது. 'கார்பன் பிளாக்' என்னும் பெட்ரோ-கெமிகல் பொருளை 8—7—1981 ஆம் நாளிலிருந்து 8 சதவிகித ஒருமுனை வரி விதிப்பின் கீழ் கொண்டுவருதல் (இதற்கு முன்னர் பல்வேறு விதங்களில் வரி விதிக்கப்பட்டது; இதனால் அரசுக்கு வரவேண்டிய வருவாயில் இழப்பு ஏற்பட்டது). இப்படி ஒரு முனையில் வரி விதிப்பு இருந்தபோதும் வருவாய் இழப்பு ஏற்பட்டது. அதிலிருந்து பல முனை வரி விதிப்புக்கு வரும்போதும் வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். வரி விதிப்பு என்று சொல்லும்போது, நாம் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். அது சாதாரண மக்களைப் பாதிக்கக் கூடாது. இன்றைய விலைவாசி ஏற்றம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பது நம்முடைய கற்பனைக்குக்கூட எட்டவில்லை. கம்பன்கூட கவிதை பாட முடியாத அளவுக்கு விலைவாசி ஏற்றம் இருந்து கொண்டிருக்கிறது. அன்று 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கம்பன் கூட அதைப் பற்றிப் பாட முடியாது. அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. வீட்டு வாடகை நகரங்களில் ஏறிக்கொண்டிருக்கிறது. கிராமங்களிலே கூட வீட்டு வாடகை அட்வான்ஸ் கொடுக்க வேண்டும் என்ற நிலைமைகள் இருக்கின்றன. இந்த நிலையில் சாதாரண மக்கள் கூட வாழ முடியாத அளவுக்கு நிலைமை போய்க் கொண்டிருக்கிறது. அவர்கள் எல்லாம் ஏதோ ஒரு பழம் பாரம்பரியத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வீட்டிலே பட்டினி கிடந்தாலும், வெளியில் நிம்மதியாக இருப்பது போலத் தெரிகிறார்கள், வறுமையில் செம்மை என்பார்கள். அதுபோல வாழ்ந்து



1982 பிப்ரவரி 19] [திரு. ம. சங்கரலிங்கம்]

கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையில் உள்ள ஏழை மக்களை இந்த வரி விதிப்பு பாதிக்கும் என்பதைப் பார்க்கிறோம். எழுதுபொருட்கள், மெழுகுவர்த்திகள் போன்ற பொருட்களுக்கு சிங்கிள் பாயிண்டிலிருந்து, பலமுனை வரிக்கு வந்திருக்கிறார்கள். நாம் ஒன்று பார்க்கிறோம். ஒருமுனை வரி இருக்கின்ற இடத்திலே பல்முனை வரியைப் போட்டு விடுகிறோம். அதற்குப் பிறகு வியாபாரிகள் நுகர்வோர் மீது வரி போடாமல் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறோம். அதிலே எந்தவிதமான நன்மையும் இல்லை. உற்பத்தி செய்கின்ற இடத்திலேயே வரி விதிக்கப்பட்டு விலையில் சேர்ந்து வருகிறது. அப்படி வரி போட்டுவிடுகிறார்கள். அதனால் சிறு வியாபாரிகள், மொத்த வியாபாரிகள், ஊருக்கு ஊர் வியாபாரம் செய்பவர்கள், அவர்களுக்கு ஏற்ப விலையை ஏற்ற முடியாத நிலையில் இருக்கிறார்கள். அடுத்து இந்த விற்பனை வரி அதிகாரிகள் ஒவ்வொரு இடத்திலும் போய்ப் பார்க்க வேண்டும். இது ஒரு "டுப்ளிகேஷன் ஆஃப் ஒர்க்' என்று ஆகிவிடும். ஒவ்வொரு இடத்திலும் போய் பில்களைப் பார்க்க வேண்டும். எழுதுபொருட்கள், மெழுகுவர்த்திகள் ஆகியவற்றை ஒருமுனை வரியிலிருந்து பலமுனை வரிக்கு ஏன் கொண்டுவர வேண்டும்? ஒவ்வொரு இடத்திலும் உள்ள அந்த அதிகாரிகளுக்கு வருமானம் கிடைக்க வழி செய்வது போல இருக்கிறது. விற்பனை வரியின் காரணமாக கமர்சியல் டாக்ஸ் ஆபிசர்களும், சேல்ஸ் டாக்ஸ் ஆபிசர்களும் வருமானம் பண்ணிக்கொள்ள வேண்டும் போல் இருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் கேட்கும்போது, ஒவ்வொரு கட்டத்திலும் எங்கே 'பில்' என்று அதிகாரி கேட்பார். அவர்கள் 'பில்', இல்லாமல் டிரான்ஸாக்ஷன் பண்ணுகிறோம் என்றால், 'எனக்குள்ளதைக் கொடு' என்று அதிகாரி கேட்பார். இந்த நிலைமைகள் தான் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை

(முழக்கங்கள் 10-50)

பகிரங்கமாகச் சொல்லுவதற்கு மன்னிக்க வேண்டும். நாட்டிலே நடப்பதை அப்படியே சொல்லுகிறேன். இருப்பதை மாற்றி ஒருமுனை வரி கொண்டு வருகிறோம். அதிலிருந்து ஏன் பின்னால் போகிறார்கள் என்பது புரியவில்லை. எழுதுபொருள்களுக்கு வரியை அப்படி மாற்றி யிருக்கிறார்கள். எல்லோருக்கும் இப்போது கல்வி கொடுக்கிறோம். இது எல்லோருக்கும் தேவையான ஒன்று. மெழுகுவர்த்திகளுக்கு அப்படி மாற்றி யிருக்கிறோம். இப்போது மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. 'அன் அபிஷியல் ஷெட்டிங்' இருக்கிறது. அறிவிப்பு இல்லாமல் மின்சார

வெட்டு இருந்து கொண்டிருக்கிறதென்று எல்லோரும் சொல்லுகிறார்கள். இந்த நிலையில் மெழுகுவர்த்திதான் பாதுகாப்பு தர வேண்டும். அதற்கும் வரி போட்டிருக்கிறார்கள். அடுத்து, பிளாஸ்டிக் பொருள்கள். பணக்காரர்கள் வீட்டில் பித்தளை, செம்புப் பாத்திரங்கள் இருக்கும், ஆனால் ஏழைகள் வீட்டில் மண் சட்டிதான் இருக்கும். அந்த நிலை மாறியிருக்கிறது. பிளாஸ்டிக் சாமான்கள் நடுத்தர மக்களுக்கும் ஏழை மக்களுக்கும் அதிக உதவியாக இருக்கின்றன. இதற்குப் பலமுனை வரி போட்டிருக்கிறார்கள். பலமுனை வரியால் அதிகமான ஏய்ப்பு ஏற்படுகிறது, தவறு அதிகமாகிறது, அதனால் புரட்சிகரமான திட்டமாக ஒருமுனை வரி கொண்டு வருகிறோமென்று சொல்லி, அரசு அதைக் கொண்டு வந்தது. அதிலிருந்து இப்போது ஏன் பின்னுக்கு வர வேண்டும்? நோட்டிபிகேஷன் போட்டு வரி விதிப்பில் பெரிய மாற்றம் கொண்டு வரத் தேவை என்ன என்பது புரியவில்லை. பெட்ரோ-கெமிகல் பொருளான கார்பன் பிளாக்கிற்கு 8 சதவிகிதம் சிங்கிள் பாயின்ட் டாக்ஸ் என்று ஆக்கியிருக்கிறார்கள். ஒருமுனை வரியாக்குவது சரி. ஆனால் இதன் மூலம் பல தொழில்கள் பாதிக்கப்படுகின்றன. இது பல சிறு தொழில்களுக்குப் பயன்படுகிறது. எனவே 8 சதவிகிதம் வரி என்பதை 6 சதவிகிதம் என்று ஆக்கலாம். நம்முடைய நாட்டில் சிறு தொழில்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. சிறு தொழில்களுக்கு விற்பனை வரியை 10 வருடங்களுக்கு ரத்து செய்ய வேண்டும். பாண்டிச்சேரியில் 5 லட்சத்திற்குக் கீழே, 10 லட்சத்திற்குக் கீழே என்று இலக்கு வைத்திருக்கிறார்கள் சிறு தொழில்களுக்கு. அங்கே உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு 5 வருடங்களுக்கு விற்பனை வரி கிடையாது. இதற்கு முன்னாலேயேகூடச் சொன்னேன். அங்கே ஒரு சேர் 100 ரூபாய்க்குக் கொடுத்தால், கடலூரில் அதன் விலை 110 ரூபாய். 10 சதவீதம் டாக்ஸ் கொடுக்க வேண்டும். இந்த நிலையில் அங்கே பொருள்கள் உற்பத்தி அதிகமாகுமா? இங்கே பொருள்கள் உற்பத்தி அதிகமாகுமா? தமிழ் நாட்டில் தொழிற்சாலைகள் அழிந்து கொண்டு போகின்றன. அதன் மூலம் வேலை வாய்ப்பை இழக்கிறோம். எனவே, இதற்கெல்லாம் விதிவிலக்கு கொடுக்கும் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும்.

இராஜாஜி அவர்கள் மது விலக்கை அமல்படுத்தினார்கள். அதனால் ஏற்படும் இழப்பைச் சரிக்கட்ட மாற்று ஏற்பாடாக விற்பனை வரியைக் கொண்டு வந்தார்கள். இப்போது மதுவிலக்கை, தளர்த்துகிறோமென்ற



பெயரில், ரத்து செய்து, ஊருக்கு ஊர் 3 கடைகளைத் திறக்கச் சொல்லி, அதன் மூலம் கோடி கோடியாக வருவாய் வருமென்று எதிர்பார்க்கிறார்கள். அதற்குப் பிறகு இது ஏன்? எனவே வரி விதிப்பிலே அரசாங்கம் கையாண்டுள்ள முறையைக் கண்டிக்கிறேன், எதிர்க்கிறேன். குறிப்பாக எனக்கு முன்னாலே பேசிய மார்க்சிஸ்ட் கட்சித் தலைவரும், காங்கிரஸ் கட்சித் தலைவரும் எடுத்துச் சொன்னது போன்று, சைக்கிள் ரிக்ஷாவில் பொருத்தப்படும் மோட்டாருக்கு வரி போட்டிருக்கிறார்கள்; இன்றையதினம் அம்பாசிடர் காரில் போனவர்கள் மாரிஸ் மைனர், ஸ்டேன்டர்ட் காரில் செல்லுகிறார்கள். ஸ்டேன்டர்ட் காரில் சென்றவர்கள் மோட்டார் சைக்கிளில் வருகிறார்கள். மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிளில் வருகிறார்கள். கடைசியில் சைக்கிளில் வருகிறவன் உருளப் போகிறான். இந்த நிலையிலே நாடு போய்க் கொண்டிருக்கிறது. சைக்கிளுக்குப் பொருத்தும் ½ ஹார்ஸ் பவர் மோட்டாருக்கு வரி போட்டிருக்கிறார்கள். அதற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும். நோட்டிபிகேஷன் போட்டதால், மக்களின் கருத்தை அறியும் இடத்தை விட்டுப் போய், கொஞ்சம் உயர்ந்த இடத்தில் உட்கார்ந்து கொஞ்ச நாள் ஆகிறது. சாதாரண சைக்கிளில் போகிறவனைப் பார்த்து எவ்வளவு காலமாயிற்று, மோட்டார் சைக்கிளில் போகிறவனைப் பார்த்து எவ்வளவு காலமாயிற்று, இப்போது நீங்கள் போகிற காரைவிட பெரிய காரில் போகிறவர்களைப் பார்க்கிறீர்கள். இந்த நிலையில்லாமல், சைக்கிளுக்குப் பொருத்தும் மோட்டாருக்கு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நோய்வாய்ப்பட்ட மக்கள், மருத்துவ மனை செல்ல ரிக்ஷாக்களில் செல்லுவார்கள். நடக்க முடியாதவர்கள் அதைப் பயன்படுத்துகிறார்கள். அந்த வண்டிகளுக்குப் பொருத்தும் மோட்டார்களுக்கு வரி வாங்க வேண்டுமா? பணக்காரர்களுக்கு வரி போடுங்கள். கேட்கவில்லை. உணவுப் பொருள்களுக்குப் போடாமல் வேறு ஏதாவது பொருள்களுக்கு வரி போடலாம். அப்படி வேறு இனம் எங்கே இருக்கிறதென்று பார்க்க வேண்டும். வரியைக் கொடுக்கிறவர்கள் சக்தி வாய்ந்தவர்கள் என்று சொன்னார்கள். பணக்காரர்கள் சாப்பிடுவதாக இருந்தாலும், அந்த உணவுப் பொருள்களுக்குப் போடாதீர்கள். அவர்கள் உபயோகிக்கும் வேறு பொருள்களுக்குப் போடுங்கள். சாப்பாட்டுக்கு வரி போடுவதை, இட்டிலிக்கு வரி போடுவதை மாற்றி, அந்த ஓட்டலிலே வேறு ஒரு பொருளைக் கண்டுபிடித்து வரி போட அரசு முனைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வரி விதிப்புக் கொள்கையில், பழமையான

மேற்கத்திய நாடுகளில் உள்ள முதலாளித்துவ மனம் கொண்ட அரசுகளைப் பின்பற்றாமல், சமதர்மக் கருத்துள்ள நாடுகளிலுள்ள கொள்கையைப் பின்பற்ற வேண்டும். அமைச்சர்கள் வெளி நாடுகளுக்குப் போய் பணத்தைச் செலவு செய்யக்கூடாதென்று தான் நாங்கள் சொல்லுவோம். இருந்தாலும் வருவாய்த் துறை அமைச்சரவர்கள் ரஷ்ய நாட்டுக்குச் சென்று, அங்கேயுள்ள முறைகளை அறிந்து, வரி விதிப்புகளை இங்கே செய்ய வேண்டுமென்று கேட்டு, அரசின் தற்போதைய வரி விதிப்புக் கொள்கையை எதிர்க்கிறேன் என்று சொல்லி, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்ட முன்வடிவு பற்றி தங்களுடைய ஆழ்ந்த கருத்துக்களை மிக அதிகமாகச் சிந்தித்து இங்கே பேசியிருக்கிறார்கள். மிக அதிகமாகச் சிந்தித்துப் பேசியிருக்கிறார்கள் என்பதற்குக் காரணம், சட்ட முன்வடிவைப் பார்த்த உடனேயே வரி போட்டு விட்டார்கள் என்று பேச முடியாத நிலைமைகள் இருப்பதால் தான், இதிலே ஏதோ பேச வேண்டுமென்பதற்காகத் தேடி, துருவிப் பார்த்து, தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொல்கிறபோது ஒன்றைச் சொன்னார்கள். எங்கே வரி போட வேண்டுமோ, அங்கே வரி போட வேண்டும், எங்கே குறைக்க வேண்டுமோ அங்கே குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள். வரியைப் போடுகிறபோதும், வரியைக் குறைக்கிறபோதும் ஒரு அரசு எதைப் பின்பற்ற வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். வரியைப் போடுகிறபோது, பெரும்பாலான மக்கள் பாதிக்கப்படாத அளவிற்கும், வரியைத் தாங்கக்கூடிய மக்கள் மீது வரியைப் போடும்போது, அந்த எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கும் வகையிலும் இருக்க வேண்டுமென்றும், வரியைக் கொடுக்கிறவர்கள் மிகக் குறைவாக இருக்க வேண்டுமென்றும், வரியைத் தள்ளிக் கொடுக்கும்போது லட்சக்கணக்கான மக்கள் சமுதாயத்தில் வாழும் பெரும்பாலான மக்கள் நன்மை அடையத் தக்க வகையில் இருக்க வேண்டுமென்றும் கருத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தான் இந்த அரசு இயங்கி வருகிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



* **திரு. க. இராமமூர்த்தி :** பேரறிஞர் அண்ணா அவர்கள் 'டேப் தி ரிச் அண்ட் பேட் தி பூர்' (Tap the rich and pat the poor) என்றுதான் சொன்னார்கள். அதுதான் அவருடைய வரி விதிப்புக் கொள்கை என்று நிதிநிலை அறிக்கையை முதன்முதலில் வெளியிட்டபோது சொன்னார்கள். ஆகையால் இப்போது அமைச்சரவர்கள் அண்ணாவின் பாதையிலிருந்து நழுவிப் போவதாகத் தெரிகிறது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அவர் சொன்னது, பணக்காரர்களுக்கு வரி போட வேண்டும், ஏழைகளுக்குப் போடக்கூடாது என்பதுதான். அதைத்தான் சொன்னேன். வரி போடும்போது பெரும்பாலானவர்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும்.

(முற்பகல் 11-00)

பெரும்பாலானவர்கள் பாதிக்கப்படவில்லை என்றால் சிறுபான்மையினர் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நான் விளக்கமாகச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். பொதுவாகத்தான் நான் அப்படிச் சொன்னேன். சைக்கிள் ரிக்ஷாவுக்கு வரியில்லை. ஆனால் ஒரு காரியத்தைச் செய்யும்போது, அதன் மூலம் பயனடைபவர்கள் அதிகமாக இருக்க வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று வரி போடுகிற முறைகளைப் பார்த்துவிட்டு வந்து இதையெல்லாம் செய்தால் நன்றாக இருக்கும் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அந்த அனுபவங்களையெல்லாம் நான் இங்கே சொல்வதாக இருந்தால், அதற்கு நேரம் போதாது. ரஷ்யா சென்று பார்த்திருக்கிறேன். அதற்கு நேர்மாறான நாடுகளையெல்லாம் சென்று பார்த்திருக்கிறேன். அது பற்றியெல்லாம் வேண்டுமானால் வாய்ப்பு வரும்போது, ஒரு கட்டுரையாக எல்லோருக்கும் தெரியும்படி வெளியிடுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

ஒன்றை நான் இங்கு சொல்லியாக வேண்டும். எங்கேயும் நாங்கள் புதிதாக வரியைக் கொண்டுவரவில்லை. இருக்கிற வரிகளில் சில மாற்றங்களைச் செய்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், இந்தச் சட்ட முன்வடிவு 22—8—1981 அன்று சட்ட மன்றப் பேரவையிலே கொண்டு வரப்பட்டது. அதிகமான சட்ட முன்வடிவுகள் இருந்த காரணத்தால், இது நிறைவேற்றப் படாமல் இன்றைக்கு மீண்டும் இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இரண்டு மூன்று காரியங்களை இங்கே சொன்னார்கள். மோட்டார் என்ஜினைப் பொருத்துவது, ஓட்டல்களுக்கு வரி போடுவது, மல்டி-பாயின்ட் வரி ஆகியவற்றைப்பற்றிச் சொன்னார்கள். பெரிய ஓட்டல்கள் என்று சொன்னால், வரிக்கு உட்படாமல் இருந்த பெரிய பெரிய ஓட்டல்களை வரி விதிப்புக்கு உட்படுத்தியிருக்கிறோம். பெரிய ஓட்டல்கள் என்று சொல்லும்போது, இந்திய அரசின் சுற்றுலாத் துறையால் ஸ்டார் ஓட்டல்கள் என்று அழைக்கப்படுகிற 5 ஸ்டார், 3 ஸ்டார், 2 ஸ்டார் ஓட்டல்கள் எல்லாம தப்பிக்கப் பார்த்தன. அந்த ஓட்டல்களையும் வரி விதிப்பிற்கு உட்படுத்தியிருக்கிறோம். அட்லான்டிக், சோழா, பிரசிடென்ட், சுதர்சன் இன்டர்நேஷனல், வி. ஜி. பி. கோல்டன் பீச், நீலகிரி தாஸ பிரகாஷ் இப்படி பல ஓட்டல்கள் தப்பித்து விடுகின்றன. இதற்கெல்லாம் இந்த அரசு வரி போடுகிறது என்று நான் சொன்னால், இங்கே இருக்கிற அத்தனை பேரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். இங்கே இருப்பவர்கள் எல்லாம் சாதாரண ஓட்டல்களுக்குச் சென்று சாப்பிடுகிறவர்கள் என்றுதான் நான் இன்னமும் நம்பிக் கொண்டிருக்கிறேன். சாதாரண ஓட்டல்கள் மீது வரி போட்டால், சட்டத்திற்கு மாறாகப் போடுவதாக எனக்குச் சுட்டிக்காட்டினால், கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பேன். ஆகவே வரி போடப்பட்டுள்ள ஓட்டல்கள் எல்லாம் பெரிய பெரிய ஓட்டல்கள் தான். இரண்டு, மூன்று உறுப்பினர்கள் சொன்ன பொதுவான கருத்துக்களுக்குச் சேர்த்தே பதில் சொல்லி விடுகிறேன். தனியாகச் சொல்ல வேண்டிய கருத்துக்களுக்கு தனியாகப் பதில் சொல்லிவிடுகிறேன். இங்கு மல்டி-பாயின்ட், சிங்கிள்-பாயின்ட் வரி விதிப்பு பற்றிச் சொன்னார்கள். அதை மாற்றியமைக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். மல்டி பாயின்ட்டிலிருந்து சிங்கிள் பாயின்ட்டுக்குக் கொண்டு வந்திருக்கிறேன். அப்படி நான் சொல்லும்போது மல்டி பாயின்ட் ஆக இருப்பது போகப் போக சிங்கிள் பாயின்ட் ஆக ஆகிறது என்று பொருள். இன்றைக்கு சில ஓட்டல்களில், மல்டி பாயின்ட் வரி இருப்பதால், அவர்கள் கணக்கு வைத்துக் கொள்வதில்லை. மல்டி பாயின்ட் என்றால் 50 ஆயிரம் ரூபாய் வரை என்றால், அவர்கள் கணக்கு வைக்க வேண்டியதில்லை. ஆனால் சிங்கிள் பாயின்ட் வரி என்று கொண்டு வருவதால், அவர்கள் கணக்கு வைத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். திருச்சி டிஸ்டிரிக்ட் மாஸ்டர் பிரின்டர்ஸ் அசோசியேஷன், தமிழ் நாடு மாஸ்டர் பிரின்டர்ஸ் அசோசியேஷன், சேலம் போன்றவர்களும், பிளாஸ்டிக் அசோசியேசன், விருதுநகர் சேம்பர் ஆப் காமர்ஸ் மற்றும் மதுரை இராமநாதபுரம் கேன்டில் அசோசியேஷன் இப்படிப்



பட்டவர்கள் எல்லாம் கொடுத்த மனுக்களின் அடிப்படையில், ஒருமுனை வரியை பலமுனை வரியாக மாற்றியிருக்கிறோம். ஆகவே, தேவையான இடங்களில் சில பொருள்களுக்கு ஒருமுனை வரியைப் பலமுனை வரியாகவும், பலமுனை வரியாக இருந்ததை சில பொருள்களுக்கு ஒருமுனை வரியாகவும் ஆக்கியிருக்கிறோமே தவிர, வேறு ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, கார்பன் பிளாக் பற்றிச் சொன்னார்கள். அங்கு ஒருமுனை, பலமுனை வரி என்ற பிரச்சினை வரவில்லை. அதிலேயிருக்கிற சில சங்கடங்களை மனதிலே வைத்து சங்கடங்களைத் தவிர்க்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். பெட்ரோலியம், ரசாயனப் பொருள்கள் தயாரிக்க 138-வது இனத்தின் கீழ் 8 சதவிகிதம் ஒருமுனை வரி விதிக்கப்படுகிறது. அதே பொருளை ரப்பர் போன்ற பொருள்களைத் தயாரிக்கப் பயன்படுத்தும்போது, 4 சதவிகிதம் ஒருமுனை வரி விதிக்கப்படுகிறது. இப்படி அரசுக்கு வருகின்ற இழப்புகளைத் தவிர்க்கத்தான் இந்த 'பில்' கொண்டுவரப்பட்டிருக்கிறது. சைக்கிள் ரிக்ஷா பற்றிச் சொல்லும்போது, ஒன்றைச் சொன்னார்கள்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வரி போடும்போது, "வியாபாரிகள் அதிகமாக வரி கொடுக்க வேண்டுமென்றால் கஷ்டப்படுகிறார்கள், ஆகவே அதுசம்பந்தமாக மனு கொடுத்திருக்கிறார்கள், சிங்கிள் பாயின்ட் டாக்ஸ் கேட்கிறார்கள், ஆகவே மாற்றியிருக்கிறோம்" என்று சொன்னார்கள். ஆனால் வியாபாரிகள் உண்மையிலேயே கன்ஸ்யூமர்களிடமிருந்து பல இடங்களில் வரியை விதித்து அதிகமாக வாங்கிக் கொள்கிறார்கள். விலைவாசி ஏறி கன்ஸ்யூமர்ஸ் கஷ்டப்படுவது குறித்து அவர்களுக்குக் கவலையே இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மல்டி-பாயின்ட் டாக்ஸ் பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். அப்படி நாங்கள் செய்வது என்றால், பல லட்சக்கணக்கில் வியாபாரம் செய்கின்ற பெரிய பெரிய வியாபாரிகளா அவர்கள் என்பதை முதலில் பார்க்க வேண்டும். குறைந்த அளவில் கேன்டில், பிளாஸ்டிக் போன்றவைகளை விற்கின்ற, 50 ஆயிரம், 25 ஆயிரம் ரூபாய்க்கு உட்பட்டு வியாபாரம் செய்கிற வியாபாரிகள் தான் அவர்கள். அவர்கள் கணக்கு வைக்க வேண்டிய தேவை இல்லை. ஆனால் எவ்வளவு பெரிய வியாபாரியாக இருந்தாலும் சரி அல்லது எவ்வளவு சிறிய வியாபாரியாக இருந்தாலும் சரி அல்லது 5 ரூபாய், 10 ரூபாய்க்கு விற்பனை

ஆனாலும் சரி, பிக்கின் பாயின்ட் டாக்ஸ் என்றால் அவசியம் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும். கூக்குரல் போடுகிறார்கள் என்றால், கூக்குரல் போடுகிற அளவுக்கு வலுப் பெற்றவர்கள் பெரிய வியாபாரிகள் என்று பொருள்.

சைக்கிள் ரிக்ஷா என்று வரும்போது, இன்றைக்கு அதற்குத் தேவைப்படும் மோட்டாரை வாங்குகிறார்கள். ஒரு மோட்டாரை கடைக்குச் சென்று வாங்குகிறார்கள் என்றால் அதைப் பிரித்துப் பார்க்க முடியாது.

(முற்பகல் 11-10)

சைக்கிள் வாங்குகிறோம் என்று சொல்லி மோட்டார் வாங்குகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னதும் சரி, திரு. நல்லசிவன் சொன்னதும் சரி, அதிலிருந்து அரசுக்கு அதிக லாபம் வரவில்லை. மோட்டார் வாங்குகிறார்களா, அல்லது மோட்டார் சைக்கிள் வாங்குகிறார்களா, இதிலே எது வாங்குகிறார்கள் என்ற கணக்கு பெரிய கடைகளுக்கு வருகிறது. அவர்கள் இவ்வளவு சைக்கிள்கள் விற்கிறோம் என்று கணக்கு வைத்திருக்கிறார்கள். அப்படி விற்றாலும் அதற்குரிய வரி வேண்டும் என்று இன்றைக்குப் போடப்பட்டிருக்கிறது. நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இதைச் செய்கிறோம். மற்றபடி இந்த அரசைப் பொறுத்தவரையில், புதிதாக வரி போட வேண்டும் என்ற எண்ணம் இல்லை. இப்போது எத்தனையோ பொருள்களுக்கு வரியைத் தள்ளிக் கொடுத்திருக்கிறோம். இதெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். இன்னும் இதுபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. 'அப்போது அதையெல்லாம் சொல்லலாம் என்று சொல்லி, இதை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பரிந்துரை எதுமில்லை



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : துணைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1981) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை.

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1981) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது

## 6. அரசின் தீர்மானம்.

### அலுவல் வரிசையில் மாற்றம் குறித்து.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"மேலவை விதி 21 (3)-ன் கீழ், இன்றைய நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள சட்ட முன்வடிவுகளில் இனம் 5-வதாக இருக்கும் சட்ட முன்வடிவை இனம் 2-க்கு முன்னதாக எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை :

"மேலவை விதி 21 (3)-ன் கீழ், இன்றைய நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள சட்ட முன்வடிவுகளில் இனம் 5-வதாக இருக்கும் சட்ட முன்வடிவை இனம் 2-க்கு முன்னதாக எடுத்துக்கொள்ள வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது

5. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(2) தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1982).

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1982) @ ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்,—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தச் சட்ட முன்வடிவை ஆதரிக்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவு, கடன் நிவாரணம் வழங்குவதைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே 1981 டிசம்பர் வரை இருந்ததை 1982 மார்ச் மாதம் வரைக்கும் 'எக்ஸ்டென்ட்' செய்யும் வகையில் கொண்டு வரப்பட்டிருக்கும் சட்ட முன்வடிவு. இன்னும் ஒரு மாத காலம் தான் இருக்கிறது. ஆகவே, 1982 ஜூன் மாதம் வரையிலும் இதை 'எக்ஸ்டென்ட்' செய்தால் நல்லது, ஒரு நான்கு மாத காலமாவது இதன் பயனைப் பெற வசதியாக இருக்கும். எவ்வளவு தான் 'எக்ஸ்டென்ட்' செய்தாலும், ஒவ்வொரு தடவையும் இப்படி 'எக்ஸ்டென்ட்' செய்யும்போது, நாம் பார்க்கிறோம், அதிகமான பேர் இந்தக் கடன் நிவாரணம் கோரி மனு செய்யவில்லை. இந்த நிலைமைகளைப் பார்க்கும்போது, நடைமுறையிலே இருக்கும் கஷ்டங்களையும் நாம் பார்க்க வேண்டும். இந்தச் சட்டத்தை எக்ஸ்டென்ட் செய்தாலும், விவசாயிகள் இதைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலையில் விவசாயிகள் இருந்து கஷ்டப்படுகிறார்கள்.

---

@ 167—ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப் பட்டுள்ளது.



ரூ. 4,800-க்குக் குறைவான வருட வருமானம் இருந்தால், இந்தச் சலுகையைப் பெறலாம் என்று முன்பு இருந்தது. ஆனால் போன தடவை கொண்டு வந்த ஒரு மசோதாவின் மூலமாக ரூ. 25,000 மதிப்புள்ள 'இம்மூவபிள் ப்ராப்பர்ட்டி' இருக்குமானால், அவர்களுக்கு இந்தக் கடன் நிவாரணம் இல்லை என்று கொண்டு வந்ததன் மூலமாக வருட வருமானம் 4,800 ரூபாய்க்குக் குறைவாகப் பெறுபவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு 25,000 ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்பு உள்ள 'இம்மூவபிள் ப்ராப்பர்ட்டி' இருக்குமானால், இந்தச் சலுகையைப் பெற முடியாத நிலை ஏற்பட்டது. கிராமங்களிலே இருக்கும் ஏழை விவசாயிகள் அவர்களுடைய பாம்பரைச் சொத்தாக ஒரு வீட்டை வைத்திருப்பார்கள். அது மிகவும் பழைய வீடாக இருக்கும். அதை வெள்ளை அடித்தே பல ஆண்டுகளாகியிருக்கும். திரும்பவும் அதை வெள்ளை அடிக்கக்கூட அவர்களிடம் காசு இருக்காது. அப்படிப்பட்ட நிலையில் இருப்பவர்களுக்கும் இந்த நிவாரணம் இல்லை என்ற நிலை இப்போது இருக்கிறது. ஒரு ஏக்கர் புஞ்சை நிலம் இருந்தால் கூட, பல அதிகாரிகள் அது ரூ. 25 ஆயிரம் பெறும் என்று சர்ட்டிபிகேட் கொடுத்து அந்த ஏழை விவசாயிகளுக்கு இந்த நிவாரணம் கிடைக்க வழியில்லாமல் செய்கிறார்கள். ஆகவே, 25 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள வீடோ, நிலமோ இருக்கும் ஒருவருக்கு இந்த உதவி கிடைக்காது. இப்படி இந்தத் திருத்தம் இருக்கும் காரணத்தால்தான், இந்த நிவாரணத்தைப் பயன்படுத்திக்கொள்ள அதிக அளவில் யாரும் முன்வரவில்லை. இன்றைக்கு உண்மையிலேயே ரூ. 25 ஆயிரம் பெறுமானம் இல்லாத நிலமோ, வீடோ வைத்திருந்தாலும், அதிகாரிகள் வேறுவிதமாக சர்ட்டிபிகேட் கொடுத்து அவர்களுக்கு அந்த உதவி கிடைக்க முடியாமல் செய்துவிடுகிறார்கள். இப்படிச் செய்வதன் மூலமாக இப்போது பலவிதமான தவறுகள் நடைபெறுகின்றன. லேவாதேவிக்காரர்கள் அதிகாரிகளிடம் சென்று இன்னாருக்கு இருக்கும் சொத்தின் மதிப்பு ரூ. 25 ஆயிரத்திற்கு மேல் இருக்கும், அல்லது அவருக்கு இருக்கும் வீட்டின் மதிப்பு ரூ. 25 ஆயிரத்திற்கு மேல் இருக்கும் என்று விவரம் கொடுக்கும் அளவுக்கு நிலைமைகளை ஏற்படுத்தி, அந்த அதிகாரிகளோடு ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளும் நிலைமை தான் இருக்கிறது. தாசில்தார்கள் சர்ட்டிபிகேட்களை இவ்வாறு கொடுப்பதால், இந்த விவசாயிகள் இந்த உதவியைப் பெற முடியாத நிலை இருக்கிறது. மேலும், 4,800 ரூபாய்க்கும் குறைவான வருமானம் உள்ளவர் என்ற சர்ட்டிபிகேட்டும் தாசில்தார் தான் கொடுக்க வேண்டும். சர்ட்டிபிகேட் வாங்குவதற்காக தாசில்தாரிடம் போகும்போது, சர்ட்டிபிகேட்

பெற உரிமையுள்ளவர்களுக்கும் ' சர்ட்டிபிகேட் கொடுக்கக்கூடாது " என்று லேவாதேவிக்காரர்கள் வருகிறார்கள். இந்த உதவி வேண்டும் என்று மனு போடும்போது, அந்த மனுவை 'டிஸ்போஸ்' பண்ணும் அதிகாரிகள் இந்தவிதமான பழக்கத்திற்கு உட்பட்டவர்களாக இருப்பதன் காரணமாகத் தான், இந்தச் சட்டத்தின் அடிப்படையில் நிவாரணம் கோரி, அதிகமான அளவிலே மனுக்கள் வரவில்லை. ' நாங்கள் நிவாரணம் அளித்திருக்கிறோம், அப்படியிருந்தும் அதிகமான பேர்கள் வரவில்லையே, அதனாலேதான் மீண்டும் இதை எக்ஸ்டென்ட் செய்திருக்கிறோம்' என்று அரசு சொன்னாலும் நடைமுறையிலே நடப்பது இதுதான். அதிகாரிகளும் லேவாதேவிக்காரர்களும் தங்களுக்குள் உடன்படிக்கை செய்து கொள்கிறார்கள். நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசுக்கு யோசனையாகச் சொல்ல விரும்புகிறேன். ஒன்று, 25 ஆயிரம் ரூபாய் பெறுமானம் உள்ள 'இம்மூவபள் ப்ராப்பர்ட்டி' வைத்திருப்பவர்களுக்கு இந்த நிவாரணம் கிடையாது என்று இருக்கும் ஷரத்தை எடுக்க வேண்டும். அதை ரத்து செய்ய வேண்டும். இல்லாவிட்டால் 4,800 ரூபாய் வருமானம் இல்லையென்று சர்ட்டிபிகேட் மட்டும் இருந்தால் போதும் என்றிருக்க வேண்டும். அப்படி சர்ட்டிபிகேட் கொடுக்கும்போது, அந்தப் பொறுப்பை அதிகாரிகளிடம் விட்டுவிடாமல், 'எலக்டட் ரெப்ரசன்டேட்டிவ்ஸ்' அடங்கிய ஆங்காங்கே இருக்கும் பஞ்சாயத்துக்கள், முனிசிப்பாலிட்டி, பஞ்சாயத்து யூனியன் உறுப்பினர்கள் போன்றவர்களை 'அசோசியேட்' பண்ணக்கூடிய ஒரு அமைப்பின் மூலமாக இதைச் செய்யும் நிலைமை வர வேண்டும். அதிகாரிகள் செய்யும்போது தான் தவறு செய்வதற்கு இடம் ஏற்படுகிறது, குற்றச்சாட்டும் வருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மக்களுக்கு பதில் சொல்லக்கூடிய நிலையிலே இருப்பவர்கள். ஆகவே, அந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளையும் 'அசோசியேட்' செய்து, அந்த முறையிலே இந்த சர்ட்டிபிகேட் கொடுப்பதற்கு ஒரு ஏற்பாடு செய்வதன் மூலமாக, நாம் எதிர்பார்க்கும் அந்தப் பாதுகாப்பைக் கொடுக்கலாம். இந்த இரண்டு பாதுகாப்பையும் கொடுத்தால்தான், உண்மையிலேயே ஏழைகளுக்கு இந்தச் சட்டத்தின் மூலம் நிவாரணம் கிடைக்கும். அப்படிச் செய்தால், நிறையப் பேர்கள் மனு போடுவார்கள். அப்படிச் செய்யாவிட்டால், இந்தச் சட்டத்தை அரசு எவ்வளவுதான் 'எக்ஸ்டென்ட்' செய்தாலும், யாரும் உதவி கேட்டு மனு செய்ய முன்வர மாட்டார்கள். கிராமப்புறங்களிலே தாலுக்காக்களிலே இந்தச் சட்டம் எப்படிச் செயல்படுகிறது என்று அனுபவத்தின் மூலமாகப் பார்த்துத்தான், நான் இதைச் சொல்கிறேன். ஆகவே, இந்தக் கருத்தை எடுக்க வேண்டும்.



(மாற்றுத் தலைவர் திரு. எ. ஜே. தாஸ் தலைமை)

(முற்பகல் 11-20)

* திரு. க. இராமமூர்த்தி : மாற்றுத் தலைவர் அவர்களே, கடன் நிவாரணச் சட்ட முன்வடிவின் மீது சில கருத்துக்களைத் தெரிவிக்கிற வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கத்தையும், அவசியத்தையும் நான் வரவேற்பதோடு, என்னுடைய ஆதரவையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் குறிப்பிட்டபடி, சென்ற முறையே இந்தச் சட்ட முன்வடிவு நம் அவை முன் வந்தபோது, நான் ஒரு கருத்தைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இந்தச் சட்டத்தின் அடிப்படையில் பலனை அனுபவிக்க விரும்புகிறவர்களின் சொத்து மதிப்பு என்று வருகிறபோது, அவர்கள் குடியிருக்கும் வீட்டிற்கு மதிப்பு அதிகமாக இருந்தால், அதற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று சென்ற முறையே நான் அழுத்தந்திருத்தமாகக் கூறினேன். காரணம், பல இடங்களில், குடியிருக்கும் வீடுகள் என்பவை பலருக்கும் பரம்பரையாக வருகின்றன. அவர்கள் குடியிருக்கும் அவர்களுடைய வீடு பெரிதாக இருப்பதாலேயே, அவர்கள் எல்லாம் வறுமையைத் தாண்டிவிட்டவர்கள் என்று பொருளல்ல. கடனாளியாக இருந்தாலும், வீட்டை விற்க முடியாமல் அல்லது வீட்டை விற்றாலும் அதற்கு உண்மையான, நியாயமான விலை கிடைக்காது என்ற நிலையில் அல்லது சமுதாய அந்தஸ்து காரணமாக, ஒருவர் தாம் எவ்வளவுதான் வறுமையில் இருந்தாலும், வீட்டை விட்டு வெளியே வருவதில்லை என்ற கொள்கையில் இருப்பதால், அவர்களெல்லாம் இன்னும் அந்த வீடுகளிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் மதிப்பு அதிகமான வீடுகளில் வாழ்கிற காரணத்தாலேயே, கடன்காரர்களாக இருப்பதற்குத் தகுதியற்றவர்கள் என்று முடிவுக்கு வருவது சரியல்ல என்பதை நான் சென்ற முறையே இந்த அவையில் தெரிவித்திருக்கிறேன். இம்முறையும் அதே கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் தெரிவித்திருப்பதற்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வரும் அரசின் நோக்கம் உயர்ந்ததாக இருக்கிறது. உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்களுக்குத் துணை புரிய

அவர்களுக்கு உதவி செய்திட வேண்டும் என்ற அடிப்படையில் வேண்டும், நிறைவேற்றப்படுகின்றன. ஆனால் நடைமுறையில் தான் சட்டங்கள் அப்படி நடக்கிறதா என்றால், இல்லை என்பதை மிகுந்த வேதனையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதைச் செயல்படுத்தும் நிர்வாகம், அரசாங்கத்தின் நோக்கத்திற்கும், விருப்பத்திற்கும் ஏற்ப இதனைச் செயல்படுத்துவதில்லை

தமிழகத்திலே இன்றையதினம் தங்கமே கிடையாது. பெரும்பாலான ஏழை எளிய மக்களிடத்திலேயிருந்த தங்கம் மார்வாடிகளின் கடைகளுக்கு அடகுப் பொருளாகச் சென்று அங்கேயிருந்து அவை திருப்பிக் கொடுக்கப் படாமலேயே அடகு பெற்றவர்களோடு போய்விட்டது. கேட்டால், அதை எப்போதோ உருக்கியாகிவிட்டது. வேண்டுமானால் பணமாக வாங்கிக் கொண்டு போ என்று சொல்லுகின்ற நிலைதான் இருக்கிறது.

பான் புரோக்கர்ஸ் அசோசியேஷன் ஊருக்கு ஊர் மிகவும் வலிவாக இருக்கிற காரணத்தால், சில அரசியல் கட்சிகளும் ஏன் அதிகாரிகளும், நிதி உதவி தேவைப்படுகிறபோது, பான் புரோக்கர்ஸ் அசோசியேஷன் மூலமாகவே கோரிப் பெறுகிற நிலைமை இருக்கிறது. எனக்கே ஆச்சர்யம் தருகிற வகையில் நான் திண்டிவனத்தில் கேள்விப்பட்டதைச் சொல்ல விரும்புகிறேன். பான் புரோக்கர்ஸ் அசோசியேஷனை நேரில் அழைத்து ரூ. 10,000 தாருங்கள் அல்லது ரூ. 20,000 தாருங்கள் என்று—நான் சொல்வது தாசில்தார் அளவில்கூட அல்ல—மாவட்டத்தின் தலைமைப் பொறுப்பில் உள்ள உயர் அதிகாரிகளே கேட்கிற அளவுக்கு பான் புரோக்கர்ஸ் அசோசியேஷன் முக்கியத்துவத்தை நிலைப்படுத்திக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் அது பெற்றிருக்கிற பணம் மற்றும் வசதிகள். எனவே இப்படிப்பட்ட நிலை இருக்கும்போது, பான் புரோக்கர்ஸ் அசோசியேஷன் மூலமாக அவர்கள் எதையும் சாதித்துக்கொள்ள முடிகிறது. கடன் நிவாரணம் கோருவோர் தாசில்தாரை அணுகுகிறபோது, அவரால் முடிவெடுக்க முடியாமல், நிவாரணம் கோருகிறவரைப் பார்த்து "நீங்கள் மனச்சாட்சிப்படி கடன் வாங்கினீர்களா இல்லையா? வட்டியோடு கொடுத்து விட்டுப் போங்களேன்" என்று கேட்கிற நிலைமை உருவாகியிருக்கிறது. இல்லை என்றால், நிவாரணம் கோருகிறவர்களைப் பலமுறை நடக்க வைக்கிறார்கள். வாய்தா போட்டுப் போட்டு அவர்களை நடக்க வைக்கிறார்கள். அதுவும் இல்லையென்றால், சர்ட்டிபிகேட்டுகளைத் திருப்பி அனுப்புகிறார்கள். சர்ட்டிபிகேட் வாங்குவது என்பது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை நாம் அறிவோம். அதை எவ்வளவோ



சுலபமாக ஆக்கிவிட்டோம் என்று அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னாலும் கூட, கிராமங்களில் மணியக்காரர்கள் இல்லாத நிலையில் சர்ட்டிபிகேட் வாங்குவது என்பது மிகவும் சிரமமான காரியமாக இருக்கிறது. இந்த நிலையில் அரசு உண்மையாகவே யாருக்கு நன்மை செய்ய வேண்டும் என்று விரும்புகிறதோ அவர்கள் அதை அனுபவிக்க முடியாத நிலைமைதான் உருவாகிறது. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், கடன் நிவாரணம் கோரி எத்தனை பேர் தாசில்தார்களிடம் வந்தார்களோ அவ்வளவு பேர்களும் சட்டத்தின் அடிப்படையில் நிவாரணம் பெற்றார்களா என்றால், இல்லை. மாறாக, வழக்கைத் திரும்பப் பெற்று பார்ட்டியோடு வெளியே செட்டில் பண்ணிக்கொண்ட நிலைமைதான் பல இடங்களில் இருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

எனக்கே ஒரு அனுபவம். ஒரு குறிப்பிட்ட நிலையில் உதவி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் நான் முயன்று அது என்னால் முடியாது போய், அவர் பலமுறை வந்து போனதற்கே பரிதாபப்பட்டு நான் என்னுடைய பணத்தை அவருக்குக் கொடுத்தனுப்பும் நிலை ஏற்பட்டது. எனவேதான் அரசாங்கம் சட்டபூர்வமாக ஏழைகளுக்கு நிவாரணம் கிடைக்க வேண்டும் என்று விரும்பினாலும், பான் புரோக்கர்ஸ் அசோசியேஷன் கட்டுப்பாட்டிற்குள் அதிகாரிகள் இருப்பதன் காரணமாக அல்லது அவர்களின் மிரட்டலுக்கு அல்லது தயவுக்குக் காத்திருப்பது அல்லது இன்னும் சொல்லப் போனால், அவர்களின் வேண்டுகோளை சட்டமாக மதித்துச் செயல்படுகிற நிலை ஏற்பட்டிருப்பதால், நடைமுறையில் இது ஏழை எளிய, கடன்பட்ட மக்களுக்குப் பலனளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அரசாங்கத்தின்மீது குறை சொல்ல வேண்டும் என்று நான் இதைச் சொல்லவில்லை. இந்த நிலையில் வேறு எந்த ஒரு கட்சி ஆட்சியிலிருந்து இதுபோன்ற சட்டத்தை நிறைவேற்றியிருந்தாலும், பான் புரோக்கர்ஸ் அசோசியேஷன் இப்படிப்பட்ட நிலைமையைத்தான் ஏற்படுத்தி இருக்கும். எனவே இதனை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து, இந்த அராஜகத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற முறையில் ஏதாவது ஒரு புதிய சட்ட முன் வடிவையாவது கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் ஒகாள்கிறேன்.

அடுத்து, இதற்கு காலவரையறை 31 மார்ச் என்றும் இன்னும் சிலவற்றிற்கு ரப்ரல் 30 என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இது அநேகமாக சட்டம் ன்ற நிலையைப் பெறும்போது, இந்தச் சலுகைகளும் வாய்ப்புகளும்

முடிவடைந்திருக்கும் நிலை ஏற்படுகிறது. இந்தக் காலவரையறைக்குள் முடிந்தாக வேண்டும் என்ற நிலை ஏற்படுவதால், இது எல்லோருக்கும் தெரிகிற வகையில், எல்லோருக்கும் பலன் அளிக்கிற வகையில் இருக்க வேண்டுமென்றால், இதன் கால வரம்பை இதோடு முடித்துக் கொள்ளாமல். நீடித்துத் தர முடியுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். நீட்டித்துத் தந்தால்தான் நாமும் அரசும் விரும்புகிற பலன் கிடைக்கும் என்கிற வகையில் இந்தச் சட்டத்தைச் செயல்படுத்துகிற பொறுப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கடன் நிவாரணச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். உண்மையிலேயே, கடன்பட்டவர்கள், கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் உள்ளவர்கள், குறைந்த வருவாய் உள்ளவர்கள் ஆகியோருக்கு ஓரளவுக்கு உதவி செய்யும் நிலையில் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டம் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டது என்றாலும், அதன் கடைசி நாளை நீட்டிப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம் என்பதால், இது வரவேற்கத்தக்கதாகும். இதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களையெல்லாம் எனக்கு முன்னாலே பேசிய கட்சித் தலைவர்கள் விளக்கியிருக்கிறார்கள். அரசு அவைகளைக் கவனத்தில் கொண்டு, சட்ட ரீதியாக தற்போது ஒரு திருத்தமாகச் செய்ய முடியாவிட்டாலும், இதனை நடைமுறைப் படுத்துகிற சட்ட விதிமுறைகளைத் தயாரித்து, இந்தச் சலுகை ஏழை எளிய மக்களுக்குச் சென்று சேருகிற சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே உள்ள மிக முக்கியமான சிக்கல், இவர்கள் ஆண்டுக்கு ரூ. 4,800-க்கும் குறைவாக வருவாய் உள்ளவர்கள் என்று விண்ணப்பம் கொடுக்க வேண்டும். அதற்குத் தாசில்தார்தான் சான்றிதழ் கொடுக்க வேண்டும். இந்த நாட்டில் உள்ள நிலைமையை நான் சொல்ல விரும்புகிறேன். உங்களால் ஏற்பட்டது அல்லது எங்களால் ஏற்பட்டது என்று நான் சொல்லவில்லை. அதாவது யார் அதிகமான ரூபாய் கொடுக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் தாசில்தார் சர்ட்டிபிகேட் கிடைக்கும் என்ற நிலைதான் இருக்கிறது.



(முற்பகல் 11-30)

கல்வி நிலையங்களுக்கு அட்மிஷனிலேயே நாம் பார்க்கிறோம். இன்கம் சர்டிபி கேட்டை சக்தி வாய்ந்தவர்களால்தான் வாங்க முடிகிறது. ஏழைகளால் வாங்க முடியவில்லை. அந்த அமைப்பு முறையை நாம் இன்னும் மாற்ற முடிய வில்லை. அதிலே அத்தகைய குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. நீங்கள் ம[illegible]டுப்பதுதானே என்று கேட்டால், மனு கொடுத்தால் மட்டும் சர்டிபிகேட் வாங்கிவிட முடியாது என்று சொல்கிறார்கள்.

கடன் வாங்குவதைப் பொறுத்த வரையில், தேவையில்லாதவர்கள் கடன் வாங்குவதில்லை. கடன் கிடைக்காத நிலையில் அவர்கள் இருக்கின்ற பானை, சட்டி, தங்க நகை ஆகியவற்றை விற்றுத்தான் பணம் வாங்குகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு யாரும் கடன் கொடுப்பதில்லை. கடனைத் திருப்பிக் கொடுக்க வசதி உள்ளவர்களுக்குத்தான் கடன் கொடுக்கிறார்கள். வீடு இருந்தால் கடன் வாங்க முடிகிறது. எட்டு மாக்கா, பத்து மாக்கா நிலம் இருந்தால்தான், கடன் வாங்க முடிகிறது. ஒன்றுமே இல்லாதவர்கள் கடன் வாங்க முடியாது. ஒரு ஏக்கர் நிலம் வைத்திருந்தால், அது நஞ்சை யாக இருந்தால்கூட, 3 ஆயிரம் ரூபாய் கூட வருவதில்லை. அதுவே புஞ்சை யாக இருந்தால் ஆயிரம், ஆயிரத்து ஐநூறு ரூபாய்தான் வரும். நஞ்சையாக இருந்து, சொந்தமாகப் பயிரிட்டால் கூட, நாலாயிரம் ரூபாய்க்கு மேல், இரண்டு போகம், மூன்று போகம் பயிர் செய்தால்கூட, கிடைக்காது. நாலா [illegible]ரத்து எண்ணூறு ரூபாய்க்குக் கீழே உள்ளவர்களுக்குத்தான் நிவாரணம் [illegible]ன்றால், அவர்கள் எல்லாம் இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் வர [illegible]டிவதில்லை. வீடு இருக்கிறது என்றாலும், வீடு இடிந்து அழிந்து போகிற [illegible]தன்றால், அவர்களுக்கு இந்தச் சட்டத்தின்கீழ் நிவாரணம் கொடுக்கலாம். கிராமப்புறங்களில்கூட ஒரு சென்ட் வீட்டு மனையின் விலை இரண்டாயிரம் [illegible]பாய் அளவுக்கு ஏறியிருக்கிறது. மிடில் ஈஸ்ட் பணப் புழக்கத்தால் ஏற் [illegible]பட்டிருக்கக்கூடிய சூழ்நிலை இது. ஆகவே வீடு வைத்திருப்பவர்களும் இந்த நிவாரணச் சட்டத்தின் கீழ் வர முடியவில்லை. இத்தகைய நடைமுறைச் சிக்கலிலிருந்து விடுபட வழிவகை காண வேண்டியது அரசின் கடமை. இதை [illegible] ஆயிரம் ரூபாய் வரை உயர்த்தினால், அது கொஞ்சம் வசதி உடையவர்களுக்கு நிவாரணம் கொடுப்பதைப் போல ஆகும் என்பதை உணர்கிறோம். ஆகவே அதிலே ஒரு சப்-கிளாஸ் போட்டு, கொஞ்சம் சொத்து இருந்தாலும், அது பாழ்பட்டிருக்கக் கூடிய அளவிற்கு இருந்தால், நிவாரணம் கொடுக்கலா

என்று ஏற்படுத்தலாம். நிலத்தைப் பொறுத்தவரையில், அரை ஏக்கர், ஒரு ஏக்கர் வைத்திருந்தால், அது புஞ்சை நிலமாக இருந்தால் விலக்குக் கொடுக்க திட்டமிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாசில்தார்கள் சர்ட்டிபிகேட் கொடுக்கும்போது, வேண்டுமென்றே அவ்வாறு கொடுக்கிறார்கள். ஏனென்றால் சில இடங்களில் கடன் கொடுப்பவர்களோடு அவர்களுக்கு உறவு அதிகமாக இருக்கிறது. அப்படி இருக்குமானால் அதற்காக ஒரு குழுவை நியமிக்க வேண்டும். மாவட்டத்திலே உள்ள ஒவ்வொரு தாலுக்கா மட்டத்திலும் ஒரு கமிட்டியைப் போட வேண்டும். அந்தக் கமிட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர்களையும், நகராட்சியானால் நகராட்சித் தலைவர்களையும், சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் ஆகியவர்களையும் கொண்ட ஒரு குழு வட்டாட்சியரின் தலைமையில் அமைக்கப்பட வேண்டும். அந்தக் குழுவிற்கு மேல் முறையீடு செய்யலாம். அப்படிச் செய்தால் ஏழை மக்களுக்கு நீதி வழங்க, நன்மை கிடைக்க பயனுடையதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

இந்த நிவாரணச் சட்டம் சமுதாயத்திலே இன்னுமொரு பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறது. ஒருவரும் கடன் பெற முடியாத சூழ்நிலைமை ஏற்படுத்தி இருக்கிறது. கடன் கொடுக்கிறவர்கள் இப்போது சட்ட ரீதியாகக் கடன் கொடுக்க முடியாது. இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த சட்ட அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறையையும் கவனிப்பதால், கூட்டுறவுத் துறையின் மூலமாகக் கடன் கொடுக்கும் முறையை தாராளமாக்க வேண்டும். கடன் கொடுத்துவிட்டு கடனைப் பெற கெடுபிடி நடவடிக்கை எடுக்காமல், ரெவின்யூ ரெக்கவரி சட்டத்தைப் பயன்படுத்தாமலிருக்க கடன் கொடுக்கும் முறையில் உள்ள வன்முறையைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது பெரிய தொழிற்சாலைகளுக்குக் கடன் கொடுக்கிறார்கள். தொழிலதிபர்கள் தொழிற்சாலையை ஆரம்பித்து வைத்துக்கொண்டு, டில்லியிலே ஒரு 'கெஸ்ட் ஹவுஸ்', சிம்லாவிலே ஒரு 'கெஸ்ட் ஹவுஸ்' வைத்துக் கொண்டு, வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காமல் இருக்கிறார்கள். ஏதாவது நடவடிக்கை எடுத்தால், கோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கி விடுகிறார்கள். இந்நிலைமையில் கிராமத்தில் கடன் வாங்கிவிட்டு திரும்பக் கொடுக்கத் திண்டாடுகிறபோது, கடன் வாங்கியவர்கள் மீது கடினமான நடவடிக்கை எடுக்கக் கூடாது. உண்மையான சூழ்நிலையைத் தெரிந்து கிராமத்தில் உள்ளவர்களுக்கு உதவி செய்கிற நிலையிலே விதிமுறைகள் இருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவுத் துறையின் மூலம்



மாற்றுக் கடன் வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். இப்போது கூட்டுறவு வங்கிகளில் நகைக் கடனுக்கு ஒரு லிமிட் வைத்திருக்கிறார்கள். கடன் நிவாரண சட்டம் கொண்டுவரும்போது, சாதாரண மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். திடீரென்று கடன் கொடுக்கப் பயப்படுகிறார்கள். வசதியுள்ளவர்களுக்குப் பணம் கிடைக்கிறது. வசதி இல்லாதவர்களுக்குப் பணம் கிடைக்கவில்லை. இந்தச் சட்டம் நல்ல சட்டம்தான். நல்லெண்ணத்தோடுதான் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் இதன் பின் விளைவு இப்படி இருக்கிறது. அதற்காக நாம் செய்ய வேண்டியது, கூட்டுறவுச் சங்கங்களில், வங்கிகளில் நகைக் கடன்களை லிமிட் இல்லாமல் கொடுக்க வேண்டும் என்பதுதான். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும் நகைகளுக்குக் கடன் கொடுக்கிறார்கள். 15 சதவீதம்தான் கொடுக்கிறார்கள். டிப்பாசிட் செய்துள்ள பொருள்களின் மதிப்பில் 15 சதவீதம்தான் கடன் கொடுக்க வேண்டுமென்று ரிசர்வ் வங்கி தெரிவித்திருக்கிறது. கூட்டுறவு வங்கிகளில் அப்படி இல்லாமல் தாராளமாகக் கடன் கொடுக்கக் கூடிய அளவில் விதிமுறைகளை அமைக்க வேண்டுமென்று கேட்டு, நான் அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கடன் நிவாரணச் சட்டத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, இது ஆரம்பத்திலே கொண்டுவரப்பட்டபோது, எதிர்பார்த்த அளவிற்கு, இதனுடைய பலன்கள் ஏழைகளுக்குக் கிடைக்காத காரணத்தால், அதை மீண்டும் தொடர வேண்டும், நன்மை அவர்களுக்குக் கிட்ட வேண்டும் என்ற அடிப்படையிலே தான் இந்தச் சட்டத்திற்கு நீட்டிப்புக் கொடுக்கப்படுகிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தை நீட்டித்தாலும், ஏழைகளுக்கு முழுப் பலனும் கிடைக்காத நிலை, நடைமுறையிலே உள்ள நிலைமைகளால் ஏற்படுகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களும், திரு. இராமமூர்த்தி அவர்களும், திரு சங்கரலிங்கம் அவர்களும் சுட்டிக் காட்டினார்கள். ,800 ரூபாய்க்குக் கீழ் வருமானமுள்ள ஏழைகளுக்கு இந்த நிவாரணம் கிடைத்தாக வேண்டுமென்ற நோக்கத்தோடு இது இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களது சொத்து மதிப்பு 25,000 ரூபாய் அல்லது அதற்கு மேலே இருக்கின்றபோது, இந்தச் சலுகை கிடைக்காத நிலை இருப்பதால் சில பிரச்சினைகள் எழுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை இன்னும் 3 மாதங்களுக்கு நீட்டித்துத் தர வேண்டுமென்றும் சொன்னார்கள். ஏற்கெனவே சட்டமன்றப் பேரவையிலே ஒரு திருத்தம் கொண்டு

ரைப்பட்டு ஜூன் மாத இறுதி வரைக்கும் இந்தச் சட்டம் நீட்டிக்கப்பட்டு பலன் மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்ற வகையிலே நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

கிராமப்புற அளவிலே அதிகாரிகள் மத்தியிலே சில குறைபாடுகள் இருக் கின்றன என்றும், வட்டாட்சியர் அளவிலே மறைமுகமாக ஆதிக்கம் செலுத்தும் நிலை இருக்கிறதென்றும், அதைத் தவிர்க்க வேண்டுமென்றும் சொன்னார்கள். இதைத் தடுக்க அரசு ஏற்கெனவே நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. இந்தச் சட்டம் வந்த பிறகு, கிட்டத்தட்ட 80,004 மனுக்கள் வரப்பெற்றன. அதில் 50,999 மனுக்கள் மீது தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது வாக இல்லை என்பதை அரசு உணர்கிறது. இந்தக் குறைபாட்டை நீக்க ஏழைகளுக்கெல்லாம் இந்தச் சட்டத்தின் மூலம் நன்மை கிடைக்க போதிய விளம்பரம் செய்ய வேண்டுமென்ற முறையில், அதிகப்படியான விளம்பரங்களைச் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சங்கரலிங்கம், திரு. நல்லசிவன், திரு. இராமமூர்த்தி ஆகியவர்கள், குழுக்கள் போட்டு கிராமத்திலே ஏழைகளுக்கு முழுவதுமாகப் பலன் கிடைக்கும் வகையிலே செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். ஏழைகள் சட்ட ரீதியாக வழக்கறிஞர்களை வைத்துக்கொள்ள உதவியாக Free Legal Aid Board ஒவ்வொரு வட்டத்திலேயும் ஏற்படுத்த ஆலோசனை கூறியுள்ளோம். இதன் மூலமாக மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிய குறைபாடுகளை நீக்க முடியும். இலவசச் சட்ட உதவிக் குழுக்கள் மூலமாகப் பலன் கிடைக்கக் கூடிய அளவிற்கு அரசு நடவடிக்கை களை மேற்கொள்ளும்.

(முற்பகல் 11-40)

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது ஜுவல் லோன், நகைக்குக் கடன் அதிகமாக கூட்டுறவு அமைப்பின் மூலம் தர வேண்டுமென்று சொன்னார்கள். அதை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. ஏற்கெனவே அந்த அடிப்படையில்தான் கடந்த கால வரலாற்றிலே இல்லாத அளவிக்கு பல கோடி ரூபாய்க்கு இந்தக் கூட்டுறவு அமைப்பின் மூலம் நகைக் கடனாகத் தரவேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறது. அப்படித் தரப்பட் டிருக்கிறது. இதற்கு முன் ரூ. 500 என்று இருந்த அளவு இப்போது ரூபாய் ஆயிரம் என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டது. தற்போது 5 ஆயிரம் ரூபாய் ரூபாய் வரையில் தரலாம் என்றும் அது சிறு தொழில் ஆரம்பிப்பதற்கு தரலாம் என்றும் செய்திருக்கிறோம். 'செல்ப் எம்ப்ளாய்மென்ட் ஸ்கீம்'-ல் வேலை



யில்லாமல் இருக்கின்ற ஏழைகள் பலர் 'கொல்லேட்டரல் செக்யூரிட்டி' கொடுக்க முடியாமல், பணம் வாங்க முடியாமல், அதிக வட்டிக்குக் கடன் வாங்கி நஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். செல்ப்-எம்ப்ளாய்மெண்ட்-ஸ்கீமில் குறைந்த வட்டியில் கடன் பெறலாம் என்ற அடிப்படையில், வங்கிகளில் கொடுப்பதுபோல, 4 சதவிகித வட்டிக்கு கூட்டுறவு அமைப்பின் மூலமாகக் கடன் கொடுக்கப்படும். இப்படி அனைத்துப் பகுதியிலும் கடனுதவி தருவதால், இந்தப் பிரச்சினையைக் குறைக்க முடியும் என்று கருதுகிறேன். இந்தச் சட்டம் ஏழைகளுக்கு உண்மையிலேயே நன்மை தரக்கூடியதாக அமையும். 1979 ஆம் ஆண்டு இறுதி வரையில் இந்தச் சட்டத்தினுடைய பலனை அடைந்தார்கள். அதன் பலன் தற்போதுள்ள ஏழைகளுக்குக் கிடைக்காத அளவுக்கு இருக்கிறது. அவர்களுக்காக இந்த அரசு ஒரு காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டுவந்து நடைமுறைப் படுத்துகின்றபோது, ஏதாவது குறைபாடுகள் இருந்தால், அவைகளைக் களைந்து அவர்களுக்கு அந்தப் பலன் கிடைக்கின்ற அளவுக்கு என்னென்ன வழிவகைகளைச் செய்ய வேண்டுமோ அதையும் செய்ய மற்ற சட்டங்கள் வர இருக்கின்றன. இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1982) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

'சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1982) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 4. அரசின் தீர்மானம்:

### அலுவல் வரிசையில் மாற்றம் குறித்து.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"மேலவை விதி 21 (3)-ன்கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் நேற்றைய நிகழ்ச்சி நிரலில் முடிவு பெறாத இனங்களாகக் கண்டுள்ள 3, 4 இனங்களில் உள்ள சட்ட முன்வடிவுகளை 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவுக்கு முன்பு எடுத்துக்கொள்ள வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"மேலவை விதி 21 (3)-ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் நேற்றைய நிகழ்ச்சி நிரலில் முடிவு பெறாத இனங்களாகக் கண்டுள்ள 3, 4 இனங்களில் உள்ள சட்ட முன்வடிவுகளை 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவுக்கு முன்பு எடுத்துக்கொள்ள வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



## 5. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(3) 1982 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக்கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1982).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

பல்கலைக் கழக அதிகார மன்றங்களில் ஒரு நபர் நீண்ட காலமாகத் தொடர்ந்து உறுப்பினராக இருப்பது அப்பதவியில் அவருக்குச் சில தனிப் பற்றுக்கள் ஏற்படுவதற்கு இடம் அளிக்கும் ஆதலால், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களின் அதிகார மன்றங்களின் உறுப்பினர்களின் கால அளவை வரையறுத்துக் கட்டுப்படுத்த வேண்டும் என்று அரசு ஒரு கொள்கையை உருவாக்கியது எனவே இம்மாநிலத்திலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களின் பேரவை, ஆட்சிக்குழு, கல்வி அவை ஆகியவற்றில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் 3 ஆண்டு காலத்திற்குப் பதவி வகிக்க வேண்டும் என்றும் மூன்று ஆண்டு காலத்திற்கு மேற்படாத மற்றொரு காலத்திற்கு அவர்கள் தேர்தலில் நிற்கவோ நியமனம் செய்யப்படவோ தகுதி பெறுவார்கள் என்றும் அரசு முடிவு எடுத்தது.

இக்கொள்கையைப் பின்பற்றி மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு மட்டும் ஒரு அவசரச் சட்டத்தை 30—6—1981 அன்று அரசு வெளியிட்டது. அந்த அவசரச் சட்டம் சட்ட முன்வடிவாக மாற்றப்பட்டு, அது மாநிலச் சட்டப்பேரவை மற்றும் சட்ட மேலவையாலும் முறையே 31—8—1981, 1—9—1981 அன்று சட்டமாக நிறைவேற்றப்பட்டு, பிறகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலும் பெற்று சட்டமாக்கப்பட்டது.

---

@. 615-653 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மற்றப் பல்கலைக் கழகங்களுக்கும் மேற்கூறிய கொள்கையை அமுல்படுத்துவதற்காகச் சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மற்றும் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகங்களின் அதிகாரக் குழுக்களில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின், அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலத்தையும் ஆறு ஆண்டுகளுக்கு மேல் போகக்கூடாது என்று வரையறுக்கும் நோக்கத்துடன் ஒரு அவசரச் சட்டம் மத்திய அரசின் முன் அனுமதி பெற்று, மதுரை-காமராசர் பல்கலைக் கழக 1981 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தைப் பின்பற்றி, 21—12—1981 அன்று வெளியிடப்பட்டது.

அந்த அவசரச் சட்டத்தில் காணப்படுகின்ற அதே விதி முறைகளை அடிப்படையாகக் கொண்டு அது ஒரு சட்டமுன்வடிவாக மாற்றப்பட்டு இச்சபையின் முன் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பேரவையில் நிறைவேற்றிய வண்ணம் இச்சட்ட முன்வடிவினை ஆய்விற்கு எடுத்துக்கொண்டு நிறைவேற்றித் தருமாறு சட்டமன்ற மேலவைக்குப் பரிந்துரைக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம் :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

* **திரு சி. ரா. லெட்சுமிகாந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நான் மனதார வரவேற்கிறேன். இதுபோன்ற ஒரு சட்ட முன்வடிவை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு முன்பு அவசரச் சட்டத்தின் மூலமாகக் கொண்டு வந்த பிற்பாடு, சட்ட மன்றத்தினுடைய ஒப்புதலுக்கு வந்தபோது, இங்கே கூட எதிர்க் கட்சித் தரப்பிலே சிலர் குறை கூறினார்கள். அது ஏதோ உள்நோக்கத்துடன் கொண்டுவரப்பட்டது என்று அன்று குறை கூறிப் பேசப்பட்டது. ஆனால் இது உள்நோக்கத்துடன் கொண்டுவரப்படவில்லை, பல்கலைக் கழகங்களை ஒரே மாதிரியாக நிலைப்படுத்தக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கும் வகையிலே,



பிற பல்கலைக் கழகங்களுக்கும் அதே மாதிரி நிபந்தனைகள், வரைமுறைகள் இருக்க, செனேட், சிண்டிகேட் போன்ற பதவிகளில் ஒருவர் தொடர்ந்து இருக்கக்கூடாது என்ற அளவுக்கு அந்தச் சட்ட ஏற்பாட்டைக் கொண்டு வந்ததற்காக நான் பாராட்டுகிறேன். பல்கலைக் கழகங்கள் சமுதாயப் பிரச்சினைகளை, ஆராய்ந்து சமுதாயப் பிரச்சினைகளில் தீர்வு காணக்கூடிய, அரசாங்கத்திற்கு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவி செய்யக்கூடிய அமைப்புகளாக இருக்க வேண்டும். ஆனால் தமிழகத்திலே கடந்த காலங்களில் பல்கலைக் கழகத்திற்கும் சமுதாயப் பணிகளுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா என்ற கேள்வி எழுந்தபோது, அவை சமுதாயத்துடன் ஒட்டுறவு இல்லாமல் தமிழகத்திலே தனித் தீவு போல செயல்பட்டுக்கொண்டிருக்கிற நிலைமைகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அது தனித் தீவாக, தன்னிச்சையாக நடக்கிறது. அப்படி தனித் தீவாக இருக்கக்கூடாது, தமிழகத்திலே வளர்ச்சிப் பணிகளிலே பங்கு பெறக்கூடிய ஓர் அமைப்பாக இருக்க வேண்டும், பொருளாதாரப் பிரச்சினைகளில் சிறந்த வழி முறைகளைக் காணக்கூடிய அமைப்புகளாக அந்தப் பல்கலைக் கழகங்கள் இருக்க வேண்டும் என்ற ஒரு நிலைமையை ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற நோக்கத்தில் இந்தச் சட்ட முன்வடிவு வந்திருக்கிறது. பல்கலைக் கழகங்களைப் பொறுத்தவரையில், தனி நபர் ஆதிக்கமோ, அரசாங்கத்தின் குறுக்கீடோ, அல்லது ஆதிக்கமோ அங்கே வரக்கூடாது. தனி நபருடைய ஆதிக்கம் இருக்கக்கூடாது. வைஸ்-சான்சலராக இருந்தாலும் சரி, புரோ-சான்சலராக இருந்தாலும் சரி, சிண்டிகேட் உறுப்பினராக இருந்தாலும் சரி, செனட் உறுப்பினராக இருந்தாலும் சரி, அங்கே தனி நபருடைய ஆதிக்கம் இருக்கக்கூடாது. அது தனி நபர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கின்ற ஒரு பல்கலைக் கழகமாக இருக்கக் கூடாது. ஆகவே அதில் தனி நபர்கள் ஆதிக்கம் என்பது மட்டுமல்ல, அரசாங்கத்தினுடைய ஆதிக்கமும், சிண்டிகேட் அல்லது செனட் அல்லது தனிப்பட்டவர்கள் ஆதிக்கமும் இருக்கக்கூடாது. பதிவாளர் அதிகாரம் செலுத்துகின்ற ஒரு அமைப்பாகவும் இருக்கக்கூடாது. எந்தத் தனி நபருடைய ஆதிக்கமும் இல்லாமல், எந்தப் பதவி வகிக்கின்றவர்களுடைய ஆதிக்கமும் இல்லாமல், சுயேச்சையாக, தன்னிச்சையாக இயங்குகின்ற ஒரு சுதந்திரமான கல்விக் கூடமாக, நல்ல இளைஞர்களைத் தயாரிக்கக்கூடிய ஒரு அமைப்பாக பல்கலைக் கழகங்கள் இருக்க வேண்டும். வெளிநாட்டிலே பல்கலைக் கழகங்கள் செயல்படுகின்ற விதங்களையும் நாம் பார்க்கிறோம். தமிழகத்திலேயும் அந்தமாதிரி நிலைமைகள் வரவேண்டும் என்று கல்வி

யாளர்கள் ஆசைப்படுகிறார்கள். அரசின் சட்டம் மூலமாகத்தான் பல்கலைக் கழகங்களை உருவாக்க முடியும். சட்டத்தில் உள்ள குறைபாடுகளைக் களைவதும் அரசினுடைய பொறுப்புதான் என்று சொல்லிக்கொள்கிறேன். அப்படிப்

(முற்பகல் 11-50)

பட்ட குறைபாடுகளைக் களைவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்போது, ஏதோ உள் நோக்குடன் அரசினர் செயல்படுகிறார்கள் என்ற கருத்தைச் சொல்வார்களானால், உண்மையிலேயே அது குறித்து ஆசிரியன் என்ற முறையில் நான் வருத்தப்படுகிறேன். இப்படிப்பட்ட நடவடிக்கைகளை காலம் தாழ்த்தி எடுக்கிறார்களே என்றுதான் நாங்கள் வருத்தப்படுகிறோம். இந்த நடவடிக்கைகளை முன்பே எடுத்திருக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய கருத்து. இந்த நடவடிக்கை மூலமாகப் பல்கலைக் கழகங்களைச் சீர் திருத்திவிடலாமென்று நினைத்துவிட முடியாது. இது ஒரு முயற்சிதான். இது போன்ற பல சட்டபூர்வமான முயற்சிகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டுமென்பது எங்களுடைய அன்பான, பணிவான வேண்டுகோள்.

ஆனந்த விகடன் இதழிலே பல்கலைக் கழகங்கள் பற்றிய விமர்சனங்கள் 2 வாரங்கள் வந்தன துணைத் தலைவரவர்களே, அந்த 2 கட்டுரைகளில் எழுதப்பட்ட கருத்துக்கள் குறித்து வேதனைப்படுகிறேன். ஒருதலைப்பட்சமான கருத்துக்களை, அந்தப் பல்கலைக் கழகங்களிலே பங்கு கொண்டவர்கள், பதவி வகித்தவர்கள் கூறியபோது, பொது நோக்கோடு பார்த்து, வருத்தப்பட்டேன். அதிலே ஒரு முக்கியமான கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அரசு அனாவசியமாகத் தலையிடுகிறது, இதனால் பல்கலைக் கழகத்திற்கு நஷ்டம், அரசு இந்த நிதியைத் தாராததால் பல்கலைக் கழகத்திற்கு இவ்வளவு சங்கடம், அரசு ஆணையால் பல்கலைக் கழகத்திற்கு இவ்வளவு இழப்பு என்று லாப நஷ்டக் கணக்கு கொடுத்திருக்கிறார்கள். கல்விச் சுதந்திரத்திலே அரசு எப்படி தலையிட்டதென்று சொல்லியிருந்தால், நாங்களும் அவர்களுக்கு ஆதரவாக இங்கே சொல்ல வாய்ப்பாக இருக்கும். ஆனால் லாப நஷ்டக் கணக்குப் போட்டுக் காட்டி, ஆனந்த விகடன் வாசிக்கும் பல்லாயிரக் கணக்கானவர்கள் அதைப் பார்த்து, அவர்கள் மனதிலே தவறான எண்ணம் உருவாகக்கூடிய அளவிலே ஒரு கட்டுரையாக அது அமைந்தது குறித்து வேதனைப்பட்டேன். நல்லவேளையாக கல்வி அமைச்சரவர்கள் அதற்குப் பதில் கொடுத்தார்கள். அந்தப் பதில் கூடப் போதாது. இன்னும் அதிகமாகப் பதில் கொடுத்திருக்க வேண்டும்.



சென்னைப் பல்கலைக் கழகத்தை எடுத்துக்கொண்டால், அது சமுதாய மாற்றத்திற்கு என்ன செய்திருக்கிறது? சில ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை உரு வாக்கியிருக்கிறது. பட்டதாரிகளை உருவாக்கியிருக்கிறது. Madras University உலகப் புகழ் பெற்றதென்ற போலி மாயையை உருவாக்கியிருக்கிறார்களே தவிர, வேறு ஒன்றும் செய்யப்படவில்லை. சென்னைப் பல்கலைக் கழகம் மூலமாக தமிழ் நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க எத்தனை ஆராய்ச்சியாளர்களை உருவாக்கியிருக்கிறார்கள், எத்தனை விஞ்ஞானிகளை உருவாக்கியிருக்கிறார்கள், எத்தனை பொருளாதார மேதைகளை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, வேதனையாக இருக்கிறது.

தமிழ் நாட்டில் தமிழை வளர்க்க வேண்டிய, தமிழ் மொழியின்பால் தமிழ் மக்களுக்குப் பற்றுதல் ஏற்படுத்த வேண்டிய அந்தப் பல்கலைக் கழகம் ஆங்கில ஆதிக்கம் மேலோங்கிய பல்கலைக் கழகமாகத்தான் இருக்கிறதென் பதை எண்ணும்போது, வேதனையாக இருக்கிறது. தமிழ் மொழி மூலம் அறிவியலைச் சொல்லிக் கொடுக்கக்கூடிய, விஞ்ஞான, தொழில் நுட்ப, மருத்துவப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கக்கூடிய அளவிற்கு அது வர வில்லை. இந்தி மூலமாக இன்ஜினியரிங் கற்பிக்கிறார்கள்; மருத்துவப் படிப்புகூட இந்தி மூலமாகக் கற்பிக்கிறார்கள். அதைவிடத் தமிழ் தாழ்ந்ததா? இலக்கிய வளம் குறைந்ததா? அறிவுத் திறன் குறைந்த மொழியா? இன்று சாதாரண பட்டப் படிப்பிலேகூட தமிழ் மொழி மூல மாகக் கற்பிக்க பல்கலைக் கழகம் ஆவன செய்யவில்லை என்றால், இதற்கு பல்கலைக் கழகத்திலே பதவி ஏற்றிருந்தவர்கள் எல்லாம் பொறுப்பு ஏற்க வேண்டும். தமிழக அரசு பொறுப்பு ஏற்க வேண்டும். அப்படிப்பட்ட நிலையிலேதான் சென்னைப் பல்கலைக் கழகம் இருந்து கொண்டிருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்றோ, கடந்த காலத்திலே யார் யாருக்கு என்றோ எடுத்துக்கொண்டாலும் சரி, (Communual Rotation) பின்பற்றப் பட்டதா, என்ன சமுதாய நீதி வழங்கியது, தாழ்த்தப்பட்டவர்கள் ஆதிபோருக்கு பிற்படுத்தப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டதா, அது போன்று அங்குள்ள ஒதுக்கப்பட்ட அளவிலே இடம் பதவிகள் நிரப்பப்பட்டனவா என்ற கேள்விகள் எழுப்பினால், வேதனையான பதில்தான் வரும். இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்குக் காரணமே, தனி நபர் ஆதிக்கம் அல்லது ஒரு சிலருடைய ஆதிக்கம் அல்லது ஒரு குழுவி

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1982 பிப்ரவரி 19]

னுடைய ஆதிக்கம் தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களில் இருந்து வந்தததால். இதனால்தான் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த ஆதிக்க உணர்வை அகற்ற, அந்த ஆதிக்க சக்திகளைத் தடுத்து நிறுத்தி பல்கலைக் கழகங்களை ஜனநாயகப்படுத்த, அவற்றை உண்மையிலேயே சுதந்திர அமைப்புகளாகச் செயல்படுத்த இப்படிப்பட்ட சட்டத் திருத்தங்கள் நிறைய வேண்டும், இன்னும் வரவேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை.

இங்கே செட்டி நாட்டரசர் அவர்கள் இருக்கிறார்கள். ஒரு பல்கலைக் கழகத்தின் இணை வேந்தராக அவர்கள் இருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உலகில் சிறந்த பல்கலைக் கழகமாகத் திகழ வேண்டுமென் பது நம்முடைய ஆசை. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உலகத்திலேயே மிகச் சிறந்த பல்கலைக் கழகமாகத் திகழ வாய்ப்புகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட வாய்ப்புகளும், சூழ்நிலைகளும் இருந்தும்கூட—அது போன்ற தொரு Residential Campus கிடைப்பது அரிது, இந்தியாவிலேயே கைவிட்டு எண்ணிவிடலாம்—அங்கே பிரச்சினைகள் இருக்கின்றன. அங்கே சமுதாயத்திற்கு ஏற்றம் தரும் சூழலை ஏற்படுத்த வாய்ப்புகளை உருவாக்க வேண்டியது அரசு மாத்திரமல்ல, இணை வேந்தர் அவர்களுக்கும் அதில் பொறுப்பு உண்டு. எங்களுக்கும் பொறுப்பு உண்டு, மன்றத்தில் உள்ள உறுப்பினர்களுக்கும் பொறுப்பு உண்டு, ஆட்சியில் உள்ளவர்களுக்குப் பொறுப்பு உண்டு, எதிர்க் கட்சியில் உள்ளவர்களுக்கும் பொறுப்பு உண்டு. எல்லோரும் சேர்ந்து பல்கலைக் கழகங்கள் சுயேச்சை நிறுவனங்களாக இயங்க எந்தவித கார்ப்புணர்ச்சியும் இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அனைத்துப் பிரதிநிதிகளும் ஆதரவு தர வேண்டும். அந்த முறையில் அரசு நடவடிக்கைகளை எடுக்கத் துவங்கியதற்கு மனதாரப் பாராட்டுகிறேன். மாண்புமிகு முதல்வரவர்களுக் கும், கல்வி அமைச்சரவர்களுக்கும், கல்வித் துறையில் ஈடுபட்டிருக்கிறேன் என்ற வகையில் மகிழ்ச்சியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள் கிறேன். வருங்காலத்தில் இது போன்ற நடவடிக்கைகளை மேலும் எடுக்க வேண்டும். பல்கலைக் கழகங்கள் உண்மையான ஜனநாயக அமைப்புகளாக, சுயேச்சை அமைப்புகளாக, சமுதாயப் பிரச்சினைகளோடு ஒன்றி, சமுதாயப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் ஏழை எளிய பாட்டாளி மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் வளர வேண்டு



1982 பிப்ரவரி 19] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

மென்றால், இப்படிப்பட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற வேண்டு மென்று சொல்லி, அதற்குப் பெருவாரியான ஆதரவு இருக்கிறதென்று சொல்லி, சட்டமுன்வடிவை வரவேற்று, அமைகிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : துணைத் தலைவரவர்களே, அரசானது பல்கலைக் கழகங்களையெல்லாம் ஜனநாயகப்படுத்த வேண்டும், நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே, மக்களுடைய எண்ணங்களைத் திருப்திப் படுத்தும் வகையிலே பல ஆராய்ச்சியாளர்களை, வல்லுநர்களை, நோபல் பரிசு பெறக்கூடிய மேதைகளை உருவாக்க வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத் தோடு இத்தகைய ஒரு சிறந்த, புரட்சிகரமான சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அதை ஆசிரியர்கள், பட்டதாரிகள் முற்போக்கு முன்னணி யின் சார்பிலே வரவேற்று, பாராட்டுகிறேன்.

இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்கள் எல்லாம் 1904 ஆம் ஆண்டு இந்தியப் பல்கலைக் கழகங்களின் சட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப் பட்டன. சென்னைப் பல்கலைக் கழகமானது 1923 ஆம் ஆண்டிலே அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே உருவாக்கப்பட்டது. அண்ணாமலைப் பல் கலைக் கழகம் 1928-ல் உருவாக்கப்பட்டது. மதுரைப் பல்கலைக் கழகம் 1965 ஆம், அதைத் தொடர்ந்து அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகமும் உருவாக்கப்பட்டன. 1904 ஆம் ஆண்டு வகுக்கப்பட்ட இந்திய பல்கலைக் கழகச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, 1947-க்கு பிறகு, இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு உருவாக்கப்பட்ட சட்டங்கள் எல்லாம் அடிமைச் சாசன சட்டங்களாக வந்தனவே தவிர, சமுதாய மாற்றம், நாட்டின் தேவை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டனவாக இல்லை. 1965-ல் கூட மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டது. 1978-ல் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஏற்று மாற்றத்தோடு, புதிய சிந்தனை யோடு, மறுமலர்ச்சியோடு உருவாக்கப்பட்டது. மதுரைப் பல்கலைக் கழகம்

(நண்பகல் 12-00)

1965 ல் உருவாக்கப்பட்டது. அது 1964 ல் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தை அடிப்படையாகக்கொண்டு கொண்டுவரப்பட்டது. சென்னைப் பல்கலைக் கழகம் 1923 ஆம் ஆண்டுச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப் பட்டது. அதே பாதையில் தான் மதுரைப் பல்கலைக் கழகமும் வந்தது. ஒரு புரட்சிகரமான சிந்தனையோடு கூடிய பல்கலைக் கழகமாக அது வா

[திரு. பா. ரா. தாமஸ்] [1982 பிப்ரவரி 19

வில்லை. 35 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சீரிய முறையில் சிந்தித்து ஒரு மாபெரும் மாற்றம் உருவாக்கியிருப்பதை நான் உண்மையிலேயே வரவேற்கிறேன். சம வாய்ப்புகள், சமத்துவம் அவசியம் வழங்கப்பட்டாக வேண்டும். சம வாய்ப்புகள் வழங்கப்படாமல் மறுக்கப்படுவது ஏமாற்றத்தைத் தரும். ஒருசிலர் பல்கலைக் கழகத்தில் ஆட்சி நடத்திக்கொண்டிருந்த நிலையையும், பல ஆண்டு தொடர்ந்து பாம்பரையாக ஆட்சி செய்துகொண்டிருந்த நிலையையும், ஆராய்ச்சி மனப்பான்மையற்ற, சிந்தனா சக்தியற்ற நிலையையும்' மற்றவர்களுக்கு வாய்ப்பு வழங்காமல் இருந்த நிலையயும் மாற்றியமைத்து, அப்படிப்பட்ட பழைமையை மூட்டை கட்டித் தகர்த்து எறிந்ததற்காக இந்த அரசுக்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் மதுரைப் பல்கலைக் கழகம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் போன்றவைகளின் நிலைமையைப் பற்றிப் பேசினார்கள். முற்போக்குக் கருத்துக்களை உருவாக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பல்வேறு இடங்களில் பேசுகிறார்கள். இந்தப் பல்கலைக் கழகங்கள் உண்மையிலேயே நாட்டிலுள்ள மக்களின் தேவையைப் பூர்த்தி செய்கின்றனவா? இந்தப் பல்கலைக் கழகங்கள் செய்கிற ஆராய்ச்சிகள் எல்லாம் நாட்டிலுள்ள கிராம மக்களைப் போய்த் தொடுகின்றனவா ? அப்படி தொடாத நிலையில் ஆராய்ச்சி பண்ணுவதால் என்ன பயனிருக்க முடியும்? அப்படிப்பட்ட ஒரு போக்கை மாற்றியமைப்பதனால் நான் இதனுடைய அடிப்படையை வரவேற்கிறேன். காலனி ஆட்சியில் அமைப்பட்டிருந்து, 35 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தச் சட்டம் வந்திருக்கிறது. அப்படி என்றால், இதுவரை வாய்ப்பற்ற நிலை இருந்ததை மாற்றியிருக்கிறார்கள் என்று பொருள்.' மக்களுக்குத் தொண்டாற்றுபவர்களுக்கு உண்மையில் வாய்ப்பளிக்கப்போகிறார்கள் என்று பொருள். ஒரிருவரே தொடர்ந்து பல்லாண்டுகள் இருந்து காலத்துக்கேற்ப ஆராய்ச்சி மனப்பான்மையோடு கூடிய கருத்துக்களைப் புகுத்தாமல் இருந்து வந்த நிலையைத் தகர்த்து புதிய ஆராய்ச்சி மனப்பான்மையோடு கூடிய கருத்துக்களை பல்கலைக் கழகங்கள் புகுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இச்சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதால், இனி பல்கலைக் கழகங்கள் புத்துணர்ச்சியைப் பெறும். இந்த மாற்றங்கள் தேவை தானா என்ற கேள்வி வருகிறது. பல்



1982 பிப்ரவரி 19] [திரு. பா. ரா. தாமஸ்]

கலைக் கழகங்களில் ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறவர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். கல்வியாளர்களை, ஆராய்ச்சியாளர்களை உருவாக்கி நல்ல முறையில் மாணவச் செல்வங்களுக்குப் பயன்படக்கூடிய கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். கோரிக்கையின் அடிப்படையில்தான் இதைச் செய்திருக்கிறார்கள். ஏதோ சொந்த விருப்பத்திற்காக இதைச் செய்வதாக யாரும் கருதத் தேவையில்லை. ஆசிரியர்களாக இருப்பவர்கள் மாணவர்களுடைய தேவையை அறிந்து செயல்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளதால், கோரிக்கையின் அடிப்படையில் இது வந்துள்ளதால், நான் இதை வரவேற்கிறேன். இன்றைக்கு மாற்றம் இல்லாததால், கல்வியாளர்களும் ஆராய்ச்சியாளர்களும் கெட்டுக் கொண்டிருக்கிறார்கள். முற்போக்கான சமுதாயம் அமைய வேண்டுமென்று நாட்டிலே விரும்புகிறவர்கள் எல்லாம் இந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு இந்த மாற்றத்துடன் கூட அனைத்துப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கங்களுடைய கோரிக்கைகளையும் கேட்டு பல்கலைக் கழகச் சட்டங்களையும் அரசு ஜனநாயகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல்கலைக் கழகங்கள் நாட்டுமக்களுக்குச் சிறந்த முறையில் தொண்டாற்றக் கூடிய வகையில் இருக்க வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள். மாணவர்களும் ஆசிரியர்களும் பல்கலைக் கழகக் கல்வி மன்றம், ஆட்சிக் குழு இவைகளில் எல்லாம் இடம் பெற வேண்டுமென்று கேட்கிறார்கள். 1904 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பிரிட்டிஷாரின் அடிப்படைச் சட்டத்தை மாற்றியிருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். பல்கலைக் கழகங்கள் என்றால், அதை ஏதோ ஆண்டவனின் சன்னிதானமாகக் கருதி, அதைப் பற்றிப் பேசக் கூடாது என்று இருந்த நிலையை மாற்றி, தடையை உடைத்தெறிந்ததற்கு இந்த அரசுக்கு நன்றி. இன்றைக்குக் கட்டுப்பாடுகள் தகர்த்து எறியப்பட்டு விட்டன. சிந்தித்துச் செயல்பட வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. மாற்றம் தேவையென்று கருதிய மக்களிடையே மாற்றம் இடையாது என்று இருந்த நிலையை மாற்றி, சிந்தனா சக்தியை, ஆராய்ச்சி மனப்பான்மையை ஏற்படுத்த வாய்ப்பு கொடுத்திருப்பதைப் பாராட்டுகிறேன். யு. ஜி. சி. பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு தனிச் சம்பள விகிதத்தை அறிவித்தது. ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் 'சீனியர் ஸ்காலர்ஸ்' என்னும் சொல்லியிருக்கிறார்கள். யு.ஜி.சி. அறிவித்திருக்கிற ஸ்காலர்ஸ்' என்றும் சொல்லியிருக்கிறார்கள். யு.ஜி.சி. அறிவித்திருக்கிற அடிப்படையில் இன்றையதினம் பல்கலைக் கழகங்களில் இருக்கிறவர்களை

எல்லாம் தனிப் பயிற்சி, மக்களுக்கு அவர்கள் உபயோகப்படும்படி செய்ய வேண்டும். அங்கு இடம் பெறக்கூடிய அனைத்து உறுப்பினர்களும் தேர்தலில் நின்றுதான் வர வேண்டும். துணைவேந்தர் கூட தேர்தலின் மூலம்தான் வர வேண்டுமென்ற ஒரு கருத்துகூட நல்லதுதான். எதிர்காலத்தில் இன்னும் பல முன்னேற்றமான சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர இந்த சட்டத் திருத்தம் முன்னோடியாக அமைவதால், இதைக் கொண்டு வந்திருக்கும் ஆட்சியை வாழ்த்தி, பாராட்டி, ஆசிரியர்கள் சார்பாக, மாணவர்கள் சார்பாக நன்றி கூறி, வரவேற்று, அமைகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : துணைத் தலைவரவர்களே, இதை நான் மனமார வரவேற்கிறேன். செனட், சிண்டிகேட், அக்காடமிக் கவுன்சில் போன்றவை களில் 2 பேருக்கு மேல் யாரையும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று இந்தச் சட்ட முன்வடிவு வந்திருப்பதால், நான் இதை வரவேற்கிறேன். வெள்ளைக்காரர்கள் காலத்தில் சமுதாயத்தின் பல்வேறு அமைப்புகளில் வசதி படைத்தவர்கள், நிலச்சுவான்தார்கள், நிலப்பிரபுக்கள் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் ஆதிக்கம் செலுத்தினார்கள். அதில் குறிப்பாக இரண்டு இடங்களில் அதிகப்படியாக ஆதிக்கம் செலுத்தினார்கள். ஒன்று மாவட்ட கோவாப்பரேட்டிவ் சென்ட்ரல் வங்கிகள், இன்னொன்று பல்கலைக் கழகங்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் மாவட்ட கோவாப்பரேட்டிவ் சென்ட்ரல் வங்கிகளில் அவர்கள் செலுத்தி வந்த ஆதிக்கம் ஒழிக்கப்பட்டது. அதுபற்றி நாம் எல்லோரும் அப்போது சந்தோஷப்பட்டோம். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இந்த இரண்டு இடங்களிலும் இப்படிப்பட்டவர்களுடைய ஆதிக்கத்துக்குப் பாதுகாப்பு கொடுத்தார்கள். ஒவ்வொரு கோவாப்பரேட்டிவ் வங்கியிலும் இப்படிப்பட்டவர்கள் ஆதிக்கம் செலுத்தினார்கள். அதில் பரம்பரை பரம்பரையாக நிலப் பிரபுக்களுடைய குடும்பம் தான் ஆதிக்கம் செலுத்தியது. அப்பனுக்குரிய சொத்து மகனுக்கு என்று இருப்பதுமாதிரி, பரம்பரைச் சொத்துமாதிரி, இதில் ஆதிக்கம் செலுத்தினார்கள். இத்தகைய ஆதிக்க நிலையை காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மாற்றவே இல்லை. இப்படிப்பட்டவர்கள் 1946 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து பரம்பரை பரம்பரையாக ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தார்கள். 27 ஆண்டுகள் அவர்கள் அத்தனை பெனிபிட்டுகளை யும் அடையும் வகையில் காங்கிரஸ் ஆட்சியும் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்து வந்தது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததும்,



கோவாப்பரேட்டிவ் வங்கிகளில் இவர்களுக்கு இருந்த பிடிப்பை உடைத்து, தகர்த்தெறிந்தது. அதுகூட சட்டவிரோதம் என்று அப்போது சொல்லப் பட்டது. சர்வாதிகாரமாக நிலப் பிரபுக்களின் பிடியில் இருந்து வந்த ஆக்கிரமிப்பை சட்டத்தின்படி தகர்த்தெறிந்ததை அப்போது நாங்கள் பாராட்டினோம். அவர்கள் பிடியிலிருந்து ஒருவாறு கோவாப்பரேட்டிவ் வங்கிகள் மீட்கப்பட்டன. அவ்வாறு மீட்கப்பட்ட வங்கிகளில் இப்போது நிர்வகிப்பவர்கள் இல்லாமலிருப்பது எனக்குக் கவலையாகத்தான் இருக்கிறது. அவைகள் விடுதலை பெற்ற பின்னர்கூட, அவைகளுக்கு இன்னும் மக்கள் பிரதிநிதிகள் நியமிக்கப்படாமலிருப்பது வருத்தத்தக்கது. இப்படி பல விஷயங்களில் தேக்க நிலை இருக்கிறது. இத்தகைய நிலையை அரசு மாற்ற வேண்டும்.

எப்படி கோவாப்பரேட்டிவ் வங்கிகளில் வசதி படைத்தவர்கள் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தார்களோ அதுபோல் பல்கலைக் கழகங்களிலும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்களது ஆதிக்கத்தை உடைத்து, தகர்த்தெறியும் முறையில் நடவடிக்கை எடுத்து இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்திருப்பதற்காக உண்மையிலேயே நான் அரசின் இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கிறேன். வசதி படைத்த சிலர் மட்டும் ஒரு காலத்தில் கல்வி கற்கும் நிலை இருந்தது. வசதி படைத்த சில குடும்பங்களிலுள்ள நபர்கள் தான் வெளிநாட்டுக்குச் சென்று படிக்க முடியும் என்ற நிலை இருந்தது. அத்தகையவர்கள் தான் யூனிவர்சிட்டிக்குள் நுழைய முடியும் என்கிற நிலை இருந்தது. அத்தகைய நிலையை உடைத்தெறிய இந்தச் சட்ட முன்வடிவு வழி வகுக்கிறது என்பதால் இதை நான் வரவேற்கிறேன். சாதாரண மனிதன் கூட தனக்கு இருக்கிற அறிவைப் பயன்படுத்தி பல்கலைக் கழகத்திற்கு உள்ளே வர முடியும், அங்குள்ள அமைப்புகளில் உறுப்பினர்களாகப் பணியாற்ற முடியும், சமுதாயத்திற்குத் தொண்டாற்ற முடியும் என்கிற முறையிலான ஒரு தத்துவத்தை அமுல்படுத்தி போன்ற போலியைத் தகர்த்தெறியும் வகையில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்துக்காக சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டபோதும், நாங்கள் வரவேற்றோம். இதில் எதிர்ப்பதற்கு என்ன இருக்கிறது? யாரோ வெள்ளையர் இன்டர்ஸ்ட் பாதிக்கப்படுகிறது என்பதற்காக ஒருசில அரசியல் கட்சிகள் இதை எதிர்ப்பது ஏன் என்பது மட்டும் எனக்குப் புரியவில்லை. அது எனக்குப் பிடிப்படவில்லை.

[திரு. ஆ. நல்லசிவன்] 1982 பிப்ரவரி 19]

(பிற்பகல் 12-10)

அவர்கள் முற்போக்கான கொள்கைகளைப்பற்றிப் பேசுகிறார்கள், சிந்திக்கிறார்கள். இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையிலே தங்களுக்கு வேண்டியவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதால் வரவேற்கத் தயங்குவது சரியல்ல. இது மக்களுக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, இதை நான் வரவேற்கிறேன். இந்தக் கண்ணோட்டத்தோடு பார்க்கும்போது, திமுகழகம் கூட வரவேற்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொன்னதுபோல, இப்படிப்பட்ட பிடிப்பிலேயிருந்து விடுபடுவதன் மூலமாக சமுதாயத்திலே உள்ள சோஷியோ-எக்கனாமிக் பிரச்சினையோடு இந்தக் கல்வி நிலையங்களையும் இணைக்கும் நிலைமை ஏற்படும். கல்விக்காக என்று ஒரு குறிப்பிட்ட சிலர்தான் இருக்க முடியும், கல்வியிலே ஒரு சிலர் பெற்றிருக்கும் ஞானம் வேறு யாருக்கும் வராது என்று கூறுவதை உடைத்து, ஒருமித்து சோஷியோ-எக்கனாமிக் பிரச்சினைகளோடு திரும்பவும் சம்பந்தப்படும் நிலைமை ஏற்படும். அங்கெல்லாம் எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் கொடுத்திருக்கும் இந்த அரசு மாணவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும். மாணவர்களைப் பார்த்து வேலைநிறுத்தம் செய்ய வேண்டாம் என்று நாம் கேட்டுக் கொள்கிறோம். ஆனால் வேலை நிறுத்தம் செய்யவேண்டாம் என்றால், அவர்களுக்கும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகள் இருக்கும்போதுதான் வேலை நிறுத்தம், கல் எறிதல் போன்ற நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன. அவற்றைத் தவிர்க்கும் வகையிலே, மாணவர்களின் ஓட்டையும் பெற்றுக்கொண்டு வரக்கூடிய அளவிலே நல்ல அக்காடமிக் குவாலிபிகேஷன் வைத்திருக்கும் ஒருவரை, சிண்டிகேட்டிலும், செனட்டிலும் உறுப்பினராக வைத்து காரியங்களையாற்றினால், மாணவர்களுடைய எண்ணத்தோடு, கருத்து ஓட்டத்தோடு இந்தப் பிரதிநிதி பேசி, மாணவர்கள் இப்படி நினைக்கிறார்கள், அப்படி நினைக்கிறார்கள் என்று பேசும் நிலைமை ஏற்படும். அப்படிச் செய்தால், இன்னின்ன பிரச்சினைகளில் மாணவர்கள் இப்படி இப்படி தங்கள் கருத்துக்களை வைத்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டு, நடவடிக்கைகளை எடுக்க வசதியாக இருக்கும். பல பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதற்கும் இதனால் வழி ஏற்படும்.



1982 பிப்ரவரி 19] [திரு. ஆ. நல்லசிவன்]

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கல்லூரிகளிலே நடக்கும் அசம்பாவிதங்களைத் தடுக்க என்ன செய்யலாம் என்பதுபற்றி ஆராய இரண்டு கூட்டங்கள் நடத்தினார்கள். 'மாஸ்-காப்பியிங்', 'ரேக்கிங்' போன்றவைகளை எப்படித் தடுக்கலாம் என்று யோசனை நடத்தினார்கள். 18 வயது ஆனாலே மேஜர் ஆகிவிடுகிறான், அவனுக்குக் கல்யாணம் நடத்தி வைக்கலாம் என்ற நிலைமை இருக்கும்போது, 18 வயது நிரம்பியவுடனே அவர்களுக்கு ஏன் நாம் இந்தப் பிரதிநிதித்துவம் கொடுக்கக்கூடாது? இந்த இடத்தில் முக்கியமாகத் தேவைப்படும் இன்னொரு 'எலிமென்ட்' ஆகிய மாணவர்களைக் கொண்டு வந்து கண்டிப்பாகச் சேர்க்க வேண்டும். பிரின்சிபால்கள் 'எக்ஸ்-அஃபிஸியோ' வாக வந்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் வரலாம் என்று யூனிவர்சிட்டி ஆக்ட்லே இருக்கிறது. இதைத் தெளிவுபடுத்த வேண்டும். மதுரை-காமராசர் யூனிவர்சிட்டியிலே சில பிரின்சிபால்கள் பரம்பரையாக சிண்டிக்கேட்டிலே வந்திருக்கிறார்கள். இப்படி இவர்கள் இருப்பதையும் தவிர்க்க வேண்டும். அப்படி ஒருவர் தொடர்ந்து இரண்டு தடவைக்கு மேலே வரும் நிலைமையை மாற்ற வேண்டும். ரிஜிஸ்தாரர்களுக்கு சில குவாலிபிகேஷன்களை நிர்ணயிக்க வேண்டும். அக்கடாமிக் சைடிலே இருப்பவர்கள், அக்காடமிக் தரம் உயர வேண்டும் என்று இருக்கும்போது, நிர்வாகத்திலே தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு ஆட்களைப் போடும் நிலைமை இருக்கிறது. ரிஜிஸ்திரார்கள் சில்லறை விஷயங்களிலே கூட தலையிடுகிறார்கள். கல்வியைப் பரப்பும் நோக்கம் சிறந்து இருக்க வேண்டிய அந்த இடத்திலே, காசு, பைசா பார்த்து, அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஆட்களைப் போடுவது சரியல்ல. அண்ணாமலை யூனிவர்சிட்டியிலேயும் இந்த நிலைமைகள் இருக்கின்றன. ப்ரொஃபசர்களுக்குக் குறைந்த தகுதியுடைய யாரையும் ரிஜிஸ்திராராகப் போடக்கூடாது. அப்படிப்போடுகிறபோது, ரிஜிஸ்தரார்களுக்கும், வைஸ்-சான்சிலருக்கு இருப்பதுபோல, கண்டிப்பாக மூன்று ஆண்டுகள் தான் என்று வைக்க வேண்டும். அவர்களை சாகா வரம் பெற்றவர்களாக வைக்கக்கூடாது. அண்ணாமலைப் யூனிவர்சிட்டியிலே இப்போது டிகிரி கோர்ஸ் எல்லாம் எடுக்கப்பட்டு விட்டது. கல்லூரியிலே ஆசிரியர்கள் இருக்கிறார்கள். யூனிவர்சிட்டி நார்ம்ஸ்படி பார்த்தால் கூட, ரிட்ரென்ச் பண்ண வேண்டிய அவசியமில்லை. அண்ணாமலை யூனிவர்சிட்டியில் டிகிரி கோர்ஸ் எடுக்கப்பட்டதன் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு, சுற்றுவட்டாரங்களிலே இடமளித்து நிவர்த்தி பண்ணுவது சம்பந்தமாக அரசு யோசனை செய்வதாகக் கேள்விப்பட்டேன். நெய்வேலி

[திரு. ஆ. நல்லசிவன்] [1982 பிப்ரவரி 19

காம்பளக்ஸிலே ஒரு காலேஜ் வைக்க ஏற்பாடு செய்யலாம் என்றெல்லாம் சொல்லப்பட்டது. அல்லது சிதம்பரத்திலேயே வைக்க ஏற்பாடு செய்யலாம் என்றும் சொல்லப்பட்டது. ஆனால் அங்கே கட்டிடம் இல்லையென்று சொன்னார்கள். ஆகவே, அண்ணாமலை யூனிவர்சிட்டி மூலமாக அந்த வட்டாரத்திலேயே ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டு, இதை ஆதரித்து அமைகிறேன்.

* திரு க. இராமமூர்த்தி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். பல்வேறு பிரிவுகளைக் கொண்ட சட்ட முன்வடிவை சென்ற முறை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்தபோது, நான் முழுமையாக, கடுமையாக என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்தேன். ஆனால் அன்றைக்கு, அந்தப் பல்வேறு பிரிவுகளுடைய விளைவுகள் ஒருபக்கம் என்றாலும் கூட, அது கொண்டுவரப்பட்ட சூழ்நிலையும் நேரமும் அரசினுடைய முழுமையான நல்லெண்ணத்தை வெளிக்காட்டுவதாக இல்லை. அந்தச் சட்ட முன்வடிவுகளுடைய நோக்கங்கள் என்று எது குறிப்பிடப்பட்டிருக்கிறதோ அந்த நோக்கங்களுக்கான சட்ட முன்வடிவு கொண்டுவரப்படுவதான சூழ்நிலை தெரிவிக்கப்படவில்லை. தெளிவான கருத்தை அன்றைக்கு, என்னைப் பொறுத்த வரையில், நான் சொன்னேன். அன்றைக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்திலே சொன்னேன். எனக்கு ஞாபகம் இருக்கிறது. I think it was a challenge. "எல்லாப் பல்கலைக் கழகங்களுக்கும் இதுபோன்ற பொதுவான சட்டங்களைக் கொண்டுவர முடியுமா"? என்று கேட்டேன். இன்றைக்கு தமிழகத்திலே இருக்கும் எல்லாப் பல்கலைக் கழகங்களுக்கும் பொருந்தும் அளவிலே அதே அடிப்படையிலே சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டு, முதல்முறையாகக் கொண்டு வந்த சட்ட முன்வடிவினுடைய நோக்கம் சரியாக இருந்தும் கூட சூழ்நிலை அதற்கு மாறாக இருந்த நேரத்திலே, அன்றைக்கு இருந்த சூழ்நிலை எதுவாக இருந்தாலும், இன்றைக்கு தமிழகம் முழுக்க இருக்கும் எல்லாப் பல்கலைக் கழகங்களுக்கும் பொருந்தும் வகையில் ஒரே மாதிரியான 'யூனிஃபார்ம் லா' என்ற அளவிலே சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பதைப்பற்றி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்கலைக் கழகங்களைப் பொறுத்தவரையில், பல்வேறு



1982 பிப்ரவரி 19] [திரு. க. இராமமூர்த்தி]

மாற்றங்கள் எப்படி ஏற்படுகின்றன என்பதையெல்லாம் நாம் பார்க்கிறோம். இது வளர்ந்து வரும் ஒன்று என்பதோடு மட்டுமல்ல, இதை வளர்த்து வரும் பொறுப்பும் ஆட்சிக்கு இருக்கிறது. அதைச் செம்மையாக நாம் நிறைவேற்ற வேண்டும். அப்படிச் செம்மையாக நிறைவேற்ற வேண்டும் என்ற நிலையில் பார்க்கும்போது, வேறு பல கண்ணோட்டங்கள், கருத்தோட்டங்கள் வரத்தான் செய்கின்றன என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த இந்தக் கல்வி நிலையங்களிலே தொடங்கி பல்வேறு கருத்துக்கள் இந்த அவையிலே எடுத்து வைக்கப்பட்டன. எனக்கு ஒரு விஷயம் இப்போது நினைவிற்கு வருகிறது. அண்ணா அவர்கள் கூட பல நேரங்களிலே சில கருத்துக்களைச் சிந்திக்கத் தக்க வகையிலே சொல்வதுண்டு. ஒருமுறை

(பிற்பகல் 12-20)

அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். "இந்தியாவிலே முதலாளித்துவம் என்றும், புரட்சி என்றும், கம்யூனிசம் என்றும் பேசுகிறவர்கள் நினைப்பு எப்படி இருக்கிறது என்றால், முதலாளித்துவம் என்று சொன்ன உடனே, சாதாரண கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள டீ கடைகளில் வேலை செய்கிற தொழிலாளிகள் தங்களுடைய டீ கடையின் சொந்தக்காரர்தான் முதலாளித்துவத்தின் பிரதிநிதி என்று நினைக்கிறார்களே தவிர அவர்கள் கண்ணுக்கு டாட்டாவும், பிர்லாவும் தெரிவதில்லை" என்று குறிப்பிட்டிருக்கிறார். அதைப்போலத்தான் இன்றையதினம் புரட்சி, சமத்துவம், சோஷலிசம், நிலப்பிரபுத்துவம் பற்றிப் பேசுகிற பலரும் இருக்கிறார்கள். மாதம் ரூ. 4,000 சம்பளம் வாங்கும் வங்கிப் பணியாளர்களுக்கும், ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கும் மிகச் சாதாரணமான பெருக்குகிற தொழிலாளிக்கும் சங்கம் வைத்து அவர்களுடைய ஊதியத்தைப் பெருக்க வேண்டும் என்று போராடிக் கொண்டிருக்கும்போது, அதே பணி புரிகின்ற இன்னொரு வகையான தொழிலாளப் பிரிவினருக்கு இதுவே போதும் என்று சொல்லுகிற நிலையைப் பார்க்கிறோம். இப்படி முதலாளிகளுக்கு எதிராகப் பொருளாதாரத் தத்துவத்தையே கொச்சைப்படுத்துகிற நிலைமை இந்தியாவில்தான் பார்க்க முடியும்.

ஒருமுறை தொழிலதிபர் பிர்லா அவர்கள் சொன்னதாக நினைவு. "எனக்கு அடுத்த பிறவி என்று ஒன்று இருக்குமானால்—இப்போதே நான் ஆண்டவனை வேண்டிக் கேள்கிறேன்—அந்தப் பிறவியில் நான் ஒரு தொழிற் சங்கத் தலைவனாகப் பிறக்க விரும்புகிறேன்" என்றாராம்.

காரணம் முதலாளிகளுக்கெல்லாம் முதலாளியாக இருக்கிற வலிவும், வல்லமையும், வசதியும், புரட்சியைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் தொழிலாளர்களின் தலைவர்களுக்குக் கிடைக்கிறது. முதலாளிகளையே மிரட்டக் கூடிய அளவுக்கு. . .

**திரு. மு. சங்கரலிங்கம் :** அப்படியென்றால் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் போன ஜென்மத்தில் பெரிய ஆலை முதலாளியாக இருந்திருப்பாரோ ? (சிரிப்பு)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவைப் பற்றித்தானே பேசுகிறார் ?

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுக்கு மறு பிறவியில் நம்பிக்கையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி :** நல்ல வேளையாக நம்பிக்கையில்லை என்று சொன்னார்கள். இல்லையென்றால் அவர் மீண்டும் தொழிற் சங்கத் தலைவராகவே வர வேண்டும் என்று ஆண்டவனிடம் கேட்டிருப்பார். . .

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எனக்கு அந்த நம்பிக்கையில்லை என்று சொன்னதற்கு நன்றி தெரிவிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, நாங்கள் ஏதோ முதலாளித்துவத்தைக் கொச்சைப்படுத்துவதாகக் குறிப்பிட்டார். நான் தமிழ் நாட்டைப்பற்றி மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். வெள்ளைக்காரன் இந்த நாட்டை விட்டுப் போனதற்குப் பின்னால், அவர் சார்ந்த கட்சி ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, தமிழ் நாட்டில் ஏற்பட்ட மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் மாநிலக் கூட்டுறவு வங்கிகள் அனைத்திலும் யாரெல்லாம் தலைவர்களாக இருந்தார்கள் என்பதைப் பார்த்தாலே தெரியும். 1967 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலக்கப்படுகிற வரை, அவர்கள் எல்லாம் சாகா வரம் பெற்றிருந்தார்களா இல்லையா? அவர்களுக்கும் நிலப்பிரபுத்துவத்திற்கும் சம்பந்தம் உண்டா இல்லையா ?

அடுத்து, நான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது இருந்த நிலையைச் சொல்கிறேன். அண்ணா தி. மு. க. பீரியடிலும் சொல்கிறேன், கல்வி நிலையங்களெல்லாம் அத்தகைய நிலப் பிரபுக்கள் கூட்டத்திடம்தானே



இருந்தது ? கல்வியைச் சொல்லி அவர்களெல்லாம் நிலத்தின்மீது தங்களுக்கு இருந்த ஆதிக்கத்தின் காரணமாக, தொழிலில் அவர்களுக்கு இருந்த ஆதிக்கத்தின் காரணமாக, கல்வி நிலையங்களிலும் ஆதிக்கம் செலுத்தினார்களா இல்லையா ? அது இன்றைக்கும் தொடர்ந்து நடைபெறுகிறதா இல்லையா ?

அந்த வகையில் பேசாமல் எனக்கு மார்க்சிசம், லெனினிசம் பற்றி போதிக்க வருவது சரியல்ல. வேண்டாத பிரச்சினைகளையெல்லாம் பேச வேண்டாம். நான் "கான்கிரீட்" பிரச்சினையை இங்கே சொல்கிறேன். அந்தக் 'கான்கிரீட்' பிரச்சினைக்குப் பதில் சொல்லுவதை விட்டு வேறு எங்கேயோ ஓடினால், என்ன அர்த்தம் ? மாவட்டம் மற்றும் மாநில அளவில் அப்போது யாருடைய ஆதிக்கம் இருந்தது ? எனக்கு மார்க்சிசம், லெனினிசம் பற்றி போதிக்க வேண்டாம். அதைப்பற்றி எனக்குப் போதிப்பதற்கு வேறு ஆள் இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வாதம் சுவையாக இருக்கலாம். ஆனால் அது எனக்குச் சுமையாக இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் கருதிப்பார்த்து, தயவுசெய்து பல்கலைக் கழகத்தைப் பற்றி மட்டும் பேச விரும்புகிறேன்.

* **திரு க. இராமமூர்த்தி :** மாண்புமிகு உறுப்பினர் திரு நல்லசிவன் அவர்களுக்கு மார்க்சிசம் கம்யூனிசம் பற்றி போதிக்கிற அளவுக்கு நான் படித்தவனும் அல்ல, தெரிந்தவனுமல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அணுகுமுறைகளைப்பற்றிச் சொல்வதற்கு எனக்கு முழுமையான தகுதியிருக்கிறது என்று நம்புகிறேன். மற்றவர்களை விட அதிகமா குறைவா என்ற பிரச்சினைக்குள் போகவில்லை.

இது தொடர்பான வாதங்கள் இங்கே வந்ததால், நான் அதைக் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மறு பிறப்பில் நம்பிக்கையில்லை என்பது எனக்கே தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதால், நான் இதைச் சொல்லவில்லை. ஆனாலும் எனக்குத் தெரிந்த வகையில், கம்யூனிஸ்ட் தலைவர்களாக இருந்தவர்களே எவ்வளவு சநாதனிகளாக நடந்துகொண்டு, மிகுந்த ஆச்சாரப்படி தங்கள் வீட்டுத் திருமணத்தை நடத்திய புரட்சித் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பது தெரியும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** சநாதனியாக இருப்பவர்கள் ஒருகாலும் கம்யூனிஸ்டாக இருக்க முடியாது. அதைப்போலவே ஒருவரைக் கம்யூனிஸ்ட் என்று சொல்லிவிட்ட பிறகு, அவர் ஒருநாளும் சநாதனியாக இருக்க முடியாது.

காரணம் முதலாளிகளுக்கெல்லாம் முதலாளியாக இருக்கிற வலிவும், வல்லமையும், வசதியும், புரட்சியைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் தொழிலாளர்களின் தலைவர்களுக்குக் கிடைக்கிறது. முதலாளிகளையே மிரட்டக் கூடிய அளவுக்கு. . .

**திரு. மு. சங்கரலிங்கம் :** அப்படியென்றால் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் போன ஜென்மத்தில் பெரிய ஆலை முதலாளியாக இருந்திருப்பாரோ ? (சிரிப்பு)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவைப் பற்றித்தானே பேசுகிறார் ?

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுக்கு மறு பிறவியில் நம்பிக்கையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி :** நல்ல வேளையாக நம்பிக்கையில்லை என்று சொன்னார்கள். இல்லையென்றால் அவர் மீண்டும் தொழிற் சங்கத் தலைவராகவே வர வேண்டும் என்று ஆண்டவனிடம் கேட்டிருப்பார். . .

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எனக்கு அந்த நம்பிக்கையில்லை என்று சொன்னதற்கு நன்றி தெரிவிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, நாங்கள் ஏதோ முதலாளித்துவத்தைக் கொச்சைப்படுத்துவதாகக் குறிப்பிட்டார். நான் தமிழ் நாட்டைப்பற்றி மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். வெள்ளைக்காரன் இந்த நாட்டை விட்டுப் போனதற்குப் பின்னால், அவர் சார்ந்த கட்சி ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, தமிழ் நாட்டில் ஏற்பட்ட மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் மாநிலக் கூட்டுறவு வங்கிகள் அனைத்திலும் யாரெல்லாம் தலைவர்களாக இருந்தார்கள் என்பதைப் பார்த்தாலே தெரியும். 1967 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலக்கப்படுகிற வரை, அவர்கள் எல்லாம் சாகா வரம் பெற்றிருந்தார்களா இல்லையா ? அவர்களுக்கும் நிலப்பிரபுத்துவத்திற்கும் சம்பந்தம் உண்டா இல்லையா ?

அடுத்து, நான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது இருந்த நிலைமையைச் சொல்கிறேன். அண்ணா தி. மு. க. பீரியடிலும் சொல்கிறேன், கல்வி நிலையங்களெல்லாம் அத்தகைய நிலப் பிரபுக்கள் கூட்டத்திடம்தானே



இருந்தது ? கல்வியைச் சொல்லி அவர்களெல்லாம் நிலத்தின்மீது தங்களுக்கு இருந்த ஆதிக்கத்தின் காரணமாக, தொழிலில் அவர்களுக்கு இருந்த ஆதிக்கத்தின் காரணமாக, கல்வி நிலையங்களிலும் ஆதிக்கம் செலுத்தினார்களா இல்லையா ? அது இன்றைக்கும் தொடர்ந்து நடைபெறுகிறதா இல்லையா ?

அந்த வகையில் பேசாமல் எனக்கு மார்க்சிசம், லெனினிசம் பற்றி போதிக்க வருவது சரியல்ல. வேண்டாத பிரச்சினைகளையெல்லாம் பேச வேண்டாம். நான் "கான்கிரீட்" பிரச்சினையை இங்கே சொல்கிறேன். அந்தக் 'கான்கிரீட்' பிரச்சினைக்குப் பதில் சொல்லுவதை விட்டு வேறு எங்கேயோ ஓடினால், என்ன அர்த்தம் ? மாவட்டம் மற்றும் மாநில அளவில் அப்போது யாருடைய ஆதிக்கம் இருந்தது ? எனக்கு மார்க்சிசம், லெனினிசம் பற்றி போதிக்க வேண்டாம். அதைப்பற்றி எனக்குப் போதிப்பதற்கு வேறு ஆள் இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வாதம் சுவையாக இருக்கலாம். ஆனால் அது எனக்குச் சுமையாக இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் கருதிப்பார்த்து, தயவுசெய்து பல்கலைக் கழகத்தைப் பற்றி மட்டும் பேச விரும்புகிறேன்.

* **திரு க. இராமமூர்த்தி :** மாண்புமிகு உறுப்பினர் திரு நல்லசிவன் அவர்களுக்கு மார்க்சிசம் கம்யூனிசம் பற்றி போதிக்கிற அளவுக்கு நான் படித்தவனும் அல்ல, தெரிந்தவனுமல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அணுகுமுறைகளைப்பற்றிச் சொல்வதற்கு எனக்கு முழுமையான தகுதியிருக்கிறது என்று நம்புகிறேன். மற்றவர்களை விட அதிகமா குறைவா என்ற பிரச்சினைக்குள் போகவில்லை.

இது தொடர்பான வாதங்கள் இங்கே வந்ததால், நான் அதைக் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மறு பிறப்பில் நம்பிக்கையில்லை என்பது எனக்கே தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதால், நான் இதைச் சொல்லவில்லை. ஆனாலும் எனக்குத் தெரிந்த வகையில், கம்யூனிஸ்ட் தலைவர்களாக இருந்தவர்களே எவ்வளவு சநாதனிகளாக நடந்துகொண்டு, மிகுந்த ஆச்சாரப்படி தங்கள் வீட்டுத் திருமணத்தை நடத்திய புரட்சித் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பது தெரியும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** சநாதனியாக இருப்பவர்கள் ஒருகாலும் கம்யூனிஸ்ட்டாக இருக்க முடியாது. அதைப்போலவே ஒருவரைக் கம்யூனிஸ்ட் என்று சொல்லிவிட்ட பிறகு, அவர் ஒருநாளும் சநாதனியாக இருக்க முடியாது.

விடுத்து வேறு எதையோபற்றி காரசாரமான விவாதம் நடைபெறுகிறது. எனவே அதை விடுத்து பல்கலைக் கழக மசோதாவுக்கு உறுப்பினர் ஆதரவு தருகிறாரா என்பதைத் தெரிவிக்கக் கோருகிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : பல்கலைக் கழகத்தைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால் ஒன்றைப் பற்றிச் சொல்லாமல் இருக்க முடியாது. எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில், பரம்பரைத் தலைமை என்பது ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமை. இந்தியாவில்தான் அப்படிப் பட்ட முறை இருக்கிறது. உலகத்தில் வேறு எந்த நாட்டிலோ இருக்கிற தலைமையை வைத்துக்கொண்டு நாங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கவில்லை . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் வேறொரு மாநில முதலமைச்சர் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்ட வாசகங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் என்று ஆணையிடுகிறேன்

உறுப்பினர் அவர்கள் இச்சட்டமுன்வடிவின் மீதான தனது உரையை முடிக்கும் வரையில், அவையின் நேரம் அவையின் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 12-30)

திரு. க. இராமமூர்த்தி : ஆகவே இங்கே இல்லாத தலைமைக்கு, நாட்டுக்குச் சொந்தம் இல்லாத தலைமைக்குக் கட்டுப்பட்டு, அந்தத் தலைமையின் அடிப்படையிலே செயல்படுகின்ற கட்சிக்காரர்களைக் காண முடிகிறது. அதுபற்றி தொடர் விவாதத்திற்குள் நான் போக விரும்பவில்லை.

கல்வித் துறையைப்பற்றி ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். கல்வித் துறையிலே பல ஆண்டுக் காலமாக பல பேர் தொடர்ந்து இருந்திருக்கலாம். பிறகு அவர்கள் சில ஆண்டுக் காலமாக மாறியிருக்கலாம். அவர்கள் தொடர்ந்து இருக்கிறார்களா, இல்லையா என்ற விவாதத்திற்குள் நான் போக விரும்பவில்லை. ஆனால் அவர்கள் செய்த பணியை நாம் குறைத்து மதிப்பிட முடியாது. இந்தியாவிலே முதன் முதலாக தனியார் நன்கொடை என்ற அடிப்படையிலே பல்கலைக் கழகம் ஏற்பட்டது என்றால், அது தமிழகத்திலே தான். அது அண்ணாமலைப் பல்கலைக் கழகம்தான். அந்த அளவிற்கு புரட்சிகரமான செயலை பணம் படைத்த மற்றவர்கள் செய்துவிடவில்லை.



அன்றைக்கும் இந்தக் கட்சிகள் இல்லாமல் இல்லை. ஏழைகள் கல்வி பெறுவதற்காக அவர்கள் சங்கடப்படவில்லை. ஆனால் அதற்கு மாறாக தமிழகத்திலே பெரும்பான்மையான அளவிற்கு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களும், அரிசனங்களும் படித்து முன்னேற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த பெருமை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தையே சாரும் என்பதை பெருமிதத்தோடு இந்த நேரத்திலே என்னால் சொல்லாமலிருக்க முடியவில்லை. அந்த அளவிற்கு கல்வியை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வளர்த்திருப்பதை என்னாலே பார்க்க முடிகிறது.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வசதி உள்ளவர்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அந்த வாய்ப்பைச் செய்து கொடுத்தது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இருக்க முடியாது. ஆனால் அந்தப் பல்கலைக் கழகம் அமைந்திருக்கின்ற தென்னாற்காடு பகுதியிலும், தஞ்சை மாவட்டச் சுற்றுப்புறப் பகுதியிலும் இருக்கின்றவர்களுடைய புள்ளிவிவரக் கணக்கை எடுத்துப் பார்த்தால், பலன் அடைய வேண்டிய எத்தனை பேர்கள் பலன் அடையாமல் இழந்திருக்கிறார்கள் என்பது நீண்ட அனுபவம் உள்ள மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும் என்று நினைக்கிறேன். ஏனென்றால் நாங்கள் இரண்டு பேரும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

திரு. க. இராமமூர்த்தி : I do not hold a brief for Annamalai University or for Rajah Sir's family. ஆனால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் கல்வி இந்த அளவுக்காவது வளர்ந்திருக்கிறதென்றால், அதற்குக் காரணம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம்தான் என்பதை நன்றியோடு நினைவு கூர்கிறேன். நான் சென்னையிலேயே தங்கிப் படித்தேன் என்றாலும், என்னுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பல பேர் அங்கே படித்தார்கள். இங்கே வந்து பொறியியல் கல்லூரிகளில் இடம் கிடைக்காதவர்கள் எல்லாம் அங்கே படித்தார்கள். இன்னும் சொல்லப் போனால், ஊரை விட்டுப் போகத் தெரியாத பல பேருக்கு அங்கே இடம் கிடைத்தது. எவ்வளவு பேர் மனுப் போட்டார்கள் என்ற கணக்குக்கு வாருங்கள். தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், மக்கள் படிக்கவில்லை, கல்வி பரவவில்லை என்றால், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அதற்கு என்ன செய்ய முடியும்? மனுப் போட்டவர்கள் தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களா இல்லையா? அண்ணா

மலைப் பல்கலைக் கழகத்தில் இடம் கிடைக்காததால், கல்வியைத் தொடர முடியாமல் நின்றவர்கள் எத்தனை பேர்? அந்த வாதத்திற்குள்ளே நான் போக விரும்பவில்லை. "ஆதிக்கபுரி" என்ற அளவிலே கருத்தைப் பரப்புவது முறையல்ல. இன்றைக்கு மாற்றம் செய்கிறோம். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே மாற்றம் தேவை, சென்னைப் பல்கலைக் கழகத்திலே மாற்றம் தேவை, வேறு பல பல்கலைக் கழகங்களிலே மாற்றம் தேவை என்று சொல்லட்டும். அதற்காக அவர்களுடைய கடந்த காலத்தைக் கொச்சைப் படுத்துவது முறையல்ல. எங்களுடைய கட்சித் தலைவர்களோடு பேசும் போது, அந்த வாதம் வந்தது. துணைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும் அதைச் சொல்லுவதற்கு. அது ராஜா சர் அவர்களைப் பற்றியது. இப்படி சில நேரங்களில் சில விவாதங்கள் அவரை வைத்துக்கொண்டே மற்றவர்கள் எண்ணுகின்ற அளவிற்குப் பேச வேண்டியிருக்கிறது. "தமிழ், தமிழ் இசை என்று சொல்லி தமிழுக்காக வீதியிலே கொடி பிடித்துக்கொண்டு ஊர்வலம் நடத்திய அந்த ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களை நான் பார்க்கிறேன். இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்குத் தலைமை ஏற்று நடத்திய ராஜா சர் அவர்களை நான் பார்க்கிறேன்" என்று சொன்னார். காலம் கடந்துவிட்டதால் கடந்த கால வரலாற்றை இன்றைக்கு நாம் கொச்சைப் படுத்திக் கொண்டிருக்க முடியாது.

அதைப் போலவே கூட்டுறவுத் துறையிலே நம்முடைய பேரவைத் தலைவர் திரு. இராசாராம் அவர்களுடைய தந்தை திரு. கஸ்தூரி பிள்ளை அவர்கள் பல ஆண்டுக்காலம் இருந்தார்கள். கடைசி வரையில் அப்பழுக்கு இல்லாதவராக, மரியாதை உள்ளவராக இருந்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். சமுதாயத்திலே இப்போது மாற்றம் வருகிறபோது தேவை அதிகரிக்கிறது. கூட்டுறவுத் துறையை விரிவுபடுத்துகிறோம். அப்போது சில மாற்றங்களைச் செய்கிறோம். அதனால் ஏற்கெனவே இருந்தவர்களைப் பற்றிப் பொறுப் பின்றிப் பேசுவது முறையல்ல. இன்றைக்கு சில மாற்றங்களைக் கொண்டு வருகிறோம் என்றால், அது சமுதாயத்தினுடைய கட்டாயம். அந்த மாற்றங் களைக் கொண்டு வருகின்றபோது, அதற்குத் தடையாக யார் யார் இருக்கிறார் களோ அவர்கள் மீது குற்றம் சாட்டினால், நாம் ஒத்துக்கொள்ள முடியும். ஆனால் தென்னாற்காடு மாவட்டத்தில் பத்து பேர் தான் கல்லூரிக்குப் போகிற



அளவிற்கு நிலைமை இருந்தபோது, அன்றைக்கு 100 பேருக்கு ஏன் இடம் கொடுக்கவில்லை என்று இன்றைக்குப் பேசினால், அது வாதமாகாது, விதண்டா வாதமாகத்தான் இருக்கும்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் எழுந்தார்)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அடிக் கடி குறுக்கிட வேண்டாம். அவைக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இது மிக விரிவான பிரச்சினை. என்னிடம் ஏராளமான ஆதாரங்கள், புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. வேறு விவாதத்தின்போது பேசலாம்.

**திரு. க. இராமமூர்த்தி :** தயவுசெய்து மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் பேசும்போதே சொல்லியிருக்க வேண்டும். என்னைப் பொறுத்த வரையில், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளை நான் வரவேற்கின்றேன். கல்வித் துறையிலே ஒரு மாற்றம் வர வேண்டுமென்ற உள்ளுணர்வோடு, உண்மையாகவே சில மாற்றங்களைச் செய்வதை நான் வர வேற்கிறேன். என்னுடைய வேண்டுகோள் இந்த மாற்றங்களைச் செய்யும் போது, அது முழுவதுமாகப் பலன் தருகின்ற வகையிலே அமைய வேண்டும் என்பதுதான். இதிலே பல கருத்துக்கள் சொல்லப்பட்டன. துணை வேந்தர் களை ஏன் எல்லோரும் சேர்ந்து தேர்ந்தெடுக்கக் கூடாது என்று கேட்டார்கள். இதிலே யாருக்கு இடம் கொடுக்க வேண்டும் என்ற கருத்தும் சொல்லப்பட்டது. ரிஜிஸ்ட்ராரைத் தேர்ந்தெடுக்கலாம் அல்லது பதவிக் காலத்தை 3 ஆண்டுகள் என்று குறைக்கலாம் என்ற கருத்தும் சொல்லப்பட்டது. ஆட்சிக்கு எந்தக் கட்சி வேண்டுமானாலும் வரலாம், போகலாம். ஆனால் நிர்வாக இயந்திரம் நிலை யாக இருப்பது. அதைப் போலவே பல்கலைக் கழகத்திற்கு நிலையான நிர் வாக இயந்திரம்—அட்மினிஸ்ட்ரேட்டிவ் செட்-அப் வேண்டும். அதற்கு யார் தலைமையை ஏற்க வேண்டும்? நிரந்தரமற்ற தலைமையைக் கொண்டு போவது சரியாக இருக்குமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சட்டமுன் வடிவிலே இது வரவில்லையென்றாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய ஆலோசனைக்காக இதை வைப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

பல்கலைக் கழகங்களிலே அரசாங்கத்தினுடைய பிரதிநிதிகள் இடம் பெறுகிறார்கள். சிண்டிகேட்டிலும் மற்றவைகளிலும் இடம் பெறுகிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அது தேவைதான். ஆனால் அதே நேரத்தில் அவர்கள் இடம் பெறுகின்ற அமைப்புகளின் மூலமாக எடுக்க வேண்டிய சில நடவடிக்கைகளை அங்கே எடுக்காமல் விட்டுவிட்டு, இங்கே ஆட்சியின் மூலமாக எடுக்க வைப்பது நல்லதல்ல. அப்படி வராமல் இருக்கின்ற அளவிற்கு அங்கே அரசாங்கத்தின் சார்பாக அந்த அமைப்புகளிலே இடம் பெறுகிறவர்கள் தங்களுடைய பணியை ஆற்றுகின்ற முறையை, கட்டாயத்தை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அவர்களுக்கு உருவாக்க வேண்டும் என்று கேட்டு, அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற சட்ட முன்வடிவை நான் வரவேற்று, பாராட்டி, அமைகிறேன்,

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் சட்டங்களை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவு இந்த அவையில் இன்று விவாதிக்கப்படுகிறது. இத்தகைய ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வாருங்கள் என்று நாங்கள் அன்றே சொன்னோமே தவிர, இந்தச் சட்ட முன்வடிவை எதிர்க்கவில்லை. சட்டத்தை எதிர்த்தோம் என்று சிலர் சொல்லுவது தவறு. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கூட, குறிப்பாக எங்களைச் சுட்டிக்காட்டி, "முற்போக்குக் கருத்துக்களைப் பேசுகிறார்கள், ஆனால் இந்த மாதிரி சட்டங்களை எதிர்க்கிறார்களே" என்று மறைமுகமாகச் சொன்ன

(பிற்பகல் 12-40)

தாகக் கருதுகிறேன். அவர்கள் அப்படிச் சொன்னார்கள் என்று நான் நினைப்பது சரியாக இருந்தால், அவர்களுக்கு, துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் அந்தக் கருத்தை எதிர்க்கவில்லை. இந்த சட்ட முன்வடிவை இப்போது கொண்டுவந்திருப்பதன் காரணமாகச் சொல்கிறேன். அவசரச் சட்டமாக அதைக் கொண்டுவந்ததன் நோக்கம், கொண்டு வந்த முறைகள், செயல்படுத்திய முறைகள் ஆகிய வற்றைத்தான் எதிர்த்தோம். அப்போதே நான் சொன்னேன், "இதுதான் உங்கள் நோக்கமானால் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிலே இருக்கின்றவர்களுடைய பதவிக் காலம், இரண்டு மூன்று முறைகள் என்று இருந்து வந்திருப்



பதை மாற்றி, இளம் தலைமுறையினருக்கு வாய்ப்பளிக்கின்ற ஒரு புதிய முறையைக் கொண்டுவருவதாக இருந்தால், விரிவான முறையிலே சட்டங்கள் கொண்டு வாருங்கள். ஆனால் மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு முதலிலே ஒரு அறிவிப்பு செய்து, அதுவும் ஒரு சிண்டிகேட் தேர்தலை நடத்தி, மதுரைப் பல்கலைக்கழக எல்லைக்குட்பட்ட 4 ரெவின்யூ டிஸ்ட்ரிக்டிலே தேர்தல் நடத்தி, வாக்குச் சீட்டுக்களைக் கொடுத்து, பல்கலைக் கழகத் தேர்தல் நடத்தி, 'சீல்' வைத்துவிட்டு வந்த பிறகு இப்படி ஒரு அவசரச் சட்டம் கொண்டு வருவது முறையா?" என்று அதைத்தான் இப்போதும் கேட்கிறேன். அரசு ஏதோ அவசரப்பட்டது. இப்போது சட்டமாகக் கொண்டு வந்திருக்கிறது. இருந்தாலும் நான் அதை வரவேற்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இந்தக் கருத்திலே வேறுபாடு கிடையாது. இன்னொன்று எல்லோருக்கும் சேர்த்துக் கொண்டுவந்துவிட்டார்கள் என்று சிலர் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நான் அதைச் சொல்லவில்லை. எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் பல்கலைக் கழகங்களிலே இனி ஆதிக்கமே இருக்கக்கூடாது என்று சொல்கின்றார்கள். என்னைப் பொறுத்த அளவிலே, தனி ஆதிக்கம் இருக்க வேண்டும். அந்த ஆதிக்கம் 'அறிவு ஆதிக்கம்' ஆக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். ஆதிக்கம், ஆதிக்கம் என்று அவர் பூதாகாரமாகப் பயமுறுத்தினார். நாம் நம்மை சில விதிகளுக்கு உருவாக்கிக் கொண்டிருக்க முடியாது. நாம் நம்மை சில விதிகளுக்கு உட்படுத்திக்கொண்டு அதிலேயே அடங்கி வாழ்கிறோம். முதலிலே தனி மனிதனாகக் காட்டிலே வாழ்ந்து கொண்டிருந்தபோது, ஒரு விதமாக வாழ்ந்து கொண்டிருந்தோம். ஒரு சமுதாயமாக வாழ்கின்றபோது, சில உரிமைகளை ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, எல்லைகளை வரையறுத்துக்கொண்டு அந்த உரிமைகளை அமுல்படுத்திக்கொண்டு வாழ்கிறோம். அப்படித்தான் ஆட்சி என்பது உருவானது. ஆட்சி நடத்துகின்றபோது, சட்டங்களிலே சில வற்றை 'சரண்டர்' பண்ணியிருக்கிறோம். உரிமைகளைக்கூட விட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எல்லையை மீறும்போது, சட்டம் போடுகிறோம். அது ஜனநாயக முறை என்பது மட்டுமல்ல, அது சமுதாய வளர்ச்சி முறைக்கு ஏற்றது. அவர்கள் பேசுகின்றபோது அங்கே தற்கால ஆராய்ச்சி நடக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த ஆராய்ச்சி நடக்கிறது என்று சொல்கிறார்கள். நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரும் இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களும் சொன்னார்கள். அங்கே தற்கால ஆராய்ச்சிகள் நடக்கிறதோ இல்லையோ இங்கே அந்த ஆராய்ச்சி

நடக்கிறது என்று சொல்லலாம். இந்தச் சட்டத்திற்கும் அதற்கும் தொடர்பு இல்லை என்பதால், நான் அதை விட்டுவிடுகிறேன். இந்தச் சட்டத்தின் அளவிலேயே நின்று பேச விரும்புகிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு நான் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பல்கலைக்கழகங்கள் என்று சொல்லப்படுபவை, தன்னிச்சையாக அரசினுடைய எந்தவிதமான ஆதிக்கத்திற்கும் உள்ளாகாமல், ஆனால் அரசினுடைய அரவணைப்புடன் செயல்பட வேண்டும். அவை சமுதாயத்தினுடைய இன்றைய நிலையை உணர்ந்து, சமுதாயத்திற்குப் பயன்படத்தக்க அளவுக்கு, நம் இளைய தலைமுறையினரை நல்ல கல்வியுள்ளவர்களாக ஆக்க வேண்டும். இந்த நாட்டினுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு அளிக்கின்ற முறையில், பொறுப்புணர்வு பெற்றவர்களாக ஆக்க வேண்டும். பொறுப்புணர்வுடன் இளம் சமுதாயத்தினர் இந்த நாட்டிற்கு ஒரு நல்ல பணியைச் செய்ய வேண்டும். மேல் நிலைப் பள்ளி, ஆரம்பப் பள்ளி, உயர் நிலைப் பள்ளி இவைகளில் எல்லாம் நாம் அவர்களுக்கு அளிக்கும் கல்வியை நாற்றுப்பணிகளாக ஏற்றுக்கொண்டால், இந்த நாற்றுகளாக இருப்பவைகளை எடுத்து நட்ட பிறகு, அவைகள் நல்ல விளைகளங்களாக வளருவதற்கு இந்தப் பல்கலைக்கழகங்கள் பயன்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அந்த அளவுக்கு இந்தக் காரியங்களைச் செய்கின்றோமே தவிர வேறல்ல. அரசு அதற்கு இங்கே சட்டம் அமைத்துக் கொடுக்கின்றது. அதிலே தலையிடுகின்றது என்ற நிலைமை இல்லை. ஆனால் அவர்களை ஒழுங்குபடுத்துகின்ற அளவில் தலையிட வேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே இருக்கின்ற பைனான்சியல் ஆபீசர், கவர்ன்மெண்ட் ஆளாகத்தான் இருக்க வேண்டும். அங்கு வேறு ஆள் இருக்கக்கூடாது.

நான் 9 ஆண்டுக் காலமாக பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிலே தொடர்ந்து இருந்தேன். இனி சட்டப்படி இருக்க முடியாது. அதனால் நான் குறை சொல்லவில்லை. இருக்கின்ற இளைஞர்கள் அங்கு வந்து செயல்படட்டும். ஆனால் பல்கலைக் கழகங்களிலே இப்போது இருக்கக்கூடிய முறைகளிலே இன்னும் கொஞ்சம் சீர்திருத்தம் செய்ய வேண்டும். இந்த ஒரு துறையிலே மட்டும் சீர்திருத்தம் கொண்டுவந்திருக்கிறார்கள். இன்னும் பல துறைகளிலேயும் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்ற என் எண்ணத்தை நான் சொல்லிக்கொள்கிறேன். ஆட்சிக் குழு என்பது ஒரு தனிப்பட்ட அமைப்பாக இருக்கிறது. அதற்கு ஆலோசனைக் குழு என்று தமிழிலே போட்டிருக்கிறார்கள். அது ஆலோசனைக் குழு அல்ல. அது பேரவை. அதாவது பல்கலைக் கழக ஆட்சிக் குழு. அது ஒரு கேபினட் மாதிரி. அசெம்பிளிக்கு இருப்பதுபோல 'பைனான்சியல் பவர்' அங்கே வந்திருக்கிறது. அதுமாதிரி தான் செனட். அந்த செனட்தான் பட்ஜெட்டை 'அப்ரூவ்' பண்ண வேண்டும். அது ஓரளவுக்கு பேரவை மாதிரி. சிண்டிகேட் என்பது ஆட்சிக் குழு. அதற்கு ஆலோசனைக் குழு என்பது சரியல்ல. செனட் ஒரு தன்னாட்சி கொண்ட தனி அமைப்பாகும். நாம் பிளாக் கிராண்ட் கொடுக்கிறோம். யூ.ஜி.சி. கிராண்ட் கொடுக்கிறது. இப்படி பல்வேறு ஸ்தாபனங்கள் ஒவ்வொரு ஸ்கீமிற்கும் பணம் கொடுக்கின்றன. இப்படி ரூ. 75 லட்சம், ரூ. 80 லட்சம் ஒரு கோடி ரூபாய் என்ற அளவில்கூட வந்துவிடுகிறது. பல பல்கலைக் கழகங்களுக்கும் வந்துகொண்டிருக்கும். இதற்கு அவர்கள் பட்ஜெட் போட்டு, அந்த பட்ஜெட்டை 'அப்ரூவ்' பண்ணுவதுதான் செனட் ஆகும். அதற்கு ஆலோசனைக் குழு என்பது சரியல்ல. அடுத்தது, கல்வி மன்றம். அவர்களுக்குப் பிறகு அகாடெமிக் கவுன்சில். கல்வித் துறைக்கு அந்தப் பக்கம் இந்தப் பக்கம் என்று போகாமல் பாடத் திட்டங்கள் வகுப்பதிலே, பாடத் திட்டங்களிலே சீர்திருத்தத்தைச் செய்ய வேண்டும். இவைகளையெல்லாம் அவர்கள் கவனிக்க வேண்டும். அந்தச் சொல் ஆங்கிலத்திலே சரியாக இருக்கிறது. ஆனால் இந்த மொழி பெயர்ப்புத் துறையிலே மாற்றம் உருவாக்கப்பட்டிருக்கிறது. பேரவை என்று வைத்திருந்தால், நன்றாக இருக்கும். அதுதான் என்னுடைய கருத்து. அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். அதை ஒரு தனி ஆலோசனைக் குழு என்று சட்டத்திலே போட்டுவிட்டால், 'மானெட்டரி பவர்ஸ்' என்று வரும்போது, அங்கே இருக்கின்ற ஆலோசனைக் குழு அதைப்பற்றி எப்படிச் சொல்லலாம் என்று சொல்லி, அது நீதிமன்றத்திற்குப் போய் வருகின்ற நிலைமைகள் வந்துவிடக்கூடாது என்ற அச்சத்தில்தான் நான் இதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல பேர்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றபோதுகூட, அங்கே இருக்கக்கூடிய செனட் மெம்பர், அகாடெமிக் கவுன்சில் மெம்பர் எல்லாம் இரண்டு தடவைக்கு மேற்பட்டு தேர்தலுக்கு நிற்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அது நிர்வாக முறைதான். அதை நான் வரவேற்கிறேன். இணை வேந்தர், துணை வேந்தர் என்று பேராசிரியர்கள் வருகிறார்கள். இப்படி சட்டப் பேரவையிலே இருந்தும் அனுப்புகிறோம். இப்படிப் போகின்றவர்களும் இருக்கிறார்கள். ஓரளவுக்கு 3, 4 முறைகள் பணியாற்றி அனுபவம் பெற்றவர்களையும் நாம் அங்கே இருக்கச் செய்ய முடியும். அங்கே அவர்கள் ஆட்சி வேண்டாம்.

தேர்ந்தெடுக்கக் கூடியவர்கள் ஆட்சி அங்கே இருக்கட்டும். 'வோட்டிங் மெஜாரிட்டி' என்று வரும்போது, அது அவர்களிடமே இருக்கட்டும். அங்கே நியமனம் பெறுகின்றவர்கள் என்று 120 பேர்கள் இருந்தால், ஒரு 20 பேர்கள் அனுபவம் உள்ளவர்கள் இருக்கலாம். 100 பேர்கள் முடிவெடுக்கலாம். அதே நோக்கில் பழமையான நிலைமைகளையும் எடுத்துச் சொல்ல அனுபவம் பெற்றவர்கள் இருக்கலாம். அவர்களும் பழைய நிலைமைகளையும் புதிய நிலைமைகளையும் உணர்ந்து ஆலோசனை செய்கின்ற அளவுக்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்கு இடம் கொடுக்கின்ற அளவிலே அந்த உறுப்பினர்கள் குழு அமைய வேண்டுமென்ற என் கருத்தைச் சொல்லிக்கொள்கிறேன். அந்தக் கல்விக் குழுவில் உறுப்பினர்கள் என்று வருகின்றபோது, அவர்கள் இரண்டு முறைகள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டு வர வேண்டும் என்று போட்டிருக்கிறோம். இதில் பேராசிரியர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு வருவார்கள். புதிய பேராசிரியர்கள் வருவதும் நல்லது. இந்தப் புதிய திட்டத்திலே அவர்கள் வருவதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் பழைய வர்கள் ஒரு பகுதியினராவது இருக்க வேண்டும். பழமை இருக்க வேண்டும். பழமைகளையும் அவர்கள் புதியவர்களுக்குச் சுட்டிக் காட்டிக்கொண்டிருக்க வேண்டும். பழமையையும் தெரிந்துகொண்டு புதுமைக்குப் போக வேண்டும். அது ஒருவேளை புரட்சிகரமான கருத்துக்கு மாறாக இருக்கலாம் என்று மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்கள் நினைக்கக்கூடாது. தவறான வழி காட்டுகின்ற நிலை வரக்கூடாது. அந்த அச்சத்தின் காரணமாகத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

இன்னொன்று, பல்கலைக் கழகங்கள் நல்ல மாணவர்களை, இளம் மாணவர்களை உற்பத்தி செய்து தருகின்ற அளவில் இருக்க வேண்டும். அவர்கள் சமுதாயப் பிரச்சினைகளை ஆராய்ந்தறிந்து, அறிவுக் கட்டுரையாக ஆராய்ச்சிக் கட்டுரையாகத் தரவேண்டும். அவசியமில்லாத ஆராய்ச்சிகளுக் கெல்லாம் பணம் கொடுக்கிறார்கள். நமக்குத் தேவையானது என்ன என்று பார்த்துக்கொடுக்க வேண்டும். நக்சலைட்டைப்பற்றி ஆராய்ச்சி நடத்திச் சொல்லலாம். அதிலே எழக்கூடிய பிரச்சினைகளைப்பற்றிச் சொல்லலாம். வேலையில்லாத் திண்டாட்டம் ஏன் உருவாகிறது என்று ஆராயலாம். இந்த 3 பல்கலைக் கழகங்களிலும் இதைப்பற்றியெல்லாம் ஆராய்ச்சி செய்து நமக்குத் தருவார்களானால், நாமும் அதைப் படித்துவிட்டு, இங்கே அவையிலே பேசி தீர்வு காணலாம்.



மேலை நாடுகளிலேயிருந்தெல்லாம் கூட இளைஞர்கள் ஆராய்ச்சி செய்ய வருகின்றார்கள். இங்கேயும் வருகிறார்கள். ஆண்களும், பெண்களும் வருகின்றார்கள். இங்கே 6, 7 ஆண்டுகள் இருந்து ஆராய்ச்சி செய்கிறார்கள். குடும்பங்களிலே தங்குகிறார்கள். அவர்கள் டேப் ரிக்கார்டர்களை வைத்து பேசச் சொல்கின்றார்கள். எழுதிக் கேட்டு வாங்குகிறார்கள். இந்தியாவினுடைய வாழ்க்கை முறைகளை, தமிழ் நாட்டு மக்களுடைய வாழ்க்கை முறைகளைப் பற்றியெல்லாம் ஆராய்ச்சி நடத்துகிறார்கள். அதுபோல நாமும் ஒவ்வொரு ஆராய்ச்சிக்கும் நிதி ஒதுக்க வேண்டும். ஒவ்வொரு மாணவனுக்கும் நிதி கிடைக்கின்ற வசதி செய்துதர வேண்டும். யாராவது ஒரு மாணவனுக்கு நிதி கொடுத்து இந்த ஆராய்ச்சிகளைச் செய்யச் செய்தால், அவர்களுக்கு ஒரு ஆனரரி போஸ்ட் கொடுக்கலாம். அவர்கள் கொடுக்கின்ற பணத்தை அந்த மாணவர்கள் ஏற்றுக்கொண்டு செய்யலாம். பணம் கொடுத்து உதவுகின்றவர்களுக்கு அந்தக் கல்விக் குழுக்களில் ஆனரரி மெம்பர்களாகப் பதவி கொடுக்கலாம்.

(பிற்பகல் 12—50)

அப்படி ஆராய்ச்சி மாணவனுக்கு வருடத்திற்கு 10,000 ரூபாய் செலவானால், அவர்கள் 3 வருடங்கள் ஆராய்ச்சி செய்வதற்கு 30,000 ரூபாய் ஆகும். அதைத் தருகிறவர்களுக்கு மதிப்பு கொடுக்கும் வகையில் ஏதாவது செய்யலாம். பல்கலைக் கழகத் துணைவேந்தரோடு மாநில அரசு தொடர்பு கொண்டு, அவர்கள் ஆராய்ச்சிக்கு எடுத்து வைத்துள்ள தலைப்பைக்கூட பார்க்க வேண்டும். பேராசிரியர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்கள்தான் வழிகாட்டி. தவறாக நினைக்க வேண்டாம். எனக்கு நன்றாகத் தெரியும். பல பேராசிரியர்கள் ஆராய்ச்சிக் கட்டுரையை 'அப்ரூவ்' செய்ய ரூபாய் கேட்கிறார்கள். இப்படி இருந்தால், எங்கே காப்பாற்றுவது? நாசில்நார் ரூபாய் வாங்குகிறார் என்று ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். மதுரைப் பல்கலைக் கழகத்தில் நான் ஆட்சிக் குழுவில் இருந்தபோது, ராமேஸ்வரம் பிஷரீஸ் துறையிலிருந்து ஒரு மாணவன், ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து தந்தான். இன்னின்ன பொருள்கள் கொண்டு வாருங்கள் என்று ஒரு பேராசிரியர் கேட்டிருக்கிறார். அவரை விசாரித்ததில், பின்னாலே ரூபா[illegible] கொடுக்கிறேன் என்றுதான் சொன்னேன் என்கிறார். இத்தகைய சம்பவங்[illegible] எல்லா மட்டங்களிலும் இருக்கின்றன. அதைத் தடுக்க வேண்டிய பொ[illegible] அரசுக்கு இருக்கிறது. அது கடுமையான வேலைதான். அதை அரசு[illegible] வேண்டும்.

பதிவாளரைப் பொறுத்து பல கருத்துக்கள் இருக்கின்றன. பேரவையில் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அது நிரந்தரப் பதவியாக இருக்க வேண்டும். பல்கலைக் கழகப் பதவியாக இருக்க வேண்டும். அங்கே பைனான்ஸ் ஆபிசராக அரசிலிருந்தோ, ஏ.ஜி. அலுவலகத்திலிருந்தோ, ஆடிட் அலுவலகத்திலிருந்தோ 3 வருடங்களுக்கு அனுப்ப வேண்டும். பிறகு வேறொருவரை அனுப்ப வேண்டும். ரிப்போர்ட்டுகள் காலத்தில் வரவில்லை என்றால், பைனான்ஸ் ஆபிசரைக் கேட்க வேண்டும். பைனான்ஸ் ரிப்போர்ட் குறித்து பலவித ரிமார்க்ஸ் இருக்கின்றன. அதைச் சரியாகக் கவனிக்க வேண்டும். ரிஜிஸ்ட்டிரார் அப்பாயின்ட்மென்ட்டை பல்கலைக் கழகம் வைத்திருக்க வேண்டும். பல்கலைக் கழகத் துணைவேந்தருக்கு நிதி அதிகாரம் கிடையாது. ரிஜிஸ்டிரார்தான் எல்லா செக்குகளிலும் கையெழுத்து போட வேண்டும். 3 வருடங்களுக்குப் பிறகு அவர் போய்விட்டால், யாரிடம் கேட்பது? 5 வருடத்திற்கு ஒருமுறை ஆட்சி வரும், போகும், செக்ரடேரியட் நிரந்தரமாக இருக்கும். அதைப்போல ரிஜிஸ்ட்டிரார் பதவி நிலையானதாக இருக்க வேண்டும். ரிஜிஸ்டிரார் ஆக நியமிக்கப்படுபவருக்குக் கல்வித் தகுதியாக ஐந்து வருடங்கள் கல்லூரியில் முதல்வராக இருந்தால் முன்னுரிமை கொடுக்கப்படுமென்று இருப்பதை வரவேற்கிறேன். அதோடு அக்கவுன்டெஸ்ட் பாஸ் செய்தவராக இருக்க வேண்டும். அதற்குப் பேனல் வைக்க வேண்டும். பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை தம் மாநிலத்தில் குறைவுதான். மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், பீஹார் போன்ற மாநிலங்களில் நாம் கல்லூரிகளை ஆரம்பிப்பது போன்று பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்கிறார்கள். ஏனென்றால் டெல்லிக்குப் பக்கத்தில் இருக்கிறார்கள். அவர்களால் யு.ஜி.சி.யில் பணம் வாங்க முடியும். செங்கற்பட்டிலிருந்து சென்னைக்கு வருவதுபோல அவர்கள் டெல்லிக்குப் போகிறார்கள். பல்கலைக் கழக மானியக் குழுவின் நிதி நமக்கு முறையாக வரவில்லை; வட மாநிலங்களுக்கு வருவதுபோல் வரவில்லை என்று சொல்வதில் தவறு ஒன்றுமில்லை. இங்கே உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை, பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை கூடியிருக்கிறது. முதுகலைப் பட்டம் படிப்பவர்கள் எண்ணிக்கை அங்கே அதிகமாக இருக்கிறது. அந்த அளவிற்கு இங்கே இல்லை. அந்த எண்ணிக்கை பெருக வேண்டும். அந்த நிதியைப் பெற கல்வியமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆராய்ச்சி அமைப்புகள் நல்ல முறையில் நடக்கவும், பல்கலைக் கழகங்கள் இந்த நாடும்,



சமுதாயமும் எதை எதிர்பார்க்கிறதோ அந்தச் சவாலை—சமுதாயம் விடுகிற சவாலை, காலம் விடுகிற சவாலை—ஏற்றுக்கொள்ளும் அமைப்புகளாக மாற வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

இந்த நாட்டிலே நம்முடைய கல்வி முறை வருவதற்கு முன்னால், ஆங்கிலேயரின் கல்வி முறை வருவதற்கு முன்னால், தாயுமானவர் "கல்லாத பேர்களே நல்லவர்", அதோடு "கற்றறிந்த நனிமூடர்" என்று சொல்லி விட்டார். அது இன்றைக்கும் உண்மையாக இருக்கிறதென்ற நிலை வராத அளவிற்கு, கற்றவர்கள் நாட்டிலே மற்றவர்களுக்கு வழி காட்ட வேண்டும். அதற்கு பல்கலைக் கழகங்கள் வழி காட்ட வேண்டுமென்று சொல்லி, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஆகியவை குறித்த சட்டங்களிலே ஒரு திருத்தத்தைக் கொண்டுவரும் இந்தச் சட்டமுன் வடிவிற்கு, மாண்புமிகு உறுப்பினர்கள் கட்சி வேறுபாடு இன்றித் தங்களுடைய ஆதரவைத் தெரிவித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பல்கலைக் கழகங்கள்பற்றி இப்படி ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வர வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டதற்குக் காரணம், பல்கலைக் கழகங்கள் பல்கலைக் கழகங்களாக இருந்து சமுதாயத்திற்குப் பயன்படவில்லை என்பதுதான். பல்வேறு நாடுகளிலே பல்கலைக் கழகங்கள் சமுதாய முன்னேற்றத்திற்குத் தேவையான சேவையைச் செய்திருக்கின்றன. குறிப்பாக சோவியத் ரஷ்யாவில் சைபீரியா பாலைவனம் ஒரு களர் நிலமாக இருந்து, எதற்கும் பயன்படாத அளவில், அரசால் தண்டனை விதிக்கப்பட்டவர்களை அனுப்பும் இடமாக இருந்தது. இன்றைக்கு மக்கள் வாழும் இடமாக, பல்வேறு விவசாயம் நடைபெறக்கூடிய இடமாக, இன்னும் சொல்லப் போனால் விஞ்ஞான ஆராய்ச்சி செய்யும் தலைமைப் பீடமாக அது இருக்கிறதென்றால், அதற்கு அடிப்படையான வித்தினை ஊன்றியவர்கள் மாஸ்கோ பல்கலைக் கழகப் பேராசிரியர்கள். அங்கே ஓராண்டுக் காலம் இருந்து, அங்கேயுள்ள தட்ப வெப்ப நிலையை உணர்ந்து, மீண்டும் மாஸ்கோ பல்கலைக்கழகத்திற்கு வந்து தங்கி, ஆராய்ச்சி செய்து அங்கே விளையக்கூடிய ஒரு வகை கோதுமையையும், அங்கே வாழக்கூடிய

நிலையையும் கண்டுபிடித்து அதற்காகப் பல்வேறு யோசனைகளைச் சொல்லி,
சைபீரியப் பாலைவனத்தை சோவியத் ரஷ்யாவின் செல்வம் கொழிக்கும்
இடமாக ஆக்கியிருக்கிறார்கள். பல்கலைக் கழகம் என்பது சமுதாயத்
திற்குப் பயன்படும் ஒன்று என்று யார்க்குமளவிற்கு பெருமைப்படக்கூடிய
பல்வேறு ஆராய்ச்சிகளைச் செய்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய
பல்கலைக் கழகங்களைப் பார்க்கும்போது, இவற்றைப் பல்கலைக் கழகங்கள்
என்று சொல்வதைவிட, இவை பெரிய கல்லூரிகள் என்ற அளவுக்குத்தான்
இருக்கின்றன என்று சொல்ல வேண்டும். அந்த அளவிற்குச் செய்து
கொண்டிருக்கிறார்கள் என்ற உணர்வுதான் ஏற்படுகிறது. ஆராய்ச்சிகள் பற்றிப்
பல்வேறு கருத்துக்களை எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இங்கே சொன்னார்
கள். பத்திரிகைச் செய்தி படித்தேன். பல்கலைக் கழகத்தில் ஒருவர் ஓர்
ஆராய்ச்சி செய்திருக்கிறார். ஈ பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார். அதைக்
கூப்பிடுகிறார். அது நகர்ந்து வந்து, விரலைத் தாண்டிச் செல்கிறது. ஆராய்ச்சி
யாளரின் விரல் பக்கம் வந்து ஈ தாண்டிச் செல்கிறது ஈக்கு 6 கால்கள், நடுவில்
உள்ள 2 கால்களைத் துண்டிக்கிறார்கள். பிறகு மறுபடியும் கூப்பிடுகிறார்கள்.
அது விரலைத் தாண்டிச் செல்கிறது. மறுபடியும் 2 கால்களைத் துண்டித்து
விடுகிறார்கள். மறுபடியும் அழைக்கும்போது அது விரலைத் தாண்டிச்
செல்லுகிறது. இறுதியாக உள்ள 2 கால்களையும் அகற்றிவிடுகிறார்கள். மறு
படியும் கூப்பிடுகிறார்கள். அது வரவில்லை. ஆராய்ச்சியின் முடிவு —ஈக்கு
காது கேட்கவில்லை, அதனால் வரவில்லை என்று முடிவு சொல்லுகிறார்கள்.
இப்படிப்பட்ட ஆராய்ச்சிகள் அளவு கடந்து செய்யப்பட்டிருக்கலாம். சமு
தாயத்திற்குப் பயன்படும் அளவிற்கு என்ன செய்திருக்கிறார்கள்? டைம்ஸ்
ஆஃப் இந்தியாவில் ஒரு இந்திய விஞ்ஞானியின் கருத்தைப் பார்த்தேன்.
இந்தியாவில் நடைபெறும் ஆராய்ச்சிகள் எல்லாம் 'இமிடேடிவ் ரிசர்ச்'
என்ற அடிப்படையிலேதான் நடைபெறுகிறதென்றும், இந்த நாட்டு
மக்களுக்குப் பயன்படும் ஆராய்ச்சிகளைச் செய்யவில்லை என்றும் சொல்லி
யிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் பல்வேறு கட்டங்களிலே பேசும்
போது, மக்களுக்குத் தேவைப்படும் ஆராய்ச்சியை என்று செய்கிறோமோ
அன்றைக்குத்தான் நோபல் பரிசு பெறும் விஞ்ஞானியைப் பார்க்க முடியும்
என்று சொல்லி வந்தேன். ஆகவே நூற்றுக்கு மேற்பட்ட பல்கலைக் கழகங்
களை வைத்துக்கொண்டு ஆண்டுக்கு ஒரு நோபல் பரிசு பெறும் அறிஞர்கள்
கூட வரவில்லை என்றால், அதற்கு என்ன காரணம் என்று ஆய்வு செய்ய
வேண்டும்



(பிற்பகல் 1—00)

இன்றைக்கு உலகத்திலே இருக்கிற விஞ்ஞானிகளில் மூன்றில் ஒரு பகுதியினர்
இந்தியாவில்தான் இருக்கிறார்கள். இவ்வளவு பேரையும் வைத்துக் கொண்டு
நாம் ஏன் நோபல் பரிசு பெறக்கூடாது? பரிசு பெற்றுத்தான் நமக்குப்
பெருமை வர வேண்டுமென்ற எண்ணத்தில் நான் சொல்லவில்லை. ஆனால்
சமுதாயத்திற்கு நல்லது செய்யமுடியாத நிலையில் இருக்கக்கூடிய பல்கலைக்
கழகங்களாகத்தான் இந்தியாவில் உள்ள அத்தனைப் பல்கலைக் கழகங்களும்
இருக்கின்றன. தமிழ் நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள் மட்டும்தான் அப்படி
இருக்கின்றன என்பது சரியல்ல. இங்காவது ஒரு துணை வேந்தர் பதவி
காலியாக இருக்கிறது என்றால், அதற்கு வர ஆட்கள் தயாராக இருக்கிறார்கள்.
ஆனால் வடக்கே துணைவேந்தர் பதவிக்கு ஆட்கள் வரக்கூடிய நிலை
இல்லை. அப்படிப் பல பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. இவைகளை
யெல்லாம் சிந்தித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலையில்தான்
இதைக் கொண்டு வந்திருக்கிறோம். சென்னைப் பல்கலைக் கழகத்தைப்பற்றிச்
சொல்ல வேண்டுமானால், தொடர்ந்து 25 வருட காலத்திற்கு ஒருவரே துணை
வேந்தராக இருந்திருக்கிறார் என்று சொல்லி பெருமைப்பட்டுக்கொள்ள முடியு
மே தவிர வேறு ஒன்றையும் விசேஷமாகச் சொல்ல முடியாது. ஆனால் சாதா
ரண மக்களின் அறிவு வளர்ச்சிக்கு இந்தப் பல்கலைக் கழகம் என்ன செய்திருக்
கிறது என்றால், இப்போதுதான் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதையும்
நான் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். இப்போது அஞ்சல் வழிப்பாடத்
திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். தொலை தூரத்தில்,
கிராமப்புறத்தில் இருக்கிறவன் படித்து பட்டம் பெறக் கூடாது என்று
வைத்திருந்த கட்டுப்பாடு தகர்த்து எறியப்பட்டு விட்டது. ஒரு பகுதியின
ருடைய ஆதிக்கம் இருந்தது அகற்றப்பட்டு விட்டது. கல்வி அறிவு நாட்டிலுள்ள
எல்லா மக்களுக்கும் எளிதில் கிடைக்க வேண்டுமென்ற நல்லுணர்வு அவர்
களுக்கு அன்றைக்கு இல்லை. அத்தகைய தடைகளை, கட்டுப்பாடுகளை
உடைத்தெறியத்தான் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம்.
எல்லோரும் வளர வேண்டும், எல்லோரும் அறிவைப் பெற வேண்டும் என்கிற
பரந்த மனப்பான்மை இல்லாமல் இருந்தது. ஆதிக்க மனப்பான்மைதான்
அங்கு இருந்து வந்தது. கல்வி, அறிவாற்றல் சமுதாயத்திற்கு வர வேண்டும்,
சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டுமென்ற நல்லுணர்வோடு பார்த்தால்தான்
இந்தப் பல்கலைக் கழகங்களைப்பற்றியெல்லாம் நாம் அவசியம் சிந்திக்க

வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆசிரியர்கள், "எங்களுக்குக்கூட ஏன்
பிரதிநிதித்துவம் தரக் கூடாது ?" என்று கேட்கிறார்கள். "எங்களுக்கும்
பிரதிநிதித்துவம் இல்லையே, எங்களுக்கும் தாருங்கள்" என்று கேட்கி
றார்கள். அதே நேரத்தில் அறிவு வளர்ச்சிக்கும் ஆராய்ச்சிக்கும் தங்களுடைய
எண்ணங்களைச் செலவிட முடியாதவர்கள் எல்லாம் அதில் ஆதிக்கம்
செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி ஆதிக்கம் செலுத்திக் கொண்
டிருப்பதன் காரணமாக, ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள் அங்கு பிரதிநிதித்
துவம் பெற முடியாத நிலை இருக்குமேயானால், அதுபற்றி இந்த அரசு
சிந்தித்து நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது. அந்த அடிப்படையில்
தான் இன்றைக்கும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். மதுரைப்
பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையிலும், குறிப்பிட்ட ஒருவரை மனதில்
வைத்து அவர் அந்தப் பதவிக்கு வருவதைத் தடுக்க வேண்டுமென்ற
எண்ணத்தில் எடுக்கப்பட்டதல்ல அந்த நடவடிக்கை. அது கொண்டு வரப்
பட்ட தேதிதான் அப்படிப்பட்ட ஒரு எண்ணத்தை உருவாக்கியிருக்குமே
தவிர, அதற்கான வேலை ஒரே நாளில் தொடங்கி முடிக்கப்படவில்லை.
அந்த மசோதாவை இங்கு ஆய்வு செய்தோம். டில்லியிலிருந்து ஒப்புதல்
பெற்றோம். அதன் பிறகு ஆளுநரிடமிருந்து கையெழுத்து வாங்கினோம்.
இவ்வளவெல்லாம் செய்து அதை வெளியிடுவது என்றால் ஒரே நாளில்
செய்யக் கூடிய காரியமா அது? அதற்கான முயற்சியை ஒரு மாதத்திற்கு
முன்னாலிருந்தே எடுத்தோம். ஆகவே, குறிப்பிட்ட ஒரு நாளில் எடுத்தோம்
என்று சொல்வது சரியல்ல. முன்னாலிருந்தே அதற்கான நடவடிக்கையில் ஈடு
பட்டிருந்தோம். அப்போது இங்கே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள், "குறிப்
பிட்ட அந்தப் பல்கலைக் கழகத்துக்கு மட்டும் ஏன் கொண்டு வருகிறீர்கள் ?
மற்ற எல்லாப் பல்கலைக் கழகங்களுக்கும் கொண்டு வருவதுதானே ?" என்று
கேட்டிருக்கிறார்கள். ஆகவே இப்போது எல்லாப் பல்கலைக் கழகங்களுக்கும்
இந்த அரசு சட்டம் கொண்டு வந்திருக்கும் அடிப்படையில் எல்லா உறுப்பினர்
களும் மனப்பூர்வமாக ஆதரவு தந்திருக்கிறார்கள் என்றுதான் நான் கருதுகி
றேன். ஒந்த ஒரு தனி மனிதனுடைய பெயரையும் மனதிலே வைத்து நாங்கள்
இதை அன்றைக்குக் கொண்டுவரவில்லை என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்
கிறேன். இப்போது எல்லா பல்கலைக் கழகங்களுக்கும் இந்தச் சட்டத்தைக்
கொண்டு வந்ததன் மூலம் அன்றைக்கு தவறாகப் புரிந்து கொண்டவர்களும் கூட
உண்மை நிலைமையைப் புரிந்துகொள்ள இது வாய்ப்பாக அமைகிறது.
அப்படி தவறு ஒன்றும் நடக்கவில்லை என்பதை உணர்ந்து கொள்வார்கள்.



ஆசிரியர்களுக்குக்கூட அங்கு பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமென்று விரும்பு
கிறோம். அதே நேரத்தில் மாணவர்களுடைய பிரதிநிதிகள்கூட இருக்க வேண்டு
மென்ற கருத்தும் அவ்வப்போது சொல்லப்பட்டிருக்கிறது. அது குறித்து
நாங்கள் தடை ஒன்றும் விதிக்கவில்லை. ஆனால் உண்மை நிலவரம் என்ன
என்பது பற்றிப் பரிசீலிக்க வேண்டும். நாம் இப்போது ரீஜினல் என்ஜினியரிங்
காலேஜில் இரண்டு ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுத்திருக்கிறோம்.
அதுபோல் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திலும்
இரண்டு பேருக்கு தேர்தல் மூலம் பிரதிநிதித்துவம் கொடுத்திருக்கிறோம்.
ஆனால் அவர்கள் ஓட்டுப்போடுகிறவர்களைப்பற்றி மட்டும் தான் பேச வேண்டு
மென்ற அடிப்படையில், தவறான அடிப்படையில் செயல்பட்டுக்கொண்டிருக்
கிறார்கள் என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு
அங்கம் வகிக்கிற ஆசிரியப் பிரதிநிதிகள் தங்களுக்கு ஓட்டு போட்டவர்களைப்
பற்றி அதிகமாகக் கவலைப்படாமல், நிறுவனத்தின் முன்னேற்றம்பற்றிக்
கவலைப்பட வேண்டும். அனுபவ ரீதியாக பல்கலைக் கழகங்களின் நோக்கங்
களுக்காகப் பாடுபட வேண்டுமென்ற நல்லெண்ணம் அவர்களுக்கு வரவில்லை.
இதை நான் கவலையுடன் தெரிவித்துக்கொள்வதை என்னுடைய கடமையாகக்
கருதுகிறேன்.

மாணவர்களைப் பொறுத்தவரையில் கூட, நாங்கள் ஆட்சிக்கு வந்த
நேரத்தில் அவர்கள் மத்தியில் எந்த அளவுக்குப் பிரச்சினை இருந்தது
என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால் இந்த மூன்று ஆண்டு
காலத்தில் அவர்களுடைய பிரச்சினை குறைந்துகொண்டே வருகிறது
என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அமெரிக்கா, பிரிட்டன்,
மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றிருந்த நேரத்தில் அங்குள்ள
பேராசிரியர்களையும், துணை வேந்தர்களையும் சந்தித்தேன். அப்போது
மாணவர்கள் அங்கு வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறார்களா என்று கேட்
டேன். உடனே அப்படி ஈடுபடுவதில்லை என்று சொன்னார்கள். அங்கு
அவர்கள் வேலை நிறுத்தம் செய்வதில்லை, வகுப்புகளுக்குப் படிக்கத்தான்
வருகிறார்கள் என்று சொன்னார்கள். அமெரிக்காவுக்குச் சென்றிருந்த

போது, விடுமுறை என்று அங்கு பெயருக்குத்தான் இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டேன். ஸ்டான்போர்ட் பல்கலைக் கழகத்திற்குச் சென்றிருந்தபோது, அது ஒரு விடுமுறை நேரம். கல்லூரிகள் நடைபெறுகின்ற நாட்களில் எவ்வளவு கார்கள் இருக்குமோ, எவ்வளவு பேராசிரியர்கள் வருவார்களோ, அவ்வளவு கார்களும், அவ்வளவு பேராசிரியர்களும் வந்திருந்ததைப் பார்த்தபோது, அங்குள்ள பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் மாணவர்களை மிகவும் நல்லமுறையில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டேன். ஒவ்வொருவரும் தங்கள் கடமையை உணர்ந்து செயல்பட வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்குப் பிரதிநிதித்துவம் தர வேண்டுமென்று சொல்லக்கூடிய கருத்தை என்றைக்கும் இந்த அரசு வரவேற்கும். அதற்குத் தடையாக என்றைக்கும் இருக்க மாட்டோம். மாணவர்களுடைய பிரச்சினைகளைப்பற்றிப் பேச வேண்டுமென்று சொன்னால், அதற்கான வாய்ப்பு இப்போது இல்லை என்பதல்ல. செனட் ஆகட்டும், அல்லது சிண்டிகேட் ஆகட்டும், அவைகளில் இருப்பவர்கள் எல்லாம் மாணவர்களோடு நெருங்கிய முறையில் இருப்பவர்கள்தான். ஆகவே முற்றிலும் மாணவர்களுடைய பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு காணக் கூடிய நிலை இல்லை என்று இன்றைக்குச் சொல்ல முடியாது. ஒன்றை நான் இந்த நேரத்தில் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மாணவர்கள் தங்களுடைய பொறுப்புகளை உணர்ந்து காலத்தை வீணாக்காமல், பல்கலைக் கழகம் தருகிற கல்வியின் சேவையை நல்லமுறையில் முழுமையாகப் பயன்படுத்த முன்வர வேண்டும்.

அடுத்து, அங்குள்ள பல்கலைக்கழகங்களில் உள்ள ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்களா என்று கேட்டேன். மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்வதில்லை என்று சொன்னவர்கள் ஆசிரியர்களைப்பற்றிக் கேட்டவுடனே சிரித்தார்கள். அவர்களும் வேலை நிறுத்தம் செய்வதில்லை என்று பிறகு சொன்னார்கள். மாணவர்களுடைய படிப்பு கெடுகின்ற நிலை அங்கு உருவாக்கப்படவில்லை. அதற்கு மாறாக அவர்கள் வேறு வழிகளைப் பின்பற்று



கிறார்கள். இங்கு பின்பற்றப்படுகின்ற வழிகளை அவர்கள் பின்பற்றவில்லை. அந்தக் கருத்தை நான் பல்வேறு இடங்களில் சொல்லியிருக்கிறேன். இந்த நேரத்திலும் அந்தக் கருத்தை வலியுறுத்திக் கூறுகிறேன். ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள் இங்கு இருப்பதும் ஒரு காரணம். மேலும் பல்கலைக் கழகங்களிலுள்ள செனட்டில் அறிவின் ஆதிக்கம் இருக்க வேண்டுமே தவிர, தங்கள் நலன் பற்றிச் சிந்திக்கின்ற ஆதிக்கக்காரர்களின் ஆதிக்கம் இருக்கக் கூடாது. அதற்கு எப்படி நாங்கள் தடை விதிக்கிறோமோ, அதுபோல் மற்றவர்களும் அறிவு வளர்ச்சிக்கு, பல்கலைக் கழகங்களின் நோக்கத்துக்கு பாடுபடுவதிலிருந்து தவறக் கூடாது.

பல்கலைக் கழகப் பதிவாளரைப்பற்றி ஒரு கருத்தைச் சொன்னார்கள். முதல் பதிவாளரை அரசு தான் நியமிக்கிறது. அதற்குப் பிறகு வருகிற பதிவாளர்களை சிண்டிகேட்தான் நியமிக்கிறது. அப்படி சிண்டிகேட் நியமிப்பதில் அரசு தலையிடுவதே இல்லை. பதிவாளர் நியமனத்தில் அரசு தலையிடுகிறது என்று சொல்வது சரியான வாதமல்ல. அவரை சிண்டிகேட் தான் நியமிக்கிறது. ஆனால் பதிவாளரைப் பொறுப்பவரையில், நான் ஒரு கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். பதிவாளர் சிண்டிகேட்டில் உறுப்பினராக ஆகிறார். துணை வேந்தர் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை நியமிக்கப்படுகிறார். ஆனால் பதிவாளர் மூன்று ஆண்டுகளுக்கு மேல் அதாவது துணை வேந்தர் பதவியில் இருக்கக்கூடிய காலத்திற்கு மேல் பதவியில் இருந்தால். துணை வேந்தருக்கு மேல் பதிவாளர் என்ற நிலையில் இருப்பதாகக் கருதிவிடுவார்.

திரு. ம. சங்கரலிங்கம் : பதிவாளர் என்பவர் சிண்டிகேட்டில் அதிகாரம் பெற்ற ஒரு உறுப்பினர் அல்ல. துணை வேந்தருக்குப் பக்கத்தில் ஒரு 'அசிஸ்டெண்ட்' ஆகத்தான் அவர் இருப்பார். அவர் பேசக் கூடாது. பதிவாளரைப்பற்றி ஏதாவது பேச வேண்டியிருந்தால் கூட, அவரை வெளியே போகச் சொல்லிவிட்டு பேசக்கூடிய நிலை இருந்து வந்தது.

He is only an officer under the entire control of the Syndicate.

(பிற்பகல் 1-10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒருவர் அங்கே வளரக்கூடாது என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். அத்தகைய சிண்டிகேட்டிலே, அவர் பேசவில்லையென்று சொன்னால் கூட, அவர் இருக்கிறார். சிண்டிகேட் என்பது கல்வி பற்றியும், அறிவு பற்றியும், ஆராய்ச்சி பற்றியும் பேசுகிற மன்றமாக இருக்க வேண்டுமே தவிர, அங்கே வேலை செய்கின்ற கிளார்க், பியூன் பற்றி மட்டும் விவாதிக்கும் ஒரு இடமாக மாறிவிட்டதன் காரணமாகத்தான் பல்கலைக் கழகங்கள் இப்போது நமக்கு உதவவில்லை. இப்போது 12-வது வகுப்பை பள்ளிக் கூடங்களிலே நாம் கொண்டு வந்திருக்கிறோம். 11-வது வகுப்பு பழைய பி.யூ.சி. 12-வது வகுப்பு பழைய] பி.ஏ., ] பி எஸ்ஸி., ] பி.காம்., இப்படிக் கொண்டு வந்ததற்குப் பிறகு கல்லூரிகளிலே பட்டப்படிப்பின் தரம் உயர்த் தப்படுகிறது. ஆனால் அது பழைய முறையிலே தான் இருக்கிறது. அதிலே புதிய புதிய மாறுதல்கள் ஏதாவது செய்து மாணவர்களுக்குப் பயன்படும் அளவுக்கு, மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு தரும் அளவுக்குக் கூட பாடங் களை மாற்றியமைக்கலாம் என்று பல்கலைக் கழக மானியக் குழு சிபாரிசு செய்திருக்கிறது. அந்த அடிப்படையிலே இன்று வரையிலும் செய்ய முடி யாத ஒரு சூழ்நிலைதான் பல்கலைக் கழகங்களிலே இருந்து வருகிறது. இதை ஒரு முக்கியமான பிரச்சினையாக எடுத்துக்கொண்டு செயல்படுத்தி யிருக்க வேண்டிய சிண்டிகேட்டிலே என்ன நடைபெறுகிறது, ஏன் நடை பெறவில்லை என்பது விவாதத்திற்குரிய பிரச்சினை. ஆனால் நல்லது நடக்கவில்லை, அதிலிருந்து நல்லது நாட்டுக்குக் கிடைக்கவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலையில் கல்வி பற்றியும், ஆராய்ச்சி பற்றியும் தெரிந்தவர்கள் அங்கே இருப்பது நல்லது. அந்த வகை யிலே பதிவாளராக இருப்பவர் ஒரு பிரின்சிபாலாகவோ அல்லது ஒரு புரபச ராகவோ இருப்பது நல்லதுதான். அந்த அடிப்படையில்தான் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குக் கூட ஒருவரைப் போட்டிருக்கிறோம். அதைப் போலவே, புதிய பல்கலைக் கழகங்களுக்கும் போட வேண்டும் என்ற நிலை யில் இருக்கிறோம். இதுவரையிலும் நடைமுறையில் இருந்து வந்த நிலைமை



யும் அதுதான். சென்னைப் பல்கலைக் கழகத்திலே மட்டும் அதை மாற்றி யதால் தான், பல்வேறு பிரச்சினைகளுக்கு இடம் ஏற்பட்டிருக்கிறதே தவிர, அது முன்னாலே இருந்து வந்த நடைமுறைதான். அதை மேலும் இன்னும் கொஞ்சம் திருத்தி நல்லபடியாகச் செயல்படுத்த விரும்புகிறோம். பதிவாளர் மூன்று ஆண்டு காலத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்பது பழைய முறை யில் நாம் விரும்பும் ஒரு புதிய மாற்றம். அந்த அடிப்படையிலே தான் பதிவாளரை நியமிக்க வேண்டும் என்று அரசு விரும்புகிறது. அதைப் போலவே அரசு தலையிடுகிறது என்று சொல்கிறார்கள். பாடத் திட்டங் களிலே நாங்கள் தலையிட விரும்பவில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பல்கலைக் கழகப் பதவிகளிலே இடம் தர வேண்டும், அவர்களுக்கு மற்ற எல்லா வகைகளிலேயும் உரிய இடம் தர வேண்டும் என்பது ஒரு உன்னதமான சமுதாயக் கொள்கை. அதற்கு இந்தப் பல்கலைக் கழகங்கள் எந்த அளவுக்கு மரியாதை தந்திருக்கிறது என்பதையும் நாம் பார்க்க வேண்டும். 1977-க்குப் பிறகுதான் தமிழ் நாட்டிலே இருக்கும் பல்கலைக் கழகங்களிலே இரண்டு பேர் அல்லது மூன்று பேர்கள் பதவி பெற்றிருக்கலாமே தவிர அதற்கு முன்பு ஏன் அப்படிப்பட்ட பதவிகளை அவர்கள் பெறவில்லை? நாங்கள் வந்த தற்குப் பிறகுதான் பல்வேறு மட்டங்களிலே தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பதவி கிடைத்திருக்கிறது. இப்போது பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக டாக்டர் சாந்தப்பா அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கெல்லாம் அரசு தலையிடக்கூடாது என்று சொன்னால், நான் சொல்லிக் கொள்கிறேன், இந்த அரசைப் பொறுத்தவரையில், நாங்கள் தலையிட விரும்ப வில்லை. ஆனால் சிறந்த சமுதாயக் கொள்கைகளை நாங்கள் சொல்லும் போது, மக்களுடைய வரிப்பணத்திலே நடக்கும் இந்த நிறுவனங்கள் அந்தக் கொள்கைகளுக்கு மரியாதையும், மதிப்பும் தரவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அந்த அடிப்படையில்தான் அவர்கள் எடுக்கும் முடிவு இருக்கவேண்டும். ஆனால் சிண்டிகேட் இந்த முடிவுதான் எடுக்க வேண்டும் என்று குறிப்பாக அவர்களுக்கு எதுவும் சொல்வதில்லை. நாங்கள் அப்படிச் சொன்னதாக எந்தத் துணை வேந்தரும் எங்கள் மீது புகார் சொல்ல முடியாது. அந்த அடிப்படையிலேதான் அரசின் எண்ணங்களைச் சொல் கிறோம். இன்னும் சொல்லப்போனால், தேர்வு முடிவுகளைப்பற்றி பத்திரிகை களில் எல்லோரும் செய்திகளைப் படித்திருப்பார்கள். எஸ். எஸ். எல். சி. தேர்வில் 2½ லட்சம் பேர் எழுதுகிறார்கள். ஹையர் செகண்டரி பரீட்சை

யில் 1½ லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் எழுதுகிறார்கள்.
வேண்டிய கேள்வித் தாள்களைத் தயார் செய்தல் மற்றும் உள்ள அதற்கு
ஏற்பாடுகளையும் செய்து, தேர்வின் முடிவுகளையும் குறிப்பிட்ட அனைத்து
வெளியிடுகிறது, இவ்வளவு வேலைகளையும் செய்வது காலத்திலே
துறைதான். அந்த ஒரு துறை மட்டும் தான் இவைகளைச் இந்தத் தேர்வுத்
டிருக்கிறது. பல்கலைக் கழகங்களை எடுத்துக்கொண்டால், செய்துகொண்
ஆயிரம் அல்லது 10 ஆயிரம் பேர்கள் தான் பரிட்சை இங்கே 5
ஆனால் முடிவுகள் காலாகாலத்திலே வருகிறதா என்றால் இல்லை. எழுதுகிறார்கள்.
செமஸ்டர் தேர்விலே பாசாகிவிட்டால் அதை எழுத வேண்டாம், மூன்றாவது
படவில்லை. அதற்குள்ளேயே நான்காவது தேர்வும் வருகிறது. இப்போது
நான்காவது செமஸ்டருக்குப் பணம் கட்டிவிட்டு கேட்கிறான், அந்த
செமஸ்டர் ஒரு மாணவன் எழுதுகிறான். அந்தத் தேர்வின் முடிவு 'மூன்றாவது
என்ன செய்ய?'' என்று. அதற்கு 'நீ மூன்றாவது செமஸ்டருக்கும் வெளியிடப்
பணத்தைக் கட்டு, இதற்கிடையிலே முடிவுகள் வந்து தேறிவிட்டால் சேர்த்து
வேண்டாம், தேறவில்லை என்றால் எழுதலாம், எதற்கும் பணத்தைக் எழுத
வை'' என்று சொல்லும் ஒரு நிர்வாகத்தைப் பற்றி அரசு கவலைப்படாமல் கட்டி
இருக்க முடியுமா? அல்லது 6-வது செமஸ்டர் தேர்வு எழுதியபிறகு, ஐ-ஐ-டி.
யிலே அல்லது பங்களூரிலே இருக்கும் இன்ஸ்டிட்யூட் ஆஃப் சயன்ஸ் போன்ற
உயர் நிறுவனங்களிலே சேர வேண்டும் என்று சொன்னால், இவர்கள் எழுதி
யிருக்கும் பரிட்சையின் முடிவு வந்தால் தானே, இடம் கிடைக்கும்? இல்லை
யென்று சொன்னால் எப்படி கிடைக்கும்? இப்படியாக 200-க்கும் மேற்
பட்ட மாணவர்கள் இப்போது பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால்,
அது இந்த மாநிலத்தைப் பாதிக்குமா இல்லையா? இதற்கு யார்
பொறுப்பு? இதைப்பற்றி அரசு எப்படி கவலைப்படாமல் இருக்க முடியும்?
ஏன் இந்த நிலைமை என்று கேட்டால், கம்ப்யூட்டர் தான் இதற்குப் பொறுப்பு
என்று சொல்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரையில், கம்ப்யூட்டர் என்று
சொன்னால், அது தவறு செய்யாத ஒரு இயந்திரம். ஒரு கருவிதான்
கம்ப்யூட்டர். தவறுகளுக்கு கம்ப்யூட்டர் பயன்படாது. நான் அண்மையில்
வெளிநாட்டுக்குப் போயிருந்தபோது, அங்கு 'டிஸ்னிலேண்ட்' என்ற ஒரு
இடத்திலே வேகமாகப் போகும் ஒரு படகு கம்ப்யூட்டரின் உதவியால் இயங்கி
மிகவும் வேகமாகப் போய் வருகிறது. அதிலே ஏறி உட்கார்ந்த
வுடனே நமக்கு மிகவும் பயமாக இருக்கிறது. அந்த அளவுக்கு இப்போ
தெல்லாம் கம்ப்யூட்டர் மிகவும் நுட்பமாக இருக்கும்போது, அதை இந்தச்
சென்னைப் பல்கலைக் கழகத்திலே பயன்படுத்தியதன் காரணமாக, அந்தக்



கம்ப்யூட்டருக்கு இப்படியொரு கெட்ட பெயர் ஏற்பட்டிருக்கிறது. இவை யெல்லாம் பார்க்கும்போது, நாம் அதைப்பற்றிக் கேட்கிறோமே தவிர, பல் கலைக் கழகத்தினுடைய சுயாட்சியிலே இந்த அரசு தலையிடவில்லை. தலையிட வேண்டிய விருப்பமும், தேவையும் இந்த அரசுக்கு இல்லை. பல்கலைக் கழகம் ஆராய்ச்சி செய்கிறது என்று சொன்னால், இப்படித்தான் நடைபெற வேண்டும், அப்படித்தான் செய்ய வேண்டும், என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. ஆகவே, பல்கலைக் கழகங்களுடைய பல்வேறு செயல் திட்டங்களும் நாட்டுக்குப் பயன்படுவதாக அமைய வேண்டும் என்ற அக்கறை யின் காரணமாகத்தான் பல்வேறு திட்டங்களை நாம் செயல்படுத்துகிறோம். இப்போது இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டு வந்ததன் காரணமாக, பல்வேறு பிரச்சினைகளை அரசின் கவனத்தில் அரசு வைத்திருக்கவில்லை என்று யாரும் கருத வேண்டாம். அவற்றைப்பற்றியெல்லாம் நாங்கள் தக்க சமயத்தில் சிந்தித்து தேவையான நடவடிக்கைகளை எடுப்போம். சென்னைப் பல்கலைக் கழகத்தின் சட்டமும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் சட்டமும் முழுமையாகவே மாற்றப்பட வேண்டும். மாற்றப்பட்டு அது ஒரு மாநிலச் சட்டம் என்ற மரியாதையையும் பெற வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் நாங்கள் சிந்தித்துக் கொண்டிருக் கிறோம். எதிர்காலத்திலே, மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிய கருத்துக் களை மனதிலே வைத்துக்கொண்டு தேவையான மாற்றங்களை மேற்கொள்ள லாம் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, இந்தச் சட்ட முன்வடிவுக்கு ஆதரவு தந்து இதை ஏற்று நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, சென்னைப் பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**1982 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக, அண்ணாமலைப் பல்கலைக்கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1982)**

[1982 பிப்ரவரி 19

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்)

பிரிவுகள் 2 முதல் 14 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, சென்னைப் பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1982) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, சென்னைப் பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1982) நிறைவேற்றப்பட வேண்டும் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இத்துடன் காலை அலுவல்கள் முடிந்து, அவை மீண்டும் மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை கலைந்தது.

(பிற்பகல் 1-19)

அவை மீண்டும் மாலை 4-00 மணிக்குக் கூடியது.



(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

**5. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.**

**(4) 1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1982).**

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 11—2—1982 அன்று சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டு 17—2—1982 அன்று நிறைவேற்றப் பட்ட 1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன். இச்சமயத்தில் இச் சட்ட முன்வடிவுகளைப்பற்றி சில முக்கிய அம்சங்களை எடுத்துக் கூற விரும்பு கிறேன்.

இந்தியாவில் கடந்த 30 ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கும் பல்கலைக் கழக வளர்ச்சியினை ஆராயும்பொழுது, தமிழகத்தில் பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை அனைத்து சராசரி நிலையிலும் மிகவும் குறைவாகவே உள்ள தென்பது புலப்படும். 1981 சனவரித் திங்களில் மதுரையில் நடைபெற்ற 5ஆம் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொண்ட பேரறிஞர்கள் பலரும் தமிழ் பல்கலைக் கழகம் ஒன்று மேல்நிலை ஆராய்ச்சிக்கு மிகத் தேவை என வலி யுறுத்தினர். கடந்த ஆண்டு இந்த மன்றத்தில் வைக்கப்பெற்ற நிதி நிலை அறிக்கையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் வரும் ஆண்டில் நிறுவப்பெறும் என அறிவிக்கப் பெற்றது. எனவே புதிய பல்கலைக் கழகங்கள் தமிழகத்தில் அமைதல் அவசியம் என்பதாலும், அதுவும் தமிழ் மொழி வளர்ச்சிக்கென தனியே ஒரு பல்கலைக் கழகம் தொடங்குவது சிறப்பாக இருக்கும் என்றும் அரசு பெரிதும் விரும்பியது.

---

@ 654-659 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1982 பிப்பவரி 19

சிறப்பு மிகுந்து, இலக்கிய வளம் நிறைந்து, பண்பாட்டு மரபு மாறாது, இயல், இசை, நாடகம், நாட்டியம், சிற்பம், ஓவியம், மருத்துவம் போன்ற துறைகளிலும் தொடர்புடைய ஏனைய துறைகளிலும் இன்றுவரை ஆராய்ச்சி மூலம் நாம் அறிந்திருப்பதைவிட அதிக அளவில் ஆராய்ச்சி செய்ய வாய்ப்பு உள்ள தமிழ் மொழிக்கென்றே தனியாக ஒரு பல்கலைக் கழகம் நிறுவுவது குறித்து ஆய்வு செய்ய மதுரை காமராஜர் பல்கலைக் கழகத் துணை வேந்தரான திரு. வ. சுப. மாணிக்கம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை தஞ்சாவூரில் அரசு நிறுவியுள்ளது. பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று இப் பல்கலைக் கழகத்தை நிறுவுவது பொருத்தமானது எனக் கருதி, தமிழ்ப் பல்கலைக் கழக அவசரச் சட்டம் பிரகடனப்படுத்தப்பெற்று 15—9—1981 முதல் இப்பல்கலைக் கழகம் பணியாற்றி வருகிறது. பல்கலைக் கழக மான்யக் குழுவின் தலைவர் இச்சட்டத்தை தமிழ் நாடு அரசு, இயற்றலாம் எனக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இப்பல்கலைக் கழகம், பிற பல்கலைக் கழகங்களினின்று வேறுபட்டு, "உறையுள் தனிப் பல்கலைக் கழகமாக" (Residential Unitary University விளங்கும்.

இப்பல்கலைக் கழகத்தோடு எந்தக் கல்லூரிகளும் நிறுவனங்களும் இணைக்கப்பட மாட்டாது.

இப்பல்கலைக் கழகம் பல்வேறு துறைகளில் தமிழில் ஆராய்ச்சி செய்ய வகை செய்யும்.

பல்கலைக் கழகத்தின் முதல் துணை வேந்தர் அரசால் மூன்றாண்டுகளுக்கு நியமிக்கப்படுவார். மொத்தத்தில் துணை வேந்தரின் பதவிக்காலம் 6 ஆண்டு களுக்கு மேல் இராது. அன்றியும் பதவிக்காலம் முடிவடைந்த பின்னர் வேந்தர் உத்தரவிட்டு, அவ்வுத்தரவில் குறிப்பிடக்கூடியவாறு ஓராண்டுக்கு மேற்படாத கால அளவுக்குத் தொடர்ந்து பதவி வகிக்கச் செய்யலாம். அக் கால அளவில் அவருக்கு 65 வயது முடிவடைந்திருந்தால் அவர் பதவியிலிருந்து ஓய்வு பெற வேண்டும்.

தேர்வுகள் நடத்தும் அலுவலர் இப்பல்கலைக் கழகத்தில் இடையாது.

நிதி அதிகாரியையும் அரசே நியமிக்கும். அவர் ஆட்சிக் குழுவின் கட்டுப் பாட்டுக்கு உட்பட்டே செயலாற்றுவார்



'981 பிப்ரவரி 19] [திரு. செ. அரங்கநாயகம்]

ஆட்சிக் குழு, ஆலோசனைக் குழு ஆகிய இரு குழுக்களை மட்டுமே இப்பல்கலைக் கழகம் கொண்டிருக்கும். பிற பல்கலைக் கழகங்களைப் போல் கல்விக் குழுவையோ கல்வி விவகாரங்களைக் கவனிக்கும் கல்வி நிலைக் குழுவையோ கொண்டிருக்காது.

இப்பல்கலைக் கழகம், ஆரம்ப நிலையில் 16 துறைகளை உட்கொண்டு, கலைப்புலம், கையெழுத்துப்புலம், வளர் தமிழ்ப் புலம், மொழியியல் புலம், அறிவியல் புலம் என்ற ஐம்புலங்களைக் கொண்டதாக இருக்கும்.

ஆட்சிக் குழு அல்லது ஆலோசனைக் குழுவில் அல்லது இவை இரண்டிலும் மொத்தம் 6 ஆண்டுகளுக்கு உறுப்பினராகப் பதவி வகித்துள்ளவர் அம்மன்றங் களில் மீண்டும் நியமனம் செய்யப்படவோ, தேர்ந்தெடுக்கப்படவோ தகுதி யுடையவராகமாட்டார்.

மேற்சொன்ன கருத்துக்களுக்குச் செயல் வடிவம் கொடுப்பதே இப்பல்கலைக் கழகத்தின் சட்ட முன்வடிவின் நோக்கமாகும்.

இந்தச் சட்ட முன்வடிவினை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுமாறும் பின்பு பேரவையில் நிறைவேறிய வண்ணம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அவைக்குப் பரிந்துரைக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தாய் மொழிக்கென்று, தமிழகத்திலே, அதிலும் தஞ்சைத் தரணியிலே ஒரு பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டிருப்பது குறித்து நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பல்கலைக் கழகத்தின் நோக்கங் கள் மற்றும் குறிக்கோள்கள் அனைத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்தக் குறிக்கோள்களை எய்துவதற்கு அப்பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் ஆசிரியப் பெருமக்களும் மற்றவர் களும் கடுமையாக உழைத்து, இந்த லட்சியங்களை அடைய உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும், எடுத்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு ஓரிரு கருத்துக்களை மட்டும் இங்கே எடுத்துச் சொல்லி அமைய விரும்புகிறேன்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1982 பிப்ரவரி 19

இன்றைய தினம் தமிழகத்தில் நமது தாய்மொழியான தமிழின் வளர்ச்சி பல்வேறு கோணங்களில் முன்னேற்றத்தைக் கண்டிருந்தாலும்கூட, மேடைத் தமிழ், எழுத்துத் தமிழ், பேச்சுத் தமிழ் என்று பல்வேறு கோணங்களில் பல் வேறு பிரிவுகளில் வளர்ச்சியடைந்திருந்தாலும், அதிகமான சிந்தனையாளர் களும், கல்வியாளர்களும் குறிப்பிடும் வகையில், ஒரு துறையில் மட்டும், அது இன்னும் சரியான ஆதரவைப் பெறவில்லையோ அல்லது வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் அடையவில்லையோ என்ற கேள்விக் குறி நியாயமாக எழுகிறது. அதாவது தாய்மொழி மூலமாகப் பயிற்சி பெறும் கருத்தைத்தான் நான் இங்கே குறிப்பிடுகிறேன். தாய்மொழி மூலமாகக் கல்வி கற்பிக்க வேண்டும், தாய்மொழியே பயிற்சி மொழியாக அமைய வேண்டும் என்பதில் உண்மையான கல்வி பற்றிய சிந்தனையாளர்களிடம் இருவிதமான கருத்து இருக்க முடியாது. உலக நாடுகளோடு போட்டியிட்டு முன்னேறிக் கொண்டு, மேலை நாடுகளெல்லாம் பார்த்து பயப்படுகிற அளவுக்கு ஜப்பான் நாட்டின் முன்னேற்றம் அமைந்திருக்கிறது என்றால், அதற்குக் காரணம் அவர்கள் தாய்மொழி மூலமாகக் கல்வி கற்பிப்பதுதான். அவர்கள் தாய்மொழி மூலமாக அறிவை வளர்த்துக் கொண்டு, விஞ்ஞான அறிவை வளர்த்துக்கொண்டு, இன்றைய தினம் உலக அரங்கிலேயே சாதனை புரிந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி முன்னேறிய பல நாடுகளை நான் எடுத்துக்காட்ட முடியும். தாய் மொழி மூலமாக அறிவு வளர்ச்சியடைந்து முன்னேற்றத்தை அடைந்து கொண்டிருக்கிற பல நாடுகளையும் நான் எடுத்துச் சொல்ல முடியும். ஆனால் என்ன காரணத்தாலோ உன்னதமான நமது தாய்மொழியான தமிழ் மொழி யின் மூலமாக, பயிற்சி பெறும் மனப்பான்மை, நாம் எதிர்பார்க்கிற அளவுக்கு என் வளரவில்லை என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. எனவே தாய் மொழி மூலமாக மாணவர்கள் கல்வி பெறுகிற நம்பிக்கையை, மாணவர் களுக்கு மட்டுமின்றி பெற்றோர்களுக்கும் ஏற்படுத்தக்கூடிய வழிமுறைகளை நாம் கண்டு பிடித்தாக வேண்டும். இதனை தமிழ்ப் பல்கலைக் கழகம் தனது தலையாய பணியாக ஏற்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நமது மாநிலத்தில் உள்ள பெற்றோர்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை இருக் கிறது. அதாவது ஆங்கிலத்தில் படித்தால்தான் நமக்குப் பெருமை, மரியாதை, அப்போதுதான் வேலை கிடைக்கும். தமிழில் படித்தால் வேலை கிடைக்காது, அப்படிப்பட்ட மாணவர்களுக்கு நல்ல எதிர்காலம் கிடைக்காது என்ற அபிப் பிராயம் இருப்பதற்கு என்ன காரணம் என்பதையும் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆராய்ந்து அப்படிப்பட்ட எண்ணத்தை, தாழ்வு மனப்பான்மையைப் போக்க வேண்டும் என்பதோடு தாய் மொழி மூலமாகக் கல்வி பெறுவதால் நன்கு

1982 பிப்ரவரி 19] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

முன்னேறலாம் என்பதையும் பொதுமக்கள் உள்ளத்தில் பதிய வைக்க என்
னென்ன ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமோ அவைகளையெல்லாம்
மேற்கொண்டு அந்த ஆய்வுகளின் முடிவில் உரிய நடவடிக்கைகளை மேற்
கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை ஏன் குறிப்பிடுகிறேன்
என்றால், இன்று இது ஒரு மிகப் பெரிய கல்விப் பிரச்சினையாக இருக்கிறது.
It is an educational problem எனவே தமிழ்ப் பல்கலைக் கழகம்
இதனைத் தன் பணியாக எடுத்து ஆய்வு செய்து, ஆய்வின் முடிவைச்
செயல்படுத்த முன்வர வேண்டும். மகாத்மா காந்தி அடிகள் ஒருசில இடங்
களில் மட்டும்தான் "நான் இந்த நாட்டின் சர்வாதிகாரியாக இருந்தால்"
என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியிருக்கிறார். அவர் தாய்மொழியைப்
பற்றிச் சொல்லும்போது "நான் மட்டும் இந்த நாட்டின் சர்வாதிகாரியாக
இருந்தால் இன்று ஆங்கிலக் கல்வி மூலமாக பாடம் புகட்டுகிற நிலைமையை
நிறுத்துங்கள் என்று அத்தனை ஆசிரியர்களுக்கும் கட்டளையிடுவேன்"
என்று குறிப்பிட்டார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதுவும் 24 மணி நேரத்திற்குள்
நிறுத்துங்கள் என்று கட்டளையிடுவேன் என்று சொல்லியிருக்கிறார்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இப்படிக் கல்விக் கூடங்களை நடத்து
கிற அனைவருக்குமே நான் கட்டளையிடுவேன் என்றும், தாய்மொழியில்தான்
கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்றும், அதற்குப் பாடப் புத்தகங்கள் வருகிற
வரைகூட நான் காத்திருக்க மாட்டேன், அவைகளெல்லாம் தாமாகவே
வரும் என்று குறிப்பிட்டிருக்கிறார். மகாத்மா காந்தி அடிகள் அனைத்து
மாநிலங்களிலும் தாய்மொழி மூலமே கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்று
உத்தரவிடுவேன் என்று மிகவும் அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறார்.
எனவே தன்னை ஒரு சர்வாதிகாரியாக ஆக்கிக் கொண்டாவது இந்தப் பிரச்
சினையை அமுல்படுத்த விரும்பினார் என்றால், அவர் எந்த அளவுக்கு இந்தப்
பிரச்சினையைச் சிந்தித்திருக்கிறார் என்பதை நாம் உணர்ந்து பார்க்க
வேண்டும்.

ஆக, தாய்மொழி மூலமாகக் கல்வியைப் பரப்ப, தமிழ்ப் பல்கலைக் கழகம்
உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தாய் மொழி மூலம் கல்வி கற்
பிக்கப்படும்போதுதான் அறிவியல் வளரும், பல்வேறு துறைகள் வளர்ச்சி
யடையும். தமிழகத்தில் இருக்கிற ஆற்றல் வெளிப்படும் என்கிற வகையில் பல்
கலைக் கழகம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்பு
மிகு கல்வியமைச்சர் அவர்களின் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

## 554. 1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1982)

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1982 பிப்ரவரி 19

(பிற்பகல் 4-10)

இன்னொன்று, குறுகிய காலத்தில் நம்முடைய மொழியை நமது நாட்டு மக்கள் மட்டுமல்லாமல், வெளி நாட்டு மக்களும் கற்கக்கூடிய வழிகளைக் கண்டாக வேண்டும். அயல் நாட்டு மொழிகளான ஆங்கிலம், ஜெர்மனி போன்ற மொழிகளை 30 நாட்களில் போதிக்கிறார்கள். குறுகிய காலத்திலே அந்த மொழியைக் கற்பிக்க எளிய முறைகளைக் கண்டறிந்து தங்களுடைய மொழியைப் பரப்புகிறார்கள். எந்த மொழியையும் எளிதாகக் கற்க முடியுமென்று வாய்ப்பு ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதைப் போலவே நம்முடைய தாய் மொழியும் உலகம் எங்கும் பரவ வேண்டுமென்றால், குறுகிய காலத்திலே தமிழைக் கற்பிக்க வேண்டிய வழி முறைகளைக் கண்டாக வேண்டும். அதை தமிழ்ப் பல்கலைக் கழகம் மிக முக்கியமான திட்டமாகக் கருதி, அந்தக் கடமையை ஏற்று, ஆய்வுகளைச் செய்து, இந்தியா மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் தமிழ் மொழியைப் பரப்புவதற்காக உறுதுணையாக இருக்க வேண்டும். அது குறித்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

இந்தத் தமிழ் பல்கலைக் கழகத்திற்காக மத்திய அரசு மிக தாராளமாக நிதியுதவி செய்து தர வேண்டும். அதற்காக நம்முடைய மதிப்பிற்குரிய மேலவை உறுப்பினர் திரு. திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் சொல்ல வேண்டிய இடத்தில், சொல்ல வேண்டிய நேரத்தில், சொல்ல வேண்டிய விதத்தில் சொல்லி மத்திய அரசின் நிதியுதவி தாராளமாகக் கிடைக்க தமிழக அரசாங்கத்திற்கும், மத்திய அரசாங்கத்திற்கும் இடையே பாலமாக இருக்க வேண்டுமென்று சொல்லி அமைகிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைவதற்கான இந்தச் சட்ட முன்வடிவை மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். அது ஒரு நல்ல முயற்சி. காலையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் குறிப்பிட்டதைப் போல, தமிழகத்திற்கு கல்வித் துறையிலே இன்னும் அதிகமான நிதி பல்கலைக் கழக மானியக் குழுவின் மூலமாக வர வேண்டுமென்றால், கூடுதலான பல்கலைக் கழகங்கள் இங்கே இருக்க வேண்டும். தமிழகம் கடந்த காலத்திலேயே போதிய பல்கலைக் கழகங்களைத் துவக்கியிருக்க வேண்டும். பின்தங்கி விட்டோம் அல்லது அதைப்பற்றிக் கருத வேண்டிய சூழ்நிலை இல்லாமல் இருந்திருக்கிறது. பல்கலைக் கழக மானியக் குழு பல்கலை



கழகத்தினுடைய எண்ணிக்கையின் அடிப்படையிலே நிதி ஒதுக்கீடு செய்கின்ற நிலை வரும்போது, அதிகமான பல்கலைக் கழகங்கள் தமிழகத்திலே அவசியம் என்ற உணர்வை நானே பல முறை தெரிவித்திருக்கிறேன். இன்றைக்கு நடவடிக்கைகள் துவங்கி நடைபோட்டுக் கொண்டிருப்பதற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக தமிழ்ப் பல்கலைக் கழகம் துவக்கியிருப்பது நல்ல முயற்சி, தமிழ் மக்கள் மன நிறைவு கொள்ளுகிற அமைப்பு என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த காந்தியடிகள் தாய் மொழிக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தாய்மொழி வழியாக முறையாகச் சிந்தனை செலுத்தப் பட வேண்டும் என்பதை மிக அழுத்தந்திருத்தமாக வாழ்நாள் முழுவதும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். காங்கிரஸ் இயக்கம் தேசிய ஒருமைப் பாட்டை வளர்க்க வேண்டிய நிலையில் மொழிவழி மாநிலம் பிரிக்க வேண்டிய அவசியத்தில் இருந்தது என்பதை நினைவுபடுத்துவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அதைப் போலவே தாய் மொழியில் கல்வி எந்த அளவிற்குக் கற்க முடியும் என்பதற்கு தமிழகத்திலே முன்னோடியாக நின்று எடுத்துக் காட்டாக விளங் இயவர் காங்கிரஸ் இயக்கத்தினுடைய தலைவர்களுள் ஒருவராக இருந்த திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள். விஞ்ஞானச் சொற் களுக்கு இணையாக தமிழிலே சொல்ல முடியுமா என்ற கேள்வியை பல பேர் கேட்டுக்கொண்டிருந்த நேரத்தில், தமிழில் முடியும் என்று சொல்லி விஞ்ஞானச் சொற்களுக்கு இணையான தமிழ் சொற்களை புத்தகத்தில் வெளியிட்டார்கள். தமிழகத்தினுடைய முதலமைச்சர் பொறுப்பிலே இருந்தபோது வெளியிட்டார் கள் என்பதை இந்த நேரத்தில் பெருமிதத்தோடு நினைவு கூர்வது என் னுடைய கடமையென்று கருதுகிறேன். அந்த அளவிற்கு முயற்சிகளைத் துவக்கிய நாம் அதே வேகத்திலே கடைப்பிடிக்க இடையிலே தவறி விட்டோம். பல்வேறு சட்டப் புத்தகங்கள், விஞ்ஞான, அறிவியல் புத்தகங்கள் எல்லாம் அந்த வேகத்தோடு தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டிருக்குமானால், ஓரளவிற்கு தமிழிலே கல்வி கற்பது என்பது கொஞ்சம் சுலபமாக இருக்கும். இந்த நேரம் ஓரளவிற்கு வளர்ந்திருக்கலாம். ஆனால் தமிழிலே கல்வியைப் புகுத்த வேண்டிய நேரத்தில் இதற்கான புத்தகங்கள் முறையாகக் கிடைக்காத காரணத்தால், தமிழில் படித்துத் தேறியவர்களுக்கு எதிர்பார்த்த அளவிற்கு வெளியே வேலை வாய்ப்புகள் இல்லாமல் போனதால், தமிழில் படித்தே

[திரு. க. இராமமூர்த்தி] [1982 பிப்ரவரி 19

குறையோ என்ற நிலை ஏற்பட்டது. தமிழ்ப் பல்கலைக் கழகம் துவங்கிய
பிறகுதான், தமிழில் படிப்பு என்பதல்ல. தமிழ்ப் பாடங்கள் ஏற்கெனவே
கல்லூரிகளில் இருக்கின்றன. பல கல்லூரிகள் தமிழ்ப் பிரிவை மூடிவிட்டார்கள்.
மூடாமல் இவைகள் எல்லாம் நடைபெறுவதற்கான வாய்ப்பைத் தேடிக்
கொடுக்க வேண்டும். அவர்களுக்கு இணையான புத்தகங்கள் கிடைக்கின்ற
வாய்ப்பு ஏற்படுத்தித்தர வேண்டும் என்பது பொதுவான ஒன்று. ஆனால்
தமிழ்ப் பல்கலைக் கழகம் இதைத் தாண்டி நின்று என்னென்ன காரியங்களைச்
செய்ய இருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

*Faculties*—The University shall include faculties of Art
என்று சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு துறைகளில் தமிழ் ஆராய்ச்சி
நடத்துகிறோம். அதுபற்றி புதிய நிலைகளைக் கண்டறிவதற்கும் இந்தப்
பல்கலைக் கழகம் துணையாக இருக்கும் என்ற கருத்தை மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்தச் சட்ட முன்வடிவு
ஒன்றைத் தெளிவுபடுத்தியிருக்கிறது. இந்தப் பல்கலைக் கழகம் நம்முடைய
நாகரிகப் பண்பாட்டிற்கு மைய இடமாக அமையும் என்ற அளவிலே, தமிழ்
மொழி நாகரிகத்திற்கு ஒரு மையமாக அமையும் என்பதாலே வெளி நாடு
களிலிருந்து அல்லது இந்தியாவிலிருந்தே மற்ற மொழியைச் சேர்ந்தவர்கள்
எல்லாம் தமிழை ஆராய வேண்டும், அறிய வேண்டும் என்ற ஆர்வத்தோடு
வருகின்றபோது, தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குச் சென்று வாருங்கள் என்று
சொல்லக்கூடிய அளவிற்கு இருக்க வேண்டும். அந்த வகையிலே வளர்க்க
வேண்டுமென்று சொல்லி அதற்குப் பொறுப்பேற்றிருக்கின்ற கல்வி அமைச்சர்
அவர்களைப் பாராட்டுகிறேன். அண்ணா அவர்களின் பிறந்த நாளில்
அமைந்திருப்பது பெருமைக்குரிய ஒன்று. தமிழின் தொன்மை எந்த
அளவிற்கு இருந்தாலும், தமிழைப் பேசுவதிலேயே சிறப்பு இருக்கிறது
என்பதற்கு எடுத்துக்காட்டாக, தமிழகத்திலே மேடைகளில் மட்டுமல்லாது
எங்கும் இனிய தமிழிலே பேச முடியும், தமிழிலே பேசி பல்லாயிரக்கணக்
கானவர்களை, இலட்சக்கணக்கானவர்களை ஈர்க்க முடியும் என்ற அளவிலே
புதிய முறையை உருவாக்கிக் காட்டிய அண்ணா அவர்களின் பிறந்த நாளில்
உருவாகியது என்பதிலே . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஏற்கெனவே அமைந்து விட்டது.
சட்டம்தான் வருகிறது.



1982 பிப்ரவரி 19]

**திரு. க. இராமமூர்த்தி :** அதை நல்ல முறையிலே வளர்க்க வேண்டு
மென்று கேட்டு அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற மாண்புமிகு
கல்வியமைச்சர் அவர்களைப் பாராட்டி, நன்றி கூறி அமைகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர்
அவர்களே, தமிழிலே முடியும், தமிழிலே முடியாதது ஒன்றுமில்லை என்பதை
நாடு எல்லாம் முழங்கிய சிலம்புச் செல்வர் தலைமைப் பொறுப்பேற்றிருக்கிற
அவையில், நடமாடும் பல்கலைக் கழகம் நாவலர் அவர்களும், எதிர்க் கட்சி
வரிசையில் இருக்கின்ற பேராசிரியர் சங்கரலிங்கனார் அவர்களும், கவிஞர்
புலமைப் பித்தன் அவர்களும், இன்னபிற தமிழ் அறிஞர்களும் இருக்கின்ற
இந்த அவையில் இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றுவதன் மூலம்
பெருமைக்குரிய காரியத்தில் ஈடுபட்டிருக்கிறோம் என்று கருதுகிறேன்.

'ஆலயங்களில் தமிழா ? ஆகாது' என்று முழங்கியவர்களும், 'கல்விச்
சாலைகளில் தமிழா ? கூடாது' என்று சொன்னவர்களும், 'நீதிமன்றத்தில்
தமிழா ? தடுத்து விடுவோம்' என்று கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவர்களும்
இருக்கக்கூடிய நேரத்தில் தமிழுக்குப் பெருமை தேடும் நிலையில் நாம் இருக்
கிறோம்.

(பிற்பகல் 4-20)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பல்கலைக் கழகத் தொடக்க
விழாவிலேயே 'தமிழாலே முடியும்' என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டு
மென்ற உறுதியினை மேற்கொண்டார்கள். இன்றையதினம் தமிழ் ஏதோ
இந்தியாவின் மாநில மொழி என்ற நிலையில் மட்டும் இல்லை. உலகெங்குமுள்ள
30 பல்கலைக் கழகங்களில் அதைப் பயிற்றுவிக்கின்ற நிலையும் 13 நாடுகளிலே
அங்கு வாழும் தமிழர்கள் பேசும் நிலையும் இருக்கிறது. மலேசியா, இலங்கை,
சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தமிழ் ஆட்சி மொழியாக இருக்கிறது. பி. பி. சி.
யிலே தமிழ் இருந்து கொண்டிருக்கிறது, 13 நாடுகளில் வாழ்கின்ற மக்கள்
தமிழ் பேசுகின்ற நிலையைப் பெற்றிருக்கிறது என்பதையும் நினைத்துப்
பார்க்கின்றபோது, நாம் தமிழர் என்று பெருமை கொண்டாடுவதிலே தவறு
சொல்ல முடியாது. ஜப்பான் நாட்டில் யூனோ என்னும் பேராசிரியர் ஒருவர்
தமிழிலிருந்து ஜப்பான் மொழி வந்துள்ளது என்று ஒரு கருத்தைச் சொன்னார்
கள். அந்த ஆராய்ச்சி வெளிநாட்டிலே நடக்கிறது. அவர் ஜப்பானில்
இருக்கும் இன்னொருவரிடம், ஒரு பேராசிரியராக இருப்பவரிடம் அந்த வாதங்
களை வைத்திருந்தார்கள். அவரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்

கள். அப்போது சொன்னேன். 'உங்கள் வாதத்தின்படி தமிழிலிருந்து ஜப்பான் மொழி வந்ததென்றால் நல்லதுதான். அதற்குக் கட்டாயமில்லை. இதைச் சொன்னதன் மூலமாக ஜப்பான் நாட்டிலே தமிழ் மொழியைப்பற்றி அந்த நாட்டில் இருப்பவர்கள் பேசுகின்றார்களே, அதுவே எங்களுக்கு மகிழ்வைத் தரும்' என்று சொன்னேன். வானொலியில், டெலிவிஷனில் இனிய தமிழ் கேட்கின்ற வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லும்போது, நாம் அதிகப் பெருமைப்பட வேண்டும். 15—9—1981-ல் தொடங்கிய தமிழர் விழாவில் நடந்தது. அங்கே சுவடிகள் இருந்தன. அங்கு ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அதைப்பற்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இலங்கையில் ஒரு நகரத்தில் பல சுவடிகள் எரிந்து சாம்பலாகியிருக்கின்றன. இனியாவது இருக்கும் தமிழ் புலவர்கள் அங்கு சென்று அந்தச் சுவடிகளையெல்லாம் பெற்று வரும் பணியினை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எழுத்துச் சீர்திருத்தத்தைத் துணிவோடு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். தந்தை பெரியார் அவர்களுடைய எண்ணம் அது. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு சொல்லப்பட்டிருந்தும் இப்போதுதான் அதற்கு ஒரு நல்ல காலம் வந்தது. அது எவ்வளவு காலம் காத்திருந்தது ? அது மட்டுமல்ல, அந்த அவாவினை நமது புரட்சித் தலைவர் அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் சொல்கின்றார்களே என்று அவர்கள் எதையும் ஏற்றுக் கொள்ளாமல் இல்லை. இங்கே மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள், அண்ணா நாளேட்டினைக் காட்டி, "இதிலே எங்கே உங்கள் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் இருக்கிறது ?" என்று கேட்டார்கள். மறுநாளே அண்ணா நாளேட்டில் அது வந்தது. தமிழுக்காக யார் எந்தக் கருத்தைச் சொன்னாலும், ஏற்கின்ற நல்ல உள்ளம் பெற்றவர்கள் அவர்கள். அப்படிப்பட்ட முதலமைச்சர் அவர்களை நம் தமிழகம் பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது தமிழ்ப் பல்கலைக் கழகம் என்று தனியாக எதற்கு ? எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ் தானே இருக்கிறது என்று சொன்னாலும், தமிழை நன்கு கற்கவும், அதைப்பற்றி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும், மேலும் மேலும் தமிழ் படிப்பவர்களை ஊக்குவிக்கவும், அதைப் பயில்வதற்கு ...ண்டிய வசதிகளை அதிகமாக்கவும், தமிழ் நாட்டில் தமிழ்ப் பல்கலைக் ...ழகம் ஒன்றை நிறுவுவது என்ற நல்ல கருத்தின் அடிப்படையிலேதான்



இந்தப் பல்கலைக் கழகம் அமைந்திருக்கிறது என்பதை நினைக்கின்றபோது,
நாம் பெருமைப்பட வேண்டும். நாம் ஒரு காரியத்தைச் செய்கின்றபோது,
நம்முடைய ஆர்வத்தின் காரணமாக, கொஞ்சம் கூடுதல் ஆர்வம் காரணமாக
சில தவறுகளைச் செய்துவிடக்கூடாது. பொறியியல் கல்வி, விஞ்ஞானக் கல்வி,
போக்குவரத்துக் கல்வி போன்ற மற்ற துறைகளுக்கு ஆராய்வதற்குப்
போய்விட்டால், இதை யார் கவனிப்பது? தமிழர்கள், இந்தியத் தமிழர்கள்
பயன் படுத்தும் சொற்றொடர்கள்பற்றி ஆராயவேண்டும். தொழில் துறையில்,
விஞ்ஞானத் துறையில் இன்னும் மற்ற பல துறைகளில் உள்ள சொற்றொடர்
களைப் பற்றி ஆராய வேண்டும். இலங்கையில் தமிழ் இனம் வாழ்கிறது.
ஒரு நிலையான தமிழ் வர வேண்டும் என்ற நிலைமைகளை நாம் உருவாக்க
வேண்டும். நாம் எடுத்திருக்கின்ற, ஏற்றிருக்கின்ற தமிழ் எழுத்துச் சீர்
திருத்தம், இதுபோன்ற தமிழ் பல்கலைக் கழகங்கள் நிறுவுவது, ஆலோ
சனைக் குழு அமைப்பது என்ற அளவில் எல்லாவற்றையும் சிறப்பாகச்
செய்ய வேண்டும். அப்படி இருக்கின்ற ஆலோசனைக் குழுக்களில் வெளி
நாட்டுத் தமிழர்களும், தமிழ் ஆய்ந்த அறிஞர்களும் இடம் பெற்றிருந்தால்
தான், நல்ல முன்னேற்றம் ஏற்பட முடியும். ஆலோசனைக் குழுக்களில்
வெளிநாட்டினருக்கும் இடம் தர வேண்டும். நல்ல யோசனைகளை அவர்களும்
சொல்வார்கள். இதனால் உலகத் தமிழர்களும் ஒன்றுபட முடியும். தமிழகத்
திலே தமிழ்ப் பல்கலைக் கழகம் இப்போது வந்திருக்கிறது. நாமெல்லாம்
இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு, தமிழ் உணர்வோடு இந்தப் பணியை
ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன். வணக்கம்

புலவர் புலமைப்பித்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,
பாவால் சொல்லும்போது எதிரொலித்த அந்த சிலப்பதிகாரத்தை
நாவால் சொல்லும் போது எதிரொலிக்க வைக்கின்றவரே மேலவையின்
தலைவராக இருக்கின்ற காலத்திலே, ஒரு சிறிய கவிஞன் துணைத் தலைவனாக
இருக்கின்ற அதே நேரத்திலே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்
அரசு நடத்துகொண்டிருக்கின்றபோது, 'அண்ணாவினுடைய வழியிலே

[. புலவர் புலமைப்பித்தன்] [1982 பிப்ரவரி 19

தொண்டு செய்வாய், தமிழ் துறைதோறும் துடித்தெழுவாய்' என்று சொன்ன வகையில், இன்று கல்வித் துறையிலே, மற்றும் பல துறைகளிலே ஏற்றம் காண தமிழருக்குத் தமிழ் பல்கலைக் கழகம் கண்டிருக்கின்ற அந்தப் பேற்றினை நான் மனமாறப் பாராட்டி வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். உலகத்திலே இருக்கின்ற எந்த மொழியையும் விட, இந்த மொழி உயர்ந்த மொழியே தவிர, மற்ற மொழிகளை இதற்கு ஒப்பிட்டுக்கூட சொல்ல முடியாது. அந்த அளவில் ஒரு தனித் தகுதி பெற்றிருக்கின்ற மொழி தமிழ் மொழி என்பதனை மொழி இலக்கணம் அறிந்தவர்களும் மறுக்க மாட்டார்கள் என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். ஒரு மொழிக்கு இருக்கின்ற தகுதி என்ற அடிப்படை யிலே வைத்துப் பார்க்கின்றபோது, அகிலந்திலேயே, அரசோச்சுகின்ற ஒரு மொழி தமிழ் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். இது முழுத்தன்மை உடையது என்பதை மறுக்கமாட்டார்கள். இந்த மொழி தொல்காப்பியம் பெற் றுள்ள மொழி என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். இந்த மொழி தன்மை உடையது என்பதை மறுக்கமாட்டார்கள்: இந்த மொழி தொல்காப்பியம் பெற்றுள்ள மொழி என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். இந்த மொழி தன்மையுடையது. இந்த மொழி எதையும் சொல்கின்ற தன்மை படைத்தது என்பதையும் நாம் மறுக்க முடியாது: அதனாலேதான் இந்த மொழி உயர்தனிச் செம்மொழி. இந்த மொழி உயர்ந்த மொழி, அதனாலே உயர் மொழி, தனி மொழி, தனித்து இயங்குகின்ற மொழி, தானே இயங்குகின்ற மொழி, செம்மொழி, எல்லாவிதமான பண்புகளும் நிரம்பப் பெற்றிருக்கின்ற செம்மையான மொழி என்ற அடிப்படையிலேதான், உயர்தனிச் செம்மொழி என்று இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றார்கள். ஆன்றவிழ்ந்த தமிழ் சான்றோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு தொல்காப்பியத்தின், பொருளதிகாரத்தின் வாயிலாக பெரிய அறிஞர்கள் எல்லாம் ஆராய்ந்தறிந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் பேர்பெற்று விளங்கிக் கொண்டிருக்கலாம். ஆனால் பல்வேறு நாடுகளில், மக்களுடைய வாழ்க்கை வளப்படுகின்ற காலத்திற்கு முன்னாலேயே மக்களுடைய வாழ்க்கை இலக்கணம் என்ன என்று, நம் தமிழ் நூல்கள்

1982 பிப்ரவரி 19] (புலவர் புலமைப்பித்தன்)

சொல்லியிருக்கின்றன. பொருளதிகாரம் மட்டும்தானா! மனித வாழ்க்கைக்கே இலக்கணத்தைக் கோடிட்டுக் காட்டிச் சென்றிருக் கின்றார்களா இல்லையா என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு தமிழ் மொழி மற்ற கலைகளுக்கு, வழி காட்டுகின்றதா என்ற சந்தேகம் இன்னும் பலபேர்களிடையே இருந்து கொண்டிருக்கிறது. இந்த சந்தேகம் இருப்பதற்குக் காரணம் இந்த மொழி அத்தகைய தகுதியுடையதல்ல' என்று கருதுகின்ற அடிமை மனப்பான்மை இன்னமும் இருக்கிறது என்பதைக் காட்டுகிறதே தவிர, வேறல்ல. நாம் எண்ணிப் பார்க்கின்றபோது, அறிவியல் கலையைச் சொல்லித் தருகின்ற ஆற்றலை இந்த மொழி பெறவில்லை என்கிறார்கள். அது மக்களுடைய குற்றம் அல்ல. அது தமிழர்களுடைய குற்றம் அல்ல என்பதை மறந்துவிடக் கூடாது. இந்த மொழிக்கு எதையும் சொல்லுகின்ற அளவுக்கு ஆற்றல் உண்டு. இன்னும் சொல்லப்போனால், இந்த மொழிக்கு நுட்பமாக, திட்பமாகச் சொல்கின்ற அளவுக்கு ஆற்றல் உண்டு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஒரே ஒரு எழுத்தில் பொருளைச் சுட்டிக்காட்டுகின்ற அளவுக்கு ஆற்றல் உள்ள மொழி இந்த மொழிதான். ஆங்கில மொழியை எடுத்துக்கொண்டால், ஏ, பி, சி, டி என்று சொல்லிக் கொள்ளலாம். ஏ, பி என்று சொல்லி ஒரு பொருள் சொல்லும் எழுத்தைக் காட்ட முடியுமா? ஆனால் தமிழில் ஒரே எழுத்துள்ள சொற்கள், ஒரே எழுத் தாக நின்று பொருள் காட்டுகின்ற மொழி தமிழ் மொழி 'ஆ' என்று சொன் னால் பசு மாடு, 'ஈ' என்று சொன்னால் உங்களுக்குத் தெரியும், 'வா, என்று சொன்னால் 'வா' என்று பொருள், போ என்ற சொல் போவதைக் குறிக்கும் சொல். அது போல் மா என்று சொன்னால், பெரிய என்ற பொருளைக் குறிக்கும் மாங்கனியைக் குறிக்கும்

(பிற்பகல் 4-30)

'தே' என்றால் இனிமை என்று பொருள்; 'ஏ' என்றால் அம்பு என்று பொருள். இப்படி வரிசையாகச் சொல்லிக்கொண்டிருந்தால், எல்லா எழுத்துக்களையும் சொல்லி, ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு பொருளைச் சுட்டிக் காட்டும் நிலை இருக்கிறதென்று சொல்ல முடியும்.

"காக்கை கா என்றுதனைக்
காப்பாற்றச் சொல்லும் ஒரு
கருமுகில்தான்

நோக்கியே 'கட்டோ'
என்றே தன் கடனுரைக்கும்
நுண்கண் கிள்ளை

வாய்க்கும்வகை 'அக்கா' என்
றழைத்தனால் வஞ்சத்துப்
பூனை 'ஞாம் ஞாம்'

காக்கின்றோம் எனச்சொல்லக்
கழுதை அதை 'ஏ' என்று
கடிந்து கூறும்?

கூ எனவே வையத்தின்
பெயர்சொல்லிக் குயில் கூவும்
'வாழ்' 'வாழ்' என்றே,

நாவினிக்க நாய் வாழ்த்தும்
நற்சேவல் 'கோ'வென்று
வேந்தன் பேரைப்

பாவிசைத்தால் போலிசைக்க
வருங்காற்றோ 'ஆம்' என்று
பழிச்சும் இங்கே

யாவினுமே தமிழல்லால்
இயற்கைதரும் மொழிவேறொன்
றில்லை யன்றோ"

என்று பாரதிதாசன் பாடினான். இப்படிப்பட்ட பைந்தமிழ் மொழி ஒரு துறையிலே இருப்பதற்குத் தகுதியில்லை என்ற காலம் மாறி, இன்றைக்கு எந்தத் துறையிலேயும் இருக்க தமிழுக்குத் தகுதியுண்டு என்ற நிலை உருவாகியிருப்பது ஒரு சிறந்த பொற்காலம். எல்லோரும் பாராட்டுகிற வகையிலே நீதி மன்றத்தினுடைய நெடிய படிக்கட்டுகளிலேகூட ஏறிச் செல்லும் ஆற்றல் எங்களுடைய இனிய மொழிக்' உண்டு என்பதைக் கேட்டு,





தமிழுக்கு இந்த நாட்டிலே தகுந்த இடத்தைக் கொடுத்திருப்பதைக் கேட்டு, மகிழ்ச்சியடைகிறேன். தமிழ்ப் பல்கலைக் கழகம், எல்லாத் துறைகளிலும் தமிழ் மயமாக்கவேண்டுமென்ற அந்த முயற்சியிலே ஈடுபட வேண்டும். அந்தச் சொல்லிலேயே அந்த நோக்கம் தெரிகிறது, லட்சியம் தெரிகிறது. தமிழில் பல கலைகளுக்கும் விளக்கம் தரும் கழகம் தமிழ்ப் பல்கலைக் கழகம். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொன்னதுபோல, இந்த மொழி தகுதியில்லாதது என்று இன்னமும் எந்தத் துறைகளில் கருதப்படுகிறதோ, அந்தத் துறைகளுக்குத் தகுதியுள்ள மொழியாக மாற்றுகிற முயற்சிகளிலே அறிவியல் கொடுக்கிற மொழியாக, உலகில் எந்த மொழிக்கும் இது குறைந்ததில்லை என்ற அளவிலே, தமிழ்ப் பல்கலைக் கழகம் சிறந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்ற நம்பிக்கையைத் தெரிவித்து, தலைவரவர்கள் அன்புக் கட்டளையிட்ட பின்னாலே, திடீரென்று எழுதிய ஒரு கவிதையை வாழ்த்தாகச் சொல்லி, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அந்த ரகசியத்தை ஏன் அம்பலப்படுத்துகிறீர்கள் ?

**புலவர் புலமைப்பித்தன் :**

உயிரில் கலந்தென் உயிரை இயக்கும்
குறில்பயில் தமிழ்மொழி கொற்றம் வகிக்க
நன்செய் நிலங்கள்தம் நன்கொடை யால்நம்
பஞ்சம் தவிர்த்துப் பசிப்பிணி மாற்றும்
தஞ்சைத் தரணியில் தமிழ்ப் பல்கலையின்
கழகம் அமைத்த கல்வித் துறைக்கு
உளமார்ந்த நன்றியை உரித்தாக்கித் தமிழ்மொழி
எங்கும் எதிலும் இலங்கச் செய்யும் என்
தங்க மனத்துத் தலைவன் முதல்வர்
புரட்சித் தலைவர் தமிழக
அரசைப் பாராட்டி அன்புடன் வாழ்த்துவேன்.

[1982 பிப்ரவரி 19

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைத்த பிறகு, அதை ஒட்டிய சட்டம் இன்று வருகிறது, அதை தி. மு. க. சார்பில் நான் பாராட்டி, வரவேற்கிறேன். தமிழ் நாட்டின் மையப் பகுதியில், மருத நிலச் சூழலில் இருக்கின்ற தஞ்சைத் தரணியில் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைத்து, சிறப்பாகச் செயல்படுவதற்கு என்னுடைய மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் தங்களுடைய மகிழ்ச் சியையும், எதிர்காலத்தில் அந்தப் பல்கலைக் கழகம் எத்தகைய சிறப்புகளை தமிழ் நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும் கொண்டு வந்து சேர்க்க வேண்டு மென்பதையும் சொன்னார்கள். இறுதியாகப் பேசிய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் தனக்கே உரிய கவிதை உணர்வோடு அதனை வாழ்த்திப் பாராட்டியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கக்கூடிய அவைத் தலைவர், சிலம்புச் செல்வர் அவர்கள் பேச முடியாவிட்டாலும் கூட, அவர்கள் மனமார வாழ்த்திக் கொண்டிருக்கும் நிலையில், நாம் இந்தப் பல்கலைக் கழகச் சட்டத்தை நிறைவேற்றுகிறோம். தமிழ்ப் பல்கலைக் கழகம் வந்து, எல்லாத் துறைகளிலும் தமிழில் பயில்கிற, ஆட்சி செலுத்துகிற ஒரு நிலையை முற்றுப் பெறச் செய்ய வேண்டுமென்ற நிலை நம்முடைய நாட்டில் இருப்பது வருத்தத்திற்குரியது. நம்முடைய நாட்டுக்கு விடுதலை பெற்றுத் தந்த காந்தியடிகள் ஜனநாயகத்தின் ஒரு தலை சிறந்த வழிகாட்டியாக இருந்தவர், 'நான் சர்வாதிகாரியாக இருந்தால்' என்று சொல்லி ஒரு கருத்தைச் சொன் னார். ஒரு மொழி அடிமைப்பட்டுவிட்டால், அதை விடுதலை செய்ய சர்வாதி காரம் வேண்டுமென்று நினைத்துவிட்டாரோ என்று நான் நினைக்கிறேன். உலக வரலாற்றை நீங்கள் புரட்டிப் பார்த்தால், ஜனநாயகத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்கும் இங்கிலாந்து, ஒரு காலத்தில் பிரான்ஸ் நாட்டுக்கு அடிமையாக இருந்ததை வரலாறு சுட்டிக் காட்டுகிறது. 16, 17 வது நூற்றாண்டுகளில் ஐரோப்பா கண்டத்தில் அரசியல் ரீதியாக பிரான்சு தலைமை வகித்தது. அதை வரலாறு சுட்டிக் காட்டுகிறது. அந்த மொழியின் ஆதிக்கம் எல்லாப் பகுதிகளிலும் பரவியிருந்தது. இப்போது கூட நம்முடைய நாட்டில் காமர்ஸ் படிப்பவர்களுக்கு பிரென்ச் ஒரு மொழியாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த அளவிற்கு கமெர்ஷியல் லாங்குவேஜ்-ஆக உலகம் முழுவதும் பிரென்ச் ஆதிக்கம் செலுத்தி வந்தது. ஆனால் அதனுடைய பொலிடிகல் பவர், நாடு தழுவிய அதிகாரம் குறைந்தபோது, மொழி ஆதிக்க மும் குறைந்தது. இருந்தாலும் ஒரு கடல் இடைவெளியைக் கடந்து, ஜல



1982 பிப்ரவரி 19] [திரு. ம. சங்கரலிங்கம்]

சந்தியைக் கடந்து, இங்கிலாந்தில் அந்த மொழி ஆதிக்கம் செலுத்திக் கொண் டிருந்தது. பிரென்ச் மொழியில் கற்பித்தால், எழுதினால், தண்டனை என்று சட்டம் போட வேண்டிய நிலை ஏற்பட்டு, இங்கிலாந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றினார்கள். இது வரலாறு. ஒரு நாடு அடிமைப்பட்டால், உணர்ச்சி பெற்று விடுதலை பெறலாம். மொழி அடிமைப்பட்டால், என்ன செய்வது? பிற மொழியாளர்களை ஒப்பிடும்போது, மொழி அடிமையாகிக்கொண்டிருக் கிறவர்கள், இவ்வளவு சிறப்பு பெற்ற தமிழர்கள்தான். 'யாமறிந்த மொழி களிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்' இப்படிப் பாடியவர் 9 மொழிகள் தெரிந்தவர். அத்தகைய உயர்ந்த மொழி தமிழ். வட நாட்டிலே ஆங்கிலம் தெரிந்தவன் அதில் பேசுவதில்லை, இந்தியில் பேசுகிறான். அவர்களைப் பாராட்ட வேண்டும். கேரளாவில் மலையாளத்தில்தான் பதில் சொல்லுவார்கள். நமக்குத் தெரியாவிட்டாலும், அதில்தான் சொல்லுவார்கள். ஆனால் அதனால் நமக்கு அதிகச் சிரமமில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மலையாளியாகக்கூட இருந்ததாகச் சொல்லுகிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மலையாள நாட்டில் தமிழ் நாட்டின் ஒரு பகுதி இடைக்காலத்தில் சேர நாடு என்று இருந்தது . . .

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இந்திக்காரர்கள் இந்தியில் பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். பேசுவதில் ஒன்றும் தவறில்லை. நமக்கு இந்தி தெரியாது என்று தெரிந்தும், இந்தியில் பேசுவார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இந்தியில் பேசுவதைப் பாராட்டுகிறோம். நமக்கு இந்தி தெரியாது, ஆங்கிலம்தான் தெரியுமென்றாலும், அவர்களுக்கு ஆங்கிலம் தெரிந்தாலும், இந்தியில் பேசி, நம்மை இந்திக்குப் பக்கத்தில் நிறுத்தப் பார்க்கிறார்கள்.

சேர செந்தமிழ் நாட்டில் ஒரு பகுதியை மலையாள நாடாகப் போகாமல் எங்களுடைய பரம்பரையினர் மீட்டனர். தலைவரவர்களுக்குத் தெரியும். அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு, அந்தப் பகுதியை தமிழகத்தோடு கொண்டு வந்து சேர்த்த பெருமை அவர்களுக்கு உண்டு. அந்தப் பகுதியில் தமிழைப் படிக்காது, எல்லோரும் மலையாளம் படித்த தமிழர்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். 1947-க்கு முன்னால் மலையாளப் பள்ளிகள்தான். குஞ்சன் நாடாருக்கு மலையாளம்தான் தெரியும். நேசமணி அவர்களுக்கு மலையாளம்தான் தெரியும். அங்கேயிருந்து வருபவர்கள் ஆங்கிலத்தில் பேச

வதற்கு அதுதான் காரணம். அவர்கள் தமிழர்கள், படித்தது மலையாளப் பள்ளிகளில். 1947-க்குப் பிறகு நாங்கள் ஒரு இயக்கம் ஆரம்பித்து, [illegible] வாழ்ந்தால் தாயகத்தோடு வாழ்வோமென்று சொல்லி, போராட்டம் செய்து, தமிழகத்தோடு சேர்த்திருக்கிறோம். தமிழகத்தின் ஒரு பகுதியைக் காத் தோம். எஞ்சிய பகுதிகள் உங்களுடைய பாராமுகத்தால் வந்து சேரவில்லை.

இப்போதுகூட கேரளத்தில் நல்ல தமிழ் சொற்கள்தான் ஊர்களுக்குப் பெயர்களாக இருக்கின்றன. செங்குன்றூர் என்று இருக்கிறது.

(பிற்பகல் 4-40)

ஆலப்புழை நல்ல தமிழ்ப் பெயர்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரு அனந்தபுரம் கூட நல்ல தமிழ்ப் பெயர் தான்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** ஆம், திரு அனந்தபுரம் கூட நல்ல தமிழ்ப் பெயர் தான். இப்படி பல இடங்களில் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள் இப்போது தமிழைப் பாதுகாக்க முடியாமல் அவர்கள் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கு வந்திருப்பதற்கு மகிழ்ச்சி. ஆனால் வர வேண்டிய இன்னும் பலர் அங்கே வாழ்கிறார்கள். தேவிகுளம், பீர்மேடு போனதிலே இன்னும் வருத்தம் தான்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அது போனது என்று நான் நினைக்கவில்லை. நாம் விட்டோம் என்று தான் நினைக்கிறேன். அன்றைக்கு நாங்கள் அதற் காகப் போராடிக்கொண்டிருந்தோம். 3 தொகுதிகளிலும் தமிழ் எம். எல். ஏக்களைத்தான் கொண்டு வருவோம் என்று சொல்லி, அப்படிக் கொண்டு வந்து காட்டவும் செய்தோம். அன்றைக்கு நான் கூட போராடி கைது செய்யப்பட்டேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கேரளாவில் இருந்தாலும் இப்பொழு தும் 2 தமிழ் எம். எல். ஏ. க்களைத் தான் மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்பி யிருக்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** உண்மைதான். 2 தமிழ் எம் எல். ஏக்கள் கேரளச் சட்டமன்றத்தில் இருக்கிறார்கள். அன்றைக்கு போராட்டம் நடை பெற்றபோது, அண்ணா அவர்களும் கூட வந்திருந்தார்கள். நாங்கள்



கை கொடுக்க தமிழ் இருந்தது. நாம் விட்டு
போராடியபோது, எங்களுக்குக் பெற்றுக்கொண்டு வர இப்போது முடிய
விட்டோம். விட்டு விட்டதைப் "யாதும் ஊரே" என்னும் பரந்த
வில்லை. ஆனால் தமிழர்கள் எப்போதுமே விட்டுவிட்டோம். இப்போது நாம்
எண்ணம் உடையவர்கள். அதனால் துணை வேந்தராகப் பணியாற்று
கொண்டு வந்திருக்கிற பல்கலைக் கழகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தவர் தான்
பவர் கூட திருவனந்தபுரத்தில் இந்தப் பல்கலைக்
அவருக்கு நாகர்கோவில் தான் சொந்த ஊர். ஆகவே என்னுடைய பாராட்டுக்
கழகத்திற்கு மேலும் சிறப்பு ஏற்படுகிறது. அதற்கும்
களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உத்தியோகத் துறையில் கன்னியா
**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒரு புகார் இருக்கிறது. அது
குமரி மாவட்டம் ஆதிக்கம் செலுத்துவதாக கருத்து என்ன? (சிரிப்பு)
பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய

அது தவறான எண்ணம். அதைத் தனித்துப்
**திரு. ம. சங்கரலிங்கம் :** நம்மை விட்டுப் போகவில்லை
பார்க்கிற ஒரு மனப்பான்மை இன்னும்

**சோமசுந்தரம் :** எந்த மாவட்டமும்
**மாண்புமிகு திரு. எஸ். டி.** செலுத்துவதாக இந்த அர
இன்னொரு மாவட்டத்தின் மீது ஆதிக்கம்
நினைக்கவில்லை.

ஒருவேளை கன்னியாகவும், குமரி
**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இருக்கிறதோ என்னவோ?
யாகவும் இருப்பதால் தான், அப்படி

தமிழகத்தோடு இரண்டறக் கலந்து கொண்டி
**திரு. ம. சங்கரலிங்கம் :** நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.
ருக்கிறோம். அப்படித் தான் பலரும் என்கிற உணர்வுக்கு வர வேண்டும்.
விரைவிலே அவர்களும் எல்லோரும் ஒன்று சொன்னேன். அதன்
நாளாகத்தான் இந்தப் பிரச்சினையைப்பற்றிச் சொல்லவில்லை.
விளைவு தான் இவ்வளவும். யார் மீதும் நான் பழி இருக்கிற
எங்களுக்கு எப்போதுமே அத்தகைய உணர்வு உண்டு. இங்கு பார்த்தாலும்
அனைவருக்கும் நன்றாகத் தெரியும். தட்ப வெப்ப நிலைப்படி தட்ப வெப்ப
கூட, கடலும் மலையைச் சார்ந்த பகுதியும் தான் நம்முடைய மாநிலத்தில் இருப்
நிலைக்குச் சொந்தமானவை. அந்தப் பகுதிகள் பிற இன்றைக்கு
பதற்கு பதிலாக நம்முடைய மாநிலத்தில் இருந்திருந்தால், பெருந்தன்மையோடு
அதற்குச் சொந்தம் கொண்டாடியிருப்பார்கள். நாம்
அதை விட்டுக் கொடுத்திருக்கிறோம்.

அடுத்து, தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழுக்கு உண்மையிலேயே தொண்
டாற்றக் கூடிய முறையில் மருத்துவம், பொறியியல் போன்ற பாடங்களை,
தமிழில் மொழி பெயர்த்து, கற்றுக் கொடுக்க உறுதுணையாக இருக்க வேண்
டும். திட்டம் போடுகிறபோது கூட இரண்டு விதமாகத் திட்டம் போட
வேண்டும். உடனடித் திட்டம் என்ற ஒன்றை முதலில் வைத்துக் கொள்ள
வேண்டும். "ஃபேஸ்ட் புரோகிராம்" என்று சொல்கிறோமே அம்மாதிரி
உடனடியாக நிறைவேற்ற வேண்டிய திட்டங்களாக ஒருசிலவற்றைத்
தேர்ந்தெடுக்க வேண்டும். விஞ்ஞான, பொறியியல், மருத்துவயியல் போன்ற
பாடங்களையெல்லாம் கல்லூரிகளில் தமிழ் மொழி மூலம் கற்றுக் கொடுப்பதற்கு
உறுதுணையாக இருப்பதற்கான சிறப்புத் திட்டத்தை உடனடியாக தமிழ்ப்
பல்கலைக் கழகம் வகுக்க வேண்டும். இலங்கையில் அவர்களுடைய தாய்
மொழியில் எம்.பி.பி.எஸ். கற்றுக் கொடுக்கப்படுகிறது. ஜப்பான், சீனா,
இன்னும் அரபு நாடுகளில் கூட அந்தந்த நாட்டிலுள்ள தாய் மொழி மூலம்
பொறியியல் போன்ற பாடங்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் நம்
நாட்டிலோ ஆங்கிலத்தில் பொறியியல் படித்தால்தான், வரும் என்கிறார்கள்.
மொழியைப் படிக்கத்தான் காலத்தைப் போக்குகிறார்கள். பாடத்தைத்
தாய்மொழி மூலம் படிக்க அவர்கள் தயாராக இல்லை. இந்த நேரத்தில்,
மாண்புமிகு தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் மாண்புமிகு கல்வி
அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். ஒரு கால
கட்டத்தை நிர்ணயித்து இரண்டு ஆண்டுகளுக்குள் எல்லாக் கலைக் கல்லூரி
களிலும் விஞ்ஞானப் பாடம் தமிழில்தான் நடத்தப்படவேண்டுமென்று அறி
விக்க வேண்டும். அவ்வாறு படித்தால் அகில இந்திய ரீதியில் நாம் பிற
மொழியினரைவிட பின்தங்கிவிடுவோம் என்று. வாதம் புரிகிறார்கள்.
அப்படிச் சொல்பவர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
இன்றைக்கு வட இந்தியாவில் எம்.ஏ. சர்டிபிகேட், எம். எஸ்சி. கெமிஸ்ட்ரி
சர்டிபிகேட் இவைகளையெல்லாம்கூட இந்தியில்தான் கொண்டுவந்து காட்டு
கிறார்கள். ஆகவே இந்தியில் பாடம் சொல்லிக் கொடுப்பது என்பது அங்
கெல்லாம் வந்தாயிற்று. அந்த நிலை இங்கேயும் உடனடியாக வரட்டும்.
நாம் பின்தங்கியிருப்பதற்க் காரணம் நாம் மொழி வழி படிக்காததுதான்
என்பதை நான் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.
கோர்ட்டுகளில் தமிழில் வழக்கு நடத்தப்படும், தீர்ப்பு அளிக்கப்படும் என்று
சொன்ன உடனேயே அதற்குத் தடை வாங்க முயற்சி செய்கிறார்கள். இது
இந்த நாட்டிலுள்ள மக்களில் இன்னும் பலர் எப்படிப்பட்ட நிலையில்
வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் காட்டுகிறது. இப்படிப்



பட்டவர்கள் எல்லாம் சமுதாய உணர்வு பெற்று கோர்ட்டுகளுக்குப்
போகவே அச்சம் ஏற்படுகிற ஒரு நிலை வரவேண்டும். எதற்கெடுத்தாலும்
நீதிமன்றத்திற்குப் போய் தடை வாங்குவதா? தமிழில் நீதிமன்ற நட
வடிக்கை நடந்தால், குற்றவாளியாக வருபவர் தமிழில் தன்னுடைய
கருத்தைத் தெரிவித்து அதற்கேற்ப நீதிபதியும் தமிழில் தீர்ப்பைச் சொன்
னால், அது ஒரு நல்ல முறை. இத்தகைய ஒரு முறையைத் தான் இங்கே
யும் நாம் கொண்டுவர வேண்டும். பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை
யெல்லாம் தமிழ் மொழியில் கொண்டு வந்தாக வேண்டும். இங்கே குறிப்
பிட்டமாதிரி உள்ள ஆருடங்களையெல்லாம் பிற்பாடு கொண்டு வரலாம்.
ஒரு டார்கெட் போட்டுக் கொடுக்க வேண்டும். 2 ஆண்டுக்குள் அனைத்து
கலைச் சொற்களையும், விஞ்ஞானச் சொற்களையும் விஞ்ஞானப் பாடத்திற்
குரிய புத்தகங்களையும், பொறியியல், தொழில் நுட்ப, மருத்துவப் புத்தகங்
களையும் தமிழில் மொழி பெயர்த்து கல்லூரிகளில் அமுல்படுத்த வேண்டும்.
அதற்கான உறுதியை எடுத்துக்கொள்ள வேண்டும். பல்கலைக் கழக சிண்டி
கேட், செனட் போன்றவற்றில் நல்ல கல்வி ஆற்றல் மிக்கவர்கள் இருக்
கிறார்கள். அவர்களுடைய பணியைப் பயன்படுத்தி தமிழில் மொழி
பெயர்க்க வேண்டும். அதையும் செய்தால் தான், அரசைப் போற்ற முடியும்.
வெறும் தமிழ் பல்கலைக் கழகமாக மட்டும் இது இருக்கக்கூடாது. பழைய
பணக்காரர்களுக்கும் புதிய பணக்காரர்களுக்கும் வித்தியாசம் உண்டு.
தஞ்சாவூர், கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் இன்றைக்கும் பழைய
பணக்காரர்கள் இருக்கிறார்கள் அவர்களுக்கு நிலம் எல்லாம் நிறைய
இருக்கும். வில் வண்டியில் தான் போவார்கள். ஆனால் புது பணக்காரர்கள்
இருக்கிறார்களே அவர்கள் பணம் வந்த உடனே ரோல்ஸ் ராயில்
வண்டி ஒன்று வாங்கி அதில் ஜம் என்று போவார்கள். அதுபோல் மொழி
என்று பார்க்கும்போது, பழைய நூல்களை ஆராய்ச்சி செய்யப் போகிறவர்கள்.
புதிய சிந்தனையோடு ஆராய்ச்சி செய்ய வேண்டும். கவிமணி தேசிய
விநாயகம் பிள்ளை நாகர்கோவிலைச் சேர்ந்தவர். அவர் உயிருடன் இருக்கும்
போது, அவருடன் நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, ஒன்றைச் சொல்
வார்கள். 'காபி' ஆங்கில மொழியிலிருந்து வந்ததாக இருந்தாலும் கூட,
அதை காலைக் குடிநீர், மாலைக் குடிநீர் என்று சொல்லக் கூடாது என்று
சொல்லுவார்கள். கார்லைல் என்பவர் நிறைய ஆங்கில வார்த்தைகளைச்
சேர்த்தார். நான் தமிழில் பெரிய புலவன் அல்ல. வரலாறு படித்துவிட்டு
தமிழ் படித்து வந்தவன். தமிழ் உணர்வால் தமிழில் பேசுகிறேன்.
புலமையோடு கூடிய தமிழ் பேசவில்லை.

[1982 பிப்ரவரி 19

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நல்ல தமிழில் தான் பேசுகிறார்கள்.

**திரு ம. சங்கரலிங்கம் :** எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்றால், ஆராய்ச்சி என்பது புதிய உத்வேகத்தோடு, உணர்வோடு, பண்ணப்பட வேண்டும். அன்றாடம் நாம் உபயோகப்படுத்தும் முக்கியமான சொற்களைக் கொண்டு அது வர வேண்டும். காபி குடி என்று சொல்லுகிறார்கள். 'காபி' யில் ஆங்கில வார்த்தை இருக்கிறது. ஆனால் 'காபி' குடி என்று தமிழில் அழகாகச் சொல்கிறார்கள். இந்தமாதிரி நடைமுறைப் பழக்கத்தில் இருக்கும் சொற்களை ஒழிப்பது எப்படி என்று ஆராய்ச்சி செய்யாமல் விஞ்ஞான ரீதியில் தமிழுக்கு நன்மை செய்வதாக ஆராய்ச்சி அமைய வேண்டும். ஒரு புதிய கண்ணோட்டத்துடன் கூடிய துணை வேந்தர் தான் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர்கள் தமிழில் நிரம்ப புலமையுடையவர்கள், புதிய பார்வையையுடையவர்கள்,

(பிற்பகல் 4-50)

'ஆலோசனைக் குழு' என்று சொன்னார்கள். காலையிலேயே "இண்டி கேட்டை 'ஆலோசனைக் குழு' என்று சொல்லலாமா?" என்று நான் சொன்னேன். ஆலோசனைக் குழு என்று சொன்னால் 'அட்வைஸ்' வழங் கும் ஒரு 'பாடியாக' ஆகிவிடும். இப்போது இருப்பதுபோல், 'ஆட்சிக் குழு' 'பேரவை' என்ற வரையிலே இருக்கட்டும். தேவையென்றால் பின்னாலே கலந்து பேசி மாற்றலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஏற்கெனவே பல்கலைக் கழகங்களிலே 'பேரவை' என்றும் 'ஆட்சிக் குழு' என்றும் அவைகளை நல்ல வார்த்தைகளால்தான் அழைக்கிறார்கள், அது நன்றாகத்தான் இருக்கிறது, அப்படியேகூட இருக்கலாம்.

**திரு ம. சங்கரலிங்கம் :** 'பேரவை' என்று வைப்பது நல்லது. பக்கம் 16-லே, செனட் அவையிலே. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆலோசனைக் குழுவை, வல்லுநர் குழு என்ற முறையிலும் கருத வாய்ப்பு இருக்கிறது.



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** செனட்டினுடைய நிலையைப் பற்றி, பல்கலைக் கழக மானியக் குழு அது ஒரு 'டெலிபிரேட்டில் பாடி'யாக, ஆலோசனைக் குழுவாகத்தான் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். அந்த அடிப்படையிலேதான் பார்க்கிறோம்.

**திரு ம. சங்கரலிங்கம் :** காலையிலேயும் நான் இந்த சந்தேகத்தைத்தான் எழுப்பினேன். பல்கலைக் கழகம் என்பது ஒரு 'அட்டானமஸ் பாடி'. அவர்களுக்கு என்று தனியாக 'பைனான்சியல் பவர்' இருக்கிறது. பட் ஜெட் 'சாங்ஷன்' பண்ண வேண்டும். பட்ஜெட்டை 'சாங்ஷன்' பண்ணு வது செனட். ஆலோசனைக் குழு என்று வைத்தால், அது ஒரு 'ரெக்கமன் டேட்டரி பாடி' மாதிரி ஆகிவிடும். இதுவரையிலும் அப்படி இருந்த தில்லை. ஒருவேளை இது மொழி பெயர்ப்பிலே ஏற்பட்ட தவறாகக்கூட இருக்கலாம். பக்கம் 16-லே எப்படி எப்படி ஆட்களைத் தேர்ந்தெடுப்பது என்று சொல்லியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நான் பாராட்டுகிறேன். மதுரைப் பகுதியில் மதுரைத் தமிழ்ச் சங்கம், கரந்தைத் தமிழ்ச் சங்கம், மயிலம் தமிழ்க் கல்லூரி, பேரூரிலே தமிழ்க் கல்லூரி, போன்றவையெல்லாம் இருக்கின்றன. மேலும் வாலாஜாபாத்தின் பக்கத்திலே கூட மாசிலாமணி என்பவர் ஒரு கல்லூரியை நடத்தி வந்திருக்கிறார். ஆகவே, இப்படியிருக்கும் எல்லாத் தமிழ் கல்லூரிகளும் ஒன்று சேர்ந்து அவர்கள் சார்பாக ஒருவரை அனுப்பலாம். இனிமேல் தமிழிலே வித்வான் என்ற ஒரு பட்டம் தேவை யில்லை. இப்போது நாம் தமிழிலேயே பி.ஏ., எம்.ஏ., என்றெல்லாம் கொண்டு வந்துவிட்டோம். இப்படி நடந்துகொண்டிருக்கும் இந்த நிலையங் களையெல்லாம் பல்கலைக் கழகத்தினுடைய சென்டர்களாகக் வேண்டும். ஆராய்ச்சி மையமாக மாற்ற வேண்டும். இப்போது ஒவ்வொரு பல்கலைக் கழகத்திற்கு மூன்று அல்லது நான்கு ஆராய்ச்சி மையங்கள் இருக்கின்றன. அந்த மாதிரி இதையும் ஆக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கக் கொறடா அவர்கள் சொன்னதுபோல, பிற நாட்டில் இருக்கும் நல்ல தமிழ் அறிஞர்களுக்கும் நாம் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும். நம்மைவிடவும், உணர்ச்சி வயப்பட்டு, உயர் வேகத்தோடு இருக்கும் தமிழர்கள் எல்லாம் இலங்கையிலே இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து உணர்ச்சியைப் பெற வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். நம்மை விடவும் மிகவும் உணர்ச்சியோடு, தைரியத்தோடு, உள்ள உரத்தோடு அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நாம் பிரதிநிதித்துவம் கொடுப்பது மிகவும் சிறப்புடையதாக இருக்கும். அவர்கள் விஞ்ஞானத்தை

யும், மருத்துவத்தையும் தமிழிலேயே படிக்கும்போது, அவர்களுடைய பிரதி
நிதித்துவம் நமக்கு மிகவும் தேவை. இப்போது அமைந்திருக்கும் இந்தப்
பல்கலைக் கழகம் நம்முடைய தமிழ் மொழி முன்பு பெற்றிருந்த சிறப்பைத்
திரும்பவும் பெறத் தக்க வகையில், தொண்டு செய்யும் வகையில் இருக்க
வேண்டும், செயல்படவேண்டும் என்று வாழ்த்தி, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, தஞ்சாவூரிலே
அமைக்கப்பட்டிருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகம் தொடர்பான இந்தச் சட்ட
முன்வடிவை, வரவேற்று, ஆதரித்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு
என்னுடைய நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.
இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் அரசு நல்லமுறையிலே பரி
சீலித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும், அந்த ஆலோசனைகளை
தக்கவாறு பயன்படுத்திக்கொள்ளும் என்ற உறுதியையும் நான் தெரிவித்துக்
கொள்கிறேன். இங்கே பேசிய உறுப்பினர்கள் பெரும்பாலும் தமிழ் பயிற்சி
மொழியாக இருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார்கள். தமிழ்
பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற கருத்தை இந்த அரசும் ஏற்றுக்
கொண்டிருக்கிறது. அதற்கு பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வரு
கிறது. தமிழ் பயிற்று மொழியாக வர வேண்டும் என்பது தமிழினுடைய
பெருமையின் அடிப்படையிலே என்று கூட அல்ல, தேவையின் அடிப்படை
யிலேயும் அப்படிப்பட்ட நிலைமைகள் தான் இருக்கின்றன. நான் அண்மை
யிலே முத்தமிழ்க் காவலர் அவர்களோடு பம்பாய்க்குச் சென்றிருந்தேன்.
அங்கே தமிழ்ப் பள்ளிக்கூடம் நடத்துபவர்கள் அங்கே நடைபெறும் விழா
ஒன்றிற்கு நான் வர வேண்டுமென்று அழைத்தார்கள். தாராவியிலே அந்தப்
பள்ளிக்கூடம் இருக்கிறது. தாராவி என்பது பம்பாயிலே இருக்கும் ஒரு
பகுதி. அதை, ‘ஆசியாவிலேயே மிகப் பெரிய சேரி’ என்று சொல்லு
வார்கள். தாராவியிலே இருக்கும் அத்தனை பேரும தமிழர்கள். அங்கே
நாம் சென்றால், நாம் தமிழகத்திலேயே இருப்பது போன்ற உணர்வு தான்
இருக்கிறது. நான் அங்கே சென்றபோது, நான் பம்பாயில் இருக்கிறேன்
என்ற உணர்வே எனக்கு ஏற்படவில்லை. அங்கே இருப்பவர்கள் ஒரு
முக்கியமான குறைபாட்டை என்னிடத்திலே சொன்னார்கள். “எங்களுடைய
பிள்ளைகள் எஸ்.எஸ்.எல்.சி. வரை தமிழிலேயே படிப்பதற்கு உதவி செய்ய
வேண்டும். ஒன்று மாராட்டிய அரசாங்கத்திடம் சொல்லி அந்த உதவியைச்
செய்யச் சொல்ல வேண்டும், இல்லையென்றால் தமிழக அரசே முன்வந்து



இதைச் செய்ய வேண்டும்” என்று கேட்டுக்கொண்டார்கள். “இங்கே
ஆங்கிலத்திலே படிக்க வேண்டும் என்று சொன்னால், அதற்கான வாய்ப்பு
வசதிகள் இருக்கின்றன. ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு
படிக்கலாம் அல்லது மராட்டிய மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்டு
படிப்பதற்கும் எல்லாவிதமான வசதிகளும் இருக்கின்றன. ஆனால் இங்கே
இருக்கும் தமிழர்கள் தமிழிலே படிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்.”
என்று சொன்னார்கள். பம்பாயிலே நிலைமை இப்படி இருக்கும்போது,
இங்கே தமிழகத்திலே இருக்கும் தமிழர்கள் ஆங்கிலத்திலே படிப்பதற்கு வசதி
ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்கும் நிலைமை இருக்கிறது. கிராமப்
புறங்களிலே இருந்து வருகிறார்கள், அப்படி வந்த பிறகு, “என்னுடைய
பையன் ஆங்கிலத்திலே தான் படிக்க வேண்டும், அதற்குரிய வசதிதான்
வேண்டும்” என்று கேட்பவர்களும் இருக்கிறார்கள் தாராவியிலே இருக்கும்
தமிழர்கள் ‘நாங்கள் தமிழிலே படிக்க வேண்டும், அதற்குரிய வசதி செய்ய
வேண்டும்’ என்று என்னிடம் கேட்டபோது, எனக்கு ஆச்சரியமாக இருந்தது.
நிலைமையைக் கேட்டபோது, எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.
அவர்கள் சொன்ன பதில் என்னவென்றால் “ஆங்கிலத்திலோ, மராட்டியிலோ
படிக்க வேண்டுமென்ற நிலைமை இருப்பதால், எங்களுடைய குழந்தைகள்
6-வது அல்லது 7-வது வகுப்புக்கு மேல் படிக்க முடியாத நிலை இருக்கிறது
அந்த வகுப்புக்களுக்குப் பிறகு தமிழிலே படிக்கும் வசதி இல்லாததால்,
இடையிலேயே படிப்பை நிறுத்தி விடுகிறார்கள். பெரும்பாலும் உயர்
நிலைப் பள்ளிக் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பு இல்லை. இப்படியே
இடையிலே படிப்பை நிறுத்தி விட்டு, அவர்கள் தெரிந்த தொழிலைத்தான்
செய்துகொண்டிருக்கிறார்களே தவிர, மேல் படிப்பு படித்து பட்டம் பெற்று,
அவர்கள் வாழ்க்கையிலே மேல் நிலைக்கு வரும் நிலைமை இல்லை” என்று
சொன்னார்கள். இத்தகைய ஒரு குறைபாட்டை மாதுங்கா போன்ற மற்ற
இடங்களுக்கு நான் சென்றபோது அல்லது அந்தப் பகுதிகளிலே உள்ள
நண்பர்களோடு நான் பேசிக்கொண்டிருந்தபோது அவர்கள் என்4டத்திலே
சொல்லவில்லை. தாராவியிலே இருக்கும் தமிழர்கள் தான் இந்தக்
கோரிக்கையை வைக்கின்றார்கள் என்பதைப் பார்க்கும்போது, பின் தங்கிய,
தாழ்த்தப்பட்ட பிரிவினர், அந்தப் பிரிவைச் சார்ந்த பிள்ளைகள் தங்களுக்
குத் தாய்மொழியில் சொல்லித் தந்தால்தான் உதவியாக இருக்கும் என்று
கேட்கும் நிலைமைதான் இருக்கிறது. நாம் இதை உணர்ந்து இன்னும்
தமிழிலே பாடம் சொல்லிக்கொடுக்கவில்லை என்று சொன்னால், இங்கே
இருக்கும் கோடிக்கணக்கான தமிழ் மக்களுடைய உள்ளத்தைப் புரிந்துகொள்

ளாமல், அவர்களைப்பற்றி அக்கறை கொள்ளாமல் இருப்பதாகத்தான் கொள்ள வேண்டும். அந்த மக்கள் வாழ்க்கையிலே முன்னேற வேண்டும் என்ற எண்ணம் இருந்தால், தமிழ் பயிற்சி மொழியாக வேண்டும். அந்த அடிப் படையிலேதான், அந்த மொழியிலே அவர்கள் படிக்க வேண்டும் என்ற நிலைமையின் அடிப்படையிலே தான் நாம் காரியங்களை ஆற்றுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசும்போது, "கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் 'காஃபி' என்ற வார்த்தையை தமிழிலே 'காப்பி' என்று எடுத்துக்கொள்ளுங்கள்" என்று சொன்னதாகச் சொன்னார்கள். அப்படி எடுத்துக்கொள்ளாமல் இருந்ததுதான் இன்றைக்கு தமிழ் பயிற்சி மொழியாக ஆவதற்குப் பெரும் தடையாக இருக்கிறது. இன்றைக்கு நாம் எந்த வார்த்தைக்கு, எந்த வார்த்தையை உபயோகப்படுத்து வது என்று தர்க்கவாதம்தான் செய்துகொண்டிருக்கிறோம். ஏதாவது ஒரு வார்த்தையைப் பயன்படுத்த ஆரம்பித்தால், காலப்போக்கிலே நல்ல வார்த்தைகள் தானாகவே வரும்; தேவையில்லாத வார்த்தைகள் நம்முடைய பழக்கத்திலேயிருந்து போய்விடும் என்ற நம்பிக்கையில் இருக்கிறோம். எதுவாக இருந்தாலும் பயன்படுத்துவது என்ற நிலைக்கு வந்துவிட்டால், உடனடியாகப் பயிற்சி மொழியாக ஆகும் வாய்ப்பு இருக்கிறது. பயிற்சி மொழி

(பிற்பகல் 5-00)

என்று சொல்லும்போது, வார்த்தைகளில் தவறுகளைக் கண்டுபிடித்துச் சொல்லிக் கொண்டிருந்தாலோ அல்லது நல்ல, சரியான தமிழ் வார்த்தை வந்தால்தான் பயன்படுத்துவது என்ற நிலையிலேயே இருந்தாலோ, தமிழ் மொழி பயிற்சி மொழியாகப் பயன்படுவதற்கு இன்னும் வெகுகாலமாகும். எனவே அத்தகைய தடைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது நம்முடைய கடமையாகும். பயிற்சி மொழியாகத் தமிழ் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் பாலிடெக்னிக்கில்கூட தேர்வுகளை நடத்தும் போது, ஓரிரு பாடங்களைக் குறித்து தமிழிலேயே தேர்வுகளை நடத்த முயன்று, அதில் ஓரளவுக்கு வெற்றியும் கண்டிருக்கிறோம். அந்த அடிப் படையில் வேறு முறைகளிலும் இந்தப் பிரச்சினையைப் பரிசிலனை செய்ய லாம் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். தமிழகத்தில் மேல் நிலைக் கல்வி என்று கொண்டு வந்து இரண்டாண்டுக் கல்லூரிக் கல்வியை, பெரும்பான்மையான மாணவர்கள்



தமிழிலேயே கற்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறோம். அது ஒரு அமைதியான புரட்சியாக, யாரும் கண்டு கொள்ளாத வகையில் கடந்த ஆண்டு களில் நடைபெற்று வருகிறது. அதன் மூலமாக இரண்டாண்டுக் கல்லூரிக் கல்வியை நாம் தமிழில் சொல்லித் தருகிறோம். மேல் நிலைப் பள்ளிகளில் விஞ்ஞானம் தமிழில் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல, கணி தம், பொருளாதாரம் போன்ற கல்லூரிகளில் என்ன என்ன பாடங்கள் இருந் தனவோ அவைகளெல்லாம் இன்றைய தினம் மேல் நிலைப் பள்ளிகளில் தமிழிலேயே சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. இதன் மூலம் கிராமப்பகுதி யில் உள்ள மாணவர்கள் நல்ல முறையில் படிக்கிறார்கள். படித்துவிட்டு கல்லூரிகளில் பெருமளவுக்குச் சேருகிறார்கள். நான் கல்லூரிகள் என்று சொல்லும்போது, மருத்துவக் கல்லூரியையும் பொறியியல் கல்லூரியையும் அதனைப் போன்ற பிற கல்லூரிகளையும்தான் குறிப்பிடுகிறேன். அவர்கள் தாங்கள் வாங்கிய மார்க்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அத்தகைய கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இது மிகப் பெரிய, புதிய தோர் முன்னேற்றம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த வகையில் அரசு தொடர்ந்து நல்ல நடவடிக்கைகளை எடுக்கும் என்ற உறுதி யைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, குறுகிய காலத்தில் தமிழைப் படிக்க வேண்டும் என்ற கருத்தை இங்கே மட்டுமல்ல, பல்வேறு பிற இடங்களிலும் நாம் பேசக் கடமைப்பட்டி ருக்கிறோம். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நாம் அந்த மொழியைப் படிக்க 12 ஆண்டுக் காலம், 14 ஆண்டுக் காலம் செலவிட்டுக் கொண்டிருந்தால், தமிழ் தெரியாத மக்கள் அதை விரும்பிப் படித்துத் தெரிந்துகொள்ள முடியும் என்ற தைரியத்தைக்கூட நிச்சயமாகத் தராது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். எனவே மொழியைக் கற்க காலத்தை எவ்வளவு குறைக்க முடியுமோ, எளிய முறையில் பயன்படுத்தத் தக்க வகையில் வார்த்தைகளைக் எவ்வளவு குறைத்து எளிமைப்படுத்த முடியுமோ அதைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், அது இரண்டு வகையில் நமக்கு நன்மை பயக்கும். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களில் 100-க்கு 54 பேர் இன்று எழுதப்படிக்கத் தெரியாதவர்களாகத் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் இதன் காரணமாக, தமிழ் கற்க இயலும். அடுத்து, தமிழ் நாட்டிலிருந்து பிற நாடுகளுக்கும் பிற பகுதிகளுக்கும் சென்று அங்கே தமிழை மறந்து, வாழ்கிறவர்கள் இருக்கிறார்கள். கலாச்சார ரீதியாகப் பார்க்கும்போது, அவர்கள் அந்நியராக ஆகிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பல லட்சக்கணக்கான தமிழர்களும் மறுபடியும் தம்

கலாச்சாரத் தொடர்பை நம்மோடு வலுப்படுத்திக் கொண்டு பெருமை பெறுவதற்கு தமிழ் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை அவர்களிடையே ஏற்படுத்தவும் உதவும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் இங்கே பேசும் போது, "தமிழ் ஒரு பழைய பணக்காரனைப்போல்" என்று குறிப்பிட்டார் கள். அந்த அளவுக்குத் தமிழின் பெருமையை மற்ற மொழிக்காரர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால், முதலில் நாம் மொழியை எளிமைப் படுத்தியாக வேண்டும். இதற்காக ஒரு முகாம் மைசூரில் (மொழிகள் தொடர்பான நிறுவனம்) இருக்கிறது. அங்கே ஒரு "ஓர்க்ஷாப்பை" நடத்தி பல்வேறு விதமாக விவாதித்து முறையான திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் செய் அதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறது இதற்காக தேவைப்படுகிற டேப்புகள், புத்தகங்கள், கருவிகள் ஆகியவைற்றைத் தயார் செய்து "பேக்கேஜ்" ஆகத் தயார் செய்து, தமிழ் படிக்க விரும்புகிறவர்கள் பயன்படுத்திக்கொள்கிற திட்டத்தை நிறைவேற்ற இருக்கிறோம். அதைத்தான் உலகத் தமிழா ராய்ச்சி நிறுவனத்திடம் விட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் "சோதிட இயல்" பற்றிக் குறிப்பிட் டார்கள். இதற்காக ஒரு வல்லுநர் குழு அமைத்து, அவர்கள் தெரிவித்த பரிந்துரைகளின் பேரில்தான் இது சேர்க்கப்பட்டதே தவிர இதற்கும் அதா வது பாடத் திட்டத்திற்கும் அரசுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் சொன்ன கருத்துக்களை ஏற்று செயல்பட்டிருக்கிறோம். ஒருவிதத்தில் பார்த்தால், இதைப்பற்றி ஆராய்ந்து பார்ப்பதேகூட மக்களுக்குச் சேவை செய்வதாக இருக்கும். அது பல்கலைக் கழகத்தில் பாடமாக வந்துவிட்ட பிறகு சோதிடத்தைப்பற்றி இனி யாரும் ஆதரித்தோ, எதிர்த்தோ மேம்போக்காகக் கருத்து தெரிவித்து விட முடியாது. பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சிக்கு எல்லு ஒரு கருத்தை உட்படுத்தினால், அது அறிவு பூர்வமாக நடக்க வேண்டும். எனவே தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சோதிட வியலைச் சேர்த்தற்காக யாரும் அச்சப்படத் தேவையில்லை. எனினும் வல்லுநர் குழு தெரிவித்த கருத்தின் அடிப்படையிலே, அது சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



பல்கலைக் கழக மானியக் குழுவினுடைய உதவியைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் பெற வேண்டும் என்றால், அதனால் அங்கீகரிக்கப்பட வேண்டும். தமிழ்ப் பல்கலைக் கழகம் மாநிலச் சட்டத்தின் மூலமாக, நமக்கு அரசியல் சட்டத்தில் தரப்பட்டிருக்கிற பொதுப்பட்டியலில் உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஒரு அவசரச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது. அந்த அவசரச் சட்டம்தான் தற்போது அவையின் முன் சட்டவடிவில் வந்திருக் கிறது. டெல்லியின் அனுமதி பெற்று நாம் பல்கலைக் கழகத்தை ஆரம்பித் திருந்தாலும்கூட, பல்கலைக் கழக மானியக் குழுவைப் பொறுத்த வரையில், அது பரிசீலனை செய்துதான் நிதி உதவியைத் தருகிறது. அதற்கு ஒரு குறிப்பிட்ட வளர்ச்சியைக் காட்ட வேண்டும். எனவே, அதற்கான திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு எழுதியிருக்கிறார். அக்கடிதத்திற்கு கடிதத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமர் இந்தியாவின் கல்வி அமைச்சர் ஒரு பதில் எழுதியிருக்கிறார். "உங்களுடைய தமிழ்ப் பல்கலைக் கழகத்தைப்பற்றி பல்கலைக் கழகங்களின் மான்யக் குழு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அதற்காக ஒரு கமிட்டியைப் போட்டிருக் கிறார்கள். அந்தக் கமிட்டி உங்களுடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்து, சிபாரிசு செய்யும்போது, தேவையான உதவியைச் செய்வார்கள்" என்று அந்தக் கடிதத்தில் சொலலப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டியில் 'நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் எஜுகேஷன்' என்ற அமைப்பைச் சேர்ந்த டாக்டர் எம். பி. மாத்தூர், உஸ்மானியா பல்கலைக் கழகத்தின் துணை வேந்த ரான திரு ஜி. ராம் ரெட்டி, பம்பாய் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் ராம் ஜோஷி ரான்ச்சி பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் ஏ. கே. தா மற்றும் மைசூரில் உள்ள மொழி நிறுவனத்தின் இயக்குநர் திரு டி. பி பட்நாய்க், மத்திய கல்வித் துறையின் இணைச் செயலாளர் திரு கோலாட்கர் ஆகியவர்களோடு நமது பிரதிநிதி ஒருவரும் இருந்து தமிழ்ப் பல்கலைக் கழகத்தைப் போய் பார்வையிட்டுப் பரிந்துரை செய்த பிறகு, பல்கலைக் கழகங்களின் மான்யக் குழுவின் உதவி கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே பல்கலைக் கழக மான்யக் குழுவின் உதவியைப் பெறும் முயற்சியில் நாம் ஈடுபட்டுள்ளோம், அவர்களுடைய உதவியைப் பெறுவோம் என்பதோடு, அரசின் உதவியையும் தந்து அது சிறந்த பல்கலைக் கழகமாக உருவா வதற்கு நல்ல முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்வோம் என்று கூறி, இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்துப் பேசிய அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி, இதனை ஏற்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

' சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 9/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2 முதல் 50 வரை, அட்டவணை ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு, சட்டமியற்றும் முறை ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1982) நிறைவேற்றப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை —

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1982) நிறைவேற்றப்பட வேண்டும். "

**தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.**



(பிற்பகல் 5-10)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**(5) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1982)**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1982) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவினுடைய முக்கிய நோக்கம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக தொகு நிதியில் 30 கோடி ரூபாயை வைப்பது என்ற முறையை நாம் கையாண்டு வந்திருக்கிறோம். சாதாரண மாக நிதிநிலை அறிக்கையின் மூலமாக வெளியிட்டு மன்றத்தின் அனுமதி பெற்று நாம் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். எதிர்பாராச் செலவினங்கள் ஏற்படுகிறபோது தொகு நிதியிலிருந்து எடுத்து, பிறகு துணை நிதிநிலை அறிக்கையின் மூலமாக மன்றத்தின் அனுமதி பெற வேண்டுமென்ற நிலை மையை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். சென்ற ஆண்டு எதிர்பாராத வறட்சி நிலை ஏற்பட்டதன் காரணமாக, மொத்தமுள்ள 16 மாவட்டங்களில் 13 மாவட்டங்களில் மிகக் கடுமையான வறட்சியை சமாளிக்க வேண்டியதன் காரணமாக, 30 கோடி ரூபாய் தொகு நிதியில் வைக்கின்ற நிலையை 110 கோடி ரூபாயாக உயர்த்தி டிசம்பர் மாதம் 30 ஆம் தேதி வரையில் என்று சொல்லி சட்டமன்றப் பேரவை, மேலவை ஆகியவைகளின் அனுமதி பெற்று வைத்திருந்தோம். ஆனால் அதற்குப் பிறகு ஏற்பட்ட எதிர்பாராச் செலவின் அடிப்படையில் நவம்பர் திங்கள், டிசம்பர் திங்கள் ஆகியவற்றில் சட்டமன்றம் கூடியிருக்குமானால் துணை மதிப்பீடு மூலமாக இதை நிறைவேற்றியிருக்க லாம். டிசம்பர் இறுதி வரை முடித்திருக்கலாம். ஆனால் குறிப்பாக வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொண்டதற்காக 4 கோடியே 53 இலட்சம் ரூபாய், தன்னிறைவுத் திட்டத்திற்காக 29 கோடியே 41 இலட்சம் ரூபாய், பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குக் கடனாகக் கொடுத்த 7 கோடியே 68 இலட்சம் ரூபாய், சென்னை மாநகராட்சிக்கு 2 கோடியே 99 இலட்சம் ரூபாய்,

@ 692 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

 தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1982)

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 பிப்ரவரி 19

ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்திற்கு 4 கோடியே 64 இலட்சம் ரூபாய் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டதன் காரணமாக துணை நிதிநிலை அறிக்கையில் நிறைவேற்ற வழியில்லை. டிசம்பர் திங்கள் 31ஆம் தேதி முடிந்துவிட்டபடியால், நிதிகளைச் செலவழிக்க முடியவில்லை என்று சொல்லி மார்ச் திங்கள் 31 ஆம் தேதி வரையில் நீட்டிக்க இந்த மசோதா வந்திருக்கிறது. மார்ச் 31ஆம் தேதி முடிவடைந்துவிடும். மறுபடியும் 30 கோடி ரூபாய் தொகு நிதியில் இருக்கும். இடையிலே ஏற்பட்ட சங்கடங்களை நீக்க அவசரச் சட்டத்தின் மூலமாக 31ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது. இதற்கு பேரவை, மேலவை அனுமதி வேண்டும். அதற்காக சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை —

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1982) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1982) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

1982 பிப்ரவரி 19]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1982) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

**தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.**

### 6. அரசின் தீர்மானம்.

**அலுவல் வரிசையில் மாற்றம் குறித்து.**

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"மேலவை விதி 21 (3) ன்கீழ் இனம் நான்கில் உள்ள ஏழாவது இனமாகிய தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1982), ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவுக்கு முன்பு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"மேலவை விதி 21 (3)-ன் கீழ் இனம் நான்கில் உள்ள ஏழாவது இனமாகிய தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1982), ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவுக்கு முன்பு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 5. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (6) தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1982.)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம
ஆண்டு, சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு @ (சட்ட மன்றப்
பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட
வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

1982 மார்ச் 1 ஆம் நாளுக்குப் பின்னர் ஓராண்டுக்குக் குறையாமலும் ஐந்து
ஆண்டுகளுக்கு மேற்படாமலும் சட்டமன்றப் பேரவையிலோ, சட்டமன்ற
மேலவையிலோ அல்லது இவ்விரு அவைகளிலுமோ ஒருமுறை உறுப்பினராகப்
பணியாற்றிய ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 250 ஓய்வூதியமும்,
ஐந்து ஆண்டுகளுக்கு மேல் உறுப்பினராக இருக்கும் அதிகப்படியான ஒவ்
வொரு ஆண்டுக்கும் திங்கள் ஒன்றுக்கு கூடுதலாக ரூ. 50-ம் கொடுக்கப்பட
வேண்டும் என்றும், எவ்வாறாயினும் அவருக்கு எந்த வகையிலும் கொடுக்கப்
படுகிற ஓய்வூதியம் திங்கள் ஒன்றுக்கு ரூ.500க்கு மேற்படக் கூடாது என்றும்,
தமிழ்நாடு 1951ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு
சட்டம் 20/1951) 12-பி பிரிவு வகை செய்கிறது.

முன்னாள் திருவிதாங்கூர்-கொச்சி, ஆந்திர மாநிலங்களில் இருந்து
பின்னால் தமிழகத்திலே சேர்க்கப்பட்ட தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்
பினர்களாகப் பணியாற்றியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வழிவகை செய்யப்
படும் என்ற அரசு உறுதி மொழியைச் செயல்படுத்தவும் ஆகஸ்ட் 15ஆம்
நாளுக்குப் பிறகு முன்னாள் சென்னை மாநிலத் தொகுதிகளில் உறுப்பினர்
களாக இருந்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவும் இந்தச் சட்ட முன்வடிவு
வகை செய்கிறது.

மேற்கூறிய ஓய்வூதியம், வேறு எந்த மாநிலத்திலும் சட்டமன்ற உறுப்பினர்
களாகப் பணியாற்றி அதற்காக ஓய்வூதியம் பெறுபவர்களுக்குத் தரப்பட
மாட்டாது. முன்னாள் சென்னை மாநிலத்தில் இருந்ததும், பின்னர் தமிழ்

---

ஆம் பக்கங்களில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.



நாட்டிலிருந்து பிரிந்துபோனபோது இருந்த உறுப்பினர்களுக்கும் ஓய்வூதியம்
கொடுக்க மாட்டோம். மேலும் மைய, மாநில அரசுகளிடமிருந்து, அல்லது
அத்தகைய நிறுவனங்களிடமிருந்து ஓய்வூதியம், மதிப்பூதியம், தியாகிகள் ஓய்வு
ஊதியம் போன்றவைகள் இந்தச் சட்டத்தின் கீழ் பெறக்கூடிய தொகையை
விட அதிகமாக இருந்தால், அவர்களுக்கு இந்தச் சட்டத்தின் கீழ் ஓய்வூதியம்
வழங்கப்பட மாட்டாது. எனினும் அவர்கள் பெறும் ஓய்வூதியம் போன்ற
தொகை இந்தச் சட்டத்தின் கீழ் பெறும் தொகையை விட குறைவாக
இருந்தால், அந்த இத்தியாசம் மட்டும் வழங்கப்படும்.

திருவிதாங்கூர்—கொச்சி மாநிலத்திலிருந்து இங்கே வந்து சேர்ந்தவர்
களுக்கும், ஆந்திராவிலிருந்து இங்கே வந்து சேர்ந்தவர்களுக்கும், ஓய்வூதியம்
வழங்கப்படுகிற சூழ்நிலை இல்லாமல் இருந்தது. ஆக தமிழகத்தினுடைய
பகுதியாகச் சேர்க்கப்பட்ட தொகுதியிலே திருவிதாங்கூர்—கொச்சி சட்டமன்ற
உறுப்பினராக இருந்தாலும், தமிழகத்திலே சேர்க்கப்பட்ட பகுதியைச்
சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பார்களேயானால் அவர்களுக்கும்
மற்றவர்களுக்கு வழங்குவதைப் போன்றே ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று
இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது.

மற்றொன்று 1950 ஆம் ஆண்டு முதன் முதலாக இந்திய நாடு
குடியரசு நாடாக ஆக்கப்பட்டதற்குப் பிறகு தர வேண்டுமென்ற முயற்சி
எடுத்து 1952-ல் இருந்து தொடர்ந்து உறுப்பினராக இருந்து அவர்கள்
ஓய்வு பெறும்போது, ஓய்வூதியம் தருவது என்று மட்டும் வைத்திருந்
தோம். 1947—க்கும் 1952—க்கும் இடையிலே உறுப்பினராக இருந்தவர்
களுக்கு இந்த ஓய்வூதியம் ஏற்கெனவே இருந்த சட்டப்படி கிடைக்காமல்
இருந்தது. அதன்மூலம் 1947 முதல் 1952 வரை உறுப்பினர்களாக
இருந்தவர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்காமல் இருந்தது. அவர்களுக்கும் ஓய்
வூதியம் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் காரணமாக வழிவகை செய்
வதற்காகத்தான் 1947 முதல் 1952 வரை மேலவையிலோ பேரவையிலோ
உறுப்பினராக இருந்த உறுப்பினர்களுக்கு இந்தச் சட்டத்தின்
அடிப்படையிலே ஓய்வூதியம் வழங்கவும், திருவிதாங்கூர்-கொச்சி மாநிலம்,
ஆந்திர மாநிலம் போன்ற இடங்களிலிருந்து இங்கே வந்து சேர்ந்த பகுதிக்
குரிய உறுப்பினர்கள் அந்தச் சட்டமன்றத்திலே இருந்தாலும் இங்கே அவர்
களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று இரண்டு திட்டங்களையும் நிறை
வேற்றுவதற்காகத்தான்—ஏற்கெனவே வழங்கப்பட்டது—இப்போது சட்ட

வடிவிலே வந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இதை நிறைவேற்றித் தருமாறு வேண்டிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

* **திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்கின்ற அதே நேரத்தில் ஒரே ஒரு கருத்தை மட்டும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மத்திய அரசிடமிருந்தோ, மாநில அரசுகளிடமிருந்தோ அல்லது வேறு ஏதாவது அரசியல் காரணத்திற்காகவோ ஓய்வூதியம் பெறுபவர்கள் இந்த ஓய்வூதியத்தைப் பெற முடியாது என்று ஒரு பிரிவை இந்தச் சட்டமுன் வடிவிலே அமைத்திருக்கிறார்கள். அரசியல் ரீதியாக அநேகமாக விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டு சிறை சென்ற தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப் படுகிறது. "ஓய்வூதியம்" என்று டெக்னிக்கலாக ஒரு வார்த்தையைப் பயன் படுத்தியிருந்தாலும், உண்மையிலேயே அது சிறப்பூதியம்தான். விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டு தங்களை அர்ப்பணித்துக் கொண்டு பல்வேறு தியாகங்களுக்கு ஆளாகி இன்னல்களை அனுபவித்த அவர்கள் எல்லாம் நிச்சயமாக வாழ்நாளில் இந்தியா சுதந்திரம் பெறும் என்றோ, சுதந்திரம் பெற்ற இந்தியாவிலே அவர்களுக்கு மரியாதை இருக்கும் என்றோ, தங்களுடைய தியாகத்திற்கு இந்த அளவிற்கு 'ரெகக்னிஷன்' இருக்கும் என்றோ எதிர் பார்க்கவில்லை. இதையெல்லாம் எதிர்பார்த்து அவர்கள் தியாகத்திலே ஈடு பாடவில்லை. ஆகவே சிறப்பூதியம் என்ற வகையிலே இது அமைந்திருக்கிறது

அதுமட்டுமல்லாமல், சிறப்பூதியம் பெறுகிறவர்கள் எண்ணிக்கை சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகளில் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து போய்விட்டது. இந்த நிலையிலே சிறப்பூதியம் பெறுகிறவர்கள் அத்தனை பேரும் ஓய்வூதியம் பெற முடியாது என்ற நிலையை வைத்திருப்பது அவ்வளவு சரியாக இருக்காது. அவர்கள் செய்த தியாகத்தை நாம் மரியாதையோடு வரவேற்கிறோம்



என்பதற்கு இது எடுத்துக்காட்டாக அமையாது என்பதால் இன்றைக்குச் சட்ட முன்வடிவு வந்துவிட்டதால், உடனடியாக திருத்தத்தை அரசு ஏற்க முடியாது என்றாலும், பிறகாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒருவேளை இந்த நேரத்திலே அதைச் செய்ய முடியாது

(பிற்பகல் 5.20)

என்றாலும், இந்தக் கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்திலே கொண்டு பரிசிலனை செய்து, உரிய வகையிலே திருத்தம் செய்ய வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். இதனாலே பயன் அடைகின்றவர்கள் எங்கள் பகுதியிலே கொஞ்சம் கூடுதலாகவே உண்டு. திருவிதாங்கூர்-கொச்சி சமஸ்தானத்திலே சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்து அந்தப் பகுதி தமிழகத்திலே சேர வேண்டுமென்று சட்டமன்றத்திலே போராட்டம் செய்தவர்கள், அந்தப் போராட்டம் முடிந்த பிறகும், பொது வாழ்வில் இருந்துவிட்டு பிறகு ஓய்வு பெற்றவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இந்தச் சட்டத் திருத்தத்தின் வாயிலாக ஓய்வூதியம் பெறுகின்ற வாய்ப்பிருக்கிறது. அவர்கள் சார்பில் நான் என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன் இந்தச் சட்ட விதிமுறைகளிலே இருப்பதுபோல் ஓய்வு பெற்றவர்கள், ஒரு இடத்திலேதான் ஓய்வூதியம் வாங்க முடியும். 2 நிலைமைகளில் ஓய்வூதியம் வாங்குகின்ற நிலைமை இருந்தால், குறைந்து போகின்ற அளவை, வித்தியாசத்தைப் போக்குகின்ற வகையில் மட்டும் பெறலாமென்று இந்தச் சட்டப்படி அமைத்திருக்கிறார்கள். ஆனால் தியாகிகளைப் பொறுத்த அளவில், அதை பென்ஷனாகக் கருதக்கூடாது, ஒரு ஓய்வூதியமாகக் கருதக்கூடாது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். போராட்டம் நடத்திய தியாகிகளுக்கு மான்யம் கொடுப்பது என்று சொல்கிறார்கள். அதை மதிப்பூதியம் என்று சொல்லலாம். அதை மான்யம் என்று சொல்லலாம். அதேயே ஆங்கிலத்தில் 'போனஸ்' என்று சொல்கின்றார்கள். அப்படிப்பட்ட தியாகிகளில் எம்.எல்.ஏ.-க்களாக, எம்.எல்.சிக்களாக வந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த மதிப் பூதியத்தை நீடிக்க வேண்டும். இன்னும் பத்தாண்டுகளில் அந்தத் தலை முறையே இல்லாத சூழ்நிலைதான் வரும். நாம் அவர்களை மதித்துக் கொடுக்கின்ற மாதிரி இருக்க வேண்டும். அதை நிறைவேற்றுவதுதான் இந்தச்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1982 பிப்ரவரி 19

சட்டத் திருத்தத்தினுடைய உண்மையான நோக்கமாக இருக்க வேண்டும். என்னுடைய சொந்தக் கருத்து என்னவென்றால், அதை வேறு யாரும் தப்பாக நினைத்துக் கொள்ளக்கூடாது. தியாகியாக இருந்த எம்.எல்.ஏ.க்கள், தியாகியாக இருந்த எம்.எல்.சி-க்கள் மாதிரி வாழத் தெரியவில்லை. முன்பு தியாகியாக இருந்தவர்களுக்கு, இப்போது காலத்திற்கு ஏற்ப வாழத் தெரிய வில்லை. அவர்கள் உண்மையிலேயே இப்போது எம்.எல்.ஏ-க்களாக ஆன பிறகும் தியாகிகளாகவே இருக்கிறார்கள். உண்மையிலேயே அவர்கள் ; ஒரு தனி கேட்டிகரியாக இருக்கிறார்கள். அந்த கேட்டிகரியைத் தடுக்க முடியாது: இந்தக் காலத்திற்கு ஏற்ற கேட்டிகரியாகத்தான் அவர்கள் தங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கருத்து ஏற்புடையதாக இருந்தாலும், அந்தத் தனிப்பட்ட பிரிவினரைப் பார்க்க வேண்டும். அதிலேகூட சிக்கல் இல்லை. 26 ஆம் தேதி பட்ஜெட் வருகிறது. நிறைவேற்றாமல் திருப்பி அனுப்புகின்ற மாதிரி இப்போது செய்துவிட்டு, அதிலே வைத்து நிறைவேற்றாமல் பின்னாலேயாவது திருத்தம் கொண்டு வந்து செய்யலாம். இது ஒரு நல்ல கருத்து. இதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து அந்த விதிகளைத் திருத்த வேண்டும். இன்று டிஸ்கஷனில் விட்டு விட்டு, அங்கே அனுப்பி பின்னாலே அந்தச் சட்டத்தை ஆராய்ந்து எப்படிச் செய்ய முடியுமோ அப்படிச் செய்து நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர்கள் திருவாளர்கள் இராமமூர்த்தி அவர்களும், சங்கரலிங்கம் அவர்களும் இங்கே ஒரு கருத்தை எடுத்துத் தெரிவித்தார்கள். பேரவையிலேகூட மாண்புமிகு அங்கத்தினர் ஒருவர், திரு. சங்கரலிங்கம் அவர்கள் தெரிவித்த யோசனையைத் தெரிவித் திருக்கிறார்கள். ஓய்வூதியம் என்று வருகிறபோது, ஒரு வகையிலேதான் பெற வேண்டுமே தவிர இரண்டு வகையிலே பெறக்கூடாது என்பது விதி. அந்த அடிப்படையிலேதான் அந்தத் திட்டத்தைத் தீட்ட வேண்டியிருந்தது. அது 'பொலிட்டிக்கல் பென்சன்' என்ற அளவிலே அமைந்துவிட்டது. அதற்கு 'ஆனரேரியம்' என்று கூட பெயர் சொல்லலாம். இப்போது சட்ட மன்ற உறுப்பினராக இருந்து ஓய்வு பெற்றாலும், ரூ. 250 முதல் ரூ. 500 வரை ஓய்வூதியம் பெறுகின்றவர்கள் இருக்கிறார்கள். அப்படி இருப்பவர்கள், மத்திய அரசு அல்லது மாநில அரசினுடைய ஒரு வாரியத்தின் தலைவராக இருந்தால், ஆயிரம் ரூபாய் கூட வாங்குவார்கள் அப்படி அவர்கள் ஊதியம்



1982 பிப்ரவரி 19] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வாங்குகின்ற வரையிலே அவர்களுக்கு பென்ஷன் இருக்காது என்பதற்கு ஏற்ப நாம் இப்படிப் போட்டிருக்கிறோம். அவர்களுக்கு ஒரு மாதத்திற்கு ஐநூறு ரூபாய்க்கு ஓய்வூதியம் கொடுக்க வேண்டும் என்று இருந்து, வேறு வழியில் கிடைக்கும் ஓய்வூதியம் அதற்குக் குறைத்துக் கொடுக்கப்பட்டால், அந்த இடைவெளிக் காலத்திற்கு இரண்டும் சேர்ந்து ஐநூறு ரூபாய் அளவுக்குக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறோம். அப்படி நடைமுறைப்படுத்துகின்றபோது, ஒருவர் இருவருக்குத்தான் தியாகி பென்ஷன் கொடுக்கக்கூடிய நிலை இருக்கக்கூடும் என்று சொன்னார்கள். அங்கத்தினர்கள் குறிப்பிட்டுச் சொன்னபடி, அந்தத் தியாகிகளுக்குச் சங்கடங்கள் இருந்தால், இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது பார்த்துக்கொள்ளலாம். பென்ஷன், அதாவது ஓய்வூதியம் என்று இருப்பதைவிட மதிப்பூதியம் என்று அதைக் கருதுவது சரி என்று அங்கத்தினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த எக்செம்ப்ஷன்பற்றி நிதி இலாகா ஆராய்ந்து பார்க்கும். அதிலே யாருமே பாதிக்கப்படவில்லை என்ற அளவில்தான் பிரச்சினை இருக்கிறது. நடை முறைப்படுத்தும்போது, சங்கடங்கள் இருந்தால், அவர்களிடமிருந்து முறையீடு வந்தால்தான் தெரியும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். தனிப்பட்ட முறையிலே முறை யீடுகள் வருமா என்று பார்ப்போம் என்று சொல்கின்றார்கள். நான் ஒன்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். திரு. எஸ். வி. சோமயாஜுலு என்ற ஒரு தியாகி இருக்கிறார். அவர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். அவருக்கு பென்ஷன் இருக்கிறது. இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். அவருக்கு 70 அல்லது 75 வயதுக்கு மேல் இருக்கும் என்று கருதுகிறேன். அப்படிப்பட்டவர்கள் ஒரு 10, 12 பேர்கள் தான் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அரசு சட்டத் துறையையும் கலந்து செய்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த விதிமுறைகளின் கீழ் எக்செம்ப்ஷன் கொடுக்க முடியுமா என்பதைப்பற்றி அங்கத்தினர் அவர்கள் கேட்டார்கள். அதைப்பற்றி சட்டத் துறை, நிதித் துறை ஆகிய துறைகளைக் கலந்துகொண்டு செய்யலாம் என்ற அந்தக் கருத்தை நாம் ஏற்றுக்கொள்ளலாம். ஆக இந்த வகையிலே இந்த முன்வடிவை நிறை வேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். அங்கத்தினர்கள் எடுத்துக்

சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையில், அவசியம் ஏற்பட்டால், எதிர் காலத்தில் தக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று கூறி, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் சட்ட முன்வடிவு எண் 12/1982) நிறைவேற்றப்பட வேண்டும் "

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 12/1982) நிறைவேற்றப்பட வேண்டும் " என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1982) நிறைவேற்றப்பட வேண்டும். "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.



(2) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு
(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1982)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் " என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம் :

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். "

அடுத்து உள்ள இரண்டு சட்ட முன்வடிவுகளும் இதன் தொடர்புடையதாக இருப்பதால் ஒட்டுமொத்தமாக அங்கத்தினர்கள் அவரவர்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று சட்ட முன்வடிவுகளையும் எங்கள் கட்சி ஆதரிக்க விரும்பவில்லை. நாங்கள் தொடர்ந்து இந்த மாதிரி மசோதாவை ஆதரித்து வந்தோம். இம்மாதிரி ' டைம் ' கேட்கின்றபோதெல்லாம் நாங்களும் சேர்ந்து ஆதரித்து வந்தோம். இப்போதும் 30-2-1982 முதல் 30-6-1982 வரைக்கும் அவர்கள் காலக்கெடு கேட்கிறார்கள். அவர்கள் கேட்பதிலிருந்து, தேர்தல் விரைவில் நடத்தப்போவதில்லை என்பது எனக்குத் தெரிகிறது. இருந்தாலும்,

(பிற்பகல் 5.30)

அரசினுடைய சில நடவடிக்கைகளை ஆட்சேபிக்கும் முறையில்தான் இதை எதிர்க்கிறேன். பஞ்சாயத்துத் தேர்தல்கள் 10, 12 வருடங்களுக்கு முன்பு நடந்தது. இப்போது பஞ்சாயத்துத் தலைவர்கள் இல்லை. பஞ்சாயத்து யூனியன்களில் தலைவர்கள் இல்லை. இந்த நிலையில் விளக்கு, தண்ணீர்,

---

@ 695-700 ஆம் பக்கங்களில் இணைப்பு IX ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. ஆ. நல்லசிவன்] [1982 பிப்ரவரி 19

சாலை வசதிகள் மற்றும் பல வசதிகள் கிராமங்களில் படுமோசமான
நிலையில் இருக்கின்றன. ஆகையால்தான் அரசு தேர்தல்கள் நடக்குமென்று
அறிவித்தபோது, அதை ஆவலோடு எதிர்பார்த்தார்கள். பஞ்சாயத்துத்
தேர்தல்கள் இந்த முறை நடக்குமா என்ற சந்தேகம் இருந்தாலும், 12
வருடங்களுக்குப் பிறகு வருவதால், மிகுந்த ஆவலோடு அந்தத் தேர்தல்கள்
நடக்காதா என்று ஏங்கியிருந்தவர்கள், இப்போது ஏமாற்றம் அடைந்திருக்
கிறார்கள். தமிழக முதல்வரவர்கள்கூட கிராமங்களில் மக்களுக்கு நன்மைகள்
செய்ய தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்படுமென்று சொன்னார்கள்.
இதில் கோடிக் கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுகிறது.
அதனுடைய முழுப் பயனும் கிராம மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று
கண்காணிக்க பஞ்சாயத்துத் தலைவர்கள், உறுப்பினர்கள் இல்லை. மக்கள்
பிரதிநிதிகள் கண்காணிக்கும் நிலை இல்லாததால், பல புகார்கள் வந்திருக்
கின்றன. காண்ட்ராக்டர்களும் அரசு அதிகாரிகளும் சேர்ந்துகொண்டு, அரசு
செலவு செய்யும் கோடிக்கணக்கான ரூபாய் 'பெனிபிட்ஸ்' கிராம மக்களுக்குக்
கிடைக்காமல் செய்கிறார்களென்று பேசப்பட்டது. கிராம மக்கள் பலவித
மாகப் பாதிக்கப்பட்ட நிலையில், கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது
போல அரசு அறிவித்த தேர்தல், திரும்பவும் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது.
அதற்குக் காரணம் நீதிமன்றத்திலுள்ள வழக்கு என்று அரசு சொல்லுகிறது.
காரணம் உண்மைதான். அது பகுதி உண்மைதான் என்று சொல்ல விரும்பு
கிறேன். தேர்தல் இப்போது நடைபெறாமல் போனதற்குக் காரணம், நீதி
மன்றத்திலே உள்ள வழக்குதான். அதற்கு முன்பு, இந்தத் தேர்தல்களை
நடத்த வேண்டுமென்று அரசும், குறிப்பாக ஆளும் கட்சியும் முயற்சித்
தார்கள் என்பதை ஒத்துக்கொள்கிறேன். கூட்டங்களைக் கூட்டினார்கள்.
எங்கள் கட்சியின் சார்பிலே போனோம். ரிசர்வேஷன் பிரச்சினை பற்றிய
பேசப்பட்டது. நாங்கள் அதை ஆதரிக்கிறோம். அரசு முயற்சி எடுத்தது
உண்மைதான். அந்த ரிசர்வேஷனை எதிர்த்து கோர்ட்டுக்குப் போயிருக்
கிறார்கள். கோர்ட்டுக்குப் போன காரணத்தை அரசியல் கட்சிகள் ஆராய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஷெட்யூல்ட் கேஸ்ட், ஷெட்யூல்ட் டிரைப் மற்றும் பெண்களுக்கு பஞ்சா
யத்துத் தலைவர் பதவி, பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் பதவி ஆகியவற்றுக்கு
இடம் ஒதுக்கியதை, பல அரசியல் கட்சிகள் சொன்னதை, தனிப்பட்ட
நபர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதை ஆளும் கட்சி ஒத்துக்கொள்கிறது.
இங்கே பிரதான எதிர்க்கட்சி ஒத்துக்கொள்கிறது. இன்னொரு முக்கிய



1982 பிப்ரவரி 19] [திரு. ஆ. நல்லசிவன்]

கட்சியான காங்கிரஸ்(ஐ) ஒத்துக்கொள்கிறது. ஆனால் எனக்குத் தெரிந்த
வரையில், ரிட் மனுக்கள் போட்டவர்களுள் அதிகமானவர்கள் இந்த 3 கட்சி
களைச் சேர்ந்தவர்கள்தான். ரிட் பெட்டிஷன் போட்டவர்களில் கணிசமான
பேர்கள் இந்த 3 முக்கியமான கட்சிகளைச் சேர்ந்தவர்களாக, அதன் உறுப்
பினர்களாக அல்லது அனுதாபிகளாக இருக்கிறார்கள். அரசியல் கட்சிகள்
காலத்தின் போக்கை அறிந்து, ரிசர்வேஷனை ஒத்துக்கொண்டாலும், தொகுதி
களில் தனிப்பட்ட 'க்ளெயிம்' உள்ளவர்கள் இதை ஒத்துக்கொண்டால், தங்கள்
பதவி போய்விடுமென்று கருதி, இது தப்பு என்று கோர்ட்டுக்குப்
போகிறார்கள். அரசு ஷெட்யூல்ட் கேஸ்ட், ஷெட்யூல்ட் டிரைப்புக்கு 18 சத
விகிதமும் பெண்களுக்கு 15 சதவிகிதமும் ஒதுக்கியுள்ளபோது, எந்தப்
பஞ்சாயத்தாக இருந்தாலும், எண்ணிக்கைதான் முக்கியம். அரசியல் கட்சி
என்ற முறையில் எந்தத் தொகுதிக்கு ஒதுக்க வேண்டுமென்று பார்க்க வேண்டிய
அவசியமில்லை. பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து ஒன்றியங்களை ஷெட்யூல்ட்
கேஸ்ட் வகுப்பினருக்கும், பெண்களுக்கும் ஒதுக்கித்தான் தீர வேண்டுமென்
பதை அரசியல் கட்சித் தலைவர்கள் தங்கள் ஆதரவாளர்களுக்குச் சொல்ல
முடியவில்லையே! கட்சி எடுக்கக் கூடிய முடிவை ஊழியர்களும், ஆதரவாளர்
களும் ஏற்றுக் கொள்ள வைக்க முடியவில்லையே, ஏன் என்று ஆளும் கட்சி
யைப் பார்த்துக் கேட்க விரும்புகிறேன். இந்தக் கட்சிகளைச் சேர்ந்த
வர்களே ரிட் மனுக்கள் போட்டிருக்கிறார்கள். அப்படிப் போடக் கூடாது
என்று சொல்லவில்லை. அதற்குக் காரணம், அரசியல் கட்சித் தலைவர்கள்
காலத்தின் போக்கை அனுசரித்து ஒத்துக்கொள்ளும் விஷயத்தை அரசியல்
கட்சிகளின் ஊழியர்கள் ஒத்துக்கொள்ளாதபோது, அவர்களைக் கட்டாயப்
படுத்தத் தலைவர்களால் முடியவில்லை என்பது தெரிகிறது. கட்சியில்
இரும்புக் கட்டுப்பாடு செய்கிறார்கள், ஜனநாயகமே கிடையாது, தலைவர்கள்
சொன்னால் ஏற்றுக்கொள்ள வேண்டுமாம், அப்படி எங்கள் கட்சியில்
கிடையாது என்று எங்களைப் பார்த்துச் சொல்லுவார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** எங்கள் கட்சித் தலைவர்,
சொன்னால், நாங்களும் கேட்போம்.

**திரு ஆ. நல்லசிவன்:** வாதத்திற்காகச் சொல்லுகிறார்கள். வெளியே
பேசும்போது, உங்கள் கட்சி மாதிரி எங்கள் கட்சியில் கட்டுப்பாடு இல்லை
என்று சொல்லுவதைக் கேட்டிருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அது பாராட்டுவதாகத்தான்
அமையும்.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவர்களெல்லாம் சமுதாய ரீதியில் இடங்களை
ஒதுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் ஊழியர்கள் ஒத்துக்
கொள்ளவில்லையே. அவர்களைக் 'கன்வின்ஸ்' பண்ணாமல் இருக்க
என்ன காரணம் என்று ஆராய வேண்டும். நாம் தேசிய ஒருமைப்பாடு
பற்றிப் பேசினாலும்கூட, சாதிகள் கூடாதென்று பேசினாலும்கூட, பல
கட்சிகளில் சாதி உணர்வுகள் அடிப்படையில் வரும் எதிர்ப்புகளைச் சமா
ளிக்க முடியாமல், கட்டுப்படுத்த முடியாமல், அவர்களை அதே போக்கில்
போகவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு இந்த மாதிரி அனுபவம்
ஏற்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 9 ஊராட்சி ஒன்றியங்கள்
இருக்கின்றன. அதிலே எதைப் பெண்களுக்கு ஒதுக்குவது என்ற பிரச்சினை
ஏற்பட்டது. 1971 சென்சஸ்படி, குருந்தங்கோடு ஒன்றியத்தை ஒதுக்கி
யிருக்க வேண்டும். முதலிலே ராசாக்கமங்கலம் ஒதுக்கப்பட்டு, அதனால்
சிலர் பாதிக்கப்படுவதாகக் கூறி, மேல்மட்டத்தில் முறையீடு செய்து, அதன்
பிறகு கணக்கைப் பார்த்தபோது, ராசாக்கமங்கலத்தில் அரிசனங்கள் அதிக
மாக இருப்பதால், அந்தத் தொகுதியை அவர்களுக்கும், குருந்தங்கோடு
பெண்களுக்கும் போயிருக்க வேண்டும் என்று தெரிகிறது. அங்கே ஆளும்
கட்சி உறுப்பினர் ஒருவர் போட்டி போட வேண்டிய அவசியம் இருந்ததால்,
மேல்புறம் தொகுதி ஒதுக்கப்பட வேண்டுமென்று முறையிட்டு, அதை ஒதுக்கி
யிருக்கிறார்கள். 1971 சென்சஸ் கணக்கு அடிப்படையிலே பெண்கள்
எங்கே அதிகமாக இருக்கிறார்கள் என்று பார்த்தால், குருந்தங்கோடில்தான்
ஆனால் மேல்புறம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. விளவங்கோடு எம்.எல்.ஏ.
திரு. மணி அவர்கள் தொகுதியில் அந்தத் தொகுதி வருகிறது. உடனே
தோழர்கள் ரிட் பெட்டிஷன் போட வேண்டுமென்று பணத்தோடு வந்து
விட்டார்கள் 'கூடாது' என்று தடுத்து விட்டோம். கன்னியாகுமரி
மாவட்டத்தில் 9 ஒன்றியங்களில் தேர்தல்கள் நடக்க வேண்டும், அதில் ஒன்றை
ஆட்சேபித்தால், அதை ஸ்டே செய்து, எந்தத் தொகுதி பெண்களுக்கு
என்பது முடிவாகும்வரை மற்ற இடங்களிலும் தேர்தல் நடக்காது. எனவே
ஒரு பெண்ணையே அங்கு போடுங்கள் என்று சொல்லி திருப்பியனுப்பினோம்
கட்டுப்பாடு காரணமாக, எதை ஒதுக்கினாலும் பரவாயில்லை என்று
'கன்வின்ஸ்' பண்ணி அனுப்பினோம். எங்கள் தரப்பில் ஒரு பெட்டிஷன்
கூட போடாமல் பாதுகாத்தோம். உங்களால் கட்டுப்படுத்த முடியாமல்
போகும்போது, அவர்கள் என்ன செய்கிறார்கள் . . .



(பிற்பகல் 5—40)

இராமசாமி என்பவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வாதாடிய
வக்கீல் என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினரும், இல்லை
இல்லை அவர் அல்ல, இன்னொருவர்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின்
சார்பில் வாதாடிய வக்கீல் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களும்
பரஸ்பரம் குற்றம் சாட்டினார்கள். இரண்டு சாராருக்குமே தேர்தல்
நடக்கும் என்ற நம்பிக்கை இல்லாமல் இருந்திருக்கிறது. அப்படி இல்லை
யென்றால் பொது மக்களைச் சந்திக்க பயம் ஏற்பட்டிருக்கும். தேர்தல்
வந்தால் எது ஆகுமோ, என்ன ஆகுமோ என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.
அதனால் தான் ஆளும் கட்சியினர் கடைசி நேரம் வரை வேட்பாளர்கள்
யார் யார் என்று அறிவிக்காமல் இருந்திருக்கிறார்கள் என்கிற சந்தேகம்
வருகிறதா இல்லையா? ஆரம்பத்திலிருந்தே ஆளும் கட்சியினர் இந்த விஷ
யத்தில் 'இன்டரஸ்ட்' காட்டாமல் இருந்தது உண்மைதான். ஆனால்
விஷயம் கோர்ட்டுக்குப் போனபோது என்ன ஆகுமோ என்கிற சந்தேகம்
இருந்தது வாஸ்தவம் தான். அதோடு 'அலயன்ஸ்' கூட ஏற்படவில்லை.
'அலயன்ஸ்' ஏற்படாத நிலையில் தேர்தலுக்கு நின்றால் என்ன ஆகுமோ
என்கிற சந்தேகம் இரண்டு பெரிய கட்சிகளுக்குமே ஏற்பட்டது. அதனால்
தான் எலக்‌ஷனில் அவ்வளவாக அக்கறை காட்டாமல் இருந்திருக்கிறார்கள்.
கட்சி ஊழியர்களை ஒரு புறத்திலே கட்டுப்படுத்த முடியாத நிலை இருந்தது.
அரசியல் கட்சிகளுக்கிடையே கூட்டு எப்படி உருவாகும் என்கிற சந்தேகம்
வேறு இருந்ததால், அக்கறை இல்லாமல் போயிற்று. கோர்ட்டில் பரஸ்பரம்
வழக்கு போட்டு விட்டார்கள். வக்கீல்மீது பரஸ்பரம் குற்றம் சாட்டுவதிலும்,
கோர்ட் மீது பழியைப் போடுவதிலும் நேரத்தைச் செலவிட்டார்கள். மொத்
தத்தில் இரண்டு தரப்பினருக்கும் இதில் அக்கறையே இல்லாமல் போனது.
தேர்தல் நிச்சயம் வரும் என்று தான் நாட்டு மக்கள் நம்பிக் கொண்டிருந்
தார்கள். இரண்டு கட்சியிலுமுள்ள சிலர் வழக்கு போட்டதால்தான், தேர்த
லுக்குத் தடை வர முடிந்தது. அப்படி கேஸ் போட்ட கட்சித் தொண்டர்களை
கட்சிகளின் தலைவர்கள் தடுத்திருக்க முடியாதா? இப்படித் தேர்தல்
நடத்தாமல், காலத்தை நீட்டித்துக் கொண்டே போவது அரசின் பொறுப்
பின்மையைத்தான் காட்டுகிறது. 3 மாதம் ஏற்கெனவே கேட்டிருந்த
காலக் கெடு 31—3—1982 உடன் முடியப் போகிறது. இன்னும் ஒருமுறை
3 மாதக் காலம் தந்தால்கூட, 4 மாதம் தான் நீட்டிக்க முடியும். அரசாங்கம்
ஏன் இப்படி எலக்‌ஷனுக்காக காலத்தை நீட்டித்துக்கொண்டே போக வேண்டும்

என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன். தேர்தல் வரும்வரை இந்த 'ஸ்பெஷல் ஆபிசர்ஸ்' இருப்பார்கள் என்று சொல்லிவிடலாமே. அதற்குரிய ஆலோசனையை 'லா டிபார்ட்மெண்ட்டில்' கேட்கலாம். இப்போதுகூட 4 மாதத்திற்குள் தேர்தல் நடக்கும் என்பதற்கான கியாரண்டியே இல்லையே. என்னதான் அரசாங்கம் சொன்னாலும், இந்தத் தேர்தல் நடைபெறாததால், பொதுமக்கள் இந்த அரசின் மீது கடுமையான எதிர்ப்பைக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதைச் செய்தது ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, அல்லது எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி. காரணத்தைப் பொதுமக்கள் அறியத் தயாராக இல்லை. ஆனால் பொதுமக்கள் மத்தியில் இதுகுறித்து கடுமையான எதிர்ப்பு இருந்து வருகிறது. எந்தக் கட்சிக்காரர்கள் காரணம் என்று அவர்கள் பார்க்கவில்லை. ஆனால் கிராமப் புறத்தில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய அடிப்படை வசதிகளை கவனிக்கக் கூட தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாததால், பஞ்சாயத்து ரோடுகள் போடப்படவில்லை, விளக்குகள் சரியாக எரியவில்லை. இதன் காரணமாக அவர்கள் மத்தியில் அரசின் மீது கடுங் கோபம் இருக்கிறது. இந்த மன்றத்தின் மூலம் ஒவ்வொரு பெரிய அரசியல் கட்சிக்கும் நான் வேண்டுகோள் விடுக்க கடமைப்பட்டிருக்கிறேன். தேர்தல் நடைபெறும் என்று அறிவித்த பிறகு எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களும் வழக்குமன்றத்திற்குப் போக மாட்டார்கள், அப்படியே போனாலும் அந்தந்த அரசியல் கட்சித் தலைவர்கள் அதைத் தடுத்து நிறுத்துவார்கள் என்ற உறுதியை எடுத்துக் கொள்ள வேண்டும். கோர்ட்டுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் இது போகக் கூடாது என்று சொல்லி, விரைவில் எலக்ஷன் நடத்தி, கிராமப்புற மக்களுக்கு உதவி செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI: Hon. Deputy Chairman, regarding L.A. Bill No. 6 of 1982, about reservation of 15 per cent for women, I am indeed happy that some way-out for women to get elected to Panchayats and Panchayat Union Councils has been made; but there is some reservation among women representatives as to how this 15 per cent women representatives could be identified in different areas because it is mentioned here that it will be decided on population basis. If we take the population ratio, women outmember men and naturally 15 per cent is not enough. We would have been happy if the reservation was 50 per cent. However, a beginning is made but it is not very clear whether



this reservation is going to be made by nomination or by election. Now in the days of equality, if it is going to be by nomination, then women would not be very happy. Before elections take place, I would request the Hon. Minister to call a meeting of women representatives and women leaders so that they could put forth their problems. If such a conference or meeting is called, the women will be able to guide and advise them to have a fool-proof election and then women will be really happy. With these words, I would like to express my happiness and to say, at the same time, that we want a better deal. Thank you.

*திரு. க. இராமமூர்த்தி: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கு 3 சட்ட முன்வடிவுகளை வைத்திருக்கிறார்கள். அவருக்கு ஒரு இக்கட்டான சூழ்நிலை. இது போன்ற ஒரு சட்ட முன்வடிவை இதே அவையில் வைத்து பதவி நீடிப்புக்கான கால வரையறை கொண்டு வருவதன் அவசியத்தைப் பற்றி முன்பு சொன்னார். அப்போது உரையாற்றும் போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசின் சார்பாக குறிப்பிட்ட காலத்திற்குள் தேர்தல் நிச்சயமாக நடக்கும் என்று உறுதியையும் அளித்தார்கள். அதோடு மாத்திரமல்ல, இன்னொருமுறை [illegible] காலவரையறையை நீட்டித்து இன்னொரு சட்டமுன்வடிவைக் கொண்டுவர மாட்டேன் என்ற உறுதியையும் இங்கே அளித்தார்கள். சென்ற முறை அந்தஅவையில் இது குறித்த சட்டமுன்வடிவு நிறைவேறியது. அப்போது கூட நான் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவனாக இருந்தாலும் கூட அமைச்சரின் மீது இருக்கின்ற நல்லெண்ணத்தின் காரணமாக, மேற்கொண்டும் அமைச்சர் அவர்கள் இக்கட்டுக்கு ஆளாகக் கூடாது என்பதற்காக ஒரு ஆலோசனை சொன்னேன். 2 ஆண்டு காலத்திற்குள் எப்போது வேண்டுமானாலும் தேர்தலை நடத்தலாம் அல்லது கால வரையறையில்லாமல் எப்போது வேண்டுமானாலும் தேர்தலை நடத்தலாம் என்கிற வகையில் இரண்டு திருத்தங்களை நான் கொடுத்திருந்தேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: நல்லெண்ணம் நீடிக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: நல்லெண்ணம் மட்டுமல்ல. கால வரையறையும் நீடிக்கிறது. (சிரிப்பு)

திரு. க. இராமமூர்த்தி: நான் அன்றைக்குக் கொடுத்திருந்த திருத்தங்களை அமைச்சர் அவர்கள் ஏற்றிருந்தார்கள் என்றால், இன்றைக்கு இன்னொரு சூழ்நிலையில் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகி

[திரு. க. இராமமூர்த்தி] [1982 பிப்ரவரி 19

யிருக்க மாட்டார்கள். சென்ற முறை அமைச்சர் அவர்கள் இதை நிறை
வேற்றித் தாருங்கள் என்று கேட்டபோது, உறுதியாக, நிச்சயமாக, [illegible]ர்
தலை கட்டாயம் நடத்தியே தீருவோம் என்கிற நல்லெண்ணத்தோடுதான்
செயல்பட்டார். அவர் எடுத்த நடவடிக்கை குறித்து நான் குறை கூற
வில்லை. நிச்சயமாக தேர்தலை நடத்த வேண்டுமென்ற எண்ணத்தில்தான்
அவரும் அவருடைய துறையும் சில நடவடிக்கைகளை எடுத்தார்கள். அப்
படித்தான் நான் நம்பிக்கொண்டிருக்கிறேன்.

(பிற்பகல் 5—50)

ஆனால் என்ன அடிப்படையிலே விட்டுப்போயிற்று என்று சொன்னால்,
நான் ஆரம்பத்திலேயே சொன்னதுபோல, இந்தச் சட்ட முன்வடிவு குறைகள்
மலிந்த ஒன்றாக இருக்கிறது. பல திருத்தங்களை நான் அன்றைக்கே
தந்தேன். ஆனால் அவைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இன்றைக்கு
இந்தக் குறைபாடுகள் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டிய அவசியத்தை
ஏற்படுத்திவிட்டன என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இன்னொன்று,
கொள்கை அளவிலே அதை இந்த அவையிலே இருக்கும் அத்தனை கட்சிகளும்
வரவேற்றிருக்கின்றன. அவையிலே இடம் பெறாத கட்சிகளும் வரவேற்றிருக்
கின்றன. ஹரிஜனங்களுக்கென்றும், பெண்களுக்கென்றும் ஒதுக்கீடு செய்ததை
வரவேற்றது. இது தேவைதான். இது ஒரு நல்ல மாற்றம் என்றெல்லாம்
நிறைவேற்றியிருக்கிறோம். ஆனால் உள்ளாட்சித் துறை அல்லது சட்[illegible]
துறை என்ன காரணத்தினாலோ இந்தச் சீர்திருத்தத்தைப் புகுத்தும்போது
அதனாலே ஏற்படும் சட்ட விளைவுகளை முழுமையாகப் பரிசீலனை செய்[illegible]
அதன் அடிப்படையிலே இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவர மு[illegible]
வில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், ஹரிஜனங்
களுக்கான ஒதுக்கீட்டை நிச்சயப்படுத்தித் தருகிறோம், நீதிமன்றத்திலே இ[illegible]
விஷயம் இருப்பதாலே அதுபற்றிய விவரத்திற்குள் நான் வரவில்லை, ஆனால்
அதற்கான வாதத்தை சட்ட முன்வடிவின் அடிப்படையிலே சொல்கிறேன்.

ஒரு அடிப்படையான நிலையை எல்லோருக்கும் வகுத்துக்கொள்வதற்கு
உரிமை இருப்பதைப்போலவே எல்லோருக்கும் தேர்தலிலேயும் நிற்பதற்கு
உரிமை இருக்கிறது. அந்த உரிமையை யாரும் தடுத்துவிட முடியாது. சட்ட
மன்றத் தேர்தலைப் பொறுத்தவரையில், எந்தத் தொகுதியை ரிசர்வ் தொகுதி
என்று அறிவித்தாலும் கூட, தொகுதியிலே வாழும் ஒருவர் வாக்காளராக
இருந்தால், தமிழகத்திற்கு உள்ளே வேறு எந்தப் பகுதிக்கும் செ[illegible] அவர்
வேட்பாளராக நிற்க முடியும். அதைப்போ[illegible]வ, [illegible]மன்றத்திற்கு



1982 பிப்ரவரி 19] [திரு. க. இராமமூர்த்தி]

நிற்கும் ஒருவர் அவர் வாழும் தொகுதி ரிசர்வ் தொகுதியாக அமைந்து
விட்டால், அவர் இந்தியாவிற்கு உள்ளே வேறு எந்தத் தொகுதிக்கும் சென்று
[illegible]தலில் நிற்க முடியும். ஆனால் பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து ஒன்றி
யத்தைப் பொறுத்தவரையில், இந்தத் தொகுதியை ஹரிஜனங்களுக்கு ஒதுக்
கீடு செய்கிறோம், அல்லது பெண்களுக்கு என்று ஒதுக்கீடு செய்கிறோம்,
அப்படிச் செய்வது அவசியம். ஆனால் அந்தப் பகுதியிலே இருக்கும்
ஒரு வாக்காளர், அந்தப் பகுதியிலேயே வாழும் வேறு ஒரு ஜாதியைச்
சேர்ந்தவர், அல்லது பெண்ணாக இல்லாத ஒருவர், வேறு எந்தத் தொகுதி
யிலாவது, பஞ்சாயத்திலாவது நிற்க முடியுமா என்று கேட்டால், முடியாது.
ஆகவே, அந்த அடிப்படையிலே ஒரு வினா எழுவது என்பதை யாரும்
தடுத்துவிட முடியாது. எவ்வளவுதான் அரசியல் கட்சிகள் தங்களுடைய
கட்சிக்காரர்களைக் கட்டுப்படுத்துவது என்று சொன்னாலும்கூட, இந்த
ஜனநாயக உரிமையை, அடிப்படை உரிமையை, இது பாதிக்கிறது. இப்படி
ரிசர்வேஷனை தமிழகத்திலே புகுத்தும்போது இந்த நிலை ஏற்படும் என்ற
ஒரு கருத்தினைப் பரிசீலனை செய்திருந்தால், ஒருவேளை இந்த நிலைமை
களைத் தவிர்த்திருக்க முடியும். அதைப்போலவே, வேறுபல நிகழ்ச்சிகளும்
இருக்கின்றன. இன்னொன்று, நான் செல்லியதுபோல, இந்த அமைச்ச
ரவைக்கு முன்னாலே இருந்த அமைச்சரவை இருந்தபோது அந்த நிலைமை
ஏற்பட்டது. தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்தால்தான், ஒருவர் வேட்பாள
[illegible]க இருக்க முடியும் என்பது அது. அதைப் பார்க்கும்போது, தமிழகத்திலே
என்ன சங்கடம் என்று சொன்னால், தமிழர்கள் என்று யாரை அறிவிப்பது?
இந்தப் பிரச்சினையிலே நாம் இன்னும் ஒரு முடிவிற்கு வரவில்லை. இங்கே
[illegible]ம்பரை பரம்பரையாக தமிழகத்திலே வாழும் தமிழகத் தமிழர்கள் இருக்
கிறார்கள். அதிலே ஒரு சாரார் தெலுங்கு பேசுகிறார்கள். பலர் வேறுபல
மொழிகளும் பேசுகிறார்கள். வேறு மொழியில் பேசுபவர்களும் சிலர்
தமிழிலே நல்ல பாண்டித்தியம் பெற்றிருக்கிறார்கள். வெளியிலே சிலர் தமிழ்
பேசினாலும் அவர்களுடைய இல்லங்களிலே தெலுங்கு தான் பேசுகிறார்கள்.
ரெட்டியார் வகுப்பினரை எடுத்துக்கொண்டால், அவர்கள் வீடுகளிலே
தெலுங்கு பேசுவது மட்டுமல்ல, அந்தக் குடும்பங்களிலே இருக்கும் பெண்களில்
தெலுங்கிலேயே படித்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெலுங்கி
லேதான் எழுதப்படிக்கத் தெரியும். தமிழைப் பொறுத்தவரையில், அவர்
களுக்கு தமிழில் பேசுவதற்குத்தான் தெரியும். தமிழிலே எழுதப்படிக்கத்
தெரி[illegible] ஆனால் நாம் சட்டமியற்றும்போது, தமிழ் எழுதப் படிக்கத்

L

[திரு. க. இராமமூர்த்தி] [1982 பிப்ரவரி 19

தெரிந்திருந்தால் தான் தேர்தலில் நிற்க முடியும் என்று வைக்கும்போது,
சில இடங்களிலே வேட்பு மனு தாக்கல் செய்யும்போது, அது ஏற்றுக்கொள்
ளப்படாமல், இது சட்டத்திற்குப் புறம்பாக இருக்கிறது என்று தள்ளுபடி
செய்யப்படும் நிலைமைதான் இருக்கிறது. ஆனால், தமிழகத்திலே எத்தனை
தலைமுறை என்று கூட அல்ல, தமிழகத்திற்கு உரியவராக இருக்கும் ஒரு
வருக்கு இந்தப் பிரச்சினை வருகிறது என்று சொன்னால், அவர்களுக்குக்
கல்வியறிவு இல்லையென்று சொல்ல முடியுமா? தமிழ் பேசத் தெரியும்.
ஆனால் தமிழிலே எழுதத் தெரியவில்லை என்பதற்காக அவர்கள் படிக்கத்
தெரியாதவர்கள் என்ற நிலையை எடுக்க முடியுமா? ஆகவேதான் இது
அரசியல் சட்டத்திற்கே ஒரு முரண்பாடான பிரிவாக இருக்கிறது என்று
சொன்னார்கள். இதைச் சொல்லக் காரணம், இப்படிச் சட்டத்திலே பல்வேறு
'லூப் ஹோல்ஸ்' இருந்ததனாலேதான், இந்தக் குறைகளின் அடிப்படை
யிலேதான் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்வதைத் தடுக்க
முடியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்
னார்கள். பல பேர் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். ஆனால்
தேர்தலுக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்துவிட்ட நிலையிலே
மொத்தமாக எல்லோருக்கும் தமிழகம் முழுவதற்கும் இந்த 'ஸ்டே' வந்து
விடாது. யார் யார் எல்லாம் கேட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு மட்டும்
தான் கிடைக்கலாம், ஆனால் மொத்தமாக வந்துவிடாது என்று சொன்
னார்கள். அங்கேதான் சங்கடமே வந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
அப்படிச் சொல்லியவுடனே, கோர்ட்டுக்குப் போனால் நமக்கு நிச்சயமாக
ஸ்டே கிடைத்துவிடும் என்ற நிலைமைக்கு அவர்கள் வந்துவிட்டார்கள். அது
மட்டுமல்ல, பாதிக்கப்பட்டவர்கள் கோர்ட்டுக்குப் போவதை நாம் தடுக்க முடி
யாது. ஒரு தனி கட்சியைப் பொறுத்தவரையில், அந்தக் கட்சியிலே கட்சிக்
கட்டுப்பாட்டை நிலை நிறுத்துவது என்பது வேறு. கட்சியின் பெயரிலே
மற்றவர்களுடைய அடிப்படை உரிமைகளைப் பறித்துக்கொண்டு, அவர்களை
நீதிமன்றத்திற்குப் போகக்கூடாது என்று தடுக்க எல்லா அரசியல் கட்சி
களாலும் முடியாது. ஒரு சில கட்சிகளால் வேண்டுமானால் அது முடியலாம்.
நிச்சயமாக காங்கிரஸ் கட்சியால் அது முடியாது. அதையும் நாம் எண்ணிப்
பார்க்க வேண்டும். இன்னொன்று, இந்தத் தேர்தலை நடத்துவதற்கு முன்ன
தாக, இரண்டு மூன்று முறை அனைத்துக் கட்சிகளையும் அழைத்து ஆலோ
சனை நடத்தினார்கள். அதிலே ஒரு விநோதமான அனுபவம். இப்படி
அழைத்துப் பேசும்போது, அவர்கள் எந்த அடிப்படையிலே அழைக்கிறார்கள்
என்று எனக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்றை நான் பார்த்தேன். காவேரி



1982 பிப்ரவரி 19] [திரு. க. இராமமூர்த்தி]

நதி நீர்ப் பிரச்சினையிலே எல்லோரையும் அழைத்தபோது, பேரவையிலேயும்
மேலவையிலேயும் இருக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களை அழைத்
தார்கள். அதற்குப் பிறகு இங்கேயெல்லாம் இடம்பெறாத அரசியல் கட்சி
களின் தலைவர்கள் வந்தார்கள். அதற்குப் பிறகு இலங்கைத் தமிழர்கள்
பிரச்சினை வந்தபோது, அதுபற்றிய அனைத்துக் கட்சித் தலைவர்களின்
கூட்டம் நடைபெற்றது. அதிலே சட்டமன்றப் பேரவையினுடைய கட்சித்
தலைவர்கள் மட்டும் அழைக்கப்பட்டார்கள். பஞ்சாயத்துத் தேர்தல்கள்
வந்தபோது சட்டமன்றம் இரண்டும் போயிற்று ; அரசியல் கட்சிகளுடைய
தலைவர்கள் என்ற முறையிலே அழைக்கப்பட்டார்கள். இதிலே என்ன
சங்கடம் என்று சொன்னால், மற்றவற்றில் என்ன வேண்டுமானாலும் வைத்துக்
கொள்ளலாம் ஆனால் இந்த உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில்,
இரண்டு அவைகளிலேயும் உள்ள கட்சிகளின் தலைவர்களை எதற்காக அழைக்
காமல் விட்டுவிட்டார்கள்? ஒருவேளை அழைத்துப் பேசியிருந்தால், இந்தச்
சிக்கல்கள் வரும் என்பதை முன்கூட்டியே எடுத்துக்காட்டி, இதுபற்றி ஒரு
முடிவு எடுத்த பிறகு, தேர்தலுக்கான தேதியை அறிவித்திருக்கலாம்.

(பிற்பகல் 6.00)

அடுத்து, பஞ்சாயத்துத் தேர்தல்களைப் பொறுத்தவரை அவற்றைக் கட்சி
அடிப்படையில் நடத்தக்கூடாது என்று இங்கே நாம் முடிவெடுத்தோம்.
ஆனால் அதற்குப் பிறகு, கட்சி அடிப்படையில்தான் நடத்துவது என்று
வெளியே நடந்த அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.
ஆக, இப்படி சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் சட்ட முன்வடிவின்
மீது நிகழ்த்திய விவாதங்கள் அனைத்திலும், கட்சி அடிப்படையில் உள்ளாட்சி
மன்றங்களின் தேர்தல்களை நடத்த வேண்டாம் என்ற கருத்து பரவலாகத்
தெரிவிக்கப்பட்டும்கூட, வெளியே நடத்தப்பட்ட அனைத்துக் கட்சித்
தலைவர்கள் கூட்டத்தில் இதற்கு மாறாக முடிவெடுக்கப்பட்டது. எதற்காக
இதைச் சொல்கிறேன் என்றால், முரண்பாடுகள் எப்படி வந்துவிடுகின்றன
என்பதை எடுத்துக்காட்டத்தான்.

அதைப் போலவே இந்த அரசு "ரிசர்வேஷனுக்கு" எத்தனை சதவீதம் ஒதுக்குவது என்பதில் எந்தக் கட்சிக்கும் அபிப்பிராய பேதம் ஏற்படவில்லை. "ரிசர்வேஷன்" தேவை என்று அனைவரும் ஒப்புக்கொண்டார்கள். இதற்காக அ.தி.மு.க. அரசுக்கும் அமைச்சர்களுக்கும் பாராட்டுகூட தெரிவித்தார்கள். ஆனால் ரிசர்வேஷனை யார் அறிவிப்பது? அதிலேதான் பிரச்சினை எழுகிறது. அதற்கு முக்கியமாக, நம்மிடத்தில் முழுமையான, சரியான தகவல் இருந்ததா என்பதுதான் கேள்வி. அப்படி முழுமையான தகவல் இல்லாமல் போனதால், அப்படிப்பட்ட வாய்ப்பு இல்லாமல் போனதால், பல சங்கடங்கள் ஏற்பட்டன. எனக்கே ஒரு அனுபவம் ஏற்பட்டது. ஏதோ அரசாங்கத்தைக் குறை சொல்ல வேண்டுமென்று நான் இதைச் சொல்லவில்லை. வானூர் பஞ்சாயத்து ஒன்றியப் பகுதியில் இந்தச் சங்கடம் ஏற்பட்டது. இதைக் குறித்து தேர்தல் கமிஷனரிடமே நான் ஆட்சேபணை கொடுத்திருந்தேன், 10 கிராமங்களைப் பொறுத்தவரையில், 1971 ஆம் ஆண்டு ஜனத்தொகைக் கணக்கெடுப்பின்படி அவைகளை "ரிசர்வ்டு" என்று குறிப்பிட்டார்கள். உண்மையில் என்ன நேர்ந்தது என்றால், 1971 ஆம் ஆண்டு கணக்கெடுக்கப் பட்டபோது, புள்ளிவிவரங்களை எடுத்தெழுதியவர்கள் தவறு செய்து விட்டார்கள். அரிசனங்கள் என்ற பகுதியில் ஜாதி இந்துக்களின் எண்ணிக்கையையும் போட்டுவிட்டார்கள். இது ஒரு 'கிளிரிக்கல் மிஸ்டேக்'. அந்த அடிப்படையில் ரிசர்வேஷன் செய்யப்படுகிறபோது சில பாதகமான விளைவுகள், மனமாச்சர்யங்கள் ஏற்படுகின்றன. கொஞ்சமான எண்ணிக்கையில் இருப்பவர்களுக்கு எப்படி "ரிசர்வேஷன்" செய்யலாம்? அதிகமாக இருப்பவர்களுக்கு எட்டாமல் இல்லாமல் போய்விடும் என்ற வாதப் பிரதிவாதங்கள் ஏற்படத்தான் செய்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தகவலுக்காகச் சொல்கிறேன். அதற்குப் பிறகு சில மாற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன, அதற்காக நான் அதிகாரிகள் உட்பட அனைவருக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே கூடுதலாக என்ன நடந்தது என்றால், இந்த விஷயம் எப்படி இராமமூர்த்திக்குத் தெரிந்தது





என்று சொல்லி, அதிகாரிகள்மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகளைப் பொறுத்தவரை, தவறுகளைச் திருத்திக்கொள்ளுகிறபோது அதோடு நிற்காமல் தங்களைத் தவறு என்று சுட்டிக்காட்டியதே தவறு என்று எண்ணுகிற போக்கு இன்றைக்கு மலிந்திருக்கிறது. அந்தக் காரணத்தால்தான் இதுபற்றிய ஆட்சேபணைகளைத் தெரிவித்தபோது, அந்த ஆட்சேபணைகளை அவர்கள் முறையாகப் பரிசீலிக்கவில்லை. அதன் விளைவுதான் எங்கள் மாவட்டத்தில் ஒரு எடுத்துக்காட்டாக அமைந்த அவியனூர் கிராமம். இதன் காரணமாக உள்ளாட்சி மன்ற அமைச்சரும், முதலமைச்சரும் பதில் சொல்லுகிற கட்டாயமும் நிர்பந்தமும் ஏற்பட்டது. அந்த (Figures) புள்ளி விவரங்களை எடுத்துப் பார்த்திருந்தால், அவற்றை முறையாகப் பரிசீலித் திருக்க முடியும். அமைச்சர் அவர்கள் இதைச் செய்ய வேண்டாம் என்றா சொல்லப் போகிறார்? முதலமைச்சரா அவியனூரை ரிசர்வேஷன் செய்ய வேண்டும் என்று சொன்னார். ஆனால் அந்தப் போக்கு எப்படி வருகிறது? ஆட்சேபணை கொடுத்தால்கூட பரிசீலிக்க மனமில்லாதவர்களிடம் அதி காரத்தைக் கொடுத்தால், அப்படிப்பட்டவர்கள் அதிகாரப் பொறுப்பில் இருந்ததால், இந்த நிலை ஏற்படுகிறது. எனவே அங்கே நியாயம் கிடைக்க வில்லை என்றால், நீதிமன்றத்திற்குப் போகிறோம். அதுதானே உண்மை. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் காரணமாகத்தானே நீதிமன்றம் போக வேண்டிய சூழ்நிலை பலருக்கு ஏற்பட்டது. என்னைப் பொறுத்தவரை, நான் கூச்சப்பட வில்லை. இதற்காக அ.தி.மு.க. மீது பழிபோடுவதா அல்லது தி.மு.க. மீது பழிபோடுவதா என்று போகவில்லை. இந்தச் சட்டம் குறைகள் மலிந்த சட்டமாக இருப்பதால், அந்த அடிப்படையில் நீதிமன்றத்திற்குச் சென்று பரிகாரம் காணவேண்டிய அவசியம் பலருக்கும் ஏற்பட்டது. இதை அதிகாரி களே ஏற்படுத்திவிட்டார்கள். அவர்களே அதைத் திருத்தியிருந்தால், இந்த அவசியம் வந்திருக்காது. என்னுடைய பஞ்சாயத்து ஒன்றியத்தில் என்னுடைய பஞ்சாயத்துத் தேர்தலை மட்டும் நிறுத்தி வைத்துவிட்டு வேறு ஊர்களிலெல்லாம் தேர்தல் நடத்திவிட்டு, பிறகு என்னுடைய தொகுதிக்கு

[திரு. க. இராமமூர்த்தி] [1982 பிப்ரவரி 19

எல்லோரும் வந்து என்னை எதிர்த்து தேர்தலை நடத்துவது என்றால், எப்படி நியாயமாக இருக்க முடியும்? இப்படி எண்ணினால் என்னை யார் தடுக்க முடியும்? இப்போது பஞ்சாயத்துத் தேர்தலை நிறுத்திவிட்டு, மற்றவை களையெல்லாம் முடித்துவிட்டு, மொத்தமாக என்னை வந்து எதிர்த்துப் பணி யாற்றுவதை விரும்புவேனா அல்லது தமிழக முழுவதும் தேர்தல் நடைபெறும் போது, என்னுடைய தேர்தலும் அவற்றோடு சேர்ந்து நடக்க வேண்டும் என்று நான் விரும்புவேனா? எனவே இத்தகைய சூழ்நிலையில் தமிழகம் முழுவதும் தேர்தல்களை நடத்துவதற்குத் தடையுத்தரவு கேட்பது நியாயம் என்பது மட்டுமல்ல, அந்த நிலைமையைத் தவிர்க்க முடியாமலிருந்தது. இதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

ஆகவே, ஒரு " காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் " கொண்டு வரவேண்டும். ஒரு முழுமையான சட்ட முன்வடிவைக் கொண்டு வரவேண்டும். அதுதான் நல்லது. ரிசர்வேஷனைப் பொறுத்தவரை, நாங்கள் அதை வரவேற்கிறோம்.

அரிசனங்களுக்கும் பெண்களுக்கும் தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இதை வரவேற்கிறோம். ஆனால் இப்படி தொகுதியை ஒதுக்குகிற அதிகாரத்தை யாருக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பதில்தான் பிரச்சினையே வருகிறது. அதற்கு என்ன வழிவகை சட்டத்திலே செய்யப்பட்டிருக்கிறது? இதை சட்ட பூர்வமாக அறிவித்திருந்தால், தவறுகள் வருவதற்கே இடமிருந்திருக்காது. அதிலும் குறிப்பாக நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. ஒரு தொகுதியை 'ரிசர்வ்டு' தொகுதி என்று அறிவிக்கும் அதிகாரம் அமைச்சரவையின் ஒரு சப்-கமிட்டியிடம் ஒப்படைக்கப் பட்டது. அதன் காரணமாகத்தான் அது எப்படி வேண்டுமானாலும் செய்யப் படலாம் என்பதற்கு வழி ஏற்பட்டது. அந்தந்த நிலைமைக்கு ஏற்ப வாய்ப் புள்ளவர்களால் தங்கள் இஷ்டம்போல் மாற்றப்பட்டது. எனவேதான் இப்போதும் சொல்லுகிறேன், எந்த முறையில் ரிசர்வேஷன் செய்யப்படுகிறது என்பது தெளிவாக்கப்படவேண்டும்.

இன்னொரு சட்டச் சிக்கலும் வந்தது. சிலவற்றில் ஆட்சேபணை எழுப்பப் பட்டது. அதற்குப் பிறகு, சில பஞ்சாயத்து ஒன்றியங்கள் அல்லது பஞ்சாயத் துக்களை ரிசர்வேஷனுக்கு உரியவை அல்ல என்று மாற்றினார்கள். இப்படி



1982 பிப்ரவரி 19] [திரு. க. இராமமூர்த்தி]

வேறு சிலவற்றை ரிசர்வேஷனுக்கு என்று ஒதுக்கியபோது, அத்தகைய தொகுதிகளில் உள்ளவர்கள் அதற்கு ஆட்சேபணை தெரிவிக்க அவர்களுக்கு அவகாசம் கொடுக்க வேண்டுமா இல்லையா? ஒரு தொகுதிக்கு அளித்த உரிமையை மற்றொரு தொகுதிக்கு அளிக்க வேண்டுமா அல்லவா? இதை யெல்லாம் ஏன் சொல்லுகிறேன் என்றால், சட்டத்தில் இவ்வளவு முறைகேடுகள், குறைபாடுகள் இருக்கின்றன. எனவே இத்தகைய குறைபாடுகளை நீக்கி முறை யான சட்டம் இயற்றப்படுமானால் அன்றி, எத்தனை முறை முயன்றாலும், உள் ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை அரசால் நடத்த முடியாது. எனவேதான் சொல்கிறேன், உள்ளாட்சி மன்றத்திற்கான தேர்தல்கள் நடைபெறுவதற்கான வாய்ப்பு நிச்சயமாக இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் திரு நல்லசிவன் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல் இந்தச் சட்ட முன்வடிவும் கூட ஜூன் மாதத்தோடு முடிவடைகிறது. கண்டிப்பாக ஜூன் மாதத்திற்குள் தேர்தல்களை நடத்த வாய்ப்பில்லை. நடத்த முடியாது. சட்ட மன்றம் மட்டுமல்ல, நீதி மன்றத்தைப் பற்றியும் அனுபவம் பெற்றிருக்கிற காரணத்தால், நான் இதைச் சொல்கிறேன். இந்த வழக்கு இதோடு முடிவடைந்து நிற்கப்போவதில்லை. சுப்ரீம் கோர்ட் வரை போகும். காரணம் இது 'பண்டமென்ட்டல் ரைட்ஸ்' பற்றிய வழக்காகும். ஆகவே, ஜூன் மாதத்திற்குள் தேர்தல் நடக்காது. வேண்டுமானால் காலத்தை நீட்டி இப்போதுகூட திருத்தத்தைக் கொண்டு வரலாம். இன்னும் ஒரு ஆறு மாத கால நீட்டிப்பைப் பெறலாம். இல்லை யென்றால் இன்னொரு சட்ட முன்வடிவைக் கொண்டுவந்து, இன்னொரு முறை உங்களைப்பற்றி மீண்டும் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு அளித்ததாகத்தான் அமையும். எனவேதான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன், முழுமையான சட்ட முன்வடிவைக் கொண்டுவந்து நிறைவேற்றி, அதன் அடிப்படையில் தேர்தலை நடத்துங்கள். ஆனால், முழுமையான சட்டத்தைக் கொண்டுவரும் வரை, அதன் அடிப்படையில் தேர்தலை நடத்துகிறவரை, இதில் இருக்கும் குற்றங் குறைகளை யாரும் மறுக்க முடியாது. இப்போது இருக்கும் நிலைமைக்கு நீங்கள் மட்டும் காரணமல்ல. உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள்

நடைபெற்று அங்கே மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், பல கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே கௌரவம் பார்க்காமல், பிடிவாதம் இல்லாமல் அனைத்து இடங்களிலும் "நான் அபிஷியல் கமிட்டியைப்" (Non-official) போடுங்கள். ஒரு சேர்மனையும் போடுங்கள். இதன் காரணமாக அவர்களுக்கு எந்த அதிகாரமும் வந்துவிடப்போவதில்லை. (Non-official) சேர்மென்களைப் பொறுத்தவரையில், கமிட்டியைக் கூட்டி நடவடிக்கைகளை நடத்தி அரசுக்குத் தெரிவிக்கும் அதிகாரத்தை மட்டும்தான் பெற்றிருப்பார்கள். அதைத் தவிர, வேறு அதிகாரம் கொடுக்கப் போவதில்லை, இப்படி அமைப்பதன் மூலம் அனைத்துக் கட்சியினரையும் ஒருங்கிணைத்து அவர்கள் தங்கள் குறைகளைச் சொல்லி, அதற்கான பரிகாரத்தைக் காண்பதற்கு வாய்ப்பு ஏற்படும். அத்தகைய அமைப்பு இல்லாத வரையில் வெறும் அதிகாரிகளை வைத்து நிச்சயமாக எதையும் சரியாகச் செய்துவிட முடியாது. அரசாங்க அதிகாரிகளின் தலைமையில்தான் கூட்டங்கள் நடைபெறும் என்ற நிலையை அரசு உருவாக்குமானால் பல்வேறு இடங்களில் இந்தக் கூட்டங்கள் நடைபெற வாய்ப்பே இருக்காது. அப்படியே நடைபெற்றாலும், அதில் பலர் மக்களுடைய பிரதிநிதிகள் என்ற முறையில் இடம் பெற வாய்ப்பு இல்லாமல் போய்விடும். எனவே இந்த முறையில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று சொல்லி அமைகிறேன்.

(பிற்பகல் 6.10)

* திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் தேர்தலைப் பொறுத்த வரையில், "அவசரக் கோலத்திலே அள்ளித் தெளித்ததைப் போல" என்று சொல்வார்களே, அதைப்போலவே அறிவித்து தேர்தல் நடைபெறாத நிலையில் 1958ஆம் ஆண்டுப் பஞ்சாயத்துச் சட்டத்திற்கு சில திருத்தங்களை இந்த மன்றத்திலே நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.



தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பெண்களுக்கும் சில சலுகைகள் வழங்கக் கூடிய வகையில் ஊராட்சி ஒன்றியத்தில், மன்றத்தில் தலைவர்களாக வருவதற்காக இடம் ஒதுக்கப்பட்டதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எங்கள் தலைவர் கலைஞரும் நாங்களும் வரவேற்றிருக்கிறோம். ஆனால் முழுமையான நிறைவு பெற்ற ஒரு சட்டத்தை உருவாக்கி தேர்தல் நடைபெற்றால், கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கும், நகர்ப் புறங்களில் உள்ள மக்களுக்கும் பயன்படக் கூடிய வகையிலே அமையும் என்பதில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எந்த அளவிற்கு ஆழமான நம்பிக்கை இருக்கிறதோ அதைப் போலவே மற்றவர்களுக்கும் இருக்கும் என்று தான் நாங்கள் நம்புகிறோம்.

ஆனால் அண்ணா தி. மு. க. ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு பல்வேறு கட்டங்களில் இந்தத் தேர்தலை நடத்துவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டு, வாக்காளர் பட்டியல் புதிதாகத் தயாரிக்க வேண்டியிருக்கிறது என்று சொல்லி, அதற்குப் பிறகு வறட்சி நிலைமை என்று சொல்லி, புயல் வெள்ளத்தின் காரணமாக நடத்த முடியவில்லை என்று சொல்லி, 18 வயது உடையவர்களுக்கும் வாக்குரிமை வழங்கப்போகிறோம் என்று சொல்லி, அதற்காக சில மாதங்கள், ஆண்டுகள் தேவை என்று சொல்லி, பிறகு அனைத்துக் கட்சியினரையும் அழைத்துப் பேசுகிறோம் என்று சொல்லி, இப்படியே காலத்தைக் கடத்தி வந்து கடைசியாக தேர்தலை நடத்துவதாக அறிவித்தார்கள். அனைத்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்திய நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அதிலே கலந்து கொண்டு நான் பேசியபோது, "இந்த அவசரச் சட்டத்தை வைத்துக் கொண்டு தேர்தல் நடத்தினால், அது நடைபெறாத வண்ணம் தடுப்பதற்காக நீதி மன்றத்திற்கு, பாதிக்கப்பட்டவர்கள் செல்ல வாய்ப்பு உண்டு" என்று சொல்லி அன்றைய தினம் வெளியேறி இருக்கிறேன். அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கும் இந்தச் சட்ட முன்வடிவு இங்கே வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவின் ஒவ்வொரு பிரிவையும் பார்க்கிறபோது, இதிலே பல குறைபாடுகள் இருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. ஏனென்றால் இதிலே ஒரு வார்த்தையைப் போட்டிருக்கிறார்கள். "இயன்ற வரையில் நடைமுறைக்கேற்ப" என்று சொல்லியிருக்கிறார்கள். "இயன்றவரை" என்று சொல்லுவது சந்தர்ப்பத்திற்கேற்ப அல்லது ஆட்சியாளர்கள் நினைக்கக் கூடிய வகையிலே அமைத்துக்கொள்வதற்கு அல்லது நிர்வாகத்திலே தலையிட்டு மாற்றிக்கொள்வதற்கு வழி ஏற்படும் வகையிலே இதிலே சில தவறுகள் இருக் கின்றன என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1971ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள், மன்றங்களினுடைய சதவீத அடிப்படையில் பெண்கள், தாழ்த்தப்பட்டவர்கள், மலைச் சாதியினர் ஆகியவர்களுக்காக தொகுதிகள் நிர்ணயிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாவட்ட அளவிலே, கோட்ட அளவிலே பெண் களுக்கும், தாழ்த்தப்பட்ட, மலைச் சாதியினருக்கும் மக்கள் தொகை அடிப் படையிலே, சதவீத அடிப்படையிலே ஒதுக்கீடு என்று சொல்லி, அதிலே கூட "இயன்ற வரையில்" என்று சொல்லியிருப்பதால், இன்றைக்கும் இந்தச் சட்டம் நீதிமன்றத்திலே போய் நிற்குமா என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஊராட்சி மன்றம், ஒன்றியம் என்றால் ஒதுக்குவதற்கு 35 சதவீதம் பெண்கள் இருக்க வேண்டும். 30 சதவீதம் பெண்கள் இருந்தால், அந்த ஊராட்சி மன்றத்தை பெண்களுக்காக என்றும் தாழ்த்தப்பட்டவர்கள், மலைச் சாதியினர் 35 சதவீதம், 45 சதவீதம் இருந்தால், அந்தத் தொகுதி பொதுத் தொகுதிகளாக இருக்கும் என்றும் நிர்ணயிக்கக் கூடிய அளவில் அமைய வில்லை என்பதால், அரசு எப்படி இதை நிறைவேற்றப் போகிறது என்று கேட்க விரும்புகிறேன்.

ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம் ஆகியவைகளுக்கு மட்டும் ஒன்றியத் தலைவர்களுக்கு மட்டும் பெண்களுக்கு 15 சதவீதம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 15 சதவீதம் என்ற அடிப்படையில் ஒதுக்கிவிட்டு, ஊராட்சி மன்றம்,



பேரூராட்சி மன்றங்களில் வரக்கூடிய உறுப்பினர்களுக்கு இந்தச் சதவீத அடிப்படையில் ஒதுக்கக் கூடிய விதிமுறை இந்தச் சட்டத்திலே கூட இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமையாகும்.

இந்தத் தேர்தல் நடைபெறாத காரணத்தாலே, இன்றைக்கு கிராம மக்களுடைய நலன் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சுட்டிக்காட்டியதைப் போல, மின்சாரம், குடிநீர், நல்ல பள்ளிக் கட்டிடம், சுகாதார வசதி இல்லாமல் இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஒன்றிய அளவிலே நடக்கக் கூடிய அரசாங்கத்தின் திட்டப் பணிகள் மிகவும் குறைபாடு உடையதாக, காண்ட்ராக்டர்களுடைய சொந்த இலாபத்திற்காக இயங்கக் கூடிய அமைப்பாக இன்றைக்கு உருவாக்கப் பட்டிருக்கிறது என்பது எங்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கும் வரும். ஆகவே இப்படிப் பட்ட குறைகள் மூலம் மக்கள் பயன் பெற முடியாமல் உள்ளாட்சித் துறையே சீரழிந்து கொண்டிருக்கிறது.

அமைச்சர்கள் சென்றால், ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை யெல்லாம் சில நிகழ்ச்சிகளில் சேர்த்துக்கொள்கிறார்கள். தேர்தல் நடை பெறாத காரணத்தால் மக்களுக்கு அந்தப் பகுதியில் பாதிப்பு இருக்கிறது என்று சொல்ல எதிர்க் கட்சியில் இருப்பவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. இப்போது ஆளும் கட்சியில் இருப்பவர்கள் மட்டும் அமைச்சர் கலந்து கொள்ளக் கூடிய நிகழ்ச்சிகளில் இடம் பெறுகிறார்கள். சென்னை மாநகராட்சியில் தேர்தல் நடைபெறவில்லை. அ.தி.மு.க. மாவட்ட அமைப்பாளர் திரு. ஜேப் பியார் அவர்கள் எல்லா நிகழ்ச்சியிலும்—அவர் கலந்து கொள்ளுகிறாரோ இல்லையோ—பொறுப்பு வாய்ந்தவர் என்ற அடிப்படையிலே போடுகிறார்கள். அதிலே தவறில்லை. அதே போல எங்கள் கட்சியின் மாவட்ட செயலாளரும். மேலவை உறுப்பினருமான திரு. ஆர். டி. சீத்தாபதி அவர்களைப் போடுகிறார்களா என்றால், இல்லை.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, மாநகராட்சியினுடைய சில விழாக்களுக்கு திரு. ஆர். டி. சீத்தாபதி அவர் களைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். ஆனால் ஒரு சில விழாக்களுக்குப் போட்டதற்கும் பின்னால் அவர்கள் வரவில்லை. அதன் யார் யார் வருகிறார்கள் என்று தொலைபேசி மூலமாகத் தெரிந்து

கொண்டு வருகிறார்கள் என்றால், அவர்கள் பெயரைப் போட வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். அதற்கேற்ப இன்றைக்கு விழாக்கள் நடைபெற்று வருகின்றன.

(பிற்பகல் 6-20)

**திரு. க. இராமமூர்த்தி** : மாண்புமிகு தலைவர் அவர்களே, எங்கள் கட்சியைச் சேர்ந்த மேலவை உறுப்பினர்களைப் போடுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி** : மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சோமு அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர். ஒரு நிகழ்ச்சியிலே பேச நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒரு ஏற்பாட்டைச் செய்தார்கள். இரண்டு நிகழ்ச்சிகள் எனக்கு அறிவிக்கப்பட்டன. முதலில் நடைபெற்ற நிகழ்ச்சியிலே நான் கலந்துகொண்டேன். இரண்டாவது நிகழ்ச்சியிலே நான் கலந்துகொள்ளவில்லை. அதற்குக் காரணம் எனக்குச் சென்னையில் பல கூட்டங்கள் இருந்த காரணத்தினாலே, அந்த நிகழ்ச்சியிலே கலந்துகொள்ள வில்லை. அந்தக் கூட்டத்திலே எதிர்க் கட்சித் தோழர்கள் கலந்துகொள்ள வருவதில்லை என்று குற்றம் சாட்டுகின்ற நிலைமை இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய சங்கத்தினர் திரு. ஜேப்பியார் அவர்கள் அப்படிப்பட்ட பங்க்ஷன்களுக்கு வருகிறார் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : ஆகவே எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் சில நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அரசுக்கு உண்மையான நிலைமைகளை எடுத்துச்சொல்ல வேண்டும். அப்படிச் சொன்னால்தான், அந்தக் காரியங்களை அதிகாரிகள் மூலம் நிவர்த்தி செய்து பொதுமக்கள் பயன்பெற வழி ஏற்படும். சிலநேரங்களில் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்றுகூட பேசுவார்கள். அதற்குப் பதில் சொல்லக்கூடிய நிலைமை கூட வரும்.

**திரு. சோ. ஆறுமுகம்** : எனக்கும் ஒரு நல்ல பொதுவான நோக்கத்தை நாம் கொடுக்க வேண்டுமென்பதுதான் கருத்து. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நெய்வேலியிலே ஒரு பொது நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு 'திடீரென்று தேர்தல் வரும்' என்று சொல்லியிருக்கிறார்கள். திடீரென்று அறிவிப்பதிலேயே



இருக்கிறார்கள். அது முழுமை பெற முடியவில்லை. முதலமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். இதை ஆளும்கட்சியிலே இருப்பவர்கள் மறுக்கமாட்டார்கள். செய்தித் தாளிலேகூட பார்த்திருப்பார்கள். திடீரென்று, தேர்தல் பழைய முறையிலே வந்தாலும் வரும். புதிய முறையில் இல்லாமல் . . .

**மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு** : இதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அவர் அப்படிப் பேசவில்லை என்று சட்டமன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள். அவர்களே கேட்கிறார்கள் என்றுதான் சொன்னேன் என்றார். தான் அப்படிச் சொல்லவில்லை என்று அவரே அறிவித்திருக்கிறார்கள்.

**திரு. சோ. ஆறுமுகம்** : இப்படி அறிவிக்கிறார்கள். இன்னொன்றையும் நாம் பார்க்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல, நீதிமன்றத்திலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அதையொட்டித்தான் நீதிமன்றம் தீர்ப்பு வழங்க இருக்கிறது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே நீதிமன்றம் என்ன கருத்துகளைச் சொல்கின்றதோ, அவைகளைக் கேட்ட பிறகு, அதற்குப் பின்னாலே முழுமையான சட்டத்தை இயற்றி இந்தச் சட்ட மன்றத்திலே, 1958-வது ஆண்டு பஞ்சாயத்துச் சட்டத் திருத்த முன்வடிவு கொண்டு வந்தால் தான், சரியாக இருக்கும். இப்போது நாம் நிறைவேற்றிய பிறகு, நீதிமன்றம் வேறு ஒரு 'டிரக்ஷன்' கொடுத்தால், அதற்கு ஏற்ப மீண்டும் இதிலே திருத்தம் செய்யவேண்டிய சூழ்நிலைகள் வருமா, வராதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் யோசிக்க வேண்டும். நீதிமன்றத்தில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. தாழ்த்தப்பட்ட மலை ஜாதியினருக்கு ஒதுக்கப்பட்டதும் முறையான அடிப்படையிலே இல்லை. 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கிலே ஒதுக்கியிருக்கிறார்கள். இதிலே பெண்கள், ஆண்கள் எத்தனை சதவிகிதம்? அங்கு பெண்கள் குறைவாக இருக்கிறார்களா? தாழ்த்தப்பட்டவர்கள் தொகுதி என்று ஒதுக்கப்பட்டதா? மற்ற இனத்தைச் சேர்ந்தவர்கள்தான் அதிகமாக இருக்கின்றார்களா? அதை தாழ்த்தப்பட்டவர்கள் தொகுதியாக ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட முக்கியமான பிரச்சினைகள் நீதிமன்றத்திலே வழக்காக இருப்பதைப் பார்க்கிறோம். இன்றைக்கு ஆண்கள், பெண்கள் இரண்டு பேர்களும் சமம். அரசியல் சட்டப்படி ஆண்கள் உயர்ந்தவர்கள், பெண்கள் தாழ்ந்தவர்கள் அல்லது ஆண்கள் தாழ்ந்தவர்கள், பெண்கள் உயர்ந்தவர்கள் என்று இல்லை. அந்த அடிப்படை

யிலேதான் அவர்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டுமென்பது அரசியல் சட்டம். அப்படியிருக்கும்போது, எப்படிப் பெண்களுக்கு என்று தனியாக ஒதுக்குவதற்கு இடமிருக்கிறது என்று பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். எதிர்க்கட்சி என்ற அளவில் இதை எழுப்பியவன் நானல்ல. நீதிமன்றத்திலே இந்தப் பிரச்சினையை வைத்திருக்கிறார்கள். ஆகவே அந்தத் தீர்ப்புக்கள் வந்த பிறகுதான், நாம் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அதற்கு முன்னால் நிறைவேற்றினால், அது தேர்தலை நன்கு நடத்த வாய்ப்பாக இருக்கும். முதலமைச்சர் அவர்கள் திருச்சியிலேகூட இந்தத் தேர்தல்பற்றி அறிவித்திருக்கிறார்கள். இப்போது பலர் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் 'என் கடமை தீர்ந்துவிட்டது' என்று சொன்னார்கள். தேர்தல் தேதிபற்றி அறிவித்துவிட்டேன் என்று சொன்னார்கள். அவர் 'என் கடமை' படத்தில் நடித்த காரணத்தால் அப்படிச் சொன்னார்களா ? ஆனால், அறிவித்த மாதிரி தேர்தல் நடக்கவில்லை. இப்போது இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருகிறோம். இந்த நிலையிலே ஒரு அறிவிப்பைச் செய்தார்கள். நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பின்னாலே இதை மீண்டும் இந்த அவைக்குக் கொண்டு வந்து ஆலோசனை பண்ண வேண்டும். இதிலே மிகவும் அவசரப்பட்டிருக்கிறார்கள். அதனாலேதான் இந்தத் தேர்தல் நின்றது. இதை மறந்துவிடக்கூடாது. இதிலே ஆட்சேபணை செய்வதற்கு இந்த விதியிலே இடம் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கத்திலே மறுத்தார்கள் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து ஏறத்தாழ 4 ஆயிரம் ஆட்சேபணைகள் வந்தன அந்த ஆட்சேபணைகளை முறையாகப் பரிசீலனை செய்து, இந்தந்தக் காரணத்தினாலேயே தள்ளுபடி செய்கிறோம் என்று ஏதாவது காரணம் காட்டி, தள்ளுபடி செய்கிறார்களா ? அதற்கு நேர்மாறாக ஆட்சேபணை மனுக்கள்மீது ஒரு உத்தரவு போடுகிறார்கள். மேலும் ஆட்சேபணை தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். அதன் பிறகு தகவல் இல்லை. அப்படியே விட்டுவிட்டார்கள். என்ன நியாயம் இருக்கிறது ? இதை வைத்துக் கொண்டு, பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்குப் போவார்களா, போக மாட்டார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சேலம் மாவட்டத்திலே சொல்கிறேன். இந்த விதிமுறைகளிலே பல தவறுகள் செய்ய இடம் கொடுத்திருப்பதால்தான் இதைச் சொல்கிறேன். சேலம் மாவட்டத்தில் எலச்சிப்பாளையம் ஒன்றியத்தினை தாழ்த்தப்பட்டவர்கள் மலை ஜாதியினருக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்குப் பக்கத்திலே இருக்கின்ற மலைசமுத்திரத்தில் என்ன செய்தார்கள் ? தி.மு.க



மீது குற்றம் சொல்கிறார்கள். சட்டத்தை முழுமையாக நிறைவேற்றிவிட்டு, அவர்கள் அந்தத் தேர்தலை முறையாக நடத்தியாக வேண்டும். திறமையான அதிகாரிகள் தமிழகத்திலே இன்னும் இருக்கிறார்கள். அதிகாரிகளை நீங்கள் நம்பவில்லை. சேலம் மாவட்டத்திலே முறையாக அந்த அடிப்படையிலேயே ஒதுக்கினார்கள் என்று நான் நம்புகிறேன். எலச்சிப்பாளையம் தாழ்த்தப்பட்டவர்கள் தொகுதி, மலைசமுத்திரம் பொதுத் தொகுதியாக இருந்தது. இதை மாற்றினார்கள். ஏன் இதை மாற்றினார்கள் ? அதேபோல சேலம் மாவட்டத்திலே கொளத்தூர் பஞ்சாயத்து யூனியன். அது ரிசர்வ் தொகுதியாக ஆக்கப்பட்டு, காடையாம்பட்டி பொதுத் தொகுதி என்றார்கள். பிறகு காடையாம்பட்டியை ரிசர்வ் தொகுதியாகவும், கொளத்தூரைப் பொதுத் தொகுதியாகவும் மாற்றினார்கள். நாமக்கல்லில் பெண்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். பெண்களுக்காக அது ஒதுக்கப்பட்டது. அதைப் பொதுத் தொகுதியாக மாற்றினார்கள். திருச்செங்கோடு தொகுதியைப் பெண்களுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படிப் பல பஞ்சாயத்துகளுக்கு விருப்பம் போல ஒதுக்கிய காரணத்தால், குறைபாடுகள் இருந்ததால், அவைகள் இன்றைக்கு நீதிமன்றத்துக்குப் போயிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டுகிறேன். இந்தச் சட்டம் முழுமையான சட்டமாகக் கூட இப்போது நிறைவேற்றப்படவில்லை. இங்கு அவசரச் சட்டம் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். இது முழுமையாக நிறைவேற்றப்படவேண்டுமென்றால், நீதிமன்றத் தீர்ப்புகள் வந்ததற்குப் பின்னால், அவர்களுடைய கருத்துக்களைப் பெற்ற பிறகு, அதை சட்ட வல்லுநர்களிடம் வைத்து ஆராய்ந்து, இந்தச் சட்டமன்றத்துக்குக் கொண்டு வந்து நிறைவேற்றலாம். 1958 ஆவது ஆண்டு பஞ்சாயத்துச் சட்டத்தை முழுமையாக்கி, நீதிமன்றத்திற்குச் சென்று வந்தபிறகு, நாம் இங்கே நிறைவேற்றலாம். கிராமப்புற பஞ்சாயத்து வேலைகளை கவனிக்க பஞ்சாயத்துத் தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை, ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தைக் கவனிக்க ஆணையாளர்கள், தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை இன்னும் 6 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்கின்ற வகையிலே இந்த மசோதாக்களை நிறைவேற்றியாக வேண்டுமே தவிர, வேறு வழியில்லை. இந்த ஆறு மாதங்களில்கூட தேர்தல் நடக்குமா என்ற சந்தேகத்தை மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள்.

[திரு. சோ. ஆறுமுகம்] [1982 பிப்ரவரி 19

(பிற்பகல் 6—30)

இதை நாங்கள் சொன்னால், " நீங்களே சொல்கிறீர்களே, பிறகு எப்படி தேர்தல் நடத்த முடியும்? " என்று சொல்வார்கள். இருக்கக் கூடிய நிலைமைகளை மறைத்து பயன் இல்லை. தேர்தல் நடக்கக் கூடாதென்ற எண்ணம் ஆளும் கட்சிக்கு இருக்கிறது. ஆனால் மற்றவர்கள்மீது பழி போட்டு, 6 மாதங்களில் தேர்தலை நடத்தப் போகிறோம், நாங்கள் விரைவுபடுத்தப் போகிறோம், நீதிமன்றத்தில் வழக்கை முடிவிற்குக் கொண்டுவருவோமென்று அறிவித்து, மக்களை ஏமாற்ற வேண்டாமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தச் சட்டம் முழுமையான சட்டமல்ல. இதை மீண்டும் திரும்பப் பெற்றுக் கொண்டு நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின்னால் முழுமையான சட்டத்தை நிறைவேற்ற வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மேலவைத் துணைத் தலைவரவர்களே, 3 சட்டமுன்வடிவுகளையும் ஒன்றாக எடுத்துக் கொண்டு, அவைகளின்மீது கருத்துக்களை இங்கே எடுத்து வைத்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுவும், குறிப்பாக பெண்களுக்கும், ஆதி திராவிட மக்கள், மலைவாழ் மக்களுக்கும் ஒதுக்கீடு பற்றிய திருத்தச் சட்டத்தையும், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளின் தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்கும் சட்டத்தையும் ஒன்றாகச் சேர்த்து கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக இந்த அரசைப் பொறுத்தவரையில், பஞ்சாயத்துத் தேர்தல்களை எவ்வளவு சீக்கிரமாக நடத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நடத்த வேண்டுமென்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறதென்பதையும், வேண்டுமென்றே கால நீட்டிப்புக்களைக் கொண்டு வந்து, இந்த அரசு மெத்தனப் போக்கில் இருந்ததில்லை என்பதையும், சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக இந்த வரலாறுகளெல்லாம் இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும்கூட இன்று கொண்டுவந்துள்ள சட்ட முன்வடிவுகளும் கூட அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்தவை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படிப் பட்ட எண்ணம் எங்களுக்கில்லை. அதே நேரத்தில் கொண்டுவரக்கூடிய சட்டம் நீதிமன்றத்தில் நிலைத்து இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் இயற்றப்பட்டிருக்கிறது. அதற்காக சட்ட வல்லுநர்கள் டெல்லிக்குச் சென்று அவர்களுடைய கருத்துக்களை அறிந்துதான், இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக வழக்கு மன்றத்



982 பிப்ரவரி 19] [திரு. ப. குழந்தைவேலு]

திலே 340 ரிட் மனுக்கள் இருக்கின்ற காரணத்தால், அதைப்பற்றி அதிகமாக நாங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பது உண்மையிலே சரியாகாது. அது சட்டத்திற்கு விரோதமாகுமென்பதால், அதற்குள்ளே செல்ல விரும்பவில்லை. இங்கே கொண்டு வந்துள்ள சட்டத்தை ஒரு தூய எண்ணத்தின் அடிப் படையில், கொண்டு வந்திருக்கிறோமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட அந்த எண்ணத்திற்கு களங்கம் கற்பிக்கும் நோக்கத்தோடு யாரும் தயவுசெய்து கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டாமென்று வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் 18 சதவிகிதம் ஆதி திராவிட மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும், 15 சதவிகிதம் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்திருப்பது தமிழகத்தில்தான். இதைச் சொல்லுகின்ற நேரத்தில் நாம் பெருமைப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். இதே போன்று தமிழகம் பல்வேறு நிலைகளில் பல்வேறு மாநிலங்களுக்கு வழி காட்டியாக இருக்கிற அளவுக்கு வளர்ந்து கொண்டிருக்கிறோம். குறைபாடுகள் என்பது ஆங்காங்கே இருக்கும் நிலைதான். அது இயற்கை. இல்லை என்று வாதிட முடியவில்லை. குறைபாடுகள் அதிகமா, நிறைபாடுகள் அதிகமா என்று நிறுத்துப் பார்க்கும் சூழ்நிலை இருக்க வேண்டும். இன்று ஊராட்சித் துறை சீரழிந்துகொண்டிருக்கிறதென்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். 1961-வது ஆண்டுக்குப் பிறகு ஊராட்சித் துறையாக மாறிய பிறகு, கடந்த இரண்டு ஆண்டுகளில் நடைபெறும் திட்டங்களைப்போல எப்போதும் நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தன்னிறைவுத் திட்டம் மூலம் 45 லட்சம், 50 லட்சம் ரூபாய் வளர்ச்சிப் பணிகளுக்குக் கொடுக்கிறோம். குடி தண்ணீருக்கு 30, 35 லட்சம் ரூபாய் கொடுக்கிறோம். ஆகவே ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் செலவழிக்கிற வரலாற்றுத் திட்டத்தை நாம் செயலாற்றிக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றியத் தலைவராக இருந்திருக்கிறார். ஒரு ஒன்றியத்திற்குக் கூடுதலாகச் செலவழித்திருந்தால், ஐந்து லட்சத்திலிருந்து 10 லட்சம் ரூபாய் செலவழித்திருக்க முடியும். அரசின் சார்பிலே இப்போது கொடுக்கும் பணம் ஏறத்தாழ ஒரு கோடி ரூபாயாகும். அந்த அளவிற்குச் செலவழிக்கிறோமென்றால், இது வரலாற்றுச் சிறப்பு மிக்க திட்டமென்பதை எல்லோரும் கண்டிப்பாக ஒத்துக்கொள்வார்களென்பதில் சந்தேகமில்லை. இன்னும் பல்வேறு வகையில் இன்று ஊராட்சிப் பணிகளுக்காக, வளர்ச்சிப் பணிகளுக்காகச் செலவிட்டுக் கொண்டிருக்கிறோம். ஆங்காங்கே காண்ட்ராக்ட் முறையில் குறைபாடுகள் என்று சொல்லுகிறார்கள் வேலைக்கு

[திரு. ப. குழந்தைவேலு] [1982, பிப்ரவரி 19

உணவுத் திட்டத்தில் செய்கின்ற பணிகளில் குறைபாடுகள் இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். நான் மறுக்கவில்லை. அவைகளை நிவர்த்திப்பதில் ஈடுபட்டிருக்கிறோம். உறுப்பினர்கள் எப்போது வேண்டுமானாலும் குற்றச்சாட்டுகள் சொல்லலாம். வேண்டாமென்று சொல்லவில்லை. அதைச் சொல்கிற நேரத்தில் ஆதாரத்தோடு கொடுத்தால், நடவடிக்கை எடுக்க உதவிகரமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். எங்களைப் போன்ற அமைச்சர்கள் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொல்ல முன்வந்தால், தயவுசெய்து அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் இருந்தாலும்கூட தயவு தாட்சண்ணியமின்றி சொல்ல வேண்டும். எங்களைத் திருத்திக்கொள்ளக்கூட அது வாய்ப்பாக இருக்கும். இத்தகைய புனிதப் பணியில் எங்களை ஈடுபடுத்திக்கொண்டுள்ள நேரத்தில் திருத்திக்கொள்ளக்கூடிய தவறு என்றால், அதைத் திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். திருத்திக்கொள்ள முடியாத தவறு செய்திருக்கிறோமென்றால், எப்போது வேண்டுமானாலும் வெளியே போகத் தயாராக இருக்கிறோம். ஆகவே இந்தத் தூய பணியைச் சந்தேகிக்க வேண்டாம். அதே நேரத்தில் நல்ல சட்டத்தைக் களங்கப்படுத்தும் நோக்கத்தில் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டாமென்று வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வழக்கு மன்றத்தில் இருக்கும் 340 ரிட் மனுக்களை டிவிஷன் பென்ச் எடுத்து நடத்தி, முடிக்க வேண்டுமென்று கடந்த 3—2—1982 அன்று நாங்கள் அரசின் சார்பிலே ஒரு மனு கொடுத்திருக்கிறோம். ஆகவே எவ்வளவு சீக்கிரமாக இந்த வழக்குகளெல்லாம் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நடத்தி, தேர்தல்களை நடத்தத் தயாராக இருக்கிறோம். இருக்கக்கூடிய நிலையில் இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வந்துதான் ஆகவேண்டும். சட்டமன்றத்தில் அவைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற சூழ்நிலையில் இருக்கிறோம். ஆகவே உறுப்பினர்களுடைய முழு ஆதரவோடு சட்டங்களை நிறைவேற்றித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.



1982 பிப்ரவரி 19]

சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1982) நிறைவேற்றப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1982) நிறைவேற்றப்பட வேண்டும் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(8) தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1982)**

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவரைவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டு "

என்று முன்மொழிகிறேன்.

---

@ 70 ஆம் பக்கத்தில் இணைப்பு X ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1982) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1982) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



**(9) தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1982.)**

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1982) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 702 ஆம் பக்கத்தில் இணைப்பு XI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1982) நிறைவேற்றப்பட வேண்டும் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 6.40)

6. அரசின் தீர்மானம்—தொடர்ச்சி.

அலுவல் வரிசையில் மாற்றம் குறித்து.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்ற மேலவை விதி 21 (3)ன் கீழ், இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள அரசு சட்ட முன்வடிவுகளில் 6-வதாக இடம் பெற்றுள்ள தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1982) இனம் 4-க்கு முன் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்ற மேலவை விதி 21 (3)-ன் கீழ், இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள அரசு சட்ட முன்வடிவுகளில் 6-வதாக இடம் பெற்றுள்ள தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1982) இனம் 4-க்கு முன் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



5. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(10) தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1982).

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்ட முன் வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1982 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".

திரு. ஆ. நல்லசிவன்: துணைத்தலைவரவர்களே, இந்தச் சட்ட முன் வடிவு தொழிலாளர்களை பாதிக்கக்கூடிய ஒன்று. ஆகலால், நான் இதை ஆட்சேபிக்கிறேன். இதை என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. இதனுடைய மூலச் சட்டம் 1969ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. திரு. அண்ணாதுரை அவர்களுடைய ஆட்சி ஏற்பட்ட காலத்தில், தமிழ் நாட்டிலே குறிப்பாக கோவை மாவட்டத்தில் 22 பஞ்சாலைகள் ' சிக் ' பஞ்சாலைகள் என்று அறிவிக்கப்பட்டு மூடப்பட்டன. அப்படி அதன் முதலாளிகள் அவற்றை மூடிவிட்ட காரணத்தால், அவற்றில் பணியாற்றிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் அந்த மில்களை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டார்கள். அவர்களும் உடனே மத்திய அரசிடம் நிதி உதவி கேட்டார்கள். ஆனால் போதிய நிதி உதவி மத்திய அரசிடமிருந்து கிடைக்கவில்லை. எனவே அந்த மில்களை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்க வேண்டுமானால், அங்கு வேலை செய்யக் கூடிய தொழிலாளர்கள் சட்டபூர்வமாகத் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய சில உரிமைகளை விட்டுக்கொடுத்தால்தான்

@ 703 ஆம் பக்கத்தில் இணைப்பு XII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

முடியும் என்று சொல்லி இந்தச் சட்டத்தை அப்போதிருந்த தொழில் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்தார்கள். இவற்றை நிர்வகிப்பவர்களுக்கு தொழிலாளர்களுக்கு சட்டபூர்வமாகக் கிடைக்க வேண்டிய உரிமைகளை விட்டுக்கொடுக்க இந்தச் சட்டம் வழிவகை செய்தது. 1969ஆம் ஆண்டு இதைக் கொண்டு வந்தபோது, ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட மில்லுக்கு இதை அமுல் படுத்தலாம் என்று சொல்லியிருந்தார்கள். குறிப் பிட்ட ஒவ்வொரு சிக் ஆலையும் 5 ஆண்டுகள் வரை இந்தச் சட்டத்தின்கீழ் நோட்டிபை பண்ண, தொழிலாளர்களுக்கு சட்டபூர்வமாக சில உரிமைகளைக் கொடுக்க வேண்டியதில்லை என்று வழிவகை செய்தது. பிறகு 6 வருடம் கழிந்த பிறகு, அதாவது 2—12—1975-ல் இந்த 5 வருடம் என்பதை 8 வருடம் என்று ஆக்கினார்கள். இப்போது 8 வருடம் என்று இருப்பதை 10 வருடமாக ஆக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஒரு பேக்டரி சிக் நிலையில் இருந்ததற்காக 5 வருடம் வரை அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் தங்களுக்குரிய சில உரிமைகளைக் கேட்கா மலிருந்தால், அந்த பேக்டரியை நல்ல ' நிலைமைக்கு 5 வருடத்திற்குள் கொண்டு வருவதாகச் சொல்லித்தான், இந்தச் சட்ட முன்வடிவை அன்றைக்குக் கொண்டு வந்தார்கள். ஆனால் 5 வருடம் ஆகியும், அந்த பேக்டரி நல்ல நிலைமைக்கு வராததால், 8 வருடம் என்று ஆக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு 8 வருடங்கள் ஆகியும் அந்தத் தொழிற்சாலை நல்ல நிலைமைக்கு வரவில்லை யென்று சொன்னால், அதற்குரிய காரணம் என்ன என்பதை அரசு ஆராயந் ததா? அரசாங்கம் ஏற்பாடு செய்த நிர்வாகிகள்தான் அவற்றை இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆலை அதிபர்கள் அவற்றை நிர்வகித்ததன் காரணத்தால், அதற்கு ' சிக் ' நிலைமை வந்துவிட்டது என்று சொல்லி, அரசு நிர்வாகிகளை நியமித்த பிறகும் கூட, அது ' சிக் ' நிலைமையிலேயே இருந்தால், அது எப்படி நியாயமாகும்? அப்படி என்றால் அரசு நியமித் திருக்கிற நிர்வாகிகள் நல்லமுறையில் நிர்வகிக்கவில்லை என்று தானே பொருள். அன்றைக்கு இருந்த ஆலை முதலாளிகள் கொள்ளையடித்தார்கள், ஆகவே ' சிக் ' நிலைமை ஏற்பட்டது என்று சொன்னார்கள். அதோடுகூட தொழிலாளர்களுக்குக் கட்ட வேண்டிய பிராவிடென்ட் பண்டு பணத்தைக்கூட சாப்பிட்டு விட்டார்கள் என்றும் சொன்னார்கள். அப்படிச் சொல்லித்தான் அரசாங்கம் அதிகாரிகளை நியமித்தது. ஆனால் இவ்வாறு அதிகாரிகளை நியமித்த பிறகும்கூட, அரசு நிர்வாகிகளே அவற்றை எடுத்து நடத்தியும் கூட, ஆண்டுகள் ஆகியும், அரசாங்கத்தால் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து பணத்தைப் பெற்றும் இன்னும் ' சிக் ' நிலைமை தீரவில்லையென்று



சொல்வது நியாயம்தானா? இன்னும் 2 வருடம்கூட கொடுப்பதால் மட்டும் இந்த ' சிக் ' ஆண்டுகள் நிலைமை போய்விடுமா என்ன? 8 ஆண்டுக்காலம் என்பதற்கு ஆதாரமாக, அரசாங்கம் ஏதாவது ரெவியூ வைத்திருக்கிறதா? 8 வருடம் ஆகியும் கூட, லாபம் சம்பாதிக்கவில்லையென்று சொன்னால், பொது நிதியிலிருந்தும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்தும் பணம் கிடைத்தும்கூட இன்னும் பலகீனம் மாறவில்லையென்று சொன்னால், சம்பந்தப்பட்ட இலாகா இதை ரெவியூ செய்திருக்கிறதா? காரணத்தைக் கண்டுபிடித்திருக்கிறா? இன்னார்தான் அதற்குப் பொறுப்பு என்று ஏதாவது ஆதாரத்தை வைத்திருக்கிறதா? மத்திய அரசு பட்ஜெட்டை வைப்பதற்கு முன்னால் " எக்னாமிக் ரெவியூ " என்ற ஒன்றை வைப்பார்கள். அம்மாதிரி இங்கேயும் வைத்திருக்கலாமே, அப்படி வைத்திருக்கிறார்களா? தொழி லாளர்கள் தங்களுடைய உரிமையை விட்டுக்கொடுத்து தியாகம் செய்திருக் கிறார்கள். பொது நிதியிலிருந்தும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்தும பணம் கொடுத்திருக்கிறார்கள். தவிரவும் அங்கு நியமிக்கப்பட்டிருக்கிற நிர்வாகிகள் அரசால் நியமிக்கப்பட்ட நிர்வாகிகள். இப்படிப்பட்ட நிலைமையில் ஏன் அவை லாபம் சம்பாதிக்கவில்லை? 8 ஆண்டுகள் என்று இருப்பதை இன்னும் 2 வருடம் அதிகப்படுத்துவதால் மட்டும் லாபகரமாக நடத்திவிடுவார்களா என்ன? தொழிலாளர்கள் இதைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைச் சொல்கிறேன். இப்படி ' ஸ்டேட் யூட்டரி பெனிபிட் ' ஒன்றும் இல்லாமல் செய்வதால், தொழிலாளர்களை எந்த நேரத்திலும் வீட்டுக்கு அனுப்பச் செய்வதற்கான உரிமை நிர்வாகிகளிடம் இருக்கிறது. அதைப் பயன்படுத்துவதற்காகத்தான் இப்படிச் செய்கிறார்களோ என்கிற சந்தேகம் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டி ருக்கிறது. தவிரவும் எந்த கோர்ட்டுக்கும் போக முடியாது. லேபர் கோர்ட்டுக்கும் தொழிலாளர்கள் செல்ல முடியாது. 8 ஆண்டுகள் ஏற்கெனவே இல்லை என்று சொல்வதற்கு அரசிடம் ஏதாவது ரெவியூ இருக்கிறதா? " சட்டசபையில் உங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது என்ற ஒரே காரணத் திற்காக இப்படிச் செய்யலாமா? " தொழிலாளர்கள் தங்களுடைய உரிமை களை விட்டுக் கொடுத்த பின்பும், அரசே நியமித்த அதிகாரிகள் இருந்தும், பணம் கொடுக்கப்பட்ட பின்பும், தொழிலாளர்கள் வேலைகளை ஒழுங்காகச் செய்திருந்தும், அரசினுடைய சக்திக்கு அப்பாற்பட்டு நின்று ' சிக் ' ஆலை களை குணப்படுத்த முடியவில்லை என்று சொன்னால், இது நியாயம் தானா? ஏற்கெனவே 8 ஆண்டுகளாக இதில் ஏற்பட்ட முன்னேற்றம் என்ன? அதுபற்றி ஏதாவது புள்ளி விவரம் வைக்கப்பட வேண்டாமா?

[திரு. ஆ. நல்லசிவன்] [1982 பிப்ரவரி 19

இன்னும் தொழிலாளர்கள் 2 ஆண்டுகளுக்கு எந்தவிதமான சட்டபூர்வமான உரிமையையும் கேட்காமலிருக்கும் வகையில், தொழிலாளர்களுக்கு என்ன நடந்தாலும் அதை எதிர்த்துக் கேட்காமல் இருக்கும் வகையில், நிர்வாகிகளுக்கு ஆதரவாக, இதை அரசு கொண்டு வருகிறது என்கிற சந்தேகம் தொழிலாளர்கள் மத்தியில் இருக்கிறது. அப்படி இல்லையென்றால், அரசு தகுந்த ரெவியூ வைத்திருக்கிறதா ? இந்த 10 வருடத்தோடு நிறுத்துவார்களா என்பதிலும் சந்தேகம் ஏற்படுகிறது. அப்போதும் சட்டசபையில் மெஜாரிட்டி பலம் இருக்கிறது என்பதற்காக 12 அல்லது 15 என்று ஆக்கினால், தொழிலாளர்கள் நிலை என்ன ஆகும் ? பொது நிதி பணத்தை எடுத்து பள்ளத்தில் போட்டு நிரப்பி வீண் விரயம் செய்ய வேண்டுமென்ற கருத்தை ஒப்புக்கொள்கிறார்களா ? 8 வருடம் நிர்வகித்தும் லாபத்தைக் காட்டவில்லை. இருந்தும் அவர்களிடமே பொறுப்பை ஒப்படைக்கிறார்களே, இது எந்த வகையில் நியாயம் ? கோயம்புத்தூர் டெக்ஸ்டைல் மில்லை திரும்பவும் பழைய ஆட்களிடமே கொடுத்து விட்டார்களே ? 8 வருடம் தொழிலாளர்கள் தங்களுடைய உழைப்பைத் தியாகம் செய்திருக்கிறார்கள். தங்களுடைய சம்பளத்தைத் தியாகம் செய்திருக்கிறார்கள். தங்களுடைய உரிமையை விட்டுக் கொடுத்து தியாகம் செய்திருக்கிறார்கள். இருந்தும் அந்த பேக்டரியை அதனுடைய உரிமையாளர்களிடமே விட்டுக் கொடுத்திருக்கிறார்களே.

(பிற்பகல் 6-50)

இது எப்படி நியாயம் ஆகும் ? ஏன் அந்த முதலாளிகளுக்குக் கொடுக்க வேண்டும் ? ஏன் தேசியமயமாக்கக் கூடாது ? 1969-லே சட்டம் கொண்டு வரப்பட்ட போது, இந்தமாதிரி மத்திய அரசிலும் ஒரு சட்டம் வந்தது. மத்திய அரசு தன் சொந்தப் பொறுப்பிலே பல இடங்களிலே எடுத்தது. பல தடவை நம்முடைய அமைச்சரவை மத்திய அரசினுடைய உதாரணங்களைச் சொல்வது உண்டு. "மத்திய அரசின் உதாரணங்களை நல்லதற்கு நீங்கள் பயன்படுத்தக்கூடாதா ? தவறானவற்றிற்குத்தானே பயன்படுத்துகிறீர்கள்" இந்த நாட்டிலே செக்யூரிட்டி ஆக்ட் வந்தபோது அதை 'சப்போர்ட்' பண்ணுகிறீர்கள். தவறான காரியங்களுக்கு இந்திரா காங்கிரஸ்க்கு 'சப்போர்ட்' பண்ணுவதுபோல நல்ல காரியங்களுக்கும் பண்ணவேண்டும். 112 டெக்ஸ்டைல் மில்களை இந்தியா முழுவதும் இருந்து அவர்களே எடுத்தார்கள்.



1982 பிப்ரவரி 19]

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** 'வசிஷ்டர் வாயால் வந்ததைப் போல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்திரா காந்தி அவர்களைப் பாராட்டியதைப்பற்றி மகிழ்ச்சியடைகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** தொழிலாளர்களின் பேச்சுவார்த்தைகளின் அடிப்படையிலேதான் அந்த 112 மில்களையும் இந்தியா முழுவதிலிருந்தும் எடுத்து விட்டார்கள். பொது நிறுவனத்திலே கோடிக்கணக்கிலே பணத்தைப் போட்டதற்குப் பிறகு, திரும்பவும் தனி நபரிடம் கொடுக்கக் கூடாது என்று தொழிற் சங்கங்கள் சொன்னதன் பேரில்தான், அன்றைக்கு மத்திய அரசு இவைகளை தேசியமயமாக்கியது. அதைப் போல இங்கே கோடிக்கணக்கான ரூபாய்களை மத்திய அரசிடமிருந்தும், மாநில அரசிடமிருந்தும் மேலும் 'நேஷனலைஸ்' செய்யப்பட்ட வங்கிகளிடமிருந்தும் வாங்கிப் போட்டு இந்த நிலைமைக்கு இவைகளை வைத்திருக்கும்போது, ஏன் நாம் 'நேஷனலைஸ்' பண்ணக்கூடாது? நாங்கள் கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொடுத்து இவற்றுக்கு உயிர் கொடுத்திருக்கிறோம், ஆகவே அதை 'நேஷனலைஸ்' பண்ணலாம் என்று மத்திய அரசிடம் சொல்லியிருக்கலாமே ! அப்படிச் செய்திருந்தால், நான் அதை மிகவும் வரவேற்றிருப்பேனே ! அப்படிச் செய்யாமல் மேலும் மேலும் தொழிலாளர்களை மொட்டை அடிக்கிறார்களே ! அதற்கு இது சரியான கருவி என்று நினைத்து ஏன் செய்கிறார்கள் ? "உங்களுக்கு அங்கேயும் மெஜாரிட்டி, இங்கேயும் மெஜாரிட்டி அதனாலே எதை வேண்டுமானாலும் நிறைவேற்றலாம் என்று தானே இதற்கு அர்த்தம் ?" இல்லாவிட்டால் இதற்கான காரணங்களைச் சொல்லியிருக்க வேண்டாமா ? 8 ஆண்டுகளாக அங்கே இருக்கும் தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைகளைத் தியாகம் செய்திருக்கிறார்களே, அவர்கள் இனிமேலும் தியாகம் செய்ய வேண்டும் என்று கேட்டால், அது எப்படி நியாயம் ? இதுவரையிலும் தொழிலாளர்களைக் கஷ்டப்படுத்தியது போதாதா ? இது அவர்களின் வயிற்றிலே அடிக்கும் சட்டம். இதை இங்கே கொண்டுவரும் முன்னதாக, காபினெட்டைக் கூட்டி அங்கே இதைப்பற்றிப் பேசியிருக்கலாமே ! அப்படிச் செய்யாமல், டிபார்ட்மென்ட்லே இருக்கும் அதிகாரிகள் எழுதிக் கொடுத்ததை அப்படியே இங்கு கொண்டு வந்திருக்கிறார்கள்.

The Government have decided to extend the period of declaration of relief undertakings for a further period of two years so as to enable the continued smooth running of such relief undertakings, untramelled by other laws relating to industrial relation."

இப்படியிருப்பதன் மூலம், இந்த நாட்டிலே தொழிலாளி வர்க்கம் போராடி, அந்தப் போராட்டங்களின் நீதியை அரசே ஏற்றுக் கொண்டு அவர்களுக்குக் கொடுத்திருக்கும் உரிமைகளுக்கு இடையூறாக இந்த நடவடிக்கை இருக்கிறது. இப்படியாக 'அண்டிராமல்ட்' என்ற வார்த்தையைப் போட்டிருப்பது ஒரு 'ப்யூரோகிரேட்டிக்' அரசுக்குச் சமம். "நாங்கள் எவ்வளவோ செய்தும், துரதிருஷ்டவசமாக இந்தக் குறிப்பிட்ட 'சிக்' மில்கள் எல்லாம் பலஹீன மாகவே இருக்கின்றன. ஆகவே, மிகவும் வருத்தத்தோடு உங்கள் மீது மீண்டும் இந்தச் சுமையை சுமத்துகிறோம்." என்று சொல்வதற்கு பதிலாக, 'சட்டத்திலே'—இது பாதிக்கப்பட்டிருக்கிறது, 'அன்டிராமல்ட் பை அதர் வா' என்று போட்டிருப்பதே தொழிலாளர்களுக்கு மிகவும் பாதகமாக இருக்கிறது. அதாவது, எந்தவிதமான தொழிலாளிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கும் சட்டமும் இதை அமுல்படுத்தும்போது அமுலுக்கு வரக்கூடாது என்ற நிலைமை இருந்தால், தொழிலாளி எந்த உரிமையையும் கேட்கக்கூடாதா? தமிழ்நாட்டிலே எத்தனை அமைப்புகள் இருக்கின்றன? ஆகவே, தயவு செய்து இன்றைக்கு இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றாமல் மற்ற மூன்று பில்களையும் ஒத்தி வைத்ததுபோல ஒத்திவைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். "8 ஆண்டு காலம் எங்களுடைய சக்திக்கு ஏற்ப செய்தோம், ஆனால் எதிர்பார்த்த அளவுக்குக் கொண்டுவர முடியாமல் போய் விட்டது" என்று ஒரு ரிவ்யூ வைக்கவேண்டும். இன்னும் இரண்டாண்டு கூட கொடுத்தால் நிலைமைகளைச் சீர்செய்கிறோம் என்ற அடிப்படையிலே ஒரு மெம்மோ வைக்க வேண்டும். அப்படி எதுவும் இல்லாமல் இப்படிச் செய்தார்கள் என்றால், அது தொழிலாளிகளுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய உரிமைகளைப் பறிப்பதாகும். நான் இதை வன்மையாக ஆட்சே பிக்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் மீண்டும் வற்புறுத்துகிறேன், இதை இந்த செஷன்லே ஒத்திவைத்துவிட்டு அடுத்த கூட்டத்தொடரிலே எடுத்துக்கொள்ளலாம் என்று கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** துணைத் தலைவரவர்களே, இந்த அவையிலே நிவாரண நிறுவனங்களுடைய கால வரம்பை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிப் பதுபற்றி கொண்டுவந்திருக்கும் சட்ட முன்வடிவுபற்றி என்னுடைய கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த போது தமிழ்நாட்டின் தொழில் துறையிலே ஏற்பட்ட ஒரு பெரிய தொழில் நெருக்கடியைச் சந்திக்க 1969-ல் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. பல



ஆலைகளை அதை நிர்வகித்தவர்களுடைய நிர்வாகக் குறைபாட்டை நீக்கு வதற்கு என்று கூட சொல்லவில்லை, ஆனால் அனாவசியமாகச் செலவு செய்து, அதாவது இந்த ஆலைகளிலிருந்து வரும் வருவாயை அவர்கள் ஆடம்பரச் செலவுகளுக்குப் பயன்படுத்தி, பம்பாய், டெல்லி, சிம்லா போன்ற இடங்களில் பெரிய பெரிய மாளிகைகளைக் கட்டிவைத்து, மேலும் அவர்களுடைய உறவினர்கள் எங்கெங்கேயெல்லாம் படிக்கிறார்களோ அங்கேயெல்லாம் அந்த ஆலைகளின் பெயரிலே கெஸ்ட் ஹவுஸ்களையெல்லாம் ஏற்படுத்தி அங்கே ஏற்படும் செலவுகளையெல்லாம் இந்த மில்களின் கணக்கிலே காட்டி, நஷ்டக் கணக்கைக் காட்டி, இந்த அரசாங்கத்திடமிருந்து உதவியையும் பெற்று, அப்படியிருந்தும் நீண்டகாலத்திற்குப் பிறகு இவைகளையெல்லாம் 'சிக்' மில்லாகப் போட்டு மூடப்போவதாக அறிவித்த நேரத்தில், தமிழகத்தில் உள்ள தொழிலாளர்களுடைய நிலைக்கும், எதிர்காலத் தொழில் வளர்ச் சிக்கும் அது ஒரு சவாலாக இருந்தபோது, தொழிலாளர்களை அழைத்து வைத்துப் பேசி, இந்த சந்தர்ப்பத்தில் நாம் தலையிடாமல் போனால், அவர்கள் மில்லை இழுத்து மூடிவிடுவார்கள், பல்லாயிரக் கணக்கான தொழிலாளிகள் வேலையில்லாமல் போய்விடும் நிலைமை ஏற்பட்டுவிடும் என்று சொல்லி, "இதை எடுத்து நடத்த அரசு தயாராக இருக்கிறது; மத்திய அரசு நிதி யுதவி தர மறுத்துவிட்டது; இருந்தாலும் நாங்கள் இதற்குத் தேவையான நிதியைப் போட்டு சரிப்படுத்துகிறோம்; அது நல்ல நிலைமைக்கு வரும் வரையில் தொழிலாளர்கள் எங்களோடு ஒத்துழைக்க வேண்டும், போராட் டங்களிலோ, வேறு எந்தவிதமான சம்பள உயர்வு போன்ற ஆர்ப்பாட்டங் களிலோ ஈடுபடக்கூடாது, கோரிக்கைகளை வைக்கக்கூடாது; ஒரு ஐந்தாண்டு காலத்திற்குள் இந்த நிலைமைகளையெல்லாம் சீர்படுத்துகிறோம்", என்று சொல்லி ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தி, அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்போது தியாக மனப்பான்மை யோடு தொழிலாளர்களும் அதை ஒத்துக்கொண்டார்கள். இந்தச் சட்டம், 1969-லே கொண்டுவரப்பட்டாலும், பல்வேறு காலகட்டங்களிலே எடுக்கப் பட்டது. இப்போது பார்த்தால் இந்த 8 ஆண்டுகளுக்குள்ளாக தொழிலாளர் களுக்குக் கிடைக்கவேண்டிய போனஸை அப்போது 6 பர்செண்டாக வாங்கினார்கள் என்று சொன்னால் இப்போது மற்ற ஆலைகளில் எல்லாம் இருக்கும் தொழிலாளர்கள் 18 பர்சென்ட் போனஸ் வாங்குகிறார்கள். மேலும் அவர்களுக்கு சம்பளத்தில் அவ்வப்போது உயர்வு இப்படியெல்லாம் அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கும்போது, இந்த ஆலைகளிலே வேலை செய்யும் தொழி லாளர்களுக்கு இந்தச் சலுகைகள் எதுவும் கிடையாது. அவர்கள் இந்தச்

சலுகைகளை வற்புறுத்திக் கேட்கும் உரிமையை அவர்களாகவே குறைத்துக் கொண்டார்கள். இப்போது 22 பஞ்சாலைகளை எடுத்திருக்கிறார்கள். டி.ஐ. சைக்கிள் தொழிற்சாலையைக் கூட எடுக்கவேண்டும் என்று அப்போது சொன்னார்கள், ஆனால் எடுக்கவில்லை. முதலில் 5 ஆண்டுகள் என்றது, பின்னர் 8 ஆண்டாக மாறி, இப்போது 10 ஆண்டாக வேண்டும் என்று கேட்கிறார்கள். "இந்தப் பணியில் நாங்கள் இவ்வளவு தூரம் வெற்றிபெற்றிருக்கிறோம், இன்னும் எங்களுடைய இந்த இந்தக் குறிக்கோள்களை அடைவதற்கு மேலும் 2 ஆண்டு காலம் தந்தால்தான் முடியும், நாங்கள் இப்படியிப்படியெல்லாம் செய்யலாம் என்று எண்ணியிருக்கிறோம்" என்று ஒரு அறிக்கையை வைத்திருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது. இதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பின்னால் விளக்குவார்கள் என்று நான் நம்புகிறேன். இன்னொன்று, 'சிக்' ஆலைகளாக இருந்ததை நம்முடைய முயற்சியாலே லாபகரமான ஒரு நிலைமைக்கு மாற்றியதற்குப் பிறகு, ஏன் திரும்பவும் அவர்களிடத்திலே கொடுக்கவேண்டும்? அவர்கள் தானே நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவர்கள். அப்படியிருக்கும்போது, அவர்களிடத்திலேயே திரும்பவும் கொடுக்கும் கொள்கையை நாம் அடியோடு ரத்து செய்யவேண்டும். ஒன்று அதைத் தேசியமயமாக்க வேண்டும். இல்லையென்று சொன்னால் அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களையெல்லாம் பங்குதாரர்களாகப் போட்டு கூட்டுறவு அடிப்படையில் செய்யவேண்டும். 10 ஆண்டுகள் என்று கேட்கும்போது, இதைத் தெளிவுபடுத்திவிட்டு ஒவ்வொரு ஆலையிலும், அங்கே பணிபுரியும் தொழிலாளர்களைச் சேர்த்து அவர்கள் இருக்க வேண்டும் என்று கூறி, அப்படிப்பட்ட ஒரு விளக்கத்தோடு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருந்தால், வரவேற்றிருப்போம் என்று கூறி, அது இல்லாமையால் இப்போது இந்தச் சட்டத்தை வரவேற்க முடியவில்லை என்று கூறி அமைகிறேன்.

(பிற்பகல் 7.00)

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நல்லசிவன் அவர்களும் திரு. சங்கரலிங்கம் அவர்களும் மற்ற அனைவருமே வரவேற்பார்கள் என்றுதான் எதிர்பார்த்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது "நீங்கள் சில காரியங்களைப் பின்பற்றும்போது ஏன் நல்லவர்களையும், நல்லவற்றையும் பின்பற்றக்கூடாது?" என்று கேட்டார். அவர் மகிழ்ச்சியடைவார் என்ற நம்பிக்



கையில் ஒரு கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த வகையில் முழுக்க முழுக்க அவருடைய கட்சியைத்தான் பின்பற்றுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதாவது, கேரளத்திலும், மேற்கு வங்காளத்திலும் ஏற்கனவே 8 ஆண்டுகளாக இருந்த வரம்பை 10 ஆண்டுகளாக அந்த அரசுகள் மாற்றியதன் அடிப்படையில்தான், இந்த அரசுக்கும் பல்வேறு கோரிக்கைகள் வந்து, அரசும் அவற்றை ஏற்று அதன் அடிப்படையில் இந்தச் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசும்போது, ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். அவருக்கும் ஒன்றைச் சுட்டிக்காட்டி நினைவுபடுத்துவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். 1969ஆம் ஆண்டில் இதற்கான மூலச்சட்டம் அன்றையதினம் தொழில் அமைச்சராக இருந்த திரு. மாதவன் அவர்களால் கொண்டுவரப்பட்டு, இதன் காலம் 5 ஆண்டுகள் என்று நிர்ணயிக்கப்பட்டது. மீண்டும் 1975ஆம் ஆண்டில் 5 ஆண்டுகளாக இருந்த வரம்பு 8 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டு, இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளராக இருக்கும் அன்றைய அமைச்சர் திரு. சாதிக் பாஷா அவர்களும் அதற்கு ஒரு விளக்கமான உரையைச் சட்டமன்றத்திலேயே ஆற்றியிருக்கிறார். அதையும் நான் இங்கே வைத்திருக்கிறேன். எனவேதான் அப்போது எந்தக் காரணங்களுக்காக 8 ஆண்டுகள் என்று நிர்ணயிக்கப்பட்டதோ, அதே காரணங்களுக்காகத்தான் இப்போது 10 ஆண்டுகள் என்று நிர்ணயிக்கப்படுகின்றது என்பதை மட்டும் முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இது தொழிலாளர்களுக்குக் கெடுதல் செய்கிற சட்டம் என்றெல்லாம் சொல்லப்பட்டது. இந்த எண்ணம் அடிப்படையிலேயே தவறு என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்படியிருந்தால், மேற்கு வங்கத்திலும், கேரளத்திலும் திரு. நல்லசிவன் அவர்கள் சார்ந்துள்ள கட்சி ஆட்சி இதைச் செய்திருக்கமாட்டார்கள். எனவே, தொழிலாளர்களுக்கு எந்த வகையிலும் இது கெடுதலான சட்டமல்ல. ஆயினும் தற்காலிகமாக எடுத்துக் கொள்ளும்போது, சில சலுகைகள் நிறுத்தி வைக்கப்படுகின்றன. இதன் காரணமாக வயிற்றில் அடிக்கலாமா என்றும், அவையிலேயே மெஜாரிட்டி இருப்பதால் நிறைவேற்றலாமா என்றெல்லாம் கேட்டார்கள். இந்தத் தொழிற்சாலைகள் மூடப்பட்டால், அதன் காரணமாக அவர்களுடைய நலச் சட்டங்கள் மட்டுமல்ல, வாழ்வே பாதிக்கப்பட்டு அவர்கள் அனைவரும்

விட்டுக்குப் போக வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடும். எனவே தொழிற் சாலைகள் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்றும், தொழிலாளர்கள் தொடர்ந்து பணியாற்றும் வாய்ப்பு பெறவேண்டும் என்றும் தான் இந்தச் சட்டத்திருத்தத்தில் கால வரம்பைப் பத்து ஆண்டுகளுக்கு என்று நீட்டித் திருக்கிறோம்.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு தொழிற் சாலையை எடுத்த எடுப்பிலேயே 10 ஆண்டுகளுக்கு என்று எடுத்தால், தொழி லாளர்களின் நலச்சட்டங்களை அமுல்படுத்துவது என்பது இயலாமற் போய் விடும். எனவே ஒவ்வொரு ஆண்டும் தொழிற்சாலையின் நலன்களையும், வளர்ச்சிகளையும், இலாபத்தையும் அரசுத்துறையில் இருக்கும் அதிகாரிகளும், தொழிற்சாலையின் நிருவாக இயக்குநர்களும் ஆக அனைவருமாகச் சேர்ந்து பரிசீலித்த பிறகு, இன்னின்ன 'இம்ப்ரூவ்மெண்ட்' இருக்கிறது, இன்னும் ஓராண்டுக்காலம் நீட்டிப்பு கொடுத்தால், தொழிற்சாலையின் வளர்ச்சி ஏற்படும், லாபம் வரும் என்ற நம்பிக்கை ஏற்பட்டால்தான், அடுத்த ஆண்டு இதை நீட்டிக்கிறோமே தவிர, இல்லையென்றால்தான் அதைச் செய்வ தில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** சென்னைக்குக் குடிநீர் வழங்க கிருஷ்ணா நதித் திட்டம். கட்டளைக் கால்வாய் திட்டம் கை விடப்படவில்லை. அத்திட்டத்தை புதுக்கோட்டை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களுக்கு உதவும் வகையில் மாற்றி செயல்படுத்தலாமா என்று பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, கட்டளைக் கால்வாய்த் திட்டம் கைவிடப்படவில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** கட்டளைக் கால்வாய் என்ற பெயரில் முதல் பாதியாகிய கட்டளை அதில் வந்து விட்டதால், அந்தக் கால்வாயைத் தோண்ட அரசு கட்டளையிடுமா ? (சிரிப்பு)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அரசின் கட்டளை.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** டாக்டர் சொன்னதைப் பரிசீலனை செய்யலாம்.

துருவுறா பாத்திரத் தொழிற்சாலை, செல்லூர்

* 118 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை அருகே செல்லூரின் பக்கத்தில் துருவுறா (Stainless) பாத்திரத் தொழிற்சாலையில் இரண்டு இளைஞர்கள் இறந்து போனது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) அத்தொழிற்சாலை நடத்துவதற்கு உரிமம் வழங்கப்படவில்லை என்பது உண்மையா ?

(உ) இறந்த இளைஞர்களின் குடும்பத்ினருக்கு அரசு ஏதும் நஷ்ட ஈடு கொடுத்துள்ளதா ?

(எ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(இ) இந்தத் தொழிற்சாலை 1948ஆம் ஆண்டு தொழிற்சாலை சட்டத்தின் கீழ் பதிவுறா தொழிற்சாலையாகக் கருதப்படுகிறது. ஆகவே இக் கேள்விக்கு இடமில்லை.

(உ) & (எ) இறந்த இரு இளைஞர்கள் உறவினர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு மதுரைத் தொழிலாளர் இழப்பீட்டு ஆணையர் கோரப்பட்டுள்ளார்.

திரு. ம. சங்கரலிங்கம்: இறந்த இளைஞர்களுடைய குடும்பத்திற்கு தக்க நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டு விட்டதா ? இவ்வாறு பதிவு செய்யப்படாத தொழிற்சாலைகளில் இளைஞர்களை வேலைக்கு அமர்த்துகிற சந்தர்ப்பத்தில் அத்தொழிலாளர்களுக்கு என்ன பாதுகாப்பை அரசு செய்திருக்கிறது ? 18 தொழிலாளர்களுக்கு மேல் இருந்தால்தான் பதிவு செய்யப்படும் என்று விதி இருந்தும்கூட 2, 3 பேர்களைக் கொண்டுகூட தொழிற்சாலைகளை ஆரம்பித்திருக்கிறார்களே, அங்கு பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு அரசு பாதுகாப்பு கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இதில் 9 பேர் தான் பணியாற்றி வந்தார்கள். 18—12—1980 அன்று விபத்து நடந்தது. 2 வருடங்கள் ஆகியும்கூட இதுவரை இழப்பீடு குறித்து யாரும் மனு செய்யவில்லை. மதுரையில் இருக்கக்கூடிய தொழிலாளர் நல அதிகாரியிடம் நஷ்ட ஈடு வேண்டுமென்று இறந்துவிட்ட குடும்பத்திலுள்ளவர்களிடமிருந்து



இதுவரை விண்ணப்பம் வரவில்லை. இருந்தாலும் கூட இதுகுறித்து அரசே நடவடிக்கை எடுத்து இன்றைக்கு மதுரை தொழிலாளர் இழப்பீட்டு கூடுதல் ஆணையாளருக்கு ஆணையிட்டுள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : இறந்துவிட்ட இளைஞர்களுக்குத் திருமணம் ஆகியிருக்கிறதா ? அவர்களுக்கு உறவினர்களாக யார் யார் இப்போது இருக்கிறார்கள்? ஒருவேளை அந்த உறவினர்களுக்கு நஷ்ட ஈடு பற்றிய செய்தி தெரியாமல் கூட இருக்கலாம். தொழிலாளர் நல அதிகாரிக்கு ஆணையிட்டு அந்தக் குடும்பங்களுக்கு உடனடியாக உதவி செய்யும்படி ஆவன செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இறந்தவர்கள் 15 வயது, 12 வயது உடையவர்கள் என்றுதான் இருக்கிறது. திருமணம் ஆகியிருக்காது என்று தான் நான் ஊகத்தில் சொல்கிறேன். இதுபற்றிய தகவல் இல்லை. ஆனால் இந்தக் காலத்துப் பிள்ளைகளை எப்படி என்று சொல்ல முடியாது. (சிரிப்பு) திருமணம் ஆகியிருக்காது என்றுதான் நம்புகிறேன். அவர்களுடைய உறவினர்கள் யாரும் விண்ணப்பிக்காத காரணத்தால்தான், அங்கேயிருக்கிற டெப்யூடி கமிஷனர் ஆப் லேபர் அவர்களை —அவர்கள்தான் ஒர்க்மென்ஸ் காம்பன்சேஷன் அதிகாரி—இது குறித்து விசாரித்து நஷ்ட ஈட்டைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறோம்.

காற்றாடி இயந்திரம்.

* 119 வினா—திரு. வி. வி. வி. ஆனந்தம் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நமது கிராமப்புறங்களில் இறவை நீர்ப்பாசனத்திற்கு காற்றாடி இயந்திரம் (Wind Mill) பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: (அ) & (இ) பொதுப்பணித் துறையில் உள்ள நிலநீர்த்துறை ஒரு முன்னோடி காற்றாலையை வண்டலூர் மிருகக் கண்காட்சிசாலை பகுதியில் அமைத்து செயல்பட்டு வருகிறது. மேலும் நிலநீர்த்துறையில் ஒரு முன்னோடித் திட்டத்தை உருவாக்கி விவசாய மறுநிதி மற்றும் அபிவிருத்திக் கழக ஆய்வு மற்றும் அபிவிருத்தி அமைப்பின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(2) பூண்டி நீர்இயல் நீர் நிலையியல் கழகத்தில் கடந்த ஆறு மாத காலமாக காற்றாடி இயந்திரத்தைப் பற்றி ஆராய்ச்சி நடந்து வருகிறது.

**திரு. வி. வி. வி. ஆனந்தம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சாண எரி வாயு திட்டத்திற்கு அரசு உதவி அளிப்பதுபோல் கிராமப்புறங்களில் காற்றாடி இயந்திரத்தை பயன்படுத்துபவர்களுக்கு அரசு ஏதாவது மானியம் வழங்கும் திட்டம் இருக்கிறதா ? தாரமணியில் முருகப்பா சேரிட்டீஸ்—ல் குறைந்த செலவில் இதை நிர்மாணிக்கிறார்கள். மற்றும் கிராமப்புறங்களில் இருக்கிற தொழில் நுட்பம்பற்றி நல்ல தேர்ச்சியுள்ள ஆசாரி போன்றவர்கள் இதை ரூபாய் 2 ஆயிரம், ரூபாய் 3 ஆயிரம் செலவில் நிர்மாணிக்க முன்வருவார்கள். அப்படி ஏராளமாகக் காற்றாடி இயந்திரம் நிர்மாணிக்கப்பட்டால், நமது கிராமப்புறங்களில் இறவை நீர்ப்பாசனத்திற்கு பயன்படுத்தலாம். இத்திட்டத்திற்கு அரசு உதவி அளிக்க முன்வருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—00)

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மின்சாரப் பற்றாக்குறை, மற்ற எரிபொருள்களின் விலையேற்றம், அதனால் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகள் ஆகியவைகளை மனதில் வைத்து காற்றாடி இயந்திரங்களை அதிகமான அளவிலே அறிமுகப்படுத்த வேண்டும் என்ற திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே நீர்ப்பாசன ஆலோசனைக் குழுவிலே ஓர் உறுப்பினர். அவர்கள்தான் ஒரு வருஷத்திற்கு முன்பு இந்தத் திட்டத்தைப் பற்றி எடுத்துச் சொல்லி அதிகமான அக்கறை காட்ட வேண்டும் என்று சொன்னதற்குப் பிறகு, இதிலே மிகவும் உன்னிப்பாக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியிலே ஒன்று உதவி செய்வதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பது. நம்முடைய தலைமைப் பொறியாளர் (நிலநீர்) இந்தத் தொழிற்சாலையைப் பொதுத் துறையிலே நடத்தலாம் என்றும், அரசே நடத்தி விவசாயிகள் மத்தியிலே இதை அறிமுகம் செய்ய வேண்டும் என்றும் கருத்துரு அனுப்பியிருக்கிறார்கள். அதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். கிராமங்களிலே மலிவு விலையிலே காற்றாடி இயந்திரங்கள் கிடைக்க வேண்டும். இப்போது அதனுடைய விலை 9 ஆயிரம் ரூபாயாக இருக்கிறது. இந்த 9 ஆயிரம் ரூபாயையும் ஏக காலத்திலே ஒரு விவசாயி மொத்தமாகக் கொடுத்து, இந்தக் காற்றாடி இயந்திரத்தை வாங்கிப் பயன்படுத்த முடியாது. அதற்கு மானிய உதவி ஏதாவது செய்யலாமா என்ற திட்டத்தையும் நாங்கள் ஆய்வு



செய்து கொண்டிருக்கிறோம். இப்போது ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டங்கள், மற்றும் பல்வேறு திட்டங்களிலே மானியம் கொடுக்கிறோம். எனவே, மத்திய அரசோடு இணைந்து செயல்படுத்தலாமா என்றும் யோசித்துக்கொண்டிருக்கிறோம். பூண்டியிலே இருக்கும் நிலத்தடி நீர் ஆய்வு செய்யும் நிறுவனத்தின் சார்பில் மிகக் குறைந்த விலை உள்ள பொருட்களைக் கொண்டு அதாவது மூங்கில், சவுக்குக் கட்டை, ஓலைப்பாய் போன்ற பொருட்களைப் பயன்படுத்தி 2 ஆயிரம் அல்லது 3 ஆயிரம் ரூபாய் செலவிற்கு உள்ளாக இதைத் தயார் செய்து பயன்படுத்தலாமா என்றும் ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறோம். வெற்றி காணலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆகவே, இதை ஊக்குவிக்க அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** எனக்குத் தெரிந்திருப்பதும், பார்த்திருப்பதும் குழந்தைகள் பறக்க விடுகிற காற்றாடிதான். ஆகவே, இந்தக் காற்றாடியை மக்கள் அனைவரும் தெரிந்துகொள்ளும் அளவிலே, அரசே சில முக்கியமான இடங்களிலே இவற்றை நிறுவ முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** எனக்குத் தெரிந்தே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகாபலிபுரம் ரோட்டிலே பல தடவை போயிருக்கிறார். மகாபலிபுரம் போகும் வழியிலே இந்தக் காற்றாடி மிகவும் பிரம்மாண்டமான அளவிலே இயங்கிக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் காற்றாடி விடுபவர்தான்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பகல் நேரத்தில் தானே போயிருப்பார் !

**திரு. ஐ. இராமமூர்த்தி:** இந்தக் காற்றாடி இயந்திரங்கள் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படும்போது மிகவும் உதவியாக இருப்பதால் அரசே, 'ஆன் எக்ஸ்பிரிமென்டல் பேசிஸ்'— (on an experimental basis) என்ற முறையிலே சில குறிப்பிட்ட பகுதிகளிலே நஞ்சை நிலத்தின் இறவைக்கு இது பயன்படும் என்பதைச் செயலளவிலே காட்டும் அளவிலே சில இடங்களிலே நிறுவி, இது சாதாரணமாக எவ்வாறு பயன்படுகிறது என்பதைப் பரீட்சார்த்தமாக விவசாயிகளுக்குத் தெரியப்படுத்துமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு உறுப்பினர் திரு இராமமூர்த்தி அவர்கள் கேட்ட கேள்விக்கு இங்கே குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. நிலநீர்த் துறை முன்னோடியாக ஒரு காற்றாடியை வண்டலூர்

மிருகக் காட்சி சாலையிலே வைத்திருக்கிறது. அது தினமும் 10 ஆயிரம் காலன் தண்ணீரை இறைக்கிறது. இது எக்ஸ்பிரிமெண்டலாகக் கிடைத்திருக்கும் தகவல். நில நீர் நிறுவனத்தால் நிறுவப்பட்ட 13 வடி நிலங்களில் உள்ள வானொலி நிலையங்களில் காற்றின் வேகத்தைப் பகுப்பாய்வு செய்ததிலிருந்து அதன் வேகம் 8 நிலையங்களிலே மணிக்கு 5 கிலோ மீட்டருக்கு அதிகமாக 200 நாட்களுக்கும் மேலாக இருக்கிறது. இரண்டு நிலையங்களிலே 150-க்கு மேல் 200 நாட்களுக்குள் இருக்கிறது. மூன்று நிலையங்களிலே 180 நாட்களுக்குக் குறைவாக இருக்கிறது. 150 நாட்களுக்கு அல்லது 6 மாதத்திற்கு மணிக்கு 5 கிலோமீட்டர் என்ற அளவிற்கும் அதிகமாகக் காற்றின் விசையிருக்கிறது என்ற கருத்து இப்போது இருக்கிறது. இதுபோன்று வேறு சில இடங்களிலேயும் வைக்க வேண்டும் என்று சொல்லி இப்போது நாம் தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) துறையின் சார்பிலே 20 ஆயிரம் ரூபாய் செலவில் இரண்டு காற்றாடிகளை, ஒன்று தஞ்சாவூரிலும் மற்றொன்று இராமநாதபுரத்திலும் அரசு விதைப் பண்ணையிலே மேல் நிலைத் தொட்டியோடு இப்போது வைத்திருக்கிறோம். அதனுடைய முடிவு கிடைத்தவுடனேயே விவசாயத்திற்கு முழுவதும் பயன்படுத்தும் அளவிலே இது எந்த அளவுக்கு உதவியாக இருக்கும் என்ற அறிக்கை கிடைக்கும். அந்த அறிக்கை வந்ததற்குப் பிறகு விவசாயிகளின் மத்தியிலே இதை அறிமுகம் செய்யலாம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** இப்போது ஏற்பட்டுக்கொண்டிருக்கும் மின்பற்றாக் குறையிலே இந்த முயற்சி வெற்றி பெற்றால், நாம் நம்முடைய சிரமத்தை ஓரளவுக்குக் குறைத்துக்கொள்ள முடியும். இதைப்போல, எரிபொருள் பற்றாக்குறையைச் சரிக்கட்டும் அளவிலே 'கேஸ்-பிளாண்ட்' வைக்க ஆல் இந்தியா காதி கமிஷன் மத்திய அரசின் உதவியோடு செய்கிறார்கள். அவர்கள் தங்களுக்கென்று ஒரு 'பேட்டர்ன்' வைத்திருக்கிறார்கள். அந்த 'பேட்டர்ன்' படி போட்டால்தான் உதவி செய்கிறார்கள். அதைவிட 'இம்ப்ரூவ்ட் பேட்டர்ன்' சைனாவிலே இருக்கும் 'பேட்டர்ன்' என்று சொல்லி, உத்தரப் பிரதேசத்தில் இது மாதிரி போடப்பட்டது. ஆனால் அதற்கு மத்திய அரசு உதவி அளிக்கவில்லை. ஆகவே ஆல்-இந்தியா அளவிலே என்ன 'பேட்டர்ன்' இருக்கிறது என்று தெரிந்து நமக்கு நிதியுதவி கிடைக்கும் அளவிலே அதைப் பரிசீலனை செய்து பரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** இப்போது இந்தக் காற்றாடியின் உதவி நமக்குப் புரிகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆனந்தம் அவர்கள் சொன்னதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே மிகவும் தீவிரமாக இருக்க வேண்டும் என்று சொல்லி கடந்த ஓராண்டு காலமாக இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். நிலநீர் துறையில் ஒரு முன்னோ



டித் திட்டத்தை உருவாக்கி, விவசாய மறுநிதி மற்றும் அபிவிருத்திக் கழகத்தினுடைய ஒப்புதலுக்காக அதை அனுப்பியிருக்கிறோம். அனைத்திந்திய அளவிலே இது வர வேண்டும். அனைத்திந்தியாவுக்கும் இதைப் பரப்பும் முன், கிட்டத்தட்ட இதற்கு முன் நெதர்லாந்திலே இம்மாதிரி இராட்சஸக் காற்றாடியைப் பொருத்தி, கிட்டத்தட்ட 30 சதவீதம் நிலப்பரப்பை கடல் பகுதியிலேயிருந்து மீட்டிருக்கிறார்கள். அங்கே கடற்பரப்பின் உயரம் நிலத்தின் உயரத்தை விட அதிகம். அங்கே அப்படிச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், தமிழகத்தின் கடற்கரையை எடுத்துக்கொண்டால், 900 கிலோமீட்டர்களுக்கு மேலாக கடற்கரையை நாம் வைத்திருக்கிறோம். இந்தக் காற்றாடியைப் பயன்படுத்த தமிழகம் ஒரு நல்ல மையம். பாரதப் பிரதமர் அவர்களும் காற்று, சூரிய வெப்பம் இவைகளின் மூலம் சக்தியைப் பெற வழிவகைகளை ஆராய வேண்டும் என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று நைரோபியில் நடந்த ஐக்கிய நாடுகளின் கூட்டத்தில் 'புதியதும் திரும்பப்பெறக்கூடியதுமான சக்திபெறும் வழிகள்' என்ற தலைப்பில் ஒரு உரை நிகழ்த்தி இந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். அனைத்திந்திய அளவிலே ஒரு திட்டமாக உருவாக்கி நிறைவேற்ற பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## *Multi-Metal Mining Industry.*

* 120 *Q*.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether the Government have done any exploratory work with a view to starting a Multi-Metal Mining Industry in Mamandoor near Tiruvannamalai in North Arcot district; and

(*b*) if so, the result thereof?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம்:** திருவண்ணாமலைக்கு அருகே இரும்புக்கனி படிவங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதுபற்றி அரசு பரிசீலனை செய்ததா?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** இந்திய புவியியல் ஆய்வுக் கழகம், மாநில புவியியல் பிரிவு, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மாநில புவியியல் பிரிவு, பாரத தங்கச் சுரங்கங்கள் நிறுவனம் போன்ற நிறுவனங்கள்

சேர்ந்து பல்வேறு காலகட்டங்களிலே அந்தப் பகுதிகளிலே சோதனைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த ஆய்வுகளின் அடிப்படையிலே அந்தப் பகுதிகளிலே 457 மீட்டர் நீளம், 12 மீட்டர் அகலம் ஆய்வு செய்திருக்கி றார்கள். அங்கே 0.6 சதவீதம் தாமிரமும், 2.0 சதவீதம் ஈயமும், 2.7 சதவீதம் துத்தநாகமும் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வியாபார ரீதியாக, பொருளாதார ரீதியாக இது லாபகரமாக இருக்காது என்ற அடிப் படையிலே இவைகள் கைவிடப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. ஆகவே, ஆய்வுகள் நடத்தப்பட்டு, அது லாபகரமாக இல்லை என்பதால்தான் கைவிடப்பட்டிருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** வெட்ட வெட்ட, தோண்டத் தோண்ட கிடைக்கும் என்று சொல்வார்களே, அதற்கேற்ப மேலும் தோண்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடி வுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. தகவல் கோரல்.

### (1) மாண்புமிகு முதலமைச்சரைக் கொலை செய்ய முயற்சி குறித்து.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையை இந்த அவையில் தங்கள் அனுமதியோடு எழுப்பு கிறேன். இன்றைய பத்திரிகைகளில் ஒரு அதிர்ச்சிகரமான செய்தியைப் பார்க்கிறோம். தமிழக முதலமைச்சர் அவர்களைக் கொலை செய்ய முயற்சித் ததாகவும், அதுசம்பந்தமாக ஒருவரைக் கைது செய்திருப்பதாகவும் பார்த் தோம். அது சம்பந்தமான விவரமான ஒரு அறிக்கையை இந்த அவைக்குக் கொடுத்தால், அதுபற்றிய உண்மையை அறிந்துகொள்ள முடியும். தமிழக முதலமைச்சர் அவர்களுடைய உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் அளவில் கருத்து இருப்பதால், அதைப்பற்றி விவரமாக அறிக்கை தரவேண்டும். இந்த அவையின் இதர அலுவல்களைக்கூட ஒத்திவைத்து, இதை விவாதிக்கலாம்.



(முற்பகல் 10-10)

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட இந்த அவையிலே அதைப்பற்றித்
தெரிவித்தார்கள். இப்போது பிடிபட்டவர் ஒரு பயங்கரமான ஆள் என்ப
தாலும், இதன் பின்னணியில் பெரிய சதித் திட்டம் இருக்கிறதோ என்று
அஞ்சக்கூடிய சூழ்நிலை இருப்பதாலும், இந்தப் பொருள்பற்றி அவையில்
விவாதித்தால்கூட நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மேலவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை என்ப
தைப்பற்றி யாருக்கும் கருத்துவேற்றுமை இல்லை. ஆனால் சம்பந்தப்
பட்டவர் மீது நடவடிக்கை எடுக்கவும், வழக்கை விசாரிக்கவுமான புலனாய்வு
நிலையில் இது உள்ளது. ஆகவே புலனாய்வு முடிகிற வரை விவரங்களை
வெளியே தெரிவிப்பது வழக்குக்கும் நல்லதல்ல, வன்முறையாளர்களுக்கும்
தப்பிக்க உதவி புரிவதாக அமையும். எனவே முழு விவரங்கள் தெரிந்த பின்
அவைக்குத் தகவல் தரலாம்.

## 3. உரிமைப் பிரச்சினை.

ஏற்பட்ட சில தவறுகளைச் சுட்டிக்காட்டி, அது நீதிமன்றம் வரை சென்ற
சேர்ப்பது குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை
அமைச்சர் கொடுத்த தகவல் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** மாண்புமிகு உறுப்பினர்
திரு. ம. சங்கரலிங்கம் அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை
அமைச்சர் அவர்கள் அவைக்குக் கொடுத்த தகவல் சம்பந்தமாக ஓர் உரிமைப்
பிரச்சினைக்கான முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்கள். அது எவ்வாறு
விதிகளின் கீழ் வருகிறது என்பதை மட்டும் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்
அவர்களே, நான் 15—2—1982 அன்று இந்த அவையில் ஆளுநர் உரையின்மீது
பேசும்போது, 9—2—1982 அன்று இந்த அவையில் ஆளுநர் உரையின்மீது
பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் எலும்புப் பிரிவு
முதுகலைப் பட்டத்திற்கான வகுப்பிற்கு மாணவர்களைச் சேர்க்கிற முறையில்
ஏற்பட்ட சில தவறுகளைச் சுட்டிக்காட்டி, அது நீதிமன்றம் வரை சென்ற
நிலைமையும் சுட்டிக்காட்டிப் பேசியதையும், அப்போது மாண்புமிகு

## எழும்புப் பிரிவு முதுகலைப் பட்டத்திற்கான வகுப்பிற்கு மாணவர்களைச் சேர்ப்பது குறித்து மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கொடுத்த தகவல் குறித்து

[திரு. ம. சங்கரலிங்கம்] [1982 பிப்ரவரி 20

நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசி ஒரு விவரத்தை அவைக்குத் தந்ததையும் குறிப்பிட்டேன். நான் பேசியது குறிப்பேட்டில் இருக்கிறது. அதாவது பார்த்தசாரதி என்கிற மாணவர் ஒருவருக்கு அப்போது இடம் கிடைக்கவில்லை என்பதுதான் கிளப்பப்பட்ட பிரச்சினை யாகும். அதற்கு மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுச் சொல்லியதாவது :

" அவர் ஒரு கேள்விக்கும் பதில் சொல்லவில்லை " என்றும், " இதைப் பற்றி சுப்ரீம் கோர்ட் தீர்ப்பில் கூட சொல்லியிருக்கிறார்கள் " என்றும் சொன்னார். ஆனால், நான் இந்த அவையின் கவனத்திற்கு இந்த இரண்டை யும் இதைத் தொடர்ந்து—அவை இந்த அவையிலே நடந்தவைகளானாலும் கூட அவற்றை மீண்டும் நினைவுபடுத்த வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்— அவர் மேலும் சொல்லும்போது " அவர் ஒரு கேள்விக் கும் பதில் சொல்லவில்லை—ஒரு கேள்விக்கு 'ம்' பதில் சொல்லவில்லை. இதைப்பற்றி சுப்ரீம்கோர்ட் தீர்ப்பில்கூட சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி ஜஸ்டிஸ் பத்மநாபன் அவர்களே எழுதியிருக்கிறார்கள். ஹாங்காங் ஆப்பரேஷன் என்பது மிகச் சாதாரணமான ஒன்று. வைத்தியக் கல்லூரி மாணவர்கள், பொதுவாகத் தெரிந்திருக்கக்கூடியது. பெய்லி அண்டு லவ் என்ற மருத்துவப் புத்தகத்தில் அதைப்பற்றி நிறைய எழுதியிருக்கிறார்கள் ". என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அவையினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள்—மாண்புமிகு அமைச்சர்கள் உட்பட சொல்கிறேன்—ஏனென்றால் அமைச்சர்களிலே சிலர் இந்த அவையின் உறுப்பினராக இல்லாமல் இருந்தும், பதவி காரணமாக இங்கே வந்து கலந்து கொள்வதன் காரணமாக இந்த அவைக்கு அவர்கள் தகவல் தருகிறபோது, உண்மையான தகவலைத் தர வேண்டும் என்பது இந்த அவையைச் சிறப்பாக நடத்திச் செல்ல முக்கியமாகும்.

அதுஎந்த சார்பில் சொல்லப்பட்டாலும் சரி, அவைக்குத் தவறான செய்தியைத் தரக்கூடாது. ஆனால் சில நேரங்களில் அவர்கள் உண்மை என்று நம்பி ஒரு செய்தியைத் தருகிறபோது, அது பின்னாலே தவறாக மாறியிருந்தால், அதைத் திருத்திக் கொள்வதற்கும் அவர்களுக்கு உரிமை உண்டு. எப்போதுமே எல்லா செய்திகளையும் போய்ப் பார்த்து, கேட்டு அது உண்மைதான் என்று தெரிந்துகொண்டு வந்துதான் பேச வேண்டும் என்ற



விதிமுறையை நாம் வகுத்துக்கொண்டால், இந்த அவையே நடக்க முடியாது. அதுமட்டுமின்றி, உறுப்பினர்களுக்கும் என்ன பேசுவது என்ற அச்ச உணர்வு வந்துவிடும். ஆகவே, அவையில் பேசுகிறபோது அவர்கள் எடுத்துக் கொண்ட நன்முயற்சியின் காரணமாகக் கிடைத்த செய்தியை, நாட்டினுடைய நலன் கருதி, அவையில் எடுத்துச் சொல்லி அதன் மூலம் தெளிவு பெறுவதற்குப் பணியாற்றுகிறார்கள் என்பதை நான் பரிபூரணமாக அறிந்து மதித்து வருகிறேன்.

ஆகவே, சில நேரங்களில் அவையின் உறுப்பினர்கள் சொல்லுகிற செய்தி தவறானது என்றுகூட சொல்லவில்லை—உண்மைக்கு மாறாக இருந்தால்கூட, அதை அடுத்தவர் சுட்டிக்காட்டுகிறபோது திருத்திக்கொள்ளலாம். அந்த நிலையில்தான் 9—2—1982 அன்று சொல்லுகிறபோதுகூட எனக்கே கொஞ்சம் ஐயம் ஏற்பட்டிருந்தாலும்கூட, நான் அதை ஒரு பிரச்சினையாகக் கிளப்பவோ அல்லது அன்று பேசிய எங்கள் கட்சி உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோதும் அதை ஒரு பிரச்சினையாக்கவோ விரும்ப வில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் அவையில் பேசிக் கொண்டிருக்கும்போது, கூடுமான வரை மற்ற உறுப்பினர்கள் அதிகமாகப் பேசாமல் இருப்பது நல்லது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அதற்குப் பின்னால் 15—2—1982 அன்று நான் அவையில் பேசும்போது, அதுபற்றிய விளக்கத்தையெல்லாம் எடுத்துச் சொன்னதும் இந்த அவைக்குத் தெரியும். எனவே நான் மீண்டும் அதைச் சொல்வது தேவையில்லை. அப்போது மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசியதை மட்டும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

" பார்த்தசாரதிக்கு இடம் கிடைக்கவில்லை என்றால் அவர் ஒரு பர்ட்டிகுலர் காலத்தில்—இங்கே காலம் என்றால் அது ஒரு பீரியட் அல்ல, ஒரு டேபுலர் பாரத்தில் மார்க் போடுவதற்குக் காலம் போட்டிருந்தார்கள், அந்தக் காலத்தில்—அதாவது இண்டர்வியூ காலத்தில்—4-க்கு '0' மார்க் வாங்கி யிருக்கிறார். ஹாங்காங் ஆப்பரேஷன் என்றால் என்ன என்று கேட்டிருக் கிறார்கள். அவர் தெரியாது என்று சொல்லியிருக்கிறார். கேட்ட கேள்வி களுக்கெல்லாம் தெரியாது, தெரியாது என்று சொல்லியிருக்கிறார்." மீண்டும் அதைச் சொல்கிறேன், "கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தெரியாது, தெரியாது

என்று சொல்லியிருக்கிறார். அந்த மார்க் கிடைக்காத காரணத்தால் அவருக்கு செலக்ஷன் கிடைக்கவில்லை ". இதைத்தான் அவர் அப்போது குறிப்பிட்டார். இது ஒரு நேரத்தில் சொல்லப்பட்டது.

இன்னொரு நேரத்தில், அதையொட்டி நான் பேசிய பின்னால் அவர் சொன்னதைச் சொல்கிறேன். " நான் ஒரே ஒரு கேள்வியைக் கேட்டார்கள் என்று சொல்லவில்லை" அதாவது அவர் முதலில் சொன்னதை மாற்றி, விளக்கிச் சொன்னதால் நான் அதை ஏற்றுக்கொண்டேன். அதாவது ஒரு கேள்விக்கும் பதில் சொல்லவில்லை என்று அவர் முன்னாலே சொன்னதை நான் தவறாகப் புரிந்து கொண்டுவிட்டேன். இதில் ' ம் ' முக்கியம். எத்தனை கேள்வி கேட்டிருந்தாலும், அவர் ஒரு கேள்விக்கும் பதில் சொல்லவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனவே நான் தவறாகப் புரிந்துகொண்டு, ஒரு கேள்விதான் என்று சொன்னபோது, அமைச்சர் அவர்களின் விளக்கத்தின் அடிப்படையில் நான் என்னைத் திருத்திக் கொண்டேன். அவர் ஒரு கேள்விக்கும் பதில் சொல்லவில்லை என்பது அப்படியே இருக்கிறது. அது உண்மைக்கு மாறாக இருக்குமானால், அது இந்த அவையில் அளிக்கப்பட்ட ஒரு தவறான ஸ்டேட்மெண்ட் ஆகும். அது ஒன்று.

அதற்குப் பிறகு அன்று பேசும்போது, அவர் " ஹாங்காங் ஆப்பரேஷன் என்பது மிகச் சாதாரணமான ஒன்று. வைத்தியக் கல்லூரி மாணவர்கள், பொதுவாகத் தெரிந்திருக்க வேண்டியது. பெய்லி அண்டு லவ் என்ற புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது " என்று சொன்னார். அதையும் நான் குறிப்பிட்டுப் பேசுகிறபோது, பெய்லி அண்டு லவ் என்ற புத்தகத்தையே இங்கே கொண்டு வந்திருந்தேன். அதோடு, ஜட்ஜ்மெண்ட்டில் சொன்னதான " கேம்ப்பெல் " என்ற புத்தகத்தையும் கொண்டு வந்திருந்தேன். அந்த இரண்டு புத்தகங்களையும் காட்டி அதை "நீங்களே" காட்டுங்கள் என்றேன். அதையும் அவர் மறுக்கவில்லை. ஆகவே அவர்கள் 9 ஆம் தேதி சொன்னது என்னவென்றால்—ஒரு கேள்விக்கும் பதில் சொல்லவில்லை, அடுத்தது பெய்லி அண்டு லவ் என்ற புத்தகத்தில் இருக்கிறது. இந்த இரண்டும், அவர்கள் முதலில் தெரிவித்தபோது ஒருவேளை தன்னுடைய இலாக்கா தந்ததையோ அல்லது ஆத்திரத்தோடு ஜட்ஜ்மெண்டைப் படித்ததாலோ சொல்லியிருக்கலாம். ஆனால் மறுபடியும் 6 நாள் கழித்து 15—2—1982 அன்று நான் விளக்கமாக எடுத்துச் சொல்லிய பிறகு, அவர்கள் அதை மறுக்காததால், அவருக்கு ஒரு வாய்ப்பு கிடைத்த பிறகும் திருத்துவதற்கு முன்வராததால்,



அவர் அவையில் சொன்ன செய்தி உண்மைக்கு மாறாக இருக்குமானால், அது அவையின் உரிமை மீறல் செய்தியாகும். அது உண்மைக்கு மாறானதா இல்லையா என்றால், அதைப்பற்றி அபிடவிட்டில் சொல்லப்பட்டிருப்பதைத் தெளிவாகப் படித்துக் காட்டியிருக்கிறேன். அதையேகூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவருக்குக் கிடைத்த வாய்ப்பின்போது " இது பாதிக்கப்பட்ட வாதியாக இருக்கிற பார்த்தசாரதி என்பவர் தன்னுடைய அபிடவிட்டில் சொல்லியிருக்கிறார். ஆகவே, இது ஒரு சார்பில் சொல்லப் பட்டது. அதையே நீங்கள் ஆதாரமாக எடுத்துக்கொள்ளலாமா? " என்று கேட்டார்.

(முற்பகல் 10.20)

அதனாலே அவர்களும் 9 ஆம் தேதி பேசும்போது சொன்னார்கள்.
அதுபற்றி ஜஸ்டிஸ் பத்மநாபன் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். ஆகவே
அவர்கள் ஒருவேளை தெரியாமல் யாரோ சொன்னதைச் சொல்லவில்லை.
அஃபிடவிட்டைப் படித்திருக்கிறார்கள். கவுண்டர்-அஃபிடவிட்டைப் படித்
திருக்கிறார்கள். ஜஸ்டிஸ் பத்மநாபன் சொன்னதைப் படித்திருக்கிறார்கள்.
சுப்ரீம் கோர்ட் சொன்னதைப் படித்திருக்கிறார்கள். எல்லாவற்றையும்
படித்து விட்டுத்தான் சொல்லியிருக்கிறார்கள். தவறாக யாராவது சொன்
னதை நம்பிச் சொன்னதாக இருந்தால், விட்டுவிடலாம். அத்தனையும்
படித்து அறிந்துவிட்டு சொல்லியிருக்கிறார்கள் என்றால், திட்டமிட்டு
அவையின் கருத்தைத் தவறான பாதைக்கு அழைத்துச் செல்லுகிற செயலாக
அமையுமானால், அது ' மிஸ்-காண்டக்ட் ஆஃப் தி மெம்பர் (Misconduct of
the Member). It is a breach of privilege of the House)'
அவர்கள் சொன்னமாதிரி கவுண்டர்அஃபிடவிட்டைப் படித்துப் பார்த்தேன்.
கவுண்டர்-அஃபிடவிட்டில் இரண்டு ரெஸ்பாண்டெண்ட் இருக்கிறார்கள். யார்,
யார் என்று சொன்னால் பார்த்தசாரதி—வாதி. பிரதிவாதிகளில் ஒருவர்
டைரக்டர் ஆஃப் மெடிக்கல் சர்வீசஸ். இரண்டாவது பிரதிவாதி சேர்மென்
ஆஃப் தி கமிட்டி—டாக்டர் சம்பந்தம். மூன்றாவது பிரதிவாதி கமிட்டியில்
இருந்தவர். நான்காவது பிரதிவாதி கமிட்டியில் இருந்த ஆர்த்தோபெடிக்
புரபசர். மற்றவர்கள் கமிட்டியிலே இருந்தவர்கள். இரண்டு முதல்
நான்காவது வரையில் உள்ளவர்கள் கொடுத்திருக்கக்கூடிய கவுண்டர்-அஃபிட
விட்டில் கூட அவர்கள் இதை எப்படி மறைத்திருக்கிறார்கள் என்றால்,
4-வது ரெஸ்பாண்டெண்ட் " என்ன கேள்வி கேட்டார்கள் என்ற நினைவு
இல்லை. இரண்டாவது ரெஸ்பாண்டெண்ட் சொல்வதை அப்படியே ஏற்றுக்
கொள்கிறேன்" என்று அதிலே சொல்லியிருக்கிறார். இரண்டாவது ரெஸ்பாண்

டெண்ட் என்ன சொல்கிறார் என்றால், "ஒரு ஆப்பரேஷன் பற்றி இன்ன புத்தகத்திலே சொல்லியிருக்கிறது—ஆப்பரேடிவ் ஆர்த்தோபேடிக்ஸ் நாலாவது எடிஷன், வால்யூம் நெம்பர் 2, பேஜ் 959-ல் இருந்து 961. (கேம்ப்பெல்)." இதிலே இல்லை. அப்படிச் சொல்லுகிறார். இந்த "ஹாங்காங் ஆப்பரேஷன்" பற்றி அதிலே சொல்லவில்லை. ரெஸ்பாண்டென்ட் 2 சொல்லியிருக்கிறார். அது இன்னுமொரு சார்பிலே சொல்லுவது. அதைப்பற்றிப் பெரிதாகச் சொல்லவில்லை.

நம்முடைய நீதிபதி ஜஸ்டிஸ் பத்மநாபன் சொல்லியிருக்கிறார் என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீதிபதி பத்மநாபன் என்ன சொல்லியிருக்கிறார் என்று பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதைத்தான் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டியது. அவர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். வாதியினுடைய அஃபிடவிட்டை படித்துப் பார்த்துவிட்டு ரெஸ்பாண்டென்டின் அஃபிடவிட்டை படித்துப் பார்த்துவிட்டு, இரண்டு சாரார்களுடைய வழக்கறிஞர்களும் சொல்லுவதைக் கேட்டு கடைசியாகச் சொல்லியிருக்கிறார்.

It was submitted that the petitioner was questioned about Hongkong Operation என்று ஆரம்பித்துச் சொல்லுகிறார். முழுவதையும் நான் வாசிக்கவில்லை. "ஹாங்காங் ஆப்பரேஷன்" அவையை ரொம்பவும் பாதித்துவிடக் கூடாது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** ஆப்பரேஷன் இல்லாமல் கோவாப்பரேஷன் கொடுக்க வேண்டும்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** He gave an answer that the said operation was in an experi-mental stage in India என்று சொல்லிவிட்டு கடைசியாக அவர் சொல்கிறார் . . . பெரும் பகுதியை விட்டிருக்கிறேன். அவை ஏன் இப்படி மாட்டிக்கொண்டோம் என்று நினைக்கக் கூடாது என்பதற்காக. அவர் கிளியராகச் சொல்கிறார். ஜட்ஜ்மெண்டில் ஜட்ஜ் சொல்லுவது,

"However, one thing is clear— —ஒரு காரியம் தெளிவாகத் தெரிகிறது— and not dispute— —யாரும் அதை மறுக்கவில்லை.



that Hongkong Operation is only in an experimental stage in India and it has been done only in some cases in the General Hospital, Madras." என்று அவருடைய தீர்ப்பில் சொல்லியிருக்கிறார். சுப்ரீம் கோர்ட்டில் அதைப்பற்றிச் சொல்லவில்லை.

சுப்ரீம் கோர்ட்டில் மார்க் போட்டது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மென்ட்டில் மார்க் போட்டது பற்றிச் சொல்லும்போது, "சைபர் வாங்கியிருக்கிறார் என்றால், அமைச்சர் அவர்களின் மருமகனாக இருந்திருந்தால், ஐந்துக்கு ஐந்து வாங்கியிருப்பார், இல்லாவிட்டால் சைபர் தான் வாங்கியிருப்பார்"—ஜட்ஜ்மெண்ட் சொல்லுவதற்கு முன்பு நீதிபதியினுடைய ஆப்சர்வேஷனில் அப்படிச் சொல்லுகிறார். இந்த இரண்டையும் எடுத்துச் சொல்லுகிறபோது, இரண்டாவது நாள் நான் பேசும்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முதலிலே சொன்னது "பெய்லி அண்டு லவ்" என்ற புத்தகத்தில் இருக்கிறது என்பதை மறுக்கவில்லை. வேண்டுமானால் கூட ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். "பேசிக் சையன்ஸ்" என்ற சாதாரண புத்தகத்திலே இருக்கிறது என்று சொன்னார்கள். ஒரு வேளை "ஆடம்ஸ்" போன்ற சாதாரண புத்தகங்களில் "ஆப்பரேஷன் பிரின்ஸ்பிள்ஸ்" பற்றி ரெஃபர் பண்ணியிருக்கலாம். "ஸ்டெப் பை ஸ்டெப்" பற்றி ஓர் இடத்திலும் சொல்லவில்லை. எதற்காகச் சொல்கிறேன் என்றால், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தலைசிறந்த மருத்துவர். நீண்ட நாள் அனுபவம் உடையவர். நீண்ட நாள் பாராளுமன்ற அனுபவம் உள்ளவர். எதிர் வரிசையிலும், ஆளும் வரிசையிலும் இருந்து இரண்டு சார்பிலும் நிலைநாட்டி புகழ் கொடி பரப்பியவர். நீதிமன்றத்தின் தீர்ப்பைப் படித்து, புத்தகத்தைப் படித்துச் சொல்லியிருக்கிறார். தெரியாமல் சொன்னதாகக் கருதவில்லை. தெரிந்து சொன்னதாகக் கருதுகிறேன். தெரிந்து சொல்வதால் 'மிஸ்காண்டக்ட் ஆஃப் தி மெம்பர்'. அதை நாம் எப்படித் தெரிந்துகொள்கிறோம்? அவையினுடைய விதிகளில் எது எது 'பிரிவிலெஜ்' என்று வைத்திருக்கிறோம். அப்படி வைக்காத நேரத்தில் இந்திய பாராளுமன்றத்தின் நடைமுறைகளைப் பின்பற்றுகிறோம். இந்திய பாராளுமன்றமும் வரையறை செய்யாத காலத்திலே, நாம் இங்கிலாந்து பாராளுமன்றத்தின் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

[திரு. ம. சங்கரலிங்கம்]

எர்ஸ்கின் மேஸ் 'பார்லியமெண்டரி பிராக்டீஸ்' மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. பக்கம் 142-ல் அவர்கள் குறிப்பிட்டிருப்பதன் தமிழ் மொழி பெயர்ப்பைச் சொல்லுகிறேன்.

"இரு அவைகளின் உறுப்பினர்கள் அல்லது அதிகாரிகள் வேண்டுமென்றே அவைக்குத் தவறான செய்திகளை தந்து திசை திருப்புவது அவையின் உரிமை மீறலாகும்."

இப்படி மேஸ் 'பார்லிமெண்டரி பிராக்டிஸ்' சொல்லுகிறது.

"The House may treat the making of a deliberately misleading statement as a contempt.'

என்று சொல்லிவிட்டு அடுத்த பக்கத்தில்

"In 1963 the House resolved that in making a personal statement which contained words which he later admitted not to be true, a former Member had been guilty of a grave contempt (Profumo's case) C.J. (1962-63, 246).

என்று சொல்லியிருக்கிறார். அதாவது

"முன்னாலே உறுப்பினர் தான் அவையில் தன்னிலை விளக்கமாகத் தந்த சொற்கள் உண்மை இல்லை என்று பின்னால் ஒத்துக்கொண்டால், அவை மிகப் கபரிய அவை மீறலாகக் கருதி குற்றம் என முடிவு செய்தது" என்று சொல்லியிருக்கிறார். இது மேஸ் 'பார்லியமெண்டரி பிராக்டிஸ்' என்று புத்தகத்தில் பக்கம் 142, எடிஷன் 19-ல் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொண்டு நாம் இப்போது அதிகமாகப் பின்பற்றிக் கொண்டிருக்கக் கூடிய இந்திய பாராளுமன்ற நடைமுறை விதிகளைப் பார்க்கும்போது அதிலேயும் சொல்லியிருக்கிறார்கள்.

Practice and Procedure of Parliament by M. N. Kaul and S. L. Shakdher

என்ற புத்தகத்தில் பக்கம் 234-ல் சொல்லியிருக்கிறார்கள். நாம் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்று. அதிலே, "அவையில் தவறான தகவலைத் தருவது அவை மீறலாகாது. பிறகு திருத்திக்கொள்ளலாம்" என்று சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதை வாங்கிப் படிக்க வேண்டும். "அமைச்சர்கள் எல்லாம் தினசரி தவறான ஸ்டேட்மெண்டைத்தான் தருகிறார்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : அது பாராளுமன்றத்தைப் பற்றிக் கூட இருக்கலாம்.



திரு. ம. சங்கரலிங்கம் : பாராளுமன்றத்தைப் பற்றித்தான் சொல்லியிருக்கிறார்கள். இங்கு உள்ளதை நான் சொல்லவில்லை.

"If any statement is made on the floor of the House by member or Minister which another Member believes to be untrue, incomplete or incorrect, it does not constitute a breach of privilege. If an incorrect statement is made, there are other remedies by which the issue can be decided. In order to constitute a breach of privilege or contempt of the House, it has to be proved that the statement was not only wrong or misleading but it was made deliberately to mislead the House."

Practice and Procedure of Parliament by M. N. Kaul and S. L. Shakdher

இதுதான். திட்டமிட்டு தவறு சொன்னால், ஹவுசை மிஸ்லீட் பண்ண வேண்டுமென்று நினைத்துச் சொன்னால் அது "பிரீச் ஆஃப் பிரிவிலேஜ்".

A breach of privilege can arise only when the member or the Minister makes a false statement or an incorrect statement wilfully, deliberately and knowingly.

(முற்பகல் 10.30)

தினசரி அப்படித்தான் சொல்கிறார்கள். பேசுகின்ற வேகத்தில் இதைச் சொல்கிறேன். அவர்களுக்கு விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதி முறைகளின் கீழ் ஒரு ஸ்டேட்மெண்ட் வைத்து மாற்றிக்கொள்ளலாம்.

"Incorrect statement made by a Minister cannot make any basis for a breach of privilege".

'Wilfully, deliberately, knowingly' என்றால் தான் breach of privilege.

'பிரீச் ஆஃப் பிரிவிலேஜ்' என்பதைப்பற்றி 10—3—1964ல் லோக் சபா டிபேட்டில் சிசி. 4044லும், 18—4—1966 புரோசீடிங்ஸிலும், 2—12—1974 புரோசீடிங்ஸ்-லும் தெளிவாக நிலைநாட்டியிருக்கிறார்கள். இதன் அடிப்படையிலே பார்த்தால், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் 9—2—1982லே சொன்னது ஒருவேளை அவர் நம்பியதை அப்படியே சொல்லியிருக்கலாம். 15—2—1982-ல் நான் பேசுகிறபோது, நான் அதைச் சொல்லி விளக்கிச் சொன்ன பிறகும், ஒரு கேள்விக்கும் பதில் சொல்லவில்லை என்று சொன்னார்கள். இப்போது நான் அந்தக் கேள்விகளை திரும்பப் படிக்கவில்லை. முன்பே படித்துக் காட்டியாகிவிட்டது. ஒரு கேள்

விக்கும் சரியான பதில் சொல்லவில்லை என்பது தவறு. ஜஸ்டிஸ் பத்மநாபன் அப்படி ஒத்துக்கொண்டிருக்கிறார் என்று சொல்வது தவறு. "பெய்லி & லவ்" என்ற புத்தகத்திலே இருப்பதாகச் சொன்னது தவறு. அதையெல்லாம் திருப்பிச் சொன்னபோது, 15—2—1982-லே, சொன்னதை, அமைச்சர் மறுத்துக்கொள்ளவோ அல்லது அது அவர் நம்பிச் சொன்னது என்ற அளவில் திருத்திக்கொள்ளவோ வேண்டுமென்று சொல்கிறேன். அது அவையினுடைய கருத்தை தவறான பாதையில், தெரிந்தே திட்டமிட்டு, அமைச்சர் அவர்கள் கொண்டுபோனார்கள் என்று சொல்வதற்கு, நம்புவதற்கு முழு ஆதாரங்கள் இருக்கின்றன என்று நான் நம்புகிறேன். அப்படி இருந்தால், இந்த அவையை ஒருவர் தவறான திசையிலே திருப்பினால், இந்த அவையினுடைய செயல் சரியாக நடைபெற முடியாத நிலையில் இது அவையின் உரிமை மீறிய பிரச்சினை என்று, தலைவர் அவர்களே, உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அதை சட்ட ரீதியாகவும் ஆதார ரீதியாகவும் ஆராய வேண்டும். இந்த அவை அதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலிலேயே நான் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். ஏனென்றால், பல உண்மைகளை இதன் மூலம் இந்த அவைக்குத் தெரிவிப்பதற்கு ஒரு அருமையான வாய்ப்பை என் மீது அன்பும், பாசமும் உள்ள காரணத்தால் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். அதற்கு நான் முதற்கண் நன்றி சொல்லிக் கொள்கிறேன். 9—2—1982 அன்று நான் பேசிய நேரத்தில், என்னென்ன குறிப்பிட்டிருக்கிறேன் என்று சொன்னார்கள். நான் முதலிலே அவர் கொடுத்திருக்கின்ற உரிமைப் பிரச்சினையைப் படித்துக்காட்டுகிறேன். "திரு. பார்த்தசாரதி என்பவரிடம் நேர்முகத் தேர்வில் ஹாங்காங் ஆப்பரேஷன் பற்றி கேட்கப்பட்டது". அவர் எழுதியிருக்கிறார்கள். "அதற்கு சரியாகப் பதில் சொல்லவில்லை" என்று நான் சொன்னதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 'ஒரு கேள்விதான் கேட்கப்பட்டது' என்று சொன்னதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுதான் முக்கியமாக இருக்கிறது. 'ஒரு' என்று இப்போது அவர் உரிமை மீறல் பிரச்சினையாக எழுதிக் கொடுத்திருக்கக்கூடிய அந்தப் பேப்பரிலே இருக்கிறது. ஒரு கேள்விதான் கேட்கப்பட்டது என்று நான் சொன்னதாக எழுதியிருக்கிறார்கள். அது முக்கியமான விஷயம். இரண்டாவதாக 'கேம்பல் ஆப்பரேடிவ் ஆர்தோபெடிக்ஸ்' என்ற புத்தகத்திலும் பெய்லி & லவ் என்ற புத்தகத்திலும் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றால், அது உண்மைக்கு மாறான செய்தி என்றும், அப்படி அதில் கொடுக்கப்படவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதுதான் அவருடைய கருத்து. இதை நான் இங்கே மீண்டும் வலியுறுத்துகிறேன். அவர் என் மீது சொல்லியிருக்கின்ற குற்றங்கள் இரண்டு. ஒன்று 'ஒரு கேள்விதான் கேட்டிருக்கிறார்கள்' என்று சொன்னதாகச் சொல்லியிருக்கிறார்கள். இரண்டாவது, பெய்லி & லவ் புத்தகத்திலேயும் கேம்பல் புத்தகத்திலும் இருக்கிறது என்று நான் சொல்லியிருக்கிறேன். ஆனால் அப்படி இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி நான் இங்கே பதில் சொல்லவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 9—2—1982 அன்று நான் பேசிய நேரத்தில், "ஒரு கமிட்டி அமைக்கிறோம். அதாவது ஒரு கமிட்டி அமைக்கிறோம் என்றால், அந்தக் கமிட்டிதான் மாணவர்களைக் கேள்வி கேட்டு, அதற்கு மார்க் போட வேண்டுமே தவிர, அரசாங்கம் அல்ல." என்று சொல்லியிருக்கிறேன். இது நான் பேசிய பேச்சு. நான் இப்போது குறிப்புகளை வைத்துக் கொண்டு பேசுகிறேன். அவர் கடிதத்தில் எழுதியிருக்கிறார். "ஒரு கேள்விக்கும்"—மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் சொன்னதை, அன்றைக்கு அவர் சொன்னதை ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறார்கள். அவர் கடிதத்திலே 'ஒரு கேள்விதான். அவர் ஒரு கேள்விக்கும் பதில் செல்லவில்லை' என்று சொன்னதாக அவர் பேச்சிலே சொல்கிறார். ஹாங்காங் ஆப்பரேஷன் பற்றி கேட்டார்கள். அதற்குப் பதில் எதுமில்லை என்று சொன்னதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

15—2—1982-ல் நான் பேசிய நேரத்தில் ஒரு பார்டிகுலர் கேள்வியை "ஹாங்காங் ஆப்பரேஷன் என்றால் என்ன" என்று கேட்டிருக்கிறார்கள் என்று சொல்லேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசியபோது, நான் குறுக்கிட்டுப் பேசியபோது சொன்னேன். "ஹாங்காங் ஆப்பரேஷன் என்றால் என்ன என்று கேட்டிருக்கிறார்கள். அவர் தெரியாது, தெரியாது என்று சொல்லியிருக்கிறார்கள்" என்று சொல்லியிருக்கிறேன். 'கேட்ட கேள்விகளுக்கு'—நான் மீண்டும் ஊர்ஜிதப்படுத்துகிறேன்—மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னதைச் சொல்கிறேன். 'ஒரு கேள்வி அல்ல'. "கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் தெரியாது, தெரியாது என்று சொல்லியிருக்கிறார்கள்" என்று சொன்னேன். அதற்குப் பிறகு நான் இங்கே பேசியிருக்கிறேன். இரண்டாவது நாள் நான் 15—2—1982-ல் தொடர்ந்து பேசிய நான் 'ஒரே ஒரு கேள்வி கேட்டார்கள்' என்று சொல்லவில்லை. இந்த அவையிலேயே சொல்லியிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட கொஸ்ட்டியனுக்கு பதில் சொல்லவில்லை என்று சொன்னேன். அது இருக்கிறது. "ஹாங்காங் ஆப்பரேஷன் என்பது ஒரு சிம்பிள் கொஸ்ட்டின். ஒரு பார்டிகுலர் கொஸ்ட்டின். ஒரு சிம்பிள் கொஸ்ட்டியனுக்குப் பதில் சொல்லவில்லை"

என்றுதான் சொன்னேன். ஹாங்காங் ஆப்பரேஷன் என்பது ஒரு சிம்பிள் கொஸ்ட்டியனா அல்லது காம்பிளிகேட்டட் கொஸ்ட்டியனா என்று முடிவு செய்யவேண்டியது எக்ஸ்பர்ட்ஸ். "அது ஒரு சிம்பிள் கொஸ்ட்டியன். சாதாரண புத்தகங்களிலேகூட அது தெளிவாக இருக்கிறது", என்று சொல்லியிருக்கிறேன். நான் இப்போது மிகத்தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். "சாதாரண புத்தகங்களில் இருக்கிறதா?" என்று கேள்வியாகக் கேட்கக்கூடும். சாதாரண புத்தகம் என்றால் என்ன? சொல்கிறேன். இங்கே ஒரு எம்.பி.பி.எஸ். மாணவர் படிக்கக்கூடியதுதான். அது சாதாரண புத்தகம். பெயர் கூட சொல்கிறேன். 'அவுட்லைன்ஸ் ஆஃ ஆர்தோபெடிக்ஸ்'. பெரிய ஆர்தோபெடிக்ஸ் அல்ல விரிவான ஆர்தோபெடிக்ஸ் அல்ல. "அவுட்லைன்ஸ் ஆஃப் ஆர்தோபெடிக்ஸ்." அவ்வளவுதான். நான் அதிலே எங்கே இருக்கிறது என்று சொல்கிறேன். அதிலே 184 வது பக்கத்திலே தெளிவாக இருக்கிறது.

"The alternative management is by radical operation as recommended by Hodgson and Stock of Hongkong (1960)"

அங்கே இரண்டு டாக்டர்கள் இருந்தார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் அமெரிக்கரோ, இங்கிலீஷ்காரரோ தெரியாது. 1960 ஆம் ஆண்டு அந்த ஆப்பரேஷன் அங்கே பண்ணியிருக்கிறார்கள். அதுபற்றி முழு விவரங்களை நான் இங்கே கொடுக்கவில்லை. அது பல ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பித்துச் செய்யப்பட்டிருக்கிறது. 1960 ஆம் ஆண்டு ஹாங்காங் என்ற இடத்திலே இருந்த டாக்டர்கள் அதைக் கண்டுபிடித்தார்கள் என்று சொன்னார்கள் அதற்கு அவருடைய பெயரைச் சூட்டினார்கள் என்ற கருத்து இருக்கிறது. முதுகெலும்பில் வெர்ட்டிப்ரா என்று இருக்கிறது. ஒரு வெர்ட்டிப்ரா டியூபர்குளோசிஸ்-ஆல் பாதிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அந்த ஹாங்காங் ஆப்பரேஷனைப் பற்றி அந்தப் புத்தகத்திலே இருப்பதை வாசித்துக்காட்ட வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** நான் சொல்கிறேன். உங்களுக்குச் சந்தேகம் இல்லாமல் சொல்கிறேன். உங்களுக்கும் தெரிந்துகொள்ள வசதியாக இருக்கும். ஹாங்காங் ஆப்பரேஷன் என்று சொன்னார்கள். அதில் ஒரு காம்ப்ளிகேஷனும் கிடையாது. முதுகெலும்பிலே ஒரு பஸ் ஆகிவிடும். அதாவது நமக்கு ஸ்பைனல் கார்ட் என்று இருக்கிறது. அதிலே, முதுகெலும்பிலே வெர்ட்டிப்ரா என்று இருக்கிறது. முதுகெலும்பிலே உள்ள வெர்ட்டிப்ராவில் பஸ் வந்துவிடும். அதை எடுக்க வேண்டும். அதை எடுத்தால், ஒரு முதுகெலும்பிற்கும் இன்னொரு முதுகெலும்பிற்கும் இடையிலே இருக்கக்கூடிய வெர்ட்டிப்ரா இல்லாமல் போய்விடும். ஆகவே 'கைபோஸிஸ்' என்று வந்துவிடும். பிறகு 3வது வெர்ட்டிப்ராவை அந்த இரண்டுக்கும்



இடையிலே கொடுத்து ஒரு 'புராப்' கொடுக்க வேண்டும். இடையிலே ஒரு முதுகெலும்பு கொடுக்க வேண்டும். அதற்காக ஒரு ரிப்-ஐ 'கட்' செய்து 'புராப்' கொடுக்கிறார்கள். அவ்வளவுதான்

'radical operation as recommended by Hodgson and Stock of Hongkong'

என்று தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் இப்போது ஒரு கிளாரிபிகேஷ பின்னால் பேசுவது மரபில்லை என்பதால், னாகக் கேட்கிறேன். ஆப்பரேஷனுக்கு இடத்தின் பெயரை வைத்ததில்லை. கல்கத்தாவிலே ஒரு டாக்டர் ஆப்பரேஷன் என்றால் மித்ரா என்று இருக்கும் அல்லது அந்த ஆப்பரேஷன் கருவியை நம்முடைய ஹார்ட்டிலே அல்லது லங்ஸ்-லே எடுத்து அந்த உறுப்புக்குப் பெயர் வைப்பார்கள். காஸ்ட்ரோ நிமோனியா ஆப்பரேஷன் என்று சொல்வார்கள். டாக்டர்கள் பெயரை உறுப்புப் பெயரை வைப்பார்கள். அந்த இரண்டு பேரும் ஹாங்காங்-ல் ஆப்ப ரேஷனைச் செய்திருக்கிறார்கள். அது ஹாங்காங் ஆப்பரேஷன் அல்ல. அப்படி ஹாங்காங் ஆப்பரேஷன் என்று ஒரு பெயர் இருக்கும் என்றால், இந்த முன்னறிவிப்பை நான் வாபஸ் பெறுகிறேன். அதைப்பற்றி வாசித்துக் காட்டினால் நான் வாபஸ் வாங்குகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** உறுப்பினர் அவர்கள் பேச்சிலேயே அது வருகிறது. அதை எப்படி வைப்பது என்பதைப்பற்றி வருகிறது. அது நம்முடைய கையிலே இல்லை. எப்படி வேண்டுமானாலும் வைக்கலாம். 'யெல்லோ ஃபீவர்' என்று சொல்கிறார்கள். இன்னொரு பீவருக்கு கண்டு பிடித்தவர் பெயரை வைக்கிறார்கள். அதனாலேதான் நம் கையிலே இல்லை என்று சொன்னேன். நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேச்சுக்கு வருகிறேன். அவர்கள் பேச்சிலே 'ஹாங்காங் ஆப்பரேஷன்' என்று சொல்லியிருக்கிறார்கள்.

(திரு. ம. சங்கரலிங்கம் எழுந்தார்.)

அங்கத்தினர் அவர்கள் பேசும்போது, நான் கொஞ்சங்கூட 'இன்டரெப்ட்' பண்ணவில்லை. என் பேச்சின் தொடர்பு எனக்கு விட்டுப்போகும். இந்த 'ஹாங்காங் ஆப்பரேஷன்' ஜெனரல் ஆஸ்பத்திரியில்கூட நடந்திருக்கிறது. அதைப்பற்றியெல்லாம் நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் ரொம்ப சந்தோஷப்பட்டேன். ஆகவே இங்கே

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1982 பிப்ரவரி 20

(முற்பகல் 10-40)

தெளிவாக இருக்கிறது. ஹாங்காங் ஆப்பரேஷன் என்பதை ஜெனரல் ஆஸ்பத்திரியில் நிறையச் செய்திருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவரவர்களே படித்துக் காட்டினார்கள்.

'Like a lawyer he read about the Hongkong Operation. My compliments are due to him for reading it so effectively. "The affected part of the spinal column is approached anteriorly and the diseased bone is excised. Thereafter the gap is bridged by bone grafts. Adjuvant Chemotherapy is given. By this method the duration of treatment is shortened and kyphosis may often be prevented or corrected.'

இது சிம்பிள். பல பேருக்குத் தெரியும். பல பேர்களிடம் கேட்டிருக்கிறேன். எல்லோரும் சொகிறார்கள். உண்மையைத் தெரிந்து கொள்ளச் சொல்கிறேன். இங்கே தெளிவாக இருக்கிறது. ஹாங்காங் ஆப்பரேஷன் என்று பெயர் வைப்பதற்கு நமக்கு உரிமையில்லை. திரு. சங்கரலிங்கத்திற்கும் கிடையாது. ஹண்டேக்கும் கிடையாது. 'ஹேமில்டன் பிரிட்ஜ் என்பது சில காலங்களுக்குப் பிறகு 'அம்பட்டன் பிரிட்ஜ்' என்றானதைப் பார்க்கிறேன். "சிம்பிள்' அவுட்லைன்ஸ் ஆஃப் ஆர்த்தோபடிக் சர்ஜரி' என்பதில் மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஆங்காங்கு ஆப்பரேஷன் செய்வதால் " ஆங்காங் ஆப்பரேஷன் ".

திரு. ம. சங்கரலிங்கம் : நான் பேசுகிறபோது ஆங்காங் ஆப்பரேஷன் என்று சொன்னேன் என்பதல்ல. அதற்கு பதில்தான் சொன்னேன். எந்தப் புத்தகத்திலேயும் 'டன் பை சோ & சோ அட் ஆங்காங்' என்று வந்திருக்கிறதே தவிர, ஆங்காங் ஆப்பரேஷன் என்று ஒரு மருத்துவப் புத்தகத்திலேயும் இல்லை.

மாண்புமிகு டாக்டர் எச். வீ ஹண்டே There is now an improvement am very glad. If it is not an improvement, thank you. இப்போது சொன்ன மாதிரி, எம்.பி.பி.எஸ். புத்தகத்தில் இருக்கிறது. தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறேன். எடுத்துக்காட்டாகக் கூற விரும்புகிறேன். அதிலே, இதிலே 'காஸ்ட்ரடிக்ஷன்' என்னவென்றால், அன்று பேசிய எதிர்க்



1982 பிப்ரவரி 20] [டாக்டர் எச். வி. ஹண்டே]

கட்சித் தலைவரவர்கள், 'பெய்லி & லவ்' புத்தகத்தில் இருக்கிறதென்று பேசியிருக்கிறார்கள். அவர் பேசியிருக்கிறார். குறிப்பிலே இருக்கிறது. ஆனால் நோட்டீஸ்லே 'இல்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். அதை மார்க் செய்திருக்கிறேன். பெய்லி & லவ்-ல் இருக்கிறதென்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய பேச்சிலே சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ம. சங்கரலிங்கம் : இருக்கிறதென்று நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த இரண்டு புத்தகங்களையும் கொண்டு வந்திருக்கிறேன். 'எங்கேயிருக்கிறதென்று எடுத்துக் காட்டுங்கள்' என்று நான் 15 ஆம் தேதி சொன்னேன். இப்போது 20 ஆம் தேதி பேசிக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அதற்கு வருகிறேன். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசும்போது நான் குறுக்கிடவில்லை. அமைதியாக உட்கார்ந்திருந்தேன். எதையும் தாங்கும் இதயமாக மாற்றிக்கொள்ள வேண்டும். பூரா படித்துவிடுகிறேன் இதிலே எந்தவிதக் குழப்பமும் இல்லை. அன்று பேசிய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் 'பெய்லி & லவ் புத்தகத்தில் இருக்கிறது; கேம்பெல் புத்தகத்தில் இருக்கிறது ,ஆங்காங் ஆப்பரேஷன் ஸ்டெப்பை ஸ்டெப்பாகச் சொல்லவில்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். அவர் சொன்னதைச் சொல்கிறேன். எதையும் கரெக்ஷன் செய்யவில்லை, டிஸ்பியூட் செய்யவில்லை. மீண்டும் படிக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்னதைப் படிக்கிறேன். அன்று பேசிய எதிர்க்கட்சித் தலைவரவர்கள், "பெய்லி & லவ் புத்தகத்தில் இருக்கிறது—அது ரைட்; கேம்பெல் புத்தகத்தில் இருக்கிறது—அது ரைட்; ஆங்காங் ஆப்பரேஷன் பற்றி ஸ்டெப் பை ஸ்டெப் ஆகச் சொல்லவில்லை' wong ஸ்டெப் பை ஸ்டெப் இருக்கிறது. கேம்பெல் ஆபபரேடிவ் ஆர்தொபெடிக்ஸ்—வால்யூம் 2—அவர் வால்யூம் 1 பார்த்திருக்க வேண்டும். அவர்கள் சொல்லியிருந்தால் ஹெல்ப் பண்ணியிருப்பேன். 2095 வது பக்கம் :.

Campbell's Operative Orthopaedics Vol. 2, P. 2095

திரு. ம. சங்கரலிங்கம் : எந்த எடிஷன், என்ன பக்கம் என்று சொன்னால், வசதியாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : வால்யூம் 2. புத்தகத்தையே அவர்களுக்குக் கொடுக்கிறேன். I will also explain to him *in camera*

கற்றது கை மண்ணளவு, கல்லாதது உலகளவு. நிறைய கற்க **வேண்டும்.**

Hodgson et all ........ et all என்றால் 'and others'

Hodgson et all in Hongkong have had monumental experience in the operative treatment of tuberculosis of the spine. In 1960 (now we are in 1982) they reported a series of 412 patients treated by radical removal of the diseased area and anterior spinal arthrodesis. Their technique entails a more extensive excision of bone ... Technique—step by step—with 8 pictures—is given.

எட்டு படங்கள் போட்டிருக்கிறார்கள். பூரா படிக்கவில்லை. அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று 'ஸ்டெப் பை ஸ்டெப்' போட்டிருக்கிறார்கள்.

Approach the mid of vertebra usually from the left side, select the rib that in the side axillary line lies opposite to maximum convecity of the kyphosis.

படம் எல்லாம் போட்டு, 6 பக்கங்கள் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். மாணவர்களுக்கு அழகாகக் கற்றுக் கொடுக்கலாம். அழகாக இருக்கிறது. தெளிவாக இருக்கிறது. இதைப் படித்து நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களுடன் உட்கார்ந்து விரிவாகப் பேசத் தயாராக இருக்கிறேன்.

நான் கேம்பெல் பற்றிப் பேசவில்லை. பெரிய உதவி செய்திருக்கிறார். ஆங்காங் ஆப்பரேஷன் பற்றி 'ஸ்டெப் பை ஸ்டெப்' இருக்கிறது. பெய்லி & லவ் புத்தகத்தில் என்ன சொல்கிறார்கள் என்றால்—சாதாரண எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் படிக்கக்கூடியது—அதிலே மிகத் தெளிவாக இருக்கிறது. அதில் ஆங்காங் என்று எழுதவில்லை. அது எல்லோருக்கும் தெரியும். அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. அவருக்கு யாராவது அப்படிச் சொல்லுவார்கள் என்று தெரிந்துதான் முன்கூட்டியே சொன்னேன். இது பழைய புத்தகம். இதைப் படிக்காதவர்களே கிடையாது.

"Bailey & Love (which is a fundamental book on Surgery) page 220 : '*Should pus formation have occurred, the abscess requires evacuation through an anteriolateral* approach. At the same time, as the abscess is evacuated bone grafts are packed between the involved vertebyal bodies so that healing results in anterior body to body fusion."



எதிர்க் கட்சித் தலைவரவர்கள் படித்தார். நான்கூட ஆச்சரியப்பட்டேன். அது பெய்லி & லவ்-ல் மிகத் தெளிவாக இருக்கிறது. 'ஸ்டெப் பை ஸ்டெப்' ஆக இருக்கிறது. எக்ஸ்பிரிமெண்ட்டல் ஸ்டேஜில் இல்லை. பிரின்சிபிள் தவிர வேறு ஒன்றுமில்லை என்று பேசினார்கள். மேலும் இதில் ஒரேயொரு கேள்விதான் கேட்கப்பட்டதா, நீதிபதியின் தீர்ப்பிற்குப் பிறகு அமைச்சரவர்கள்—மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேச்சைச் சொல்கிறேன்—நீதிபதி தீர்ப்புக்குப் பிறகு ஒரு கேள்விதான் கேட்கப்பட்டதென்று சொல்லுவது உரிமைப் பிரச்சினையாகிறது; அவர் 'நான் சொல்லியபிறகும், ஒரே கேள்விதான் கேட்கப்பட்டதென்று சொல்கிறார்கள். அதன்படி உரிமைப் பிரச்சினை கொடுக்கிறேன்' என்று அப்போது பேசினார்கள். அன்று மீண்டும் நான் பேசியபோது, எந்த நேரத்திலும் ஒரு கேள்விதான் கேட்கப்பட்டதென்று சொல்லவில்லை, அந்தக் கேள்வி கேட்கப்பட்டதென்று சொன்னேன் என்று நான் குறிப்பிட்டேன். அவருடைய பேச்சிலே 'ம்' என்று சேர்த்து ஒத்துக் கொண்டிருக்கிறார். அதற்காக நன்றி. என் மீதுள்ள உரிமைப் பிரச்சினையில், முதலிலே பார்த்தசாரதியிடம் நேர்முகத் தேர்வில் ஆங்காங் ஆப்பரேஷன் பற்றி கேட்கப்பட்டது, அதற்கு சரியாக பதில் சொல்லவில்லை; ஒரு கேள்விதான் கேட்கப்பட்டதென்று நான் பேசியதாக உள்ளது.

(முற்பகல் 10-50)

9—2—1982 அன்றும் 15—2—1982 அன்றும் நான் பேசியபோது, எந்த இடத்திலும் 'ஒரு கேள்விதான் கேட்கப்பட்டது' என்று சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 15—2—1982 அன்றும் இதைத்தான் தெரிவித்திருக்கிறேன். முதலில் நான் அவர் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லவில்லை என்றுதான் சொன்னேன். இதிலிருந்து ஒன்று தெளிவாகிறது. பல கேள்விகள் கேட்கப்பட்டன. அவர் ஒன்றுக்கும் பதில் சொல்லவில்லை என்று தானே அர்த்தம். நான் பேசியது அவைக் குறிப்பில் இருக்கிறது. அடுத்து Campbell Operative Orthopaedics, Bailey & Love என்ற இரண்டு புத்தகங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டார். இது உண்மைக்கு மாறான செய்தியாக உள்ளது. அவர் 15—2—1982 அன்று பேசிய குறிப்பில் Campbell Operative Orthopaedics என்ற புத்தகத்தில் இருக்கிறது என்றும் Baily and lo என்ற புத்தகத்தில் இருக்கிறது என்றும் சொன்னார். அதைக் கொண்டு வந்திருக்கிறேன் என்றும் சொன்னார். ஆனால் 'ஸ்டெப் பை ஸ்டெப்' இல்லையென்று சொன்னார். நான் பெய்லி அண்ட் லவ் என்ற புத்தகத்தில் இதைப்பற்றி எழுதியிருக்கிறார்

கள் என்றுதான் சொன்னேன் Campbell Operative Orthopaedics என்ற புத்தகத்தில்தான் இருக்கிறது என்று 15—2—1982 அன்று எதிர்க்கட்சித் தலைவரும் சொன்னார். அவரும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஆனால் அதற்குப் பிறகு இது உண்மைக்கு மாறானது என்று உரிமைப் பிரச்சினை கொண்டு வருவது சரியல்ல.

Step by step பற்றி நேர்முகத் தேர்வில் கேள்வி வந்தது. அது Dr. Parthasarathi *vs.* Selection Committee -ல் வந்திருக்கிறது. அந்தக் கேள்வி இந்த அவையில் எழுப்பப்பட்டதல்ல. பார்த்தசாரதி தன்னுடைய அபிடாவிட்டில் எழுதியிருந்ததை இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் படித்தார்கள். ஆனால் தேர்வுக் குழுத் தலைவர் தன்னுடைய கவுன்டர் அபிடாவிட்டில் சொல்லியிருப்பது தான் மிகவும் முக்கியமானது. I want the hon. Members to give attention to this.... அப்போது மறுக்கவும் எனக்கு வாய்ப்பு இல்லை, பேசவும் வாய்ப்பு இல்லை. ஆகவே தான் "நான் மாட்டிக் கொண்டேன்" என்றெல்லாம் என்னைப்பற்றி பத்திரிகையில் போட்டிருந்தார்கள். கவுன்டர் அபிடாவிட்டில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை இங்கு குறிப்பிடுகிறேன்

"Counter affidavit by Dr. Sambandam:

I can distinctly recollect that he had stated in reply to the first question by Dr. Basheer Ahamed, 'I do not know.' His answers were not at all satisfactory and hence he was not considered to be a suitable candidate. The respondent does not admit the correctness of the questions and answers as stated in the affidavit of the petitioner. The answers said to have been given by the petitioner as contained in the affidavit were not the same, as given at the interview".

என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு இன்னொரு பொதுவான கேள்வியை நான் கேட்கிறேன். இங்கு ஆசிரியர் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். ஒரு மாணவனிடம் ஒரு ஆசிரியர் கேள்வி கேட்கிறார். அதற்கு அந்த மாணவன் ஒரு பதில் சொல்கிறான். அப்படிச் சொல்லிவிட்டு வெளியே வந்து, மாற்றிச் சொன்னால் எப்படி இருக்கும்? யாருடைய மனதையும் புண்படுத்த வேண்டுமென்று நான் இதைச் சொல்லவில்லை. மாணவன் கோர்ட்டில் போய் சொல்கிறான். சட்டமன்ற உறுப்பினர்களிடத்தில் சொல்கிறான். நான் அது குறித்த உண்மை நிலையைக் குறிப்பிடுகிறேன். இந்தக் கருத்து பற்றி நீ மன்றம் ஒன்றும் சொல்லவில்லை.





"However, it is unnecessary for me to pursue the contention of the petitioner in view of the conclusion reached by me that respondents 5 to 7 were not qualified".

அதற்குப் பிறகு இந்த இடம் தான் மிக மிக முக்கியமானது. இதைப்பற்றிச் சொல்ல வருகிறேன்:

I will read a small portion of the Affidavit:

"Question : Describe step by step ?

Answer : I know only the principles of the surgery and not the steps".

அது எக்ஸ்பெரிமென்ட்டில் உள்ளது என்பது மிகவும் தவறான செய்தி. 150 க்கு மேற்பட்ட ஆப்பரேஷன்கள் ஜெனரல் ஆஸ்பத்திரியிலேயே செய்துள்ளார்கள். டாக்டர் நடராஜன், டாக்டர் டி. கே. சண்முகசுந்தரம் இவர்கள் எல்லாம் ஆப்பரேஷன்கள் செய்துள்ளார்கள்.

Dr. Natarajan is one of the greatest Orthopaedic surgeons.

இது மிகவும் முக்கியமான பிரச்சினை. 150 ஆப்பரேஷன்கள் ஜி.எச்.-ல் நடைபெற்றுள்ளன. "கீழ்பாக் ஆஸ்பத்திரிபற்றித் தான் தெரியும், பொது மருத்துவமனைபற்றித் தெரியாது" என்று சொன்னால் எப்படி? Thoraco-plastic சர்ஜன் இருந்தால்தான் ஆப்பரேஷன் செய்ய முடியும் என்று சொன்னால் எப்படி? 150-க்கு மேற்பட்டவர்கள் ஆபரேஷன் செய்யப்பட்டுள்ளார்கள். டாக்டர் சண்முகசுந்தரம், டாக்டர் சவுந்தரபாண்டியன் போன்றவர்கள் செய்துள்ளார்கள். டாக்டர் சௌந்தரராஜன்தான் நிறைய அறுவை சிகிச்சை செய்திருக்கிறார். 150-ல் 3 தான் பெயில்யூர். எந்த ஒருவர் மீதும் தனிப்பட்ட முறையில் விருப்பு வெறுப்பு இந்த அரசுக்கோ தேர்வுக் குழுவுக்கோ இல்லை. நீதிபதி பத்மநாபனே தன்னுடைய தீர்ப்பில் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்

I am not prepared to countenance the suggestion made by the petitioner in his affidavit that there was difference of opinion between him and the 4th respondent Dr. Basheer."

"One of the greatest orthopaedic surgeons in Royapettah Hospital is Dr. Basheer Ahmed" who is a senior professor and a leading Orthopaedic Surgeon in the State.

"As rightly pointed out by the 4th respondent, Dr. Basheer there can never be a difference of opinion between the teacher and the petitioner who was only a diploma student."

என்று அவர் சொல்லியிருக்கிறார்.

"All the issues must be brought before the public gaze"
"3 பிளஸ் 3 6" என்று சொன்னால் ஒரு மாணவர் "இல்லை, இல்லை 4 தான்" என்று வாதாடக்கூடிய வாய்ப்புகூட இன்றையதினம் இருக்கிறது. இதைப்பற்றி நீதிபதி பத்மநாபன் சொல்லியுள்ளதைப் படித்தேன். தனிப்பட்ட முறையில் எனக்கு யார் மீதும் விருப்பு வெறுப்பு இல்லை. ராயப்பேட்டை மருத்துவமனையில் டாக்டர் பசீர் அகமது பணியாற்றுகிறார். உரிமைப் பிரச்சினையை என்மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கொண்டு வந்திருப்பது குறித்து எனக்கு ஒன்றும் வருத்தமில்லை. இதிலே இன்னொன்றையும் சொல்ல வேண்டும். அந்த மாணவனிடம் கேள்வி கேட்க அவருக்கு உரிமை உண்டு. இங்கே உறுப்பினராக இருந்த டாக்டர் குருசாமி முன்பு 50 பேரைக் கேள்வி கேட்டு 10 பேரைத்தான் பாஸ் பண்ண வைத்திருக்கிறார். ஸ்தெஸ்கோப்பைத் தப்பாக மாட்டியதால் concavity இருக்க வேண்டிய இடத்தில் இருந்ததால், "I will see you next time, you can go home" சொன்னார். டாக்டர் பிரபு என்ற மற்றொரு எக்ஸாமினர் இன்னொரு கேள்வி கேட்டார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சிரிக்க வேண்டாம். நான் மனம் நொந்து பேசுகிறேன்.

"Suppose you are in a village with no facility. There is a child with diphtheria. What are you going to do?"
என்று அவர் கேட்டார். Trachos- ஐத் திறக்க வேண்டும்" என்று அதற்கு பதில் சொன்னார். அதற்கு அவர் அதாவது பிரபு
"Where is the tube for putting inside?" என்று கேட்டார்.

(முற்பகல் 11-00)

"You can damn well cut your stethescope and put it, if you do not have a tube. You can get back a stethescope but not a child."

இந்தக் கேள்வியைக் கேட்டால், அந்த டாக்டர் புஸ்தகத்திலே இல்லாததைக் கேட்டார், இனிமேல் அவரை எக்ஸாமினராகக் கொண்டு வரக்கூடாது என்று சொல்லக்கூடிய நிலைமை வரும். டாக்டர் பசீர் அகமது அவர்களைப் பற்றி திரு. பத்மநாபன் அவர்கள் சொல்கிறார்கள்



"I accept fully the counter-affidavit filed by the 4th respondent" என்று Hon. Thiru Justice S. Padmanabhan சொல்கிறார்.
"I accept fully the counter-affidavit filed by the 4th respondent, Dr. Basheer, that he was not actuated by any malafides or personal animosity towards the petitioner"
எனக்கு எந்தவிதமான 'மெல-ஃபைடி' நோக்கமும் கிடையாது.

"The petitioner has not, in any manner established either malafide or bias which is said to have operated in the mind of the 4th respondent, that is, Dr. Basheer, resulting in his non-selection."

ஆகவே, உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறும் நேரத்தில் இந்த மாணவருக்கு இடம் அளிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது; அப்படியென்றால் ஏன் இடம் அளிக்க வேண்டும் என்று அவர் சொன்னார் என்று நீங்கள் என்னைக் கேட்கக்கூடும். இந்த மாணவருக்கு இடம் அளிக்க அரசு முன்வருகிறதா என்று கேட்கப்பட்டது. நாங்கள் எதைப்பற்றியும் கவலைப்படாதவர்கள்,

we are prepared to place the whole thing on the table. To put it in another way, we are prepared to place our cards on the table. "If the petitioner is to be provided a seat ........"

என்று சொல்லி நாங்கள் பதில் கொடுத்தோம். நாங்கள் கொடுத்த பதில் என்னவென்றால்

"If the petitioner is to be provided with a seat, the Government have to provide for the following three service candidates and three private candidates who are in the waiting list with marks higher than the petitioner." It would mean that if once we concede the petitioner's request, we will have to create seven additional seats in M.S. (Ortho.) Course. "In the circumstances stated, it is not possible to increase the number of seats." Dr. Varaprasad, Dr. S. Natesan and Dr. A. M. Murugan are the three service candidates. Dr. S. Rajapandian, Dr. Arunkumar Meenakshisundaram and Dr. K. Selvam are the three private candidates."

இவர்கள் அத்தனை பேரும் அவருக்கு மேலேயிருப்பதால், இவருக்குக் கொடுத்தால், நாளைக்கு அவர்கள் கோர்ட்டுக்குப் போனால் என்ன செய்வது?

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1982 பிப்ரவரி 20

தேர்வு முறையிலே தவறு நடைபெற்றுள்ளதாக நீதிமன்றம் சொன்னால்கூட, மொத்தத் தேர்வையும் தள்ளுபடி செய்துவிட்டு, மீண்டும் தேர்வு நடத்த அரசு தயாராக இருக்கிறது என்று சொன்னோம்.

We said that it had to be decided in the Supreme Court. It is a very important thing which I would like the House to appreciate. The issue is whether the Legislature or the Executive or for that matter, even the Judiciary is to sit in judgment over the nature of the questions put by experts. This is a point which I would like everyone in the House to give serious consideration to. Therefore, it is clear that I have not made any attempt to mislead the House. In fact, if at all I wish, I can accuse the hon. the Leader of the Opposition.

இன்னொரு இடத்திலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசும்போது அங்கே பெம்பி அன்ட் வெல்லே வரவேயில்லை என்று சொன்னார்கள். அவர்கள் பேச்சிலே அது வந்திருக்கிறது. அதேநேரத்தில் 'கேம்பெல்'-ல் வரவில்லை என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னது கூட ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறது என்று நான் கூட சொல்லலாம். ஆனால் நான் அப்படிச் சொல்லவில்லை. I really want it tobe discussed இதை இங்கே எழுப்பிக் கொண்டு வந்ததற்காக மிகவும் நன்றி. உரிமைப் பிரச்சினை என்பது மிகவும் எச்சரிக்கையோடு, ஜாக்கிரதையோடு பயன்படுத்த வேண்டிய ஒரு கருவி, ஒரு ஆயுதம். இந்த மாதிரி 'மேலபைடி' இல்லாமல், நான் சொல்லும் கருத்தைப் பகிர்ந்துகொள்ளும் இடத்தில் உபயோகப்படுத்தும் ஆயுதம் இல்லை இது.

Therefore, it is clear that I have not made any attempt to mislead this House. There is not even a vestige of doubt in this regard. In fact, I can point out the contradiction made by the hon. the Leader of the Opposition. He is my distinguished colleague and is an old colleague of mine. We both entered the Legislature simultaneously in 1964.

அந்தக் கான்டெக்ஸ்ட்லே நான் பண்ணியிருந்தால் என்னை விட்டிருப்பார்களா? பெரிய 'இஷ்யூ' ஆக்கிவிட்டிருப்பார்கள்.

But, I am not raising any privilege issue against the hon. the Leader of the Opposition on this account. I feel that a **privilege issue is something which should not be treated lightly**



1982 பிப்ரவரி 20] [டாக்டர் எச். வி. ஹண்டே]

or in a cavalier fashion as has now been done by my distinguished colleague, the Leader of the Opposition. But, I have converted it for my use for which I am grateful to him. Even though I have clearly proved that there is no breach of privilege of this House, I am extremely indebted to the hon. the Leader of the Opposition for giving me this wonderful opportunity. By that, he has put me in a deep depth of gratitude.

With these words, Sir, I request you to examine the whole thing and also consider that there is absolutely no *prime facie* case at all in regard to this privilege issue.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இந்த உரிமைப் பிரச்சினை பற்றிய தீர்ப்பு, மாண்புமிகு தலைவர் அவர்களால் பின்னர் வழங்கப்படும்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(2) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கார் மீது தாக்குதல் குறித்து.

**திரு. ஜேப்பியார்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் இப்போது இந்த அவைக்கு ஒரு தகவலைச் சொல்லும் கட்டாயத்தில் இருக்கிறேன். இந்த அவையின் நடவடிக்கையில் கலந்துகொள்வதற்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வரும்போது, அவரைத் தாக்க முயற்சி செய்து அவருடைய காரை உடைத்திருக்கிறார்கள். இந்த சம்பவம் இன்றைக்கு காலையில் நடந்திருக்கிறது. இதைப்பற்றி சபைக்கு தகவல் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வரும்போது, அவருடைய கார்மீது தாக்குதல் நடந்திருந்தால் அது மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. நாம் எல்லோரும் இந்த நிகழ்ச்சியைக் கண்டிக்க வேண்டும். இந்த விஷயத்தில் நாங்கள் எங்கள் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் வெளியிட்ட உணர்வோடு ஒன்றி, குற்றவாளி யாராக இருந்தாலும், அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்தி மிகவும் அதிர்ச்சி தரும் செய்தியாக இருக்கிறது. பொது வாழ்க்கையிலே ஈடுபட்டிருப்பவர்கள் பல்வேறு கருத்துக்களையும் தெரிவிப்பது

[திரு. க. இராமமூர்த்தி] [1982 பிப்ரவரி 20

அவசியமும் கட்டாயமும் ஆகும். இதுபோன்ற சம்பவங்கள் அதற்குக் குந்தகமாக இருக்கின்றன. இனிமேல் நாம் கூடுதலாகப் பாதுகாப்பு கொடுப்பதோடு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இதிலே கடுமையான நடவடிக்கை எடுத்தால்தான், இந்தமாதிரி சம்பவங்கள் திரும்பத்திரும்ப நடக்காமல் இருக்கும் என்பதால், அரசு இதிலே விரைந்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அந்த நிகழ்ச்சியை நேரிலே பார்த்திருக்கிறார் என்பதால், அவர் இந்த அவைக்கு அதிகமான விவரங்களைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே விரைந்து செயல்படுவதிலே இந்த அவையிலே இருக்கிற அத்தனை அரசியல் கட்சிகளும் அரசாங்கத்தோடு துணை நிற்கின்றன என்பதைச் சொல்லி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எந்தவிதமான ஆபத்தும் இல்லாமல் தப்பியதற்காக, என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, நான் காலையில் செக்கரட்டேரியேட்க்கு வரும்போது, சாந்தோமுக்குப் பக்கத்திலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய கார் நின்றது. எதிரில் கட்டப்படும் கட்டிடத்திலிருந்து காங்கிரீட்டுக்கு மேலேயிருந்து கல் அடித்ததாகக் கூறப்பட்டது. அதில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கார் கதவு உடைந்ததையும் பார்த்தேன். அதற்குப் பிறகு செக்யூரிட்டி ஆஃபீசரை அங்கேயே விட்டுவிட்டு, தேவையான நடவடிக்கைகளை எடுக்கச் சொல்லிவிட்டு நாங்கள் இங்கே வந்தோம். ஐ.ஜி. ஆஃபிசிலே வயர்லெஸ் மூலம் நடவடிக்கை எடுக்க சொல்லப்பட்டிருக்கிறது. காரிலே காயம் பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உட்கார்ந்திருக்கும் இடத்திற்கு அடுத்த பக்கத்தில் காயம் இருக்கிறது.

**திரு. ஜே. எம். மியாகான்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் காயம் ஒன்றும் இல்லையே?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் காயம் ஒன்றுமில்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** இவ்வாறு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கும் அமைச்சர்கள் இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு ஆளாகும் நிலை இருப்பதால், இதுகுறித்து இங்கே கட்சித் தலைவர்கள் கூறிய கருத்துக்களுக்கேற்ப, நாங்களும் அந்த உணர்வோடு இணைந்துவிடுகிறோம். இப்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களே வரும்போது இந்த நிலை என்று சொன்னால்,



1982 பிப்ரவரி 20] [திரு. பா. ரா. தாமஸ்]

சாதாரண மக்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை; ஆகவே, இது குறித்து அரசு நல்ல முறையில் ஒரு அறிக்கை கொடுத்தால் கூட சிறப்பாக இருக்கும்.

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**பேரவையின் எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நெடிய பயணத்தில் சாத்தூருக்குப் பக்கத்தில் சாலையில் வெடிகுண்டுகள் போடப்பட்டிருந்தது குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் சங்கரலிங்கம், மீனாட்சிசுந்தரம் ஆகியோர் தமிழக சட்டமன்றப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் திருசெந்தூருக்கு நெடும்பயணம் செய்யும் வழியில் சாத்தூருக்குப் பக்கத்திலே சாலையில் வெடிகுண்டுகள் போடப்பட்டிருந்தது குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையின் எதிர்க் கட்சித் தலைவரான டாக்டர் கலைஞர் அவர்கள், நீதிகோரி, நெடிய பயணத்தை, 15 ஆம் தேதி மதுரையில் தொடங்கி, திருச்செந்தூர் நோக்கிச் செல்லுகிற பாதையில், 16—2—1982 அன்று விருதுநகரிலிருந்து சாத்தூருக்குப் போகிற பாதையில், சாத்தூருக்கு அருகே, சாலை ஓரத்தில் வெடி குண்டுகள் கிடந்ததாகவும், ஆனால் அவர் போவதற்குக் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் ஒரு பெண் சலவைத் தொழிலாளியின் கால்பட்டு விபத்திற்கு உள்ளாகி, கால் பாதிக்கப்பட்டு, அவர் மருத்துவ மனையில் இருப்பதாகவும் தெரிகிறது.

இந்தச் செய்தியைப் பத்திரிகைகள் வெளியிடுவதற்கு முன்னரே, போலீசார் விசாரணை செய்து, அந்தப் பகுதியிலிருந்து 4, 5 குண்டுகளை எடுத்ததாகத் தெரிகிறது. இது வச்சகாரன்பட்டி போலீஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தி.மு.க. தொழிற் சங்கக் கட்டிடத்தின் எதிர்ப்பக்கத்தில் நெடுஞ்சாலையிலேயே இந்த குண்டுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, வழியில் வருகிறார்கள், அங்கே தங்குவார்கள் என்ற எண்ணத்தோடு, தவறாக யாராவது செய்துவிட்டார்களோ என்ற அச்ச உணர்வு ஏற்படும் வகையில் இது அமைந்திருக்கிறது.

## எறும்புப் பிரிவு முதின்னைப் பட்டத்திற்கான வகுப்பிற்கு அவர்களுடைய நெடிய பயணத்தில் சாத்தூருக்குப் பக்கத்தில் சாலையில் வெடிகுண்டுகள் போடப் பட்டிருந்தது குறித்து

[திரு. ம. சங்கரலிங்கம்] [1982 பிப்ரவரி 20

அதோடு, 15—2—1982 அன்று சிவகாசியில் பாலகிருஷ்ணா லாட்ஜில் அவர் தங்கியிருக்கும்போது நண்பகலுக்கு மேல், சந்தேகமான நிலையில் ஒருவர் சத்தம்போட்டுக் கொண்டு அறைக்குப் பக்கத்தில் இருந்ததாகவும், அவரைப் போலீசார் பிடித்தபோது கையில் இரும்புக் கம்பி வைத்திருந்ததாக வும், போலீசார் விசாரித்து வருவதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது. சட்ட மன்றப் பேரவையின் எதிர்க் கட்சித் தலைவர், முன்னால் முதலமைச்சராக இருந்த ஒருவர் பொதுமக்களைச் சந்தித்து நீதி கேட்கிற பயணத்தை மேற் கொண்டிருக்கும்போது, இது நடைபெற்றிருக்கிறது. இன்றையதினம் பிரதம ராக இருக்கும் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் உத்தரப் பிர தேசத்தில் தன்னுடைய தொண்டர்களோடு நெடும்பயணத்தை ஒருமுறை மேற்கொண்டார்கள். இன்றையதினம், உலகம் முழுவதும் போற்றப்படுகிற சீன நாட்டிலும், அங்கே பெரிய தலைவர்களெல்லாம் இப்படி நெடும்பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். எனவே இது ஒன்றும் ஜனநாயகத்திற்குப் புதியதல்ல. இதற்குத் தக்க பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அரசின் கடமை. ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் அந்தப் பகுதியில் "வால் போஸ்டர்கள்" ஒட்டியிருக்கிறார்கள். அதுவும் இந்தச் செயலையே "இன்ப லும் கேலியுமாக"ச் சித்தரித்து வால் போஸ்டர்கள் ஒட்டியிருப்பதன் மூலம் இத்தகைய நிலைமை உருவாகியிருக்கிறதோ என்ற அச்ச உணர்வு ஏற்படு கிறது. அந்தப் பயணம் இன்னும் இரண்டு நாட்களுக்குத் தொடர்ந்து நடை பெற இருக்கிறது. எனவே அரசு இதற்கு என்ன பாதுகாப்பு கொடுத்திருக் கிறது? இனி மீண்டும் இத்தகைய நிலைமை உருவாகாமல் இருப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆகவே இந்த அவையின் இன்றைய அலுவல்களையெல்லாம் ஒத்தி வைத்து இந்தப் பொருள் குறித்து விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலம் எந்த இடத்திலும் எந்த அசம் பாவிதமும் ஏற்படாத வகையில் எல்லோரிடமும் ஒரு நல்லுணர்வை ஏற்படுத் துவது அவசியம் என்பதால், இந்தச் சந்தர்ப்பத்தை அந்த வகையில் பயன் படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்** : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சில தினங்களுக்கு முன்னதாக, சட்டமன்றப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நெடும் பயணம் மேற்கொண்ட பகுதியில் வெடிகுண்டு வைக்கப்பட்டதாகவும், மர்ம மனிதன் ஒருவன் அவரைச் சுற்றிச் சுற்றி வந்ததாகவும் ஏடுகளில் செய்திகள் வந்திருக்கின்றன. இன்றைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கார் தாக்கப்பட்ட செய்தி வந்திருக்



## பேரவையின் எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நெடிய பயணத்தில் சாத்தூருக்குப் பக்கத்தில் சாலையில் வெடிகுண்டுகள் போடப் பட்டிருந்தது குறித்து

1982 பிப்ரவரி 20] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

கிறது. ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னைக் கொல்ல சதி ஒன்று நடந்தது என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி நாட்டில் பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள் எல்லாம் எப்படிப்பட்ட தொல்லைகளுக்கும் துயரங்களுக்கும் ஆட்படவேண்டியிருக்கின்றது என்பதை யும் அவைகளை நாம் எப்படிக் கட்டுப்படுத்தப் போகிறோம் என்பதையும் விவாதித்து அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.

இந்த நெடும்பயணமே கூட பால் கமிஷன் அறிக்கையில் விவாதம் நடை பெற்று முடிவடைகிற நிலையில், எதிர்க் கட்சியினர் அவையிலிருந்து வெளி நடப்பு செய்ததற்குப் பின்னாலே, அந்தக் கோயிலின் அறங்காவலர்கள் இராஜிநாமா செய்துவிட்டார்கள் என்ற செய்தியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையிலே தெரிவித்திருக்கிறார்கள். ஒருவேளை வெளிநடப்பு செய்வதற்கு முன்னால் அந்தத் தகவலைச் சொல்லியிருந்தால், அந்த நெடும்பயணத்தையேகூட தவிர்த்திருக்க முடியும்.

முதல்வர் அவர்களும் அதாவது ஆளுகிற தரப்பில் இருப்பவர்களும், எதிர்க் கட்சி தரப்பில் இருப்பவர்களும் இப்படிப்பட்ட அசம்பாவிதமான நிலைமைகளுக்கு ஆட்படாமல் தடுத்திடுவதற்கான யோசனைகளையும் சொல்ல வேண்டும் என்ற அடிப்படையில் நான் இதைச் சொல்கிறேன். * * *

* * *

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர் இது எப்படி ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு உகந்ததாக இருக்கிறது என்பதை மட்டும் சொல்ல வேண்டுமே தவிர, அதற்கு அப்பால் செல்வது சரியில்லை எனவே அதற்கு அப்பால் சொன்ன அனைத்துக் கருத்துக்களும் அவைக் குறிப் பிலிருந்து நீக்கப்படும் என்று உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு மேலவை முன்னவர் அவர்கள் பிறகு சொன்ன கருத்துக்களும் கூட அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம்** : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நீதி கேட்டு நெடும் பயணம் செய்து கொண்டிருக்கிறார். அதே நேரத்தில் இப்போது நிதி அமைச்சர் அவர்களின் கார்கூட தாக்கப்பட்டதாகச் செய்தி

---

** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

## பேரவையின் எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நெடிய பயணத்தில் சாத்தூருக்குப் பக்கத்தில் சாலையில் வெடிகுண்டுகள் போடப் பட்டிருந்தது குறித்து

[திரு. சோ. ஆறுமுகம்] [1982 பிப்ரவரி 20

வந்திருக்கிறது என்று சொன்னார்கள். அதற்காக நான் வருந்துகிறேன்.
ஆகவே ஒரு போட்டியாக இப்படி ஒரு விளம்பரம் செய்து நாட்டில் ஒரு
பயங்கரமான சூழ்நிலையை கொந்தளிப்பை—ஏற்படுத்தக்கூடிய வகையில்
அரசாங்கத் தரப்பிலிருந்து தரப்படுகிறது. இந்த நிலையில் மாண்புமிகு
உறுப்பினர் சொன்ன அனைத்துக் கருத்துக்களும். . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** என்னுடைய சார்பிலும்
ஒன்றைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். போட்டியில்லை. நான்
வரும்போதே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கார் முன்னாலே நின்று
கொண்டிருந்தது. நான் அதை அப்போது 'பிரேக் டவுன்' என்ற அடிப்
படையில்தான் பார்த்தேன். பிறகுதான் எதிர்ப் பக்கத்திலிருந்து கல் வந்தது
என்று தெரிந்தபோது, அதை ஒரு செய்தி என்ற அடிப்படையில் மட்டுமே
நான் இங்கே அவையில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்—நான் இந்த
இடத்தில் துணைத் தலைவராக இருந்தாலும், அந்த இடத்தில் ஒரு கட்சித்
தொண்டன் என்ற அடிப்படையில், அரசியல் துறையில் பெரிய தலைவர்களாக
இருப்பவர்களுக்கு இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற
காரணத்திற்காக, நானே கூட ஆவேசப்பட்டு அந்த வீட்டை நோக்கி உள்ளே
ஓடிப் போய் பிறகுதான் இங்கே வந்திருக்கிறேன். ஆக, போட்டிக்காகச்
சொல்லப்படுகிற செய்தியல்ல. போட்டிக்காக எதுவும் வர வேண்டாம்,
வராது என்று தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்
திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் இது எப்படி ஒத்தி வைப்புத் தீர்மானமாக
வருகிறது என்பதன் அவசியத்தைப்பற்றி மட்டும் சொன்னால் போதும். மற்ற
செய்திகளை நாடே அறியும். அதை மட்டும் சொல்வது நல்லது என்று
அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நாட்டில் இருக்கிற ஆளும் கட்சியும், எதிர்க்
கட்சிகளும் இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகிற காரணத்தால்,
இப்படிப்பட்ட சூழ்நிலைகள் உருவானால் ஆபத்து. என்றாலும் இதை
விவாதிக்க இங்கே அனுமதிக்கப் போவதில்லை என்பதால். . .

*** மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் துணைத்
தலைவர் அவர்களே, இதே ஒத்திவைப்புத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்
பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள்
பேசியது விதிமுறைகளுக்கு உகந்ததாக இருந்தது. அதைப்போலவே
விஷயங்களைப்பற்றி மட்டும் பேசினால் பிரச்சினையே இல்லை. கட்சிகளைப்
பற்றிப் பேசி எல்லாக் கட்சிகளையும் அவர் இழுக்கவில்லை. கட்சி



## அவர்களுடைய நெடிய பயணத்தில் சாத்தூருக்குப் பக்கத்தில் சாலையில் வெடிகுண்டுகள் போடப் பட்டிருந்தது குறித்து

1982 பிப்ரவரி 20] [திரு. சு. இராமச்சந்திரன்]

களுக்கிடையே விரோதத்தை உருவாக்க மாண்புமிகு உறுப்பினர் திரு.
மீனாட்சிசுந்தரம் அவர்கள் முயற்சிக்கிறார். ஆங்கிலத்தில் ஒன்றைச் சொல்
வார்கள். 'மோர் லாயல் தேன் தி கிங்' என்று. அதைப்போல், எதிர்க்
கட்சித் தலைவரை விட அதிக விசுவாசம் காட்ட வேண்டிய அவசியமில்லை
என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இப்படிப்பட்ட பிரச்சினைகளின் காரணமாக
நாட்டில் அமைதி சீர்குலைந்து கொண்டிருக்கிற காரணத்தால், இனிமேல்
இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாமலிருக்க வேண்டிய முறையில் நட
வடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம். எனவே அத்தகைய
நடவடிக்கைகளைப்பற்றி விவாதிப்பதற்கு இந்த அவையின் நடவடிக்கைகளை
ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*** மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத்
துணைத் தலைவர் அவர்களே,

"14—2—1982 அன்று சிவகாசி விருதுநகர் சாலையில், துலுக்கப்பட்டி
பாதை சந்திப்புக்கு அருகில் வெள்ளைச்சாமி என்பவரின் மனைவி கருப்பாயி
என்ற பெண் நடந்து வந்து கொண்டிருந்தபோது, பாதையில் கிடந்த ஒரு
பொட்டலத்தை மிதித்துவிட்டார். அந்தப் பொட்டலத்தில் வெடிமருந்து
நீல நிற துணியில் கட்டப்பட்டிருந்தது. இந்த வெடி மருந்து அந்தப்
பகுதியில் நரிகளை விரட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்டு வருவதாகத்
தெரிகிறது. பாதையின் ஓரத்தில் கிடந்த அந்தப் பொட்டலத்தின் மீது
அந்தப் பெண்ணின் வலது கால் பட்டது. கால் பட்டவுடனே அது வெடித்து
விட்டது. அவர் விருதுநகர் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.
பின்னர் அங்கிருந்து மதுரை ராஜாஜி மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்
பட்டுள்ளார். அவர் தமது வலது காலில் இரண்டு விரல்களை இழந்துள்ள
தாகத் தெரிகிறது.

இது விஷயமாக, வாச்சக்காரப்பட்டி காவல் நிலையத்தில் குற்றவியல்
எண் 22/82 (286 இ. பி. கோ.)-ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு
புலன் விசாரணை செய்யப்பட்டு வருகிறது. மாவட்ட அதிகாரியிடமிருந்து
மேற்கொண்டு அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. விபத்து 14—2—1982
அன்று பகல் சுமார் 3-30 மணி அளவில் நடந்துள்ளது. ஆனால் எதிர்க்
கட்சித் தலைவர் டாக்டர் கலைஞரோ விருதுநகரை அடைந்த தேதி

(முற்பகல் 11-20)

16—2—1982. விருதுநகர் அருகில் 16—2—1982 அன்று வெடிகுண்டு வீசப்
படவில்லை. எனவே அங்கே வேறு மோசமான நிலை, பதட்டமான நிலை

திட்டமிட்டு உருவாக்கப்பட்டதாகக் கருத வாய்ப்பில்லை. 14—2—1982 நடந்த விபத்திற்கும் எதிர்க் கட்சித் தலைவரின் பாத யாத்திரைக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

18—2—1982 அன்று விடியற்காலை 3 மணி அளவில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தங்கியிருந்த சிவகாசி பாலகிருஷ்ணா லாட்ஜில் அடையாளம் தெரியாத ஒரு நபர் உலாவிக் கொண்டிருந்ததை லாட்ஜின் பணியாளர் ஒருவர் பார்த்தார். அங்கிருந்த போலீசார் உடனே அவரைப் பிடித்தனர். பிடிபட்ட அந்த நபரின் பெயர் சுப்பிரமணியம் என்றும் அவர் மனநிலை சரியில்லாதவர்போல் விசாரித்ததில் தெரிய வந்தது. அவரிடம் எந்த விதமான கைத்தடியோ, இரும்போ அல்லது மரமோ இல்லை. அவரைக் கைது செய்து சிவகாசி டவுன் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்றனர். அவர் மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு மேலும் இது விஷயமாக புலன் விசாரணை நடந்து வருகிறது.

இந்தச் சம்பவங்களைபொட்டி புதிதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலாளர் மூலமாக காவல் துறைக்கு ஒரு தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். எந்தவிதமான சிறிய இடர்பாடும், துன்பமும் மாண்புமிகு பேரவை எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞருக்கு வந்துவிடக்கூடாது. எனவே முன்பு ஒரு முறை திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் பிரதமராக இல்லாத காலத்திலே தமிழகத்திற்கு வந்தபோது அசம்பாவிதங்கள் நடந்ததைப் போல எதுவும் நடந்துவிடக் கூடாது என்ற அளவிலே மிக பலத்த காவல் ஏற்பாடுகளைச் செய்திருந்தோம்.

அந்த அளவிற்கு எந்தவிதமான சம்பவமும் நடந்துவிடக் கூடாது என்பதற்காக மாண்புமிகு சட்டமன்றப் பேரவை எதிர்க் கட்சித் தலைவருக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று சொல்லி எதிர்க்கட்சித் தலைவரின் பாதுகாப்புக்காக எஸ். பி தலைமையில் கீழ்க்கண்டவாறு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது :—

ஊர்வலத்தின் முன்னால் ஒரு டி. எஸ். பி. தலைமையில் 4 ஆய்வாளர்கள். 8 உதவி ஆய்வாளர்கள் உட்பட 100 போலீசார் கண்காணித்து செல்கின்றனர். அதைப்போலவே ஊர்வலத்திற்குப் பின்னால் அதே மாதிரி முன்னால் யான ஒரு அணி டி.எஸ்.பி. தலைமையில் செல்கிறது. ஊர்வலத்திற்குள்ளும் சீருடை அணியாத காவலர்கள் நிலைமையை கண்காணித்து பாதுகாப்பு அளித்து செல்கின்றனர். எதிர்க் கட்சித் தலைவருக்கு அருகிலேயே ஒரு துணை ஆய்வாளர் தலைமையில் ஒரு பாதுகாப்பு வட்டம் (ரிங் ரவுண்ட்) அமைக்கப்பட்டுள்ளது. 13—2—1982 அன்று மாண்புமிகு முதல்வர்



அவர்கள், நெடிய பயணம் செல்லும் எதிர்க் கட்சித் தலைவருக்கு, திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பிரதம மந்திரி பதவி வகிக்காமல் இருந்தபோது, தமிழகம் வந்திருந்த சமயத்தில் அவருக்கு என்ன பாதுகாப்பு வழங்கப்பட்டதோ அதே போன்று இவருக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்றும் இது சம்பந்தமாக மதுரை, திருநெல்வேலி டி.ஐ.ஜி.களுக்கு அறிவுரை வழங்கப்பட வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள்.

இன்றைக்கு எல்லாவிதமான உதவிகளோடு மாண்புமிகு பேரவை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய பாத யாத்திரையை நடத்த வேண்டும் என்பதிலே அரசு ஒத்துழைப்பு கொடுத்து வருகிறது. இதற்கு மீறி சம்பவங்கள் அங்கொன்றும், இங்கொன்றுமாக நடக்கிறதென்றால், அதற்காக ஏற்கனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குப் பதில் சொல்லும்போது, சட்டமன்றப் பேரவையிலே ஒரு கருத்தைச் சொன்னார்கள் இன்று எந்தக் கட்சி போராட்டத்தை அல்லது வேறு எந்த நிகழ்ச்சியை நடத்தினாலும், சமூக விரோதிகள் உள்ளே நுழைந்து ஏதாவது ஒரு கட்சிக்குக் களங்கத்தை உண்டு பண்ண வேண்டுமென்று அக்கறை செலுத்தி விடுகிறார்கள். இதிலே எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்று பேரவையிலே சொன்னார்கள் எதிர்க் கட்சிகள், நாம் எல்லோரும் சேர்ந்து கூட அதிகார மாற்றத்திற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறோம் நாம் அதிகாரத்தில் இருந்தால் ஆட்சி மாற்றத்திற்காகப் போராடுகிற காலங்களில் என்ன செய்யலாம் என்று யோசிக்கலாம் இது நம்முடைய ஆட்சிதான். எந்தக் கட்சி ஆட்சியாக இருந்தாலும், இது மக்களுடைய ஆட்சிதான். உயிர் பலி கொடுப்பது, வீராவேசமாக வசனங்கள் பேசுவது, உணர்ச்சிகளைத் தாண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பது இவை யாருக்கும் நல்லதல்ல. இத்தகையான போக்குகள் ஜனநாயக அமைப்பைச் சிதைத்துவிடும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை இதைத்தான் இந்த நாட்டில் நடக்கும் சம்பவங்கள் காட்டுகின்றன. காலையில் நாவலர் அவர்களுக்கு ஏற்பட்ட சம்பவம், மாண்புமிகு முதல்வர் அவர்கள் உயிருக்கே ஆபத்து விளைவிக்கக்கூடிய அளவிற்கு இருப்பதால் பாண்டிச்சேரியைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்ய வேண்டிய அளவிற்கு நிலைமை வளர்ந்திருப்பது, பிரதமர் திருமதி இந்திரா அவர்களுக்குப் பொறுப்பான பாதுகாப்பு இருக்கும்போது அவருடைய உயிருக்கே ஆபத்து உண்டாக்கக்கூடிய முயற்சி ஏற்பட்டதால் டில்லி மாநகரத்திலே தனி போலீஸ் பிரிவு உண்டாக்கக் கூடிய நிலைமை இவைகளையெல்லாம் பார்க்கும்போது, நாம் கொஞ்சம் இதிலே எச்சரிக்கையாக இருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை உணர்கிறோம். இதிலே அரசியல் உணர்வுகளுக்குக் கொஞ்சமும் இடம் கிடை

யாது. ஒவ்வொருவருடைய பாதுகாப்பும் எல்லோருடைய ஒத்துழைப்பிலே தான் இருக்கிறது என்பதை அரசு உணர்ந்து தக்க நடவடிக்கைகளை எடுத்து வருவதால், இதற்கு மேல் இந்தப் பொருள் குறித்து பேசுவதற்காக இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு சார்பிலே தந்த அறிக்கையில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகச் சொல்லியிருந்தாலும், குறிப்பிட்ட குண்டு வைத்த சம்பவத்திற்கு விளக்கம் தந்தது திருப்தி அளிக்காததாலும், அது நம்பிக்கைக்குரியதாக அமையாத தாலும் திராவிட முன்னேற்றக் கழகம் வெளி நடப்புச் செய்கிறது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

* திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் அடிப்படையில் உளப்பூர்வ மான கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பு அளிக்காததால் நானும் வெளிநடப்புச் செய்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் வெளிநடப்புச் செய்தார்.)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து விவாதிக்க அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதி, என் அனுமதியை மறுக்கிறேன்.

5. மேலவை விதி 82-ன் கீழ் அமைச்சரின் விவர அறிக்கை.

4—2—1982 அன்று ஒரு வினாவிற்கு அளித்த விடை குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவை விதி 82-ன் கீழ் மாண்புமிகு நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் ஒரு விவர அறிக்கையை அளிப் பார்.

* மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

நான் 4—2—1982 அன்று பக்கிங்காம் கால்வாயை வேதாரண்யம் வரை அகலப்படுத்தியும், ஆழப்படுத்தியும் படகு போக்குவரத்துக்கு பயன் படுத்துவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. வி. வி. ஆனந்தம்





அவர்களின் வினாவிற்கு விடை அளித்ததை, தொடர்ந்து பேசும்போது மாண்புமிகு திரு. சி. இராமலிங்கம், எம் எல் சி. அவர்கள் கீழ்க்கண்டவாறு கூறினார்கள்:—

" பக்கிங்காம் கால்வாயை ஆரம்பித்தபோது வெள்ளைக்காரர்கள் காக்கிநாடாவிலிருந்து கடலூர் வரையில் வெட்டினார்கள். மரக்காணம் வரையில்தான் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறான தொரு தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். சமீபத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட ஆலப்பாக்கத்தில் அடிக்கல் நாட்டும்போது ' பக்கிங்காம் கால்வாயின்மேல் மேம்பாலம் ' என்றுதான் அறிவிக்கப்பட்டது. மாண்புமிகு தலைவர் அவர்களுக்கே கூட தெரியும்.

மாண்புமிகு உறுப்பினரின் மேற்கூறிய கருத்து பற்றி கீழ்க்கண்ட விரிவான குறிப்பை அளிக்க விரும்புகிறேன்:—

பொதுப் பணித் துறையைச் சார்ந்த முன்னாள் செயற் பொறியாளர் திரு. ஏ. எஸ். ரசல் என்பவர் பக்கிங்காம் கால்வாயின் வரலாற்றினை 1897-ம் ஆண்டு எழுதியுள்ளார். இவ்வரலாற்றில் அவர் 1806-ம் ஆண்டு முதல் 1897 ஆம் ஆண்டு வரை சிறு சிறு பகுதிகளாக தோண்டப்பட்டு எவ்வாறு பக்கிங் காம் கால்வாய் உருவாக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார். இவ் வரலாற்றின்படியும் அதனோடு இணைக்கப்பட்டுள்ள வரைப்படத்தின்படியும், பக்கிங்காம் கால்வாய் மரக்காணம் உப்பங்கழியின் தென்பகுதியோடு முடி வடைகிறது. மேற்கூறிய வரலாற்றுப் புத்தகத்தில் பக்கிங்காம் கால்வாயை கடலூர் வரையிலும், அங்கிருந்து போர்டொநோவோ வரையிலும் நீர்வழிப் போக்குவரத்து முன்னேற்றத்திற்காக நீட்டிப்பது குறித்து வரலாற்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். எனினும், அத் திட்டம் போதுமான பயன் அளிக்காது என்ற கருத்தினைக் கொண்டு அக் கால்வாயை மேற்கொண்டு நீட்டிக்க தேவையிருக்காது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பக்கிங்காம் கால்வாய் சீரமைப்புப் பணிக்காக பல்வேறு காலங்களின் பல குழுக்களால் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு ஒப்புதலுக்காக அனுப் பப்பட்டுள்ள திட்ட அறிக்கைகள் யாவற்றிலும், பக்கிங்காம் கால்வாயின் எல்லை ஆந்திர பிரதேசத்தில் பெத்தகஞ்சம் முதல் தமிழ்நாட்டில் மரக்காணம் உப்பங்கழி வரை மட்டுமே உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மரக்கா ணத்திற்கு அப்பால் தென் பகுதியில் பக்கிங்காம் கால்வாய்ப் பகுதி இருந்த தாக எந்த அறிக்கைகளிலும் குறிப்பிடப்படவில்லை.

1977 ஆம் ஆண்டு பக்கிங்காம் கால்வாயை மரக்காணத்திலிருந்து தென் நீட்டிப்பதற்காக னாற்காடு மாவட்டத்தில் உள்ள போர்டோநோவா வரை திட்டியிருப்பதாக தெரிய பாசனத் தலைமைப் பொறியாளர் ஒரு திட்டம் கொடுக்காததால் அத் திட்டம் வருகிறது. ஆனால் நிதி நிலைமை இடம் கைவிடப்பட்டதாகவும் தெரிகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ளபடி, அடிக்கல் நாட்டு விழாவிற்கான அழைப்பிதழில் பக்கிங்காம் கால்வாய்க்கு குறுக்கே பாலம் அமைத்தல் என்று குறிப்பிட்டிருப்பது உண்மைதான். ஆனால் இந்திய சர்வே திட்டத்தின்படி. அப்பாலம் உப்பனாறு என்ற வடிகாலின் குறுக்கே உள்ளது. வெள்ளாறுக்கும் உப்பனாறுக்கும் இடையே ஒரு கால்வாய் கிழக்குக் கடற்கரை ஓரமாக செல்கிறது. உப்பனாற்றோடு ஒன்று சேரும் இக் காவாய்ப் பகுதி, பக்கிங்காம் கால்வாய் என்றழைக்கப்படுகிறது எனத் தெரிகிறது. உப்பனாற் றுக்கும் மரக்காணத்திற்கும் இடையே உள்ள தூரம் சுமார் 70 கிலோ மீட்டர் ஆகும். ஆனால் தென் பக்கிங்காம் கால்வாய்க்கும் உப்பனாறு வடிகாலுக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது. ஆகவே பக்கிங்காம் கால்வாய் தமிழ்நாட்டில் தெற்கே, தென்னாற்காடு மாவட்டத்தில் மரக்காணத்துடன் முடிவுறுகிறது என்று ஏற்கெனவே அவையில் தெரிவித்தது சரியானது என்று கூறிக்கொள்ளு கிறேன்.

* Thiru K. RAMAMOORTHY: Sir, under the rules, the Hon. Minister can make a statement to correct his own state- ment or to give fresh information to the House. Let the Hon Member concerned make a statement correcting himself and stating that he gave wrong information to the House.

இன்னொரு உறுப்பினருடைய பேச்சுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கரெக்ஷன் ஸ்டேட்மென்ட் கொடுக்க முடியாது. உறுப்பினர் பேசியது தப்பாக இருந்தால், தப்பாக இருக்கிறது என்று சொல்லி உறுப்பினர் மீது 'பிரிவிலெஜ் இஷ்யூ' கொண்டு வரலாம்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** இந்தக் கேள்விக்கு பதில் சொல்லும்போது மாண்புமிகு உறுப்பினர் இராமலிங்கம் அவர்கள் "மரக்காணம் வரையில் இல்லை, அதற்கு மேலும் இருக்கிறது" என்று சொன்னபோது, நானே சொன்னேன், "குறிப்பு அப்படிக் கொடுத்திருக்கிறார்கள், நான் அது குறித்து விசாரித்து சரியான தகவலை அவைக்குத் தருகிறேன்" என்று. அதனைத்தான் இப்போது சொன்னேன்.



(முற்பகல் 11.30)

## 6. கவன ஈர்ப்பு

**(1) தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான 7,000 நெல் மூட்டைகள் சேலம் மாவட்டம், ஆத்தூரில் காணாமல் போனது குறித்து.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி யினைக் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

'தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான 7,000 நெல் மூட்டைகள் சேலம் மாவட்டம், ஆத்தூரில் காணாமல் போனது குறித்தும் அதன் காரணமாக கார்ப்பரேஷனுக்கு ஏற்பட்டுள்ள லட்சக்கணக் கான ரூபாய் இழப்பு குறித்தும்.'

* **மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் சார்பில்):** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர் களே, விவர அறிக்கை@ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மேலவைத் துணைத் தலைவர் அவர் களே, இந்த அறிக்கையில் 4-ல் 3 லாரிகள் கைப்பற்றப்பட்டதாகவும், எஞ்சிய ஒரு லாரி இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும், சொல்லப்படுகிறது. அது கண்டுபிடிக்கப்பட்டு விட்டதா? அரசினுடைய இழப்புகளை ஈடு கட்டு வதற்கு சட்டப்படியாக குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் விவரம் என்ன?

* **மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** துணைத் தலைவரவர்களே, அதனுடைய விவரங்கள் குறிப்பிலே இல்லை. யார் யார் குற்றவாளிகள், யார் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன, எஞ்சிய லாரி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்கிறார்கள். இன்றைய அளவில் சம்பந்தப்பட்ட ஒரு விவர அறிக்கையிலே சொல்லப்பட்டுள்ளபடி, இது கோடவுனிலே உள்ள ஒற்றைப் பூட்டு அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஒற்றைப் பூட்டு அதிகாரி அவ்வப்போது உரிய நேரத்திலே கண்காணித்திருந்தால், அதைத் தடுத்திருக்க முடியும். அப்படிச் செய்யாத தால் அவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அரைவை முகவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அரைவை முகவர் திரு. சந்திர மோகன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர் பணிக்காக ஏற்

---

@ 818-819ஆம் பக்கங்களில் இணைப்பு I-ஆக ஷூச்சிடப்பட்டுள்ளது.

கெனவே கூலிக்காகத் தரவேண்டிய ஒரு லட்சம் ரூபாய் நிறுத்திவைக்கப்பட்
டிருக்கிறது. அவர் ஏற்கெனவே ரூ. 20,000 பிணை வைப்புத் தொகையாகச்
செலுத்தியிருக்கிறார்கள். அதை நிறுத்தி வைத்திருக்கிறோம். அவருக்குச்
சொந்தமான மூன்று லாரிகளை கோர்ட்டிலே நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.
ஒற்றைப்பூட்டு அதிகாரி அவர்களுக்குச் சொந்தமான 5 ஏக்கர் நிலத்தைக்
கைப்பற்ற சேலம் சார்பு நீதிமன்றத்தில் ஆணை பெறப்பட்டுள்ளது.
காணாமல் போன ஒரு லாரியையும் கண்டுபிடிக்கச் சொல்லியிருக்கிறோம்.
இதுதான் நிலைமை. காணாமல்போன லாரிபற்றி இப்போது தகவல்
இல்லை.

**(2) 31—3—1977 அன்றுள்ளவாறு பணியிலுள்ள ஆசிரியர் அல்லாத பணி
யாளர் அனைவருக்கும் அரசாணையில் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்த
போதிலும், அரசு மானியம் பெறும் கல்லூரிகளைச் சேர்ந்த ஆசிரியர்-
அல்லாத சிலவகையினர் பற்றிய விதிமுறைகளினின்றும் அவர்களை
விலக்கி கல்லூரிக் கல்வி இயக்குநர் அறிவித்தது குறித்து.**

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்
களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியினைக்
குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு
வருகிறேன் :

"31—3—1977 அன்றுள்ளவாறு பணியிலுள்ள ஆசிரியர் அல்லாத பணி
யாளர் அனைவருக்கும் அரசாணையில் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்த
போதிலும், அரசு மானியம் பெறும் கல்லூரிகளைச் சேர்ந்த ஆசிரியர் அல்லாத
சில வகையினர் பற்றிய விதிமுறைகளினின்றும் அவர்களை விலக்கி கல்லூரிக்
கல்வி இயக்குநர் அறிவித்ததால், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடும்,
நிதி வகையில் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பும் குறித்து."

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் துணைத்
தலைவர் அவர்களே, விவர அறிக்கை@ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்
டுள்ளது.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்
களே, இந்த விவர அறிக்கையின்படி இயக்குநருடைய குறிப்பிலே முழுமை
யாக மான்யம் பெற ஏற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து தனியார் கல்லூரி
யில் பணியாற்றும் ஆசிரியர் அல்லா அலுவலர்கள் 35 பேர்கள் என்று குறிக்
கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த விவர அறிக்கையிலே 37 பேர்களுக்கு

@ 820ஆம் பக்கத்தில் இணைப்பு II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.





ஊதியத்தை வழங்கக்கூடிய ஆணை விரைவிலே வெளியிடப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு பேர்கள் யார்? எந்தப் பிரிவைச் சேர்ந்த பணியாளர்கள் என்று அறிய விரும்புகிறேன். (அங்கத்தினர் அவர்கள் அமைச்சரிடம் ஒரு குறிப்பைக் காட்டினார்) மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது சொன்ன கருத்தைப் பொறுத்த அளவிலே ஒரு குறிப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் காட்டலாம் என்றுதான் நானே அவரிடம் எடுத்துச் சென்றேன். அவ்வளவுதான். அதை தங்கள் மூலம் காட்டுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மன்னித்துக் கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதிலே 35 என்ற எண்ணையே பார்க்க முடியவில்லை. 35 என்பது என்ன என்று தெரிந்தால்தான், 37 என்ன என்று தெரியும். அப்போதுதான் அந்த 2 பெயர்களைப்பற்றி என்னால் சொல்ல முடியும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** துணைத் தலைவர் அவர்களே, இவ்வாறு மான்யம் முழுமையாகப் பெறாத ஆசிரியர்கள் அல்லாத அலுவலர்கள் 35 என்று குறிப்பிட்டு கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கு அரசாணையின் பாதுகாப்பு வழங்கப்பட இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த 2 பேர்கள் அதிகமாகக் கொடுத்திருப்பதைப்பற்றி விவரம் இருந்தால், கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேனே தவிர, வேறு ஒன்றும் கேட்கவில்லை.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது மானியம் பெறாத, கணக்கிலே இல்லாத, ஒரு சிலருக்குப் பாதுகாப்பு தருவது பற்றிய கோரிக்கையாகும். அதிலே 37 பேர்களுக்குத் தந்திருப்பதாகச் சொல்கிறோம் என்றால், ஒருவேளை கணக்கு வராமல் இருந்தது இப்போது கணக்குக்கு வந்திருக்கலாம். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் என்ன உணர்வோடு இந்தக் கோரிக்கையை வைத்தார்களோ அந்தக் கோரிக்கை முழுமையாக நிறைவேறிவிட்டது.

**திரு. பா. ரா. தாமஸ் :** துணைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளிலே மெக்கானிக் பணியிடம் என்று வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் விளக்க அறிக்கையிலே உதவி மெக்கானிக், மின்சார மேலாளர், காப்பாளர், ஓட்டுநர் பணியிடங்கள் அரசுக் கல்லூரியிலே இல்லை என்று இருக்கிறது. ஆனால் மெக்கானிக் பணியிடம் இருக்கிறது. அதற்கு வழிவகைகள் செய்

யப்பட்டிருக்கின்றன. ஊதியக் குழு அறிக்கையின்படி பார்த்தால், ஊதியக் குழுவினுடைய அரசாணை எண் 1050, தேதி 5—10—1978-ன்படி கல்லூரிக் கல்வித் துறையின் அரசாணை எண் 22-ன்படி ஏற்கெனவே மெக்கானிக் பணியிடம் வாங்கியிருக்கிறது. புதிய ஊதிய விகிதத்திலே ரூ. 375—10—445—15—550 என்பது சரியான நிலை. ரூ. 400—15—490—20—650—25—700 என்று தேர்வு நிலை அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணியிடம் மெக்கானிக் பணியிடம். எம்.எஸ்.சி. பிசிக்ஸ் இருக்கின்ற கல்லூரியிலே பொருந்தும் என்பதாலே இந்த விதிமுறைக்கு ஏற்றபடி அவ்வாறு பணியாற்றக்கூடியவர்கள் இந்த நிலையிலே வராமலிருந்தால், அவர்களுக்கும் மாநிலத்திலேயுள்ள அனைவருக்கும் இந்தச் சலுகையை வழங்கி, பாதுகாப்புத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவரவர்களே, இப்போது மானியம் பெறாத பதவிகள் குறித்து அரசினிடம் கோரிக்கை வந்து, அந்த சங்கத்தின் சார்பாகச் சொல்லப்பட்டதன் அடிப்படையிலேதான், இந்த முடிவை நாம் மேற்கொண்டிருக்கிறோம். அவர்கள் கேட்கவில்லை என்றால், ஏன் கேட்கவில்லை, அது எப்படிப் பொருந்தும் என்பதைப் பற்றித் தனியாக மனு அனுப்பி அதைப்பற்றிப் பரிசீலிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும்.

## 7. அரசின் தீர்மானம்

**தனி உறுப்பினர் நாளன்று அரசு அலுவலை மேற்கொள்ளுதல் குறித்து.**

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 23(1) வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20 ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது "

என்று முன்மொழிகிறேன்.





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

" தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 23(1) வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20-ம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 8. 1981-82 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை.

***மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தில் 1981-82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்தும் நான் ஆற்ற வேண்டிய உரையை நூல் வடிவில்@ தந்துள்ளேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விவாதங்களைக் குறைக்கின்ற அளவுக்கு ஒரு சில முடிவுகளை நான் மன்ற உறுப்பினர்களுக்கு முன் வைக்கிறேன். அவர்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கும் அது வசதியாக இருக்கும். மின்வாரியத்தில் பணிபுரியும் 92 ஆயிரம் பேர்களில் 23 ஆயிரம் பேர்களுக்கு ஏற்கெனவே ஓய்வூதியத் திட்டம் அமுலில் உள்ளது. மற்றவர்களுக்கு பிராவிடண்ட் பண்ட் இருக்கிறது. ஓய்வு பெற்றுப் போகிறபோது, அந்த பிராவிடண்ட் பண்ட் நிதியும் அவர்களுக்குச் சரியாகக் கிடைப்பதில்லை. இந்நிலையை மாற்ற வேண்டும் என்ற அவர்கள் வேண்டுகோளை ஏற்று எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஓய்வூதியத் திட்டம் அமுல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோலவே ஆண்டு ஒன்றுக்கு 5 ஆயிரம் வீடுகள் தொழிலாளர்களுக்கு என்று கட்டி தொழிலாளர்கள் எந்தப் பகுதியில் நியமிக்கப்படுகிறார்களோ அங்கேயே தங்கி பயனீட்டாளர்களுக்குப் பணி புரிய நிர்மானிக்கப்பட்டுள்ளது. மன்ற உறுப்பினர்கள் பலர் பல நேரங்களில் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே பிப்ரவரியில் சுமார் 4 ஆயிரம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகிறோம் என்று அவர்களையெல்லாம் நேரில் வரவழைத்து, நேர்முகத் தேர்வு செய்து, வீட்டிற்கு அனுப்பிவிட்டார்கள். அவர்களுக்கு அதற்குப் பிறகு வேலை வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. உறுப்பினர்கள்

---

@821-849 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 20

(முற்பகல் 11-40)

வற்புறுத்தியதற்கு இணங்க 140 பேர்களை எடுத்தோம். இப்போது மேலும்
2,000 பேர்கள், தாழ்த்தப்பட்டவர்களை எடுத்து, அட்டைப் பட்டியல்
முறையில் கணக்காளர்களாகப் போடுவதென்று தீர்மானித்திருக்கிறோம்.

அடுத்து, சலவைப் படி. இதனைப் பொறுத்தவரையில், யார் யாருக்கு
சீருடை வழங்கப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கெல்லாம் தரப்படவில்லை.
அலுவலகத்தில் வேலை செய்பவர்களுக்குத் தருகிறார்கள். களப் பணி
யாளர்களுக்குத் தருவதில்லை. களப் பணியாளர்களுக்குத்தான் சீருடை
அழுக்காக வாய்ப்பு இருக்கிறது. ஆகையால் சீருடை யூனிட் ஒன்றுக்கு
ரூபாய் 3 வீதம் சலவைப்படி கொடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, முக்கியமானதொரு முடிவை தமிழக அரசின் மாண்புமிகு
முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒப்புதலோடு எடுத்திருக்கிறோம். அது
என்னவென்றால், தொழில்கள் பெருக வேண்டுமென்று நினைக்கிறபோது,
தொழில் முனைவர்கள் அதிகமாக வருவதில்லை. அண்மையில் தமிழகத்
திலே நீண்ட நாட்கள் பல பொறுப்புகளிலே இருந்த பஞ்சாப் மாநிலத்தைச்
சேர்ந்தவர் ஒரு கருத்து தெரிவித்திருக்கிறார். தமிழ் நாட்டைப்பற்றிக்
கருத்து கேட்கிறபோது, தமிழ்நாடு எவ்வளவோ நல்ல நாடு, எவ்வளவோ
துறைகளில் முன்னேறி இருக்கிறது, ஆனாலும் படித்துப் பட்டம் பெற்றவர்
கள் அரசாங்க அலுவலகங்களில் வேலை செய்ய வேண்டுமென்று நினைக்
கிறார்கள், பஞ்சாப், அரியானா மாநிலங்களில் உள்ளவர்கள்போல் சொந்தத்
தொழில் நடத்த முன்வருவதில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது
ஓரளவிற்கு உண்மை. பொறியியல் பட்டம் படித்துவிட்டு வெளியே
வருகிறவர்களை, தொழில்களை ஆரம்பிக்கச் சொல்லும்போது, அவர்களுக்கு
அதற்கான அனுபவமும் இல்லை, அறிவாற்றலும் இல்லை. இதைச் சிந்தித்து,
மின்சார வாரியத்தில் பணியாற்றும் பொறியாளர்கள், 10, 15 ஆண்டுக்காலம்
பணியாற்றிய பொறியாளர்கள் தொழில்கள் துவங்க முன்வந்தால், அவர்
களுக்கு 5 ஆண்டுகளுக்கு விடுப்பு கொடுக்க இருக்கிறோம். அவர்கள் மின்சார
வாரியத்திற்கு அறிவிப்பு கொடுத்து, தொழில்களைத் துவங்கலாம். ஐந்து
ஆண்டுகளில் தொழில்கள் நல்ல முறையில் நடந்தால், அதற்குப் பிறகு அவர்கள்
பதவி விலகிப் போய்விடலாம். நன்றாகத் தொழில் நடைபெறவில்லை என்
றால், திரும்பவும் மின்சார வாரியத்தில் சேர்ந்து பணியாற்றலாம். இந்த
அடிப்படையில் மின்சார வாரியப் பொறியாளர்கள் சொந்தமாகத் தொழில்கள்
தொடங்க விரும்பினால், அப்படிப்பட்ட விருப்பத்தை மின்சார வாரியத்திற்குத்



1982 பிப்ரவரி 20] [திரு. ச. இராமச்சந்திரன்]

தெரிவித்தால், அவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு மிகாமல் விடுப்பு அளிக்கப்
படும். தங்களுடைய தொழில் நல்ல முறையில் இயங்கினால் 5 ஆண்டு
களுக்கு இடையிலோ அல்லது அதற்கு முன்னதாகவோ பதவி விலகலாம்.
தொழில்கள் நல்ல முறையில் நடக்கவில்லை என்றாலும், நஷ்டம் அடைந்
தாலும் 5 ஆண்டுகளுக்குள்ளாக மீண்டும் பணியில் சேரலாமென்பதைத் தெரி
வித்து, மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான ஆலோசனைகளை வரவேற்று,
அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** நான் முன்கூட்டியே ஒரு
வேண்டுகோள் விடுக்கிறேன். நேரம் பற்றாக்குறை காரணமாக மாண்புமிகு
உறுப்பினர்கள் சொற்களில் கூர்மையான, கடுமையான சிக்கனத்தைக் கடைப்
பிடிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு, ஏ. ஜே. தாஸ்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,
1981-82 ஆம் ஆண்டு மின் வாரிய நிதி நிலை அறிக்கையின் மீது சில கருத்
துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1981 ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில்
203 மெகாவாட் அளவு மின்சார உற்பத்தியைச் செய்த எண்ணூர் அனல் மின்
நிலையம் தன் உற்பத்தித் திறனில் 44 சதத்தைத்தான் எட்டியதென்றும்,
தூத்துக்குடி அனல் மின் நிலையம் 201 மெகாவாட் மின்சார உற்பத்தித்
திறனில் 47 சதத்தைத்தான் எட்டியது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
மின் வாரிய அலுவலர்களும், பணியாளர்களும் மின் விநியோகத்தை நிர்வ
கித்தது பெருமைப்படத்தக்கதாகும். ஆனால் எண்ணூர், தூத்துக்குடி
அனல் மின் நிலையங்கள் முழுப் பயனை அடையாததற்கு என்ன காரணம்
என்று இங்கே தெளிவாக விளக்கவில்லை. 47 சதத்தைப் பெருமையாகச்
சொல்கிறோம். இதை 90 சதவிகிதம் உற்பத்தியாக்க வேண்டும்.

பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தைப்பற்றிச்
சரியாக விசாரணை நடத்தவில்லை. நிர்வாகத்தின் கோளாறுதான்
தீ விபத்திற்கே காரணம். பல கோளாறுகளை வைத்துக்கொண்டு, பல கோடி
ரூபாய் வீணாக்கப்படுகிறது. மேலும் 25 கோடி ரூபாய் செலவழிக்க திட்ட
மிடப்பட்டுள்ளது. எண்ணூர், பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையங்கள்
சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை.

பைகாரா, கீழ்பவானி, வைகை ஆகிய மூன்று நீர் மின் திட்டங்களை
ரூ. 11.75 கோடி செலவில் அரசு செயற்படுத்தி வருகிறது. இம்மூன்று திட்டங்
களைத் தவிர, ரூ. 113 கோடி செலவில் 50 மெகாவாட் திறன் கொண்ட ஆறு
காற்று டர்பைன்களை நிறுவுவதற்கான ஏற்பாடுகளை விரைவில் முடிக்கக்
கேட்டுக்கொள்கிறேன்.

தயாக்ஷா குழு பரிந்துரையில் மிகக் கவனமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது, உற்பத்தியில் இழப்பு ஏற்படாவண்ணம் மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டுமென்பதுதான். அந்த அடிப்படையிலே இந்திய அரசால் அமைக்கப்பட்டுள்ள மின் சக்திக்கான குழு மின் வழி இழப்புகளைக் குறைப்பதற்கான முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியதன் அவசியத்தைப் பரிந்துரைத்துள்ளது. அதைத்தான் கடந்த ஆண்டிலே விளக்கமாகச் சொன்னேன். லைன் லாஸ் உற்பத்தியிலே ஏறக்குறைய 30 சதவிகிதம் இருக்கிற நிலையைப் பார்க்கிறோம். இதற்காக பல அமைப்புகளை அமைத்திருக்கிறோம். இதை எவ்வளவு குறைக்க வேண்டுமோ, அந்த அளவிற்குக் குறைக்க வேண்டும். எந்த அளவிற்கு இந்த ஆண்டு குறைந்திருக்கிறது என்பதற்கு விளக்கம் காணப்படவில்லை. லைன் லாஸ் இல்லாமல் கவனித்துக்கொள்ள தனி அதிகாரிகளை நியமித்திருக்கிறோம். அவர்கள் என்ன செய்தார்கள் என்பதற்கு விளக்கமில்லை. மேலும் இதைக் குறைக்க மின்சார வாரியம் கவனம் செலுத்த வேண்டும்.

1981 ஆம் ஆண்டில் 25,714 அரிசன குடியிருப்புகளுக்கு மின் வசதி அளிக்கப்பட்டதைப் பாராட்டுகிறேன். கடந்த சில மாதங்களுக்கு முன்பு சில இடங்களுக்குச் சென்று பார்த்தபோது, அங்கொன்றும், இங்கொன்றுமாக விளக்குகள் எரிவதைப் பார்த்தேன். மேலும் லோ வோல்டேஜ் இருக்கிறது. இப்படிப்பட்ட சிறிய குறைகளைத் தீர்த்து, ஏழைகள் நல்ல முறையில் மின்சாரத்தைப் பயன்படுத்த வழி வகைகள் செய்ய வேண்டும். சமுதாயத்தில் நலிவுற்ற மக்கள் வாழும் 4.05 லட்சம் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதைப் பாராட்டுகிறேன். நலிவுற்ற மக்களுக்காக இந்த அரசு செய்கின்ற நல்ல காரியங்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அட்டைப் பட்டியல் முறை—இதை இன்றைக்கு ஏதோ அவசரக்கோலத்தில் கொண்டு வந்துவிட்டோம். தமிழ் நாடு மின்சார வாரியத்தில் இதுநாள்வரை அமுலில் இருந்து வந்த பில் முறை மாறி, அட்டைப் பட்டியல் முறை 1—1—1982 முதல் அமுலுக்கு வந்துள்ளது. இந்த முறையை அவசரக் கோலத்தில் புகுத்துகின்ற ஆர்வத்தில் தக்க கவனமும், முன் ஏற்பாடுகளும் செய்யாததால், நுகர்வோர்களுக்கு மிகவும் கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இது அரசுக்குத் தெரியுமா? வாரியத்தில் பணி புரியும் அலுவலர்களுக்கே இந்த முறையில் போதிய அவகாசமும், பயிற்சியும் அளிக்காததால், அவர்களுக்கு இந்த முறையில் போதிய தெளிவும், விளக்கமும் இல்லை என்று தெரிகிறது. மேலும் இந்தப் புது முறையால் வாரியத்தில் பணி புரியும் தொழிலாளர்கள் நலன் பாதிக்கப்பட்டிருப்பதால், சில சங்கங்கள் நீதி



மன்றத்தில் வழக்கு தொடுத்திருப்பதாகத் தெரிகிறது. இதற்கு நியாயம் காணும் முன் இந்த முறையைப் புகுத்துவதன் காரணம் என்ன? நீதிமன்றத் தீர்ப்பு வாரியத்திற்குப் பாதகமாக வந்தால், இந்த முறையின் கதி என்னவாகும் என்பது புரியவில்லை. ஆகவே ஸ்பாட் பில்லிங் நல்ல திட்டமென்றாலும், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் பல கோளாறுகள் இருக்கின்றன. எனக்கு ஸ்பாட் பில் வந்தது. அதில் வேறொருவர் பெயர் எழுதிக்கொண்டு வந்தார்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

(முற்பகல் 11-50)

எனக்குக் கொடுக்கின்ற பில்லை எனக்குக் கொடுக்காமல், வேறு ஒருவருடைய பில்லை என்னிடம் கொண்டு வந்தார்கள். என்னுடையது இல்லை என்று சொன்ன பிறகு கொண்டு போனவர்கள் இதுவரை திரும்பி வரவில்லை. இப்படி பல கோளாறுகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் போக்க வேண்டும். 100 கோடி ரூபாய் நாம் நிதி உதவி அளித்திருக்கிறோம். ஆனாலும் முழுப் பலன் ஏற்படவில்லை. 117 கோடி ரூபாய் ஒரு வருடத்திற்குச் செலவு செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. இதைத்தான் அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு மக்களுடைய ஏறக்குறைய 117 கோடி ரூபாயை விரயம் ஆக்குகிறோமே, ஏன் இதை நாம் தனியாரிடம் விடக் கூடாது என்று கேள்வி கேட்டார். தொழிலாளர்களுடைய நன்மைக்காக, அவர்களுடைய பாதுகாப்பு கருதித்தான் நாம் இன்றைக்கு தொழில்களைத் தேசியமயமாக்க வேண்டுமென்று நினைக்கின்றோம். இன்றைக்கு தேசியமயமாக்கப்பட்டிருப்பதால் தான், அரசு பல சலுகைகளை தொழிலாளர்களுக்காக அறிவிக்கிறது. தனிப்பட்டவர்களிடம் இருந்தால், இம்மாதிரி சலுகைகளை தொழிலாளர்கள் எதிர்பார்க்க முடியுமா? அரசியல்வாதிகள் தொழிலாளர்களைப் போராட வைக்கிறார்கள். அவர்களுடைய கடமையைச் செய்துவிட்டு, உரிமை வேண்டி, போராட வேண்டுமென்று அவர்கள் தொழிலாளர்களிடம் சொல்வதில்லை. இன்றைக்கு நான் கட்சி ரீதியாகப் பேசவில்லை. தனிப்பட்ட முறையில் சொல்கிறேன். அரசியல்வாதிகள் தொழிலாளர்களிடம் கடமையைச் செய்துவிட்டு உரிமைக்குப் போராட வேண்டுமென்று சொல்ல வேண்டும். அந்த நிலைமையை உருவாக்கினால், மின்சார வாரியம் நல்ல முறையில் செயல்படும். மக்களுடைய வரிப் பணமும் வீணாகாது. இன்னும் சில கருத்துக்களைச் சொல்ல நேரம் இல்லை. ஆகவே இத்துடன் என் உரையை முடித்து அமைகிறேன்.

DR. M. A. MUTHIAH CHETTIAR : Mr. Vice-Chairman, Sir, I request you to allow me to speak in English.

First of all, I must congratulate the Hon. the Minister for Electricity on the elaborate statement that he has made. He has furnished many important details which would be of help to us in the debate. I would like to assure him that this House will always support him in all the measures that he takes. He has enumerated a number of measures which would benefit the workers of the Electricity Board. I think he has been very generous. I hope that the workers would be very grateful to him for the generosity shown towards them and that they would do hard work and thereby bring good results and also reduce the losses.

Sir, I am an old man and over the past 40 or 50 years I have been for many years a Member of the Legislative Assembly and also a Member of this Upper House. I remember that once the late Sir C. P. Ramaswami Iyer, even while formulating a hydro-electric project, stressed the importance of thermal stations. We should take note of the fact that there is a limit to our having hydro-electric projects in this country. Beyond that, we can only raise the height of some dam here and some other dam there.

Sir, on an earlier occasion, I pointed out that there should be perfect co-ordination between the Hon. the Minister for Irrigation and the Hon. the Minister for Electricity. Now, I am glad to find that both the Ministers accompany the Hon. the Chief Minister whenever he goes to attend important conferences on matters like the Cauvery Waters dispute. I hope that, with the interest taken by the Prime Minister of India in the matter, the Cauvery Waters dispute would be resolved and that we would be able to raise the height of the Mettur Dam also. I remember the time when Sir Arthur Page and Sir R. A. Krishnaswami camped for about three months in Uthagamandalam and brought about an agreement to be effective for fifty years. That agreement has now been given the go-by in the name of the politics of Karnataka. I hope that the Prime Minister of India



and the Government of India will do justice in this matter. I am sure that both the Houses of the Legislature of Tamil Nadu and the public of Tamil Nadu will support this Government in the endeavours that they make in the matter at the meetings of the National Development Council and in other forums.

Sir, I want to mention that we should have many, many more thermal stations in our State. My own view is that every Municipality must have a separate thermal station. I would like to mention to the Hon. the Minister for Electricity that even Uthagamandalam, at first, had only a small thermal station. It existed on a site a short distance off the Railway station there. It was in existence before the first hydro-electric station was set up near the water falls. The first hydro-electric station itself was a small one. It was only later that the Pykara project, Singara project and the Kundah Projects I and II, came into being. Therefore, I would like to suggest that every Municipality should have a thermal station. Then, the task of collecting consumption charges from the consumers will also be simplified. Even if the Municipalities have their own thermal stations, the control of the Chairman, State Electricity Board and that of the Chief Engineer, State Electricity Board can be there. If the Engineer in charge of thermal station in a Municipality is made a provincialised officer, he can be changed from time to time and transferred to other places according to the exigencies of service. Now, the Electricity Board has got a number of sub-stations. Still, the number of sub-stations is not adequate and they are also not functioning effectively. Therefore, my own view is that every Municipality should have a thermal station. Even Panchayats which have a population of more than 20,000 can have their own thermal stations. The Municipal Chairman or the Special Officers will have control over the production and distribution of electricity in that area. Now the Electricity Board through its Chief Engineer, Distribution and Production, and under the able chairmanship of a very senior officer, who has held positions in the rank of Member, Board of Revenue, is doing good work. What I would like to bring to the attention of the Hon. Minister is that the thermal stations should be enormous in number, each of them producing about 100 or 120 M.W. Just as the Taj Coromandel Hotel has its own generation unit, the Municipalities like Vellore, Arakonam and Chengalpattu can have thermal

(Dr. M. A. Muthiah Chettiar) [1982 பிப்ரவரி 20

stations and they should be held responsible for collecting the charges for energy consumed. If they commit default, we will be able to fix the blame on them.

One other matter I would like to refer to is this. I do not represent any Constituency here. Unfortunately, there is power shut-down between 6 and 12 on Sundays. I would like to suggest that they can choose any six-hour period other than this, because on marriage days, the stoppage of electricity supply causes much inconvenience. I have said this a number of times. In Karaikudi area, they do not stop supply between 6 a.m. and 3 p.m. on marriage days and also between 6 and 11 p.m. the previous day. The Karaikudi Group also works under the same Chairman and they have done it. I am saying this only for adoption in other areas also.

The main point I want to stress is that thermal stations should be there in several places all over the State. If such thermal stations are started, the problem of shortage of electrical energy will be solved. The energy from thermal station will augment the energy produced from our Hydro-electric stations. Special efforts should be made to see that the bills are collected promptly and arrangement should be made to disconnect supply of energy if there is default. This is properly done in the Telephones Department and if the charges are not paid within 15 days of the date of the bill, the disconnection is made promptly. Though the State Government have nothing to do with the Telephones Department, the only difficulty with them is that the billing department is at one place and the Office for collection is located at another place. Even after payment is made, sometimes dis-connection is made by them. The Telephones Department should avoid such things and I mentioned this even during their Centenary Celebrations. Such prompt collection and disconnection in the case of defaulters should be in the Electricity Board also. Thank you very much.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக் களைச் சொல்ல விழைகின்றேன். 1927 ஆம் ஆண்டு அமைந்த பின் ஆண்டு 156 மெகாவாட் மின்சாரம் தயாரித்துக் கொண்டிருந்த நிலை மாறி, 55 ஆண்டு காலத்தில் பைக்காரா, மேட்டூர், பாபநாசம், பேசின் பிரிட்ஜ் போன்ற திட்டங் களைத் தீட்டி நிறைவேற்றி இன்றைக்கு 2,200 மெகாவாட் உற்பத்தி செய்யும்



1982 பிப்ரவரி 20] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

அளவுக்கு வந்திருக்கிறது. இப்படி உற்பத்தி செய்வதில் மகாராஷ்டிரா வுக்கும், உத்தரப்பிரதேசத்துக்கும் அடுத்து தமிழகம் இருப்பது பெருமைக் குரியது. கிராமப்புறங்களுக்கு மின்சாரம் வழங்குகிற திட்டத்தைப் பொறுத்த வரையில், பஞ்சாப் ஹரியானாவுக்கு அடுத்து இருந்தபோதிலும் 15,525 கிரா மங்களுக்கு நாம் மின்சாரம் வழங்கியிருக்கக்கூடிய நிலையை எண்ணிப் பெருமைப்படாமல் இருக்க முடியாது. அதோடு மாத்திரமல்லாமல், 47,427 சிறு குடியிருப்புகளுக்கும் மின்சாரம் வழங்கியிருக்கிறோம். 1971-72-ல் தமிழ கத்தில் 50 லட்சம் குடிசைகளும், சென்னையில் 1 லட்சம் குடிசைகளும் இருந்த நிலையில் அந்த ஏழைகளும் மின் ஒளி பெற வேண்டுமென்ற நல்லெண் ணத்தின் அடிப்படையில் 200 கோடி ரூபாய் அதற்காக ஆனாலும் கூட பரவா யில்லை என்று சொல்லி, அரசு எடுத்துவரும் நடவடிக்கை பாராட்டுதற் குரியது. பத்து ரூபாய் முன்தொகை கட்டிவிட்டு பிறகு மாதந்தோறும் 2½ ரூபாய் கட்டினால் அவர்களும் மின் ஒளி பெற முடியும் என்கிற நிலையை உருவாக்கியிருப்பது வரவேற்கத்தக்கது. 1980-81-ல் 117 கோடி ரூபாயும் 1981-82-ல் இன்னும் அதிகமாக அதாவது 122 கோடி ரூபாயும் செலவாகும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(நண்பகல் 12-00)

அதுமட்டுமல்ல, மின்சாரக் கட்டணத்தை கட்டாதே என்கிற ஒரு குரலும் இருக்கும்போதும், எப்படியாவது அவர்களிடமிருந்து வசூலிக்கும் முயற்சியில் 13.14 கோடி ரூபாய் அளவிலே வசூலித்திருக்கிற திறமைக்காக இந்த வாரி யத்தை நான் மிகவும் பாராட்டியாக வேண்டும். இந்த சிரமத்தின் அடிப் படையிலேதான் ஒரு சிந்தனை, தனியாரையும் இதற்குத் துணைக்கு அழைக்க லாம், அவர்களுடைய உதவியையும் நாடலாம் என்கிற நிலைமை ஏற்பட்டிருக் கிறது. ஒரு தாயினுடைய நிலையிலே இருந்து குழந்தைகளைப் பார்க்கிற போது பல தாய்மார்கள் அன்பைச் செலுத்துகிறபோதும் கூட, சில சமயங் களிலே ஆத்திரத்தை பெற்றோர்களுக்கு உருவாக்கும் நிலைமை ஏற்பட்டு, அதற்கு சில தாய்மார்கள் சில நேரங்களிலே மிகவும் கோபமாக நடவடிக்கை களை மேற்கொண்டாலும், பெரும்பாலும் அன்பையே காட்டுவதுபோல, அந்தக் காரணத்தின் அடிப்படையிலே, இந்த வாரியத்தினுடைய நடைமுறை மேலும் சிறப்படைய மக்களின் ஒத்துழைப்பை இந்த அரசு பெறும் என்று நான் நினைக்கிறேன். தனியார்கள் தயாரிப்பது என்று சொல்லும்போது, 300 மெகாவாட் அளவிலேதான் தமிழ் நாட்டிலே தனியார்கள் தயாரிக்கி றார்கள். ஏன் அவ்வளவு குறைவாக ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதையும்,

அதிலே அவர்களுக்கு என்ன சிரமம் இருக்கிறது என்பதையும் பார்த்து,
அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து அவர்கள் மேலும் அதிகப்
படியாக உற்பத்தி செய்யும் நிலைமைகளை உருவாக்கி, அந்த முறையிலே பல
தொழிலதிபர்கள் ஈடுபடுவதற்கு வழிவகைகளைக் காணும் வகையிலே அரசு
நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். திட்டங்களின் வேகத்தையும்
நாம் விரைவுபடுத்த வேண்டும். நமக்கு மின்சாரத்தின் தேவை அதிகமாக
இருக்கிறபோது, புதிய திட்டங்களை மேற்கொண்டிருக்கிற நாம் அந்தத்
திட்டங்களை விரைந்து முடிக்க வழிவகைகளைக் காண வேண்டும். உதா
ரணத்திற்கு 'பெல்' மஹாராஷ்ட்டிராவில் பார்லி என்ற இடத்திலே அவர்கள்
ஒரு 'டாங்க் ப்ராஜெக்ட்' என்ற முறையிலே அதற்கு அவர்களே முழுப்
பொறுப்பையும் எடுத்துக்கொண்டு 36 மாத கால அளவிலே அதை முடித்தி
ருக்கிறார்கள். சாதாரணமாக ஒரு திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று
சொன்னால், அதற்குத் தேவைப்படும் ஜெனரேட்டர், மின்சாரம் வழங்கும்
நிலைமை ஏற்படவேண்டும் என்று சொன்னால், 5 ஆண்டு காலமாகும்.
அவ்வாறு இல்லாமல் திட்ட காலத்தைக் குறைக்க நடவடிக்கைகளை மேற்
கொள்ள வேண்டும். அதோடு, திட்டம் போடும்போது, 500 மைல்கள் என்
றெல்லாம் கூட போட்டு, செலவைக் குறைக்க வேண்டும் என்று அந்த நோக்கத்
திலே போகும்போது அதனால் மிகுந்த 'லைன்-லாஸ்' ஏற்படுகிறது.
டிரான்ஸ்மிஷன் லாஸ், டிஸ்ட்டிரிபூஷன் லாஸ் எல்லாம் ஏற்படுகிறது.
இவைகள் இல்லாமல் திட்டத்திலே அதைச் சரிவரக் கொண்டுவரும் முயற்சியை
நாம் மேற்கொள்ள வேண்டும். இப்போது லைன் லாஸ் என்பது 18 சதவீதமாக
இருக்கிறது. அதற்கு அடுத்த கட்டம் 15 சதவீதம். அதற்கும் அடுத்த
கட்டம் 12 சதவீதம் என்று இருக்கிறது. நாம் அதை 12 சதவீதம் என்ற
அளவிலே குறைக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். வெளிநாடுகளி
லேயும் 8 முதல் 12 சதவீதம் வரையில் 'லைன் லாஸ்' இருக்கிறது. ஆகவே,
முழுவதையும் குறைக்கும் முயற்சி என்பது பெரிய பணச்சுமையை ஏற்ப
டுத்தும். குஜராத் மாநிலத்தில் பம்ப்செட்களை முறையாகப் பார்த்து,
குழாயின் அளவு, பம்புகளின் 'ஃபுட்' வால்வ் இவைகளையெல்லாம் மாற்றி
மின்சாரத்தை வழங்கி, அதை விவசாயிகள் உபயோகப்படுத்துகிறார்கள்.
இந்திய அரசின் மின்சக்திக் குழு மின் இழப்பு இல்லாத நிலைக்கு முக்கியத்
துவம் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. குறிப்பாக வெளி
மாநிலங்களினுடைய உதவியை நம்முடைய மின்சாரப் பிரச்சினையைப்
போக்குவதற்கு நாம் பெற வேண்டும். ஒகேனக்கல் திட்டத்தைக் குறித்து
ஆண்டுக்காண்டு பேசி, அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால்
அதற்குமுன் இப்போது மேகதாது வந்தது நாம் தாதுக்கு தூது போகவேண்டிய
நிலையிலே இருக்கிறோம். இப்போது அவர்களுக்கு மின்சாரம் அதிகமாகத்
[illegible] ஒரு காலத்திலே நமக்கு உறுதுணையாக [illegible]



பார்களேயானால், நாம் இப்போது தன்னிறைவு அடைந்து அவர்களுக்கும்
உதவிகரமாக இருக்கும் நிலைமைக்குக்கூட வந்திருப்போம். இதில் அண்டை
மாநிலங்கள் கொஞ்சம் கருத்து செலுத்த வேண்டும். கேரளத்தில் பாண்டி
யாறு-புன்னம்புழா, சோழக்திபுழா ஆகிய திட்டங்களை ஒருங்கே நாம் எதிர்
பார்க்கிறோம். இதில் அனைத்து மாநிலங்களும் ஒத்துழைக்க வேண்டும்.
மத்திய அரசு கூட இந்த ஹைட்ரோ ஸ்டேஷன் போன்றவைகளில் ஒரு
ராயல்ட்டி முறையைக் கொடுத்துவிட்டு, அனைவரும் பங்குகொள்ளும்
முறையில் மாற்ற வழி வகுக்க வேண்டும். இலையென்றால் இன்னும் பத்து
அல்லது இருபது ஆண்டுக் காலத்தில் மாநிலங்களுக்குள்ளே இருக்கும் இந்தப்
போட்டி ஏதோ ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் இடையே
இருக்கும் தகராறு போல வளர்ந்து, எப்படி 'நாங்கள் ஒரு சொட்டு தண்ணீர்
கூட தரமாட்டோம் என்று அவர்கள் சொல்கிறார்களோ அதுபோலச் சொல்லி,
இங்கே நாமும் நெய்வேலியில் உற்பத்தியாகும் மின்சாரத்தில் ஒரு மெகாவாட்
கூட தரமாட்டோம்'' என்று இங்கே இருக்கும் அமைச்சர் அவர்கள் சொல்லும்
காலம் வந்துவிடும் நிலைமைகள் எல்லாம் ஏற்படும். அதனாலே மத்திய
அரசு இதிலே தக்க கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன். நெய்வேலியைப் பொறுத்தவரையில், நம்முடைய 'ராயல்ட்டி'
வேண்டாம் என்று சொல்லிவிட்டோம். அதனாலே அங்கே இரண்டாவது
கட்டத்திலே உற்பத்தியாகும் 630 மெகாவாட் முழுவதையும் தமிழகம் பெறுகிற
நிலைமையை உருவாக்க வேண்டும். அதோடு புதிய திட்டங்களையெல்லாம்
நாம் மேற்கொண்டிருப்பதும், இந்த மின்சாரத்தின் தேவையை உணர்ந்து
இந்த அரசு செயல்படுவதைக் காட்டுவதாகிறது. தூர நோக்குப் பார்வை
யோடு, கடல் நீரிலிருந்து மின்சாரம் எடுக்கும் முயற்சியை இந்த அரசு எண்ண
வேண்டும். அப்படி எண்ணி 25 மெகாவாட்டிலே நாம் ஒரு முயற்சியை
மேற்கொண்டதைக்கூட, அவர்கள் ஏற்றுக்கொள்ளாத நிலையிலே தற்போது
ஒரு மெகாவாட் நிலையிலே செய்வதற்கு, ஐ.சி.ஐ. நிறுவனமும், மின்சார
வாரியமும், பாரத மின்கல நிறுவனமும் சேர்ந்து இதில் முயற்சி எடுத்து
வெற்றி பெற பாடுபட வேண்டும். சாணக்கு மரத்திலேயிருந்து மின்சாரமும்,
'பையோ-கேஸ்', காற்று விசை, போன்ற புதிய முயற்சிகளுக்கெல்லாம் வழி
காண வேண்டும். குறிப்பாக 1940-50-லே மின்சாரம் என்பது 60 சதவீதம்
வீடுகளுக்கும், 40 சதவீதம் தொழிற்சாலைகளுக்கும் என்று இருந்தது.
இப்போது 80 சதவீதம் தொழிற்சாலைகளுக்கும், 20 சதவீதம் வீடுகளுக்கும்
என்று உபயோகப்படுத்தும் நிலை இருக்கிறது. மின்சாரத்தினுடைய
தேவையை மனதில் கொண்டு, தொழிற்சாலைகளுக்கு அவர்கள் உபயோகப்
படுத்தும் மின்சாரத்தைப் பொறுத்தவரையில், ஒரு கட்டுப்பாட்டை நாம்

விதிக்க வேண்டும். இரவு 6 மணி முதல் 9 மணி வரையிலேயும், காலை 6 மணியிலிருந்து 10 மணி வரையிலேயும், சாதாரணமாக வீடுகளிலே அதிகமாக மின்சாரம் உபயோகப்படுத்துவார்கள். ஆகவே, இந்த நேரத்தைப் பொறுத்தவரையில், தொழிற்சாலைகளுக்கு இரண்டு மீட்டர்களைப் போட்டு, இந்தக் குறிப்பிட்ட நேரத்திலே பயன்படுத்தும் மின்சாரத்திற்கு அதிகக் கட்டணம் என்றும், இவ்வளவு குறிப்பிட்ட அளவுதான் மின்சாரம் இந்த நேரத்திலே உபயோகப்படுத்த முடியும் என்ற அளவிலேயும் ஒரு கட்டுப்பாட்டை வைத்தால், சிறப்பாக இருக்கும் என்றும் அதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இப்போது டாட்டா ஃபண்டமென்டல் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் இருப்பதைப் போல, தமிழகத்திலும் ஒரு ஃபண்டமென்டல் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் பல்கலைக் கழகத்தின் சார்பிலே ஏற்படுத்தி இதுபோன்ற ஆராய்ச்சிகளுக்கு நாம் மிகவும் துணை நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்பெல்லாம் காப்பர் கம்பிகளை நாம் உபயோகப்படுத்தினோம். பிறகு அலுமினியம் கம்பிகளை நாம் உபயோகப்படுத்தினோம். இதைப்போல 'ரெசிஸ்டென்ஸ்' குறைவாகவே இருப்பதற்கு வேறு ஏதேனும் மாற்று முறை உண்டா என்பதை இந்த ஆராய்ச்சியின் மூலம் நாம் கண்டுபிடிக்க வேண்டும். மேலும் லைன் லாஸைக் குறைக்கும் முயற்சியிலே ஈடுபட வேண்டும் என்றும், நாம் மின்சாரத்திற்கு ஆலோசனைக் குழு வைத்திருப்பதைப் போல எனர்ஜிக்கும் குழு வைக்க வேண்டும் என்று கேட்டுக்கெள்கிறேன். எனர்ஜி என்பது மின்சாரம் மட்டுமல்ல, பெட்ரோல், கோல் போன்ற பலவும் இருப்பதால் எனர்ஜிக்காக, எனர்ஜியைப் பயன்படுத்துவதற்காக பொதுவாக ஒரு மேல்மட்டக் குழுவை அமைத்துச் செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒட்டுமொத்தமாக சிறந்த முறையில் பணியாற்றும் தமிழக மின்சார வாரியத்திற்கு மக்கள் அதனுடைய சிறப்பான சேவையை உணர்ந்து துணை நிற்க வேண்டும். மின்சார வாரியம் இவ்வளவு பளுவையும் சுமந்திருக்கிறபோது அவர்களும் இன்னொரு பக்கத்திலேயிருந்து குத்தாமல் உதவி புரிய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன், வணக்கம்.

*திரு. க. மீனாட்சிசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல அனுமதி அளித்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எப்போதுமே இந்த விவாதங்களுடைய முடிவிலேதான் சில சலுகைகளைச் சொல்லும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றையதினம் விவாதத்தின் ஆரம்பத்திலேயே சில சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். 59 ஆயிரம்



ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தை விரிவுபடுத்தும் திட்டம் பற்றியும், பொறியாளர்கள் சொந்தத் தொழில் செய்வதற்காக அவர்களுக்கு 5 ஆண்டு கால விடுப்பு வழங்குவது பற்றியும், ஊழியர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தும் திட்டம் பற்றியும், சலவைப்படி வழங்கும் திட்டம் பற்றியும் அறிவிப்பு செய்தார்கள். அதற்காக தொழிலாளர்களின் சார்பிலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையோடு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களின் பேரில் வாரியம் எடுத்த நடவடிக்கைகளை விளக்கி அந்தக் குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலவையிலே, 1981-ல் பிப்ரவரி 26 மற்றும் 27 ஆகிய நாட்களிலே மின்சார வாரியத்தின் மீது விவாதம் நடைபெற்றிருக்கிறது. ஆனால் இங்கே தரப்பட்டிருக்கும் இந்தக் குறிப்பிலே, இங்கேயிருக்கும் மேலவை உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களுக்குப் பதிலாக, அந்தக் கருத்துக்களை ஏற்று இன்னின்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்ற குறிப்பு இல்லை. பேரவையிலே பேசிய உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு என்னென்ன செய்யப்பட்டிருக்கிறது என்று பட்டியல் போட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மேலவையிலே சொன்ன கருத்துக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை என்னென்ன என்ற குறிப்பு வெளியிடப்படவில்லை. ஆகவே, இந்த மேலவை தொடர்ந்து அலட்சியப்படுத்தப்படுகிறதோ என்ற எண்ணம் எனக்கு வருகிறது. நான் மற்றொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டு 'டைரி' வெளியிடப்பட்டிருக்கிறது. அது நமக்கெல்லாம் வழங்கப்பட்டிருக்கிறது. இதிலே முக்கியமானவர்களுடைய தொலைபேசி எண்கள் என்று சில எண்கள் தரப்பட்டிருக்கின்றன. ஆனால் மேலவை உறுப்பினர்களின் தொலைபேசி எண்கள் வரவில்லை. அண்ணன் எஸ். ஆர். இராதா அவர்கள் தொலைபேசி எண் இல்லை, அரசு கொறடா அவர்களின் தொலைபேசி எண் இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்களின் தொலைபேசி எண் இல்லை. இப்படியே மேலவை உறுப்பினர்களின் தொலைபேசி எண்கள் வரவில்லையென்று சொன்னால், இந்த மேலவை உறுப்பினர்கள் முக்கியமானவர்கள் இல்லையா? மேலவை தேவையில்லையா? அப்படி தேவையில்லை என்று இந்த அரசு கருதுகிறதோ, இந்த அரசின் நோக்கம் அப்படியிருக்கிறதோ என்ற வகையிலே ஐயப்பாடு எனக்கு வருகிறது.

திரு. எஸ். ஆர். இராதா: என்னுடைய பெயரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதாலே சொல்கிறேன். அவர்கள் எந்த நோக்கத்திலே பார்த்திருக்கிறார்களோ அந்த நோக்கத்திலே தான் நானும் பார்த்தேன். என்னைப் பொறுத்தவரையில் எனக்குத் தொலைபேசி கிடையாது; வர வில்லை. தம்முடைய முகவரியைப் போடும் இடத்திலே தம்முடைய தொலை பேசி எண்களைப் போட்டிருக்கிறார்கள். பேரவை உறுப்பினர்கள் பெயர் போடும்போது, முகவரியைப் போடும்போது தொலைபேசி எண்களைப் போடாததால் அவர்களுக்கென்று தனியாகப் போட்டிருக்கிறார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தொலைபேசி கிடையாது. எனக்கு இருக்கிறது. ஆனால் என்னுடைய தொலைபேசி எண் வரவில்லை. அரசுக் கொறடாவுக்கு தொலைபேசி இருக் கிறது, அது வரவில்லை.

(பிற்பகல் 12-10)

இங்கே பல்வேறு சாதனைகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதனையொட்டி ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மின் வாரியத்தில் தொடர்ந்து நட்டம் ஏற்படுகிறது. இந்த ஆண்டு ரூ. 117 கோடி நட்டம் என்றும், அடுத்த ஆண்டு ரூ. 125 கோடி நட்டம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம், எனக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் பார்த்தால், அங்கே பின்பற்றப்படும் காண்ட்ராக்ட் முறைதான். காண்ட்ராக்ட் முறையின் மூலம் மிகப் பெரிய நட்டம் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். எண்ணூர் மின் நிலையத்தில் திட்டமிட்டபடி உற்பத்தி இல்லை. பாதிதான் உற்பத்தி செய்யப்படுகிறது. 1977 ஆம் ஆண்டில் தீபாவளி முன் பணம் கேட்டு, தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினார்கள். அதன் காரணமாக அங்கே பணியாற்றிக் கொண்டிருந்த 400 தொழிலாளர்களை வெளியேற்றி னார்கள். அதற்குப் பின்னால் என்ன செய்தார்கள் என்றால், 400 பேர் களைத் தினக் கூலியாக நியமித்திருக்கிறார்கள். அதையும் காண்ட்ராக்ட் முறையிலே நியமித்திருக்கிறார்கள். ஒரு நாளைக்கு தினக்கூலிகளுக்கு ரூ. 15 ஊதியம் அளிக்கப்படுகிறது என்று கணக்கிலேதான் எழுதப்படுகிறது. ஆனால் அங்கே உண்மையிலே என்ன நடக்கிறது என்றால், தினம் ரூ. 8 தான் தினக் கூலிக்குச் செல்கிறது. பாக்கி 7 ரூபாய் காண்ட்ராக்டர்களாலும் பெரிய



அதிகாரிகளாலும் சேர்ந்து கொள்ளையடிக்கப்படுகிறது. ஒரு மாதத்திற்கு ரூ. 1,18,000 செலவாவதாகக் கணக்கில் காட்டப்படுகிறது. எனக்கு வந்த தகவலின் அடிப்படையில் நான் இதைக் குறிப்பிடுகிறேன். எனவே, இது உண்மையாக இருக்குமானால், இத்தகைய ஊழல் நடைபெறுவதை உடனடி யாகத் தடுப்பதற்கு மாண்புமிகு. அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தூத்துக்குடி மின் நிலையத்தில் மூன்றாவது கட்ட உற்பத்தி துவக்கப்படவே இல்லை. ஆனாலும் பல கோடி ரூபாய் காண்ட்ராக்ட் முறையில் செலவழிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. இதன் மூலம் பண விரயம் ஏற்படுகிறது என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக் கிறேன்.

மின் வாரியத்தில் நட்டமில்லாமல் இருக்கும்படியான நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும். அதைச் செய்யாமல் நட்டம் ஏற்படுகிறது என்ற காரணத்தைச் சொல்லி, மின் உற்பத்தியைத் தனியாருக்கு விடும் நிலை வரக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். போக்குவரத்துத் துறையிலே கூட நட்டம் வருகிறது என்றுதான் சொல்லப்படுகிறது. அதற் காக அதைத் தனியாரிடம் விடுகிற முடிவை அரசு எடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின் வாரியத்தில் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் பொறுப்புகள் திரப்பப்படாமல் இருக்கின்றன. அங்கே பணியாற்ற வேண்டிய மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 1,80,000. ஆனால் இப்போது பணியில் உள்ள வர்களின் எண்ணிக்கை 91,000 தான். எனவே காலியாக 25,000-க்கும் மேற் பட்ட இடங்கள் திரப்பப்படாமல் இருக்கின்ற காரணத்தால், இன்றைய தினம் தெரு விளக்கைப் பராமரிக்க ஆள் இல்லை. புதிய சர்வீஸ்கள் தர கம்பங்கள் இல்லை, கம்பங்கள் இருந்தாலும் அவைகளைப் பயன்படுத்தி மின்சாரம் வழங்குவதற்கான ஆட்கள் இல்லை. இப்படி அடிப்படை ஊழியர்களைக் குறைத்து, பணிகளைச் சரியாகச் செய்யாமல் போனால் மின் வாரியத்திற்கு எப்படி வருவாய் உயரும் என்றுதான் எனக்குப் புரியவில்லை.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பொறியாளர். அவரே ஒரு எஞ்சினியர். அதன் அடிப்படையில் அடிப்படை ஊழியர்களையெல்லாம் குறைத்து, இருப்பவர்களை வெளியேற்றுகிற இலாக்காவின் நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் கவனிக்காமல் இருக்கிறார் என்று குற்றம் சாட்ட விரும்பு

கிறேன். அவரே ஒரு பொறியாளராக இருப்பதால், அவர் அமைச்சர் பதவிக்கு வந்தது முதல் பொறியாளர்களை மட்டும் வாழ்வாங்கு வாழ வைக் கிறார். அவர்களுக்குத்தான் தொடர்ந்து சலுகைகளை வழங்கிக்கொண்டிருக் கிறார். காரணம் அவரே அந்தப் பொறியாளர் ஜாதி. நான் பொறியாளர் ஜாதியைத்தான் சொல்கிறேன். வேறொன்றும் இல்லை. இன்றைக்குக்கூட தொழில் செய்வதற்காக பொறியாளர்களுக்கு ஐந்தாண்டுக் காலம் விடுப்பு தருகிறேன் என்று அறிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஜாதிகள் நிறைய உருவாகிக் கொண்டிருக்கின்றன.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அலுவல் ரீதியாக ஜாதிகள் இன்றையத் நாட்டில் உருவாகிக் கொண்டிருக்கின்றன என்பதைத்தான் நான் குறிப் பிடுகிறேன்.

அடுத்து, நான் அரசியல் பேசுவதாக தயவுசெய்து கருத வேண்டாம். ஆசிரியர் பிரதிநிதியாக இருந்தாலும், தொழிலாளர்கள் சார்பில் பேசுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மின்துறை அமைச்சராகப் பொறுப்பேற் பதற்கு முன்னால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, மின் வாரியத்தில் 5 தலைமைப் பொறியாளர்கள் இருந்தார்கள். அந்த 5 பேர் களையும் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக அந்தப் பதவிகளில் நியமித்ததாக திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது அன்றைய தினம் சர்க்காரியா கமிஷன் முன் குற்றம் சாட்டப்பட்டது என்பது என்னுடைய நினைவாகும். அதற்குப் பின்னால் இப்போது 12 தலைமைப் பொறியாளர்கள் மின் வாரியத்தில் நியமிக்கப் பட்டிருக்கிறார்களே! இதைப் பற்றி புகார் கூறமாட்டார்களா? எனவே பொறியாளர்களுக்கு வாழ்வளிப்ப தற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைய காரியமாற்றுகிறார்கள் என்பதைக் குறிப்பிடுவதோடு, வேலையில்லாமல் இருக்கும் 27,000 அடிப்படை ஊழியர்களுக்கும் வேலை அளிக்கும் முயற்சியை அவர் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நேரமில்லாத காரணத்தால், பல விஷயங்களை நான் குறிப்பிட வேண்டு மென்று விரும்பினாலும், முடியவில்லை என்று தெரிவித்து, ஒன்றினை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தற்போது அட்டைப் பட்டியல் முறை அமுலுக்கு வந்திருக்கிறது. ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்ட சங்கம் மட்டும் இப்போது அப்பணியை ஏற்று அமுல்படுத்துகிறது. அதற்கு நீதிமன்றத் தீர்ப்பு இருக்கிறது, இடைக்

காலத்தடை இருக்கிறது என்பதெல்லாம் வேறு விஷயம். மூன்று வகையில் 20.000 பேர் பணியாற்றி வந்திருந்ததற்கு மாறாக, இப்போது 7,000 பேர்களை மட்டும் வைத்து அப்பணியை நடத்த திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் இப்போது 4,000 பேர்கள் மட்டுமே பணியாற்றுகிறார்கள். நேர மில்லாததால் சுருக்கமாகச் சொல்லி முடிக்கிறேன். மொத்தம் 40,00,000 பட்டி யல்கள் தயாரிக்கப்பட வேண்டும். 1—1—1982 முதல் 31—1—1982 முடிய அவர்கள் தயாரிக்க வேண்டிய பட்டியல் 40 லட்சம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஜே. தாஸ் குறிப்பிட்ட மாதிரி, தகுதியற்றவர்களை நியமித்ததன் காரணமாக, அவர்கள் தப்பும் தவறுமாகப் பட்டியலைத் தயாரித்திருக்கி றார்கள். அதுமட்டுமல்ல. அவர்கள் தயாரித்த மொத்தப் பட்டியல் 10 லட்சம் கூட இல்லை. அதன் காரணமாக அரசுக்கு ஏற்படுகிற நட்டம் ரூ. 24 கோடி யாகும். அதாவது வசூலாக வேண்டிய நேரத்தில் வசூலிக்கப்படாமல் விடப் பட்ட பணம் பின்னாலே வசூலித்துக்கொள்ளலாம் என்று சொல்லப்படலாம். ஆனால் உரிய நேரத்தில் வசூலிக்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. அதிலும் இந்தப் பணிக்காக நியமிக்கப்பட்டவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. தகுதி இருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு, 4-வது, 8-வது 8-வது படித்தவர்களையெல்லாம் நியமித்திருக்கிறார்கள். அதற்கெல்லாம் என்னி டத்தில் ஆதாரம் இருக்கிறது என்றாலும், நேரமில்லாத காரணத்தால், நான் அவற்றிற்குள் போக விரும்பவில்லை. ஆக, அதிலே ஊழல் நடைபெறுகிறது. அதிலும்கூட தங்களுக்கு வேண்டியவர்களுக்குச் சலுகை அளிக்கும் நிலைதான் இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அட்டைப் பட்டியல் திட்டம் காரணமாக பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். முன்கூட்டியே 30 நாளில் பணம் கட்டலாம் என்றிருந்த நிலை மாறி, இப்போது 15 நாட்களுக்குள் பணம் கட்ட வேண்டும் என்ற நிலை உருவாகியிருக்கிறது. தகுதி இல்லாதவர்கள் பட்டியல் தயாரிப்பதன் காரணமாக, பல்வேறு தவறுகள் ஏற்படுகின்றன. முன் அறிவிப்பு இல்லாமலேயே மின் இணைப்பு துண்டிக்கப் படுகிறது. இரண்டு மாதம் வீடோ கடையோ பூட்டியிருந்தால், அறிவிப் பில்லாமலேயே மின் துண்டிப்பு செய்யப்படுகிறது.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணி அடித்தார்.)

இன்னும் 5 நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன். ஒரே நாளில் பணம் செலுத்திட மக்கள் கூட்டமாகக் குழுமிட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், என்னுடைய சொந்த ஊரான தலைஞாயிறில் அன்றையதினம் கடைத் தெருவில் ஒரே கூட்டமாக இருக்கிறது. வேறு யாரும் அந்தப் பகுதிக்குச் செல்ல முடியாத அளவுக்குப் பணம் கட்டுவோர் அங்கே குழுமி விடுகிறார்கள். அந்தப் பணத்தை மணி யார்டர் மூலம்—காசோலை மூலம்—அனுப்பினால் திருப்பியனுப்பிவி டுகிறார்கள். ஆகவே தலைஞாயிறில் ஒரு செக்‌ஷன் ஆபீஸ் திறக்கப்பட வேண்டும். குறைந்தபட்சம், வசூலிக்கும் அலுவலகமாவது திறக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த வேண்டு கோளைத் தெரிவித்துக்கொள்வதோடு, ஊழியர்கள் குறித்த இன்னொரு விஷயத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

1980 ஆம் ஆண்டில் மின் வாரியத்திற்கும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்திற்கும் இடையே ஏற்பட்ட பேச்சு வார்த்தையில் ஒரு ஒப்பந்தம் உருவாகி, சில கோரிக்கைகளைப் பொறுத்தவரை, 30—3—1980-க்குள் நிறை வேற்றுவதாகவும் மற்றவற்றைப்பற்றி மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவது என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் இதுவரை அந்த ஒப்பந்தப்படி பேச்சு வார்த்தை மேற்கொள்ளப்படவில்லை. மின் வாரியத் தொழிலாளர்கள் தங்களுக்கு மருத்துவப்படி வேண்டும் என்றும், பயணச் சலுகைகள் வேண்டு மென்றும் ரிஸ்க் அலவன்ஸ் வேண்டும் என்றும், தங்களின் வாரிசுகளுக்கு வேலை வேண்டும் என்றும், வீட்டு வசதி வேண்டுமென்றும் கோரி வருகி றார்கள். எனவே ஏற்கெனவே ஒப்பந்தம் செய்தபடி, மீண்டும் அவர்களை அழைத்து அமைச்சர் அவர்கள் பேச வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, காண்ட்ராக்ட் முறையில் மின் வாரியத்திற்கு ஏற்படும் நட்டத்தைத் தவிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். ஒரே ஒரு பிரச்சினையை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மின்வாரியத்தில் வருவாய்ப் பிரிவில் பயன்படுத்தப்படும் லெட்ஜர்கள் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை 6,000 தேவைப்படுகின்றன. அவை அச்சிடப் பட வேண்டும். மின் வாரியத்திற்கு என்று வில்லிவாக்கத்தில் ஒரு அச்சகம் இருக்கிறது. சென்னையிலே அரசுக்குச் சொந்தமான ஒரு அச்சகம்





இருக்கிறது. இவைகளிலெல்லாம் இந்த லெட்ஜர்களை அச்சிடாமல் இவை
களுக்காக மின் வாரியத்தால் டெண்டர் கோரப்பட்டிருக்கிறது. எனக்குக்
கிடைத்த தகவலைத் தர விரும்புகிறேன். மதுரையில் ஒரு அச்சகமும் லெட்ஜர்
ஒன்றுக்கு ரூ. 40 கோரியிருக்கிறது. சென்னையில் உள்ள ஒரு அச்சகம்
லெட்ஜர் ஒன்றுக்கு ரூ. 60 கோரியிருக்கிறது. ரூ. 40 கேட்ட அந்த அச்சகத்
திற்கு இந்தப் பணி தரப்படவில்லை, மாறாக லெட்ஜர் ஒன்றுக்கு ரூ. 60 கேட்ட
அந்த அச்சகத்திற்கே இந்த டெண்டர் அளிக்கப்பட்டிருக்கிறது. இதன்
காரணமாக ரூ. 12 லட்சம் விரயம் ஏற்பட்டிருக்கிறது. அந்த அச்சகத்திற்கு
ரூ. 36 லட்சம் தரப்பட்டிருக்கிறது. ஆகவே நட்டம் என்று சொல்லிக்கொண்டு,
இப்படிப்பட்ட பணிகளில் ஈடுபடுவது முறையல்ல என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அந்த அச்சகத்தின் பெயர் கூட “ நியூ டீல் ” என்று சொல்லப்படுகிறது.
அதிலே மிகப் பெரியவர்கள் எல்லாம் பினாமியாக பங்குதாரர்களாக இருக்
கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. மிகப் பெரியவர்கள் எல்லாம் அதில்
பங்குதாரர்களாக இருக்கிறார்கள் என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது.
எனவே பொதுத் துறையில் உள்ள மின் வாரியத்தில் இப்படிப்பட்ட நட்ட
மெல்லாம் ஏற்படுவதைத் தடுத்திட வேண்டும் என்பதோடு, இப்படி
நட்டம் ஏற்படுவதற்கு வழிவகை செய்துவிட்டு அதற்குப் பின்னாலே அதனைத்
தனியார் துறைக்கு விடலாம் என்று சொல்கிற எண்ணம் அரசுக்கு ஏற்படக்
கூடாது என்று சொல்லி, வாரியத்தைச் செம்மையாக நடத்த வழிவகை
காணுங்கள் என்று சொல்லி வாரியத்திற்கு நட்டம் வராமல் இருக்க, வாரி
யத்தின் வருவாய் நிலையையும் நடைமுறைக் கோளாறுகளையும் ஆராய்ந்து
சரி செய்திட வழிவகை காண அரசு ஒரு உயர்மட்டக் குழு ஒன்றை அமைக்க
வேண்டும் என்ற வேண்டுகோளைத் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்
அவர்களே, மின் வாரியத்தினுடைய நிதி நிலை அறிக்கையின்மீது நான்
சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்
களைத் தெரிவிக்க விரும்புகிறேன். மின் வாரியத்தைப் பொறுத்தவரை, நாம்
அதை ஒரு விநோதமான சூழ்நிலையில் அணுக வேண்டியிருக்கிறது. காரணம்
நட்டம் வருகிறது என்றால், அதற்காக மிகக் கடுமையான விமர்சனத்திற்கு
உள்ளாகிற பல்வேறு அரசுத் துறைகளைப் பார்த்திருக்கிறோம். அரசாங்கமே
ஏற்றிருக்கிற தொழிலாக இருந்தாலும்கூட, நஷ்டம் வந்தாலும் கூட,

[திரு. க. இராமமூர்த்தி] [1982 பிப்ரவரி

(பிற்பகல் 12.20)

பாராட்டு பெறுகிற ஒரு துறை இருக்கிறது என்றால், அது மின்சாரத் துறை
யாகத்தான் இருக்கிறது. அதைப்போலவே இயக்குகின்ற பொறுப்பிலே
உள்ளவர்கள், குறையுள்ளவர்கள் என்ற விமர்சனத்திற்கு ஆளாகாமல் மிகுந்த
திறமை வாய்ந்தவர்கள் என்று கூறும் அளவிற்கு பொறியாளர்கள் தலைமைப்
பொறுப்பு ஏற்றிருந்தாலும், அமைச்சர் அவர்கள் அவைரும் உட்பட திறமை
வாய்ந்தவர்கள் என்று நாம் ஒப்புக்கொண்டாலும், நஷ்டத்திலேதான் நடக்கும்
என்ற நிலை இருக்கிறது. ஆனாலும் அதுபற்றி கடுமையான விமர்சனம்
இல்லாமல் போகின்ற நிலை மின்சாரத் துறை ஒன்றுக்குத்தானே தவிர, வேறு
எதற்கும் இல்லை. காரணம், மின்சார உற்பத்தி, விநியோகம் ஆகிய இரண்டி
லுமே எவ்வளவு நஷ்டம் வருகிறது, எவ்வளவு செலவிடுகிறோம் என்பதை விட
மின்சாரத்தின் வாயிலாக எந்த அளவிற்கு தமிழகத்தினுடைய மற்ற
தொழில்கள் வளம் பெறுகின்றன, நலம் பெறுகின்றன என்பதுதான் முக்கியம்.
இந்த நஷ்டம் மற்ற துறைகளிலே எந்த அளவு ஈடு கட்டப்படுகிறது என்பதிலே
யிருந்துதான் தமிழகத்திலே தொழில் வளர்ச்சி காணப்படுகிறது, சமுதாய
வளர்ச்சி காணப்படுகிறது: இந்த அளவிலே இந்தத் துறையின் நஷ்டத்தை
அதிகமாக கணக்கிலே எடுத்துக்கொள்ள முடியாது. இந்தத் துறையிலே
நஷ்டம் இருந்தாலும்கூட, தனியார் கரங்களிலே இந்தத் துறை இருக்கக்
கூடாது என்பதற்காக மெல்ல மெல்ல நாம் எடுத்த நடவடிக்கைகளை எண்ணிப்
பார்க்கிறேன்.

பல ஆண்டு காலமாக பல்வேறு வழிகளில் மிகுந்த சிரமத்திற்கிடையே
இதை தேசியமயமாக்கியிருக்கிறோம். இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் அளித்த அறிக்கையிலும், அவர் பேச்சிலும் தெரிவித்திருக்கின்ற
கருத்துக்கள், ஆளுநர் உரையிலே அறிவித்திருக்கின்ற கருத்துக்கள் அடிப்படை
யில் ஏற்பட்ட ஒரு சந்தேகத்தை இன்னும் தீர்த்தபாடில்லை. மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள் என்றாலும் கூட, " மின்
துறை மீண்டும் தனியார் கரங்களுக்குச் செல்லாது " It will not be
donationalised என்ற அளவிலே உத்தரவாதம் இல்லாமல் இருப்பது
மனச் சங்கடத்தை ஏற்படுத்துகிறது. இந்தத் துறையிலே எவ்வளவோ
சங்கடங்கள் இருக்கின்றன என்ற பலமான உணர்வை தமிழகத்திலே உள்ள
அத்தனை அரசியல் கட்சிகளுக்கும் உணர்த்தியுள்ளோம். ஆகவே தெளிவு
படுத்த வேண்டியது மாமண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களுடைய
பொறுப்பு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1982 பிப்ரவரி 20] [திரு. க. இராமமூர்த்தி]

தமிழகத்தைப் பொறுத்தவரையில், நாம் எந்த அளவிற்கு மின்சாரத்தை
உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோமோ அதைவிட அதிகமான அளவிற்கு
பல்வேறு துறைகளில் அதனை உபயோகித்துக் கொண்டிருக்கிறோம். மின்
வாரியத்திற்கு நஷ்டம் வருகிறது என்றாலும்கூட, நஷ்டம் வருகின்ற பல்வேறு
காரியங்களைச் செய்கின்றபோது, அதைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்திச்
செய்ய வைத்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே உங்கள் கவனத்திற்குக்
கொண்டுவர விரும்புகிறேன். உதாரணத்திற்கு, விவசாயிகளுக்கு மின்சாரத்தை
தருவது, கிராமங்களில் மின்சாரத்தைக் கொண்டு போக வேண்டுமென்ற முறை
யில், தெரு விளக்குகளுக்கு, வீட்டுக்கு, அதற்குப் பிறகு குடிசைகளுக்கு
மின்சார வசதி செய்து தருவது என்ற திட்டமிடும்போது, நிச்சயமாக பணம்
என்று கணக்கு எடுத்தால் வருவாய் வருமா என்றால், வராது. ஆனால் அதை
செய்கின்றபோது, அதிலே வருகின்ற நஷ்டத்தைத் தவிர்க்க முடியாது. அந்தப்
பின்னணியை வைத்து, இதைப் பரிசீலிக்க வேண்டிய நிலையில் நாம் இருக்
ஒரு சோஷியல் பிரச்சினையாக (Social Problem) எடுத்து அரசு
கிறோம். எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாகப் பரிசீலிக்கின்றபோது, மேற்
கண்ட பிரச்சினைகளை சுலபமாக, எளிதாக தமிழகத்திற்கு நன்மை புரிகின்ற
வகையிலே தீர்க்க என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பார்த்தாக
வேண்டும். ஒரு பக்கத்திலே நஷ்டத்தை அனுபவித்துக்கொண்டு, இன்னொரு
பக்கம் மின்சாரத்தின் பலனை அனுபவிக்க வேண்டுமென்று எவ்வளவு காலத்
திற்கு நாம் எண்ணிக் கொண்டிருக்க முடியும் என்பதை அரசுத் தரப்பிலே நாம்
உணர முடிகிறது. இன்னும் பற்றாக்குறை, தட்டுப்பாடு ஏற்படுகிறபோது,
அதை எப்படி சமாளிப்பது என்ற சங்கடம் ஏற்படுகிறது. சாதாரணமாக மின்
தட்டுப்பாடு ஏற்படும்போது தட்டுப்பாடு கடுமையாக இருக்கிறது என்று அதிகாரி
பூர்வமாக அறிவிப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பே அறிவிப்பு வந்து விட்டது.
அப்படி அறிவிக்கப்படுகிற வரையில், " மின் தட்டுப்பாடு இருக்கிறது " என்று
தகவல்கள் வருவதே இல்லை. " நிலைமைகள் நன்றாக இருக்கிறது, எப்படி
யும் சமாளித்து விடலாம் " என்று பொது மக்கள் மத்தியிலே பீதி உருவாக்கக்
கூடாது என்பதற்காக அப்படிச் சொல்லுவது வழக்கம். மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் 26 ஆம் தேதி ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள்.
" We can manage without power cut என்று சொல்லியிருக்கிறார்கள்.
சொல்லிவிட்டு அவருக்கும் அந்தத் துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கும்
புரியும் அளவிலே நாசுக்காக ஒன்றைச் சொல்லியிருக்கிறார்.

[திரு. க. இராமமூர்த்தி]

He would be meeting the Chief Minister of Andhra Pradesh Mr. Anjiah to ask for the supply of power to tide over anticipated shortage during the summer.

என்று நாசுக்காகச் சொல்லியிருக்கிறார்கள். ஆந்திராவில் முதலமைச்சர் யாராக இருந்தாலும், ஆந்திராவை அணுகுகிறோம் என்ற கருத்தைத் தெரிவித்திருக் கிறார். அவர் டில்லிக்குப் போனாலும் வருகின்ற முதலமைச்சர் நம்முடைய மாநிலத்தின் நிலைமைகளை உணர்ந்தவராக இருப்பார் என்று நம்புகிறேன். ஆகவே இந்தப் பிரச்சினையை அணுகும் கட்டாயம் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னதாகவே சொல்லியிருக்கிறார்கள். பின்னாலே வரவிருக்கிற சங்கடத்திற்கு முன்கூட்டியே அணை போடுவதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வல்லமையானவர். முன்கூட்டியே சொல்லு கிறார் . . . .

" Early clearance of Tamil Nadu Projects " January 21. The Electricity Minister Mr. S. Ramachandran on Wednesday pleaded for quick Central clearance for the proposed five 210 MV thermal stations in Madras and 40 MW station in Mettur.

ஜனவரி 21 ஆம் தேதியே சொல்லியிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர் விலும் வல்லவர். 'பவர் ஷார்ட்டேஜ்' (Power Shortage) வருகிற கள் பொறியியல் துறையிலே எவ்வளவு வல்லவரோ அதைப் போலவே அரசிய போது இந்தப் பிரச்சினையை மாநிலத்தின் பிரச்சினையாக விவாதித்துக் கொண்டிருக்கக் கூடாது, மத்திய அரசின் பிரச்சினையாக விவாதிக்க வேண்டு மென்று நேரம் பார்த்துத் தரத் தெரிகிறது. கொடுத்தவுடனே நம்முடைய 'பவர் கட்' தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கையிலே பேசிக் கொண்டிருக்கலாம். அதையும் தாண்டி இந்தத் திட்டங்கள் தேவை என்பதை நம்முடைய மாநிலத் தில் இருக்கின்ற அத்தனை பேரும் உணர்கிறோம். இதற்காக நடவடிக்கைகள் எடுப்பதிலே அமைச்சர் அவர்கள் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் அத்தனை பேரும் துணையாக இருப்போம் என்பதை இந்த நேரத்திலே சொல்லுகிறேன்.

முக்கியமானதொரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். நெய்வேலியைப் பொறுத்த வரையில், மின்சாரம் அதிக அளவிலே நமக்குத் தந்தாக வேண்டும். அதிக அளவிலே மட்டுமல்லாமல், இந்த மாநிலத்திற்கு எவ்வளவு குறைகிறதோ அதை மத்திய அரசு முதலீட்டிலே நடைபெறுகிற நெய்வேலியில் இருந்தோ, அல்லது கல்பாக்கம் விரைவிலே முடிந்தால், அதிலிருந்தோ மின்சாரத்தைப் பெற வேண்டும் என்பதை மாநில அரசு வலுவாக வற்புறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1982 பிப்ரவரி 20] [திரு. க. இராமமூர்த்தி]

மாநில அரசு அப்படி வற்புறுத்துகிறது என்ற தகவலைத் தந்திருக்கி றார்கள். அதிலே நமக்கு ஒரு உரிமை இருக்கிறது. ஒரு சொட்டு தண்ணீர் கூட தமிழகத்திற்குத் தரமாட்டோம் என்று சொல்லிய கேரளாவில் இன்றைக்கு சூழ்நிலை மாறியிருக்கும்போது, அதைப்பற்றி நாம் பேசுகின்ற நிலையைக் காணுகிறேன். அந்த அரசியலுக்குள் நான் போக விரும்பவில்லை. தமிழகத் தினுடைய தேவைக்குரிய மின்சாரத்தை, மத்திய முதலீட்டிலிருந்து உற்பத்தி யாகின்ற மின்சாரத்திலிருந்து பெற உரிமை இருக்கிறது. அதைக் கேட்டாக வேண்டும், வற்புறுத்தியாக வேண்டும். கேரளாவிலே மின்சாரம் அதிகமாக இருக்கிறது. ஆந்திராவில் தேவைக்கு அதிகமாக இருக்கிறது. கர்நாடகாவில் தேவைக்கு அதிகமாக இருக்கிறது மின்சாரம். சதர்ன் கிரிடில் நமக்கு மட்டும்தான் பற்றாக்குறை இருக்கிறது. மின்சாரத் தேவை இருக்கிறது. அந்தத் தேவையை மத்திய அரசிடம் சொல்லி கண்டிப் பாக மின்சாரத்தைத் தந்தாக வேண்டும் என்று உரிமையோடு கேட்கிற உரிமை நமக்கு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லி, அப்படி உரிமையோடு கேட்கும் நிலைமைக்குப் போகும்போது, இந்த அரசுக்குத் துணையாக நாங்கள் இருப்போம் என்பதைத் தெளிவாகச் சொல்ல விரும்பு கிறேன். அதோடு மட்டுமல்லாமல், கர்நாடக மாநிலத்தில் நடைபெறுகிற மேகதாது திட்டத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நமக்கு மின்சாரம்

"The Centre was also keen on implementing the Hogenakal project. Tamil Nadu had exhausted all its hydel sources and there was no scope for any more new hydel projects in the State."

மேலும் இம்மாதம் 5-ம் தேதி நாளேட்டிலே

"Mr. Ramachandran hinted that Tamil Nadu might have to pay more for the power from Kerala, according to information received in Madras. Kerala had already decided to increase the price. Kerala had held discussions with Karnataka in this connection. No such talks have so far been held for Tamil Nadu."

என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(பிற்பகல் 12-30)

ஆகவே நமக்கு மின்சாரம் தருகின்றவர்கள் விலையை உயர்த்தி நமக்கே தருகின்ற அளவுக்கு பேரம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தி

லிருந்து சில பொருட்கள் மற்ற மாநிலங்களுக்குப் போகின்றன. நாம் சிமெண்ட் கொடுக்கிறோம். பல நேரங்களில் அரிசி கொடுக்கிறோம். நான் சென்ற முறை சொல்லியிருக்கிறேன். இதற்கென்று ஒரு வரைமுறை இருக்க வேண்டும். அவர்கள் அவர்களுடைய தொழிலிலே வருகின்ற பொருள் களுக்கு ஆதாயம் கிடைக்கின்ற அளவுக்கு நமக்குக் கொடுக்க வேண்டுமென்று எண்ணுகின்றபோது, நம்முடைய பொருள்களுக்கும் ஆதாயம் கிடைக்கின்ற அளவுக்கு அவர்கள் கொடுக்க வேண்டும் என்று நாம் கேட்பது நம்முடைய கடமை. காங்கிரஸ் ஆட்சி அங்கே இருக்கலாம். இங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருக்கலாம், அங்கே கம்யூனிஸ்ட் ஆட்சி இருக்க லாம். அங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி துணையாக இருக்கலாம். இப்படிப்பட்ட நிலைமைகளில், சில நேரங்களில் கொடுக்கலாம் என்றும், சில நேரங்களில் கொடுக்கக்கூடாது என்றும் மற்ற மாநில அரசுகள் கருதலாம், அது வேறு விஷயம். ஆனால் அந்த மாநிலத்தினுடைய தேவைகளை அந்த மாநிலத் தினுடைய அரசுகள் வலியுறுத்த வேண்டியது உரிமையும்கூட. இப்படி கேட்ப தனாலேயே தேசியம் கெட்டுவிடும் என்பதல்ல. அந்த அளவுக்கு நாம் சென்று விட முடியாது. காங்கிரஸ் கட்சி பலமுறை ஆட்சிப் பொறுப்பிலே இருந்த போதுகூட, இதுபோன்று பிடிவாதமாகப் போராடி வெற்றி பெற்றிருக்கின்றது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நாம் மிகக் கடுமையாக இருந்தாலும், நம்முடைய பொருளாதார நடவடிக்கைகள் சீர்கெடும். தக்க நடவடிக்கைகள் எடுத்தால்தான், கர்நாடகத்தோடு, கேரளத்தோடு பேசும்போது இந்த மின்சாரத்தைப் பொறுத்தவரையில், ஒரு நிலையான முடிவிற்கு வர முடியும். அந்தந்த மாநிலத்திலுள்ள மாநில அரசுகள் அந்தந்த மாநில மக்களினுடைய தேவைகளுக்கு ஏற்ப நடக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றன. இங்கேயும் நாம் அந்த (Public science must be created) என்ற அளவில் இருக்க வேண்டும். அந்த உணர்வுகளை, நாட்டில் உள்ள நிலைமைகளைப் புரிந்துகொண்டு செயல்பட்டு நம் தேவைகளைப் பெற்றாக வேண்டும். நாம் வெற்றி பெற வேண்டும். அந்த முயற்சிகளிலே நம் அமைச்சர் அவர்கள் ஈடுபட வேண்டும் என கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, அதிகாரமற்ற ' பவர் கட் '. வீடுகளுக்கு மின் கட்டுப்பாடு இல்லை என்று சொல்லியிருக்கின்ற நிலைமையில், இரண்டு மூன்று மணி நேரம் மின்சாரம் இல்லை என்று ஏற்படுகிறது. பரவாயில்லை, வீட்டிற்கு உள்ளே



உட்காராமல், வெளியிலே வந்துகொள்கிறோம். ஆனால் பெரிய பெரிய தொழிற்சாலைகளிலே 'பவர் கட்' கிடையாது என்று சொல்லிவிட்டு, அந்த முடிவை மாற்றுவது என்ற அளவிலே அவ்வப்போது ஒரு மணி நேரத்தில் 10 நிமிடம், 15 நிமிடம், அரை மணி நேரம் என்று நிறுவனங்களில் நிறுத்தப் படுகின்றபோது,—அதன் விளைவாக மின்சாரத் துறை சில நடவடிக்கைகள் எடுக்கப் போகிறது என்றாலும்கூட,—அதன் காரணமாக தொழில் பாதிக்கப் படுகின்றது. தொழில்களின் இயந்திரங்கள் பாதிக்கப்படுகின்றன. இப்படி பாதிக்கப்படும்போது, அரசாங்கத்தின் மீது, மின் துறைமீது வெறுப்பு ஏற்படு கிறது. மின்சார கட், அதாவது மின்வெட்டு இல்லாத நேரத்தில் இப்படி யெல்லாம் சங்கடங்கள் ஏற்படுகின்றன. மின்சாரத் துறையில் சங்கடங்கள் முன்கூட்டியே தெளிவாகத் தெரிவிப்பது நல்லது. அதைக் கண்டுகொண்டும் கூட மறைக்க வேண்டுமென்பது தேவையில்லை.

அடுத்து, பெருமளவுக்கு ' லைன் லாஸ் ' இருக்கிறது என்கிறார்கள். மின் சாரம் கொடுக்கின்றபோது, அதிலே ஏற்படுகின்ற நஷ்டத்தைப் பற்றித் தெரிவித் திருக்கிறார்கள். அதில்கூட எனக்கு நம் மின்சாரத் துறையின்மீது வருத்தம். அதற்கான காரணங்களைக்கூட சொல்லியிருக்கிறார்கள்.

"The loss in 1976-77 was 18.34 per cent. It went upto 18.60 per cent next year and came down to 18.10 per cent in 1978-79. The Chairman of the Board has attributed the higher transmission loss to the fact that 50 per cent of the power-supply was to low-tension lines and 26 to 27 per cent was for agricultu-rists."

ஆகவே விவசாயத்தை வளர்க்க வேண்டுமென்று எண்ணுகின்றபோது, ' லைன் லாஸ் ' ஓரளவுக்கு இருப்பது தவிர்க்க முடியாததாக இருக்கின்றது என்று சொல்கின்ற வாதத்திலே எனக்கு நம்பிக்கை இல்லை. இதற்கு நாம் ஒரு முடிவு எடுத்தாக வேண்டும். ஆகவே அந்த அடிப்படையிலே சில நடவடிக் கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல புதிய தெர்மல் ஸ்டேஷன்களை உருவாக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டும். மத்திய ஆட்சியோடு துணையாக இருந்து, அவர்களிடம் வலிமை யாகப் பேசி, நாம் இங்கே மத்திய அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் உருவாக்குகின்ற மின்சாரத்தையும் நம் தமிழகத்தின் தேவைக்கு எவ்வளவோ அதை வாங்கியாக வேண்டும். உற்பத்திக்கு நமக்குத் தேவைப்படுவதைப் பெறு வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக முழு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. இராமமூர்த்தி] [1982 பிப்ரவரி

இன்னொன்று ' பவர் டேரிஃப் '. மின்சாரக் கட்டண உயர்வு. மின்சார
கட்டண உயர்வைப் பொறுத்தவரையில், நான் தெளிவாகச் சொல்ல விரும்
கிறேன். அதிலே ஒரு அவசியம் இருந்தால், அந்தக் கட்டண உயர்வை தமி
மக்கள் ஏற்றுத்தான் ஆக வேண்டும். அதிலே சங்கடமில்லை. ஆனால் இ
பற்றி சென்ற மாதம் 25 ஆம் தேதி மத்திய அமைச்சர் திரு. கனிகான் சௌத்தி
அவர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள். யூனியன் எனர்ஜி மினிஸ்டர் அவர்க
சொல்லியிருக்கிறார்கள்.

'He said that the States which were surplus in power should
not think in terms of revenue earnings while supplying power to
other States. The Central Government would initiate a dialogue
with the surplus States with regard to supply of power to other
States at a reasonable tariff.''

நாம் மின்சாரக் கட்டணத்தை உயர்த்துகிறோம். நமக்கு மின்சாரம்
தருகின்ற மற்ற மாநிலங்களிலே மின்சாரம் பற்றாக்குறையிலே உள்ள மற்ற
மாநிலங்களுக்கு மின்சாரம் தருகின்றபோது, வியாபாரிகளைப்போல லாப
நோக்கத்தோடு நடத்தக்கூடாது. இது குறித்து மத்திய அரசு, சம்பந்தப்பட்ட
மாநிலங்களை அணுகி, அவர்களை அழைத்துப் பேசுவோம் என்று மத்திய மின்
துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற கருத்து மிகுந்த வரவேற்கக்
கூடிய கருத்து. அதுவும் நமக்குத் துணையாக இருக்கும். இந்தக் கருத்தின்
அடிப்படையிலே நம்முடைய மாநிலமும் துணையாக நின்று அவர்கள் முடி
விற்கு ஏற்ப உறுதுணையாக இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்தவரையிலே, ' ரேஷனலைஸ் ' செய்ய
வேண்டும். எல்லோருக்கும் கட்டணத்தை உயர்த்துவது என்று வராமல், அத
பற்றி ஒரு ' ஒயிட் பேப்பர் (White paper) வைத்து அரசாங்கம் அதை
எப்படி உயர்த்த வேண்டுமென்று கருதுகிறது என்பதைத் தெரிவித்து, அந்த
அடிப்படையிலே எல்லோரும் கலந்து ஒரு முடிவு எடுப்பது நல்லது என்று
சொல்லிக்கொள்கிறேன். மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது என்ற பெய
ராலே ஏழையெளிய மக்கள் பெருமளவுக்குப் பாதிக்கப்படாமலிருக்கின்ற ஒரு
நிலைமையை உருவாக்கியாக வேண்டும். அந்த அடிப்படையிலே சில நடவடிக்
கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக, 'ஸ்பாட் பில்லிங் ' பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே
மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். பல
திருத்தங்கள், மாற்றங்கள் உருவாக்க வேண்டும் என்ற அளவில்தான் இந்த



32 பிப்ரவரி 20] [திரு. க. இராமமூர்த்தி]

இதிலே முழுமையாக
ஸ்பாட் பில்லிங் ' முறையைப் புகுத்தியிருக்கிறார்கள். சொல்லியிருக்கிறார்கள்.
மற்றும்பல மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்று காத்துக்கொண்டிருக்க வேண்டிய அவ
ப்போது நமக்கு மாற்றங்களுக்காகக் சொல்ல விரும்பு
யம் இருக்கிறது என்றாலுங்கூட நான் ஒன்றை இங்கே
றேன. இன்றைக்கு ' ஸ்பாட் பில்லிங் ' முறையில் நேரடியாகப் பணம் கட்டு
தில் மக்கள் குழப்பமாக இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். எனக்கு
வதனையாக இருக்கிறது. மின்சாரம் உபயோகிப்பவர்களுக்கு மிகவும் குழப்ப
ாக இருக்கிறது. எனக்கே அனுபவம் இருக்கிறது. பணம் கொடுத்தனுப்பு
றார்கள். இரண்டு மாதத்திற்கு என்று கொடுத்தனுப்புகின்றார்கள். அதற்கு
முன் பணம் கட்டவில்லை என்றால் அதையும் சேர்த்துக் கட்ட வேண்டுமென்று
சொல்லி, அந்த பில்லிலேயே எழுதி அனுப்பியிருக்கிறார்கள். நான்கு நாட்
களாக மூன்று, நான்கு மணி நேரம் இருந்துவிட்டு பணத்தைக் கட்ட முடி
யாமல் திரும்ப வருகின்ற நிலைமைகள் இருந்தால், எங்கே போய் முடியும்?
அதற்குப் பிறகு நானே போனேன். அந்த அலுவலகத்திலே பதில் சொல்ல
ஒருவர்கூட இல்லை. நான் ஹவுசிங் போர்ட் வீட்டில் குடியிருக்கிறேன்.
எனக்கு மாதத்திற்கு 159 ரூபாய்க்கு ' பில் ' வருகிறது. அதிகமாக ' பில் '
வருகிறது. இதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். எதிலே கோளாறு?
மீட்டரிலே கோளாறா அல்லது பில் போடுவதிலே கோளாறா ?

(பிற்பகல் 12-40)

பெரியவர்களுக்குப் பளுவாக இல்லை;
ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகள் இதை எந்த அளவிற்கு
சாதாரணமானவர்களுக்குப் பளுவாக இருக்கிறது. செய்ய வேண்டுமென்பது மட்டு
எளிமையாக்க வேண்டுமோ, அந்த அளவிற்குச் அக்கறை இருக்க வேண்டும். ஏதோ
மல்ல, இதில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும் பரவாயில்லை, செய்வோம், நமக்
இதை நம்மிடம் ஒப்படைத்திருக்கிறார்கள், இதில் கடுமையான கண்
கென்ன என்ற அளவிலே செய்தால், பயனில்லை. நடுத்தர வர்க்கத்தினரைக் காப்பாற்ற
காணிப்பு இருந்தாலொழிய ஏழை, கடுமையான கோபம் பொது மக்களுக்கு
முடியாது. மாறாக துறையின்மீது
ஏற்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்துச் சொல்லாமல் இருக்க
முடியாது. எனக்கு ஒன்று நினைவிற்கு வருகிறது. மாண்புமிகு அமைச்சர
வர்கள் என்னுடைய திண்டிவனம் பகுதியிலே மின் துறை பொறியாளராக

[திரு. க. இராமமூர்த்தி] [1982 பிப்ரவரி 20

இருந்து பணியாற்றினார்கள். 1967 தேர்தலிலே நான் நின்றபோது, அவர்
பணி புரிந்ததுதான் எனக்குக் கடுமையான கஷ்டமாக இருந்தது. அவர் அங்கே
இருந்ததால், கேட்பவர்களுக்கெல்லாம் மிகச் சுலபமாக பம்ப் செட்டுகளுக்கு
மின்சார வசதி கொடுத்தார்கள். எல்லோருமே, அவர்தாங்க கரன்ட்
கொடுத்தது, சாப்பிடுகிற சாப்பாட்டை எப்படி மறப்பது என்று சொல்லுகிற
அளவிற்கு எல்லோருக்கும் அவர் நல்லது செய்தது, எனக்கு வேறுவிதமாக,
பாதகமாக வந்தது. நல்லவேளையாக, கட்சி வேறாக இருந்தாலும், திராவிட
முன்னேற்றக் கழகத்தில் நின்றவருக்கு வேண்டாதவரல்ல நான். பிறகு அமைச்
சரவர்கள் 'ரிசைன்' பண்ணிவிட்டு, வேறொரு தொகுதியில் நின்றார்கள்.
எங்கள் தொகுதிக்கு வரவில்லை. அதனால் நான் அந்தத் தொகுதியில் ஜெயிக்க
முடிந்தது. ஏழைகளுக்கு, முடியாதவர்களுக்கு, இந்த வாய்ப்புகளையெல்லாம்
பணத்தின் பலத்தாலே பெற வாய்ப்பு இருக்கிறதென்ற நிலை இல்லாதவர்களுக்கு
உதவும் எண்ணம் பொறியியல் துறைப் பொறியாளர்களுக்கு வந்தாக வேண்டும்.
துர்பாக்கியவசமாக எங்களுடைய பகுதியில் அப்படியில்லை என்பதைத் தெளி
வாகச் சொல்ல விரும்புகிறேன். மூன்று வருடத்திற்கு முன்பு கொடுத்ததற்கு
என்கொயரி வை—100 ஏக்கர், 50 ஏக்கர் வைத்துக்கொண்டு, ஊரை ஏமாற்றும்
ஆட்கள், வேறு யாரும் பம்ப்-செட் போடக் கூடாது, அவர்கள் வாழக் கூடாது
என்று சொல்லும் அளவிற்கு, விசாரணைக்கு அவர்களை ஆட்படுத்துங்கள்
என்று பெட்டிஷன் போடுவதும், அதற்கு 'எக்ஸ்பிளனேஷன் கால் பார்' பண்
ணுவதும் போன்ற நிலைகள் இருக்கின்றன. அமைச்சரவர்களுக்கு ஏழை
களுக்கு மின்சாரத்தைத் தர வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. மின் துறை
நஷ்டத்தை ஏற்றுக்கொண்டாலும், இந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டு
மென்று விரும்புகிறது. சிலர் தங்கள் லாபத்திற்காக கட்சி மாறிக்கொண்டிருப்
பார்கள். 1967-ல் காங்கிரசுக்கு வேலை செய்வதாகச் சொல்லி, சிலர் ஊரெல்
லாம் சண்டை இழுத்துக்கொண்டிருந்தார்கள். தேர்தலுக்குப் பிறகு கருப்பு
சிவப்பு வேட்டி கட்டிக்கொண்டு அவரைத் தெரியும், இவரைத் தெரியும் என்று
சொல்லிக் கொண்டிருந்தார்கள். தி. மு. க. தோற்றது. எமர்ஜன்சி
நேரத்தில் கதர் கட்டிக்கொண்டு, எனக்கே சிபாரிசு செய்வதாகச்
சொன்னார்கள். அதற்குப் பிறகு அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு வந்தது.
இப்போது அவர்கள் உங்கள் கட்சியில் நடமாடிக்கொண்டிருக்கிறார்கள்.
இதற்காகவே ஒரு வர்க்கம் இருக்கிறது. அந்த வர்க்கம், அதிலே கொஞ்சம்
வளம் படைத்தவர்களாக இருந்தால் மிரட்டுகிறார்கள். "என்னைக் கேட்காமல்
எப்படி பம்ப்-செட் கனெக்ஷன் கொடுத்தீர்கள்?" கட்சிமாறின ஆள் மிரட்டு
கிறான். "எங்கள் கிராமத்திற்கு 24 மணி நேரமும் கரன்ட் கொடுக்காமல்
திண்டிவனத்திற்கு எப்படிக் கொடுப்பாய்?" என்று கேட்கிறான். எல்லோ...



1982 பிப்ரவரி 20] [திரு. க. இராமமூர்த்தி]

அவரை சமாதானம் பண்ணி வைக்கிறார்கள். எஸ்.ஈ. வேறொரு வழியாக
லைன் போட வேண்டுமென்று சொல்கிறார்கள். உருப்படுகிற வழியாக இல்லை.
பின்தங்கிய பகுதிகள் வளர வேண்டுமென்று பொறியாளராக இருந்தபோதும்,
அமைச்சரவர்களாக வந்த பிறகும் பணியாற்றுகிறார்கள். அந்த இலாகாவி
லேயே உள்ள சிலர் அந்தத் திட்டங்களைப் பாழ்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.
அதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்னொரு அனுபவம்கூட இருக்கிறது.
காங்கிரஸ் ஆட்சியிலே அவரை ஊட்டிக்கு மாற்றினார்கள். நாங்கள் எல்லாம்
காங்கிரஸ் கட்சியில் இருந்தாலும், நல்ல பொறியாளரை மாற்றுகிறார்களே
என்று சொன்னோம். இந்த நிலைமை இன்றைக்கும் இருக்கிறது. தவறுகள்
காரணமாக இதுபோன்ற மாற்றங்கள் வரும்போது ஒத்துக்கொள்ள முடிகிறது.
அரசியல் ரீதியாக என்றுகூடச் சொல்லமாட்டேன். ஆதிக்கம் புரிபவர்கள்
எந்த ஆட்சியாக இருந்தாலும், தங்களுடைய பொருளாதார வசதியை
வைத்துக்கொண்டு ஆதிக்கம் புரிபவர்கள் இன்னமும் அப்படிச் செய்ய முடிகிற
தென்ற நிலையைப் பார்க்கும்போது, எனக்கு அச்சம் ஏற்படுகிறது. இந்தச்
சங்கடங்களை அனுபவித்தவர் அமைச்சராக இருக்கும்போது, இப்படியெல்லாம்
நடக்கிறதே, இதில் அனுபவம் இல்லாதவர்கள் வந்தால், எந்த அளவிற்கு
அவர்களை ஆட்டுவிப்பார்கள் என்பதை எண்ணி, அந்த அளவிற்கு இல்லாமல்
இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

பென்ஷன் ஸ்கீம்பற்றி அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். வரவேற்கிறேன்.
2,000 அரிசனங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிற திட்டத்தைச் சொன்னார்கள்.
அது வரவேற்கிற ஒன்று. தொழிலிலே வலிமை பெற்றுவிட்டால், நிரந்தரமாக
பணியிலிருந்து நீங்கிவிடலாம், இல்லையென்றால் திரும்ப பணிக்கு வந்து
விடலாமென்று சொன்னார்கள். ஐந்து ஆண்டுகள் விடுப்பில் இருக்கும்
போது, அதனால் அவர்கள் ப்ரமோஷன் பாதிக்காது என்று சொல்லியிருந்தால்,
நன்றாக இருக்கும். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் ஜூனியராக வர
முடியாது. இது குறித்து ஆவன செய்ய வேண்டும்.

திண்டிவனத்திலே பம்ப்-செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதிலே,
வேண்டுமென்றே காலதாமதமாகிறது. இது ஏழைகளுக்குப் பளுவாக இருக்
கிறது. பொறியாளர்கள் நல்லவர்களா, கெட்டவர்களா என்ற வாதத்திற்குப்
போக விரும்பவில்லை. எந்தக் காரணத்திற்காகவோ அவர்கள் அடிமை
களாகச் செயல்படுகிறார்கள். அதனால் ஏழைகள் வாய்ப்புகள், வசதிகளைப்
பெற முடியவில்லை. மாவட்டத்திலே எல்லாப் பகுதிகளிலேயும் இன்றைக்கு
பம்ப்செட்டுக்கு 1978-79 ஆண்டு வரையிலும் சீனியாரிட்டி வந்திருக்கிறது.

திண்டிவனத்தைப் பொறுத்தவரையில், 1975, 76-ல்தான் இருக்கிறார்கள். அந்த
அளவிற்கு வேகமாக வேலை செய்கிறார்கள். அமைச்சரவர்களுடைய
மாவட்டம். அவருடைய சொந்தத் தொகுதியில்லை என்றாலும், அவர் பணி
புரிந்த தொகுதி. அந்தப் பகுதியில் இப்படி நடக்கிறது. அதைத் தடுக்க,
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

பொதுவாக மின் வாரியத்தின் சங்கடங்களைத் தீர்க்க அனைத்துக் கட்சி
யினரும் துணையாக இருக்கிறோமென்று சொல்லி, நல்ல முறையில் நடவடிக்
கைகளை எடுங்கள் என்று சொல்லி, மத்திய அரசோடு தமிழகத்தின் தேவை
களுக்காக எப்படிப்பட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தினாலும் அல்லது
கொஞ்சம் கடுமையாகச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும், அதற்குத்
துணையாக இருக்கிறோமென்று சொல்லி, அமைகிறேன்.

*திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தமிழ்
நாடு மின்சார வாரியத்தின் 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை
குறித்தும், 1980-81 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும்
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை நான்
தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றையதினம் தமிழ் நாட்டிலே மின் வெட்டு மிகப் பெரிய தொரு அள
விற்கு மின்சாரத்தை உபயோகிக்கக்கூடியவர்கள், நுகர்வோர்கள் அனுபவித்துக்
கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டதொரு சூழ்நிலை உருவாக்கப்பட்டதற்
காக நான் உள்ளபடியே வேதனைப்படுகிறேன்.

(பிற்பகல் 12-50)

13—2—1982-ல் நெய்வேலியிலிருந்து உற்பத்தி செய்கிற மின்சாரம் உட்பட
நாம் உற்பத்தி செய்திருப்பது 1,772 மெகாவாட். கேரளாவிலிருந்து 100 மெகா
வாட் வாங்குகிறது உட்பட நமக்கு 1,772 மெகாவாட்தான் இருப்பதைப்
பார்க்கிறோம். தமிழ் நாட்டில் புனல் மின் திட்டம், அனல் மின் திட்டம்,
நெய்வேலியிலிருந்து கிடைக்கின்ற மின்சாரம் உட்பட 2,929 மெகாவாட் உற்
பத்தி செய்ய திட்டமிட்டிருக்கிறோம். ஆனால் நெய்வேலி உட்பட உற்பத்தி
யின் அளவு 1,682 மெகாவாட் என்று அறிகிறேன். நம்முடைய தேவையை
விட மிக மிகக் குறைவாக உற்பத்தி செய்துகொண்டிருக்கிறோம். அதனால
தான் மின்சாரத்தை நுகர்வோர் பெருமளவுக்கு பாதிக்கப்படக் கூடிய சூழ்
நிலை இருக்கிறது. 10—12—1981 அன்று நம்முடைய மின்சாரத் தேவை
2,100 மெகாவாட். ஆனால் நம்முடைய உற்பத்தி 1,682 மெகாவாட். இப்படி



நிலைமை இருந்தால், எங்கிருந்து நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்யப்
போகிறோம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும்.
இது குறித்து கவனத்தைச் செலுத்த வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சிக் காலத்தில் மின் வாரியம் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்பதற்காக
ஐந்து தலைமைப் பொறியாளர்களை நியமித்ததைக்கூட, ஒரு குற்றச்சாட்
டாகச் சொன்னார்கள். ஆனால் இன்றையதினம் 12 பேர் தலைமைப் பொறி
யாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி அதிகமான அதிகாரிகளை
நியமித்ததை நான் குறை சொல்லவில்லை. காரணம் நம்முடைய மின்சாரத்
தேவை அதிகரித்திருக்கிறது. உற்பத்தியிலும், வினியோகத்திலும் அவர்
களுடைய கவனத்தை நல்லமுறையில் செலுத்த வேண்டுமென்ற எண்ணத்தில்
என்றால், அதிகரிக்க வேண்டியதுதான். ஆனால் திட்டமிட்டு மின் உற்பத்தியை
அதிக அளவுக்கு ஏன் அதிகரிக்கவில்லை என்பதை நான் இங்கு கோடிட்டுக்
காட்ட விரும்புகிறேன். கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய தொழில்களைப்
பார்த்தால் பஞ்சு நெசவு, விசைத் தறி இவைகள் எல்லாம் மின்சாரத்தை
நம்பியிருக்கின்றன. இப்படிப்பட்ட தொழில்கள் கிராமங்களில் வளர வேண்டு
மென்ற கொள்கையை நாம் அனைவரும் ஒத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால்
முறை வைத்து காலை 6 மணியிலிருந்து 12 மணி வரை அல்லது மத்தியானம்
12 மணியிலிருந்து மாலை 6 மணி வரை என்று மின்சாரம் வழங்குவதால்,
தொழிலாளர்கள் இன்றையதினம் வேலையை இழக்கிறார்கள். நம்முடைய
உற்பத்தி பல வகைகளில் பாதிக்கப்பட்டு அதன் காரணமாக நாட்டுக்குப்
பெருத்த நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவிப்பது என்
னுடைய கடமை. அதே நேரத்தில் நகரத்தில் தொழில்களை நடத்திக் கொண்
டிருப்பவர்களுக்கு 'பீஸ் அவர்ஸ்' என்கிற முறையிலே கட்டுப்பாடு கிடையாது.
'ஹார்ஸ் பவர்' அதிகமாக உபயோகப்படுத்துகிறவர்களுக்கு இத்தகைய
மின் வெட்டு இல்லை. கட்டுப்பாடு இல்லை என்கிற நிலையில் அங்கு தொழில்
நடைபெறுகிறது. ஆனால் இன்றையதினம் கிராமங்களில் தொழில்கள் வளர
வேண்டுமென்று நாம் எல்லோரும் சொல்கிறோமே, அது உள்ளபடியே வளர
வில்லை. கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்
கிறார்கள். இதிலே மாற்றம் கண்டாக வேண்டும். நாட்டுக்குத் தேவையான
உணவுப் பொருள் உற்பத்தியிலே விவசாயிகள் எந்த அளவுக்கு ஈடுபட்டிருக்
கிறார்கள் என்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். விவசாயம்தான்
இந்த நாட்டின் வளர்ச்சிக்கு, இந்த நாட்டு மக்களுடைய நலனுக்கு, முன்னேற்
றத்திற்கு மிக மிக முக்கியமான ஒன்று என்பதை நாம் அனைவரும் அறி
வோம். ஆனால் இன்றைக்கு கிராமத்திலே சராசரியாகக் கணக்கிட்டுப் பார்த்
தால், [illegible] மோட்டார் ஓட்டுவதற்கு ஆகக்கூடிய நிலை
[illegible] பார்க்க வேண்டுமானால், அவர்கள் 2,530
[illegible]

ரூபாய் வரை செலவு செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் விவசாயிகள் இருக்கும்போது அவர்களுக்கு மின் கட்டணத்தைத் திரும்பவும் உயர்த்துவோம் என்று சொல்லும்போது, அவர்களுக்கு 3 பேசில் சப்ளையை கொடுக்க உரிய திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏன் இதுவரை இதற்குரிய வழிவகையை விவசாயிகளுக்குச் செய்யவில்லை என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஆண்டு ஒன்றுக்கு நமக்குத் தேவைப்படும் யூனிட் 13 ஆயிரம் மில்லியன் யூனிட். 1980-81-ல் நமக்குத் தேவைப்பட்ட யூனிட் 11,819 மில்லி யன் யூனிட். ஆனால் நாம் உற்பத்தி செய்திருப்பது 10,500 மில்லியன் யூனிட் என்று பார்க்கிறோம். நமக்குத் தேவைப்படும் அளவைவிட குறைந்த அள வுக்குத்தான் உற்பத்தி செய்திருக்கிறோம். தேவைப்படும் அளவைவிட குறைந்த அளவுதான் மின்சாரம் நமக்கு உற்பத்தியாகிறது என்கிற உண்மை நிலையை அதிகாரபூர்வமாக நாட்டு மக்களுக்கு அறிவிக்காமல், மக்களை ஏமாற்றக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட ஏமாற்று வேலையை மின் வாரியம் செய்வதில் ஈடுபட்டிருக்கிறதோ என்கிற ஐயப்பாடு எனக்கு இருக்கிறது. மொத்தத் தேவையில் 35 சதவிகிதத்தை அண்டை மாநிலங்களான கேரளாவிலிருந்தும், கர்நாடகத்திலிருந்தும் பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே நம்முடைய திட்டமிட்ட உற்பத்தித் திறமை நாம் அடைய, மின் உற்பத்தியை இன்னும் அதிகரிக்க மேற்கொண்டு நல்ல முடிவுகளைப் பின்பற்றியாக வேண்டும். ஒரு போர் கால நடவடிக்கை போல் மின் திறனை அதிகரித்து, திட்டமிட்ட குறிக்கோளை அடைய வேண்டும். அப்படி இல்லையென்றால், தமிழ்நாடு, நான் முன்பே சொல்லியிருப்பதுபோல், " மின் வெட்டுப் பூச்சி " ஆக மாறிவிடும் என்று என்னைப் போன்றவர்கள் சந்தேகப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும். மின் சப்ளை வேண்டி இரண்டு லட்சத்திற்கு மேல் விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. ஆண்டு ஒன் றுக்கு 30 ஆயிரம் விண்ணப்பங்களுக்கு சப்ளைத் தருவதாக தெரிவித்திருக்கிறீர் கள். மனு செய்பவர்களுக்கு சீனியாரிட்டிபடி சப்ளை தந்து வந்தார்கள். ஆனால் சப்ளை வேண்டுமென்று விண்ணப்பம் போட்ட பல வட்டங்களில் இன்னும் தரவில்லை. ஆனால் ஓமலூர் பகுதியில் 1978 ஆம் ஆண்டு விண்ணப்பம் போட்டவர்களுக்குக் கூட மின் சப்ளை கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி என்றால் கட்சிக்காரர்களின் சிபாரிசுபடி நடைபெறுகிறதா என்கிற சந்தேகம். இப்போது எல்லா இடங்களிலும் அத்தகைய முறை பின்பற்றப்படவில்லையோ என்று சந்தேகப்படுகிறேன். 1969-70 ஆம் வருடத்தில் சேலம் மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கிறது. இப்படி நடைபெற்றால், சீனியாரிட்டிபடி தான் நடை



பெறுகிறது என்று சொல்வதை எப்படி நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியும்? அரசியல் அடிப்படையில்தான் இது நடைபெறுகிறதா ? நலிந்த மக்களுக்கு, பம்புகளுக்கு சப்ளை தருவதில் முன்பு ஒரு சலுகை இருந்தது. போர் முனையிலுள்ள ராணுவ வீரர்களுக்கு முன்னுரிமை இருந்தது. அதுபோல சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மலைவாழ் மக்களுக்கும் முன்னுரிமை இருந்தது. அதை இப்போது எடுத்துவிட்டதாக அறிகிறேன். இப்படி சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்காகக் கொடுக்கப்பட்ட சலுகையை எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசு திரும்ப எடுக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

*(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை)*

*(பிற்பகல் 1-00)*

இப்படி எடுத்துவிட்டு, மொத்தமாக 30 ஆயிரம் பம்புசெட்டுக்கள் இந்த ஆண்டு வழங்கப்படுகிறதென்று சொன்னால், அதிலே 10 சதவீதம் சேர்மன் அவர்கள் வழங்கலாம் என்ற விதியைக் கொண்டு வந்து அறிவிக்கப் போகிறீர்கள் என்று நினைக்கிறேன். 10 சதவீதம் என்று சொன்னால், 30 ஆயிரம் பம்புசெட்டுகள் என்று சொன்னால் 10 சதவீதப்படி பார்த்தால் மூன்று ஆயிரம் பம்புசெட்டுக் களை ஆளும் கட்சிக்காரர்கள் சொல்பவர்களுக்கோ அல்லது மற்ற சிபார்சு களின் அடிப்படையிலோ, கொடுக்கும் நிலைமை எற்படுகிறது. சேர்மேனுக்கு ஏன் இந்த சிரமம் ? சீனியாரிட்டி என்று இருந்ததிலே என்ன தவறு ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதிலே அதிக நேரத்தைச் செலவழிக்க வேண்டாம் என்பதற்காகச் சொல் கிறேன். ஏற்கெனவே முன்னுரிமை என்ற வகையிலே நிறைய வைத்திருந் தார்கள். ஆகையால் தேதிவாரியாகக் கொடுக்க வேண்டியது, முப்பது ஆயிரம் என்று சொன்னால், 15 ஆயிரம்கூட பழைய காலத்திலே கிடைக்க வில்லை. 100-க்கு 90, தேதியின் அடிப்படையிலே கொடுக்கலாம் என்றும், 10 சதவீதம் வாரியத்தலைவருக்கு என்று சொல்லி அதிலே முன்னாள் இராணு வத்தினர், இப்போது இராணுவத்திலே பணியாற்றுகின்றவர்கள் மலைவாழ் மக்கள் போன்றவர்களுக்கு, அந்த 10 சதவீதத்திலே கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 10 சதவீதம் அடிப்படையில் 3 ஆயிரம் என்று சொன்னால், அவ்வளவும் அவருடைய இஷ்டம்போல் கொடுத்து விடலாம் என்பதல்ல. அதிலே ஷெட்யூல்ட் வகுப்பைச் சார்ந்தவர்கள் வந்தால், அவர் களுக்குக் கொடுக்க வேண்டும்.

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும் இந்த விளக்கம் சரியாக இருந்தால், நான் அதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் சேர்மேனுடைய விருப்பத்திற்கேற்ப கொடுக்கலாம் என்றுதான் இருப்ப

[திரு. சோ. ஆறுமுகம்] [1982 பிப்ரவரி 20

தாக நான் நினைக்கிறேன். அப்படியிருந்தால், மின்வாரியத் தலைவருக்கும் சிரமம், மின் வாரியத்துறை அமைச்சர் அவர்களுக்கும் சிரமம், சட்டமன்ற மேலவை, பேரவை உறுப்பினர்கள் மட்டுமல்லாமல், கறுப்பும்சிகப்பும் மத்தியிலே ஒரு வெள்ளைக் கோடும் போட்ட கரையைக் கொண்ட துண்டு போட்டவர்கள் வந்து கேட்கும் நிலைமை கூட வரும். மியர் சர்வீஸ் என்ற வகையிலே மின் வாரியத்திற்கு இழப்பு இல்லாமல் அந்த சர்வீஸைக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் சப்ளை கொடுப்பதனால், மின் வாரியத்திற்கு நஷ்டம் ஏற்படாது, லாபம்தான் வரும்; ஆகவே, மியர் சர்வீஸ் என்ற அடிப்படையிலே எல்லாம் கொடுப்பதற்கான நிலைமைகளைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலை போன்ற இடங்களிலேயெல்லாம் மின் சப்ளை நல்ல முறையில் கிடைக்கச் செய்ய வேண்டும். D.E., A.O. and J.E. ஏ.ஈ., ஜே.ஈ. போன்றவர்களையெல்லாம் ஸ்பெஷலாக நியமித்திருக்கிறார்கள். எல்லா மாவட்டத்திலும் என்றுகூட அல்ல, தமிழ் நாடு முழுவதற்கும் இந்தச் சூழ்நிலை ஏற்பட வேண்டும். ஒவ்வொரு இடத்திலும் 50 ஆயிரம், 60 ஆயிரம், ஒரு லட்சம் என்ற அளவுக்கு விண்ணப்பங்கள் தேங்கி இருக்கின்றன. தேவை இப்போது மிகவும் அதிகமாக வளர்ந்துகொண்டு வருகிறது. இந்தத் துரிதப் பணிகளைச் செய்வதற்காக எல்லா மாவட்டங்களுக்கும் அதிகாரிகளைப் போட வேண்டும். நிலுவையிலே இருக்கும் விண்ணப்பங்களையெல்லாம் பூர்த்தி செய்யத்தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மின் இழப்பைப் பொறுத்தவரையில், நம்முடைய மாநிலத்திலே 1978—79—க்கு—நான் ஒரு அறிக்கையிலே பார்த்தேன். 18.5 சதவீதம்தான் என்று போட்டுக் காட்டியிருக்கிறார்கள். அது உண்மையான கணக்கு என்று என்னால் நம்ப முடியவில்லை. உண்மையான மின் இழப்பு இதைவிட அதிகமாக இருக்கும். ஒருவேளை உலக வங்கி அல்லது மத்திய அரசிடம் காட்டுவதற்காகத்தான் இப்படிக் குறைத்துப் போட்டிருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். இதிலே 23 சதவீதம் அளவுக்கு நமக்கு இப்போது மின் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இதைக் குறைக்க பெரும் முயற்சி எடுக்க வேண்டும். நாம் செய்யும் உற்பத்தியே மிகவும் குறைவு. அந்த நிலையிலே இழப்பு இவ்வளவுக்கு அதிகமாக இருக்கிறது என்று சொன்னால், அது நல்லதல்ல. மாண்புமிகு கொறடா அவர்கள் பேசும்போது, வெளிநாட்டிலே எல்லாம் எவ்வளவு குறைவு என்று சொன்னார்கள். அமெரிக்காவிலே கூட 7 முதல் 12



82 பிப்ரவரி 20] [திரு. சோ. ஆறுமுகம்]

சதவீதம் இருக்கிறது. ஸ்வீடனிலே 7 முதல் 12 சதவீதம் இருக்கிறது. ஜப்பானிலே 6 முதல் 8 சதவீதம் வரைதான் இழப்பு இருக்கிறது. ஆனால், நம்முடைய மாநிலத்திலே ஏன் இன்னும் இந்த இழப்பின் சதவீதம் அதிகமாக வளர்ந்து கொண்டு வருகிறது? ஆகவே இந்த இழப்பு விஷயத்திலே இந்தத் துறை இன்னும் அதிகமான கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது மின்சார வாரியத்திலே புதிதாக ஒரு முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த முறை அட்டைப் பட்டியல் முறை என்று சொல்கிறார்கள். அந்த முறையை வரவேற்கிறேன். அந்த அட்டைப் பட்டியல் முறையைக் கொண்டு வரும்போது, அதை மின்சார வாரியத்திலே பணியாற்றும் எல்லாத் தொழிற் சங்கங்களும் வரவேற்றன. பொதுமக்கள் சார்பிலே நாங்களும் வரவேற்கிறோம். ஆனால், அரசு ஒருதலைப்பட்சமாக அங்கீகரிக்கப்பட்ட சங்கம் என்று சொல்லி சில சங்கங்களை மட்டும் அழைத்து— இன்றைக்கு அரசை ஆதரிப்பவர்களை மட்டும் அழைத்து வைத்துப் பேசி முடிவெடுத்திருப்பதன் விளைவாக — பல சங்கங்கள் இதிலே ஈடுபடாமல் இருக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 20 ஆயிரம் பேர்கள் இந்தப் பணியிலே ஈடுபட வேண்டும் என்ற சூழ்நிலை இருக்கும்போது, இன்றைக்கு 5 ஆயிரம் அல்லது 6 ஆயிரம் பேர்களை மட்டும் வைத்துக்கொண்டே தமிழ் நாடு முழுவதும் இந்த வேலைகளைச் செய்ய முடியுமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டுமானால், 'நான் பார்க்கிறேன்' என்று சொல்லலாம், ஆனால், இந்த எண்ணிக்கை போதாது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் வீட்டிலே செல்வதும், அங்கே இந்த அட்டைப் பட்டியலை எடுத்துக் கொடுப்பதும் அதை போட்டோ பிடித்துப் போடுவது, நாடாளுமன்ற உறுப்பினருடைய வீட்டுக்குச் செல்வது அங்கேயும் இந்த மாதிரி அட்டைப் பட்டியலைக் கொடுப்பதும், அதைப் போட்டோ எடுப்பது விளம்பரப்படுத்துவது மட்டும் போதாது. என்னுடைய வீட்டுக்கு வந்து யாரும் அட்டைப் பட்டியலைக் கொடுக்கவில்லை, மீட்டரையும் பார்க்கவில்லை. மேலும் இதற்கென்று இன்றையதினம் ஒரு கட்டுப்பாடும் இல்லை. அந்த நிலைமையிலேதான் அங்கே பணியாளர்கள் இருக்கிறார்கள். இந்தப் பணிகளைச் செய்வதற்கு நியமிக்கபடுபவர்களின் கல்வித் தரம் அவர்கள் 4—வது அல்லது 8-வது வகுப்புவரை படித்துத் தேறியிருந்தால் போதும் என்று வைத்திருக்கிறார்கள். நான் கேட்கிறேன், அந்தப் படிப்பு போதுமா? எஸ்.எஸ்.எல். சி. வரையாவது படித்திருப்பவர்கள்தான் வேண்டும் என்றாவது போட்டிருக்க வேண்டாமா? 8—வது படித்திருப்பவன் மீட்டர் ரீடிங்கைச் சரியாகப் பார்த்து எழுதுவானா? 4—வது படித்தவன் செய்வானா? இப்போதெல்லாம்

4-வது வகுப்பு படித்ததாக சர்டிபிகேட் எல்லாம் கூட வாங்கிக் கொண்டு வந்து இந்தப் பணியிலே சேர்ந்திருக்கிறார்கள். அவன் போடும் கையெழுத்தைப் பார்த்தால் கூட, நாம தெரிந்து கொள்ளலாம், உண்மையிலே அவன் 4-வது வகுப்பு வரையாவது படித்திருப்பானா என்று. இப்படிப்பட்டவர்களைக் கொண்டுபோய் போட்டிருப்பதன் விளைவாக, மின்சார வாரியத்திற்கு ஏற்பட்டிருக்கும் பாதகத்தை விட, மின்சாரத்தை நுகர்வோருக்குத்தான் அதிக அளவிலே பாதகம் ஏற்பட்டிருக்கிறது. கிராமங்களிலே இப்போது கூட்டுறவு வங்கிகள் இருக்கின்றன. அங்கேகூட பணங்களைச் செலுத்தலாம், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலேதான் காசோலை வழங்கலாம் என்ற நிலையில்லாமல், அந்த வங்கிகளிலேயும் செலுத்தலாம் என்ற நிலை வருமேயானால், பொது மக்கள் நேரடியாக அந்த வங்கிகளுக்குப் போய் பணத்தைச் செலுத்த வசதியாக இருக்கும். ஆகவே, இந்த நடைமுறையையும் கொண்டுவர வேண்டும். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, இன்றைக்குத் தொழிலாளர்கள் எவ்வளவு பேர்கள் அங்கே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். 91 ஆயிரம் பேர் அளவுக்கு பணியாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொன்னாலும், ஏற்கெனவே இருந்த எல்லாச் சங்கங்களோடும் ஒப்பந்தம் செய்து கொண்டு 1,18,256 பேர்கள் இதிலே வேலை செய்வதற்கு மொத்தப் பணியாளர்கள் என்று நிர்ணயம் செய்து, அங்கீகாரம் அளித்திருக்கிறார்கள். ஆனால் 27,140—பேருக்குக் குறைவாகவே வேலை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அது ஏன் ? இதில் ஹெல்பர் போன்றவர்கள் இடங்கள் இன்னும் 12 ஆயிரம் இடங்கள் காலியாக இருக்கின்றன. அதையெல்லாம் பூர்த்தி செய்து ஏன் இப்படிப்பட்ட அட்டைப் பட்டியல் வேலையிலே ஈடுபடுத்துவதற்கு முன்வரக்கூடாது ?

(மணி அடிக்கப்பட்டது)

(பிற்பகல் 1-10)

அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள், அங்கீகரிக்கப்படாத தொழிற்சங்கங்கள் பற்றியெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழிற் சங்கத்தில்கூட பொதுச் செயலாளராக இருந்தார் என்று அறிகிறேன். அப்போது—அதாவது கழக ஆட்சியின்போது—டாக்டர் கலைஞர் அவர்களையும் மற்ற அமைச்சர்களையும் அழைத்துப் பேசுகிறபோது இரகசிய வாக்கெடுப்பு நடத்தி, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற அடிப்படையில் மெஜாரிட்டியால் ஆதரிக்கப்படுகிற அந்தச் சங்கத்தையே அங்கீ





கரிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதை இன்னும் அமுல் செய்யாமல் காலதாமதம் செய்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இன்னொரு கருத்தையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதில் ஏதோ உற்பத்திக்காக மிகவும் அக்கறை காட்டி அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதைப் போல சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிச் சொல்லிக் கொள்வதாலே எந்தப் பெருமையும் ஏற்படப் போவதில்லை. காரணம் 1980-81 ஆம் ஆண்டு பட்ஜெட் எஸ்டிமேட் 175.65 கோடி. ஆனால் ரிவைஸ்டு எஸ்டிமேட்டைப் போடுகிறபோது, 1980-81 ஆம் ஆண்டுக்கு 160.94 கோடி தான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது 14.71 கோடி குறைவு ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைப் போலவே ரெவின்யூ எஸ்டிமேட்டிலும் 1980-81 ஆம் ஆண்டுக்கு 299.10 கோடியாக இருந்தது ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் 1980-81 ஆம் ஆண்டுக்கு ரூபாய் 266,50 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் எங்கே அதிகமாக பண ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். உற்பத்தியைப் பெருக்குவதற்கு எங்கே முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். இதெல்லாம் பெருத்த ஏமாற்றத்தைத் தரக்கூடியதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நல்ல விளம்பரத்தைப் பெறுவதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில அறிவிப்புகளைச் செய்தார்கள். அது அவருடைய சாமர்த்தியம். அப்படி விளம்பரத்தைத் தேடுவதோடு, நான் சொன்ன குறைபாடுகளையும் அமைச்சர் அவர்கள் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்கள் அப்படித்தான் சொல்வார்கள், நான் என்ன கேட்பது என்று இருந்தால், அது பின்னால் அவருக்குப் பெரிய ஆபத்தை உண்டாக்கப் போகிறதோ இல்லையோ, தமிழ் நாட்டு மக்கள் மொத்தத்தில் பாதிக்கப்படுகிற சூழ்நிலை உண்டாகும் என்பதால் தயவுசெய்து இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின் உற்பத்தியை தனியார் துறைக்குக் கொடுப்பது குறித்து ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைக்கு ஏற்ப, ஏற்கெனவே தனியார் மூலம் மின்சாரம் வினியோகிக்கப்படுவதைத் தடுத்து, அரசாங்கமே அதை மேற்கொண்டு மின்வாரியத்திடமே

இப்பணி இறுதியாக விடப்பட்டது. நாம் தனியாரிடம் மின்சாரம் விநி யோகிக்கும் பொறுப்பைக்கூட விட விரும்பாத நிலையில் தனியார் மூலம் மின்சார உற்பத்தியை மேற்கொள்வது என்பதும், அவர்களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைப்பது என்பதும் எந்த வகையில் நியாயம் என்றுதான கேட்க விரும்புகிறேன். இப்படி மின் வாரியத்தில் இருக்கும் பொறுப்பை எடுத்துத் தனியாரிடம் கொடுப்பதற்குப் பெயர்தான் அண்ணாயிசமா என்று கேட்க விரும்புகிறேன். இதுதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிக் கொடுத்த கொள்கையா ? கேட்டால் ஒருவேளை சொல்லுவார்கள். அண்ணா யிசம் என்பது அண்ணாவின் கொள்கை, சோஷலிசம் முதலாளித்துவம் எல்லாம் சேர்ந்தது என்று. இப்படி மூன்றும் சேர்ந்ததுதான் அண்ணாயிசம் என்று சொல்லலாம். ஆனால் நாட்டுக்கு இது நல்லதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

தற்போது பி.எச்.இ.எல். நிறுவனம் இருக்கிறது. அங்கேயிருந்து நாம் பல்வேறு பொருள்களை வாங்கிக்கொண்டிருக்கிறோம். அந்த நிறுவனத்திற்கு மின்வாரியத்திலிருந்து பல்வேறு பொறியாளர்கள் பணியாற்றச் சென்றார்கள். திறமையான அந்தப் பொறியாளர்கள் அங்கேயே தங்கி விட்டார்கள். இப்படிப்பட்ட திறமையான பொறியாளர்கள் நமது மின்சார வாரியத்தில் பெரும்பான்மையாக இருக்கும் சூழ்நிலையில் ஏன் திட்டமிட்ட படி மின் உற்பத்தியைப் பெருக்க வழிவகை காணப்படவில்லை ? எதற்காகத் தனியாரிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும் என்றுதான் கேட்கிறேன். இப்படித் தனியாரிடம் ஒப்படைக்கப் போகிறோம் என்று சொல்வதில் உள்நோக்கம் இருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்லாமல் இருக்க முடியாது. இப்படிச் சொல்வதாலே மாண்புமிகு அமைச்சர் அவர் களும் ஆத்திரப்படமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

சமயநல்லூர் மின்சார நிலையம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்கள் வீரமாகப் பேசினார், "திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது தனியாருக்கு நீங்கள் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அனுமதி கொடுத்தது தெரியாதா? " என்றெல்லாம் கேட்டார். தனியார் தங்கள் தொழிலுக்குத் தேவையான மின்சாரத்தை ஜெனரேட்டர் வைத்துத் தயாரித்துக் கொள் வதற்கு எந்தக் காலத்திலும் யாரும் தடை போட்டதில்லை. இன்றைக்கும் கிடையாது, அன்றைக்கும் கிடையாது. அதில் யாருக்கும் எந்த ஆட்சேபனை யும் இல்லை. ஆனால் சமயநல்லூர் நிலை என்ன ? ரூபாய் 1.10 கோடியில் திட்டமிடப்பட்ட அந்த மின் உற்பத்தி நிலையம் சரியாக நடக்காமல் போனதன் காரணமாக, அந்த மின் நிலையத்தின் இயந்திரங்களில் தேய்மான



குறைவு போன்றவற்றிற்காக ரூ. 55 லட்சம் போக அதனை 55 லட்சம் ரூபாய்க்கு விற்கப்பட்டதைப் பெரிதாகச் சொன்னார். "தெரியாதா, தெரியாதா உங்கள் கதை " என்றெல்லாம் பேசினார். அவரைப்பற்றி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பிரிந்த உடனே என்னென்ன சொன்னார்கள் என்பதையெல்லாம் யாரும் மறந்திருக்க முடியாது. குண்டர் என்றும், தங்கக் கட்டிகளுக்குச் சொந்தக்காரர் என்றெல்லாம் சொல்லப்பட்டது. உலகத்திலேயே சைக்கிள் செயினைக் கண்டுபிடித்த ஒரு மனிதர் உண்டு என்றால் அது மதுரை முத்துதான் என்று சொல்லப்பட்டது . .

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார் என்று புரியவில்லை. ஏதோ வேறு சமாச்சாரத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : ஆளுநர் உரையில் மின் உற்பத்தியைத் தனியா ரிடம் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருப்பதைத் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறது என்று சொல்லப்பட்டதால், நான் இன்றைக்குப் பதில் சொல்கிறேன். அவ்வளவுதான். எனவே அப்படிப்பட்டவர்கள் சொல்வதை அமைச்சர் அவர்கள் கேட்பாரா என்பதுபற்றி எனக்குத் தெரியாது. கேட்டால் அதன் விளைவு என்ன ஆகும் என்பதும் அவருக்கே தெரியும். கொள்கை அடிப்படையில் தனியார் வளரக்கூடாது என்று நினைக்கிறபோது, நாட்டு மக்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகிற முக்கியமான மின்சாரத்தை உற்பத்தி செய்யும் பொறுப்பை எந்தக் காரணத்தைக் கொண்டும் தனியாரிடம் விடக்கூடாது என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. நாங்கள் அதில் உறுதியாக நிற்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அந்தக் கொள்கையில்தான் இருப்பார்கள் என்று நம்புகிறேன். நம்புகிறேன் என்றுதான் சொல்ல முடியுமே தவிர, அவர் அதில் உறுதியாக இருப்பாரா என்று என்னால் சொல்ல முடியாது. உறுதியாக இருந்தால், அவருக்குப் பாராட்டுத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்போதுதான் அவர் அண்ணா அவர்களின் கொள்கையின் அடிப்படையில் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

எனவே, பொதுவாக மின்சார வாரியத்தின் பணியாளர்கள் மின் உற்பத்தித் திறனை அதிகரிக்க உதவ வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மின் வாரியம் நட்டத்தையும் இழப்பையும் வெகுவாகக் குறைத்து, மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய பாடுபட வேண்டும் என்றும், அந்த வகையில் அரசு அவர் களுக்கு நல்ல ஊக்கத்தையும் சுயேச்சையாகச் செயல்படுவதற்கான நிலையை யும் உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவைத் துணை தலைவர் அவர்களே, மின்வாரிய நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு நல்ல பல ஆலோசனைகளை வழங்கிய மாண்புமிகு உறுப் பினர்களுக்கு நான் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலவையில் தெரிவிக்கப்படுகிற கருத்துக்கள், கவனிக்கப்படவில்லை என்ற ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. நான் ஒன்றைப் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மேலவையில், கொள்கை ரீதியாகப் பல்வேறு ஆலோசனைகளைக் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கினார்கள். கொள்கை ரீதியாக அவைகள் இருந்த காரணத்தால், இங்கே அவைகளுக்குப் பதில் சொல்வது எனக்கு எளிதாக இருந்தது. எனவே துறைக்குச் சென்றுதான் பதில் தர வேண்டும் என்ற நிலை இல்லாமல், மேலவை உறுப்பினர்கள் வழங்குகிற ஆலோசனைகளுக்கும் கருத்துக்களுக்கும் என்னுடைய பதிலை அப்போதே தெரிவிக்க முடிந்தது. அதனால்தான் துறையின் வாயிலாக வந்த குறிப்பில் மேலவை உறுப்பினர்கள் கூறிய ஆலோசனைகள் இடம் பெறவில்லையே தவிர, மேலவையைப் புறக் கணிக்க வேண்டும் என்ற நோக்கம் யாருக்கும் இல்லை என்பதைத் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

இன்னும் சொல்லப்போனால், மின்வாரிய நிதிநிலை அறிக்கை மீது சட்டப் படி கொள்கைகளை விமர்சிக்கிற உரிமை மட்டும்தான் நமக்கு உண்டு. அந்தச் சட்டப்படியான உரிமையை உணர்ந்து வாதிட்ட பெருமை மாண்புமிகு மேலவை உறுப்பினர்களுக்கு உண்டு என்பது இதன் மூலம் நிரூபணம் ஆனது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மின் வாரியத்தின் அன்றாட வேலைகளில் ஈடுபடுவதற்கு அல்லது தலையிடுவதற்கு அரசுக்கே கூட சட்டத்தில் அதிகாரம் வழங்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்றவற்றைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால் ஒரு சிலவற்றை—நான் மறந்துவிடாமல் இருப்பதற்காக—முன் னெச்சரிக்கையாகச் சொல்ல விரும்புகிறேன்.

வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பு வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் இங்கே கருத்து தெரிவித்தார்கள். ஒரு தொழிலாளருடைய பணிக்காலத்தில் அவர் இறந்தால், அவருடைய வாரிச தாரருக்கு பணி தரப்படுகிறது. அப்படியும் கல்வித் தகுதியில்லை என்கிற





காரணத்தால், 450 பேருக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்பட்டிருக்கிறது. கல்வித் தகுதி இல்லை என்ற காரணத்திற்காக, அந்தக் குடும்பம் கண்ணீரும் கம்பலை யுமாக இருக்கக்கூடாது என்று எண்ணி, இப்போது கல்வித் தகுதியைத் தளர்த்தி 450 பேர்களுக்கும் வேலை வாய்ப்பு தருவதென்று அரசு தீர்மானித் திருக்கிறது. மின்வாரியத்தைப் பொறுத்தவரையில், அதை அமுல்படுத்து வோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பதிவேடுகள் அச்சிட்டதைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். அவருக் குத் தகவல் கொடுத்தவர்கள் சரியான தகவலைக் கொடுக்கவில்லை என்பதை யும், எனவே அப்படிப்பட்ட தகவல்களைக் கொடுப்பவர்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எளிதாக நம்பிவிடக்கூடாது என்றும் அவருக்குத் தெரி விக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-20)

எனக்கு வந்திருக்கிற குறிப்பு :

"The offer of Messrs. New Deal Printers for consumers Ledger at Rs. 60 F.O.R. destination was the lowest technically suitable offer."

'-டெக்னிக்கலி சூட்டபிள் ஆஃபர்"—தொழில் நுட்ப ரீதியாக டெண்டர்கள் இருக்கின்றனவா என்று பார்க்கிறார்கள். தொழில் நுட்ப ரீதியாக எந்தெந்த டெண்டர்கள் சரியாக இருக்கிறதோ அதை எடுத்து அதில் லோயஸ்ட் டெண்டருக்குத் தருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கேட்டாலும்கூட டெண்டர் கிடைக்கும். இது தான் நிலைமை என்பதை முதலிலேயே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நிதிநிலையைப் பற்றியும் இங்கே குறிப் பிட்டார்கள். நிதிநிலையைப்பற்றி நான் மிகப் பெரிய விளக்கத்தைத் தர வேண்டியதில்லை. சீரமைக்க என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ அவற்றையெல்லாம் நாம் எடுத்து வருகிறோம்.

கட்டண வீதங்களை மாற்றியமைக்கும்போது, ஒரு வெள்ளை அறிக்கை இங்கே வைத்தால், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் ஆலோசனை வழங்க வசதியாக இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர் கள் குறிப்பிட்டார்கள். அதை அவர்கள் எல்லாம் ஏற்றுக்கொண்டு, ஒத்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 20

அழைப்புத் தருவார்கள் என்று நினைப்பதற்கு வாய்ப்புகள் இருக்குமானால், நிச்சயமாக அதைப்பற்றி அரசு ஆலோசிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அட்டைப் பட்டியல் முறைபற்றி எல்லோரும் பேசினார்கள். அட்டைப் பட்டியல் முறை என்றால் என்ன என்பதை சுருக்கமாகத் தெரிந்து கொண்டால், குழப்பங்களும் எந்தவிதமான தகராறுகளும் வராது என்று கருதுகிறேன். ஏற்கெனவே இருக்கின்ற முறைப்படி வீடுதோறும் சென்று கணக்கு எடுப்பது களப் பணியாளர்கள். அவர்கள் அப்படி எடுத்த கணக்கை அனுப்புகிறார்கள். வருவாய் அலுவலகத்தில் பட்டியல்கள் தயாரிக்கப்படு கின்றன. பட்டியல் தயாரித்து காசாளர்களுக்கு அனுப்பப்படுகிறது. காசாளர் அந்தப் பட்டியலை விநியோகித்து பணத்தைப் பெறுகிறார். ஆகவே கணக்கு எடுத்து, பட்டியல் தயாரித்து காசு வசூலிப்பது என்று மூன்று தனி அமைப்புகள் இதைச் செய்து வந்தன. இதனால் என்ன நிலைமை என்றால்—மாண்புமிகு உறுப்பினர் இதற்கு முன் நடந்த கூட்டத் தொடரைப் பார்த்தால் தெரியும்—சரியாக பில் போடுவதில்லை, கணக்கை எடுப்பதில்லை, அதைப் பற்றி விளக்கம் கேட்டால், யாருக்கும் தெரிவதில்லை—இப்போது குழப்பம் என்று சொல்லுகிறார்களே அதைவிட பெருங்குழப்பம் அங்கே இருந்தது. அங்கே உள்ள பிரிவு அதிகாரியைக் கேட்டால் அவருக்கு விளக்கத் தெரியாது. கணக்கு அதிகாரியைக் கேட்டால், அவருக்கும் சொல்லத் தெரியாது. அப்படி மின்சாரத் துறையில் வேலை நடைபெறுவதை மாற்றி, போகிற இடத்திலேயே கணக்கு எடுத்து அங்கே யூனிட் ஒன்றுக்கு என்று 'சராசரி கட்டணத்தை நிர்ணயித்து உள்ளபடி கணக்கை அங்கேயே போட்டுவிட்டால், பணியீட்டாளர் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம், கணக்கு சரியாகப் போடுகிறார்களா என்று. கொஞ்சம் விபரம் தெரிந்திருந்தால், மீட்டர் கணக்கைப் பார்த்துக் கொண்டு பட்டியலில் இருப்பதையும் பார்த்துக்கொள்ளலாம். ஆக மூன்று இடங்களில் நடைபெற்ற வேலையை ஒரு முனையிலேயே கொண்டு வருகின்ற சாதாரண சீர்திருத்தம்தான். ஆனால் சாதாரண சீர்திருத்தம் செய்வதற்குக் கூட அசாதாரண உழைப்பு, முயற்சிகள் தேவை என்பதை நாம் அனைவரும் நன்றாக உணர்ந்திருக்கிறோம். அதனாலேதான் சங்கடம். பட்டியல் முறையைப் பற்றி 1981 ஆம் ஆண்டு பிப்ரவரியில் சட்டசபையில் அறிவித்தேன். அவசரப்பட்டுக் கொண்டு வந்துவிட்டேன் என்று சொல்வதால், இதைச் சொல்கிறேன். பிப்ரவரி 1981-ல் அறிவித்தேன். சனவரி 1982-ல் அமுலுக்கு வந்திருக்கிறது. தமிழ் நாடு தொழிலாளர் சம்மேளனம், தமிழ் நாடு மின் கணக்காளர் மற்றும் களப் பணியாளர் சங்கம் ஆகியவற்றோடு பிப்ரவரி



1982 பிப்ரவரி 20] [திரு. ச. இராமச்சந்திரன்]

மாதம், ஏப்ரல் மாதம் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. இவை இரண்டும் தான் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களோடு மட்டும் பேசலாமா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் கேட்டார்கள். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களோடுதான் பேச வேண்டும். இதுதான் தொழிலாளர் இயக்கத்திலே உள்ள முறை. அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களோடு பேசியது மட்டுமல்லாமல், மற்றும் மத்திய அமைப்புகளோடு சேர்ந்த அரசியல் கட்சி சார்புடைய தொழிற்சங்கங்கள் என்று சொல்லக்கூடிய சங்கங்களோடும் 26—4—1981-ல் பேசப்பட்டது. குறிப்பாக தமிழ் நாடு மின்சார தொழிலாளர் மத்திய அமைப்பு—மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நடத்துகிறது ; தமிழ் நாடு மின் கழக தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்—திராவிட முன்னேற்றக் கழகம் நடத்துகிறது. தமிழ்நாடு மின் வாரிய அண்ணா தொழிலாளர் சங்கம்—எங்களது சங்கம்,—அதுகூட அங்கீகரிக்கப் பட்ட பட்டியலில் இல்லை என்பதற்காகச் சொல்லுகிறேன், தமிழ் நாடு தேசிய மின்சார தொழிலாளர் சங்கம்—திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு வேண்டிய சங்கம். தமிழ் நாடு மின்சார வாரிய ஜனதா தொழிற் சங்கம் ஆகிய மத்திய அமைப்புகளோடு நெருங்கிய சங்கங்களோடும் பேச்சுவார்த்தை நடத்தப் பட்டது.

பொதுவான முறை என்னவென்றால், அங்கீகரிக்கப்பட்ட தொழிற் சங்கங் களோடு பேசி, இதைப்போன்ற மற்ற சங்கங்களிடம் கொடுக்கும்போது, ஏற்றுக் கொண்டால் கையெழுத்திடலாம், ஏற்காவிட்டால் கையெழுத்திட மறுக்கலாம். இதுதான் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வரும் முறை ; அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களோடு பேசி முடித்த பிறகு, இவர்களுக்கும் நகல்கள் அனுப்பப்பட்டன. அண்ணா தொழிலாளர் சங்கம் அதை ஏற்றுக் கொண்டது. மற்ற சங்கங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படிப்பட்ட சமயத்தில் ஏற்றுக் கொள்ளவில்லை என்று துண்டறிக்கை வெளியிடுவார்கள். வெளியே ஏதாவது ஒரு நாளைக்கு கோஷம் எழுப்புவார்கள். ஆனால் எப்போதும் நடைபெறாத ஒன்று இந்தத் தடவை நடந்திருக்கிறது. அது என்னவென்றால். இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் உயர்நீதி மன்றத் திற்குச் சென்றது. உயர்நீதி மன்றத்திற்கு எப்படிச் சென்றார்கள்? "ஏற்கெனவே ஒரு வேலைப் பளு ஒப்பந்தம்" போட்டிருக்கிறார்கள் எங்களோடு. அந்த ஒப்பந்தம் அமுலில் உள்ளது. இதில் நாங்கள் கையெழுத்துப் போடவில்லை, ஆகவே இதை நடைமுறைப்படுத்துவது ஏற்கனவே எங்களுடன் செய்த ஒப்பந்தத்தை மீறியதாகும் என்று தடை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். கருணை காட்டி மாட்டிக் கொள்வதைப்போல இருக்கிறது இது. இரக்கம் காட்டுவதுகூட யாருக்குக் காட்டுவது என்பது முக்கியமானது.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 20

மிகவும் அனாதை ஒருவன் கேட்டான், "நீதிபதி அவர்களே என்னை மன்னித்து விடுங்கள். ஏனென்றால் நான் ஒரு அனாதை" என்றான். அதற்கு நீதிபதி "நீ எப்படி அனாதை?" என்றார். "நான் தந்தையையும் தாயையும் கொலை செய்து விட்டேன், அதனாலே அனாதை, ஆகவே மன்னித்து விடுங்கள்" என்று சொன்னான். இதை வேடிக்கையாகச் சொல்லுவார்கள்.

அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் போட்ட ஒப்பந்தத்தை அனுப்பும்போது, "இவர்கள் ஏற்கெனவே கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். எங்களோடு மின் வாரிய நிர்வாகம் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. இப்போது எங்களுக்குத் தெரியாமல் மாற்றியிருக்கிறார்கள்" என்று வைத்தே அதை கோர்ட்டில் நின்றிருக்கிறார்கள். அதற்குப் பிறகு மின் வாரியத்திடம் சொன்னோம், இவர்கள் கையெழுத்துப் போடுகிறேன் என்று சொன்னால்கூட ஒத்துக்கொள்ள வேண்டாம்; அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கையெழுத்துப் போட்டாலே போதும்" போனால் போகிறது என்று கையெழுத்து வாங்கும் போது, அதை வைத்துக்கொண்டே கோர்ட்டுக்குப் போகிறார்கள், ஆகவே கையெழுத்து வாங்க வேண்டாம் என்று சொன்னோம். "வேண்டுமானால் உதவி செய்யாமல் இருக்கட்டும், ஆனால் உபத்திரமாவது இல்லாமல் போகட்டும்" என்ற அடிப்படையிலே கையெழுத்து வாங்க வேண்டாம் என்று சொல்லிவிட்டோம். உயர்நீதிமன்றத்திற்குப் போனார்கள். உயர் நீதிமன்றம் முழுத் தடை விதித்தது. அதற்குப் பிறகு மேல் முறையீடு மின்சார வாரியம் செய்தது. நீதிபதி குழு பார்த்து விட்டு "இந்தத் திட்டத்தை எந்தத் தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்கள் நடைமுறைப்படுத்தலாம்" என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்ட தொழிலாளர்களை வைத்து நடைமுறைப் படுத்துகிறோம். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், சாதாரண சிறு காரியத்தைக் கூட செய்வதற்கு எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற் காகத்தான். கோர்ட்டிலே யாரை விரும்புகிறார்களோ அவர்களை வைத்துச் செய்யுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். சனவரியிலிருந்து என்ன நடக்கிறது தெரியுமா? வசூல் செய்யும் இடத்தை விடுவதில்லை மற்ற சங்கங்கள். கோர்ட்டிலே தடை வாங்கியிருக்கும் சங்கங்கள். பயனீட்டாளர்களிடம் அனுமதியின்றி பணம் வசூலிப்பது, பயனீட்டாளர்களுக்குப் போலி ரசீது வழங்குவது, பயனீட்டாளர்களைத் திசை திருப்பி அனுப்புதல் போன்றவற்றைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நேற்றுகூட ஒருவர் சொன்னார், "பணம் கட்டுவதை வாங்க மாட்டேன்" என்று சொன்னார்கள் என்று. "போகும்போது வெங்காயம் வாங்கிக் கொண்டு போ, இங்கே வந்து என் பணத்தைக் கட்டு



1982 பிப்ரவரி 20] [திரு. ச. இராமச்சந்திரன்]

கிறாய்?" என்று கேட்டார்கள் என்று சொன்னார். யார் இதை விரும்பி வேலை செய்கிறார்களோ அவர்களுக்குச் சம்பளப் பட்டியல் தயாரிக்க வேண்டிய வேலை மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் செய்ய வேண்டி யிருக்கிறது. அங்கே இருக்கின்ற போட்டிச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சம்பளப் பட்டியல் தயாரிக்க மாட்டோம் என்ற போராட்டத்தில் ஈடுபட்டிருக் கிறார்கள். இதைச் சொல்லும்போது, தொழிலாளர்கள் எப்படி இயங்கு கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம் அல்லவா? அது மட்டு மல்லாமல் மேசை, நாற்காலிகளை உடைத்தல், கணக்காளர்களைத் தடுத்தல் நடைபெற்றிருக்கின்றன. இது போதாது என்று மின்சார வாரியத்தின் தலைவர் மீது கோர்ட் அவமதிப்பு வழக்குப் போட்டிருக்கிறார்கள். இப்படிப் பட்ட ஒரு சூழ்நிலை இருக்கிறது. அவர் என்ன செய்தார், ஒன்றும் செய்ய வில்லை. விரும்புகிறவர்களை வைத்து வேலை வாங்குகிறார். இவர்கள் விரும்பவில்லை. பேசாமல் உட்காருங்கள், சம்பளம் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். இருந்தாலும் வேலை தரவில்லை என்று சேர்மேன் மீது உயர்நீதிமன்றத்திலே வழக்குப் போட்டிருக்கிறார்கள். அவர் கோர்ட்டுக்குப் போய் 'அவமதிக்கவில்லை' என்று சொல்லியிருக்கிறார். இப்படி நிர்வாகத் திலே சாதாரண சீர்திருத்தம் செய்வதிலே, பயனீட்டாளர்கள் எவ்வளவு கட்டணம் என்று தெரிந்துகொள்ள வழிவகை செய்வதிலேயே இவ்வளவு சங்கடம் இருக்கும்போது, 90 ஆயிரம் பேரை ஒன்றரை இலட்சமாக ஆக்கச் சொல்கிறீர்களே, இது நியாயம்தானா என்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்

(பிற்பகல் 1-30)

காசாளர்கள் எல்லாம் இதிலே மிகவும் பாதிக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். ஆனால் 'இந்து' பத்திரிகையிலே சில தினங்கள் முன்னால் ஒரு கட்டுரை வந்தது. முன்பு காசாளர்களின் வேலை என்னவென்றால், மாதத்திற்கு பணம் வசூலிப்பது 2 நாட்கள்தான் இருந்தது. அது ஏற்கெனவே இருந்த நடை முறை. ஆனால் இப்போதுள்ள முறையிலே காசாளர் கொஞ்சம் வேலை செய்ய வேண்டும். தொழிலாளர் கொள்கையினைப் பொறுத்தவரையில் இந்த அரசுக்கு அழுத்தமான ஒரு கொள்கை உண்டு. அது என்னவென்றால், அவர் கள் நன்றாக வேலை செய்யட்டும், அதே நேரத்திலே நன்றாக சம்பளம் வாங்கிக் கொள்ளட்டும். வேலையே செய்யாமல் சம்பளம் வாங்க வேண்டுமென்று நினைத்தால், அது நாட்டிற்கு விரோதமானது. அதை நாம் அனுமதிக்கக் கூடாது. நான் போக்குவரத்துத் துறைப் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருந்தேன். அப்போது சொன்னேன், பஸ் தொழிலாளர்களிடம் அப்படித்தான் சொன்னேன். நன்றாக வேலை செய்து நிறைய சம்பளம் வாங்குங்கள். இந்த நிறுவனத் திலே நன்றாக இருக்கிறோம் என்கிற பெருமையையும் பெறவேண்டுமென்பது

தான் என்னுடைய நோக்கம். காசாளர்களுக்கு சம்பளம், படி உட்பட ஒரு
மாதம் ரூ. 819-50 தரப்படுகிறது 'இந்து' பத்திரிகையிலே வந்த கட்டுரைப்
படி, நடைமுறைப்படி பார்த்தால், அவர்கள் வேலை செய்கின்ற நாட்கள் 2
நாட்கள்தான். இந்த நிலைமை நீடிக்குமானால், அதற்குப் பிறகும் இந்த
நஷ்டத்தை எல்லாம் ஈடு கட்டுவது எப்படி என்பதைத் தெரிந்து கொள்ள
வேண்டும். ஆனால் நல்ல வேளையாக தொழிலாளர்கள் . .

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த மின்
வாரியத்திலே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற் சங்கம்தான்
போய் அதிலே தடை வாங்கியது என்று ஒன்றைச் சொல்லி, ஏதோ வாரியத்
திற்குப் பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்துகின்ற வகையிலே அவர்கள் ஈடுபடு
கிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்வதுபோல சொல்லிக் கொண்டிருக்
கிறார்கள். ஒப்பந்தத்திலே கையெழுத்துப் போட்டவர்கள் பல்வேறு சங்கங்
களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் சென்று நீதிமன்றத்திலே வழக்குத்
தொடர்ந்தார்கள். அதிலே 12—11—1979, 12—12—1979, 11—1—1980
தேதிகளில் எல்லாச் சங்கங்களையும் அழைத்துப் பேசித்தான், அட்டைப்
பட்டியல் முறைக்கு ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக்
கழகச் சங்கம்கூட அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை, வரவேற்றிருக்கிறது
ஆனால் அதற்கு முன்பு இருந்த அமைச்சர் அவர்கள் இப்படி பேச்சுவார்த்தை
கள் வருகின்றபோது, எல்லோரையும் அழைத்து வைத்துப் பேசினார். ஆனால்
இந்த முறை மட்டும் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தை மட்டும் வைத்துப் பேசி
ஒரு முடிவு செய்து அதிலே கையெழுத்திடுங்கள் என்று சொல்வது சரியில்லை
என்றுதான் சொல்கின்றார்கள். ஆகவேதான் அவர்கள் அந்தப் பிரச்சினை
யைக் கிளப்பினார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தத் தொழிற்சங்கங்களை
எப்படி இயக்குவது என்பதில் எனக்கு நீண்ட அனுபவம் உண்டு. ஒரு காலத்
திலே அந்தத் தொழிற் சங்கத்தினை நடத்தியவன் என்பதைச் சொல்ல
விரும்புகிறேன். அதாவது "Consent is different from Consultation"
அங்கீகாரத்தோடு இருக்கிற சங்கங்களோடு சம்மதம் என்றால், எல்லோரையும்
வைத்துக்கொண்டு முடிவுக்கு வருவது என்பது முடியாது. அதற்குப் பிறகு
அவர்களுக்கு அங்கீகாரம் எதற்கு? அங்கீகாரம் பெற்ற சங்கத்தினர்களை
வைத்துக்கொண்டு அவர்களுடைய சம்மதத்தைப் பெறுகிறோம். மற்றவர்
களும் சம்மதம் தெரிவிக்கலாம். தெரிவிக்காமலும் போகலாம். ஆனால் அவர்
களோடு கலந்து பேசுகிறோம், அதுவும் நானே பேசினேன். அதாவது
26—4—1981-லே அழைத்துப் பேசினேன். அதற்குப் பிறகு மின்சார



வாரியத்தினைச் சார்ந்தவர்கள் எல்லாம் பேசினார்கள். அதிலே இன்னொன்று
சொன்னார்கள். இந்தத் திட்டத்திலே நிறைய பணம் 'வேஸ்ட்' ஆகிறது.
என்று சொன்னார்கள். பல இடங்களிலே அப்படி ஆகியிருக்கிறது என்றார்
கள். பல இடங்களிலே இந்த ரீடிங் எல்லாம் எடுக்க முடியவில்லை என்று
சொன்னார்கள். ஓரளவுக்கு அது உண்மை. அது என்னவென்றால் 5,438
பேர்கள் நமக்குத் தேவை. 4,200 பேர்கள் அதை ஏற்றுக்கொண்டு வந்திருக்
கிறார்கள். அதுவே பெரும் தொகைதான். இவ்வளவு தகராறுகளுக்கிடை
யிலேகூட 4,200 பேர்கள் ஏற்றுக்கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது நாம்
இரண்டாயிரம் பேர்களை எடுக்க இருக்கிறோம். அப்போது போதுமான
பணியாளர்கள் நிச்சயமாக இதன் மூலம் கிடைப்பார்கள் என்பதையும்
தெரிவித்துக்கொள்கிறேன். சில இடங்களில் மீட்டர் ரீடிங் எடுக்கவில்லை
என்றால், அந்தக் குறை இனிமேல் தீர்க்கப்படும் என்பதையும் தெரிவித்துக்
கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் சுமார் 65 சதவிகிதம், இப்போது
33.9 லட்சம் சர்விஸ், அதிலே டில்கனக்டட் 1.6 லட்சம். ஹட் சர்விஸ்-ஐச்
சேர்த்தால் 39½ லட்சம் சர்விஸ். அதிலே சுமார் 65 சதவிகிதம் எடுக்கப்
பட்டிருக்கிறது.

இதிலே பேசுகிறபோது, இன்னொன்றைச் சொன்னார்கள். இதன் மூலம்
வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்று சொன்னார்கள். அது அல்ல உண்மை.
வருவாய் இழப்பு இல்லை. சொல்லப்போனால் மேட்டூர் திட்டம் சேலம்
மாவட்டத்திலே இருக்கிறது. ஒரு இடத்திலே போய்ப் பார்த்தபோது, அந்த
மீட்டரில் பங்க்சர் செய்து ஓடாமல் செய்திருக்கிறார்கள். அந்த மீட்டரில்
என்ன என்ன செய்யலாமோ அதையெல்லாம் செய்திருக்கிறார்கள். அவை
களைக் கண்டுபிடித்து ரூ. 17,000-க்கு பில் போட்டார்கள். அது வசூலுக்கு
வந்தது, அவர் ரூ. 10,000 கட்டினார். மேட்டூர் திட்டம் சர்விஸ் கனெக்ஷன்
34. அவர் ரூ. 10 ஆயிரத்தை முதல் தவணையாகக் கட்டியுள்ளார்.
திருச்சியிலே ஒரு உதவியாளர், கருப்பண்ணன் என்பவர், துண்டிக்கப்பட
வேண்டியதைத் துண்டிக்காது விட்டுவிட்டு, தனியாக அவர் வசூல்செய்து
கொண்டு வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். இந்தத் திட்டத்தின் மூலம்
இந்தக் கணக்காளர் அங்கே போகிறபோது தெரிந்துவிடுமே என்று, பாவம்
அண்மையிலே தற்கொலை வேறு செய்துகொண்டார்கள். இப்படியெல்லாம்
நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. வருவாய் குறைகிறது என்ற விவரம்
சரியல்ல. மாதம் ஒன்றுக்கு சராசரியாக ரூபாய் 25, 26 கோடி என்ற அள
விலே வந்தது. பிப்ரவரி முதல் தேதி முதல் 15 தேதி வரையில் ரூ. 18.3
கோடி வந்திருக்கிறது. அதனால் மாதம் 36 கோடி ரூபாய் அளவுக்கு
உயர்ந்துவிடும் என்று நான் கருதவில்லை. வருவாய் குறையவில்லை.

[திரு.ச. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 20

கூடுதலாகியிருக்கிறது என்ற விவரங்களையெல்லாம் தெரிவித்துக் கொள்
கிறேன். இதிலே இந்தப் பிரச்சினையெல்லாம் இருப்பதால், போதுமான
பணியாளர்களைப் போட்டு, ஒழுங்காக நாம் கணக்குப் போட்டு, அவர்களுக்
கும் பணம் கட்டுவதற்கு வேண்டிய வசதிகளை அதிகரித்துவிட்டால், இதன்
மூலம் பல குறைபாடுகள் நீங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்வெட்டைப் பொறுத்தவரையிலும், நான் ஒன்றை மட்டும் குறிப்பிட
விரும்புகிறேன்: அமுல் செய்யப்படாத மின்வெட்டு இருக்கிறது. அதாவது
un-announced power cut என்று குறிப்பிட்டார்கள். அது நம்முடைய
நோக்கமல்ல. பொதுவாக மின்சாரத்தின் உற்பத்தியைப் பொறுத்தவரை
யில் ஜூன் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை அல்லது ஜூலை மாதம் முதல்
டிசம்பர் மாதம் வரை நல்ல உற்பத்தி நேரம் என்று சொல்வார்கள். ஆனால்
ஜனவரியிலிருந்து ஜூன் வரையில் பிரச்சினை. மாண்புமிகு அங்கத்தினர் திரு
ஆறுமுகம் அவர்கள் நிருவத்திறன் பற்றி எடுத்துச் சொல்லி, எவ்வளவு உற்
பத்தி செய்ய வேண்டும் என்று சொல்லி இவ்வளவுதான் செய்கிறார்களா என்று
கேட்டார்கள். இந்தப் பொறியியல் துறையிலே சுலபமாக உள்ளே போய்
வெளியே வர முடியாது. அதிலே புள்ளிவிவரத்தை மட்டும் வைத்துச் சொல்லக்
கூடாது. அது கொஞ்சம் சிக்கலான இடம். உற்பத்தித் திறன் இருக்
கிறதே அது நீர்ப்பாசனத்தோடு சேர்ந்தது. நீர்ப்பாசனம் வேண்டியதில்லை
என்று பொதுப்பணித் துறை இங்கே சொல்லிவிடுவார்களானால், நாம்
நீரை வெளியே அனுப்ப மாட்டோம். மின் உற்பத்தியே இருக்காது.
ஆகவே நிருவத்திறன் என்பதிலே கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.
காலை ஜாக்கிரதையாக வைக்க வேண்டும். இல்லாவிட்டால் சறுக்கிவிடும்.

அனல் மின் திட்டத்தைப் பொறுத்த அளவிலும், பிரச்சினை இருக்கிறது.
அதாவது எண்ணூர் யூனிட் 5. நமக்கு 1—12—1981-ல் வந்திருக்க
வேண்டியது. ஆனால் அதிலே காயில்கள் பழுதடைந்து விட்டன. ஏப்ரல்
முதல் தேதி எதிர்பார்க்கிறார்கள். கிட்டத்தட்ட 4 மாதம் கால தாமதம்.
தூத்துக்குடியில் முதலாவது இயந்திரம் 7—12—1981-ல் வந்திருக்கக் கூடியது.
அதில் ஒரு 210 மெகாவாட் வந்திருக்கிறது. பெல் நிறுவனத்தார் பழுது
பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் 14—1—1982 அன்றுதான்
பொங்கல் நாளில்தான் கொடுக்க முடிந்தது. காலதாமதமாகி விட்டது.
பெல் நிறுவனத்தாரைக் குறை சொல்ல முடியாது. அவர்களுக்கு வேண்டிய
துணைப் பொருட்களை, மற்றவைகளைப் பெற்றுத்தான் இந்தக் காரியம்
களை அவர்கள் செய்ய முடியும். தூத்துக்குடி இரண்டாவது யூனிட் ரிப்பேர்
ஆனது. 10—11—1981 வரவேண்டியது. வந்தது 20—12—1981-ல்.
இவைகள் எல்லாம் ஆரம்பத்தில் இருக்கக்கூடிய பிரச்சினைகள். பெரிய



1982 பிப்ரவரி 20] [திரு. ச. இராமச்சந்திரன்]

அனல் மின் நிலையங்களை இயக்குகின்ற அளவுக்கும், பராமரிக்கின்ற அளவுக்
கும், பழுதடைந்த நேரத்தில் அதைச் சரிசெய்யவும் நம் இந்தியாவிலேயே
அந்தத் தொழில் நுட்பத்தை வளர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.
இவைகள் எல்லாம் எதிர்பாராமல் ஏற்பட்ட குறைபாடுகள்தான். அதனால்
தான் ஜனவரி மாதத்தில் ஒரு மின் நிறுத்தம் இருந்ததே தவிர வேறல்ல.
வருகின்ற காலங்களிலேகூட, மின் உச்சத் தேவை என்ற ஒன்றை எப்படி
சமாளிக்கப் போகிறோம்? மின்சக்தி போதுமான அளவுக்கு இருக்கிறது.
எனர்ஜி இருக்கிறது. பீக் பீரியட்டில் எப்படி சமாளிக்கப் போகிறோம்
என்பதுதான் பிரச்சினையாக இருக்கிறது. அதனாலேதான் ஆந்திராவிலே
யும் கேரளாவிலேயும் எவ்வளவு கூடுதலாகப் பெறவேண்டும் என்பது பற்றிப்
பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறோம். கேரளத்திற்கு 24 ஆம் தேதி போய்
அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தச் செல்ல இருக்கிறேன். ஆந்திரா
விற்கு பிப்ரவரி 5 தேதியில் போக இருந்தேன். அங்கே போக முடியாத
சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, அங்கு பிரச்சினைகள் இருப்பதால்,
புதிய அரசு அமைந்தவுடன் போய் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி
பற்றாக்குறை ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும். பற்றக்குறை என்பது
இயல்பு. அதைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காக மின்சார வெட்டு,
ரேஷன் அமுல்படுத்துவது என்பது ஒன்றும் பெரிய சாமர்த்தியமில்லை.
பற்றாக்குறையைச் சரிகட்ட என்னென்ன வழிகள் இருக்கின்றன என்று
பார்த்து முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதுதான் முக்கியமே தவிர,
வேறு அல்ல.

அடுத்து, நான் எடுத்துச்சொல்ல விரும்புவது மின் திட்டத்தைப்
பொறுத்த வரையிலே நாம் இன்னும் நிறைய திட்டங்களைப் போடவேண்டி
யிருக்கிறது என்பதை நான் இங்கே கட்டாயம் சொல்லியாகவேண்டும். மின்
உற்பத்தித் திட்டங்கள் நிறையப் போடுவோமானால், நமக்கு அது பெருமை
யளிக்கும். மாண்புமிகு உறுப்பினர் ராஜா சர் முத்தையா செட்டியார்
அவர்கள் பேசும்போதுகூட, அதைச் சொன்னார்கள். எங்கே பார்த்தாலும்
அனல் மின் திட்டங்களைப் போடுங்கள், பற்றாக்குறை தீருமென்று சொன்
னார்கள். மற்ற உறுப்பினர்களும் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு
உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள்கூட, நிறைய சிறு சிறு திட்டங்
களாகப் போட்டு, இந்தக் காரியங்களை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்
னார்கள். அதுமட்டுமல்ல. சென்ற நவம்பரில் நடந்த மின்துறை
அமைச்சர்கள் மாநாட்டில் நான் பேசுகிறபோது, மத்திய
மின்சாரத் துறை அமைச்சரவர்கள், ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில்
20,000 மெகாவாட் கூடுதலாகத் திட்டங்கள் போட்டிருக்கிறோமென்றும்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 20

சொன்னார்கள். இதில் தமிழ் நாட்டுக்கு 210 மெகாவாட்தான். அதை நான் சொன்னேன். ஏன் பல மாநிலங்கள் அதைச் செய்யவில்லை என்று அவர்கள் கேட்டபோது, எனக்கு மத்திய மின்சாரத் துறை அமைச்சரவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று ஆசை; ஆனால் நான் உதவி செய்தாலும், செய்யாவிட்டாலும் ஒன்றுதான், ஏனென்றால் 210 மெகாவாட்டுக்கும் 20,000 மெகாவாட்டுக்கும் இடையே வித்தியாசம், "கடலிலே கரைத்த பெருங்காயம் போல் இருக்கிறது" என்று நான் சொன்னேன். அவர் திடுக்கிட்டார். எப்படி தமிழ் நாட்டுக்கு இவ்வளவு குறைந்தது என்று கேட்டு, அன்று மாலையே மின் துறை அதிகாரிகளையெல்லாம் அழைத்து, பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அதன் விளைவாக தூத்துக்குடியிலே 710 மெகாவாட்டும், மேட்டூரிலே 420 மெகாவாட்டும், வட சென்னையிலே 1,050 மெகாவாட்டும், கேஸ் டர்பைன்ஸ் மூலம் 300 மெகாவாட்டும் ஆக 2,480 மெகாவாட் உற்பத்தி செய்ய, 1,345 கோடி ரூபாய்க்கு—டெல்லியிலே நவம்பர் 8, 9 தேதிகளிலே கூட்டம் நடந்தது—டிசம்பர் 31 ஆம் தேதிக்குள் திட்டங்களைப் போட்டு, டெல்லிக்கு அனுப்பி, அதற்கு அனுமதி கேட்டிருக்கிறோமென்பதை மாண்புமிகு மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் பேசுகிறபோது, ஒன்றைச் சொன்னார்கள். இன்றைக்கு நிறுவனத் திறனில் 3 ஆம் இடத்தில் இருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அனுமதிக்கப்பட்ட திட்டங்கள், 6வது ஐந்தாண்டுத் திட்டத்தில், 7வது ஐந்தாண்டுத் திட்டத்தில், 8வது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்று பார்க்கிறபோது, நாம் எங்கோ போய்விடுவோம், இந்தத் திட்டங்கள் இல்லாவிட்டால்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். உத்திரப் பிரதேசத்தில் 3,811 மெகாவாட் நிறுவனத் திறன்; மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் நன்றாகக் கவனிக்க வேண்டும். ஏனென்றால் அவர்களெல்லாம் ஒத்துழைப்பு தருவதாகச் சொன்னார்கள். இங்கே சொல்லி போதாது, எங்கே சொல்ல வேண்டுமோ அங்கே சொல்ல வேண்டும். உத்தரப் பிரதேசத்தில் 3,611 மெகாவாட் இப்போதுள்ள நிறுவனத் திறன். அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டது 3372 மெகாவாட். அதைப்போல மராட்டியத்தில் இன்று நிறுவனத் திறன் 3992 மெகாவாட். அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டது 973 மெகாவாட். உத்தரப் பிரதேசத்திற்கு மொத்தம் 6984 வரும். மராட்டியத்திற்கு 4,960 வரும். நமக்கு இன்றைக்கு இருப்பது 2329. அதோடு அனுமதிக்கப்பட்டது 576தான். ஆக 2905 மெகாவாட்தான் வரும். நான் சொல்லுவது 1990-91லேகூட இந்த நிலைமைகள்



1982 பிப்ரவரி 20] [திரு. ச. இராமச்சந்திரன்]

இருக்கின்றன. ஆகவே இதை மாற்ற வேண்டும். இந்த நிலைமையில் போனால், நாம் சொல்லும் மூன்றாம் இடத்தில் இருக்க மாட்டோம். 10, 11 வது இடத்திற்குப் போய்விடுவோம். இந்தத் திட்டங்களுக்கு விரைவாக அனுமதியைப் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கு மத்தியிலே ஆளும் கட்சியாகவும், அங்கே தோழமைக் கட்சியாகவும்—தோழமையான கட்சியா, எதிர்க் கட்சியா என்பது தெரியவில்லை, பரவாயில்லை, எந்தக் கட்சியாக இருந்தாலும் இந்த நல்ல காரியத்திற்கு தோழமைக் கட்சிதான்—உள்ள காங்கிரஸ் கட்சி உதவ வேண்டும். இது ஒரு முக்கியமான காரணமானால், எந்த அளவிற்கு மின்சாரத்தை அதிகரிக்க முடியுமோ அந்த அளவிற்குச் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு அவர்கள் ஒத்துழைப்பு தருவேன் என்று சொன்னதால், அவருக்கு நன்றியுடையவனாக இருப்பேன்.

இதிலே இன்னொரு முக்கியமான கருத்து, மாநிலங்கள் மட்டும் மின் உற்பத்தி செய்து வந்த காலம் மாறி, மத்திய அரசு பெரிய அளவில் மின் உற்பத்தி செய்ய திட்டமிடுகிறது. அதிலே, குறிப்பாக எங்கெங்கே நிலக்கரிச் சுரங்கங்கள் இருக்கின்றனவோ அங்கேயிருந்து நிலக்கரியைக் கொண்டு போய் மாநிலங்களிலே மின்சாரத்தை உற்பத்தி செய்வதைவிட, அந்த நிலக்கரிச் சுரங்கங்களிலேயே பெரிய ராட்சத மின் உற்பத்தி நிலையங்களை வைத்து, மின்சாரத்தை உற்பத்தி செய்து, அந்த ஏரியா முழுவதற்கும், அந்த வட்டாரம் முழுவதற்கும், தர வேண்டுமென்று மத்திய அரசு ஒரு கொள்கை முடிவெடுத்திருக்கிறது. அந்த வகையிலே ராமகுண்டம் திட்டம், இன்னும் மற்ற மற்ற ராட்சத அனல் மின் நிலையங்களைச் செய்திருக்கிறார்கள். ஆனால் அதைப் பிரித்துக் கொடுக்கிறபோது, 1978ல்—இப்போதுள்ள அரசு செய்த தவறல்ல—என்ன செய்தார்கள் என்றால், கடந்த காலத்தில் ஒவ்வொரு மாநிலமும் எவ்வளவு மின்சாரம் பயன்படுத்தியிருக்கிறதோ அதையும், மத்திய உதவி 'காட்கில் பார்முலா' இருக்கிறதே அதையும் சேர்த்து பிரித்து கொடுக்கிறோமென்று சொன்னார்கள். அது தவறு என்று அப்போதே சொன்னோம். பற்றாக்குறையை வைத்துக் கொடுக்க வேண்டும். உதாரணத்திற்கு தமிழ் நாட்டில் பற்றாக்குறை என்றால், சாதாரணமாக என்ன செய்திருப்போம்? இன்னொரு அனல் மின் திட்டம் போட்டிருப்போம்; நெய்வேலியிலிருந்து நிலக்கரி கொண்டு வந்திருப்போம், ராமகுண்டத்திலிருந்து நிலக்கரி கொண்டு வந்திருப்போம். அதையும் தடுத்துவிட்டு, ராமகுண்டத்திலிருந்து மத்திய அரசு ஒரு நிறுவனம் போட்டு, கேரளாவிற்குத் தருவேன், ஆந்திராவிற்கு தருவேன், கர்நாடகத்திற்கும் தருவேன், தமிழ் நாட்டுக்கும் தருவேன் என்றால், அதற்குப் பிறகு கேரளாவிலிருந்து வாங்கிக் கொள்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 20

என்றால், 10 பைசா மின்சாரத்தை 45 பைசாவிற்குத்தான் வாங்க
வேண்டியதாக இருக்கும். அது சரியான கொள்கையல்ல; எந்தெந்த
மாநிலங்களில் எவ்வளவு பற்றாக்குறை இருக்கிறதோ, அதைப் பொறுத்து,
அந்த அடிப்படையிலே தர வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு
முதலமைச்சரவர்கள், மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு 8—2—1982 அன்று
இதனுடைய நோக்கம் பற்றி, விரிவாகக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.
பிரதமர் அவர்களும், மத்திய மின் துறை அமைச்சரவர்களும் இதை ஏற்றுக்
கொள்வார்களென்று கருதுகிறேன். இப்போது பாதுகாப்புத் துறை
அமைச்சராக இருக்கும் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களைக்கூட, நிதி
யமைச்சராக இருந்தபோது பார்த்து, இந்த நிலையை விளக்கியிருக்கிறோம்.
அவர்களும் இதுபற்றி மறு பரிசீலனை செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்.
சொல்வதை மத்திய அரசு செய்ய வேண்டும். ஏனென்றால் இது நியாயம்.
நமக்கு மட்டுமல்ல. இந்தியா முழுவதற்கும், எல்லா மாநிலங்களிலும்,
பற்றாக்குறையை வைத்து, அவர்கள் செய்கின்ற மின் உற்பத்தியைப் பகிர்ந்
தளிக்க வேண்டும். நெய்வேலியில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையை என்னுடைய
உரையிலேயே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். முதலிலே, 'நீங்கள் அந்த
மின்சாரம் முழுவதும் எடுத்துக் கொள்வீர்களா' என்று கேட்டார்கள்.
நம்பிக்கையோடு ஒத்துக்கொண்டோம். அதற்குப் பிறகு இந்த மின்சாரத்தை
யும், நாங்கள் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுப்போமென்று சொல்லப்படு
கிறது. நெய்வேலியில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரமும், நேஷனல்
தெர்மல் பவர் கார்ப்பரேஷன் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரமும்
ஒன்று என்று கணக்கிடக்கூடாது. இது தனி நிறுவனம். ஆகவே
நேஷனல் பவர் தெர்மல் கார்ப்பரேஷன் மூலம் மத்திய அரசால் உற்பத்தி
செய்யப்படும் மின்சாரம், பற்றாக்குறை அடிப்படையிலே மாநிலங்களுக்குப்
பகிர்ந்து அளிக்கப்பட வேண்டுமென்பது நம்முடைய கருத்து. நெய்வேலியை
பொறுத்தவரையில், It is on a different posting
காரணம் என்ன தெரியுமா? நாம் ஏற்கெனவே அனல் மின் திட்டங்கள்
வேண்டுமென்று கேட்டோம். "உங்களுக்குத்தான் நெய்வேலி இருக்கிறதே,
இன்னும் எதற்கு?" என்று கேட்டார்கள். ஆகவே, நெய்வேலியில் இரண்டாம்
அனல் மின் நிலையத் திட்டம் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம்
நமக்கு என்பதால் புதிய திட்டங்களை அனுமதிக்கவில்லை. அடுத்து காடம்
பாறை 400 மெகாவாட் நீர் ஏற்று மின் திட்டம் ஒன்று இருக்கிறது. இரவிலே
மேலே பம்ப் செய்து தண்ணீரை ஏற்றிவிட்டு, காலையிலே கீழே விட்டால்,
அது உச்சத் தேவையைச் சரி செய்ய உதவும். அந்த 400 மெகாவாட்
திட்டமே பிரயோசனம் இல்லாமல் போய்விடும். நெய்வேலியிலே இருக்
கின்ற இரண்டாம் சுரங்கம் மூலம் கிடைக்கும். முழு மின்சாரம் கிடைக்க



1982 பிப்ரவரி 20] [திரு. ச. இராமச்சந்திரன்]

அனுமதித்திருக்கிறார்களே, 400 மெகா
வில்லை என்றால், காடம்பாறையில்
தேவையில்லாமல் போய்விடும்.
வாட் மின்சார உற்பத்தித் திட்டம், அது
நிறைவேற்றுவதுதான் உத்தமம்.
என்வே ஏற்கெனவே ஒத்துக்கொண்டதை
செய்வதைத் தர வேண்டும். நம்
தாம் என்பதால், நெய்வேலியிலே உற்பத்தி
ஏனென்றால் ஆண்டுக்கு 10 சதம் என்று
முடைய தேவை அசுரத் தேவை.
இந்தத்
போய்க்கொண்டிருக்கிறது.
வகையிலே வளர்ச்சி வேகமாகப்
எந்தெந்த வகையிலே முயற்சிக்க
தேவையை நிறைவு செய்வதற்கு
நாம் திட்டங்கள்
முயற்சிக்கிறோம்.
வேண்டுமோ அந்தந்த வகையிலே
அடிப்படையிலேதான், 'தனியார்
போட்டால் மட்டும் போதாது என்ற
என்று அரசு சிந்திக்கத் தொடங்
துறையிலே முன் வருவார்களானால்'
தனியார்
இன்றுகூடச் சொல்கிறேன்.
அரசுகூட சிந்திக்கவில்லை.
யிடம்.
வேண்டியதில்லை. என்
மிரள
என்றால்,
துறை, தனியார் துறை
வைத்துக் கொண்டிருக்கிறார்
தெரியுமா? இப்போதே டீசல் ஜெனரேட்டர்கள்
மேலே தனியார் துறையில்
தமிழ் நாட்டிலே 300 மெகாவாட்டுக்கு
கள்.
செய்கிறார்கள். சர்க்கரைத் தொழில்,
இன்றைக்கு மின்சாரம் உற்பத்தி
தொழில்—இவைகளிலே மின்சாரம் துணைப்
உரத் தொழில், பெட்ரோலியம்
மட்டுமல்ல. அடிக்கடி பவர்-
பொருளாக உற்பத்தியாகிறது. அதோடு
நீக்குவதற்கு மின் உற்பத்தி
கட் என்று வருவதால், பற்றாக்குறையை
விரிவாக்க வேண்டியிருக்கிறது.
செய்கிறார்கள். சில நேரங்களில் தொழிலை
அதற்காக மின்சாரத்தை
மின் வாரியத்தால் மின்சாரம் தர முடிவதில்லை.
பொருளாகக் கிடைக்
துணைப்
உற்பத்தி செய்ய வேண்டியிருக்கிறது.
தேவைப்படுகிறது. விரிவாக்கம்
கிறது. பற்றாக்குறையை நீக்க மின்சாரம்
இந்தியா முழுவதற்கும் ஒரு கணக்கு சொல்
வேண்டி மின்சாரம் வருகிறது.
இன்றைக்கு 2799 மெகாவாட்
கிறேன். 1964 மெகாவாட்டிலிருந்து
செய்கிறார்கள். அது பாவமல்ல.
மின்சாரம் தனியார் துறையிலே உற்பத்தி
மின்சாரத்தை உற்பத்தி
அவர்கள் தேவையை நிறைவேற்றிக்கொள்ள
செய்தால், அது வரவேற்கத்தக்கதுதான்.

(பிற்பகல் 1-50)

பயன்படுத்தும் மின்சாரத்தைப்
தனியார் துறையிலே தொழில்களுக்குப்
சொல்கிறேன்—ஐந்தில் ஒரு
பொறுத்தவரையில், இந்தியா முழுவதும் நான்
தேவையை அவர்களே
பங்கை அதாவது நூற்றுக்கு 20 பங்கை அவர்களுடைய
டாடா நிறுவனம்
மின் உற்பத்தி செய்வதன் மூலம் நிறைவு செய்கிறார்கள்.
இருக்கிறது. அது
நிறுவனம்
இருக்கிறது. சென்ட்ரல் எலெக்ரிசிட்டி
அவைகளின் மூலம்
போல் அஹமதாபாத் மின் நிறுவனம் இருக்கிறது.
என்ன நடந்தது என்பதைச்
மின் உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கேயும்
மின் வெட்டு வந்து
சொல்கிறேன். தொடர்ந்து 1972 ஆம் ஆண்டிலிருந்து

[திரு. ச. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 20]

கொண்டிருந்த காரணத்தால், வட சென்னையில் தொழிற்சாலை வைத்
திருப்பவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, "எங்களுடைய மின்சாரத்
தேவையைப் பூர்த்தி செய்ய நாங்களே ஒரு மின் நிலையம் அமைத்து
உற்பத்தி செய்யலாமா?" என்று கேட்டார்கள். அவர்கள் அவ்வாறு அவர்
களுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்தால், நமக்கு அந்த
மின்சாரம் மிச்சம்தான். யார் உற்பத்தி செய்தாலும் நமக்கு நல்லதுதான்.
இல்லாவிட்டால் நாம் தொழிலில் பின் தங்கி விடுவோம். இதுபற்றி எக்கனாமிக்
டைம்ஸ்-ல் தெளிவாக ஒரு விவரம் வந்திருக்கிறது.

Generation of captive power—A group of Companies, Kotharis, Ashok Leyland, Tube Investment and E. I. D. has Joint plan of 210 MW production in Tamil Nadu. Plants of 135 and 200 MW are proposed to be set up by Birla and the Tata group of Companies in Bihar. To the extent that the private industrial sector relies on captive power generation with viable power station, the pressure on the public utility declines. அதாவது இப்போது
டீசல் வைத்து ஆங்காங்கே உற்பத்தி செய்து கொண்டிருப்பதைவிட நிலக்
கரியை வைத்து மொத்தமாக மின்சாரத்தை உற்பத்தி செய்தால், விலையும்
குறையும். அவர்களுடைய தேவையும் நிறைவேறும் என்று சொல்லப்பட்
டிருக்கிறது. அப்படிச் செய்தால் நம் மீது உள்ள நெருக்கடி குறையும்.
பெரிய தொழிற்சாலைகளுக்குக் குறைந்த விலையில் மின்சாரம் தருகிறோம்
என்கிற ஒரு குற்றச்சாட்டு ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. அவர்
களுடைய தேவையை, அவர்களாகவே, டீசலைப் பயன்படுத்திக் கொண்டு,
பூர்த்தி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் சொன்னதுமாதிரி
உற்பத்தி செய்தால், அவர்களுடைய தேவைக்குப் போக மிச்சம் வந்தால்
நாம் அதைக் குறைந்த விலைக்கு வாங்கி பயன்படுத்தலாம். அல்லது அவர்
கள் உற்பத்தி செய்த மின்சாரம் தேவைக்குக் குறைவாக இருக்கிறது என்று
சொன்னால், மேற்கொண்டு தேவைப்படுகிற மின்சாரத்தை நாம் கொடுக்க
லாம். அவர்கள் பக்கம் நாம் செல்ல தேவையே இல்லை.

சோஷலிசம் பற்றியும், பேரறிஞர் அண்ணா பற்றியும் இங்கே பேசினார்
கள். அண்ணா அவர்கள் ஜப்பான் போய் வந்திருக்கிறார்கள். ஜப்பான்
நாட்டில் ஒரு கப்பல் கட்டுகின்ற தொழிற்சாலை கூட அவர்களுக்குத் தேவை
யான மின்சாரத்தை மின் வாரியத்திலிருந்து பெறுவதில்லை. அவர்களே
அதை உற்பத்தி செய்கிறார்கள். 'செல்ஃப் கன்டெய்ன்ட்' ஆக வைத்துக்
கொண்டு அவர்களுடைய காரியங்களை நிறைவேற்றுகிறார்கள். இன்னொரு
வரை எதிர்பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. அவர்களுடைய சுய
தேவையை அவர்களே பூர்த்தி செய்ய முன்வந்தால், நமக்குள்ள பிரச்சினை
போகும். நாம் எட்ட வேண்டிய அளவுக்கு மின்சாரத்தை மத்திய



[1982 பிப்ரவரி 20] [திரு. ச. இராமச்சந்திரன்]

அரசானாலும் சரி, மாநில அரசுகளானாலும் சரி அல்லது தனியார்
துறைகளின் மூலமாக எல்லாம் மின்சார உற்பத்தியைப் பெருக்கிட அவர்களை
ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பது சரியானதே என்று கூறி, உரையை
முடிக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேலவையின் இன்றைய நிகழ்ச்சி
கள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் 26—2—1982, வெள்ளிக்
கிழமை பிற்பகல் 4-00 மணிக்குக் கூடும். அன்று கேள்வி நேரம்
கிடையாது.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-54)

## இணைப்பு I

[759 ஆம் பக்கத்தில் இனம் 6 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் என்னுமிடத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 1981 ஆம் ஆண்டின் குறுவைப்பட்ட நெல்லை கூலிக்கு அரைப்பதற்கு திரு. கே. வி. சந்திரமோகன் என்பவர் முகவராக நியமிக்கப் பட்டார். இதற்கு, நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்கு ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். அந்த ஒப்பந்தப் பத்திரத்தின் சாரத்துக்கள்படி, தஞ்சாவூர் மாவட்டத்தில் கொள்முதல் செய்த 1030.742 மெட்ரிக் டன் நெல் அரைவைக்காக அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த நெல் ஒற்றைப்பூட்டு அதிகாரி திரு. ஏ. முருகேசன் (துணைத் தாசில்தார்) அவர்களின் கண்காணிப் பில் அரைவை முகவரின் கிட்டங்கியில் இருந்தது. அதில் 362.689 மெட்ரிக் டன் நெல்லை ஒற்றைப்பூட்டு அதிகாரி அரைவைக்காக கொடுத்திருக்கிறார். அந்நெல்லிற்கு அரைவை முகவர் கொடுக்க வேண்டிய அரிசியின் அளவு 244.388 மெட்ரிக் டன். ஆனால் அவர் கொடுத்தது 171.700 டன் அரிசிதான்.

அரைவைக்காக முகவரிடம் கொடுத்த நெல்லையும் அவர் கொடுத்த அரிசியை யும், மீதம் அவரிடமும், ஒற்றைப்பூட்டு அதிகாரியின் கண்காணிப்பில் உள்ள கிட்டங்கியில் உள்ள நெல்லையும் ஆய்வு செய்ய நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைமை அலுவலகத்தில் உள்ள ஆய்வுக் குழு அனுப்பப்பட்டது. அக்குழு இந்த அரைவை முகவரிடம் உள்ள கணக்குகளையும், கையிருப்பையும் ஆய்வு செய்து கையிருப்பில் குறைவுகள் காணப்படுவதாகக் கண்டுபிடித்து நுகர் பொருள் வாணிபக் கழக சேலம் மண்டல மேலாளருக்கு தெரிவித்தது. ஆய்வுக் குழு எடுத்துக் கூறியபடி அரைவை முகவரிடம் உள்ள கையிருப்பு முழுவதும் நிறுத்து சரி பார்த்ததில், பின்வரும் அளவு நெல்லும், அரிசியும் காலி கோணிப் பையும் குறைவாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

| | மூடைகள் | எடை (மெட்ரிக் டன்) | மதிப்பு ரூ. |
|---|---|---|---|
| நெல் | 7081 | 414.229 | 4,76,363.35 |
| அரிசி | 329 | 32.891 | 57,559.25 |
| கோணி | .. | .. | 48,215.75 |
| | | | 5,82,138.35 |



நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் அறிவுரைப்படி, ஒற்றைப்பூட்டு அதிகாரி அரைவை முகவரிடம் அரைக்க ஒப்படைத்த நெல் முழுவதும் தன் கண்காணிப்பில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு முறையும் அரைவைக்காக அவர் 20 முதல் 30 மெட்ரிக் டன் வரை நெல்தான் அரைவை முகவரிடம் கொடுக்க வேண்டும். ஒரு முறை கொடுத்த நெல்லுக்குரிய அரிசி முழுவதும் பெற்றபின்தான் அரைவைக்காக அடுத்த முறை தன் கண்காணிப்பில் உள்ள நெல்லை ஒற்றைப்பூட்டு அதிகாரி கொடுக்க வேண்டும். மாறாக, ஒற்றைப்பூட்டு அதிகாரி நெல் இருந்த கிட்டங்கிப் பூட்டின் ஒரு திறவு கோலை தன்னிடம் வைத்துக்கொண்டு, மற்றொரு திறவு கோலை அரைவை முகவரிடம் ஒப்படைத்து விட்டார். மேலும் அவர் தினமும் அரைவைக்கு எடுத்த நெல்லை யும், அதற்கு வரவேண்டிய அரிசியையும், மீதி கையிருப்பு நெல்லையும் கண் காணிக்க தவறி விட்டார். இதைப்பற்றி ஒற்றைப்பூட்டு அதிகாரி மீதும் அரைவை முகவர் மீதும் மண்டல மேலாளர் காவல்துறைக்குப் புகார் கொடுத் துள்ளார்.

இந்த இழப்பை ஈடு செய்ய அரைவை முகவர் மீதும், ஒற்றைப்பூட்டு அதிகாரி மீதும் உரிமையியல் வழக்குத் தொடர்ந்து, அரைவை முகவர் திரு. சந்திரமோகன் அவர்களுக்குச் சொந்தமான நான்கு லாரிகளையும், ஒற்றைப் பூட்டு அதிகாரிக்கு சொந்தமான 5 ஏக்கர் நிலத்தையும் கைப்பற்ற சேலம் சார்பு நீதிமன்றத்தில் ஆணை பெறப்பட்டுள்ளது. அவ்வாணைப்படி, நான்கு லாரிகளில், மூன்று லாரிகள் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தின் பாதுகாப்பில் உள்ளது. எஞ்சிய ஒரு லாரியைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த அரைவை முகவரிடம் நெல்லை வாங்கியதாகக் கருதப்படும் நாமக்கல்லைச் சேர்ந்த திரு. நல்லதம்பி என்பவரை காவல் துறையினர் கைது செய்துள்ளனர். இந்த அரைவை முகவர் ஏற்கெனவே ரூ. 10,000 பிணை வைப்புத் தொகையாகச் செலுத்தியுள்ளார். மேலும், அவருக்கு தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் தஞ்சாவூர் மண்டலத்திலிருந்து நெல் கொண்டு சென்றதற்குக் கூலியாகவும், அரைவை கூலியாகவும் தரவேண்டியுள்ளது. அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பை ஈடு கட்டுவதற்கு சட்டப்படியான நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. குற்றவாளிகள் மீதும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன

## இணைப்பு II

[760 ஆம் பக்கத்தில் இனம் 6 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

1978-79 ஆம் ஆண்டிலிருந்து பள்ளிகளில் புதுப் பாடத் திட்டம் (பிளஸ் 2 தொடங்கப்பட்டது. புகுமுக வகுப்பு 1979-80 ஆம் ஆண்டு கல்லூரிகளிலிருந்து எடுக்கப்பட்டது. இதனால் மாணவர் எண்ணிக்கை மற்றும் வேலைப்பளு கல்லூரிகளில் குறைந்தது. பல ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாதோர் கல்லூரிகளில் உபரியாக ஆயினர். இவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு 31—3—1977 அன்று பணியிலிருந்த அனைவரும் மற்றும் 26—2—1979 அன்று முறையான காலியிடங்களில் இருந்தவர்களும் வேலை நீக்கம் செய்யப்பட மாட்டார்கள் என்று அரசு ஆணையிட்டது. இப்பணிப் பாதுகாப்பு மேற்சொன்ன காலங்களில் "வரம்பிற்குட்பட்ட மற்றும் மானியத்திற்கு அனுமதிக்கப்பட்ட" பதவிகளில் உள்ளவர்க்கு மட்டுமே பொருந்தும். தனியார் கல்லூரிகளில் சிலவற்றில் அங்கீகரிக்கப்படாத பதவிகள் (உதவி மெக்கானிக், மின்சார மேஸ்திரி காப்பாளர், ஓட்டுநர் முதலான பதவிகள்) உள்ளன. இப்பதவிகள் அரசு கல்லூரிகளில் இல்லை. வேறு சில பதவிகள் அரசு கல்லூரிகளில் இருந்தாலும் நெடுங்காலமாகவே அவைகள் மானியத்திற்கு அனுமதிக்கப்படவில்லை. ஆகையால் இம்மாதிரி மானியத்திற்கு அனுமதிக்கப் படாத பதவிகளில் உள்ளவர் பணிப்பாதுகாப்புப் பெற இயலாது. தனியார் கல்லூரி ஊழியர்களுக்கு முன்னர் இருந்த ஊதியம் வழங்கும் முறையில் இது பெரிய குறையாகத் தெரியாமல் இருந்தது. 1—4—1980 முதல் அரசே நேரிடையாக ஊதியம் வழங்கும் முறையைக் கொண்டு வந்தபின் அரசினால் அங்கீகரிக்கப்படாத 37 பதவிகளிலிருப்போருக்கு ஊதியம் அனுமதிக்கப்படவில்லை. ஆகையால் நிர்வாகங்கள் அவர்களை வேலை நீக்கம் செய்யக் கூடும் என்று அச்சம் தெரிவித்த தனியார் கல்லூரி ஆசிரியரல்லாதோர் சங்கம் தற்போது இம்மாதிரி பதவிகளில் உள்ள அனைவருக்கும் பணிப்பாதுகாப்பு அளித்து மற்ற சலுகைகளையும் வழங்க வேண்டும் என்று அரசைக் கேட்டது. கல்லூரிக் கல்வி இயக்குநர் இதனைப் பரிந்துரைத்தார்.

மேலே குறிப்பிடப்பட்ட 37 பணியிடங்களில் உள்ளோருக்கு அவர்கள் ஓய்வு பெறும் காலம்வரை ஊதியம் வழங்கலாம். ஆனால் அப்பதவிகளில் உள்ளோர் ஓய்வு பெற்றபின் அப்பணியிடங்கள் புதுப்பிக்கப்பட வேண்டியதில்லை என அரசு முடிவு செய்துள்ளது. அவ்வாறே ஆணை பிறப்பிக்கப்படும்.



## இணைப்பு III

(763 ஆம் பக்கத்தில் இனம் 8-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

அவைமுன் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின்வாரியத்தின் 1981-82-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, 1980-81 ஆம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கை ஆகியவற்றை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

2. தமிழ்நாடு மின் வாரியம், தமிழ்நாடு மின்சார ஆலோசனைக் குழுவின் ஒப்புதலுடன், இந்த நிதிநிலை அறிக்கைகளை 1948-ம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின் 61-ம் பிரிவின்படி அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. மின் வாரியம் செயல்படுவது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அரசும், வாரியமும் கருத்தில் கொள்ளும். கடந்த ஆண்டு நடைபெற்ற விவாதத்தின்போது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் மீது வாரியம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை விளக்கும் அறிக்கை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தனியே அனுப்பப் பட்டுள்ளது.

3. மின்சாரத்துறையின் முக்கிய அம்சமான நிறுவப்பட்டுள்ள மின் உற்பத்தித் திறனை முழுவதும் பயன்படுத்துவதே நம்முடைய தலையாய குறிக்கோளாக உள்ளது. 1981-ம் ஆண்டு சனவரித் திங்கள் நான் அளித்த விளக்கத்தில் இம்மாநிலத்தில் உள்ள அனல் மின் நிலையங்களின் செயல்பாட்டுத் திறனை அதிகரிப்பதற்காக எடுத்துக்கொண்ட பல்வேறுபட்ட நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிட்டேன். இந்நடவடிக்கைகளின் விளைவாக, குறிப்பாக, 1981 ஆம் ஆண்டின் முதல் அரை ஆண்டில் அனல் மின் நிலையங்களிலிருந்து பெறப்படும் மின்சார அளவில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

4. கீழ்க்கண்ட அட்டவணை கடந்த இரண்டு வருடங்களில் இருந்த மின்சக்தி நிலவரத்தைக் காட்டுகிறது.

(மில்லியன் யூனிட்களில்)

| | 1981 | | 1980 | |
|---|---|---|---|---|
| | சனவரி டிசம்பர். | சனவரி ஜூன். | சனவரி டிசம்பர். | சனவரி ஜூன். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| எண்ணூர் | 1,577 | 859 | 1,350 | 815 |
| பேசின் பிரிட்ஜ் | 259 | 152 | 342 | 209 |
| தூத்துக்குடி | 1,357 | 868 | 464 | 265 |
| | (3,193) | (1,879) | (2,156) | (1,289) |
| நெய்வேலி | 2,537 | 1,401 | 2,209 | 1,127 |
| கேரளா | 1,017 | 548 | 910 | 478 |
| நீர் மின்சாரம் | 4,364 | 1,497 | 5,280 | 2,161 |
| மற்றவை | (—) 3 | (—) 12 | (+)52 | 1 |
| மொத்தம் | 11,108 | 5,313 | 10,687 | 5,050 |
| நாள் ஒன்றுக்கு சராசரி | 30 | 29 | 29 | 28 |

1981 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் 203 மெகாவாட் அளவு மின்சார உற்பத்தியைச் செய்து அனல்மின் நிலையம் தன் உற்பத்தித் திறனில் 44 சதவீதத்தை எட்டியது. அவ்வாறே, 1981-ம் ஆண்டு மே திங்களில் 201 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்து தூத்துக்குடி அனல்மின் நிலையம் தன் ஆக்கத் திறனில் 47 சதவீதத்தை எட்டியது. தமிழ்நாட்டின் மின் கட்டமைப்புக்கு நெய்வேலியால் வழங்கப்படும் மின்சாரத்தின் அளவு





இம்மாநிலத்தில் ஏற்பட்ட தொடர்ந்து திருப்திகரமாக இருந்து வருகிறது. மின்சாரப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு இவைகள் மிக முக்கியமாகும்; மேலும், 1981-ம் ஆண்டு ஜூன் மூன்றாவது வாரத்தின் இறுதி வரை மின் வெட்டை 30 சதவிகிதத்தில் நிறுத்திக்கொள்வதற்கு இவைகள் உதவியாக இருந்தன. மின்வாரிய அலுவலர்களும், பணியாளர்களும், மின்விநியோகத்தை திறமையாக நிர்வகித்தது பெருமைப்படத்தக்கதாகும்.

5. 1981-ம் ஆண்டு ஜூன் திங்கள் துவக்கத்தில் தென்மேற்கு பருவமழை ஆரம்பமானது. வடகிழக்குப் பருவமழை சில மாவட்டங்களில் சராசரி விகிதத்திற்கும் அதிகமாக இருந்தாலும் சென்னையிலும் அதன் அருகில் உள்ள மாவட்டங்களிலும் வழக்கத்திற்கும் குறைவாகவே இருந்தது. மேலும், அது காலதாமதமாகவே துவங்கியது. கடந்த ஆண்டு கிடைக்கப்பெற்ற மழைநீர் அளவு முறை முந்திய ஆண்டுடனும், ஒரு சராசரி ஆண்டுடனும் ஒப்பிடப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற நீர் அளவு
(மில்லியன் யூனிட்களில்)
(மேட்டூர் நீங்கலாக.)

| | 1981 | 1980 | சராசரி ஆண்டு. |
|---|---|---|---|
| ஜூலை-செப்டம்பர் (தென்மேற்கு பருவ மழை). | 2,559 | 2,018 | 1,986 |
| அக்டோபர்-டிசம்பர் (வடகிழக்கு பருவ மழை). | 887 | 763 | 953 |
| மொத்தம்—ஜூலை-டிசம்பர். | 3,446 | 2,781 | 2,939 |

முன்கூட்டியே ஆரம்பமான தென்மேற்கு பருவமழையை சாதகமாக எடுத்துக் கொண்டும், கிடைக்கும் மழை நீரின் அளவு சாதகமாக இருக்கும் என்ற கணிப்பின் அடிப்படையில், நீர்த்தேக்கங்களில் 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து நீர் தேக்கிவைக்கப்பட்டது.

6. 1981 ஆம் ஆண்டு ஜூன் 25 ஆம் நாளிலிருந்து உயர் அழுத்த மின் உபயோகிக்கும் தொழிற்சாலைகள், மற்ற உபயோகிப்பாளர்கள் மீது இருந்த மின்சார வெட்டு அகற்றப்பட்டது. கிராமப்புறங்களுக்கு மின்சாரம் வழங்கு

வதில் இருந்த மூன்று பிரிவுகள் இரண்டு பிரிவுகளாக 1981 ஆம் ஆண்டு சூலை திங்கள் 12 ஆம் நாளிலிருந்து பழைய முறைக்கு மாற்றப்பட்டு அதன் பின்னர் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் இப்பிரிவு முறையும் அகற்றப்பட்டது. குறைந்த அழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளின் மீது விதிக்கப்பட்டிருந்த உச்ச நேரக் கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டும் என்று சிறு தொழிற்சாலைகள் நீண்ட காலமாக வேண்டி வந்தன. மின் நிலைமையில் ஏற்பட்ட முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு குறைவு அழுத்தத் தொழிற் சாலைகளின் மீது விதிக்கப்பட்டிருந்த உச்ச நேரக் கட்டுப்பாடுகள் 1981-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் முதல் நாளிலிருந்து அறவே அகற்றப்பட்டுள்ளன. இதனால் குறைவழுத்த சிறு தொழிற்சாலைகள் முழுமையாக 24 மணி நேரமும் உற்பத்தியில் ஈடுபடலாயின. தொடர்ந்து 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் நாளிலிருந்து பிரிவு முறையும், உச்ச நேரக் கட்டுப்பாடுகளும் அறவே தளர்த்தப்பட்டன. இடைவெளியின்றி உற்பத்தியில் ஈடுபடாத உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கும், விவசாய மின் இணைப்புகளுக்கும், கிராமப்புறத் தொழிற்சாலைகளுக்கும் 24 மணி நேர மின் விநியோகம் அனுமதிக்கப்பட்டது. அவ்வாறே கட்டுப்பாடின்றி, மின்சாரத்தைப் பெற்று வாரத்தில் ஏழு நாட்களும் வேலை செய்திடும் வகையில் துணி ஆலைகளும் அனுமதிக்கப்பட்டன. தொழில் உற்பத்தியை அதிகரிக்கவும் உற்பத்தி பெருக்கத்திற்கு ஊக்கம் அளிக்கவும் எடுக்கப்பட்ட சரியான நடவடிக்கை இது என தொழில் அதிபர்களால் வரவேற்கப்பட்டது.

7. 1981-ம் ஆண்டு செப்டம்பர் திங்களிலிருந்து எல்லாக் கட்டுப்பாடுகளும் அகற்றப்பட்ட பின், 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1,600 மெகாவாட் ஆக இருந்த மொத்த மின்சாரத் தேவையின் அளவு 1981-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதியில் 2,101 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. விவசாயத்திற்காக மின்சாரத் தேவை உயர்ந்திருக்கும் காலமான 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் உச்ச நேர மின்சாரத் தேவையின் அளவு 2,400 மெகாவாட்டாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

8. துரதிருஷ்டவசமாக, பேசின்பிரிட்ஜ் மின் நிலையத்தில் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் தீ விபத்து ஏற்பட்டது. பின்னர், 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதி வாரத்திலும், 1982 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் இரு வாரங்களில் எண்ணூர் மற்றும் தூத்துக்குடி அனல்மின் நிலையங்களில் ஏற்பட்ட பாதிப்பினால் மின் உற்பத்தி சுணக்கமேற்பட்டது. ஆகையால், தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் 100 மில்லியன் யூனிட்டுகளும் எண்ணூரில் 108 மில்லியன் யூனிட்டுகளும் மின்சார இழப்பு ஏற்பட்டது.





9. எண்ணூர் மற்றும் பேசின்பிரிட்ஜ் மின் நிலையங்களில் அபிவிருத்திகள் செய்வதற்கும் கொதிகலன், டர்பைன், குளிர்நீர் அமைப்பு ஆகியவைகளில் திட்ட காலத்திற்குள் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கும் 1981-82, 1982-83 ஆண்டு திட்டங்களில் ரூ. 25 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. செக்கோஸ் லோவோகியா நாட்டு பொறியாளர்களின் பணியினைப் பயன்படுத்தி எண்ணூர் அனல் மின் நிலையத்தின் மேம்பாட்டுப்பணிகளை நிறைவேற்றிட மின் வாரியம் முடிவெடுத்துள்ளது.

10. பிப்ரவரித் திங்கள் 15-ந்தேதியிலிருந்து மேட்டூர் நீர்த் தேக்கத்தி லிருந்து பாசனத்திற்கு விடப்படும் நீர் நிறுத்தப்படுமென எதிர்பார்க்கப் படுவதால், மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான நிலைமையில் பற்றாக் குறை ஏற்படக்கூடும். ஆந்திரப் பிரதேசம் மற்றும் கேரளம் ஆகிய மாநிலங் களிலிருந்து உச்ச நேரத்தில் மேலும் கூடுதலாக மின் உதவியைப் பெறுவதன் மூலம் இந்நிலையை சமாளிக்கலாம் எனக் கருதி இதற்குத் தேவையான நடவடிக்கைகள் துவக்கப்பட்டுள்ளன.

11. சுய மின் உற்பத்தி சாதனங்களை வைத்துள்ள தொழிற்சாலைகள் தங்களுடைய மின் உற்பத்தி சாதனங்களைப் பயன்படுத்தி உச்ச நேர மின் கட்டுப்பாட்டுக் காலங்களில் எவ்வளவுக்கெவ்வளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமோ அந்த அளவு உற்பத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. இது அவர்களின் மின் தேவையில் வெட்டுதலை ஏற்படுத்தாமல் மின்சார வாரியம் பிரச்சனையைச் சமாளிக்க உதவும். நீர் மின் நிலையங்களின் எண்ணிக்கையில் பெரும்பகுதி பாசனத்தோடு சம்பந்தப் பட்டவை. இந்நிலையில், கோடைகாலத்தில் விவசாயத்திற்காக மின்சாரம் அதிகம் தேவைப்படும்போது நீர் மின் திட்டங்களின் மின் உற்பத்தித்திறன்— புதிய நீர் மின் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வந்தாலும் கூட, போதுமானதாக இருப்பதில்லை. இதனை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

12. பருவ மழைக்காலங்கள், நீர் மின் நிலையத்தின் செயல் திறனில் ஏற்படுத்தும் விளைவுகள் தவிர, அனல் மின்நிலையங்களின் செயல்திறன் போதிய அளவு நிலக்கரி தகுந்த நேரத்தில் கிடைப்பதில் இருக்கிறது. இது, 1981 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மிகுந்த அளவு கவனத்தை ஈர்த்தது. சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தால் எண்ணூருக்கு மாதமொன்றுக்கு அனுப்பப்பட்ட நிலக்கரியின் அளவு 2.5 லட்சம் டன் என்ற அளவிலிருந்து 1.05 லட்சம் டன் என்று குறைந்தது. மின் வெட்டு அமுலில் இருந்த நேரத்தில் நடைமுறையில் பெறப்பட்ட நிலக்கரியின் வரவு மேலும் குறைந்தது. 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே திங்களில் ... சதவிகிதமாகவும், 1981 ஜூன் திங்களில் 50 சதவிகிதமாகவும் குறைந்தது.

நிலக்கரித் தட்டுப்பாட்டால் இந்நிலையத்தில் மின் உற்பத்தியை ஒரு கட்டத்தில் நிறுத்த வேண்டிய சூழ்நிலை கூட ஏற்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடித் தலையீட்டினாலும், மைய அரசின் எரிசக்தி அமைச்சருடன் நான் தொடர்பு கொண்டதாலும் நிலக்கரி கிடைப்பதில் முன்னேற்றம் ஏற்பட்டது. திட்டப் பணிகள் ஆய்வுக்காக சென்னைக்கு 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் வந்து சென்றதைத் தொடர்ந்து இதில் மேலும் முன்னேற்றம் ஏற்பட்டது.

13. நிலக்கரி உற்பத்தி செய்வது மற்றும் அதைக் கொண்டு செல்லுதல் முதலியவற்றில் ஏற்படும் தடங்கல்களை கணக்கில் வைத்து போதிய அளவு நிலக்கரியை சேர்த்து வைக்க வேண்டிய தேவையை நாம் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியுள்ளோம். 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் மாண்புமிகு முதலமைச்சரை மத்திய திட்டக்குழு உறுப்பினர் திரு. முகம்மது பாசல் அவர்கள் சந்தித்தபோது ஒரு ஆண்டின் மின் உற்பத்தித் திட்டத்தின் அடிப்படையில் நிலக்கரியை அனுப்ப வேண்டும் என்றும், காலாண்டு காலத்தில் நடைமுறையில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சார அளவின் அடிப்படையில் இருக்கக்கூடாது என்றும் நாம் தெரிவித்த கருத்து கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த சந்திப்புக்களின்போது, மாதமொன்றுக்கு 40,000 டன் நிலக்கரியைப் பெற்று வருவதால், தூத்துக்குடி மின் நிலையத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை திட்டக்குழு உறுப்பினர் மற்றும் இந்தியப் பிரதமர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இது தவிர, நிலக்கரி கிடைப்பது, அதை ரயில் மூலம் கொண்டு வருவது, ஹால்டியா துறைமுகத்தில் அவற்றை ஏற்றுவது ஆகியவற்றில் உள்ள சிரமங்கள், ஹால்டியா துறைமுகத்தில் கப்பல் வரும்வரை ஏற்படும் கால தாமதத்தை தவிர்க்க நிலக்கரியைக் குவித்து வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்வது ஆகியவற்றைப் பற்றியெல்லாம் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இப்பிரச்சனை மைய அரசின் சிரத்தையான கவனத்தில் இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

14. எல்லா மாநில மின் வாரியங்களுக்கும் பொதுவாக உள்ள சிக்கல்கள் பிரச்சனைகள் குறித்து விவாதிப்பதற்காக. அகில இந்திய மின்சார அமைச்சர்கள் மாநாடு 1981 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் நடைபெற்றது. மின் உற்பத்தித் திறனை பயன்படுத்துதல் மற்றும் அந்தத் திறனை வளர்த்தல் ஆகியவை தவிர, மின் உற்பத்தி நிலை, மின் திட்டங்களை உருவாக்குதல்



ஆகியவை இம்மாநாட்டில் பரிசிலிக்கப்பட்டன. இந்த அரசின் கவனத்தில் உள்ள பிரச்சனைகளை மைய அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வந்தேன். அவையாவன :—

(1) மேற்குறிப்பிட்டவாறு போதிய அளவு நிலக்கரி வழங்குவதை உறுதிப்படுத்துதல் ;

(2) உதிரிப் பாகங்கள் மற்றும் இவைகளுக்குப் பணி புரியும் பிரிவுகள் சம்பந்தமாக பார்த் ஹெவி எலக்ட்ரிகல்ஸ்-வுடன் நிரந்தர ஏற்பாட்டைச் செய்தல் ;

(3) மின் தட்டுப்பாட்டின் அடிப்படையில், மைய அரசுக்குச் சொந்தமான மின் திட்டகளில் உற்பத்தியாகும் மின்சாரத்தை அந்த வட்டார மாநிலங்கள் பகிர்ந்து கொள்ளுதல் ;

(4) மாநிலங்களுக்கு இடையே ஆன மின் திட்டத்தைக் கூட்டு செயலாக ஏற்று நிறுவுவது அல்லது மைய அரசின் அதிகாரத்தில் உள்ள "நேஷனல் ஹைட்ரோ பவர் கார்ப்பரேஷன்" மூலம் நிறுவுவது ;

(5) மத்திய அரசின் வருடாந்திர மின்சார ஆய்வுக் குழுவினரால் முன் மதிப்பீடு செய்வது நம்முடைய மதிப்பீட்டுடன் ஒப்பிடும்போது சரியானதாக இருப்பதில்லை. எனவே ஒரு மூன்றாவது அமைப்பினால் சுயேச்சையான மதிப்பீடு செய்யவேண்டும்.

15. இப்பிரச்சனைகள் அனைத்தும் மாநில மின்சார வாரியங்களின் பணியுடன் நெருங்கிய சம்பந்தம் உடையவையாகும். இப்பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பது தமிழ்நாடு மின்சார வாரியம் அனுபவித்து வரும் சிரமங்கள் மற்றும் இடர்பாடுகள் நீங்க வழி வகுக்கும். உதாரணமாக, மைய அரசின் மின் திட்டங்களில் உற்பத்தியாகும் மின்சாரத்தைப் பங்கீடு செய்வது நம்மைப் பாதித்துள்ளது. நெய்வேலி மின் நிலையத்தில் தற்போது உற்பத்தியாகும் மின்சாரத்தையும், புதிய மின்நிலையங்களின் மூலம் உற்பத்தியாகும் மின் சாரத்தையும் முழுமையாகப் பெற்றுக்கொள்வதாக இந்த அரசு ஏற்கெனவே உறுதியளித்துள்ளது. மின் பயனீட்டளவு, மைய அரசு உதவி ஆகியவற்றின் அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ள கோட்பாடுகளின்படி 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் அனுமதி அளிக்கப்பட்டு தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் நெய்வேலி இரண்டாவது அனல் மின் நிலையத்தில் உற்பத்தியாகும் 630 மெகாவாட் மின்சாரத்தில் 176 மெகாவாட் அளவு மின்சாரத்தை மட்டுமே

[1982 பிப்ரவரி 20

தமிழ்நாடு பெறமுடியும், இது ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள நிலைமைகளுக்கும் நமது எதிர்பார்ப்புகளுக்கும் முற்றிலும் முரணாக அமைந்துள்ளது. மைய அரசின் இந்தக் கோட்பாடு இம்மாநிலத்தின் மின் தேவைகளை அடிப்படையாகக்கொண்டு திட்டமிடப்பட்ட இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் பலன்களை இம்மாநிலம் பெறமுடியாமல் இழைப்பை ஏற்படுத்துவதுடன் அதே நேரத்தில் மின்சார உற்பத்தியில் உபரியாக உள்ள மற்ற மாநிலங்கள் இதிலும் ஒரு பங்கைப் பெறும் நிலைமையை ஏற்படுத்துவதாக உள்ளது என்பதை மைய அரசுக்கு எடுத்துக் கூறப்பட்டு உள்ளது. நெய்வேலியின் முதல் கட்ட மின் நிலையத்தில் உற்பத்தியாகும் 600 மெகாவாட் மின்சாரத்தை முழுமையாக நாம் ஏற்றுக் கொண்டிருப்பதைப் போலவே இரண்டாவது நிலையத்தின் மின்சாரத்தையும் முழுமையாக நம் மாநிலத்திற்கு மட்டுமே அளிக்கப்படும் என்பதனாலேயே நம் அரசுக்கு நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் தரவேண்டிய ராயல்டியைக்கூட வேண்டாமென்று நாம் கூறியுள்ளோம். இம்மாநிலத்தின் தேவைபோக உபரியாக உள்ள மின் சாரத்தை அண்டை மாநிலங்களுக்குக் கொடுப்பதில் நமக்கு எவ்வித மாறுபாடும் இல்லை.

16. ஆறாவது திட்ட காலமாகிய 1980-85 ஆண்டுகளில், இந்த நாட்டிற்காக ஒட்டு மொத்தமாக நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 19,666 மெகாவாட் உற்பத்தித் திறனில் தமிழ்நாட்டிற்கென்று 230 மெகாவாட் உற்பத்தித் திறனே ஒதுக்கப்பட்டுள்ளது (தூத்துக்குடியின் 3-வது நிலையம் 210 மெகாவாட்; சேர்வலாறு 20 மெகாவாட்). இதில், காடம்பாறை நீர் ஏற்று மின் திட்டத்தின் உச்ச நேர மின் உற்பத்தித் திறனான 400 மெகாவாட் சேர்க்கப்படவில்லை. ஆனால், இம்மாநிலத்தின் பயனுக்காக மைய அரசின் பொறுப்பில் 1,100 மெகா வாட் உற்பத்தித் திறனும், மாநில அரசுத் துறையில் 1,160 மெகாவாட் உற்பத்தித் திறனும் புதிதாக நிறுவ வேண்டும் என்பதே நம்முடைய ஆரம்ப கால செயற்குறிப்பாகும். இந்தத் திட்ட காலத்திலாவது இம்மாநிலம் ஆண்டொன்றுக்கு 10 சதவிகித மின் உற்பத்தி வளர்ச்சி பெறுவதற்கான தகுதி பெற்றுள்ளது. எனவே, ஒவ்வொரு ஆண்டும் 250 முதல் 300 மெகாவாட் அளவு மின் உற்பத்தி அதிகரிக்க வேண்டும். இது, ஆண்டொன்றுக்கு 300 முதல் 400 மெகாவாட் மின் உற்பத்தித் திறனை ஏற்படுத்துவதற்குச் சமமாகும். எழுபதாம் (1971-80) ஆண்டுகளில் ஏற்பட்டது போன்ற தொடர்ந்த மின் வெட்டுகளைத் தவிர்க்க வேண்டுமானால் இது மிகவும் அவசியம். 1981-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற்ற மாநாட்டைத் தொடர்ந்து, மைய அரசின் எரிசக்தி அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சகங்களாலும், கொள்கை அளவு



1982 பிப்ரவரி 20]

படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கீழ்க்கண்ட திட்டங்கள் பற்றிய விரிவான திட்ட அறிக்கைகள் 1981-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன—

| | |
|---|---|
| (1) வடசென்னை அனல் மின் நிலையம்<br>கணிக்கை செலவு : ரூபாய் 616 கோடி. | 5 × 210 மெ.வா. |
| (2) மேட்டூர் அனல் மின் திட்டம் விரிவாக்கம்,<br>கணிக்கை செலவு : ரூபாய் 206 கோடி. | 2 × 210 மெ.வா. |
| (3) தூத்துக்குடி விரிவாக்கம். | 1 × 210 மெ.வா.<br>மேலும்<br>1 × 500 மெ.வா. |

கணிக்கை செலவு: ரூபாய் 411 கோடி.

அனுமதி
17. 1982 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இத்திட்டங்களுக்கு பணிகளினால் யளிக்கப்படுமானால், 1987-88 ஆம் ஆண்டுகளில் முதல் கட்டப் அனுமதியளிக்க மின் உற்பத்தி கிடைக்கும். இத்திட்டங்களுக்கு விரைவில் வேண்டுமென வலியுறுத்தி வருகிறோம்.

18. இருக்கின்ற நீர்மின் சக்தியை முழுவதுமாக பயன்படுத்த வேண்டு மென்ற நோக்கத்தோடு, 1981-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் அனுமதி வழங்கப் பட்ட பைகாரா (2 மெகாவாட்) கீழ்பவானி (8 மெகாவாட்) மற்றும் வைகை அணை (6 மெகாவாட்) ஆகிய மூன்று நீர்மின் திட்டங்களை ரூ. 11.75 கோடி செலவில் இம்மாநிலம் செயல்படுத்தி வருகிறது.

19. இம்மூன்று திட்டத்தைத் தவிர, ரூபாய் 113 கோடி செலவில் ஒவ் வொன்றும், 50 மெகாவாட் திறன் கொண்ட ஆறு காற்று டர்பைன்களை நிறுவுவதற்கான செயற்குறிப்புகள் 1981-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. காற்று டர்பைன்கள் செயல்படுத்துவதற்கான, நிர்மாணக் காலங்கள் குறைவு. (12 முதல் 16 மாதங்கள்) இவைகள் இரண்டே ஆண்டுகளில் பயனுக்குக் கொண்டு வர முடியும். உச்ச நேரத் தேவைகள்

மிகும்போது மின் நிலையங்களோடு இணைந்து நிலைமைகளை சமாளிக்கவும் மின் நிலையங்களுக்கு நிவாரணம் அளிக்கவும் இத்திட்டம் ஒரு சிறந்த நடவடிக்கையாகும். பம்பாய் மற்றும் காவேரிக் கரைப்பகுதியில் கிடைக்கவிருக்கின்ற எண்ணை வளத்தின் உதவியுடன் இந்த அமைப்புகளை இயக்குவதற்குச் சிரமம் இருக்காது. ஏனெனில், இத்திட்டங்கள் அதிகச் செலவுள்ள தேவைக் கட்டுப்பாடுகள் மற்றும் மின்பளு மாற்றங்கள் போன்ற நிலைமைகளைத் தவிர்க்கும்.

20. 1981-ம் ஆண்டு செப்டம்பரில் இருந்து மின் வழங்குதலின்மீது இருந்த கட்டுப்பாடுகளை ஒரு சோதனைமுறை நடவடிக்கையாக நீக்கப்பட்டிருப்பதை நான் சுட்டிக்காட்டியுள்ளேன். மின் கட்டமைப்பின் உச்ச நேரத் தேவை 2,101 மெகாவாட்டாக 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் உயர்ந்துள்ளது. இது சென்ற ஆண்டு 1779 மெகாவாட்டாக இருந்தது. மத்திய அரசினரின் ஆண்டின் மின் வளர்ச்சி மதிப்பீடு மின் வெட்டுக்கு இலக்கான ஆண்டுகளின் அடிப்படையிலேயே உள்ளது. இருக்கும் அளவை பொறுத்தே பயன்படுத்தும் அளவு இருக்குமாதலால் இந்த அணுகும் முறை சரியல்ல என்று நாம் வாதாடி வருகிறோம். மின் தொகுதியின் உச்ச நேர அளவு 2,101 மெகாவாட் அளவுக்கு உயர்ந்துள்ளதே நமது நிலையை உறுதிபடுத்துவதற்கான ஒரு எடுத்துக்காட்டாகும். மின்சார அதிகார மன்றம், மின்சார மதிப்பீட்டுக் குழு ஆகியவற்றின் மதிப்பீட்டின்படி ஆண்டு மின் வளர்ச்சி 7 சதவிகிதம் என்ற அளவில் இருக்கும் என்ற வாதம் சரியானால் இந்த அளவுக்கு மின் தொகுதியின் உச்ச நேர அளவு உயர்ந்து இருக்காது. இதில் வியப்புக்குரியது என்னவென்றால், தமிழ்நாட்டைப் பற்றிய அவர்களது அறிக்கையிலேயே 1977-78 ஆம் ஆண்டுகளில் 11.3 சதவீதம் அளவுக்கும், 1978-79 ஆம் ஆண்டுகளில் 15.1 சதவீதம் அளவுக்கும் மின்வளர்ச்சி உயர்ந்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளதாகும்.

21. செயலாக்கப்பட்டுவரும் மின் திட்டங்களை குறித்த காலத்தில் நிறைவேற்றி அதன் திரண்ட பயன்களைப் பெற திட்டமிட்டப்படி உறுதி செய்து கொள்ளவும், திட்டகாலத்தை நீடித்து திட்ட மதிப்பீடு அதிகமாவதைத்





தவிர்க்கவும் நாம் தீவிர கவனம் செலுத்த வேண்டும். செயலாக்கப்பட்டு வரும் மின் உற்பத்தித் திட்டங்கள் இவை செயலுக்கு வரவேண்டிய கால இலக்கு ஆகியவற்றின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

| திட்டம். | திறன். | செயலுக்கு வரவேண்டிய கால இலக்கு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | மெ. வா. | |
| 1. தூத்துக்குடி அனல் மின் திட்டத்தின் மூன்றாவது பிரிவு. | 210 | மார்ச் 1982. |
| 2. சேர்வலாறு புனல் மின் திட்டம். | 20 | 1983-84. |
| 3. காடம்பாறை நீரேற்று மின் திட்டம் (உச்ச நேரத்தில் உதவி செய்ய மட்டும்). | 400 (4×100). | முதல் பிரிவு 1983-84.<br>2-வது பிரிவு 3-வது பிரிவு 1984-85.<br>4-வது பிரிவு 1985-86. |
| 4. கீழ்மேட்டூர் புனல் மின் திட்டம். | 120 (4×2×15). | 2 பிரிவுக (30 மெ.வா.) 1983-84.<br>4 பிரிவுகள் (60 மெ.வா.) 1984-85.<br>2 பிரிவுகள். (30 மெ.வா.) 1985-86. |
| 5. குந்தா ஐந்தாவது மின் நிலையத்தில் கூடுதல் பிரிவு. | 20 | 1984-85. |
| 6. மேட்டூர் அனல் மின் திட்டம். | 420 (2×210). | 1985-86. |

22. மின் வளர்ச்சித் திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான முயற்சிகள்
அவசியம் என்பது தெளிவு. எனவே, கல்பாக்கத்தில் உள்ள சென்னை அணு
மின் உற்பத்தி நிலையத்தின் ஒவ்வொன்றும் 235 மெகாவாட் திறன்கொண்ட
இரண்டு பிரிவுகள் செயலாக்கப்படுவதை இம்மாநிலம் ஆவலோடு எதிர்பார்த்
துக் கொண்டிருக்கிறது. இதன் முதல் பிரிவு அடுத்த ஆண்டின் முதல் பகுதி
யிலும் இரண்டாவது பிரிவு இதற்கு ஓராண்டிற்குப் பிறகும் தயாராகும் என்று
எதிர்பார்க்கப்படுகிறது. நெய்வேலியின் இரண்டாவது அனல்மின் நிலைய
கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் 210 மெகாவாட் திறன்
கொண்ட முதல் பிரிவு 1984-85 ஆம் ஆண்டில் செயலுக்கு வரும் என்று கால
இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது அணுமின் நிலையம் ஒன்றை
கூடன்குளத்தில் அமைக்க வேண்டும் என்ற முயற்சியில் விரைவாக முடிவெடுக்
கும்படி மத்திய அரசை இம்மாநில அரசு வலியுறுத்தி வருகிறது. அணுமின்
சக்தித் துறை கூடன்குளம் இந்த திட்டத்திற்கு ஏற்ற களம் என்று ஏற்கெனவே
ஒப்புக் கொண்டுள்ளது. வேறு தக்க களங்களும் அணுமின் நிலையத்தை
அமைக்க உகந்ததாக இருக்குமா என்று கண்டறியும் முயற்சியில், குழுவினர்
தமிழ்நாடு மின்சார வாரியத்துடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறார்
கள். தமிழ்நாடு மின்சார வாரியமும் சிறிய—மிகச்சிறிய புனல் மின்
நிலையங்களைக் கால்வாய்களிலும் வேளாண்மை பாசனத் திட்ட தேக்கங்
களிலும் அமைக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறதா என்பதை கண்டறிய முழு
வேகத்துடன் ஆய்வு செய்து வருகிறது. மொத்தமாக 350 மெகாவாட் மின்
திறன் அளிக்கக்கூடிய குறைந்த அளவு 100 களங்கள் இதற்கென ஆய்வு செய்ய
தேர்ந்தெடுக்கப்படக்கூடும். இத்தகைய சிறிய—மிகப் சிறிய மின் நிலையங்
கள் வட்டார மின் தேவையை பூர்த்தி செய்வதோடு அதிக அளவிற்கு மின்
செ[illegible]தைக்கான நீண்ட மின் தொடர்களை அமைப்பது, மின்வழி இழப்பு
போன்றவற்றையும் தவிர்க்கும்.

23. தமிழ்நாடு மின்வாரியம் 800 மெகாவாட் திறன் கொண்ட ஒகேனக்கல்
திட்டத்தை செயலாக்க கருநாடக அரசிடமிருந்தும், 150 மெகாவாட் திறன்
கொண்ட பாண்டியாறு, புன்னம்புழா, 60 மெகாவாட் திறன்கொண்ட சோளத்தி
புழா ஆகிய திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர கேரள அரசிடமிருந்து



எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. மாநிலங்களுக்
சாதகமான பதில்களை
இடையேயான இத்திட்டங்களை செயலாக்க இணக்கமான ஒரு உடன்பாடு
உருவாவது மூன்று மாநிலங்களுக்கும் பயன் அளிக்கும் என்பதோடு விலை
மதிப்பிலா இயற்கைச் செல்வங்கள் மேலும் வீணாவதை தவிர்க்கும்.

24. வருங்கால தேவையைக் கணக்கில் கொண்டு மாற்று மின் விசைக்கான
ஆதாரங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரமாக தமிழ்நாடு மின்சார
வாரியம் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு வருகிறது. 25 மெகாவாட் திறன்
கொண்ட கடல் நீரிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு அமெரிக்கா
போன்ற நாடுகளில்கூட வணிக அடிப்படையில் செயலாக்கப்படும் நிலைக்கு
வளரவில்லை என்ற காரணத்தைக்காட்டி இந்திய அரசு அனுமதி வழங்க
வில்லை. ஆயினும் ஐ.ஐ.டி. தமிழ்நாடு மின்சார வாரியம், பாரத மின் கனரக
நிறுவனம், என்.ஐ.ஓ. போன்றவற்றின் கூட்டு முயற்சியோடு 1 மெகாவாட்
திறன்கொண்ட கடல் நீரிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் மின்
நிலையத்தை தமிழ்நாட்டின் கடற்கரையிலும், மற்றொன்றை லக்ஷ்சத் தீவிலும்
அமைக்கவல்லதாக இரண்டு நிலையங்களை வடிவமைக்கும் முயற்சி தொடரப்
பட்டு வருகிறது. முருகப்ப செட்டியார் ஆராய்ச்சி நிலையம் பரிந்துரைத்
துள்ள சவுக்கு மரத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் முறையும்
வாரியத்தின் கவனத்தில் உள்ளது. சூரியவிசை, பையோகேஸ், காற்றுவிசை
போன்றவற்றிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் சாத்தியக்கூறுகளையும்
தமிழ்நாடு மின்சார வாரியம் பரிசீலித்து வருகிறது.

மின்சார அதிகார மன்றம் அமைப்
25. நிர்வாக அமைப்பு, மாநில அளவில் மின்சார அதிகார மன்றம் அமைப்
பது, நிதியைப் பயன்படுத்துதல் மின்கட்டண விதம், மத்திய மின்சார
அதிகார மன்றம் போன்றவை குறித்து இராஜாதயாக்ஷா குழு அனேக பரிந்
துரைகளைச் செய்துள்ளது. 1981 ஆம் ஆண்டு நவம்பர் 8, 9 தேதிகளில்
புதுடெல்லியில் நடைபெற்ற மாநில மின்துறை அமைச்சசர்கள் மாநாட்டிலும்
இது விவாதத்திற்கு வந்தது. இந்தக் குழுவின் பரிந்துரைகளை ஏற்பது
நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்தும்; இவை மாநில அரசினரின் வரம்பை

மீறக் கூடியதாக இருக்கக்கூடும் என்பதால் இக்குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலிக்க மாநில மின்துறை அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்றை அமைத்து அவர்களது கருத்தைத் தெரிவிக்கும்படியான யோசனை ஒன்றை நான் தெரி வித்தேன். இந்திய அரசினரின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

26. இராஜதயாக்ஷா குழு பரிந்துரைத்துள்ளது போல் மின்சக்தியைச் சேமிக்கும் முயற்சியைக் கண்டறிய தொழிலக மின்சக்தி மேலாண்மைக் குழுமம் என்ற ஓர் அமைப்பை மின்சார வாரியம் உருவாக்கியுள்ளது. உயர் வழுத்த மின்னிணைப்புகளில் மின்சாரத்தைப் பயன்படுத்தும் முறை, மின்சா ரத்தின் தேவை, உற்பத்தியில் இழப்பு ஏற்படாவண்ணம் மின்சாரத்தைப் பயன்படுத்துவது போன்றவை குறித்து இக்குழுமம் ஆய்வுசெய்து வருகிறது. இந்த ஆய்வுகளின் அடிப்படையில் மின்சக்தி பயனீட்டளவையும், மின்சக்தி தேவை அளவையும் எவ்வகைகளில் குறைக்கலாம் என்பதுபற்றி தனது கண்டு பிடிப்புகளை நுகர்வோருக்கு இக்குழுமம் எடுத்துரைக்கும். மொத்த நுகர் வோரில் தொழிலக மின்னிணைப்புகள் கிட்டத்தட்ட 50 சதவீதம் என்பதால் இது மிகவும் கவனிக்கப்பட வேண்டிய முயற்சியாகும். குஜராத் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் தகுந்த அளவுகள் கொண்ட குழாய்கள், பம்புகள், புட் வால்வுகளை, விவசாய பயனீட்டாளர்கள் பயன்படுத்துவதன் மூலம் மின் பயனீட்டளவை கணிசமாகக் குறைக்கலாம் என்பது தெளிவாக்கப் பட்டுள்ளது. தமிழ் நாடு மின்சார வாரியமும் இத்தகைய ஆராய்ச்சிகளைத் தொடங்கியுள்ளது. இவற்றின் அடிப்படையில் எத்தகைய சாதனங்களைப் பயன்படுத்தலாம் என்பதுபற்றி விவசாய மின் நுகர்வோருக்கு இது ஆலோச னைகளை வழங்கும்.

27. இந்திய அரசினரால் அமைக்கப்பட்டுள்ள மின்சக்திக்கான குழு மின் வழி இழப்புகளைக் குறைப்பதற்கான முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியதின் அவசியத்தை மற்ற ஆலோசனைகளின் கூடவே பரிந்துரைத் துள்ளது. இது நம்மால் ஏற்கக் கூடியதே. இன்னும் கூறப் போனால் தீவிர முயற்சிகளை எடுத்து நாம் 1974—75-ல் 21.5 சதவீத அளவுக்கு இருந்த மின்வழி இழப்பின் அளவை 18.5 சதவீத அளவுக்குக் குறைத்துள்ளோம். இது தேசிய சராசரி அளவோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது குறைவாக இருந் தாலும் மேலும் இதன் அளவைக் குறைக்க வாய்ப்புகள் உள்ளன. மின்வழி இழப்புகளைக் குறைப்பதற்கான தீவிர ஆய்வுகளைச் செய்து மின் திருட்டு களை ஒழிக்கவும், உரிய நடவடிக்கை எடுக்கவும், மின்வழி இழப்புகளை அறவே



அகற்றவும் அரசினரால் உயர்மட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக் குழுவின் அறிக்கை விரைவில் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ் நாடு மின்சார வாரியமும் மின் அமைப்பு அளவில் பணிகளை மேம்படுத்தி மேற்பார்வையிடவும், மின் விநியோக முறைகளை சீராக்கி அதிக அளவில் பயன் படுத்திக் கொள்ளவும் ஒரு தனி ஏற்பாட்டு முறையை ஏற்படுத்தி யுள்ளது. இத்தகைய திட்ட மேம்பாட்டுப் பணிகளுக்கென ஆண்டுக்கு ரூபாய் 20 முதல் 25 கோடி வரையில் செலவிடத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

28. மின் செலுத்துகை, மின் விநியோகத்திற்கான நிதி ஒதுக்கீடுகளின் அளவு கடந்த ஆண்டுகளில் பல மடங்காக அதிகரித்துள்ளன. 1976-77 ஆம் ஆண்டில் வெறும் 13 கோடியாக மட்டுமே இருந்த இந்த ஒதுக்கீட்டின் அளவு ஆறாவது திட்டகால ஆண்டாகிய இன்று 65 கோடி அளவுக்கு உயர்ந்துள்ளது. மின் செலுத்துகை, மின் விநியோக முறைகள், மின் தொகுதியின் திறம் வலுப் படுத்தப்படும் அளவுக்கு ஏற்றமுறையில் மேம்பட்டு அமைய வேண்டும் என்ற காரணத்தைக் கருத்தில்கொண்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளே இதற் குக் காரணம். 1980—81 ஆம் ஆண்டில் 662 கி.மீ. நீளமுள்ள புதிய மிகை உயர்வழுத்தக் கம்பித் தொடர்களும், எட்டு புதிய துணை மின்நிலையங்களும் நிறுவப்பட்டன. 1981-82 ஆம் ஆண்டுக்கான குறியளவு 809 கி.மீ. நீளமுள்ள மிகை உயர்வழுத்தக் கம்பித் தொடர், 15 புதிய மிகை உயர்வழுத்த—துணை மின் நிலையங்களாகும். 1982—83 ஆம் ஆண்டுக்கான இதுபோன்ற குறியளவு 938 கி.மீ. மிகை உயர்வழுத்த கம்பித் தொடர், 48 துணை மின் நிலையங்கள் (2897 எம் வி.எ.) ஆகும்.

29. 1980-81 ஆம் ஆண்டில் 36 கிராமங்களுக்கும் 9 சிற்றூர்களுக்கும் மின் வசதி அளிக்கப்பட்டது. இத்துடன் மின்வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள் சிற்றூர்கள் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை 63,034 ஆகும். இது மொத்த முள்ள கிராமங்கள்—சிற்றூர்களின் எண்ணிக்கையில் 99.15 சதவீதம் ஆகும். தற்போது மின் வசதி பெற்றுள்ள கிராமங்கள்—சிற்றூர்களின் எண்ணிக்கை 63,049 ஆகும். மீதமுள்ள 140 கிராமங்களும், 384 சிற்றூர்களும் அணுக இய லாத அளவுக்கு சரியான பாதைகள் இல்லாத இடங்களில் அமைந்துள்ளன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கூறியவற்றுள் 218 கிராம—சிற்றூர் களுக்கு மின்வசதி அளிக்க திட்டக் குறியளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

30. அறுபத்திஒன்று புதிய குடியிருப்புகளுக்கு மின் வசதியளிக்கப்பட்ட தையும் சேர்த்து மார்ச் 1981-ல் மின்வசதி அளிக்கப்பட்ட அரிசன குடியிருப் களின் மொத்த எண்ணிக்கை 25,714 ஆகும். தற்பொழுது இவற்றின்

எண்ணிக்கை 25,816 ஆகும். தற்பொழுதுள்ள அரிசனக் குடியிருப்புகள் அனைத்துக்கும் மின்வசதி அளிக்கப்பட்டு விட்டதால் புதிதாகத் தோன்றும் குடியிருப்புகளைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து தெரு விளக்குகளை அமைப்பதற்கான விண்ணப்பங்கள் வரவர மின் இணைப்புகளை வழங்கப்படுகின்றன. அரிசனக் குடியிருப்புகள் அனைத்திற்கும் மின்வசதி அளிக்கப்பட்டுள்ள ஒரே மாநிலம் எனத் தகு பெருமை தமிழ் நாட்டிற்குரியதாகும்.

31. 1980—81 ஆம் ஆண்டில் 31, 935 மின்விசையேற்றங்களுக்கு மின்னிணைப்புகள் வழங்கப்பட்டன. ஆனால் நிர்ணயிக்கப்பட்ட குறியளவு 30,000 மட்டுமே ஆகும். நடப்பு ஆண்டில் 31—12—1981 முடிய 19,342 மின்விசையேற்றங்களுக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளன. ஆண்டு முழுவதற்குமான குறியளவு 30,000 ஆகும். இயங்கிக் கொண்டிருக்கும் மின் விசையேற்றங்களின் எண்ணிக்கை 31—12—1981 அன்று 9.39 இலட்சமாகும். சுமார் 2.61 இலட்சம் விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன.

32. சமுதாயத்தில் நலிவுற்ற மக்களும் மின்சாரத்தின் பயனை நுகர வேண்டும் என்ற நோக்கோடு ஊராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள குடிசைகளுக்கு மின்வசதி அளிக்கும் சிறப்புத் திட்டமொன்று 1979 ஆம் ஆண்டு சூலை மாதம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இவ்வசதி பெறும் மக்களிடமிருந்து நல்ல வரவேற்பு இருக்கிறது. இதுவரை 4.05 இலட்சம் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டுக்கு முன்னதாக அனைத்துக் குடிசைகளுக்கும் மின் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

32. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ், முதல் கட்டத்தில் 69 பிளாக்குகளிலும்
லும், இரண்டாவது கட்டத்தில் 150 பிளாக்குகளிலும் பணிகள் துவக்கப்
பட்டுள்ளன. தமிழ்நாடு மின்சார வாரியம், இவற்றில் தமிழ் நாடு குடிநீர் வடி
கால் வாரியமும் ஊரகங்களும் அமைத்துள்ள மேல்நிலை நீர்த் தேக்கங்களுக்
கும், தகுதியுள்ள குடிசைகளுக்கும், மின் இணைப்புகள் வழங்கியுள்ளதோடு
தெரு விளக்குகளை எரியும் நிலையில் பராமரித்து வந்துள்ளது. முதல் கட்டத்
தில் 77,871 குடிசைகளுக்கு மின்இணைப்பு வழங்கியதுடன் 1,357 மேல்நிலை
நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கும் தரை நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கும்
மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டத்தில் 1.34 இலட்சம்
குடிசைகளுக்கும், 1,007 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் தரை
நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளன.



34. ஊரக குடிநீர் விநியோகத்திற்கு தொடர்ந்து மின்சாரம் தடையின்றி
கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், வறட்சி நிவாரணப் பணி திட்டத்தின் கீழ்
தனியாக மின் கம்பித் தொடர்கள் அமைக்கப்பட வேண்டுமென்று அரசு உத்திர
விட்டுள்ளதற்கு ஏற்ப இவற்றிற்குத் தனி மின்கம்பித் தொடர்கள் அமைக்கப்
படுகின்றன. இவற்றிற்கென ஒதுக்கப்பட்ட ரூபாய் 50 இலட்சத்திலிருந்து
21 ஊரக குடிநீர்ப் பணிகள் தொடர்பானவை நடப்பு ஆண்டில் முடிக்கப்
பட்டுள்ளன.

35. இந்திய ஊரக மின்மயமாக்கு கழகம், ஊரக மின்மயமாக்கு திட்
டத்தை செயலாக்க மாநில மின் வாரியங்களுக்கு கடனுதவி அளிக்கிறது.
1980—81 ஆம் ஆண்டில் ரூ. 6.8 கோடி அளவுக்கு இதற்கான கடன் தொகையை
தமிழ் நாடு மின்சார வாரியம் இக்கழகத்திடமிருந்து பெற்று பயன்படுத்திக்
கொண்டது. 1981-82 ஆம் ஆண்டிலும்கூட ரூ. 9.02 கோடி அளவுக்கு
கடனாகப் பெறப்படவுள்ளது.

36. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் மின்சாரம் வகிக்கும் முக்கி
யத்துவத்தைக் கருத்தில் கொண்டு இந்த அரசு மின்வளர்ச்சிக்கான முயற்சி
களுக்கு முதலிடம் தந்து வருகிறது. 6—வது ஐந்தாண்டு திட்ட காலத்தில்
(1980—85) மொத்தம் ரூ. 1,023 கோடி அளவுக்குத் திட்டங்களைச் செயலாக்க
திட்டக் கமிஷன் அனுமதி அளித்துள்ளது. இவற்றுள் ரூ.572 கோடி மின்
உற்பத்திக்கும், ரூ.325 கோடி மின் செலுத்துகை—மின் விநியோகத்திற்கும்
ரூ.115 கோடி ஊரக மின்மயமாக்குதிட்டத்திற்கும், ரூ.11 கோடி பலவகை
இனங்களுக்கும் செலவழிக்கப்படும். 1980—81 ஆம் ஆண்டுக்கான திட்டக்
காலத்தில் ரூ.159.13 கோடி செலவிடப்பட்டது. 1981—82-ஆம் ஆண்டில்
ரூ.167.06 கோடி முதலீட்டுச் செலவுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மின்
உற்பத்திக்கான ரூ.79.56 கோடியும், மின் செலுத்துகை—மின் விநியோகத்திற்
கான ரூபாய் 65 கோடியும், ஊரம் மின்மயமாக்குத் திட்டத்திற்காக ரூபாய் 21.50
கோடியும், பலவகை இனங்களுக்கான ரூபாய் ஒரு கோடியும் இதில் அடங்கும்.
1982-83 ஆம் ஆண்டிற்கென அனுமதிக்கப்பட்டுள்ள முதலீட்டுத் தொகையின்
அளவு ரூ. 220 கோடியாகும். இதில் மின் உற்பத்திக்காக ரூ. 126.5 கோடி
யும், மின் செலுத்துகை மின் விநியோகத்திற்கான ரூ. 63.05 கோடியும், ஊரக
மின்மயமாக்கு திட்டத்திற்கான ரூ. 20 கோடியும், பலவகை இனங்களுக்கான
ஒரு கோடியும் அடங்கும். ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் மீதமுள்ள
இரண்டு ஆண்டுகளில் முதலீட்டுத் தொகை கணிசமான அளவிற்கு உயர்த்தப்
பட வேண்டும்.

[1982 பிப்ரவரி 20

37. 1980-81 ஆம் ஆண்டுக்கான மின் வாரியத்தின் வரவு-செலவு விவரங் களும், 1981-82 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வரவு-செலவுக்கான விவரங் களும் கீழே அளிக்கப்பட்டுள்ளன :—

| வரவினங்கள். | (ரூபாய் கோடிகளில்) 1980-81. | 1981-82. |
| --- | --- | --- |
| 1. மின்சார விற்பனை வாயிலாக .. .. | * 260.50 | 253.90 |
| 2. பலவகை இனங்களின் வாயிலாக .. .. | 6.00 | 6.00 |
| | 266.50 | 260.40 |

| செலவினங்கள் : | | |
| --- | --- | --- |
| 1. எரிபொருள், மின்சாரம் வாங்கியது, மின் உற் பத்திக்கான தீர்வை வகையில் .. .. | 180.24 | 267.94 |
| 2. ஊதியம், சம்பளம் உட் பட இயக்கி பாரா மரிக்கும் வகையில் .. | 102.54 | 108.04 |
| 3. சேமநிதி .. .. | 32.24 | 35.39 |
| 4. வட்டி .. .. .. | 57.58 | 66.84 |
| | 372.60 | 378.21 |
| துண்டு விழும் தொகை .. | 106.10 | * 117.81 |

* முந்திய வருடங்களைச் சார்ந்த ரூ. 8.5 கோடியும் உள்ளடக்கியுள்ளது.



1982 பிப்ரவரி 20]

38. 1980-81 ஆம் ஆண்டில் வாரியத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 117 கோடி. 1981-82 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் இழப்பின் அளவு ரூ. 125 கோடி யாகும். இந்த இழப்புக்கான முக்கிய காரணங்கள் நிலக்கரி, எண்ணெய், சரக்குக் கட்டணம், விலைக்கு வாங்கப்படும் மின்சாரத்தின் விலை ஆகிய வற்றில் ஏற்பட்ட சீரிய உயர்வும் விவசாயத்திற்கென சலுகை அடிப்படையில் மின்சாரம் வழங்கப்பட்டதுமேயாகும்.

39. 1976-77 ஆம் ஆண்டில் ரூ. 188.13 கோடியாக இருந்த வாரிய வருவாயின் அளவு 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 266.50 கோடி அளவுக்கு (41 சதவீதம்) உயர்ந்துள்ளது. வருவாய்க்கான செலவினங்களின் அளவும் ரூ. 210.03 கோடி யிலிருந்து ரூ. 372.60 கோடி அளவுக்கு (77 சதவீதம்) உயர்ந்துள்ளது. எரி பொருள்களின் தொடர்ந்த விலையேற்றம் இக்குறிப்பிட்ட ஆண்டுகளில் ரூ. 27.74 கோடியிலிருந்து ரூ. 65.38 கோடியளவுக்கு உயர்ந்துள்ளது. இதுபோலவே விலைக்கு வாங்கப்படும் மின்சாரத்தின் அளவும் ரூ. 63.37 கோடியிலிருந்து ரூ. 107.42 கோடிக்கு உயர்ந்துள்ளது. 1980-81 ஆம் ஆண்டுகளில் மட்டும் அபிரிமிதமாக உயர்ந்த நிலக்கரி, உலை எண்ணெய், இரயில்வே சரக்குக் கட்டணங்கள் ஆகியவை ஆண்டுக்கு ரூ. 36 கோடியளவு கூடுதலாக செலவினங்களை அதிகரிக்கச் செய்துள்ளது.

40. மின்கட்டண நிலுவையின் அளவு 31-3-1981 அன்று ரூ. 55.40 கோடி களாகும். இவற்றின் விவரங்கள் :—

| | | (ரூபாய் கோடிகளில்.) |
| --- | --- | --- |
| 1. | தொழிலகங்களிலிருந்து .. .. | 14.67 |
| 2. | விவசாயிகளிடமிருந்து .. .. .. | 26.19 |
| 3. | குடியிருப்புகள், வணிக நிலையங்களிலிருந்து | 8.12 |
| 4. | உள்ளாட்சித் துறைகளிலிருந்து .. | 3.58 |
| 5. | அரசுத் துறைகளிலிருந்தும் மற்ற மாநிலங்களிலிருந்தும் .. .. | 2.84 |
| | | 55.40 |

தொழிலகங்களைப் பொறுத்தவரை நிலுவையாக உள்ள ரூ. 14.67 கோடியில் மால்கோவிலிருந்து மட்டும் வரவேண்டியது ரூ. 9.43 கோடியாகும். இந்த நிறுவனம் திருத்தப்பட்ட மின்கட்டண வீதம் மின்வெட்டு காலத்தில் பயன் படுத்தியதற்காக விதிக்கப்பட்ட அபராதத் தொகை செலுத்தப்பட்ட மேல்வரி அளவை உயர்த்தியது போன்றவை குறித்தும் எதிர்ப்பு தெரிவித்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து உள்ளது. நிலுவைகளை வசூல் செய்வதற்காக வாரியமும் வழக்கு தொடுத்துள்ளது. இவ்வழக்கு 6-1-1982 அன்று விசார ணைக்கு வந்து ஒத்திவைக்கப்பட்டுள்ளது, விவசாய நிலுவைகளை பொறுத்த

வரை 1980 நவம்பர் மாதம் முடிவில் 5.64 இலட்சம் மின் நுகர்வோர் ரூ. 37.59 கோடி அளவுக்கு நிலுவைகளைச் செலுத்தாது இருந்தனர். விவசாயிகளின் பிரதிநிதிகளோடு தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்திய பிறகு நிலுவை களைத் தவணை முறையில் கட்டலாம் என்று அரசு அறிவித்தது. பெருமளவுக்கான மின்நுகர்வோர்கள் மின்கட்டண நிலுவையைச் செலுத்த முன்வந்ததன் காரணமாக இந்த நிலுவையின் அளவு 1981 டிசம்பர் மாத இறுதியில் ரூ. 24.45 கோடி அளவுக்குக் குறைந்துள்ளது.

41. வருவாய் பெருகுவதற்கு வாய்ப்பில்லாத ஒரு மின்கட்டண வீதத்தை நீண்டகாலமாக நாம் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறோம். திட்டக் கமிஷன் திரும்பத் திரும்ப இதைப்பற்றிக் குறிப்பிட்டு, இம்மாதிரி சலுகை கட்டணத்தில் மின்சாரம் வழங்க நியாயம் இல்லை எனக் கூறி வந்திருக் கின்றது.

மின்கட்டணச் சலுகை வழங்கப்படுவதெனில் நலிவுற்ற பிரிவினருக்கு ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கே வழங்கப்படவேண்டும் என்றும் மின் கட்டண வீதம் மின் உற்பத்தி விலை அடிப்படையிலும் சலுகைகள் ஏதாவது இருப்பின் அதன் அடிப்படையிலும் அமைந்திருக்க வேண்டும் என்று இராஜதயாக்ஷா குழுவும் பரிந்துரைத்துள்ளது. 1981 ஆம் ஆண்டு சூலை திங்களில் கூத்துக் குடியில் கூடிய மின்சார ஆலோசனைக் குழுவும் இதைப் பரிசீலித்து மின் கட்டண வீதமும் உடனடியாக திருத்தப்பட வேண்டியதன் அவசியத்தை ஒப்புக்கொண்டுள்ளது. அரசினரால் அமைக்கப்பட்ட மின்கட்டண வீத திருத்தக் குழுவும் தனது இறுதி அறிக்கையை அரசுக்கு அனுப்பியுள்ளது. இதன்மீது அரசு விரைவாக ஒரு முடிவு எடுக்கும். பாரதப் பிரதமரும், அண்மையில் நடைபெற்ற ஐந்தாண்டு திட்ட விவாதத்தின்போது திரு. எஸ். பி. சவானும் மின்கட்டண வீத மாற்றத்தை உடனடியாகச் செயல்படுத்துவதின் அவசியத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

42. மின்நுகர்வோருக்கு மன நிறைவு அளிக்கக்கூடிய விதத்தில் செயல்பட வாரியம் தன்னால் இயன்ற அளவு பணியாற்றி வந்துள்ளது. இருப்பினும், வழங்கப்படும் மின்சாரத்தின் தன்மை, மின்கட்டணப் பட்டியல் ஆகிய வற்றிலுள்ள குறைபாடுகள் குறித்து புகார்கள் உள்ளன. வாரியம் ஏற்கனவே துவங்கியுள்ள மின்அமைப்புகளிலான மேம்பாட்டுத் திட்டங்களும், மின் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் முயற்சிகளும் நீண்டகாலத் திட்டங்கள் ஆதலால் இவற்றின் பயனைப்பெற இன்னும் சிறிது காலமாகும்.

43. மின்பயனீட்டளவைக் குறிப்பதிலும் மின்கட்டணத்தை கணக்கிடு வதிலும், வசூலிப்பதிலும் உள்ள புகார்களுக்கு இடமளிக்கும் குறைபாடுகளைக் களைவதற்கென அட்டைபட்டி வாயிலாக மின்கட்டணத்தைக் கணக்கிடும் புதிய முறை ஒன்று 1-1-1982 முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி மின்



நுகர்வோர் ஒவ்வொருவருக்கும் வெள்ளை வண்ண அட்டை ஒன்று வழங்கப் படும். இதேபோல், பச்சைவண்ண அட்டை ஒன்று வாரியப் பணியாளர் களிடம் இருக்கும். மின்நுகர்வோரின் இல்லத்திலேயே மின் பயனீட்டளவைக் குறிப்பதோடு, மின்கட்டணமும் கணக்கிடப்படும். வெள்ளை வண்ண அட்டையில் மின்பயனீட்டளவோடு மின்கட்டண விவரமும் குறித்துக் கொடுக்கப் படும். இதுவே மின்கட்டணத்திற்கான பட்டியலாக இருக்கும். தனியாக பட்டியல் எதுவும் இதுவரையில் வழங்கப்பட்டதுபோல் வழங்கப்படமாட்டாது. நுகர்வோர் இந்த வெள்ளை வண்ண அட்டையையே பண வசூல் நிலையத்தில் காட்டி மின் கட்டணத்தைக் கட்டலாம். இம்முறையினால் மின் பயனீட் டளவைக் குறிப்பதில் ஏற்படும் தவறுகளையும், மின்கட்டணத்தைக் கணக் கிடுவதில் ஏற்படக்கூடிய தவறுகளையும் குறைப்பதோடு, வாரியத்திற்கு வர வேண்டிய வருவாயை விரைவாகப் பெறவும் முடியும்.

44. வாரியத்திற்கும், அதன் தொழிலாளர்களுக்கும் இடையே உள்ள உறவு இணக்கமாகவே இருந்து வருகிறது. தொழிலாளர் பிரச்சினைகள் எல்லாம் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களோடும், மற்ற சங்கங்களோடும் விவாதிக்கப்பட்டு இணக்கமாகவே தீர்க்கப்பட்டு வருகின்றன.

45. 1948 ஆம் ஆண்டு மின் வழங்கு சட்டத்தின்கீழ் மின்சார வாரியம் சுய நிர்வாக அமைப்பு உடையதாக உருவாக்கப்பட்டுள்ளது. மின்வழங்கு சட்டத்தின் 79 ஆம் பிரிவின்கீழ் சட்டத்திற்கும் அதன் விதிகளுக்கும் முரண் படாத அளவில் தனது விதிமுறைகளை இயற்றுவதற்கான அதிகாரம் வாரியத் திற்கு உள்ளது. ஆனால் விதி 20-க்கு ஏற்ப தனது நிதி மற்றும் ஏனைய உடைமைகளையும் கணக்கு வைப்பு முறைகளையும் மற்ற அவசியமான அல்லது விரைந்து முறைப்படி செயல்படுத்தப்பட வேண்டியவை தொடர்பாக செயல்பட அரசினரின் முன்அனுமதி தேவை. பிரிவு 78-ஏ வின்கீழ் கொள்கை அளவிற்கான உத்தரவுகளை ஏற்று வாரியத்தைச் செயல்படும்படி அரசு வாரி யத்திற்கு உத்தரவிடலாம். உருவாக்கப்பட்ட வரம்புகளுக்கு ஏற்றாற்போல் அரசினரின் கொள்கைகளை அமுல்படுத்துவதில் வாரியம் அரசுக்குக் கட்டுப் பட்டது. மற்றவற்றைப் பொறுத்தவரை வாரியமே முடிவு எடுக்கலாம். வாரியத்தின் சுய நிர்வாகத் தன்மையை உறுதிப்படுத்தும் விதத்திலேயே இந்த உறவு முறை கடைபிடிக்கப்படுகிறது.

46. மாண்புமிகு மன்ற உறுப்பினர்களின் மேலான கருத்துக்களை நாடி நான் அமர்கிறேன்.

ச. இராமச்சந்திரன்,
மின்துறை அமைச்சர்.

இணைப்பு 1

## திட்டக் காலங்களில் தமிழ்நாட்டின் மின் வளர்ச்சி.

| விவரங்கள். | முதலாவது திட்டத்திற்கு முன்பு (1951 மார்ச் திங்கள் 31-ம் தேதி). | முதலாவது திட்டம் 1951-56 | இரண்டாவது திட்டம் 1956-61 | மூன்றாவது திட்டம் 1961-66 | வருடாந்திர திட்டம் (1966-69) மூன்று ஆண்டுகள். | நான்காவது திட்டம் 1969-74 | ஐந்தாவது திட்டம் 1974-78 | 1980-81 தோராயமாக. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| அ. மின் உற்பத்தி— | | | | | | | | |
| 1. நிறுவப்பட்ட திறனளவு (மெகாவாட்டுகளில்) | 156 | 256 | 571 | 1,070+ *300 | 1,070+ *400 | 1,654+ *600 | 1,824+ *600 | 2,329+ *600 |
| 2. மின் உச்சத் தேவை (மெகாவாட்டுகளில்). | 110 | 172 | 381 | 717 | 997 | 1,207 | 1,641 | 1,673 |
| 3. உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரமும் வாங்கப்பட்ட மின்சாரமும் (மில்லியன் யூனிட்டுகளில்). | 630 | 1,053 | 2,214 | 4,041 | 5,260 | 6,948 | 9,453 | 10,913 |
| இ. மின் அனுப்புதலும் வினியோகித்தலும் | | | | | | | | |
| 1. கூடுதல் உயர் அழுத்த உயர் அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்). | 6,936 | 11,479 | 24,194 | 39,806 | 48,336 | 68,737 | 72,689 | 77,987 |
| 2. குறைவு அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்). | 5,728 | 13,055 | 35,352 | 73,198 | 1,04,977 | 1,97,017 | 2,22,659 | 2,57,273 |
| 3. கூடுதல் உயர் அழுத்தத் துணை நிலையங்கள். | 31 | 48 | 70 | 98 | 119 | 146 | 174 | 207 |
| 4. உயர் அழுத்தத் துணை நிலையங்கள். | 25 | 41 | 73 | 103 | 114 | 125 | 150 | 173 |
| 5. மின் பங்கீட்டு நிலையங்கள். | 1,591 | 3,773 | 0,004 | 17,360 | 22,842 | 37,453 | 43,666 | 50,750 |
| 6. மின்சாரம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 2.5 | 4.5 | 7.7 | 1.36 | 18.22 | 27.07 | 34.00 | *43.14 |

* நடப்பாண்டில் 3.06 லட்சம் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டதும் உள்ளடங்கும்.

## இணைப்பு

### திட்டக் காலங்களில் தமிழ்நாட்டின் மின் வளர்ச்சி.

| விவரங்கள். | முதலாவது திட்டத்திற்கு முன்பு (1951 மார்ச் திங்கள் 31-ம் தேதி). | முதலாவது திட்டம் 1951-56 | இரண்டாவது திட்டம் 1956-61 | மூன்றாவது திட்டம் 1961-66 | வருடாந்திர திட்டம் (1966-69) மூன்று ஆண்டுகள். | நான்காவது திட்டம் 1969-74 | ஐந்தாவது திட்டம் 1974-78 | 1980-81 தோராயமாக |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 7 நபர் ஒருவர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு. (யூனிட்டுகளில்.) | 12 | 21 | 60 | 92 | 116 | 127 | 157 | 188 |
| 8. நெய்வேலி | | | | | | | | |
| உ. கிராம மின் வசதி— | | | | | | | | |
| 1. மின் வசதி அளிக்கப்பட்ட நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்களின் எண்ணிக்கை. | 1,813 | 3,543 | 18,769 | 22,137 | 31,727 | 61,072 | 63,339 | 63,478 |
| 2. மின் வசதி அளிக்கப்பட்ட அரிசன குடியிருப்புகளின் எண்ணிக்கை. | .. | .. | .. | .. | 6,280 | 23,768 | 24,797 | 25,716 |
| 3. மின் இணைப்பு அளிக்கப்பட்ட வேளாண்மை விசையேற்றங்களின் எண்ணிக்கை. | 14,373 | 32,440 | 1,17,695 | 2,56,594 | 4,10,119 | 6,81,205 | 8,05,616 | 9,19,161 |
| 4. குடிசைகளுக்கு மின் இணைப்பு (இலட்சத்தில்). | .. | .. | .. | .. | .. | .. | .. | 8.06 |
| எ. செலவும் வருவாயும்— | | | | | | | | |
| 1. மூலதனச் செலவு (ரூபாய் கோடிக் கணக்கில்). | 23.82 | 54.02 | 133.21 | 293.28 | 356.07 | 552.20 | 799.09 | [illegible] |
| 2. மொத்த வருவாய் (ரூபாய் கோடிக் கணக்கில்.) | 3.12 | 5.94 | 15.82 | 34.67 | 50.22 | 114.28 | 223.14 | [illegible] |

# இணைப்பு—2.

## திட்டக் கால செலவு.
(ரூபாய் கோடியில்.)

| திட்டத்தின் பெயர். | ஏற்பட்ட செலவு. | | | | 1981-82ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|
| | 1977-78. | 1978-79. | 1979-80 | 1980-81. | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. உற்பத்தி— | | | | | |
| அ. முடிவுற்ற திட்டங்கள் (8) * | 2.24 | 0.21 | 0.18 | 7.47 | 0.63 |
| இ. தொடர்ந்துவரும் திட்டங்கள்— | | | | | |
| 1. மேல்கொடுமண்டு 1-ம் நிலை மேல்கொடுமண்டு 2-ம் நிலை. | 0.26 | 0.22 | 0.32 | 0.11 | 0.15 |
| 2. சுருளியாறு .. .. | 5.16 | 3.24 | 1.61 | 5.13 | 0.41 |
| 3. சேர்வலாறு .. .. | 0.43 | 1.05 | 1.41 | 2.78 | 5.00 |
| 4. காதம்பாறை .. .. | 0.42 | 12.19 | 14.52 | 13.64 | 23.00 |
| 5. பாண்டியாறு—புன்னம்புழா. | —0.20 | —0.13 | —0.25 | .. | 1.00 |
| 6. நெல்லித்துறை .. .. | —0.03 | —0.01 | .. | .. | 1.00 |
| 7. தூத்துக்குடி அனல்மின் திட்டம்— | | | | | |
| 1 ஆம் நிலை .. .. | 42.81 | 36.34 | 29.85 | 7.86 | 3.30 |
| தூத்துக்குடி அனல் மின் திட்டம்— | | | | | |
| 8. 2 ஆம் நிலை .. | 4.07 | 15.44 | 28.97 | 2.68 | 10.00 |
| 9. கீழ் மேட்டூர் .. .. | .. | 0.06 | 3.17 | 8.90 | 10.00 |
| 10. மேட்டூர் அனல்மின் திட்டம் | .. | .. | .. | 0.10 | 12.00 |
| 11. குந்தா 5 ஆம் நிலை கூடுதல் திட்டம். | .. | .. | .. | 0.15 | 1.97 |
| உ. மேம்பாடு திட்டங்கள்— | | | | | |
| 12. எண்ணூர் மேம்பாடு திட்டம். | 0.69 | 0.95 | .. | .. | 3.10 |
| 13. பேசின்பிரிட்ஜ் மேம்பாடு திட்டம். | 0.05 | 0.47 | .. | .. | .. |
| 14. பேசின்பிரிட்ஜ் அனல்மின் நிலையம் (மாற்றம்). | .. | .. | .. | .. | 4.50 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| எ. புதிய திட்டங்கள்— | | | | | |
| 15. மேல் அமராவதி .. | .. | — | — | .. | 1.50 |
| 16. சண்முகா நிதி .. .. | .. | .. | .. | 0.03 | 1.50 |
| 17. வடசென்னை அனல்மின் திட்டம். | .. | .. | .. | .. | 0.50 |
| மொத்த உற்பத்தி ('அ' முதல் 'எ' முடிய) | 55.90 | 70.03 | 79.78 | 62.85 | 79.56 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| II. மின் அனுப்புதல், பங்கீடு செய்தல். | 19.75 | 32.96 | 51.01 | 59.79 | 65.00 |
| III. கிராம மின்வசதி .. .. | 13.74 | 16.00 | 26.30 | 36.11 | 21.50 |
| IV. மின் நிறுவனங்களைக் கைவசப்படுத்துதல். | 0.01 | 2.24 | 1.31 } | | |
| V. புதிய திட்டங்கள் குறித்து ஆய்வு. | 02.0 | 0.25 | 0.23 } | 0.38 | 1.00 |
| VI. மின்சக்தி குறித்து ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சி. | 0.04 | 0.04 | 0.04 } | | |
| நிகர மொத்தம் .. | 89.64 | 123.52 | 158.67 | 159.13 | 167.06 |

* 1. குந்தா நீர்மின் திட்டம் 3ஆம் நிலை, 2. பரம்பிக்குளம் ஆளியாறு, 3. கோதையாறு 4. சென்னை அனல்மின் திட்டம் விரிவாக்குதல், 5. எண்ணூர் அனல்மின் நிலையம் 6. எண்ணூர் அனல்மின் நிலையம் விஸ்தரிப்பு, 7. குந்தா 4 ஆம் நிலை, 8. நடுவட்டம் திருப்புதல் திட்டம்.

**INDEX TO**

**TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES**

---

**SIXTY-FIRST SEESION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.**

---

***15th to 20th February 1982.***

**VOLUME CLXXXIV (Nos. 1 to 6).**

**A**


**Pages**

ACCIDENT(S)

Minister's attention called to death of 6 boys due to—in Explosives Factory at Chellappatti village in Sankarankoil taluk ... ... ... **96—97**

Question *re* Road— in Madras City during 1980 and casualties, number of ... ... ... ... **170—175**

ADI DRAVIDAR WELFARE DEPARTMENT—

Question *re* deputation of teachers of Higher Secondary Schools of—for in-service training during 1978-79 and 1980-81 ... ... 253—254

ADJOURNMENT MOTION *re*—

Long March (Padayatra) Made by Kalaignar, Dr., Leader of the Opposition in Assembly, alleged planting of bombs in roads near Sattur during 749—756

A. G. BLOCK, ANNA NAGAR—

*See* Housing

AMENITY FEE FUND—

Question *re* maintenance of—in High Schools ... 244—246

ANANDAM, Thiru V. V. V. —

Annavi alias Muthurama Subramanian, Archakar of Tiruchendur Murugan Temple, calling attention to attack by police on ... ... ... **470**

A—*cont.*

PAGES

ANANDAM, Thiru V. V. V.—*cont.*

Governor's Address, discussion on ... ... ... 327
Paul Commission's Report, discussion on ... 329—331

ARANGANAYGAM, the Hon. Thiru C.—

Bills—

Madras University, Annamalai University and Perarignar Anna University of Technology (Amendment) Bill, 1982 ... ... ... 507—508, 525—526, 537—548

Tamil University Bill, 1982 ... ... ... ... 549—551, 571, 572—578

Non-teaching staff of aided colleges, statement *re* declaration by Director of Collegiate Education of certain categories of—out of protection given in Government Order ... ... ... ... 760, 761, 762

Panchayat Union Teachers, statement *re* non-payment of arrears of pay and allowances and non-settlement of claims under Family Benefit Scheme in respect of—on becoming Government servants from 1st June 1981 ... ... ... 24, 25

Vennavaludi Government High School and Sandaipettai Girls' School, Pudukkottai Town, statement *re* dilapidated condition of building of 256—257

ARUMUGAM, Thiru S. —

Adjournment motion re Long March (Padayatra) made by Kalaignar, Dr., Leader of the Opposition in Assembly, alleged planting of bombs in roads near Sathur during ... ... ... ... 751—752

Bills —

Panchayats (Amendment) Bill, 1982 ... ... 604—607
Relief Undertaking (Special Provisions) Bill, 1982 631—632
Governor's Address, discussion on ... ... 136, 197, 200

Paul Commission's Report, discussion on ... 383, 421, 422



B—*cont.*

PAGES

ARUMUGAN, Thiru S.—*cont.*

Bills—*cont.*

